தமிழரசு
1-1-1992 ரூ.1

மாண்புமிகு முதல்வர் அவர்களின் புத்தாண்டுச் செய்தி

அனைத்துத் துறைகளிலும், சிறப்புமிகு திட்டங்கள் தீட்டப் பட்டு, தமிழகம் முன்னேற்றப் பாதையில் எழுச்சியோடு நடை போட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 1992-ஆம் ஆண்டு மலர்கிறது. இனி வரும் நாளில் மேலும் பெரிய சாதனைகளையும், பெருமைக்குரிய செயல்களையும், ஏற்றுத் திறம்பட நடத்துகிற புதிய வலிவினை இப்புத்தாண்டு நமக்கு வழங்கும் என்பதில் ஐயமில்லை.

சரித்திரப் புகழ்மிக்க செயல்பாடுகளைத் தோற்றுவிப்பதோடு, அவைகளைக் காலத்தோடு நிறைவேற்றக்கூடிய வேகத்தையும், அதன்மூலம் நிலையான வெற்றி இலக்குகளை ஈட்டித் தரக்கூடிய விவேகத்தினையும் நமக்கு இப்புத்தாண்டு வழங்கிடும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்த இனிய புத்தாண்டுத் தினத்தில் தமிழக மக்கள் அனைவரும், அனைத்து நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திட எனது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இதழில்...

சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர, கல்விக்காகச் சமுதாயமல்ல!
— மாண்புமிகு முதல்வர் உரை ... 2

கர்நாடகக் கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்!
— மாண்புமிகு முதல்வர் உரை ... 9

புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 14

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்-மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை ... 35

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மார்கழித் திங்கள் - 17

மலர்:22 1-1-1992 இதழ்:13

சமுதாயத்தின் நன்மைக்குக் கல்வியே தவிர கல்விக்காகச் சமுதாயமல்ல!

சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்- மாண்புமிகு முதல்வர் உரை

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய, ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத் தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயற்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் தமிழினத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் தெளிவினுக்காகவும்,

மாண்புமிகு
தமிழக முதல்வர்

புரட்சித் தலைவி
செல்வி ஜெ. ஜெயலலிதா
அவர்களுக்குச்
சென்னைப் பல்கலைக்கழகம்
டாக்டர் பட்டம்
அளித்துச் சிறப்பிக்கின்றது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில் சிறப்புரை ஆற்ற என்னை அழைத்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். எனக்கு நீங்கள் அளித்துள்ள இந்தக் கவுரவத்தை நான் என்றென்றும் நினைவில் நிறுத்தியிருப்பேன்.

இந்த நாட்டின் பழமையான கல்வி நிலையமாகச் சென்னைப் பல்கலைக் கழகம் திகழ்வதாலும், இந்தியாவின் கல்வி நிலையங்களுள் பெருமைமிகு இடத்தை இப்பல்கலைக் கழகம் பெற்றிருப்பதாலும், எனது நன்றி பன்மடங்காகிறது. உயர் கல்வித்துறையில் ஒரு நூற்றாண்டுக்கும்மேலாகக் . குறிப்பிடத்தக்க சாதனைகளைச் சென்னைப் பல்கலைக் கழகம் புரிந்துள்ளது. தேசிய, உலக அளவில் பல்வேறு துறைகளில் பிரகாசித்த பிரபலமான பலரின் கல்விக் கூடமாகவும் இது திகழ்ந்துள்ளது. அரசியல், பொருளாதார, விஞ்ஞான, சமூகத் துறைகளில் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் தொண்டாற்றிய இப்பல்கலைக் கழக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது இயலாத காரியமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் பல பல்கலைக் கழகங்களின் தாயாக விளங்கியுள்ளது. மாபெரும் தாய் நிறுவனமான இந்தப்பல்கலைக் கழகத்தில் பயின்ற புகழ்மிக்க ஆடவரும், பெண்டிரும் மனித அறிவு வளர்ச்சியை மென்மேலும் பெருக்கி வந்துள்ளனர். அறிவை விருத்தி செய்து, உலகமெங்கும் இதுபோன்ற பல கல்விச் சாலைகளை வளர்த்த பல்வேறு அறிஞர்களின் பெயர்கள் இப்பல்கலைக் கழகத்தின் சரித்திரத்தில் நிரம்பக் காணப்படுகின்றன.

இந்த நல்ல சந்தர்ப்பத்தில், அயராத உழைப்பினால் சாதனைகள் புரிவதையே தங்கள் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு உழைத்து, தங்களது அறிவாற்றலால் கற்பனைத் திறனால், தொலைநோக்குப் பார்வையால் இப்பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்த பேரறிஞர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். இந்த நினைவே, இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும், இத்தகைய பல்கலைக் கழகம் தாங்கள் பயின்ற, வளர்ந்த, பயிற்சி பெற்ற நிறுவனமாகத் திகழ்ந்துள்ளது என்ற பெருமையை வழங்கும்.

இந்தச் சபையில் நான் பேசுவதில்எனக்குள்ள எல்லைகளை நான் உணர்ந்திருக்கிறேன். என்றாலும், இந்த அழைப்பினை நான் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம், இப்பல்கலைக் கழகம் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள தொண்டினைப் பாராட்டிடவும், தங்களது வாழ்க்கையில் மாபெரும் சாதனைகளைச் சாதித்துக் காட்டிய இப்பல்கலைக் கழகத்தின் பேரறிஞர்களைப் பாராட்டவும் இது ஒரு சந்தர்ப்பமாகவும் அமையும், என்பதால்தான். எனவே, உங்களிடையே இன்று நான் பேசுவதில் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் தன் மகளுக்குக் கிடைத்துள்ள மரியாதைகளைக் கண்டு பூரிக்க என் தாய் இல்லையே எனும் என் தனிப்பட்ட துயரத்தினையும் நான் வெளிப்படுத்தியாக வேண்டும்.

193689

நீங்கள் பெற்றுள்ள பெருமைகளுக்கு என் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வாழ்வில் இன்றைய தினம் ஒரு திருநாளாகும். உங்கள் பயிற்சி முடிந்து, பங்கேற்பு தொடங்கும் நன்னாளாகும். ஏனெனில் பட்டம், படிப்பின் முடிவல்ல. சமுதாயத்தின் முன்னேற்றத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் தீவிரமாக ஈடுபடவேண்டியதன் ஆரம்பமாகும். பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற சில பாக்கியசாலிகளில் நீங்களும் ஒருவர் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். நம் நாட்டில் 17 முதல் 21 வயது நிரம்பியவர்களில் 10 சதவிகிதத்தினர் கூட இச்சந்தர்ப்பத்தினைப் பெற்றதாகப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. எனவே, நம் நாட்டு வளர்ச்சியில் உங்கள் பொறுப்பு அதிகமாகிறது. நாட்டின் அநேக சவால்களைச் சந்திக்க நீங்கள் இங்கு பெற்ற அறிவினையும், திறமையையும் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில் நீங்கள் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகம் அறிவின் கிடங்கு அல்ல. திறமைகளை வளர்த்துக் கொள்ளும் கூடம் மட்டுமல்ல. கல்வி என்றாலே சுதந்திரம். உயர் கல்வி என்பது மென்மேலும் சுதந்திரமே உங்களது மனதிற்கும் இதயத்திற்கும் சுதந்திரம் வழங்கி, ஒரு இலட்சியத்தை உருவாக்கி, தங்கள் வாழ்வின் தரத்தை உயர்த்தி, பின் தங்கியோருக்கு உதவுவதே உயர் கல்வியின் நோக்கமாகும். சுருங்கச் சொன்னால், மக்கள் நலங்களில் உள்ள உங்கள் ஈடுபாடுகளை வளர்ப்பதே உயர் கல்வியின் நோக்கமாகும். தெய்வப்புலவர் வள்ளுவர் கூறினார்

'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை'

'மற்றவர்களின் துயரைத் தன் துயராகப் பாவிக்காதவனின் அறிவு எதற்குப் பயன்?'

காலங்காலமாக நம் நாடு, கல்வியின் பலத்தை உணர்ந்து, சமுதாய, கலாச்சார அம்சங்களில் கல்விக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது. சுய வளர்ச்சிதான் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. சுய ஞான வளர்ச்சியைப் பெறுவதே, அறிவைப் பெறுவதின் நோக்கமாக கொண்டுள்ளது. கல்வி பயிலுவதென்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கிறது. தீவிர ஆன்மீக உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து மக்களிடையே அமைதி, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றை வளர்க்கும் வகையில் சமுதாய முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடும் தனி மனிதத் தகுதிகளை வளர்க்கக் கல்வி ஒரு வழிமுறையாகும். உண்மையில், பண்டைய இந்தியச் சமுதாயத்தில், கல்வி, தனிமனிதனையும் சமுதாயத்தையும் நெருங்கிணைப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. மனிதர்களுக்கிடையே உள்ள உறவுகள் சரியான ஒழுக்க நெறிகள், முறையான சமூகப் பண்புகள் ஆகியவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவுவதே கல்வியின் நோக்கமாகும். அறிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், மாணவர்கள், ஆகியோர் மக்களிடையே அமைதி, நல்லுறவு, நல்லிணக்கம் ஆகிய பண்புகளை வளர்ப்பதற்கு ஏதுவாக சமுதாயப் பண்புகளை நிலைநிறுத்தவதிலும் பாதுகாப்பதிலும் தத்தம் பங்கினை ஆற்றி வந்துள்ளனர். உண்மையிலேயே ஆன்மீகமே, பண்டைக் காலக் கல்வியின் குறிக்கோளாக விளங்கியது.

கல்வியின் இந்தக் குறிக்கோள் தற்காலத்திற்கும் பொருத்தமானதே என்று மாபெரும் வரலாற்று ஆசிரி

மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்நினைவு நாளான 24.12.'91 அன்று அவரது நினைவிடத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அமைச்சர்களுடன் அஞ்சலி செலுத்தினார்.

யரான ஆர்னால்ட் டாயன்பி வலி யுறுத்துகிறார். அவருடைய வார்த் தைகளை நினைவு கூர்வது இங்கே பொருத்தமாகும்.

'கல்வியின் நோக்கம் வணிகச் சார்புடையதாக இல்லாமல் சமயச் சார்புடையதாக இருக்க வேண்டு மென நான் கருதுகிறேன். சரியான முறையில் வாழ வழியினைக் கண்டு பிடிப்பது, வாழ்க்கையின் பொரு ளையும், குறிக்கோளையும் உணர்ந்து கொள்வது ஆகியவற்றிற்கான ஒரு தேட்டமே கல்வியாகும். தகுந்த ஆன்மீக வழியே அனைத்து மக்களுக் கும் அடிப்படையில் பொருந்துவது என நான் நம்புகிறேன். மனித சமு தாயத்தின் அமைப்பு, செயற்பாடு ஆகியவற்றின் இயல்பான எளிமை, சிக்கலாக்கப்பட்டதன் மூலம், வேலைப் பகிர்வு

(Division of Labour) என்பது அவசியமாக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்திலேயே மனித சமுதாய முழுமைக்கும் இது சரியான நடை முறையாகவே இருந்து வந்தது.'

தொழிற் புரட்சியின் தொடக்கம், விஞ்ஞான மனப்பான்மை காலத் தைக் கட்டியம் கூறியது. இதுவே ஒரு தொழில்நுட்ப நாகரீகத்திற்கு, குறிப் பாக மேலை நாடுகளில், அடிக்கல் நாட்டியது. கல்வியைப் பற்றிய மனித மனோபாவத்தில் மாபெரும் மாறுதல்களை இவையனைத்தும் உருவாக்கின. கல்வி பிழைப்புக்கான ஒரு வழியாக மாறியிருக்கிறது.

அறிவைப் பேணுவது பிழைப்புக் கான ஒரு ஆதாரமாகக் கருதப் படுகிறது. கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதிகளைப் பெற்றிருப்ப தின் மூலமாக ஒருவன் தன் வாழ்க் கைத் தகுதியை உயர்த்திக் கொள்ள ஒரு வழி முறையாகவே கல்வி கருதப்படுகிறது. தொழில்நுட்பம் என்பது வேலைகளை, பகுப்பது ஆகும். அதனால் சிறப்பான திறமை களைப் பெறுவது அவசியமாகிறது. விஞ்ஞானமும் சிறப்புத் தகுதி களும் கைகோர்த்துச் செல்கின்றன. ஒருவருடைய புரிந்து கொள்ளும் தன்மை எவ்வளவு விசாலமானது என்பதோ அவருடைய அறிவு எவ் வளவு ஆழமானது என்பதோ அல்லது அவருடைய கல்வி கற்கும் நோக்கம் எவ்வளவு உன்னதமானது என்பதோ கேள்வி அல்ல. இன் றைய தொழில் மயமான நவீன சமுதாயத்தில், பங்கு பெற, ஒருவன் சிறப்பான தொழில்நுட்பத் தகுதி களைப் பெற வேண்டியதே தலை யாய அவசியமாகும். ஒருவன் தன் னுடைய பொருளாதாரத்தில் அடைந் துள்ள வெற்றி என்பது அவன் பெற்ற, தேர்ச்சி அடைந்துள்ள சிறப் பான தகுதிகளைப் பொருத்தே அமைந்துள்ளது.

நம் நாடு 1947-இல் சுதந்தர மடைந்து விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரக் கலாச்சார வளர்ச் சிகளில் மேலை' நாடுகளைப் பின் பற்றி, பிறகு மாறிவரும் கலாச்சாரத் தேவைகளுக்கேற்ப நமது கல்வி நிறு வனங்கள் தங்களை மாற்றி அமைத் துக் கொண்டுள்ளன. இது இயற்கை யாகவே நமது நாட்டைத் தேர்ச்சி பெற்ற உயர் கல்விப் பாதையில் செல்ல வைத்தது.

எனினும் இன்று நம் நாட்டில் கல்வித்துறை நிறைய சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. நம் நாட்டி லுள்ள அனைத்துக் குழந்தைகளுக் கும் ஆரம்பக் கல்வியினை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாகத் தரும் கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. பள்ளிகளில் முறை யாகப் பயில இயலாத ஏராளமான மக்களுக்கு வாழ்க்கை நீரோட்டத் திற்குக் கொண்டுவரத் தேவையான அடிப்படை அறிவைக் கொடுத்தாக வேண்டும். தொழில்நுட்ப வளர்ச் சிக்கேற்ப சமூக மற்றும் பொருளா தார உற்பத்திகளை அடிப்படை

யாகக் கொண்டுள்ள வேலைகள் தரப்பட வேண்டிய ஏராளமான இளைஞர்களை நம் கல்வி முறை கையாள வேண்டியுள்ளது. தொழில் முன்னேற்றத் தேவைகளும், உலகப் பொருளாதாரத்தின் பாதிப்புகளும் உயர்நிலைத் தொழில்நுட்பங்களை அமல்படுத்துவதும் சேர்ந்து பல்கலைக் கழகப் பட்டங்களுடனோ அவை இல்லாமலோ தேர்ச்சி பெற்ற, மிகவும் திறமையான இளைஞர்கள் பல்வேறு பதவிகளை வகிக்க தேவைப்படுகின்றனர். இதற்கெல் லாம் அடிப்படைத் தேவையாக ஆசிரியர்கள் அறிவுத் திறனையும், அனுபவத்தையும் வளர்க் கிறார்கள். ஏனெனில், சிறந்த அறிவைப் பெறுவதில் உள்ள போட்டி களில் அவர்கள் தோற்றுவிடாமல் இருக்க வேண்டும். இவையனைத்துக் கும் மேலாக இருப்பது அபாயகர மான அளவில் வளர்ந்து இந்த அனைத்து வசதிகளும், மிகக் குறுகிய நேரத்தில் தங்களுக்கு, வேண்டு மெனப் போராடும் மிகப்பெரிய மக்கள் தொகையே ஆகும். கல்வித் துறையில் வேறு எப்பொழுதுமே இல்லாத அளவிற்கு பிரச்சினை களை நாடு இன்று சந்தித்துக் கொண்டு இருக்கிறது. அது கல்வி யிலுள்ள நம்மைப் பற்றிய பிரச்சினை யாகும். நாம் வழங்கும் கல்வியி லிருந்து அனைத்து நலன்களையும் பெற வேண்டிய புதிய தலைமுறை, மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கல்வியின் திறன் மீது உள்ள நம்பிக்கையை இழந்து வருகிறது. தவறான கொள்கைகளை அமல் படுத்துவதினாலும், தவறான அணுகு முறைகளினாலும் போதிய அடிப் படை வசதிகள் இல்லாமையாலும் தவறான விதிகளை வகுப்பதாலும் நடைமுறைக்கு ஒவ்வாத இலட்சியங் களை அமைத்துக் கொள்வதாலும் இப்பிரச்சினை தீவிரமடைகிறது. இப்பிரச்சினையின் முக்கியமான அம்சங்களைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. மக்களின் கல்வியறிவில்லாமயை ஒழிப்பது.
2. ஆரம்பக் கல்வியை அனைவருக் கும் போதிப்பது.
3. சமூக, அரசியல் விழிப்புணர்ச்சிக்காகக் கல்வித் திட் டத்தை அமைத்துக் கொள்வது.
4. ஒற்றுமை உணர்வு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவைகளை வளர்த்து, சாதி இன மற்றும் இதர தீய சக்திகளினால் உருவாகும் பிரிவுகளை ஒழிப்பது.
5. விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள் மீது அதிக அக்கறை காட்டுதல்.
6. கல்விச் சந்தர்ப்பங்களை அதி கரித்தல்.
7. சரியான அணுகுமுறை, மதிப் பீடுகளை வளர்த்துக் கொள்ளுதல், பல்வேறு பிரச்சினைகளை மனி தாபிமானத்தோடும் கருணையோடும் அணுகுதல்.
8. முறையான தகுதியுள்ள சமூகக் கல்வியை வழங்குதல்.
9. பள்ளிக்கூடத்திலிருந்தே, விஞ் ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சி களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்கல்வியை விரிவுபடுத்துதல்.

இந்த அம்சங்கள் நம்மை அலைக் கழிப்பது போலவும், விடைகாண முடியாதவை போலவும் காணப் படலாம். ஆனால், இது குறித்து நாம் நம்பிக்கை இழக்கத் தேவை யில்லை..' நம் அரசியல் நிர்ணய சட்டத்தில், நம் கல்வித் திட்டத்தில் கல்வியின் பங்கைப் பற்றிய சரியான கண்ணோட்டம் கொண்டு, அதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், நாம் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளின் அளவைப் பார்க்கும்பொழுது நம் முயற்சிகளும் சாதனைகளும் மிகவும் பற்றாக்குறையாக உள்ளன.

'இந்தியாவின் விதி இப்பொழுது நம் வகுப்பறைகளில் நிர்மாணிக்கப் படுகிறது' என கோத்தாரி கமிஷன் கூறியுள்ளது. நம் விதியின் எஜ மானர்கள் நாம்தான். நமக்கு முக்கிய மானவர்களைநிர்மாணிப்பவர்களும் நாம்தான். எனவே, முறையான நல்ல கல்விக்கு உயர்ந்த முக்கியத் துவத்தை வழங்கவும், தேசத்தின் சிக் கல்களைக் கருத்தில் கொண்டு மக்கள் நலனுக்குப் பயன்படும் வகையில் கல்வித் திட்டங்களைத் தீட்டவும் நம்முடய ஒன்றுபட்ட அறிவு, உடல், பொருட்சக்திகளை ஒன்று திரட்ட வேண்டும்.

இந்த தொழில்நுட்ப நாகரீக உலகில் சிறப்பான அளவிற்கும் திறமைக்கும் வழக்கமான கல்வி யோடு, தொழிற்பயிற்சியும் சேர்ந்து தரப்படவேண்டும். நமது சக்தியின் வளர்ச்சிக்கும், தனிநபரின் திறமை களை வளர்த்துக் கொள்ளவும் பள்ளிப்படிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. ஒவ்வொருவருக் கும் தகுதிகளும் குணங்களும் உள்ளன. அவைகளை அர்த்தமுள்ளதாக உப போகிக்கத் தேவையானது. திறமை களைக் கண்டுபிடித்து, அவை களுக்கு உயிருட்டி, அன்றாட வாழ்க் கையிலும், நடைமுறைகளிலும் பயன் படுத்துவதேயாகும்.

பள்ளியிலும் கல்லூரியிலும் ஒருவனுடைய சாதனைகளை வைத்து அவனை மதிப்பிட்டு விடமுடியாது. சிறந்த மாணவர்கள் அனைவரும் பிற்கால வாழ்க்கையில் சிறந்த குடி மகனாகத் திகழ்ந்தது கிடையாது. சிறந்த மாணவர்களாக அல்லாத வர்கள் பிற்காலத்தில் புகழ்மிக்க, மிகவும் மதிக்கத்தக்க . குடி

மக்களாக வாழ்ந்து காட்டியுள்ளனர். எனவே, பள்ளியை விட்டோ கல்லூரியை விட்டோ செல்லும் போது பெறும் சான்றிதழ்களும் பட்டங்களும், வாழ்நாள் முழுமைக்குமான சான்றிதழ் அல்ல. இது பாடத்திட்டத்திற்கான மதிப்பீடே ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் மட்டுமல்லாது மாணவர்களும் தொடர்ந்து பயில வேண்டியது, அத்தியாவசியமாகிறது. விஞ்ஞான முன்னேற்றம் எப்பொழுதும் நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும், நம் அறிவு விருத்தியடைந்து கொண்டேயிருப்பதாலும் தொடர்க்கல்வி மேலும் தேவையாகிறது. மனித சக்திகள் பல வகைப்பட்டவை. அவை சமூகத்தில் மதிப்பு வாய்ந்தவை. ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட திறமைகளைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும். ஒன்றையொன்று சரி செய்கின்ற ஊக்குவிக்கின்ற விதிகளையும், நடைமுறைகளையும் கலந்து அளிக்கக்கூடிய கல்வியையும் நடைமுறைச் சோதனைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளையும் 'மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நாம் செய்யலாம்.

சிறந்தவைகளையே நாடிச்செல்லும் திட்டங்களைப் போடும் அதே நேரத்தில் அனைவரும் அடிப்படை வசதிகளைத் தருவதில் ஓரளவு திருப்தியை நாம் அடைந்தாக வேண்டும். ஜான்பால் சாத்ரு கேட்ட கேள்வி தற்பொழுது பிரபலமாகிவிட்டது' 'பசித்திருப்பவனுக்கு இலக்கியம் என்ன செய்ய இயலும்.' அதே போல் நாம் வேறொரு கேள்வியையும் எழுப்பலாம். 'பசித்தவனுக்கு கல்வி என்ன செய்ய இயலும்?' நெத்தியடி போல் இப்படி கேட்கப்படும்பொழுது அதற்கு விடை கிடைப்பதில்லை. ஒருவனது மூளையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் அவனது பசியைப் போக்க வேண்டும். ஆனால், இரண்டு பணிகளும் முக்கியமானவை. நாம் இதுவரை நிறைவேற்றிய கல்வித் திட்டங்கள் சுற்றிச் சுற்றி வரும் இப்பிரச்சினையைத்தீர்ப்பதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளதாக நான் உணர்கிறேன்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நம் கல்வி பெற்றுள்ளது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். மக்களின் சமூகப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி, முதியோர் கல்வி, சிறப்புப் பிரிவுகளில் உயர்நிலைக் கல்வி என்று பல திட்டங்களை வகுத்துள்ளோம். இவைகளுக்கு அடிப்படைத் தேவைகளான கட்டடங்கள், சோதனைக் கூடங்கள். பயிற்சி நிலையங்கள் போன்றவற்றை நம்மால் இயன்ற அளவிற்கு வாங்கியுள்ளோம். உதாரணமாக, கல்வியில் நம் மாநிலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. படிப்பறிவு வளர்ப்பதில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். 1991 புள்ளி விவரக் கணக்குப்படி தமிழ்நாட்டில் 7 வயதுக்கு மேற்பட்டவர்களில் 63.72 சதவிகிதத்தினர் படித்தவர்கள். படிப்பறிவில் நாட்டிலேயே கேரளாவிற்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு உள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் பயனாக நமது ஆரம்பக் கல்வித் திட்டம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகக் கல்வியிலும் பெரும் வெற்றியை நாம் சாதித்துள்ளோம். விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் பல்வேறு பிரிவுகளில் நமது இளைஞர்கள் மிகச் சிறப்பான சாதனையைப் புரிந்துள்ளனர். இதில் உங்கள் பல்கலைக்கழகத்தின் பங்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இச்சாதனைகளினால் நாம் பெருமையடைகிறோம். அதேநேரத்தில், நமது கல்வி முறை, சமுதாயத்திலிருந்து மனிதனைப் பிரிக்கிறது என்பதை நினைக்கப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அளவிற்கதிகமான பிரத்தியேகமான தகுதி பெறுவதாலும் குறுகிய தற்காலிக நோக்கங்களினாலும் நம் கல்வி முறை மாணவர்களைச் சமுதாயத்தின் முக்கிய அம்சங்களை மறக்கடிக்கச் செய்கிறது. நம்மைப் போன்ற ஒரு ஏழைச் சமுதாயம், கல்வியைப் போதிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு செலவழிப்பதால், அதற்குப் பதிலாக, சமுதாயத்தின் நன்மைக்கு மாணவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது தார்மீக உரிமையாகும்.

அர்நால்டு டாயன்பி சரியாகச் சொன்னார் 'தொழில் புரிய முனையும் ஒவ்வொருவரும், தன் சிறப்பு அறிவினையும், திறமையையும் சகோதர மனிதர்களின் நலனுக்காக உபயோகத்திற்காகப் பயன்படுத்த வேண்டும். அவர்களைச் சுரண்டுவதற்காக அல்ல என உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும். தனக்கும் தன் குடும்பத்திற்கும் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை அமைத்துக் கொள்வதைக் காட்டிலும் தொண்டு செய்வதற்கே முன்னுரிமை அளித்திடல் வேண்டும். அதிகபட்ச சேவை, அதிகபட்ச இலாபமல்ல என்ற குறிக்கோளுக்கே ஒருவன் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். கல்வித் துறையிலுள்ள அளவுக்கு மீறிய சிறப்புத் தகுதிகளினால் உண்டாகும், தனி மனிதனின் நசுக்கும் சக்தியினை, ஒதுக்கிவிட வேண்டியதன் அவசியத்தை அர்நால்டு டாயன்பி சரியாக வலியுறுத்தியுள்ளார். அனைத்து வழிகளிலும் இலட்சக்கணக்கான மக்களின் நலன்களைக் கவனிக்க வேண்டிய நம்மைப் போன்ற சமுதாயத்தில் எடுத்துக்

கர்நாடகத்திலிருந்து வெளியேறும் தமிழர்களுக்கு உதவ மையங்கள்

கர்நாடகத்திலிருந்து தப்பி வரும் தமிழர்களுக்கு உதவ கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள ஐந்து தமிழக மாவட்டங்களில் உதவி மையங்கள் உடனடியாக ஏற்படுத்தப்படும்.

இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: 25-12-91

கர்நாடகத்திலிருந்து 17,000 தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு இது வரை வந்து சேர்ந்துள்ளனர். கடந்த இரண்டு தினங்களில் மேலும் இரண்டாயிரம் பேர் பெரியார் மாவட்டத்திற்கு வந்துள்ளனர். அதிக அளவில் தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து வந்ததையடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. பின்னர் மேற்படி உதவி மையங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக ஏற்படுத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

உதவி மையங்களை மாவட்டத்தின் எல்லையோர இடத்தில் அமைக்க வேண்டும். அங்கு உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி ஆகியவை வழங்கப்படும். கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்குத் திரும்பும் வரையிலோ அல்லது கர்நாடகத்திலோ உள்ள தங்களது இடங்களுக்குத் திரும்பும் வரையிலோ இந்த உதவி தொடர வேண்டும்.

கோயம்புத்தூர், பெரியார், தர்மபுரி, சேலம், வட ஆர்க்காடு-அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் இந்த உதவி மையங்கள் வருவாய்த் துறை ஊழியர்கள் மேற்பார்வையில் செயல்படும்.

கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கு எதிராக நடந்த கலவரம் பற்றி, பாதிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பொருள் இழப்பு, ஏற்பட்டுள்ள காயங்கள் உள்பட முழு விவரங்களைச் சேகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் விழா

1991 டிசம்பர்த், திங்கள் 19-ஆம் நாள் சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு பொன்னாள்!

ஆம். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிய நன்னாள்!

புகழ்பூத்த பெருமை பெறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் வாழ்த்தும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்-

புரட்சித்தலைவி அவர்கள் இயல், இசை, நாடகத் துறைகளில் தேர்ச்சி பெற்ற முத்தமிழ்ச் செல்வி; பரத நாட்டியக் கலையில் கரை கண்ட 'காவிரி தந்த கலைச்செல்வி;' புரட்சித் தலைவரின் அரசியல் வாரிசாகப் புரட்சிகரமான சூழலில், தமிழக ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி, நீதி, நேர்மை தவறாத செங்கோல் செலுத்திப் புரட்சிகரமான சாதனைகளைப் படைத்துவரும் வெற்றிச் செல்வி ஆவார். தமிழ், ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய பல மொழிகளில் எழுத்தாற்றல், பேச்சாற்றல் பெற்ற பன்மொழிச் செல்விதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

'அஞ்சாமை, அடக்கமுடைமை, துணிவுடைமை, கல்வி, அறிவு, ஈகை, ஊக்கம், செங்கோலாச்சுதல், குடியோம்பல் போன்ற வள்ளுவர் வகுத்த பண்புகளின் உறைவிடமாகவும் பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணாகவும் திகழும் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, டாக்டர் பட்டம் வழங்கும் முதல் பல்கலைக் கழகம் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அதன் மூலம் சென்னைப் பல்கலைக்கழகம் தனிப்பெருமையையும், புகழையும் பெறுகிறது'.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (டி.லிட்) வழங்க வேண்டும் என்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'செனட்' 'சிண்டிகேட்' ஆகிய இரு அமைப்புகளும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இருந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூற்றாண்டு விழா அரங்கில் 19.12.91 அன்று நடைபெற்ற 134-வது பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் (D.Litt.) வழங்கப்பட்டது.

இந்த விழாவினையொட்டி சென்னை நகரமே அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. விழா நடைபெற்ற பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்தனர். அன்று மதியம் 3.40 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா மண்டபத்தில் மேடைக்குப் பின்புறம் வந்து காரில் இறங்கினார். பல்கலைக்கழக இணை வேந்தரும், மாண்புமிகு கல்வி அமைச்சருமான திரு. இராம வீரப்பன், துணைவேந்தர் திரு. சாதிக், பதிவாளர் திரு. பி. கோவிந்தராஜுலு ஆகியோர் அவரை வரவேற்றனர். பிறகு, 3.47 மணிக்கு மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மண்டபத்தின் முன்புறம் வந்து இறங்கி, தேசிய மாணவர் படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஆளுநர், இணைவேந்தர், துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழகப் பல்வேறு துறைத் தலைவர்கள், செனட் உறுப்பினர்கள் ஊர்வலமாக அரங்குக்குள் வந்தனர். கண்ணைக் கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டமளிப்பு விழா உடையுடன் வந்தார்.

துணைவேந்தர் எஸ். சாதிக் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கவுரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கான குறிப்புகளைத் துணைவேந்தர் படித்தார்.

பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கவுரவ டாக்டர் (D.Litt.) பட்டத்தை வழங்கினார். மண்டபத்தில் குழுமியிருந்தவர்களின் பலத்த கைத்தட்டலுக்கிடையே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் 481 பட்டதாரிகள் நேரடியாகப் பட்டம் பெற்றனர். அவர்களில் 267 பேர் பெண்கள். பல துறைகளில் முதலிடம் பெற்ற மாணவ மாணவியருக்கு மேதகு ஆளுநர் பட்டங்களை வழங்கினார் இவர்களைத் தவிர மேலும் 25,942 நபர்கள் இவ்வாண்டு பட்டம் பெற்றனர்.

பிரபு என்ற பார்வையற்ற மாணவர் ஆங்கில இலக்கியத்தில் முதலிடம் பெற்று, மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து பட்டம் பெற்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவருக்குக் கைலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். இவ்விழாவில் அனைத்து அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

கொள்வதின் தேவையைவிட, கொடுக்கப்பட வேண்டியதன் தேவை முக்கியமாகின்றது.

நம் மாணவர்களுக்குத் தரும் கல்வி முறையினால் சமுதாய முழுமைக்கும் நன்மை ஏற்பட வேண்டும். சமுதாயத்தின் நன்மைக்கு, கல்வியே தவிர, கல்விக்காக சமுதாயமல்ல. மாணவர்களின் மனதில் இந்த அடிப்படை அம்சங்களைப் பதிய வைக்க கல்வி பயன்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். சில்லறை விஷயங்கள், குறுகிய மனப்பான்மை, சாதி, இன உணர்வுகளைத் தூண்டுதல் அல்லது மற்ற வெறுப்பு ஆகியவை அறவே ஒழிக்கப்பட வேண்டும். இந்தத் தேவை நம் அனைவருக்கும் மிகவும் முக்கியம். அதுவும் குறிப்பாகப் பிரிவினைவாத சக்திக்கு ஒரு பொய்யான மரியாதை கிட்டியுள்ள இந்தக் காலத்தில், இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு கூறினார்.

இந்தியாவில் முதலில் முக்கியமானது நாட்டின் ஒற்றுமையைப் பேணிக்காப்பதுதான், அரசியல் ஒற்றுமையை மட்டுமல்ல. பிரிந்து தனியே செல்ல வேண்டுமென்னும் தூண்டுதலை ஒதுக்கி மதத்தின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள தடைகளை உடைத்து - மாநிலங்களுக்கிடையேயுள்ள தடைகளை ஒடுக்கக் கூடிய சிந்தனைக்கும், மனதுக்கும் உள்ள ஒற்றுமையை பேணிக்காத்திட வேண்டும். தீவிரவாதத்திலும் வன்முறையிலும் நம்மை நாம் இழந்து விடக் கூடாது என்பது மிகவும் முக்கியம். தேசிய ஒருமைப்பாடும், முறையான வளர்ச்சியும் இன்று மிகவும் அத்தியாவசியம்.' இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இன்றும்உண்மையாக உள்ளன.

உங்களது பட்டமளிப்புகளின் சின்னமான உடைகளில் இன்று நீங்கள் காணப்படும் இந்த அருமையான சந்தர்ப்பத்தில், கல்வி முடிவேயில்லாமல் தொடருகிறது என்பதையும், கல்வியே சுயவளர்ச்சிக்காகத்தான் என்பதையும் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். போட்டி தேவைதான் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அது ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். தனிமனித முன்னேற்றம் தேவைதான். ஆனால். அது சமுதாயத்தின் சிறந்த, பெரிய அளவிலான நலத்தில் இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தேவைதான். ஆனால், அது யாருடைய அழிவிலும் இருக்கக் கூடாது. சமூக நீதியின் தேவையை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும். தரமான கல்வி ஒருவன் தன் தனித்தன்மையையும் சமூக, தேசிய அடையாளங்களையும் பெறுவதற்கு உதவியாக இருக்க வேண்டும் நமக்குத் தெளிவான இலட்சியங்களை அமைத்துக் கொள்வதில் தான் நம் முன்னேற்றம் அடங்கியுள்ளது. ஆனால், மகாத்மா காந்தி அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்ததைப் போல், வழிமுறைகளும் முக்கியமே. இதைச் சற்றுப் புரிந்து கொள்வோமேயானால், அது நம்மை நல்ல மனிதர்களாகவும், அதிக உபயோகமுள்ள குடிமக்களாகவும் உருவாக்கும்.

இங்கு பட்டங்களையும், பரிசுகளையும் பெற்ற அனைத்து இளைஞர்களையும் பாராட்டுகிறேன். நம் நாட்டிற்கும், மனித குலத்திற்கும் சேவை புரிவதில் சிறந்த எதிர்காலத்தைப் பெற்றிட உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி

தமிழ்நாட்டில் உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிக்க, சமூகநலத்துறை திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயிற்சியில் சேர்வதற்குச் சில தகுதிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

1. ஊனமுற்ற பெண்களாக இருக்க வேண்டும்.
2. வயது வரம்பு: 18 வயதுக்கு மேற்பட்டு 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.
3. 8-வது வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால், பயிற்சிக்குப் பின் அரசு நடத்தும் தேர்வில் பங்கு பெறலாம்.
4. 8-வது வகுப்புக்குக் கீழ் படித்தவர்கள் அரசுத் தேர்வு எழுத முடியாது.
5. பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.
6. பயிற்சிக் காலத்தில் 50 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.

இந்தப் பயிற்சியில் சேர விரும்பும் உடல் ஊனமுற்ற பெண்கள், உதவி இயக்குநர் (பணி அமர்த்துதல்), சமூகநல இயக்ககம், சேப்பாக்கம், சென்னை-600 005 என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டும். பயிற்சிக்குப் பிறகு, கூட்டுறவுச் சங்கங்களில் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு உதவி செய்யப்படும்.

கலை-பண்பாட்டு இயக்ககம்

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் அங்கமாக, கலை- பண்பாட்டு இயக்ககம் தொடங்கப்படும் என்று வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார். அதன்படி, கலை-பண்பாட்டு இயக்ககம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்.

இந்த இயக்ககம், மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி, கலை- கைத்தொழிற் கல்லூரிகள், அரசு இசைப் பயிற்சி மையம், இயல், இசை, நாடக மன்றம், ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம் ஆகிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பழங்கலைகளுக்கும், இசை, நாட்டியம், நாடகம், கவின் கலைகள் ஆகியவற்றுக்கும் ஊக்கமும், ஆக்கமும் வழங்குவதை இந்தப் புதிய இயக்ககம் நோக்கமாகக் கொண்டு செயல்படும்.

கர்நாடகக் கொடுமைகளுக்கு, ஜனநாயக வழியில் நிரந்தர முடிவு காண்போம்!

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், நமது பெருமுயற்சியால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள நியாயமான வெற்றியை, கர்நாடக அரசும் அங்குள்ள அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளாததால், தற்போது அங்கு நடைபெற்று வரும் வன்முறை மற்றும் கலவரச் சம்பவங்களைப்பற்றி, நாம் அனைவரும் அறிவோம். கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களின்மீது இப்படிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களினால், அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொணாக் கொடுமைகளின் காரணமாக, அவர்கள் கர்நாடக மாநிலத்தை விட்டு வெளியேறி, தமிழகத்தை நோக்கித் தினந்தோறும் ஓடி வந்துகொண்டிருக்கின்றனர்.

இக்கொடுமைகளுக்கு ஜனநாயக வழியில் ஓர் நிரந்தர முடிவு காணவும், இப்பிரச்சினையில் தமிழகத்தின் முடிவினை ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் தான், இன்று இந்தக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். இக்கூட்டத்திற்கு வருகை தந்து நல்ல கருத்துகளையும், ஆலோசனைகளையும் கூற இருக்கின்ற அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும், பிரதிநிதிகளையும், தமிழக அரசின் சார்பில் வரவேற்கின்றேன்.

தற்போது நம் முன் இருக்கின்ற இந்தப் பிரச்சினை குறித்து, இது நாள் வரை மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நம் அனைவரின் பெருமுயற்சி காரணமாக, தமிழகத்தின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், மத்திய அரசு காவிரி நதி நீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் 10.12.1991 அன்று வெளியிட்டது. உச்சநீதி மன்றத்தின் ஆணைகளுக்கு இணங்க, மத்திய அரசால் சட்டத்திற்குட்பட்டுத் தோற்றுவிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் உச்சநீதி மன்றத்தின் கருத்துரைகளைப் பெற்ற பின்னரே மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டது. இதனை எதிர்த்து 12.12.1991 அன்று, மாண்டியா நகரில் வன்முறை வெடித்தது. அன்று கர்நாடக விவாசாயிகள் சங்கம் மாண்டியாவில் பந்த் அறிவித்து நடத்தியபோது, காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று.

கர்நாடக மாநிலத்தில் 13.12.'91 அன்று ஒரு பொது வேலைநிறுத்தம் அனுசரிக்கப் போவதாகக் கர்நாடக அரசே அறிவித்து, அதனை அரசியல் லாபத்திற்காகத் திசை திருப்பி, அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்கி உள்ளனர். ஆண்டாண்டுக் காலமாகக் கர்நாடக மாநிலத்தில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்துவரும் தமிழ் மக்களை அடையாளம் கண்டு அவர்களுக்குக் கொடுமை இழைத்துள்ளனர். அவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும்மனிதாபிமானமே இல்லாது சேதங்கள் விளைவித்துள்ளனர். ஒரு குற்றமும் செய்யாத தமிழ் மக்கள், அங்கு அவர்கள் தங்களது சுய உழைப்பால் ஈட்டிய சொத்துக்களை இழந்து, இன்று அகதிகளாக உயிருக்குப் பயந்து தமிழகத்திற்கு ஓடி வந்து கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமே, முன்னெச்சரிக்கையோடு சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற கர்நாடக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்காததுதான். காலத்தோடு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், இந்த அநாகரீகமான அராஜகச் செயல்களைக் கட்டுப்படுத்தியிருக்கலாம்.

கர்நாடகத் தமிழர்களைக் காக்கின்ற தார்மீகப் பொறுப்பு தமிழக அரசிற்கும், தமிழக மக்களுக்கும் இருப்பதால், நான் 13.12.1991 அன்றே கர்நாடக முதல்வரை இப்பிரச்சினையில் உடனடியாகக் கவனம் செலுத்தி, கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அன்றே இந்தியப் பிரதமருக்கும் இது தொடர்பாக ஒரு டெலக்ஸ் செய்தி அனுப்பி, கர்நாடகத் தமிழர்களைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

14.12.1991 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் பெருத்த அளவில் தொடர்ந்தன. தமிழ் மக்கள் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் தங்களின் உடைமைகளை இழந்தனர். அன்றே நான் மத்திய அரசு அமைச்சர்களான திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், திரு. சிந்தா மோகன் ஆகியோருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, இராணுவத்தையோ அல்லது மத்திய அரசின் காவற்படைகளையோ உடனடியாகக் கர்

நாடகத்திற்கு அனுப்பி வைக்க என் சார்பில் பிரதமரை வற்புறுத்துமாறு வேண்டினேன்.

15.12.91 அன்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தன. கர்நாடகத்தின் பல பகுதிகளில் தமிழ்மக்கள் தாக்குண்டனர். அன்றே நான் மீண்டும் கர்நாடக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், விரைந்து அமைதி காக்க வேண்டிய அவசியத்தையும், தமிழ் மக்களின் இழப்புகள் அனைத்தும் ஈடுசெய்யப்பட வேண்டுமென்றும் கோரினேன். தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்குக் கர்நாடக முதலமைச்சர்தான் முழுப்பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், இந்தியப் பிரதமர் மேலும் தாமதிக்காமல் கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையைச் சீராக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் தான் மைய அரசு மத்திய காவல் படைகளைக் கர்நாடகத்திற்கு அனுப்பியது.

கன்னட வெறியர்களின் வன்முறை நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் தங்கள் சொத்துக்களை முழுமையாக இழந்து, அடிபட்டு, காயங்களுடன் கர்நாடக மாநிலத்தைவிட்டு வெளியேறி தமிழகம் வரத் தொடங்கினர். அவ்வாறு தமிழகம் வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவம் போன்ற எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

தொடர்ந்து நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு டெலக்ஸ் செய்திகள் மூலமும், தொலைபேசி மூலமும் பல முறை தொடர்பு கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண உதவும்படி தமிழக அரசின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொண்டேன். மத்திய அரசும் எனது வேண்டுகோளுக்கு இணங்க கர்நாடக மாநிலத்திற்கு மத்திய காவற் படைகளை அனுப்பியதையும் இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த சூழ்நிலையில், மத்திய அரசு இது பற்றி மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டியதை வற்புறுத்தி, வன்முறை நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்த சிலரைச் சுட்டிக்காட்டி, ஏராளமான தமிழ் மக்கள் தமிழ்நாடு வந்துள்ளதையும், அதனால் இங்கு ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையையும் எடுத்துரைத்து, பிரதமர் இதில் உடனடியாகத் தலையிட்டு கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைக் காக்க வேண்டும் என்று கோரி, 21.12.1991 அன்று விரிவாகக் கடிதம் ஒன்றும் எழுதினேன்.

அதனைத் தொடர்ந்து, 23.12.'91 அன்று காலை 9.15 மணிக்கு நான் பிரதமர் அவர்களை டெல்லியில் நேரில் சந்தித்து இப்பிரச்சினை தொடர்பாக மெமோரண்டம் ஒன்றினையும் அவர்களுக்கு நேரில் கொடுத்து, தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும், நிலைமைகள் உடனே சீர்செய்யப்பட வேண்டுமென்றும், இழப்புகள் ஈடுகட்டப்பட வேண்டுமென்றும், விரைவில் கர்நாடக மாநிலத்தில் அரசியல் ரீதியிலும், மக்கள் உறவு முறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டு, புதிய சுமுகமான உறவுகள் வளர்க்கப்படுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்தியப் பிரதமர் அவர்கள் இது பற்றி மத்திய அரசு ஆவன செய்யுமென்றும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இழப்புகளை ஈடுசெய்ய வழிவகைகள் செய்யுமென்றும், கர்நாடக மாநில அரசுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குமென்றும் உறுதியளித்தார்.

வன்முறை குறைந்துள்ளது எனக் கருதிக் கொண்டிருக்கும் வேளையில், கடந்த வாரத்தில் மேலும் பல இடங்களில் மீண்டும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. குறிப்பாக சாமராஜ்நகர், நஞ்சன் கூடு, குண்டலுப்பேட்டை, கொள்ளேகால் போன்ற இடங்களிலிருந்து மேலும் ஆயிரக்கணக்கானோர் நீலகிரி, பெரியார், கோவை மாவட்டங்களுக்குப் பரிதவித்து வரத் தொடங்கியுள்ளனர். இதுவரை 71,000 பேர்களுக்கும் மேலான தமிழர்கள் இவ்வாறு அகதிகளைப் போலத் தமிழகம் வந்துள்ளனர்.

> **உண்மையின் ஒளிப்பாதையில் நம்பிக்கை வைத்து அதைப் பின் பற்றிச் செல்லுங்கள். அந்த ஒளியே கருமேகத்திலிருந்து விடுபட்ட சந்திரனைப் போல் உலகம் முழுவதும் பிரகாசிக்கின்றது.**
>
> **—புத்தர்**

இவ்வாறு வரும் தமிழர்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகள் உடனடியாக அளிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்துள்ளது. கர்நாடக மாநில எல்லைக்கு அருகிலுள்ள தமிழக மாவட்டங்களில், இவ்வாறு வருபவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, அவரவர் விரும்புகின்ற அவர்களின் சொந்த ஊர்களுக்குப் பேருந்துகளில் இலவசமாக அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு சொந்த ஊர்களுக்குச் செல்ல விரும்பாதவர்களுக்காகத் தற்போது பெரியார் மாவட்டத்தில் 20 இடங்களிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 இடங்களிலும், சேலம் மாவட்டத்தில் 9 இடங்களிலும், தருமபுரி மாவட்டத்தில் 5 இடங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் 4 இடங்களிலும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் 2 இடங்களிலும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஓரிடத்திலும், உதவி மற்றும் நிவாரண முகாம்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் தங்கியுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடைகள், மற்றும் சமையல் பாத்திரங்கள் அளிக்கப்படுகின்றன. உடைகளைப் பொறுத்தமட்டில் ஆண்களுக்குப் பெரியவராயின் 2 வேட்டி அல்லது 2 லுங்கிகளும், 2 உள் அரைக்கால் சட்டையும் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்குப் பெரியவராயின் 2 சேலைகள், 2 சட்டைகள் மற்றுர் ஓர் உள் பாவாடை கொடுக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு 2 அரைக்கால் சட்டைகள், ஓர் உள் அரைக்கால் சட்டை மற்றும் ஒரு ஸ்லாக் சட்டை கொடுக்கப்படுகிறது. சிறுமியர்களுக்கு ஒரு பாவாடை, ஒரு சட்டை மற்றும் ஒரு கவுன் கொடுக்கப்படுகிறது. மேலும் ஒரு குடும்பத்திற்கு 2 துண்டுகளும், உணவு சமைக்க மூடியுடன் கூடிய ஒரு பாத்திரமும்,

நமிழ்நாட்டில் கன்னடியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டும்

எங்கள் தமிழர்க்குக் கர்நாடகத்தில் இன்னலா?

தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

1. கர்நாடக மாநிலத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் எந்தக் காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னடர்களால் திட்டமிட்டுத் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். கர்நாடக மாநிலத் தமிழ் மக்கள் இப்படித் தொடர்ந்து பல்வேறு கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டு வருவது குறித்து அமைச்சரவை ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து- கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள், கலவரத்தின் மூலம் அவர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடைமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர, கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களையும் அமைச்சரவை கண்டிக்கிறது.

3. வன்முறை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும், இந்த வன்முறை மற்றும் கலவர நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக் கொண்டபொழுதும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாகக் கர்நாடக மாநிலத்தில் உள்ள கலவரப் பகுதிகளுக்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்கிற கோரிக்கை மீதும் மைய அரசு காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுத்தது. குறித்த காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், வன்முறை நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இது குறித்து அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

4. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபொழுது, பிரதமர் அவர்கள் கர்நாடக மாநிலத்தில்நிலவும் பதட்ட நிலை குறித்து விசாரிக்க, மைய அரசின் இரண்டு மூத்த அதிகாரிகளை அனுப்புவதாகக் கூறியிருந்தும், மத்திய அரசின் உள்துறையைச் சார்ந்த இணைச் செயலாளர் மட்டத்தில் ஒரு அதிகாரினய மட்டும் கர்நாடக மாநிலத்திற்கு அனுப்பியிருப்பது வருந்தத்தக்கது. இந்த ஒரு அதிகாரியும், மிகக் குறுகிய கால கட்டத்தில் கர்நாடகத்தில் உள்ள உண்மை நிலவரத்தையும், அங்குள்ள தமிழ் மக்களின் பாதிப்புகளையும் முழுமையாக விசாரித்து அறிந்து கொள்வது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றென்பதால், பிரதமரின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பது பற்றியும் அமைச்சரவை அதிருப்தியைத் தெரிவிக்கின்றது.

5. 70 ஆயிரத்திற்கும் மேலான தமிழ் மக்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தற்போதும் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்து, தேவையான பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்வதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானிக்கிறது.

6. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளை உடன் செயற்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளைக் கேட்டுக் கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

7. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புக்களுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்க வேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள அமைச்சரவை தீர்மானிக்கிறது.

8. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு உச்சநீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க முன்வர வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கோரிக்கைவிட அமைச்சரவை தீர்மானிக்கிறது. அத்தகைய விசாரணைக் குழுவின் நியமனத்தை ஏற்று, அதன் பணிக்கான எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டுமென்றும் அமைச்சரவை கர்நாடக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

9. இதுவரை தாக்குதலுக்குள்ளாகி கர்நாடகத்திலிருந்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோதிலும், தமிழ் நாட்டின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த 380 கன்னடியர்கள் மட்டுமே கர்நாடக மாநிலத்திற்கு அச்சத்தின் காரணமாகச் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகத்திற்குத் திரும்பி விட்டனர்.

தமிழ்நாட்டில் வாழ்கின்ற கன்னடியர்களுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவர்களைப் பாதுகாக்க எல்லாவித நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்கும் என்ற உறுதியை இந்த அமைச்சரவைக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

—மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், கர்நாடக மாநிலத்திலிருந்து வந்துள்ள தமிழ்மக்களின் நிலை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழு விவரம்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

ஆயிரம் புது வழித்தடங்களில் பேருந்துகள்

1992-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் தமிழ்நாட்டில் ஆயிரம் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்படும்.

உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.22 கோடி செலவில் 550 பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும், அதிக அளவில் டீசலைச் சேமித்த போக்குவரத்துக் கழக நிறுவனங்களுக்கும் சிறந்த ஓட்டுநர்களுக்கும் சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் பரிசளித்துப் பேசுகையில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார்.

சாம்பார் போன்றவை தயாரிப்பதற்கு ஒரு பாத்திரமும், 2 பெரிய கரண்டிகளும், 2 சாப்பிடும் தட்டுக்களும் மற்றும் 2 டம்ளர்களும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பெரியவர்க்கும் ஒரு பாய் மற்றும் போர்வையும் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உதவி மற்றும் நிவாரண முகாம்களைத் திறக்க உத்தரவிடப்பட்டதோடு, மாண்புமிகு அமைச்சர்களையும், உயர்மட்ட அதிகாரிகளையும் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் அதிகமாக வந்து தங்கியுள்ள, கோவை, நீலகிரி, பெரியார், தருமபுரி, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களுக்கு அனுப்பி, நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டுத் துரிதப்படுத்த ஆணையிட்டுள்ளேன்.

இந்த உதவி மற்றும் நிவாரண முகாம்களுக்காகும் பெரும் பொருள் செலவை, இக்கட்டான நிதி நிலையிலும் கூட இந்த அரசு ஏற்றுச் செய்து வருகிறது. ஏனென்றால், இது தமிழ்நாட்டின் மானப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையில் நாம் அணுக வேண்டிய நடைமுறைகளை உடன் தீர்மானிக்கின்ற பின்னணிக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவர்களுக்குத் தக்க புகலிடமும், நிவாரணமும் அளிப்பதோடு நில்லாமல், அவர்களது உரிமைகளையும், உடைமைகளையும் ஜனநாயக வழியில் அவர்களுக்கு மீட்டுத் தருவது போல், நமது தலையாய கடமையாகும் என்பதைத் தெளிவாக்க விரும்புகின்றேன்.

இந்தத் தருணத்தில் நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி என் நினைவிற்கு வருகின்றது. அதில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை இக்கூட்டத்தில் எடுத்துக் கூறுவது மிகவும் பொருத்தமாக அமையும் என்று நம்புகின்றேன்.

அது - 'நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும், என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனமார உறுதி கூறுகிறேன். நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபடமாட்டேன் என்றும், மதம், மொழி, வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும், தீர்வுகாணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும், நான் மேலும் உறுதி கூறுகிறேன்'- என்று உள்ளது.

கர்நாடக மாநில அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும், தீய சக்திகளும், நிச்சயமாக நமது நாட்டின் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை மதிக்காதது மட்டுமல்ல, உடைத்தெறிந்துள்ளன என்பதை நாம் இன்று உணர்கின்றோம். ஆனால் நாம் என்றென்றும் நாட்டின் சுதந்திரத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் நம்மை அர்ப்பணித்துச் செயல்படுபவர்கள் என்பதை நாடு நன்கு அறியும். நாம் அந்தப் பெருமை மிக்க நிலையில் இருந்து சிறிதும் விலகாது செயல்பட்டு, அமைதியான முறையில், இன்று நம் முன்னர் உள்ள இந்த முக்கியப் பிரச்சினைக்கு ஓர் நிரந்தரச் தீர்வு காணவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள கட்சித் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(சென்னையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)



தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உரிய பங்கை வழங்குக!

புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

தேசிய வளர்ச்சிக்கான சில இன்றியமையாத விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாடக்கூடியிருக்கும் இந்த வேளையில் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பொதுவான பொருளாதார நிலை குறித்து அறிக்கைகள் கூறும் தகவல்களைக் கண்டு இடிந்து போய் விடாமல், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாட்டை நிர்மாணிப்பதற்கான செயல்களில் தீவிரம் காட்டவேண்டும்.

வளைகுடா யுத்தம் போன்ற சம்பவங்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வளர்ச்சியையும், ஸ்திர நிலையையும் அடைய முடியுமா? என்ற ஐயத்தை ஏற்படுத்திவிட்டது. பண வீக்கத்தையும், விலைவாசி உயர்வையும் உடனடியாகக் கட்டுப்படுத்தியாக வேண்டும். விலைவாசி உயர்வு குறித்துத் தங்களுக்கு ஏற்படும் அதிருப்திகளை மக்கள் மாநில அரசுகள் மீதுதான் காட்டுகிறார்கள். பொருளாதாரத் துறையில் அமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்யும்போது அவற்றால் ஏற்படும் தீய விளைவுகள் ஏழை மக்களைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திட்டமிடுகின்ற வேளையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த தளராத முழுமையான நமது ஈடுபாட்டை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

திட்டமிடலில் காணப்படும் மாறுதல்கள் மகிழ்ச்சி தருகின்றன. மத்தியில் நாம்கடைப்பிடித்து வந்த அதிகாரக் குவியல்முறை மாறி இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் இடையூறுகளைக் களைகின்ற ஒரு புதிய திட்டம் வேண்டும். திட்ட அணுகுமுறை அறிக்கையில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான இலக்குகளைப் பாராட்டும் அதே வேளையில், நாம் கவனிக்க வேண்டிய பிற அம்சங்கள் குறித்தும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய வளர்ச்சிக்காக ஒவ்வொரு உத்தியைக் கையாள வேண்டியுள்ளது. இந்த நிலையில் மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவதற்காகத் திட்டமிடல் அமைந்து விடக்கூடாது. தமிழ்நாட்டில் போதிய இயற்கை வளங்கள் இல்லை. எனவே அக வளங்களை மட்டும் நம்பியிராமல், புறம் சார்ந்து வளரக்கூடிய உத்தியை வகுக்க வேண்டிய கட்டாயம் அதற்கு இருக்கிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டுகின்ற வேளையில் மாநிலங்கள் தங்களது வளர்ச்சிக்கான யுக்திகளை வகுத்துக்கொள்ள அனுமதிக்கப்படவேண்டும்.

வேளாண்மைத்துறையும், கிராமப் பகுதிகளில் உள்ள இதரத் துறைகளும்தான் தொடர்ந்து பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. இந்த வேளாண்மை சிறக்க தண்ணீர் வ்ளம் வேண்டும். தமிழகம் தன்னுடைய நிலத்தடி நீர் இருப்பில் பெரும் பகுதியைப் பயன்படுத்திவிட்டது. கடலில் வீணாகக்கலக்கும் உபரி நீரை நாட்டின் வறட்சியான பகுதிகளுக்கு மடை மாற்றம் செய்யும் ஒரு 'நதி நீர்த் தொகுப்பை' (River Water Grid) உருவாக்க வேண்டியதின் அவசியத்தை நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதிநீர்த் தொகுப்புக்கான ஒரு தொடக்கம் அமையும் என்று நான் நம்புகிறேன். மத்திய அரசு முன்நின்றால் இது ஒன்றும் செய்ய முடியாத செயல் அல்ல என்று கருதுகிறேன்.

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகப் பெருமளவு முதலீடு எதையும் மத்திய அரசு செய்யவில்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான மத்திய அரசு நிறுவனங்களின் உத்தேசத் தொழில் திட்டங்களைப் பார்க்கும்போது, தமிழகத்துக்கான மத்திய அரசின் முதலீடு மிகக் குறைவு என்று தெரிகிறது. மத்திய அரசு இனியாவது தமிழகத் தொழில் திட்டங்களில் பெருமளவு முதலீடு செய்யும் என்று நம்புகிறேன். தென்னக நில வாயு தொகுப்புத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து தொடங்கவேண்டும். அது தமிழ்நாட்டுக்குத் தேவைப்படும் நில வாயுவை வழங்கும்.

வேளாண்மை, தொழில் துறை தவிர, ஏனைய துறைகளிலும் தனியார் முதலீட்டை அனுமதிப்பது என்ற முடிவு வரவேற்கத் தக்கது. அரசுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு சரியாக இல்லை என்பதற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகளைப் பெருக்காமல் விட்டுவிட முடியாது. ஜெயங்கொண்ட சோழபுரம் என்ற இடத்தில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்கவும், அனல் மின்சார நிலையத்தை அமைக்கவும் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை நிறைவேற்ற உத்தேசித்துள்ளோம். கூட்டுத்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்துக்கு ரூ.5,000 கோடி முதலீடு தேவைப்படும். 1,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகும். தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையில் கணிசமான அளவை இது பூர்த்தி செய்யும். இந்தத் திட்டத்தை விரைவிலேயே நாங்கள் தொடங்கும் வகையில் மத்திய அரசின் அனுமதி கிட்டும் என்று நம்புகிறேன்.

உலகப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைப்பது எப்படி என்பதற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தமிழ்நாட்டுக்கும், சிங்கப்பூருக்கும் இடையே வர்த்தக உறவு ஏற்படுவது இதற்கு உதவும். இதற்காகத் தமிழ்நாட்டின் ஒரு துறைமுகத்தை மாற்ற வேண்டும். இந்த உத்தி வெற்றியடைய நாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

புதிய சாலைகளை அமைக்கவும், ஏற்கெனவே போடப்பட்ட சாலைகளைப் பராமரிக்கவும் ஒதுக்கப்படும் நிதியின் அளவு வெகுகுறைவாக இருக்கிறது. 'மத்திய சாலை நிதி' இதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகுகூட, இந்த நிதி மாநிலங்களுக்குத் தரப்படவில்லை. சாலை மேம்பாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது இந்த நிதி. எனவே, அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் மாநில அரசுகளுக்குக் கூடுதல் நிதி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். சாலைகளை உபயோகிப்போரிடமிருந்து வரி வசூலிப்பது குறித்து நாங்கள் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறோம்.

வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு ஆகிய அம்சங்களில் முக்கியத்துவம் காட்டவில்லையென்றால், திட்டமிடலுக்கே அர்த்தம் இல்லை. வறுமை ஒழிப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பதை வரவேற்கும் அதேவேளையில், இவற்றைத் திட்டமிடவும், அமல் செய்யவும் மாநிலங்களுக்கு அதிக உரிமைகளை வழங்கவேண்டும்.

மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தமிழ்நாடு எப்பொழுதுமே முன்னுரிமை வழங்கி வந்துள்ளது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உதவும் குடும்பநலத் திட்டங்களை முறையாக அமல் செய்வதில் தமிழ்நாடு வெற்றி கண்டுள்ளது. குடும்ப நலம், ஊட்டச்சத்து வழங்கல், ஆரம்பக் கல்வி, குடிநீர் வசதி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், ஏழையர், நலிவுற்றோருக்கான திட்டங்கள் என மனித ஆற்றல் மேம்பட, தொகுப்பான பல திட்டங்களைத் தமிழகம் நிறைவேற்றி வருகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்த முயற்சிகள் மேலும் வலுப்படுத்தப்படும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நாங்கள் மேற்கொண்ட முயற்சி, எங்களுக்கு எதிரான பலன்களைத் தந்துவிடக்கூடாது. 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகை அடிப்படையில் தான் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முழுவதும் மத்திய அரசின் நிதி உதவிகள் அமையும் என்ற வாக்குறுதி எனக்குத் தேவை.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அரசு நிறுவனங்களுக்கான மொத்த முதலீடு

எவ்வளவு என்று தெரிந்தாலும், மத்திய, மாநில அரசுகளுக்குரிய பங்கு என்னவாக இருக்கும் என்று தெரியவில்லை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவை விட குறைந்து விடாதபடிக்கு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு அமைய வேண்டும். மத்திய அரசு திரட்டும் கடன் தொகையில் 40 சதவிகிதம் மாநிலங்களுக்குத் தரப்படுகின்றது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதியில் அது 50 சதவிகிதமாக உயரவேண்டும்.

ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரைகளை மறு ஆய்வு செய்யவேண்டும். விலைவாசி நிலைமை கடந்த 2 ஆண்டுகளில் மோசமாகி விட்டதால், அதனடிப்படையிலான பரிந்துரைகளையும் மறுபரிசீலனை செய்வது அவசியம். திட்டமிலா இனங்களில் தமிழ்நாட்டுக்கு உபரி இருப்பதாக நிதிக் கமிஷன் கூறியிருப்பதாலும், உண்மையில் பற்றாக்குறைதான் ஏற்பட்டது. நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்தும், மத்திய அரசின் வருவாய்ப்பற்றாக்குறை குறித்தும், கவனம் செலுத்தப்பட்டுள்ளதே தவிர, மாநிலங்களின் மோசமான நிதிநிலை குறித்துப் போதிய அக்கறை காட்டப்படவில்லை. மாநிலங்களின் கடன் பளுவும் கூடிவருவது கவலை தருகிறது. மத்திய எக்ஸைஸ் தீர்வையில் மாநிலங்களுக்குப் பிரித்துத் தரும் பங்கை 50 சதவிகிதம் உயர்த்த வேண்டும். கூடுதலான 5 சதவிகிதம் வரி மாநிலங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டும். இது நிறைவேற்றப்படாவிட்டால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்குக் கூட பல மாநிலங்கள் சிரமப்படும். ஒன்பதாவது நிதிக் கமிஷன் பரிந்துரை செய்த வருவாய் மானியத்தையும் பரிசீலித்து உயர்த்தவேண்டும்.

மாநிலங்களின் நிதி ஆதாரங்களை உடனடியாக வலுப்படுத்த வேண்டும். அனுப்புச் சரக்கு வரியைக் கொண்டு வர முடிவு செய்திருந்தோம். எதற்கு வரி விலக்குத் தருவது, எவ்வளவு வசூலிப்பது என்பதை விரைந்து முடிவு செய்யவேண்டும். சரக்கனுப்பு வரியை விதிக்க இந்தக் குழு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றும், மத்திய அரசு அடுத்த நாடாளுமன்றத் தொடரில் இதற்கான மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன். சிறு சேமிப்பிலிருந்து கிடைத்து வந்த மாநிலங்களின் பங்கு குறைகிறது. இதையும் உயர்த்தித் தர வேண்டும்.

மத்திய அரசே ஏற்று நடத்தும் சில திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படுவது பற்றி அடுத்துக் காண்போம். இந்த மாற்றம் அதிக அளவில் இல்லையென்றாலும் இதன்பின் உள்ள உணர்வை நான் மதிக்கிறேன். எட்டாவது திட்டத்தில் இன்னும் அதிக திட்டங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் மாற்றப்படுகையில் அவற்றுக்கு அளிக்கப்படும் உதவிகளும் தொடர வேண்டும். மத்திய அரசே ஏற்று நடத்தும் புதிய திட்டங்கள் பரவலாக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையும், மாநிலங்களுக்கிடையிலுள்ள திட்டங்களும் மட்டுமே தொடர அனுமதிக்க வேண்டும். இந்தத் திட்டங்களில்கூட, நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் மாநிலங்களுக்குப் போதிய உரிமை வழங்கப்பட வேண்டும்.

மத்திய உதவியையும், கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமான தொகைகளையும் மாநிலங்

(44-ஆம் பக்கம் பார்க்க)

வளமுடன் வாழ்க!

வரப்புயர என்றந்நாள் பாட்டில்
வாழ்த்தியவள் இன்றிருந்தால் 'பூமிப்
பரப்பதுவே உள்ளதனால் பிள்ளை
பலபெறுதல் தவிர்த்திடுவீர், என்பாள்!

'வளமுடனே வாழ்க!' எனச் சொல்வார்!
வளமதுதான் குறையாமை வேட்பார்!
குளமதிலே மீன்களைப்போல் பிள்ளை
குவியாமை அதில்அடக்கம் அன்றோ?

'பதினாறும் பெறுக!' என வாழ்த்தின்
பதினாறு' பிள்ளையெனக் கொள்வார்!
'பதினாறு வகையான செல்வம்
பல்க!' எனப் பொருளாம்! உண்மை!

'வெல்க!' என விளம்புங்கால் நாடும்
வியனுலகும் வெல்வதெனல் அல்ல!
பல்கும்சேய் பிறவாமல் காத்தல்
பயனுறவே வெல்வதுதான், என்பேன்!

'நன்றாக இருங்கள்!' எனில் இன்மை
நலிவகல சிலபிள்ளை பெற்றே
என்றென்றும் நிறைகுடம்போல் செம்மை
இருந்தோங்க வாழ்வதுவே என்போம்!

குடிவிளங்க தீர்க்காயுசு என்றே
கூறுவன யாவையுமே பிள்ளை
நெடியதொகை பெருகாமல் காத்து
நிலவிடவே அமைதிசெயல் அன்றோ?

கவிஞர்
மனசை ப.கீரன்

நாலடியார்

உரையாசிரியர்கள்:
தி. சீனிவாசன்
சந்திரிகா ராஜமோகன்

வெளியீடு:
சாந்தா பப்ளிஷர்ஸ்
ஸ்ரீபுரம், 2-வது தெரு,
சென்னை-600 014.

பக்கம்: 210 விலை: ரூ. 5/-

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார், மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வழிமுறைகளைக் கூறுகிறது. 'நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்னும் பழமொழியால் இதன் பெருமையை உணரலாம்.

நாலடியார் மூலமும்-உரையும் உள்ள டங்கிய நூலாக இது விளங்குகிறது. மூலமும் அதற்கு எதிரே உரையும் என்கிற வகையில் இது அமைந்திருக்கிறது. நூல் அறிமுகம், பாட்டு முதற் குறிப்பு ஆகியவை படிப்போர்க்குப் பயனுள்ளவையாகும். பள்ளி மாணவர்கள் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே, எளிய சொற்களோடு இனிய தமிழில் உரை வளம் உள்ளது, இதன் சிறப்பு. கையடக்க அளவில், மலிவு விலையில் அழகிய பதிப்பாக இது வெளிவந்திருக்கிறது.

பெருமை கொள்வாய் தமிழா!

ஆசிரியர்: திருச்சி பாரதன்

வெளியீடு:
செந்தில் பதிப்பகம்,
136, பெருமாள் எடத் தெரு,
பாலக்கரை, திருச்சி-620 001.

பக்கம்: 120 விலை: ரூ. 16/-

ஒரு சமுதாயத்தைச் சீர்திருத்த - சீர்தூக்கப் படைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன எனலாம். அந்த வகையில் இந்நூலாசிரியர் படைத்துள்ள இந்தப் படைப்பு தமிழனைப் பெருமை கொள்ள வைக்கும் என நம்பலாம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பாக, அத்துடன் தன் வரலாற்றுக் குறிப்பாக மலர்ந்துள்ள இந்நூலை தமிழ் ஆர்வலர் அனைவரும் படிக்கலாம்.

- பொ. மறைமலை.

அறிவியல் புதுமைகள்

ஆசிரியர்: மலையமான்

வெளியீடு:
ஒளிப் பதிப்பகம்
63, டாக்டர் ரங்காச்சாரி சாலை,
சென்னை-600 018.

பக்கம்: 104 விலை: ரூ. 13/-

அறிவியலின் அசுரவேக வளர்ச்சியின் காரணமாக, பல அற்புதங்கள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. ஹெலிகாப்டர், சட்டைப்பைத் தொலைக் காட்சி, டெரிலின், ஜெராக்ஸ், லேசர் இப்படிப் பல சுவையான அறிவியல் துணுக்குகளின் அழகிய தொகுப்பாக விளங்குகிறது இந்நூல். பள்ளி மாணவர்கள் படித்துப் பயன்பெறத்தக்க நூல்.

- பூங்கொடி.

வழிகாட்டிய ஒளிவிளக்குகள்

ஆசிரியர்: பி.வி. கிரி

வெளியீடு:
இராஜேஸ்வரி புத்தக நிலையம்
22, 6-வது தெரு,
பக்தவத்சலம் நகர், பழவந்தாங்கல்,
சென்னை-600 114.

பக்கம்: 96 விலை: ரூ. 12/-

வழிகாட்டிய ஒளிவிளக்குகளாய் விளங்கியவர்கள் நம் முன்னோர்கள். அவர்களது வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் வாழ்க்கையில் நடந்த சுவையான நிகழ்ச்சிகள் இந்நூலில் அழகுறத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள், பாவேந்தர் பாரதிதாசன், டாக்டர் அம்பேத்கர், ஆனந்தரங்கப்பிள்ளை, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, மாயூரம் வேதநாயகர், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார், எழுத்தாளர் அகிலன் ஆகியோரின் வாழ்க்கைச் சித்திரங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மாணவர் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

காந்தி வழி வாழ்க்கை

ஆசிரியர்: டாக்டர் ஜே.சி. குமரப்பா

வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625020

பக்கம்: 67 விலை: ரூ. 8/-

அண்ணல் காந்தியடிகளின் வாழ்வு, நமக்கெல்லாம் வாழ வழிகாட்டியாக அமைகிறது. அவர் கடைப்பிடித்த அன்பு, சத்தியம், அகிம்சை, முதலானவை வாழ்க்கையின் வெற்றிக்கு வழி வகுத்த தத்துவங்களாகும். அண்ணலின் கருத்துரைகள் நூல் முழுதும் விரவியுள்ளன.

எல்லாத் திறத்தாரும் படித்துப் பின்பற்ற வேண்டிய பயனுள்ள நூல்.

ஒப்பனை முகங்கள்

ஆசிரியர்: ரவிசுப்ரமணியன்

வெளியீடு:
அன்னம் (பி) லிட்.,
சிவகங்கை.

பக்கம்: 72 விலை: ரூ. 12/-

கவிதைத் தொகுப்பு புதுக் கவிதைகள் பல இடங்களில் கவிஞரின் சிந்தனைகள் சிலிர்க்க வைக்கின்றன. உதாரணம்,

'சேவலின் கால்களில்
கத்தி பதித்து
ரத்தம் சுவைக்க நிற்கிறது
ஓநாய்கள் கூட்டம்'. —ஆர். சுகுமாரன்

'நேருமாமா'

ஆசிரியர்: எம்.எஸ். தியாகராஜன்

வெளியீடு:
தணிகை பதிப்பகம்
13, தேசிகர் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்: 96 விலை: ரூ. 10.50/-

குழந்தைகள் படித்து இன்புறத்தக்க 8 சிறுகதைகளும், 'அறிந்து கொள்ள வேண்டிய அரிய செய்திகள்' என்ற தலைப்பில் 225 அறிவியல் துணுக்குகளும் இடம் பெற்றுள்ளன.

முதன் முதல் உலகப்படத்தை வரைந்தவர்... ஐ.நா. சபையிலுள்ள நூல் நிலையத்தின் பெயர்... இவை போன்ற சின்னஞ்சிறு துணுக்குகள் நாம் அறிந்து கொள்ள வேண்டியவைதான்.

- என். குமார்.

'அறிவூட்டும் பண்புக் கதைகள்'

ஆசிரியர்: மனோகரன்

வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை
(மேற்கு சூளை மேடு), சென்னை-94.

பக்கம்: 100 விலை: ரூ. 12/-

ஆசிரியர் வீட்டிற்குக் கல்விக் கற்க வந்த மாணவர்கள், மழை பெய்யத் தொடங்கவே ஆசிரியர் வீட்டிலே சிறிது நேரம் தங்க... மழை விடும் வரை கதை கூறுவதாக ஆசிரியர் கதை சொல்லத் தொடங்குகிறார்.

மழை ஓயும் வரை ஒன்பது கதைகளைச் சொல்கிறார். ஒவ்வொரு கதையின் முடிவிலும் சொல்லிய கதையிலிருந்து மாணவர்களைக் கேள்விக் கேட்டுக் கதையின் நற்பண்பை உணர்த்தும் உத்தி சிறப்பு

- குமார்.

வேளாண் வளர்ச்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம்

பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம், தருமபுரி கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில், தருமபுரியிலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. தருமபுரி, சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வடமேற்கு மண்டலத்திற்கான வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் தேவைகளை இந்நிலையம் மேற்கொண்டு வருகிறது.

இம்மண்டலத்தில் சுமார் 70 சதவிகிதம் மானாவாரி நிலங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்குச் சராசரியாகச் சுமார் 825 மி.மீ. மழை 47 மழை நாட்களில் கிடைக்கிறது. இப்பகுதியிலுள்ள மண் வகைகளைச் சுண்ணாம்பில்லாத செம்மண், சுண்ணாம்போடு கூடிய செம்மண் மற்றும் சுண்ணாம்புச் சத்துடன் கூடிய கருமண் எனப் பிரிக்கலாம். இந்நிலங்கள் குறைந்த அயனிகள் மாற்றும் தன்மையும், பெய்யும் மழை நீரைக் குறைந்த அளவே சேமிக்கும் தன்மையும் குறைந்த அளவே ஊட்டச் சத்துக்களையும் கொண்டவை, பயிர்களுக்கு இடப்படும் மணிச்சத்தைப் பயிர்களுக்கு எளிதில் கிடைக்காமல் செய்து வருகின்றன.

தழை மற்றும் மணிச்சத்து மிகக் குறைந்த அளவே காணப்படுகின்றது. கேழ்வரகு, நிலக்கடலை, சோளம், எள், கொள்ளு, நெல், சாமை, உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, பருத்தி, மரவள்ளி, காய்கறிகள், மல்லிகை ஆகியவை இம்மண்டலத்தில் சாகுபடிச் செய்யப்படும் முக்கியப் பயிர்களாகும். ஜூன்-ஜூலை மாதங்களில் கிடைக்கும் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு பெருவாரியான நிலங்கள் பயிரிடப்படுகின்றன. வடகிழக்குப் பருவமழை கிடைக்கும் பகுதிகளில் இரண்டாவது போகமும் மானாவாரியாகவே சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. நிலக்கடலை, கேழ்வரகு, கம்பு, மரவள்ளி ஆகிய பயிர்கள் இறைவையிலும் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மா சாகுபடிப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு இம்மண்டலத்திலுள்ளது. திராட்சையும் பெருவாரியாகச் சாகுபடியிலுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கங்கள்

1. இராகி, கொள்ளு ஆராய்ச்சிகளில் தலைமையகமாகப் பணியாற்றுதல், முக்கியப் பயிர்களில் உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

2. மானாவாரி மற்றும் இறைவைச் சாகுபடிக்குத் தேவையான

ஆய்வு செய்யப்பட்டுவரும் டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் மாமரங்கள்.

ஆய்வு மையத்தில் தயாரிக்கப்படும் காளான் வித்துக்கள்.

அனைத்துத் தொழில்நுட்பங்களையும் கண்டறிதல்.

3. பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய்களை அளவீடு செய்து அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை ஆராய்தல்.

4. முக்கியத் தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தொழில்நுட்பங்களை ஆராய்தல் மற்றும் ரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுதல்.

5. இம்மண்டலத்திற்குத் தேவையான புது வேளாண் கருவிகளை வடிவமைத்தல். நீர், மண் வளம் பராமரிப்பு முறைகளைக் கண்டறிதல்.

6. வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, சார்நிலைத்துறை அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல்.

7. வேளாண் பெருமக்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளித்தல் ஆகியவைகளாகும்.

பயிர் மேம்பாடு, பயிர் மேலாண்மை, பயிர்ப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விரிவாக்கம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த 24 வேளாண் விஞ்ஞானிகள் ஒருங்கிணைந்த முறையில் இம் மண்டலத்திற்கு வேண்டிய ஆராய்ச்சிகள் அனைத்திலும் திட்டமிட்டுப் பயனுள்ள முறையில் செய்து வருகின்றனர்.

முனைப்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக பையூர்-1 என்று பெயரிடப்பட்டுள்ள நெல், இராகி, சோளம், சாமை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, கொள்ளு, எள், பருத்தி, தக்காளி ஆகிய 10 உயர் விளைச்சல் ரகங்கள் இந்த நிலையத்திலிருந்து இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

பையூர்-1 நெல் ரகம், கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பாசனப் பகுதிகளில் மிக அதிக அளவில் சாகுபடியிலுள்ளது. தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. இதர பையூர்-1 ரகங்கள் வறட்சியைத் தாங்கி உயர் விளைச்சல் கொடுக்கக்கூடியவை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பயிர் மேம்பாடு ஆராய்ச்சியின் விளைவாக 17 உயர் விளைச்சல் வளர்ப்புகள் பல வித பரிசோதனைகளிலும், அனுசரனை ஆராய்ச்சியிலும் உள்ளன. இவை கூடிய விரைவில் சாகுபடிக்கென வெளியிடப்படும்.

இந்நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள பயிர் ரகங்களில் நிபுணர் விதை இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வேளாண் துறைக்கு விதைப் பெருக்கத்திற்காக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. பயிர் மேலாண்மையில் கண்டறியப்பட்ட தொழில்நுட்பங்களில் நெல்லுக்கு சாம்பல் சத்து மேலுரமிடல், யூரியாவில் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுதல், கிருஷ்ணகிரி பகுதியில் களர் - உவர் நிலங்களைச் சீர்திருத்தம் செய்ய ஜிப்சம் மற்றும் பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துதல், மானாவாரிப் பயிர்களுக்கு மக்கிய தென்னை நார்க்கழிவு உரத்தை இடுதல், மானாவாரிப் பயிர்கள் வறட்சி தாங்கி வளர விதைகளைக் கடினப் படுத்தும் முறைகள், ஊட்டமேற்றிய தொழு உரத்தின் பயன்கள், கலப்புப் பண்ணையின் பயன்கள், சோயா மொச்சையைத் தனிப் பயிராகவும் ஊடு பயிராகவும் சாகுபடி செய்யும் முறைகள், பல்வேறு மானாவாரிப் பயிர்களை விதைக்க ஏற்ற காலம், மாவள்ளி, தட்டைப்பயறு ஆகியவற்றின் உரத் தேவைகள் ஆகியன அடங்கும். தீவனப் பயிர்களான புல், பயறுவகைகள், மரவகைகள் ஆகியவற்றிலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியப் பயிர்களுக்குத் தேவையான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகியவற்றைத் தேர்வு செய்யும் ஆராய்ச்சியும் செய்யப்படுகிறது.

பயிர்ப் பாதுகாப்பில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், முக்கியப் பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள், பருத்தி, காய்ப்புழு, தக்காளி காய்ப் புழு, தட்டைப்பயிறு மற்றும் துவரையில் தோன்றும் காய்ப்புழு ஆகியவற்றை நச்சுயிரி கொண்டு கட்டுப்படுத்துதல், ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்தி தென்னைக் கருந்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்துதல், நிலக்கடலையில் பல்வேறு பயிர்களை ஊடு பயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

பல்வேறு 'மா' ரகங்கள் இங்கு ஆய்வு செய்யப்பட்டு டி.பி.ஐ.45, டி.பி.ஐ.55 ஆகிய உயர் விளைச்சல் 'மா' வளர்ப்புகள் இந்நிலையத்திலிருந்து வெளியிடப்படவுள்ளது. பச்சை திராட்சை மற்றும் அர்க்காவதி ஆகிய இரண்டு திராட்சை ரகங்கள் இப்பகுதிக்கு மிகவும் ஏற்றவை எனத் தெரியவந்துள்ளது.

முழு அளவு எழுத்தறிவு பெற்ற புதுவை மாநிலம்!

புதுவை மாநிலம், முழு அளவு எழுத்தறிவு பெற்ற யூனியன் பிரதேசமாக 30-11-1991 அன்று முறைப்படி அறிவிக்கப்பட்டது. மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் இது தொடர்பான அறிவிப்பைப் புதுவையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வெளியிட்டார்.

நாட்டில் முழு அளவு எழுத்தறிவு பெற்ற இரண்டாவது மாநிலமாகப் புதுவை திகழ்கிறது. ஏற்கெனவே கேரள மாநிலம் இந்தச் சாதனையை அடைந்து முதல் இடத்தில் இருக்கிறது.



அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் இயந்திரம்.

மண், நீர் வளப் பாதுகாப்பிற்கும், மண் ஈரம் காக்கவும் பகுதிப்பாத்தி முறை மிகவும் சிறந்தது என ஆய்வு மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மானாவாரியிலும், இறைவையிலும் கருப்பு பாலீதீன் தாள் கொண்டு போர்வை அமைத்தல் மண் ஈரம் காக்கவும், களைகளைக் கட்டுப்படுத்தவும் விளைச்சளைப் பெருக்கவும் உதவுகிறது. தேசிய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களை இரண்டு கட்டமாகச் செயலாக்கியதன் மூலம் வறட்சி மற்றும் பூச்சி நோய்கட்கு எதிர்ப்புச் சக்தி கொண்ட உயர் விளைச்சல் ரகங்களை வெளியிடுதல் மானாவாரிக்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டங்களைக் கண்டறிதல், மாற்றுப் பயிர்கள் மற்றும் ஊடு பயிர்கள் ஆராய்ச்சி, ஒருங்கிணைந்த உர நிர்வாகம், உயர் விளைச்சல் காண வழிமுறைகள் இப்பகுதியில் மானாவாரிப் பயிர்களுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை மண்வரிசைக்கேற்றபடி அளவிடுதல், மண் இனக்கலவை ஆராய்ச்சி, மர, புல் மற்றும் தீவனப்பயிர்கள் ஆராய்ச்சி, தானியப் பயிர்களில் பயிர் விளை எண் குறியீடுகளை நிர்ணயித்தல், குறிப்பிட்ட திறன் வாய்ந்த நன்கு பயனளிக்கக்கூடிய ரைசோபியம், அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, மைக்கோரைசர் போன்ற உயிர் உரங்களைத் தேர்வு செய்தல் ஆகியவை தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த உயிரினங்களைப் பயன்படுத்துதல் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பூச்சி மற்றும் நோய்கள் தோன்றுவது குறித்து முன்கூட்டியே அறிவிக்க வழி வகைகள் காணுதல் பற்றிய ஆராய்ச்சிக்கும் முன்னுரிமை அளிக்கப் படுகிறது.

திராட்சை, குண்டு மல்லிகை மரவள்ளி ஆகிய பயிர்களுக்குத் தேவையான அனைத்துத் தொழில் நுட்பங்களையும் காணும் ஆராய்ச்சி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இறவைக்கேற்ற தக்காளி ரகத்தைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி தொடர்கிறது. திராட்சை, பீன்ஸ், முட்டைக்கோசு, முசுக்கொட்டை ஆகிய பயிர்களில் விவசாயிகளின் நிலங்களிலேயே ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இம்மண்டலத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் விவசாயக் கருவிகளைப் பற்றி ஒரு அளவீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுவகையான கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கும், வேலைப்பளுவைக் குறைப்பதற்கும் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

இந்நிலையத்தில் செயல்பட்டு வரும் மற்ற பணிகள்

★ அசோஸ்பைரில்லம், ரைசோபியம் போன்ற உயிர் உரங்களை அதிக அளவில் தயாரித்து விநியோகித்தல்.

★ மண், நீர் மற்றும் செடி மாதிரிகளை இந்நிலையத்திலுள்ள மண்டல மண் ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்து தக்க பரிந்துரைகள் அளித்தல்.

★ வேளாண்துறை, தோட்டக்கலைத் துறை, சார்பு நிலையத்துறை ஆகியோருடன் இணைந்து செயலாற்றுதல்.

★ ஒவ்வொரு மாதமும் 7-ம் தேதியன்று காளான் வளர்ப்பு பற்றி பயிற்சி அளித்தல், மேலும் காளான் வித்து தயாரித்து விநியோகித்தல்.

★ வேளாண் பெருமக்களுக்கு ஆராய்ச்சி நிலையத்திலும் வெளியிடங்களிலும் பயிற்சி அளித்தல்.

★ பல்வேறு வேளாண் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல்.

★ தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதித் திட்டத்தில் பங்கேற்று பணியாற்றுதல்.

★ மரப்பயிர்களுக்கு ரைசோபியம் நுண்ணுயிர்க்கலத்தலின் நன்மையைக் காட்ட தனித் திட்டம் மூலம் செயலாற்றுதல்.

★ விவசாயிகளின் நிலங்களில் வயல்வெளி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவைகளாகும்.

மு. கிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி?

'செய்வன திருந்தச் செய்' என்ற நல்ல அறிவுரையைக் கருத்தில் கொண்டு, நம் பணிகளைச் செவ்வனே செய்தால், 'விபத்து' என்ற சொல்லுக்கே இடமில்லாமற்போகும் 'விபத்து' என்றதுமே நமது உடலும் உள்ளமும் உறைந்து போகின்றன. காரணம், அது விளைவிக்கும் அச்சமும் அழிவும்தான், உடலுக்கும், உடைமைக்கும், உயிருக்கும், ஊறு விளைவிக்கும் 'விபத்து', நமது வாழ்க்கையில் வேண்டாத விருந்தாளி. எனவேதான் இந்த விபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் உருவாகியது.

விபத்துக்கள் நேர்வது எப்படி?

விபத்துக்கள் நிகழ்வதற்கான காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன-

1. மனிதனின் கவனக்குறைவும், அலட்சியப் போக்கும்.
2. இயந்திர மற்றும் மின்சாரக் கோளாறுகள்.
3. இயற்கையின் சீற்றத்தினால் நிகழும் விபத்துக்கள்.

மனிதனின் கவனக் குறைவும் அலட்சியப் போக்கும்

இவ்வகை விபத்துக்களுக்கு சாலை விபத்துக்களையும் இரயில் விபத்துக்களையும் உதாரணமாகச் சொல்லலாம். வாகன ஓட்டுநர்கள், சாலை விதிகளை அறியாமலும், மீதியாமலும், அலட்சியப் படுத்துவதாலும் விபத்துக்குக் காரணமாகின்றனர். முன்னே செல்லும் ஊர்தியை முந்திச் செல்ல நினைக்கும் மதியற்ற செயலும் ஒரு காரணம். வாகனங்கள் சரிவர இயங்குகின்றனவா என்பதை அவ்வப்போது கவனிக்காமல் இருப்பதும் ஒரு காரணம். சாலை விபத்துக்களுக்குப் பாதசாரிகளும் காரணமாகின்றனர். எப்படியெனில் அவர்கள் நடைபாதையையும், சுரங்கப் பாதைகளையும் உபயோகப்புடுத்துவதில்லை. சாலையே தனக்குத்தான் சொந்தம் என்ற மிதப்பில் சாலையைக் கடக்கும்போது, வெகு விரைவாக, அல்லது வெகு நிதானமாக, எதிரில் வரும் வாகனங்களையும் கவனிக்காமல், சாலை விதிகளான 'கடக்கும் இடம்', மற்றும் 'சிக்னல்'களையும் கவனிக்காமல் சாலையைக் கடப்பதனால் அநேக விபத்துக்கள் நிகழ்கின்றன.

'இரயில் விபத்துக்கள்' நிகழ்வதற்கு ஓட்டுநர்கள், மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் கவனக்குறைவும், அலட்சியமும் மட்டுமின்றி, இயந்திரக் கோளாறுகளும் காரணமாகின்றன.

அடுத்ததாக கட்டடக் கோளாறுகளினால் ஏற்படும் விபத்துக்களுக்கும் கவனக்குறைவு காரணமாகிறது. கட்டட வரைபட வல்லுநர்கள். திட்டம் தீட்டுபவர்கள், பொறியாளர்கள், கட்டடத் தொழிலாளிகள் ஆகிய பலரது சிறிய கவனக் குறைவால் பெரிய விபத்தெல்லாம் நிகழ்கிறது. தரக் குறைவான பொருட்களை உபயோகப்படுத்துவதாலும், கலப்படத்தாலும் கூட கட்டட விபத்துக்கள் நிகழ்கின்றன.

அடுத்தபடியாக, இயந்திரப் பணியாளர்களின் கவனக்குறைவும், அலட்சியப், பாங்கும் விபத்துக்கள் நேரக் காரணமாகின்றன. இயந்திரச் சாதனங்கள் பழுதடையாமல் இருக்கின்றனவா என்று கவனிப்பதில்லை இயந்திரங்களை இயக்கும் வழிமுறைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. இயந்திரச் சாதனங்களின் மேல் எழுதப்பட்டிருக்கும் 'எச்சரிக்கை' வாசகங்களைக் கவனிப்பதில்லை. எனவேதான் இயந்திரக் கோளாறுகளுக்கு மனிதன் காரணமாகிறான்.

விபத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன? அவற்றைத் தவிர்ப்பது எப்படி? என்பன போன்ற யோசனைகளைக் கூறுகிறது இக்கட்டுரை. சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் பொறியியல் துறையில் முதுநிலை உதவியாளராகப் பணியாற்றும் திருமதி எஸ்.வி. பட்டு இக்கட்டுரையை எழுதியுள்ளார். இது முதற் பரிசு பெற்ற கட்டுரையாகும்.

இயந்திர, மற்றும் மின்சாரக் கோளாறுகள்

இவ்வகைக் கோளாறுகள் மனிதனின் சக்திக்கும் திறமைக்கும் அப்பாற்பட்டவை. உதாரணமாக, விமான விபத்துக்களைச் சொல்லலாம். 'கால நிலை' காரணமாகவும், இயந்திரக் கோளாறுகளாலும், விமான ஓட்டியின் கவனக்குறைவு அல்லது போதிய பயிற்சியின்மையும் விமான விபத்துக்களுக்குக் காரணமாகின்றன. இதற்கு உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்னால் பெங்களூரில் நிகழ்ந்த 'ஏ-320' ரக விமான விபத்தைச் சொல்லலாம். இந்த விபத்துக்குக் காரணம், 'கணினி' எனப்படும் 'கம்யூட்டர்' கோளாறும், விமான ஓட்டிக்குப் போதிய பயிற்சி தராமையுமே காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளன.

அடுத்ததாக, 'போபால் விஷவாயுக் கசிவு' என்னும் விபத்து, இது உலகறிந்த ஒன்று. அந்த ஆலை சரிவரப் பராமரிக்கப்படாததால் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணம் என்று சொல்லப்படுகிறது. இதனால் இவ்வாலையை நிர்வகிக்கும் அமெரிக்கநிறுவனம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என முடிவாகியுள்ளது. இந்த விஷவாயுக் கசிவினால் எண்ணற்ற மக்கள் உயிர் துறந்தனர். பலர் நோய்வாய்ப்பட்டனர். சிலர் பயத்தினால் ஊரை விட்டே வெளியேறிவிட்டனர்.

அடுத்தபடியாக அணுசக்தியால் ஏற்படும் விபத்துக்கள். ஆக்க சக்தியான அணுசக்தி சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறிவிடுகிறது. இதற்கு உதாரணம் - ரஷ்ய நாட்டில் செர்னோஃபில் என்ற இடத்தில் அணுசக்தி உற்பத்தி ஆலையில் நடந்த மிகப்பெரிய விபத்தாகும். இந்த விபத்திற்கு இயந்திரக் கோளாறுகள் காரணமாய் இருக்கின்றன. இதற்குப் பிறகு 'அணுசக்தி உற்பத்தி' அவசியமா? என்ற கேள்விக் குறி தோன்றிவிட்டது மக்கள் மனத்தில் சமைப்பதற்கு உதவும் நெருப்பு, தீயாக மாறினால் சோற்றுக்கே வழியில்லாமல் செய்துவிடுவது போல், பகைவரிடமிருந்து காத்துக்கொள்ளவும், ஆக்க சக்திக்கும் உதவும் அணுசக்தி இயந்திரக் கோளாறுகளினாலும், கவனக்குறைவாலும் சில நேரங்களில் அழிவுச் சக்தியாகவும் மாறிவிடுகிறது.

இயற்கையின் சீற்றங்கள்

இயற்கைக் கட்டுப்பாட்டை மீறினால் மனிதசக்தியால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. புயல், மழை, வெள்ளம், மின்னல், இடி, நிலநடுக்கம், பூகம்பம், எரிமலை ஆகியவை இயற்கை ஏற்படுத்தும் விபத்துக்கள். இவ்விபத்துக்களால் ஏற்படும் அழிவு மிகப் பெரியது. விதியால் ஏற்படும் இவ்விபத்துக்களை மதியால் ஓரளவு தடுக்கலாம். இப்போது வெகுவாக முன்னேறி வரும் வானிலை ஆராய்ச்சியின் உதவிகொண்டு, இயற்கையின் விபத்துக்களை முன்பே அறிய முடிவதால், தடுப்பு முயற்சிகள் மேற்கொள்ள முடிகிறது.

இவை தவிர மின்சாதனங்களாலும், மின்சாரம் தடைப்படுவதாலும் கூட விபத்துக்கள் நேர்கின்றன.

விபத்தைத் தடுப்பது எப்படி?

விபத்துக்கான காரணங்களைப் பற்றி அறிந்த நாம் இனி விபத்துக்கள் நேராவண்ணம் தவிர்க்கும் வழிமுறைகளைப் பற்றி ஆராய்வோம். 'வருமுன் காப்பதே மேல்' என்ற வாசகத்தின்படி விபத்துக்களைத் தடுப்பதெப்படி? என்று சிந்திக்கும்போது - விபத்துக் கட்டளைகள் நினைவுக்கு வருகின்றன. விபத்தைத் தடுக்க-

பணியாளர்களுக்கான (வி)பத்துக் கட்டளைகள்:

1. கவனக்குறைவோடு காரியங்கள் செய்ய வேண்டாம்.
2. எச்சரிக்கை வாசகங்களை மறக்க வேண்டாம்.
3. பாதுகாப்புச் சாதனங்களை - கையுறை, தலைக் கவசம் போன்றவற்றை அணியாதிருக்க வேண்டாம்.
4. சாலைப் பாதுகாப்பு விதிகளை மீற வேண்டாம்.
5. தீப்பற்றும் பொருட்களை மின்சாரத்திற்கருகில் வைக்கவேண்டாம்.
6. குடிபோதையில் வேலைக்குச் செல்ல வேண்டாம்.
7. புகை பிடித்துக் கொண்டே பணிகளைச் செய்யவேண்டாம்.
8. தீ விபத்து ஏற்பட்டால் தன்னையும் பிறரையும் காத்துக் கொள்ளும் முறைகளை அறியாதிருக்க வேண்டாம்.
9. பாதுகாப்பு விதிகளைப் பற்றித் தெரியாதிருக்க வேண்டாம்.
10. பழுதுபட்ட இயந்திரங்களை இயக்கவேண்டாம்.

விபத்தைத் தவிர்ப்பதில் பணியாளர்களுக்கு மட்டுமல்ல, நிர்வாகத்தினருக்கும் பங்கு உண்டு. அதற்கான (வி)பத்துக் கட்டளைகள் பின்வருமாறு:

1. தொழிலுக்குத் தகுந்தாற்போல் பாதுகாப்புச் சாதனங்களை அளிக்க வேண்டும்.
2. எச்சரிக்கை வாசகங்களை ஆங்காங்கே எழுதவேண்டும்.
3. பாதுகாப்பு விதிகளை அனைவரும் அறியச் செய்யவேண்டும்.
4. பழுதுபட்ட இயந்திரங்களைச் சீராக்கவோ, மாற்றவோ வேண்டும்.
5. தீவிபத்து ஏற்பட்டால் தப்பிக்க வழிவகைகள் செய்ய வேண்டும்.
6. தகுதியையும், திறமையையும் சோதித்து, போதிய பயிற்சி பெற்றவரையே பணிகளில் அமர்த்த வேண்டும்.
7. தேவையற்ற கழிவுப் பொருட்கள் சேராமல் வெளியேற்ற வேண்டும்.
8. சுத்தமான காற்றும், வெளிச்சமும் சுலபமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.
9. ஆலை அமைக்கும் விதிகளை அறிந்திருக்க வேண்டும்; அதை அனுசரிக்க வேண்டும்.
10. மேற்பார்வை, கண்காணிப்பை மேம்படுத்த வேண்டும்.

மற்ற எல்லாத் துறையையும்விட, துறைமுகங்களில் விபத்துக்கள் நிகழ நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. துறைமுகங்களில் பல எண்ணெய், தானியக் கிடங்குகளும், தீப்பற்றக் கூடிய இரசாயனப் பொருட்களும் உள்ளன. இரயில் போக்குவரத்தும் உள்ளது. கப்பல்கள் நிறுத்தப் பட்டுள்ளன. கடல் சீற்றத்திற்கும் ஆளாகிறோம். எனவே,
'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு'
என்ற வள்ளுவர் வாக்குப்படி துறைமுகத்தில் வேலைபார்க்கும் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்து விபத்துக்கள் ஏற்படாதவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(நன்றி: சென்னைத் துறைமுகம்)

அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் துணி வகைகள்!

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் முதலிடம் வகிப்பது துணி வகைகள் ஆகும். நமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் சுமார் 25 சதவிகிதம் ஜவுளி ரகத்தைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் ஜவுளி ஏற்றுமதி உயர்ந்துக் கொண்டே போவது மகிழ்ச்சிக்குரியதாகும். 1984-85-இல் ரூ.1,888 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஜவுளி, 1989-'90 ஆண்டுகளில் ரூ.6,501 கோடி மதிப்புக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது. இந்த ஏற்றுமதி 1990-'91-இல் குறிப்பிடப்பட்ட இலக்கான ரூ.7,330 கோடியையும் மிஞ்சி ரூ.8,409.68 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நமது நாட்டுக்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருவதிலும் பெரும் பங்கு வகிப்பது ஜவுளித்துறையே ஆகும். மொத்த அந்நியச் செலாவணியில் ஏறக்குறைய 75 சதவிகிதம் ஜவுளி ஏற்றுமதியின் மூலமே கிடைக்கிறது.

—பத்திரிகை தகவல் அலுவலகம்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

இந்தியாவிலேயே மிருகக் காட்சி சாலையை முதன்முதலாக 1855-ஆம் ஆண்டில் சென்னையில் அமைத்தலின் மூலம், தமிழகம் பெருமையடைகிறது.

வண்டலூர் உயிரியல் பூங்கா 1985-இல் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த உயிரியல் பூங்காவில் சிறிய பெரிய யானைக் கூட்டங்களும் உள்ளன. புலி, கடமான், பன்னிறப் பறவைகள் முதலானவையும் பார்க்கப் பரவச மூட்டும்.

இந்த விந்தைமிகு விலங்குகள் உலகம் நம் சிந்தைக்கு விருந்தூட்டு வன. வாருங்கள்! அந்த உலகிற்குப் போவோம்!

இரவு விலங்குகளின் உலகம்

அற்புதமான இரவு விலங்குகளின் செயல்களை நம்மில் பலர் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இரவு விலங்குகள் இரவில் மட்டுமே காணப்படுவதால் சில சாதாரண இரவு விலங்குகளைப் பற்றிக் கூட மனிதனால் அதிகம் அறிய முடியவில்லை. இரவு விலங்குகளில் 951 வகையான வௌவால்களும் 123 வகையான ஆந்தைகளும் உள்ளன. இவைகளின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் பகலில் காணப்படும் விலங்குகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இவை சிறப்பான முறையில் இரவு வாழ்க்கையை நடத்திடப் புதுமையான தகவமைப்புகளைப் பெற்றுள்ளன.

ஆந்தைகளின் பெரிய கண்களும், வௌவால்களின் எதிரொலியைப் பயன்படுத்திப் பொருள்களை அறிவதையும் உதாரணங்களாகச் சொல்லலாம். இரவு விலங்குகள் பகலில் தூங்குவதனால் சாதாரணமாக அவைகளின் செயல்களைக் காண வாய்ப்பில்லாமல் போகிறது. மேலும் பார்வையாளர்கள் இரவு நேரத்தில் அவைகளைக் காண்பதென்பதும் அரிது. எனவே இரவு, பகல் சூழ்நிலைகளை மாற்றி அவைகளுக்கேற்றவாறு இரவு விலங்குகளைச் செயல்பட வைக்கும் ஓர் புதிய உத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில் ஒரு சில உயிரியல் பூங்காக்களில் மட்டுமே இரவு விலங்குகள் உலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவும் ஒன்றாகும். இவ்விலங்குகள், இரவு விலங்குக் கூடத்தினுள், பகலில் குறைந்த ஊதா மற்றும் சிவப்பு ஒளி வெளிச்சத்தில் இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது. இந்த இரவு விலங்குகளுக்கு நிறப்பார்வை இல்லாததனால் இவை இருளிலேயே இருப்பதுபோல் எண்ணிச் செயல்படுவதைப் பார்வையாளர்கள் கண்டு களிக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் இந்த இரவு விலங்குக் கூடங்கள் ஒளி வெள்ளங்களினால் பகல் போன்று தோற்றுவிக்கப்படுவதால் விலங்குகள் ஓய்வு நிலைக்குச் சென்று விடுகின்றன.

இங்கு இரவு விலங்குகளின் இருப்பிடத்தின் உள்ளே சென்று அவைகளைக் காணும்படியாக அமைக்கப்பட்டுள்ள 'உட்சென்று காணும் இரவு விலங்குக் கூட' அமைப்பு ஓர் தனிச் சிறப்பு அம்சமாகும்.

சிங்கம் உலவிடப் பூங்கா

நவீன உயிரியல் பூங்காக்களில், விலங்குகள் அவை இயற்கையில் வாழும் சூழ்நிலையை ஒத்த இடங்களில் வைக்கப்பட்டு வருகின்றன. விலங்குகளைப் பார்வைக்காக வைப்பது, முதலில் கூண்டிலேயும், பிறகு பெரிய தீவுகளிலேயும் தற்பொழுது உலவிடங்களிலும் வைக்கக்கூடிய அளவுக்குப் படிப்படியான வளர்ச்சியினை அடைந்துள்ளது. இவ்வாறு விலங்குகளை உலவிடங்களில் வைப்பதன் மூலம், அவை மகிழ்ச்சியோடு இருப்பது மட்டுமல்லாமல், காணும் பார்வையாளர்களுக்கும் ஒரு பரவச உணர்வை ஏற்படுத்துகின்றன. மேலும் விலங்குகளைச் சிறிய கூண்டில் வைப்பதனால் அவைகளுக்குச் சில அசாதாரண பழக்கங்கள் ஏற்படுவதுடன், அவைகளுடைய இயற்கைக் குணங்கள் மறைந்து இனவிருத்தியும் தடைப்படுகிறது. எனவேதான், உலவிடங்கள் ஐரோப்பிய நாடுகளில் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள நவீன உயிரியல் பூங்காக்களில் உலவிடங்கள் அமைப்பது, உயிரினப் பூங்காவின் ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அமைக்க எழுதப்பட்ட திட்டத்தில் சிங்கம், காட்டெருமை, மான்கள் ஆகிய வைக்கும் உலவிடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உலவிடங்கள் நிலப்பரப்பில் சுமார் 70 எக்டேர் மலைச் சரிவைக் கொண்டது. இதில் சிங்கங்களுக்கான உலவிடம் 30 எக்டேர் பரப்பில் அமைந்துள்ளது. இதனை ஏற்படுத்துவதற்கான செலவு ரூ.23.58 இலட்சமாகும்.

மூன்றுவிதமான வனவிலங்குகளுக்கு மலைச்சரிவைக் கொண்ட பெரிய நிலப்பரப்பில் உலவிடங்கள் அமைந்திருப்பது இந்தியாவிலேயே ஒரு புதிய சிறப்பு அம்சமாகும்.

ஊர்வன இல்லம்

பாம்புகள், முதலைகள், பல்லிகள், ஆமைகள் ஆகிய ஊர்ந்து செல்லும் விலங்கினங்கள் 'ஊர்வன' வகுப்பாகும். இவற்றில் பாம்புகள், முதலைகளைப் பற்றி மக்களுக்கு ஓரளவு தெரிந்திருந்தாலும், பல வகையான பல்லிகள், ஆமைகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தப் பலவகையான விலங்குகள் ஒரே வகுப்பில் அமைக்கப்பட்டிருந்தாலும் இவற்றின் வெளித் தோற்றங்கள் முழுமையாக வேறுபட்டிருப்பதைப் பார்க்கிறோம். காலில்லாத பாம்புகள், கடின மேலுறை கொண்ட ஆமைகள், ஆகியவை தோற்றத்தில் ஒன்றிற்கு ஒன்று சம்பந்தம் இல்லாமை போல் தோன்றுகின்றன. இவ்வகையான வேறுபட்ட ஊர்வன விலங்கினங்களை இங்கு அவற்றின் வாழ்விடங்களை ஒத்த இல்லங்கள் அமைத்துப் பாதுகாப்பாகப் பார்வையாளர்களுக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு பார்வையாளர்களுக்கு ஊர்வன விலங்குகளின் பரிணாம வளர்ச்சி பற்றியும், விஷமுள்ள, விஷமற்ற பாம்புகள் பற்றியும் கற்றுக் கொள்ளும் விதமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பாம்புகளைப் பற்றி விரிவாக அறிய சிறிய செய்முறைப் பயிற்சிக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாம்பு போல் வளைந்து செல்லும் இந்த இல்லத்தினுள் நடந்து செல்வதும், இதன் எதிரே அமைக்கப்பட்டிருக்கும் நில வடிவமைப்பும் பார்வையாளர்களுக்குப் பரவச மூட்டும். இந்த ஊர்வன இல்லத்தை அமைப்பதற்கான மொத்த செலவு ரூ.7.3 இலட்சம் ஆகும்.

உட்சென்று காணும் பறவைக் கூடம்

உட்சென்று காணும் பறவைக் கூடம் ஒரு நவீன அமைப்புக் கொண்ட பறவைகள் காப்பகம் ஆகும். பழங்காலத்தில் பறவைகளைச் சிறு கூண்டுகளில் வைத்துத் தான் வளர்த்து பார்வைக்கு வைத்தார்கள் சில உயிரியல் பூங்காக்களில் பெரிய பறவைகளின் இறகுகள் பறக்காதவாறு நறுக்கப்பட்டு பெரிய திறந்தவெளிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதை அறிகிறோம்.

பெரும்பாலான பறவைகள் அவற்றின் இறகுகள் வெட்டப்படுவதாலும், சிறிய கூண்டுகளில் வைக்கப்படுவதாலும் இனவிருத்தி செய்வதில்லை. இந்தக் காரணத்தைக் கருத்தில் கொண்டே, சில நவீன உயிரியல் பூங்காக்கள், பெரிய பறவைக் கூடாரங்களைப் பறவைகள் உள்ளே உல்லாசமாகப் பறந்து வரும் விதமாக அமைத்து வருகின்றன. இவ்வாறாக அமைக்கப்படும் பெரிய உட்சென்று காணும் பறவைக் கூடங்களினால் இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று இதனுள் பறவைகள் உல்லாசமாகப் பறப்பதன் மூலமும் தோகை விரித்து ஆடுவதன் மூலமும் நன்கு இனவிருத்தி செய்கின்றன. இரண்டாவதாக, பார்வையாளர்கள் கூடாரத்தினுள் சென்று பறவைகளின் குணத்தையும், செயல்பாடுகளையும் தெளிவாகக் கண்டு அறிய ஏதுவாகிறது.



இந்தப் பறவைக் கூடம் கோடிக்கரை சரணாலய நீர்ப் பறவைகளுக்கெனப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டு, சில முக்கிய கோடிக்கரைச் சரணாலயப் பறவைகளான பூநாரை, கடல் காகம், சிறவி வகைகள், கொக்கு நாரை போன்றவைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கூடத்தினுள் புதர்கள் கொண்ட ஒரு சிறிய திடலும் (30 ச.மீ.) ஒரு பரந்த நீர்ப் பரப்புடன் (110 ச.மீ.) அமைக்கப்பட்டுள்ளன. கோடிக்கரைச் சரணாலயத்தில் இப்பறவைகளை அக்டோபர் முதல் பிப்ரவரி வரையிலான காலங்களில் மட்டுமே காணலாம். ஆகவே அவற்றை ஆண்டு முழுவதும் பார்வையாளர்கள் பார்த்து மகிழ்வதற்கு வசதியாக, இப்பெரிய கூடத்தினுள் வளர்க்கப்பட்டு வரப்படுகிறது.

ஆகவே, இது கோடிக்கரைச் சரணாலயம் பறவைக்கூடம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனுள்ளே பறவையாளர்கள் நுழைந்து சென்று பறவைகளைப் பக்கத்தே பார்த்து மகிழலாம். இங்கே பூநாரைகள் ஆழமில்லா நீரில் தலையை நுழைத்து சேற்றைக் கிளறிப் பூச்சிகளை உண்டு மகிழும் விதத்தையும், பறந்த நீர்ப் பரப்பில் கடல்காகங்கள் நீந்திச் சென்று மீன் பிடிப்பதையும் கண்டு மகிழலாம். சிறிய நிலப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கி கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பில் உள்ள புதர்களில் சிறவிகள் தங்கிக் கூடு கட்டவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பின் தளம் பிளாட்டிங் விரிப்பில் பரப்பப்பட்டு அதன் மீது செங்கல் பரப்பப்பட்டு, எளிதான முறையில் நீர் பூமிக்குள் செல்லாதவாறு சேமிக்கப்பட்டுள்ளது. கூடத்தின் கூரையில் பரப்பப்பட்டுள்ள நீலநிற வலை வானத்து நிறத்துடன் ஒன்றி விடுவதால் உள்ளே உள்ள பறவைகள் மேற்கூரையை வானமென உணர்கின்றன.

இந்தக் கூடமும் இதனைச் சுற்றியுள்ள அமைப்பும் சுமார் ரூ.7.55 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, ஆடவர் மகளிர் குழந்தைகள் கண்டு மகிழ்ந்திட அழகிய இயற்கைச் சூழ்நிலையில் அமைந்திருப்பதுதான், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

சென்னைக்கு அருகில் அமைந்துள்ள இந்த இயற்கைப் பூங்கா நம்மவரை மட்டுமல்ல, வெளிநாட்டவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது என்றால், அது மிகையாகாது!

அன்றும் இன்றும்... பல் மருத்துவம்

பல் மருத்துவம் என்பது அந்தக் காலத்தில் எப்படியெல்லாம் இருந்தது - இந்தக் காலத்தில் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையெல்லாம் இந்தக் கட்டுரை விளக்குகிறது.

'தென்பாண்டி நாட்டிலே தேடியெடுத்த முத்துக்களோ' என்று பற்களின் அழகைப் புகழ்ந்து கவி பாடினர் புலவர்கள். ஆலும், வேலும் பல்லுக்குறுதி என்றார் ஔவை மூதாட்டி. நம் முன்னோர் பற்களின் வலிவையும் பொலிவையும் நன்குணர்ந்து, அவற்றைப் போற்றிப் பாதுகாத்து, வாழ்ந்து வந்தனர். பற்களைப் பராமரிப்பது குறித்தும், பற்களில் ஏற்படக் கூடிய நோய்களைப் பற்றியும், அந்நோய் தீர்க்கும் மருந்துகளையும் சித்தர் பாடல்கள் பல எடுத்துரைக்கின்றன:

'கல்லு மணலும் கரியுடனே
பாளைக்கும்
வல்லதொரு வைக்கோலும்
வைத்துநிதம் -பல்லதனைத்
தேய்த்திடு வாராயின்
சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து.'

'வேலுக்குப் பல்லிறுகும்
வேம்புக்குப் பல்துலங்கும்
பூலுக்குப் போகம்
பொழியுங்காண் - ஆலுக்குத்
தண்டா மரையாளுஞ்
சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்'

- என்ற பாடல்கள் பல் பராமரிப்பைப் பாங்குற விளக்குகின்றன. காலப்போக்கில், மக்களின் கவனக் குறைவாலும் உணவுப் பழக்கங்களில் ஏற்பட்ட மாறுதல்களாலும், பற்களைச் சரிவர சுத்தப்படுத்தாததாலும், பல் நோய்கள் மிகையாகப் பரவின. அவற்றைக் கட்டுப்படுத்தவும், குணமாக்கவும், கிராமங்களில் அந்தக் காலத்தில் முடிதிருத்துபவரே பல் மருத்துவராகவும் செயல்பட்டிருக்கிறார். இக்காலத்தை, பல் மருத்துவத்தின் தளர்ந்த காலம் எனலாம். விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகப் பல் மருத்துவம் நன்கு முன்னேறி, பட்டப்படிப்பும் பட்ட மேற்படிப்பும் தனியே உருவாகி, உபகரணங்களிலும் உபயோகிக்கும் பொருள்களிலும் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டு, இன்று பொது மக்களுக்குச் சீரிய சேவை செய்து வருகின்றது.

டாக்டர் எ. பரமேஸ்வரன்,
எம்.டி.எஸ்.,
டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன்,
எம்.டி.எஸ்.,

பற்களின் தேவையும் அவற்றின் பாதுகாப்பும்

முகத்தின் அத்தனை அங்கங்களுக்கும் மிகவும் எடுப்பாக அமைந்து, மிடுக்காக இருந்தாலும், பற்கள் இல்லாவிட்டால் அழகனைத்தும்

போய்விடும். பற்களின் பயன் பார்வைக்கு அழகு மட்டுமா? உணவினைக் கடித்து, மென்று கூழாக்கி எளிதில் ஜீரணிக்க உதவுவது பற்களல்லவா? அதுமட்டுமா? 'பல்லு போனால் சொல்லு போச்சு' என்ற முதுமொழிதான் எத்தனை உண்மை! வார்த்தைகளைத் தெளிவாக உச்சரிக்கப் பற்கள் எவ்வளவு உபயோகமாக இருக்கின்றன! 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பதுபோல, பலருக்குப் பற்களின் பெருமை, அவற்றை இழந்த பிறகுதான் தெரிகிறது. பற்களைப் பேணிப் பாதுகாத்து வந்தால், வாழ்நாள் முழுவதும் அவை பெரும் பயன் தரும். பற்களைப் பாதுகாக்க, ஆண்டுக்கு இருமுறை பல் மருத்துவரை அணுகி, அவரது ஆலோசனைகளைப் பெற்று, அதன்படி நடந்து பயன்பெறலாம்.

பல் மருத்துவம் - அன்றைய நிலைமை

பல் வைத்தியர் என்ற சொல் காதில் விழுந்ததுமே, பலருக்கு உடனடியாக மனதில் தோன்றும் மற்றொரு சொல், வலி என்பதாகும். அந்த அளவிற்கு, முந்தைய நாட்களில் பல் மருத்துவ முறைகள் குறையுடன் காணப்பட்டன. தவிரவும், முன்பு பல் துலக்க உபயோகப் படுத்தப்பட்ட கரி, சாம்பல், செங்கல் போன்ற கரகரப்பான பொடிகளால் பல்லின் மேற்பாகம் தேய்ந்து உரு மாறி உடைந்து பயனற்றுப் போய் பல்வலி அதிகமாகி பற்களை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தக்க தருணத்தில் சரியான முறையில் பல்லைப் பேணிப் பாதுகாக்காமல் மக்கள் விட்டுவிட்டதால் பல் மருத்துவர்களும் வேறுவழியின்றிப் பற்களை அகற்றி வந்தனர்; இதனால் பல் மருத்துவம் என்றாலே பல்லைப் பிடுங்குதல் என்ற நினைப்பே அப்போதெல்லாம் மேலோங்கி இருந்தது.

குற்றவாளிகளின் பற்கள் பிடுங்கப்பட்டு, ஒரு தண்டனையாகவே நிறைவேற்றப்பட்டு வந்த காலமும் உண்டு! பற்களின் துவாரங்களைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் குறைந்த வேகங்களில் சுழன்றதாலும், உராய்வினால் சூடேறியதாலும், நோயாளிகளுக்கு அதிகமாகப் பற்கூச்சத்தையும் சிரமத்தையும் அளித்து வந்தன. மருத்துவரின் வசதிக்காக உபயோகித்த விளக்குகளும், பிணியாளர்களின் கண்களுக்கு அதீத பிரகாசத்தையும் வெப்பத்தையும் அளித்துக் களைப்புறச் செய்தன. முன்னாளில், நோயாளிகள் அமரும் நாற்காலிகளும் அவர்களது உடலுக்குச் சீரான சௌகரியம் அளிக்காமல் இருந்தன. பற்களுக்குள் அடைக்கும் பொருட்களும் உயர்ந்த தரமுள்ளவையாக இல்லாமலும், பற்களின் உட்புறத் திசுக்களுக்கு ஏற்புடையதாகவும் இல்லை. பல் மருத்துவரே பல் மருத்துவம் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் உதவியாளரின்றிச் செய்து வந்ததாலும், நின்றபடியே மருத்துவர் சிகிச்சை செய்ததாலும், பழைய உத்திகளையும் கொள்கைகளையுமே பயன்படுத்தி வந்ததாலும்



டாக்டர் ஏ. பரமேஸ்வரன்

டாக்டர் கே.எஸ். கார்த்திகேயன்

எளிதில் அயர்வுற்றனர். இந்த நிலைமைகள் இன்று மாறிவிட்டன.

பல் மருத்துவம் - இன்றைய நிலைமை

பல் மருத்துவத்தின் எல்லாத் துறைகளிலும் இப்போது வியக்கத் தகுந்த முன்னேற்றங்கள் காணப் பட்டுள்ளன. மரத்துப்போக உதவும் சிறந்த நவீன மருந்துகள் உள்ளதால், வலியே சிறிதும் இல்லாமல் பற்களில் சிகிச்சை செய்ய-அல்லது வீணான பற்களை எளிதில் பிடுங்கி விட முடிகிறது. சில பல் மருத்துவர்கள் ஹிப்னாடிச முறையையும், அக்குபஞ்சர் முறையையும் பின்பற்றி வலியற்ற வைத்தியம் புரிகிறார்கள். இப்போதைய நவீன முறைகளின் மூலமாக எவ்வளவு தூரம் பல்லைக் காப்பாற்ற இயலுமோ அவ்வளவு முயற்சிகளையும் செய்து பற்களைப் பிடுங்குவதைத் தவிர்க்கிறார்கள்.

பல் பரிசோதனைக்குப் பயன்படும் கருவிகளில் மின்னணுக் கருவிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. புதுமையான கண்டுபிடிப்புகளான சோதனைக் கருவிகள் சில பல் மருத்துவருக்குப் பெரிதும் உதவுகின்றன. எக்ஸ் கதிர்களை உபயோகித்து எக்ஸ்ரே படங்கள் எடுப்பதிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரே படத்தில் வாயிலுள்ள அனைத்துப் பற்களின் பிம்பங்களும் படியும் வண்ணம் எடுக்கப்படும் 'பான் எக்ஸ்ரே' என்கிற புதிய முறை மிகவும் வசதியானதாகும்.

நடமாட இயலாத நோயாளிகளுக்காக, இப்போது, நகர்த்திச் செல்லக்கூடிய எக்ஸ்ரே கருவிகள் கிடைக்கின்றன. இவற்றை நோயாளிகளின் படுக்கையருகில் கொண்டு சென்று, நோயாளிக்குச் சிறிதும் சிரமமின்றி எக்ஸ்ரே படங்களை எடுக்கலாம். நோய் குறித்துச் சரியான முடிவுக்கு வருவதற்கு இந்த எக்ஸ்ரே படங்கள் பெரிதும் உதவுகின்றன.

பல் மருத்துவரின் ஆய்வுக்கு உதவும் வகையில் கண்கள் கூசாத நிழலற்ற விளக்குகள் இப்போது பயன்படுத்தப்படுகின்றன. இவை போதுமான வெளிச்சத்தை அளித்த போதிலும் பிணியாளருக்குக் கண்களைக் கூசச் செய்யாதவண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் மற்றொரு விளக்கு, வெப்பமில்லா ஒளி விளக்காகும். இந்த விளக்கில், உபயோகிக்கப்படும் 'லாம்ப்' சற்று தூரத்தில் இருந்தபோதிலும், வெளிச்சத்தை மட்டும் செயற்கைக் கண்ணாடி இழைகள் மூலமோ அல்லது திரவங்கள் மூலமோ ஊடுருவிப் பிரதிபலிக்கச் செய்து நோயாளியின் வாயருகில் உபயோகிக்கிறார்கள்.

எவ்வளவு நேரம் இந்த வெளிச்சத்தில் வேலை செய்தாலும் வெப்பம் அதிகரிப்பதில்லை என்பதால், நோயாளிகளும், பல் மருத்துவர்களும் 'பைப்ரோ அப்டிக் லைட்' எனப்படும் இவ்விளக்கைப் பெரிதும் விரும்புகின்றனர்.

ஏற்றபடி அமையும் இருக்கைகள்

பல் நோயாளிகளுக்கான இருக்கைகளிலும் நிறைய மாறுதல்கள் செய்யப்பட்டு, உடலுக்கேற்ற வடிவமைப்புள்ள பல் மருத்துவ இருக்கைகள் கிடைக்கின்றன. இவற்றில் அமர்ந்து மருத்துவம் செய்து கொள்ளும் நோயாளிகள் மிகவும் சௌகரியமாக உணருகிறார்கள். அவர்களது உடல் முழுவதையும் ஒரே சீராக இந்த இருக்கைகள் தாங்கிக் கொள்ளுவதால், நோயாளிகளுக்கு முதுகு வலியோ கழுத்து வலியோ ஏற்படுவதில்லை.

நோயாளிகளின் சௌகரியம் மருத்துவத்தில் மிக முக்கியமான விஷயம். வசதியான முறையில் அவர்கள் அமர்ந்திருப்பது, மருத்துவம் செய்கையில் ஏற்படும் பாதிச் சங்கடங்களைத் தீர்த்துவிடும். பல் மருத்துவர்களும் இப்போது நின்று கொண்டே வைத்தியம் புரியாமல், தக்க இருக்கைகளில் அமர்ந்தபடி பணிபுரிகிறார்கள். இதனால் அவர்களும் எளிதில் சோர்வுறாமல், அதிக நேரம் வேலை செய்ய முடிகிறது. பல் மருத்துவர்களுக்கும், அவர்களது பணியின் காரணமாக, சாதாரணமாக ஏற்படக்கூடிய முதுகு வலி, மூட்டுவியாதி போன்றவை, இப்படி உட்கார்ந்தபடி வேலை செய்வதால் தவிர்க்கப்படுகின்றன. இவை தவிர பல்வேறு பல் மருத்துவக் கல்லூரிகளிலும் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு தேர்ச்சியடைந்த உதவியாளர்களைப் பயன்படுத்துவதால், வேலைகள் சரிவரப்பிரிக்கப் பட்டு, மருத்துவரின் வேலைப் பளு குறைகிறது. குறைந்த நேரத்தில் அதிக நோயாளிகளைக் கவனிக்கவும் முடிகிறது.

பற்களின் துவாரங்களைச் சுத்தப் படுத்தி வடிவமைக்க உருவாக்கப் பட்டுள்ள சுழற் கருவிகளிலும் மிக அதிக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தற்சமயம் உபயோகத்திலுள்ள அதி வேக ஆற்றல் சுழல் இயந்திரங்களைப் பயன்படுத்தி, நிமிடத்திற்கு மூன்று முதல் ஐந்து இலட்சம்

சுழற்சியினைக் கருவிகளில் பெற இயலும். இந்த வேகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் மிக எளிதாக, நோயாளிக்கு வலியே தெரியாமல் பல்லில் துவாரம் செய்ய உதவுகின்றன. காற்றழுத்தத்தால் சுழலும் இக்கருவிகள் அதிர்வின்றி இயங்குவதால் நோயாளிக்கு எந்த விதமான சிரமமும் இருப்பதில்லை. பல்லின் துவாரங்களை அடைப்பதற்காகப் பயன்படுத்தும் பொருட்களிலும் நிறைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய பொருட்கள் பற்களின் இயற்கை நிறத்திற்கு ஏற்றபடியும், பல்லுடன் ஒட்டிக் கொள்ளும் தன்மையாகவும் நல்ல வலிவுடையதாகவும் விளங்குகின்றன உடைந்த பற்களைச் சீர்செய்யவும், சொத்தை விழுந்து நொறுங்கிய பற்களை மீண்டும் புதுப்பிக்கவும்,

விழுந்த பற்களை மீண்டும் பொருத்தவும் புதிய முறைகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன.

புதிய சிந்தனைகள்

பல் மருத்துவத் துறையில் புதிய சிந்தனைகள் செழித்து வளர்ந்துள்ளன. மக்களுக்குப் பற்களைப் பற்றிய சிந்தனையையும் விழிப் புணர்வையும் வளர்ப்பதற்காகக் கண்காட்சிகளும், சொற்பொழிவுகளும், ஒளிபரப்புக்களும் அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றன. பற்சொத்தை வராமல் தடுக்க முயற்சிகள் எடுக்கப் படுகின்றன. மக்களுக்காகவே மருத்துவம் என்பதை உணர்த்துவது போல ஆங்காங்கு பல் மருத்துவம் இலவசப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. நடமாடும் பல் மருத்துவ ஊர்தி, மருத்துவ வசதியற்ற பல ஊர்களில் பெரும் சேவை புரிகின்றது. உலகில் ஓர்புறத்தும் இல்லாதபடி, நம் தமிழகத்தில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பற்பொடி வழங்கும் திட்டமும் சிறப்புற நடந்து வருகிறது. நோய் வருமுன் காத்தலே சிறந்த மருத்துவம் என்னும்படி மக்களுக்குப் பல் நோய்த் தடுப்பு பற்றித் திரைப் படங்கள் மூலமாகவும் அறிவுறுத்தப் படுகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; 'கால வகையினானே' என்ற வாக்குக்கு ஏற்ப காலப்போக்கில், பயன்தராத பழைய முறைகள் அநேகம் மறைந்து, அவற்றிற்குப் பதிலாக, ஏற்றம் மிகுந்த சீரிய புதிய முறைகள் நிறைய கண்டுபிடிக்கப்பட்டு, பல் மருத்துவத் துறையில் பயன்படுத்தப் படுகின்றன. மக்களின் உடல் நலத்தைப் பேணுவதில் பல் மருத்துவர்களுக்குப் பெரும்பங்கு இருப்பதால் பல் மருத்துவம், இப்போது தனி அந்தஸ்திற்கு உயர்ந்திருக்கிறது. பிணியாளர்களின் நன்மை ஒன்றையே கருத்தில்கொண்டு சேவை செய்துவரும் பல் மருத்துவத் துறையின் எதிர்காலம் மிகப் பிரகாசமானதாகும் என்பதில் சற்றும் ஐயமில்லை. ●

அறிவுச் சுடர்

மாணவர் பக்கம்

சுதந்திர இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?

—கவிஞர் சரோஜினி நாயுடு

சோவியத் நாட்டிலிருந்து ஏவப்பட்ட இந்தியச் செயற்கைக் கோள் எது?

—ஆர்யபட்டா

தீக்குச்சி செய்ய உபயோகப்படும் இரசாயன மருந்து எது?

—பொட்டாசியம் குளோரைடு

பூமியில் நிலமும் நீரும் எத்தனைச் சதவிகிதம்?

—நிலம் 29%, நீர் 71%

போபால் விஷவாயு நிகழ்ச்சி நடந்த நாள்?

—டிசம்பர் 3, 1984

இந்தியாவையும், சீனாவையும் பிரிக்கும் எல்லைக்கோடு எது?

—மேக்மகோன் கோடு

நான்கு பக்கமும் கடலில் சூழப்பட்ட கண்டம் எது?

—ஆஸ்திரேலியா

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கோள் எது?

—ரோகிணி

இந்தியாவில் மிக நீளமான ரயில்வே பிளாட்பாரம் உள்ள இடம் எது?

—சோனாப்பூர் (736 மீட்டர்)

பறவை இனத்தில் பறக்கத் தெரியாதது எது?

—பெங்குவின்

கொம்பில் கண் உள்ள பிராணி?

—நத்தை

காலிலே காது உள்ள பூச்சி?

—வெட்டுக்கிளி

தென் ஆப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளோடு சேர்ந்து போராடிய தமிழ்ப் பெண் யார்?

—தில்லையாடி வள்ளியம்மை

நீந்தத் தெரியாத மிருகம்?

—ஒட்டகம்

சிமெண்ட்டைக் கண்டுபிடித்தவர் யார்?

—பார்க்கர்

உலகில் நீளமான சுவர் எது?

—கிரேட்வால்-ஆப் சைனா. 2,710 கி.மீ.

இரத்தத்திலுள்ள நோய்க் கிருமிகளைக் கொல்வது எந்த அணுக்கள்?

—வெள்ளை அணுக்கள்

மஞ்சள் காமாலை நோய் எதனால் ஏற்படுகிறது?

—கல்லீரல் பாதிக்கப்படுவதால்

அறிவு வளர்ச்சி அதிகமுள்ள கடல் பிராணி எது?

—டால்பின்

இந்தியாவில் அதிகம் ஆப்பிள் விளையும் இடம் எது?

—சிம்லா

—மா.தா. ஸ்ரீதர்
12-ஆம் வகுப்பு 'பி' பிரிவு
ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன்
மேல்நிலை பள்ளி (தெற்கு)
தியாகராய நகர், சென்னை-17.

தாய்நாடு

- கவிஞர் தமிழ்முடி

வேர்நன்றாய் இருந்தால்தான்
மரம்நன்றாய் வளரும்!
பேர்நன்றாய் புரிந்தால்தான்
அஞ்சல்போய்ச் சேரும்!
ஊர்நன்றாய்த் தெரிந்தால்தான்
போய்ச்சேர முடியும்!
ஏர்நன்றாய் நடந்தால்தான்
சோறுணவு கிடைக்கும்!

காய்நன்றாய் இருந்தால்தான்
கனியாகி இனிக்கும்!
வாய்மொழியில் சிறந்தால்தான்
தாய்மொழியும் சிறக்கும்!
ஈபூத்தேன் குடித்தால்தான்
தேனடைகள் கிடைக்கும்!
சேய்பண்பால் உயர்ந்தால்தான்
தாய்நாடு சிறக்கும்!

மதுரமிகு தாய்மொழியில்
பிழையின்றிப் பேச
மதலைமுதல் அக்கறையாய்
உச்சரித்துப் பழகி
நிதமும்நல் பயிற்சியுடன்
பழகிவரல் வேண்டும்!
அதனால்நம் மொழிசிறக்கும்
இலக்கியங்கள் பிறக்கும்!



திரைப்படங்களில், 'ஸ்லோ மோஷன்' காட்சிகளைப் பார்க்கிறோம். அவை எப்படி எடுக்கப்படுகின்றன தெரியுமா?

இதற்கென்றே விசேட 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் உள்ளன. சாதாரண திரைப்படக் காமிராக்கள் வினாடிக்கு 24 படங்கள் என்ற வீதத்தில் படம் பிடிக்கின்றன. அதற்கு மாறாக 'ஸ்லோ மோஷன்' காமிராக்கள் அதைவிடக் கூடுதலான அளவில் படங்களைப் பிடிக்கின்றன. இந்த முறையில் எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்தை வினாடிக்கு 24 படங்கள் என்ற வழக்கமான வேகத்தில் திரையில் காட்டும்போது, வழக்கமான வேகத்தைக் காட்டிலும் மிகவும் மெதுவாக அசைவுகள் ஏற்படுவதை நீங்கள் காண்கிறீர்கள்.

தமிழ்நாடு திருக்கோயில்கள்

நிர்வாக வாரியம்



இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாக அமைப்பினை மாற்றி அமைத்து அதன்மூலம் திருக்கோயில்களின் பராமரிப்பு நிர்வாகம் வழிபாடு மற்றும் மத சம்பந்தமான விழாக்கள் நல்லமுறையில் நடைபெறுவதற்காகத் திருத்தி அமைக்கப்பட்ட அறநிலையத் துறைச் சட்டம், 1991 (சட்டம் 46/1991) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் 13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் மாநில அளவில் இயங்கும். மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்கள் அமைக்கவும் இதன்மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த வாரியத்தின் தலைவராகச் செயல்படுவார்.

திருக்கோயில்கள் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் உள்ளடங்கிய ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட வருவாயுடைய திருக்கோயில்களின் அறங்காவலர்கள் நியமனம் செய்யும் அதிகாரம் மாநில அளவிலான வாரியத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழ் உள்ள திருக்கோயில்களின் அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாவட்டக் குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தத் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் அலுவல் சார்புடைய உறுப்பினர்கள் எட்டுப் பேரும், அலுவலர் சார்பில்லாத உறுப்பினர்கள் ஒன்பது பேரும் இருப்பார்கள். அலுவல் சார்பில்லாத அமைப்பில் ஓர் உறுப்பினர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தில் செயலாளராகச் செயல்படுவார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் இதுவரை செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்கள் தவிர மற்றவைகளைத் திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக் குழுக்களும் செயல்படுத்தும்.

13.12.1991 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள சட்டத்தின்படி மாநில அளவிலான திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது:

1. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைவர் (பதவி வழி)
2. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், உறுப்பினர்.
3. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், உறுப்பினர்
4. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அரசுச் செயலாளர், உறுப்பினர் (பதவி வழி)
5. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, உறுப்பினர் (பதவி வழி)

அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள்

6. தலைமைச் செயலாளர்.
7. வருவாய்த்துறை அரசுச் செயலாளர்.

வடகிழக்குப் பருவமழையால் கூடுதல் பாசனம்

தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 6,947 பொதுப் பணித்துறைப்பாசனக் குளங்களில் 1900 குளங்களில் சமீபத்தில் மழையின் பயனாக முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த ஒவ்வொரு ஏரியின் மூலமும் சுமார் 100 ஏக்கருக்கு அதிகமான நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்.

இந்த ஏரிகளில் சுமார் 870 ஏரிகளில் 3 மாதப் பாசனத்துக்குத் தேவையான தண்ணீரும், 1,501 ஏரிகளில் 2 மாதங்களுக்குத் தேவையான தண்ணீரும், 1,624 ஏரிகளில் ஒரு மாதப் பாசனத்துக்கு வேண்டிய நீரும் இருப்பில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஏரிகளில் உள்ள மொத்தத் தண்ணீரைக் கொண்டு சுமார் 3.8 இலட்சம் எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க முடியும். இதன் மூலம் வட மாவட்டங்களில் 3-வது நெற்பயிரும், மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகளும் பயிர் செய்ய நல்ல வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள மொத்தம் 1,501 பாசன ஏரிகளில் 1,283 ஏரிகளில் முழு அளவுக்கு நீர் நிரம்பியிருக்கிறது. இதேபோல திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள மொத்தம் 407 ஏரிகளில் 115 ஏரிகளிலும், வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள 226 ஏரிகளில் 40 ஏரிகளிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள 809 ஏரிகளில் 52 ஏரிகளிலும், சேலம் மாவட்டத்தில் 172 ஏரிகளில் 60 ஏரிகளிலும், தருமபுரி மாவட்டத்தில் 95 ஏரிகளில் 73 ஏரிகளிலும், திருச்சி மாவட்டத்திலுள்ள 250 ஏரிகளில் 107 ஏரிகளிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் 712 ஏரிகளில் 71 ஏரிகளிலும் முழு அளவுக்குத் தண்ணீர் நிரம்பியிருக்கிறது.

—நன்றி 'இந்து'

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.5 கோடி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் கோரிக்கையை ஏற்று, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக, மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டு ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் இயற்கைக் காடுகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், மண் வளப் பாதுகாப்பு, நீர் ஆதாரங்கள் மேம்பாடு, காடு வளர்த்தல், வனப்பகுதிகளில் சாலை வசதி போன்ற பணிகள் நிறைவேற்றப்படும்.

மலைப் பகுதிகளில் திருட்டைக் கண்டுபிடிக்க மிகவும் தாழ்வாகப் பறக்கக்கூடிய ஒரு சிறிய விமானம் வாடகைக்கு எடுத்து அந்த விமானத்தைப் பயன்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது.

---

8. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை.
9. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள்

10. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்.
11. திரு. டி.எஸ். சந்தானம், தலைவர். சுந்தரம் நிதி நிறுவனம்.
12. திரு. பா. சிவந்தி ஆதித்தன்.
13. திரு. எம்.ஏ.எம். ராமசாமி.
14. அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சி.
15. திரு. கே. பராசரன், இந்திய அரசின் முன்னாள் சட்ட ஆலோசகர்.
16. திரு. வானமாமலை, இராமனுஜ ஜீயர், நாங்குனேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.
17. அக்னிகோத்ரம் இராமனுஜ தாத்தாச்சாரியார்.
18. திருமதி. ராணி டி. இந்திராதேவி, இராமநாதபுரம்.

இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் செய்லபடத் தொடங்கியுள்ளது.

மாவட்டக் குழுக்கள் ஓர் தலைவரையும் 11 உறுப்பினர்களையும் கொண்டதாக அமையும். மாவட்டக் குழுக்கள் மற்றும் அதன் தலைவர்கள் ஆகியோரை இந்த, தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியம் நியமனம் செய்யும். இதில் ஓர் உறுப்பினர் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பார். இந்த மாவட்டக் குழுக்களின் செயலாளராகத் துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் செயல்படுவார். மாவட்டக் குழு, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் கீழ் வருவாய் உள்ள திருக்கோயில்களின் பரம்பரை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்யும்.

மாவட்டக் குழு இதுவரை துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர்களால் செயல்படுத்தப்பட்ட நீதிமுறை சார்ந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்களைச் செயல்படுத்தும்.

இந்தத் திருத்தி அமைக்கப்பட்ட சட்டம் 13.12.91 முதல் அமல் படுத்தப்பட்டுள்ளதால், இதுவரை பதவி வகித்து வந்த மண்டலக் குழுக்கள் கலைக்கப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அமலில் இருந்து வரும் இந்து சமய அறநிலையச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட அனைத்துப் பரம்பரை வழி சாரா அறங்காவலர்கள் அனைவரது பணியும் இதன்மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது.

மியூசிக் அகாடமியின் 65வது ஆண்டு இசை விழா

சென்னை ''மியூசிக் அகாடமி''யின் 65-வது ஆண்டு இசைவிழா மற்றும் மாநாட்டை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 18.12.'91 அன்று தொடங்கி வைத்தார். விழாவுக்கு, இசைப் பாடகர் திரு. நெடுநேரி கிருஷ்ண மூர்த்தி தலைமை தாங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

''மியூசிக்-அகாடமி''யின் 65-வது இசை விழா மற்றும் மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்னையில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் நடைபெறும் இசைவிழாவைக் கண்டு, கேட்டு ரசிப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள இசை ரசிகர்கள் வருகின்றனர்.

இப்படிப்பட்ட இசை விழாவை, மியூசிக் அகாடமியினர் 65 ஆண்டுகளாகத் தொடர்ந்து எந்தவிதத் தடங்கலும் இன்றி நடத்தி வருகின்றனர். கர்நாடக இசை என்று சொல்லும்போது, அதில் தமிழ் இசைக் கலைஞர்களின் பங்கு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அதை யாரும் மறக்க முடியாது.

புறநானூறு, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் போன்ற பழைய தமிழ் நூல்களிலேயே இசையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. இதில் இருந்தே தமிழ்நாட்டின் சிறப்பை உணர முடியும். இப்போது உலகம் முழுவதும் பழைய கலாசாரம் மங்கி வருகிறது. பழைய கலாசாரத்தை நிலைநிறுத்தப் பாடுபட வேண்டும். இந்தப் பணியில் இசை வல்லுநர்கள் ஈடுபட வேண்டும். அதைச் செய்வார்கள் என்று எண்ணுகிறேன். நம் கலாசாரத்தின் சிறப்பு அம்சங்கள் காப்பாற்றப்பட்டு வருங்காலச் சந்ததிகளுக்குப் பொக்கிஷமாக விளங்க வேண்டும். கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேல் இந்திய இசைக்கு ''மியூசிக் அகாடமி''யினர் சிறப்பாகச் சேவை செய்து வருகின்றனர். எதையும் எதிர்பாராத அவர்களின் சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது ஆகும். உங்களுடைய இந்தச் சேவைக்கு எனது மனப்பூர்வமான பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நல்ல நேரத்தில் மியூசிக் அகாடமி தலைவர் திரு டி.டி.வாசுவுக்கும், நிர்வாகிகளுக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்''

விழாவில், மியூசிக் அகாடமியின் சார்பிலான இசைக் கலைஞர்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தம் சொந்தப் பணத்தில் இருந்து ரூ.1 இலட்சம் வழங்குவதாக அறிவித்தார்.

மியூசிக் அகாடமி சார்பில் நடைபெற்ற இசை, நாட்டியப் போட்டிகளில் பெங்களூரைச் சேர்ந்த இளம் கலைஞர் இலட்சுமி கோபால்சாமி வெற்றி பெற்றிருந்தார். அவருக்கு, மியூசிக் அகாடமி சார்பிலான

''எம்.ஜி.ஆர். விருதை'' மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பொன்னாடை போர்த்தினார். மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

இசை விழா மற்றும் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்திக்கு, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியின் கணவர் திரு. சதாசிவம் பொன்னாடை போர்த்தினார்.

திரு. நெடுநேரி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டி, புகழ் பெற்ற பாடகர் திரு. செம்மங்குடி சீனிவாச அய்யர் பேசினார். முன்னதாக மியூசிக் அகாடமித் தலைவர் திரு. டி.டி.வாசு அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ''என்பீல்டு'' அதிபர் திரு. விசுவநாதன் நன்றி நவின்றார்.

விழாவில், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாதசுரக் கச்சேரி நடைபெற்றது.

தமிழகத்துக்கு வரும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடி நிவாரண உதவி

கர்நாடக மாநிலத்தில் கன்னடர்களால் தாக்கப்பட்டு, தமிழகத்துக்கு வந்துள்ள தமிழ் மக்களின் நிலை பற்றி விவாதிப்பதற்காகச் சர்வகட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூட்டினார். இந்தக் கூட்டம் 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் நிலை பற்றியும், இது தொடர்பாகத் தமிழக அரசு எடுக்க வேண்டிய மேல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யவும் இந்தக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டினார்.

இதற்கிடையே, கோவை, நீலகிரி, வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், பெரியார், தருமபுரி மாவட்டங்களில் கர்நாடகத்திலிருந்து தமிழகத்துக்கு வரும் தமிழர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உதவி மையங்களுக்கு உடனே சென்று, தகுந்த நிவாரண உதவிகளை அங்கு வரும் தமிழர்களுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சில அமைச்சர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செ. அரங்கநாயகம் (கோவை, நீலகிரி), திரு. ஜி. விசுவநாதன் (வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர்), திரு. கே.ஏ. செங்கோட்டையன் (பெரியார்), திரு. அழகு திருநாவுக்கரசு (தருமபுரி) ஆகியோரை உடனடியாக அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்லுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்த மையங்களில் தமிழர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை நேரடியாகக் கண்டறிவதுடன், மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை உடனடியாகச் செய்யவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் இந்த நிவாரணப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவ தமிழக அரசின் மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. சி.என். ராமதாஸ் (கோவை, நீலகிரி), திரு. கே.சந்திரசூடன் (பெரியார்), திரு. என்.ஹரி பாஸ்கர் (தருமபுரி), திரு. கங்காதர்ஜாஸ் (வடஆர்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்கள்) ஆகிய நான்கு மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலர்கள் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏழைகளுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை!

மாண்புமிகு முதல்வர் உரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாடு தொடக்கத்தையொட்டி, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சில வாரங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சாதாரண முறையில் சந்தித்தாலும், புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இதுதான் முதல் மாநாடு.

புதிய அரசு பொறுப்பேற்றவுடன் நான் துறைத் தலைவர்கள் மற்றும் செயலாளர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களை மறுபடியும் சந்தித்துப் பேச இந்த மாநாடு வாய்ப்பு அளித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் அரசுக்கு உள்ள திறமை குறித்து மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் கடும் பணி ஆற்ற வேண்டி இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொன்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தால் மக்கள் நம்பிக்கை எவ்வாறு நொறுங்கியது என்பதை நான் சொல்லத் தேவையில்லை. தீவிரவாதம், பயங்கரவாதத்துக்கு மாநிலத்தில் தாராளமான நடமாட்டம் அளிக்கப்பட்டு இருந்தது. அமைதி, மதச்சார்பின்மை, நல்லெண்ணத்துக்கு முன்பு நல்ல பெயர் பெற்று இருந்த தமிழ்நாட்டில் அவையெல்லாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தன. இந்தச் சூழ்நிலையில் புதிய அரசு சட்டம் - ஒழுங்குக்கு முன்னுரிமை கொடுத்து, பணியாற்ற வேண்டி இருந்தது. புதிய அரசு மிக உறுதியுடன் சட்டம்-ஒழுங்கு நிர்வாகத்தைச் சீர்படுத்தப் பல நடவடிக்கைகளை எடுத்தது.

உங்களுடைய நிர்வாகத் திறமைகள், நேர்மை, உற்சாகத்தின் காரணமாகக் கடந்த சில மாதங்களில் அரசு சிறப்பான வெற்றியை அடைய முடிந்தது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய பணியை மிகவும் எளிதாக்கும் வகையில் தங்கள் கடமையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட காவல் துறையில் உள்ள ஆண்கள், பெண்கள், மாநில அரசு அலுவலர்கள், ஊழியர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இதோடு நாம் மன நிறைவடைந்து விட முடியாது. நம்மிடையே இருந்த பயங்கரவாதம், இன உணர்வுகள், தேசவிரோதச் சக்திகளை முழுமையாக நீக்கி விட்டோம் என்று நம்மால் சொல்ல முடியாது.

நம் நாட்டிலுள்ளதைப் போல பல கோணங்களுள்ள ஜனநாயகத்தில் பயங்கரவாதம், தீவிரவாதத்துக்கு இடம் இல்லை. இத்தகைய சக்திகள் தங்களின் அருவருக்கத்தக்க முகத்தைக் காட்டும் முன்பே மாவட்ட நிர்வாகத்தினர் மிக எச்சரிக்கையாக முழுவேகத்துடன் அதை அழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மிகுந்த கவனத்துடன் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் வகையில் நிர்வாகம் தங்கள் கடமையில் முழுமையாக ஈடுபடாவிட்டால் வன்முறை, அமைதிச் சீர்குலைவை நீக்க எடுக்கப்படும் எந்த முயற்சிகளும் வெற்றி பெறா.

இப்போதுள்ள ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டப் பெருக்கம், விலைவாசி உயர்வு ஆகிய சூழ்நிலையில் மக்களின் கஷ்ட நிலையைப் போக்க அரசு தவறினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மக்களிடையே அமைதி இன்மை ஏற்பட்டு விடும். இதுபோல நடந்து விடாமல் பார்த்துக் கொள்வது மாவட்ட நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் ஒரு அரசாங்கத்தின் கண்களாகவும், காதுகளாகவும் இருக்கிறார்கள்.

உள்ளூர் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வதில் உங்களுக்குள்ள திறமை, தகுந்த நடவடிக்கைகளை வளர்ப்பதில் உங்களுக்குள்ள பார்வை, உங்கள் எல்லைக்குள் உள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் வளர்ச்சிப் பணிகளை அமைப்பதில் உங்களுக்குள்ள பார்வை ஆகியவை ஏழ்மை, வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகளைப் போக்குவதில் மிக முக்கியமாக இருக்கும்.

வளர்ச்சி நிர்வாகத்தில் தமிழகத்தில் உள்ள

மாவட்ட ஆட்சித் தலைவாகள் எப்போதுமே மிகச் சிறந்து விளங்கி இருக்கிறார்கள். அந்தப் பாரம் பரியத்தை நீங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக்கூட கட்டடங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ஆகிய முக்கிய இனங்களில் கிராமப்புற மக்களின் தேவைகள் முழுமையாக இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. கூடுமான வரையில் அந்தப் பகுதிகளில் உள்ள ஆதாரங் களைப் பயன்படுத்தி அங்குள்ள மக்களின் தேவை களை நிறைவேற்ற மரபு வழியல்லாத அணுகு முறை, நவீன முறைகளை வளர்க்க நாம் முயற்சிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக சமத்துவம், சமுதாய நீதி போன்ற குறிக்கோளை அடைய வேண்டுமானா லும், அறிவுபூர்வ வளர்ச்சியில் மக்களின் விருப்பம் நிறைவேற வேண்டுமானாலும் கல்வியின் பங்கு மிக முக்கியமானதாகும். என்றாலும் முறையான கல்வி மட்டும் இந்தப் பணியை நிறைவேற்றிட முடியாது. கல்வித் திட்டங்களைத் தமிழ்நாடு மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருந்தாலும், கல்வியை வெறும் ஒரு நிறுவன நடைமுறை என்பதில் இருந்து மாற்றி, தானாக முன்வரும் ஒரு சமுதாயக் கலாசாரமாக அமைக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

அறிவொளி இயக்கம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள 7 மாவட்டங்களில், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக உற்சாகத்துடன் இந்த இயக் கத்தை நடத்தி முழு அளவில் கல்வி அறிவை ஏற்படுத்த உறுதி கொண்டு செயல்படுகிறார்கள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு ரூ.24.55 இலட்சம் உதவி

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பணித் திறனை மேம்படுத்தும் பொருட்டு அப்பல்கலைக்கழகத்தின், கணிப் பொறித் துறைக்குக் கணிப்பொறி மற்றும் அதற்குத் தேவையான நூல் களையும் உபகரணங்களையும் வாங்கு வதற்கும், இயற்பியல் துறையினை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 24.55 இலட்சத்தைப் பல்கலைக்கழகத் திற்கு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பல்கலைக் கழகத்தில் இயற்பியல் ஆய்வகம் ஒன்றை நிறுவவும் ஆணையிட்டுள் ளார். இதனால், இங்குக் கணிப் பொறி, இயற்பியல் முதுகலை பயிலும் மாணவர்கள் பெரிதும் பயனடைவர்.

என்பதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டம் மிக வெற்றியைப் பெற அவர் களையும் இந்தத் திட்டத்தில் பங்கு பெற்றுள்ள நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் நான் வாழ்த்துகிறேன்.

மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அறிவு விளக்கை ஏற்றுவதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் செய்யும் என்று உறுதி கூறு கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள உயர்ந்த சொத்தாகும். இந்தத் திட்டத்தின் மூலம் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு அளிக்க முடிகிறது. இந்தத் திட்டத்தில் அரசுக்கு உள்ள உறுதி பற்றி புதிதாக எதுவும் சொல்லத் தேவையில்லை. சத்துணவுக்கூட மையங்கள் நல்லமுறையில் நடப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டும். இளம் சிறுவர்-சிறுமிகளுக்கு உணவு அளிப்பதற்கு அடுத்தபடியாக நமது அடுத்த முக் கியப் பொறுப்பாக அவர்களின் ஆரோக்கியம் இருக்கிறது.

1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழு வதும் நடத்தப்பட இருக்கிற 10 ஆயிரம் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள் திட்டத்தை நான் விரைவில் தொடங்க இருக்கிறேன். டாக்டர்கள், சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்பு மற்றும் இந்தத்திட்டத்தால் அதிகமாகப் பயனடைய இருக் கும் கிராமப்புற மக்கள் ஆகியோரைக் கொண்டு வருவதில் டாக்டர்களின் பங்கு மிக முக்கியமான தாகும். இந்த முகாம்களையும் வெற்றிகரமாக நடத்தும் வகையில் மிகவும் ஆர்வத்துடன் செயல் பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலை வர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் பல்வேறு பிரிவு அலுவலர்களை நான் கேட்டுக் கொள் கிறேன்.

நாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே தமிழ்நாடும் ஏழைகளுக்குக் குடியிருப்பு அளிப்ப தில் பின்தங்கி இருக்கிறது. இங்கும்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் வீட்டு வசதித் திட்டங் களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பானவர்கள். தவறான வடிவமைப்புகள், முறையற்ற முறையில் திட்டம் நிறைவேற்றம், நிதியைத் தவறான முறையில் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சில நாட்களுக்கு முன்பு நான் பார்த்ததால் இந்தப் பணிகளை நிறுத்தச் சொல்லி உத்தரவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதுபோன்ற தவறான செயல்கள் தொடர்ந்து நடைபெறாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் கட்டடச் செலவு கணிச மாகக் குறையும் வகையில் அதிகச் செலவில்லாத வடிவமைப்புகள் இருக்கவேண்டும். சாதாரணத் தொழில்நுட்பத்துடன் அந்தப் பகுதியில் கிடைக் கும் பொருட்களைக் கொண்டு கட்டப்பட வேண்டும்.

ஹட்கோ நிறுவனம் அறிவித்துள்ள கட்டட மையம் திட்டத்தைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் கட்டடம் கட்டும் தொழில்நுட்பத்தைப் பெற வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறமையை வளர்க்க அதைப் பயன்படுத்த வேண்டும்.

20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிடப் பின்தங்கி இருக்கிறது என்பதை இந்த மாநாட்டுக் குறிப்பில் இருந்து நான் அறிந்தேன். இந்தக் குறை சரி செய்யப்படவேண்டும். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற முழு வேகத்துடன் செயல்பட வேண்டும். அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தை மறுபடியும் பெற எல்லா முயற்சிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு நமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் பளு மிகவும் அதிகரித்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் நடைமுறைகளில் பல முறைகேடுகளை நான் பார்க்க நேரிட்டது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட உதவித்தொகை வழங்குவதில் மாநில அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைச் சீரமைக்க உங்களுக்குக் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் பற்றி உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன்.

ஏழை மக்களுக்கு இந்தத் திட்டத்தின் பலன்கள் போய்ச்சேரும் வகையில் திறமையாக, பொது விநியோகத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்தை நான் அறிய விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு, நாட்டில் இழந்த இடத்தைத் திரும்பப் பெற நாங்கள் முயற்சி எடுத்து வருகிறோம். அதிக முதலீட்டில் நிறைவேற்றப்படும் சில பெரிய திட்டங்கள், பொருளாதாரத்தை வளர்க்க உதவும் என்றாலும், கிராமப்புறங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் குறிப்பாக வேலை இல்லாப் பெண்களிடையே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் குடிசைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்களை வளர்ப்பதற்காக நல்ல சூழ்நிலைகளை வளர்க்க வேண்டும். கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை அமைத்தல் போன்றவைகளும் வேலை இல்லாத மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கும்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ஊக்கம் அளிக்கும் வகையிலும் தகுந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிக முக்கியமான பங்கை வகிக்க வேண்டும். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆராய்ந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

கிராமப்புறப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று நான் ஏற்கெனவே உறுதி அளித்துள்ளேன். இந்தத் திட்டத்தில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்தி குறியீட்டை நிறைவேற்ற உதவ வேண்டும் என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் இங்கு விவாதத்துக்கு வருகின்றன. பல்வேறு பொருட்கள் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் கருத்துக்களை நாங்கள் முழுமையாக எடுத்துக்கொள்வோம் என்று உறுதி கூறுகிறேன். உங்கள் பரிந்துரைகள், எதற்காக எங்களை மக்கள் ஓட்டுப்போட்டு பெரும் மெஜாரிட்டியில் எங்கள் கட்சியை ஆட்சிக்கு அனுப்பினார்களோ, அந்த அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான கொள்கைகளை உருவாக்க உதவும்.

இரண்டாவது நாள்:

இரண்டாவது நாளாக நடந்த இந்த மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் 2 நாள் மாநாட்டை முடிக்கும் தருவாயில் இருக்கிறோம்.

நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டு மாநாட்டோடு தொடங்கினோம். பிறகு காவல் துறை தொடர்பான விஷயங்கள் பற்றி மட்டும் விவாதிக்கப்பட்டது. இன்று மாவட்ட நிர்வாகம் தொடர்பான பல்வேறு விஷயங்கள் பற்றி விவாதித்தோம். என்னைப் பொறுத்தவரையில், இந்த மாநாடு மிகவும் பயனுள்ள அனுபவமாக இருந்தது. ஏனெனில், இந்த மாநாட்டின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கவும், மாநிலத்துக்கு மிக முக்கியமான விஷயங்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறியவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

மாநிலத்தின் சிறந்த நிர்வாகத்துக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் பங்கு மிக முக்கியமான பங்கு என்று நான் நேற்றே கூறினேன். உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி முடிக்க உங்களிடம் சரியான கண்ணோட்டம், தேவையான ஆர்வம், முறையான ஊக்கம் இருப்பதை இந்த விவாதத்தின்போது நான் பார்த்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் விவாதித்த பல பொருட்கள் பற்றி அரசின் கொள்கையை நீங்களும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. உங்கள் பொறுப்புக்களை நீங்கள் ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் எல்லாவற்றுக்கும் மேலாக ஏழைகள் மற்றும் அடித்தளத்தில் உள்ள மக்கள் மீது, மனதில் உண்மையான அக்கறை கொண்டு நிறைவேற்றுவீர்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. மாவட்டங்களில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும். இந்த விஷயத்தில் நீங்கள் சிறப்பாகச் சேவையாற்றினால் நான் மகிழ்ச்சியடைவேன். தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்டி மிகவும் பொறுப்போடு இந்த விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டும்.

பயங்கரவாதிகள், சாதிக் கலவரத்தை உருவாக்குபவர்கள், பிரிவினைச் சக்திகள் மீது நீங்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருந்து அவர்களைக் கண்காணித்து அவர்கள் சக்திவாய்ந்த படையாக மாறி நமது சமூகத்தின் அமைதியான சூழ்நிலையைக் கெடுக்கும் முன்பு அவர்களை நீங்கள் அடக்க வேண்டும்.

வளர்ச்சிப் பகுதியைப் பொறுத்தமட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிப்பட்ட ஆர்வத்தோடு பல திட்டங்களை நிறைவேற்றுவதைப் பார்க்கிறேன். இதற்காக உங்களைப் பாராட்டுகிற நேரத்தில் 20 அம்சத் திட்டம் போன்ற ஏழைகளுக்கான திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்து - குறியீட்டை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆதாரங்களைப் பயன்படுத்திக் கிராமப்புற மக்களுக்கு - குறிப்பாக, கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்புஅளிக்க உள்ளூர்த்திட்டங்களைத் தீட்டி இதுவிஷயத்தில் அரசின் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் மாவட்டங்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்த நீங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கொள்முதல் திட்டங்களை மிகவும் உற்சாகத்தோடு நிறைவேற்ற வேண்டும். உணவுத் தானிய வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், ஓட்டல் அதிபர்கள் ஆகியோருடன் பேசி உங்கள் மாவட்டத்தில் விலைவாசியைக் குறைக்க அவர்களை நீங்கள் தூண்ட வேண்டும். இந்த விஷயத்தில் உங்கள் செயல்பாட்டின் மூலம் உங்கள் திறமையை நான் தீர்மானிப்பேன்.

உணவுப் பொருட்களைக் கடத்துவோர், பதுக்கல் செய்வோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது உங்களின் உத்தரவு அல்லது தீர்ப்பில் உள்ள அற்ப மற்றும் சிறிய குறைகளின் அடிப்படையில் அவர்கள் தப்பித்து விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். உள்ளூர் ஆதாரங்களைத் திரட்டி உங்கள் மாவட்டத்தில் உற்பத்தியை - குறிப்பாக

முக்கியமான உணவுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காய்கறி பயிரிடுதல், தோட்டக்கலை, காடுகளை உருவாக்குதல், மரம் வளர்த்தல் ஆகியவற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.

நிர்வாகத்துக்கு நல்ல பெயரை உருவாக்குவது மிகவும் முக்கியமாகும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்ல முறையில் மக்கள் தொடர்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். மிகவும் பதட்டமாக, கஷ்டமான சூழ்நிலைகளில் அது உங்களுக்கு மிகவும் பலன் அளிக்கும். மாவட்ட நிர்வாகத்தில், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகம், வட்டார அலுவலகம், வட்ட அலுவலகங்களில் உள்ள அன்றாட நடைமுறைப் பிரச்சினைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அலுவலகங்களுக்கு வரும் ஏழை மக்களின் பல்வேறு தேவைகளை மிகவும் விரைவாகவும், இரக்கத்தோடும் பார்க்கவேண்டும்.

நிர்வாகத்தில் விரைவு ஏற்படுத்துவதற்கு வசதியாகப் புதிய முறைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உருவாக்க வேண்டும். அடுத்த சில மாதங்களில் உங்கள் ஆற்றலின் அத்தாட்சியைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன். மேலும் வளர்ச்சிகளைத் தெரிந்துகொள்ள நான் மறுபடியும் விரைவில் உங்களை இதுபோல கூட்டமாகவோ, தனித்தனியாகவோ சந்திப்பேன் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன்.'

கடந்த ஆண்டுக்கான சிறுசேமிப்பு வசூலில் சாதனை படைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

அதிக அளவில் வசூல் செய்து - அதாவது, 37 கோடியே 19 இலட்சம் ரூபாய் வசூல் செய்த கோவை மாவட்டத்துக்குச் சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். கலைவாணனுக்கும், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ.எம். ராமனுக்கும் முதல்வர் அவர்கள் விருது வழங்கினார்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஏ. ராமையா, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. சுர்ஜித் கே. சவுத்ரி, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். விஜயகுமார், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. கே.தீனதயாளன், காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. டி.எஸ். ஸ்ரீதர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. சி.எஸ். ராஜமோகன், முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. பி. கோலப்பன், திண்டுக்கல்-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரிதின் ராஜ் லாங்தாசா, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜீவ் நயன் சவுபே, முன்பு ஆட்சித் தலைவராக இருந்த திரு. எம். கோபாலகிருஷ்ணன் ஆகியோருக்கு முதல்வர் அவர்கள் விருதுகள் வழங்கினார்.

மகாகவி பாரதியாரின் 110-வது பிறந்தநாள் விழா

தமிழுக்கும், தேசியத்திற்கும் பெருமை சேர்த்த மகாகவி பாரதியார் அவர்களின் 110-வது பிறந்த நாள் விழாவினை மாநில அளவிலான விழாவாக அவர் பிறந்த மண்ணான சிதம்பரனார் மாவட்டம் எட்டயபுரத்தில் கொண்டாட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழாவாக இவ்விழா எட்டயபுரத்தில் 11.12.91 அன்று மாலையில் பாரதியார் மணிமண்டப வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பாரதியார் மணிமண்டபத்தில் உள்ள பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப. அவர்கள் மாலை அணிவித்தார். பின்னர் மணிமண்டப வளாகத்தில் மரக்கன்றுகளை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்களும், சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கனகோவிந்தராஜு அவர்களும் நட்டார்கள்.

விழாவிற்குச்சிதம்பரனார்மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை வகித்தார். விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடப்பட்டி முத்தையா அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் முழு உருவப் படத்தை திறந்து வைத்து விழாப் பேருரையாற்றினார்

விழாவில் டாக்டர் கனக கோவிந்தராஜுலு, எம்.பி., திரு. எம்.ஆர். ஜனார்த்தனம், எம்.பி., திரு. செல்லத்துரை, எம்.எல்.ஏ., திருமதி. சியாமளா, எம்.எல்.ஏ., திருமதி கனகவல்லி, எம்.எல்.ஏ., காமராஜ் கல்லூரி முதல்வர் திரு. செல்வராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்ர்கள். விழா இறுதியில் திருநெல்வேலி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இன்னிசை நடைபெற்றது.

11.12.91 அன்று காலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். அன்சர் அலி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மண்டல போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் திரு. பார்த்தசாரதி அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் உறை வெளியிடும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பாரதி மணிமண்டப வளாகத்தில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை நலிந்தோர்க்கு வழங்கினார்கள்.

க. தீனதயாளன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம்

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடக மாநிலத்தில் வன்முறைச்சம்பவங்கள்;
ஜனவரி 2-ல் முழு வேலை நிறுத்தம்
அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கர்நாடக மாநிலத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலை குறித்து ஆலோசனை செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில், 30.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் வருமாறு:

1. நமது அண்டை மாநிலமான கர்நாடகத்தில் பல்லாண்டுக் காலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக அங்குள்ள கன்னட வெறியர்களால் ஒரு காரணமும் இன்றி வன்முறைக்கு இலக்காக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கன்னட வெறியர்களால் தாக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து தமிழகம் வந்து சேர்ந்துள்ளனர். அம்மாநிலத்தில் உள்ள தமிழ் மக்கள் தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருவது குறித்து இந்தக் கூட்டம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறது.

2. வழிவழியாகக் கன்னடர்களோடு ஒன்றி வாழ்ந்து கர்நாடக மாநிலத்தின் செல்வ உயர்விற்கும், வளர்ச்சிக்கும் உழைத்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக, இன்று தங்கள் இல்லங்களையும், உடைமைகளையும் இழந்து தங்கள் உயிருக்கே பாதுகாப்புத் தேடும் நிலையில் உள்ளனர். அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தர கர்நாடக அரசு தவறியது குறித்து வருந்துவதோடு, இந்த வன்முறைச் செயல்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துகொண்டிருந்த பொழுது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்திய நாட்டுப் பிரதமர் அவர்களுடன் நேராகவும், தொலைபேசி மூலமாகவும் டெலக்ஸ் செய்திகள் மற்றும் கடிதங்கள் மூலமாகவும், பத்திரிக்கைகள் வாயிலாகவும் அத்தகைய நிகழ்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று பலமுறை கேட்டுக்கொண்டார். மத்திய அரசு கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தையோ அல்லது மத்திய அரசுப் படைகளையோ அனுப்பி அமைதி காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இது குறித்துத் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த எல்லா நடவடிக்கைகளையும் இந்தக் கூட்டம் வரவேற்கிறது. குறிப்பாகத் தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்திருப்பதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

4. 70 ஆயிரத்திற்கும் மேலாகத் தமிழ் மக்கள் கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது இங்கு ஒரு அசாதாரண நிலையினை ஏற்படுத்தியுள்ளது. மேலும், வன்முறைச் சம்பவங்களால் அச்சத்திற்கும், கவலைக்கும் ஆளாக்கப்பட்ட தமிழ் மக்கள், பாதுகாப்பிற்காகத் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் கர்நாடக மாநிலத்தில் தொடருகின்றன. இதனால் இங்கு வருகை தரும் தமிழ் மக்களுக்கு, உணவளித்து, தங்க இடம் கொடுத்துப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை மாநில அரசு மேற்கொள்ளுவதால் கணிசமான செலவு ஏற்படுகிறது. இந்தச் செலவு அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

5. மேலும், வன்முறைச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் அங்கு சென்று தொடர்ந்து வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவும், தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கர்நாடக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அதற்கான அறிவுரைகளை மத்திய அரசு கர்நாடக அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டுமென்றும், அந்த அறிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்றும், கர்நாடக, மத்திய அரசுகளை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

6. வன்முறைச் செயல்களால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்களுக்கும், உடற்காயங்களுக்கும், பொருள் இழப்புகளுக்கும் கர்நாடக அரசு உடனடியாக உரிய நிவாரணம் அளிக்கவேண்டுமென்று அந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள இந்தக் கூட்டம் தீர்மானிக்கிறது.

7. அத்தகைய நிவாரணத்திற்குத் தகுதி பெற்றுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இப்பொழுது தமிழகத்திற்கு வந்து தங்கியிருப்பதால், அவர்களுக்கும் கர்நாடகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் வகையில் இந்த நிவாரணத்தை வழங்குவதற்கான விசாரணையை நடத்த மத்திய அரசு பதவியிலுள்ள உச்ச நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

8. கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும் அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்க

வும், கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதலமைச்சர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும், கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவும் வருகிற ஜனவரி 2-ஆம் தேதி அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழு வேலை நிறுத்தம் நடத்துவதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

9. தமிழகத்தின் ஒருமித்த உணர்வை வெளிப்படுத்த ஜனவரி 2-ஆம் தேதி முழு வேலை நிறுத்தம் நடத்த இக்கூட்டம் தீர்மானித்திருப்பதால், இந்த ஒற்றுமை உணர்வை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழகத்திலுள்ள சில அரசியல் கட்சிகள் தனித்தனியே அறிவித்துள்ள ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் கைவிடுமாறும், ஜனவரி 2-ஆம் தேதி நடைபெறவுள்ள முழு வேலை நிறுத்தத்தை முழு வெற்றி அடைய ஒத்துழைக்குமாறும், இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

அரிசி ஏற்றுமதி: பிரதமர் அவர்களுக்கு முதல்வர் கடிதம்

'வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும்' என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்.

"அரிசி விலை எப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யும் மத்திய அரசின் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதற்காகக் கிடைக்கிற அரிசியை ஏற்றுமதியாளர்கள் பதுக்கி வைக்கிறார்கள். இதனால் அரிசி விலை உயருகிறது. இந்தப் பதுக்கலின் விளைவாக, அரிசி விலை உயர்ந்து விடும் அபாய நிலைமை உருவாயிருக்கிறது. எனவே, மேற்கொண்டு அரிசி ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு உடனே நிறுத்த வேண்டும்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்:

1. திரு. விஜயராகவலு
   மாநிலத் தலைவர்,
   (பாரதிய ஜனதா கட்சி)
2. திரு. பி. நல்லக்கண்ணு
   கூடுதல் செயலாளர்
   (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி)
3. திரு. ஏ. நல்லசிவம்
   செயலாளர்
   (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)
4. திரு. கே. ராமமூர்த்தி
   தலைவர்
   (இந்திய தேசிய காங்கிரஸ்)
5. திரு. தஞ்சை ராமமூர்த்தி
   (ஜனதா தளம்)
6. திரு. கே.ஆர். ராஜ்குமார்
   மாநிலத் தலைவர்
   (தமிழ்நாடு ஜனதா கட்சி)
7. திரு. பி.சி. பழனியாண்டி
   தலைவர்
   (லோக்தளம்)
8. திரு. பி. சாரதி
   தலைவர்
   (தமிழ்நாடு காங்கிரஸ்-சோசலிஸ்ட்)
9. திரு. ஆலடி அருணா
   (திமுக)
10. திரு. எஸ். ஆண்டித் தேவர்
    (பார்வர்டு பிளாக்)
11. திரு. கே. வீரமணி
    (திராவிடர் கழகம்)
12. திரு. அப்துல் சமது
    (முஸ்லீம் லீக்-(சமது))
13. திரு. எம். அப்துல் லத்தீப்
    (முஸ்லீம் லீக்-(லத்தீப் பிரிவு))
14. திரு. எஸ். திருநாவுக்கரசு
    (அண்ணா புரட்சித் தலைவர் முன்னேற்றக் கழகம்)
15. திரு. டி. இராஜேந்தர்
    (தாயக மறுமலர்ச்சிக் கழகம்)
16. டாக்டர் சிவசாமி
    (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)
17. திரு. ஜெய்னுதீன்
    தலைவர்
    (இந்திய மனித உரிமைக் கட்சி)
18. திரு. செ.கு. தமிழரசன்
    (இந்திய குடியரசுக் கட்சி)
19. தலைவர்,
    இந்திய ஜஸ்டிஸ் கட்சி
20. தலைவர்,
    அம்பேத்கர் மக்கள் இயக்கம்
21. தலைவர்,
    பாரதீய மக்கள் காங்கிரஸ்
22. தலைவர்,
    கிருஸ்துவ ஜனநாயக முன்னணி
23. திரு. எஸ். ஜோசப் பெர்னாண்டோ,
    தலைவர்,
    (கிறிஸ்துவ முன்னேற்றக் கழகம்)
24. திரு. கே. காளியப்பன்
    (இந்திய பொருளாதார விடுதலை இயக்கம்)
25. திரு. ஏ. ஜெகவீர பாண்டியன்
    (வேலை தேடுவோர் சங்கம்)
26. திரு. கே. செல்லப்பன்
    தலைவர்,
    (நாத்திக திராவிட முன்னேற்றக் கழகம்)
27. திரு. சீதாராம் கோயங்கா
    தலைவர்
    (ராம் ராஜ்ய மார்க்கம்)
28. திரு. ஆர். பக்தவச்சலம்
    தலைவர்,
    (தமிழர் கழகம்)
29. திரு. எம்.கே.டி. சுப்ரமணியன்
    தலைவர்,
    (தமிழக தேசிய இயக்கம்)
30. திரு. கே. முருகேசன்
    தலைவர்,
    (தமிழக முன்னேற்ற முன்னணி)
31. டாக்டர் அமான் கான்
    தலைவர்,
    (தேசிய மாணவர் கட்சி)
32. திரு. எம். ஜெபமணி
    தலைவர்,
    (தமிழ்நாடு ஜனதா கட்சி)
33. திரு. செங்கம் ஜப்பார்
    தலைவர்,
    முஸ்லீம் லீக் (ஜெ)
34. திரு. டி. வசீகரன்
    தலைவர்,
    (அனைத்திந்திய சிறுபான்மையினர் கழகம்)
35. திரு. தாஜித்தின்
    (தமிழ்நாடு முஸ்லிம் லீக்)
36. திரு. கே. செல்ல முத்து
    (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி)
37. திரு. எஸ்.வி. சண்முகம்
    (ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி)
38. திரு. கந்தசாமி
    (பார்வர்டு பிளாக்-(க))

கர்நாடகக் கலவரம் -
மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கை

கர்நாடக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை உடனடியாக நிலைநாட்டிட வேண்டுமெனவும், அப்பாவித் தமிழ் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை உடனே நிறுத்த வேண்டுமென்றும் அம்மாநில முதல்வரை டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் நான் கேட்டுக் கொண்டேன். மோசமாகிக் கொண்டு வரும் சட்டம் ஒழுங்கு நிலைமையைத்திறமையாகச் செயல்பட்டு அடக்கி அப்பாவித்தமிழ் மக்களின் உயிர்களை காப்பாற்றும்படி கர்நாடக முதல்வருக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் அவர்களையும் கேட்டுக் கொண்டேன். சீன நாட்டுப் பிரதமர் வருகையினால் பிரதமர் அவர்களைத்தொடர்பு கொள்ள இயலாத நிலையில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களையும் டாக்டர் சின்தா மோகன் அவர்களையும் தொடர்பு கொண்டு, அவர்களை பிரதமருடன் பேசி, கர்நாடக மாநிலத்திற்கு இராணுவத்தை அனுப்பி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு 14.12.'91 அன்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் நிலைமையின் அவசரத்தை உணர்ந்து பிரதமருடன் இது குறித்துப்பேசுவதாகக்கூறினார்கள். கர்நாடக மாநிலத்தில் மீண்டும் அமைதியைக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று கூறினார்கள்.

ஆனால், கர்நாடகத்தில் நடக்கும் சம்பவங்கள் வேறுவிதமாக இருக்கின்றன. தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களின் வீடுகளில் புகுந்து பொருட்களையும் சொத்துக்களையும் கொள்ளையடித்து, அவர்களுக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்துவதாக தகவல் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் உள்ளூர்க் காவலர்களின் உதவியுடனும், தூண்டுதலுடனும் நடைபெறுவதாகச் செய்திகள் கிடைக்கின்றன. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து வயதானவர்களும், பெண்களும், குழந்தைகளும் அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டுக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதலை இந்நாட்டின் மனிதாபிமானமுள்ள மக்கள் அனைவரும் நேரடியாகக் கண்டிப்பார்கள் என நான் உறுதியுடன் நம்புகிறேன். இதிலிருந்து கர்நாடகத்தில் சட்டம் ஒழுங்கு மிக மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருப்பது நமக்குத் தெரிகிறது. தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுத் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நிலை இன்னும் நீடித்தால், இது தமிழ்நாட்டில் கடுமையான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என நான் அஞ்சுகிறேன்.

அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த முரட்டுத்தனமான வன்முறைகளுக்கு கர்நாடக முதலமைச்சர் முழுப் பொறுப்பேற்று, இத்தகைய வன்முறைச் செயல்களை உடனே தடுத்து நிறுத்த வேண்டுமென நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கர்நாடகத்தில் மாமூல் நிலைமையை உடனே கொண்டுவர மேலும் காலந்தாழ்த்தாமல் கர்நாடக முதல்வருடன் பேச வேண்டுமென நான் இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கர்நாடகக் காவலர்கள் அங்கு வாழும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புத்தரத் தவறியதுடன் அவர்களுக்கு எதிராகச்செயல்படுவதால், அங்கு வன்முறையைக் கட்டுப்படுத்த இராணுவத்தை அனுப்பி வைக்குமாறு நான் பிரதமர் அவர்களை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூரிலும், கர்நாடகத்தின் பிற பகுதிகளிலும் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தங்கள் உடைமைகளை அப்படியே விட்டுவிட்டு அந்த மாநிலத்தை விட்டு ஓடி வருகிறார்கள். இவர்களின் இழப்புகளுக்கு முழு நஷ்ட ஈடு கொடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு பிரதமர் அவர்களையும், கர்நாடக முதல்வர் அவர்களையும் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும்பணியாற்றிய தமிழ் இன மக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல்கள் நடத்தத் தூண்டிவிடப்பட்டிருப்பது மிகப்பெரிய வெட்கக்கேடான காரியம் ஆகும். இத்தகைய வன்முறைகளைத் தவறாது கண்டிக்குமாறு நான் அமைதியை விரும்பும் மக்களையும் பொறுப்புள்ள தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களின் நிலைமை ஆபத்தாக இருக்கும் இந்தச் சூழ்நிலையில் கர்நாடக முதல்வரைச் சந்தித்துப் பேச பிரதமர் கூட்டும் எந்தக் கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளும் கேள்விக்கே இடமில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் பகிர்ந்துகொள்ள, 1990-இல் மாற்றியமைக்கப்படுவதற்கு முன்பிருந்த காட்கில் உத்தியே போதுமானதாக இருந்தது. முன்பிருந்தபடியே 55 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதம் வரை மக்கள் தொகை அம்சத்திற்கு முக்கியத்துவம் தரும் யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

தனிநபர் மூலமான பகிர்வு முறையை நான் வரவேற்கிறேன். தேசிய சராசரி வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் சில மாநிலங்கள் விடுபடலாம் என்பதால் உச்ச பட்ச வருமானத்திலிருந்து உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் 20 சதவிகிதம் அளவீட்டைப் பகிர்ந்ததளிக்கலாம் என்பதை உங்கள் பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். தமிழகத்தின் பிரச்சினை தனித்தன்மை வாய்ந்தது. ஏழாவது திட்டத்தில், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம், தேசிய சராசரி வருமானத்தின் அளவிலோ அல்லது சற்றே அதிகமாகவோ இருந்ததாகக் கருதப்பட்டது. தேசிய வருமானத்துக்குக் கீழ் தனி நபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்கு 20 சதவிகிதம் ஒதுக்கீடு பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து தமிழகம் விடுபட்டதால், சந்தைக் கடன் உள்ளிட்ட மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய புள்ளி விபர அமைப்பின் (Central Statistical Organisation) 82-85-ஆம் ஆண்டின் குறிப்பின்படி தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குக் கீழ் உள்ளது. இந்த அமைப்பின் (CSO) 84-87 (அ) 85-88 குறிப்பின்படி தமிழகத்தின் தனி நபர் வருமானம் தேசிய சராசரிக்குச் சற்று கூடுதலாக உள்ளது. இந்த குறிப்பிட்ட காலக் கட்டங்களில் 80 வருமான மதிப்பீடுகளைப் பற்றி நாங்கள் சில வினாக்களை எழுப்பியுள்ளோம். இவை இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன. தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் இந்த மதிப்பீடுகளில் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாகவே இருக்கின்றது என்று நாங்கள் நம்பக் காரணம் உள்ளது. தனிநபர் வருமான மதிப்பீடுகளின் ஒப்பீடு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் அமைய வேண்டும். மக்கள் தொகையைக் குறிக்க மகத்தான முயற்சி எடுத்துள்ள மாநிலங்களுக்கு ஏற்ற பரிசாக இது அமையும். இது மட்டும் செய்யப்படுமானால் தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் தேசிய சராசரிக்கு மிகக் கீழாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கடந்த காலத்திலும்கூட நிலவரத்தைச் சரியாகச் சுட்டிக்காட்டாத வருமான மதிப்பீடுகள் இந்தக் குழுவினால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதாவது நிதிக்குழு செய்ததைப் போலவே 82-85 காலகட்ட வருமான மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு காரணத்துக்காகவோ இது ஏற்புடையதாக இல்லாதிருக்குமானால் மத்திய உதவி சந்தைக் கடன் ஆகிய இரண்டிலும் ஏழாவது திட்டத்தில் அளிக்கப்பட்டதைப் போலவே தமிழ்நாட்டிற்குத் தனிச் சிறப்புரிமை வழங்கப்பட வேண்டும்.

வரி முயற்சி, வரவு-செலவு, நிர்வாகம், சில சிறப்பு இனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 10 சதவிகித வரி வருவாய் பிரித்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாடு, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அயல் உதவி திட்டங்களின் செயற்பாடு ஆகிய மூன்று செயல் திறன் குறியீடுகளிலும், தமிழகம் சாதனை படைத்துள்ளது. எனவே உச்ச பட்ச விபரங்கள் ஏற்கெனவே எட்டப்பட்ட நிலையில் எதிர்காலச் சாதனை என்பது ஏட்டளவில் சிறிதாகவே அமையும் வரவு-செலவு நிர்வாகம் ஏழாவது திட்டக் காலத்தின் நிலையைப் பிரதிபலிக்கிறது. வரி முயற்சி அம்சத்திற்கு 10 சதவிகிதம் ஒதுக்கி, திருத்தியமைக்கப்பட்ட காட்கில் திட்டத்தையே தக்க வைத்துக் கொள்ளலாம்.

தனித்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு ஒதுக்க 10 சதவிகிதம் தொடர இருக்கின்றது. அது, விருப்பம்போல் பகிர்ந்தளிக்கப்பட இருக்கின்றது. 1991-92-இல் தமிழ்நாட்டிற்குப் போதுமான ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மிகக்குறைவான திட்ட உதவி உயர்வே தமிழகத்திற்குக் கிட்டியது. குறைந்தபட்ச திட்டத்தைக்கூட நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில் தமிழகம் உள்ளது. தமிழகத்திற்கான தனிநபர் திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி அளவைவிட மிகக்குறைந்து உள்ளது. வெளிநாட்டுத் தீவிரவாதிகளால் இந்த மாநிலத்திற்கு ஏற்பட்ட அபாயம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இது நிதி ஆதாரங்களைப் பெருக்கும் முயற்சிகளுக்குப் பெரும் இடர்ப்பாடுகளை ஏற்படுத்திவிட்டது. விருப்பம்போல் வழங்கப்படும் 10 சதவிகித உதவியில் தமிழகத்திற்குச் சிறப்புரிமை உறுதி செய்யப்படவேண்டும். இது குறித்து குறிப்பிடத்தக்க உறுதி மொழி ஒன்று வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய சராசரிக்குக் கீழ் தனிநபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்குச் சந்தைக் கடன்களைப் பெறுவதற்காக 20 சதவிகிதம் வழங்கப்பட்டுள்ளது என அறிகிறேன். தேசிய வருமானத்துக்குக் கீழ் தனிநபர் வருமானம் கொண்ட மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்புச் செய்வதைத் தீர்மானிப்பதில் உள்ள சிக்கலை ஏற்கெனவே நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். கடன்களினால் ஏற்பட அதிகமான செலவினத்தைக் கருதும்பொழுது பி தங்கிய மாநிலங்களுக்கான தனி ஒதுக்கீடு சதவிகித அளவில் அமையலாம். இந்த 20 விகித தனித் தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டிற் சிறப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அல்லது அ பட்ச அளவிலிருந்துள்ள வித்தியாசத்தின் அடி படையில் இந்த மொத்த தனித் தொகுப்பும் பகி தளிக்கப்பட . வேண்டும். இந்த ஒதுக்கீட்டை பொறுத்த வரையில் தமிழ்நாட்டிற்குத் தன பாதுகாப்புத் தேவை என்று வேண்டிக் கொ கிறேன்.

வெளிஉதவி பெறும் திட்டங்களுக்கு 1 சதவிகித உதவி உண்டு என்று நிகழ்ச்சிக் குறிப தெரிவிக்கிறது. இது இன்னும் நடைமுறை வரவில்லை. அடிப்படை வசதிகள் உள்ள பிரிவி உள்ள திட்டங்களைப் பொறுத்த வரையி நாங்கள் தொடர்ந்து பெற்று வருவது 70 விகிதம் மட்டுமே. அனைத்து வெளி உதவ திட்டங்களைப் பொறுத்த வரையில் 100 சதவி உதவியை மைய அரசு வழங்க வேண்டும். பொழுது நடைபெற்று வருகின்ற திட்டங்க இதில் அடங்கவேண்டும். புனரமைப்பு வளர்ச் கான புதிய உத்திகளை வகுத்தல் ஆகியவற் மாநிலங்கள் செவ்வனே செய்யும் வாய்ப் வெளியுதவித் திட்டங்கள் வழங்குகின்றன. ச துவம் என்ற பெயரில் மாநிலங்கள், திட்டமிடுத திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றிற் குந்தகம் விளைவிற்கும் எந்த முயற்சியும் மே தொள்ளப்படக்கூடாது.

கடல் எல்லைகளினால் ஏற்படும் தமிழ தின் தனிப்பட்ட சிக்கல்கள் தற்போது தான் சிறி உணரப்பட்டுள்ளது. எட்டாவது திட்டத்தில் பிரா திய வளர்ச்சித் திட்டங்களைத் தொடரும்போ கடற்கரை ஓரத்திலும் கடல் எல்லையிலும் காண படும் சிக்கல்களைக் களைவதற்காகச் சிறப் ஒதுக்கீடுகள் தேவை.

எட்டாவது திட்டத்தின் தொடக்கத்தி தமிழகத்தின் மிக முக்கியக் கோரிக்கைகளை மட்டுமே வலியுறுத்தினேன். மத்திய அரசு நம்மை கவனிக்கவில்லையே என்ற ஆதங்கம்தா பஞ்சாபிலும், காஷ்மீரிலும் வெவ்வேறு வடிவ களில் வெடித்துள்ளது. அப்படிப்பட்ட எண்ண ஏற்பட விட்டுவிடக் கூடாது. கஷ்டங்களையு தியாகங்களையும் பகிர்ந்து கொள்ளும் தமிழ்நா தேசிய நீரோட்டத்தில் கலந்துள்ள அதே நேரத்தி தேசிய வளர்ச்சி, அபிவிருத்தியில் தனக்குரி பங்கைக் கேட்பது நியாயமான ஒன்றே ஆகும்.

நன்றி.

டில்லியில், மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையி நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தி - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.



காவிரி நதிநீர்ப் பிரச்சினை:

மாண்புமிகு பிரதமர் உறுதி

இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைத் தமிழக முதல்வர் அவர்கள் 23-12-91 அன்று டெல்லியில் சந்தித்துத் தமிழ்நாட்டின் நலன் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கோரிக்கைக்குப் பதிலளித்து, மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசுகையில், 'காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்' என்று உறுதி கூறினார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு சட்டம் 22, 1974-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டம் 1971-ன் படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் (எம்.எம்.டி.ஏ.) சட்டபூர்வ மாக அமைக்கப்பட்டது.

சென்னை நகரம், 5 நகராட்சிகள், 4 நகரியங்கள், 27 நகர் ஊராட்சி, 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 212 கிராமங்கள், 2 கன்டோன் மென்ட் போர்டு பகுதிகள் அடங்கிய 117 சதுர கிலோ மீட்டர் பரப்பை உள்ளடக்கிய சென்னைப் பெருநகரப் பகுதி (எம்.எம்.ஏ.) இதன் அதிகார எல்லைக்குள் வருவதாகும்.

இந்தக் குழுமத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

1. சென்னைப் பெருநகரப் பகுதி யின் அடிப்படை வசதிகள், பொருளா தார மேம்பாட்டுக்குத் திட்டமிடுதல்.

2. சென்னைப் பெருநகர் பகுதிக் கான மாஸ்டர் பிளானை அமல் படுத்துதல் மற்றும் இந்தத் திட்டத் தின்கீழ் உருவாக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப் படுத்துதல்.

3. பெருநகர வளர்ச்சிக்கான திட் டங்களை உருவாக்குதல், ஒருங் கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல்.

எம்.எம்.டி.ஏ. -வின் நடவடிக்கை சட்டப்பூர்வமான பணிகள்

நகர் மற்றும் ஊர்கள் திட்டமிடுதல் சட்டத்தின்படி எம்.எம்.ஏ.-வின் வளர்ச்சியை முறைப்படுத்துவதே எம்.எம்.டி.ஏ. -வின் முக்கியமான சட்டப்படியான பணியாகும். மாஸ்டர் பிளான்களைத் தயாரித்தல், விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், இந்தத் திட்டங்களின் நிபந்தனைகளை வளர்ச் சிக் கட்டுப்பாட்டு விதிகள் மூலம் நடைமுறைப்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

பணிகளைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல்

அரசின் இதர அமைப்புகள் மூலம் நிறைவேற்றப்படும் உலக வங்கி உதவி யுடனான நகர்ப்புறத் திட்டங்களை உரு வாக்குதல், ஒருங்கிணைத்தல், கண் காணித்தல், மதிப்பிடல் ஆகிய வற்றுக்கு எம்.எம்.டி.ஏ. பொறுப் பாகும். ரூ.57.71 கோடி செல விலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - I (எம்யுடிபி)-1 ரூ. 87.26 கோடி செலவிலான சென்னை நகர வளர்ச்சித் திட்டம் - II (எம்யுடிபி) - II ஆகியவை அந்தத் திட்டங் களாகும்.

சென்னை நகர வளர்ச்சித் திட்டங்களின் முதல் 2 திட்டங்

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தினை (டி.லிட்) மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் வழங்கினார் (19.12.91).

இரண்டாம் அட்டை:

சென்னை மியூசிக் அகாடமியின் 65-வது ஆண்டு இசை விழாவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவ்வமயம், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன் னாடை போர்த்தினார் (18.12.91).

நான்காம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

களின் மூலம் பொருளாதார ரீதி யாக நலிவடைந்த 85,000 குடும் பங்கள் மனையும், 85,000 குடிசை வாழ் குடும்பங்களும் பயன்பெற்றன. 9000 பேருக்கு வேலைவாய்ப்பு உரு வாக்கப்பட்டது. 350 சிறு தொழிற் சாலைக் கூடங்கள், 47 குடிசைத் தொழிற்கூடங்கள் ஆகியவை கட்டப் பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் 412 ப்ரீ-ஸ்கூல்களும், 22 மருத்துவ மையங்களும் கட்டப்பட்டி ருக்கின்றன. 17.5 கி.மீ. உட்பட்ட சுற்றுப்பாதை அமைக்கப்பட்டது. 14.5 கி.மீ. தார்ச்சாலை மேம் படுத்தப்பட்டது. 200 கி.மீ. பாத சாரிகள் பாதை, 50 கி.மீ. சைக்கிள் பாதை ஆகியவையும் அமைக்கப் பட்டன. 10 சுரங்கப்பாதைகள், 7 பாலங்கள், 2 கிரேடு செப்பரேட் டர்கள் ஆகியவையும் கட்டப்பட்டன

சென்னை நகருக்காக எம்.எம். டி.ஏ. செயல்படுத்திய இரு திட்டங் களின் வெற்றிகரமான அனுபவத் தின் அடிப்படையில் மாநிலத்தின் 10 பெரிய நகரங்களின் வளர்ச்சிக் காக ரூ.632.60 கோடி செல விலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச் சித் திட்டம் (டிஎன்யுடிபி) என்ற பல்துறைத் திட்டம் 1988 செப்டம்பர் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், எம்.எம்.ஏ. எல்லைக்குள் வரும் ரூ.354.85 கோடி அளவுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பில் எம்.எம்.டி.ஏ. உள் ளது. டிஎம்யுடிபி-யின் ஒரு அங்க மாக, எம்.எம்.ஏ.-வில் எட்டு இடங் களில் மனைகள் மற்றும் சேவைகள் திட்டத்தின் கீழ் சுமார் 30,000 மனைகளும், சைடட் அர்பன் டெவ லப்மென்ட் (ஜியுடி) என்ற திட்ட மும் திட்டமிடப்பட்டுள்ளன.

ஒரு மனிதன் சாகும்போது அவனுடைய செயல்களும் அடங்கி விடுகின்றன. ஆனால், மூன்று மட்டும் எஞ்சி நிற்கின்றன.

1. அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடைபெற்று வரும் அவனுடைய அறச் செயல்கள்.

2. எல்லோருக்கும் பயன் தரக்கூடிய அவனுடைய அறிவு.

3. அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.

—நபிகள் நாயகம்

டிஎன்யுடிபி-யின் குடிசை மேம் பாட்டுத் திட்டத்தின்கீழ், எம்எம்ஏ-வில் சுமார் 15,000 குடும்பங் களைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் டிராபிக் நிர்வாகத் திட்டம் சாலை விளக்குகள் போடுதல், சாலைகள், உள்வட்டச் சாலைகள், 'பைபாஸ் சாலைகள் அமைத்தல், பாதசாரிகள் வழித்தடம், இரயில்வே மேம் பாலங்கள் கட்டுதல் உள்ளிட்ட சாலை மேம்பாடு மற்றும் டிராபிக் சிக்னல் மயமாக்கல் திட்டங்களுக்கு நிதி வழங்குகிறது.

பஸ் நிலையங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான மார்க்கெட்டுகள் போன்ற சேவை மற்றும் வருவாய் பெற்றுத் தரும் அமைப்புகளைக் கட்டுதல், பராமரித்தல், சாதனங் களை வழங்குதல் ஆகிய பணிகளுக்கு நிதி உதவி செய்ய புதியதாக நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (எம்யுடிஎப்) என்று ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களைச் செயல் படுத்தும் அனைத்து அமைப்புகளுக் கும் பயிற்சியும், தேவையான சாதனங் களை வாங்கி அளிப்பதற்கான தொழில்நுட்ப உதவியும் இந்தத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இவை தவிர நடைபாதை வாசி களுக்கான திட்டம், ஆற்றங்கரை களில் உள்ள குடிசைவாசிகளுக்கு மறுவாழ்வு, இரவு தங்குமிடம், உள்ளாட்சி அமைப்புகளுக்கான உதவித் திட்டங்கள், துரித இரயில் திட்டம், எம்.எம்.ஏ.-வில் இரயில் போக்குவரத்தை அதிகப்படுத்துதல், பில்டிங் மையங்கள் மூலம் கட்டப்

பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகளையும் எம்எம்டிஏ ஒருங்கிணைக்கிறது.

வளர்ச்சியை ஒழுங்குபடுத்துதல், விரிவான வளர்ச்சித் திட்டங்களை (டிடிபி) தயாரித்தல் மாஸ்டர் பிளானை அவ்வப்போது திருத்தி அமைத்தல் ஆகிய சட்டப்பூர்வமான பணிகளை எம்.எம்.டி.ஏ. நிறைவேற்றுகிறது. கீழ்க்கண்ட முக்கியப் பணி வகைகள் எம்.எம்.டி.ஏ. வினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. திட்டங்களுக்கான அனுமதி அளித்தல்.

2. சப்-டிவிஷன், லே-அவுட்டுகளை அங்கீகரித்தல்.

3. நிலப் பயன்பாட்டு மண்டலங்களைத் திருத்துதல்.

4. பொதுமக்களுக்கு உதவ ஆலோசனை, வழிகாட்டுதல் பணி.

5. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டைப் பரிசீலித்தல்.

6. அமலாக்கம்.

இரண்டாவது மாஸ்டர் பிளானைத் தயாரிக்கும் பணியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது 1975-இல் அரசு அங்கீகரித்த முதலாவது மாஸ்டர் பிளானுக்குப் பதிலானதாகும்.

சட்டத்தின் 48-வது பிரிவின் கீழ் திட்ட அனுமதியை அளிப்பதன் மூலம் மாஸ்டர் பிளானில் உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் (டிசிஆர்) அமலாக்கப்படுகின்றன. நிலப் பயன்பாட்டு மண்டலத்துக்கு இணக்கமான சிறு திட்டங்களுக்கு, எம்.எம்.டி.ஏ. அளித்த அதிகாரங்கள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளே அனுமதி அளித்து வருகின்றன. இதர அனைத்துக் கோரிக்கைகளும், எம்.எம்.டி.ஏ.-வால் பரிசீலிக்கப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் 2,794 திட்டங்களுக்கு எம்.எம்.டி.ஏ. அனுமதி வழங்கியுள்ளது. 1,104 திட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் இந்த எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. சப்-டிவிஷன்கள், லே-அவுட்டுகளுக்கான அங்கீகாரம் கோரி 913 விண்ணப்பங்கள் வந்ததில், 12,000 மனைகள் கொண்ட 817 ஏக்கர் பரப்பளவுக்கான 394 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

பார்த்தோம்-படித்தோம்

1.12.91 இதழில் வெளிவந்த நேரு பிறந்தநாள் விழாவில் - முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை என் நெஞ்சை நெகிழச் செய்தது. மேலும், சிவானந்தா குருகுலத்திற்கு அன்பளிப்பாகப் பேருந்து வழங்கி உள்ளார். அது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது.

—எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

மதுவின் தீமையை விளக்கிடும் கதைகள், கட்டுரைகள், எளிய இனிய நடையில் படைத்து அரும் பணியாற்றுகிறது தமிழரசு.

—பச்சையப்பன்,
பள்ளிச்சந்தல்

எல்லாத் துறைகளிலும் மகளிரே வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் செய்தி, மங்கலமும் மதிப்பும் மரியாதையும் பயனும் நிறைய விளைவிக்கும் என்பது திண்ணம்.

—அரிமா. பூபாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

சிக்கன முறையில் சீரோடு வாழ்ந்திட, பிறருக்கு, உதவி செய்யத் தூண்டுகின்ற சேமிப்பு பற்றி அழகான, அருமையான முறையில், கவிதை படைத்த கவிஞர்-பூங்கோவன் அவர்களுக்கு நன்றி!

—ப.அ. சண்முகம்,
களம்பூர்

தமிழ்நாடு முழுவதும் பெய்த கடும் மழை மற்றும் பெரும் காற்றினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, முதல்வர் அவர்களின் உதவி-நன்கொடையில், உதவித்தவர்களுக்குக் கிடைத்த கப்பல் போன்றது.

—ந. சுந்தரபுத்தன்,
கண்கொடுத்தவனிதம்.

சித்த மருத்துவப் பயனை அறிந்து, மகிழ்ச்சியடைந்தேன். இந்தக் கட்டுரை பலருக்கும் பயன் தரக்கூடியது.

—பி.ஜி. அழகிரி,
பெரம்பூர்.

"**கா**லம் போற்றி வாழ்க!" என்ற சீனி, விஜயராணி அவர்களின் 'மாணவர் பக்க'க் கவிதை மணியான கவிதை!

—கவிஞர் அ.சுப்பையன்,
செட்டிகுறிச்சி.

'**ம**ழை பாதித்த இடங்களில் முதல்வர்' - கட்டுரை, முதல்வருடன் சென்றதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—நெல்லை நாதன்,
மேலத்திடியூர்.

"**உ**ணவே மருந்து" என்ற கட்டுரை மிகவும் அருமை. நாம் அன்றாடம் உண்ணும் கீரை வகைகளைப் பற்றித் தெளிவாகக் கூறியது.

—ஞான. சங்கர்,
தலைஞாயிறு.

"**ம**துவினால் அழிந்த சாம்ராஜ்யம்" என்ற புராணக் கதை படிப்பதற்கும், பார்ப்பதற்கும் அதிசயமாக இருந்தது.

—க. காவேரி,
வாழப்பாட்டாம்பாளையம்.

திங்கள் இருமுறை மலரும் 'தமிழரசு' முகர்ந்தேன். மனம் மகிழ மணம் நிறைந்தது. உளம் குளிர்ந்தது. வாழ்த்துக்கள்! சிறப்பான பூரணமான தகவல் ஏடாக மிளிர்வதைப் பாராட்டுகிறேன்.

—ந. தர்மலிங்கர்,
திருச்சி-3.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

VISIT INDIA

A Dance Festival That Will Sweep You Off Your Feet.

Mamallapuram. A seaside town 60 kms South of Madras famous for its ancient art and culture. Where tales of yester-years have been sculpted on stone. And history has been recorded on rock.

Come January, it'll be festival time in Tamilnadu. Pongal, the harvest festival, will be celebrated with pomp and splendour. Mamallapuram will host a festival of dances – Bharata Natyam, Kuchipudi, Kathakali, Odissi and Folk. As our country's leading artistes converge here, remember to be around.

Jointly organised by
Ministry of Tourism, Govt. of India.
and
Department of Tourism
Govt. of Tamilnadu, Fort St. George
Madras 600 009

Tamilnadu Tourism Development Corporation Ltd.
25, Dr. Radhakrishnan Salai, Madras 600 004
Phone: 846843, 846825 Telex: 41-7758 Grams: TAMILTOUR

MAMALLAPURAM
Dance Festival
15th Jan. – 16th Feb. 1992

DIPR/MAA COMMUNICATIONS

பணி
தல்
ஒருங்
விரி
(டிடி
பிளா
அமை
பணி
வேற்
பணி
வின
அளி
களை
களை
ஆே
செய
னை
கொ
197
முத
பதி
திட்
மூ
வ
(டி
நில்
இ
எம்
மூ
இ
எ
கி
வ
க
நட

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் - 2

மலர்: 22 இதழ்: 14

16-1-1992

இந்த இதழில்...

எது உண்மை இலக்கியம்? —தந்தை பெரியார்	... 2
உழவர் திருநாள் —பேரறிஞர் அண்ணா	... 3
உழைப்போம்! உயர்வோம்! —டாக்டர் எம்.ஜி.ஆர்.	... 5
வான்புகழ் வள்ளுவருக்கு வாழ்த்து மாலை	... 13
புகழ்பாடு தை மகளே! (கவிதை)	... 14
பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து	... 17
இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு	... 19
சென்னைப் பல்கலைக் கழகம் அன்றும் இன்றும்	... 23
பொற்காலம்	... 24
இறந்தோரை அடையாளம் காணும் ஒரு புதிய முறை	... 29
பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை	... 31
18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1992	... 33
தமிழ்நாட்டில் முழு அடைப்பு வெற்றி	... 37
இன்பம் தழைத்திடுக! (கவிதை)	... 41
சங்கப் புலவர் நினைவாக நினைவுத் தூண்	... 43
உறுதி பிறந்தது! (கவிதை)	... 45
தனிச் சிறப்பு வாய்ந்த நடுகல்	... 48



எது உண்மை இலக்கியம்?

- தந்தை பெரியார்

மக்களுடைய வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதும் அறிவையும், திறமையையும் தைரியத்தையும் உண்டாக்கக்கூடியதும் ஆகிய சிறந்த கலைகளையெல்லாம் தமிழில் எழுதிப் பரவச் செய்வதன் மூலம், மக்களுடைய அறிவையும், தமிழ் மொழியையும் செம்மை செய்வதே உண்மையான தமிழ் உணர்ச்சி யாகும்.

மனித சமுதாயத்திற்கே நல் வழிகாட்டி, நன்னெறியூட்டி, நற் பண்புகளையும், ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும் எல்லா மதத்த வரும் ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக் கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

குறள் வெறும் ஒழுக்கத்தையும், நல்வாழ்க்கைக்கு வேண்டிய அனு பவப்பூர்வமான பிரத்தியட்ச வழி யையும் கொண்டதாகும். குறள் ஓர் அறிவுக் களஞ்சியம், பகுத்தறிவு மணிகளால் கோக்கப்பட்ட நூல்.

நல்ல தமிழில் - இயற்கை எழில் களையும், தமிழரின் வீரத்தையும், அன்பையும், மானமிக்க சமத்துவ வாழ்வினையும், வரலாற்றினையும், நேர்மையையும், நீதிநெறிகளையும், தமிழ்நாட்டுப் பற்றையும், மொழி யின் ஆர்வத்தையும், ஒற்றுமைகளை யும், கட்டுப்பாட்டையும் எடுத்துக் காட்டும் பாட்டுக்களையே பாடு மாறு செய்தல் வேண்டும்.

இலக்கியம் எதற்காக? இலக் கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல் மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற தாகவும் அது இருக்கவேண்டும் என்பது எனது கருத்து.

உழவர் திருநாள்

பேரறிஞர் அண்ணா

இன்று திருநாள்!

இல்லந்தோறும் இளைஞரும் முதியோரும், இருபாலரும், 'பொங் கலோ பொங்க'லென்று மகிழ்ச்சி யுடன் குரலெழுப்பி, தாமும், தம் மைச் சூழ இருப்பவரை யாவுமே புதியதோர் பொலிவு பெற்றிருப்பது கண்டு, 'நலிவெலாம் ஒழிந்தது; நல்லன யாவையும் இனிக் கிடைத் திடும்' என்று நம்பி, அந்த மகிழ்ச் சிப் பெருக்குடன் மற்றையோரும், மனைதோறும் மனைதோறும் இருத் தல் கண்டு, நாடே விழாக்கோலம் பூண்டுள்ளது என்று பெருமிதம் கொள்வதற்கே அமைந்த விழாநாள்!

'பால் பொங்கிற்றா?- என்று, அன்பு பொங்கக்கேட்டு அகமகிழச் செய்யும் நன்னாள்! இன்பம் பொங்கும்! மனையெல்லாம் வழி யும்! புத்தம் புதுக்கோலம் பெற்று, இல்லமெல்லாம் எழிலோவியமாகும்; அன்பு மணம் எங்கும் கமழும்; பூங்கா சென்ற புள்ளினமும், மலரிடை உலவும் வண்டினமும் 'கானம்' கிளப்பிடுவது போன்ற தோர் களிப்பொலி எங்கும் எழும்! பனி தொலைந்தது; பரிதி அப்பகை யினை விரட்டினான் நில மடந் தைக்குப் புதிய எழிலூட்டினான்- நடுக்கும் குளிர் இனி இல்லை; வாழ்வை நொறுக்கும் கேடுகட்கு இனி ஆதிக்கம் இல்லை!

விளைந்தது குவிந்திடக் கண் டோம்; வினையின் பயனைக் கொண்டோம்; செயலின் செழுமை விளங்கிற்று; செய்தொழிலின் மேன்மை துலங்கிற்று; உழவன் பெருமையை உலகே புகழ்கிறது; உலகுக்கே அத்தொழில் அச்சாணி என்று உளமகிழ்ந்து உரைக்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

அவன் காலில் படிந்த 'சேறும் சகதியும்' வாழ்வுக்குச் சந்தனமாகி மணம் அளிக்கிறது. அவன் பூட்டிய ஏர் அளித்த வளம், பெருந்தேரோ டும் நிலையை அரசர்க்கே அளிக் கிறது எனில், மற்றையோர் ஏற்றம் பெறாதிருப்பரோ! அவன் 'கஞ்சி' தான் குடித்தான்; கலயமோ மண் ணாலானது; கழனிப் பக்கம் அமர்ந்து கடும் உழைப்புக்குப் பிறகு, உச்சிப்

போதிலே அவன் 'இச்சைக்கினியாள்' தந்தது.

இதோ, அவன் இஞ்சியும், மஞ்சளும், வாழையும், பலாவும், மாவும் பிறவும் அளித்து, தன் திறமையையும், வள்ளற்றன்மையையும் எடுத்துக் காட்டுகிறான். கல்லிலும், முள்ளிலும் நடந்தான் - காரிருள் கலையும் நேரமறிந்து எழுந்தான் - பகலெலாம் பாடுபட்டான் - முளைவிட்டதும் மகிழ்ந்தான் - களை கண்டு கவலை கொண்டான்; உழைத்தான், உழைத்தான் - கழனி பச்சை நிறம் பெற்றது; மீண்டும் பாடுபட்டான்; இதோ பொன்னாடை போர்த்துக் கொண்டு புவிப் பெண்ணாள், செந்நெல் மணி மாலைகள் அணிந்து தென்றலாளுடன் தேனொழுகப் பேசி, தெவிட்டாது பாடி, கோலம் காட்டி நிற்கிறாள்!

ஓவியன், நீல நிற வானிலே பல்வேறு உருவமாக உலவிடும் கார் கண்டு, தீட்டுகோல் எடுப்பான்; ஏரடிக்கும் சிறு கோலுடைய உழவுப் பெருமகனோ, அண்ணாந்து பார்க்கிறான்; அகமகிழ்கிறான். எதன் பொருட்டு? தன் வாழ்வை சிறக்கும் வகை கண்டோம் என்பது பற்றி எண்ணி அல்ல; நாட்டில் நல்லறிவாளர் படித்து இன்புறும் ஏடுகள் குறித்து அல்ல; அவனைப் பற்றித் தமிழ்ப் பேரறிவாளர்கள் - மூதறிஞர்கள் கூறிச் சென்ற பொன்னுரைகள், அகத்திலும் புறத்திலும், தொகையிலும் கலம்பகத்திலும் ஏராளம், ஏராளம், அவன், அவை பற்றி ஏதும் அறியான்! அவனுக்காக வாதாடிய புலவர்களை அவன் கண்டானில்லை; கருத்தூட்டமளிக்கும் கவிவாணர் பலர் அவன் செய்தொழிலின் சிறப்பு குறித்துச் செப்பியுள்ள ஒப்பில் புலமை நிறைமணிகளை அவன் கண்டானில்லை; சேரன் அவையின் சிறப்பு, பாண்டியன் பாசறை அமைந்த பெருமை, சோழ நன்னாட்டான் பாடியும் மாடியும் கண்ட அருமை இவை பற்றி அவன் அறியான்; 'கருக்கலிலே போக வேண்டும்- பசுந்தழை பத்து வண்டி வேண்டும்- பண்ணையாரிடம் இன்னது கூற வேண்டும்- வேலியை இவ்விதம் சரி செய்ய வேண்டும்' என்ற இவை பற்றித்தான் பேசுகிறான். 'பயிர் எவ்வளவு காணும்' என்பதை உரைக்கிறான்- 'மணி' அவனுக்கல்ல

என்பது தெரிந்தும் மகிழ்ச்சியுடன், அவன் அளித்திடும் 'அம்பாரம்' பண்ணையாரைப் பொன்னார் மேனியராக்குகிறது - புவியாளும் வாய்ப்பினைத் தருகிறது! அவன் தன் கண்ணாரப் பயிர் ஏறுவது கண்டு களிப்பெய்துகிறான் - தன் உழைப்பு நற்பலனைத் தந்தது என்பதறிந்து!

'உழவர் திருநாள்' இப்பொங்கற் புதுநாள் - என்பதை அனைவரும் இன்று அறிந்து போற்றுகின்றனர்.

பண்படுத்திப் பரம்படித்து, எருவிட்டு ஏர்பிடித்து, விதை தூவி நாற்று நாட்டு, களை எடுத்து, கதிர் முற்றிடக் கண்டு அறுத்தெடுத்துப் புடைத்துக் குவித்து உணவுப் பொருளை உலகோர்க்கு உழவர் அளிக்கும் இவ்விழாதான், நாம் மகிழ்ச்சியுடன் பெருமையுடனும் கொண்டாடும் ஒரே விழா!

ஒருநாள் - ஊரெல்லாம் விழா! ஒரு திங்களும் போதுமானதாக இல்லை - நமக்கு, நாட்டவரிடம் இவ்விழாவில் மாண்பினைக் குறித்து, வியந்து, விரித்துரைத்திட!

ஊர், விழாக்கோலம் கொள்ள வேண்டும். இசையும் கூத்தும் உடற்பயிற்சி விளையாட்டுகளும் இன்ன பிறவும் நடை பெறவேண்டும்; தமிழரின் தொன்மை பற்றியும், மூதாதையர் காலத்தில் இருந்த பொலிவு பற்றியும் அஃதே பிறகு நலிவாக மாறிவிடும்படி செய்த நயவஞ்சகர் போக்கு பற்றியும் முத்தமிழ் மூலம் ஆர்வமூட்டி வருதல் வேண்டும்.

பிற எந்த விழாவும், வீட்டோடு அமையும், அல்லது, கோயிற் பெருவெளியில் நிகழும். மக்கள் மன்றம் கூடி, மகிழ்ச்சிப் பெருக்குடன் கலந்து களிப்பதற்கான விழாவாக இப்பொங்கற் புது நாளே அமைந்திருக்கிறது. ●

உழைப்போம்! உயர்வோம்!

-டாக்டர் எம்.ஜி.ஆர்

தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும்என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா.

உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் திருவிழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

''உழைப்பே உயர்வுதரும்''
''உழைப்போம், உயர்வோம்''
''உழைப்போரே உயர்ந்தவர்''
''உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்''

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாள் பொங்கல்! ●



ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசு!

விழுப்புரம் விழாவில்
மாண்புமிகு முதல்வர் உரை

'காவிரி - தென்பெண்ணை - பாலாறு
எனமேவிய ஆறுகள் பல ஓடத்
தன்மேனி செழித்த தமிழ் நாடு'

—என மகாகவி பாரதி பாடிய பாட்டுக்கேற்ப நம்முடைய தென்பண்ணை ஆறு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத புதுமையாக, இந்த ஆண்டு கரைபெருக்கெடுத்தோடி, இம்மாவட்டத்தின் மேனி செழித்தது என்று சிறப்பைப் பெற்றுள்ள மகிழ்ச்சியோடு நாம் இங்கே கூடியுள்ளோம்.

இவ்வளவு பெருமகிழ்ச்சியை நமக்கு வழங்கிய இயற்கை, நாம் ஆற்றவேண்டிய கடமைகள் பலவற்றையும் சில சின்னங்களாக விடுத்துச் சென்றுள்ளது.

மாவட்டம் முழுவதிலும் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் விளைவுகளால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து, மக்களைக் காக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அனைவர்க்கும் என் பாராட்டை - நன்றியை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். கடும் மழை- வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் - இம்மாவட்டத்திற்கும், பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் எங்கள் கடமையை ஆற்றும் வகையில்தான், இம்மாபெரும் விழா நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

வழக்கம்போல் சில மேதாவிகள் இதையும் விமரிசனம் செய்வார்கள் என்பதை, என்னைவிட இங்கே அமர்ந்துள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

''போற்றுவோர் போற்றலும் தூற்றுவோர் தூற்றலும் இவ்வையத்துள் இயற்கையே!''

என்பதை மனதில் கொண்டு எங்கள் பயணத்தை - பணியைத் தொய்வின்றி ஆற்றி வருகிறோம் என்பதன் எடுத்துக்காட்டுதான், இம்மாபெரும் விழா என்பதை முதற்க்ண் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

கடந்த ஆறு மாதமாக நடைபெற்று வரும் எங்கள் அரசு உங்கள் அரசாக செயல்பட்டு வருவதை உணர்ந்திருப்பீர்கள். மலிவு விலை மது ஒழிப்பில் உண்மையாகவும் - உறுதியாகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசாக;

காவிரிப் பிரச்சினை மட்டுமல்லாது, எங்கெங்கு தமிழ் இனம் வாழ்கிறதோ, அங்கெல்லாம் அவர்களின் நலன் காப்பதற்கும், தமிழர்களுக்குள்ள உரிமையைக் காப்பதற்கும், நம் பக்கம் நியாயம் உள்ளது என்பதை உலகறியச் செய்வதற்கும் தீவிரம் காட்டுகிற அரசாக;

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை மிகச் செம்மையாக நடைமுறைப்படுத்த, தன் உயிரையும் பணயம் வைத்துச் செயல்படுகிற அரசாக;

தமிழகத்தின் பொருளாதார நிலையினை உயர்த்தவும், தொழில் வளத்தைப் பெருக்கவும் முனைப்பான வேகம் காட்டுகிற அரசாக;

வளர்ச்சிப் பணிகளில் வேறெந்த அரசும் இது வரை செய்தறியாத, செம்மையான பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசாக,

எங்கள் அரசான உங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. அத்தகைய உங்கள் அரசுதான், மழையாலும் வெள்ளத்தாலும் அவதிக்குள்ளாகி இன்னல்படும் மக்களுக்கு, நேரத்தோடு ஓடிவந்து உதவி செய்தது; அதன் தொடர் நடவடிக்கைகள் எவ்விதத் தொய்வுமின்றி நடைபெற்றிடும் வகையில், இன்று இங்கே இவ்விழா மூலம் பல்வேறு பணிகள் நடைபெற நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற ஆறுமாதக் காலத்திற்குள் எண்ணற்ற இடர்ப்பாடுகளை, இடுக்கண்களைச் சந்தித்த அரசு, இந்தியாவில் ஒன்று உள்ளதென்றால், அது நம் தமிழக அரசாகத்தான் இருக்க முடியுமே ஒழிய, வேறெந்த அரசும் இத்தனை இன்னல்களை இவ்வளவு குறுகிய காலத்தில் எதிர்கொண்டிருக்க முடியாது.

இருந்தும், மக்கள் நலப் பணிகளை விரைந்தும், வேகமாகவும் ஆற்றிட, நாங்கள் என்றும் பின்வாங்கியதில்லை; இனி என்றும் பின்வாங்கப் போவதும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு இயந்திரம் செம்மைப்பட இயங்கிட, மிக இன்றியமையாத் தேவையான 'நிதி நிலை' நெருக்கடி, வேறெந்த காலக் கட்டத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைய உங்கள் அரசு எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பதை, விவரம் அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

தமிழகத்தை ஆண்ட ஒப்பாரும் - மிக்காரும் அற்ற, தனித்தன்மை மிக்க முதலமைச்சர்களாகக் கருதப்பட்டு வரும் மூதறிஞர் இராஜாஜி, கர்ம வீரர் காமராசர், பேரறிஞர் அண்ணா, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆண்ட காலங்களில் எல்லாம்கூட, தற்போதுள்ளது போன்ற மிகக் கடுமையான நிதி நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் ஆண்ட காலங்களில்,

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் அன்புடன் வரவேற்றார்கள் (3.1.1992).

கஜானா நிரம்பி வழிந்தது எனக் கூற முடியா விட்டாலும், மிகக் கடுமையான நிதிச்சுமை அவர்களுக்கு இருந்தது எனக்கூற முடியாது. குறிப்பாக இராஜாஜி அவர்கள் , முதலமைச்சராக இருந்த போதும், காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும், பல ஆண்டுகளில் அவர்கள் 'உபரி பட்ஜெட்' போடும் அளவுக்கு மிகுதியான நிதி ஆதாரங்களைப் பெற்றிருந்தனர். அப்பேர்ப்பட்ட மகத்தான தலைவர்கள் எல்லாம் ஆண்டபோது, மிகச் சுலபமாகச் சமாளிக்கக் கூடிய பொருளாதாரப் பிரச்சினைகள்தான் இருந்துவந்துள்ளன.

அத்தகைய உயரிய தலைவர்கள் எல்லாம் சந்தித்து அறியாத நிதிச் சுமையினை - பொருளாதார நெருக்கடியை, சமாளிக்க வேண்டிய அவசியம், சாமான்யமான நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த வேளையில் ஏற்பட்டுள்ளது என்பதை, உங்களிடத்தில் விளக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

உங்கள் சகோதரியான நான் ஆட்சித் தலைமையேற்ற இந்த ஆறு மாத காலத்தில் மட்டும், ஏறத்தாழ 1,200 கோடி ரூபாய் அளவுக்கான பல்வேறு வகைகளிலுமான பட்ஜெட் பற்றாக்குறையை எதிர்கொண்டு, அவற்றை எல்லாம் சமாளித்து, இன்று வெற்றிநடை போடுகிறோம்

'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க- தமிழக மக்களைக் காக்க- இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத் தான் பயன்படும்!

என்பதில் இருந்து, எவ்வளவு கடினமாக நாங்கள் உழைத்து வருகிறோம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வளவு நிதி நெருக்கடி இருந்தும்கூட, மக்கள் நலப் பணிகளுக்காகக் கோடி கோடியாக இவர்கள் எப்படிச் செலவழிக்கிறார்கள் என, மாற்றுக் கருத்துக் கொண்ட பலரும் இன்று நம்மைப் பார்த்து வியந்திடும் அளவுக்கு, பணிபுரிந்து வருகிறோம் என்றால் அது மிகையாகாது.

ஒரு காலத்தில் ஒரு மாவட்டத்திற்கு மந்திரிகள் வருகிறார்கள் என்றால், தங்கள் செல்வாக்கைப் பிரகடனப் படுத்திக்கொள்ள வருவார்கள். அதிலும் சில மந்திரிகள் இருந்திருக்கிறார்கள்; அவர்கள் சொந்த ஊருக்குச் சென்றால் கூட அதிகாரம் கொடி கட்டிப் பறக்கும்; அரட்டல், உருட்டல், அரசாங்க எந்திரத் துஷ்ப்பிரயோகம் என்பது, கண்மண் தெரியாமல் தூள் பறக்கும்; அனுபவித்தவர்கள் தானே நீங்கள்.......? அதனால் அதிகம் சொல்ல வேண்டியதில்லை எனக் கருதுகிறேன்.

ஆனால், இன்று உங்கள் சகோதரியான நான், எங்கள் அமைச்சர்களை அழைத்துக் கொண்டு, முதலமைச்சராக ஒரு மாவட்டத்திற்குள் நுழைகிறேன் என்றால், நுழையும்போதே ஒருங்கிணைந்த வகையில், சுமார் 75 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரையிலான பல்வேறு திட்டங்களை, உடன் செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்களோடுதான் நுழைகிறோம் என்பதில் இருந்து, இதுவரை ஆண்டவர்களுக்கும் எங்களுக்குமுள்ள வேறுபாட்டை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். இன்று நான் இங்கே கலந்து கொள்ளும் இந்த விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், இம்மாவட்டத்திற்கு 175 கோடி ரூபாய் திட்டங்கள் வந்துள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப் பார்த்துக் கூட சிலர் வயிற்றெரிச்சல் படுகிறார்கள்; 'ஆடம்பரப் பவனி' என்று ஓர் வார்த்தையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்; எரிச்சலோடு எழுதுகிறார்கள்; ஏளனமாய்ப் பேசுகிறார்கள்; நெஞ்சம் குமுறுகிறார்கள்.

மக்கள் எங்கள் மீது செலுத்தும் அன்பும், அரவணைப்பும் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்குகிறது; எனவே இதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. இவர்கள் பேச்சுக்கும், எழுத்துக்கும் நாங்கள் அஞ்ச வேண்டியதில்லை என்றே கருதுகிறேன். ஆனால்,

நாங்கள் மக்களுக்குப் பயப்படுகிறோம்;
நாங்கள் நீதிக்கும் நேர்மைக்கும் பயப்படுகிறோம்;
நாங்கள் உண்மைக்கும் சத்தியத்திற்கும் பயப்படுகிறோம்; அதே நேரத்தில், நான் இன்னொரு உண்மையைச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழி வந்த இந்த அரசு, எந்தக் காலத்திலும் எத்தகைய மிரட்டல்களுக்கும் பயப்படாது; குறிப்பாகப் புரட்டர்களுக்குப் பயப்படாது.

ஒரே வரியில் சொன்னால்,

நாங்கள் பயப்படவும் மாட்டோம் -
எவுரையும் பயமுறுத்தவும் மாட்டோம்!

உண்மை இப்படி இருக்க,

'தடா' சட்டம் பயன்படுத்தப்படுகிறதே!
எங்கள் மீது பாய்கிறதே!' என்றெல்லாம் பயந்துபோய், சிலர் தவறான தகவல்களைத் தமிழக மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்னும் பழமொழியை நீங்கள் அறிவீர்கள். அதுமட்டுமல்ல, 'வேங்கை வேதாந்தம் பேசுகிறது' என்பார்களே, அப்படித்தான் இவர்களது வாதமும் உள்ளது.

எந்த வகையில் நான் 'தடா' சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளேன்? சொல்ல முடியுமா அவர்களால்....?

என்னை அழிக்க நினைத்தவர்களுக்கு எதிராக நான் அதைப் பயன்படுத்தினேனா?

என்னை லாரி ஏற்றிக் கொல்ல நினைத்தார்களே சிலர்; அவர்களுக்கு எதிராக அதை ஏவி விட்டேனா?

இல்லை, எனக்கு மருத்துவ வசதியைத் தரக் கூடாது என்று அதிகாரத்தால் அனைவரையும் அதட்டினார்களே சிலர், அவர்கள் மீது அதைப் பிரயோகித்தேனா? சொந்த நலனுக்காகத் 'தடா' சட்டம் மட்டுமல்ல, வேறு எந்தச் சட்டத்தையும் துஷ்பிரயோகம் செய்கிற முதலமைச்சர் அல்ல நான், என்பதை மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த மக்களுக்கு, எங்களை ஆட்சியில் அமர்த்திய மக்களுக்கு, இந்த உண்மை தெரியும்; இதன் உண்மையான அர்த்தமும் புரியும்! எனவே, எங்கள் மீது வசை பாடுவோரைப் பற்றித் துளியும் கவலைப்படாமல், எங்கள் கடமையைச் செய்கிறோம்; கவனத்தோடு செயல்படு கிறோம். மக்களுக்குத் தொண்டாற்றவே பொது வாழ்வுக்கு வந்துள்ளோம் என்பதை உணர்ந்து காரியமாற்றி வருகிறோம்.

எங்களது இலக்கினை, அடையவேண்டிய இலட்சியங்களை, நாங்கள் தெளிவாக உணர்ந்துள்ளதால், எங்களது நெடும் பயணத்தில் எந்த விதத் தயக்கமும் இல்லை; தடுமாற்றமும் இல்லை.

எங்களது கொள்கையில் தெளிவுள்ளதால், எவ்வித மயக்கமும் இல்லை. ஆனால், தங்களது கொள்கைகளைக் குழப்பிக் கொண்டவர்கள், மக்களைக் குழப்ப வேண்டும் என்பதற்காக, தவறான தகவல்களை இப்போது மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விளக்கம் அளிக்கவே இதனைத் தெரிவித்தேன்.

'தடா' சட்டம் தமிழகத்தைக் காக்க - தமிழக மக்களைக் காக்க - இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கத்தான் பயன்படுமே தவிர, எங்கள் அரசியல் எதிரிகளை அடக்குகிற ஆயுதமாக, சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்கிற கருவியாக, சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்படுகிற சட்டமாக, அதைப் பயன்படுத்த நாங்கள் நினைத்ததும் இல்லை; இனி நினைக்கப் போவதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள சிலருக்குச் சில வினோதப் பழக்க வழக்கங்கள் உண்டு. அதை நானும் அறிவேன்; மக்களும் அறிவார்கள்.

எங்கே தங்களை மக்கள் மறந்து விடுவார்களோ? எங்கே விளம்பரமின்றி மறைந்து போய் விடுவோமோ? என்ற பயத்தில், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் முயற்சியாக, தாங்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு புரளியைக் கிளப்பி விடுவது; அரசுப் பேருந்துகள் மீது அவர்களாகவே கல்லெறியச் செய்வது; மற்றவர்களைக் கலவரம் செய்யத் தூண்டுவது; 'கைது செய்து பார்', 'வானம் வில்லாக மாறும், பூமி பாயாகச் சுருளும்' என்றெல்லாம், அடிக்கடி நிறம் மாறும் சில பச்சோந்திகளை விட்டுப் பேசச் செய்வது; இவை எல்லாம் எதற்காக? ஏன் என்று நினைக்கிறீர்கள்? மக்கள் அவர்களை மறந்துவிடக் கூடாதே என்பதற்காகத் தானே தவிர,, வேறு எதற்காக?

அவர்கள் சம்பாதித்த பல கோடிகளைக் காப்பாற்றிக் கொள்ள, ஐந்தரைக் கோடி மக்களை அல்லலுக்கு உள்ளாக்க நினைக்கிறார்களே...... இது நியாயமா?

மக்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கும் இந்த அரசின் ஆக்கப் பணிகளுக்கு ஊறு விளைவிக்க நினைக்கிறார்களே........ இது நியாயமா?

அதோடு, அவர்கள் செய்திருக்கிற தவறுகளுக்காக, தமிழகத்திற்கு இழைத்திருக்கிற கொடுமைகளுக்காக, தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள துரோகங்களுக்காக, மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க, சிறைச்சாலைதான் பாதுகாப்பான இடம் எனக் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை; அவர்களிடம் இத்தகைய அவசரப் பேச்சுக்கள் அதிகமாக உள்ளன.

ஆனாலும், அவர்கள் பாதுகாப்பாகச் சிறைக்குப் போக அவசரப்படுவது போல, அரசு அவசரப்பட முடியாது. அவர்கள் மக்களை ஏமாற்ற நடத்தும் போலி அரசியலை, மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டிய எங்கள் கடமையைத்தான் நாங்கள் செய்து வருகிறோம்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடு பொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள்!

குறிப்பாக, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, இந்த அரசு எவரையும் கைது செய்யாது, பழி வாங்காது என்பதைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில்; மக்களுக்கு உண்மையைச் சொல்ல, சட்டம் தடையின்றி அதன் வேலையைச் செய்ய, இந்த அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறுகிற இந்த அரசு விழாவில், மொத்தமாக 175 கோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களை நான் துவக்கி வைத்துள்ளேன். குறிப்பாக, நல்ல மழை பெய்ததற்குப் பிறகு, உழவர்கள் தங்களது விவசாயப் பணிகளை உடன்

துவக்குகிற வகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்வதற்கென, இடுபொருட்களைக் காலத்தோடு அவர்களுக்கு விநியோகிப்பதற்காக மட்டுமே, 10 கோடி ரூபாய் அளவில் உதவிகள், இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஊக்குவிக்கிற வகையில், எங்களால் தீட்டப்பட்டுள்ள சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகளை, போர்க்கால நடவடிக்கைகள் மூலம் தற்போது வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில், இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம், 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (District Rural Development Agency) மூலமும், ரூ.28 கோடி செலவில் இன்று பல்வேறு திட்டங்கள் துவக்கி வைக்கப்படுகின்றன.

சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கிலோமீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் இதர சாலைகளைச் செப்பனிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

நமது கிராமங்களையும், பெரிய நகரங்களையும், சாலைகள் மூலம் இணைத்து, கிராமியப் பொருளாதாரத்தை விரைந்து முன்னேற்றுகின்ற எங்கள் அரசின் நோக்கமும், முன்னுரிமையோடு பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த மாவட்டத்தைப் பொருத்தவரை, அந்த எண்ணத்தை நிறைவேற்றுகிற வகையில், சென்னையையும் கடலூரையும் இணைக்கும் 178 கி.மீ. நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம், இதர சாலைகளைச் செப்பனிடுகிற பணிக்காக, 19.86 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்தின் முக்கியத்துவம், தற்போது நகரத்தில் வாழ்கிற மக்களாலும், கிராமங்களில் வாழும் மக்களாலும் நன்கு உணரப்பட்டுள்ளதால், போக்குவரத்து வசதிகள் சிறப்பாக அமைய, போக்குவரத்துக் கழகங்கள் செம்மையாகச் செயல்படுவது அவசியமாகும்.

அந்த வகையில், இந்த மாவட்டத்தில் இயங்கி வரும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைத் துவக்கி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணியாளர் குடியிருப்புகள், மற்றும் தொழிலாளர்களுக்கான மருத்துவமனை, ஆகியவற்றுக்கான பணிகளைத் தொடங்கி வைக்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேருந்து உதிரி பாக உற்பத்தித் தொழிலக விரிவாக்கக் கட்டடம், புதிய பணிமனைகள் மற்றும் தொழிலாளர் நலக் கட்டடங்கள், மனமகிழ் மன்றம், பயிற்சி மையம், மாமண்டூர் பயண வழி உணவகம் ஆகியவைகளுக்காக, 13.70 கோடி ரூபாய் செலவில், திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் பரிசாக, இன்று ஒரு மாபெரும் திட்டத்தையும் இந்த விழாவில் தொடங்கி வைத்ததில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்புதிய திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அனைத்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோர், பொங்கல் பரிசாகச் சேலை, வேட்டி இலவசமாகப் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், தமிழர் திருநாளாம் பொங்கல் அன்றுகூட, புத்தாடை வாங்கி அணிய முடியாத நலிந்த பொருளாதார நிலையில் பலரும் உள்ளனரே என்று வருந்தினேன். அரசிற்கு நிதிநிலை நெருக்கடி இருக்கும் இத்தருணத்திலும், இந்த ஆண்டு பொங்கல் நாளை என் சகோதரிகளும், சகோதரர்களும், புத்தாடை அணிந்துதான் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன்படி இன்று 41.56 கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவோருக்கு, புத்தாடைகள் பொங்கல் திருநாளுக்கு முன்னரேயே வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளேன். இதிலிருந்து, தமிழகத்தில் வாழும் ஏழை எளியோருக்கென எத்தகைய திட்டங்கள் என் மனதில் உள்ளன என்பதையும்,

இரவு பகல் எந்நேரமும்,

'இலையே, உணவிலையே - கதி
இலையே எனும் நிலையே இனி இலையே -
எனும் நிலையே இனி வரவே
முரசறைவாய் முரசறைவாய்'

—என்னும் பாவேந்தர் பாரதிதாசன் வழியோர் வளம் பெற பாடிய பாட்டின் உணர்வுதான், என்னகத்தே உள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.



இன்னும் கதர் கிராமத் தொழில் வாரியம், மீன்வளத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஆகிய பல துறைகளின் சார்பாகவும் திட்டங்கள் பலவற்றைத் துவக்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்களினால், விவசாயத்தை நம்பியிருக்கிற இம்மாவட்ட மக்கள், பெரிதும் பயன்டைவார்கள் என்று உளமார நம்புகிறேன். தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முன்னே, இன்று விசுவரூபம் எடுத்துள்ள பிரச்சினைகள் பற்றி நம் அனைவருக்கும் நன்கு தெரியும்.

தமிழக விவசாயிகளுக்குள்ள பெரிய பலவீனமே, அவர்கள் பல காலம் விவசாயத்திற்காகப் பருவமழையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. சில நேரம் பாசனத்திற்குரிய தண்ணீரை, பக்கத்திலிருக்கிற மாநிலங்களில் இருந்து போராடிப் பெற வேண்டி உள்ளது. இந்த வகையில் உருவெடுத்தது தான் காவிரிப் பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரியும்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் இயற்கையாகவே நியாயம் நம் பக்கம் இருந்ததால், கர்நாடக அரசு நீதி வழங்க மறுத்த நேரத்தில், வானம் மழை பொழிந்து நமது இன்னலைத் தீர்த்து வைத்தது. இப்போது உச்ச நீதிமன்றத்தின் மூலமும், மத்திய அரசின் மூலமும், சட்டத்தின் மூலமும், நமது நியாயம் உணரப்பட்டு, நீதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த நீதி மதிக்கப்படாமல், அதுவே காழ்ப்புணர்ச்சியைத் தூண்டுகிற காரணமாகி, கர்நாடகத்தில் வாழ்ந்து வருகிற ஏதுமறியாத தமிழர்கள் பெருத்த துன்பத்திற்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

பல நூற்றாண்டுகளாகப் பண்பாட்டால், பழக்கவழக்கங்களால், திராவிட இன ஒற்றுமையால், கர்நாடக மக்களோடு இணைந்து வாழ்ந்து வருகிற தமிழர்கள், தாங்கள் செய்யாத தவறுக்காக, எவ்வகையிலும் அவர்கள் சம்பந்தப்படாத பிரச்சினையில், அவர்கள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்; அவர்களது உடைமைகளும் சொத்துக்களும் பறிபோயுள்ளன; மனித உயிர்களும் பறிக்கப்பட்டுள்ளன. எஞ்சியோர் தங்கள் மானத்தையும், உயிரையும் காத்துக்கொள்ள, அகதிகளாய் இலட்சத்திற்கும் அதிகமானோர் தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஒரே வரியில் சொல்லப்போனால், நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளது! சிறுபான்மையாய் வாழ்கிற எந்தச் சமூகத்தின் மீதும், கலவரத்தின் மூலம் பெரும்பான்மையாய் வாழ்கிற மக்களால், அநீதி இழைக்கப்பட முடியுமென்றால், பிறகு எந்த மாநிலத்திலும் அமைதி நிலவ வழியில்லை!! இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், கர்நாடகத்தில் சிறுபான்மையாய் வாழ்கிற தமிழர்களுக்கு, முழுப் பாதுகாப்பு வழங்க, மத்திய அரசை நான் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறேன். தமிழகத்திற்குத் தர்மத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில், அமைந்துள்ள உரிமையை நிலைநாட்ட, தமிழ்நாடு எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்!

நியாயமும் - நீதி மார்க்கமும் - தர்மமும் நம் பக்கம் உள்ளதால், நாமே இறுதி வெற்றி பெறுவோம் என்னும் உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையில் ஏற்படும் இன்னல்களையும், சோதனைகளையும், வேதனைகளையும், இடர்ப்பாடுகளையும், இழப்புகளையும், வழிந்தோடும் விழி நீரைத் துடைத்தெறிந்து விட்டு, இன்முகத்தோடு எதிர்கொள்வோம்! விறுநடை பயில்வோம்! வெற்றி கொள்வோம்! எனச் சூளுரைத்து, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக்கூறி விடை பெறுகிறேன்.

—ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (7.1.93)

ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா.

ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொங்கலை முன்னிட்டு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத் தொடக்க விழா தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்தில் 7.1.1992 அன்று நடைபெற்றது.

விழுப்புரம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் திடலில் நடந்த இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, இந்தத் திட்டத்தையும் ரூ.175 கோடிக்கான பல் வேறு நலப்பணித் திட்டங்களையும் துவக்கி வைத்து, விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில் ரூ.14.52 கோடி செலவில் கட்டப் பட்டுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக ஊழியர் குடியிருப்பு மற்றும் பிற திட்டங்களையும், ரூ.46.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மீனவர் குடியிருப்புகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியம்:

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடுபொருள் மானியம் வழங்கினார்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 34 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன.

விழாவில் ரூ. 258. இலட்சம் செலவில் ஊரக வளர்ச்சித் துறைப் பணிகள், ரூ.60 கோடி செலவில் டானிடா திட்டப் பணிகள், ரூ.105 இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியப் பணிகள் ஆகியவற்றையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல்வர் அவர்கள் விழா மேடைக்கு வரும் முன்னர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகத்தில் ரூ.5 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் சிலை மற்றும் நுழைவுவாயில் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

விழாவிற்கு, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார். முன்னதாக, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, இறுதியில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வாழ்த் துரை வழங்கினார்.

நினைவுப் பரிசுகள்:

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் ஆகியோர் நினைவுப் பரிசுகள் வழங் கினார்கள்.

அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. சி. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. ஜி. விஸ்வநாதன், திரு. ஈ. மதுசூதனன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கே.பி. கிருஷ்ணன், திரு. டி.எம். செல்வகணபதி, திரு. முகமது ஆசிப், திரு. டி. ஜெயக்குமார், திருமதி இந்திர குமாரி ஆகியோரும் மற்றும் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் விழாவில் கலந்துகொண்டனர்.

விழாவினையொட்டி விழுப்புரம் நகரில் வண்ண மின்விளக்கு அலங்காரம் செய்யப் பட்டிருந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.

வான்புகழ் வள்ளுவருக்கு வாழ்த்து மாலை!

எக்காலத்திற்கும் ஒத்துவரும் இயல் பினது. எண்ணில் வகைக் கவிஞரும் தம் நூல் ஏற்றமுற எடுத்த சொல்லையும் பொருளையும் உடையது. பல்லுரைகாரரும் பரிந்தெடுத்த பாங்கினது. ஞான நூலார் பலர்க்கும் நல்கிய பொருளது. எவ்வறத் தினரும் தள்ளாரும் கொள்ளுந் தருமத்தது. ஏனைய நூல்களை வாசிக்குங்கால் வரும் ஐயங்களை அகற்றும் ஆசிரியத் தன்மையது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பது. வேற்று மொழி வல்லார் காணாத விளக்கத் தகத்து.

—திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள்

திருக்குறள் தமிழ் மொழியில் பிறந்த ஒரு பெரும் பொதுமறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப்படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன. இப்பெரிய பொது மறையை மன்பதை பயின்று ஒருமை இன்பத்தை நுகர்வதாக.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

அறம், பொருள், இன்பம்- இம் முப் பொருளையும் ஓரிடத்தே இயையச் சேர்த்து விரிக்கற் பாலதை விரித்தும், சுருக்கற் பாலதைச் சுருக்கியும் அரும் பெறல் மணி களை யொருசிறுபேழையினகத்துப் பொற் புற வைத்தாங்குக் கவின் பெற மிளிரு மிவ்வருமைத் திருக்குறள் போன்ற ஒரு நூல் எம்மொழியிலும் காண்பதரிது. எப்பால வர்க்கும் எவ்வெக்காலத்தும் உயிர்க்குறுதி பயப்பனவாய பொருள்களை இன்புற விளக்கி அவரை யுய்விப்பதே இத்தொன் னூலின் மாட்சி.

— சுவாமி விபுலானந்தர்,
யாழ்ப்பாணம்

கடைச்சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக் கும் ஒப்ப முடிவதாகும். அத்திரட்டு நூல் களுள்ளும் வள்ளுவர் நூல் தலை சிறந்த தென்பதற்கு இடை நெடுங்காலம் பிற பல நூலும் வழக்கிழந்தொழியவும், என்றும் பிரபல நூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம்.

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

திருவள்ளுவர் தெய்வப்புலமை வாய்ந் தவரென்பது திண்ணம். அவர் பெரும் புலமையும் நுண்ணறிவும், அரிய பொருள் களைச் சிறிய செய்யுளில் அமைத்துக் கூறும் ஆற்றலும் படைத்தவர். அவர் கூறியருளிய அறநூலொன்றே உலகத்தார் அறிந்துய்ய வேண்டிய அறங்களையெல்லாம் தெள்ளிதின் விளக்கிக் கூறுவது; அரிய பொருள்களை ஆடியிற் காட்டும் பொருள்போல் அமைத் துக் காட்டுவது; ஒப்புயர்வற்ற உவமை களைப் பொருள்களுக்கு ஏற்றவாறு பொருந் தக்கொண்டு விளங்குவது.

—பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார்.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டின ரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல்

ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2,000 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலை சிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

—சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

திருக்குறள் ஓதற்கெளிதாய், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் பயப்பதாய், நவில் தொறும் நயம் பெருகும் நூலாய் விளங்கு கின்றது. ஏனைய பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்ற கடுந்தமிழ்ப் பதங்களும், பத்துப் பாட்டு முதலிய நூல்களிலுள்ள இறுக்கமும் மயக்கமும் திருக்குறளில் இல்லை. நூல் முழுமையும் திருந்திய செப்பமும், செம்மையும் வாய்ந்து விளங்குகின்றது. நூலின்கண் அமைந்து விளங்கும் இயல் களும், அதிகாரங்களும் ஒன்றற்கொன்று இயைபுடையனவாய்ப் பல தொடர்களால் அமைந்த அருமணி வடம் போல் விளங்கு கின்றன.

—டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை.

வள்ளுவப் பெருந்தகையை அவனே அறிஞன், அவனே புலவன், அவனே தமிழை அறிந்தோன் என்று தமிழ்ப் பெரு மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஏற்றிப் போற்றி வருகின்ற ஈடு இணையற்ற பேராசான் வள்ளுவப் பெருந்தகையை நினைக்கும் பொழுது ஆங்கில நல்லிசைப் புலவனான பென் ஜான்ஸன், ஷேக்ஸ்பி யரைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து என் நினை விற்கு வருகிறது. ''அவன் ஒரு யுகத்திற்கு மட்டுமல்ல, அவன் எல்லா யுகத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியவன்'' என்று.

—ப. ஜீவானந்தம்.

''பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே''

—ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கரசாரிய சுவாமிகள்

திருக்குறள் உலக நூல்களில் உயர்ந்த நூல்; தமிழர்களுக்குத் தெவிட்டாத அறிவு விருந்து. எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் எவ்வளவோ அரசியல், சமய, சமுதாய மாறுதல்கள் ஏற்பட்டு மாறிய பிறகும், திருவள்ளுவரின் நூல் இன்று நம்முடன் வாழ்ந்து நமக்காக அறிவுரை கூறும் சான்றோர் ஒருவரின் தெளிந்த வாய் மொழி போல் விளங்குகிறது.

—டாக்டர் மு. வரதராசனார்.

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல் வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத் தின் நிலைக்களனாய் இனிது விளங்கும்.

—பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார்.

நமது சரித்திரத்திற்கும், நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங் களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியும். ஆயினும், அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியுமாகையால், பயன்படுமாகையால், திருக்குறள் ஒன்று தான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந் திருக்கிறது.

—தந்தை பெரியார்.

குறள் நெறியுடன் வாழ்ந்த தமிழரை, சமுதாயத்தின் நச்சுப்பூச்சிகள் என்று கூறி யவர் எவர்? ஏன் தமிழர் சமுதாயம் சீர் கெட்டது? இன்று மீண்டும் குறள் நெறிப்படி சாதி, சமயமற்ற சமுதாயத்தை நிறுவிட முன் வரவேண்டும் என்று நான் புலவர்களையும் மற்றோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள் கிறேன்.

—பேரறிஞர் அண்ணா.



புகழ்பாடு தைமகளே!

கவிஞர் இளந்தேவன்

மஞ்சள் முகம்காட்டி, மனைப்பொங்கல் மணங்காட்டி,
கொஞ்சும் வயல்மேனிக் கோலமிகும் எழில்காட்டி,
செஞ்சொல் தமிழ்காட்டி, சின்னஇடை நடம்காட்டி
வஞ்சியென வந்தவளே, வரவேற்றோம் தைமகளே!

அண்ணலார் காந்தி, அரும்பெரியார், பேரறிஞர்,
மன்னவராம் எம்.ஜி.ஆர்., மாக்கவிஞர் பார்ரதியார்
தன்னுரிமைப் பாவேந்தர் தம்கனவை நனவாக்கும்
பெண்ணரசி பெரும்புகழைப் பேசவந்தாய் தைமகளே!

வேளாண் குடிகளுக்கு இலவசமாய் மின்சாரம்
தாளாண்மைத் தொழிலாளர் தலைதூக்கத் தனித்தொண்டு
நூலாளும் நெசவாளர் துயர்தீர்க்கப் பேருதவி
மேலான தமிழாட்சி மேன்மையிது தமிழ்மகளே!

ஆலைக் கரும்பாய் அல்லலுற்றுத் தவிக்கின்ற
ஏழைக்குச் சேலை, எளியோர்க்கு வேட்டி, ஒரு
வேளைக்குச் சத்துணவு விரைவாய்க் கிடைக்குதடி
தாழைக்கு வாசம் தரவந்த தைமகளே!

சாராயம் தேங்கும் சதுப்புநில மாயிருந்து
தீராத துயர்க்கிருமி தினம்தந்த தமிழ்நாட்டில்
ஓராணை யாலே 'மது' அரக்கன் தனையொழித்த
தீராதி தீரமதைத் தினம்பாடு தைமகளே!

'தண்ணீரைத் தா!' என்றால் தங்கியுள்ள தமிழர்களின்
செந்நீரை ஓடவிட்டுச் சிரிக்குங்கரு நாடகத்தார்
வெந்நீரைத் தேசியத்தின் வேருக்கு வார்த்தாலும்
கண்ணீரை அடக்கிக் கட்டுண்டோம் தைமகளே!

தாய்கொண்ட பொறுமைதனைத் தன்னடக்கப் பண்பாட்டைப்
பேய்கொண்ட சிறுமதியார் பின்னும் மதியாரேல்
வாய்கொண்டு வரலாறு வாழ்த்துகின்ற தமிழ்வீரம்
பாய்கின்ற நாள்விரைவில் பார்ப்பாய்நீ தைமகளே!

மண்மகளின் பொறுமைக்கும் மலர்மகளின் திருவுக்கும்
நன்மகளாம் கலைமகளின் நல்லறிவுத் திறனுக்கும்
பெண்மகளாய் வந்துதித்த பெருமாட்டி யாய்விளங்கும்
பொன்மகளின் ஆட்சிக்குப் புகழ்பாடு தைமகளே!

வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்

VIJAY
மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600068

தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343

பொங்கல் வாழ்த்து

கவிஞர் பட்டுத்தோட்டை இராஜேசந்திரன்

பொன்னிநதிக் கென்றேகல் லணை எழுப்பி,
பெருக்கெடுக்கும் வெள்ளத்தால் நாட்டு மக்கள்
இன்னலுறாப்படிகாத்தான் கரிகாற் சோழன்;
இரண்டாம்ரா சராசனென்ற சோழ மன்னன்
தன்னாட்டை வளப்படுத்தும் காவி ரிக்குத்
தடைநேர்ந்த தோர்மலையால் என்ற றிந்து,
சென்றந்த மலைதகர்த்துக் காவி ரித்தாய்
துள்ளிவரச் செய்திட்டான் அற்றை நாளில்!

பொன்னியாற்றங் கரைநெடுகச் சிலமன் னர்கள்
பக்தியினால் சிவன்கோயில் எடுப்பித் தார்கள்;
பின்வந்த சோழப்பே ரரச ரெல்லாம்
பாங்குறவே கரைஉயர்த்திச் சிறப்புற் றார்கள்;
இன்னுஞ்சில முடிமன்னர் கிளைக்கால் வாய்கள்
ஏற்படுத்திச் சோணாட்டை வளநா டாக்கி
மன்னுபுகழ் பெற்றார்கள்! நமக்கும் வற்றாக்
காவிரிக்கும் உள்ளதொடர் பைக்கண் டீரா?

இத்தனைக்கா லத்தொடர்பைப் பொய்என் றார்கள்
இலந்தைநிறக் கருநாட கத்தார்; நாமோ
எத்தனைக்கா லம்ஆன போதும் நீதி
எங்கள்தமிழ் நாட்டினுக்கே என்றோம்; வென்றோம்!
தித்திக்கும் செங்கரும்பு, திராட்சை, வெல்லம்,
தேய்ந்தபிறை வடிவமுந்திரி எல்லாம் சேர்த்துப்
புத்தரிசிப் பொங்கல்வைக்கும் இந்த ஆண்டில்
பொன்னியினை வரவேற்போம்; வாழ்த்து வோமே!

நாய்களைப் பாதிக்கும் நச்சுயிர் நோய்!

சென்னை மாநகரில் உள்ள நாய்களில் பார்வோ நச்சுயிர் நோயில் காணப்படுவது போன்ற அறிகுறிகளான வாந்தி, பேதி ஆகியன அதிகமாகக் காணப்படுகின்றன. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நாய்களில் ஏறக்குறைய 20 சதவிகித நாய்கள் இந்நோயால் பாதிக்கப் பட்டுள்ளன.

பெரும்பாலான நாய் வளர்ப்போர், இந்நோய்க்கான தடுப்பூசி போடத் தவறுவதாலேயே இந்நோய் உண்டாகிறது. இந்நோய் உணவுப் பாதையைப் பாதிக்கக்கூடிய ஒரு தீவிர மற்றும் பரவக்கூடிய தொற்று நோயாகும். எந்த வயதானாலும் இந்நோய் பாதிக்க வாய்ப்புண்டு. எனினும், குட்டி நாய்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுகிறது. பொதுவாக, இந்நோய் வெளிநாட்டு இன நாய்களை அதிகமாகத் தாக்குகிறது. இந்நோய், நச்சுயிர் கலந்த மலம் - வாய் வழியாகப் பரவவும் வாய்ப்புண்டு.

நோயின் அறிகுறிகள்: வாந்தி மற்றும் பேதி அதிதீவிரமாகக் காணப்படும். இவற்றில் இரத்தம் கலந்திருக்குமாதலால் சிவப்பு அல்லது கறுப்பு நிறத்தில் காணப்படும். பசியின்மை, சோர்வு மற்றும் நீர்வற்றி காணப்படும். காய்ச்சல் காண வாய்ப்புண்டு. சில நாய்கள் நோயின் அறிகுறிகள் கண்ட 24 மணி நேரத்தில் இறக்க வாய்ப்புண்டு. 4 முதல் 12 வார வயதான குட்டிகளில் இதய தசைகள் பாதிக்கப்படுவதால், இதயத் துடிப்பு நின்று திடீரென இறக்க நேரிடலாம். இறப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்பாக மூச்சுவிடத் திணறல், கத்துதல் இருக்கலாம்.

இந்நோய் கண்ட நாய்களுக்குத் தாது உப்புக்கள் கலந்த நீரை இரத்தம் வழியாகச் செலுத்த வேண்டியது அவசியம். மேலும், நோயின் தன்மையைப் பொறுத்து இரத்தம் தர வேண்டியும் நேரிடலாம். எனவே, உடனடியாகக் கால்நடை மருத்துவரிடம் கொண்டு செல்வது அவசியமாகும். வாந்தி நின்று 24 மணிநேரம் ஆகும் வரை வாய்வழியாக எதுவும் தருதல் கூடாது. 7 முதல் 9 வார வயதான நாய்க் குட்டிகளுக்குத் தடுப்பூசி போடுவதன் மூலம் இந்நோயினைத் தடுக்கலாம்.

கால்நடை மருத்துவ அறிவியல் தகவல் பணி மையம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை.

மூளை அழற்சி நோய் ஏன் ஏற்படுகிறது?

'அல்ஷைமர் நோய்' (Alzheimer's Disease) என்று அழைக்கப்படும் மூளை அழற்சி நோயைப் பற்றிப் புரிந்து கொள்வதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வயதானவர்களையே இந்த நோய் தாக்குகிறது. 85 வயது வரையில் உயிர் வாழ்வோரில் 25 சதவிகிதம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் கண்டவர்களின் மூளையிலுள்ள பல செல்கள் அழிந்து போகின்றன. இதனால் இவர்களுக்குத் தீவிரமான ஞாபக மறதி ஏற்படுகிறது.

மனித மூளையிலிருந்து எடுக்கப்பட்ட 'பீட்டா அமிலாய்ட்' (Beta Amyloid) எனப்படும் புரதப்பொருளை, நன்கு வளர்ச்சியடைந்த எலிகளின் மூளைக்குள் ஊசி மூலம் விஞ்ஞானிகள் செலுத்தினர். அல்ஷைமர் நோய் கண்டவர்களின் மூளையில் ஏற்படுகின்ற அதே மாதிரியான அழற்சி இந்த எலிகளின் மூளையிலும் ஏற்பட்டது.

இதேபோன்று, மனித மூளையிலிருந்து எடுக்கப்பட்ட 'சப்ஸ்டன்ஸ் பி' (Substance P) என்று அழைக்கப்படும் மற்றொரு புரதப் பொருளை இந்த எலிகளின் மூளைக்குள் ஊசியால் செலுத்திய போது, அந்த எலிகளின் மூளைச் செல்கள் அழிவது தடுக்கப்பட்டது.

மனிதர்களுக்கும் இந்தப் புரதங்களைக் கொடுத்துச் சோதனை செய்து பார்ப்பதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். எனினும் அல்ஷைமர் நோயைத் தடுக்க முடியும் அல்லது குறைந்தபட்சம் தாமதப்படுத்த முடியும் என்பது, எலிகளிடம் இப்போது நடத்தப்பட்டுள்ள சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரங்குகளுக்கும் இந்தப் புரதத்தைக் கொடுத்து இதுபோலச் சோதனை நடத்துவதில் விஞ்ஞானிகள் முனைந்து வருகின்றனர். குரங்குகளின் மூளை கிட்டத்தட்ட மனிதனின் மூளையைப் போன்று இருப்பதே இதற்குக் காரணமாகும்.

-அமெரிக்கத் தகவல் நிலையம்

இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு

தமிழகத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை தொடங்கி நூறு ஆண்டுகளாகின்றன. இத்தருணத்தில் நமது நாட்டின் கால்நடைகளின் முக்கியத்துவம், அவற்றின் மதிப்பு, நாட்டின் பொருளாதாரத்தில் அவற்றின் பங்கு பற்றியும், கால்நடை வளர்ப்பில் இன்றுள்ள முக்கிய பிரச்சினைகள் பற்றியும், அதற்குப் பரிகாரங்கள் பற்றியும் சிந்திப்பதும் பரிசீலனை செய்வதும் மிக அவசியமாகும்.

நமது நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானதாகும். மற்ற நாடுகளை விட, நமது நாட்டில் அதிகமாக மாடுகளும் எருமைகளும் உள்ளன. 19 கோடி மாடுகள், 7 கோடி எருமைகள், 9.5 கோடி வெள்ளாடுகள், 5 கோடி செம்மறியாடுகள், 20 கோடி கோழிகள், ஒரு கோடி பன்றிகள் மற்றும் 20 இலட்சம் குதிரைகளும், ஒட்டகங்களும் நமது நாட்டில் உள்ளன.

நமது நாட்டிலுள்ள கால்நடைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக ஒற்றை வரிசையில் நிறுத்தினால், பூமியைச் சுற்றி 11 சுற்று நிறுத்தலாம். அதேபோல் பூமியிலிருந்து சந்திரன் வரை நிறுத்தலாம். இந்த அளவிற்கு நமது நாட்டில் மிகுதியாக உள்ள கால்நடைச் செல்வங்களின் மதிப்பு 45 ஆயிரம் கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கால்நடைகளிலிருந்து ஆண்டிற்குச் சுமார் 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பலனும், வருவாயும் நமது நாட்டிற்குக் கிடைக்கிறன. இது நமது நாட்டின் மொத்த தேசிய வருவாயில் 10 சதவீதம் ஆகும்.

தற்சமயம் ஆண்டிற்கு 50 மில்லியன் டன் பால் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனுடைய மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். விவசாயப் பணிகள் மற்றும் வண்டிகள் மூலம் பாரம் இழுப்பது போன்ற பணிகளையும் நமது கால்நடைகள் செய்கின்றன. இந்த பணிகளின் மதிப்பு ஆண்டிற்கு 10 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. கால்நடைகளிலிருந்து கிடைக்கும் எருவின் மதிப்பு 10 ஆயிரம் கோடி ரூபாய், இறைச்சியின் மதிப்பு 6 ஆயிரம் கோடி ரூபாய். தோல், தோல் பொருட்களின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய். முட்டைகளின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாயாகும்.

உழவுத் தொழிலுக்கும் மற்றும் பாரம் இழுப்பதிலும் கால்நடைகள் முக்கியப் பணியாற்றுகின்றன. இந்தப் பணிகளில் 7.2 கோடி எருதுகள், 20 இலட்சம் பசுக்கள், 80 இலட்சம் எருமைகள், 20 இலட்சம் ஒட்டகங்கள் மற்றும் குதிரைகளும் ஆக மொத்தம் 8.4 கோடி கால்நடைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தக் கால்நடைகளின் மதிப்பு மட்டும் 15 ஆயிரம் கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

- டாக்டர் எஸ். சுப்பையா,
துணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத் துறை
மாவட்டக் கால்நடைப் பண்ணை
ஒரத்தநாடு.



நமது நாட்டில் 1.5 கோடி கட்டை வண்டிகள் உள்ளன. இவற்றின் மதிப்பு 4 ஆயிரம் கோடியாகும். இந்த மாட்டு வண்டிகளை நம்பி 2 கோடி பேர் வாழ்கிறார்கள். இந்த வண்டிகள் மூலம் ஓர் ஆண்டில் 25 ஆயிரம் மெட் ரிக் டன் கிலோ மீட்டர் பாரங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வதெல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரத்திலும், முக்கியத் தொழிலான விவசாயத்திலும், மக்களின் வாழ்விலும் கால்நடைகள் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், கால்நடை வளர்ப்பு மிகவும் இலாபகரமானது என்பதையும் அறியலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க, நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கக்கூடிய கால்நடை வளர்ப்புத் தொழிலில் பல பிரச்சினைகள் உள்ளன. பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை அறிந்து அவற்றிற்குத்தகுந்தபரிகாரம் காண்பதால் நமது கால்நடைகளிலிருந்து அதிகபட்ச வருவாய் பெறலாம். இன்றைய நிலையில் கால்நடை வளர்ப்பில் முக்கியப் பிரச்சினையாக விளங்குவது தீவனப் பற்றாக்குறையே.

உதாரணத்திற்கு, தமிழ்நாட்டின் நிலையை ஆராயலாம். 2.5 கோடி கால்நடைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்தக் கால்நடைகளிலிருந்து அதிகபட்ச பலனும் வருவாயும் பெற ஆண்டிற்கு 100 மில்லியன் டன் தரமான தீவனம் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், தற்சமயம் தமிழ்நாட்டில் 30 மில்லியன் டன் தீவனம் தான் கிடைக்கிறது. பெரும்பாலும் தரக் குறைவான வைக்கோல் மற்றும் தட்டு போன்ற தீவனமே அதிகமாக உள்ளது.

நமது கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனம், அளவிலும் தரத்திலும் மிகவும் குறைவாக உள்ளது. நமது நாட்டில் கால்நடை வளர்ப்பில் இதுவே ஒரு பெரிய பிரச்சினையாகும். தேசிய வேளாண்மைக் குழுவின் அளவுகோல் மற்றும் பரிந்துரையின்படி நமது நாட்டில் வேளாண்மைக்குப் பயன்படும் நிலத்தில் 7.34 சதவிகிதம் நிலப் பரப்பு கால்நடைத் தீவனத்திற்கு என்று ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் அதில் பாதி பரப்பளவில் கூட கால்நடைத் தீவனம் சாகுபடி செய்யப்படுவதில்லை. நமது அரசும், விவசாயிகளும், சம்பந்தப்பட்ட துறைகளும் போதுமான அளவு தரமான கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்வதற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து நடைமுறை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியது இன்றைய நிலையில் அவசரமும் அவசியமுமான செயலாகும்.

கால்நடைத் தீவனப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டமிடுகையில் இரண்டு விஷயங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒன்று மாறுபட்ட, மேம்படுத்தப்பட்ட அதிக உற்பத்தித் திறனுள்ள

கால்நடைகளுக்கு ஏற்ப புரதச் சத்து மிக்க தரமான பசுந் தீவனம் அதிகம் சாகுபடி செய்ய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நமது கால்நடைகளின் உற்பத்தித் திறன் எல்லா வகையிலும் குறைவாகவே இருந்தது. பால் உற்பத்தியைக் காட்டிலும் உழவுத் தொழில் பணிகளை மேற்கொள்ளவும், நில வளத்திற்கு வேண்டிய எருவிற்காகவும் தான் முன்பு மாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நமது கறவை மாடுகள் தினமும் சராசரியாக ஒன்றிலிருந்து ஒன்றரை லிட்டர் பால் மரபியல் திறன் (Genetical capacity) கொண்டதாக இருந்தது. ஆனால், இன்று ஒரு நாளைக்கு 10 லிட்டருக்கும் கூடுதலான பால் வழங்கும் கறவை மாடுகளை நாம் காண்கிறோம்.

மாராட்டிய மாநிலம் புனாவிற்கு அருகில் உருளிகாஞ்சலில் உள்ள (Baif) (பெய்ப்) நிறுவன பால் பண்ணையில் ஒரு ஹோல்ஸ்டன் பிரிஷியன் ஒரு நாளில் 62.5 லிட்டர் பால் வழங்கியது. இதுவே நமது நாட்டில் பால் உற்பத்தியில் முதல் பரிசு பெற்ற பசுவாகும்.

இந்த அளவிற்கு நமது கால்நடைகளின் உற்பத்தித் திறன் நாளுக்கு நாள் உயர்ந்து வரும் நிலையில் அதற்கு ஏற்றாற்போல் புரதச் சத்து மற்றும் வைட்டமின் 'ஏ' சத்து நிறைந்த பசுந் தீவனத்தை அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்கு வழங்குவது அவசியமாகும்.

பருவ மழை பெய்வது அடிக்கடி தவறி வறட்சி நிலை அதிகமாக நீடிப்பது, நாளுக்கு நாள் தரிசு நிலங்கள் எல்லாம் விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதும், கால்நடைகள் தீவன உற்பத்திக்குப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்த யதார்த்த நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் கால்நடைத் தீவன உற்பத்திக்குத் திட்டமிட வேண்டும்.

வழக்கமாக இதுவரை நாம் சாகுபடி செய்து வரும் கினியாபுல், கோ.1, எருமைப்புல், குதிரை மசால் போன்ற தீவனப் பயிர்களைச் சாகுபடி செய்வதிலும் இன்றைய வறட்சி நிலையாலும் போதுமான நீர்ப்பாசன வசதியில்லாமையாலும் சிரமமாக உள்ளது.



இன்றைய நிலையில் நீண்ட கால வறட்சியைத் தாக்குப்பிடிக்க கூடியதும், ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் பல ஆண்டுகள் வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுக்கக் கூடியதும், குறைந்த பட்சத் தண்ணீர் மற்றும் மழையைக் கொண்டு வளரக் கூடியதும், விவசாயத்திற்குப் பயன்படாத வளமற்ற நிலத்திலும் வளரக் கூடியதும் அதே சமயம் கால்நடைகளுக்குத்தீவனம் வழங்கக்கூடியது மாகிய மரங்களைச் சாகுபடி செய்வதே சரியான அணுகுமுறையாகும்.

இந்தக் குறிக்கோளுடன் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சுபாபுல் என்ற தீவன மரம் நமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று இந்த மரம் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் இந்த சுபாபுல் தேவையான அளவிற்கும் சாத்தியமான அளவிற்கும் சாகுபடி செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை. இன்னும் அதிக அளவில் சாகுபடி செய்து நமது கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

கிளிரிசிடியா என்ற மரத்தின் இலைகளையும் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம் என்று சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இதன் இலைகளில் 27 சதவிகிதம் புரதமும், 2 சதவிகிதம் கால்சியமும், மற்றும் வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தும் மிகுந்துள்ளது. இதனைக் கறவை மாடுகளுக்குத் தீவனமாகப் போடுவதால் பால் உற்பத்தி கணிசமாகக் கூடும். பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, தவிடு, கலப்புத் தீவனங்கள் செலவு குறைகிறது. ஒட்டுமொத்தமாகப் பால் உற்பத்தித் தொழிலில் இலாபம் கணிசமாகக் கூடுகிறது.

இந்த கிளிரிசிடியா மரம் நமது விவசாயிகளுக்குப் புதியதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்பே பசுந்தாள் உரத்திற்கென்று, நில வளத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மரம். நீண்ட வறட்சியைத் தாக்குப் பிடித்து உயிர் வாழக் கூடியது இந்த மரம்.

ஒரு முறை நட்டு வளர்த்து விட்டால் இதன் கிளைகளை வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் தழைத்து நீண்ட காலம் பலன் கொடுத்துக் கொண்டே இருக்கும். இதனைச் சாகுபடி செய்வதோ மிகவும் சுலபம். இதன் கிளைகளைப் பதியமாக நட்டு மரமாக்கலாம். விதையை நட்டும் வளர்க்கலாம்.

வேறு எந்த விவசாயப் பயிரோ, தீவனப் பயிரோ சாகுபடி செய்யப் பயன்படாத களர் நிலங்களிலும், வளமற்ற நிலங்களிலும் கிளிரிசிடியா வளரக் கூடியது. இதனையெல்லாம் கருத்தில் கொண்டு கால்நடைகளின் தீவனத்திற்குக் கிளிரிசிடியா மரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இதனை அதிக அளவில் சாகுபடி செய்யவும், தீவனமாகக் கால்நடைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் இந்த கிளிரிசிடியாவைத் தீவன மரமாக அங்கீரித்து இதனை விவசாயிகள் மத்தியில் பிரபலபடுத்தும்படி துறையில் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார். இவ் விஷயத்தில் தமிழ்நாடு இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றது.

இன்னமும் இது போன்று தீவனமாகப் பயன்படக்கூடிய இலைகளை வழங்கக் கூடிய பல மரங்களையும் கண்டுபிடித்துப் பயன்படுத்தலாம். இந்தப் புதிய அணுகுமுறையே அதாவது தீவன மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இன்றைய நிலையில் கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு சிறந்த வழியாகும்.

செந்தமிழ் இன்பம்

ஆசிரியர்: கவிஞர் பெ. வரதராசன்

வெளியீடு:

தேன்மொழிப் பதிப்பகம்
2-83 A கொழுந்தம்பட்டு அஞ்சல்,
சம்புவராயர் மாவட்டம் 606 706.

பக்கம்:88 விலை:ரூ.10/-

மரபுக் கவிதை மலர்களால் உருவாக்கப்பட்டுள்ள இலக்கிய மாலை இந்நூல். இதில் இடம் பெற்றுள்ள இருபது கவிதைகளும் இனிமையின் உறைவிடமாகத் திகழ்கின்றன. செந்தமிழின் பெருமை குறித்துப் பாடப் பெற்றுள்ள கவிதைகள் நமது சித்தத்தை மகிழ்விக்கின்றன.

சிலம்பு தரும் பத்தினிகள், புகழ் பெற்றாள் மருதி ஆகிய கவிதைகளில் நயம் கொழிக்கிறது. நல்ல தமிழ் கொலுவோச்சுகிறது. மொத்தத்தில் செந்தமிழ் இன்பம் என்னும் இக்கவிதை நூல் நமது உள்ளத்திற்கு இன்பம் அளிக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

புதிய அறம்கூற வந்தோர்

ஆசிரியர்: டாக்டர் மா.பா. குருசாமி

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்
மதுரை-20

பக்கம்:100 விலை:ரூ.10/-

வாழ்க்கை வரலாறுகள், வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் வாழ்க்கைச் சுவடுகளை நமக்குக் காட்டுவன. தன்னம்பிக்கை, விடா முயற்சி, உழைப்பு முதலான தன்மைகளோடு நாட்டுப்பற்று, தியாகம், வீரம் முதலானவற்றையும் எடுத்துக்காட்டுவன. அவை படிப்போருக்குப் படிப்பினை மட்டுமன்று, படிப்படியாக உயரவும் வழிகாட்டும். அந்த வகையில் இந்த நூலில் 14 தேசத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, திலகர், வ.உ.சி., பாரதியார் இப்படிப் பல தலைவர்கள் இந்த நூலிலே பேசப்படுகிறார்கள்.

—'பூங்கொடி'

நாடகச்சோலை

ஆசிரியர்: மா. அய்யாசாமி

வெளியிட்டோர்:

மங்கை இல்லம்
75, என்.ஜி.ஓ. காலனி
திருவள்ளூர்-602 001.
செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்

பக்கம்:140 விலை:ரூ.12/-

நூல்நயம்

இந்தியத் திருநாட்டின் பண்பாட்டையும், பெருமைகளையும் விளக்கவல்ல வீரவரலாறுகள் சிலவற்றை, சரித்திரங்களில் இருந்தும், இதிகாசப் புராணங்களில் இருந்தும் எடுத்து நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். இளம் மாணவமணிகள் தெள்ளெனப் புரிந்து கொள்ளும் வகையில் ஆக்கப்பட்டுள்ள மிகச் சிறந்த நாடக நூல்.

ஒரே வானம் ஒரே நிலவு

ஆசிரியர்: பி.வி. கிரி

வெளியீடு:

திருமலைப் பதிப்பகம்,
பிளாக். N-385,
அறிஞர் அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:112 விலை:ரூ.14/-

குழந்தைகளுக்காக எழுதப்பட்ட "ஒரே வானம் ஒரே நிலவு" என்னும் நூல் 12 சிறுகதைகளைக் கொண்டதாக உள்ளது. இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு கதையும், வெவ்வேறு நீதி போதனையை நமக்குப் போதிக்கிறது. தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் வண்ணம் ஆசிரியர் கதைகளை எழுதியிருப்பது இந்நூலின் ஒரு தனிச் சிறப்பாகும்.

அட்டைப்படம் கண்ணைக் கவர்கிறது. ஒவ்வொரு கதைக்கும் ஒவ்வொரு படமும், கதை முடிவில் கையிலேந்திய தீபமும் அமைந்திருப்பது நூலுக்கு எழிலூட்டுகிறது. பள்ளி மாணவர்க்கேற்ற நூல்.

—தே. மணி

'ஆனந்த வடிவு'

ஆசிரியர்: சு. போசு

வெளியீடு:

பதிப்பாளர். துரை இராமு
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம்,
சென்னை-600 045.

பக்கம்:42 விலை:ரூ.5/-

'ஆனந்த தீர்த்தம்' என்னும் கிராமத்தில் நடைபெறும் கதைதான் ஆனந்த வடிவு.

ஆசிரியர் தனது வர்ணனைகளைக் குறைத்துக் கொண்டு, சொல்வதை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்லியிருந்தால் கதையின் வேகம் சற்றுக் கூடியிருக்கும். பொதுவாக, படிக்கலாம்.

- குமார்.

இயற்கைக் கோள்களும் செயற்கைக் கோள்களும்

ஆசிரியர்: மனோகரன்

வெளியீடு:

மயிலவன் பதிப்பகம்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.12.50/-

விண்வெளி விந்தை மிக்கது. விஞ்ஞான வளர்ச்சியின் மூலம், வியப்பான செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அத்தகைய செய்திகளைத் தொகுத்துத் தருகிறது இந்நூல்.

நட்சத்திரங்கள், சூரியன், கோள்கள், பூமி, சந்திரன் ஆகியவை குறித்தும், செயற்கைக் கோள்கள் குறித்தும் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள நூல்.

அழிவுற்ற வாழ்வு

ஆசிரியர்: ஜெ.சி. குமரப்பா

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை.

பக்கம்:150 விலை:ரூ.16/-

கதர், கிராமத் தொழில்களின் ஆக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் தொண்டாற்றிய இந்நூலாசிரியரின் இந்த நூலுக்கு அண்ணல் காந்தியடிகள் போற்றத்தக்க வகையில் முன்னுரை வழங்கியுள்ளார்.

டாக்டர் குமரப்பா அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் காந்திய இலக்கியச் சங்கத்தினர் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

இந்நூல் இரண்டு பாகமாக உள்ளது. முதல் பாகம் தனிமனித வாழ்க்கையையும், இரண்டாம் பாகம் மக்களின் கூட்டு வாழ்க்கையையும் ஆராய்கிறது.

குழந்தை வளர்ப்பு

ஆசிரியர்: டாக்டர் திருஞானம்

வெளியீடு:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:415 விலை:ரூ.50/-

ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய அருமையான குழந்தை வளர்ப்பு நூல் இது. குழந்தை பிறப்பதற்கு முன்பிருந்தே செய்ய வேண்டியவை பற்றியும், பிறந்த பின் பேணி வளர்க்கும் முறை பற்றியும், சத்துணவு, வைட்டமின்கள், குழந்தைக்கு வரும் நோய்கள் பற்றியும், அவர்தம் மனோபாவங்கள் பற்றியும் தெளிவாக எழுதப்பட்ட நூல்.

—குமாரன்

சென்னைப் பல்கலைக்கழகம் அன்றும் இன்றும்

பேராசிரியர் டாக்டர் ஜே. சாதிக்
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்

1857-ஆம் ஆண்டின் இந்திய மேலவைச் சட்டம் வாயிலாக பம்பாய், கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப் பட்டன. இந்தச் சட்டத்திற்கு அடிப்படையாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் 1854-ஆம் ஆண்டு அறிக்கை அமைந்தது. தொடக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் நன்கு வளர்ந்த கல்லூரிகள் இணைக்கப்பட்ட நிலையில் தேர்வு நடத்தும் நிறுவனமாக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1923-ஆம் ஆண்டுச் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி ஆய்வு புரிதல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பல்கலைக்கழகமாக உருவெடுத்தது. மேலும் ஆய்வு நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்கும் நிலையினையும் எய்தியது.



தென்னிந்தியா முழுவதையும் தனது கல்வி ஆளுகைக்குள் கொண்டிருந்த சென்னைப் பல்கலைக்கழகம் தென்னகத்தில் புதிய பல்கலைக் கழகங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்கியது. 1916-இல் மைசூர்ப்பல்கலைக்கழகம், 1918-இல் உசுமானியாப் பல்கலைக்கழகம், 1926-இல் ஆந்திரப் பல்கலைக் கழகம், 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1937-இல் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் (இது 1957-இல் கேரளப் பல்கலைக் கழகமாயிற்று), 1954-இல் திருவேங்கடவன் பல்கலைக்கழகம், 1966-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1971-இல் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஆகியன தோன்றின. அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் (1978), தமிழ்ப் பல்கலைக்கழகம், (1981), பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் (1982) ஆகியன அண்மையில் தோன்றிய பல்கலைக்கழகங்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் (திருத்தச்) சட்டம் 1966-இன் படி, திருச்சி, கோவை நகர்களில் இப் பல்கலைக்கழகத்தின் பட்டமேற் படிப்பு விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை 1976-77-இல் தன்னாட்சி மையங்களாக வளர்ச்சியுற்றுப் பின் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களாக 1982-இல் வளர்ச்சியுற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தலைமையகம் சேப்பாக்கத்தில் 1879-இல் அமைந்தது. அப்போது பேரவைக் கட்டடம் ஒன்று அழகுறக் கட்டப்பட்டது. இக்கட்டடத்தில் பல்கலைக்கழக நூலகம், அலுவலகங்கள், ஆராய்ச்சித்துறைகள் ஆகியன இடம் பெற்று நீண்ட காலம் செயல்பட்டு வந்தன. நூறு வயதைக் கடந்த இந்தக் கட்டடம் பல்கலைக்கழகத்தின் மையப்பகுதியில் அமைந்த முதல் கட்டடம் மட்டுமன்று; பண்டைக் கட்டடக் கலையின் பெருமையினைப் பறைசாற்றும் கட்டடம் மட்டுமன்று; இந்திய நவீனக் கல்வியின் தோற்றுவாயைக் குறிக்கும் வரலாற்றுச் நினைவுச் சின்னமும் ஆகும். இக் கட்டடத்தைப் புதுப்பித்து அறிவியல் அருங்காட்சியகம் ஒன்றை விரைவில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொன்மையான துறைகள் இந்திய வரலாற்றுத் துறையும் பொருளியல் துறையும் ஆகும். பிற துறைகள் அவ்வப்போது தோற்றுவிக்கப்பட்டு இப்போது 68 துறைகள் சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி ஆகிய நான்கு வளாகங்களில் செயல்பட்டு வருகின்றன. பயிற்றுவித்தல், ஆய்வு புரிதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன உலகத்தின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்பவும், வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்பவும் பல்கலைக்கழகத் துறைகளும் பாடப் பிரிவுகளும் பலவாறாகப் பகுக்கப் பட்டுச் சிறந்த முறையில் உயர் கல்விப்பணி பல்கலைக்கழகத்தில் ஆற்றப்பட்டு வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் தனது தரமான கல்விப்பணியினைப் பொதுமக்கள் நலன் கருதி மேலும் பரவலாக்கியுள்ளது. அஞ்சல்வழிக் கல்வி, பணிநோக்குடைய சார்புத் தொழிற்கல்வி ஆகியன இவ்வகையின. 1981-இல் தொடங்கப்பெற்ற அஞ்சல்வழிக் கல்வி நிறுவனம் 1981-82-இல் 28,000 மாணவர்களைக் கொண்டிருந்தது. ஆண்டுக்காண்டு மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டில் 68,000 ஆடவரும், 45,000 மகளிரும் அஞ்சல் வழியாகப் பயின்று வருகின்றனர்.

சென்னைப் பல்கலைக்கழகம் 113 இணைப்புக் கல்லூரிகளையும் 7 ஏற்புக் கல்லூரிகளையும் கொண்டுள்ளது.

பொற்காலம்



மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்

கலைகளிலும் செல்வ நிலைகளிலும் உயர்ந்திருந்த காலத்தைப் பொற்காலம் என்பது உலக வழக்கு. அது உருவகமாக உரைக்கப்பட்ட பெயர்; உண்மையிலேயே, பொன்னையே மிகுதியாகப் பயன்படுத்திய காலம் தமிழர்க்கன்றி வேறு எவர்க்கும் இருந்ததில்லை. அந்தப் 'பொற்காலத்தை'ப் பற்றிய அரிய செய்திகளை இக்கட்டுரை வழங்குகிறது.

தமிழர் வரலாற்றுக் காலப் பகுதிகளுள், பழங்கற்காலம், புதுக்கற்காலம் என்னும் இரண்டும் அவ்வக் காலத்தோடு முடிந்து போனவையாகும். பழங்கற்காலக் கருவிகள் புதுக்கற் காலத்திலும், புதுக்கற்காலக் கருவிகள் பெரும்பான்மையாகப் பொற்காலத்திலும் வழங்கியிரா. ஆயின், பொற்காலம் முதலிய பிற்காலக் கருவிகள் உலகுள்ள காலமெல்லாம் வழங்கும்.

பொற்காலம் செம்புக் காலம் உறைக்காலம் இரும்புக் காலம் எனப் பிரித்ததெல்லாம், பெரும்பாலும் அவற்றின் பயன்பாட்டுத் தொடக்கம் பற்றியேயன்றி முடிவு பற்றியன்று. ஆயினும், முடிவு குறிக்கப்பட்டிருப்பது, அவ்வக்காலத்து மாழை பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தின் முடிவைக் குறித்ததற்கே என அறிக.

பொன் அணிகலத்திற்கும், செம்பும் உறையும் (வெண்கலமும்), குடவமும் (பித்தளையும்), நீர்க்கலத்திற்கும், இரும்பு எல்லாக் கருவிகட்கும், என்றும் பயன்படுத்தப்படும். இவற்றுள், பொன் மிகச் சிற்றளவாகவும் இரும்பு மிகப் பேரளவாகவும் இருக்கும்.

பொற்காலம் என ஒன்று தமிழகம் தவிர வேறெந்த நாட்டிற்கும் இருந்ததில்லை. பிற நாடுகளிலெல்லாம் பொற்காலம் என்பது, அணியியற் பொருளில், ஒழுக்கத்திலும் செல்வத்திலும் கல்வியிலும் தலைசிறந்த காலத்தைக் (Golden Age) குறிக்குமேயன்றி, செஞ்சொற்பொருளில் பொற்கருவிகளே வழங்கிய காலமொன்றைக் குறிக்காது. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைத் தனிச் சிறப்புகளுள் பொற்காலமும் ஒன்றாகும். பொலிவுற்றது பொன்னெனப்பட்டது. பொல்-பொலி-பொலிவு. பொல்-பொற்பு. பொல்லுதல்-அழகாதல், பொலிதல். பொற்ற-அழகிய, சிறந்த, பொன்னாலான, பொல்-பொன், பொல்- பொலம்-பொலன்.

குமரிநாட்டிற் பொற்காலமிருந்தமைக்குச் சான்றுகளாவன:

(1) பொன்னின் பெயர் மாழைப்பொதுப் பெயரானமை.

தமிழரால் முதன் முதற் கண்டுபிடிக்கப்பட்ட மாழை (Metal) பொன்னாதலால், அதன் பெயரே பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிறவற்றிற்கும் பொதுப்பெயராயிற்று.

எடுத்துக்காட்டு: செம்பொன்-செம்பு. வெண் பொன்-வெள்ளி.

கரும்பொன்-இரும்பு.

'தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று'. என்னுங் குறளடியில் *(931)*, பொன் என்னுஞ் சொல் அடையின்றியும் இரும்பைக் குறித்தது. நாக(இய) மணல் பொன்வித்து எனப்படும்.

(2) கடைக்கழகக் காலத்திலும் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன் மிகுதியாக வழங்கினமை.

அக்காலத்துக் காசெல்லாம் பொன்னாயிருந்தமையால், காசு பொன் என்றும், பணமுடிப்பு பொற்கிழி என்றும், பணத்தண்டம் பொன் தண்டம் என்றும், சொல்லப்பட்டன. அரசர் தம்மைப் பாடிய புலவர்க்கு இலக்கக்கணக்கிற் பொற்காசை வாரி வழங்கினர். கடியலூர் உருத்திரங் கண்ணனார் கரிகால் வளவனைப் பாடிப் பதினாறிலக்கம் பொன் பெற்றார். காப்பியாற்றுக் காப்பியனார் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைப்பாடி, நாற்பதிலக்கம் பொன்னும் அவன் ஆண்டதிற் பாகமும் பெற்றார். காக்கைபாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பெற்றார். கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடி ஓரிலக்கம் பொற்காசும் ஒரு நாடும் பெற்றார். அரிசில்கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையைப் பாடி, தொண்ணிலக்கம் (ஒன்பது நூறாயிரம்) பொற்காசும் அரியணைக் கீடாக அமைச்சுரிமையும் பெற்றார். பெருங்குன்றூர்க்கிழார் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடி, முப்பத்தீராயிரம் பொற்காசும் பல்வகைப் பரிசிலும் பெற்றார்.

மாதவி போல் தன் ஆடல்பாடலை அரங்கேற்றிய நாடகக் கணிகைய ரெல்லாரும், ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பெற்றனர். அரசரை

யடுத்துப் பாடிய பாணரெல்லாரும் பொற்றாமரை யும், பாடினியரெல்லாரும் பொன்னரிமாலையும், பரிசாகப் பெற்றனர்.

பொன் கிடைக்கும் வகைகள், தூள் (Dust), மணல் (Grain), தகணை (Nugget), நரம்பு (Lode or Vein), கலப்பு (Mixture) என ஐந்து.

1850-இல் ஆத்திரேலியப் பொன் கண்டு பிடிக்கப்பட்டபின், பொற்பித்தர் பெருந்திரளாகப் போய் அங்குச் சரிந்தனர். பலவிடத்திற் பெருந் தகணைகள் நிலமட்டத்திற்கு ஒரு சில விரலங் கட்குக் (Inches) கீழேயே கண்டெடுக்கப்பட்டன. 'அரம்ப மலை மணல்' தகணை ('Sierra Sands' nugget)1,117 விரனையும் (oz), 'ஆத்தம் பெரு மாட்டி' (Lady Hotham) 1,177 விரனையும், 'நல்வரவு அயலார்' தகணை (Welcome Stranger Nugget), 2,000 விரனைக்கு மேலும், 'ஆலதர்மன் தகணை' (Holtermann Nugget) 200 துலத்திற்கு (lb.) மேலும் எடை நின்றன.

குமரிக்கண்டம் ஆத்திரேலியாவோடும் தென் ஆப்பிரிக்காவோடும் இணைந்திருந்ததனால், அந் நடுவிடத்திலும் பொற்றகணைகள் எளிதாய்க் கிடைத்திருத்தல் வேண்டும்.

முழுகிப் போன குமரிக் கண்டத்தைச் சேர்ந்த தமிழ் நிலம் முழுவதும் பழம் பாண்டி நாடாகும். சோழ நாட்டின் வடபகுதி தொண்டை மண்டலம் என்று பிரிந்தது போன்றே, சேரநாட்டின் வடபகுதியும் கொங்கு மண்டலம் எனப் பிரிந்தது. அக்கொங்கும் பின்னர்க் குடகொங்கு குண கொங்கு என இருபாற்பட்டது. கொங்கு நாட்டி லும் சோழ நாட்டிலும் ஓடும் பேராறு காவேரி. அக்காவேரி பொன் கலந்த மணலைக் கொழித்த தனாற் பொன்னியெனப்பட்டது.

சோழ நாட்டில் மிகுதியாகப் பொன் கிடைத்த தனால், முதற் பராந்தகன், இரண்டாங் குலோத் துங்கன் முதலிய சோழவேந்தர் பலர் தில்லைச் சிற்றம்பலம் பொன் வேய்ந்தனர். இரண்டாம் இராசராசன், சிற்றம்பலம் மட்டுமின்றிப் பேரம் பலம் மாடமாளிகை கூடகோபுரம் முதலிய பலவற்றையும், பொன்னா லணிவித்துத் தில்லை யைப் பொன்வண்ண மாக்கினான்.

'சிற்றம் பலமுந் திருப்பெரும்பே ரம்பலமும்
மற்றும் பலபல மண்டபமும்-சுற்றிய
மாளிகையும் பீடிகையும் மாடமுங் கோபுரமும்
சூளிகையு மத்தெருவுந் தோரணமும்-ஆளுடையான்
கோயில் திருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயில் திருச்சுற்று மாளிகையும்-தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னிற் கடல்களுள் சூழ்குவித்த சென்னி'

- இராசராச தேவருலா.

அரண்மனைகளில் அரசன் தங்கும் தனி மாளிகையும் பொன்னால் வேயப்பட்டிருந்தது சுந்தரச் சோழனைப் 'பொன்மாளிகைத் துஞ்சிய தேவர்' என்று கல்வெட்டுக் கூறுதல் காண்க.

> யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
> வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
> பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை
> உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

> தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
> பரவும்வகை செய்தல் வேண்டும்

> யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
> இனிதாவ தெங்கும் காணோம்.

கொங்கு நாட்டிற் கிடைத்த பொன் கொங்குப் பொன் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது. இன்றும் சுரங்கத்திற் பொன்னெடுக்கும் குவளாலபுரம் (கோலார்) பண்டைக் கொங்குநாட்டைச் சேர்ந்ததே.

'கொழுங்கொடி யறுகையுங் குவளையுங் கலந்து
விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டிப்
பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரோடு நின்றோர் ஏர்மங் கலமும்'

என்னும் சிலப்பதிகார நாடுகாண் காதை யடிகட்கு (132-5)

'செந்நெற் கதிரோடே அறுகையும் குவளையை யும் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்டிப் பாரை இரண்டாகப் பிளப்பாரைப் போலப் போற்றுவார் தொழப் பொன்னேர் பூட்டி நின்றோர் ஏரைப் பாடும் ஏர்மங்கலப் பாட்டு மென்க'. என்று அடியார்க்கு நல்லார் உரை வரைந்துள்ளார்.

உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னி பொற் றேரை யுடையவனாயிருந்தான்.

'பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி
மாக்கடல் நிவந்ததெழுதருஞ்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ'

(புறம்.4)

என்று பரணர் பாடுதல் காண்க. பண்டைத் தமிழரசரின் தேர், குதிரை, யானைகள் பொற் படைகளால் அணிசெய்யப் பெற்றிருந்தன.

'மகிழா தீத்த இழையணி நெடுங்தேர்'

- (புறம். 123:4)

'பாடிப் பெற்ற பொன்னணி யானை'

புறம். 177:3

'வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே:'

(புறம்.116)

அரசருடைய போர் முரசும் அதுபோன்ற பிற சின்னங்களும் பொன்னால் அணி செய்யப் பட்டிருந்தன.

'பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுறுகெழு முரசம்'

(புறம்.50).

கி.மு. 11-ஆம் நூற்றாண்டிற்கும் 10-ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் யூதேயா நாட்டை யாண்ட சாலோமோன் அரசன் (1015-975), ஒப்பீர் (Ophir) என்னும் இந்தியத் துறைமுகத் தினின்று வருவித்த பொருள்களுள் பொன்னும் ஒன்று. அத்துறைநகர், வேம்பாய் எனப்படும் பம்பாய் மாநகர்க்கு வடக்கே 37 கல் தொலை விலிருந்த, உப்பரா அல்லது உப்பரகா என்று ஆராய்ச்சியாளராற் கருதப்படுகின்றது. கால்டு வெலார் அது ஒருகால் பாண்டி நாட்டின் கீழ்க் கரையிலுள்ள உவரியாயிருக்கலாமென்று கருதி னர். எதுவாயினும், ஒப்பீர் ஓர் இந்தியத் துறைநகர் என்பது உறுதி. சாலோமோன் காலத்திற் சேரநாடு குச்சரம் (குசராத்து) வரை பரவியிருந்தது.

தொன்று தொட்டுப் பொன் இந்தியாவினின்று மேனாடுகட்கு ஏராளமாக ஏற்றுமதியாகி வந்த தனால், சேக்கசுப்பியர் (Shakspeare) தம் 'பன்னி ரெண்டாம் இரவு' (Twelth Night) என்னும் நாடகத்தில், பொன்னை 'இந்திய மாழை' (Metal of India)என்றார். (2:5).

(4) குமரிநாட்டில் பொன் கிடைத்தமை பற்றிய நெட்டிமையார் கூற்று:

'...தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'.

(புறம்.9).

இதன் பழையவுரை: 'தம்முடைய கோவாகிய சிவந்த நீர்மையையுடைய பசிய பொன்னைக் கூத்தர்க்கு வழங்கிய முந்நீர்க் கடற்றெய்வத்திற் கெடுத்த விழாவினையுடைய நெடியோனா லுளதாக்கப்பட்ட நல்ல நீரையுடைய பஃறுளி யென்னு மாற்றின் மணலினும் பல காலம்.'

குறிஞ்சியிலும் முல்லையிலும் பெரும்பாலும் பாலும் சூட்டிறைச்சியுமே உண்டதனால், அவ் வுணவிற்கு உவர்ப்புப் பொருள் தேவையில்லா திருந்தது. முல்லை நிலத்தில், தினை வரகு சாமை முதலியவற்றின் அரிசியைப் பாலிலுஞ் சமைத்திருக்கலாம். மருத நிலத்திற்கு வந்தபின்பே சிறந்த முறையில் சமையல் தொடங்கியதால், பொங்கல் புழுங்கல் அவியல் சுண்டல் துவட்டல் புரட்டல் காய்ச்சல் பொரியல் முதலிய வினை களை நீரிற் செய்தற்கு, உவர்ப்புச் சரக்குச் சேர்க்க வேண்டியதாயிற்று. உப்பு விளைக்கும் உவர்நீர்க் கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தை அடுக்குமுன், உமணையே பயன்படுத்தியிருத்தல் வேண்டும். உமண் என்பது உவர்மண். அதை முதலில் விற்றவர், பின்பு நெய்தல் நிலத்து உப்பளத்தில் உப்பு விளைத்த போதும், உமணர் எனப்பட்டனர்.

'களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்'

(நாலடி. 133)

பொரியல் முதலில் ஆவின் நெய்யிலேயே செய்யப்பட்டது. அதனாலேயே, பின்னர் எள்ளி லிருந் தெடுக்கப்பட்ட நெய்ப் பொருள் எண்ணெய் (எள்நெய்) எனப் பெயர் பெற்றது. எள்ளின் நெய்யே முதற்காலத்திற் பெருவழக்காக வழங்கின தினால், பிற்காலத்தில், ஆவின் நெய் தவிர மற்றெல்லா நெய் வகைகட்கும் எண்ணெய் என் பது பொதுப் பெயராயிற்று.

சமையற்கு வேண்டிய நெருப்பு, நாள்தொறும் ஞெலிகோலால் விரைந்து கடையப்பட்டது. அது வீடுதொறும் இறவாணத்திற் செருகப்பட்டிருந்தது. குறிஞ்சி வாணரும் முல்லை வாணரும் வேட்டைக் காரரும், அதை என்றுங் கையில் வைத்திருந்தனர்.

'இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போல'

(புறம். 315:4).

'கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து'

(புறம்.247:2).

'புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன் போல'

(புறம். 331:4).

'செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதன னெழுவேற் கைகவித் திரீஇ

மதுவிலக்குப் பிரச்சாரம்



★ மதுவிலக்குத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றுவதும் - உரிய முறையில் பிரச்சாரம் செய்வதும் தேவையாகும். மதுவினால் ஏற்படக்கூடிய கேடுகளை விளக்கவும், சம்பந்தப்பட்ட மக்களுடன் தொடர்பு கொண்டு நல்லமுறையில் அறிவுரைகளைக் கூறவும், மதுவிலக்குச் சட்ட அமலைத் திறம்பட நடத்தவும் ஏற்படுத்தப்படவிருக்கும் 'கண்காணிப்புப்' படையில் சேர்ந்து தொண்டாற்ற முன்வரவேண்டுமென அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்'

(புறம். 150:7-13)

இவை பிற்காலத்துச் செய்யுளாயினும், முற்காலத்து நிலைமையையுங் குறிக்கும்.

நாகரிகத்தின் முளை குறிஞ்சி நிலத்திலேயே தோன்றிய தேனும், அது முழுவளர்ச்சி யடைந்தது மருதநிலத்து நகர்ப்பாங்கே யென்றும், குறிஞ்சி நாகரிகமும் முல்லை நாகரிகமும் மருத நாகரிகத்தின் கீழ்நிலைகளே யென்றும், நெய்தல் நிலை வணிக வளர்ச்சிக்கும் செல்வப் பெருக்கிற்குமே ஏதுவென்றும், பாலைநிலை நாகரிக வளர்ச்சியின்றிப் பண்பாட்டிழிபையே காட்டுமென்றும், அறிதல் வேண்டும்.

மருதநிலக் குமுகாய வாழ்வில், ஒருமனை மணமும் இறப்பு வரை பிரியா இல்வாழ்வும் பெரும்பான்மையாயின. ஒருவனால் மணஞ் செய்யப் பட்டமைக்கு அறிகுறியாகப் பெண்ணின் கழுத்திற் பொற்றாலி கட்டப்பட்டது. பன்மனை மணமும் தீர்வைமுறையும் தொடர்ந்தனவேனும், தொல்லை மிகுதியும் பண்பாட்டிழிபும் பற்றி அவை தாழ்வாகக் கருதப்பட்டன. ஊர்த்தலைவனும் அவனுக்கு மேற்பட்ட அரசரும், இன்பச் சிறப்பு நோக்கிப் பன்மனை மணத்தையே கடைப்பிடித்தாரேனும், அதன் இழிவை அவரது தெய்வத் தன்மையான அதிகாரம் முற்றிலும் மறைத்து விட்டது. மருத நிலத்து நிலையான குடியிருப்பும் பயிர்த்தொழிலிற் குடும்பக் கூட்டுழைப்பும், கணவன் மனைவியர் காதலை வளர்த்து மணவாழ்க்கையை நீடிக்கச் செய்தன. உயிருக்கின்றியமையாத உணவுப் பொருள்கள் ஏராளமாகக் கிடைத்ததனால், வயிறாரவுண்டு இன்புறவும், உழைக்க இயலாதவர்க்குதவி அறம் வளர்க்கவும், ஏதுவாயிற்று.

பொற்காலத்தில் அசையெழுத்துத் தோன்றியிருத்தல் வேண்டும். அசையெழுத்தாவது (Syllabary), உயிர்மெய்யை உயிரும் மெய்யுமாகப் பிரிக்காமல் தனியெழுத்தாக எழுதுவது.

பழங் கற்காலத்தில் பத்து வரையும், புதுக் கற்காலத்தில் நூறு வரையும், பொற்காலத்தில் ஆயிரம்வரையும், குமரி மாந்தர் எண்ணத் தெரிந்திருக்கலாம்.

டாக்டர் அம்பேத்கர் பெயரில் விருது

டாக்டர் அம்பேத்கர் பெயரில் தேசிய விருது ஒன்றை வழங்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. சமூக நல்லிணக்கத்துக்காகச் சிறந்த சேவை புரியும் தனிநபர் அல்லது நிறுவனத்துக்கு ரூ.10 இலட்சம் கொண்ட இந்த விருது ஆண்டு தோறும் வழங்கப்படும். இந்த விருது மத்திய சமூக நலத்துறையால் ஏற்படுத்தப்படுகிறது.

டெல்லியில் நடந்த டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழாக் குழுவின் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய மத்திய சமூக நல அமைச்சர் திரு. சீத்தாராம் கேசரி, மேற்கொண்ட விருதை அமைக்கும் முயற்சிகள் நடந்து வருவதாகக் கூறினார்.

டாக்டர் அம்பேத்கர் நினைவைப் போற்றும் வகையில், ஏழு பல்கலைக் கழகங்களில் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்படும். டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல்களையும், கட்டுரைகளையும் இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பது, உயர்நிலை ஆய்வுப் படிப்புகளை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களும் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பைக் குறைத்திட...

பிறந்த சில மாதங்களிலேயே இறந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தற்போது ஆயிரத்துக்கு 67 என்ற விகிதத்தில் உள்ளது. இதை இன்னும் பத்து ஆண்டுக்காலத்தில் 50-க்கும் கீழாகக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நோய்த்தடுப்பு திட்டங்கள், குழந்தைகள் குறைந்த வயதில் இறப்பதை ஓரளவு தடுத்து நிறுத்தி உள்ளன. இந்த முயற்சிகளின் காரணமாக சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான குழந்தைகள் உயிர் பிழைத்துள்ளன.

தமிழ்நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் காரணமாக குழந்தைகள் இறப்பு விகித இலக்கினைத் தமிழகம் மிஞ்சிவிடும் எனத் தமிழகச் சுகாதாரத்துறைச் செயலர் திரு. கே.இன்பசாகரன், அண்மையில் இந்தியக் குழந்தை மருத்துவச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது தெரிவித்தார்.

இறந்தோரை அடையாளம் காணும் ஒரு புதிய முறை

தடய அறிவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் ப. சந்திரசேகரன், இறந்தோரை அடையாளம் காணுமுகமாக ஒரு புதிய முறையை வகுத்துள்ளார். முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு எழுந்த சில விசித்திரமான சூழ்நிலையில், இந்தப் புதிய முறையை வகுப்பதற்கான தேவை எழுந்தது.

குற்றப் புலனாய்வு முறையில் இறந்தோரை அடையாளம் காணுதல் அடிப்படை தேவை மட்டுமல்ல; ஒரு முக்கியமான வழிமுறையும் கூட ஆகும். எல்லாவகையான அடையாள முறைகளும் இறப்பிற்கு முன் உள்ள ஆவண மற்றும் பிற குறிப்புகளை இறப்பிற்குப் பின் கிடைக்கும் மீதங்களுடன் ஒப்பிட்டு வழி காணும் வகையிலேயே அமைந்துள்ளன.

முக அடையாளங்கள் முழுமையாக இருந்தால், உற்றார் உறவினர் மற்றும் நண்பரைக் காணவிட்டு அடையாளம் காணலாம். பார்வை மூலம் அடையாளம் காணுதலும் ஒரு அறிவியல் வழிமுறையே ஆகும். உறவினரது மனதில் பதிந்துள்ள முக அடையாளங்களுடன், மரணமுற்றோரின் முக அடையாளங்களை முழுமையாக மனதில் ஒப்பிட்டு அடையாளம் காணப்படுகிறது. இம்முறையில் அடையாளம் காணுவோரின் மூளை ஒரு கணிப்பொறி போல இயங்குகிறது. இந்த முறையிலும் ஒரு சிக்கல் உள்ளது. அடையாளம் காணுவோர் இறந்தவரை முன்னமே கண்டிராது வெறும் நிழற்படத்தை மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம். அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் மட்டும் கண்டிருந்தால் இம்முறை சிரமமாக ஆகிவிடுகிறது.

சில வழக்குகளில் இறந்தவர் பல பெயர்களில் உளவிட நேர்ந்திருக்கும்; திரு. ராஜீவ் காந்தி வழக்கில் சம்பந்தப்பட்டவர் போல; இவர்களை அடையாளம் காண நெருங்கிய உறவினர் இல்லாது போகலாம். நமக்குக் கிடைத்தவரை வெறும் சில நிழற்படங்களே ஆகலாம்.

அவையும் எப்போதோ ஒரு சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்டவையாக இருக்கலாம். இவ்வகையாக நிழற்படங்களும் குறிப்பிட்ட நபரைத் தனியாக ஒரு குறிப்பிட்ட கோணத்திலோ அல்லது ஒரு கும்பலிலோ இருக்கும்படி எடுத்திருக்கப்பட்டிருக்கலாம். இவ்வகைச் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபரைப் புகைப்படத்தில் மட்டும் கண்டிருப்பவர் இறந்தவரது உடலை அடையாளம் கண்டிடச் சிரமப்பட நேரிடும்.

பேராசிரியர் டாக்டர் சந்திரசேகரனின் புதிய அடையாளம் காணும் முறை இவ்வகை சந்தர்ப்பங்களில் மிகவும் உதவிகரமானதாக இருக்கும். இம்முறையில் இறந்தவரது தலை மாதிரியை இறந்த உடலிலிருந்து வார்ப்படம் போல தயாரித்து, அன்னாரது புகைப்படத்துடன் மின்னனு ஒப்பிடு கருவியில் ஒப்பிட வழி வகுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் தலையின் மாதிரியை, புகைப்படத்தில் உள்ள கோணத்திலேயே நிறுத்தி ஒப்பிடுவதற்கு வகை உள்ளது. இரண்டு மின்னனுப் புகைப்படக் கருவிகள், புகைப்படக் கலவைமானி மற்றும் நுண்கருவி முதலியவை உபயோகிக்கப்படுகின்றன.

திரு. சந்திரசேகரனின் முன்னைய கண்டுபிடிப்பான மின்னனு மண்டையோடு அடையாளம் காணும் இயந்திரம் இந்த முறைக்கும் உபயோகப்படுத்தலாம். இவ்வகை இயந்திரத்தை இவர் கண்டுபிடித்தபோது, இவ்வகை கருவிகளை உபயோகித்த மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. இறந்தவரது முகக் குறியீடுகள் முழுமையாக இருக்கும்பட்சத்தில் வார்ப்பட முறை மிகவும் முக்கிய வழிமுறையாகி உதவுகிறது. பாசி பூசின முறைமூலம் வார்ப்படம் எடுக்கப்படுகிறது. இவ்வார்ப்படத்தை உபயோகித்து இரண்டு பகுதிகளாகப் பிளாஸ்டர் வார்ப்படம் தயாரித்தவுடன் இந்த மாதிரி இறந்தவரது தலைபாகத்தின் அசல் நகல் போல் உதவுகிறது. இதற்கான நிலையில் இந்த வார்ப்படத்தை நிறுத்தி, இதனை முன் பின்னாகவோ, பக்கவாட்டிலோ அசைத்து, புகைப்படத்திலுள்ள அதே கோணத்தில் பல வகைப் பிம்பங்களுடன், புகைப்படத்தையும், வார்ப்படத்தையும் இணைத்துச் சரியான ஒப்பீடு முறை காணப்படுகிறது. முக குறியீடுகள் மற்றும் பிற புகைப்பட அடையாளக் குறியீடுகள் இம்முறையில் ஒப்பிடப்படுகின்றன. சாதாரண முறையிலுள்ள சிறு தவறுகள் கூட இந்த முறையில் நிகழ்வதில்லை.

தமிழ்நாடு தடய அறிவியல் பணியில் 33 ஆண்டுகளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு. சந்திரசேகரனை, நாட்டிற்கு இம்முறையை அர்ப்பணிப்பதில் மிகவும் பெருமையை கொண்டுள்ளார். குறிப்பாக 35-வது அனைத்திந்தியக் காவல் பணி போட்டிகளுக்காக எல்லா மாநிலத்து புலனாய்வுப் பணியாளரும் நம் மாநிலத்தில் குழுமியுள்ளபோது இம்முறை நாட்டுப்பணியில் அர்ப்பணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தருமபுரி மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு ஆற்றி வருகிறது.

ஒரு நாளைக்கு 2,000 டன் கரும்பு பிழியும் திறன் கொண்ட தருமபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1990-91-இல் தனது 20-வது அரவைப்பருவத்தில் 3.73 இலட்சம் டன் கரும்பை நல்ல முறையில் அரவை செய்துள்ளது. இவ்வாண்டு அரவை செய்த கரும்புக்கு ரூ.1,267 இலட்சம் கரும்பு கிரயமாகவும் ரூ.93.61 இலட்சம் லாரி வாடகை மானியமாகவும், ரூ.4.05 இலட்சம் விதை மற்றும் கரும்பு வளர்ச்சிக்கான மானியமாகவும், கொடுக்கப்பட்டுள்ளது. சென்ற அரவைப் பருவத்தில் ஒரு டன் கரும்புக்குக் கரும்பு விலையாக ரூ.352.60 கொடுக்கப்பட்டது.

இவ்வாலை 1987-88-ஆம் ஆண்டிற்கு உற்பத்தித் திறனுக்காக மாநில அளவிலான முதல் பரிசு பெற்றது. 1988-89-ஆம் அரவைப் பருவத்தில் உற்பத்தித் திறனில் சிறப்பாகச் செயல்பட்டிருந்தமைக்காக அகில இந்திய அளவில் தேசிய உற்பத்திக் குழுவின் பாராட்டையும், விருதையும் பெற்றுள்ளது.

இவ்வாலை மூலம் ஒவ்வொரு அரவைப் பருவத்திலும் சுமார் 8,500 கரும்பு விவசாயிகள் சுமார் ரூ.1,225 இலட்சம் ரூபாயும், நேரடி வேலைவாய்ப்பின் மூலம் 950 தொழிலாளர்கள் 200 இலட்சம் ரூபாயும், மறைமுகமாகச் சுமார் 2,100 விவசாயத் தொழிலாளர்கள், சுமார் 105 இலட்சம் ரூபாயும், சுமார் 860 பேர் வாகனப் போக்குவரத்து மூலம் சுமார் 24 இலட்சம் ரூபாயும் பெற்றுப் பயனடைகிறார்கள் என்று கூறிக் கொள்வதில் இவ்வாலையின் நிர்வாகம் பெருமைப்படுகிறது.

மேலும், இவ்வாலையில் தற்போது 17,698 உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்கள் 135.55 இலட்சம் ரூபாயும், மாநில அரசு 40.55 இலட்சம் ரூபாயும், கூட்டுறவு நிறுவனங்கள் 0.06 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் ரூ.176.16 இலட்சம் பங்கு மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. எனவே, உறுப்பினர்கள் நீர் ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள மத்திய அரசு அனுமதித்துள்ள சர்க்கரை வளர்ச்சி நிதிக் கடனில் இதுவரையில் ரூ.148.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த ஜூன் மாதம் முடிய 1,830 உறுப்பினர்களுக்கு ரூ.127.55 இலட்சம் புதிய கிணறு தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்திக் கொள்ளவும், ஆயில் என்ஜின் மற்றும் மின் மோட்டார் பொருத்தவும் 6 சதவிகிதம் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர் வரும் ஆண்டில் ரூ.20.94 இலட்சம் நீர்ப்பாசனத் திட்டத்திற்கென உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு வகைகளில் ரூ.300 இலட்சம் கடனுதவி வழங்க முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

தரமான நாற்றங்காலை ஊக்குவிக்கவும், அதிக மகசூல் தரக்கூடியதும் நல்ல சர்க்கரைக் கட்டுமானம் தரக்கூடியதுமான புதிய ரகக் கரும்பு பயிர் செய்யவும், தக்க மானியம் வழங்குதல், மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகள், களைக் கொல்லி மற்றும் வைரஸ் மருந்துகள் வழங்குதல், வறட்சிக் காலத்தில் பொட்டாஷ் உரம் வழங்குதல், ஊடு பயிர் செய்வதற்காக மானிய விலையில் விதைகள் வழங்குதல் மண் மாதிரிகளைப் பரிசோதனை செய்யவும் அதிகமான மகசூல் எடுத்த விவசாயிகளுக்குப் பரிசுகள், கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்தல், கரும்பு பரிசோதனை வயல்களுக்கு மானியம் வழங்குதல், லாரி வாடகை மானியம் போன்ற கரும்பு வளர்ச்சிப் பணிக்

காக ரூ.45 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிணற்றில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது சொட்டுநீர்ப் பாசன முறையில் கரும்பை நன்கு பராமரிக்க இண்டாக் கோரமண்டல், சென்னை என்ற நிறுவனம் மூலம் சோமனிஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கே.நாராயண் என்பவரது நிலத்தில் மாதிரி வயல் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சொட்டு நீர்ப் பாசனத்திற்காக ஏற்படும் செலவுகளில் 50 சதவிகிதத்தை ஆலையே ஏற்கிறது. மீதியுள்ள 50 சதவிகிதம் தொகையை 4 ஆண்டுகளில் சம தவணைகளில் 12.5 சதவிகித வட்டி விகிதத்தில் கரும்பு கிரயத்தில் பிடித்தம் செய்ய வகை செய்து முன்னோடி விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டு அரவைக்கு இதுவரை 9,532 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர் மழையின் காரணமாக இன்னும் கரும்பு நடவு செய்யப்பட்டு வருகிறது. சுமார் 1,200 ஏக்கர் கரும்புப் பதிவு ஆலையுடன் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட 9,532 ஏக்கர் கரும்பில் 5,110 ஏக்கர் கரும்பிற்குக் கரும்பு மகசூல் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடவு கரும்புக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.4,450 மறுதாம்புக் கரும்புக்கு ரூ.3,350 மத்திய மற்றும் வர்த்தக வங்கிகளின் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வரும் அரவைப்பருவத்தில் சுமார் 4 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரும்புச்சாலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7 சாலைகள் 44.45 கிலோ மீட்டர் தூரம் மற்றும் ஒரு பாலம் ஆகியவை ரூ.166.2 இலட்சம் செலவில் ஆலை மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் நலன்களுக்காகச் சிற்றுண்டிச்சாலை, தொழிலாளர் ஓய்வு விடுதி, உணவு அறை, மருந்தகம், கூட்டுறவுப் பண்டகசாலை, கூட்டுறவுச் சிக்கனம் மற்றும் கடன் சங்கம், ஆகியவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் நலன் காப்பதுடன் ஒரு நல்லுணர்வு ஏற்படவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது. ஆலையரால் மெட்ரிகுலேஷன் பள்ளி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் தொழிலாளர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் அலுவலர்களின் குழந்தைகள் கல்வி பயிலுகின்றார்கள். ஆலையில் பணி புரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டுகளில் 20 சதவிகிதம் அதிக பட்ச போனஸ் வழங்கப்பட்டது.

ஆலை விவசாய உறுப்பினர் குழந்தைகள், ஆலைத் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் பல்தொழில் நுட்பக் கல்வி பயில வசதி செய்து இம்மாவட்டத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் உறுப்பினர்கள் வேண்டுகோளுக்கிணங்க, அரசு இந்த ஆலையில் பல்தொழில் நுட்பப் பயிலகம் ஒன்றைச் சுயநிதி ஏற்பாட்டின்கீழ் தொடங்க அனுமதி வழங்கப்பட்டு, அதன்படி பல்தொழில் நுட்பப் பயிலகம் தொடங்கி 540 மாணவ மாணவியர் பயின்று வருகிறார்கள்.

இவ்வாறு, இந்தச் சர்க்கரை ஆலை தருமபுரி மாவட்ட ஏழை எளிய மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர்களின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுவதில் சிறப்பிடம் பெற்று வருகின்றது.

- மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை:

தமிழ்நாட்டில் சந்தன மரக் கடத்தல் குற்றத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.40.00 இலட்சம் அனுமதியளித்துள்ளார்.

சந்தன மரக் கடத்தலைத் தடுக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசின் வரவு செலவு அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. வனத்துறை அலுவலர்களுக்குப் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளை அதிகப்படுத்துவதற்கே இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

வாகனங்கள் வாங்குவதற்கு ரூ.10 இலட்சமும், கம்பியில்லாத தந்தி வசதிக்கு ரூ.8 இலட்சமும் செலவிடப்படும். சாலை வசதியைப் பெருக்க ரூ.5 இலட்சமும், இரட்டைத் தொலைநோக்காடிகள் மற்றும் திசைகாட்டும் கருவிகளுக்கு ரூ.5 இலட்சமும், ஆயுதங்கள் வாங்க ரூ.9 இலட்சமும், வான்வழி கண்காணிப்புக்காக ரூ.3 இலட்சமும் இந்தத் திட்டத்தில் அடங்கும்.

முதலில் உழையுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம். முதலில் உழையுங்கள். பிறகு ஓய்வெடுத்துக் கொள்ளலாம். முதலில் பலவீனத்தை அகற்றுங்கள். பிறகு, துணிவைப் பெறலாம். முயற்சி, உழைப்பு, துணிவு ஆகிய மூன்றினால் ஆரம்பக் காலத் துன்பத்தை வென்று அழகான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

—ஜேம்ஸ் ஆலன்

18-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1992 தொடக்க விழா 6.1.1992-ஆம் நாள், சென்னை காமராசர் சாலையிலுள்ள தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி. சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பொருட்காட்சியைத் தொடக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

செய்தி சுற்றுலாத்துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும், 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டு, நமது கவனத்தைக் கவர்ந்தும், பொது மக்களுக்குத் தேவையான பொழுதுபோக்கினை வழங்கியும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இப்பொருட்காட்சி தமிழ்நாட்டிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் பொது மக்களைக் கவர்ந்து இழுக்கிற பெருமை பெற்றிருக்கிறது என்பதை நான் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறேன். தற்போது அதை நேரடியாகவே பார்க்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன்.

தமிழகத்தின் தலைநகரில் இது தொடங்கப்பட்டாலும், 'அகில இந்திய' என்கிற அடைமொழியோடு அழைக்கப்பட்டு, தேசிய ஒருமைப்பாட்டின் நோக்கத்தை நிறைவு செய்கிற பெருமையையும் இப்பொருட்காட்சி பெற்றுள்ளது.

இந்திய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படும் வகையில், தற்போது நாட்டின் பல்வேறு சம்பவங்கள் நடந்து வருவதை நாம் அனைவரும் அறிவோம். ஆண்டாண்டுக் காலமாகத் தான் பிறந்த இடத்தில், தான் வளர்ந்த இடத்தில், தான் உழைத்த இடத்தில், தமிழன் உரிமையோடு, பாதுகாப்போடு வாழ முடியாத நிலைமை இன்று நடைமுறையில் உள்ளது. இந்த நிலையில் 'சுற்றுலா' விருப்பங் கொண்டு, எந்தத் தமிழனும் பக்கத்து மாநிலத்துக்குப் போக முடியாத சிக்கல் இருக்கிறதென்ற உண்மையை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறத்தான் வேண்டும்.

இந்தியா பல்வேறு மாநிலங்களின் தொகுப்பு; தேசிய ஒருமைப்பாடுதான் அந்த மாநிலங்களை நிலைத்த தேசப்பற்றால், கலாச்சாரப் பெருமைகளால், பண்பாட்டுப் பெருமிதங்களால், ஒன்றாகக் கட்டி வைத்திருக்கிறதென்று நாம் பெருமைப்பட்டோம்; இன்றும் பெருமைப்படுகிறோம். அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கின்ற முன்மாதிரி சக்தியாகத் தமிழ்நாடு இன்றும் இருந்து வருகிறதென்பதைக் காட்டத்தான், நாம் பல்வேறு

மாநிலங்களையும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கச் செய்துள்ளோம்.

அதே நேரத்தில், பல்வேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றம் குறித்தும், தமிழக மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கென்று தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்தும், இந்திய மக்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் இந்தப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது. குறிப்பாக, இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படுவதால், தமிழகத்தின் கலாச்சாரப் பண்பாட்டுப் பலகணியாகவும் இந்தப் பொருட்காட்சி திகழ்கிறது.

மேலும், மனிதாபிமான வழியில் இப்பொருட்காட்சியின் மூலம், ஏறத்தாழ 20,000 நபர்களுக்குத் தற்காலிக வேலைவாய்ப்பும், 2,000-க்கும் மேற்பட்ட கலைஞர்களுக்குக் கலை நிகழ்ச்சி நடத்துவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. ஏழைக் கலைஞர்களுக்கு வாழ்வளிப்பதை எண்ணும்பொழுது, அது மகிழ்ச்சிகரமான உணர்வினையும் நமக்குத் தருகிறது.

தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; வற்றாத வளங்கள் கொண்ட சரித்திரப் பூமி; காண்போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ்தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக்கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக்கலைக்கு மகுடம் சூட்டிய பெருமை இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிஷங்களாகும்.

இவைகளைப் பார்க்க வருகிற நோக்கில், தமிழ்நாட்டிற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிற வகையில், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வசதிகளை அமைத்துக் கொடுக்கத்தான், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் துவக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சுற்றுலாவை வளர்ப்பதும், சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைப் பெருக்குவதும் இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள்களாக இருக்கின்றன.

தொடர் வளர்ச்சியையும், நிலையான வருமானத்தையும் உண்டுபண்ணுகிற அமைப்பாக, எந்த அரசு நிறுவனமும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டால், அரசுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் மீது குறை கூறுகின்ற சந்தர்ப்பம், எவருக்கும் வராமல் நாம் செய்துவிட முடியும்.

அந்த வகையில் பார்க்கிறபோது, 5 ஓட்டல்களுடனும், 2 சொகுசுப் பேருந்துகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம், இன்று 34-க்கும் மேற்பட்ட ஓட்டல்களையும், இளைஞர் விடுதிகளையும் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது, சாதனைகளை நிகழ்த்தும் இக்கழகத்தின் வெற்றிக்குரிய சான்றாகும். அதேபோன்று, 22 சொகுசுப் பேருந்துகளையும், 5 கார்களையும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இந்த நிறுவனம் நடத்தி வருகிறது என்ற செய்தி, இவர்களுடைய உழைப்பு வளர்வதோடு, ஊக்கமும் வளருகிறது என்பதற்கான எடுத்துக்காட்டாகும்.

பணம் படைத்தவர்கள்தான் சொகுசான ஓட்டல்களில் தங்க முடியும் என்கிற நிலையை மாற்றி, ஏழை மற்றும் நடுத்தர மக்களும் வசதியோடு தங்குகிற வகையில், ரூ.20 முதல் ரூ.600 வரை நாளொன்றுக்கு வாடகை கொண்ட அறைகளையும் வழங்குவதோடு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 14 வகைப்பட்ட சுற்றுலாப் பயணங்களை அமைத்துக் கொடுத்து, உள்நாட்டுப் பயணிகளாலும், வெளிநாட்டுப் பயணிகளாலும் பாராட்டப்படுகிற பெருமையையும் கொண்டிருக்கிறது இந்தச் சுற்றுலாக் கழகம்!

இந்த ஆண்டு சுற்றுலா ஆண்டாக இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டிலும் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக பல்வேறு ஏற்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்து வருகின்றன. அவைகளில் சில முக்கியமானவற்றை உங்களுக்குத் தெரிவிப்பதில், நான் சுற்றுலாத் துறையின் அமைச்சராகவும் இருப்பதால், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களைப் பற்றிய விவரங்களை முழுமையாகத் தெரிந்து



உழவே செல்வம் உண்டு பண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

—நாமக்கவிஞர் வெ. இராமலிங்கனார்.

கொள்கிற வகையில், இந்த ஆண்டு ஒரு புத்தகம் அரசால் வெளியிடப்படும். பொங்கல் திருநாளை ஒட்டி மாமல்லபுரத்தில் ஒரு நாட்டிய விழா தொடர்ந்து ஒரு மாதம் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, சிதம்பரத்தில் இந்த ஆண்டு ஒரு நாட்டியாஞ்சலியும், சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை அரிமா சங்கத்துடன் கலந்து ஒரு காற்றாடித் திருவிழாவினையும் (Kite Festival) இம்மாதம் சென்னை மெரினா கடற்கரையில் நடத்தும். அடுத்து, ரிக்கி, டிக்கி, டாவி Youngster Club of India என்ற அமைப்பின் உதவியுடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் Wind Surfing Regatta என்ற நிகழ்ச்சிகளை, அகில இந்திய அளவில் அடுத்த மாதம் முட்டுக்காட்டில் நடத்த உள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக மட்டுமின்றிப் புதுமையான வகையில், காஷ்மீர் மற்றும் கேரள மக்களின் உணவு வகைகளைக் கற்றுத்தரும் வகையில், சிறப்புச் சமையல் கண்காட்சிகளும், இளைஞர்களுக்காக மலையேறும் பயிற்சி போன்றவற்றையும் அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் துறையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், பல்வேறு புதுமைகளைப் புகுத்தி வருகின்றன. இந்த ஆண்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகின்ற ஓட்டல்களில், நவம்பர் மாதம் வரை 2,87,644 பேர் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

இதில், 13,062 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது, நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சொகுசுப் பேருந்துகள் மூலம் இதுவரை 52,210 பேர் பயணம் செய்துள்ளனர். காலத்தின் தேவைக்கேற்ப, சுற்றுலாக் கழகம் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கின்ற முயற்சிக்கு, வரவேற்பு வழங்குகிற சாதனைகளே இவைகள் என்றால் அது மிகையாகாது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிகளைக் கருத்தில் கொண்டு திருத்தணி, திருக்கழுக்குன்றம், மேல்மருவத்தூர், கடலூர், மேட்டுப்பாளையம், கூடலூர், குன்னூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் ஒதூர் போன்ற இடங்களில், ஓட்டல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, விரைவில் திறக்கப்படும் நிலையில் இருக்கின்றன. மேலும் இராணிப்பேட்டை, உளுந்தூர்ப்பேட்டை, சேலம், கும்பகோணம், தஞ்சாவூர், கொடைக்கானல் போன்ற இடங்களில் புதிதாக ஓட்டல்களும் கட்டப்படும். சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில், பிராட்வேயிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியினை, எல்லா வசதிகளும் கொண்ட ஓட்டலாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்துக்கும் மேலாக - சுற்றுலா என்பது தொழிலாக 1986-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், சுற்றுலாத் திட்டங்களுக்குத் தொழிற்சாலைக்குரிய சலுகைகள் ஏதும் அறிவிக்கப்படவில்லை. எனவே, புதிய தொழிற்சாலைகளுக்குத் தரப்படும் சலுகைகளுடன், ஒரு சில மாற்றங்களுடன் புதிய சுற்றுலாத் திட்டம் விரைவில் அறிவிக்கப்படும். மேலும், மாநிலங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்கும், அழகுபடுத்துவதற்கும், சிறப்புச் சுற்றுலாத் தேர்விடங்களாக (Heritage Towns) அறிவிக்க மத்திய அரசு உத்தேசித்துள்ளதால், தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களை அத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள ஆவன செய்யப்படும்.

சுருக்கமாகச் சொன்னால், சுற்றுலா மேம்பாட்டைப் பொருத்தவரையில், சுற்றுலாத் தலங்களைத் தூய்மையாக வைப்பதும், புராதனச் சின்னங்களைப் பேணிக்காப்பதும், நமது தலையாயக் கடமையாக இருக்க வேண்டும். எனவே, இப்பணியில் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டி, அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - எனக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்!"

விழாவில் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

இந்தப் பொருட்காட்சியில்...

1974-ஆம் ஆண்டு முதற்கொண்டு 'பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சியைத்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் நடத்தி வருகிறது. இவ்வாண்டு 18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் முற்றும் மாறுபட்ட வகையில் வெகு சிறப்பான முறையிலும் அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

பல்வேறு துறைகளில் தமிழகம் கண்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கெனத் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டுமென்பதே இப்பொருட்காட்சியின் முக்கிய நோக்கமாகும்.

தமிழகத்தின் தன்னிகரற்ற சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்களை இம்மாநிலத்தினர் மட்டுமன்றி இந்தியாவின் மற்ற மாநிலத்தவரும் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணமும், நம் சிறப்பை அறிந்துகொள்ளும் வகையிலும் இப்பொருட்காட்சி வகை செய்வதுடன், இதன்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கும் நம் மக்களுக்கும் பொழுதுபோக்கும் ஓர் மகிழ்விடமாகவும் துணை செய்கிறது. சுற்றுலாப் பயணிகளின் வருகை ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அதிகமாக இருப்பதன் காரணமாக, இச்சுற்றுலாப் பொருட்காட்சி இக்காலகட்டத்தில் நடத்தப்படுகின்றது.

இவ்வாண்டுப் பொருட்காட்சியில் நம் மாநில அரசின் துறைகளும் மாநில அரசு நிறுவனங்கள் 37-ம் வெளி மாநிலச் சுற்றுலாத் துறைகள் 2-ம் வெளி மாநில நிறுவனங்கள் 10-ம் கலந்து கொள்கின்றன. மேலும், இவை தவிர தனியார் துறை நிறுவனங்களும், கைத்தறிச் சங்கங்களும் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த 205 அங்காடிகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்பது சிறப்பம்சமாகும்.

பொருட்காட்சியின் நிரந்தரக் கலையரங்கமான 'அறிஞர் அண்ணா கலையரங்கத்தில்' தினந்தோறும் இன்னிசை, நாடகம் மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.தற்காலிகத் திறந்த வெளித் திரையரங்கம் அமைக்கப்பட்டு நாள்தோறும் ஓர் திரைப்படம் திரையிடப்படுகிறது. அன்னை இந்திரா சிறுவர் உல்லாச உலகத்தில் நாள்தோறும் நடைபெறும் கிராமிய நாட்டியம், நடனம், வீர விளையாட்டுகள், தந்திரக் காட்சிகள் குழந்தைகளைக் களிப்புறச் செய்கின்றன.அங்கே சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை நிறுவனத்தின் அறிவியல் உல்லாச உலகத்தின் காட்சிக் கூடத்தில் இளந்தளிர்கள் எளிய முறை அறிவியல் அறிவு பெற ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

வண்ண வண்ண மீன்கள் மீன்காட்சியகத்தில் கண்களைக் கொள்ளை கொள்கின்றன. இந்த 18-வது பொருட்காட்சியில் அனைவரும் ஆவலுடன் குதுகலிக்கும் சிறுவர் இரயிலும், குதிரைச் சவாரியும் இவ்வாண்டு நடைபெறுகின்றது.

ஓட்டல் தமிழ்நாடு (டிரைவ்-இன்-ரெஸ்டாரண்ட்)

பொருட்காட்சித் திடலில் நிரந்தரமாக அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் அமைந்துள்ள ஓட்டல் தமிழ்நாடு உணவகம் மக்களுக்காகச் சுகாதாரமான முறையில் தயாரித்து சுவையான உணவு வகைகள், சைவம்-அசைவம் இரண்டும் பரிமாறி நற்பெயர் பெற்றுள்ளது.

இப்பொருட்காட்சி நாள்தோறும் பிற்பகல் 3 மணி முதல் இரவு 10 மணி வரையும், விடுமுறை மற்றும் விழாக் காலங்களில் காலை 11 மணி முதல் இரவு 10 மணி வரையும் திறந்துவைக்கப்படும்.

இவ்வாண்டு பொருட்காட்சிக் காலத்தில் கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

1. தென்னிந்தியக் கலாச்சார மையக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள்
2. மிகப் பழமையான ஊர்திகளின் கண்காட்சி
3. ஆடை அலங்காரக் கண்காட்சி
4. உணவுக் கண்காட்சி
5. பொம்மைக் கண்காட்சி
6. தோட்டக்கலைக் கண்காட்சி
7. புத்தகக் கண்காட்சி
8. நாய்க்கண்காட்சி
9. மகளிருக்கான கோலப் போட்டி
10. கல்லூரி மகளிருக்கான கலை நிகழ்ச்சிகள்.

இதுவரை நடைபெறாத மிகப் பழைய ஊர்திகளின் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. முதன் முறையாக இப்பொருட்காட்சியில் பழைய ஊர்திகளின் விவரங்களுடன் கூடிய புகைப்படங்கள் கொண்ட இக்கண்காட்சி சுற்றுலா அரங்கில் இடம்பெற்றுள்ளது. மேலும் பழைய ஊர்திகளின் ஓட்டமும், அக்கார்களின் கண்காட்சியும் நடைபெற உள்ளது. பழைய ஊர்திகளின் ஓட்டத்தில் பலவகையான சுமார் 40 மிகப் பழமையான கார்கள் பங்கெடுக்க இருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் தாங்களே ஓட்டும் வகையில் சிறிய கார் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில்களின் படங்களும், கலாச்சாரங்களை விளக்கும் படங்களும் நுழைவாயிலில் இடம் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் முழு அடைப்பு வெற்றி!

பொதுமக்களுக்கு மாண்புமிகு முதல்வர் நன்றி

கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் வன்முறைச் செயல்களைக் கண்டிக்கவும், அந்த மக்களுக்குப் போதுமான பாதுகாப்பைத் தரத் தவறிய கர்நாடக மாநில அரசைக் கண்டிக்கவும் கர்நாடகத் தமிழர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக முதல்வர் நேரிலும், தொலைபேசியிலும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுக் கொண்ட பிறகும், மத்திய அரசு தக்க சமயத்தில் சரியான நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டிக்கவும், கர்நாடகத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்க மத்திய அரசும் கர்நாடக மாநில அரசும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவும் ஜனவரி 2-ஆம் தேதி (2.1.1992) காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழகம் தழுவிய முழுவேலை நிறுத்தம் நடத்துவதென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 30.12.1991-இல் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து 2.1.1992-ஆம் நாள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை 12 மணிநேரம் முழு அடைப்பு அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் கடைகள் மூடிக் கிடந்தன. பேருந்து, இரயில், ஆட்டோ, டாக்சிகள் எதுவும் ஓடவில்லை. அனைத்து அரசு அலுவலகங்களும், அரசுத் துறை நிறுவனங்களும், பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் மூடப்பட்டிருந்தன. அன்று பொதுவிடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. வங்கிகளுக்கும் அன்று விடுமுறை அளிக்கப்பட்டது. திரைப்படக் கொட்டகைகளின் காலைக் காட்சியும், பிற்பகல் காட்சியும் ரத்து செய்யப்பட்டன. திரைப்படப்பிடிப்பு நிலையங்களில் படப்பிடிப்பு நடைபெறவில்லை. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் எதுவும் ஓடவில்லை. பேருந்து நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. இரயில், விமானப் போக்குவரத்துகள் மாலை 6 மணி வரை நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. தமிழ்நாட்டின் அனைத்து நீதி மன்றங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.



காய்கறிக் கடைகள், நடைபாதைக் கடைகள் அனைத்தும் மூடிக்கிடந்தன.

மக்களின் அத்தியாவசியத் தேவையான பால் விநியோகம், குடிநீர் வழங்கல், மருத்துவமனை, பத்திரிகை அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

முழு அடைப்பு வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற்றதற்குத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டார்:

'கர்நாடகத் தமிழ் மக்கள் மீது கடந்த இரு வாரங்களாகக் கன்னட வெறியர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச் செயல்களால் தாங்கொண்ணாத் துயர் அடைந்து தமிழகத்திற்கு ஓடிவந்து கொண்டிருக்கும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தலைமுறை தலைமுறையாகத் தங்கள் மாநிலத்தில் தங்கி வாழ்ந்து வரும் தமிழர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறிய கர்நாடக அரசைக் கண்டித்தும், இந்திய ஒருமைப்பாட்டையே அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கர்நாடக அரசைக் கண்டித்து உரிய நேரத்தில் நடவடிக்கைகள் தொடரத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும், இன்று தமிழகம் முழுவதும் நடத்தப்பட்ட முழு வேலை நிறுத்தமும், முழு அடைப்பும் மாபெரும் வெற்றி பெறச் செய்த தமிழக மக்களுக்கும், அரசியல் கட்சியினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழனின் மாபெரும் தன்மானப் பிரச்சினையை அணுகும் பொழுதும்; நாம் உணர்ச்சிவசப்படாமல் அமைதியான முறையில் இந்த முழு அடைப்பினை நடத்திக் காட்டியுள்ளது நமக்கு மேலும் பெருமை சேர்க்கிறது. தமிழ் மக்கள் அனைவரின் ஒருமித்த உணர்வினைக் கர்நாடக அரசும், மத்திய அரசும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் இன்றைய முழு அடைப்பினை நாம் நடத்தி முடித்துள்ளோம்.. இம்மாபெரும் வெற்றியை இந்த இக்கட்டான காலகட்டத்தில் நமக்கு ஈட்டித் தந்த ஒவ்வொருவருக்கும் என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் பாராட்டுதலையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடத்தி முடித்த முழு அடைப்போடு நாம் நமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். தமிழர்கள் விழிப்புணர்வோடு இருந்தால்தான் தங்களின் உரிமைகளைக் காக்க முடியும் என்ற அவலநிலை இன்றும் நமது நாட்டில் தொடர்கின்றது. கர்நாடகத் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு ஏவி விடப்பட்ட வன்முறைச் செயல்களைத் திசை திருப்பப் பல முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவேதான், நாம் மிக்க விழிப்புணர்ச்சியுடனும், எச்சரிக்கையுடனும், ஒற்றுமையுடனும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழகத்தில் வாழும் கன்னடர்களுக்குப் பாதுகாப்பு இல்லாதது போலவும், அவர்கள் தாக்கப்படுவது போலவும், தமிழகத்தை விட்டு அவர்கள் கர்நாடகத்திற்கு ஓடுவது போலவும் ஒரு பொய்யான பிரச்சாரத்தைத் திட்டமிட்டுக் கர்நாடக அரசு செய்யத் தொடங்கியுள்ளது.

கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலநிலை போல, தமிழகத்தில் வாழும் கன்னடர்கள் எவருக்கும் ஏற்படவில்லை. தமிழக அரசு இந்தப் பிரச்சினை தொடங்கிய நாள் முதல் கன்னடர் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தமிழக மக்கள் தங்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அமைதி காத்து வருகின்றனர்.

தமிழகத்தில் வாழும் பல இலட்சம் கன்னடர்கள் இன்றும் பாதுகாப்பாக, எவ்வித அச்சமும் இன்றி, தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குத் தொடர்ந்து அரசும், தமிழக மக்களும் துணை நின்று எப்போதும் பாதுகாப்பு அளிப்பார்கள்.

நேற்று முன்தினம் டெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அக்குழு கர்நாடக அரசிற்கும் தமிழ்நாடு அரசிற்கும் அமைதி காத்து இயல்பு நிலைக்குத் திரும்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டும், இப்பிரச்சினை குறித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? கர்நாடகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை என்ன? என்பதை நாமும் அறிவோம், நாடும் அறியும். இதுவரை கர்நாடகத்திலிருந்து 87,813 தமிழர்களுக்கு மேலாக தமிழகத்திற்கு ஓடிவந்துள்ளனர். ஆனால், தமிழகத்திலிருந்து 380 கன்னடர்கள் மட்டுமே அச்சத்தின் காரணமாகக் கர்நாடகம் சென்றனர். அவர்களுள் பெரும்பாலானவர்கள் ஏற்கெனவே தமிழகம் திரும்பி விட்டனர்.

இந்த உண்மை தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவிற்கு எப்படித் தெரியாமல் போனது என்பது வியப்பாக உள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள உண்மை நிலையைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக் குழு தனது பாராட்டைத் தெரிவிக்காவிட்டாலும், உண்மையை உணர மறுத்து தமிழகத்தை, கர்நாடகத்தோடு ஒப்பிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் இந்தியத் திருநாட்டில் எந்தப் பகுதியிலும் குடியேறலாம். வாணிபம் செய்யலாம். வாழ்க்கை நடத்தலாம் என்று இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளையே பறித்து அரசியல் சாசனச் சட்டத்தையே உடைத்தெறிந்துள்ள கர்நாடக மாநிலத்தையும், தற்போது அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தையும் சமமாக மதித்து எடைபோட்டுப் பார்க்க நினைக்கின்றனர் என்றால், அதனை என்னவென்று குறிப்பிடுவது?

இரு மாநில அரசிற்கும் தனது தீர்மானத்தின் மூலம் அறிவுரை வழங்கிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம், கர்நாடகம் தேசிய ஒருமைப்பாட்டில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளது என்பதையும், அதன் தற்போதைய நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, கர்நாடக மாநிலம் இந்தியாவுடன் தான் உள்ளதா என்பதையும் முதலில் உறுதி செய்யத் தவறிவிட்டது.

மேலும், 31.12.1991 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் காஷ்மீர் மற்றும் பஞ்சாப் நிலை குறித்து மட்டுமே விவாதம் நடைபெற இருப்பதாகக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டு எனக்கும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கர்நாடகத் தமிழர்கள் தாக்கப்பட்டிருப்பது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்க உள்ளனர் என்ற விவரம் எனக்குத் தெரிவித்திருந்தால், நான் நிச்சயமாக அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பேன்.

அஞ்சும் மனத்தவரும் - கொஞ்சம்
ஆண்மை தருமனப் பான்மை யடைந்திட
மஞ்சு விரட்டுவோம் - துஷ்ட
மாட்டையும் அடக்கும் தாட்டிகம் காட்டுவம்.

—நாமக்கல் கவிஞர்

தொடர்புடைய மாநிலத்திற்குக் கூட்ட விவாதப் பொருளைத் தெரிவிக்காமலும் அம்மாநிலத்தின் கருத்தைத் தெரிந்து கொள்ள விழையாமலும், ஒருதலைப்பட்சமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் நடவடிக்கைகள் வருந்தத் தக்கது என் நான் கருதுகிறேன். இந்த நிலையில் இன்று கர்நாடகத்தில் நிலவும் அசாதாரண நிலையை ஜனநாயகத்திலும் தேசிய ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கையுள்ள எந்த ஒரு மத்திய அரசும் அனுமதிக்காது.

இந்திய அரசியல் சாசனத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகளையே பறித்த கர்நாடக அரசின் மீது இதுவரை எந்தவிதப் பயனுள்ள நடவடிக்கைகளையும் தொடராத மத்திய அரசையும் என் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கடந்த 13.12.1991 அன்று கர்நாடக அரசு அறிவித்து நடத்திய முழு அடைப்பு, கர்நாடகத்தில் வாழும் தமிழர்களைப் பெரிதும் பாதித்தது. ஆனால், இன்று (2.1.1992) பாதிக்கப்பட்ட தமிழர்களின் பக்கமிருக்கும் நாம் நமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அமைதியான முறையில் இன்றைய முழு அடைப்பை நடத்திக் காட்டியுள்ளோம்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்று அறிவித்த உடனேயே கர்நாடக அரசு அறிவித்த முழு அடைப்பின்போது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைப் போலவே தமிழகத்திலும் திட்டமிட்டு நடைபெறப் போகிறது என்று கர்நாடகத்தில் உள்ளவர்கள் எதிர்பார்த்தார்கள். இந்தக் கருத்தில்தான் முழு அடைப்பை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் முன்னாள் முதல் அமைச்சர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால், தமிழகத்தில் சுயகட்டுப்பாட்டிற்கு இந்தியாவிலேயே ஈடுஇணையில்லை என்பதை நிலைநாட்டிக் காட்ட வேண்டும் என்ற உறுதியுடன் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, முழு அடைப்பு நடைபெற்றே தீரும் என்று கூறினேன். நான் எண்ணியபடியே முழு அமைதி காத்து, எவ்வித வன்முறைக்கும் இடம் தராமல் வெற்றிகரமாக இந்த முழு அடைப்பைத் தமிழக மக்கள் நடத்திக் காட்டியதால் தமிழகத்தின் மதிப்பை வானளாவ இன்று உயர்த்தியிருக்கின்றார்கள்.

வன்முறை நிகழும் என்ற எதிர்பார்ப்பில் இன்று காலை முதல் மாலை வரை அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கர்நாடக அரசு அதிகாரிகள் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை பற்றி விசாரித்தபடியே இருந்தார்கள். எவ்வித வன்முறைச் சம்பவமும் நடைபெறவில்லை என்பதை அறிந்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்து போனார்கள்.

தமிழகத்தில் முழு அடைப்பு என்றாலே காட்டுத் தர்பார் கட்டவிழ்த்து விடப்படப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த கர்நாடக அரசியல்வாதிகள் இந்தியா முழுவதிலுமுள்ள அரசியல் விமர்சகர்கள், சில மத்திய அமைச்சர்கள், மத்திய அரசு அதிகாரிகள், அகில இந்திய நாளேடுகள் உட்பட இப்படித் தமிழகத்தைப் பற்றித் தவறான கணிப்புச் செய்த அனைவருமே ஏமாந்துபோனார்கள்.

தமிழரின் பண்பாடு எத்தகைய மகத்துவம் வாய்ந்தது என்பதை உலகிற்கு உணர்த்திக் காட்டிய தமிழக மக்களின் பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.'

இன்பம் தழைத்திடுமே!

கவிஞர் சாமி பழனியப்பன்

வையம் வாழக் குறள்தந்த
வள்ளுவன் நமது முன்னவனாம்
தெய்வப் புலமை வள்ளுவனைத்
தினமும் போற்றித் தொழுதிடுவோம்!

உளநோய் தீர்க்கும் மருந்தாகி
உயர்வை வளர்க்கும் விருந்தாகுந்
தெளிதமிழ்க் குறளை நாம்கற்றுச்
சிறுமை நீங்கி வாழ்ந்திடுவோம்!

ஒட்டைச் சாண்மனம் உடையவனை
உலகின் மனிதன் எனமாற்றும்
ஏட்டைத் தந்தநம் வள்ளுவனை
இனிதே கற்றுத் தேர்ந்திடுவோம்!

சத்துப் பொருள்கள் பலகூட்டிச்
சமைத்த உணவாம் குறளமுதை
நித்தம் கற்றுத் தெளிந்திடுவோம்
நிறையுடைய யோராய் வாழ்ந்திடுவோம்!



உலகின் ஒருமை பேணிடவும்
ஒற்றுமை யாக வாழ்ந்திடவும்
நலங்கள் பலவும் பெற்றிடவும்
நாளும் திருக்குறள் கற்போமே!

அறம்பொருள் இன்பம் கூறுகிற
அறங்குறள் நமக்கு வழிகாட்டும்
பிறழா தவ்வழி நின்றிட்டால்
பேதையும் மேதை யாகிடுவான்!

வாழ்வே குறளுக் குரையானால்
வையகந் தன்னில் துன்பமில்லை
தாழ்வும் இல்லை; இறப்புமிலை
தரணியில் இன்பம் தழைத்திடுமே!

தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி

கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமிழகத்திற்கு வந்திருக்கின்ற கர்நாடகத் தமிழர்களின் மறுவாழ்விற்காகவும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவின்பேரில் தமிழக அரசு ஒரு நிதியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிதிக்குத் தமிழில் 'தமிழ்நாடு அரசின் கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதி' என்றும், ஆங்கிலத்தில் 'Tamil Nadu Government Fund for Rehabilitation of Karnataka Tamils' என்றும் பெயரிடப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூ.1,08,000 இந்த நிதிக்குக் கொடுத்து, நிதியினைத் துவக்கி வைத்துள்ளார்.

கர்நாடகத்திலிருந்து தமிழகம் வந்துள்ளவர்களின் எண்ணிக்கை

14.1.1992 வரை கர்நாடக மாநிலத்திலிருந்து வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகி தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களுக்கு வந்துள்ள தமிழர்களின் எண்ணிக்கை மொத்தம் 1,04,693. அவ்வாறு வந்தவர்கள் மாவட்ட வாரியாக பின்வருமாறு:-

சென்னை 76, தென்னார்க்காடு 837, வட ஆர்க்காடு-அம்பேத்கர் 13,009, திருவண்ணாமலை-சம்புவராயர் 3,854, தர்மபுரி 21,596, சேலம் 11,857, பெரியார் 29,939, கோவை (நகரம்) 6,165, கோவை (ஊரகம்) 8,818, நீலகிரி 7,410, மதுரை (ஊரகம்) 1,132 ஆக மொத்தம் 1,04,693.

காவிரி ஆலோசனைக் குழு

காவிரி ஆற்று நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக அரசுக்கு ஆலோசனைக் கூற 5 பேர் கொண்ட குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

அந்தக் குழுவின் தலைவராகத் திரு. ஆர். திருமலை (ஓய்வு பெற்ற இ.ஆ.ப. அதிகாரி) நியமிக்கப் பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் அமைப்பாளர் ஆகப் பொதுப்பணித்துறை செயலாளர் திரு. சி. செல்லப்பன் இ.ஆ.ப., நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் உறுப்பினர்களாகக் 'காவிரி டெக்னிகல்' பிரிவுத் தலைவர் திரு. ஏ. மோகன கிருஷ்ணன், கோவையில உள்ள விவசாயிகள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ்.ஜெயராஜ் மற்றும் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர்.

காவிரித் தண்ணீர்ப் பிரச்சினையில் இப்போது எழுந்துள்ள சிக்கலில் தமிழக அரசுக்கு ஆலோசனை கூறுவதுடன், காவிரி நீர்ப்பாசன முறைகள் விவசாய வளர்ச்சிக்காக எப்படிப் பயன்படுத்துவத என்பது பற்றித் தமிழக அரசுக்கு இந்தக் குழு ஆலோசனை தெரிவிக்கும்.

சங்கப்புலவர் நினைவாக நினைவுத்தூண்

ஒக்கூர்........ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகங்கைக்கும் திருக்கோட்டியூருக்கும் இடையில் உள்ள அழகிய சிற்றூர்'......... இந்தச் செம்மண் பூமியில்தான் சங்கப்புலவர்கள் மாசாத்தியார் - மாசாத்தனார் ஆகியோர் தோன்றி, தமிழுக்குப் புகழ் சேர்த்தார்கள்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்னும் நில எல்லை கடந்த தீந்தமிழ்த் தேருக்குச் சங்கப் புலவர்கள்தாம் அச்சாணி என்பதை அறிவோம்.

அகம்.....புறம்.... என இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துப் பாடிய தமிழ்ச்சான்றோர்களின் இலக்கிய வரிகள் உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த சங்க கால உலகில், பாண்டிய நாட்டுப் பெண்பாற் புலவர்களில் ஒக்கூர் மாசாத்தியார் தலைசிறந்தவர்; இவர் மொத்தம் எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் அகநானூற்றில் இரண்டும், புறநானூற்றில் ஒன்றும், குறுந்தொகையில் ஐந்தும் எனக் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் வாழ்ந்த ஆண்பாற் புலவர்களுக்கு இணையாகப் பெண்பாற் புலவர்களும் தமிழையும் தமிழர் வீரத்தையும், வளர்த்தார்கள் என்பதற்கு இவருடைய 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனத் தொடங்கும் புறப்பாடல் ஒன்றே சிறந்த சான்றாகும். அகத்திணைப் பாடல்களில் இவர் சிறந்த உவமைகளைக் கொண்டு பாடியுள்ளார். சான்றாக - 'முல்லை அரும்பியிருத் தலைக் காட்டுப்பூனை சிரித்தாற் போல்' என்று ஒப்பிடுவதைக் குறிப்பிடலாம். குறுந்தொகையில் இவர் பாடல்கள் பெரும்பான்மை முல்லைத் திணைப் பாடல்கள் ஆகும்.

ஒக்கூர் மாசாத்தியாரின் பிறப்பிடமான அதே ஒக்கூரில்தான் சங்ககாலப் புலவர் ஒக்கூர் மாசாத்தனாரும் பிறந்தார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றும் உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கப்புலவர்களின் மாப்புகழைப் போற்றும் வகையில் ஒக்கூரில் தமிழக அரசு நினைவுத்தூண் நிறுவியுள்ளது. இதன் திறப்புவிழா ஒக்கூரில் 10.12.91 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இச்சீரிய விழாவிற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். விழாவிற்கு வருகை தந்தோரைத் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் பேராசிரியர் கு. சிவஞானம் வரவேற்றார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் நினைவுத்தூண் திறந்து வைத்து, இலக்கியச் சிறப்புரை ஆற்றினார். விழாவில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திரு. கரு. முருகானந்தம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார். தமது தலைமையுரையில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 'ஒக்கூரில் உள்ள ஊராட்சி மன்றக் கட்டட அலுவலகத்திற்கு 'மாசாத்தியார் மாளிகை' எனப் பெயர் சூட்டி விழாவிற்குப் புகழ் சேர்த்தார். விழாவில் தமிழ்ப் பண்பாட்டுத் துறைத் துணை இயக்குநர் முனைவர். த. பெரியாண்டவன் நன்றி கூறினார். அறிவொளி இயக்கக் கலை நிகழ்ச்சி நடந்தது.

எண்ணுதலும், எழுதுதலும் தமிழிலேயே இருத்தல் வேண்டும் என நடைமுறைப்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசில் - சங்கப்புலவர் புகழ்பாடி நினைவுத்தூண் அமைத்துப் போற்றுவது வியப்பிற்குரியதல்ல! அவர்தம் ஆட்சியில் மேலும் சங்கத் தமிழ் வளர்ப்போம்! ஒக்கூர் மாசாத்தியார்-மாசாத்தனார் புகழ் ஓங்குக!

- ரெ. இராவணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

> தமிழின் தலைசிறந்த இலக்கிய ஏடு, உலகின் ஒப்புயர்வற்ற தனிமுதல் ஒழுக்க நூல் என்ற புகழைத் திருக்குறள் பெற்றுள்ளது.
> —பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்.



மத்திய அரசு போனஸ் வழங்கும் முறையைப் பின்பற்றி ஊதிய விகிதங்களில் ரூ.2,500, அதற்குக் குறைவாக மாத ஊதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு 16 நாட்கள் ஊதியம் போனசாக வழங்கப்படும். இதனால் ஊழியர்களுக்குக் குறைந்த பட்சப் போனசாக ரூ.604 கிடைக்கும். இது கடந்த ஆண்டைவிட ரூ.86 அதிகமாகும். அதிகப்பட்சமாக ரூ.2,500 ஊதியம் பெறும் அலுவலர்களுக்குப் போனஸ் வழங்கும் முறையில் ரூ.1,600 என்ற அளவில் தொடர்ந்து கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்படும். இந்த அதிகப்பட்ச அளவில் இம்முறை ரூ.853 போனசாக வழங்கப்படும். இது கடந்த ஆண்டைவிட ரூ.53 அதிகமாகும்.

ஊதிய விகிதங்களில் ரூ.2,500-க்கு மேல் ஊதியம் பெறும் அலுவலர்கள், அதாவது மாநில-மைய அரசு ஊதிய விகிதம், பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதம் போன்ற அலுவலர்களுக்குச் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப்படும்.

சில்லரைச் செலவினத்திலிருந்து நிலையான மாதாந்திர ஊதியம் பெறும் பகுதி நேர முழு நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் கிராமப் பணியாளர் அமைப்பில் உள்ள அலுவலர்கள் மற்றும் ஆண்டொன்றுக்கு 240 நாட்களுக்குக் குறையாமல் தினக் கூலியாகப் பணியாற்றும் பணியாளர்களுக்கும் சிறப்புப் போனசாக ரூ.475 வழங்கப்படும்.

கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும் ரூ.72.17 கோடி செலவில் சுமார் 11 இலட்சம் அரசு மற்றும் உள்ளாட்சி அலுவலர்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

அரசு, தனியார் உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிறுவன அனைத்து ஓய்வூதியதாரர்கள்-குடும்ப ஓய்வூதிய தாரர்களுக்கு 1992-ஆம் ஆண்டுக்கான பொங்கல் பரிசாக ரூ.100-ஐ மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். இதனால் 2.30 இலட்சம் ஓய்வூதிய தாரர்கள் பயனடைவார்கள், அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.2.3 கோடி ஆகும்.

திருக்கோயில் பணியாளர்களுக்கு கருணைத்தொகை

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின்கீழ் திருக்கோயில்களில் பணிபுரியும், முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.350-ம், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.300-ம், 1992-ஆம் ஆண்டிற்குக் கருணைத் தொகையாக வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சென்னைத் தரமணியில் நிரந்தர வர்த்தகப் பொருட்காட்சி

சென்னைத் தரமணியில் நிரந்தர வர்த்தகப் பொருட்காட்சியில் பிரபல தொழிலதிபர்கள் பங்கு பெறுவது தொடர்பாக 6.1.92 அன்று தென்னகத்திலுள்ள பிரபல தொழிலதிபர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டினார். அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. மூஸா ராஜா (Chairman and Managing Director of Trade Fair Authority of India)

அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். கீழ்க்கண்ட தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்பட 21 தொழிலதிபர்கள் இக்கூட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

1. வீல்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை.
2. மங்களூர் கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைஸர்ஸ் லிமிடெட், பெங்களூர்.
3. விசாகப்பட்டினம் இரும்புத் தொழிற்சாலை, விசாகப்பட்டினம்.
4. டியூப்ஸ் இந்தியா குரூப்ஸ் மற்றும் ஆல் இந்தியா லெதர் டிரேட் அசோசியேஷன்ஸ்.



சமுதாய வீதியிலே
சத்தியத்தேர் ஓட்டவும்,
சமமாக எல்லாரும்
சேர்ந்திசை பாடவும்,
அமுதான தமிழ்ப்பெருமை
அனைத்துலகு எட்டவும்,
நமக்கெல்லாம் உரமேற்ற
நன்னாளும் வந்ததே!

வன்முறைப் பேய்களின்
வாலை நறுக்கவும்,
நன்முறை நாயகர்க்கு
நல்வாழ்த்துக் கூறவும்,
தன்னலக் கூட்டங்கள்
தலைதெறிக்க ஓடவும்,
பொன்னாளாய்ப் புலர்ந்ததே
பொங்கலெனும் திருநாளே!

கல்லாதார் இல்லாத
காலம் கனியவும்,
இல்லாதார் மகிழ்ந்திட
எல்லாமும் கிடைக்கவும்,
சொல்லாமல் செய்திடும்
செயல்வீரர் பெருகவும்,
எல்லார்க்கும் வந்ததே
இன்சுவைப் பொங்கலே!

கன்னியரை விலைபேசும்
காமுகர் குறையவும்
அன்னியரை வரவிடாத
ஆண்மை பெருகவும்,
என்னருமைப் பொன்னாடு
ஏற்றம் பெற்றிடவும்,
என்னுள்ளே உறுதிமொழி
இந்நாளில் பிறந்ததுவே!

மதுவின் தீமைகளை விளக்கும் திரைப்படம், மற்றும் நாடகம் தயாரிக்க மாண்புமிகு முதல்வர் உத்தரவு:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டத்தில் மது வின் தீமைகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற் காகத் திரைப்படம் ஒன்றும், நர்டகம் ஒன்றும் தயாரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரத் திரைப்படம் ஒன்றும், நாடகம் ஒன்றும் உள்துறையின் ஒத்துழைப்போடு, செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் விரைவில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திரைப்படம் ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை ஓடும் கால அளவு உள்ளதாகவும், நாடகம் இரண்டு மணி நேரம் நடைபெறக் கூடியதாகவும் இருக்கும். இவை களைத் தயாரிக்கும் முழுச் செலவினையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும். திரைப்படம் தயாரிக் கும் பொறுப்பு மாநில மது விலக்குப் பிரச் சாரக் குழுவின் உறுப்பினரும், பிரபல திரைப் படத் தயாரிப்பாளரும் ஆன திரு. ஜி. வெங்கடேஷ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலரும் நாடகக் காவலர் என்று போற்றப்படுபவரும் ஆகிய திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படம், மற்றும் நாடகம் மூலமாக மதுவின் தீமைகளை தமிழகம் முழுவதும் மக்களி டையே தீவிரமாகப் பிரச்சாரம் செய்யத்தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

பார்த்தோம் - படித்தோம்

பொதுவாக அரசியல், மருத்துவம், கல்வி, கவிதை, பொது அறிவு போன்ற வைகளை அறிந்து கொள்ள "தமிழரசு" இதழ் மக்களுக்கு இன்றியமையாத ஒரு கருவூலம் என்றால் அது மிகையல்ல!

—ப. அருணாசல சண்முகம்,
களம்பூர்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

இலக்கிய விருந்தாக 'ஞானம்' என்ற தலைப்பில் வந்த டாக்டர். அரங்க இராமலிங்கம் அவர்களின் அரிய கட்டுரை யைப் படித்துப்பரமானந்தம் அடைந்தேன். மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது என்பது போல, இச்சிறிய கட்டுரை பெரிய ஞானப் பெட்டக மாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு இதழிலும் இது போன்ற கட்டுரையை வெளியிட வேண்டு கிறேன்.

—த. பாது
தென்னாறு,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

"யான் எனது எனும் செருக்கு" அற 'ஞானம்' எனும் இலக்கிய விருந்து கட்டுரை மூலம் தெரிந்து கொண்டேன்.

—இன்பவல்லியன்,
கீரைசாத்து.

குடும்ப அட்டை வினாத்தாள் குறித்து அரசின் விளக்கம், பொதுமக்களுக்கு உதவிகரமாக இருந்தது, தொழில் வளர்ச் சியில் கோவை மாவட்டம் பயன்படும் படியாக இருந்தது. மருத்துவக் கட்டுரை-இரத்தக்கொதிப்பு-சிறப்பாக இருந்தது. தொடரட்டும்!

—அ.கந்தசுவாமி
திருப்பூர்
(கோவை மாவட்டம்)

மருத்துவக் கட்டுரை "இரத்தக் கொதிப்பு" தெளிவாகவும், எளிதில் புரியும்படியாகவும் இருந்தது. இது போன்ற மருத்துவக் கட்டுரை ஒவ்வொரு இதழிலும் வெளிவந்தால் பொது மக்களுக்கு மிகவும் பயன்படும்.

—கே.அனந்தநாராயணன்,
கன்னியாகுமரி

"கல்லும் சொல்லாதோ" கதையில் ம.காந்தியவர்கள் கடலூர் அருங்காட்சி யகத்தின் அருமை பெருமைகளைக் கூறியிருந்தார். கட்டுரையைப் படித்து முடித்ததும் அருங்காட்சியகத்திற்கு வாசகர்கள் அனைவரும் சென்று வந்தது போலொரு பிரமையே ஏற்பட்டது.

—அரிமா பூமாளம்
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி, (கோவை மாவட்டம்)

"கல்லும் சொல்லாதோ கதை" கட்டுரை படித்தேன். பல அரிய செய்தி களைத் தெரிந்து கொண்டேன்.

—எஸ். பிரபாகரன்,
மேல்பாலானந்தால்,
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

புலவர் க. அண்ணாமலை எழுதிய 'மரம் வளர்ப்போம்!' கவிதை அருமை யாக இருந்தது.

—ராசியில்லாத ரகு
பன்னிச்சேரி,
(தென்னார்க்காடு மாவட்டம்)

"கவிஞர் பா.திருநாவுக்கரசின் "கல்விச் செல்வம்" கவிதைப் படைப்பு மிகவும் பாராட்டிற்குரியது.

—கெ. குமாரப்பிள்ளை
கன்னியாகுமரி.

மூதறிஞர் இராஜாஜி 113-வது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 113-வது பிறந்த நாள் விழா தருமபுரி மாவட்டத்தில் அவர் பிறந்த ஊரான தொரப்பள்ளியில் 10.12.91 அன்று சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, நலிந் தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாப் பேருரையாற்றி னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'மூதறிஞர் இராஜாஜி அவர்களின் இலட்சியங் களைத் தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்'என்றார்.

அவர் மேலும் பேசுகையில், ஒசூர் நகரில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 18,000 வீடுகள் கட்டப்படும் என்றும், குறிப் பிட்டார். மேலும் இந்நிகழ்ச்சியில் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 103 பேருக்கு ரூ.5.31 இலட்சம் கடன் உதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி டாக்டர் மு. தம்பித்துரை அவர்கள் இராஜாஜியின் ராஜ தந்திரம், நிர்வாகத் திறன் ஆகிய வற்றை நினைவுகூர்ந்து பேசினார். மேலும் விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., தலைமை உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஏ. மனோகரன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. முனி வெங்கடப்பன், திரு. எம்.ஜி. சேகர், திரு. கே. சிங்காரம், திரு. எம். வெங்கட்ராமரெட்டி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற் றினர். விழாவில் செய்தி- மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. மு. கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விழாவிற்கு முன்னதாக தேசிய மாணவர் படை மற்றும் சாரண இயக்கத்தைச் சார்ந்த 200 பேர் சைக்கிள் பேரணியாக ஓசூரிலிருந்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த ஊரான தொரப்பள்ளிக்கு ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாளை யொட்டி, 10.12.91 அன்று காலை ஓசூர் நகரில் முக்கிய வீதிகள் வழி யாகப் பள்ளி மாணவ, மாணவி யர்கள், தேசிய மாணவர் படை, சாரணர் இயக்கத்தைச் சார்ந்த வர்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் ஊர்வலமாக வந்தனர்.

மேலும், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டு, அங் குள்ள இராஜாஜி அவர்களின் திரு வுருவச் சிலைக்கு மாலையணிவித் தார்.

மு. கிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்.

ஸோமசுந்தரம் ஸூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ்
(தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் அலகு)
முத்தனேந்தல் 623 602

போன்: 65 மானாமதுரை
தந்தி: ஸூப்பர்ஸ்பின்ஸ்

எங்களது ஆலையில் கீழ்க்கண்ட தரமான நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

சிட்ட நூல்: 10,20,40ஸ்

கோன் நூல்: 10, 20ஸ், 34ஸ், 40ஸ்

முறுக்கு நூல்: 2/17ஸ், 2/40ஸ்

தங்களது தேவைக்கு எங்களை அணுகுங்கள்

மு. சுப்பிரமணியன்
பொது மேலாளர்



தனிச்சிறப்பு வாய்ந்த நடுகல்

நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

திருச்சி-மதுரை நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இனாம்குளத்தூரைச் சார்ந்த வட சேரி ஏரியின் அருகில் மிக முக்கிய நடு கல்லொன்றினைத் தமிழ் நாடரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.

நீள் செவ்வக அமைப்பிலான இந்நடுகல்லில் வீரனொருவன், வலக்கரத்தில் கத்தியும், இடக்கரத்தில் வில்லும் பிடித்த நிலையில், புடைப்புச் சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளான். வீரனுக்கு வலப்புறம் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளது.

''ஸ்ரீ கொற்றம் பூதி நிரை பின் போடி பட்ட இடம்'' என்பது கல்வெட்டு வரி

கொற்றம் பூதியெனும் வீரன் ஆநிரைகளின் பின்பு ஓடிச் சென்று இறந்த இடம் என்பது பொருள். பகைவர்களால் கவர்ந்து செல்லப் பட்ட ஆநிரைகளை மீட்கச் சென்ற போது பகைவர்களால் தாக்கப்பட்டு இவ்வீரன் இறந்திருக்கலாம்.

தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, திருவண்ணாமலை சம்புவராயர், தருமபுரி மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் ஏறக்குறைய 500 நடுகற்களை இது வரை கண்டறிந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவில் தான் கிடைத்துள்ளன. அவற்றுள் இந்நடுகல் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. கி.பி. 9-10-ஆம் நூற் றாண்டளவில் கோனாட்டினை ஆண்ட இருக்குவேளிர் குலத்தைச் சார்ந்த வீரனொருவனின் வீரத்தைக் காட்டும் கல்லிது. இருக்குவேளிர் களின் தலைநகரான கொடும் பாளூர், இவ்வடசேரிக்கு அரு கிலேயே உள்ளது. இவ்வீரன் கொடும்பாளூர் படைகளைச்சார்ந்த வனாக இருப்பானாயின் இக்கல் வெட்டு மிகவும் மதிப்பு வாய்ந்த தாகிறது.

ஆநிரை மீட்கும் போரில் ஈடு பட்டு இறந்த அந்த இடத்திலேயே இக்கல் நடப்பட்டிருப்பதும் மற் றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்துறை இனாம்குளத்தூரில் மேலும் மூன்று கல்வெட்டுக்களை யும் கண்டறிந்துள்ளது. நடுவில் காளையும், சுற்றிலும் தாமரை மலரமைப்பினையும் மேற்பகுதியில் பெற்றுள்ள தூண்கள் வடிவில் அமைந்த இக்கற்களில் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த எழுத்தமைதியில் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை சிலருக்கு ஏற்பட்ட தீராத நோய் தீரும் பொருட்டு இறைவனை வேண்டிக் கொள்ளும் வகையில் நாட்டப்பட்ட கற்களாகத் தெரிய வருகின்றன.

வடசேரியைச் சேர்ந்த திரு. எம்.குப்புசாமி மற்றும்இனாம்குளத் தூரைச் சேர்ந்த திரு. எம்.ஏ. பொன்னுசாமி ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில் மேற்காணும் கல்வெட்டுக்களை இத்துறையின் திருச்சிப் பதிவு அலுவலர் திரு. ஸ்ரீதரன் மற்றும் இளநிலைக் கல் வெட்டாய்வாளர் திரு. ஜெயராமன் ஆகியோர் கண்டுபிடித்துள்ளனர்.

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

ஒரு கோடியே இருபது இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு, இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழுப்புரத்தில் தொடங்கி வைத்தார் (7.1.'92).

இரண்டாம் அட்டை:

பொங்கல் திருநாளைச் சித்திரிக்கும், நம் ஓவியரின் கைவண்ணம்.

நான்காம் அட்டை:

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி-1992 - மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (6.1.'92).

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568920, 562027

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா சாலையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (17.1.'92).

இந்த இதழில்...

குடியரசு நாள் விழா ... 2

தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு ... 4

காங்கேயத்தில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 5

மாமல்லபுரம் பொங்கல் நாட்டிய விழா ... 9

நீலகிரி மாவட்ட நலப் பணிகள் ... 13

திண்டுக்கல் அண்ணா மாவட்டப் பட்டுத்தொழில் வளர்ச்சி ... 15

திருவள்ளுவர் திருநாள் ... 17

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ... 20

தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி ... 22

மனிதாபிமானத்தின் மணிமகுடம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். -மாண்புமிகு முதல்வர் உரை ... 23

கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பாதுகாப்பு ... 27

உணவு: சில மருத்துவ உண்மைகள் ... 29

பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல் ... 33

மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 36

தெலுங்கு கங்கைத் திட்டம்: தமிழக—ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு ... 38

பர்கூரில், அரசு விழாவில் முதல்வர் உரை ... 43

கலைமாமணி விருது வழங்கும் விழா ... 46

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

தைத் திங்கள் - 18

மலர்:22 1-2-1992 இதழ்:15

சென்னையில் குடியரசு நாள் விழா

இந்தியாவின் 43-வது குடியரசு நாள் விழா, 26.1.92 அன்று தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர்களைத் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

காமராசர் சாலை-காந்தி சிலையருகில் அன்று காலை 8 மணியளவில் மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைத்தார்.

தீரச்செயல் புரிந்த 9 பேருக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்திலான அண்ணா வீரப்பதக்கத்தையும் ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கிப் பாராட்டினார்.

திருவண்ணாமலை தண்டராம்பட்டு திரு. வெங்கடேசன், திருநெல்வேலி ஸ்ரீபுரம் கல்லூரி மாணவி கே. மைதிலி, வேளாங்கண்ணி, திரு.இராசேந்திரன், திரு. இரத்தினம், திரு. குழந்தைவேலு, திரு. சாமிக்கண்ணு மற்றும் பரமக்குடி பொதுவக்குடி ஊராட்சி ஒன்றியப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. கே. பாலானந்தம், கோவை மாவட்ட வனச்சரக அதிகாரி திரு. ஜி.கே. முத்துசாமி, பத்மாநாபபுரம் உதவி மாவட்ட ஆட்சியாளர் அலுவலக தபேதார் திரு. குமரேசன் ஆகியோர் அண்ணா பதக்கத்தை பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற அணிவகுப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் பல்வேறு துறைகளின் அலங்கார ஊர்திகள் இடம் பெற்றன. தேசிய ஒருமைப்பாட்டைச் சித்திரிக்கும் பல்வேறு மாநிலக் கலைக் குழுவினரின் நிகழ்ச்சிகளும் 13 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நிகழ்ச்சி முடிவில்- சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்த விவசாயத் தோட்டக்கலை ஊர்திக்கு முதல் பரிசும், சமூக நலத் துறை ஊர்திக்கு இரண்டாம் பரிசும், மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊர்திக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

பள்ளி மாணவ மாணவிகளின் அணிவகுப்புக் கலைநிகழ்ச்சியைச் சிறப்பாக அமைத்திருந்தமைக்காக- ஜவகர் பால பவனுக்கு முதல் பரிசும், லேடி வெல்லிங்டன் பள்ளிக்கு இரண்டாவது பரிசும், சில்ரன் கார்டன் மேநிலைப் பள்ளிக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ

தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு: திட்டக்குழுத் துணைத்தலைவருடன் மாண்புமிகு முதல்வர் டெல்லியில் ஆலோசனை

1992-'93- ஆம் ஆண்டிற்கான தமிழ் நாட்டின் திட்ட ஒதுக்கீடு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை 10.1.'92 அன்று புதுடெல்லியில் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சு வார்த்தையின் போது, மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நெடுஞ்செழியன் மற்றும் அரசு அலுவலர்கள் முதல்வருக்கு உதவியாக இருந்தனர்.

திட்டத்தின் ஆதாரங்களைக் கணக்கிடுவதற்கு இடையூறாக இருக்கும் பணவீக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். மத்திய அரசு, பண்டங்களின் நிர்ணய விலையை உயர்த்துவதற்கு முன்பு, மாநில அரசைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு பெருமளவில் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

1992-93-ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசின் திட்ட முதலீடு தொகையை ரூ.1,751 கோடி என்று திட்டம் தீட்டியிருப்பதாகக் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது மிகவும் குறைந்த பட்சத் திட்ட முதலீடு என்று கூறினார்.

இந்த ஆண்டு தமிழக அரசு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் பெரும் முயற்சி எடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, மேலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தமிழகத்தின் வெற்றிகரமான நிதி ஆதாரங்களைத் திரட்டும் முயற்சியைக் கருத்திற்கொண்டு அதற்கு இணையாக மத்திய அரசும் தன்னால் இயன்ற அளவு கணிசமான கூடுதல் மத்திய உதவி அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு எதிர்நோக்கியுள்ள மிக மோசமான நிதி நெருக்கடியின் காரணமாக மாநில அரசுக்கான மத்திய நிதி உதவியைக் கொஞ்சமாகத்தான் உயர்த்த முடியுமெனத் திட்டக் குழுத் துணைத் தலைவர் குறிப்பிட்டார். இருந்தாலும் குறைந்த பட்சமாகத் தேசிய சராசரிக்கு இணையாகத் தமிழ்நாட்டின் அடுத்த ஆண்டு தனிநபர் திட்ட முதலீடு இருக்கும் வகையிலாவது 1992-'93-ஆம் ஆண்டுக்கான திட்டம் இருக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

இது குறித்து மேலும் ஆய்வு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை அலுவலர்களுக்கு முதல்வரின் விருதுகள்

1992-பொங்கல் திருநாளையொட்டி காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த 1,047 அலுவலர்களுக்கு முதலமைச்சரின் விருதுகள் வழங்க மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

காவல் துறையைச் சேர்ந்த 927 காவலர்களுக்கும், தீயணைப்புப் படையைச் சேர்ந்த 100 அலுவலர்களுக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 20 அலுவலர்களுக்கும். ஆகமொத்தம் 1,047 பேர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

இந்த விருது பெறுவோருக்கு 1992 பிப்ரவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் அவர்களின் பதவியைப் பொறுத்து ரூ.20 அல்லது ரூ.25-ஊதியத்தில் கூடுதலாகக் கிடைக்கும்.

என்னை வழிநடத்திச் செல்லுவது மனிததெய்வங்களின் நம்பிக்கையும் மாமனிதர்களின் தத்துவங்களுமே!

காங்கேயத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்வர் பெருமிதம்

நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பெயர் சூட்டப்பட்ட பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், தந்தை பெரியாரின் துணிவான குரல் ஒலித்த இடத்திலிருந்து, அவரது காலடி மண் மீது நின்று, எனதருமை வாக்காளப் பெருமக்களைச் சந்திப்பதில் பெருமிதம் அடைகின்றேன். எனது அரசியல் பயணத்தில், எனக்கு மாபெரும் வெற்றியை முதன்முதலாகத் தேடித்தந்து, இன்று நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருப்பதற்கு அன்றே அடித்தளம் அமைத்துக் கொடுத்த சிறப்பிற்குரிய மாவட்டம், உங்கள் மாவட்டம்.

சென்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், நான் எங்கு போட்டியிடுவேன் என்பதைத் தெரிந்துகொள்ள, நம்மவர்களும் மிக்க ஆவலோடு இருந்த நேரம்; நம் எதிரிகளும் மிகுந்த அக்கறை காட்டிய நேரம். அந்த இக்கட்டான நேரத்தில் தான், நான் போட்டியிடத் தேர்ந்தெடுத்த தொகுதி, காங்கேயம் என்றால், நான் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு என்பதை நீங்கள் உணர முடியும்! என் நம்பிக்கை வீண் போகவில்லை. நான் தேர்ந்தெடுத்துப் போட்டியிட்ட இத்தொகுதியில், வாக்காளப் பெருமக்கள் என்னை அமோகமாக வெற்றி பெறச் செய்ததோடு மட்டுமல்லாமல், தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாட்சியை, மீண்டும் தமிழகத்தில் மலரச் செய்திடும் வாய்ப்பையும் வழங்கிவிட்டனர்.

அவ்வாறு என்னை மகத்தான வெற்றி பெறச்செய்த, இத்தொகுதியின் வணக்கத்திற்குரிய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனது இதய பூர்வமான நன்றியை முதற்கண் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்தக் காங்கேயம் தொகுதியில், நான் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த நேரத்தில், இத்தொகுதியின் அனைத்துக் கிராமங்களுக்கும் நேரில் சென்று வாக்குக் கேட்பது என்ற முடிவிலேயே இருந்தேன். அந்த வகையில்தான், இத்தொகுதியில் ஒரு நாள் முழுவதும் பல்வேறு கிராமங்களிலும், இதே காங்கேயம் நகரிலும், சென்னி மலையிலும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, உங்களை எல்லாம் நேரில் சந்தித்துச் சென்றேன். முதலில் திட்டமிட்டபடி, தேர்தல் கடந்த மே மாதம் 26-ந் தேதியே நடந்திருக்குமானால், 21,22 ஆகிய தேதிகளில் நான் பர்கூர் தொகுதிச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, 23,24 ஆகிய தேதிகளில் மீண்டும் இங்கு வந்து, எஞ்சிய எல்லா ஊர்களுக்கும் நேரில் சென்று, உங்களை எல்லாம் சந்தித்திருப்பேன்.

ஆனால், நாம் அனைவரும் சற்றும் எதிர்பார்க்காத, கொடிய நிகழ்ச்சியான ராஜீவ் காந்தி படுகொலை, 21-ந் தேதி அன்று நடைபெற்று, நடக்க இருந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார் என்ற கொடுமையான செய்தி, அன்று பர்கூர் தொகுதியில் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் உடனடியாக எனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தச் செல்ல வேண்டியதாயிற்று. நம்முடைய வெற்றி விழாவில் கலந்து கொள்ள வரவேண்டிய, அந்த நல்லவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதே, என்ற பெருந்துயருடன் டெல்லி சென்று வந்தேன்.

அதன் பின்னர்தான், ராஜீவ் காந்தியைக் கொன்ற கொடியவர்களின் குறி, அவர்மீது மட்டுமல்லாது, என் மீதும் இருந்தது என்பதும், அக்கொலைக் கும்பலை இயக்கிய கொடியோர், பின்னாலிருந்து என்மீது தாக்கிடவே கட்டளையிட்டிருந்தனர் என்ற செய்தியும் கிடைத்தது. தேர்தல் ஜூன் மாதம் 15-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நான் சுற்றுப் பயணம் செய்வது நல்லதல்ல என்ற எச்சரிக்கையும் என்னிடம்

தெரிவிக்கப்பட்டது.

உங்கள் வீட்டுப் பிள்ளை

இச்சூழ்நிலைகளை விளக்கித்தான், இத்தொகுதியில் உள்ள வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் கைப்படவே கடிதம் எழுதி நேரில் அனுப்பி இருந்தேன், மேலும் என் கடிதத்தில், 'என் உயிருக்குப் பயந்து உங்களைக் காண நேரில் வராதிருக்கிறேன் என யாரும் கருதிட வேண்டாம். காவல்துறையினரது அறிவுரைக்கும், கழக முன்னணியினர் அன்புக் கட்டளைக்கும் கட்டுப்பட்டுத்தான், உங்களைக் காண வெளியில் வரமுடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப் பட்டுள்ளேன். விரைவில் இந்த நிலை மாறும்; நம்முடைய ஆட்சி அமையும்; தமிழகத்தில் சீரழிந்துபோன சட்டம்-ஒழுங்கு சீர்படுத்தப்படும்; அமைதி மிக்க தமிழ்நாடு உருவாகும். அத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்துவிட்டு, ஓடோடி உங்களை வந்து சந்திப்பேன்; நன்றி கூறுவேன், தொகுதிக்கான நற்பணிகளை மேற்கொள்வேன்' என்றும் தெரிவித்திருந்தேன். என் நிலைமையை நீங்கள் புரிந்து கொண்டீர்கள். இங்கு நான் கிராமம் கிராமமாக நேரில் சென்று ஆதரவு கோரியபோது, 'என்னை உங்கள் வீட்டுப்பிள்ளையாக நினைத்து, எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்' என்று கேட்டுக்கொண்டேன். அந்த என் அன்பு வேண்டுகோளை மனமுவந்து ஏற்று, என்னை உங்கள் வீட்டுப் பிள்ளையாகவே பாவித்து, எனக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்த காங்கேயம் தொகுதி மக்களுக்கு, நான் என் வாழ்நாள் முழுவதும் பணிபுரியக் கடமைப் பட்டுள்ளேன்.

சொன்னது சொன்னபடி, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குச் சீர்செய்யப்பட்டு, போராளி குழுக்களின் நடமாட்டத்தையும், அவர்களது மிரட்டல்களையும் ஒடுக்கி, சரித்திரச் சாதனைகள் பலவற்றை அரசின் மூலம் நிகழ்த்திவிட்டு, உங்களைச் சந்திக்க ஓடோடி வந்திருக்கிறேன்.

நான் இத்தொகுதியின் பிரதிநிதியாகச் சட்டமன்றத்தில் பொறுப்பேற்காமல், என்னை வெற்றி பெறச்செய்த இன்னொரு தொகுதியான பர்கூர் தொகுதியின் பிரதிநிதியாகச், சட்டமன்றப் பேரவையில் அங்கம் வகிப்பதற்கான உண்மைக் காரணத்தை இன்று உங்களிடம் தெரிவிக்கவும் நான் கடமைப்பட்டுள்ளேன். காங்கேயம் தொகுதி அமைந்துள்ள பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், தற்போது ஒன்றுக்கு இரண்டு அமைச்சர்கள்; மாண்புமிகு சகோதரர்கள் முத்துசாமி அவர்களும், செங்கோட்டையன் அவர்களும் இருக்கின்றனர். ஏற்கெனவே

பல்வேறு சந்தர்ப்பங்களில், வேறு பலரும் இப்பகுதியில் இருந்து அமைச்சர்களாக இருந்துள்ளனர். அந்த வகையில் காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, இம் மாவட்டத்தில் ஏனைய தொகுதிகளும், அவ்வப்போது சில அமைச்சர்களின் நேரடிப் பராமரிப்பில் இருந்திட வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

ஆனால், உங்களைப் போன்றே பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புக்களுடனும், என்னை வெற்றி பெறச் செய்திட்ட, பர்கூர் தொகுதி அமைந்துள்ள தர்மபுரி மாவட்டத்தின் பிரதிநிதிகளாக, இதுவரை, நமது நாடு சுதந்திரமடைந்த காலத்தில் இருந்தே பார்த்தால் கூட, ஒருவர்கூட அமைச்சரவையில் பொறுப்பேற்கவில்லை, என்ற வருந்தத்தக்க நிலையே இருந்து வந்துள்ளது.

பர்கூர் தொகுதிச் சிறப்பு

பெரியார் மாவட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தருமபுரி மிகவும் பின் தங்கிய மாவட்டமாகும். எனவே, அப் பகுதி மக்களின் அப்பெருங்குறையை, வாட்டத்தைப் போக்கவே, பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக்கொண்டு, இத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தேன் என்ற உண்மையை - எனது உள்ள உணர்வை - தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இதுதவிர, வேறு எக்காரணமும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களாகிய உங்களை நான் என்றுமே மறக்க முடியாது. ஏனென்றால், என்னை முதலில் தேர்ந்தெடுத்து முதலமைச்சராக ஆக்கியதோடு மட்டுமல்லாமல், நான் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து நடந்த இடைத்தேர்தலில், என்மீது கொண்ட நம்பிக்கை காரணமாகவும், என் வேண்டுகோளுக்குச் செவிமடுத்தும், எனக்காக நீங்கள், இங்கே வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களையும், அமோகமாக வெற்றிபெறச் செய்து, இது எனது தொகுதிதான் என்பதை உறுதிப்படுத்தினீர்கள்.

ஆனால், என்னை நம்பி வாக்களித்த உங்களை மறந்துவிட்டேனா என எவரும் அஞ்ச வேண்டாம். உங்களையெல்லாம் நேரில் சந்தித்து, இந்த உண்மையைத் தெரிவித்துக்கொள்ளவே, இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, இப்போது அலைகடலெனத் திரண்டுள்ள உங்கள் முன் நின்று கொண்டிருக்கின்றேன்.

பர்கூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை நான் தக்கவைத்துக் கொண்டுள்ளேன் என்றாலும், என்னை முதலமைச்சராக்கிட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும், உற்சாகத்தோடும், என்னை வெற்றி பெறச்செய்த இக் காங்கேயம் தொகுதி, என்றும் எனது சொந்தத் தொகுதிதான் என்பதை, மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதிக்கு என் மனதில் என்னென்ன வகையில் முன்னுரிமை உண்டோ - அதே முன்னுரிமை காங்கேயம் தொகுதிக்கும் உண்டு; என்றென்றும் உண்டு என்பதை மிக அழுத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் - பர்கூர் மட்டுமல்லாமல், மிகச் சோதனையான ஓர் காலக்கட்டத்தில், 1989 தேர்தலில் என்னை முதன் முதலாகச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த, மதுரை மாவட்டம் போடி

தொகுதியும் எனது தொகுதியே என்பதை ம் நன்றியோடு தெரிவித்துக் கொள்ளக் டமைப்பட்டுள்ளேன்.

என்னைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச்செய்த இம்மூன்று தொகுதிகள் ட்டுமல்லாமல், என்மீது மிகுந்த நம்பிக்கை காண்டு, தமிழகம் முழுவதும் உள்ள தொகுதிகள் அனைத்திலும், அமோக வெற்றியை எங்கள் அணிக்கு அள்ளிக் வித்தார்களே; அந்த வகையில், தமிழகத் ில் உள்ள அனைத்துத் தொகுதிகளும் னது தொகுதிகளே என்ற உணர்வுடன் ான், உங்கள் சகோதரியான நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை, ங்கள் நன்கு அறிவீர்கள்.

னித தெய்வங்கள்

எங்களை வழிநடத்திச் செல்வது - ங்களை இத்தகைய உயர்வுக்கு ஆளாக்கி ள்ள ஏழை, எளிய, பின்தங்கிய, தாழ்த் ப்பட்டவர்களாக உள்ள மனித தெய் ங்கள் எங்கள் மீது கொண்டுள்ள ம்பிக்கையும் - மாமனிதர்களாக வாழ்ந்து றைந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, ரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகி யாரின் நல்ல தத்துவங்களும் தான் ஆகும்.

நாங்கள் மக்களை முழுமையாக நம்பி தேர்தலில் நிற்பவர்கள். அதனாலேதான், ந்த வேட்பாளரை எங்கு நிற்க வைத் ாலும், எங்கள் வெற்றி உறுதியாகிறது. ில கட்சிகள் வேட்பாளரை மாற்றினால் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையில், னநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கி, பல றை முழுத் தோல்வியைத் தழுவிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

மக்களையும் என்னையும் எந்தச் சக்தியும் பிரித்துவிட முடியாது, என்ப தற்குரிய அனுபவ, நேரடி எடுத்துக் ாட்டுகளில் ஒன்றுதான், எனது காங்கேயம்

சரித்திரச் சாதனைகள் பல நிகழ்த்தியுள்ள அரசு இது!

தொகுதியின் தொடர் வெற்றியாகும். எங்களை நம்புகிறவர்களுக்கு நாங்கள் தொண்டு செய்கிறோம். நம்பாதவர்கள் தோல்வியால், விரக்தியால் துவண்டு போகிறார்கள். ஏழைகள் என்னை, என் இயக்கத்தை அதிகமாக நேசிக்கிறார்கள், நம்புகிறார்கள். அது ஏழைகளின் குற்றமா? அல்லது எங்கள் குற்றமா? ஏழைகளின் குரலாய் இருந்து, ஏழைகளின் நலனுக்காகவே நல்லாட்சி புரிந்த புரட்சித் தலைவரின் வாரிசுகள் நாங்கள், ஆகவேதான் என்ன எதிர்ப்பு வந்தாலும், அது எந்தத் திசையிலிருந்து வந்தாலும், அவைகளைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், நான் ஏழை மக்களுக்குப் பணியாற்றுவதையே, என் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.

என்மீது தமிழக மக்கள் கொண்டுள்ள அளப்பரிய அன்பை ஈடுகட்டுவதற்காகவும், அவர்கள் என்மீது செலுத்தியுள்ள நம்பிக்கைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகவும், நான் மேற்கொண்டுள்ள புனிதப் பயணத்தை, என் உயிருக்கேகூட ஊறு நேரலாம் எனப் பலரும் எச்சரித்து வந்தாலும், தொய்வில்லாமல் தொடருவேன் என்று உறுதி கூறுகின்றேன். என்னைப் பொறுத்தமட்டில், உயிருக்குப் பயந்து, ஏற்றுக்கொண்ட புனிதப் பணியில் இருந்து சிறிதும் நான் பின்வாங்க மாட்டேன்;

நான் மக்களாகிய உங்களை மட்டும் நம்புவதால், எக்காலத்திலும் சோர்ந்து போக மாட்டேன்.

'அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா'

- எனப் பரணி பாடிய புரட்சித் தலைவர் வழி நடக்கும் என்னை, எவரும் பயமுறுத்திப் பணிய வைத்துவிட முடியாது. எனது நோக்கத்தைத் திசை திருப்பி, மக்கள் மன்றத்திலிருந்து என்னை அகற்றி விட, எவர் நினைத்தாலும் அவர்கள் துவண்டுபோவார்கள், தோல்வியைத் தழுவுவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எதிர்ப்பையும் சந்திக்கின்ற, சமாளிக்கின்ற பயிற்சியை, நான் புரட்சித் தலைவரின் பாடசாலையின் நன்கு பயின்று உள்ளேன்.

ஊக்க சக்தியும் ஆக்க சக்தியும்

புரட்சித் தலைவர் எனக்கு வழங்கி விட்டுப் போயிருக்கிற அளவிட முடியாத ஊக்க சக்தி அது! என்மீது மறைமுகத் தாக்குதல் நடத்துவோரின் வியூகத்தை முறியடிக்கும் ஆக்க சக்தி அது!!

சீர்கெட்டுக் கிடந்த தமிழகச் சட்ட ஒழுங்கு நிலையினை நிமிர்த்திக் காட்டிய பாங்கறிந்து, இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பலரும் நம்மை மனந்திறந்து பாராட்டும் நிலையை எய்தி உள்ளோம். தமிழகம் இழந்த பெருமையை மீண்டும் ஈட்டித் தருவதில், நமது அரசும், இயக்கமும் விரைந்து செயலாற்றி வருகின்றன.

இன்றைய தினம், காங்கேயம் மற்றும் அனைத்துத் தொகுதி மக்களின் நல்லாதரவோடு அமைந்துள்ள, உங்கள் சகோதரியின் தலைமையிலான உங்கள் அரசு, ஒட்டுமொத்த தமிழகத்தின் உயர்வுக்கும் - வளத்திற்கும், உரிய உயர்வான பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்று, உங்கள் ஆசியோடு முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்தவுடன், முதல் உத்தரவாக மலிவுவிலை மதுக்கடைகளை மூடியதிலிருந்து, அண்மையில் நிலமற்ற ஏழை எளியோர் அனைவர்க்கும் பொங்கல் திருநாளுக்கென, இலவசமாக வேட்டி சேலைகள் வழங்க உத்தரவிட்டது வரை, ஏழை எளியோர் துயர் துடைப்பதையே, குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வருகிறோம்.

அதே நேரத்தில், நமது திட்டமிட்ட பயணத்தில் பல்வேறு இன்னல்களையும், எதிர்பாராத இடர்ப்பாடுகளையும் சந்திக்கிற பின்னணிக்கு, நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இதில் குறிப்பாக ஏழைகளைப் பாதிக்கிற பிரச்சினைகள் பற்றி,



ஏற்கெனவே மக்களின் கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.

மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், மத்திய அரசு அரசி விலையை உயர்த்தி உள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களுக்குப் பதில் சொல்கிற நிலையில், இப்போது நான் இருக்கிறேன். அரிசி விலை உயர்வினால் மற்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் ஏறியுள்ளன. இந்த விலையேற்றத்திற்கான காரணங்களை மட்டும், சாதாரண மக்களுக்குச் சொல்லிவிட்டால் போதுமா?

அதனால் அவர்களைத் திருப்திப்படுத்திவிட முடியுமா? அவர்களைக் கைதூக்கிவிடுகிற காரியத்தை, அவர்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காண, நமது அரசே முன்வர வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

உர விலை ஏறியபோது, மண்ணெண்ணெய் விலை ஏறியபோது, டீசல், பெட்ரோல் மற்றும் சமையல் வாயு விலை ஏறியபோதெல்லாம், நான் மத்திய அரசின் கவனத்திற்கு அவைகளை நேரத்தோடும், காலத்தோடும் கொண்டு வந்திருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டின் திட்டச் செலவினை மத்திய அரசு குறைத்துவிட்டது என்று, பல்வேறு விவாதங்கள் மக்கள் மன்றத்தில் இப்போது நடந்து வருகின்றன. ஒரு சிலர், வேறு எந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்புப் பெறாத காரணத்தினால், திட்டச் செலவுப் பிரச்சினையை முன்வைத்து, நம்மைத் திட்ட முன் வந்திருக்கின்றார்கள். மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டச் செலவிற்கு, எங்கள் அரசின் செயல்பாடுகள் காரணமில்லை. இருந்தபோதிலும், தமிழகத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி, இந்த ஆண்டுத் திட்டச் செலவினை மத்திய அரசிடமிருந்து உயர்த்திப் பெறுவதற்கு, அனைத்து முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். திட்டச் செலவுகளுக்குப் பணம் பெறுவதை மட்டும் அளவுகோலாக வைத்து, ஒரு மாநில அரசின் திறமையை, செயல்பாட்டை எவராலும் எடைபோட முடியாது. ஒரு ஜனநாயக நாட்டில், நிர்வாக முடிவுகளுக்கும், அரசியல் முடிவுகளுக்கும் உள்ள தொடர்பை, உண்மையான திறனாய்வாளர்களால்தான் கண்டுகொள்ள முடியுமே தவிர, அரசியல் குழப்பவாதிகளால் அதனை அறிந்து கொள்ளமுடியாது. இந்திய அரசியல் அமைப்பில், மாநிலங்கள் தங்களது எதிர்ப்பை ஜனநாயக முறையில் தெரிவிக்கிற பழக்கம், நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு மாநிலமும், திட்டச் செலவு குறித்து, மத்திய அரசிடம் அந்த வகையில்தான் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

தொழிலாளர் நலன்

இப்படிப்பட்ட தடைகளின் மூலம், எங்கள் அரசின் மக்கள் நலப்பணிகளை, எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஆரம்ப காலத்திலேயே, எதிர்ப்பட்ட தடைகளைக் கடந்துதான், இந்த அரசு எல்லா வகையிலும் செயல்பட்டு வருகிறது.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்தான், நாட்டில் மிகவும் குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர்கள் என்பதை உணர்ந்து, தொழிலாளர்கள் நலன் பேணி, அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கும் எங்கள் அரசு, இந்த ஆண்டு தமிழர் திருநாளாம் பொங்கல் நாளையொட்டி, ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாயத் தொழிலாளர்களுக்கு, இலவசமாக வேட்டி, சேலை வழங்கி வருகிறது.

• வீடு சின்னதாக இருக்கும் காரணத்தாலேயே ஒருவருடைய மனமும் சின்னதாக இருக்கும் என்று அர்த்தமல்ல.

பணப்பற்றாக்குறை உள்ளபோதிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் செயல்வடிவம் கொடுத்துத் துவக்கிய, தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டுக்கு ஆந்திர மாநிலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும்பணி, விரைவில் முடிக்கப்படப் போராடும் உத்வேகத்தில்தான், அண்மையில் ஐதராபாத் நகரில் ஆந்திர முதல்வர் அவர்களைக் கலந்து பேசினேன். விரைவில் புரட்சித் தலைவர் அவர்களின் கனவு நனவாக்கப்படும் என்பதை, மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக் குடிநீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதோடு மட்டும், தண்ணீர்ப் பிரச்சினைகள் தீர்ந்துவிடவில்லை.

ஆத்திரக்காரர்கள்

தமிழ் மக்கள் தாய் என்று போற்றி வணங்கும் காவிரி நதி நீரைத் தமிழ்நாட்டிற்கு வரவிடாமல் தடுக்கும் சிலரின் நியாயமற்ற முயற்சிக்கு, இந்த அரசு கடுமையாக எதிர்ப்புக் குரல் கொடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். காவிரி நீர் நடுவர் மன்றமும், உச்சநீதி மன்றமும், அரசிதழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பை வெளியிட்ட மத்திய அரசும், நமது நியாயத்தைஉணர்ந்துதான் இருக்கின்றன. ஆனால் அதை உணர வேண்டிய அண்டை மாநிலமான கர்நாடக அரசு மட்டும், அதை உணர்ந்ததாகவே தெரியவில்லை. ஆண்டாண்டுக் காலமாய், கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சிக்கு உழைத்து வரும் கர்நாடகத் தமிழர் மீது, வன்முறைத் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்தின் வளர்ச்சியில், கர்நாடகத் தமிழர்கள் பங்கு எப்படிப்பட்டது என்பதை, கர்நாடகத்தில் வாழும் கன்னட மக்கள் அனைவரும் அறிவார்கள்.

மாநில அரசு மட்டும் மவுனம் சாதிக்கிறது; மக்களைத் திசை திருப்புகிறது. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது போல, ஒரு சில கன்னட வெறியர்கள் அவிழ்த்துவிட்ட வன்முறையால், ஒரு இலட்சத்திற்கும் மேலான, ஒரு பாவமும் அறியாத அப்பாவி கர்நாடகத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வன்முறையைத் தூண்டியவர்கள்மீது, கர்நாடக அரசு கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும்; இந்திய ஒருமைப்பாடு காக்க உடன் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பொது வாழ்வில் சுயநலம் தேடும் கர்நாடக வன்முறைக் கும்பல்களைக் கட்டுப்படுத்தி, தமிழ்நாட்டிற்கு ஓடி வந்துள்ள கர்நாடகத் தமிழர்களை, மீண்டும் முன்போலவே கர்நாடகத்தில் பாதுகாப்பாக வாழவைக்க, அனைத்து ஏற்பாடுகளையும் கர்நாடக அரசு செய்து தரவேண்டும். தமிழகத்தின் பெருந்தன்மையை, பொறுமையை, எவரும் பலவீனமாகக் கருதிடக் கூடாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாயமாகக் கிடைக்க வேண்டிய காவிரி நீர், தற்போதைக்குக் கிடைக்காமல் இழுபறியாய் இருந்தாலும், தமிழகத்தின் பெருந்தன்மைக்கு இயற்கையே உதவும் வகையில், நமது மாநிலத்தில் போதுமான அளவு மழை பெய்து, இந்த ஆண்டு தமிழகத்தில் வேளாண்மை, வெற்றிகரமாக அமையும் சூழ்நிலை உருவாகியுள்ளது கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மேம்பாட்டுக்கு உளப்பூர்வமாக, தீவிரமாக உழைக்கின்ற அரசு எங்கள் அரசு என்பதை, ஆட்சிப் பொறுப்பேற்ற ஒருசில மாதங்களிலேயே, தமிழக மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள். தேர்தல் வாக்குறுதிகளாக நாங்கள் அறிவித்திருந்த அனைத்தையுமே, ஒன்றன்

(41—ஆம் பக்கம் பார்க்க)

மாமல்லபுரம்

பொங்கல் நாட்டிய விழா

மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசும் மத்திய அரசும் இணைந்து, மாமல்லபுரத்தில் நடத்தும் இந்தப் பொங்கல் நாட்டிய விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, மக்கட்பணி ஆற்றி வருகின்ற எனக்கும் நாட்டியத்திற்கும், நிறைய தொடர்பு உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். பன்னாட்டுப் பயணிகள் நம் நாட்டிற்கு வருகை தந்து, இந்தத் துணைக் கண்டத்தில் உள்ள பல மாநிலங்களுக்குச் சென்று, அங்குள்ள கலை நுட்பங்கள், சிற்பங்களின் பெருமைகள், திருக்கோயில்களின் புராதனம், மக்களின் எளிமை, அவர்களின் உயர்ந்த பண்பு, ஆகியவற்றையெல்லாம் கண்டு களித்து; நமது சிறப்பான வரலாறு, உயர்ந்த நாகரீகம் போன்றவற்றை, ஆழ்ந்து உணர்ந்துகொள்ளக் கூடிய வாய்ப்பினை அவர்களுக்கு இந்த விழா தருகிறது. அந்த அடிப்படையில், இதுபோன்ற விழாக்களை ஏற்பாடு செய்வது, இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

நம் நாட்டிற்கு, குறிப்பாக இவ்வாண்டு, வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் வரவேண்டும் என்ற நோக்கத்துடன், இதுபோன்ற விழாக்கள் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மாநில அரசோடு மத்திய அரசும் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட முன்வந்துள்ளதை, நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். சுற்றுலா வளர்ச்சியில் மத்திய அரசும், மாநில அரசும் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இணைந்து செயல்பட்டால்தான், சுற்றுலா வளர்ச்சியில் சிறந்த சாதனைகளைப் புரிய முடியும். அதற்கு ஒரு முன்னோடியாகத்தான், இன்று இந்தப் பொங்கல் நாட்டிய விழா இங்கே நடத்தப்படுகிறது.

நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்க காலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து, மக்களின் உள்ளங்களிலே ஆன்மீக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும், விளக்குகிற காவியம். சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக் கலை

மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரதநாட்டியம் விளங்குகிறது.

''அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்'' என்று, இறைவனையே பரதக் கலையின் கண் கண்ட வடிவமாக, தமிழ் மக்கள் கருதுகின்றனர். இறைவனுடைய நடனமே உலகத்தின் ஆதாரமென, நம்முடைய பழம்பெரும் இலக்கியங்கள் போற்றுகின்றன. பல்வேறு மனித உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் பரதம் திகழ்கின்றது.

அன்றுபோல் இன்றும், பரதக் கலை, ஆடுவோர் உள்ளத்தில் இறையுணர்வு நிரம்பி நிற்கும் வகையிலும், காண்போர் உள்ளத்தில் உயர்ந்த இன்பம், ஆழ்ந்த அமைதி போன்றவற்றை உருவாக்கும் வகையிலும், எப்பொழுதும் மக்கள் மனதை ஈர்க்கும் ஓர் ஒப்பிலாக் கலையாக இருந்து வருகின்றது.

இந்தியத் திருநாட்டின் நடனங்கள், கலைப் பொக்கிஷங்கள் மட்டுமல்ல, அவை இந்திய

பொங்கல்-நாட்டிய விழா தொடக்க விழா

பொங்கல்-நாட்டிய விழா 15.1.92 அன்று மாலை 6 மணி அளவில் மாமல்லபுரத்தில் தொடங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நாட்டிய நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, மாமல்லபுரம் நகர் வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், விழா தொடங்கு முன்பாக, மாமல்லபுரம் புதிய அமைப்பின் மாதிரி அமைப்பினைப் பார்வையிட்டார். விழாவிற்குச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை வகித்தார்.

செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுற்றுலாத் துறையின் சார்பில் பொன்னாடை போர்த்தினார்; மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலா பிரியா இ.ஆ.ப. அவர்களும் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். இதனை அடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் அடிக்கற்களைத் திறந்து வைத்தார். ரூ.20 இலட்சம் செலவில் கிழக்கு—ராஜவீதி அபிவிருத்தித் திட்டம், ரூ.88 இலட்சத்தில் பேருந்து நிலையம், 7.07 இலட்சம் ரூபாய் செலவில் கோயில் அருகில் வாகனங்கள் நிறுத்தும் இடம். 5.60 இலட்சம் ரூபாய் செலவில், ஐந்து ரதங்கள் அருகில் வாகனங்கள் நிறுத்துமிடம், மற்றும் 2.87 இலட்சம் ரூபாய் செலவில் ஓய்வெடுக்கும் இடத்தையும் அர்ச்சுனனின் தவம்' இடத்தை அபிவிருத்தி செய்யவும் அடிக்கல் திறந்து வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வளர்ச்சிப் பணிகளைத் தொடங்கி வைத்தபின், சிறப்புரை ஆற்றினார்.

விழா துவங்கும் வரையில் நாதசுவர இசை வழங்கிய டாக்டர் நாமகிரிப்பேட்டை திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும், பரத நாட்டியம் ஆட இருந்த டாக்டர் பத்மா சுப்பிரமணியத்திற்கும் முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. க.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். விழாவிற்கு வருகை தந்திருந்த மக்கள் வெள்ளத்தில் ஏராளமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் காண முடிந்தது.

விழா இறுதியில் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் பரத நாட்டிய நிகழ்ச்சியும், ஆவடி காவல் துறையினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலை நிகழ்ச்சிகளைக் கடைசிவரை இருந்து கண்டுகளித்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
இரா. இராச சேகரன்



நாட்டின் ஒருமைப்பாட்டிற்குச் சான்றாகவும் விளங்குகின்றன. எனவே, இந்தக் கலைகளைக் கட்டிக்காத்து வளர்ப்பது, நமது தலையாயக் கடமையாகும்.

இந்தப் பொங்கல் நாட்டிய விழா, வரலாற்றுச் சிறப்புமிக்க, உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரத்தில் நடைபெறுகிறது. மாமல்லபுரம் ஒரு காலத்தில் வளம் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிய இடம். தமிழகத்தின் வரலாற்றுப் புகழையும், பண்பாட்டுப் பெருமையையும், நாகரிக மேம்பாட்டையும், விளக்கிக் காட்டிடும் தொல்பொருள் செல்வங்கள், இங்கு ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்தின் வரலாற்றுக்கு, புகழ் தரக்கூடிய பற்பல உண்மைகள் இங்கே புதைந்து கிடக்கின்றன. எத்தனையோ குடவறைக் கோயில்கள், பாறைச் சிற்பங்கள், கட்டடக் கோயில்கள், பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டு, இன்றும் தமிழகத்தின் பழமைக் கலைகளைப்பறைசாற்றும் சாட்சிகளாக நிலைத்திருக்கின்றன. அதற்கு மேலாக, மாமல்லபுரத்தை நிர்மாணித்த மன்னன், ஓர் கலையுலகையே இங்கு அமைத்துள்ளார்.

மாமல்லபுரத்துக் கலைகள், என்றென்றும் மக்கள் மனதில் அழியாத இடம் பெற்றுள்ளது போல, பன்னாட்டு மக்களை மாமல்லபுரத்தில் வரவேற்று, அவர்கள் தமிழகத்தின் எழில் மிகுந்த கலைகளைக் கண்டு, கேட்டு, இன்புறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பொங்கல் நாட்டிய விழாவும், மக்கள் மனதில் நின்று நிலவி, புகழ்பெற வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில், மாமல்லபுர நகர் வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், சுற்றுலா அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்ததிலும், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் கலந்து கொண்டுள்ள அனைத்துக் கலைஞர்களுக்கும், வருகை தந்துள்ள பன்னாட்டுப் பயணிகளுக்கும், இங்கு கூடியுள்ள அனைத்துப் பெருமக்களுக்கும், எனது பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாமல்லபுரம் பொங்கல்-நாட்டிய விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் (15.1.1992) ஆற்றிய உரை

நீலகிரி மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டிற்கு ரூ.49.190 இலட்சம் மொத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 1,574 நபர்களுக்கு மானியத் தொகையுடன் கூடிய கடன் வழங்கப்படும். இதில் மத்திய, மாநில அரசுகளின் பங்குகளாக ரூ.24.595 இலட்சம் வீதமாக இருக்கும்.

நடப்பு ஆண்டில் எண்ணிக்கை, நிதி அளவு கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்படும்:

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு - மொத்த இலக்கில் 50 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

2. பெண்களுக்கு - மொத்த இலக்கில் 40 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

3. ஊனமுற்ற நபர்களுக்கு மொத்த இலக்கில் 3 சதவிகிதத்துக்கும் குறையாமல்.

இதுவரையிலும் மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ரூ.24.594 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

பயனாளிகளின் தேர்வு முடிவு பெற்றுள்ளது. இதுவரையில் மொத்தம் 1,086 நபர்களுக்கு, ரூ.22.634 இலட்சம் வங்கிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சி (டிரைசம்):

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டிற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 35 நபர்கள் வீதம் மொத்தம் 140 நபர்கள் பல்வேறு பயிற்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் தற்போது 50 நபர்கள் பல்வேறு பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 300 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ரூ.55.500 இலட்சமும், ஒரு ஊராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.0.910 இலட்சமும், 4 பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு 7.200 இலட்சமும், 9 சிறிய பாலம் கட்டுவதற்கு ரூ.2,899 இலட்சமும், 2 மதிய உணவுக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.2.00 இலட்சமும், 25 தார்ச் சாலைகள் (20.2 கி.மீ.) அமைப்பதற்கு 44.897 இலட்சமும், 9 கப்பிச் சாலைகள் (6.8 கி.மீ.) அமைப்பதற்கு 11.480 இலட்சமும் 21 வடிகால் வேலைகள் செய்வதற்கு 5.997 இலட்சமும், 4 குடிநீர் விநியோகம் செய்வதற்கு 1.140 இலட்சமும், 13 இதர வேலைகளுக்காக 4.847 இலட்சமும், 250 எக்டேர் பரப்பிற்குச் சமூகக் காடுகள் ஏற்படுத்த ரூ. 5.480 இலட்சமும் ஆக ரூ.142.350 இலட்சத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பகுதி ரூ.41.60 இலட்சம் இதுகாறும் நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.40.24 இலட்சம் கிராம மற்றும் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் வேலைகளை நிறைவேற்றப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

தமிழக அரசு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், ஊரகப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான சில அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதாகும். இத்திட்டத்தின் கீழ், பருவ நிலைக்கு ஏற்ற வகையில் சாலைகள் அமைத்தல், இதுவரை குடிநீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளிகளுக்கு ஒரு சொந்தப் பள்ளிக் கட்டடமும், ஆரம்பப் பள்ளிக்கு ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடமும் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையம் கட்டடம் இல்லாத மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்தல், தெருவிளக்கு போடுதல், ஊராட்சிகளுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல் ஆகிய பணிகள் செய்து தரப்படும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் யாவும் செப்டம்பர் 1992-க்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட நிதியுடன் சேர்த்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையின் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செவ்வனே நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> அறியாமை-இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம், குருட்டு நம்பிக்கையின் அன்னை, சங்கடம் தோன்றிய இடம், அழிவும், வறுமையும் வாழ்ந்து வரும் தாயகம்.
>
> —இங்கர்சால்

நீலகிரி மாவட்டத்தில் பட்டு வளர்ச்சிப் பணிகள்

இயற்கை எழிலுக்குப் பெயர் பெற்றது நீலகிரி மாவட்டம். இம்மாவட்டத்தில் தேயிலை, காப்பி, காய்கறிகள், வாசனைப் பொருட்கள் உற்பத்தி போன்றவை முக்கியத் தொழில்களாக இருப்பினும், பட்டு வளர்ச்சித் தொழிலும் இம்மாவட்டத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பட்டு வளர்ப்பு மூலம் இம்மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றம் போன்றவைகளுக்குப் பட்டு வளர்ப்புத் தொழில் முக்கிய காரணமாக அமைகின்றன.

இம்மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி 1981-82-ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு, தற்சமயம் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கான சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குன்னூரில் உள்ள மாநில பட்டு ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தின் மூலம் 'தமிழ்நாடு வெள்ளை' என்ற வெள்ளை நிற நாட்டினக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, மத்திய பட்டு ஆராய்ச்சி மையத்தினரால் சிறந்த இனம் என ஒப்புதல் பெற்றுள்ளது இதன் சிறப்பாகும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

1991-92-ஆம் ஆண்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.9.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி 50.00 ஏக்கரில் புதிதாக முசுக்கொட்டை நடவு செய்யப்பட்ட மாதம் ரூ.150 உதவித்தொகையுடன் 51 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ள்ளது. இதில் 31 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்கள். இதன்பின் தலா ரூ.300 மதிப்புள்ள இலவசப் புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டில் நடவு மேற்கொள்ளத் தனியார் மூலம் சாம்பல் நோய் தாக்காத இனமாக எம்ஆர்.2 இனத்தில் 2.0 இலட்சம் நாற்றுகளும், அரசுப் பண்ணைகளின் மூலம் 1.44 இலட்சம் நாற்றுகளும் நடவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் குன்னூர் அருகே உள்ள ஸ்பிரிங்பீல்டு பட்டுப் பண்ணையில் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க ரூ.3.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பண்ணைக்காக 2.00 ஏக்கரில் முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வெள்ளேரிக் கம்பையில் உள்ள ஆதிவாசிகள் பண்ணையைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்க ரூ.0.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் தலா ரூ.8,500 வீதம் 51 நபர்களுக்குக் கடன் வழங்கி அதில் 20 பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 15 சதவிகித மானியமும், 31 தாழ்த்தப்பட்ட, மலைச்சாதியினருக்கு 25 சதவிகித மானியமும் வழங்கத் தொகை ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் இதுவரை 26 நபர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் இம்மாவட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 1991-92-ஆம் ஆண்டு முசுக்கொட்டை விரிவாக்கம் இலக்கு 125.00 ஏக்கர் என நிர்ணயிக்கப்பட்டு 120.00 ஏக்கர் முசுக்கொட்டை நடவு செய்யப்பட்டுள்ளது. இதில் 40 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு தலா ரூ.150 வீதம் பயிற்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்குத் தலா ரூ.150 மதிப்புள்ள விஞ்ஞானப் பொருட்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதில் 12 நபர்கள் தாழ்த்தப்பட்ட, மலைச்சாதி இனத்தவர்கள், 20 பேர் பெண்கள். இத்திட்டத்தின் மூலம் தலா ரூ.8,500 வீதம் 42 நபர்களுக்கு மானியமில்லாக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 85,000 முட்டைத் தொகுதிகள் வளர்த்து சுமார் 28.0 இலட்சம் மதிப்புள்ள 22,350 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், சரக உதவி ஆய்வாளர், இளநிலை ஆய்வாளர்கள் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பைவோல்டின் பண்ணை, மசக்கல்

இந்தப் பண்ணையில் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யத் தேவையான இரு சுழற்சி இனப் (பைவோல்டின்) பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு அரசு வித்தகம் கோவைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் 1991-92-ஆம் ஆண்டில் 1.15 இலட்சம் இரு சுழற்சி இன விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இளம்புழு வளர்ப்பு மையம் தெங்குமாராஹாடா

இந்தப் பண்ணை மூலம் நவீன முறையில் இளம்புழு வளர்த்துத் தருவதால் தனியார் விவசாயிகள் முதிர்ந்த புழு வளர்ப்பில் தோல்வியைத் தவிர்த்து அதிகப் பட்டுக் கூடுகள் அறுவடை செய்கிறார்கள். இம்மையத்தில் 1991-92-ஆம் ஆண்டில் 36.600 முட்டைத் தொகுதிகள் இளம் புழுக்களாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பது அமர கவியின் வாக்கு. இவ்வாக்கினை அடிப்படையாகக் கொண்டு பட்டுத் தொழில் வளர்ச்சி நீலகிரி மாவட்டத்தில் செம்மையுற நடைபெற்று வருகிறது.

-மூ.நா. கிருஷ்ணசாமி,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்



தகவல் தொடர்பில் அஞ்சல் துறையின் அரிய சாதனை

நமது நாட்டில் தகவல் தொடர்பில் முக்கியப் பங்கு வகிப்பது அஞ்சல் துறையே ஆகும். இந்தியாவின் மக்கள் தொகையில் பாதிக்குமேலானோர் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள். தொலைதூரப் பகுதிகளிலும் மூலை முடுக்குகளிலும் வசிக்கும் இந்த மக்களுடன் தொடர்பு கொள்ள உதவும் ஒரே சாதனம் கடிதப் போக்குவரத்தே ஆகும்.

உலகத்திலுள்ள அனைத்து நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது தபால் துறையே மிகப் பெரிய விரிந்த துறையாகும். ஆண்டுதோறும் சுமார் 4,000 மில்லியன் கடிதங்களை இத்துறை கையாளுகிறது. இந்தியாவிலுள்ள மொத்தம் 1,47,500 அஞ்சல் அலுவலகங்களில் சுமார் 89 சதவிகிதம் (1,32,500) கிராமப்புறங்களில் நிறுவப்பட்டுள்ளன. நமது நாட்டின் மிகத் தொன்மையான துறைகளில் ஒன்றான அஞ்சல் துறை, சுமார் 6 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் அளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தகவல் தொடர்பில் ஈடுபட்டுள்ள பிற துறைகள், நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு மிக வேகமாக முன்னேறி வந்தாலும், அஞ்சல் துறையும் தனது சேவையில் பின்தங்கிவிடவில்லை. அஞ்சல் அலுவலகங்களில் போதிய இடவசதியின்மை, ஒழுங்கற்ற முறையில் விரைவில் உருவாகிவிடும் நகரங்கள், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்வதற்கு இடையூறாக உள்ள போக்குவரத்து நெரிசல்கள், நாளுக்கு நாள் பெருகிவரும் ஆயிரக்கணக்கான கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக் கிடைக்கும் குறுகிய காலம் போன்ற பல இடையூறுகள் அஞ்சல் துறையின் பணியை மிக வெகுவாகப் பாதித்த போதிலும், இத்துறை தனது பணியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு செவ்வனே பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது.

அஞ்சல் துறையின் பணியினை மேம்படுத்தும் பொருட்டு அமைக்கப்பட்ட நிபுணர் குழு 1980-இல் அளிக்கப்பட்ட தனது அறிக்கையில், அஞ்சல் துறை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தது. இதன் அடிப்படையில் இந்திய அஞ்சல் பணியில் நவீன தொழில்நுட்பங்களைப் படிப்படியாகப் புகுத்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

நமது நாட்டில் சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் உச்சி வேளைகளில் பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் வந்து குவிகின்றன. இவைகளைக் குறுகிய காலத்திற்குள் பிரித்து பட்டுவாடா செய்யவேண்டியிருக்கிறது. மனிதர்களைக் கொண்டு இவற்றைப் பிரிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால், ஒரு நாளைக்கு 30 ஆயிரம் கடிதங்களைப் பிரித்து வகைப்படுத்தக்கூடிய அஞ்சல் பிரிக்கும் இயந்திரங்களைக் கையாள அஞ்சல் துறை தீர்மானித்துள்ளது. இதன்படி முதல்கட்டமாக சென்னை, டெல்லி, கல்கத்தா, பம்பாய், பெங்களூர், ஆமதாபாத், ஐதராபாத் ஆகிய நகரங்களில் இத்தகைய நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைப்போல அஞ்சல் அலுவலகங்களில், மணியார்டர்கள், பதிவு அஞ்சல்கள், பார்சல்கள், துரித அஞ்சல் (Speed Post) போன்றவற்றைக் கையாளுவதில் ஏற்படும் நீண்ட காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில், நாட்டின் பல்வேறு அஞ்சல் அலுவலகங்களிலும் உள்ள சுமார் 8,000 கவுண்டர்களை இயந்திரமயமாக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவைகளில் பலநோக்குப் பயனுடைய இயந்திரங்களைக் கொண்ட கணிப்பொறிச் (Computer) சாதனங்கள் நிறுவப்படும். இவற்றால் கடிதப் போக்குவரத்து துரிதப்படுத்தப்படுவதுடன், அஞ்சல் அலுவலகங்களில் தற்சமயம் நிலவும் இடநெருக்கடியும் கணிசமான அளவுக்குக் குறையும்.

மணியார்டர்களைப் பட்டுவாடா செய்வதில் ஏற்படும் காலதாமதம் கணிசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், இன்னும் நமது நாட்டிலுள்ள சில கிராமங்களுக்கு மணியார்டர் சென்றடைய 15 நாட்களுக்கு மேல் ஆகிறது. கிராமப்புறங்களில் மணியார்டர்களைக் காலதாமதமின்றி உடனுக்குடன் பட்டுவாடா செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மணியார்டர்கள் மற்றும் கடிதங்களைத் துரிதமாக அனுப்ப மின்னணுச் சாதனங்கள் (Electronic Money Order Transfer) அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

நகரங்களில் நாளுக்குநாள் உருவாகிவரும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீடுவீடாகச் சென்று தபால் பட்டுவாடா செய்வதில் அஞ்சல் துறைக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டும், கடிதங்களை விரைவில் பட்டுவாடா செய்யவும் பல மாடிக் கட்டடங்களில் குடியிருப்பவர்கள் தங்கள் கட்டடத்தின் அடித்தளத்தில் தனியாகத் தபால் பெட்டி வைத்து அஞ்சல் துறைக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்எனவும்வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டபூர்வமான ஆணை 1991 நவம்பர் 1 முதல் அமலுக்கு வந்துள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் நாட்டில் எந்த ஒரு கிராமமும் 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் அஞ்சல் நிலையம் இல்லை என்ற குறையைப் போக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, தற்போது நடைமுறையிலிருக்கும் உள்நாட்டுத் துரிதக் கடிதப் போக்குவரத்துப் போல, பம்பாய், டெல்லி நகரங்களிலிருந்து பன்னாட்டுத் துரித கடிதப் போக்குவரத்தை 1992-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் முதல் அறிமுகப்படுத்த அஞ்சல் துறை திட்டமிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

- பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில்

பட்டுத்தொழில் வளர்ச்சி

• தென் மாவட்டங்களில் திண்டுக்கல் அண்ணா மாவட்டம் பட்டுத் தொழி லில் முன்னணியில் விளங்குகிறது. இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பட்டுத் தொழில் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் 2,732 ஏக்கரில் பட்டுச் செடி நடவு செய்த 3,500 விவசாயிகள் பட்டுத் தொழில் செய்து வருகின்றனர். ஒரு ஏக்கரில் மல்பரி நடவு செய்தால் 5 நபர் களுக்கு நேரடி வேலைவாய்ப்புக் கிடைத்து வருகிறது. பட்டுத் தொழிலை ஊக்கப்படுத்த அரசு பல திட்டங்களையும் உதவிகளையும் அளித்து வருகிறது.

திண்டுக்கல்லைத் தலைமையிட மாகக் கொண்டு மாவட்டப் பட்டுத் தொழில் மையம் இயங்கிவருகிறது. இம்மாவட்ட மையத்தின்கீழ் ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்கள் பழனி, வத்தலகுண்டு, வேடசந்தூர், சாணார்பட்டி, நத்தம் ஆகிய இடங் களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இம்மையங்கள் மூலம் பட்டுத் தொழில் செய்யப் புதிய விவசாயிகளைத் தேர்வு செய்தல், அவர்கள் மல்பரி செடி நடவு செய்யத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்குதல், விவ சாயிகட்குத் தேவையான பட்டுப் புழு வளர்ப்புப்பயிற்சி அளித்தல், பட்டு முட்டைகள் வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன. இந்த ஐந்து தொழில்நுட்பச் சேவை மையங்களில் 45 சரக அலுவலர்கள் இந்தப் பணியைச் செய்து வருகின் றனர். ஆண்டுக்கு 300 விவசாயி கட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக் காலத்தில் ரூ.150 உதவித் தொகையாகவும் ரூ.150 மதிப்புள்ள உபகரணங்களும் வழங்கப் படுகின்றன. கடந்த மூன்று ஆண்டு களில் சுமார் ஆயிரம் விவசாயி கட்குப் பட்டு வளர்ப்பில் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

உலக வங்கி உதவியுடன் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் இம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மொத்த ஒதுக்கீடான ரூ.41.7 கோடியில் ரூ.2 கோடி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு 1989-90-இல் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. 1991-92 திட்டத்தின் மூன்றாவது ஆண்டு ஆகும். ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 1,500 ஏக்கர் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள் ளது. நடப்பு ஆண்டு முடிய 900 ஏக்கர் நடவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புதிதாக மல்பரி நடவு செய்யும் விவசாயிகட்கு, மல்பரி நாற்றுக்கள் ஏக்கருக்கு 5,000 என்ற விகிதத்தில் வழங்கப் பட்டு வருகின்றன. நாற்றுக்கென அரசு ஏக்கருக்கு ரூ.300 மானியம் வழங்குகிறது. புது நடவு செய்த விவ சாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப் புப் பயிற்சி அளித்தல், அவர்கட்குப் புழு வளர்ப்புத் தளவாடச்சாமான்கள் புழு வளர்ப்பு மனை கட்ட ரூ.7,500 வங்கிகள் மூலம் கடன் பெற உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், திண்டுக்கல் லில் ஏற்கெனவே உள்ள பட்டு முட்டை வித்தகம், பட்டுக்கூடு அங் காடி ஆகியவை சுமார் ரூ.25

இலட்சம் செலவில் விரிவுபடுத்தப் பட்டு வருகிறது.

புதியதாகப் பட்டுநூற்பு ஆலைகள் தொடங்க உள்ள பட்டுநூற்பாளர்களுக்கு நடைமுறை மூலதனக் கடன் பெற உதவி செய்யப்படுகிறது. இதில், ஒரு பேசினுக்கு ரூ.9,000 வங்கிக் கடன் பெறவும் அவ்வாறு கடன் வழங்கும் வங்கிகளுக்கு ஒரு பேசினுக்கு ரூ.4,500 அரசு நிரந்தர இட்டு வைப்பு வழங்குகிறது. அதிலிருந்து வரக்கூடிய வட்டியின் ஒரு பகுதி, கடன் பெற்ற நூற்பாளருக்கு வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 120 பேசின்களும் 14 சர்க்காக்களும் பட்டுநூற்புக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 300 பெண்கள் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

விவசாயிகட்குத் தரமான முட்டை வழங்க ஆண்டுக்கு 10 இலட்சம் முட்டை உற்பத்தி செய்யும் திறனுடன் ஒரு பட்டு முட்டை வித்தகம் செயல்பட்டு வருகிறது. இவ்வித்தகம், மதுரை, பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளின் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகிறது. இது தவிர, நடப்பு ஆண்டில் ஒரு தனியார் வித்தகம் திண்டுக்கல்லில் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், செயல்பட்டு வருகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளைத் தரத்திற்கேற்ற நியாயமான விலைக்கு விற்பனை செய்ய திண்டுக்கல்லில் அரசு பட்டுக்கூடு அங்காடி செயல்பட்டு வருகிறது. இங்கு அரசு மற்றும் தனியார் பட்டுநூற்பாளர்கள் ஏல முறையில் பட்டுக்கூடு கொள்முதல் செய்து வருகின்றனர். ஆண்டுக்கு 1.5 இலட்சம் கிலோ கூடுகள் அங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தேசியப்பட்டு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், புதிய பட்டு நூற்பாளர்களுக்குத் தேவையான தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு கிராமியப் பட்டுநூற்பு மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு, ஆண்டுக்கு 40 பெண்களுக்கு 6 மாதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாதம் ஒரு பயிற்சியாளருக்கு ரூ.250 பயிற்சித் தொகை வழங்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளில் 128 பயிற்சியாளர்கட்குப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. உதவித் தொகை மற்றும் கச்சாப் பொருள் ஆகியவற்றுக்கு ஆண்டுக்கு ரூ.4.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

மாதிரி மல்பரி, பண்ணைகள் மூன்று சின்னகலையம்புத்தூர், நாகம்பட்டி, வேல்வார்க்கோட்டை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இங்கு இளம்புழு வளர்த்து விவசாயிகட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆண்டுக்கு 45,000 முட்டைகள் வளர்த்து விநியோகம் செய்யப்படுகின்றன. இங்கு மல்பரி நாற்றுகள் வளர்த்து விவசாயிகட்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 100 விவசாயிகட்கு 1991-92-ஆம் ஆண்டில் 2.63 இலட்சம் செலவில் திட்டம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், புதியதாக நடவு செய்யும் விவசாயிகட்குப் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி, கல்விச் சுற்றுலா, புழு வளர்ப்பு மனை கட்ட புழு வளர்ப்புத் தளவாடம் மற்றும் செடி நடவு செய்யக் கடன் ரூ.9,000 வழங்கப்பட்டு அதில் 25 சதம் மானியமாக வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் ஏழு தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 ஏக்கரில் மல்பரி நடவு செய்யவும், 20 பெண்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், 20 புழு வளர்ப்பு மனைகள் அமைத்து அதில் தேவையான உபகரணங்கள் வைக்கவும் பயிற்சி பெற்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் 0.50 ஏக்கர் மல்பரி தோட்டமும் புழு வளர்ப்பு மனை அதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு உள்ளன.

5 ஆண்டுகள் கழித்து இதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைச் சேமிப்பு செய்ததன் மூலம் சொந்த நிலம் வாங்கி இதே தொழிலைத் தொடரத் திட்டமிடப்பட்டு 1,440 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கு ஆகும் மொத்தம் ரூ.16.10 இலட்சத்தில் அரசு உதவியாக ரூ.11.16 இலட்சம் ஏழு தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

திண்டுக்கல், பழனி, நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை விவசாயிகட்குத் தேவையான இடுபொருள்கள் வழங்கவும், மேலும் தேவையான சேவைகளைச் செய்து வருகின்றது. இங்கு பட்டுநூல் முறுக்கேற்றும் பணி நடைபெற்று வருகின்றன. இங்கு சின்னாளப்பட்டியில் ரூ.4 இலட்சம் செலவில் பெண்களுக்கான பட்டுநூல் நூற்பு மற்றும் முறுக்கேற்றும் சங்கம் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 60 பெண்கள் அங்கத்தினர்களாகவும், சங்கத்தில் பணி செய்வதன் மூலம் நிரந்தர வேலைவாய்ப்பும் பெற்று வருகின்றனர்.

மு. பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

சாலை விபத்துக்கள் குறைந்துள்ளன!

1990-ஆம் ஆண்டைக் காட்டிலும் 1991-ஆம் ஆண்டில் சாலை விபத்துக்கள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1990-இல் நடந்த 5,877 விபத்துக்களில், 481 பேர் இறந்துள்ளனர். 1991-இல் 5,103 விபத்துக்களில், 416 பேர் இறந்துள்ளனர்.

சென்னை நகரில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக 1991-இல், 1,01,513 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் அதிக வேகமாக வாகனங்களை ஓட்டியதற்காக 36,798 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதேபோல சமிக்ஞைகளை மதிக்காமல் சென்றதற்காக 26,557 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்களைச் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன் தெரிவித்தார்.

திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாள் விழா, தமிழ்நாடு அரசு சார்பில் 16.1.1992 அன்று மாலை சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழா மேடையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் படம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

வரவேற்புரை

தமிழ்த்தாய் வாழ்த்தோடும், டாக்டர் சிவ சிதம்பரம் பாடிய திருக்குறள் வாழ்த்தோடும் தொடங்கிய இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்புரையாற்றினார்.

'இந்த நந்நாள், தமிழ் வளர்ச்சித் துறைக்கு வாய்த்த ஒரு பொன்னாள்; இந்த நாளில் புரட்சித் தலைவர் அவர்களே திருவள்ளுவர் விருது வழங்கும் முறையினைக் கொண்டு வந்தார்; இன்றைய தினம் அதற்கு ஆக்கம் தருகிறார் புரட்சித் தலைவி அவர்கள்; புதியதோர் வரலாற்றைப் பொன்னெழுத்துக்களால் பொறித்து வருகிறார்' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.

தலைமையுரை

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில்-

'புரட்சித் தலைவியின் அரசு காயாத சூரியனாகத் தேயாத சந்திரனாகப் பவனி வந்துகொண்டிருக்கிறது. காய்கின்ற சூரியன் வெளியே எங்கோ இருக்கலாம்; அது மாலை

மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு - திருவள்ளுவர் விருது, சிறந்த நூல்களுக்குப் பரிசு, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி, தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதிய அரசு அலுவலர்களுக்குப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

யில் மறைந்துவிடும். இந்தச் சூரியனோ, மாலை வந்தும் மறையாமல் இருப்பதோடு, தேயாத சந்திரனாகி ஒளிவீசி ஜொலிக்கிறது; அதனால்தான் காயாத சூரியன் தேயாத சந்திரன் என்று நான் குறிப்பிடுகிறேன்' என்றார்.

சிறப்புரை

திருவள்ளுவர் திருநாள் விழாவில்-திருக்குறளார் திரு. வீ.முனுசாமி அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களும் சிறப்புரையாற்றினர்.

முதல்வர் உரை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, இருபதாயிரம் ரூபாய்க்கான காசோலையும் வாழ்த்தும் உடையதான திருவள்ளுவர் விருதும், 42 சிறந்த நூல்களுக்குப் பரிசும், அவற்றைப் பதிப்பித்தோர்க்குச் சான்றிதழ்களும், அகவை முதிர்ந்த 20 தமிழறிஞர்களுக்குப் பரிவுத் தொகையும், தமிழில் சிறந்த வரைவுக் குறிப்புகள் எழுதிய அரசுப் பணியாளர் மூவருக்குப் பரிசுகளும் வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தமிழறிஞர்களும், தாய்மார்களுமாகப் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்த இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்ஆற்றிய விழாப் பேருரை விவரம் வருமாறு:

'உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல் தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரீகம் தமிழ் நாகரீகம்! அந்தப் பெருமைமிகு தமிழ் இனத்தின் தலையாய நூல் திருக்குறள்! இருபது நூற்றாண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டது, இந்த நூற்றாண்டுக்கும் உரியதாக விளங்க முடியுமென்றால், இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் ஏற்றது என்றால், அந்த ஒப்பிலாச் சிந்தனைச் செறிவை என்னவென்று சொல்வது?

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது; சாதாரண மக்களாலும் புரிந்து கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது; நடையிலே எளியது; ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு - திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர், திருவள்ளுவர்.

தமிழ்நாடு புகழ் கண்டதற்கு, ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வான்புகழ் கொண்டதற்கு ஒரே காரணம், வள்ளுவர்! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடினார். கவிஞர்கள் வார்த்தைகளைச் செதுக்கிச் செதுக்கி எழுதுகிறவுர்கள்.

வள்ளுவனைத் தமிழ்நாடு ஊருக்குத் தரவில்லை; ஒரு நாட்டுக்குத் தரவில்லை; ஓர் இனத்துக்குத் தரவில்லை; ஒரு மொழிக்குத் தரவில்லை; உலகுக்கே தந்தது - என்று உணர்ந்து உணர்த்தினார் பாரதியார்.

'திருக்குறள் ஒன்றுதான் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில், எப்படிப்பட்ட அறிவொளியும் ஏற்கும் தன்மைக்கு ஏற்ற ஆதாரமாய் அமைந்திருக்கிறது' - என்று தீர்ப்புக் கூறினார் தந்தை பெரியார்.

There hardly exists in the literature of the world a collection of maxims in which, we find so much lofty wisdom.

- அதாவது, 'உலக இலக்கியம் எதனிலும், இவ்வளவு உயரிய ஞானத்தை உள்ளடக்கிய அறவுரைத் தொகுப்பு அமைந்ததில்லை' என்கிறார் ஆல்பிரட் சுவிட்சர்.

மன்னருக்கு நீதி சொன்னவர்கள், சின்னவருக்குச் சொன்னதில்லை. எளியோருக்குச் சட்டமியற்றியவர்கள், வலியோருக்கு அதை வகுத்ததில்லை. இந்த மரபை, 2,000 ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு தமிழ்ச் சிந்தனையாளர் உடைத்திருக்கிறார் என்றால், அது தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். அரசருக்கு, அமைச்சருக்கு, மக்களுக்கு, ஆசிரியருக்கு, மாணவருக்கு, தலைவருக்கு, தொண்டருக்கு, இல்லறத்தாருக்கு, துறவறத்தாருக்கு, பெற்றோருக்கு, பிள்ளைகளுக்கு, ஆடவருக்கு, பெண்டிருக்கு என்று - எல்லோருக்கும் வாழும் வழியையும், நெறியையும் வகுத்துக் கொடுத்தவர், வள்ளுவர். அவர் ஓர் புகத்துக்குரியவரல்லர்; எல்லாக் காலத்துக்கும் ஏற்றவர்.

வள்ளுவரின் பொருட்பாலில், கள்ளுண்ணாமை வலியுறுத்தப் பட்டதைப் போல், வேறெதுக்கு இப்பாலும், அப்பாலும், யாராலும் சொல்லப்படவில்லை.

'துஞ்சினார் செத்தாரின்
வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'.

- கள் உண்பவர்கள் விஷத்தை உண்பவர்கள் என்று, வள்ளுவப் பெருமான் கண்டித்துச் சொல்கிறார். வள்ளுவருக்கு நாம் செய்யும் வழிபாடு, அவர் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதுதான். எவ்வளவு இடர்ப்பாடுகளும், எதிர்ப்புகளும், இழப்புகளும் இருந்தாலும், அவற்றை முகமலர்ச்சியுடன் தாங்கி, வள்ளுவன் உரைத்த கள்ளுண்ணாமையைத் தமிழ்நாடு கடைப்பிடிக்க, எங்கள் அரசு எடுத்துவரும் தளராத முயற்சிகளை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை, வேத வாக்காகக் கொண்டு, மதுவை ஒழிக்கப் போராடும் என் முயற்சிகளுக்கு, ஆக்கமும் ஊக்கமும் தரவேண்டியது, உங்கள் கடமை ஆகும்; தங்களது இணையற்ற எழுத்தோவியங்களுக்காக, தமிழ்த் தொண்டிற்காக, பரிசு பெறும் படைப்பாளர்களின் கடமையும் ஆகும் என்பதை, அன்போடு நினைவூட்டக். கடமைப்பட்டிருக்கிறேன்.

1985-ஆம் ஆண்டு நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'திருவள்ளுவர் விருது' வழங்கும் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ், திருக்குறள் தொடர்பான நூல் எழுதுபவர், அல்லது திருக்குறள் தொடர்பானகருத்துக்களைப்பரப்புபவர் ஒருவரை, ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுத்து 'திருவள்ளுவர் விருது' வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு திருவள்ளுவர் விருதினை நமது மதிப்பிற்குரிய டாக்டர் நாவலர் அவர்கள் பெறுகிறார்கள் என்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நாவலர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை நூல்' உரைநூல்களில் சிறந்ததாக, உண்மைக்கு உகந்ததாக, அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளதை, தமிழ் நல்லுலகம் பாராட்டுகின்றது. நாவலர் அவர்களுக்கு நான், இன்று 'திருவள்ளுவர் விருதினை' வழங்கிச் சிறப்பிப்பதில், பெருமை அடைகின்றேன். அவரது தமிழ்த்தொண்டு மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, வள்ளுவப் பெருந்தகையாரை நினைவுகூரும் வகையில், 'திருவள்ளுவர் விருதும்', சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசுகளும் வழங்குவதில், பெருமிதம் அடைகின்றேன். இந்த விழாவிலேயே அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு, அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைப் பாராட்டும் முகத்தான், நிதி உதவி அளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

• இழிவின் மூலகாரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்து, அவ்விழிவு பின் சந்ததிக்கும் என்றென்றும் திரும்பி வரமுடியாதபடி, பரிகாரம் தேடுவதே உண்மையான சீர்திருத்தவாதியின் கடமை.

நாட்டிற்கும், மக்களுக்கும், மொழிக்கும், உழைத்த நல்லவர்களை நாம் நினைவுகூர வேண்டும், பாதுகாத்து அரவணைக்க வேண்டும், என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணங்களை, அவர் வழி நடக்கும் எங்கள் அரசு, தொடர்ந்து தொய்வில்லாமல் செயல்படுத்தும்.

நன்றியுரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், பரிசு பெற்றோர் சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

'திருவள்ளுவர் விருதோடு எனக்குப் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியுள்ள இந்த இருபதாயிரம் ரூபாயையும் மாணவர் பரிசுத் திட்டத்திற்காக அளிக்கிறேன். அதாவது பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியரிடையே திருக்குறள் போட்டிகள் நடத்தி, அதில் வெற்றி பெறுவோருக்குப் பரிசு வழங்கப்படும். இந்த இருபதாயிரம் ரூபாயும் வைப்பு நிதியில் போடப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு இந்தப் பரிசு அளிக்கப்படும்'- என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு. த. பெரியாண்டவன் அவர்கள் நன்றி கூறினார். •



சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

ஒவ்வொர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.1.00 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

அதற்கேற்ப, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை 1991 செப்டம்பர் தொடங்கி ஓராண்டில் நிறைவேற்றி முடிக்க முதல்வர் அவர்கள் தகுந்த ஆணை களைப பிறப்பித்துள்ளார்.

அவ்வாணைப்படி, இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப்பெற்று 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுறவிருக்கிறது. அனைத்துப் பணிகளும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில் ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளது சிறப்பிற்குரியதாகும்.

1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கேற்ப நிதி வசதியை உரிய நேரத்தில் அரசு ஒதுக்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளிகளுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

கிராமங்களுக்கருகில் உள்ள முக்கிய சாலையிலிருந்து 1.60 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள 1000-க்கு அதிகமாகவும் 500-லிருந்து 1000-க்குக் குறைவாகவும் மக்கள் தொகையுள்ள கிராமங்களை இணைக்கும் வகையில் எல்லாப் பருவ நிலைகளுக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கப்படும். இதனால் கிராம மக்கள் நகரங்களுடன் எளிதாகத் தொடர்பு கொள்ளவும், வேளாண்மை, கைவினைப் பொருட்கள் போக்குவரத்திற்கும் சிறந்த வசதிகள் ஏற்பட ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. நடப்பாண்டில் ரூ.83.34 கோடி செலவிட்டு 3,874 கி.மீ. சாலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

குடிநீர் வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தர இத்திட்டம் வகை செய்கிறது. தவிர, கோடைக் காலத்தில் குடிநீர் வசதியேயில்லாத அல்லது மிகக் குறைந்த வசதியுள்ள வாழ்விடங்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் 5,999 வாழ்விடங்களுக்கு ரூ.53.36 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தர அரசு முடிவு செய்துள்ளது.

புதிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்படுவதுடன், தற்போது இவ்வசதியைப் பெற்றுள்ள இடங்களில் உள்ள குறைகள் களையப்படுவதுடன் கூடுதலாகத் தெரு விளக்குகள் அமைத்துக் கிராமங்கள் ஒளிமிகுந்த இடங்களாக மாறும் நாள் அண்மையிலேயே உள்ளது. இவ்வாண்டில் ரூ.19.88 கோடி செலவில் 69,781 தெரு விளக்குகள் தமிழகக் கிராமங்கள் அனைத்திலும் அமைக்கப்பட்டு ஒளிவீசத் தொடங்கும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள குளங்களையும், பழைய ஜமீன் குளங்களையும் மேம்படுத்தும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு அவை தரமுள்ளதாக நிலைப்படுத்தப்படவுள்ளன. நடப்பாண்டில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், கசிவுநீர்க் குட்டைகள் உட்பட 2,677 பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கால்வாய்கள் தூர். எடுக்கும் பணியும் இதில் அடங்கும். பல்வேறு இடங்களிலுள்ள கால்வாய்களைத் தூரெடுக்கும் மொத்த நீளம் 1,305 கி.மீ. இவற்றிற்கென ரூ.11.82 கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டு நிதி வசதி செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அரசினரால் நடத்தப்படும் தொடக்கப் பள்ளிகளுக்கு நிலையான கட்டடங்கள் ஒன்றேனும் இல்லாதிருந்தால் இத்தகைய இடங்களில் ஒரு பள்ளிக் கட்டடம் அமைக்கப்படும். தொடக்கப் பள்ளிகளின் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையைப் பொறுத்து 1,068 கட்டடங்கள் ரூ.14.79 கோடி செலவில் அமைக்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு நிலையங்களுக்கு நிலையான கட்டடங்கள் உருவாக்கப்படும். இந்த பணிக்காக ரூ.9.98 கோடி செலவு செய்யப்பட்டு 1,409 கட்டடங்கள் கட்டப்படும்.

வேளாண்மை, கால்நடை, துப்புரவு, ஊரக வளர்ச்சி, கேளிக்கை போன்ற நிகழ்ச்சிகளைக் கிராம மக்கள் கண்டு களித்துப் பயனடைய 978 தொலைக்காட்சிப் பெட்டிகளும் உண்டு. இதற்காக ரூ.1.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு தொடங்கி ஈராண்டுகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படும். அப்போது 7,502 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டு கசிவு நீர்க் குட்டைகள் உட்பட 3,231 சிறு பாசனத் திட்டங்கள் சீரமைக்கப்பட்டுவிடும். மேலும் 2,198 தொடக்கப் பள்ளிகள் 2,879 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்கள் கட்டப்பட்டுவிடும். 8,972 வாழ்விடங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு 1,94,000 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கும். மேலும் 2,910 கி.மீ. தொலைவுப் பாசன வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணி நிறைவடையும். தவிர 1,861 ஊராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். ஈராண்டுகளிலும் இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.387.24 கோடியாகும்.

மாநில அளவில் இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றிடும் பொறுப்பை ஊரக வளர்ச்சி ஆணையரிடமும், மாவட்ட அளவில், ஊரக வளர்ச்சி முகமைகளின் தலைவர்களுமான மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது.

எஸ்.பி. இளங்கோவன்.
இ.ஆ.ப.,
அரசுச் செயலர்,
ஊரக வளர்ச்சித்துறை
சென்னை.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 16.1.1980 அன்று தொடங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதையும், அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரா, கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் முக்கியமான இடங்களையும் இப்போக்குவரத்துக் கழகம் தனது இயக்க எல்லைகளாகக் கொண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாட்டில் 124 வழித்தடங்களிலும், கர்நாடக மாநிலத்தில் 29 வழித்தடங்களிலும், ஆந்திர மாநிலத்தில் 21 வழித்தடங்களிலும், கேரள மாநிலத்தில் 24 வழித்தடங்களிலும், பாண்டிச்சேரியில 22 வழித்தடங்களிலும், மூன்று மாநிலங்கள் உட்பட 6 வழித்தடங்களிலும் ஆக மொத்தம் 226 வழித்தடங்களில் 848 பேருந்துகளை இயக்கி வருகிறது. 31.12.1991 வரை 924 பேருந்துகளைத் தன்னகத்தே கொண்ட இப்போக்குவரத்துக் கழகத்தில் 122 சொகுசுப் பேருந்துகளும் (Deluxe Coach) அடங்கி உள்ளன.

ஒரு நாளில் சுமார் 6 இலட்சம் கி.மீட்டர் தூரம் இயக்கப்படும் இப்பேருந்துகளில் ஒரு நாளைக்குச் சராசரி 1.15 இலட்சம் பயணிகள் பயணம் செய்கிறார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகம் 20 பணிமனைகளையும், 4 தொழிற்பட்டறைகளையும், 3 ஓட்டுநர் தொழிற் பயிற்சி நிலையங்களையும் கொண்டுள்ளது. மேலும் ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் (I.T.I.) இப் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப் பட்டு வருகிறது. பயணிகளின் வசதிக்காக மாநிலம் முழுவதும் 15 சிற்றுண்டிச் சாலைகளையும், 5 சாலையோர உணவகங்களையும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகிறது.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் ஒரு நாளைய சராசரி மொத்த வருமானம் ரூ.27 இலட்சம்.

தமிழகத்தில்

தொழில் நுட்பக் கல்வி

பேராசிரியர் தி.இரா. நடேசன்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

தமிழகத்தில் தொழில் நுட்பக் கல்வி முறை கிழக்கிந்தியக் கம்பெனியார், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1794-ஆம் ஆண்டு, நில அளவைப் பள்ளியினை நிறுவிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நில அளவைப் பள்ளி விரிவடைந்து ஒரு பொறியியற் கல்லூரியாக மலர்ந்தது.

1886-ஆம் ஆண்டு சென்னை வேப்பேரியில் துவக்கப்பட்ட செங்கல்வராயன் பாலிடெக்னிக்கும் 1890-ஆம் ஆண்டு மதுரையில் துவக்கப்பட்ட தமிழ்நாடு பாலிடெக்னிக்கும், முன்னாட்களில் துவக்கப்பட்ட ஒரு சில தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களின் முன்னோடியாகத் திகழ்ந்து, சுதந்திரம் உதித்த நிலையில், மைய அரசும் மாநிலத்தில் உள்ள அரசும் இணைந்து, தொழில் மயமாக்கும் நிலையைப் புகுத்தியபோது நாட்டில் தொழில் நுட்பக் கல்வி வளரத் தூண்டுதலாகி, தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்காகாமல், ஒரு நல்ல சூழ்நிலை உருவாகிற்று. 1957-ஆம் ஆண்டுவரை, தொழில் நுட்பக் கல்வி முறையின் நிர்வாகம், பொதுக் கல்வி இயக்குநரின் வசமிருந்தது. 1957-ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வித்துறை அமைக்கப்பட்டு, அது பொறியியற் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் வளர்ச்சியை ஊக்குவித்தது.

தற்போது பட்டப்படிப்பு நிலையில் தொழில் நுட்பக் கல்விக்கான வசதிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும், ஐந்து அரசு பொறியியற் கல்லூரிகள், மூன்று அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் முப்பது சுயநிதி பொறியியற் கல்லூரிகள் ஆகியவற்றினால் அளிக்கப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பொறியியற் கல்லூரி, இந்தியன் தொழிற்கல்வி நிலையம் (ஐ.ஐ.டி.) மற்றும் திருச்சியிலுள்ள பிராந்தியப் பொறியியற் கல்லூரி ஆகியவை பல பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டக் கலையினைப் போதிக்க வழிவகை செய்துள்ளன. தமிழ்நாட்டிலுள்ள இரண்டு மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்திலும் குறைந்தது ஒரு பொறியியற் கல்லூரியாவது அமையப் பெற்றுள்ளது. இவை அனைத்திற்குமான மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை ...

ஐநூறாகும். தமிழகம் மட்டுமே பெண்களுக்கென்றே ஒரு தனியான பொறியியற் கல்லூரி அமையப் பெற்று பிற பொறியியற் கல்லூரிகளில், இருபாலரும் கல்வி கற்கும் வசதிகள் பெற்ற சிறந்த தனித்தன்மை பெற்ற மாநிலமாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் ஐந்து தன்னாட்சிப் பொறியியற் கல்லூரிகளும் இரண்டு பல்கலைக் கழக மற்றும் பல்கலைக் கழகமாகக் கருதக் கூடிய கல்லூரிகளும் உள்ளன. பணிபுரியும் பட்டயப்படிப்பு முடித்தவர்கட்குப் பகுதிநேரப் பொறியியற் கலையும் பதினோரு கல்லூரிகளில் போதிக்கப்படுகின்றன.

தொழில் நுட்ப வினைஞர்கள், தொழில் நடவடிக்கைகட்கு முதுகெலும்பைப் போன்றவர்கள், எனவே தொழில் நுட்ப வினைஞர்களை உருவாக்கிப்பயிற்சியளிக்கப்பட்டயப் படிப்பு மற்றும் பட்டயப் பிற்படிப்பினைக் கற்பிக்க இம்மாநிலத்தில் நூற்றி இருபத்தொன்பது தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (பாலிடெக்னிக்குகள்) உள்ளன. (அரசு பாலிடெக்னிக்குகள் இருபத்தொன்று, அரசு உதவி பெறும் பாலிடெக்னிக்குகள் முப்பத்தைந்து, மற்றும் சுயநிதி பாலிடெக்னிக்குகள் எழுபத்தி மூன்று). இவற்றின் மொத்த சேர்க்கை எண்ணிக்கை சுமார் இருபத்து இரண்டாயிரத்து ஐநூறு ஆகும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு பாலிடெக்னிக்காவது உள்ளது. தொழில் நுட்பக் கல்வியில் பெண்களின் தேவை பெண்களுக்கென்று தனியாக அமையப் பெற்ற பதினோரு பெண்கள் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களாலும், இருபாலருக்குமான கல்வி நிறவனங்களாலும் நிரப்பப்படுகிறது. மைய அரசின் சமுதாய வளர்ச்சித் தொழில் நுட்பக் கல்வி நிலையத் திட்டம் இந்த மாநிலத்திலுள்ள பதினொரு தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் அமையப் பெற்று, நாட்டுப் புறங்களில் வேலையில்லா இளைஞர்கட்கு உதவுகின்றது.

வளர்ந்து வரும் தொழில் மற்றும் சமூகத்தின் தேவைக்கேற்ப தொழில் நுட்ப மனித வளத்தினை மேம்படுத்தி, திறமையை ஊக்குவிப்பதே தற்போதைய தொழில் நுட்பக் கல்வி

மனிதாபிமானத்தின் மணிமகுடம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புகழாரம்!

இந்த ஜனவரி 17-ஆம் நாள், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பிறந்த நாள்;

'எங்க வீட்டுப் பிள்ளை - எங்கள் வீட்டுப் பிள்ளை' என, இன்றும் தமிழகத்திலுள்ள ஏழை எளிய தாய்மார்கள் எல்லாம், யாரை ஏற்றிப் போற்றிக் கொண்டாடி மகிழ்கிறார்களோ, அந்தப் பிள்ளை 75 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த நாள்...

'ஓர் சகாப்தம் கண்விழித்த இனிய நாள்;
ஓர் சரித்திரம் தொடங்கிய திருநாள்;
ஓர் உயரிய தத்துவம் உதித்த நன்னாள்'

எனச் சொன்னால் அது மிகையாகாது.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

என்ற வள்ளுவரின் வாக்கிற் கொப்ப, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தோன்றி - வளர்ந்து - ஈடுபட்ட துறைகள் அனைத்திலும், தன் புகழ் முத்திரையினைப் பதித்தவர் ஆவார்.

கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும் - புது நம்பிக்கையாகவும், தன் இளமைக் காலம் முதல், திரைப்படத் துறையிலும்- அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர்.

மக்களோடு பழகி,
மக்களோடு வாழ்ந்து,
மக்களுக்காக உழைத்து,
மக்களுக்கு வாரி வழங்கி,
மக்களுக்காகச் சிந்தித்து,
'மக்கள் திலகமாய்',
'மன்னாதி மன்னனாய்', வாழ்ந்து மறைந்த அவரைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில் தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள்.

அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும் - மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டின.

அவர் ஏற்றுக்கொண்ட அரசியல் ஆசானாம் பேரறிஞர் அண்ணாவை, 1967-இல் ஆட்சிக் கட்டிலில் அமர்த்திக் காட்டிடும் அளவுக்கு, அவரது மக்கள் செல்வாக்கு அன்றைக்குத் திகழ்ந்தது.

அண்ணா அவர்கள், கூட்டணி ஆட்சி அமைக்கும் அளவுக்கே தனக்கு வலுவுள்ளது எனக் கருதிக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேளையில், புரட்சித் தலைவருள் மறைந்திருந்த மக்கள் சக்தி, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தனிப் பெரும்பான்மை பலத்தை அன்றைக்கு உண்டாக்கிக் காட்டியது.

அச்சரித்திர நாயகனின் வரலாறு, அதன் பின்னர், தமிழ்நாட்டில் அவர் யாரை அடை யாளம் காட்டுகிறாரோ, அவர் தான் ஆட்சி அரியணை ஏறி அமர முடியும் என்னும் அளவுக்கு, உயர்ந்தோங்கியது.

அவரால் ஆட்சிக் கட்டிலுக்கு ஏற்றி விடப் பட்டோர், ஏறிய ஏணியை இடறிவிட்ட சூழ் நிலையில் தான், 1972-இல் தனக்கென - தன்னை நம்பியிருந்தோர்க்கென, தனி இயக்கம் கண்டார்.

அரசியலில் தனக்குக் கலங்கரை - விளக்காய் - வழி காட்டியாய் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா வின் புகழை - பெருமையை - பெயரை, என் றென்றும் நிலைத்திருக்கச் செய்யும் நோக்கில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனத் தனது அரசியல் இயக்கத்திற்கும் பெயர் சூட்டினார்.

அந்த ஆலமரம் தான், எண்ணற்ற இலட்சிய வேங்கைகளைத் தன்னகத்தே பெற்ற, திராவிட இயக்கப்பரிணாம வளர்ச்சியாக இன்றைய தினம் காட்சியளிக்கிறது.

'புரட்சித் தலைவர் நடந்தால் ஊர்வலம்; அவர் நின்றால் மாபெரும் பொதுக் கூட்டம்; மாநாடு' என்ற சரித்திரச் சாதனைகள் பல அன்றைக்கு நிகழ்ந்தன.

எனவே தான், உலக வரலாற்றில் வேறெங்கும் காண முடியாத ஓர் அபூர்வமாக, 1972-இல் ஓர் அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்து, ஐந்தே ஆண்டுகளில், அசைக்க முடியாத ஓர் ஆட்சி அமைத்துக் காட்டும் அளவுக்கு, ஓர் சரித்திரச் சாதனையை நிகழ்த்திக் காட்டினார் புரட்சித் தலைவர்.

1977 ஜூன் திங்கள் 30-ஆம் நாள், தங்களது பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பினை, அந்தப் பொன்மனச் செம்மலிடம் தமிழக மக்கள் ஒப்படைத்தனர்.

11 ஆண்டுகள் அந்தப் பொற்காலம் நீடித்தது. சங்க காலச் சிறப்புக்குப் பின், தமிழ் வரலாற்றில் 'களப்பிரர்கள் காலம்' என்னும் ஓர் இருண்ட காலம் எப்படி இருந்ததோ - அதேபோல், ஓர் இரண்டாண்டுக் கால இருண்ட காலத்தை, இருபதாம் நூற்றாண்டிலும் தமிழகம் தாண்டி வரவேண்டிய அவலம் நிகழ்ந்தது.

தமிழகச்சரித்திரத்தில் படிந்துவிட்ட, அக்கரும் புள்ளி மருவுக்குப் பின் - புரட்சித் தலைவரிடம் நம்பித் தங்களை ஒப்படைத்துக் கொண்ட தமிழக மக்கள் - கடந்த ஜூன் மாதம் 24-ந் தேதி, தங்கள் பொற்கால வரலாற்றை எழுதும் பொறுப்பை-

அவரிடம் கொண்டிருந்த அதே நம்பிக்கை யோடு, இன்னும் அதைவிடக் கூடுதலான எதிர் பார்ப்புக்களோடு நம்மிடம் ஒப்படைத்திருக் கிறார்கள்.

புரட்சித் தலைவரின் புனிதப் பயணம் தொய் வின்றி தொடர்ந்து நடைபெறுகிறது; 'எம்.ஜி.ஆர்.'- 'எம்.ஜி.ஆர்.' '- என்னும் தாரக மந்திரம்; சாகா வரம் பெற்ற அச்சரித்திர நாயகனின் தத்துவம்; தொடர்ந்து நமக்குத் தலைமை ஏற்று வழி நடத்திச் செல்கிறது.

புரட்சித் தலைவரின் சாதனைகள் கலை உலகில் கணக்கில் அடங்காதவையாகும்; அரசியல் உலகில் அதைவிட அதிகமாகும்.

எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணா வும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

அதிலும் மனிதாபிமானத்தின் மணிமகுடமாகத் திகழ்ந்தவர் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆவார். எனவே தான் இன்றும் அவரை 'ஆயிரத் தில் ஒருவர்' என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

அந்த 'அன்னமிட்டகை', தன் இளமையில் ஒரு கவளம் சோறின்றிப், பல நாள் பசியால் துடித் திருக்கிறது என்பதை இன்று நினைத்தாலும், நம் விழிகள் ஈரமாகின்றன.

'கொடிது கொடிது வறுமை கொடிது',
என்ற அவ்வைப் பிராட்டியார்,

'அதனினும் கொடிது இளமையில் வறுமை'
என்றார்.

அந்தக் கொடுமையைப், பசியோடு இளமை யில் அனுபவித்த காரணத்தால் தான் - இனி எந்தத் தலைமுறைக்கும் இளமையில் பசி என்கிற கொடுமை இருந்திடலாகாது, எனத் திண்ணமாக ஓர் முடிவெடுத்து - அவர் கொண்டு வந்த திட்டம்

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா- 17.1.92

தமிழக முன்னாள் முதல்வர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 17.1.92 அன்று நடை பெற்றது. மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றினார்.

முன்னதாக, செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். பிறகு முதல்வர் அவர்கள் விழா மேடையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்— திரு. இ.மதுசூதனன், திரு. கே.ஏ.செங்கோட்டையன், திரு. சு.முத்துசாமி, திரு. இராம.வீரப்பன், திரு. எஸ்.டி.சோமசுந்தரம், திரு. எஸ்.கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. கோ.விசுவநாதன், திரு. டி.எம்.செல்வகணபதி, திருமதி. ஆர்.இந்திரகுமாரி, திரு. எம்.ஆனந்தன் மற்றும் திரு. டி.ஜெயக்குமார் ஆகியோர் டாக்டர் எம்.ஜி.ஆரின் அரசியல், திரைப்படத்துறை சாதனைகளையும் அவரது நல்லியல்புகளையும் நினைவு கூர்ந்து புகழாரம் சூட்டினார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், "மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். 1977-இல் ஆட்சிக்கு வந்த பிறகு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடினார். அந்தப் புரட்சித் தலைவனுக்கு இன்று நமது முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அரசு விழா நடத்துகிறது. தமிழக சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் முழு திருவுருவப் படத்தைச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்'' என்று கூறினார்.

மாணவ, மாணவிகளுக்குப் பரிசு:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின், டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் பேட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவில் சென்னை மாவட்டத்தின் சார்பில் ரூ.1,20,620/- மதிப்பில் 91 நபர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா நினைவுப் பரிசுகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. பின்னர் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தலைமைச் செயலர் அவர்களும், பள்ளி மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

கலைநிகழ்ச்சி:

விழாத் தொடக்கத்தில் பள்ளிக்கூட மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

விழா முடிவில் வயலின் மேதை திரு. குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினரின் வயலின் இசைக்கச்சேரி நடைபெற்றது.

முன்னதாக மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 75-வது பிறந்த நாளையொட்டி சென்னை அண்ணா சாலையிலுள்ள எம்.ஜி.ஆரின் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்தார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்

தான் மகத்தான சத்துணவுத் திட்டமாகும். மனித வள மேம்பாடு பற்றிச் சிந்தித்த வேறு எவரும், இதுவரை சிந்திக்காத ஓர் உன்னதத் திட்டம் என, உலகின் பல பகுதியினராலும் பாராட்டப்பட்ட திட்டமாகும்.

அந்த இளகிய தலைவனின் உள்ளத்தைப் பெற்றிருக்கும் ஆட்சியாக, இன்றைய உங்கள் ஆட்சி அமைந்துள்ளதால் தான், அத்தகைய திட்டங்களைத் தொய்வின்றி நடத்திட உறுதி பூண்டுள்ளது.

1.7.82-இல் தொடங்கிய அந்தத் திட்டம், இன்று 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்னும் பெயரில் விரிவுப் படுத்தப்பட்டு, புதிய உத்வேகத்தோடு செயல் படுத்தப்பட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஆறேழு மாதங்களாக, 'ஏழைகளைக் கண்ணால் பார்ப்பதை விட, இதயத்தால் பார்க்க வேண்டும்', என்ற புரட்சித் தலைவரின் கொள்கைப்படி நடந்து வருவதைக் கண்டு வருகிறீர்கள்.

அந்த அடிப்படையில் உதயமானது தான், நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றியுள்ள, ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை எளியோருக்கான இலவச வேட்டி-சேலைத் திட்டமாகும்.

'மக்களின் வரிப்பணம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்பட வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா.

'திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்' என்றார் புரட்சித் தலைவர்.

இவ்விரு தலைவர்களின் அடிச் சுவட்டில் நடைபோடும் எங்கள் அரசு - அவர்கள் காட்டிய இந்த உயரிய நோக்கங்களைத் தனது இலக்காகக் கொண்டு, எவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும், உறுதியாகவும் காரியமாற்றி வருகிறது என்பதை, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களில் இருந்து, மிகத் தெளிவாக அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

'எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல்; எத்தகைய மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறோம்' என்பதற்கே முதலிடம் தந்து, மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களுடைய இதயங்களை ஆசிரியர்கள் புண்படுத்திவிடட்டும். ஏமாற்றம், ஏக்கம் என்ற இரண்டு வார்த்தைகளையும் அகராதியில் இருந்து துடைத்துவிட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவி புரியட்டும்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் குறள் நெறிக்கேற்ற நாடாக, தமிழகத்தை உயர்ந்தோங்கச் செய்திட, எங்களது அன்றாடத் திட்டங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. புரட்சித் தலைவரின் பொற்காலக் கனவை நனவாக்கும் வகையிலேயே, எங்கள் செயலும் சிந்தனையும் அமைந்திருக்கும்.

புரட்சித் தலைவர் அவர்கள் தனது அரசியல் எதிரிகளை மட்டும் வெற்றி கண்டார் என்றில்லை;

நோயை எதிர்த்து வெற்றி கண்டார்;
சாவை எதிர்த்து வெற்றி கண்டார்;
பகையை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்;
பசியை எதிர்த்து அவர் வெற்றி கண்டார்.

அம் மாபெரும் வெற்றிச் செல்வனின் மகத்தான வாரிசுகள் நாம்; அப்புகழ்மிக்க புரட்சித் தலைவரின் இதயச் சோலையில் மலர்ந்த பூக்கள் நாம், என்பதை இப்புவிக்குத் தெரிவித்துக் கொண்டுள்ளோம்.

ஏழ்மை இருளை...
இல்லாமை எனும் மருவை...
அறியாமை எனும் பேதமையை...
வறுமை எனும் கொடுமையை...

இனி - என்றென்றும் நம் இனிய தமிழகத்தை தீண்டாது துரத்துவோம்! வன்முறைக் கலாச்சாரம் நமக்கு வழக்கமில்லை;

நம் அரசியல் எதிரிகளும் - அண்டை மாநிலத்தினரும் - அதைப் பயன்படுத்தினாலும் - நாம் அடக்கத்தோடு அதனை எதிர்கொள்வோம்.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?'

என்ற நம்பிக்கை நமக்குள்ளது;

இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ஆசியும் - அருளும் என்றும் நமக்குள்ளது; அவர் இறவாது வாழ்கிறார்; நம்மோடிருக்கிறார்; இருக்கிறார் என்ற உணர்வு நமக்குள்ளது.

அந்த உணர்வினை நம் இதயத்தில் தேக்கி, நாம் புனிதப் பயணம் தொடர்வோம்; மங்காப் புகழ்மிகு அச்சரித்திர நாயகன் புகழ் காக்க, சங்க நாதம் முழங்கிடுவோம்;

வளமும் - நலமும் மிக்க தமிழகத்தை - தமிழ் இனத்தைக் காப்போம் என இந் நன்னாளில் உறுதி ஏற்போம்!

– பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழாவில் (17.1.92) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.

கர்நாடகக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் திரும்பும்.

தமிழர்களுக்குப் பாதுகாப்பு

காவிரி நதி நீர்ப்பங்கீட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்கு 205 டிஎம்சி தண்ணீர் ஆண்டிற்கு விட வேண்டும் என கர்நாடகா அரசிற்கு இடைக்காலத் தீர்ப்பு வழங்கியதன் விளைவாக, கடந்த டிசம்பர் மாதம் 13-ஆம் தேதியன்று கர்நாடகாவில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த 2-ந் தேதி தமிழகம் முழுவதும் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இதனையொட்டி, தீயசக்திகளினால், அங்கு பல ஆண்டு வாழும் தமிழர்களுக்கு அசம்பாவிதங்களும், சொத்துக்களைச் சேதப்படுத்துவதும், தமிழர்களைத் துரத்துவதுமான சம்பவங்கள் நடைபெற்றன.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து, தமிழர்கள் கர்நாடகாவில் பெங்களூர், சத்தியகால் ஜாகரி, மைசூர், மண்டியாலா ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறினர். தருமபுரி மாவட்டத்திற்கு ஓசூர் வழியாகவும், ஜவலகிரி வழியாகவும், வந்து எட்டு வட்டங்களில் பல ஊர்களில் தங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், கர்நாடகா கலவரத்தால் பாதிக்கப்பட்டுத் தமிழகத்திற்கு வரும் தமிழர்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் எல்லையில் வரவேற்பு முகாம் அமைக்கும்படி மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கியதால், தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர், திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்க்ள் ஜீஜூவாடி, ஜவ்லகிரி, தருமபுரி ஆகிய இடங்களில் வரவேற்பு மையமும், ஓசூர், தருமபுரி ஆகிய இரு மையங்களில் 'நிவாரண மையமும்' திறக்க உடனடி நடவடிக்கை மேற்கொண்டார். வரவேற்பு மையத்தில் கர்நாடகாவிலிருந்து வரும் நபரின் முழு விவரம் பதிவு செய்யப்பட்டு, அங்கு அவர்களுக்கு உணவு, உடை இருப்பிடம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தருமபுரி மாவட்ட மாரவாடியில் கிட்டத்தட்ட 139 குடும்பம் கர்நாடகாவிலிருந்து வந்துள்ளனர். அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள் பெங்களூர் நகரைச் சுற்றியுள்ள பகுதியில் வசித்து வந்துள்ளனர். அனைவரும் கட்டடத் தொழில் புரிந்ததாகவும், தமிழர் என்றாலே அவருடைய வீட்டுக்குத் தீவைப்பதும், கண் எதிரே வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றதாகவும், பயங்கர ஆயுதங்களுடன் தாக்க வருவதால் உயிருக்குப் பயந்து வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். மையத்திலுள்ள தமிழ்ப் பெண்கள், தங்கள் கழுத்தில் உள்ள மஞ்சள் கயிற்றைக் கொண்டு, நாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை அறிந்து தாக்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மேலும், சத்யகால் ஜாகரிப் பகுதியில் 7 கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரும் காவிரி வழியாகவே வந்து பரிசல் மூலம் காவிரி ஆற்றைக் கடந்து பென்னாகரம் வருகின்றனர். அவ்வாறு சத்தியகால் ஜாகரிப் பகுதியில் 14 ஆண்டுகளாக வசித்து வந்த திரு. கருப்புசெட்டி என்பவரைச் சந்தித்தபோது- 'அவர் சேலம் மாவட்டம் கொளத்தூர் அருகே உள்ள சேத்துக்குழியைச் சேர்ந்தவர் என்றும், அவருடன் தாயார் எல்லம்மாள், தந்தை முனியன், மனைவி



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 18.1.92 அன்று, சென்னையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இராணி மெய்யம்மை மண்டபம் மற்றும் ராஜா முத்தையா மண்டபம் ஆகியவற்றைக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார்.

மதி மற்றும் ஆண், பெண் குழந்தையுடன் 85 வயதுடைய பாட்டி திருமதி சடையம்மாளையும் அழைத்து வந்ததாகவும், வரும் வழியில் பாட்டியால் நடக்க முடியவில்லை. எனவே, எனது மனைவி குழந்தைகளை உறவினர்களுடன் அனுப்பி வைத்துவிட்டு என் பாட்டியை நான் தூக்கி வந்தேன். ஆனால், என்னால் தொடர்ந்து தூக்கி வரமுடியவில்லை. மேலும் என் பாட்டி உடல்நிலை மிகவும் மோசமான நிலை ஏற்பட்டதால், 'நீ மட்டுமாவது தப்பிப போய்விடு என்னைப் பற்றி கவலைப் படாதே' என்று கூறினாள். எனவே, என் பாட்டியைக் காட்டிலேயே விட்டு விட்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் நாங்கள் சத்திய கால் ஜாகிரிப் பகுதிகளிலிருந்து பென்னாகரம் வர கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் மலைப்பகுதியில் வரவேண்டும். நாங்கள் 7 நாட்கள் நடைப்பயணம் செய்து வந்தோம்' எனக்கண்ணீர் மல்கக்கூறினார்.

இதே பகுதியை சேர்ந்த குழந்தைசாமி என்பவரைப் பேட்டி கண்ட போது, 'நானும் சத்யகால் ஜாகிரி பகுதியைச் சார்ந்தவன், நாங்கள் 15 ஆண்டுகளாக அங்கு இருந்து மேட்டு நிலத்தை விளை நிலமாக்கி நல்ல தோப்பும் வயலமாக மாற்றி உள்ளோம். அங்குத் தமிழனைக் கண்டாலே அடித்துத் துரத்துகிறார்கள். கும்பல் கும்பலாக இரவில் வந்து வீட்டுக்குத் தீவைக்கிறார்கள்,' என்று குறிப்பிட்டார் மேலும் நாங்கள் ஏழு நாட்கள் இரவு பகல் பாராமல் மலை, காட்டுப் பகுதிகளில் நடந்து காவிரி கரையைப் பிடித்தால் தமிழ் நாடு அடையலாம் என நினைத்துக் காவிரி ஓரமாகவே வந்தோம். வரும் வழியில் உணவு இல்லாததால், கூட்டிக் கொண்டு வந்த ஆடுகளை வெட்டிச் சுட்டுச் சாப்பிட்டோம். ஒரு சிலர் புளியங்காய், உப்பு வைத்துச் சாப்பிட்டு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அவர்களுடன் வேறு ஊரைச் சார்ந்த கர்ப்பமுற்ற பெண்மணி இரண்டு நாட்கள் இடுப்பு வலியுடன் நடந்து வந்து, வரும் வழியிலேயே பிரசவித்த நிலைமையும் ஏற்பட்டது என்றும் நெஞ்சை உலுக்கும் வகையில் தெரிவித்தார்கள்.

இவ்வாறு கர்நாடகத்திலிருந்து வந்த தமிழர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஜூ ஜூவாடி, காணசந்திரம், ஆட்டுக்காரன்பட்டி, தருமபுரி, குப்பூர், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு நிவாரண ஆணையர், திரு. ஹரி பாஸ்கர், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., ஓசூர் சார் ஆட்சியர் திரு. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு. பி.சி. பந்த், இ.கா.ப., காவல்துறைத் துணைத் தலைவர் (ஆயுதப்படை) திரு.கே.ராமலிங்கம், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. ராமானுஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.பி. முனுசாமி, திரு. முனிவெங்கடப்பன், திரு. சிங்காரம் ஆகியோர் உடன் சென்றனர்.

மேலும், கர்நாடகாவில் அல்லல் பட்டுத் தமிழகம் திரும்பும் தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பொருட்டு, கர்நாடகாவில் தமிழர்களின் சொத்துக்கள் இழப்பை மதிப்பிடும் பொருட்டும் தமிழர்களுக்கு உண்டான பாதிப்பை அறியவும், கர்நாடகாவில் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என வற்புறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதன் அடிப்படையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வரின் வற்புறுத்தலின்படி, மத்திய அரசின் உள்துறை இணைச்செயலாளர் திரு. குர்னிகால்சிங் சந்த், இ.ஆ.ப., அவர்களை இரு மாநிலங்களிலும் உள்ள நிலைமைகளைக் கண்டறியும் பொருட்டு உத்தரவிட்டார்கள்.

மத்திய அரசின் உள்துறை இணைச் செயலாளர் அவர்கள் ஜூ ஜூவாடி, சாணசத்திரம், அதகப்பாடி, நல்லம்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும், முகாமில் உள்ள தமிழர்கள் கர்நாடகாவில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், மற்றும் சேதமான சொத்துக்கள், உயிர்ப்பலி பற்றி அவரிடம் எடுத்துரைத்தனர்.

உள்துறை இணைச் செயலாளரைப் பேட்டி கண்ட போது 'கர்நாடக மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தேன். மேலும் நிலைமை சீரடைந்துள்ளதாகவும், தீவைப்பு, கொள்ளை, திருட்டு ஆகிய சம்பவங்கள் நடந்ததாகவும், கொலை, கற்பழிப்பு ஏதும் நடைபெறவில்லை எனவும்தெரிவித்தார். மேலும் தமிழகத்திற்கு வந்தவர்கள் மீண்டும் தைரியமாக கர்நாடகம் செல்லலாம் எனவும் இது விஷயமாக கர்நாடக அரசு நல்ல சூழ்நிலையினை உருவாக்கி வருகிறது எனவும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு பாதுகாப்பு, முழு நஷ்டஈடு, ரேஷன் ஆகியவற்றை உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளதாகவும், வேலை இழந்தவர்களுக்கு வேலைவாய்ப்பும், வீடு இழந்தவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

தருமபுரி மாவட்டத்தில் கர்நாடகாவிலிருந்து வந்த தமிழர்களுக்கு வேட்டி, சேலை, ஐந்து கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் வேறு ஊர்களுக்குச் செல்ல விரும்புவோருக்கு பயணத் தொகையும் அரசு சார்பில் அளிக்கப்பட்டு வருகிறது.

மு. [illegible]
செய்தி-மக்கள் தொடர்பு [illegible]

மருத்துவம்:

உணவு சில மருத்துவ உண்மைகள்

டாக்டர் எஸ். நந்தகுமார், எம்.டி.,



நம் உணவில் உள்ள சத்துப் பொருட்கள் யாவை - அவை நமக்கு எப்படிப் பயன்படுகின்றன?

நாம் அன்றாடம் உண்ணும் உணவில் மாவுச்சத்து (Carbohydrate), புரதச் சத்து (Protein), கொழுப்புச் சத்து (Fatty acid), ஆகியவை அடங்கியுள்ளன.

இவற்றில், மாவுச்சத்திலுள்ள உணவானது மனிதனுக்குத் தேவையான சக்தியைக் கொடுத்து, தசைகளின் இயக்கம், உடல் உறுப்புகளின் இயக்கம் ஆகியவற்றிற்கு மூல காரணமாக உள்ளது. இச்சத்தானது- தானிய வகைகள், சர்க்கரை, வெல்லம், கிழங்கு வகை ஆகியவற்றில் உள்ளது.

புரதச் சத்துள்ள உணவானது, மனிதனின் தசைகள் வளர்ச்சி பெறுவதற்கும், இரத்தத்தில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கவும், மேலும் இரத்தத்தின் முக்கியப் பகுதியாகவும் Haemoglobin, Harmones, Enzymes போன்றவற்றை உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது. இந்தப் புரதச் சத்தானது - முட்டை, பால், இறைச்சி, மீன் ஆகியவற்றிலும் பருப்பு வகைகள், கொட்டைகள், கடலைகள் ஆகியவற்றிலும் உள்ளன.

கொழுப்புச் சத்துள்ள உணவானது நம் உடலில் உருவ அமைப்பு, தோலின் உலர்வற்ற தன்மை, உடல் உஷ்ணநிலைப் பாதுகாப்பு முதலியவற்றிற்குக் காரணமாக உள்ளது. இது - மீன், முட்டை, பால், இறைச்சி ஆகியவற்றில் உள்ளது.

வைட்டமின்களும், தாது உப்புகளும் எப்படி நமக்கு உதவுகின்றன?

வைட்டமின்கள், தாதுஉப்புகள், அடங்கிய உணவு வகைகள் மனிதனை நோய் நொடியிலிருந்து காப்பாற்றும் மேலும், அவைகள் நம் உடலின் முக்கிய இரசாயன மாற்றங்களுக்கும் காரணமாகின்றன. எலும்புகள், பற்கள் வளர்ச்சிப் பாதுகாப்பு போன்றவற்றிற்கும், இரத்த விருத்தி, இரத்தம் உறைதல் போன்றவற்றிற்கும் தைராய்டு எனப்படும் சுரப்பி வேலை செய்யவும் அவை பயன்படுகின்றன.

வைட்டமின்கள் 15-ம், தாது உப்புகள், 24-ம் நமக்கு முக்கியமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. வைட்டமின்கள் மிக முக்கியமாக A, D, E, K, B-Complex ஆகியவைகளும் - தாது உப்புக்களில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, சோடியம், பொட்டாசியம், குளோரின், அயோடின், துத்தநாகம் போன்றவைகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

வைட்டமின்களும், தாது உப்புக்களும், வைட்டமின் 'ஏ' Codliver oil, Shark liver oil, கல்லீரல், வெண்ணெய், நெய், முட்டை, கேரட், மாங்காய் முதலியவைகளில் நிறைந்திருக்கின்றன.

வைட்டமின் B-Complex கைக்குத்தல் அரிசி, முழு கோதுமை, வேர்க்கடலை, கடலைப் பருப்பு, எள், பால், முட்டை, மீன், இறைச்சி முதலியவைகளில் இருக்கின்றது.

வைட்டமின் C நெல்லிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு, மற்றும் அனைத்துக் கீரை வகைகளிலும் உள்ளது.

வைட்டமின் D - Sharkliver oil, Cod liver oil கல்லீரல், முட்டை, பால், வெண்ணெய், மீன் ஆகியவைகளில் இருக்கின்றது.

மேற்கூறிய அனைத்து உணவு வகைகளிலும் தாது உப்புக்கள் உண்டு. மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் அனைத்தும் சரியான விகிதத்தில் வயது, எடை, அவரவரும் செய்யும் வேலைக்கேற்ப உண்ணப்படுவதே சரிவிகித உணவாகும்.

மாவுச்சத்து (தானிய வகை) 60 சதவிகிதமும், புரதச் சத்து 20 சதவிகிதமும், கொழுப்புச் சத்து 20 சதவிகிதமும் அன்றாட உணவில் இருத்தல் அவசியமாகும்.

இரத்தத்தில் நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் சேருவது எப்படி?

நாம் உண்ணும் உணவில் உள்ள 'கார்போஹைட்ரேட் என்ற மாவுச்

டாக்டர் எஸ். நந்தகுமார்

சத்தானது Glucose என்ற சர்க்கரைச் சத்து ஆகவும் புரோட்டின்-அமினோ அமிலம் (Aminoacid) எனப்படும் பொருளாகவும், கொழுப்பு வகைகள் (Fatty acid) என்பதாகவும் மாற்ற மடைகின்றன. இவ்வாறு மாறிய பிறகே அவையெல்லாம் நமது இரத் தத்தில் கலக்க முடியும்.

இவற்றில், குளுக்கோஸ் எனப் படும் சர்க்கரைச் சத்து இரத்தத்தில் கலந்த பிறகு உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்கும் சென்று எரிபொரு ளாக மாற்றமடைகிறது. இவ்வாறு எரிபொருளாக மாற 'இன்சுலின்' (Insulin) என்ற ஹார்மோன் தேவை.

கலோரிச் சத்து என்றால் என்ன?

சர்க்கரைச் சத்தானது - எரி பொருளாகி, மனிதனின் இயங்கும் சக்தியாக மாற்றமடைவதையே நாம் கலோரிச் சத்து என்கிறோம். இந்த வகையில் பார்த்தோமானால் -

1 கிராம் மாவுச்சத்து (Carbohydrate) - 4 கலோரியாகும்;

1 கிராம் புரதச் சத்து (Protein) - 4 கலோரியாகும்;

1 கிராம் கொழுப்புச் சத்து (Fattyacid) - 9 கலோரியாகும்.

எதுவும் உண்ணாமல் பட்டினி இருப்பது உடலுக்கு நல்லதா?

வாரம் அல்லது மாதம் ஒரு வேளைமட்டும் உண்ணாமல் இருப் பதில் தவறு ஏதும் இல்லை; அது நல்லதும் கூட, ஆனால், சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு இது பொருந்தாது.

இயற்கையில், மனித உடலில் குளுக்கோஸ் சத்தானது எரிபொரு ளாக மாற்றப்படுவதால் எந்தவித ஆபத்தும் இல்லை. ஆனால் ஒருவர் பலவேளை உண்ணாமல் இருக்கும் போது, அவர் உடலில் உள்ள கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் கரைந்து எரிபொருளாக மாற்றப் பட்டு அவரது உடல் உறுப்புகளை இயங்கச் செய்கிறது. இவ்வாறு மாவுச்சத்து அல்லாமல், - புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் எரி பொருளாக மாற்றம் அடையும் போது உடலுக்கு ஆபத்தைத் தரும் இரசாயனப் பொருட்கள் இரத்தத் தில் கலந்துவிடும்.

அதே நபர் சில நாட்கள் மேலும் உண்ணாமல் இருந்தால், இந்த இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் இரத்தத்தில் கலந்து, அந்த நபரைக் கோமா நிலைக்குக் கொண்டு போய்விடும். இதையே மருத்துவத்தில் Keto acidosis என்கிறோம். இன் சுலின் என்ற ஹார்மோன் குறைப் பாட்டினாலும் இதுபோன்ற கோமா நிலை ஏற்படும். இதை 'Insulin Dependant diabetes Mellitus Complicating keto acidosis' என்று கூறுகிறோம்.

இந்த வகை சர்க்கரை வியாதி யில் சர்க்கரையின் அளவு இரத்தத் தில் மிக அதிகம் இருந்தாலும், அவை இன்சுலின் பற்றாக்குறை யினால் மாற்றம் அடைவதில்லை.

புரதச் சத்து நமக்கெல்லாம் மிக மிக இன்றியமையாதது என்கிறார் களே - ஏன்?

நம் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்களில், பத்து வகையான அமினோ அமிலங்களை நமது உடலால் தயாரிக்க முடியாது. எனவே, அவற்றை நாம் உண்ணும் உணவில் இருந்துதான் பெற வேண்டும். இவைகள் புரதச் சத்தில் மிகுதியாக உள்ளன. இந்தப் பத்தும் இருந்தால்தான் நம் உடலில் அந்தப் புரதச் சத்து பயனுள்ள வகையில் சேகரிக்கப்படும். எனவே, இவை அடங்கிய உணவு வகைகளை 'முதல் தரப் புரதச் சத்து' என்கிறோம்.

ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைவு பட்டால்கூட, அந்தப் புரதச் சத்து உடலில் வீணாகி அதனுடைய முழுப் பயன் நமக்குக் கிடைக்காமல் போய் விடும்.

இவ்வாறு அனைத்து அமினோ அமிலங்கள் அடங்கிய புரதச் சத்து பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றில் சுமார் 20 சதவிகிதம் அடங்கியுள்ளது. ஆனால், தாவர வகைப் புரதச் சத்தான பருப்பு, கொட்டை, கடலை போன்றவற்றில் ஒன்று அல்லது இரண்டு அமினோ அமிலங்கள் குறைபாடாகவே உள் ளன. இந்த உணவு வகைகளை 'இரண்டாம்தரப் புரதச் சத்து' என்கிறோம்.

குறைபாட்டை ஈடுசெய்ய - நாம் புரதச் சத்து உணவுகளைத் தானிய வகைகளுடன் (அரிசி, கோதுமை) சேர்த்து உண்ணும்போது, அவை முற்றிலும் பயனுள்ளதாக மாற்றப் படுவது மட்டுமின்றி, இறைச்சி, மீன் போன்றவை உண்ணுதலுக்குச் சம மாகவும், முதல்தரப் புரதச் சத்தாக வும் மாற்றம் பெறுகிறது.

நம் முன்னோர்கள் இவற்றை யெல்லாம் உணர்ந்துதான் பொங்கல், இட்லி, பருப்புடன் கலந்த சாதம் போன்றவற்றைச் சாப்பிடும் உணவுப் பழக்கவழக்கத்தை அக் காலத்திலேயே உண்டாக்கியிருக் கிறார்கள் போலும்.

பத்து அமினோ அமிலங்கள் அடங்கிய தாவர புரதச் சத்து சோயா பீன்ஸ் எனப்படுகின்ற கொட்டை வகையாகும். இதில் இருந்து பால், பவுடர் முதலியன எடுக்கப்பட்டு, சிறு குழந்தைகளுக்கு நல்ல உண வாகக் கிடைக்கப்பெறுகிறது. இதையே Vegetable milk என் கிறோம். 100 கிராம் அளவுள்ள சோயாபீன்ஸில் 43 கிராம் முதல்தரப் புரதச் சத்து உள்ளதாகக் கணக்கிடப் படுகிறது.

நார்ச்சத்து (Fibre Diet) என்றொரு புதிய கண்டுபிடிப்புப் பற்றி மருத் துவ உலகில் பேசப்படுகிறதே - அதென்ன?

வைட்டமின்களில் கூறிய கீரை, காய்கறி, பழவகைகளில் நார்ச்சத்து எனப்படும் ஒரு பொருளும் அதிகம் இருக்கிறது. பழங்களைத் தோலுடன் சாப்பிடுவது நல்லது. நம் உடலுக்கு இந்த நார்ச்சத்தானது மிகவும் முக் கியமாகும்.

காரணம் என்னவென்றால் - இந்த நார்ச்சத்தானது -

1. நம் சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றில் புற்றுநோய் வராமல் இது தடுக்கிறது.
2. Cholesterol என்னும் கொழுப்பு, உடலில் மிதமாக இருக்க உதவுகிறது.
3. நீரிழிவு நோயாளிகளின் உடலில் சர்க்கரை அதிகரிக்காமல் பாது காக்கிறது.
4. இரத்த நாளமானது கொழுப்பு மிகுதியால் அடைப்பட்டுக் கடினமா வதால் ஏற்படும் Atheroselerosis என்ற நோய் வராமல் தவிர்க்கிறது.
5. மலச்சிக்கல் ஏற்படாதிருக்கச் செய்கிறது.

யார் யாருக்கு எவ்வளவு கலோரி தேவைப்படுகிறது.?

(Recommended energy requirements)

1. பிறந்த முதல் மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரை. 100 முதல் 120 கலோரிகள் ஒரு கிலோவிற்குத் தேவை.

2. 1-3 வயது-1220, 4-6 வயது-1720, 7-9 வயது-2050 கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

3. 10-12 வயது-2420, (ஆண்) - 2260 (பெண்), 13-15 வயது வரை-2660 (ஆண்) - 2300 (பெண்), 16-18 வயது வரை - 2800 (ஆண்), - 2200 (பெண்) கலோரிகள் ஒரு நாளைக்குத் தேவை.

4. ஆண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

55 கி.கி. எடையுள்ள மிதமான வேலை செய்வோருக்கு (light work)- 2400 கலோரிகள். சற்றுக் கடின மான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2800 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3900 கலோரிகள்.

பெண்: (கலோரிகள் ஒரு நாளைக்கு)

மிதமான வேலை செய்வோருக்கு (light work) - 1900 கலோரிகள். சற்றுக் கடினமான வேலை செய்வோருக்கு (Moderate work) - 2200 கலோரிகள். கடினமான வேலை செய்வோருக்கு (Heavy work) - 3000 கலோரிகள். குழந் தைக்குப் பால்தரும் பருவம் உள் ளோருக்கு (Women during pregnancy & Lactation) (45 K.G.)

300-லிருந்து 500 வரை கூடுதல் கலோரிகள் தேவை.

உணவு வகைகளை எப்படி அறிந்து-அளந்து சாப்பிடுவது?

எந்தெந்த உணவில் தோராய மாக எவ்வளவு கலோரி இருக்கிறது என்று இந்தப் பக்கத்தில் தெளி வாகப் பட்டியலிட்டுக் கூறியிருக் கிறோம். அவற்றில் இருந்தே, நாம் சாப்பிடத்தக்க சரிவிகித உணவு என்ன என்றும் நீங்களே அறிந்து கொள்ளலாம்.

நோயாளிகள் - எதுவுமே உண்ணாமல் வெறும் வயிறுடன் இருக்கலாமா?

உடல் நலக் குறைவு என்றால் சிலர் சாப்பிடாமல் இருப்பார்கள்; 'லங்கனம் பரம ஔஷதம்' என் பார்கள்; அது நல்லதல்ல. அப்படிப் பட்ட சந்தர்ப்பத்தில் எளிதாக ஜீரணமாகக்கூடிய இட்டலி, இடி யாப்பம் போன்ற உணவு வகை களை நோயாளிகள் மிதமாக உண் ணுவது நல்லது.

சர்க்கரை வியாதி உள்ளோர் தாம் செய்கிற வேலைக்கு ஏற்பவும், சாப்பிடும் மருந்துகளுக்கு ஏற்பவும் உண்ணவேண்டும்.

இரத்த அழுத்தம் உள்ளவர் களுக்குக் கொழுப்புச் சத்து, உப்பு ஆகியவற்றை உணவில் தவிர்க் கலாம்; சிறுநீரக நோயாளிகளுக்கு உண்ணும் உணவில் ஒரு குறிப்பிட்ட அளவே புரதச் சத்தும், உப்புச் சத்தும் பொருந்தும்.

உடல் பயிற்சிகள் ஒருவருக்கு எப்படியெல்லாம் உதவுகின்றன?

உடல் பயிற்சி செய்வதென்பது, மனிதனுக்கு மிகமிக இன்றியமை யாதது ஆகும்; அதுவும் ஒவ்வொரு வரின் உடலுக்கு ஏற்றவாறு அமைந் திருப்பது மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, 40 வயதுக்கு மேற் பட்ட நபர்கள் - காலை-மாலை நடப்பது, சைக்கிள் மிதிப்பது

சாதாரணமாக நாம் உண்ணும் உணவில் - எது எதில் எந்த அளவு கலோரிச் சத்து இருக்கிறது என்பதைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம்:

உணவு வகை	சுமாராக எடை	கலோரி
தோசை	100 கிராம்	200
இட்டலி	140 கிராம்	200
பொங்கல்	100 கிராம்	358
ஊத்தப்பம்	100 கிராம்	330
பூரி	40 கிராம்	184
சைவ பிரியாணி	100 கிராம்	244
கிச்சடி	100 கிராம்	168
உப்புமா	100 கிராம்	233
முறுக்கு	100 கிராம்	521
சமோசா	100 கிராம்	256
அடை	100 கிராம்	571
உருளைக்கிழங்கு சிப்ஸ்	20 கிராம்	113
வாழைப்பழம்	100 கிராம்	100
ஆப்பிள்	80 கிராம்	50
மாங்காய்	70 கிராம்	50

போன்ற உடற்பயிற்சிகளை மட்டும் செய்வதே போதுமானதாகும். சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கும், இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கும் அந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தபிறகே அவ்வாறான உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

உடல் பயிற்சியினால் உடலில் உள்ள குளுகோஸ் அளவும், கொழுப்புச் சத்தின் அளவும் மிதமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. மனிதனுக்கு உடல் ஆரோக்கியத்தையும் மூளைச் சுறுசுறுப்பையும் இது கொடுக்கும்.

கடைகளில், டின்களில் அடைத்து அதிக விலையில் விற்கப்படும் குழந்தை உணவுகள் பற்றி உங்கள் கருத்தென்ன?

டின்களில் அடைத்துப் பல பெயர்களில் கடைகளிலே விற்கப்படுகின்ற குழந்தைகளுக்கான விலை உயர்ந்த உணவுப் பொருட்களில் சரிவிதித அளவில் சத்துக்கள் இருக்கின்றன என்பது ஒரு விதத்தில் சரியே; ஆனால், இன்றைய சூழ்நிலையில் வசதியற்ற பாமர மக்கள் அதை வாங்கிப் பயன்படுத்துவது மிகவும் கடினமாகும்.

ஆனால், அவைகளுக்குச் சமமா

கவோ, அதைவிட மேலானதாகவோ, குறைந்த செலவில் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்க முடியும். இதற்காக-அதிக உழைப்போ, செலவோ கூடத் தேவையில்லை. ஏழை எளிய மக்களும் இதை எளிதாகத் தயாரிக்க முடியும். இவற்றை மனதில் கொண்டே, நமது அரசின் மதிய உணவுத் திட்டமும் குழந்தைகளின் ஆரோக்கிய வாழ்விற்கு ஏற்ப சரியான விகிதத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

கீழ்க்கண்ட அட்டவணையைப் பார்த்தால் நாமே அப்படிப்பட்ட உணவைத் தயாரிக்கலாம் என்பது உங்களுக்குப் புரியும்.

முழுக் கோதுமை அல்லது கேழ்வரகு	— 40 கிராம்
உளுத்தம் பருப்பு	— 16 கிராம்
வேர்க்கடலை	— 10 கிராம்
வெல்லம்	— 20 கிராம்
ஆக மொத்தம்	— 86 கிராம்

அது 330 கலோரிகள் (புரோட்டீன் 11.3 கிராம்) ஆகும். இவ்வகையில் ஒன்று சேர்த்து அரைத்து மாவாக்கித் தயாரிக்கப்படும் உணவு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு மிகுந்த சக்தி தரும் நல்ல உணவாகப் பயன்படுகிறது.

நீண்ட நாட்கள் வாழ விரும்புவோர் என்ன செய்யவேண்டும்?

நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என விரும்பினால் நீங்கள் சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளப் பழக வேண்டும்; ஒரே வேளையில் மிக அதிகமாகச் சாப்பிடுவதும், ஒரு வேளைக்குச் சாப்பிடாமல் இருப்பதும் முறையல்ல.

சில சமயங்களில் அது உடலுக்குத் தீமையை உண்டாக்கும் 'Eat to live is better than live to eat' என்று காந்தியடிகளே கூறியிருப்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

2. இரவில் விரைவில் உறங்குவதும், அதிகாலையில் எழுதுவதும் உடலுக்கு இன்றியமையாத ஒன்றாகும். 'Early to bed and early to rise is wise and healthy' என்ற ஆங்கிலப் பழமொழி இதைத்தான் வலியுறுத்துகிறது.

3. மதிய உணவிற்குப் பிறகு சிறிது நேரம் ஓய்வெடுப்பதும், இரவு உணவிற்குப் பிறகு சிறிது தூரம் நடப்பதும் இன்றியமையாத உடற்பயிற்சியாகும். இதைக் குறிப்பிடும் விதத்திலேயே - Rest for a while after lunch; and walk for a mile after dinner' என்பார்கள் ஆங்கிலத்தில்.

4. இதோடு மட்டுமல்லாமல், மூன்று வேளையும் நாம் சாப்பிடும் உணவானது சத்துள்ளதாக இருத்தல் வேண்டும்; மாவுச்சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து ஆகியவைகள் கலந்தவையாக இருத்தல் வேண்டும்.

இந்த முறையை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்தீர்களேயானால் கண்டிப்பாக நீண்ட நாட்கள் வாழலாம்.

சந்திப்பு: பி.எல்.ஆர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தொழிலதிபர் டாக்டர் எம்.ஏ.எம்.இராமசாமி அவர்கள் ரூ.5,00,001 க்கான காசோலையை 18.1.92 அன்று வழங்கினார்.



பனை ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்தல்

காகிதத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பு தெற்கு, தென் ஆசிய நாடுகளில் பனை ஓலையை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். பெரும் பகுதி பனை ஓலைச் சுவடிகள் தனியார் மற்றும் நிறுவனங்களின் பொறுப்பில் உள்ளன. அவைகளில் பெரும்பான்மை 11 அல்லது 12-வது நூற்றாண்டைச் சேர்ந்தனவையாகும்.

சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளியிலிருந்து ஐந்து பெட்டிகளில் 10,25,28,29 மற்றும் 7 கட்டுகள் அடங்கிய ஓலைச்சுவடிகள் வேதியல் பிரிவில் பாதுகாக்கப் பெறப்பட்டன. இவை வித்தியாபீடம் பள்ளிக்கு அவ்வூரிலுள்ள திரு. சம்பத் என்பவரால் வழங்கப்பட்டன.

எழுத்தாணியைக் கொண்டு பனை ஓலையில் எழுதப்பட்டுள்ளது. எழுதப்பட்ட பகுதியில் கரித்துண்டினால் தேய்ப்பதால் எழுத்து நன்றாகத் தெரிகிறது. பனை ஓலையின் இரண்டு முனைகளிலும் துவாரம் ஏற்படுத்தப்பட்டு கயிற்றினால் இணைத்துச் சுவடிகளை இரண்டு மரச்சட்டங்களின் இடையில் வைத்து ஒன்று சேர்க்கப் பட்டுள்ளன.

கருவேட்டு நகர் அரசாட்சியில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் இப்போது உள்ள பள்ளிப்பட்டு பக்கத்தில் திரு. வெங்கட்ராயப் பிள்ளை என்பவர், 600 கிராமங்களைப் பரிபாலித்து வந்தார். அவர் பத்மாபுரம் என்கிற இப்போது உள்ள எரும்பி என்ற ஊரில் வசித்து வந்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் இந்த சமஸ்தானம், உடையத் தொடங்கியபோது, பனை ஓலைச் சுவடிகள் அனைத்தும் பெரிய பொறுப்பில் இருந்த இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த ஓலைச் சுவடிகள் அனைத்தும் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் அந்த ஆட்சியின்போது இருந்த அறிஞர்களால் தயாரிக்கப்பட்டன. அவர் இறக்கும் போது இந்தச் சுவடிகள் அனைத்தும் கிராம அலுவலராகப் பணிபுரிந்த அவருடைய புதல்வர் திரு. பெருமாள் பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டன. அதன்பின்பு இவை அவருடைய புதல்வர் திரு. சம்பத் அவர்களின் கண்காணிப்பில் வந்தன. இவரால் அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாத காரணத்தால், அநேகச் சுவடிக் கட்டுகளை எடுத்துச் சென்று கங்கையில் விட்டுவிட்டார். மிஞ்சிய ஓலைச்சுவடிக் கட்டுகளைப் பேணிப் பாதுகாக்கவும், படித்து அறியவும் உதவிடும் எண்ணத்துடன் வித்தியாபீடம் பள்ளிக்கு வழங்கினார்.

வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் இந்தப் பனை ஓலைகள் பெறப்பட்டபோது, இவை உலர்ந்து உடையும் நிலையில் இருந்தன. மிருதுவான தன்மையும், வளைந்து கொடுக்கும் தன்மையும் இழந்து காணப்பட்டன. மேலும், தூசி படிந்தும், வண்ணம் இழந்தும் காணப்பட்டன. இந்த ஆவணங்கள் பூச்சிகளாலும், பூஞ்சைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தன. கிழிசலும் பூச்சித் துவாரங்களும் காணப் பட்டன.

இந்தச் சுவடிகளில் படிந்திருந்த தூசி, மிருதுவான தூரிகை கொண்டு நீக்கப்பட்டன. பின், புகைப்பெட்டியில் வைத்து பாராடைகுளோராபென்ஜீன் (Para-Dichloro Benzene) கொண்டு பத்து தினங்களுக்குப் புகையூட்டப்பட்டன. (Fumigation) ஓலைச்சுவடிக் கட்டுகள் நல்ல நிலையில் உள்ளனவற்றைத் தனியாகவும் மிகவும், பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளவற்றைத் தனியாகவும் பிரிக்கப்பட்டன. சுவடிகளில் நல்ல நிலையில் உள்ளனவற்றைச் சோலிங்கனூர் வித்தியாபீடம் பள்ளிக்கு இவ்வருங்காட்சியக வேதியல் பாதுகாப்பு அலுவலர்கள் எடுத்துச் சென்று மாணவர்களுக்கு ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பது குறித்து செய்முறைப் பயிற்சி அளித்தார்கள்.

பனை ஓலைச்சுவடிகள் கட்டிலிருந்து பிரிக்கப்பட்டு பென்சிலைக் கொண்டு பக்க எண்கள் இடப்பட்டன. பின் பஞ்சை சாராயத்தில் நனைத்து அவற்றில் பூசப்பட்டு மிருதுவாக்கப்பட்டன. அதன்பின் சாராயத்தில் (Rectified Spirit) 5 சதவிகிதம் எலுமிச்சை எண்ணெய் (Lemon Grass Oil) –

கலந்து. அவற்றில் பூசப்பட்டு பாதுகாக்கப்பட்டன. இறுதியாக,

சு. தங்கவேலு
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை



பனை ஓலைகள் ஒன்று சேர்க்கப் பட்டுக் கட்டாகக் கட்டப்பட்டன. இவ்வாறாக மாணவர்கள் சுவடி களைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்தப் பட்டனர்.

மிகவும் பாதிக்கப்பட்ட சுவடிகள் அரசு அருங்காட்சியக வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் பாதுகாக்கப் பட்டன. தேவையற்ற பனை ஓலை ஒன்று தண்ணீர் நிரம்பிய தட்டில் இடப்பட்டு அதில் உள்ள எழுத் துக்கள் அழியாமல் இருக்கின்றனவா என்பது உறுதி செய்யப்பட்டது. எழுத்து அழியாமல் இருந்ததால் ஓலைச்சுவடிகளைப் பரப்பி, கண் ணாடித் தட்டில் வைத்து தண்ணீரில் இடப்பட்டன. பின் இந்த ஓலைச் சுவடிகள் கண்ணாடித் தட்டுடன் (Glass Plate) 5 சதவிகிதம் சோடியம் குளோரைட்டில் (Sodium Chloride) இடப்பட்டு புகைப்போக்கியில் (Fume Exhaust) வைக்கப்பட்டது. பார்மலின் (Formalin) இந்தக் கரை சலில் 15 சதவிகிதம் ஆகும் அள வுக்கு ஊற்றப்பட்டது. தட்டு அடிக் கடி குலுக்கப்பட்டது. இதில் இருந்து உண்டாகும் குளோரின் காற்று பனை ஓலைகளைச் சலவை செய் கிறது. 10 நிமிடங்களுக்குப் பின் சுவடிகள் முழுவதும் (Bleaching) சலவை செய்யப்பட்டவுடன், கண் ணாடித் தட்டுடன் கூடிய சுவடிகள் எடுக்கப்பட்டு குழாய் நீரில் காட்டிச் சுத்தம் செய்யப்படுகிறது. அதற்குப் பின் மிகவும் சுத்தமான நீரில் சுத்தம் செய்யப்படுகின்றன. பின் இவை உலர்த்தப்பட்டு அசிடோன், டால பினால் 10 சதவிகிதம் பாலி வினைல் அசிடேட் தயாரிக்கப்பட்டு சுவடிகள் கெட்டிப்படுத்தப்படுகின் றன. இப்படியாக, பனை ஓலைச் சுவடிகள் புதுப்பிக்கப்பட்டுப் பாது காக்கப்படுகின்றன. இந்த முறையில் பனை ஓலைகள் சலவை செய்யப் படுவதுடன் அவற்றில் உள்ள அமிலங்களும் நீக்கப்படுகின்றன.



மேலும், இதிலிருந்து காரமான குளோரின் காற்று உற்பத்தியாவ தால் இது (Fumigated) புகை உண் டாக்கியாகவும் செயல்படுகிறது.

இந்த ஆவணங்களில், தமிழ் அகராதி - நிகண்டு, அருணகிரி அந்தாதி, திருகச்சியூர் நொண்டி நாடகம், சம்பை விநாயகர் விருத்தம், சுபமுத்து அரிக்கினமுத்து சுந்தரவிலாசம், மாரியம்மன் உலா, கும்பக்கணக்கு, சுந்தர காண்டம், ஆயுர் வேத மருந்துகள் தயாரித்தல், மார்க்கண்டேய நாடகம் ஆகியவை அடங்கியுள்ளன. மற்ற ஓலைச் சுவடிகள் தெலுங்கில் இராமாயணம், மகாபாரதம் மற்றும் பல இலக்கி யங்கள் அடங்கியுள்ளனவாகும்.

இந்தப் பனை ஓலைச் சுவடி களை ஆராய்ந்தறிய தொல்பொருள் துறை இயக்குநர் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகக் கட்ட டத்தில் உள்ள கீழை நாட்டு ஆவண நூலகக் காப்பாட்சியர் அவர்களும் உதவினர். ●

நாடகத் தந்தை சம்பந்தனார்

'தமிழ் நாடகத் தந்தை' என்று நாட்டோரால் போற்றிப் புகழப்படும் பம்மல் சம்பந்தனார், காலமெல்லாம் நாடக வளர்ச்சிக்காகவே அரும்பாடு பட்டார்.

அக்கால நாடக நிலையைக் கண் ணுற்ற சம்பந்தனார், அதிலே மறுமலர்ச்சி உண்டாகக்கப் பெரிதும் உழைத்தார். பல நாடகங்களைப் பார்த்தார். அதிலே உள்ள குறைகளைப் போக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்தார். பழைய புராண இதிகாச நாடகங்களைத் திரும்பத் திரும்ப நட்த்துவதைவிட, புதிய புதிய நாடகங்கள் மேடைக்கு வரவேண்டும் என்று விரும்பினார்.

1891 முதல் 1936 வரை இவர் தமிழ் நாடகங்களை எழுதி, நடித்து, உழைத்து வந்தார். அவற்றையெல்லாம் 'நாடக மேடை நினைவுகள்' என்னும் நூலில் தொகுத்துத் தந்துள்ளார்.

எனவே; அந்தக் காலத்திலேயே, தமிழ் நாடகங்களில் புதுமையைப் புகுத் தினார். தரமான நாடகங்களைத் தயாரிக்க அவர் வழி வகுத்தார்.

அன்னாரின் வாழ்க்கை, இன்றைய நாடக உலகுக்கு மட்டுமல்ல, வருங்கால நாடக உலகுக்கும் வழிகாட்டியாக விளங்கும் என்றால், அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

சம்பந்தனாரின் முழு வாழ்வு, நாடக வாழ்வு. அவரது வாழ்க்கை ஏட்டைப் புரட்டும்போது நேர்மையும் நீதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைக் களன் களாக விளங்குவதைப் பார்க்கலாம்.

சம்பந்தனாருக்கு, கல்வி மீது உற் சாகம் ஏற்பட, இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, இவருக்கு ஆசிரியராக இருந்த சுப்பிரமணியம் ஐயர், இவர் வீட்டிற்கு வந்து இவர் தந்தையிடம், 'சம்பந்தம், எம்.ஏ. ரங்கநாத முதலி யாரைப்போலப் படித்து முன்னுக்கு வருவான்!' என்றாராம். இதைக்கேட்ட சம்பந்தனாருக்குக் கர்வம் பிறக்கவில்லை. உண்மையில் பயமே ஏற்பட்டது.

அந்தக் காலத்தில், ரங்கநாத முதலியார் என்பவர், சிறந்த கல்விமான் என்று பெயர் பெற்றவராம். அவரைப் போல நம்மால் வரமுடியுமா என்கிற பயம் சம்பந்தனாருக்கு. ஆகவே, எப்படியாவது கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும் என்று ஊக்கம் பிறந்தது.

இரண்டாவது— பள்ளியின் ஆண்டு விழாவில், மெட்ரிகுலேஷன் தேர்வில் முதலாவதாகத் தேறிய ஒரு மாணவன் தங்கப்பதக்கம் பெற்றதை இவர் பார்த் தார். அப்போது, நாமும் இதேபோல் பெறவேண்டும் என்று உறுதி கொண்டார். அவர் நினைத்தது நடந்தது. சம்பந்தனாரும் தங்கப்பதக்கம் பெற்றார்.

* * *

'**1891**-ஆம் ஆண்டு,என் ஆயுளில் இரண்டு முக்கியமான சம்ப வங்கள் நேர்ந்தன. ஒன்று மிகவும் துக்க கரமானது. மற்றொன்று மிகவும் சந் தோஷமானது' என்று கூறுகிறார் சம்பந்தனார். அவை என்ன?

முதலில் இவர் அன்னை மறைந்ததை மனவேதனையோடு குறிப்பிடுகிறார். எப்படித் தெரியுமா? 'பகற் காலத்தில் வானம் களங்கமில்லாமலிருக்கும்போது, இடி விழுந்ததுபோல என்னை மகத்தான துயரத்தில் ஆழ்த்தியது' என்கிறார்.

இரண்டாவது, மகிழ்ச்சியான நிகழ்ச்சி யாக ஒரு நாடகத்தைப் பார்த்தது பற்றிக் குறிப்பிடுகிறார். அதாவது, ஆந்திர நாடகத் தந்தை வெ. கிருஷ்ணமாச்சார்லு என்பவர், பெல்லாரியிலிருந்து சென் னைக்கு வந்து, தான் ஏற்படுத்திய சரச விநோத சபை உறுப்பினர்களுடன் தெலுங்கு நாடகமொன்றை நடத்தினார். அதை, தகப்பனாருடன் போய்ப் பார்க்கும் வாய்ப்பும் பெற்றார்.

சம்பந்தனார் பிற்காலத்தில், தமிழ் நாடகங்கள் எழுதுவதற்கும், தமிழ் நாடகங் களில் நடிப்பதற்கும் இதுஒரு அரியநிகழ்ச்சி யாக இருந்தது.

'அன்னையும் பிதாவும், முன்னறி தெய்வம்' என்பார்கள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் நாம் படித்திருக்கிறோம். சம்பந்தனாரின் பெற்றோர்கள் அவருக்குக் கூறிய அறி வுரைகள் - அறவுரைகள் பல. அவற்றை யெல்லாம் அப்படியே தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார் சம்பந்தனார். அந்த இனிய உரைகள் தாம் என்னென்ன?

* என்ன இடுக்கண் நேர்ந்தபோதிலும் தைரியத்தைக் கைவிடாதே. தெய்வத்தை நம்பியிரு.

* எல்லாரையும் மகிழ்வித்து, நீ மகிழ்ச்சியாய் இரு.

* உண்மையே எப்பொழுதும் பேசு.

* கடுகடுத்துப் பேசாதே. இனிமை யாய்ப் பேசு.

* உனக்கு யாராவது கெடுதி செய் தால் அதைப் பொறுத்துக் கொள். அவர்களுக்கு நீ நன்மை செய்யும்படி முயல்.

* கோபத்திற்கு இடம் கொடாதே. கோபம் வந்தால் முற்றிலும் அடக்கிவிடு.

* எந்நேரமும் நகை முகத்துடன் இரு.

* செல்வம் வந்தால் செருக்கடை யாதே. ஏழ்மை வந்தால் தளர்ச்சி யடையாதே.

* மனத்தினால் ஒருவருக்கும் தீங்கு நினையாதே. வாக்கினால் தீமை பேசாதே. செய்கையால் தீங்கு இழைக்காதே.

* பேராசைப் படாதே. கிடைத்தது போதும் என்று மகிழ்ச்சியுடன் இரு.

* வரும்படிக்குமேல் செலவு செய்யாதே. உன்னால் இயன்ற அளவு தர்மம் செய்.

* இன்றைக்குச் செய்ய வேண்டிய ஒரு வேலையை இன்றைக்கே செய்து முடி. நாளைக்கென்று தள்ளிப்போடாதே.

* புண்ணியம் செய். பாபம் செய்யாதே.

- இந்த நீதிபோதனைகள் அவருக்கு மட்டுமா? இல்லை. நமக்கும்தான்!

* * *

'மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் இறைவனிடம் மூன்று வரங்கள் கேட் பேன்' என்கிறார் சம்பந்தனார். அந்த மூன்று வரங்கள்தாம்:

1. அப்பிறப்பில்,— இப்பிறப்பில் எனக்குத் தாய் தந்தைகளாய் இருந்த வர்களே, அப்பிறப்பிலும் தாய் தந்தையர் களாய் இருக்க வேண்டும்.

2. இப்பிறப்பில் என் நண்பர்களாய் இருந்தவர்களே எனக்கு நண்பர்களாய் இருக்க வேண்டும்.

3. அப்பிறப்பிலும் நான் ஒரு தமிழ் நாடக ஆசிரியனாகவும், விநோதத்திற் காகத் தமிழ் நாடகங்களில் நடிக்கும் நடிகனாகவும் இருக்க வேண்டும்.

* * *

1898-இல் மதுவிலக்குச் சங்கத் தில் உறுப்பினராகச் சேர்ந்த இவர், 64 ஆண்டுகள் உழைத்தார். மூன்று மாதத் திற்கு ஒரு முறை அருகிலுள்ள ஏதாவது ஒரு ஊருக்குப்போய், மதுவினால் உண் டாகும் கேடு குறித்து பிரச்சாரம் செய் தார். அன்றைய ஆங்கிலேய அரசு, மது விலக்குப் பிரச்சாரக் குழுவொன்றை ஏற் படுத்தி அக்குழுவிற்குச் சம்பந்தனாரைத் தலைவராக நியமித்தார்கள்.

* * * —பி.வி.ஜி.

சம்பந்தனார் பிறந்த நாள்: பிப்ரவரி-1

தமிழகக் கிராமங்களில்

மருத்துவ வசதிகளைப் பரவலாக்கப் பத்தாயிரம் முகாம்கள் நடத்தப்படும்!

'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்' தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பு

தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பல்வேறு கனவுகளை நனவாக்கும் வகையிலும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, வெற்றி கண்டு வரும் நமது அரசின் மற்றுமொரு புதிய திட்டமாகிய, இம் மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் பெருமிதம் அடைகின்றேன். மருத்துவத் துறைக்காக 1.50 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைப்பதிலும்; 5.83 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் முன்னரே எங்களது தேர்தல் அறிக்கையில், 'அனைவர்க்கும் சுகாதார நல்வாழ்வு அளிப்பதே எங்கள் ஆட்சியின் நோக்கமாக அமையும். இந்த இலக்கை அடையும் வகையில், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், மருத்துவ வசதி கிடைக்க அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்யும். கிராமப்புற ஏழை மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில்,நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல் முதலான பொதுச் சுகாதாரத் திட்டங்கள், தக்க முறையில் மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும். கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளில், மருத்துவவர்கள் மற்றும் மருந்துகள் இல்லை எனும் குறை அறவே நீக்கப்படும்', என்று குறிப்பிட்டிருந்தோம்.

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு உணர்ந்து, அவற்றைத் திறமையுடனும், விரைவாகவும் நிறைவேற்றுவதற்கான தக்க நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலமாக வசதிகளை முழு அளவில் செய்து, வெற்றி காண்பதில் தமிழகம் இணையற்று விளங்குகிறது என்பதை, அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும், ஓர் முன்னுதாரணமாக இத்திட்டத்தையும் தொடங்குகிறோம்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 'சத்துணவுத் திட்டம்', இந்திய நாட்டிலேயே முதன் முறையாகக் கொண்டு வரப்பட்டது. முதற்கட்டத்தில் இத்திட்டத்தின் நோக்கம், பலன்கள் போன்றவற்றை முழுமையாக அறியாத சிலர், தேவையற்ற விமர்சனங்களைச் செய்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால், இன்று, அனைத்து நாட்டு மக்களும் இத்திட்டத்தின் பலனைக் கண்டு, நாம் பெருமைப்படும் வகையில் வியந்து போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் தொலை நோக்கினைப் பாராட்டுகின்றனர்.

அதேபோல், இன்று தொடங்கப்படவிருக்கும் மருத்துவ நலத் திட்டமும் தமிழ்நாட்டில் குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும், அவர்தம் குழந்தைகளுக்கும் நல்வாழ்வினை அளித்து, எதிர்காலத்தில் தமிழகத்தின் வளர்ச்சிக்கு உரிய, திடகாத்திரமான உடல் வலிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழ, இத்திட்டம் பெரிதும் உதவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்கும்போது, தமிழ்நாட்டில் பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள், சிறப்பாகவே செயல்பட்டு வருகின்றன.

எனினும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. திட்டங்களை நிறைவேற்றும் அணுகுமுறையில், செயல்பாடுகளிலும், நாம் மேலும் முன்னேற்றம் காண்பது, இன்றைய கால கட்டத்தில் மிகவும் அவசியமாகிறது.

தொழுநோய், காசநோய், கண்நோய் போன்றவை, தமிழக மக்களை அதிகமாகப் பாதித்து வருகின்றன. இந்த நோய்களைத் தீர்க்க, கிராம மக்களுக்கான அடிப்படை மருத்துவ வசதிகளை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொண்டுதான் கிராம மக்களுக்காக, அவர்கள் இருக்கும் இடத்திலேயே மருத்துவ வசதிகள் செய்து தருவது என்கிற எங்கள் இலக்கினை அடைய, இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



கிராமப்புறங்களில் மருத்துவர்களைக் காண்பது அரிது என்றிருக்கும் அவல நிலையைப் போக்கிடும் வகையில், பல்வேறு மருத்துவத் துறையில் உள்ள நிபுணர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி, பரிசோதனை வசதிகள் செய்து கொடுத்து, மருத்துவ வசதிகளைப் பரவலாக்கிட இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

நோய் இன்னதென ஆராய்ந்து, நோயின் காரணங்களை அறிந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அந்த வழிகள் உடலுக்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும். வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் சுட்டிக்காட்டியதற்கு, இம் மருத்துவ நலத் திட்டம் உரிய வகையில் செயல் வடிவம் தரும்.

இந்தத் திட்டத்தின்கீழ் முகாம்கள் நடத்தப்பட்டு, விளக்க உரை, கண்காட்சி மற்றும் வீடியோ படங்களின் மூலம், சுகாதாரக் கல்வியும் போதிக்கப்படும். கிராமப்புற மக்கள் தங்களின் நல்வாழ்விற்காக, தங்களின் பழக்க வழக்கங்களை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறப்படும்.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாப்பதன் மேன்மை, குடிப் பழக்கத்தினால் ஏற்படும் தீமை, தவறான பழக்க வழக்கங்களினால் உடலுக்கு ஏற்படும் குறைகள், மற்றும் இடர்ப்பாடுகள் பற்றியும் இம்முகாம்களில் எடுத்துரைக்கப்படும்.

இன்னும் ஆறுமாதக் காலத்திற்குள், தமிழகத்தில் இதுபோன்ற 10,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் கால கட்டத்திற்குள், தமிழக மக்களுக்கு நான் கொடுக்க நினைத்த, சுகாதாரப் பாதுகாப்பு அரணின் அடித்தளம் நிர்மாணிக்கப்படும் என்று நம்புகிறேன். மேலும் இத்திட்டத்தை நீட்டித்து, தமிழக மக்களுக்கு முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டம் மாபெரும் வெற்றி அடைய, அரசும், அரசு அலுவலர்களும், அரசு மற்றும் தனியார் மருத்துவர்களும் இதில் ஈடுபட்டால் மட்டும் போதாது. இத்திட்டத்தின் பயனைப் பெற இருக்கின்ற பொதுமக்கள், முழுமனதுடன் இத்திட்டத்தில் ஈடுபட வேண்டும், பயன்பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நோய் இருப்பதை மறைப்பதால், நோயைக் குணப்படுத்த முடியாது. அது உங்களின் நிரந்தரக் குறையாக அமைந்துவிட வாய்ப்புள்ளது. எனவே, மக்களிடையே சுகாதார வாழ்க்கை குறித்த விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். நீங்கள் மனமுவந்து முன் வந்து நலம் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சிறந்ததொரு முன்னோடித் திட்டத்தை, முழுமையாக வெற்றிபெறும்படி நிறைவேற்றிடும் வகையில், உதவ முன்வந்துள்ள பல்வேறு துறை அதிகாரிகளுக்கும், தனிப்பட்ட மருத்துவர்களுக்கும், மருந்துகள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும், என் சார்பிலும் அரசின் சார்பிலும், இதய பூர்வமான நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சி தமிழ்நாட்டில் மருத்துவப் புரட்சி', எனப் பலரும் பாராட்டும் வகையில் அமைந்திட வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்கச் செயல்பட்டு, பசிப்பிணி போக்கிடப் புரட்சித் தலைவர் தொடங்கிய சத்துணவுத் திட்டம் போல், நாம் தொடங்கிடும் இத்திட்டமும், நோயற்ற வாழ்வை நம் தமிழ் மக்களுக்கு வழங்கிச் சிறந்திடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

(18.1.92 அன்று, கலைவாணர் அரங்கில் இலவச மருத்துவ நலத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.)

பார்த்தோம் படித்தோம்

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் டாக்டர் பட்டம் பெறும் அட்டைப்படமும் அரிய பட்டமளிப்பு விழாப் பேருரையும் என்றும் தமிழ் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கக்கூடியது.

—பி.ராஜசேகரன்,
மதுரை.

கர்நாடகக் கொடுமைகளுக்கு அனைத்துக் கட்சி சார்பிலும் நிரந்தரத் தீர்வு காணுவதாகக் கூறிய முதல்வரின் உரை பாராட்டத் தக்கது.

—காகை ஜெ.ரவிக்குமார்
காங்கேயம்-1.

"மனிதனின் கவனக்குறைவு மற்றும் அலட்சியப் போக்கினால் ஏற்படும் விபத்துக்கள், இயந்திரம் மற்றும் மின்சாரக் கோளாறுகளினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் நிகழும் விபத்துக்கள் போன்றவற்றைத் தவிர்ப்பது எப்படி என்று முழு விவரமாக அமைந்த அந்தக் கட்டுரை- பயனுள்ளதாக அமைந்திருந்தது.

—ந.சுந்தரபுத்தன்,
கண்கொடுத்த வனிதம்.

தெலுங்கு கங்கைத் திட்டம்

தமிழக - ஆந்திர முதல்வர்கள் சந்திப்பு

சென்னை மாநகருக்கு, கிருஷ்ணா நதியில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதற்கான தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். ஜனார்த்தன ரெட்டி அவர்களும் 11-1-92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.

இரண்டு முதலமைச்சர்களும் 90 நிமிட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியதன் விளைவாக இந்தப் புதிய உடன்படிக்கை எட்டப்பட்டது.

இதன்படி, சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை 1995-96-ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிப்பதென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள்ளாக கிருஷ்ணா நதி நீர் சென்னைக்குக் கிடைத்துவிடும்.

1983-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டம், ஏற்கெனவே 1992-ஆம் ஆண்டு முடிவடைந்து விடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அது ஓராண்டு தாமதப்படும் என்று இந்தப் புதிய உடன்படிக்கையின் மூலம் முடிவாகியிருக்கிறது.

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா ஆற்றில் இருந்து சென்னைக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டத்துக்கு 1983-ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்தத் திட்டம் பாதி முடிவடைந்த நிலையில் உள்ளது.

இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவது பற்றி மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்களுடன் பேச்சு நடத்த, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஐதராபாத் சென்றார். ஆந்திர மாநில தலைமைச் செயலகத்தில் 11-1-92 அன்று இரு முதல்வர்களும் சந்தித்துப் பேசினர்.

தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் நடந்து வருவது தொடர்பான வரைபடங்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் காட்டப்பட்டது. திட்டப் பணிகள் தொடர்பான வீடியோ படம் ஒன்றும் போட்டுப் பார்க்கப்பட்டது.

சென்னை நகர மக்களுக்குத் தெலுங்கு கங்கைத் திட்ட தண்ணீர் விரைவில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பேச்சுவார்த்தையின்போது மாண்புமிகு ஆந்திர முதல்வரிடம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். நீண்ட நேரப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு, தெலுங்கு கங்கைத் திட்டத்தை 1995-96-இல் நிறைவேற்றி முடிப்பது என இரு தலைவர்களும் முடிவு செய்தனர். இது பற்றிய ஒப்பந்தத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஜனார்த்தன ரெட்டி அவர்களும் கையெழுத்திட்டனர்.

தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்ற 1,003 கோடி ரூபாய் செலவாகும் என்று 1989-ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்டது. விலைவாசி உயர்வு காரணமாக இந்தத் திட்டச் செலவுக்கு 1,120 கோடி ரூபாய் ஆகும் என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்குத் துணையாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடன் மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு. செல்லப்பன், கிருஷ்ணா நீர்த் திட்டத் தலைமைப் பொறியாளர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:

'தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து ஐதராபாத்தில் பரஸ்பரப் பேச்சு வார்த்தை நடத்துவதற்குச் சம்மதித்த மாண்புமிகு ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்துக்கு இந்தத் திட்டம் மிகவும் தேவையானது போல உங்களுக்கும் முக்கியமானது என்பதை அறிவேன். இந்தியாவில் 4- வது பெரிய நகரமான சென்னை நகரம் பல ஆண்டுகளாகக் கடும் குடிநீர்ப் பற்றாக் குறையை எதிர்நோக்கி உள்ளது. சென்னையில் இருந்து குறிப்பிட்ட தூரத்துக்குள் போதுமான நீர் ஆதாரம் எதுவும் இல்லை.

வடகிழக்குப் பருவ மழையை நம்பித்தான் குடிநீர் வழங்கல் இருக்கிறது. இந்தப் பருவமழை நிலையற்று இருப்பதால் இதைச் சார்ந்து இருக்க முடியாத நிலையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டி இருக்கிறது. நாட்டிலேயே சென்னை நகரில்தான் தனி நபருக்கு வழங்கப்படும் குடிநீர் வழங்கல் அளவு குறைவு. விரைவில் தெலுங்கு கங்கைத் திட்டத்தை நிறைவேற்றுவது தேவையான ஒன்றாகும்.

'மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திர ஆகிய மாநிலங்கள் கிருஷ்ணா நதியில் இருந்து தங்கள் பங்கு தண்ணீரில் தலா 5 டி.எம்.சி. தண்ணீரைத் தரச் சம்மதித்து இருக்கிறது என்று மறைந்த பிரதமர் இந்திராகாந்தி 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னையில் அறிவித்தார். அதில் இருந்து ஆந்திராவும், தமிழக அரசும் 15 டிஎம்சி கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணாறு மூலமாக எடுக்கும் திட்டத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

'ஐதராபாத்தில் 1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ந் தேதி ஆந்திரா மற்றும் தமிழ்நாடு முதல்வர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது, இரு மாநில மக்களிடமும் பெரிய நம்பிக்கைகள் தோன்றின. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். ஐதராபாத்துக்கு வந்தபோது அவரிடம் காட்டப்பட்ட மரியாதையையும் நல்லெண்ணத்தையும் நான் அறிவேன்.

'ஆண்டுகள் கழிந்தபிறகும் இந்தத் திட்டம் இன்னும் முடிவடையவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறுவது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து இரு மாநில அலுவலர்களும் அடிக்கடிச் சந்தித்துக் கருத்து பரிமாற்றம் செய்து கொள்கிறார்கள். அவர்களால் முடிந்த அளவு பல இடையூறுகளை நீக்கி வருகிறார்கள்.

'இரு மாநில தலைமைச் செயலாளர்களும் சந்தித்து இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த முடிவுகளை எடுத்து வருகிறார்கள். தலைமைச் செயலாளர்களின் கடைசிக் கூட்டம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25-ந் தேதி சென்னையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் பல பிரச்சினைகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

'ஆந்திராவில் 5 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் கொடுக்கும் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் இருந்து சென்னை நகரின் குடிநீர் வழங்கலுக்கு 15 டிஎம்சி தண்ணீர் திரும்பும்வகையிலான இந்தத் திட்டம் மிகச் சாதாரணமானதும், பாரம் பரியமானதுமாகும். எந்தவிதத் தொழில்நுட்பச் சிக்கலும் இதில் இல்லை.

'இந்தத் திட்டத்துக்கான செலவுத் தொகையை எவ்வாறு தமிழக அரசும், ஆந்திராவும் பிரித்துக் கொள்ள வேண்டும்? தமிழ்நாடு எல்லையில் எப்போது குடிநீர் வழங்கலுக்காகத் தண்ணீர் கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்கெல்லாம் அந்த ஒப்பந்தத்தில் விரிவாக நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. வேலைகள் நடக்கும்போது தமிழ்நாடு எவ்வாறு பணம் வழங்க வேண்டும் என்பதெல்லாம் ஒப்பந்தத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

★ தீண்டாமை என்பது இந்து மதத்தின் ஓர் அம்சமல்ல; களங்கம்.

— காந்தியடிகள்

'பொது ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை எல்லாம் தமிழ்நாடு நிறைவேற்றி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தபட்சம் 3 ஆண்டில் அதிகப்பட்சம் 6 ஆண்டுக்குள் சென்னை நகருக்குக் குடிநீர் கிடைக்கும் வகையில் பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு, ஆந்திர முதல்வர்கள் முடிவு செய்தனர்.

துரதிருஷ்டமாக மத்திய அரசின் வனத்துறை அனுமதி இந்தத் திட்டத்துக்குக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம், நிதி நெருக்கடி, தேவையான அளவு முதலீடு செய்யாதது போன்ற பல காரணங்களால் இந்தப் பணிகள் நடப்பதற்கு இடையூறு ஏற்பட்டது.

'விரைவில் சென்னை நகர மக்கள் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைப் பெறும் வகையில் இந்தத் திட்டத்தை விரைவுப்படுத்த விசேஷமாக உங்கள் உதவியைக் கோரி நான் இங்கு வந்து இருக்கிறேன். சமீபத்தில் நடந்த நமது மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில் இடையூறுகளை எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி பலனாவது கிடைக்கும் வகையில் பணிகளை விரைவுபடுத்த அவர்கள் நம் முன்பு ஆலோசனைகளை வழங்கி உள்ளனர்.

'இந்த இலக்குத்தேதியில் பணிகளை முடிக்க ஒரு செயல் திட்டத்தைத் தீட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தச் செயல் திட்டம் குறித்து நாம் விரிவாக விவாதித்து, அந்தத் திட்டம் உறுதியாக நிறைவேற்றப்பட்டு அடிக்கடி இந்த மாநில தலைமைச் செயலாளர்கள் கூட்டுக் கூட்டத்தில் தீவிரமாகக் கண்காணிக்கப்பட நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

'ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி தமிழக அரசு தனது பங்கை வழங்கும் என்று தமிழக அரசின் சார்பில் நான் உறுதி அளிக்கிறேன். விரைவில் இந்தத் திட்டம் நிறைவேற நீங்கள் உதவவேண்டும்.

'சென்னை நகர மக்களுக்கு ஆந்திர முதல்வர் அவர்கள் புதியவர் அல்ல. சென்னை நகர் மீது அவருக்குள்ள அன்பின் காரணமாக, இந்தத் திட்டத்தில் அவர் விசேஷ அக்கறை எடுப்பார் என்பதில் எனக்கு ஐயமில்லை' ●

நூல் நயம்

சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (முதல் பாகம்)

ஆசிரியர்: மானோஸ்

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:100 விலை:ரூ.12/-

மனிதனின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு உதவும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தன்னம்பிக்கையின் உதவியினால் வெற்றி பெற்ற பெருமக்கள் குறித்துச் சுவையாக எடுத்துக் கூறியுள்ளார் நூலாசிரியர்.

தோல்வி பெற்ற பெருமக்கள் பலர் மனந்தளராமல் பணியாற்றி வெற்றியை ஈட்டிய செய்தியும் விவரிக்கப்பட்டுள்ளது ஊனமுற்றவர்களும் முயற்சியின் காரணமாக வெற்றி பெற்ற வரலாறும் இந்நூலில் காணப்படுகிறது. மொத்தத்தில், வெற்றிக் கனியைப் பறித்துக் கொண்ட பல்வேறு நாட்டுப் பெருமக்களை இந்நூலின் உதவியால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ள இந்நூல் துணை புரிகிறது.

சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (இரண்டாம் பாகம்)

ஆசிரியர்: மானோஸ்

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:67 விலை:ரூ.8/-

மனமும் வாக்கும் ஒன்றுபட்டால் வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்தக் கருத்துக்கு அரண் சேர்க்கும் வண்ணம் பல்வேறு செய்திகள் இந்நூலில் பரவிக் கிடக்கின்றன. மனம் வலிமை பெறுவதற்கு உடல் நலமும் தேவை என்பதை ஆணித்தரமாகக் கூறும் நூலாசிரியர், 'தாழ்வு மனப்பான்மையை மனிதன் அகற்ற வேண்டும்; அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற இயலும்' என்பதை நன்கு விளக்கியுள்ளார். சரளமான நடை - இனிய சொல்லாட்சி இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

சாதனை வெற்றிக்கு ரகசிய வழி (மூன்றாம் பாகம்)

ஆசிரியர்: மானோஸ்

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:91 விலை:ரூ.12/-

மனிதன் சாதனை புரிய வேண்டும் என்பதை, அறிவியல், உள இயல், வரலாற்று இயல், புவி இயல், ஆன்மீக இயல் இப்படிப் பல்வேறு இயல்களின் உதவி கொண்டு இந்நூலில் விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

எங்கெங்கே சுற்றினாலும் சொந்த வீட்டுக்குத் திரும்பித்தான் ஆக வேண்டும். என்னதான் மேலை நாட்டு நாகரிகம் - பழக்க வழக்கம் ஆகியவற்றை நாம் பின்பற்றினாலும் நமது சொந்த நாட்டுப் பண்பாடே உயர்ந்தது என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. நோய் நீங்க - நல வாழ்வு கிடைக்க யோகாவும் பிராணாயமும் தேவை என்பதை நூலாசிரியர் எடுத்துச் சொல்லியிருப்பதன் மூலம் நமது பண்பாட்டுச் சிறப்பு தெற்றென விளங்குகிறது. வாழ்க்கையில் வெற்றி பெற ஒருவரிடம் உறைந்திருக்கும் நலன்கள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

மலரும் நினைவுகள்

(மறக்க முடியாத தன் வரலாற்றுக் குறிப்புகள்)

எழுதியவர்: திருமதி இந்திரா காந்தி

தமிழாக்கம்: கி. வேங்கடசுப்பிரமணியன்

வெளியிட்டோர்:

பூரம் பதிப்பகம்
59, ராஜூ நாய்க்கர் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-600 033.

பக்கம்:106 விலை:ரூ.13

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய முக்கியத்துவம் வாய்ந்த தன் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டது இந்நூல். இதனை டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்.

ஆனந்த பவனம் தொடங்கி, இறுதி உரை வரை - திருமதி இந்திரா காந்தி அவர்கள் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இதிலே தொகுத்துக் கூறியுள்ளார்.

இந்தச் சுவையான துணிச்சல் மிக்க வீர வரலாற்றை இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாத் திறத்தாருமே படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

— கிரி

இயற்கை மருத்துவம்

ஆசிரியர்: மகரிஷி க. அருணாசலம்

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை 625 020

பக்கம்:351 விலை:ரூ.30/-

இயற்கை மருத்துவத்தில் உலகத்துக்கே வழிகாட்டியாகத் திகழ்வது நம் இந்தியத் திருநாடு. அண்மைக் காலங்களில் நமது அரசும், நம் மக்களும் இயற்கை மருத்துவத்தின் பால் தமது அக்கறையையும், ஆர்வத்தையும் திருப்பியுள்ளனர்.

இந்நூலாசிரியர் உண்ணா நோன்பின் வகைகளையும், அதன் பலன்களையும், கொள்ளும் வழிகளையும், பிராணாயாமம் என்ற காற்றுச் சிகிச்சை முறைகளைப் பற்றியும், மற்றும் வெப்பச் சிகிச்சை, நீர்ச் சிகிச்சை, மண் சிகிச்சை போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களையும் எளிய நடையில் வழங்கியுள்ளதோடு, சில ஆசனங்களைப் பற்றியும், அவைகளை எக்காலத்தில், எதற்கு எப்படிச் செய்ய வேண்டும் என்பது பற்றியும் விளக்கப் படங்களுடன் விவரித்துள்ளார். அத்துடன் ஆஸ்த்மா, நீரிழிவு, குடல்வால் நோய், பற்களில் வரும் வியாதிகள் பற்றியும் விளக்கமாகக் கூறி அவைகளைத் தடுக்கும் இயற்கை மருத்துவத்தின் மகிமையைப் பற்றியும் குறிப்புகள் தந்துதவியுள்ளார். அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய நூல்.

—சுகுமாரன்

அறுவடை பின்சார் தொழில் நுட்பம்

ஆசிரியர்: ப. பிள்ளையார்
டாக்டர் வ. சுப்பிரமணியன்.

வெளியீடு:

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:179 விலை:ரூ.25/-

விவசாயிகள், தானிய விற்பனையாளர்கள் போன்றோருக்கு மிகுந்த பயன்தரவல்ல அருமையான நூல்.

உணவு தானியங்களின் ஊட்டச்சத்து முதல் கதிர் அடிப்பு முறைகள், தானியம் உலர்த்தும் வழிமுறைகள், சேமிக்கச் சிறந்த வழிகள், பயறுகள் உடைத்தல், எண்ணெய் வித்துக்களைப் பதப்படுத்தும் முறைகள், அறுவடை இயந்திரம், கதிர் அடிப்பான்கள் தூற்றும் இயந்திரங்கள் என்று படிக்கப் படிக்க பிரமிப்பைத் தரும் விவசாய முன்னேற்றமும் நூதன முறைகளும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆலை அமைப்பு முறைகளும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

எல்லாவற்றிற்கும் விளக்கப்படங்கள் தெளிவாகவும், புரிந்துகொள்ள எளிமையாகவும் உள்ளன. விவசாய சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய பயனுள்ள நூல்.

- என். குமாரசாமி.

(8 –ஆம் பக்கம் தொடர்ச்சி)

பின் ஒன்றாக நிறைவேற்றி வருவதே இதற்குச் சாட்சியாகும்.

மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் விளங்கும் எங்கள் அரசு, தமிழகத்தின் எதிர்பார்ப்புகளை விரைவில் முழுவதுமாக நிறைவேற்றும். எங்கள் இலட்சியப் பாதையில், முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

இம்மாவட்டத்திற்கு ரூ.225 கோடி

பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களை நமக்குத் தந்த இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கென, இவ்விழா நிகழ்ச்சியில் மட்டும், ஏறத்தாழ 225 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.

நான் இங்கே வேட்பாளராக உங்களைச் சந்தித்தபோது, மிக முக்கியப் பிரச்சினையாக முழுவதும் நிலவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு பற்றித்தான்.

நான் தேர்தல் பிரச்சாரத்திற்காகக் காங்கேயம் தொகுதியைச் சுற்றி வந்த பொழுது, ஒவ்வொரு கிராமத்திலும் நான் சந்தித்த தாய்மார்கள் அனைவரும் என்னிடம் கேட்டுக்கொண்டது-

'நாங்க உங்களுக்கு ஓட்டுப்போடறோம். நீங்க வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினரா வந்து, எங்க குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்க' என்பது தான், நானும் அவர்களிடம், 'நிச்சயமாக உங்களது கோரிக்கையை நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தவுடன் நிறைவேற்றித் தருகிறேன்' என்று வாக்குறுதி அளித்தேன். தற்போது நான் உங்கள் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இல்லாத போதிலும், நான் நேரில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கத்தான், இன்று இங்கு வந்துள்ளேன். காங்கேயம் தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினையினை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக, இன்று இந்த விழாவில், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளேன்.

இத்திட்டத்திற்காக ரூ.20.43 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்துள்ளேன். இந்தத் திட்டத்தினால், காங்கேயம் தொகுதி வாக்காளப் பெருமக்களின் பல்லாண்டுக் கோரிக்கையான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் நான் இத்தொகுதித் தாய்மார்களுக்குக் கொடுத்த வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளேன், என்பதையும், பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, வெள்ளக் கோயில், பொங்களூர் மற்றும் தாராபுரம் தொகுதிகளிலுள்ள பல கிராமங்களுக்கும், நிரந்தரப் பயன் கிடைக்க உள்ளது என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் சிறு தொழில்கள் தொடங்கவும் - தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மானியங்கள் வழங்கவும் மட்டும், 16 கோடியே 30 இலட்சம் ரூபாய்க்கான மதிப்பீடுகள் அரசால், ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்தகைய நல்ல திட்டங்களையும் தற்போது, உங்கள் அனைவரது கரவொலி வாழ்த்துக்களோடு தொடங்கி வைத்துள்ளேன்.

இப்பகுதி மக்கள், நீண்ட நெடுநாட்களாகக் கோரி வந்துள்ள, ரூபாய் 13 கோடி செலவிலான நொய்யல் அணைக் கட்டுத் திட்டத்தையும், மெத்த மகிழ்ச்சியோடு திறந்துவைத்துள்ளேன்.

குறிப்பாகக் காங்கேயம் தொகுதியின் மிகப்பிரதான சாலையாகக் கருதப்படும், பெருந்துறை-காங்கேயம் நெடுஞ்சாலையைச் செப்பனிட்டுச் சீர்செய்ய மட்டும், ரூ.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சாலையில் சென்னிமலை அருகே, பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தை, மீண்டும் புதுப்பித்துக் கட்டுவதற்காக மட்டும், ரூபாய் 24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசின் சாதனைகள்

வருவாய்த்துறை மூலமும், சமூக நலத்துறை மூலமும், ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறைகள் மூலமும், மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத் துறை மூலமும், பொதுப்பணித்துறை மூலமும், கைத்தறித்துறை மூலமும், ஊரக வளர்ச்சித்துறை மூலமும், இன்னும் அரசின் அனைத்துத் துறைகள் மூலமும், ஏராளமான திட்டங்களை உங்கள் கண் முன் இதோ தொடங்கி வைத்துள்ளேன். இவை எல்லாம், கடந்த ஏழு மாத காலம் நடந்துள்ள எங்கள் ஆட்சிச் சாதனைகள் என்பதை மெத்தப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்டுள்ள நிகழ்ச்சிகள் மூலமும், பல கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

—தந்தை பெரியார்

ஆனால், இன்று பெரியார் மாவட்டத்தில் தான், மற்ற எல்லா மாவட்டங்களையும் மிஞ்சும் அளவுக்கு, மற்ற மாவட்டங்களில் தொடங்கிய திட்டங்களைவிட அதிகமாக, ரூபாய் 225 கோடிக்கான திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

மேலும், இன்றைக்கு நடைபெறும் அரசு விழாவை, ஓர் மாநில மாநாட்டை மிஞ்சும் அளவுக்கு இங்கே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இத்தனைச் சிறப்புற நடத்திடக் காரணமாக இருந்து, உழைத்திட்ட அமைச்சர் பெருமக்களையும் அரசு அலுவலர்களையும் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்; எனது அன்புச் சகோதரர் செங்கோட்டையன் அவர்களின் கண்துஞ்சாத பணி ஆற்றலை, இந்த நல்ல நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். நான் கடந்த சட்டமன்றத் தேர்தலில், 'பெரியார் மாவட்டத்தில்தான் போட்டியிடவேண்டும் என வற்புறுத்தி அழைத்ததில், பெரும்பங்கு அவருக்கு உண்டு.

சகோதரர் செங்கோட்டையன் அவர்கள், தொடக்க காலத்தில் இருந்து தான் கொண்ட கொள்கையிலிருந்தும், ஏற்றுக்கொண்ட தலைமையிலிருந்தும் துளிகூட மாறுபடாத பாங்குடையவராக வளர்ந்து வந்துள்ளார். கட்சியின் அடிமட்டத் தொண்டர்களில் ஒருவராகப் பணியைத் தொடங்கி, மாவட்டச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, தலைமைக்கழகத்தின் அமைப்புச் செயலாளராக, தற்போது கொள்கை பரப்புச் செயலாளராக, இப்படிப் பல்வேறு பொறுப்புக்களிலும், கொடுத்த பணியைச் சிறப்புடன் செய்து முடிக்கும் செயல் வீரராகத் திகழ்ந்துள்ளார் என்று சொன்னால், அது மிகையாகாது.

கழகத்திற்குச் சோதனை வந்த காலத்தில் எல்லாம், சற்றும் சருக்கலுக்கோ, வழுக்கலுக்கோ, இடம் கொடுக்காது, தன்னுடைய அரசியல் நிலையிலிருந்து சற்றும் சலனத்திற்கு ஆளாகாது, எப்போதும் தனது நிலையிலிருந்து மாறாத பண்பாளராக, சகோதரர் செங்கோட்டையன் திகழ்ந்த காரணத்தால்தான், இன்று அவர் அமைச்சரவையில் பொறுப்பேற்கும் அளவுக்கு உயர்ந்துள்ளார். கழகப் பணியிலும் சரி, அரசுப் பணியிலும் சரி, அவரது கடின உழைப்பினைப் பல்வேறு சந்தர்ப்பங்களில், நானே வியந்து பாராட்டியுள்ளேன்.

அத்தகைய அருமைச் சகோதரர் செங்கோட்டையன் அவர்களும், அவருக்குத் துணையாகப் பணியாற்றி வரும் மற்ற எனது உடன்பிறப்புகளும், இங்கே சிறப்புறப் பணியாற்றி, இச்சீர்மிகு விழாவினை நடத்தியுள்ளார்கள். அவர்கள்

அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொற்கால வரலாறு

அலைகடலென ஆர்ப்பரித்து வருகை தந்துள்ள இலட்சோப இலட்சம் தாய்மார்கள், பெரியவர்கள், இளைஞர்கள் அனைவருக்கும், என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இன்றைக்கு காங்கேயத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது போன்ற பல்வேறு திட்டங்கள், தொடர்ந்து இங்கேயும் தமிழகத்தில் ஏனைய பகுதிகளிலும் நிறைவேற்றப்படும்.

தமிழகச் சரித்திரத்தில், புரட்சித் தலைவர் வழியில் ஓர் நல்லரசு, பொற்கால வரலாறு ஒன்றை உருவாக்கியது என நிகழ்காலத்தில் மட்டுமல்ல; வருங் காலத்திலும் வரலாறு நமக்கு வாழ்த்துப் பாடிடும் அளவுக்கு, நமது இலக்கினை அடையத் தொடர்ந்து பணிபுரிவோம்.

'அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெல்லும் முழங்கு நஞ்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு'

- எனப் பாவேந்தர் விரும்பிய நல்ல நாடாகத் தமிழகத்தைத் திகழ்ந்திடச் செய்வோம்.

'அச்சீர்மிகு திசை நோக்கித் தமிழகத்தை அழைத்துச் செல்ல, காங்கேயம் தொகுதி மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள சான்றோர்கள் ஆன்றோர்கள் அனைவரது நல்லாதரவையும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

– பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், 22.1.92 அன்று நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.

"பார்த்தாஸ்"

(ஏர்கண்டிசன்ட்) கேப்ரோடு, நாகர்கோவில்.

தொலைபேசி: அலுவலகம்: 7698, இல்லம்: 3886

கன்னியாகுமரி மாவட்டத்திலேயே ஓர் ஒப்பற்ற ஜவுளி மாளிகை! ஆடவர், பெண்டிர், குழந்தைகள் ஆகியோருக்கான தரம் மிக்கதும், விலை குறைவானதும் ஆன ஜவுளிகளை அள்ளி வழங்கும் ஒரு தலைசிறந்த ஆடையகம்!

மற்ற மாநிலங்களில் தயாராகும் பட்டுச் சேலைகளும்

காஞ்சிபுரம், கும்பகோணம், ஆரணி,
தர்மாவரம், வாரணாசி

பட்டுச் சேலைகளும் குறைந்த விலையில் கிடைக்கும்.

காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை!

பர்கூர் அரசு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் உரை

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று, தமிழக முதலமைச்சராக என்னைப் பொறுப்பேற்கச் செய்திட்ட, என் பாசத்திற்குரிய பர்கூர் தொகுதி மக்களை, மீண்டும் இன்று நான் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் உங்களுக்குப் பணிபுரிய மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஆகவேதான், பதவிப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே பர்கூர் நகருக்கு நான் நேரில் வந்திருந்து, பலகோடி ரூபாய்க்கான பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்துச் சென்றேன்.

தொடர்ந்து பல பிரச்சினைகள் இருந்தும்கூட, எனக்கு வாக்களித்த உங்கள் அனைவருக்கும் என்னால் ஆன பணிகளை, தொண்டினை ஆற்றிட வேண்டும் என்ற உணர்வோடு, இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, உங்களையெல்லாம் சந்திக்கும் இந்த நல்ல வாய்ப்பினைப் பெற்றுள்ளேன்.

நீண்ட நெடுங்காலமாகவே தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு, ஆட்சியின் அரவணைப்போ, அலுவலர்களின் கவனிப்போ அற்ற நிலையில் இருந்த ஓர் தொகுதி என்பதால், பல்வேறுபட்ட குறைபாடுகள் உடைய தொகுதியாக இத்தொகுதி இருந்துவருகிறது.

அந்த அளவுக்குப் பின் தங்கிய தொகுதி, வறண்ட தொகுதி, வறுமையில் வாடும் தொகுதி என்பதால் தான், இதுபோன்ற தொகுதிகளை முன்னுக்குக் கொண்டுவரும் ஒரே எண்ணத்தில், இத்தொகுதியை எனக்கெனத் தேர்ந்தெடுத்து, இங்கே இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்றம் சென்றுள்ளேன்.

எனவே - ஏனைய தொகுதிகளில் உள்ள வாய்ப்பும், வசதியும், பர்கூர் தொகுதியும் பெற்றிடும் திட்டங்கள் அனைத்தும், ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுத்தப்பட உள்ளன.

அந்த வகையில் தான் இப்பகுதியின் குடிநீர்த்தேவைக்கான திட்டங்களுக்கும், சாலை மேம்பாட்டுச் சீர்திருத்தங்களுக்கும், போக்குவரத்து வசதிகளை உருவாக்கும் பணிகளுக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு முடுக்கி விடப்பட்டுள்ளன.

நிலமற்ற ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள், மற்றும் அடித்தளத்தில் வீழ்ந்து கிடக்கும் மக்களுக்கும், முதியோர் மற்றும் தாய்மார்களுக்கும், அரசின்

நலத்திட்ட உதவிகள் தங்கு தடையின்றி முழுமையாகக் கிடைக்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோருக்குப் பொங்கல் திருநாளை ஒட்டி சேலை, வேட்டி இலவசமாக வழங்கும் ஒரு மாபெரும் திட்டத்தைச் சமீபத்தில் நான் அறிவித்தேன். கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு இடையேயும், உங்கள் அரசு இந்தச் சிறு உதவியை, நலிந்த பொருளாதார நிலையில் உள்ள என் சகோதரிகளுக்கும், சகோதரர்களுக்கும் வழங்க முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த விழாவில் இன்று நான், என் தொகுதி மக்களாகிய உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்துப் புத்தாடைகளை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில், தொகுதியில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளும் - மக்கள் குறைகளும், கோரிக்கைகளும் - உடனுக்குடன் என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்;

அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உடன் அவற்றுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்திட வேண்டும் என்ற நோக்கத்தோடும், இன்று முதல் எனது சட்டமன்றத் தொகுதி அலுவலகம் ஒன்று, பர்கூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அலுவலகம், பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில், 163-ஆம் எண் உள்ள கட்டடத்தில், இன்றுமுதல் தொடங்கப்பட உள்ளது. அந்த அலுவலகம் வாரத்தில் அனைத்து நாட்களிலும், காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். என்னால் நியமிக்கப்படும் எனது நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள்.

எனவே தொகுதி மக்கள், இவ்வலுவலகத்தைப் பயன்படுத்தி, தொகுதியின் பிரச்சினைகள், கோரிக்கைகள், குறைபாடுகள், மற்றும் புகார்களை, எனக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அலுவலகத்தில் நீங்கள் கொடுக்கும் கோரிக்கை மனுக்களும், மற்றவைகளும், நேரடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதோடு, உரிய அரசு அலுவலர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றத் தொகுதி அலுவலகம் திறக்கப்பட்டுவிட்டது; இனி மேல் நான் இங்கு வரமாட்டேன் என எவரும் ஐயுற வேண்டாம். தற்போது எப்படி மூன்று மாத கால இடைவெளிக்குள்ளேயே, மீண்டும் உங்களைச் சந்திக்கத் தேடி நேரில் வந்துள்ளேனோ, அதேபோல் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் உங்களை நேரில் வந்து சந்திப்பேன்.

பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கவும்; 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவவும் ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்பகுதியில் பல தொழிற்சாலைகள் தொடங்க ஏற்பாடுகள் செய்து வருகிறேன். அவற்றிற்கெல்லாம் அடிக்கல் நாட்ட விரைவில் நான் மீண்டும் இங்கு வந்து உங்களைச் சந்திப்பேன். தேர்தல் காலத்தில் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை, முழுமையாக நிறைவேற்றுவதில், கண்ணும் கருத்துமாகச் செயல்படுவேன் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'காலத்தி னாற்செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

- என்ற கொள்கை உடையவள் நான். எனவே, என்னை அமோகமாக வெற்றிபெறச் செய்த உங்கள் பேருதவிக்காகக் காலமெல்லாம் உங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை, என்ற எனது உள்ள உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பெரியார் மாவட்டம் பர்கூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், 23.1.92 அன்று ஆற்றிய உரை.)

காங்கேயம் பர்கூர்- தொகுதிகளில் முதல்வர் நிகழ்ச்சிகள்:

பெரியார் மாவட்டம் காங்கேயத்தில், அரசுத் திட்டப் பணிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, 22.1.1992 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.225 கோடி செலவில், அரசின் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்தும் நலிந்த பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பலர் வாழ்த்துரை நல்கினார்கள்.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 225 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்டங்களைத் தொடங்கிவைத்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை, சத்தியமங்கலம் பேருந்து நிலையம், தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணி உள்பட 109.66 கோடி ரூபாய்க்கான திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். 25.52 கோடி ரூபாய்க்கான அரசு நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார். ஜீவா, சேரன், தீரன், சின்னமலை, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 70 புதிய பேருந்துத் தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ஆலய புனரமைப்பு நிதிக்கு 4.77 இலட்சம் ரூபாயும், கர்நாடகத் தமிழர் மறுவாழ்வு நிதிக்கு 5.16 இலட்சம் ரூபாயும் வழங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் கர்நாடகத் தமிழர் நிதிக்குத் தனது 3 மாத ஊதியம் மற்றும் காங்கேயம் தொகுதி மக்கள் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப., நன்றியுரையுடன் விழா இனிது முடிவடைந்தது.

தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி, மத்தூர், பர்கூர் ஆகிய இடங்களில் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் விழா, 23.1.1992 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 81,300 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கி, சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பர்கூர் தொகுதி மக்களின் குறைகளையும் வேண்டுகோள்களையும் உடனுக்குடன் தமது கவனத்திற்குக் கொண்டுவரும் வண்ணம் பர்கூரில் உள்ள ஜெகதேவி சாலையில் புதிய அலுவலகம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இவ்வலுவலகம் வார நாட்கள் அனைத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களால் நியமிக்கப்படும் 3 நேரடிப் பணியாளர்கள் அங்கு பொறுப்பில் இருப்பார்கள். இது தவிர 100 பேர் மக்களிடம் நேரிடையாகச் சென்று மனுக்களைப் பெற்று வருவார்கள். இப்பணிக்கென அவர்களுக்கு 100 சைக்கிள்களும் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு 3 ஸ்கூட்டர்களும் வழங்கப்படும்.

மேலும், பர்கூர் தொகுதியில் 22 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய நூற்பாலை அமைக்கப்படும் என்றும் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் நிறுவப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தசரதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிது முடிந்தது. — **தொகுப்பு: தே. மணி.**

சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழக அரசின் புதிய சலுகைகள்

தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு சில அடிப்படைத் தேவைகளை அமைப்பதற்காகச் சுற்றுலாத் திட்டங்களுக்குப் பல சலுகைகளை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.1.'92 அன்று அறிவித்தார்.

சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவிக்க ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அரசு ஆராய்ந்து, தமிழ்நாட்டில் சுற்றுலாத் திட்டங்களுக்குக் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்க ஆணையிட்டுள்ளது.

◉ புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்பவர்களுக்கு 10 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட திட்டத்துக்கு அதிகப்பட்சமாக ரூ.10 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும்.

◉ புதிய ஓட்டல்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும்.

◉ புதிய ஓட்டல் திட்டங்களுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு ஆடம்பர வரியில் 50 சதவிகிதம் சலுகைகள் உண்டு.

◉ புதிய தொழில்களுக்கு வழங்கப்படுவது போல சுற்றுலாத் துறைக்கும் மின்சாரக் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படும்.

◉ புதிய சுற்றுலாத் திட்டங்களுக்காக மின்சார ஜெனரேட்டர்கள் வாங்கினால் அதன் விலையில் 15 சதம் வரை மானியம் வழங்கப்படும்.

◉ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிஐஐசி) மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிப்காட்) ஆகியவை வசூலிக்கும் வட்டியிலோ அல்லது 14 சதவிகிதம் வட்டியிலோ சுற்றுலாத் திட்டங்களுக்குக் கடன் வழங்கப்படும்.

மூன்று நட்சத்திரத் தகுதி வரையிலான ஓட்டல்கள், மத்திய அரசு அங்கீகரித்துள்ள ஓட்டல்கள், பூங்காக்கள், கோல்ப் விளையாட்டுப் பயிற்சி, குளிர்ப்பதனச் சுற்றுலாப் பேருந்துகள் ஆகியவற்றுக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கும். நான்கு மற்றும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்கு மேற்கண்ட சலுகைகள் கிடைக்காது.

சென்னை, மதுரை, கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட சுற்றுலாத் திட்டங்களுக்கு இச்சலுகைகள் பொருந்தாது.

இதுபற்றிய முழு விவரங்களை, தமிழ்நாடு அரசிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

'கலைமாமணி' விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல்,இசை,நாடக மன்றத்தின் சார்பில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கும் விழா, சென்னைக் கலைவாணர் அரங்கில் 26.1.92 அன்று மிகச் சிறப்பாக நடந்தது.

விழாவிற்கு, மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமை வகித்தார்.

விழாவில், விருதுபெறும் கலைஞர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்கள் பொன்னாடையும் பொற்பதக்கமும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், விருது பெறும் கலைஞர்கள் 39 பேர்களுக்குக் 'கலைமாமணி' பட்டம் வழங்கினார்.

விழாவில், மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார் இது தவிர, மறைந்த 14 கலை மேதைகளின் திருவுருவப் படங்களையும் திறந்துவைத்தார்.

ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற திரு. சி.எஸ். ஜெயராமன், திரு. கள்ளபார்ட் நடராஜன், திருச்சி திரு. சுவாமிநாதன் ஆகியோருக்குத் தலா ஐயாயிரம் ரூபாய் பொற்கிழியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த நாடகக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை நாடகப் பிரியாவுக்கும், சிறந்த கலை நிறுவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்புக்கும் விழாவில் கேடயங்கள் வழங்கப்பட்டன.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பேசுகையில்-

'பல்வேறு வகையான கலைக் கருவூலங்களைத் தென்னிந்தியா தன்னகத்தே கொண்டுள்ளது. இன்று வரை அது உண்மை அழகோடு பாதுகாக்கப்பட்டு வருகிறது. கலை, பண்பாட்டுப் பரிவர்த்தனை மூலம், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடிகிறது' என்றார்.

மாண்புமிகு முதல்வர் உரை:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

'கலை! மனித மனத்தின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடு! உள்ளத்து உணர்வுகளின் பிரதிபலிப்பு! தான் வாழ்வதோடு, தன்னைப் படைத்தவனையும் வாழவைக்கும் வல்லமையுடையது கலை! அது காலத்தால் அழியாதது! கால, தேச வர்த்தமானங்களைக் கடந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும், நம் ஆன்மாவோடு உறவாடும் ஆற்றல் பெற்றது.

உலகத்தில் வேறு எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பு, நம் தாய்மொழியாகிய தமிழுக்கு உண்டு. ஏனெனில், தமிழ் மொழி மட்டும் தான் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. ஆயிரக்கணக்கான இயற்றமிழ் விற்பன்னர்கள், இசைத் தமிழ் வேந்தர்கள். நாடகத் தமிழ் வல்லுநர்கள் ஆகியோரின் கூட்டுப் படைப்பாக முத்தமிழ் விளங்குகிறது. இதுவே, நம் அன்னைத் தமிழின் தனிச் சிறப்பாக, தரணி எல்லாம் போற்றப்படுகிறது. முத்தமிழைக் காக்கும் அமைப்பாக இயங்குகின்ற இயல், இசை, நாடக மன்றத்தின், இச்சீர்மிகு விழாவில் கலந்துகொள்வதில் உவகை அடைகின்றேன்.

தமிழ் வளர வேண்டுமென்றால், முத்தமிழ்க் கலைகள் உயர வேண்டுமென்றால், மலர்ந்து வரும் தமிழ் அறிஞர்களும், கலை மேதைகளும் போற்றப்பட வேண்டும். போற்றுதலும், போற்றப்படுதலும்தான், மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் காரணமான, இரு முக்கிய உந்து சக்திகள் என்பது உலகியல் உண்மை

அறிஞரைப் போற்றாத நாட்டில்
அறிஞர்கள் தோன்றுவதில்லை!

வீரரைப் போற்றாத நாட்டில்
வீரர்கள் தோன்றுவதில்லை!

கவிஞர்களைப் போற்றாத நாட்டில்
கவிஞர்கள் தோன்றுவதில்லை!

கலைமேதைகளைப் போற்றாத நாட்டில்
கலைமேதைகள் தோன்றுவதில்லை!

இதனை உள்ளத்துள் கொண்ட அரசாக, இந்த அரசு திகழுவதால் தான், தமிழ்காத்து, தமிழர்தம் நலம் பேணி, தமிழ்க் கலைகளுக்கு அரணாக விளங்குகின்ற உங்கள் அரசு, முத்தமிழிலும் சிறந்தோர்களைத் தேர்ந்தெடுத்து, கலைமாமணி விருது வழங்கும் இவ்விழாவினை, இன்று சிறப்பாக நடத்திக்கொண்டு இருக்கிறது.

இந்த விழாவில் கலந்துகொளகிற போது, என் மனதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் ஏற்படுகின்றது. ஏனெனில், இந்தக் கலைமாமணி விருது ஒரு காலத்தில் எனக்கும் வழங்கப்பட்டது. அவ்வகையில் கலைமாமணிகள் வரிசையில் நானும் இருக்கிறேன். 1972-ஆம் ஆண்டு நான் கலைமாமணி விருது பெற்றேன். இன்று நானே கலைமாமணி விருது வழங்குகிறேன். கடந்த 20 ஆண்டுகளில் எவ்வளவு மாற்றம்! அன்று விருது வாங்கிய நான், இன்று விருது வழங்குகிறேன்.

இந்த வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் யார் காரணம் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். என் வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த என் தாயார் அவர்களும், என்னை வழி நடத்தும் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், என்னை வாழ வைக்கும் தெய்வங்களான இலட்சோப இலட்சம் தமிழ்ப் பெருமக்களும்தான் இதற்கெல்லாம் காரணம் என்பதை உணர்கிறேன்.

1955-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயல்,இசை,நாடக மன்றத்திற்கு, அன்றைய பெயர், மெட்ராஸ் ஸ்டேட் சங்கீத நாடக சங்கம் என்பதாகும்.

தமிழக அரசால் நிறுவப்பட்ட இந்த இயல்,இசை,நாடக மன்றம், இதுவரை 752 கலை மேதைகளுக்குக் கலைமாமணி விருதை வழங்கி உள்ளது. இந்த ஆண்டு, புதிய புதிய கலைப்பிரிவுகளைக் கௌரவிக்கும் வகையில், வழக்கமாக வழங்கப்படும் 31 கலைத் துறைகளுடன், கூடுதலாக 8 துறைகளைச் சேர்த்து, 39 கலைத் துறைகளைச் சார்ந்த பெருமக்களுக்கு, கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே கலைமாமணி விருது பெற்ற கலை மேதைகளில், மூவர் இன்று பொற்கிழி பெறுகிறார்கள். சிறந்த நாடகக் குழுவிற்கும், சிறந்த கலை நிறுவனத்திற்கும், அவர்களைப் பாராட்டி சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.



எல்லா வகையிலும் எனக்கு ஆசானாக, குருவாக விளங்கிய, என் உயர்வுக்குக் காரணமாகிய, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை, இன்று நான் தமிழகத்தின் முதலமைச்சராகத் திறந்து வைக்கும் வாய்ப்புப் பெற்றதை, நான் பெற்ற பெரும் பேறாகவே கருதுகிறேன்.

பாராட்டுக்கும், போற்றுதலுக்கும் உரியோராய்த்,•தமிழகக் கலைச் சோலையில் பூத்துக் குலுங்கி, புகழ் பெற்றோராய்த் திகழ்ந்த 186 கலை மேதைகளின் படங்கள், ஏற்கெனவே இம்மாமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இன்று 14 பெருமக்களின் படங்களை நான் திறந்து வைத்துள்ளேன். இந்தப் படங்களில், மாமன்றத்தின் 200-வது படமாகத் திறக்கப்பட்டுள்ளது, நம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புனித உருவம், என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது-

கலைத் துறையில் முடிசூடா மன்னராகச் சாதனைச் சரித்திரம் படைத்து, பொது வாழ்க்கையில் புகழ் மகுடம் சூடி, அரசியல் அரங்கத்தில் காலத்தால் அழியாத காவியமாக விளங்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவைப் போற்றுவோர் எல்லோரும் போற்றப்படுவார்கள்; எந்த மாமன்றத்திலும் எந்தக் காலக் கட்டத்திலும், அவருக்கு ஓர் தனி இடம் உண்டு என்பது உண்மையாகிறதல்லவா? இன்றும் அதனை நம்மால் உணர முடிகிறதல்லவா? அம் மாமனிதரின் புகழ்பாடி, தமிழ்க் கலைகளை வளர்க்க, காக்க, உங்கள் அரசு தொடர்ந்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

வாழ்வில் நலிந்த வயோதிகக் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.250 வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இன்று முதல் ரூ.400 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இயல்,இசை,நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் இங்கே வைத்த இதர கோரிக்கைகளை அரசு பரிவுடன்

பரிசீலித்து நல்ல முடிவுகளை அறிவிக்கும்.

இன்றைய தினம் கலைமாமணி விருது பெற்ற கலைமேதைகள் அனைவருக்கும், பொற்கிழி பெற்ற சான்றோர்களுக்கும், சுழற்கேடயம் பெற்ற நாடகக் குழுவினருக்கும், கலை நிறுவனத்தினருக்கும், எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கிறேன்

தமிழ்நாடு இயல்-இசை-நாடக மன்றம், தமிழ் அன்னைக்கு மேலும் பல அணிகலன்கள் சேர்த்திடும் வண்ணம் செயல்படவேண்டும், தனது சீரிய பணியைச் சிறப்பாகத் தொடரவேண்டும், வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

விழாத் தொடக்கத்தில் மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்திய நாதன் அனைவரையும் வரவேற்றார் மன்றச் செயலாளர் திரு. ஆர்.எஸ்.

மனோகர் ஆண்டறிக்கை படித்தார்; விழா முடிவில் நன்றி நவின்றார்.

விழா முடிவில் கலைமாமணி திரு. யூ. சீனிவாசன் அவர்களின் மாண்டலின் இசை நிகழ்ச்சி நடந்தது. மேதகு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களும் இசை நிகழ்ச்சியை இறுதிவரை கேட்டு மகிழ்ந்தார்கள்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.வி. கிரி.

கலைமாமணி விருதுபெறும் கலைஞர்கள்

நீதிபதி எம்.எம். இஸ்மாயில்	- இயற்றமிழ்க் கலைஞர்
டாக்டர் விக்ரமன்	- இயற்றமிழ்க் கலைஞர்
திருமதி சி. சரோஜா (பம்பாய்-	இசைக் கலைஞர்
திருமதி சி. லலிதா சகோதரிகள்)-	இசைக் கலைஞர்
தஞ்சாவூர் திரு. வி. சங்கர அய்யர்	- இசைக் கலைஞர்
திருமதி டி. ருக்மணி	- வயலின் கலைஞர்
பாலக்காடு திரு. ஆர். ரகு	- மிருதங்கக் கலைஞர்
மைசூர் திரு. துரைசாமி அய்யங்கார்	- வீணைக் கலைஞர்
சித்தூர் திரு. ஜி. வெங்கடேசன்	- புல்லாங்குழல் கலைஞர்
திரு. திருவிழா ஜெய்சங்கர்	- நாதசுரக் கலைஞர்
மன்னார்குடி திரு. எம்.ஆர். வாசுதேவன்	- தவில் கலைஞர்
திரு. டி.கே. தட்சிணாமூர்த்தி	- கஞ்சிராக் கலைஞர்
திரு. ஏ.பி. சண்முகம்	- தில்ரூபா கலைஞர்
டாக்டர் சீர்காழி ஜி. சிவசிதம்பரம்	- இறையருட் பாடல் கலைஞர்
திருமதி கலாநிதி நாராயணன்	- பரதநாட்டிய ஆசிரியர்
திருமதி சரஸ்வதி	- பரதநாட்டியக் கலைஞர்
மதுரை திரு. டி. சேதுராமன்	- பரதநாட்டிய இசைக் கலைஞர்
பந்தணைநல்லூர்	பரதநாட்டிய
திரு. பி. சீனிவாசன்	- மிருதங்கக் கலைஞர்
திரு. ஆர்.சி. தமிழன்பன்	- நாடக ஆசிரியர்
திரு. கே.எஸ். நாகராஜன்	- நாடகத் தயாரிப்பாளர்
திரு. கே.டி. ராஜகோபால்	- நாடக நடிகர்
திரு. ஏ.ஆர். சீனிவாசன் (ஏ.ஆர்.எஸ்.)	தொழில்முறை அல்லாத - நாடக நடிகர்
திரு. 'ஒருவிரல்' கிருஷ்ணா ராவ்	- நாடக நகைச்சுவைக் கலைஞர்
திருமதி எஸ். கருமாரி	- நாடக நடிகை
திரு. ஜி. வெங்கடேஸ்வரன்	- திரைப்படத் தயாரிப்பாளர்
திரு. சி.வி. இராசேந்திரன்	- திரைப்பட இயக்குநர்
திரு. சத்யராஜ்	- திரைப்பட நடிகர்
செல்வி பானுப்ரியா	- திரைப்பட நடிகை
திரு. 'வெண்ணிற ஆடை' மூர்த்தி	- திரைப்பட நகைச்சுவை நடிகர்
திரு. 'சித்ராலயா' கோபு	- திரைப்பட வசனகர்த்தா
திரு. தேவா	- திரைப்பட இசை அமைப்பாளர்
திருமதி பி. லீலா	- திரைப்பட பின்னணிப் பாடகி
மேலக்கரந்தை திருமதி பொன்னம்மாள்	- வில்லுப்பாட்டுக் கலைஞர்
திரு. பி. சுந்தரராஜ் நாயுடு	- கரகக் கலைஞர்
திரு. டி.ஏ.ஆர். நாடி ராவ்	- புரவிநாட்டியக் கலைஞர்
திரு. பி.எஸ். நாகராஜ பாகவதர்	- இசை நாடக நடிகர்
திருமதி கே.வி. ராஜம்	- இசை நாடக நடிகை
திருமதி பி. ஞானாம்பாள்	- இசை நாடக ஆர்மோனியக் கலைஞர்
கும்பகோணம் திரு. டி.என். சங்கரநாதன்	- பொம்மலாட்டக் கலைஞர்

பொற்கிழி

கலைமாமணி திரு. சி.எஸ். ஜெயராமன்
கலைமாமணி திரு. 'கள்ளப்பார்ட்' நடராஜன்
கலைமாமணி திருச்சி திரு. சுவாமிநாதன்

சுழற்கேடயம் பெறும் சிறந்த நாடகக் குழு

நாடகப்ப்ரியா' சென்னை.

சிறந்த கலை நிறுவனம்

மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப், சென்னை.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927



தமிழரசு

இந்த இதழில்...

அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்! —மேதகு ஆளுநர் அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரை ... 2

இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆதரிப்போம்! —புதுடெல்லியில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை ... 11

சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்திறப்பு விழா ... 14

பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப் பணிகள் ... 19

பனிமலரைச் சூடுதற்குக் கட்டணமா? (கவிதை) ... 21

கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள் ... 24

... 27

புற்றுநோயைக் குணப்படுத்தலாம்! ... 29

மகளிர் நலம் பெற

ஆளுநர் உரை மீது நடந்த விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த ... 33

பதிலுரையின் சில பகுதிகள் ... 40

சட்டப்பேரவையில்... சமூக-பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதே தர்மம்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 41

புதிய தொழில் கொள்கை— - 1992. -மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ... 43



முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தை, சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (31.1.1992).



சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச்.கனியா அவர்கள் திறந்து வைத்தார் (8.2.1992).



1992-ஆம் ஆண்டின் முதல் சட்டப்பேரவைக் கூட்டத்தில், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் உரையாற்றினார் (29.1.1992).

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

மாசித் திங்கள் - 4

மலர்:22 இதழ்:16

16-2-1992

அமைதியான சூழ்நிலையில் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைவோம்!

தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆற்றிய உரை (29.1.1992).

திப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே,

புதிய ஆண்டில் தொடங்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பரவையின் முதற் கூட்டத் தொடரில் உங்களிடையே ுரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் ுனைவர்க்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1992-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொருளாதாரம் படிப்படியாக உயரவும், வறுமை அகலவும், மக்கள் ாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், டுக்கப்பட்ட மக்கள் வாழ்வில் வளம் காணவும் வேண்டும் என்ற ுயர்ந்த இலட்சியங்களை அடைய, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இப்புதிய அரசு ுழு முச்சுடன் மிகச்சீரிய முறையில், தொடர்ந்து பாடுபட்டு, வெற்றி காணும் என நம்புகிறேன்.

2. மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநிலத்தில் முன்பு நிலவிய சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து நன்கு அறிவார்கள். புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்குமுன் நமது மாநிலத்தில் வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் எந்த அளவிற்கு இங்குள்ள வாழ்க்கை முறையில் ஊடுருவி இருந்தார்கள் என்பதையும், இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையை மீண்டும் நிலைநாட்டி, இம்மாநிலத்தில் அமைதி தவழச் செய்ய எடுக்கப்பட்ட துணிவு மிக்க நடவடிக்கை பற்றியும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அரசு இப்பணியை நிறைவேற்றுவதில் மிகுந்த அவசர முக்கியத்துவம் கொடுத்து, திட்டமிட்ட, முழுமையான முறையில் நடவடிக்கைகளை எடுத்து, காவல் துறையினரிடம் புதிய நம்பிக்கை உணர்வினை ஊட்டியது; அவர்கள் தங்கள் கடமையின்பால் முழு அர்ப்பண உணர்வுடன் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊக்கம் அளிக்கும் அரசின் நடவடிக்கை தொடர்ந்தது. தமிழ்நாட்டு மக்கள் இந்த முயற்சிகளை முழுமனதுடன் வரவேற்றார்கள். அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளுக்கும் தங்கள் முழுமையான பேராதரவை வழங்கினார்கள்.இதன் விளைவாக, புதிய அரசு பதவி ஏற்ற ஒரு சில வாரங்களிலேயே இம்மாநிலத்தில் ஊடுருவி இருந்த வெளிநாட்டுப் போர்ராளிகள் மற்றும் தீவிரவாதிகளின் சட்டவிரோத நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தவும், அறவே ஒடுக்கவும் முடிந்தது. இப்பெரிய பணியை மேற்கொள்ளுகின்றபோது, காவல் துறை முற்றிலுமாகச் சீர்திருத்தி அமைக்கப்படவும் நவீனப்படுத்தப்படவும் வேண்டும் என்பது தெரியவந்தது. காவல் துறையைச் சீர்திருத்திக் காலத்திற்கேற்ற வகையில் மாற்றி அமைப்பதன் மூலமே, பயங்கரவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சதித் திட்டங்களுக்கு எதிராக, காவல்துறை பயனுள்ள வகையில் இயங்கி நடவடிக்கை எடுக்க முடியும்; மேலும், மாநிலத்தில் சட்டம்

ஒழுங்கைப்பராமரிக்கின்ற வலிமை வாய்ந்த காப்பாளராகவும் செயற்பட முடியும். இதற்கிணங்க, மாநிலக் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டம் ஒன்று ரூபாய் 80.45 கோடி செலவில் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக, இதற்கென ரூபாய்10கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காவல்துறையில் கடந்த சில மாதங்களில் கொண்டுவரப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்கள், இதற்கு ஒரு புதிய பார்வையைப் புதிய பாதையைப் புதிய செயல்நோக்கத்தைக் கொடுத்துள்ளன. தன் முன்னுள்ள அரும்பணியை ஆற்றுவதற்கு, காவல்துறை தயங்காமல் விரைந்து முன்வந்து, அயராது பாடுபட்டுத் தன் பொறுப்பினை மிகவும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றியுள்ளது, நமக்கெல்லாம் மிகப்பெரும் அளவில் மனநிறைவைத் தருகின்றது. இதன் விளைவாக, மாநிலத்தில் சட்டத்தின் ஆட்சியை நாம் மீண்டும் நிலைநாட்டிட முடிந்துள்ளது.

3. காவிரி நீர்த் தகராறு குறித்து இவ்வரசு தனது நிலையில் மிகவும் உறுதியாக இருந்து வருகிறது என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். தமிழ்நாட்டின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுத்தர, முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அதை நான் இங்கு மீண்டும் விரித்துரைக்கத் தேவையில்லை. காவிரி ஆற்று நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையை, மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்று, இந்த அரசு மிகவும் வற்புறுத்தியது. இந்திய அரசு சில பிரச்சினைகளை உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்தது. இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு முற்றிலும் தமிழ்நாடு மாநிலத்திற்குச் சாதகமாக அமைந்தது. இறுதியில், காவிரி ஆற்றின் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை இந்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டது. இதற்கெல்லாம் முழு முதற்காரணம், தமிழக முதல்வர் அயராமல் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகளே ஆகும். இது தொடர்பாகத் தமிழகத்து மக்களின் குரல் இந்நாட்டின் மிக உயர்ந்த மன்றங்களில் ஒலித்துள்ளது. அவை நம்முடைய மக்களின் நியாயமான இயல்பைத் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளன. அதே சமயத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் வெளியிடுவது மட்டும் போதாது என்று இவ்வரசு கருதுகின்றது. இந்த ஆணையை உரியவாறு செயற்படுத்துவதை உறுதி செய்ய, மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை எத்தகைய உணர்வுடன் அரசிதழில் வெளியிட்டதோ, அதே உணர்வுடன் தேவையான தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

4. நிலைமை இவ்வாறிருக்க, 13.12.1991 - ஆம் நாளில் கருநாடக மாநிலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பந்த்தினைத் தொடர்ந்து, பெருமளவில் கலவரங்கள் நடந்தன. பலதலைமுறையாக அங்கே அமைதியுடன் வாழ்ந்து வந்த, ஒன்றுமறியாத அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக, முன் எப்போதும் கண்டிராத அளவுக்கு வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந்த வன்முறையால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மிகப்பரவலாகச் சேதப்படுத்தப்பட்டன. கருநாடக மாநிலத்தில் வாழ்ந்து வந்த ஒரு இலட்சத்து ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் உயிருக்கு அஞ்சி, பாதுகாப்பு வேண்டி தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்தனர். கருநாடக மாநிலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களைக் கொடுந்துயரம் கவ்வியது. ஈவிரக்கமற்ற முறையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைச் செயல்களால் அவர்களுடைய உயிர்களுக்கு எங்கே ஊறு நேர்ந்து விடுமோ என்ற அச்சமும், வேதனையும் அவர்களை ஆட்கொண்டன. இந்த வன்முறைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்குமாறும், கருநாடகத்தில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுமாறும், அங்கிருந்து பெயர்ந்து வந்த தமிழர்கள் மீண்டும் அம்மாநிலத்திற்குத் திரும்புவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கித் தருமாறும், முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்தியப் பிரதமரையும், கருநாடக முதலமைச்சரையும் கேட்டுக் கொண்டார். 30.12.1991-ஆம் நாளில் கூடிய தமிழக அமைச்சரவை இது தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை இயற்றியது. அதே நாளில் தமிழக முதல்வர் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானம், தமிழ் மக்கள் மீது தொடர்ந்து நடத்தி வருகின்ற வன்முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், இந்த வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான அளவிற்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப்பிரதமரைக் கேட்டுக்கொண்டது. வன்முறைச் செயல்கள் கருநாடகத்தை உலுக்கிவிட்ட நிலையில், தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு ஆணை பிறப்பித்ததன் மூலம், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்கும் ஏற்பாடு செம்மையாகச் செயல்பட்டது. இங்கே, அரசு, அமைதியைப் பேணிக்காத்து, இன ஒற்றுமைக்கு உறுதி செய்தது. அவரது அரசியல் மேதகைப் பண்பினாலும், சரியான வகையில் முன்கூட்டி எண்ணிச் செயற்படும் திறத்தாலும் தமிழகத்து மக்கள் இன, மொழி வேறுபாடு பாராட்டாமல் அமைதியைப் பாதுகாத்தனர்; மிகமிகப் பாராட்டத் தகுந்த வகையில் பொறுமை காத்தனர்; இதனை இந்த நாடே வியந்து பாராட்டியுள்ளது.

5. கருநாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்து வந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கி, புகலிடம் அளிக்க இவ்வரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. நிவாரண முகாம்கள் நிறுவப்பட்டன. நிவாரண முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் தங்கியிருந்த தமிழர்களுக்கு உணவு, துணிமணிகள், ஏனைய அடிப்படைத் தேவைப்பொருட்கள் வழங்கப்பட்டன. இதனால், அரசிற்குப் பெருமளவில் செலவு ஏற்பட்டது என்பது உண்மையே. என்றாலும், எதிர்பாராத, முன் எப்போதும் கண்டிராத வகையில் எழுந்த நிலைமையையொட்டி, அரசு தன்னுடைய நிதி நெருக்கடி நிலைமைக்கு இடையேயும் இதற்கான செலவு முழுவதையும் தானே ஏற்றுள்ளது. அது இச்செலவினத்திற்கு நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய அரசிடமிருந்து இந்தக் கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கும் என்று நம்புகிறோம். இழப்பீடு வழங்குமாறு கேட்டுவரும் கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமான

அளவிற்கு இழப்பீடு வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறு தமிழ்நாடு அரசு இந்திய அரசையும், கருநாடக அரசையும் வற்புறுத்தி வந்துள்ளது. கருநாடகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் உள்ளத்தில் நம்பிக்கை ஏற்படுத்தவும், அவர்கள் கருநாடகத்திற்குத் திரும்பிச் செல்லச் சாதகமான நிலைமையை உருவாக்கவும், இதுதான் ஒரே வழி என்று இவ்வரசு கருதுகிறது. எனினும், கருநாடகத்தில் இரக்கமற்ற முறையில் நிகழ்ந்த வன்முறைச் செயல்களின்போது பெருமளவு இழப்பிற்கு ஆளான தமிழர்களுக்கு இழப்பீடு வழங்க, இந்திய அரசோ அல்லது கருநாடக அரசோ இன்னும் உறுதியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலை ஆகும்.

6. கருநாடக மாநிலத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இரக்கமற்ற வன்முறைச் செயல்களையும், பல்வேறு இனத்தவர்கள், பல்வேறு மொழிபேசும் மக்களிடையே நிலவும் உறவு முறையைச் சிதைப்பதையும் நாடு முழுவதும் உள்ள பொறுப்புள்ள மக்கள் கண்டிக்கத் தயங்க மாட்டார்கள். நம்முடைய அரசியலமைப்பு கூட்டாட்சி அரசமைப்பாகும். மாநில அரசுகளும், மத்திய அரசும் அரசமைப்புச் சட்டப்படி தத்தமக்கு வழங்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருக்கும் என்ற உயரிய கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததே கூட்டாட்சி அரசமைப்பு

ஆகும். மத்திய அரசு, மாநில அரசுகளின் நடவடிக்கைகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல், அது அந்தந்த மாநிலங்களின் நிலைகளை முறையாகப் புரிந்து கொண்டு, நியாயமான முடிவுகளைப் பயனுள்ள வகையில் ஏற்கச் செய்வதன் மூலம், மாநில அரசுகளுக்கிடையேயான வேறுபாடுகளைக் களைய உதவ வேண்டும். மாநில அரசுகள் தொடர்பாக மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நியாயம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும், பாதிக்கப்பட்டவர்களையும், பாதிப்பை ஏற்படுத்தியவர்களையும் பிரித்துப்பார்க்க வேண்டிய கடமையும் மத்திய அரசுக்குள்ளது. இத்தருணத்தில் கருநாடக மாநிலத்திலுள்ள பாதிக்கப்பட்ட, தமிழ் மக்கள் அனைவருக்கும் போதிய அளவிற்கு இழப்பீடு வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை மத்திய அரசுக்குள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த விழைகிறேன்.

7. முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்றவுடன் அறிவித்த மதுவிலக்குக் கொள்கை, வெற்றி பெறுமா என்பது குறித்துப் பல்வேறு ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டன என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். மதுப் பழக்கத்திற்கு அடிமையாகும் சமூகக் கொடுமையை வேரோடு களைந்திட உறுதி செய்யும் வகையில், முதலமைச்சர் தாமே முன்னின்று மது ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். மது ஒழிப்புக் கொள்கை வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதன் மூலம் கள்ளச் சாராய விற்பனை பெருமளவில் குறைந்துள்ளது. கள்ளச் சாராயம் தலைதூக்க ஒட்டாமல் செய்யும் வகையில், மதுவிலக்கு நடைமுறைச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. கள்ளச் சாராய விற்பனை நடைபெறும் வழிகளைக் கண்டுபிடித்து வெற்றிகரமாக ஒழிப்பதில் அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது. இத்துடன், போதை மருந்துத் தொல்லை பரவுவதை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கவும், இளைய சமுதாயத்தை, குறிப்பாக மாணவர்களை, போதை மருந்துப் பழக்கத்திற்கு ஆட்படாமல் தடுத்திடவும், குடிப்பழக்கம், போதை மருந்துப் பழக்கம் இவற்றின் கேடுகளை மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்கவும், அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குக் கொள்கையை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அரும்சாதனை புரிந்துள்ளதற்காக, இந்நேரத்தில், இந்த அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

8. நாட்டை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி கிட்டத்தட்ட குடிமக்கள் அனைவரையும் பாதித்துள்ளது. மத்திய அரசு, இந்நிலைமையை ஏற்படுத்திய பொருளாதார வளர்ச்சி முன்னேற்றப்படிகளில் நாட்டைத் திரும்பவும் இட்டுச் செல்லும் வகையில், அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது; அதே வேளையில், மத்திய, மாநில அரசுகள் எடுத்து வருகின்ற சிக்கன நடவடிக்கைகளால், ஏழை, எளியவர்களும், வசதி வாய்ப்பு அற்றவர்களும் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேசியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்முன் எடுக்கப்பட வேண்டிய, மேற்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையைக் குறித்து, 1991 டிசம்பரில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தினார். பாமர மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கான விலைகள் பெரிதும் உயராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இன்றியமையாப் பண்டங்களின் நிர்ணய விலைகள் உயர்த்தப்படுவதற்கு முன்னர், மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகளையும் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இருந்தபோதிலும் மத்திய அரசு மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்காமல், அண்மையில் அரிசி, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, நிலக்கரி ஆகியவற்றின் விலைகளைக் கடுமையாக உயர்த்தியுள்ளது. மத்திய அரசு தன்னிச்சையாக மேற்கொண்ட இந்த நடவடிக்கை, மாநில அரசுக்குக் கடுமையான வேதனை தரும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதா, அல்லது, திட்டச் செயல்பாட்டையும் அதன் விளைவாக மாநிலப் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கும் வகையில், நமது திட்டச் செலவினங்களைக் கடுமையாகக் குறைப்பதா, என்பது பற்றி அரசு முடிவு செய்ய வேண்டியுள்ளது.

9. சான்றாகப் பொது விநியோக முறையில் மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை மத்திய அரசு கடுமையாக உயர்த்தியது. மாநில அரசு, சாதாரண ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 வீதத்திலும், சன்ன ரகம் மற்றும் மிகச்சன்ன ரகம் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.2.50 வீதத்திலும், மானியம் மிக அதிக அளவில் வழங்கப்படும் நிலையில் பொது விநியோக முறையிலிருந்து அரிசி வழங்கி வந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். மத்திய அரசு அறிவித்த வழங்கல் விலையைத் திருத்தியமைத்ததன் விளைவாக, மாநில அரசின் மொத்த மானியச் சுமை ஓராண்டில் மிக உயர் அளவிற்கு, அதாவது, ரூ.503 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இப்போதுள்ள மிகக் கடுமையான நிதி நெருக்கடியில், இந்த அளவிற்கு மானியச் சுமையைத் தொடர்ந்து தாக்குப்பிடிப்பது மிகவும் சிரமமாகும். தமிழ்நாடு முதலமைச்சர் இந்த விலைத் திருத்தங்கள் பற்றித் தனது தாளமுடியாத மனவருத்தத்தைத் தெரிவித்ததோடு, இதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏழை எளியவர்களே என்றும், இந்த விலை ஏற்றத்தை அவர்கள்தான் தாங்க வேண்டியுள்ளது என்றும் சுட்டிக் காட்டினார். ஆயினும், ஏழை மக்கள் பாதிக்கப்படாத வகையில், இவ்வரசு சாதாரண ரக அரிசிக்குக் கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 என்ற விலையை மாற்றாமல் அப்படியே வைத்துக் கொண்டுள்ளது. இவ்வளவு குறைந்த விலையில் சாதாரண ரக அரிசி வழங்கப்படுவதனால் உதவி மானியம் மிக அதிக அளவிற்கு வழங்கப்படுகிறது. புகழ் பெற்ற நமது புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பின்பற்றிய கொள்கையின் அடித்தளமாக இருந்தது ஏழை, எளியவர்களின் சுமையைப் பகிர்ந்து கொள்வது என்பதே. அதனை அடியொற்றியே, இவ்வரசு இதனை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. மேலும், விலைகளைக் கட்டுப்படுத்த இவ்வரசு ஏனைய பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. வணிகர்கள் வெளிச்சந்தையில் அரிசி விலையைக் குறைப்போம் என்று அவர்கள் அளித்த உறுதிமொழிக்கிணங்க, வர்த்தகர்கள் 'லெவி' நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளிச்சந்தை விலை குறைய ஏதுவாகப் பொது விநியோக முறையில் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களை வழங்கும்.

10. ஒருபுறம் பொருளாதார நிலையிற்காணும் பணவீக்கப் போக்கிலிருந்து ஏழைகளை ஓரளவிற்காவது காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசிற்கு உள்ளது. மறுபுறம், ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு, திட்ட ஒதுக்கீடுகளை, அதே அளவில் வைத்திருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது எளிதான பணி அன்று. இதற்குச் சில தியாகங்களைச் செய்தாக வேண்டும். ஒட்டுமொத்த நிலைமைக்கேற்ப, எமது அரசு இது தொடர்பாக, எண்ணிப்பார்த்து நியாயமான நிலையை மேற்கொண்டுள்ளது. ஏழைகள், நலிந்த பிரிவினர், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்க அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. இதன்மூலம், உணவு மானியத்தை அதிக அளவில் தொடர்ந்து வழங்கிவருதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருதல் ஏழைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்க உதவித் தொகை வழங்குதல் ஆகியவற்றுக்கு உயர்முன்னுரிமை அளிக்கப்படும் என்பது தெளிவாகிறது. ஏழைகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய இத்தகைய பொறுப்பின் அடிப்படையில்தான், ரூ.41.56 கோடி செலவில் 1.20 கோடி ஏழை மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலைகளை வழங்கும் திட்டத்தை அண்மையில் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்துள்ளார். ஏழைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற இன்றியமையா அடிப்படைத் தேவைகளை வழங்க இவ்வரசு பொறுப்பேற்கிறது. அதற்கிணங்க, இவ்வரசு, இது தொடர்பாக உரிய திட்டங்களை வகுத்து நிறைவேற்றும். இதன் விளைவாகத் திட்டங்களுக்குப் போதிய நிதி ஆதாரங்களை வழங்குவதில் மாநில அரசுக்குப் பெரும் இடர்ப்பாடு உள்ளது. இருப்பினும், அரசின் முற்போக்கான நலத்திட்டங்களால், ஏழை, எளிய மக்களின் குறைந்தபட்சத் தேவைகள் நிறைவு செய்யப்படவிருக்கின்றன என்பதே மன நிறைவளிப்பதாக உள்ளது.



11. தேசிய வளர்ச்சிக்குழு, 1991 டிசம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் 'காட்கில்' விதிமுறையில் மேலும் திருத்தங்கள் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் தமிழ்நாட்டிற்கு முழுவதும் மனநிறைவளிப்பதாக இல்லாமலிருந்தபோதிலும், அவை, 1990 அக்டோபரில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருத்தங்களை விட மேம்பட்டதாக உள்ளன. இதில் மிக முக்கியமான அம்சம் என்னவெனில், மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய மத்திய அரசின் நிதியுதவி குறித்த பொதுநிதி போதிய அளவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதேயாகும். நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் நிதியுதவி குறிப்பிடத்தக்க அளவிற்குப் பெரிதும் உயர்ந்துள்ளதாகத் தோன்றவில்லை. தமிழ்நாடும் குறிப்பிடத்தக்க வகையில் இடர்ப்பாட்டிற்குள்ளாகியுள்ளது. திருத்தப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின்படி, தேசிய சராசரி அளவிற்குக் கீழ் நபர்வாரி வருமானத்தைக் கொண்டிருக்கும் மாநிலங்களுக்கான 20 சதவீத அளவிலிருந்து நிதியுதவி பெற நமது மாநிலம் தகுதி பெறவில்லை. 1982 முதல் 1985 வரையிலான கால அளவில், தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானம் தேசிய சராசரி அளவைவிடக் குறைவாக இருந்து வந்துள்ளது. அதன் பின்னர், உள்ள கால அளவில், இது, தேசிய சராசரி அளவிற்குமேல் சென்றுள்ளது. நபர்வாரி வருமானத்தைச் சரியாகக் கணக்கிடுவதிலும் இடர்ப்பாடுகள் உள்ளன. கணக்கிடுவதில் உள்ள இத்தகைய இடர்ப்பாடுகளை எளிதில் களைய இயலாதுள்ளதால், ஏழாம் திட்டக் காலத்தில் அளிக்கப்பட்டது போல, திருத்தி அமைக்கப்பட்ட 'காட்கில்' விதிமுறைகளின் கீழ்த் தனிப்பிரச்சினைகளுக்காக ஒதுக்கப்பட்ட 7.5 சதவீத நிதித் தொகுப்பிலிருந்து சிறப்பு ஒதுக்கீடாக மத்திய அரசு நிதியுதவியையும், பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து சிறப்பு ஒதுக்கீட்டையும், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே நிதி நெருக்கடிக்கு ஆட்பட்டுள்ள தமிழ்நாடு, இந்தச் சிறப்பு ஒதுக்கீடுகள் இல்லாமல், மத்திய அரசு நிர்ணயித்த விலை உயர்வுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் மேலும் புண்பட்டுள்ள சூழ்நிலையில், மனநிறைவளிக்கத்தக்க வகையில் எட்டாம் திட்டத்தை எதிர்பார்க்க இயலாது என்பதை முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்கள். மத்திய அரசு கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டும்; பொதுமக்கள், வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களிலிருந்து கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற தமிழ்நாட்டின் கோரிக்கை தனித்த இயல்புடையது. இதனை ஏற்க வேண்டியது அவசியமாகும். தமிழ்நாட்டின் கடற்கரையோர நெடுகிலுமான எல்லையோரப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்கு, இவற்றை எல்லையோரப் பகுதி. மாநிலங்களுக்கு இணையாகக் கடற்கரையோர எல்லைப்பகுதிப் பிரச்சினையாகக் கருதிச் சிறப்பு நிதியுதவி அளிக்க வேண்டும்.

12. மாநிலத்தின் வளர்ச்சி வாய்ப்புகள் குறித்து விரிவான கண்ணோட்டம் கொண்டு, 1992-97ஆம் ஆண்டுகளுக்கான எட்டாம் திட்டத்திற்குரிய ஒதுக்கீடு ரூ.9,500 கோடியாக இருக்கலாம் என்று இவ்வரசு கருத்துத் தெரிவித்துள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கும், மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்குமிடையே அண்மையில் நடைபெற்ற விவாதங்களில், 1992-93ஆம் ஆண்டுத் திட்டம் மட்டுமே இடம் பெற்றது. 1992-93ஆம் ஆண்டிற்காக நியாயமான அளவிற்குள் இருக்குமாறு தயாரிக்கப்பட்ட ஆண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை பெருமளவிற்கு உள்ளது. இதன்பொருட்டு, மாநில அரசு கணிசமான அளவிற்கு நிதி ஆதாரங்களைத் திரட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டியிருக்கும். இது குறித்து ஏற்கெனவே நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் நிலையில், நம்முடைய தனிவகையான இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அதிக அளவிற்கு நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டே, 1992-93 ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவை நிர்ணயிக்க வேண்டியிருக்கும். இது குறித்து மேற்கொண்டும் திட்டக் குழுவுடன் விவாதித்து வருகிறோம். நிதி ஆதாரங்களின் இடர்ப்பாடுகள் கடுமையாக இருந்தபோதிலும், இறுதியாக முடிவு செய்யப்படக் கூடிய 1992-93ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு, நடப்பாண்டு ஒதுக்கீட்டு அளவைவிட அதிகமாக இருக்குமென நம்புகிறோம். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு குறித்து, மத்திய திட்டக் குழுவுடன் மேற்கொண்டும் விவாதம் நடத்திய பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

13. நடப்பாண்டில், இம்மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் மனநிறைவளிக்கும் வகையில் இருந்தன. சில மாவட்டங்களில், குறிப்பாக வடக்கு மாவட்டங்களில், மழையளவு இயல்புக்கும் அதிகமாக இருந்தது. 1991, நவம்பரில் புயல், பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால், பயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பரவலான சேதங்கள் ஏற்பட்டன. அரசு விரைந்து செயல்பட்டுப் பல்வேறு வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.30 கோடி அனுமதித்தது. இத்துடன், இயற்கைச் சீற்றங்கள் குறித்த நிவாரண நிதியில் இருந்த தொகை முழுவதும் செலவிடப்பட்டு விட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள, பெரும் கட்டுமானத் திட்டம் ஒன்றை இவ்வரசு வகுத்துள்ளது. விரைவில் இதற்கு அனுமதி பெற்றுத் தருவதற்கு உலக வங்கியை அணுகுமாறு நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

14. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவு பகுதிகள் பாதிக்கப்பட்ட போதிலும், பயிர்களைப் பாதுகாக்க அல்லது மீண்டும் பயிரிடும் வகையில் உழவர்களுக்கு நிதியுதவி அளிக்க விரைவான நடவடிக்கை எடுத்துள்ளோம். நல்ல விளைச்சல் கிடைக்கும் வகையில் பயிர்த் தொழிலை மேற்கொள்ள விதைகள், உரங்கள், பூச்சிகொல்லிகள் ஆகியவை போதிய அளவுக்கு வழங்கப்பட்டன. நடப்பாண்டில், அரிசி உற்பத்தி எப்போதுமில்லாத அளவுக்கு உயரளவாக 65.25 இலட்சம் மெட்ரிக் டன் இருக்கும் என்பது பெருமையளிக்கக் கூடியதாகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.45 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பாண்டில், கரும்பு மற்றும் பயறு வகைகளின் உற்பத்தியும் மிக உயரளவுக்கு இருக்கும். பருத்தி உற்பத்தியும் உயரளவு 6 இலட்சம் பேல்கள் இருக்கும். நல்ல பருவத்தில் முதலீடு செய்வதில் உழவர்கள் ஆர்வம் காட்டியதாலும், சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் பல்வேறு இடுபொருள்களை உரிய காலத்தில் வழங்கி, ஆலோசனை நல்கி வழிகாட்டியதாலும் இந்த வெற்றி கிட்டியது. இது விலைவாசி உயர்வினை மட்டுப்படுத்த உதவும் என்று நாம் நம்புகிறோம்.

15. வேளாண்மைத் தொழிலுடன், கடல் மீனளம் மற்றும் உள்நாட்டு மீனளம் இவற்றை மேம்படுத்தும் வகையில், உயர் முன்னுரிமை அளிக்கவும் அரசு விழைகிறது. தமிழ்நாட்டில் உவர்நீர் இறால் பண்ணைகள் வளர்ச்சியடைய நல்ல வாய்ப்புகள் உள்ளன. இது தொடர்பாகக் கடந்த காலத்தில் திட்டமிடப்பட்ட சில நடவடிக்கைகள், எதிர்பார்த்த பயன்களை அளிக்கவில்லை. உவர் நீர் இறால் பண்ணை வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் அடைய புதிய கொள்கை ஒன்று வகுக்கப்படும். வரும் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் குறைந்தளவு 1,000 எக்டேரில் இறால் பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

16. வரும் ஆண்டில் காடு வளர்ப்புத் திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும். அதே நேரத்தில் வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளை மீண்டும் உருவாக்கத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். வெட்டி அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபட்ட காடுகளில் சுமார் 2,000 எக்டேர் பரப்பில் காடுகளை மீண்டும் வளப்பதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். தனியாரிடமுள்ள பெரும் அளவிலான நிலங்கள் காடு வளர்ப்பிற்குச் சரியாகப் பயன்படுத்தப் படுவதில்லை. அத்தகைய நிலங்களில், விறகு மரங்கள், கால்நடைத் தீவனம், விளைபொருள் தரும் மரங்கள் ஆகியவற்றைப் பயிரிடப் பயன்படுத்தும் வகையிலும், முறையாக ஆண்டுதோறும் பயிர்கள்



விளைவிக்க முடியாத நிலங்களில் மரங்களை வளர்க்க உழவர்களுக்கு ஊக்கத் தொகைகள் அளிக்கும் வகையிலும், திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

17. இந்தியப் பொருளாதாரம் மாறுதலடைந்து வருகிறது. நம்முடைய வெளிச் செலாவணிக் கையிருப்புத் தொகை நிலைமையை முன்னிட்டும், தேசிய அளவில் பொருளாதாரத் துறையில் நிலவிய கட்டாயங்களை முன்னிட்டும் இந்திய அரசு ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. தாராளமயமாக்கும் புதிய தொழில் கொள்கையின் அனுகூலத்தைப் பயன்படுத்தி, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த, மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தொண்ணூறாம் ஆண்டுகளில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட தொழில் வளர்ச்சியில் முன்னிலை பெற்று விளங்கும் வகையில், புதிய தொழில்கள் வளர்ச்சிக்குப் பெரிதும் தேவைப்படும் தூண்டுதல் அளிக்கும் வண்ணம், ஊக்க உதவிகளும், வசதிகளும் அளிக்கப்பட வேண்டும். பெருகி வரும், படித்த வேலை வாய்ப்பில்லாதவர்களுக்கு ஆக்கபூர்வமான வேலைவாய்ப்பு அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அரசின் புதிய தொழில் கொள்கையை அண்மையில் அறிவித்துள்ளார்கள். முதல் முறையாகத் தொழில் வளர்ச்சித் தொடர்புடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான கொள்கை விளக்கம், தொழில் முனைவோர் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது. கொள்கை விளக்கம், ஊக்க உதவிகள், வசதிகள் ஆகியவற்றைத் தொழில்கள் நன்கு பயன்படுத்த இயலும் வகையில், அவை அனைத்தும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. புதிய தொழில் கொள்கையை மற்ற மாநில அரசுகளின் தொழில் கொள்கைகளுடன் ஒப்பிடுகையில் நமது தொழில் கொள்கை சிறந்து காணப்படுகிறது. இந்தப் புதிய தொழில் கொள்கை, நாடெங்கிலும் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் முனைவர்கள் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்க அவர்களைக் கவரும் என்று நம்பப்படுகிறது. இத்துடன், தொழில் முனைவர்களின் நியாயமான தேவைகளுக்கு, உரிய நேரத்தில், ஆக்கப்பூர்வமான உதவி அளிக்கும் வகையில் நிர்வாக அமைப்பு உரியவாறு சீரமைக்கப்படும். இந்தப் புதிய இசைவான சூழ்நிலை, மாநிலத்தை விரைந்து தொழில் மயமாக்குவதற்கு வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

18. தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969 ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது. அது, 1989-90ஆம் ஆண்டில் 5.21 சதவீதமாகக் குறைந்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், உருவாகி வரும் புதிய திட்டங்களின் மீது மத்திய அரசின் மொத்தப் பொதுத் துறை முதலீடுகளில், தமிழ்நாட்டின் பங்கு மிகவும் குறைந்த அளவே இருக்கும் என்று இந்தியப் பொருளாதார மதிப்பீட்டு மையம் அண்மையில் நடத்திய ஆய்வு குறிப்பிடுகிறது. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு மத்தியத் திட்டங்களுக்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. நல்வாய்ப்பற்ற நிலை காரணமாக, இத்திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை. நெய்வேலியில் மூன்றாம் சுரங்கம் வெட்டுதல், தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டு வருவதற்காகத் தென் மாநிலங்களுக்கான எரிவாயுக் குழாய் அமைக்கும் திட்டம் ஆகியவற்றை மத்திய அரசு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும். எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம், மணலியில் தேசிய அரோமேட்டிக் திட்டம் தொடங்குதல், இம்மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு வழிப்பாதை சாலைகளாக மாற்றுதல், கிழக்குக் கடற்கரை தேசிய

நெடுஞ்சாலையை ஏற்படுத்தல் முதலியவை போன்று, நீண்டகாலமாக நிலுவையாக இருக்கும் திட்டங்கள் மத்திய அரசின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புதிதாகப் பெரிய மத்தியத் திட்டம் ஒன்று கூட தமிழ்நாட்டில் தொடங்கப்படவில்லை. இக்குறை களையப்பட வேண்டும்.

19. புதிதாக மூன்று பெரிய தொழில்வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு மத்திய அரசு இதுவரையிலும் ஒப்புதல் அளிக்கவில்லை. இதற்கு எப்போது அனுமதி கிடைக்கும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த மூன்று தொழில் வளர்ச்சி மையங்களையும் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் தொழில் வளர்ச்சி மையங்கள் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் அமைக்கப்படும். இந்தப் புதிய வளர்ச்சி மையங்கள் மூன்றையும் ஏற்படுத்த, புதிதாகத் தொடங்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) உரிய நடவடிக்கைகளை எடுக்கும். மிகக்குறுகிய காலத்திற்குள் இந்த வளர்ச்சி மையங்களைச் செயல்படச் செய்வதே இவ்வரசின் நோக்கமாகும். அரசு வழங்கும் என்று உறுதி அளித்த ஊக்க உதவிகளும், மானியங்களும் எவ்விதக் காலதாமதமுமின்றித் தொழில்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. புதிய தொழில்களுக்கான மானியக் கோரிக்கைகளின் நிலுவைகளைத் தீர்க்க ஒருமித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நிதி நிறுவனங்களிடம் கடன் பெறுவது அதிகச் செலவு பிடிப்பதாக இருக்கும்போது, இதனைத் தொழில்முனைவோர் அனைவரும் வரவேற்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

20. புனல்மின் திட்ட நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதாலும், அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டுவர சிறப்பு நடடிக்கைகள் எடுக்கப்பட்டதாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு வராமல் பார்த்துக்கொள்ள முடிந்தது. கோடை மாதங்களில் ஏற்படும் ஏதேனும் அவசரத் தேவையைச் சமாளிக்க நாங்கள் நிலக்கரி இருப்பு வைத்துள்ளோம். இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை எளிதாக்குவதில் மின்சக்தித் துறை ஆற்றும் முக்கியப் பங்கை இவ்வரசு உணர்ந்துள்ளது. இது, நம்முடைய நிதி ஆதாரங்களில் நிலவும் நெருக்கடிகளுக்கு இடையேயும் மின்சக்தி குறித்த திட்ட ஒதுக்கீட்டிற்குப் பாதிப்பு நேராமல் இருக்க உறுதி செய்துள்ளது. தொடர்ந்து நடைபெற்று வருகின்ற எல்லாத் திட்டப்பணிகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்தில், பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும், தனியார் துறை மின் உற்பத்தி செய்வதற்கும் இயலும் வகையில், ரூ.7000 கோடி செலவிலான புதிய பெருந்திட்டம் முடிவாக்கப்பட்டுள்ளது என்பதையும், இதன்மூலம் 1500 மெகாவாட் மின்விசை உற்பத்தி செய்ய இயலும் என்பதையும் அறிந்து உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் இசைவைப் பெறவேண்டியுள்ளது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு விரைவில் இசைவளிக்குமானால், அது, அடுத்த பத்தாண்டு காலத்திற்குத் தமிழ்நாட்டின் மின்விசைத் தேவைகளை நிறைவு செய்யும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக அமையும்.

21. பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியத் தேவையான சாலை ஏற்பாட்டினைப் பராமரித்தல், பழுதுபார்த்தல், தரமுயர்த்துதல் ஆகிய பணிகளில் அரசு தனி கவனம் செலுத்தி



வருகிறது. பொதுத்துறையில் உள்ள அடிப்படை வசதி குத்தகைப் பணிகள் நிதியுதவி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் ரூ. 30 கோடி செலவில் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கையை அறிய இம்மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டத்திற்கு நிதி பெற மாவட்டத்தின் எல்லையில் பொருத்தமான இடங்களில் சுங்கக் கட்டண வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் நிதியாண்டில், முதல்முறையாக சாலைகள் பராமரிப்பிற்காக விதிமுறைகளின்படி நிதி ஒதுக்கம் செய்யப்படும் என்பது மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். நம்முடைய நெடுஞ்சாலைகள்,மாவட்டச் சாலைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதில் இது பெரிதும் உதவும். சாலை மேம்பாட்டு வசதியுடன், தொலைக்கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்று வர, பேருந்து வசதிகளை அதிகப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கப்படும். 1992 டிசம்பர் இறுதிக்குள் 1000 மக்கள் தொகைக்கு அதிகமாகவுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் பேருந்து வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு தொடங்கி வைத்துள்ளது.

22. கிராமப் பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குரிய அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எமது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். குடிநீர் வழங்கல் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 1.4.1991 நிலவரப்படி நீர் வழங்கல் ஆதாரம் ஒன்று கூட இல்லாத குக்கிராமங்கள் 2483 உள்ளன. ஒருமித்த நடவடிக்கையின் வாயிலாக, இதுவரையில் இத்தகைய 2422 குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது; எஞ்சிய கிராமங்களுக்கும் 1992 மார்ச் இறுதிக்குள் குடிநீர் வழங்கப்படும் என்பது மனநிறைவளிப்பதாகவுள்ளது. இதன்மூலம், நடப்பாண்டின் இறுதிக்குள் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத கிராமங்கள் எவையுமில்லை என்கிற நிலை உருவாகும். நடப்பாண்டில் குடிநீர் ஆதாரம் ஒன்றுகூட இல்லாத 1956 ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் குக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அண்மையில் ஐதராபாத் சென்று, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திச் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவருவதற்கு உறுதி செய்துள்ளதை அறிந்து மகிழ்ச்சியடைவீர்கள். சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதற்குத் திட்டவட்டமான கால அட்டவணையை, அதாவது 1995 ஜூன் என்கிற கால அளவை நிர்ணயிக்க, இரு முதலமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் பெரிய தடைகள் எவையுமில்லை. திருத்தப்பட்ட திட்ட இலக்கு நிர்ணய கால அளவின்படி, இத்திட்டத்தை விரைவுபடுத்த, நல்ல முறைகளில் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு இவ்வரசு தன்பங்கிற்கு உறுதி செய்யும்.

23. ஆக்க நல அரசு, மக்களுக்குத் தேவையான சமுதாய அடிப்படை வசதிகளை வழங்கவேண்டும். அப்போதுதான், மக்கள் குறிப்பாக, ஏழைமக்கள், சமுதாயத்தில் வசதி வாய்ப்பற்றவர்கள் தங்களுடைய உடல், மன, அறிவாற்றல் ஆதாரங்களை மேம்படுத்திக்கொள்ள இயலும்; மேலும், நாட்டின் பயனுள்ள குடிமக்களாகத் தங்களை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பையும் பெற இயலும். இதனைக் கருத்தில் கொண்டு, மனிதவள மேம்பாட்டிற்குச் சமுதாயப் பணிகளில் முதலீடு செய்வது முக்கியமானதாகும். பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, மதுரை, வடார்க்காடு அம்பேத்கார், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய ஏழு மாவட்டங்களில் முழு அளவில் எழுத்தறிவு இயக்கம் ஒன்றை, அரசு வெற்றிகரமாகத் தொடங்கிவைத்துள்ளது. மேற்சொன்ன ஏழு மாவட்டங்களில் ரூ.11.95 கோடி செலவில் வயதுவந்த 18.35 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு புகட்ட இத்திட்டம் வகைசெய்யும். இத்திட்டம் மேலும் படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இத்திட்டம் முழு அளவில் 1993-94 ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். தொடக்கக்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. வரும் ஆண்டில், இம்மாநிலத்தில் தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளிகளுக்குக் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவாரென்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டில், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திலும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனித்தனியே கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதையும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய அளவுக்குப் பள்ளிக் கட்டிடங்கள் இல்லை என்பதை உறுப்பினர்கள் அறிவர். தொடக்க, நடுநிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிடங்களைக் கட்டிக்கொடுப்பதற்கு அரசு பொறுப்பேற்கிறது. அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகளுக்கு அத்தகைய கட்டிட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, இப்பணியில் தொண்டுமனப்பான்மை கொண்டவர்கள் பங்குகொள்ள நாம் முயற்சி எடுக்கவேண்டும். பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதில் தொண்டுமனப்பான்மையுடையோர் பங்குகொள்ளச் செய்திட அரசு ஊக்கமளிக்கும்.

24. மக்கள் நல்வாழ்வு மருத்துவப்பணிகள், முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்பது நல்வாழ்வுப்





பணிகளிலுள்ள பெரிய குறைபாடுகளில் ஒன்றாகும். துணை மையங்கள், பொதுச் சுகாதார நிலையங்கள், வட்ட, மாவட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில், மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு நாம் மிகப் பெரிய அளவில் முதலீடுகளைச் செய்துள்ள போதிலும், கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் இன்னும் எட்டாத நிலையிலேயே உள்ளன. இந்த அவல நிலையை முற்றிலுமாகக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அண்மையில் பலமுனை மருத்துவ நலத்திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்துள்ளார். 'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்' என்கிற இப்புதிய திட்டத்தின் கீழ், ஆறுமாத கால அளவில் 10,000 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். தொலைக் கோடியிலுள்ள கிராமப் பகுதிகளுக்கும் இலவசமாக சிறந்த மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் சிறப்பாகும். போதிய அளவிற்கு மருத்துவப் பணியாளர்களை நியமித்தும், மருந்துகள் மருந்துப் பொருட்களை வழங்கியும், அத்துடன் தொண்டுமனப்பான்மை கொண்டோர் மனமுவந்து அளிக்கும் உதவிகளைப் பெற்றுத்தந்தும், அவற்றின் வாயிலாக, இம்மருத்துவ நல்வாழ்வு முகாம்களுக்குப் போதிய வசதிகள் அளிக்கப்பட்டுவருகின்றன. ஏழை, எளிய மக்கள் பெரும்பாலானோரைச் சென்றடையக்கூடிய நிலையான மருத்துவநலப் பெருந்திட்டம், நாட்டிலேயே வேறு எங்குமில்லாதவகையில், முதல் முறையாக இம்மாநிலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. சிறந்த முறையில் தாய் சேய் மருத்துவ நலப்பணி ஆற்றும் வகையில் ஒருங்கிணைந்த சுகாதாரச் சத்துணவுத் திட்டப்பணிகள் முழு அளவில் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. தொண்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பாளர்கள், வணிகர்கள், தனியார் மருத்துவர்கள் இத்திட்டத்தில் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் பங்கேற்க முன்வந்துள்ளனர் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

25. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் தொடர்ந்து முழு வேகத்துடன் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக இலட்சக்கணக்கான குழந்தைகள் பயனடைந்து வருவது நாடறிந்ததாகும். நாடெங்கிலும், ஏன் வெளிநாட்டிலும்கூட, இத்திட்டத்திற்கு மிகப் பெரிய அளவில் பாராட்டுதல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. சத்துணவுக் கூடத்திற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் உதவுவதன் வாயிலாக, இத்திட்டத்தில் தொழில் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், கொடையாளிகள் பங்கேற்கச் செய்யவும் அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான ஆதரவு நல்ல முறையில் உள்ளது கண்டு நான் மகிழ்வடைகிறேன்.

26. ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்கிற புதிய திட்டம், கிராமப் பகுதிகளிலுள்ள ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதி அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிற இத்திட்டம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தை இம்மாநிலம் முழுவதிலும் விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை எஞ்சிய மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதற்குரிய தொடக்கப்பணி நடந்தேறி வருகிறது. மகளிர் வாழ்க்கைத் தரத்தினையும், பொருளாதாரத் தகுதியினையும் மேம்படுத்த, கிராமப்புற மகளிரிடையே ஆர்வமூட்டும் வகையில், சமுகத்தின் ஆதரவைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

27. அடிப்படை நிருவாக ஏற்பாடு மக்களுக்கு மிக நெருங்கி வரும் வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும். இதில் காலதாமதம் ஏற்படுவதை அறவே ஒழிக்க வேண்டும். நிலப்பதிவேட்டு முறை மிகப்பழைமையானதாகவே இருந்து வந்துள்ளது. இம்முறையை நவீனப்படுத்த விரிவான முயற்சி எடுக்கப்படும். பட்டா பாஸ் புத்தகம் வழங்குதல், நிலப்பதிவேடுகளைக் கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை பெற்றுள்ள அனுபவங்களைக் கொண்டு, நமது பணிகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். 'நிலப்பதிவேட்டு மேலாண்மைத் திட்டம்' என்கிற விரிவான புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, மாநில அளவில் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தங்களுடைய உடைமை நிலங்களைச் சரியாகவும், முழுமையாகவும் அறிய முடியும். விவசாய மேம்பாட்டிற்காகக் கடன் வசதியினைப் பெற, நடைமுறையை எளிதாக்கவும் இது உதவும்.

28. உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தவாறு, 1992 மே இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்கள் நடத்த இவ்வரசு பொறுப்பேற்றுள்ளது. முதலாவதாக கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பதை ஒழிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் உண்மையில் உறுப்பினர்களாக உள்ளவர்கள், அவர்களுடைய தலைவர்களைத் தெரிந்தெடுக்க, இதன்மூலம் வாய்ப்பு கிடைக்கும். அவசியமான சட்டம் ஒன்றைக் கொண்டுவந்த பின்னர், கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் தேர்தல்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

29. மாநிலம் கடும் நிதி நெருக்கடியில் இருந்த நிலையில் இந்த அரசு பதவி ஏற்றது. 1991-92 - ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.1600 கோடி என்பதையும், ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டைச் செயற்படுத்துவதில் மாநில அரசுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை மிக அதிக அளவில், அதாவது, ரூ.1220 கோடி அளவிற்கு இருந்தது என்பதையும் உறுப்பினர்கள் நினைவுகூரலாம். அப்போதிருந்தே மாநில அரசின் நிதி ஆதார நிலைமையை மேம்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசு நிர்ணய விலைகளை மத்திய அரசு மிக அதிகமாக உயர்த்தியுள்ளதால், மாநில அரசு மேலும் அதிக நிதி இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி இருந்தபோதிலும், நடப்பாண்டின் ஆண்டுத் திட்டத்தை எவ்விதக் குறைவுமின்றி நிறைவேற்ற, அனைத்து நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக, அவசியமான நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்துள்ளது. 1991-92-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.1600 கோடி அளவை எய்த முடியும் என்று அரசு நம்பிக்கையுடன் உள்ளது. இதனால், கணிசமான அளவிற்கு நிதி நெருக்கடி ஏற்படும்

என்பதில் ஐயம் இல்லை. மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கிடைக்குமென இன்னும் எதிர்பார்க்கிறோம். இம்மாநிலத்திற்கு ஏற்பட்ட தனி வகையான இடர்ப்பாடுகளின் காரணமாக, இம்மாநில அரசுக்குத் தேவைப்படக்கூடிய நிதியுதவி குறித்து முதலமைச்சர் அவர்கள் பிரதமர் அவர்களுடனும், மத்திய நிதி அமைச்சர் அவர்களுடனும் மேற்கொண்டும் கலந்துரையாடியுள்ளார்கள். நம் தேவைகளை மத்திய அரசு உணர்ந்து, 1991-92-ஆம் நிதி ஆண்டு முடிவதற்கு முன் நமக்குப் போதிய அளவிற்கு உதவ முன்வரும் என்று நம்புகிறோம்.

30. இதுவரையில், இம்மாநிலத்தின் மேம்பாட்டிற்காக எமது அரசு இனி மேற்கொள்ளவிருக்கின்ற நிலையினைப் பொதுவாகச் சுட்டிக்காட்டுவதாக அமையும் சில கொள்கைகளை உங்கள் கவனத்திற்காக முன் வைத்துள்ளேன். தேசியப் பொருளாதார நிலைமை, தொடர்ந்துவரும் பணவீக்கப்போக்கு, நம்முடைய மாநிலத்தில் போராளிகளையும், தீவிரவாதிகளையும் ஒடுக்குவதில் நாம் எதிர்கொள்ள வேண்டி இருந்த கட்டாயங்கள், கருநாடக மாநிலத்தில் வாழும் தமிழ் மக்கள் அடைந்துள்ள இன்னல்கள், சோதனைகள் ஆகியவை நமக்கு மிக இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளன. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், இன ஒற்றுமையையும் அமைதியையும் காக்கவும், இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த வகையில் அனைத்து முனைகளிலும் இவ்வரசு வெற்றிகண்டு வருகிறது என்றே கூறலாம்.

31. பொருளாதார நிலையில், மாநிலத்தின் மேம்பாட்டு நலனுக்காகத் தெரிந்தே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது. நாம் எடுக்கக்கூடிய பொருளாதார அல்லது நிதி நிலை குறித்த முடிவுகள், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் மீது தற்போதுள்ள சுமையை அதிகரிக்காமல் இருக்க வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். மத்திய அரசு பொருளாதார வகையில், பற்றாக்குறையை ஈடுசெய்யும் நடவடிக்கையை எடுக்கலாம் என்றும், ஆனால், அது ஏழை மக்களைப் பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்றும் அரசு மீண்டும் மீண்டும் தொடர்ந்து வலியுறுத்தும். காவிரி நீர்ப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில், காவிரி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும், கருநாடக மாநிலத்தில் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க மத்திய அரசு சிறப்பான முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தொடர்ந்து மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். அமைதியான சூழ்நிலையில் மாநிலம் அனைத்து வழிகளிலும் மேம்பாடு அடைய எமது அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

32. அரசு பல முனைகளிலும் எடுத்துள்ள நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தமிழகத்தில் ஏழை, எளியவர்கள் மற்றும் வசதி வாய்ப்பு அற்றவர்கள் ஆகியோரின் வளமான வாழ்விற்கு உறுதி செய்யவும், விரைவான வளர்ச்சிக்கு வகை செய்யவும் அரசு தன் கொள்கைகளையும் திட்டப்பணிகளையும் முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த இயலும் வகையில், இம்மாமன்றத்தில் உறுப்பினர்களின் விவாதங்கள் அமையும் என்று நம்புகிறேன். உங்கள் கருத்துக்கள் ஆக்கப்பூர்வமானவையாகவும், பொருள் பொதிந்தவையாகவும் அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

நன்றி, வணக்கம்.

தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு: மானியம் வழங்கக் குழு அமைப்பு

குறைந்த செலவில் தரமான தமிழ்த் திரைப் படங்களைத் தயாரித்து வெளியிடும் தயாரிப் பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு தோறும் அத்தகைய படங்களைத் தேர்வு செய்து அரசு மானியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1991-ஆம் ஆண்டுக் கான தேர்வுகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டு உள்ளார். அதன்படி 1991-ஆம் ஆண்டுக் கான குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரைப்பதற்கு மாண்பு மிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுவை அரசு அமைத்து உள்ளது.

1. திரு. கே. பொன்னுசாமி - தலைவர்
மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
சென்னை-9.

2. திரு. ஆர்.எஸ். மனோகர் - உறுப்பினர்

3. திரு. பி.எஸ். வீரப்பா - உறுப்பினர்

4. திரு.கவியரசு நா.காமராசன் - உறுப்பினர்

5. திருமதி சி.கே.கரியாலி, - உறுப்பினர்
செயலாளர், இ.ஆ.ப.,
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை
சென்னை-9.

6. இணை ஆணையாளர்,
வணிகவரித் துறை,
சென்னை-9. - உறுப்பினர்

7. அரசு துணைச் செயலாளர்,
உள்துறை, சென்னை-9. - உறுப்பினர்

8. முதல்வர்,
தமிழ்நாடு திரைப்படத்
தொலைக்காட்சிப் பயிற்சிக்
கல்லூரி, சென்னை-113. - உறுப்பினர்

இக்குழு 1.1.1991 முதல் 31.12.1991 முடிய வெளிவரும் குறைந்த செலவு தயாரிப் புப் படங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளும். தேர்வுக் குழுவினால் பரிந்துரைக்கப் படும் படங்களுக்கு ரூபாய் இரண்டு இலட் சம் அரசு மானியம் வழங்கப்படும்.

சரியான நடவடிக்கைகளையே எடுத்து வந்துள்ள மேதைகளுக்கு இது ஒரு புகழாரம் ஆகும். ஆனால், கடந்து செல்லும் ஒவ்வொரு நாளி லும் உறுதியற்ற எண்ணங்களே வளர்ந்து வருவதால், காஷ்மீர் பிரச் சினையில் ஒரு இறுதி முடிவை மேற்கொள்ள வேண்டும்.

காஷ்மீரில் தீவிரவாதமும், ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளும் தலைதூக்கி இருக்கிறார்கள். எல் லைக்கு அப்பால் இருந்து தீவிர இராணுவ உதவியுடன் பயிற்சியும், ஆயுதமும் நிதி உதவியும் பெற்ற தீவிரவாதிகள் நாட்டின் ஒரு பகுதியை வசமாக்குவதையும், சர்வதேச அள வில் அதை விளம்பரப்படுத்துவதை யும் எந்த நாடும் பார்த்துக்கொண்டு இருக்காது. தீவிரவாத நடவடிக்கை யுடன் மதச்சார்பான ஊக்கமும் அளிக்கப்படுவதால் பிரச்சினை சிக் கலாகி இருக்கிறது. மத சுதந்திரம் பற்றி செய்யப்படும் தவறான பிரச் சாரம், நாட்டில் பிற மாநிலங்களில் வாழும் மற்ற பல்வேறு சமுதாயத் தினரிடையே குழப்பத்தை ஏற் படுத்தி உள்ளது. என்றாலும் நம் நாட்டு மக்கள் பொய்ப் பிரச் சாரத்தை நம்பாததும், அடிப்படை மத ஒற்றுமை, மதச்சார்பின்மை, சுதந்திரம் ஆகியவை காஷ்மீரில் மட்டுமல்ல நாட்டின் மற்ற எல்லா மாநிலங்களிலும் நிலைத்து நிற்பதும் நமக்கெல்லாம் மிகுந்த ஆறுதல் அளிக்கும் ஒரு விஷயமாகும்.

ஜம்மு-காஷ்மீர் நம் நாட்டுடன்

"இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்க மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம்!"

புதுடில்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை

'நம் நாட்டின் வரலாற்றில், ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். காஷ்மீர் பற்றிய மிக முக்கியமான உணர்ச்சி பூர்வமான பிரச்சினை பற்றி விவாதிப் பதற்காக, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததற்காகப் பிரதம ருக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

காஷ்மீர் பிரச்சினை, நம் நாட் டின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டுக்குமான ஒரு முக்கிய பிரச்சி னையாகும். நாட்டின் அடிப்படைக் கொள்கையான மதச்சார்பின்மை மற்றும் மதச் சகிப்புத் தன்மை ஆகிய கொள்கைகளுக்குச் சவாலாக அமைந் திருப்பதால் இந்தப் பிரச்சினை உணர்ச்சிபூர்வமானதும் ஆகும். நம் நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்தே காஷ்மீர் பிரச்சினை நமது பொறுமையைச் சோதித்து வருகிறது இந்தப் பிரச்சினையில் இதுவரை

இணைந்த ஒரு பகுதி. எந்த ஒரு நாடும் இதை மறுக்க முடியாது. இந்த நிலையில் உலக நாடுகளுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டிய விவரம் என்னவென்றால், இந்திய நாடு மதத்துக்கு முக்கியத்துவம் அளித்து உருவாக்கப்பட்ட மதச்சார்பற்ற சுதந்திரம் மற்றும் சகிப்புத்தன்மை அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்பதைத்தான். மதம் மற்றும் இனப் பாகுபாடு காரணமாகக் கடந்த காலத்தில் அதிக அளவில் ரத்தம் சிந்தப்பட்டிருப்பதை நாடு சந்தித்து இருக்கிறது. இந்நிலை தொடர அனுமதிக்கக்கூடாது.

தமிழ்நாடு, கேரளாவைப் போன்று, ஜம்மு-காஷ்மீர் மாநிலமும் நமது நாட்டைச் சேர்ந்தது என்பதை அனைத்துத் தரப்பு மக்களும் சாதி-மதப் பேதமின்றி அங்கீகரிக்க வேண்டியது. அல்லது ஒப்புக்கொள்வது இன்றைய நாட்டின் ஒற்றுமைக்கும் - ஒருமைப்பாட்டுக்கும் முக்கியமான ஒன்றாகும். இதை அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும். காஷ்மீர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகும். அங்கு தோன்றி உள்ள தீவிரவாத, பயங்கரவாதச் சக்திகளை இதன் அடிப்படையில் தான் நாம் போராடி வெற்றி காண வேண்டும். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள மக்களும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஜம்மு-காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகள் பயங்கர வன்முறையில் ஈடுபட்டதன் மூலம் பொருளாதார நிலை அப்படியே ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மதத்தின் பெயரில் அங்குள்ள மக்களிடையே விஷத்தைப் பரப்பி அங்குள்ள சமுதாய மக்களின் இரக்கக் குணத்தைப் பெற்றுள்ளனர். இப்படிப்பட்ட தீவிரவாதிகள்-பயங்கரவாதிகள் அடியோடு ஒழிக்கப் படவேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

இதே போல் வேறு நாட்டிலிருந்து நமது சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் நுழைந்து, மொழியின் பெயரால் பொது மக்களிடையே குழப்பம் விளைவித்து, பேராசை பிடித்த சில அரசியல்வாதிகளைத் தங்கள் கையில் போட்டுக் கொள்ளும் தீவிரவாதிகளின் கசப்பான நடவடிக்கைகளை, தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் நான் காண நேர்ந்தது. அப்படிப்பட்ட தீவிரவாதிகளை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இங்கு கூடியிருக்கும் தலைவர்களுக்குத் தெரியும் எனக் கருதுகிறேன்.

இந்தியாவில் குழப்பம் ஏற்பட வேண்டும். அதன் மூலம் இந்தியா துண்டுபட வேண்டும் என்று, சில நாடுகள் ஆசைப்படுவதால், அந்த நாடுகளின் ஆதரவு இதுபோன்ற வேரூன்றிய தீவிரவாதிகளுக்கு இருக்கத்தான் செய்யும்.

இப்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இந்த நேரத்தில், ஒற்றுமைதான் மிகவும் அவசியம் ஆகும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை காஷ்மீர் தீவிரவாதிகளை ஒடுக்க மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் என்று நான் இங்கு உறுதி அளிக்கிறேன்.

இங்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லையோரப் பகுதிகளிலும் ஊடுருவலைத் தடுக்க இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்பு தருவோம் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால், சுதந்திரத்துக்காக நமது முன்னோர்கள், தலைவர்கள் செய்த தியாகம் வீணாகிப் போய்விடும். அதேநேரம் பல்வேறு சமயங்கள்-மதங்களில் நம்பிக்கையுள்ளவர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவை மதிக்கப்படவேண்டும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த நாட்டில் உள்ள மக்கள் இந்துக்களாகவோ, சீக்கியர்களாகவோ, முஸ்லீம்களாகவோ, கிறிஸ்துவர்களாகவோ, ஜைனர்களாகவோ, புத்த மதத்தவராகவோ, பார்ஸிய மதத்தவர்களாகவோ அல்லது எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் இந்தியர்கள்தான், காஷ்மீரில் முஸ்லீம்கள் அதிகமாக இருந்தாலும் சரி, அல்லது மற்ற மாநிலங்களில் இந்துக்கள் அதிகம் இருந்தாலும் சரி,

• ஒவ்வொரு கடமையும் புனிதமானது. இந்தக் கடமையில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வது, கடவுள் வழிபாட்டு முறைகளிலேயே மிக உயர்ந்ததாகும்.

- சுவாமி விவேகானந்தர்

எல்லா மாநிலங்களும் நமது நாட்டைச் சேர்ந்ததுதான் என்பதை யாரும் மறுத்திட முடியாது. காஷ்மீரில் ஒரு பகுதி இந்தியாவில் இல்லை என்ற நிலை உருவானால் அதை இந்தியாவுக்குள் கொண்டு வரவேண்டும்.

காஷ்மீரில் வாழும் முஸ்லீம்கள் இன்னொரு மாநிலத்தில் வாழும் இந்துக்களைப் போலவே உணர்வு பெற்று இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுக்கு இந்தியத் திருநாட்டின் உணர்வு இருக்க வேண்டும். இதை உறுதிப்படுத்த தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த முறையில் கட்டுப்படுத்தப்பட வேண்டுமோ அந்த முறையில் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் மக்கள் மனநிலையில் நல்லுணர்வை விரைவில் ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். நல்லெண்ணம், நெருங்கிய பிணைப்புகள் மக்கள் மத்தியில் உருவாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கட்டிக்காக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளை ஆதரிப்போம் என்பதை அண்ணா தி.மு.க. சார்பாக மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாத நடவடிக்கைகள் எந்த உருவில் வந்தாலும் அதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தும் எந்த நடவடிக்கையும் ஆதரிப்போம். காஷ்மீர் மக்கள் இந்தியக் குடிமக்கள் என்ற நல்லுணர்வை ஏற்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் ஆதரிப்போம்.

காஷ்மீர் மக்களின் நலன், அமைதி, வளமான வாழ்வு மீது இந்தியத் தலைவர்கள் மற்றும் நமது அனைவரின் உண்மையான எண்ணம் உள்ளது. இதில் காஷ்மீர் மக்களின் உண்மையான நம்பிக்கையைப் பெற்றிட இந்த நெருக்கடியான நேரத்தில் எடுக்கப்படும் எல்லா உறுதியான நடவடிக்கைகளையும் நாங்கள் ஆதரிப்போம்.'

-ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் புது டில்லியில் கூட்டிய, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (10.2.1992)

பார்த்தோம், படித்தோம்

16.1.1992 இதழில் உழவர் திருநாளைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய தேன் சொட்டும் சுவையான கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன்.

'ஏது உண்மை இலக்கியம்'? என்ற தலைப்பில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கருத்துக்கள் பாதுகாக்க வேண்டிய சொத்துக்கள்.

காரை. புரட்சிமணி
காரையூர்
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

'உழைப்போம்! உயர்வோம்! இது பொங்கலுக்காக, எங்களுக்குத் தந்த பிரசாதம்.

- க. திருவாசகம், கா. குமார்
முகிழ்தகம்
இராமநாதபுரம் மாவட்டம்

ஔக்கூர் என்ற சிற்றூரில், ஒரு முகத்தில் இரு கண்களைப் போல் அமைந்த மாசாத்தியார்-மாசாத்தினார் என்ற இரு சங்கப் புலவர்களால் தமிழுக்குப் புகழளித்த பெருமையைக் கண்டேன். இந்த மாபெரும் 'நினைவுத்தூண்' நீடு புகழ் பெறுக!

- ப. அருணாசல சண்முகம்
களம்பூர்
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

கவிஞர் இளந்தேவன் எழுதிய 'புகழ்பாடு தைமகளே!' என்னும் கவிதை மிகவும் அருமையாக இருந்தது.

- டி. ஆறுமுகம்
சந்தைவெளி
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

புகழ்பாடு தை மகளே கவிதை நன்றாக இருந்தது.

- அ. ஆளவந்தார்
வீரசோழபுரம்
தென்னார்க்காடு மாவட்டம்

கவிஞர் பட்டுக்கோட்டை இராசேந்திரன் எழுதிய 'பொன்னிக்குப் பொங்கல் வாழ்த்து' என்ற கவிதை மிகவும் அருமை. அக்கால மன்னர்கள் பொன்னிக்குப் புகழளித்த அரும் பெரும் பணியை இக்கவிதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

- சாந்தி-ராஜசேகரன்
சைதை-ஆரணி
திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்

'தமிழரசு' இதழ் தமது நூல் நயப் பகுதியில் நூலின் நுண்மாண் நுழைபுலங்களையும், அருமை பெருமைகளையும், ஆற்றல் பெருந்திறன்களையும் நயமுடன் ஆய்ந்து கூறி அறிமுகப்படுத்தினால், கண்ணை மூடிக்கொண்டு வாங்கிப் படிப்போம்! அந்த அளவுக்குத் தரத்தில் உயர்ந்த நூல்களையே சிகரத்தில் ஏற்றுகிறது நூல் நயம்!

- அரிமா பூபாளம்
ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
கோவை மாவட்டம்'

பொங்கல் இதழ் சர்க்கரை, கற்கண்டு, தேன்பாகு கலந்த பொங்கலாக, தந்தை பெரியாரின் பொன்மொழிகள், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியம், மொழி ஞாயிறு, ஞா. தேவநேயப்பாவாணர் கட்டுரை எனத் தித்திக்கும் பொங்கல் விருந்தாக அமைந்தது.

உரந்தை மதி. தமிழரசன்,
அருள்மொழி தமிழரசன்
நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்

கவிஞர் பி.வி. கிரியின் உறுதி பிறந்தது! கவிதைப் படைப்பு மிகவும் அருமையாக இருந்தது.

ப. சிவராமகிருஷ்ணன்
விருதுநகர்-2
காமராசர் மாவட்டம்

'உறுதி பிறந்தது!' (கவிதை) படித்து என் உள்ளத்திலும் உறுதி பிறந்தது!

- த. சுரேஷ்
குரும்பேரி
வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம்

'இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு' பற்றிய டாக்டர் எஸ். சுப்பையா அவர்களின் கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

- ஜி. ராமநாதன்
திண்டுக்கல்

சட்டப்பேரவையில் புரட்சித் தலைவரின் திருவுருவப்படத் திறப்பு விழா

பாரத ரத்னா, புரட்சித் தலைவர், மூன்று முறை தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று அப்பதவிக்குப் பெருமை சேர்த்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத் திறப்பு விழா, 31.1.1992 வெள்ளியன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

அன்று சட்டப்பேரவை முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் முழுவதும் மல்லிகை மணம் வீசியது. தலைமைச் செயலக வாசலிலிருந்து, சட்டமன்ற மண்டப நுழைவு வாயில் வரை வண்ண வண்ண ஜரிகைத் தாள்களால் அலங்காரப் பந்தல் போடப்பட்டு சிறப்பாகக் காட்சி அளித்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நடந்துவரும் பாதை ரோஜா மலர் களால், மலர்ப் பாதையாக அமைந்திருந்தது.

சட்டசபையில் ஏற்கெனவே அமைக்கப் பட்டிருந்த திருவள்ளுவர், அண்ணல் காந்தி அடிகள், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்குப் பெரிய ரோஜா மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

விழா நடைபெறும் சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலை 9.55 மணிக்கு வருகை புரிந்தார். சட்ட சபை சார்ஜண்ட் முன்னால் வர, அவரைத் தொடர்ந்து சட்டசபைச் செயலர் திரு. ஜானகிராமன் அவர்கள் வர, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர் களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. கே. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணிவகுத்து அழைத்து வந்தனர்.

சட்டப்பேரவைத் தலைவர் இருக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர்ந்தார். அவருக்கு இடப்புறம் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், வலது புறம் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்களும் அமர்ந்தனர். சரியாக 10 மணிக்கு விழாத் தொடங்கியது.

'வரலாற்று நாயகர் திருவுருவப் படத்தைத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகத் தமிழகத் தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைப்பார்கள்' என சட்டப் பேரவைத் தலைவர் அறிவித்தார். அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேசையிலிருந்த பொத்தானை அழுத்த, எதிரே இருந்த எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்தின் பட்டுத்திரை விலகியது. அந்தத் திருவுருவப் படத்தை பார்த்து மாண்புமிகு முதல்வர் வணங் கினார். எம்.ஜி.ஆரின் படத்தின் கீழ் 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்' என்று எழுதப்பட்டிருந்தது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை மாண்பு மிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ் செழியன் அவர்கள் வரவேற்றார். அவர் பேசிய தாவது:

'யார் யார் இந்த நாட்டுக்குப் பெருமையையும், புகழையும் சேர்த்து, வழிகாட்டியாக இருந்தார் களோ அவர்களுடைய திருஉருவங்கள் இந்த மணி மண்டபத்தில் அணி செய்கின்றன.

புரட்சித் தலைவர் வாழ்ந்து காட்டிய வரலாறு இந்த நாட்டில் வாழவேண்டும் வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இருப்பவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது.

புரட்சித் தலைவர் படத்தை இந்த மணி மண்டபத்தில் வைப்பதும், அதைப் புரட்சித் தலைவி திறந்து வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருப்பதும் மிகவும் பொருத்தமானதாகும்.

புரட்சித் தலைவரின் பொற்கால ஆட்சியை மீண்டும் நிலைத்த, நீடித்த, நீதி தருகிற ஆட்சியை அமைத்து புரட்சித் தலைவி நடைமுறைப்படுத்தி வருகிறார். புரட்சித் தலைவர் உழைப்பால் உயர்ந்தவர், உள்ளத்தால் சிறந்தவர். தனது அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும் எல்லோ ருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு வாழ்ந்தார். படிப்படியாக அவர் வளர்ந்தார், வளர்ந்து கொண்டே இருந்தார். எந்த இடத்திலும் சறுக்கல் ஏற்பட்டது இல்லை.

'நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு'

என்னும் வள்ளுவர் குறளுக்கு இணங்க இறவாப் புகழை எய்தியவர்.

1953-ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் பேரியக் கத்தில் இருந்த அவர், அண்ணா, பெரியாரின் கோட்பாடுகளை ஏற்றவுடன் 'என்னை அறியாமல் ஒரு கனி என் மடியில் விழுந்தது. அந்தக் கனியின் அருமை கருதி இதயத்தில் வைத்துக் கொண்டேன்' என்று அப்போது அண்ணா கூறினார்.

எதையும் எடை போட்டுப் பார்த்துத்தான் அண்ணா பாராட்டுவார்.

அன்பு காட்டவே பிறந்த இதயம் அவருடை யது. வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல் என்றும், எம்.ஜி.ஆர். கழகத்தின் கண்மணி, குணத்தில் தங்கம், கொதித்தெழுந்தால் சிங்கம் என்றும் அண்ணா பாராட்டினார்.

எம்.ஜி.ஆருக்குப் பொன்மனச் செம்மல் என்ற பட்டத்தைக் கிருபானந்தவாரியார் வழங்கினார். புரட்சித் தலைவர் வழியொட்டி, அவர் தீட்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி, ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்காகத் தனது நேரத்தையும், உழைப்பையும் பயன்படுத்தி புரட்சித் தலைவி திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

அவர் புரட்சித் தலைவரின் படத்தைத் திறந்து வைப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்'.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை உரை ஆற்றினார். அவர் பேசியதாவது:

'வரலாற்று நாயகரின் படத்தை அந்தத் தங்கத் தலைவரின் அரசியல் வாரிசாகன புரட்சித் தலைவி திறந்து வைப்பது மிகவும் பொருத்தமே யாகும். இன்றைய தினம் அவர் வழி நடக்கும் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வருகிறார். அழியாத புகழுக்கும், சிறப்புக் கும் உரியவராகத் திகழ்ந்து வரும் மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆரின் படத்தை அவரது புகழை அழியாது காத்து வரும், தமிழக மக்களின் நிகழ் காலத்துக்கும், எதிர்காலத்துக்கும், எக்காலத்துக்கும் உத்தரவாதமாக நல்லாட்சி செய்து வரும் புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார்.

இறந்தும் இறவாப் புகழைப் பெற்று இருக்கும் புரட்சித் தலைவர் படத்தை அவர் மறைந்து நான்கு ஆண்டுகள் கழித்து, அந்தப் படத்தைத் திறக்கத் தகுதியுடைய தலைவரான புரட்சித் தலைவி திறந்து வைத்து இருக்கிறார். புரட்சித் தலைவரின் படத் தைத் திறந்து வைக்கத் தகுதி படைத்த ஒரே தலைவர் புரட்சித் தலைவிதான்.

இந்தத் தலைவி மட்டும் இல்லை என்றால், 1987-இல் என்றைக்குப் புரட்சித் தலைவர் உடலை பூமிக்குள் இறக்கினோமோ அன்றைக்கே சகாப்தம் முடிந்து இருக்கும். இந்தத் தலைவி இல்லை என்றால் வரலாறு அன்றே முடிந்து இருக்கும்.

எம்.ஜி.ஆரின் வரலாற்றை மறைந்து விடாமல் அதைக் காப்பாற்றும் தலைவியாகத் திகழும் புரட்சித் தலைவியின் பொற்கரத்தால் சாகாவரம் பெற்ற அந்தத் தலைவரின் புகழ் தமிழ்நாட்டில் என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று காட்டுகிற வகையில் புரட்சித் தலைவர் படம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் இந்த அவையில் படமாக, பாடமாக இருக்கிறார்'.

- அதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா

அவர்கள் சிறப்புப் பேருரை ஆற்றினார்:

'மனித குல வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் தனிப்பெரும் தத்துவமாகத் திகழும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தினை வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழகச் சட்டமன்றப் பேரவையில் திறந்து வைப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதன், பிறந்தான் - வாழ்ந்தான் - மறைந்தான் என்பதுதான் வாழ்க்கை நியதியாக இயற்கை நமக்கு அளித்துள்ளது. ஆனால், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரோ பிறந்தார் - வாழ்ந்தார், இன்றும் நம் இதயத்தில் வாழ்கிறார். இனி என்றென்றும் வாழப் போகிறார் என்கிற தனி நியதியை உருவாக்கிச் சென்றுள்ளார்.

அவர் வளர்ந்து வந்த பாதை, அனைவருக்கும் பாடமாக அமையத் தக்கதாகும். இளமை முதல் அவர் வாழ்க்கையில் எதிர் கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளமாகும். அனைத்தையும் அவரது மனோபலத்தினாலும் - ஒப்பற்ற மனிதாபிமான அணுகுமுறையாலும் எளிதில் வென்று எதிர்ப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சாதனைகளாக்கிச் சரித்திரம் படைத்தவர் புரட்சித் தலைவர்.

செல்வச் சீமான் வீட்டில் ஓர் பிள்ளையாகப் பிறந்து, ஏழாவது வயதிலேயே, ஏதுமற்ற ஓர் நிர்கதியான குடும்பப் பிள்ளையாய் தமிழ்நாட்டிற்கு வந்து, 'எங்கள் வீட்டுப் பிள்ளை'யெனத் தமிழகம் புகழ்ந்த மாமனிதர் நம் புரட்சித் தலைவர். இளம் பருவத்தில் ஒரு குறுகிய காலகட்டத்திற்குள் முழுக்க மாறுபட்ட வறுமைச் சூழ்நிலைக்கு ஆளாகும் நிலை, பொதுவாக எவர்க்கும் ஏற்பட்டிருக்காது. வறுமையின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு, தான் அனுபவிக்காத வேறுபட்ட வாழ்க்கையை, அதுவும் மாறுபட்ட ஓர் நிலப் பகுதிக்குச் சென்று தொடங்க வேண்டிய அவலத்திற்கு ஆளாக்கப் பட்டவர் நமது புரட்சித் தலைவர்.

சிறுவனாய் இருந்த காலத்தில் வறுமையில் வாடினார். பசியின் கொடுமைக்கு ஆளாக்கப் பட்டார். அவ்விளமைப் பருவத்திலேயே கூட, மூன்று நாள் தொடர்ந்து பட்டினி கிடந்தும், மானத்தோடு வாழ வேண்டும் என்ற மனோதிடத்தைப் பெற்ற மாமனிதர்தான் புரட்சித் தலைவர். அந்த அனுபவங்களே அவர் மனதில் இரக்கமும், ஈகையும் வளர அடித்தளமாக அமைந்தன. அந்த அடித்தளத்தின் மீது அவரால் உருவாக்கப்பட்டது தான், இன்று அகிலம் போற்றும் இலவசச் சத்துணவுத் திட்டம்.

கலைத்துறையில் ஈடுபட்டு, அத்துறையின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த வேளையில்தான், அவர் கொலைவெறிக்கு ஆளாகிக் குண்டடிபட்டு, தன் இனிய குரலை இழக்க நேரிட்டது. கலைத்துறையின் கவர்ச்சிக்கு மிக இன்றியமையாத இதனை இழந்த நிலையிலும், அக்குறையே அவரது

[illegible]

நிறை என்ற வகையில் தொடர்ந்து கலைத்துறையில் சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டினார்.

புரட்சித் தலைவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரசியல் வாழ்விலும், 72-ஆம் ஆண்டில் மிகப் பெரிய சோதனைக்கு ஆளாக்கப் பட்டார். தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து, தன்னால் உயர்வு பெற்ற தலைவர்களாலேயே தன்னந்தனியாகத் தூக்கி எறியப்பட்டார். 'அஸ்தமனம்' என்கிற வார்த்தை புரட்சித் தலைவரின் அகராதியில் எப்போதுமே இருந்ததில்லை. தனி ஒருவராகத் தன்னந்தனியராக, தான் வளர்த்த இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிகழ்ச்சியே, அவருக்கு அரசியலில் மக்கள் ஆதரவைப் பெற்றுத்தரும், மகத்தான சூழ்நிலையை உருவாக்கித் தந்தது. தனிமரம் ஆகிவிடுவார் என எண்ணிய, அவரது அரசியல் எதிரிகளின் எண்ணத்தில் மண் விழும் அளவிற்கு, இலட்சோப இலட்சம் இரத்தத்தின் இரத்தங்களைத் தன்னோடு இணைத்துக் கொண்டு, புதியதோர் இயக்கம் கண்டார்; தனது அரசியல் எதிரிகளை மக்கள் முன் தோலுரித்துக் காட்டியதோடு, நாடு போற்றும் நல்லாட்சி ஒன்றினைத் தமிழகத்திற்கு, ஒன்றுக்கு மூன்று முறை வழங்கும் உயர்வினையும் பெற்றார்.

இந்த நேரத்தில் தத்துவமேதை சாக்ரடீஸ் அவர்களின் தெளிவான கருத்தான -

Nothing can harm a good man
either in life or after death*

என்பது நினைவிற்கு வருகின்றது.

ஒரு நல்ல மனிதரின் புகழுக்கும் பெருமைக்கும், அவரது வாழ்நாளிலும் அவர் மறைந்த பின்னரும், எந்தச் சக்தியாலும் கேடு விளைவித்திட முடியாது என்பது, இப்போது நடைமுறை உண்மையாகிவிட்டது. இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறதென்றால், அதன் வாரிசாக நான் ஆட்சியில் பொறுப்பேற்றிருக்கிறேனென்றால், அதற்குப் புரட்சித் தலைவரின் புகழும், பெருமையுமே முழு முதற் காரணமாகும். எனவே, ஒரு நல்ல மாமனிதரின் வாரிசான எங்களையும், எந்தக் கேடும், எந்த உருவிலும் நெருங்கிட முடியாது என்று, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைத்துறையிலும், பொது வாழ்விலும், தனக்கு நேர்ந்த மிகச் சோதனையான இடர்ப்பாடுகளை மீறி, காலத்தை வென்றவர் 1984-இல் மருத்துவமனையில் படுத்த படுக்கையாய் இருந்த

பழங்கள் நிறைந்திருக்கும் மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளைந்திருக்கும். அதுபோல் நாமும் பெருமையை அடைய வேண்டுமானால், எல்லோரிடமும் அடக்கத்தோடும், பணிவோடும் இருக்க வேண்டும்.

—இராமகிருஷ்ணர்

காலக் கட்டத்தில், காலனையும் வென்று சரித்திர நாயகனாய்க் காட்சி அளித்தார். இன்று நம்மைக் காக்கும் காவல் தெய்வமாக நின்று நிலவுகிறார்.

ஊர் ஊராய்ச் சுற்றிச் சுற்றி வலம் வந்து வாக்குச் சேர்க்கும் வள்ளல் இல்லை; இனி வீழ்ந்தது இவரது இயக்கம் எனக் கணிப்புக் கணித்தோர் இதிலும் வீழ்ந்தனர். அன்று அவர் இல்லாத குறையை நிறைவு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர் இருந்திருந்தால். பெற்றிருக்கும் வெற்றியைப் பெற்று - அவர் அமெரிக்காவிலிருந்து உடல் நலத்தோடு தாயகம் திரும்பியதும்; அவர் காலடியில் அவ்வெற்றிச் செய்தியைக் காணிக்கையாக்கும் வாய்ப்புப் பெற்ற எனக்கு, அவர் இல்லாத இந்த அவையில், நாட்டுக்கு நல்ல பாடமாக அமைந்துள்ள, இவரது படத்தைத் திறந்து வைக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, ஆனந்தக் கண்ணீர் உகுக்கும் நிலைமையில் உங்கள் முன் நிற்கிறேன்.

இப்படிக் கலைத்துறையிலும் - பொது வாழ்க்கையிலும், தன் சொந்த வாழ்க்கையிலும் சரித்திரச் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி - இழப்புகளையும், இடர்ப்பாடுகளையும், சோதனைகளையும், சாதனையாக்கிக் காட்டிய, ஈகைக் குணம் கொண்ட ஏந்தல், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், இச்சட்டமன்றப் பேரவையிலும், தமிழக ஆட்சியிலும், சாதனைகள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

11 ஆண்டுகள் முதலமைச்சராய் இப்பேரவையில் அங்கம் வகித்து, தமிழகத்தை ஆட்சி செய்தார் என்பது மட்டுமல்லாமல், தொடர்ந்து எவ்வித இடைவெளியும் இல்லாது மும்முறை தேர்தல்களில் மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவர், அவர்தான் என்ற சிறப்பையும் - கீர்த்தியையும் பெற்றவர் புரட்சித் தலைவர் ஆவார்.

இச்சட்டமன்றப் பேரவையில் மற்ற எல்லா முதலமைச்சர்களையும்விட, மிக அதிகமான ஆண்டுகள், 1967 முதல் தொடர்ந்து 20 ஆண்டுகள் உறுப்பினராகவும் அங்கம் வகித்து, ஒரு பிரச்சினையில் மிக அதிக நேரம் பேசியவர் என்ற சாதனையினையும் நிகழ்த்தியவர். 1979 பிப்ரவரி 26-ஆம் தேதி தேதி, அவரது அமைச்சரவையின் மீது கொண்டு வரப்பட்ட, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அன்று ஒரே நாளில் தொடர்ந்து 7 மணி நேரம் பேசினார்.

இச்சட்டப்பேரவை வரலாற்றில், நிலைத்திருக்கும், சாதனைகள் பல நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக முதல்வராய் நிர்வாகத்திலும் வியக்கத்தகு சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

தனது அரசியல் ஆசான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற நெறியினைத், தன் ஒரே நோக்கமாகக் கொண்டு, ஆட்சி நடத்தினார். தனது ஆட்சியின் மூலம், அதிகபட்ச நன்மைகள், தமிழகத்தில் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதிலேயே, கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகளின் பாதுகாவலராக வாழ்ந்ததால் தான், தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும், குடிகொண்டுள்ள ஈடுஇணையற்ற தலைவராக இன்றும் வாழ்கிறார், என்றும் வாழ்வார்.

அந்த வகையில் தமிழக மக்களுக்கு உழைத்து, அவர்களை உயர்த்திய மாமனிதரின் திருவுருவப் படம், மக்கள் பிரதிநிதிகள் கூடும் இந்த மாமன்றத்தில் திறந்து வைக்கப்பெறுவது, மிகப் பொருத்தமானதாகும். அத்திருவுருவப் படத்தைத் திறக்கும் வாய்ப்பை, அவரால் உருவாக்கப்பட்டு, உயர்வு அடைந்து, இன்று அவர் வழி நடக்கும் எனக்குக் கிடைத்திருப்பதை, என் வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் பேறாகக் கருதி, பெருமை அடைகிறேன்'.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சந்தன மாலை அணிவித்தார். சட்டசபை நுழைவுவாயிலும், மாண்புமிகு முதல்வருக்கு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் செங்கோல் வழங்கிய உருவமும் பொருத்தப்பட்ட நினைவுப் பரிசை சட்டப்பேரவைத் தலைவரும், சட்டப்பேரவைத் துணைத் தலைவரும் சேர்ந்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரின் திருவுருவப் படத்தை வரைந்த ஓவியர் திரு அல்போன்சுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, தனது சொந்தச் செலவில் தங்க மோதிரம் பரிசாக அளித்தார். பின்பு, தேசிய கீதத்துடன், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்விழா இனிது நிறைவுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

கணிதமேதை ராமானுஜன் நூல் வெளியீடு

எழுபதாண்டுகளுக்கு முன்பாகக் காலமான, இந்தியக் கணிதமேதை சீனிவாச ராமானுஜனின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்று அமெரிக்காவில் வெளியாகியுள்ளது. 'தி மேன் ஹூ நியூ இன்பினிட்டி' என்னும் பெயர் கொண்ட இந்தப் புதிய நூலை, ராபர்ட் கனிகெல் என்னும் அமெரிக்கர் எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்த நூலை எழுதுவதற்குத் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து, ரரமானுஜனின் வாழ்க்கையைப் பற்றிய புதிய பரிமாணங்களைத் தாம் அறிந்து கொண்டதாகவும், தாமும் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டதாகவும் இந்த நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

ராமானுஜன் சென்னையில் ஒரு குமாஸ்தாவாகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பிரபல பிரிட்டிஷ் கணித மேதை ஜி.எச். ஹார்டிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் தம்மைத் தாமே அவர் அறிமுகம் செய்து கொண்டு இருந்தார். தாம் கண்டுபிடித்துள்ள பல கணித வாய்பாடுகளையும் விதிமுறைகளையும் பற்றி அக்கடிதத்தில் ராமானுஜன் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதம் எழுதும் போது ராமானுஜனுக்கு வயது இருபத்தைந்துதான்.

பள்ளிப்படிப்பு மட்டுமே முடித்திருந்த ஒரு நபர், அதுவும் கல்வித் தலங்களாகத் திகழும் மேலை நாடுகளிலிருந்து தொலை தூரத்தில் வாழும் ஒரு நபர் கணிதத்தில் இவ்வளவு அரும்பணி ஆற்றி இருப்பது கண்டு பேராசிரியர் ஹார்டி மிகவும் மகிழ்ந்து போனார். கேம்பிரிட்ஜுக்கு வருமாறும், தம்முடன் பணியாற்றுமாறும் ராமானுஜனுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பைக் கண்டு ராமானுஜன் பரவசமடைந்தார். ஏனெனில் அதற்கு முன்பு அவர் எத்தனையோ பேராசிரியர்களுக்கு எழுதியும், அவருக்கு ஏமாற்றமே மிஞ்சியிருந்தது. அவர்கள் யாரும் அவரிடம் அக்கறைகூட காட்டவில்லை.

ராமானுஜன் கேம்பிரிட்ஜுக்குச் சென்று பேராசிரியர் ஹார்டியுடன் ஆறு ஆண்டுக்காலம் இணைந்து பணியாற்றினார். இருவரது பின்னணியும் வெவ்வேறாக இருந்தும்கூட, இவர்களது கூட்டுப்பணி மிகவும் வெற்றிகரமாக நடந்தது.

ஆனால், எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்ட ராமானுஜன் தமது 32-வது வயதிலேயே அகால மரணமடைந்தார். தமது குறுகிய வாழ்நாளிலே ராமானுஜன் கடுமையாக உழைத்தார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட கணித வாய்பாடுகளை அவர் கண்டுபிடித்தார். அவற்றையெல்லாம் பல நோட்டுப் புத்தகங்களிலும் துண்டுத்தாள்களிலும் அவர் குறித்து வைத்திருந்தார்.

மிகவும் ஏழ்மையான குடும்பத்திலே பிறந்தவராதலால், அவர் கடும் நிதி நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி இருந்தது. தமக்குத் தோன்றும் கணித விதிகளை அவர் முதலில் ஒரு சிலேட்டுப் பலகையில்தான் எழுதிப் பார்ப்பார். உறுதியான முடிவு கிடைத்த பின்னரே அதனை நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்வார்.

ராமானுஜனின் நோட்டுப் புத்தகங்கள் கேம்பிரிட்ஜில் உள்ள டிரினிட்டி கல்லூரி நூலகத்தில், அரை நூற்றாண்டுக்கும் மேலாகக் கவனிப்பாரற்றுக் கிடந்தன. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜார்ஜ் ஆண்ட்ரூஸ் என்னும் அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் 1976-ஆம் ஆண்டில் அவற்றைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அவர்தான் அவற்றை வெளியுலுக்கு அறிமுகப்படுத்தினார்.

ராமானுஜன் தமது கண்டுபிடிப்புகளின் இறுதி முடிவுகளையே நோட்டுப் புத்தகங்களில் குறித்து வைத்திருந்தாரே தவிர, எப்படி அவர் அந்த முடிவுக்கு வந்தார் என்பது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இந்தக் கணித உண்மைகளைப் புரிந்து கொள்ளும் பணியில், பேராசிரியர் ஆண்ட்ருக்ம் இதரக் கணித நிபுணர்களும் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தனர்.

சாதாரண சிலேட்டுப் பலகையில் ராமானுஜன் கணக்குப்போட்டு பார்த்து உருவாக்கிய கணித விதிகளைப் புரிந்து கொள்ள, அவர்கள் நுட்பமான கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்த வேண்டி இருந்தது. இப்போதுதான் அந்த விதிகள் மற்றும் வாய்பாடுகளின் சிறப்பு அவர்களுக்குப் புலனாகத் துவங்கியுள்ளது.

"கடைசியில், இராமானுஜனின் சிந்தனைச் செறிவைக் கணித நிபுணர்கள் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளனர்" என்று அறிவியல் எழுத்தாளர் ஒருவர் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

பள்ளிக்கூடப் படிப்பு இருக்கும் வரையில் மாணவன், அது முடிந்து விட்ட பின் மாணவன் அல்லன் என்று எண்ணுவது சரியன்று. நாற்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது நான் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திய பின்னரே, மாணவன் என்ற வாசற்படியில் ஏற ஆரம்பித்தேன்.

—அண்ணல் காந்தியடிகள்





பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள்

மாவட்ட ஊரக வளர்ச்சி

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டு உள்ளது. பயன்தாரர்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப் பட்டு, தகுதியுள்ள பயன்தாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை 7,141 பயனாளிகளுக்கு ரூ.156.77 இலட்சம் மானியம் வழங்கப் பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 2,958 நபர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

தொகுப்பு வீடுகள் 1950-இல் 384 கட்டி முடிக்கப்பட்டது. நாளது வரை தொகுப்பு வீடுகளுக்கு ரூ.221.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10.00 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு, 450 எக்டரில் நடவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப் பட்டதில் நாளது வரை 420 எக்டரில் 850 இலட்சம் செடிகள் நடப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.28.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

4 இலட்சம் பனை விதைகள் சுமார் 211 எக்டரில் நடும் பணி முடிவுற்றது. நாளது வரை 500.40 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 19.126 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்: 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 106 பள்ளிக் கட்டடங்கள் ரூ.146.550 இலட்சம் செலவிலும், 92 புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் ரூ.64.653 இலட்சம் செலவிலும், 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் செலவிலும், 404 ஊரகக் குடிநீர்க் குழாய்கள் ரூ.135.670 இலட்சம் செலவிலும், 3,500 தெரு விளக்குகள் ரூ.70 இலட்சம் செலவிலும், 60 சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.180 இலட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டம்: சாண எரிவாயுத் திட்டத்தில் 1991- 92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,100 நிர்ணயம் செய்யப்பட்டது. இது வரையில் 709 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

மாபெரும் திட்டம்: இத்திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.12.71 இலட்சம் மானியமாக 337 பயன்தாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோர் 24 பயன்தாரர்கள். அவர்களுக்கு மானியம் ரூ.0.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய குடும்ப அட்டைகள்: நவம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 1,583 குடும்பங்களுக்கும், டிசம்பர் 1991-இல் குடும்ப அட்டை அல்லாத 2,055 குடும்பங்களுக்கும், புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. நவம்பரில் 1991-இல் 2,959 போலி குடும்ப அட்டைகளும், டிசம்பர் 1991 மாதத்தில் 2,596 போலி குடும்ப அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 5,101 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டுள்ளன.

சமூக நலத்துறை

டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்: இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35 ஆயிரம் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. உரிய பயன்தாரர்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலுவலருக்கு விண்ணப்பித்துப் பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம்: ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 3 நபர்கள் பயன்பெற ரூ.3,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் பெரியார் மாவட்டச் சமூக நல அலுவலருக்கு நேரிடையாக விண்ணப்பித்துப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேளாண்மைத் துறை

அரசு விதைப் பண்ணைகளை மேம்படுத்த ரூ.8 இலட்சம்: பவானியில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.2.5 இலட்சம் செலவில் 4 இடங்களில் புது ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப் படவுள்ளன. சத்தியமங்கலத்தில் உள்ள அரசு விதைப் பண்ணையில் ரூ.3 இலட்சம் செலவில் மத்திய விதை சேமிப்புக் கிடங்கு ஒன்றும் அமைக்கப்படுகிறது. இப்பண்ணையில் ரூ.50 ஆயிரம் செலவில் 2 கிணறுகளை ஆழப்படுத்தவும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பவானி சாகரில் உள்ள அரசு விதைப் பண்ணையில் சிமெண்ட் கால்வாய்கள் அமைக்க ரூ.2 இலட்சம் செலவிடப்படும். இப் பணிகள் அனைத்தும் இன்னும் ஓரிரு மாதங்களில் முடிக்கப்படும்.

நெல், சோளம், கம்பு, ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றில் உள்ள புதிய ரகங்களை விவசாயிகளிடையே பிரபலப் படுத்த ரூ.1.26 இலட்சம் மதிப்புள்ள 13,906 மினிகிட் பைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. ரூ.22 மதிப்புள்ள தலா 4 கிலோ எடை கொண்ட நெல் விதைப் பைகள் ஒவ்வொன்றும் சலுகை விலையாக ரூ.3-க்கும், சுமார் 2 கிலோ வரை எடை கொண்டதும், ரூ.4 முதல் 10 வரை மதிப்பு கொண்டதுமான

ரா. கண்ணன். இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்.

சிறுதானிய விதைப் பைகள் ஒவ்வொன்றும் ரூ.1 வீதமும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

கல்வி உதவித் தொகை - பிற்பட்ட வகுப்பினர்: பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.66,246 செலவு செய்யப்பட்டு இதனால் 2,851 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத்திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.10,56,486 செலவு செய்யப்பட்டு 4,509 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.7,47,000 ஒதுக்கீட்டில் ரூ.7,97,226 செலவு செய்யப்பட்டு, 1,021 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர்: பிரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.2,67,491 செலவு செய்யப்பபட்டு, 5,795 நபர்களும், இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ. 8,00,000 ஒதுக்கீட்டில், ரூ.7,09,604 செலவு செய்யப்பட்டு 2,289 நபர்களும், போஸ்ட்மெட்ரிக் திட்டத்தின் கீழ் ரூ.5,80,000 ஒதுக்கீட்டில் ரூ.4,27,016 செலவு செய்யப்பட்டு, 791 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

மாவட்டத் தொழில் மையம்

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக டிசம்பர் 1991 திங்கள் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது. இதில் 150 நபர்களுக்கு ரூ.34.28 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 70 நபர்களுக்கு 15.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

பட்டு வளர்ப்புத் துறை

பட்டுக் கூடு உற்பத்தி: 1990-91-ஆம் ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. 1991 வரை 268990.50 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.268.990 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவைச் சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின்கீழ் சாகுபடி செய்யப் பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கு 180 பயன்தாரர்களுக்கு மல்பரி பயிர்க் கடனும், 360 பயன்தாரர்களுக்குப் பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்களுக்கான கடனும், 200 பயன்தாரர்களுக்குப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான கடனும், புதிய கிணறு அமைக்க 12 பேருக்கும், கிணறு ஆழப் படுத்த 8 பேருக்கும், கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சிப் பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டிசம்பர் 1991 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி நடைபெற்று பயிற்சி அளிக்கப்பட்டுவிட்டது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு டிசம்பர் 1991 வரை ரூ.30 ஆயிரம் உதவித் தொகையாக வழங்கப் பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குடும்ப நலத்துறை

கடந்த ஆண்டு டிசம்பரில், 1,249 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் டிசம்பர் 1991 வரை 10,670 தகுதி வாய்ந்த தம்பதியர்கள் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறியீடான 15,000-இல் இது 71.1 சதவிகிதச் சாதனையாகும்.

இம்மாவட்டத்தில் 66 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 8 அரசு மருத்துவமனைகள், 64 தனியார் மருத்துவமனைகள், 2 தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் குடும்ப நலத் திட்டம் செம்மையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பனி மலரைச் சூடுதற்குக் கட்டணமா?

புலவர் தமிழ்ப்பித்தன்

அன்பிருக்கும்; அருளிருக்கும்; அமைதி கொஞ்சும்
அழகிருக்கும்; எவரிடத்தும் இனிதாய்ப் பேசும்
பண்பிருக்கும்; பரிவிருக்கும்; பாசம் பொங்கப்
பழகுகின்ற இயல்பிருக்கும்; கல்வி கற்ற
தென்பிருக்கும்; தெளிவிருக்கும்; இளமை பொங்கும்
திறமிருக்கும்; தரமிருக்கும்; என்றா லுந்தான்
கன்னிமயில் புழுங்குகின்றாள் மணத்தை எண்ணி!
கனவுலகில் மிதக்கின்றாள் நித்த நித்தம்.

வரனுக்குத் தட்சணைகள் வழங்கு தற்கே
வகையில்லை அவள்வீட்டில்; அதனால் அன்னாள்
இரவெல்லாம் கண்ணீரை அருவி யாக்கி
இதயத்தை உலைக்களமாய் விரைவில் மாற்றி
உரமில்லா வயல்போலும் செழிப்பே இன்றி
உணவில்லாச் சிறுகுழவி போலே நொந்து
உறவெல்லாம் பகையென்றே எண்ணிச் சோர்ந்து
உருகுகிறாள்; அவள்துன்பம் இமயம் ஆகும்!

ஏழையராய்ப் பிறந்ததவள் தவறோ? கொஞ்சும்
இளமையிலே நீந்துவதும் தவறோ? மின்னும்
மாழையைப்போல் நற்குணங்கள் பெற்ற தெல்லாம்
மங்கையவள் செய்ததொரு தவறோ? துன்பப்
பீழையிலே நெளிவதுவும் தவறோ? நித்தம்
பெருமூச்சை உதிர்ப்பதுவும் தவறோ? நாட்டில்
கோழைமனம் கொண்டிருக்கும் ஆண்கள் கூட்டம்
குவிந்ததுதான் மாப்பெரிய தவறே ஆகும்!

இனிக்கின்ற சர்க்கரையை, பாகை உண்ண
இவ்வுலகம் வரிவிதித்தல் நியாயம் ஆமோ?
பனிமலரைச் சூடுதற்கே கட்ட ணங்கள்
விதிப்பதுதான் எவ்வாறு நேர்மை ஆகும்?
கனிபோன்ற கன்னிகையை மணமே செய்யக்
காசுபணம் கேட்பதுதான் குற்றம் அன்றோ?
இனிமேலும் இளைஞர்களே உறுதி கொள்வீர்
''இழிவான வரதட்சணை கேளோம்'' என்றே!

பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது எப்படி?

செய்யக்கூடியவை:

பூச்சி மருந்து கொள்கலனுடன் இணைக்கப் பட்டுள்ள குறிப்பேடுகளை உபயோகிக்குமுன் கவனமாகப் படிக்க வேண்டும்.

மருந்து தெளிப்போர் முகத்தை முறைத்தும், கண்ணாடி அணிந்தும் மருந்து தெளிக்க வேண்டும்.

ஒரு வேளை பூச்சி மருந்துடன் பூஞ்சாணக் கொல்லி சேர்த்து தெளிக்க வேண்டியிருந்தால் அதனுடன் இணக்கமான பூஞ்சாண மருந்துகளைத் தான் கலந்து தெளிக்க வேண்டும்.

அதிகாலை வேலைகளிலும், மாலை வேளை களிலும் மட்டும் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ செய்ய வேண்டும்.

தெளிப்பானுக்குத் தக்கவாறு மருந்துக் கரை சலைத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

மருந்தடிக்கும் முன்பும், பின்பும் தெளிப்பான் களை நன்கு கழுவ வேண்டும்.

மருந்து தெளித்த பின் கை, கால்களைச் சோப்புப்போட்டு நன்கு கழுவிய பிறகு மற்ற வேலைகளைச் செய்ய வேண்டும். கையுறைகள், பாதுகாப்பு உடைகள் போன்றவற்றையும் நன்கு கழுவி உலர்த்த வேண்டும்.

மருந்தடித்த வயலில் தெளிக்கப்பட்ட மருந்து, தேதி மற்றும் பூச்சிக்கொல்லிகளின் அளவுகளைக் கையேடுகளில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பூச்சி மருந்தடிப்போர் அடிக்கடி தங்கள் உடல் நிலையை மருத்துவரிடம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

திரவ மருந்துகளையும், திட மருந்துகளையும் தனித்தனியே சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்துகளை, குளிர்ந்த உலர்ந்த நல்ல காற்றோட்டமுள்ள இடங்களிலுள்ள சேமிப்புக் கிடங்கில்தான் சேமிக்க வேண்டும்.

பூச்சிக்கொல்லிகள் மிகவும் விலையுயர்ந்த பொருள். அவைகளைப் பரிந்துரை செய்யப்பட்ட அளவுகளில், தேவை ஏற்பட்டால் மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

செய்யக்கூடாதவை

பூச்சி மருந்துகளை வீட்டில் உபயோகிக்கும் மருந்துகள், உணவுப் பண்டங்களின் அருகில் வைக்கக்கூடாது. குழந்தைகள் கைக்கு எட்டாத வாறு வைக்கவேண்டும்.

பூச்சி மருந்தை நீரினில் இட்டுக்கலக்கும்பொழுது கைகளை இட்டுக் கலக்கக்கூடாது. வயதில் சிறிய வர்களைப் பூச்சி மருந்து தெளிக்கப்பயன்படுத்தக் கூடாது.

காற்றடிக்கும் திசைக்கு எதிராகப் பூச்சி மருந்து தெளிக்கவோ, தூவவோ கூடாது.

பூச்சி மருந்து தெளிக்கும்பொழுது உண்ணுதல், புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சி மருந்துகளைக் கலந்து தெளிக்கக்கூடாது.

குழல் மூலம் பூச்சி மருந்தை உறிஞ்சக் கூடாது.

தெளிப்பான் அடைபட்டிருந்தால் நாஸிலை வாயினால் ஊதக்கூடாது.

மருந்தடிக்கப்பட்ட வயலுக்கு அருகில் ஆடு, மாடுகளை மேயவிடக்கூடாது. மருந்தடிக்கப்பட்ட காய்கறிச் செடி அல்லது பழ மரங்களிலிருந்து குறைந்தது பதினைந்து நாட்களுக்குக் காய் அல்லது பழங்களைப் பறிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளித்த பின் டப்பாக்களைப் பயன்படுத்தக்கூடாது.

எஞ்சிய பூச்சி மருந்துக் கரைசலை ஒருபோதும் சேமித்து வைக்கக்கூடாது.

நீர் நிலைகள், குடிநீர்ப் பகுதிகள், கழிவு நீர், வாய்க்கால், நீர்ப்பாசன வாய்க்கால் போன்றவற் றின் அருகில் மருந்துக் குப்பிகளை ஏறியவோ, புதைக்கவோ கூடாது.

காலக்கெடு முடிந்த பூச்சி மருந்துகளைப் பயன் படுத்தக்கூடாது.

புழங்கும் இடங்களிலும், சேமிப்பு அறை களிலும் பூச்சி மருந்து கொட்டி விட்டால் திரவ மருந்தாக இருந்தால் உறிஞ்சக்கூடிய ரம்பத் தூளைத் தூவி திட வடிவமாக்கி அப்புறப்படுத்த வேண்டும். இவற்றை அடையாளமிட்ட பாத்திரத் தில் சேகரித்து சுண்ணாம்பு கலந்து நச்சு முறிவு செய்யவேண்டும்.

தொடர்ந்து ஒரே ஆள், பூச்சி மருந்து தெளிக்கக்கூடாது.

பூச்சி மருந்து தெளிப்போர் தொடர்ந்து ஒரே ஆடையை அணியக்கூடாது.

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம்.

நூல் நயம்

நீரிழிவுக்குச் சித்த மருந்துகள்

ஆசிரியர்:
டாக்டர் பொ.இரா. இராமசாமி எம்.டி.
வெளியிட்டோர்:
அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24

பக்கம்:188 விலை:ரூ.20/-

நீரிழிவு பற்றியும் அதற்குரிய நிவாரண முறைகள் பற்றியும் டாக்டர் பொ.இரா. இராமசாமி எழுதிய இந்த நூல் மருத்துவ அடிப்படையில் மட்டுமல்லாமல், இலக் கியம், வரலாறு, சோதிடம், ஆன்மீகம், யோகம் ஆகிய அடிப்படைகளிலும் நீரி ழிவை ஆய்கிறது. மேலும் சித்த மருந் துகள் மட்டுமன்றி, ஆயுள்வேத மருந்து களையும் அறிமுகம் செய்கிறது. நீரிழி வைப் பற்றிய அரிய நூல் இந்த நூல் எனலாம். 'ஒவ்வொரு நோய் பற்றியும் இப்படி நூல் வருமானால், அது மருத்து வர்க்கும், மாணவர்க்கும் மட்டுமன்றி மற்றவர்க்கும் மாபெரும் பயனளிக்கும்.

—இரா. முத்துராமலிங்கம்

மூன்றாம் இரவு முனை

ஆசிரியர்கள்:
நித்யாமூர்த்தி,
ஆருத்ரா பாலன்
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:212 விலை:ரூ.21/-

திருமதி நித்யா மூர்த்தி எழுதிய மூன்றாம் இரவு நாவலும், திரு. ஆருத்ரா பாலன் எழுதிய மூன்றாம் முனை என்ற நாவலும் இணைந்த ஒரே நூல் இது.

ஆதரவற்ற பெண்ணான சித்ரா வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு, எதிர்ப்படும் சோதனைகளை வென்று இறுதியில் வெற்றிவாகை சூடுவதை விறுவிறுப்புடன் சொல்லும் நாவல் மூன்றாம் இரவு.

மூன்றாம் முனை நாவலின் நாயகி சீதாவோ இராமாயண நாயகியின் பெயரைப் பெயரளவுக்குக் கொண்டிருப் பினும், கணவன் செய்த அநியாயத்திற்குத் துணை போகாமல், அஞ்சி நடுங்கிப் பணிந்து போகாமல், தலைநிமிர்ந்து எதிர்த்துப் போராடி வென்று தன் தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொண்ட பாரதி கண்ட புதுமைப்பெண். ஆண் ஆதிக்கத்தைத் தலைகுனிந்து ஏற்றுக் கொண்ட பெண்களின், மத்தியில் சீதா போன்ற பெண்கள் உருவாகத் தூண்டும் புதுமை நாவல்.

—குமார்

மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்

ஆசிரியர்: க.ப. சந்தோஷம்,
வெளியிட்டோர்:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
அஞ்சல் பெட்டி எண் 501,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்:101 • விலை:ரூ.20/-

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தயாரிப்பான 'செந்தமிழ்ச் செல்வி' திங்களிதழில் 'மகிழ்நன்' எனும் பெயரில் நூலாசிரியர் எழுதிவந்த அரிய தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

தனக்கென ஒரு தனி நடையை ஏற் படுத்திக் கொண்டுள்ளார் ஆசிரியர்; ஆங்கில மொழிப் புலமையும் மிக்கவரா தலின், ஆய்வுக் கட்டுரைகளில் ஆழ்ந்த ஞானம் வெளிப்படுகிறது; 50 ஆண்டு களுக்குப் பிறகு இரண்டாவது பதிப்பாக இந்நூல் வெளி வருவது வேதனைக் குரியது.

சொற்சுவை, பொருட்சுவை, நகைச் சுவை மிகுந்த இதுபோன்ற நூற்கள் - மொழி ஆர்வலர்களால் பெரிதும் ஆதரிக்கப்படவேண்டும்.

—'சோழராஜா'

சிறுவர்க்கான இராமானுசம் எண்கள்

ஆசிரியர்: டாக்டர் மெ. மெய்யப்பன்
வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்
சென்னை-600 098.

பக்கம்:74 விலை:ரூ.8/-

தமிழகத்தில் பிறந்து 32 வயதிற்குள் உலகளாவிய புகழையும், பட்டங்களை யும், விருதுகளையும் சுமந்து மறைந்த கணிதமேதை இராமானுஜம் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களும், கணிதவியல் பற்றிய எளிய குறிப்புக்களும் கொண்ட நூல். கணிதத்தில் முதன்மை நிலை அடைய விரும்புவோர்க்கு வழி காட்டியாகத் திகழவல்ல எளிய நூல்.

வினாக்களும் சுரதாவின் விடைகளும்

ஆசிரியர்: உவமைக் கவிஞர் சுரதா
வெளியீடு: சுரதா பதிப்பகம்
56-அ, இலட்சுமணசுவாமி சாலை,
கே.கே. நகர்,
சென்னை-600 078.

பக்கம்:176 விலை:ரூ.23/-

நாடறிந்த கவிஞர் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள். அவர் தமது கவிதை வாயிலாகத் தனி முத்திரை பதித்த வித் தகக் கவிஞர். அவரது கவிதை சித்திரக் கவிதை மட்டுமல்ல, விசித்திரக் கவிதை மட்டுமல்ல, பேசும் சித்திரமாக விளங்குவதை நாம் கண்டு வருகிறோம்.

பாவேந்தரின் மாணவருள் மூத்தவ ரான உவமைக் கவிஞரை உலகுக்குக் காட்ட அவரது நேர்காணல் என்னும் பேட்டிகள் பெரிதும் துணை புரிவன என்பது மட்டுமல்ல, கால காலத்துக்கும் நிற்பவையுமாகும்.

1952 முதல் 1991 முடிய கவிஞரது 50 பேட்டிக் கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கவிஞரை முதன் முதலில் பேட்டி கண்டவர் நாவலாசிரியர் ஜெகசிற்பியன் பேட்டி வெளிவந்த இதழ் 'சிரஞ்சீவி' (1952). ஒவ்வொரு பேட்டிக் கட்டுரை யும் ஒரு காலக் கண்ணாடியாகத் திகழ் கிறது. 'கல்கி'யில் வெளிவந்த 'கவிதை பிறந்த கதை' யாகட்டும், 'தமிழரசு' இதழில் வெளிவந்த மலரும் நினைவு களாகட்டும் எல்லாமே கவிஞரின் ஆழ்ந்த புலமையை, அபார நினைவாற்றலை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பேட்டிக் கட்டுரைகளின் தொகுப்பு நூலாக இது விளங்குவதால், நூலின் தொடக்கத்திலேயே ஒரு அரிய தொகுப் பைத் தந்துள்ளார் கவிஞர். அதுதான், ''தமிழ் வித்துவான் தாண்டவராயரின் வினாவிடை முதல் தன்மானக் கவிஞர் சுரதாவின் வினாவிடை வரை (1820-1991)'' என்பது. கவிஞரின் சிறப்பு, இதுவரை யாருமே செய்திராத ஒரு செய்தியை சொல்லுவதுதான். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் மேற் குறிப்பிட்ட தொகுப்பு.

பேட்டி காண்பது என்பது சாதாரண காரியமல்ல. அதைப்போல பேட்டிக்குப் பதில் சொல்வதும் ஒரு கலை தான். அதை இந்த நூலில் பார்க்கிறோம்.

இளைஞர்கள் இளங் கவிஞர்கள், இதழியல் துறையில் ஆர்வம் செலுத்தும் மாணவர்கள் இந்நூலை அவசியம் படிக்க வேண்டும்.

—பி.வி. கிரி

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில்

கதர் கிராமத் தொழில்கள் வளர்ச்சிப் பணிகள்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிச் சிறப்பு விற்பனைக் காலங்களில், கதருக்கு 35 சதவிகிதம், கதர் பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவிகிதம், பட்டு உல்லன் ரகங்களுக்கு 20 சதவிகிதம், சிறப்புத் தள்ளுபடியில் கதர் விற்பனை நடைபெற்றதால், இவ்வாண்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு, ஆண்டுக் குறியீட்டளவான ரூ.56 இலட்சத்தைத் தாண்டிச் சாதனை படைக்கப் பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் அனைத்து வட்டங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் 32 கிராமிய நூற்பு நிலையங்கள் கதர் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் 960 மகளிர் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர். மேலும் உற்பத்தியாகும் நூலினைக் கொண்டு 200 நெசவாளர் குடும்பங்கள் கதர் நெசவு செய்து தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு கிராமியத் தொழில் கைவினைஞர்கள் 77 பேர்களுக்கு ரூ.7.50 இலட்சம் கடனுதவியும், ரூபாய் 1.30 இலட்சம் மான்யமும், அளிக்கப்பட்டுள்ளது. ஒரு கைவினைஞருக்கு ரூபாய் 2,500 முதல் ரூ.1,00,000 இலட்சம் வரை தொழிலுக்குத் தகுந்தவாறு கடனுதவி வழங்கப்படுகிறது. இவ்வாரியம் வழங்கும் கடனுதவிக்கு குறைந்த வட்டி விகிதம் 4 சதவிகிதம் ஆகும்.

சாலை ஓரங்களில் காலணி தயாரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் தொழில் செய்யும் ஆதிதிராவிடத் தொழிலாளர்களுக்கு வெயில் மழையிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் ரூ.7,500 மதிப்புள்ள இலவசக் காலணி பணிக்கூடங்கள் வழங்கப்பட்டு, இதன்மூலம் 45 குடும்பங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கதர் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உண்ணா

எண்ணெய் சோப்புத் தொழி அலகு; கைமுறைக் காகித அட்ை உற்பத்தி அலகு, காலணி உற்பத் அலகு, குரோம் தோல் பதனிடு அலகு, மண்பாண்ட உற்பத் அலகு, போன்றவை செயல்பட் வருகின்றன. இவைகளின் மூல சுமார் 150 தொழிலாளர்க தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற் பயனடைந்து வருகிறார்கள். இ வலகுகளின் மூலம் தொழிற்பயிற் யும் அளிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 79 தொழி கூட்டுறவுச் சங்கங்கள் பல்வே தொழில்களுக்காகப் பதிவு செய்ய பட்டு ஆங்காங்கே சிறந்த முறையி செயல்பட்டு வருகின்றன. இச்சங்க களில் சுமார் 1,000-க்கும் மே பட்ட கைவினைஞர்கள் உறுப்பின களாகச் சேர்ந்து பயனடைந்து வ கிறார்கள். இக்கூட்டுறவுச் சங்க களுக்குத் தமிழ்நாடு கதர் கிராமிய தொழில் வாரியம், மூலதனக் கட முதலீட்டுக் கடன், மற்றும் க வினைஞர்களுக்குப் பல்வேறு தொழி களின் நூதனப் பயிற்சிகளு அளித்து வருகிறது.

1990-91-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1990-91-ஆம் ஆண்டுகளில் ஜனவரி முதல் டிசம்பர் வரை வெளியான தமிழ்த் திரைப்படங்களிலிருந்து கீழ்க்கண்ட விருதுகளுக்குச் சிறந்த திரைப்படம், நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய ஆணையிட்டுள்ளார்.

சிறந்த திரைப்படங்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையாக முதல் மூன்று தமிழ்த் திரைப்படங்களுக்கும், சிறப்புப் பரிசு பெறும் தமிழ்த் திரைப்படத்துக்கும் கடந்த ஆண்டில் வழங்கியதைவிட இவ்வாண்டு தலா ரூபாய் 25,000 (ரூபாய் இருபத்தி ஐயாயிரம் மட்டும்) அதிகரித்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதுபோல கடந்த ஆண்டுகளில் வழங்கியது போல் அல்லாமல் பரிசு பெறும் சிறந்த நடிகர், நடிகை, தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் பாகுபாடின்றித் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் வழங்க ஆணையிட்டுள்ளார்.

இவ்வாண்டு வழங்கப்படவுள்ள திரைப்பட விருதுகள் (விவரம்)

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு ... ரூ. 1.25 இலட்சம் ரொக்கம் மற்றும் கேடயம்.
2. இரண்டாம் பரிசு ... ரூ.75,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
3. மூன்றாம் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.
4. சிறப்புப் பரிசு ... ரூ.50,000 ரொக்கம் மற்றும் கேடயம்.

கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர் ... 5 பவுன் தங்கப்பதக்கம்.
2. சிறந்த நடிகை ... "
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) ... "
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) ... "
5. சிறந்த இயக்குநர் ... "
6. சிறந்த கதையாசிரியர் ... "
7. சிறந்த உரையாடல் ஆசிரியர் ... "
8. சிறந்த இசையமைப்பாளர் ... "
9. சிறந்த பாடலாசிரியர் ... "
10. சிறந்த [illegible] ... "
11. சிறந்த பின்னணிப்பாடகி ... "
12. சிறந்த ஒளிப்பதிவாளர் ... "
13. சிறந்த ஒலிப்பதிவாளர் ... "
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) ... "
15. சிறந்த ஆர்ட் டைரக்டர் ... "
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) ... "
17. சிறந்த நடன ஆசிரியர் ... "

சிறப்பு விருதுகள்

1. இராஜா சாண்டோ விருது ... 5 பவுன் தங்கப்பதக்கம்
2. கலைவாணர் விருது ... "
3. அறிஞர் அண்ணா விருது ... "
4. எம்.ஜி.ஆர். விருது ... "
5. பாவேந்தர் பாரதிதாசன் விருது ... "

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திரைப்பட விருதுகளுக்குத் தேர்வுகளைச் செய்து முடிப்பதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். பிரதாப்சிங் அவர்களது தலைமையில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு ஒரு தேர்வுக்குழுவை அரசு நியமித்துள்ளது.

திரைப்பட விருது தேர்வுக்குழு

1. தலைவர் .. நீதிபதி எஸ். பிரதாப்சிங்
2. உறுப்பினர் .. திரு. கே.வி. மகாதேவன்.
3. உறுப்பினர் .. திரு. ஏ.சி. திருலோகசந்தர்
4. உறுப்பினர் .. திரு. வி. இராமமூர்த்தி
5. உறுப்பினர் .. திரு. எம்.என். நம்பியார்
6. உறுப்பினர் .. திரு. ஆர்.கே. இராமச்சந்திரன்
7. உறுப்பினர் .. திருமதி பண்டரிபாய்
8. உறுப்பினர் .. திருமதி. பி. சுசீலா
9. உறுப்பினர் .. கவிஞர் முத்துராமலிங்கம்
10. உறுப்பினர் .. திருமதி மஞ்சுளா ரமேஷ்
11. உறுப்பினர் .. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை.

• எவனொருவன் தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக்கொள்ளத் திறன் உடையவனோ, அவனே உண்மையான கல்வியை அடைந்தவனாவான்.

— சுவாமி விவேகானந்தர்

மாணவர் பக்கம்

முதன் முதலில்

அரசுப் பணிகளுக்காக ராபர்ட் கிளைவ் 1760-இல் தபால் முறையைத் தொடங்கினார். 1837-இல் மக்களுக்கும் இவ்வசதி கிடைத்தது.

1852-இல் சிந்து மாகாணத்தில் முதல் தபால் தலை வெளியிடப்பட்டது. 1911 பிப்ரவரி 18-ஆம் தேதி முதன் முதலில் விமானத்தில் தபால் எடுத்துச் செல்லப்பட்டது.

1851-ஆம் ஆண்டு தந்தி முதன் முதலில் வந்தது. 1867 முதல் நாடு முழுவதும் அது விரிவாக்கப்பட்டது.

முதல் பத்திரிகை 'பெங்கால் கெஜட்'. இது, 1780-இல் கல்கத்தாவில் வெளியிடப்பட்டது. ஜேம்ஸ் ஹிக்கி இந்த இதழை நடத்தினார்.

இந்தியரால் தொடங்கப்பட்ட முதல் பத்திரிகை 1816-இல் வெளிவந்தது. கங்காதர் பட்டாசார்ஜி நடத்திய இதன் விலை அப்போதே ஒரு ரூபாய்.

1822-இல் 'மும்பை சமாசார்' என்ற குஜராத்தி மொழிப் பத்திரிகை வெளிவந்தது. 1832-இல் அது நாளிதழாயிற்று. இன்று 'பம்பாய் சமாசார்' என்ற பெயரில் வரும் நாளிதழின் முன்னோடி அது.

வானொலி 1927-இல் தனிப்பட்டவர்களால் தொடங்கப்பட்டது. அரசு அதனை மேற்கொண்டு 1930 முதல் இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்ற பெயரில் நடத்தியது. 'ஆல் இந்தியா ரேடியோ' என்ற பெயர் 1936-இல் ஏற்பட்டது.

தொலைக்காட்சி 1957 செப்டம்பரில் அமைக்கப்பட்டது. அப்போது பள்ளிகளுக்கும், கிராமங்களுக்கும் மட்டுமே அது நிகழ்ச்சிகளை ஒளி பரப்பியது.

1965-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்தான் எல்லோருக்கும் பயன்படும் பொது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மாலையில் மூன்று மணி நேரம் மட்டுமே நிகழ்ச்சிகள் இருந்தன.

பம்பாய்த் தொலைக்காட்சி நிலையம் 1972 அக்டோபர் 2-ஆம் தேதி செயல்படத் தொடங்கியது. 1976-இல் வர்த்தக ஒளிபரப்பு தொடங்கியது.

இந்தியா 1000 சுவையான செய்திகள்' என்னும் நூலிலிருந்து.

திருக்குறள் இரட்டையர்!

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வடசிறுவலூர் திருவள்ளுவர் மன்றச் சிறப்பு உறுப்பினர்கள் ச. யுவராசன், ச. குமரகுருபரன் இருவரும் சகோதரர்கள். 1,330 அருங்குறளையும் அப்படியே ஒப்புவிக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல இலக்கிய அமைப்புகளில் இவர்கள் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

ச. யுவராசன் திருச்சிற்றம்பலம் (வானூர் வட்டம்) காந்தி மேல்நிலைப் பள்ளியில் 11-ஆம் வகுப்பு படிக்கிறார். ச. குமரகுருபரன், கோட்டக் குப்பம் அரசு உயர் பள்ளியில் 9-ஆம் வகுப்பு படிக்கிறார்.

முதலில் இவர்கள் நாள்தோறும் காலையிலும், மாலையிலும் ஐந்து ஐந்து குறள்களாக மனப் பாடம் செய்தனர். பிறகு எல்லாவற்றையும் மனப் பாடம் செய்தனர். அதிகாரத்தைச் சொல்லிக் கேட்டாலும் சரி அல்லது குறள் எண்களைக் கேட்டாலும் சரி. உடனே அதற்குப் பதில் சொல்கிறார்கள்.

முதல் வகுப்புப் படிக்கும் குழந்தை முதலில் வந்தது

செட்டிநாடு வித்யாஸ்ரமத்தில் முதல் வகுப்பில் பயிலும் குழந்தை அருண் பாலாஜி. வயது ஐந்தரைதான் ஆகிறது. ஆனால் இவன் எல்லோரையும் மூக்கின்மேல் விரலை வைக்கும்படி ஒரு சாதனையே புரிந்துவிட்டான்!

சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் 5,600 மீட்டர் தூரத்தை (112 லாப்) 3 மணி, 5 நிமிடம், 51.44 விநாடிகளில் நீந்தி முடித்ததுதான் அந்தச் சாதனை!

இந்தச் சிறிய வயதில் இப்படி ஒரு பெரிய சாதனை நிகழ்த்தியிருப்பதை யார்தான் பாராட்டாமல் இருப்பார்கள்!

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ரவீந்திரநாத் இந்தப் போட்டியைத் தொடங்கி வைக்க, தமிழ்நாடு காவல்துறை ஐஜி (குற்றப்பிரிவு) திரு. இ.ஹரிஹரன் இந்த இளம் நீச்சல் வீரருக்குப் பரிசுகள் வழங்கினார்.

சுமார் 1,80,000 பேர் புற்று நோய்க்கு ஆளாகியுள்ளனர். இவர்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அடங்குவர். இந்த ஆண்டில் அந்நோயிலிருந்து அவர்கள் காப்பாற்றப் படுவர் என்ற மகிழ்ச்சியான செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. இன்னொரு முக்கியமான செய்தி... ஆரம்ப கட்டத்திலேயே இந்நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதன் மூலம், மேலும் தொண்ணூறாயிரம் பேரைக் காப்பாற்றலாம் என்பதே அது.

ஓர் எச்சரிக்கை: பெண்களைக் காட்டிலும், ஆண்களையே புற்றுநோய் அதிக அளவில் பிடிக்கிறது.

புற்றுநோயைக் குறைப்படுத்தலாம்!

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்?

உடல் என்னும் சுவர் நன்றாக இருந்தால்தான், சித்திரம் என்னும் செயலை நாம் ஒழுங்காகச் செய்ய முடியும்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையில், நம் உடலைக் கவனிக்க மறந்து விடுகிறோம்.

ஆம். எத்தனையோ நோய்கள் நம்மைத் தாக்கி வருகின்றன. சில நம்மையறியாமலேயே நம் உடலில் மறைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் கவனிப்பதில்லை; கவனிக்க நேரமும் இருப்பதில்லை. இவற்றுக்கு எல்லாம் இன்னொரு காரணம், நம்முடைய அலட்சியப்போக்குதான்!

மனிதனைப் பிடிக்கும் நோய்களில் புற்றுநோயும் ஒன்று. புற்றுநோய் என்று சொல்லும்போதே, அது ஒரு பயங்கர நோய் என்று அச்சப்படுகிறோம்.

எந்த நோயும் பயங்கர நோய் அல்ல, தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப் பட்டால்! புற்றுநோய், தொடக்கத்தில் உடலில் ஒரு சிறு புள்ளியாகத்தான் உருவெடுக்கிறது. உடலில் உள்ள திசுக்கள், இயல்பான வளர்ச்சியடைவதற்குப் பதிலாக, அளவுக்கு மீறி வளர்கின்றன. அதாவது, சிறிய புள்ளி, பெரும் புள்ளியாக உருமாற்றம் பெறத் தொடங்குகிறது.

இதில் ஒரு விந்தை என்னவென்றால், தனது உடல் நலத்துக்கு ஏதோ ஊறு ஏற்பட்டிருப்பதாக ஒருவர் தெரிந்து கொள்ளுவதற்குள்ளாகவே, இது நிகழ்ந்து விடலாம் என்பது தான்! இந்த அசுர வேகத்தை நம்முடைய விவேகத்தால் வெல்ல வேண்டும். எப்படி? அதை விளக்கியது அண்மையில் நடந்த ஒரு அரிய கண்காட்சி!

அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையும், இந்தியப் புற்றுநோய்க் கழகமும் இணைந்து நடத்திய, புற்றுநோய் சிறப்புக் கண்காட்சிதான் அது.

கண்காட்சிக்குள் சென்று அங்கே உள்ள படங்களையும், பாடங்களையும் பார்த்தபோது, பல விவரங்களை, விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு புள்ளி விவரம், நமக்குப் பள்ளிப் பாடமாய் அறிவுறுத்துவதை ஒரு கையேட்டிலிருந்து அறிகிறோம்.

தற்சமயம் ஒவ்வோராண்டும், ஒவ்வொரு ஆறு புற்றுநோயாளிகளில் இருவர் புற்றுநோயிலிருந்து காக்கப்படுகின்றனர் என்றும், ஆனால் அந்த ஆறு பேர்களில் மூன்று பேரைப் புற்றுநோயிலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் கூறுகிறது அந்த அறிக்கை.

ஆண்களைப் பொறுத்தவரையில் உண்டாகும் சாதாரணப் புற்றுநோய்கள் ஏவை தெரியுமா? வாய், அடித்தொண்டையில் ஏற்படும் புற்றுநோய், வயிறு, குடல்கள், ஆசனவாய் ஆகிய ஜீரண மண்டல உறுப்புகளில் உண்டாகும் புற்றுநோய், குரல் வளை, நுரையீரல்கள் ஆகிய சுவாச உறுப்புகளைத் தாக்கும் புற்று நோய், இதுதவிர, உதடுகளில் உறவாடும் புற்று நோயும் உண்டு.

பெண்களுக்கு எந்த வயதிலும் புற்று நோய் வரலாம் என்பதை நாம் கோடிட்டுக் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் முழுமை அடைய அடைய, புற்றுநோயும் அவர்களை அதிக அளவில் பாதிக்கிறது என்பது, மருத்துவர்கள் கூறும் உண்மை. கருப்பை, மார்பகம், வயிறு, குடல்கள், ஆசனவாய் போன்ற ஜீரண மண்டல உறுப்புகளில் மகளிர்க்குப் புற்று நோய் ஏற்படுகிறது.

மார்பகங்களின் மீது தோன்றும் தசை முண்டுகள் பெரும்பாலும் புற்று நோய் காரணமாக ஏற்படுவதில்லை என்பது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். ஆனால், குறிப்பாக மாதவிடாய்க் காலங்களுக்கிடையில் இரத்தம் வெளிப்படும் போது அல்லது மாதவிடாய் நின்று விட்ட பிறகு இரத்தம் வெளிப்படும்போது மேற்குறிப்பிட்ட அபாய அறிகுறிகளில் ஏதேனும் ஒன்று

தென்பட்டால், அதனைப் புற்று நோய் என்று கொள்ளலாம்,

புற்று நோய் எப்படி ஏற்படுகிறது? இதை எந்த அறிகுறிகளால் நாம் தெரிந்து கொள்ளலாம்?

1. குடல் அல்லது இரைப்பை செயல்படும் முறையில் மாற்றம்.

2. நெடு நாட்களாக இருந்து வரும் ஆறாத புண் அல்லது காயம்.

3. வழக்கத்திற்கு அதிகமாக, உடலில் எந்தப் பாகத்திலிருந்தும் இரத்தம் கசிதல் அல்லது வெளியேறுதல்.

4. மார்பகத்தில் அல்லது உடலின் மற்ற பகுதிகளில் தடிப்பு அல்லது தசை முண்டுகள் காணப்படுதல்.

5. தீராத அஜீரணம் அல்லது உணவு விழுங்குவதில் தொல்லை.

6. சதை வளர்ச்சி, மரு அல்லது மச்சத்தில் வெளிப்படையான மாற்றம்.

7. இடைவிடாத இருமல் அல்லது தொண்டை கரகரப்பு.

இந்த ஏழு அறிகுறிகள் காணப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள் அதனாலேயே, புற்று நோய் வந்து விட்டது என்று பயப்பட வேண்டாம். மேற்கூறிய அறிகுறிகளில் ஒன்று, இரண்டு வாரங்களுக்கு மேல் தொடர்ந்து காணப்பட்டால், உடனே மருத்துவரைப் போய்ப் பார்க்க வேண்டும்.

◎ சிறுநீரில் இரத்தம் கலந்து வெளிப்பட்டால், உடனடியாக அதைக் கவனிக்க வேண்டும்.

◎ புற்று நோயின் ஆரம்பக் கட்டத்தில் வலி எதுவும் ஏற்படுவதில்லை.

◎ எனவே, அபாய அறிகுறிகள் தென்பட்டால், வலி ஏற்படும் வரை காத்திராமல் மருத்துவரின் ஆலோசனை பெறுவதுதான் நல்லது.

◎ புற்று நோய்ச் சிகிச்சைக்காக வீட்டுச் சிகிச்சை முறைகளையோ அல்லது இரகசிய சிகிச்சை முறைகளையோ கையாள்வது கூடாது.

நுரையீரல் புற்று நோய் தோன்றுவதற்கு மூல காரணமே, புகைபிடிப்பது தான் என்பது மருத்துவப் பரிசோதனைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

வாய்ப் புற்று நோயும் பெரும்பாலானவர்களுக்கு வருகிறது. இதற்கு முக்கியக் காரணம், வெற்றிலை பாக்கு புகையிலை போடுவதாகும்.

குடலில் புற்று நோய் ஏற்படக் காரணம் என்ன?

"அதிக அளவு உப்பு, காரம் கொண்ட ஊறுகாய்களைச் சாப்பிடுவதால் குடற்பகுதியில் புற்று நோய் ஏற்படக் கூடுதல் வாய்ப்புள்ள உள்ளன. தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் இது தெரிய வந்துள்ளது. உணவுப் பழக்க வழக்கங்களும் வயிற்றில் புற்று நோய் ஏற்பட முக்கியக் காரணமாக உள்ளது என்றும் தெரியவந்துள்ளது"

அரிசியை அதிக அளவு பயன்படுத்தும் இந்த இரு மாநிலங்களைச் சேர்ந்த ஏழை எளியவர்கள், ஊறுகாய்களையும் அதிக அளவில் பயன்படுத்துவதால், இந்தப் பகுதியில் வயிற்றில் புற்று நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

இந்த உணவுகளுடன் புகைப்பிடித்தல், மது அருந்துதல் ஆயவை புற்று நோய் ஏற்படுவதை விரைவுபடுத்துகின்றன.

"காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தெளிக்கப்படும் பூச்சிக் கொல்லி மருந்துகளும், பொது மக்களுக்குப் புற்று நோய் ஏற்படுத்தக் காரணமாக அமைகின்றன. இவையெல்லாம் புற்று நோய் ஏற்பட பல்வேறு காரணங்களாகக் கூடப்பட்ட போதிலும், இயற்கையிலேயே புற்று நோய்க்கு ஆளாகக்கூடிய தன்மை ஒருவருக்கு இருந்தால் அவருக்கு மேலே குறிப்பிட்ட எந்தவிதமான பழக்க வழக்கங்களோ இல்லாமல் இருந்தால் கூட, புற்று நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது" என்று சென்னை அடையாற்றின் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தின் துணைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

புற்று நோயைக் குணப்படுத்தலாம். அதிவேக விஞ்ஞான வளர்ச்சியில், நவீன சிகிச்சை முறைகளும், சக்தி வாய்ந்த மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இக்காலக் கட்டத்தில், நோயின் ஆரம்பத்திலேயே மருத்துவரை அணுகினால், இந்த அபாயத்திலிருந்து நாம் விடுபடலாம்.

"உங்கள் மார்பகங்களை எவ்வாறு சோதிப்பது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள். அதற்குச் சில நிமிடங்கள் போதுமானது. தவறாது ஒரு முறை அவ்வாறு செய்யுங்கள் அல்லது இந்தியப் புற்று நோய்ச் சங்க சென்னைக் கிளையில், (127, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600 001) விளக்கப் படங்களுடன் கூடிய மடிப்புப் பிரதியைக் (Folder) கேட்டுப் பெறுங்கள். அப்பிரதியின் பெயர், "You are the first to know" "உங்களுக்குக் கண்டுள்ள புற்று நோயை நீங்கள் தான் முதலில் அறிவீர்கள்" என்பதாகும். அதனைப் படித்துப் பலர் பயனடைந்துள்ளனர். அதுமட்டுமல்ல, பலரது உயிரும் காப்பாற்றப்பட்டிருக்கிறது". என்று இச்சங்கக் கையேடு ஒன்று தெரிவிக்கிறது.

—பி.வி.கிரி

தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

இந்து ஆதிதிராவிடர் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு பல்வேறு பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அதில் 'தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்' என்ற திட்டம் மிக முக்கியமான திட்டமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் (தாட்கோ) மூலம் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் அதிகப்பட்சம் ரூ:5 இலட்சம் வரை தொழில் தொடங்கக் கடன் உதவி வழங்கப்படுகின்றது. அதாவது, ஓர் இந்து ஆதிதிராவிடர் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தொழில் தொடங்க முன்வருவாரேயானால், அவருக்குத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மானியமாக ரூ.15,000-மும் விளிம்புத் தொகையாக (Margin Money) ரூ.85,000-மும் வழங்குகிறது.

இந்த விளிம்புத் தொகை மிகக் குறைந்த வட்டி விகிதமாக 4 சதவிகித வட்டியுடன் 10 ஆண்டு காலத்திற்குள் சுலபத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. இந்தச் சலுகையைப் பெற ஒருவருடைய குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.15,000-க்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டு இதுவரை பின்பற்றப்பட்டு வந்தது.

இந்த வருமான வரம்பு காரணமாகப் பலர் இத்திட்டத்தின் பயனை அடைய முடியாமல் உள்ளதை நடைமுறையில் அரசு கண்டறிந்து, இந்த நிலையைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் மற்றும் இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஆய்வு செய்து, ரூ. 15,000 என அறிவிக்கப்பட்டுள்ள வருமான வரம்பை முழுவதுமாக நீக்கிவிட முடிவுசெய்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இதனால் பலர் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்.

மகளிர் நலம்பெற...

கிறிஸ்தியான் பேட்டை -

காட்பாடிக்கு வடக்கே 5 கி.மீ. தொலைவில் சித்தூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள சிற்றூர். சோலை இயக்கம்' கிறிஸ்தியான் பேட்டையில் அமைந்து, தொண்டினால் முனைந்து தாய்க்குலத்தின் தாழ்நிலையை உயர்த்தி வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்துக்கு ஓர் அணிகலனாக விளங்குகிறது.

இந்திய சமூக வாழ்க்கை மேம்பாட்டு இயக்கம் எனப் பொருள்படும். SOCIAL LIFE ANIMATION INDIA (SOLAI) என வழங்கும் இந்நிறுவனத்தை ஏற்படுத்தி, சிறந்த சமூகத் தொண்டராகப் பணி செய்து வருகிறார், 51 வயது இளைஞர் திரு. ஆர்.டி. இராசன்.

இச் 'சோலை' நிறுவனத்தை - இதன் பணிகளை நேரில் சென்று காண்பவர்கள் இதன் செயல்பாடுகளைப் பார்த்து வியந்து நிற்பர்.

இந்திய வரலாற்றில் இதுவரை ஓரங்கட்டப்பட்டு வாழ்க்கைத் தரத்தில் - மனித உரிமைகளில் உரிய இடத்தைப் பெறாதிருக்கும் சமூகத் தொகுப்புகளான பெண்கள் - தாழ்த்தப்படும் மக்கள்- கிராமத்து ஏழைகள் ஆகிய பிரிவினரின் மேம்பாட்டுக்கென அவர்களோடு உழைப்பதே 'சோலை' இயக்கத்தின் மையக் குறிக்கோளாகும். இதில் குறிப்பாக அடித்தளத்துப் பெண்களின் மேம்பாட்டு முயற்சிகள், முன்னுரிமை இயக்கமாக விளங்குகிறது. ஆம் பெண்களின் அடிமை நிலையை அகற்றவும், ஆண்களோடு சரிநிகர் சமானமாய் சம்பாதித்து உயரவும் சமூகக் கொடுமைகளிலிருந்து மீளவும் சுய கவுரவத்துடன் வாழவும் - இச்'சோலை' நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

1. பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட, வயோதிகத் தாய்மார்கள்

2. சேரிகளில் - கிராமத்துக் குடிசைப் புறங்களில் வாழும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டுள்ள விதவைப் பெண்கள்.

3. கணவனால் கைவிடப்பட்டு வாழ்க்கையை இழந்து - சமூகத்தால் ஓரங்கட்டப்பட்டுள்ள அபலைப் பெண்கள்.

4. வறுமையில் நொடித்து - வாழ்வதற்கே அல்லலப்படும் குடும்பங்களில் உள்ள திருமணமாகாத இளம் பெண்கள்.

மொத்தத்தில் கிராமத்து ஏழைப் பெண்கள் தான் இச்'சோலை' இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்கள். இப் பெண்களில் மிகப் பெரும்பான்மையோர் தாழ்த்தப்பட்டவர் மற்றும் சொந்த இடம் கூட இல்லாமல் அரசு தரிசு நிலங்களில் (புறம்போக்கு) குடியிருப்பவர்கள்.

பணிகள்

60 கிராமப்பள்ளி மையங்கள் வழியாகத் தற்குறித்தனத்தைப் போக்கும் படிப்பறிவுப் பணி.

பெண்களே பொறுப்பேற்று நடத்தும் கிராம நூலக இயக்கம்.

பெண்கள் சக்தியைக் கிராம அளவில் வட்டார அளவில் ஒன்றுபடுத்தி தலைமைத்துவம் விளக்கும் விழிப்புணர்வுப்பணி.

பாலின் அடிப்படையில் நிலவும் அநீதிகளை உணர்ந்து அவற்றை முறியடிக்கும் முயற்சிகள் Gender Junction. வலுவான பெண்கள் சங்க (உமா சங்கம்) அமைப்புகள்.

12 வயது முதல 14 வயது சிறுமிகளுக்குத் தலைமைத்துவப் பயிற்சி.

பெண்கள் வேலைவாய்ப்புக்கான செயல்பாடுகள்.

சோலை இயக்கம் சிறுசிறு தொழில்களின் மூலம் பெண்கள் சம்பாத்தியத்தை முதலில் சாத்தியமாக்குகிறது; 21 வகையான சிறு சிறு தொழில்களைப் பெண்கள் மத்தியிலே ஏற்படுத்தி உள்ளது; இதனால் இவர்கள் பெறும் வருமானம் முதலில் மன நிம்மதியை - மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது; வாழ்க்கையின் கவலைகள் வருமானத்தால் மாற்றம் பெறுகிறது.

ஓர் விதவைப் பெண் இங்கே நுழையும்போது இருக்கிற சோகம் கப்பிய- விரக்தியான முகமும் - மிரட்சியான கண்களும் சிறிது காலத்தில் மழையில் நனைந்த வாடிய பயிர் பசேலென்று துளிர்ப்பது போல் - ஓர் பத்திர உணர்ச்சியை - வாழ்க்கையில் துளிர்ப்பை உணர்கின்றனர்.

அப்படி என்ன தொழில்கள் எவ்வளவு மூலதனம் தேவை?

மூலதனமே தேவையில்லாத வருவாய் தரும் தொழில்கள், சொற்ப மூலதனத்தில் (ரூ.100 முதல் 1000 வரை) நல்ல வருவாய் தரும் தொழில்கள் - இதில்தான் சோலை நிறுவனத்தின் சிறப்பு அடங்கி இருக்கிறது.

மூலதனம் இல்லாமல் வருமானம்

வாழை - கற்றாழை முதலியவைகளில் இருந்து நார் உரித்தல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவரவர் வாழும் இடத்தில் வீணாகும் வாழை மரத்துப்பட்டைகள் அதைச் சேகரித்து அதிலிருந்து உரிக்கப்படும் நார்களை உற்பத்தி செய்யும்

தமிழ்ப் புத்தாண்டில்

பி அண்ட் சி ஆலை

திறக்கப்படும்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 4.2.1992 அன்று பி அண்ட் சி ஆலையைத் திறப்பது குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், நிர்வாகத்தினர், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

வருகிற ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, மூடியுள்ள பி அண்டு சி ஆலையைத் திறக்க இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பி அண்டு சி ஆலையைச் சீரான முறையிலும், இலாபகரமான முறையிலும் நடத்த உரிய திட்டம் வகுப்பதற்கு முத்தரப்புக் குழு ஒன்றை அமைக்க இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

தொழில். தானாக வளர்ந்திருக்கும் கற்றாழையில் இருந்து எடுக்கப்படும் நாருக்குக் கைப்பணம் போடத் தேவையில்லாமல் - வருமானத்திற்கு வழி செய்கிறது

தானாகக் கிடைக்கும் கடல் பாசிகள், சிப்பிகள், அச் சிப்பிகளைக் கொண்டு அலங்கார மணிகள், வாயில் தோரணங்கள், திரைச்சீலை போல் அழகிய கதவுத் தோரணங்கள், சுவர்ச் சித்திரங்கள் எனப் பலப்பல பொருள்கள் செய்யப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதனால் பெறும் வருமானம் பெண்களின் வாழ்க்கையில் நிம்மதியைத் தருகின்றது.

மரப்பிசின்கள், கோந்துகள், அருகம் புல், இயற்கையில் வரப்புகளில் வயல் வெளிகளில் மலை ஓரங்களில் குன்றுகளில் தானாக முளைத்துள்ள துளசி இலை, கீழா நெல்லி, ஆவாரம்பூ, முதலிய இயற்கை மூலிகைகள் சேகரித்தல் சேகரித்த மூலிகைகளைப் பக்குவப்படுத்தல் முதலிய பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த மூலிகைகள் இங்கு விலைக்கு வாங்கப்பட்டு, சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

இலவச அரிய சித்த வைத்திய சிகிச்சை இங்கு நாள்தோறும் நடைபெறுகிறது. ஏழை மக்கள் மற்றும் பொது மக்கள் இங்கு வைத்தியத்திற்கு வருவது நாள்தோறும் அதிகரித்து வருகிறது. இயக்கத்தின் கிராமப் பணியாளர்கள் கிராமங்களிலேயே பாரம்பரிய நல வாழ்வுப் பணியைச் செய்து வருகிறார்கள். இங்கு தயாரிக்கப்படும், 'முடி வளரும் தைலம்', 'முடி உதிர்வதைத் தடுக்கும் தைலம்', சரும வியாதிக்கான சிகிச்சை, நீரிழிவுக்கான தேநீர் சிகிச்சை போன்றவை புகழ் பெற்று வருகின்றன.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் தங்கள், தங்கள் ஊர்களிலேயே வைத்தியம் பார்க்கிறார்கள். மூலிகை வைத்தியத்தில் ரகசியம் என்ற வார்த்தைக்கே இங்கு இடமில்லை.

தேள்கடி, பூரான், வண்டுக்கடி, முதலியவற்றிற்கு உடனடி சிகிச்சை தரச் சோலை இயக்கத்தால் பயிற்சி பெற்ற பெண்கள் தங்கள், தங்கள் பகுதிகளிலேயே ஓரளவு வருமானம், பெற்று இதைத் தொண்டாகச் செய்து வருகிறார்கள்.

ஆண்டு முழுவதும், ஆங்காங்கே ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள், கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு, கிராம மக்களிடையே இதன் மூலம் சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை, கல்வியின் இன்றியமையாமை, நட்பு, உதவி செய்து வாழ்தல், முதலிய நல்ல பண்புகளைத் தங்கள் கலாச்சாரக் குழுக்கள் மூலம் கிராமப்புறங்களில் ஏற்படுத்தி வருகிறது.

முதலீட்டுத் தொழில்கள்

தையல் பயிற்சி, ஆயத்த ஆடை தைத்தல், பூ வேலைப்பாடு முதலியவைகளுக்கு 6 மாதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்கு ஒரு நாளைக்கு ஐம்பது காசு கட்டணம் வாங்கப்படுகிறது. முதலில் இலவசமாகவே இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பயிற்சி பெறுபவர் அக்கறைக் குறைவும், கவனிப்புக் குறைவும் பயிற்சியின் நோக்கத்தை நிறைவேற்ற உதவவில்லை. எனவே, கட்டணம் குறைந்த அளவாகவே வாங்கப்படுகிறது.

இங்கு பயிற்சி பெறும் பெண்கள் ஆயத்த ஆடை நிலையங்களில் இன்று வேலை செய்கின்றனர். தனியாகவும், தொழில் செய்து சம்பாதிக்கின்றனர். இதே போல் 'சோலை அச்சுத் தொழில் பயிற்சி நிலையம்' இங்கு ஆரம்பிக்கப்பட்டுப் பெண்களுக்கு அச்சுத் தொழில் கற்றுத் தரப்படுகிறது. இதற்கும் தற்பொழுது நாளொன்றுக்கு ஐம்பது காசு என்று குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இன்று வேலூரில் உள்ள அச்சகங்களில் பெண்கள் வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களை உருவாக்கியதே இச்சோலை நிறுவனம் எனலாம்.

இங்கே சுகாதாரம், கிராம வைத்தியம், சிறுதொழில்கள் முதலியவைகளைப் பற்றி 20-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் சோலை நிறுவனத்தால் அச்சிட்டு எளிய விலையில் விற்கப்பட்டு வருகிறது.

பழரசம் செய்தல் - பழப்பக்குவம் செய்தல், ஜாம் செய்தல், ஊறுகாய் தயாரித்தல், இங்க், பெனாயில், பற்பொடி முதலிய பொருள்கள் செய்யவும் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

காளான் உற்பத்தி

எல்லாத் தொழில்களுக்கும் சிகரமாக விளங்குவது 'காளான் பயிரிடுதல்' பயிற்சியாகும். 'காளான் வளர்ப்பை' நேரில் கண்டால் யாரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போவார்கள்.

காளான் வளர்ப்புக்கு மற்ற பயிர்களைப் போல் மண், தண்ணீர், தேவையில்லை என்பதுதான் அதிசயம், ஏன்? இதற்காகப் பெரிய இடம்கூடத் தேவைப்படாது. வீட்டுத் தோட்டம் அல்லது குடிசையில் ஒரு பகுதியே காளான் வளர்க்கப் போதுமானதாகும்.

இதற்காகப் பெரிய மூலதனம் தேவைப்படாது, சிறிய பிளாஸ்டிக் உறைகள் - கொஞ்சம் வைக்கோல் ஆகியவை இருந்தால் போதுமானது.

ஒரு ஆர்லிக்ஸ் பாட்டில் அளவுள்ள காளான் விதை 6 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதிலிருந்து காளான் 21 நாளிலேயே கிடைத்து விடுகிறது. முதலீட்டுக்கு 3 மடங்கு அளவு இலாபம் கிடைக்கிறது. 1000 ரூபாய் முதலீட்டில் 3000 ரூபாய் கிடைக்கிறது.

இதற்கு மாதந்தோறும் ஒரு நாள் பயிற்சியும் இது தவிர, 3 மாதப் பயிற்சியும் நடத்தப்படுகிறது. பயிற்சி பெறுபவர்கள் தங்கள் இடங்களிலேயே வளர்த்து அங்கேயே விற்பனை செய்து கொள்ளலாம்.

காளான் உற்பத்தி செய்யும் பெண்கள் ஒன்று சேர்ந்து காட்பாடியில் காளான் விற்பனை நிலையத்தினை (பதிவு) நடத்தி வருகின்றனர். நல்ல முறையில் இலாபகரமாக இயங்கி வருகிறது.

உலகில் ஆங்காங், சீனா, தாய்லாந்து, கொரியா முதலிய நாடுகளில் காளான்தான் உணவில் முதலிடம் வகிக்கிறது. காளானில்தான் அதிக அளவு புரோட்டின் சத்தும் மற்ற உடல் வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்களும் அடங்கியுள்ளன.

இது உணவு மட்டுமல்ல; சர்க்கரை வியாதிக்கும், இரத்த அழுத்த நோய்க்கும் சிறந்த நிவாரண உணவாகவும் விளங்குகிறது. நிறைந்த வலிமைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், காளான் மிகச் சிறந்த உணவாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இது 'சைவ உணவு' என்பதைக் கவனத்தில் பதிப்பது மிக முக்கியம் - ஏனெனில் உணவைப் பற்றிய நமது மக்களின் பார்வையில் பெரிய மாற்றம் தேவைப்படுகிறது. சோலை நிறுவனம் காளான் பயிற்சி மூலம் காட்பாடி, வேலூர் பகுதிகளில் உணவு முறையில் மிகச்சிறந்த புரட்சியை செய்து வருகிறது.

சோலை இயக்கமும் - பெண்கள் முன்னேற்றமும்

சோலை இயக்கம் தன் இருப்பிடத்தில் இருந்தே சேவை செய்யவில்லை. கிராமங்கள் தோறும் சென்று பெண்களைச் சந்தித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு வருவாய்தரும் வழிகாட்டியாக உள்ளது.

காட்பாடி அதன் சுற்றுப்புறங்களில் மட்டும் இதன் சேவை நடைபெறவில்லை. காட்பாடியில் இருந்து சோளிங்கர் வரை சுமார் 200 கிராமங்களில் இது விரிந்து செயல்படுகிறது.

சமுதாய வீணைகள் பெண்கள். அவர்கள் நலம் பெறச் சமுதாயத்தின் புழுதிகளைத் துடைப்பதில் 'சோலை' நிறுவனம் தன்னிகரற்று விளங்குகிறது.

எஸ்.டி. ராஜேந்திரன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
வட ஆர்க்காடு-
அம்பேத்கர் மாவட்டம்.

1992 ஒலிம்பிக்ஸ் போட்டிகள்

1992 ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் ஸ்பெயின் நாட்டில் நடைபெறவிருக்கின்றன 1936-இல் பீப்புள்ஸ் ஒலிம்பிக்ஸ் நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஸ்டேடியம் மற்றும் இதர வசதிகள் அங்கு ஏற்கெனவே இருப்பதால், 1992 ஒலிம்பிக்ஸை நடத்த அந்த நாட்டுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

ஸ்பெயின் நாட்டின் கடற்கரையையொட்டிய சிறு குன்றின் உச்சியில் உள்ள பழைய ஸ்டேடியம் ஒலிம்பிக் விளையாட்டுக்காகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவும், நிறைவு விழாவும் இங்கே நடைபெறும். அதன் அருகிலேயே 17,000 பேர் அமரக்கூடிய வகையில் புதிய அரசாங்கம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. பலவிதமான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான 44 நிலைக்களன்கள் இங்கு தயார் நிலையில் உள்ளன.

உபயோகமற்ற பழைய தொழிற்சாலைகளும், கிடங்குகளும் அமைந்துள்ள பகுதியை முற்றிலுமாக நவீனமயமாக்கி, விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான ''ஒலிம்பிக் கிராமம்'' உருவாக்கப்பட்டுள்ளது. கடற்கரையையொட்டி அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் சுமார் இருபதாயிரம் 'அபார்ட்மெண்ட்'கள் கட்டப்பட்டுள்ளன.

ஒலிம்பிக்ஸ் சமயத்தில் நகருக்குள் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, புறநகர்ப் பகுதியில் சுமார் 44 கி.மீட்டர் அளவுக்குப் புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. சுரங்கங்களில் இயங்கும் கன்வேயர் பெல்ட் போல 14,000 மக்களை இடம் விட்டு இடம் அழைத்துப் போகும் பிரம்மாண்டமான திறந்தவெளி எஸ்கலேட்டர்கள் ஸ்டேடியத்தை நோக்கிப் போய் வந்த வண்ணமிருக்கும்.

உலகெங்கிலுமிருந்து சுமார் 4 இலட்சத்திற்கும், அதிகமான பேர் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நேரில் பார்க்க வருவார்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் தங்குவதற்காக ஓட்டல்களிலும், தனியார் வீடுகளிலும் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

ஒலிம்பிக்ஸ் போட்டியின் ஆரம்ப தின விழா டிக்கெட் கட்டணம் 400 டாலர். இதர நிகழ்ச்சி டிக்கெட்டுக்கள் 27 டாலருக்குக் கிடைக்கும். ஸ்பானிஷ் நகர மக்களுக்கு மட்டும் 80 சதவிகிதம் டிக்கெட்டுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸின் சின்னம் 'கோபி' என்ற நவீன தோற்றமுடைய நாய்க்குட்டி.

—நன்றி: 'கல்கி'

வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்

HTA 7343

ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றிட அயராது பாடுபடுவோம்!

மாண்புமிகு முதல்வர் உரை:

வாழ்நாளெல்லாம் தொண்டு செய்து, பழுத்த தந்தை பெரியாரைப் போற்றுகிற தமிழக மக்களால்; வாழ்நாள் முடியும் வரை மக்களுக்கு உழைத்த பேரறிஞர் அண்ணாவைப் பூஜிக்கிற தமிழக மக்களால்; 'இறந்தும் மக்கள் மனதில் இறவாமல் வாழுகிற புரட்சித் தலைவரின் புகழ் பாடுகிற தமிழக மக்களால், தங்கள் சகோதரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன்; மக்கள் ஆதரவு பெற்ற ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளராக, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளேன்; இந்த மாநிலத்தின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதி, எனப் பொறுப்பில் அமர்த்தப்பட்டுள்ளேன். எனவே, அந்த மக்களுக்கு வாழ்வளிக்கிற வழிகளை, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற பணியினை, அவர்களது எதிர்காலத்திற்கு உத்தரவாதம் வழங்குகிற முயற்சியினை, எவர் தடுத்து நிறுத்த முயன்றாலும், அவர்களை, அவர்களது எதிர்ப்பை, உடைத்தெறியத் தயங்கமாட்டேன் என்பதை இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

கர்நாடக வெறியர்களின் வன்முறை காரணமாக, தமிழகத்திற்கு ஓடி வந்த தமிழ்ச் சகோதர சகோதரிகளுடைய நிலைமைகளைச் சரி செய்யவும், அவர்கள் திரும்ப கர்நாடகத்தில் வாழ்வதற்கு வழிவகை செய்யவும், நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். மேலும் அவர்கள் இழந்த சொத்துக்களுக்குரிய நஷ்ட ஈட்டினைப் பெற்றுத் தருவதினையும், அவர்களுக்குத்தொடர்ந்து பாதுகாப்பினை வழங்குகிற பணியினையும், நாம் மேற்கொண்டு வருகிறோம்.

★ ★ ★

மதுவை விலக்கி மனித இனத்தைக் காக்க, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த உடனே, மலிவு விலை மதுவை ஒழித்த மகத்தான சாதனையை இம் மாமன்றம் நன்கறியும். இவ்வாறு செய்வதன் மூலம் அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நட்டம் என்றாலும்கூட, அதைப் பொருட்படுத்தாது மக்கள் நலமே எங்களின் முன்னுரிமையாக இருந்தது. மலிவு மதுவை ஒழித்த சூட்டோடு சூடாக, கள்ளச் சாராயம் கரைபுரண்டு ஓடும் என்று எதிர்பார்த்தார்கள். ஏசினார்கள். பேசினார்கள். இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், கள்ளச் சாராயம் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், சிலர் இல்லை, இல்லை, தாராளமாகக் கிடைக்கிறது; அண்டை மாநிலத்திலிருந்து வருகிறது; ஏராளமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், எதார்த்தமாகப் பேச விரும்புகிறேன். கள்ளச் சாராயம் முழுக்க முழுக்க ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதைவிட, பெருவாரியாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதே உண்மை. அங்கும் இங்கும், சிற்சில இடங்களில் கள்ளச் சாராய நடமாட்டம் இருக்கிறது; இருக்கக்கூடும் என்பதை உணர்கிறேன். இது எப்பாடுபட்டாவது முழுவதும் ஒழிக்கப்படவேண்டும்; தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு துடிப்பாக இருக்கிறது. இதற்கென நியமிக்கப்பட்ட மதுவிலக்குப் பிரிவுக்

சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் (7.2.92)

காவல் துறையினர் முடுக்கிவிடப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியாளர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் தக்க வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மதுவிலக்கை அமலாக்குவதில் தீவிரம் காட்டிச் செயல்படுத்தும் அதே நேரத்தில், குடிப்பது தீது, அது குடியையே கெடுத்துவிடும் என்ற சித்தாந்தத்தைத் தீவிரப்படுத்த, மாநில மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரச்சாரக் குழு, என் தலைமையில் கூடி, அரும்பெரும் ஆலோசனைகளைத் தந்துள்ளது. அவை செயல் வடிவம் பெற்று வருகின்றன. இதற்கெனத் தரமான நாடகம், திரைப்படம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன். குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களை, அக்கொடிய பழக்கத்திலிருந்து விடுவிக்கும் மையங்களை நிர்மாணிக்கவும் தீர்மானித்துள்ளோம். சுருங்கக் கூறின் இத்திட்டம் நிறைவேற, மக்கள் ஒத்துழைப்பும், ஈடுபாடும் வெகுவாகத் தேவை.

★ ★ ★

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் தமிழ்நாட்டுக் கடலோரப் பகுதிகளில் கண்காணிப்போ, கட்டுப்பாடோ இன்றி, வெகு சாதாரணமாகத் தங்களது சட்ட விரோத, வன்முறைச் செயல்கள், மற்றும் கள்ளக்கடத்தலை நடத்திக் கொண்டிருப்பதை உணர்ந்த இவ்வரசு, இதற்கு ஒரு முடிவு கட்டும் வகையில், இவ்வரசு பதவி ஏற்ற நாள் முதல் பல்வேறு தீவிர மற்றும் திடமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, முதன் முதலில் இந்தியக் கடற்படை (Navy) மற்றும் கடலோரப் பாதுகாப்புப் படையினரின் (Coast Guard) உதவியுடன், கடலில் ரோந்துப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. தமிழக மீனவர்கள் உட்பட எவரும் கடலில் இந்திய எல்லையைத் தாண்டிச் செல்வதும், ஊடுருவல் புரிவதும், இனியும் இயலாது என்ற அளவில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளில், இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் நடமாட்டம் புரிவதைக், கண்டுபிடித்து ஒடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வடையாள அட்டைகள் இல்லாத மீனவர்கள், கப்பற்படை மற்றும் கடலோரக் காவல் படையினரால் பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்படும் முறை செயல்பாட்டில் உள்ளது. மேலும், அந்நியரின் படகோ, அல்லது விசைப்படகோ நடமாடுவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக மீனவர்களின் படகுகளுக்கு வரிசை எண் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு எண் பொறிக்கப்படாமல் நடமாடும் படகுகள், இனம் கண்டு கொள்ளப்பட்டுப் பறிமுதல் செய்யப்படுகின்றன.

★ ★ ★

தற்போது தமிழ்நாட்டில் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற அளவில் உள்ளது. அதே நேரத்தில் மத்திய அரசு நமக்கு வழங்கக்கூடிய அரிசியின் விலையும், இதர மாநிலங்களில் உள்ள விநியோக விலையும் பின்வருமாறு அமைந்துள்ளது:- கிலோ ஒன்றுக்கு ரூ.

மத்திய அரசு விலை	... 3.77
ஆந்திரப்பிரதேசத்தில் விற்கப்படுகிற விலை	... 3.50
கர்நாடகத்தில் விற்கப்படுகிற விலை	... 3.50
கேரளத்தில் விற்கப்படுகின்ற விலை	... 3.15
மேற்கு வங்காளத்தில் விற்கப்படுகின்ற விலை	... 4.61
ஒரிஸ்ஸாவில் விற்கப்படுகின்ற விலை	... 4.32

அனைத்து மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தோம் என்றால், தமிழ்நாட்டில்தான் சாதாரண ரக அரிசி விலை மிகக் குறைந்த அளவான கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று விநியோகம் செய்யப்படுகின்றது. இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், தமிழக அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காட்டிய பாதையில், அதாவது சாதாரண ரக அரிசியின் விலையை உயர்த்தக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில், தொடர்ந்து சாதாரண ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்று நிர்ணயித்துள்ளது.

எங்களுடைய ஆட்சியிலும், சாதாரண ரக அரிசியின் விலை தொடர்ந்து ரூ.2 என்ற வகையிலே எந்தவித மாற்றமும் இல்லாமல், பொது விநியோக முறை மூலம் வழங்கி வருகிறோம். சன்னம், மிகச்சன்ன ரக அரிசி விலையைப் பொறுத்த வரையில், மத்திய அரசு வெளியீட்டு விலையை உயர்த்தியுள்ளதனால், வேறு வழி இல்லாமல் அந்த ரக அரிசி விலையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

தமிழக அரசுதான் இந்தியாவிலேயே முன்னோடியாக ஒரு சிறப்பான முயற்சி எடுத்து, 18,000 டன் பாமாயில் வெளிநாட்டிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. இதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஒதுக்க இயலாது என்ற ஒரு பிரச்சினையையும் கடந்து, அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான ஒரு சிறப்பான முயற்சியை ஏற்படுத்திக் கொடுத்து, 12,000 டன் பாமாயிலை மலேசியாவிலிருந்து பெற்று அது விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6,000 டன் பாமாயில் வெகுவிரைவில் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படும். உள்ளபடியே வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு சிறப்பான முயற்சி எடுக்கப்படவில்லை.

மேலும் தமிழக அரசு நேரடியாக இறக்குமதி செய்துள்ள பாமாயில் விலையை, கிலோ ஒன்றுக்கு ரூ.22.50 என்று நிர்ணயித்து விநியோகம் செய்துள்ளது. மத்திய அரசு தொகுப்பிலிருந்து நிர்ணயித்துள்ள விலை, கிலோ ஒன்றுக்கு ரூ.25 என்று இருக்கின்றது.

★ ★ ★

இந்த அரசு பொறுப்பேற்ற பொழுது, தமிழகத்தில் இருந்த சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக சோதனை மிகுந்த கடுமையான நிதி நெருக்கடியை, இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. துவக்கத்திலேயே சுமார் ரூ.898 கோடி பற்றாக்குறையை இவ்வரசு ஏற்க வேண்டியிருந்தது. ஏழை எளியவர்களின் இலட்சோப இலட்சம் இல்லங்களில் ஒளியேற்றி, தாய்மார்களின் துன்பங்களைத் துடைக்கும் நேரத்தில், வருமானம் தந்து கொண்டிருந்த மலிவு விலை மதுக்கடைகளை மூடிவிட்டோம். இதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.322 கோடி ஆகும். ஆக மொத்தம் ரூ.1,600 கோடி ஆண்டுத் திட்டத்திற்கு, ரூ.1,220 கோடி பற்றாக்குறையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதன் பிறகு பல நிதி ஆதாரங்களைத் திரட்ட சிறந்த முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. வணிகவரித் துறையில் கூடுதல் நிதி திரட்டுதல், கள்ளச் சாராய ஒழிப்பினால் IMFS மீது கூடுதல் ஆயத் தீர்வை, மற்றும் விற்பனை வரி பெறுதல், செம்மையான வரி வசூல் செய்தல், சிறுசேமிப்பில் கணிசமான முன்னேற்றம் அடைதல், போன்ற பல்வேறு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டது. அதே நேரத்தில் நட்டத்தைத் தடுக்கும் முயற்சியாக, தவிர்க்க முடியாத சில நடவடிக்கைகளான மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது, பேருந்துக் கட்டணத்தைச் சற்று உயர்த்துவது, போன்றவற்றை செயல்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், நடப்பாண்டில் ரூ.1,600 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை, இந்த அரசு முழுமையாக வெற்றிகரமாகச் செயல்படுத்தும் என்பதை, நான் இங்கே திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

சிலர் விமர்சிப்பதுபோல, தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களின் மீது அக்கறை இன்றி இந்த அரசு செயல்படுவதாக இருந்தால், இந்த அரசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த திட்ட ஒதுக்கீடான ரூ.1,600 கோடியை, செயல்படுத்த இயலாது என்று முதற் கட்டத்திலேயே கைவிட்டு இருக்கலாம். இந்த முறையைத்தான் முன்பு இருந்த ஆட்சி 1988-89-இல் செய்தது. குடியரசுத் தலைவர் ஆட்சியில், ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.1,457 கோடி என்று திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனைச் செயல்படுத்த இயலாது என்று கூறி, ரூ.1,457 கோடி என்ற திட்ட ஒதுக்கீட்டினை, ரூ.1,202 கோடி என்று முன்பு இருந்த ஆட்சி மாற்றிக் கொண்டது. இதனை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், நாங்களும் மிகச் சுலபமாக ரூ.1,600 கோடி என்ற நடப்பாண்டின் திட்ட ஒதுக்கீட்டினை, ரூ.1,400 கோடி என்று குறைத்துக் கொண்டு, வரும் ஆண்டில் ஒரு உயர்வு காண்பிப்பதுபோல், ஒரு கண் துடைப்பு வேலையைச் செய்திருக்கலாம். ஆனால் இந்த அவையிலும் சரி, மக்கள் மத்தியிலும் சரி, உண்மையான நிலையை மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என நான் விரும்புகிறேன். அதைத்தான் மக்களும்

என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். எனவே கண் துடைப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் ஒத்துக் கொள்ளப்பட்ட ஆண்டுத் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த, அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்திருக்கிறோம். ரூ.1,600 கோடி என்ற ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை முழுமையாகச் செயல்படுத்த, இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என்பதை, நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

★ ★ ★

இந்த அரசு கடுமையான நிதி நெருக்கடியிலும், விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு இலவசமாக வழங்கக்கூடிய மின்சாரத்தின் வாயிலாக ஏற்படும் நிதிச் சுமையை ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சுமார் 4,000 மில்லியன் யூனிட் மின்சாரம் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றது. இதனால் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.560 கோடி நிதிச்சுமை ஏற்படுகின்றது. தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் இயங்கி இதனை ஓரளவிற்கு ஈடுகட்டினாலும், நிகரமாக மாநில அரசு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.350 கோடி மானியமாக வழங்குவதுடன், மாநில அரசுக்கு மின்சார வாரியத்திடமிருந்து வந்து சேர வேண்டிய ரூ. 100 கோடி வட்டியையும் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. கடுமையான நிதி நெருக்கடியிலும் இதனைக் குறைக்காமல், இந்த அரசு தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு ஏற்றுக் கொண்டு வருகின்றது.

★ ★ ★

நெல் உற்பத்தியாளர்களுக்கு, மத்திய அரசு பரிந்துரைத்த கொள்முதல் விலையை, இந்த அரசு வழங்கி வருகிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் நெல் கொள்முதல் விலை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.25 என்று உயர்த்தப்பட்டது. சாதாரண ரக

நெல்லின் கொள்முதல் விலை, குவிண்டால ஒன்றுக்கு ரூ.205-இல் இருந்து ரூ.230-ஆக நிர்ணயித்தது. அதேபோல் சன்ன ரகத்திற்கு ரூ.215- லிருந்து ரூ.240 ஆகவும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ.225-லிருந்து ரூ.250 ஆகவும் உயர்த் தியது. இந்த விலையை முழுமையாக வழங்கு வதோடு, ஊக்கத்தொகையாக, குவிண்டால் ஒன் றுக்கு ரூ.35 கூடுதலாக இந்த அரசு வழங்கி யுள்ளது. எனவே நெல் உற்பத்தியாளர்களுக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு, மிக அதிக மான விலையை இந்த அரசு வழங்கி வருகிறது.

* * *

கிராமப்புறங்களில் உள்ள நிலமற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மக்கள் ஆகியோருக்கு, 1992 பொங்கல் திரு நாளை முன்னிட்டு இலவச சேலை, வேட்டி வழங்க அரசு ஆணை பிறப்பித்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தேவைப் பட்டியலை ஒட்டி, வருவாய்த் துறை ஆணையர் இத்திட்டத்தினை நிறைவேற்ற, 56,94,681 சேலைகளும், 58,41,551 வேட்டிகளும் தேவை எனக் கூறியுள்ளார். இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.42 கோடி.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் இவ்வாண்டில் தொடங்கப் பெற்று, 1992-ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற இருக்கிறது. அனைத்துப் பணிகளும், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நிறைவேற்றுவதற்குரிய முறையில், ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு ரூ.387.24 கோடி ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக, ரூ.194.62 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்குப் போதிய நிதியை உரிய நேரத்தில் அரசு வழங்கும்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், 7 முக்கிய அம்சங்கள் உள்ளன. சாலைகளின் தரத்தை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங் களை மேம்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத் தல், குடிநீர் வசதி செய்தல், தொடக்கப் பள்ளி களுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கும் கட்டடங்கள் கட்டுதல், மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் இத்திட்டத்தில் அடங்கும்.

* * *

சென்னை மாநகருக்கு ஒவ்வொரு ஆண்டும் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்குத், தீர்வுகாணுகிற முயற்சிகளின் தொடர்ச்சியாக, 11.1.1992 அன்று ஐதராபாத்தில் ஆந்திரப் பிரதேச மாநில முதல்வருக்கும் எனக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில், தெலுங்கு கங்கைத் திட்டம் செயல்படுத்துவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் 1995-ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பாசன வசதி அளிக்கவும், சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கவும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறிய இலக்கினை எட்ட, தமிழக அரசு தன் பங்கிற்கேற்ப போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும், ஆந்திர மாநிலம் இத்திட்டத்திற்கான முக்கிய பாகப் பணிகளை மேற்கொண்டு முடிக்கும் பொருட்டு, போதிய நிதி ஒதுக்கீடு செய்யும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. தற்பொழுது நிலவி வரும் விலைப் பட்டியலின்படி, இத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்றி முடிக்க நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்தின் முக்கிய பணி களை மட்டும் மேற்கொண்டு முடிக்க, போதிய கவனம் செலுத்தப்படும் என்றும் ஒத்துக்கொள்ளப் பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டுக்குள், தெலுங்கு கங்கைத் திட்டத்தை முழுமையாக நிறை வேற்றி முடிப்பதற்குத் தேவையான நிதி, திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கும் மேலாகத் தேவைப்படுவதால், கூடுதல் நிதியைப் பெறும் பொருட்டு, வெளிநாடுகளில் வாழுகின்ற இந்தியர் களை இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் பங்கு பெறுவதற்கென அழைப்பதற்கு, இரு மாநில அரசு களும் எல்லாவித முயற்சிகளும் மேற்கொள்ளும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பொழுது ஏற்படும் சிக்கல்களை, சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு, இரு மாநில அலுவலர்களிடையே அடிக்கடி கூட்டங்கள் கூட்டப்பட்டு, இத்திட்ட முன்னேற்றத்தைக் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும். இரு மாநில அரசு அலுவலர்களாலும் ஒரு செயல் திட்டம் (Action Plan) வகுக்கப்பட வேண்டுமென்றும், அச்செயல்

திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

* * *

* தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு தனி நிதி கடந்த ஆண்டு துவக்கப்பட்டது. இந்த நிதி ஒவ் வொரு தொழிலாளர்க்கு ரூ.2 என்று தொழில் நிறுவனத்திடமிருந்தும், அரசு தரப்பில் ரூ.2-ம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியைப் பயன்படுத்தி, தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதியும், விளையாட்டு மையங்களும் ஏற்படுத்துவதற்கு வழி செய்யப்படுகிறது. இதனைக் கண்காணிக்க அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சி தலைவரின் பொறுப்பில் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன.

ஆடிப்பாடி விளையாட வேண்டிய பருவத் தில், வறுமையினால் வேலைக்கு செல்ல வேண் டிய சூழ்நிலையை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு நாம் சட்ட ரீதியான அணுகு முறையைப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில், வறுமை யினால் ஏற்படக் கூடிய நிலைமையை தவிர்க்க, நாம் வேறு சில நடவடிக்கைகளும் எடுக்க வேண் டிய அவசியம் இருக்கிறது. இதனால்தான் தீப் பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கு உதவும் வகையில், இந்த நிதியை வலுப்படுத்த நாம் முடிவு எடுத்துள்ளோம். எனவே, ஆண்டுதோறும் ஒவ்வொரு தொழி லாளர்க்கும் ரூ.2 என்ற அடிப்படையில் வழங்கப் படும் தொகையை, இந்த அரசு ரூ.10-ஆக உயர்த்த முடிவு செய்துள்ளது. அதேபோல் தொழில் நிறுவனங்களும் அவர்கள் தரப்பில் ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் ஆண்டுதோறும் ரூ.10 வழங்க வேண்டும். மேலும், தற்போது இந்தத் திட்டம் தீப்பெட்டித் தொழிலுக்கு மட்டும் தான் பொருந்தும். இனிமேல், பட்டாசுத் தொழி லில் ஈடுபட்டிருக்கும் இளம் தொழிலாளர்களுக்கும் இதனை வழங்க முடிவு செய்துள்ளோம்.

* ஆளுநர் உரையில் ஆரம்பக் கல்விக்கு சிறப் பான முன்னேற்றம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தற்போதுள்ள ஓராசிரியர் பள்ளி களில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை உடனடி யாகச் செயல்படுத்த இருக்கின்றோம். இது மட்டு மல்லாமல், ஆரம்பக் கல்வியில் மேலும் சிறப்பான முன்னேற்றம் காணவேண்டும் என்ற நோக்கத் துடன், ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றைத் தயாரித் துள்ளோம். இந்தத் திட்டத்தில் 2 ஆசிரியர்கள் இருக்கக்கூடிய ஆரம்பப் பள்ளிகளில் மூன்றாவது ஆசிரியரை நியமிப்பதற்கு வழிவகை செய்யப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.62.47 கோடியாகும். இந்தத் திட்டம் மத்திய அரசின் உதவி பெற்று விரைவில் செயல் படுத்தப்படும்.

* * *

தமிழக அரசு ஆதரவற்ற முதியோர்களுக்கும், விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், வேளாண்மைத் தொழிலாளர் களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும், மாதந் தோறும் ரூ.50 உதவித் தொகை தற்போது வழங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் 5.15 இலட்சம் பேர் பயனடைந்து வருகின்றனர். எங்கள் திட்டங்களில் மனிதாபிமானத்தின் வெளிப்பாடு மகத்தான பங்கு வகிக்கிறது. முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோருக்கு, வாரந்தோறும் அரிசி வழங்கும் திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டது. ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற உடன், முதியோர் ஓய்வு ஊதியம் பெறுவோர் அனை வருக்கும், ஒவ்வொரு வாரமும் அரிசி வழங்கும் திட்டத்தை மீண்டும், 15.9.91 முதல் அமலுக்கு கொண்டு வந்துள்ளோம். முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு, தற்போதைய விலைவாசி உயர் வினைக்கருத்தில் கொண்டு, மேலும் சிறிது உதவும் நோக்கத்தோடு அவர்களுக்குத்தற்போது வழங்கப் படும் ஓய்வூதியமான ரூ.50-,' ரூ.75-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 15.45 கோடி கூடுதல் செலவு ஆகும்.

* * *

ஓய்வூதியம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்படா வண்ணம், இந்த அரசு கவனித்துக் கொள்ளும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள 19.509 நபர்களுக்கு, உடனடியாக ஓய்வூதியம் வழங்க இந்த அரசு ஆணையிடுகின்றது. இதற்காக ஆண்டொன் றுக்கு ரூபாய் 1.76 கோடி கூடுதல் செலவு ஆகும். இதன்படி தமிழகத்தில் 5.35 இலட்சம் பேர் இத்திட்டத்தின் கீழ் இனிப் பயனடைவர்.

* * *

கிராமப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்து, கூடுதல் வருமானம்

பெறுவதன் மூலம், இந்த விலை உயர்வினை ஏழைத் தொழிலாளர்கள் சந்திக்க உதவும் என்ற வகையில், 'தமிழக அரசு வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்' என்ற புதிய திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படும். முதல்கட்டமாக, தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகி வரும் மாவட்டங்களாகிய தருமபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள நிலமற்ற ஆண் மற்றும் பெண் விவசாயத் தொழிலாளர்கள், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் தங்களுடைய பெயர்களைப்பதிவு செய்து கொள்ள வேண்டும். அதன் பின் அந்த ஊராட்சி ஒன்றியத்தில் பரவலாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பணிகள் உருவாக்கிச் செயல்படுத்தப்படும். இப்பணிகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் வரம்புக்கு உட்பட்டு, மாவட்ட அளவில் கண்காணிக்கப்படும். குளங்கள் வெட்டுதல், ஏரிகளை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைச் சீர்படுத்துதல், வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், சமூக நலக் காடுகளை வளர்த்தல், சாலை வசதிகளை மேம்படுத்துதல், போன்ற பல்வேறு நலப்பணிகள் இதில் அடங்கும். இப்பணிகளில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு, அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியமான ரூ.14 நாளொன்றுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

★ ★ ★

அண்மையில் துவக்கப்பட்டுள்ள தமிழக அரசின் புதிய மருத்துவ நலத் திட்டத்தின் மூலமாக, தொடர்ந்து போதுமான அளவு மருந்துகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1000 மருத்துவ முகாம்கள் இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்டுள்ளன. அதில் 5 இலட்சத்திற்கும் அதிகமான பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்- இந்தத் திட்டம் முழுமையடைகின்றபொழுது, கிட்டத்தட்ட 50 இலட்சம் பேர் இதன்மூலம் பயனடைவார்கள். இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெற, அனைத்துத் தொண்டு நிறுவனங்கள், மருந்து தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், வணிகர்கள் போன்றவர்கள், தங்கள் முழு ஒத்துழைப்பினை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★

சத்துணவு மையங்களில் தற்போது 2 வயதிலிருந்து 6 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகின்றது. இப்பொழுது, இத்திட்டத்துடன் சத்துணவு மையங்களில், 6 மாதத்திலிருந்து 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், ஊட்டச் சத்து வழங்குவதற்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலுட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கும், ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மருத்துவ வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த திட்டம் 11 மாவட்டங்களில் விரிவாக்கப்பட்டு உள்ளது. மேலும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மகிழ்ச்சிகரமான அறிவிப்பு ஒன்றை வெளியிட விரும்புகிறேன். இந்தத் திட்டம் படிப்படியாக, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விரிவாக்கப்படுமென்று அறிவிக்கின்றேன்.

இந்தத் திட்டம் முழுமையாக விரிவாக்கப்படும் கட்டத்தில், மொத்தம் சுமார் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச் சத்து வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும். மேலும் சுமார் 7 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து வழங்கப்படும். கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதால், மேலும் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 2 கோடி கூடுதல் செலவு ஆகும்.

இந்தத் திட்டம், உடனடியாக தர்மபுரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படும். இத்திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 8,000 கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும், ' சுமார், 30,000 சிறு குழந்தைகளும் ஆண்டுதோறும் பயன்பெறுவார்கள். இதற்கு ஆண்டுக்கு ஆகும் செலவு ரூ. 3 கோடியாகும்.

★ ★ ★

கும்பகோணத்தில் உள்ள சிவாலயங்கள், வைணவத் திருக்கோயில்கள் ஆகியவற்றைப்புதுப்பிக்கும் பணிக்காக, ரூ.46.28 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டது. மகாமகம் திருவிழாவில் பங்குகொள்ள வரும் பக்தர்களுக்கு, செய்ய வேண்டிய வசதிகளுக்காக கும்பகோணம் நகராட்சிக்கும், பொது சுகாதாரத்துறை, மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் உள்ள தெருக்கள், சாலைகள் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி அமைத்தல், பாலங்கள், வாய்க்கால்களைச் சீரமைத்தல், மகாமகம் குளத்தைச் சீரமைத்தல் போன்ற பணிகளுக்கு, ரூபாய் 67.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கழிப்பிட, துப்புரவு வசதிகளைச் செய்ய, பொதுச் சுகாதாரத் துறைக்கு ரூபாய் 48 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தைச் சுற்றியுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்த ரூபாய் 126 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கும்பகோணம் கிராமப்புறக்கூட்டுறவு மின்னமைப்பிற்கு ரூபாய் 6.5 இலட்சம் மானியமாக வழங்க மின்வாரியத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பக்தர்கள் பாதுகாப்போடு. இந்த விழாவில் கலந்து கொள்ள, சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 12,000 காவலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அதுமட்டும் அல்லாது மகாமகத்தை முன்னிட்டு, செய்தி மற்றும் சுற்றுலாத்துறையின் மூலமாக, மிகப்பெரிய கண்காட்சியும், இசை மற்றும் நாட்டிய விழாவும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு, ஒரு பெண் குழந்தை அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால், அவர்களுக்கு ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். அவர்கள் இனிமேல், அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பிறகு, உடனடியாக அவர்கள் பெண் குழந்தையின் பெயரில் ரூ.2,000 வழங்கப்பட்டு, ஒரு வைப்பு நிதி துவக்கப்படும். இதில் சேரக்கூடிய தொகையை அந்தப் பெண் குழந்தையின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தப்படும். குறிப்பாக மேல்படிப்புக்கு உதவும் வகையில் தொகைகள் தொடர்ந்து வழங்கப்படும். அந்தப் பெண் 20 வயது அடையும் பொழுது, அதாவது பெண் குடும்ப வாழ்க்கையைத் துவங்கும்பொழுது, அல்லது பட்ட மேற்படிப்பு மேற்கொள்ளும்போது, ரூபாய் பத்தாயிரம் வழங்கப்படும். இதனால் ஆண்டுதோறும் இருபதாயிரம் தாய்மார்கள் பயன்பெறுவார்கள். மேலும் ஆண்டுதோறும் இருபதாயிரம் பெண் குழந்தைகள், வாழ்க்கையில் நம்பிக்கையுடன் காலெடுத்து வைக்க, இந்த அரசு உறுதியாக வாய்ப்பு அளிக்கும். இதற்காக ஆண்டுதோறும் ரூபாய் 4 கோடி செலவாகும். இந்தத் திட்டம் 'பெண்களின் கல்விக்கு'. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் வழிவகை செய்வதில் ஒரு முன்னோடித் திட்டமாக அமையும்.



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி Lyndon Johnson தெரிவித்த ஒரு கருத்துத்தான் என் நினைவிற்கு வருகிறது. 'They never see the good but only the bad. Even if I walk across the river these people would say that I don't know how to swim.' அதாவது சிலர் குற்றம் காண்பதிலேயே குறியாக இருப்பார்கள். நடக்கின்ற நல்லவற்றை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள். நான் தண்ணீர் மீது நடந்து ஆற்றை கடந்து சென்றாலும், அவர்கள், இவருக்கு நீச்சலே தெரியாது என்றுதான் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர்களுக்காக இல்லை என்றாலும், இந்நாட்டுக்கும், இந்நாட்டின் நலன் நாடும் பல நல்லவர்களுக்காகவும், இந்த விளக்கங்களைத் தெரிவித்துள்ளேன். ●

கும்பகோணம் மகாமகத் திருவிழா

கும்பகோணத்தில் வருகிற பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவிற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் ஏற்பாடுகள் குறித்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.1.92 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு அமைச்சர்களுடனும், அரசு அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினார். இவ்விழாவினை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மகாமகத் திருவிழாவினையொட்டிச் சாலைப் பராமரிப்பு, மின்வசதி, சுகாதாரப் பணிகள், குடிநீர் போன்ற வசதிகளை மேற்கொள்ள ரூ. 85 இலட்சம் வழங்கவும், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள மகாமகம் விழாவிற்கு நேரிடையாகத் தொடர்புள்ள 12 சைவக் கோயில்கள் மற்றும் 7 வைணவக் கோயில்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்புக்காக ரூ. 40 இலட்சம் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்

மேலும், மகாமகத் திருவிழாவினையொட்டி, திருவிழாவிற்கு 10 நாட்களுக்கு முன்னதாக, செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ஒரு பொருட்காட்சியும், சுற்றுலாத்துறையின் சார்பில் பிரபல நடனக் கலைஞர்கள் பங்கேற்கும் நாட்டிய விழாவும் தொடங்கப்பட்டு, மகாமகத் திருவிழா முடியும்வரை நடைபெறும்.



சட்டப்பேரவையில்...

- 29.1.1992 முதல் 10.2.1992 வரை நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட பல முக்கிய அறிவிப்புகளில் சில இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

★ 'ஒரு மகிழ்ச்சியான செய்தி; தமிழகத் திட்டங்களுக்குக் கூடுதல் தொகை ஒதுக்க வேண்டும் என்ற நமது கோரிக்கையைத் திட்டக்குழு ஏற்றுக்கொண்டது. இதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொகையுடன் ரூ.265 கோடி அதிகரிக்கப்பட்டு, ரூ. 1,751 கோடி ஒதுக்கப்படும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் (6.2.1992) அன்று சட்டமன்றத்தில், உறுப்பினர்களின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே அறிவித்தார்.

★ 'ஆதிதிராவிடர் நலன் பற்றிய வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் பெஞ்ச் அமைப்பது பற்றி விரைவில் தமிழக அரசு முடிவுசெய்யும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேதகு ஆளுநர் உரைமீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார் (7.2.92)

★ 'கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு விரைவில் நிறைவேற்றும்' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார் (7.2.92).

★ 'கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம் திருவிழாவை முன்னிட்டு, அங்கு உள்ள கோயில்களைப் புதுப்பிக்க அரசு ரூ. 46 இலட்சம் வழங்கியுள்ளது' என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார் (7.2.92).

★ 'முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்குத் தற்போதைய விலைவாசியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூ.50-லிருந்து ரூ.75-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.15.45 கோடி கூடுதல் செலவாகும். காத்திருப்போர் பட்டியலில் உள்ள 19,509 பேர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்கப்படும்; இதற்கு ரூ.1.76 கோடி கூடுதல் செலவாகும்' என்று (7.2.92) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

★ 'மாநில சட்டக் கமிஷன் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவில் அமைப்பார்' என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்தார் (10.2.92).

★ 'கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் பற்றி எழுத்து மூலம் தகவல்கொடுத்தால் அதுகுறித்து அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்' என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தெரிவித்தார் (31.1.92).

★ 'சத்துணவுத் திட்டம் புதிய வளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற அக்கறை மிகக் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், குழந்தைகள் காப்பகத்தில் உள்ள பிள்ளைகளுக்கு நாள்தோறும் காலை 10 மணி முதல் 11 மணி வரை விளையாட்டு மூலமாக (அவுட்டோர் கேம்ஸ்) உடற்பயிற்சி அளிக்க ஆணையிட்டுள்ளார்' என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் தெரிவித்தார் (1.2.92).

★ 'சென்னையில், 10 மாத காலமாகப் பல்வேறு கார்ணங்களால் மூடப்பட்டுள்ள 'பி அண்ட் சி மில்' மீண்டும் திறக்கப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டது; இது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள முடிவின்படி வரும் தமிழ்ப் புத்தாண்டு நாளன்று (ஏப்ரல் - 13), 'பி அண்ட் சி மில்' திறக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார் (4.2.92).

★ 'ஒரு இலட்சம் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் உன்னதத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது; உடல் ஊனமுற்ற தாழ்த்தப்பட்ட பெண்களுக்குப் பலன் அளிக்கும் வகையிலான இத்திட்டம் ரூ.11கோடி செலவில் தீட்டப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் திருக்கரத்தால் இந்தத் திட்டம் தொடங்கப்படும்' என்றும் 'படிக்காத பார்வை அற்றோருக்கு அரசு அலுவலகங்களில் உள்ள நாற்காலிகளுக்கு ஒயர் பின்னும் தொழில் அளிக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளதாகவும்' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர்.இந்திரகுமாரி அவர்கள் தெரிவித்தார் (5.2.92).

★ பால் விற்பனை நிலையங்களில் பெண்களை வேலைக்குச் சேர்ப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் தெரிவித்தார் (6.2.92).

★ 'கேரளா, மேற்கு வங்காளம் போன்ற மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் தான் அரிசி விலை குறைவு' என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.ஜி.விசுவநாதன் அவர்கள் தெரிவித்தார் (7.2.92).

- தொகுப்பு: பி.எல்.ஆர்.

சமூக - பொருளாதார நீதி ஏழைக்குக் கிடைப்பதே தர்மம்!

மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில், ரூ.4 கோடியே 54 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் கட்டடத்தின் திறப்பு விழா, 8.2.92 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.எம்.எச். கனியா அவர்கள் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:-

'இந்தப் புதிய கட்டடம் கட்ட முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986-இல் அனுமதி வழங்கினார். அந்தப் பணி இப்போது முடிவடைந்து, கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஜனநாயக அமைப்பில் நீதித்துறையின் பங்கு முறையாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். ஆகவே, அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய முக்கியமான இடம் நீதித்துறைக்குக் கிடைத்திட எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பாடுபடும் எனக் கூறிட விரும்புகிறேன்.

மிகச் சிறந்த கட்டடக் கலை அமைப்புகள் கொண்ட சென்னை மாநகரில் உயர்நீதிமன்றக் கட்டடம் மிக முக்கியமானது. இங்கு கூடுதல் தேவை கருதி, இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நீதிபதிகள், வழக்குரைஞர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு உரிய பயன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

சென்னை உயர்நீதிமன்றம் 130 ஆண்டுக் காலப் பாரம்பரியம் கொண்டது. பாரபட்சமற்ற, நியாயமான தீர்ப்புகளை அச்சமின்றி தலைநிமிர்ந்து வழங்கும் பண்பாட்டை இங்கு நீதிபதிகளும், வழக்குரைஞர்களும் வளர்த்தனர். அதே மரபுகளைப் பின்பற்றும் வாரிசுகள் நாம் என்ற பெருமை இந்த விழாவில் பங்கேற்கும்போது உண்டாகிறது. நீதிபதிகள் முத்துசாமி அய்யர், சங்கரன் நாயர், மாதவன் நாயர், கே.சுந்தரம் செட்டியார், வே.பா.ரமேசன் ஆகியோர் இந்த உயர்நீதிமன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தவர்கள். அதேபோல, மிகப் பெரும் வழக்குரைஞர்களான பாஷ்யம் அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயங்கார், வி.எஸ். எத்திராஜ் ஆகியோர் உட்பட பலர் இந்த உயர்நீதிமன்றத்தில் பணிபுரிந்து பெருமை சேர்த்தனர்.

•

ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஆதார உரிமைகளை அரசியலமைப்புச் சட்டம் வழங்கி உள்ளது. ஆனால், பொது நலன் அடிப்படையில் இவைகளுக்கு ஒரு வரம்பு உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் இலட்



சியங்களை நிறைவேற்ற சில வழிகாட்டிக் கோட்பாடுகள் உள்ளன. நாட்டின் பொருளாதார நிலைகளை உணர்ந்து அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி உள்ளனர்.

பாமர மக்களின் பொருளாதார, சமூக அந்தஸ்து உயர்ந்து சேமநல அரசாகத் திகழ அவர்கள் விரும்பினர். அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதிகளை வழங்கும் வகையில் நிர்வாகமும் சட்டமன்றமும் செயல்பட வழி வகுத்தனர்.

பாமர மக்களுக்கு உணவு, உடை, இடம், வேலைவாய்ப்பு ஆகியவைகளை முறையாகத் தர வழிகாட்டும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் வழிகாட்டுகிறது. இதைத்தான் ஹெரால்டு லக்சி, 'எனது அண்டை வீட்டுக்காரர் காய்ந்த ரொட்டிக்கு அலையும்போது நான் எப்படிக் கேக் சாப்பிட முடியும்?' என்று நயமாகக் குறிப்பிட்டார்.

ஆகவே, ஏழ்மை, சுரண்டல், அறியாமை மற்றும் வன்முறை நீங்க நிர்வாகமும், சட்டமன்றமும் மட்டும் பாடுபடுவது போதாது. இந்தப் பிரச்சினைகள் தீர தனது உரிய பங்கை ஆற்ற நீதித்துறை முன்வர வேண்டும்.

தனது வாழ்வுக்கும், அதன் தேவைக்கும் ஒவ்வொரு துறையும் என்ன செய்தது என்று கேட்கும் உரிமை சமூகத்திற்கு உண்டு. இந்தக் கேள்விக்குப் பதில்கூற வேண்டிய பொறுப்பு நீதித்துறைக்கும், அதைச் சார்ந்த அமைப்புகளுக்கும் இருக்கிறது. ஆகவேதான், இந்த உரிமையை ஆராய வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். சட்டம் என்பது சட்டப் புத்தகத்தில் உள்ள விதி மட்டுமல்ல, தர்மம் அல்லது அறத்தின் அடிப்படையில் அமைந்தது சட்டமாகும்.

சமூக மற்றும் பொருளாதார நீதி ஏழைகளுக்குக் கிடைப்பதுதான் தர்மத்தின் பொருளாகும். ஆகவே, சமூக மற்றும் பொருளாதார நீதி கிடைக்கும் வகையில் அதற்கான விளக்கங்களைக் கூறும் பொறுப்பில் நீதிமன்றங்கள் உள்ளன.

சிறந்த இலட்சியங்களை உடைய நீதித்துறை காலப்போக்கில் தனது சொந்த விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளில் சிக்கிக் கொண்டது. ஆகவே, தேவைப்படும் பாமரர்களுக்குரிய நீதி தர முடியவில்லை. நீதித்துறை முறையாகச் செயல்பட முடியாத சிக்கலைச் சட்டக் கமிஷன் உட்பட பல்வேறு அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன.

ஆகவே, இப்போது இப்பிரச்சினையைத் தீர்க்க நீதித்துறையைச் சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் ஆய்ந்து அதற்கான தீர்வு காணவேண்டும். இப்போதிருக்கும் நடைமுறையை மாற்றிவிட்டு, புதிய நடைமுறை கொண்டு வருவதில் பயன் இல்லை. ஆகவே, அரசியல் அமைப்புச் சட்டம் எதை எதிர்பார்க்கிறதோ அதைப் பூர்த்தி செய்யும் அமைப்பாக நீதித்துறை சீர்திருத்தப்படவேண்டும். நான் இப்படிக் கூறுவதால் ஒரு பீதியை எழுப்ப விரும்புகிறேன் என்று அர்த்தமல்ல. உடனடியாகப் பெரிய அளவில் நீதித்துறைச் சீர்திருத்தம் தேவை என்பதைச் சமூக நலனில் அக்கறை கொண்டு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கான மன உறுதியும், இலட்சியத்தை அடையும் துணிச்சலும் இருந்தால் குறைந்த காலத்தில் அதை நிறைவேற்றலாம்.'

புதிய கட்டடத்தைத் திறந்து வைத்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம்.எச். கனியா அவர்கள் பேசியதாவது:-

'சென்னை உயர்நீதிமன்றம் மிகவும் பாரம்பரியம் கொண்டதாகும். இங்கு புகழ்பெற்ற நீதிபதிகளும், வழக்குரைஞர்களும், பணியாற்றி உள்ளனர். தற்போது குடியரசுத் தலைவராக இருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கு சிறந்த வழக்குரைஞராக இருந்தவர். இப்படிப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

'வழக்குரைஞர்களுக்கு நீதிபதிகளுக்குஇடையே எப்பொழுதும் சுமூகமான உறவு இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நீதித்துறை செம்மையாகச் செயல்படும். எனவே, வழக்குரைஞர்கள் நீதிபதிகளுடன் நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டும்.'

விழாவில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி, தமிழக அட்வகேட் ஜெனரல் திரு. கே. சுப்பிரமணியம், உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த், வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் திரு. ஆர்.காந்தி ஆகியோர் பேசினார்கள்.

தற்காலிக உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எஸ். நயினார் சுந்தரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழாவின் முடிவில் நீதிபதி திரு. வி. ரத்தினம் நன்றி கூறினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: என். இளங்கோ.

புதிய தொழில் கொள்கை- 1992

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

மாறி வரும் தேசிய பொருளாதாரச் சூழ்நிலையில் தமிழக அரசு இந்தப் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களும் மிக மோசமான தேசியப் பொருளாதாரப் பிரச்சினைகளும் சேர்ந்து வளர்ச்சி பற்றிய அணுகுமுறையில் ஒரு முழு மறுமதிப்பீடு ஏற்படுவதைக் கட்டாயமாக்கி விட்டன

ஒரு புதிய தேசியத் தொழில் கொள்கையும், புதிய வணிகக் கொள்கையும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய உத்வேகத்தை அடிப்படையாகக் கொண்டு மாநிலத்தில் விரைவான பொருளாதார முன்னேற்றத்துக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவது அவசியமாகிறது. புதிதாக வளர்ந்து வரும் இந்த பொருளாதார அம்சங்களின் தர்க்கரீதியான வெளிப்பாடே தமிழ்நாட்டின் புதிய தொழில் கொள்கையாகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவின் தொழில்கள் ஆண்டுக்குச் சராசரியாக 8.5 சதவிகிதம் வளர்ச்சி அடைந்துள்ளன. தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சி 5.7 சதவிகிதம் ஆகும். எண்பதாம் ஆண்டு தமிழ்நாட்டில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாம் நிலைப் பிரிவுகளில் பங்கு 33 சதவிகிதமாகவே தேங்கி நின்றது. தனி நபர் வருமானம் தேசிய சராசரி அளவிலேயே நின்றுவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வந்தது. வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட படித்த வேலை இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை 1980-இல் 5.58 இலட்சமாக இருந்தது. 1991-இல் 18.01 இலட்சமாக வளர்ந்துவிட்டது.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு 1969-இல் 10 சதவிகிதம் இருந்தது. 1989-90-இல் 5.21 சதவிகிதம் ஆகக் குறைந்துவிட்டது. புதிய பெரிய தொழிற்சாலைகள் உருவாகாதது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும்.

நிலத்தின் மேல் பாகத்திலுள்ள, விவசாயத்திற்குப் பயன்படும் சக்திகளை முழுவதுமாகப் பயன்படுத்தியதும், நிலத்தடி நீரை வேகமாகப் பயன்படுத்தியதும், தீவிர விவசாய உற்பத்தி வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக அமைந்தன.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில் விரைவானதொரு தொழில் முன்னேற்றத்திற்குத் தமிழ்நாடு திட்டமிட வேண்டி உள்ளது. இந்தியாவில் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள மாநிலங்களில் முதன்மையாகத் தமிழ்நாடு திகழத் தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குக் கீழ்க்கண்ட அம்சங்கள் உதவியாக இருக்கின்றன:

* தொழில் உறவுகளில் புகழும், சிறந்த தொழில்நுட்பப் பயிற்சியும் பெற்ற தொழிலாளர்கள்.

* ஏராளமாகக் குவிக்கப்பட்டுள்ள நிர்வாகத் திறமை.

* உறுதியாக நன்கு பரந்துள்ள தயாரிப்பு அடித்தளம்.

* நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சாலைப் போக்குவரத்து அமைப்பை உள்ளிட்ட சிறந்த அடிப்படை வசதிகள்.

* விரிந்து பரந்த இருப்புப்பாதை இணைப்பு.

* சென்னையிலும் தூத்துக்குடியிலும் உள்ள திறன்மிக்க துறைமுகங்கள்.

* வளர்ச்சி பெற்ற சமூகக் கட்டமைப்பு.

* புதிய வளர்ச்சிக்குப் பிரதான கிரியா ஊக்கியாக விளங்கக் கூடிய ஏராளமான நிலக்கரி வளங்கள்.

* போதுமான மின்சார நிலைமை. மற்றும் நம்பத் தகுந்த, தொடர்ந்து கிடைக்கக்கூடிய மின் விநியோக உறுதி.

* ஒன்றுபட்டு வாழும் சமுதாயத்தில் நிலவிவரும் அமைதியான சூழ்நிலை.

* ஓர் உறுதியான ஏற்றுமதித் தளம்.

கீழ்க்காணும் சில குறைபாடுகளும் உள்ளன:

1. புதிய பெரிய முக்கியத் தொழிற்சாலைகள் இல்லாமை.
2. புதிய அடிப்படை வசதிக்குப் போதிய முதலீடு இல்லாமை.
3. பெரிய தொழில் நிறுவனங்களின் தடைப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள்.

• ஆண்டவனே! எனக்கு உயிர் அளித்தது போல், நன்றி நிறைந்த இதயத்தையும் அளிப்பாயாக!

- ஷேக்ஸ்பியர்

4. போதிய புதிய மூலதனம் நமது மாநிலத்துக்கு வராமல் இருப்பது.
5. வழங்கப்பட்ட சலுகைகளையும் ஊக்குவிப்புகளையும் பயன்படுத்தாமை.
6. திட்டங்களை அனுமதிப்பதில் உள்ள மெத்தனமும் நடைமுறை இடர்ப்பாடுகளும்.
7. பணியின் தார்மீகக் கொள்கைகள் இல்லாமை.
8. நிலையான நடுத்தரமான வரிக்கொள்கை இல்லாமை.
9. இந்தப் பின்னணியில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகப் புதிய அணுகு முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

மகத்தான வளர்ச்சிக்கான பாதை சுலபமானதல்ல. சாதகமானதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமானால் நமது, அனைத்துக் குறைபாடுகளையும் திறமையாகச் சமாளித்து, அனைத்து . வசதி வாய்ப்புகளையும் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மாநிலத்தில் தொன்றுதொட்டு வரும் தொழில்களின் பெரும் பகுதி 25 இலட்சம் நபர்களுக்கு மேலாக வேலைவாய்ப்பினை வழங்கும் சிறு தொழில்களை உள்ளடக்கி உள்ளது. இந்தத் தொழில்களில் உற்பத்தி பெருக்கத்தை புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவே நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதே நேரத்தில் புதிய சந்தைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இந்தக் கிளைப் பிரிவு ஏராளமான வேலைவாய்ப்புகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்தச் சக்தியைத் தகுந்ததொரு கொள்கை மூலம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைக் குறித்துத் தொழில் அதிபர்களுடனும், தொழில் முனைவர்களுடனும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனம்விட்டு வெளிப்படையாக பேச்சு வார்த்தை நடத்தினார். தொழில் அதிபர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பல அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன. தொழில் அதிபர்களிடையே ஒரு பொதுவான கருத்தை உருவாக்க அனைத்து அம்சங்களைப் பற்றிய விரிவான விவாதம் மேற்கொள்ளப்பட்டது. தொழிற்சாலைகளின் சங்கங்களும் தலைவர்களும் சேர்ந்து தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் வழங்கியதன் மூலம் இந்தப் புதிய தொழில் கொள்கை உருவாவதில் பெரும் பங்காற்றின. பல்வகைப்பட்ட விவாதங்களின் விளைவே இந்தத் தொழிற் கொள்கையாகும். இக் கொள்கையைத் தமிழக அரசு அப்படியே நிறைவேற்ற முயலும். இது சம்பந்தப்பட்ட அனைவரது ஒத்துழைப்பையும் தமிழக அரசு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. இப்புதிய தொழில் கொள்கையைச் சரியான முறையில் அமல்படுத்தினால் நமது பொருளாதார முன்னேற்றத்துக்கு மிகவும் தேவையான பன்முறைப்பட்ட விளைவுகளை இது உண்டாக்கி வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

II. அடிப்படை வசதிகள்

தமிழகத்தில் தற்போதுள்ள தொழிற்பகுதிகளிலும், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்படுத்த உள்ள இடங்களிலும் அடிப்படை வசதிகளை விரைவாக மேம்படுத்த அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படும்.

தொழில் தொடங்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக்கழகம்' (The Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development) நிறுவப்படும். தொழில் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மட்டுமே இக்கழகம் விசேஷமாகச் செயல்படும். இக்கழகம் உடனடியாக மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்தும். இக்கழகம், புதிதாகத் தொழிற்பகுதி ஏற்பட உள்ள இடங்களில், இதர அடிப்படை வசதிகளான மருத்துவமனை, பள்ளிகள் போன்றவைகளையும் ஏற்படுத்தித் தரும்.

தற்பொழுது உள்ள தொழிற்பகுதிகளிலும் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ள தொழிற்பகுதிகளிலும் அடிப்படை வசதிகளில் உள்ள இடைவெளிகளைக் கண்டுபிடித்து, அங்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புதிதாக வகுக்கப்பட்ட அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், சாலைப் போக்குவரத்து, தண்ணீர் வசதி, தொலைபேசி வசதி போன்ற பிற அடிப்படை வசதிகளும் புதிதாக உருவாக்கப்பட்ட அடிப்படை வசதி நிறைவுத் திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும். இதற்கான செலவினை, உபயோகிப்போரிடமிருந்து கட்டணம் வசூலித்தும், சாலையை உபயோகிப்போரிடமிருந்து சுங்க வரி வசூலித்தும், ஈடுசெய்யலாம். சாலைப் போக்குவரத்து மேம்பாட்டிற்காக ஒரு மாதிரித் திட்டம் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய தொழில் மையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தொழில் பகுதி அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கான நிதி, முனிசிபல் நகர்ப்புற மேம்பாட்டு நிதியிலிருந்தும் (Municipal Urban Development Fund - MUDF) நகர்ப்புற கிராமப்புறத் திட்ட மேம்பாடு நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

மின்சாரம்

தமிழ்நாட்டில் தற்போது மின்வெட்டு இல்லை. தொழிற்சாலைகளுக்கான மின்சாரம் தங்கு தடையின்றிக் கிடைக்கத் தமிழ்நாடு அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பெரிய மின் உற்பத்தித் திட்டங்களான தூத்துக்குடி, வட சென்னைத் திட்டங்களிலிருந்து, எட்டாவது திட்டக் காலத்தில் 1,050 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும் வகையில், பணிகள் முடுக்கிவிடப்படும்.

மின் உற்பத்தியில் அதிக அளவில் தனியார் பங்கு கொள்வதற்கு வழி வகுக்கும் திட்டம் அமல்படுத்தப்படும்.

தனியார் மின் உற்பத்தி, மின் விற்பனை ஆகியவை ஊக்குவிக்கப்படும். மின்சாரத்தை விநியோகிக்கும் பொறுப்பை மின்வாரியம் ஏற்றுக்கொள்ளும். சேவைக் கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு மின்சாரத்தின் கட்டணத்தைத் தனியாரே முடிவு செய்வர்.

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் உள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான அனல் மின் நிலையம் அமைத்தல்சுரங்கம் தோண்டுதல் கூட்டுத் துறையில் துவக்கப்படும்.

நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையம் கடலூர், தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் பிள்ளைப் பெருமாநல்லூரில் எரிவாயு அடிப்படையிலான மின் நிலையமும் தொடங்க தனியார் நிறுவனங்கள் வரவேற்கப்படும்.

இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தி கூட்டுத் துறையிலும் தனியார் துறையிலும் அனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

மைக்ரோ நீர் மின் நிலையங்கள் அமைப்பிலும் தனியார் பங்கு பெற ஊக்கமளிக்கப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம், 6 மைக்ரோ நீர் மின் நிலையங்களை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது.

தனியார் நிறுவனங்கள் பெரிய காற்று மின் ஆலைகளை அமைக்க ஊக்குவிக்கப்படும்.

மின்சாரத்தை மாற்றித் தருதல் விநியோகித்தல் ஆகியவற்றை மேம்படுத்த (Transmission and distribution) எட்டாவது திட்ட காலத்தில் ரூ.1,200 கோடி செலவில் மாபெரும் திட்டம் துவக்கப்படும். புதிதாகத் தொழில் தொடங்கப்பட்ட பகுதிகளில் மின்சாரத்தை மேம்படுத்துவதே இந்த முழுமையான திட்டத்தின் நோக்கமாகும். கிராமப்புறங்களில் மின் இணைப்பு பெறும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்த பலகட்டத் திட்டம் ஒன்று அமல்படுத்தப்படும்.

தொழிற்சாலைகளின் உற்பத்தியில் நட்டம் ஏற்படா வண்ணம் தடுக்க சீரான மின் விநியோகத்தின் தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழில் நிறுவனங்களுக்கு, அவர்கள் மனுச் செய்த 90 நாட்களுக்குள் மின் இணைப்புக் கிடைக்க விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தனி மின்சாரத் தணிக்கைக்குப் புதிய திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ்நாடு மின்சார வாரியம் தனது சிறப்பு நிதியிலிருந்து இதனை நிறுவும்.

தமிழ்நாடு மின்சார வாரியம் நாட்டிலுள்ள மிகத் திறமையான வாரியங்களுள் ஒன்றாகும். செலவினங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். நியாயமான கட்டண விகிதக் கொள்கை ஒன்று உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் துவக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கீழ்க்கண்டவாறு மின் கட்டணச் சலுகை வழங்கப்படும்.

• மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது, அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்

- அரிஸ்டாட்டில்

முதலாண்டு 40 சதவிகிதம், இரண்டாம் ஆண்டு 30 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு 20 சதவிகிதம் விரிவுபடுத்தப்படும். தொழிற் சாலைகளுக்கும் இப்புதிய சலுகைகள் வழங்கப்படும்.

நூறு சதவிகித ஏற்றுமதி யூனிட்டுகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

நீர்

நீரைப் பெருமளவில் சுத்தப்படுத்தும் திட்டம் நிறைவேற்றப் படும். பெரும் நகரங்களில் கழிவு நீரைச் சுத்தப்படுத்தித் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும்.

கடற்கரையோரங்களில் உப்பு நீரைக் குடிநீராக மாற்றும் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அதை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் தொழிற்சாலைகளில் மரபு சார்ந்த மற்றும் மரபு சாராத எரிசக்தி பயன்படுத்தப்படும்.

மத்திய முதலீடு

தமிழகத்தில் துவக்கப்படவுள்ள பல்வேறு திட்டங்களுக்கு விரைவில் மத்திய அரசின் அனுமதிபெறத் தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. அவற்றுள் சில:

1. அரோமேட்டிக் திட்டம்
2. தென்மண்டல எரிவாயு கிரிட்.
3. சென்னை சுத்திகரிப்பு ஆலையின் விரிவாக்கம்.
4. எண்ணூரில் துணைத் துறைமுகம்.
5. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டுதல்.
6. கடலோரப் பகுதிகளில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடித்து எடுத்தல்.

பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்புப் பணிகளில் மத்திய அரசின் புதிய திட்டத்தைத் தமிழகத்தில் தொடங்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மூலதன மேம்பாடு

தேசிய அளவிலும் உலக அளவிலும் வாணிபத்தில் ஏற் பட்டுள்ள போட்டிகளைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் முதலீடு அதிகமாக வந்துசேரவும், அதன் விளைவாக விரை வான தொழில் முன்னேற்றம் ஏற்படவும் முற்போக்கான மூலதன மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தொழிற்சாலைகளுக்குச் சேவை புரியத் தமிழ்நாடு 'தொழிற் சாலை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Guidance and Export Promotion Bureau) அமைக்கப் படும். இந்த நிறுவனம் தொழில் முனைவோரை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தேவை யான அனைத்து உதவிகளையும் செய்யும்.

டிட்கோவில் 'மிகா' (Mega Industries Guidance Agency) என்ற புதிய அமைப்பு நிறுவப்படும். இந்த அமைப்பு பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதரும். சிப்காட் நடுத்தரத் தொழிற்சாலைகளுக்கும், சிட்கோ சிறு தொழிற்சாலைகளுக்கும், எல்காட் மின்னணுத் தொழிற்சாலைகளுக்கும் சேவை புரியும்.

வெளிநாட்டு மூலதன மேம்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொள்ளப் புதுடெல்லியில் 'பிப்கோ' (Foreign Investment Promotion Co-ordination Cell) என்ற அமைப்பு நிறுவப்படும்.

ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Export Promotion Cell) நிறுவப்பட்டுள்ளது. அது பலப்படுத்தப்படும். மத்திய மாநில அரசுகள், தொழில் மற்றும் வணிக அமைப்புகள் வணிகச் சங்கங்கள், ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு ஆகியவைகளின் பிரதிநிதிகளைக் கொண்டு உயர்மட்ட ஆலோசனைக்குழு (Apex Level Advisory Board) அமைக்கப்படும்.

> • உண்மைதான் வாழ்க்கை. நமது வாழ்க்கை சத்தி யத்தைச் சேர்ந்து நிற்கும்போதுதான், அத்தனைத் துயரங்களும் தொலைந்து போகின்றன. அதற்கு முன்னால் அல்ல.
>
> - பிளாட்டோ

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அவர் களுடன் தொடர்பு கொள்ளச் சிறு சிறப்புப் பிரிவு அமைக்கப் படும்.

முதலமைச்சர் தலைமையில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு நிரந்தர ஆலோசனைக் குழு (A Standing Advisary Committee) அமைக்கப்படும். அது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

தொழில் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் அடங்கிய கொள்கைத் திட்டக்குழு (Policy Planning Group) ஒன்று அமைக் கப்படும். தொழில் மயமாக்குவதற்குத் தேவையான கொள்கை களை நிர்ணயிக்க அடிக்கடி கூடும் இக்குழுவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமை தாங்குவார்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உயர்மட்ட ஆலோசனைகளைப் பெற அரசுக்கும் தொழில் நிறுவனங்களுக்கு மிடையே அடிக்கடி தொடர்பு வைத்துக் கொள்ளப்படும்.

மாநிலத்தில் பல்வேறு தொழில்களில் ஏற்பட்டுள்ள சாதனை களைக் கௌரவிக்கும் வகையில் தொழிலதிபர்களுக்குத் தரமான உற்பத்திக்காகவும், ஏற்றுமதி வளர்ச்சிக்காகவும், இறக்குமதி மாற்று ஏற்பாட்டிற்காகவும், புதிய பொருட்களின் வடிவமைப் பிற்காகவும் விருதுகளை அரசு வழங்கும்.

கீழ்க்காணும் வகையில் தொழில்களில் அரசு பங்கு கொள்ளும்.

கூட்டுத் துறை நிறுவனங்கள்: முதல் முறையாகத் தொழில் தொடங்குவோருடன் 26 சதவிகிதம் பங்கு முதலீடு

இணை/உதவி பெறும் திட்டங்கள்: 11 சதவிகிதம் பங்கு முதலீடு

எஸ்கார்ட் பிரிவுத் திட்டங்கள்: 1 சதவிகிதம் பங்கு முதலீடு (எஸ்கார்ட் உதவி வழங்குவதற்காக)

சலுகைகள்

31 மிகவும் பின்தங்கிய வட்டங்களில் (Taluk) தொடங்கப் படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் மூலதன உதவித் தொகையாக நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் வழங்கப்படும். அதிகபட்ச உதவித்தொகை ரூ.20 இலட்சமாகும்.

பிற்பட்ட 76 வட்டங்களில் துவக்கப்படும் அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் முதலீட்டு மானியம் நிலையான சொத்து மதிப்பில் 15 சதவிகிதமும், உயர்ந்தபட்சம் ரூ.15 இலட்சம் வரையும் வழங்கப்படும்.

முக்கியத் தொழிற்சாலைகள் மாநிலத்தில் எங்கு துவக்கப் பட்டாலும் அதிகப்படியான முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

* மின் அணுத் தொழிற்சாலைகள் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ.35 இலட்சம்.

* தோல் - நிலையான சொத்து மதிப்பில் 20 சதவிகிதம் - அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம்.

கீழ்க்காணும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்பு முதலீட்டு மானியமாக நிலையான சொத்துமதிப்பில் 10 சதவிகிதமும் அதிகபட்சமாக ரூ.15 இலட்சமும் வழங்கப்படும்.

* மோட்டார் வாகன உதிரி பாகங்கள்
* மருந்து, மருந்துப் பொருட்கள்
* சூரிய சக்தி மற்றும் மரபுசாரா எரிசக்திச் சாதனங்கள்.
* ஏற்றுமதி செய்யப்படும் தங்க நகைகள் மற்றும் வைரம் பட்டை தீட்டுதல்.
* மாசுக் கட்டுப்பாடு சாதனங்கள்.
* குறிப்பிட்ட பகுதிகளில் சணல் தொழில்கள்.
* விளையாட்டுப் பொருட்களும் சாதனங்களும்.
* உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
* விலை குறைந்த கட்டுமானப் பொருட்கள்.

30 சதவிகிதத்துக்கு மேலாகப் பெண்களை வேலைக்கு அமர்த்தும் புதிய தொழிற்சாலைகளுக்குக் கூடுதலாக 5 சதவிகிதம் மூலதன மானியமும் அதிகபட்சமாக ரூ. 5 இலட்சமும் வழங்கப்படும்.

சீரான மின் வினியோகத்துக்கெனப் புதிய ஜெனரேட்டர் களை வாங்குவோருக்கு, அதன் விலையில் 15 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும்.

சமுதாய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, முதல் 100 தொழிற்சாலைகளில் ரூ.50 கோடி முதலீடு செய்யும் பெரும் தொழில் அதிபர்களுக்குச் சிறப்பு மானியமாக ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடியும் அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு ரூ.50 இலட்சமும் மானியமாக வழங்கப்படும், என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பெரிய முதலீடுகளை வரவேற்கும் முகத்தான் ரூ.200 கோடியும் அதற்கும் மேலாக முதலீடு செய்பவர்களுக்கு மானியத் தொகை யாக ரூபாய் ஒரு கோடியும் வழங்கப்படும்.

இச்சலுகைகள் வழங்கத் தேவையான வழிமுறைகளைச் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். குறைந்தபட்ச நடைமுறை சம்பிரதாயங்களில் இந்தச் சலுகைகள் உடனடியாக வழங்கப்பட உள்ளன. இதற்குத் தேவையான நிதி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும்.

வரிச் சலுகைகள்

படிப்படியான விற்பனை வரி தள்ளிவைப்புத் திட்டம் அமல்படுத்தப்படும்.

தற்பொழுது உள்ள திட்டப்படி பின்தங்கிய வட்டங்களில் 9 ஆண்டுகளும், மிகவும் பின் தங்கிய வட்டங்களில் 5 ஆண்டு களும் தள்ளிவைக்கப்படும்.

மாநிலத்தில் பெரிய தொழிற்சாலைகள் எங்கு தொடங்கப் பட்டாலும் அதற்கு விற்பனை வரி தள்ளி வைப்பு/விலக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

* ரூ.50 கோடிக்கும் அதற்கு மேலும் ஆனால் ரூ.100 கோடிக்கும் கீழ் முதலீடு உள்ள தொழிற்சாலைகள். - 5 ஆண்டிற்கு வரி விலக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடிக்கு மேலாக ரூ.300 கோடிக்குக் கீழாக மூலதனம் உள்ள தொழில்கள் - 6 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணை யாகத் தள்ளிவைப்பு.

* ரூ.100 கோடியும் அதற்கு மேலும் மூலதனம் உள்ள தொழில்கள் - 7 ஆண்டுகளுக்கு வரி விலக்கு அல்லது 14 ஆண்டுகளுக்கு முதலீட்டுத் தொகைக்கு இணையாகத் தள்ளி வைப்பு.

அரசு நிறுவனங்களால் மேம்படுத்தப்படும் தொழில் கூடங் களை வாங்குவதில் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

அனைத்துப் புதிய தொழிற்சாலைகளுக்கும் 3 ஆண்டுக் காலங்களுக்கு மின் உபயோக வரியிலிருந்து முழு வரிவிலக்கு வழங்கப்படும்.

கேப்டிவ் (Captive) ஜெனரேட்டரில் யூனிட்டுகளக்கு மின் சார வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

தொலைதூர விற்பனை வரிக் கொள்கையை அமைப்பதற்கு என ஒரு விற்பனை வரி சீர்திருத்தக் குழு அமைக்கப்படும்.

ஒரு சிறந்த வரிக் கொள்கையை உருவாக்கத் தொழில் அதிபர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும். இதில் சலுகைகள் வழங்குவது குறித்து ஒரு புதிய முறை கொண்டுவரப்படும்.

தொழில் உறவுகள்

பணி தார்மீகத்தில் மாநில அரசு நம்பிக்கைக் கொண் டுள்ளது. புதிய பழைய தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் இல்லாமல் இருக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும எடுக்கும்.

நியாயமான பேச்சுவார்த்தைகள் மூலம் காணும் தீர்வுகளைப் பலவகைப்பட்ட தொழிலாளர் சங்கங்கள் குழப்பாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

வன்முறை மிரட்டல்கள் தேவையற்ற தலையீடுகள் ஆகியவை ஒடுக்கப்படும். நல்ல தொழில் உறவு நிலவிட அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

மூடிய ஆலைகளைத் திறக்கவும், நலிந்த ஆலைகளுக்குப் புத்துயிர் ஊட்டவும் அரசு தீவிர முயற்சிகள் எடுக்கும்.

வளர்ந்துவரும் தேசிய உலக அளவிலான போட்டிகளைக் கருத்தில் கொண்டு ஆலைகளை மாற்றவும், நவீனமயமாக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

போட்டிகள் நிறைந்த உலக சூழ்நிலையில் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். புதிய திட்டங்களில் பணியாட்களை நிர்வாகம் மாற்றுவதில் அரசு தலையிடாது.

ஆலைகளை மாற்றி அமைப்பதிலும், நவீன மயமாக்கப் படுவதிலும் உள்ள தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழி லாளர் மறுவாழ்வு நிதி (Labour Rehablitation Fund) நிறுவிட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நலிந்த ஆலைகளை மாற்றி அமைக்கும்போது தொழிலாளர் நலனுக்காக இந்நிதி பயன் படுத்தப்படும்.

தொழிலாளர் நலனைப் பேணிக் காத்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். போனஸ், ஊதியம், உற்

> • தனக்குத் தெரிந்ததைத்தெரியுமென்றும், தெரி யாததைத் தெரியாதென்றும் கூறுவது எதுவோ அதுதான் அறிவாகும்.
>
> - கன்பூஷியஸ்

• மிகக் குறைந்த செல்வத்தைக் கொண்டு எவன் திருப்தி அடைகிறானோ, அவன் தான் முதன்மையான செல்வன். ஏனெனில், இயற்கையின் செல்வம் திருப்திதான்.

- சாக்ரடீஸ்

பத்தித் திறன் சம்பந்தப்பட்ட நீண்ட நாளைய ஒப்பந்தங்கள் வரவேற்கப்படும். இதுபோன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் படும்போது உற்பத்தியுடன் சம்பளத்தை இணைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

பொதுத்துறைக் கொள்கை

தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் 58 உள்ளன. 31.3.1991 அன்று இவைகளில் அரசின் முதலீடு ரூ.470.71 கோடி ஆகும். இவைகளில் மொத்த மூலதனம் ரூ.1989.50 கோடி ஆகும். இவைகளில் 1990-91-ஆம் ஆண்டில் 24 பொது நிறுவனங்கள் 77.22 கோடி நட்டத்தைக் காட்டின. இதைச் சரிப்படுத்தத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

சம்பந்தமில்லாத தொழில்களில் அரசு ஈடுபடாது. மத்திய அரசின் தொழில் கொள்கைக்கு ஏற்ப அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளிலும் தனியார் நிறுவனங்களை அரசு வரவேற்கும்.

இப்பொழுது இருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக ஆராயப்படும். இந்த நிறுவனங்களில் நட்டம் ஏற்படாமல் மாற்றி அமைப்பது அரசின் கடமையாகும்.

வெற்றிகரமாக மாற்றியமைக்க இயலாத நிறுவனங்களை அரசு கைவிட்டுவிடும்.

பொதுத்துறை நிறுவனங்களில் நிர்வாகத் திறமையை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். அலுவலர்கள் கொண்ட குழு ஒன்றின் மூலம் பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து நிர்வகிக்கப்படும். ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காகக் குறைந்தபட்சம் 3 ஆண்டுக் காலங்களுக்கு இந்த அலுவலர்கள் பணியில் அமர்த்தப் படுவார்கள்.

சிறு தொழில்கள்

சிறு தொழில்களை வெற்றிகரமாகக் கொண்டு செல்லக் கூடிய திட்டத்தின்மூலம் தான் விரைவாகத் தொழில்மயமாக்க லாம் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படும் போதே அதன் முழுமைக்காகக் காத்திராமல் ஒவ்வொரு கட்டத்திலும் மாநில மூலதன உதவித்தொகை சிறு தொழில்களுக்கு வழங்கப்படும். இது தொழில் முனைவோருக்கு மூலதனச் செலவைக் குறைப்பதில் மிகவும் உதவிகரமாக இருக்கும்.

சிறு தொழில் நிறுவனங்கள் தயாரித்து வழங்கும் பொருட்களுக்கு மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் உடனடியாகத் தொகையைத் தரவேண்டும். பொருட்கள் வந்து சேர்ந்த 30 நாட்களுக்குள் அதற்குண்டான தொகை வழங்கப்படவேண்டும். இதை நிர்வகிக்க ஒரு புதிய அமைப்பு ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதிய தொழில் நுட்பங்களை வளர்ப்பதற்கென Venture Capital Fund' என்ற நிதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

சிறு தொழில் அதிபர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளவும், தங்களது தொழிற்சாலைகளை நவீனப் படுத்தவும், 'தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி' (Technology Development Fund) நிறுவப்படும்.

நலிவுற்ற சிறு தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை. இவைகளைச் சீர்படுத்துவதில் விரைவான முடிவு எடுக்கப் போதிய அதிகாரத்துடன் தொழில்துறைச் செயலர் தலைமையில் ஒரு சிறப்பு அதிகாரக் குழு (Special Empowered Committee) அமைக்கப்படும்.

அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள்

தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. தோல்
2. ஜவுளி மற்றும் பனியன்கள்
3. மின்னணுவியல்
4. மோட்டார் பாகங்கள்
5. மருந்து, மருந்துப் பொருட்கள்
6. மணலி மற்றும் தஞ்சாவூர் திட்டங்கள் உள்ளிட்ட பெட்ரோ கெமிக்கல் திட்டங்கள்
7. தொழில் எரிசாராய வகைகள்
8. விவசாய சார்புத் தொழில்கள் மற்றும் உணவு பதனிடும் தொழில்கள்.
9. உப்பு, கடல் சார்ந்த பொருட்கள்
10. இரத்தினம் மற்றும் நகைகள்
11. பொறியியல் பொருட்கள்
12. கடல் உணவுப் பொருட்கள்
13. ஏற்றுமதிக்கு உரிய தொழில்கள்

இந்த 13 வகைத் தொழில்களில் புதிய தொழில் நிறுவ முன்வருபவர்களுக்கு அரசு ஊக்கமளிக்கும். இந்தப் பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் உள்ள வாய்ப்புகளை நன்கு ஆராய்ந்து அதன் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இந்தப் புதிய தொழில் கொள்கையினால் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் விரைந்து பெருகுவதற்குரிய சூழ்நிலை ஏற்படும். குடிசைத் தொழில்கள், கைத்தொழில்கள் பிரிவில் இடம் பெறும் சிறிய தொழில்களின் வளர்ச்சி ஊக்கம் பெறும். தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கு இதனால் பெருமளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கும். மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பெரிய அளவில் தொழில் முதலீட்டுக்கு வாய்ப்புகள் வந்துசேரும். மொத்தத்தில் தேசிய அளவிலான தொழில் வளர்ச்சியை மிஞ்சக்கூடிய அளவில் இங்கே உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்திப் பெருக்கம் வேலை வசதிப் பெருக்கம் ஏற்றுமதிக்கு ஊக்கம் ஆகிய நேரடிப் பலன்களோடு இந்தக் கொள்கையினால் மாநில வருமானமும் அதிகரிக்கும். மாநிலத்தில் பொருளாதாரச் சுபிட்சம் ஏற்படுவதைத் தொடர்ந்து மாநில அரசு அந்த வசதிகளை வேறு துறையில் ஈடுபடுத்திப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

முதலீடு, தொழில் உற்பத்தி ஆகிய சக்கரங்களைச் சுழல விடுவதன் மூலம் மக்களுக்கு அதிக வருவாய் கிடைக்க இந்தப் புதிய தொழில் கொள்கை வழிவகுக்கும். நாளாவட்டத்தில் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ப ஊதிய விகிதம் உயரும் வண்ணம் இந்தக் கொள்கை உயர்தரத்தை உருவாக்கும்.

தமிழக அரசின் இந்தப் புதிய தொழிற் கொள்கை எல்லோராலும் வரவேற்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.
அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

பதிவு எண். M 8676

Licence No. TN/MS(C)/PP-23



இந்த இதழில்...

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதில், விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை! —டில்லியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ... 2

வெற்றிச் செல்வியாம் புரட்சித் தலைவி வாழ்க! —மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் ... 4

வழிகாட்டிய தெய்வம் —மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் ... 6

ஒரு புதுயுகம் கண்விழித்த திருநாள்! —மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு ... 8

மகாமகத் திருவிழா ... 10

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பாங்காய் விளங்கும் பல்துறைப் பணிகள் ... 17

பக்கவாதம் (மருத்துவம்) ... 19

மீன் காட்சியகம் ... 24

நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு! ... 27

நிம்மதியான நிலத்தடி நீர்ப்பாசனம் ... 29

கும்பகோணம் மகாமகத் திருவிழா துயர நிகழ்ச்சி குறித்து அரசின் செய்தி ... 34

தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம் ... 39

ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி ... 41

தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப் பலகைப் போட்டி ... 46

தமிழரசு

மாசித் திங்கள் - 18

மலர்: 22 இதழ்: 17

திருவள்ளுவர் ஆண்டு 2023 1-3-1992

மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அமைச்சரவை (27.2.'92).

காவிரி நீர்:

“நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு: விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.”

193689

டில்லியில் மாண்புமிகு முதல்வர் உரை

நாம் இங்கு எந்தச் சூழ்நிலையில் கூடிப் பேசுகிறோம் என்பதை நன்கு அறிவோம். இந்தக் கூட்டத்தைக் கூட்டியதில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் வெளிப்படுத்தியுள்ள தீவிரமும் நல்லெண்ணமும் பாராட்டுக்குரியதாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்கள் நிலையைத் தெளிவாகச் சொல்லி விட்டோம். காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பான நடுவர் மன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை அளித்துள்ளது. இதை மத்திய அரசு தனது அரசிதழில் பதிவு செய்துள்ளது. இந்த இடைக்காலத் தீர்ப்பை அமலாக்க கர்நாடக அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜூன் மாத முதல் வாரத்தில் காவிரிப் பாசனப்பகுதியில் விவசாயப் பருவ காலம் துவங்கும் பொழுது இப்பிரச்சினை அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுவிடும். இடைக்கால உத்தரவினை அமல் படுத்தி, காவிரி நதி நீர்ப் பாசனப் பகுதியில் வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு உதவும் வகையில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். கர்நாடக முதல்வர் அவர்களும் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டதைத் தொடர்ந்து கர்நாடகாவில் ஏற்பட்ட பெரும் கலவரம் காரணமாக இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் மிகுந்த பாதிப்புக்குள்ளாயின. இரு மாநில உறவையும் இந்தச் சூழ்நிலை பெரிதும் பாதித்து விட்டது. இரு மாநிலங்களுக்கிடையே நட்புறவையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நியாயமான நிவாரணம் அளிக்கக் கோரினோம். சேதத்தின் அளவை அறிந்து, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரணத் தொகையை வழங்க உச்சநீதிமன்ற நீதிபதியை நியமித்து விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக, கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல்வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று நடத்திய பேச்சுவார்த்தையின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரள, பாண்டிச்சேரி மற்றும் தமிழ்நாடு முதல்வர்களுடன் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் 17.2.1992 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையின் முடிவில் 4 முதலமைச்சர்களின் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

கூட்டறிக்கையின் விவரம் வருமாறு:

- காவிரி ஆற்றுப்படுகையில் வசிக்கும் மக்கள் உயர்ந்த பட்ச அளவுக்கு நன்மை பெறும் வகையில் ‘நதிநீர் நாட்டின் வளம்’ என்ற அடிப்படையில் காவிரிப் பிரச்சினைக்கு யதார்த்தமான முறையில் தீர்வு காண முதலமைச்சர்கள் ஒப்புக் கொண்டார்கள். இதற்காக அமைதியான, சுமுகமான சூழ்நிலை உருவாக ஒவ்வொருவரும் உதவவேண்டும். அப்போதுதான் கோபதாப உணர்ச்சிகள் பிரச்சினையைச் சிக்கலாக்காமல், இறுதி முடிவைப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள முடியும்.
- காவிரிப் படுகையில் அண்மையில் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களைத் துரிதப்படுத்தி முடிக்க முதல்வர்கள் ஒப்புக் கொண்டனர்.
- நடுவர் மன்றத்தின் முன்பாக உள்ள அனைத்து நடவடிக்கைகளும் விரைவில் முடிய உதவி செய்வதென்று சம்பந்தப்பட்ட 4 மாநிலங்களும் ஒத்துக்கொண்டன.
- காவிரிப் படுகையில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் மக்களின் நலன்கருதி, காவிரி நீரை முறையாகவும் அறிவியல் பூர்வமாகவும் பயன்படுத்த, சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல்வர்கள் சம்மதித்தனர்.

இவ்வாறு கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் அவர்களும், கர்நாடக முதல்வர் அவர்களும் இந்தச் சூழ்நிலையை நன்கு உணர்ந்து, இவ்விஷயத்தில் அரசியல் சாதுர்யத்தைக் காண்பித்தால், தமிழக மக்களுக்கு நிர்வாகத் திறமை மீது மீண்டும் நம்பிக்கை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்களைப் பொறுத்தவரை, கர்நாடக மாநிலத்திற்குத் தமிழர்கள் திரும்பிச் செல்லத் தேவையான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். இந்த வகையில் கர்நாடக அதிகாரிகளுக்கு தமிழக அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன். சுமுக நிலை திரும்ப, முதற் கட்டமான இரு மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து மீண்டும் சமீபத்தில் துவக்கப்பட்டது.

பிரதமர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு அழைப்பு விடுத்தபோது, அவர் மீது எனக்குள்ள மதிப்பின் காரணமாகவும் பிரச்சினையைப் புரிந்துகொள்ளும் அவரது உணர்வின் காரணமாகவும் அதை நான் ஏற்றுக் கொண்டேன். இந்த வகையில் எனக்குச் சில நிர்ப்பந்தங்கள் இருப்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களைச் சந்தித்தேன். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் விஷயத்தில் விட்டுக் கொடுக்கும் போக்கு கூடாது என்று அனைவரும் ஒருமனதாக வலியுறுத்தினர்.

அவர்கள் எடுத்த நிலை சரியானது. ஏனெனில், காவிரி நதிநீர் வரலாற்றிலே முதன் முறையாக நாட்டின் உச்ச நீதிமன்றமும், இந்திய அரசும் தமிழகத்தின் நியாயமான காரணத்தை ஏற்றுக் கொண்டுள்ளன அதனால்தான், நாங்கள் நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்க வேண்டுமென நியாயமாகக்கோருகிறோம். இதை வலியுறுத்தும் அதே சமயம் நடுவர் மன்றத்தின் விசாரணை தொடர்ந்து நடைபெற வேண்டும். இதுமுற்றுப் பெற்றபின் நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏற்கவும் நாங்கள் தயார் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்கிறோம். ஆனால், நடுவர் மன்றத் தீர்ப்பினை அமலாக்குவதில் குறைபாடு இருக்குமானால் அது தமிழக மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆட்பட வேண்டியிருக்கும். மேலும், நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளின் மீதும் திறமை மீதும் அவர்களுக்குள்ள நம்பிக்கை போய்விடும்.

பல நூற்றாண்டுகளாகக் காவிரி நதிதான் தமிழக மக்களுக்கு வாழ்க்கைப் பாதையாக அமைந்துள்ளது. அவர்களது வளமான எதிர்காலமும், பொருளாதார முன்னேற்றமும் அவர்களுக்கு வாழ்வளிக்கும் காவிரியோடு பின்னிப்பிணைந்தது.

பல ஆண்டுகளுக்குப் பின் இப்படி, கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நடுவர்மன்ற உத்தரவு-அது இடைக்காலத் தீர்ப்பாக இருந்தாலும், இப்பொழுது எங்களுக்குக் கிடைத்துள்ளது. இந்த விஷயத்தில் பிரதமர் தமது நல்லெண்ண முயற்சியாகத் தலையிட்டு நடுவர்மன்றத் தீர்ப்பை அமலாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

(மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.2.92 அன்று புது டெல்லியில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரி நதிநீர்ப் பிரச்சினைக் கூட்டத்தில் ஆற்றிய உரை)

● ●

வெற்றிச் செல்வியாம் புரட்சித்தலைவி வாழ்க!

மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

வெற்றிச் செல்வியாக வீறுகொண்டு விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-வது பிறந்தநாள் விழா, இவ்வாண்டு, தமிழகம் எங்கணும் மிகச் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும், வலிவோடும், எழுச்சியோடும் உணர்ச்சியோடும், ஏற்றத்தோடும் எழிலோடும் கொண்டாடப்பட்டிருப்பது பூரிப்பையும், பெருமிதத்தையும் அளிப்பதாகும்.

பிறந்தநாள் விழாவைப் பெருமுயற்சியோடு பொருத்தமான முறைகளில், ஆங்காங்குக் கொண்டாடிய அனைவரும் நீங்காப்பற்றோடும், தணியா ஆர்வத்தோடும், சலியா உழைப்போடும், தளரா உள்ளத்தோடும் கொண்டாடியிருக்கின்றனர்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் நிலைநாட்டப்பட்ட தமிழகப் பொற்கால ஆட்சி, அவர் வீழ்ந்துவிட்ட உடனே வீழ்ந்துவிட்டது என்ற நிலையிலும், அதனை மீண்டும் தூக்கி நிலைநிறுத்தும் பெருமுயற்சிகளில் ஈடுபட்டுத் தம் அறிவுத் திறனாலும், ஆற்றல் திறனாலும், பண்பாட்டுத் திறனாலும், செயலாற்றல் திறனாலும், செய்து முடிக்கும் திறனாலும், தியாகத் திறனாலும், அந்தப் பொற்கால ஆட்சியை மீண்டும் அமைத்த பெருமை அனைத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழக அரசின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சென்ற எட்டுத் திங்கள்களாக ஆற்றிவரும் அரும் பெருஞ் செயல்கள் அனைத்தும், அனைவராலும் வாழ்த்தி வரவேற்கப்படுவதோடு, போற்றிப் புகழப்பட்டும் வருகின்றன. மின்மினுக்கும் நட்சத்திரங்களுக்கிடையே, தன்னொளி வீசி உலாவரும் முழுமதி போல், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்திய அரசியல் வானில் திகழ்ந்து வருகிறார்.

புரட்சித் தலைவியின் எதிரிகள் இழி சொற்களையும், பழிச் சொற்களையும், ஏசல்களையும், தூற்றல்களையும், வசைமாரிகளையும், வன்முறைகளையும், தாறுமாறாகவும், தரக்குறைவாகவும், அடுக்கடுக்காகவும் வீசிக்கொண்டே இருந்த போதிலும், அவற்றையெல்லாம் சிறிதளவும் பொருட்படுத்தாமல், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போன்று, 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற உறுதி கொண்ட நெஞ்சத்தோடு 1991 தூன் பொதுத்தேர்தலில் பெருமளவுக்கு வெற்றியைப் பெற்றார்கள். 234 உறுப்பினர்கள் கொண்ட சட்டமன்றப் பேரவையில், எதிர்க்கட்சியினராகவுள்ள எதிர்க்கட்சியினர் ஏழு பேர்களுக்கு மட்டுமே இடங்கள் கிடைக்க, 227 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணி ஆதரவோடு, ஆடாத அசையாத ஆட்சியை ஆணித்தரமான முறையில் அரசோச்சி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, தமிழகத்தில் அமைதி நிலவவில்லை. சட்டம்-ஒழுங்கு நிலைகள் சீர்கெட்டுப் போய்க் கிடந்தன. விடுதலைப் புலிகளின் கொலை-கொள்ளை-களவு-கடத்தல் போன்ற வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடின. திரு. இராஜீவ் காந்தி அவர்களின் மறைவினால் ஏற்பட்ட துக்கமும், துயரமும் பலருடைய உள்ளங்களையும் வாட்டிவதைத்துக் கொண்டிருந்தன.

தமிழக அரசைப் பொறுத்து ரூ.902 கோடிக்குப் பற்றாக்குறை நிலை நிலவி வந்தது. எதிர்க்கட்சிகளின் அத்துமீறிய அரசியல் செயல்களால் மாநிலம் சீர்குலைந்து கிடந்தது.



ஏழை எளிய மக்களின் குடும்பங்களையெல்லாம் வாட்டி வதைத்துக் கொண்டிருந்த மலிவு விலை மதுவை அறவே ஒழித்துக் கட்டினார். அதன் மூலம் ரூ.320 கோடி இழப்பு அரசுக்கு ஏற்பட்டது என்ற நிலையிலும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் பொறுப்புணர்ச்சியோடு, மலிவு விலை மதுக்கடைகளை அறவே அகற்றினார்.

ஆயுதங்கள் ஏந்தி, அலைந்து திரிந்து, கொடிய வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் கொட்டத்தை, ஒழித்துக் கட்டுவதில் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் வெற்றி பெற்றார்.

வன்முறை விடுதலைப் புலிகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு உணவு-உடை-உறையுள்-பணம்-ஆயுதம் போன்ற உதவிகளைப் புரிந்து, அடைக்கலம் தந்து கொண்டிருந்தவர்கள் அனைவரும் 'தடா'ச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

உள்நாட்டுப் பகுதியிலும், கடற்கரையோரப் பகுதியிலும் புரட்சித் தலைவி அவர்களால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்து, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தெளிவான திட்பமான - உறுதியான அணுகுமுறையை மேற்கொண்டு, அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முடிக்க அரும்பாடுபட்டு வருகிறார்.

அவர்கள் முடங்கிக் கிடந்த தெலுங்கு-கங்கைக் குடிநீர்த் திட்டத்தை 1993-க்குள் நிறைவேற்றிச் சென்னை மாநகருக்கு குடிநீர் வசதியைச் செய்து தரப்பெரும்பாடுபட்டு வருகிறார்கள்.

புதிய புதிய தொழிற்சாலைகள் ஏற்பட, ஊக்கத்தொகை அளிப்பதுடன் வசதியை உருவாக்குவது - மின்வசதியைச் செய்வது - விற்பனை வரியில் விலக்கு அளிப்பது-விரைவில் உரிமம் வழங்குவது போன்ற புதிய தொழிற் கொள்கையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

சுற்றுலாத்துறை ஒரு தொழிற்றுறையாக வளர்ச்சியுற்று, வளம் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய புதிய கொள்கை முறைகளை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்தார்கள்.

தமிழகத்திலுள்ள சிற்றூர்கள்-பேரூர்கள் ஆகியவற்றின் மேம்பாட்டு வளர்ச்சி கருதி, முதல்வர் அவர்கள் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

புரட்சித் தலைவி அவர்கள் திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். புதிய நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தை உருவாக்கினார்.

புரட்சித் தலைவரின் கல்லறையைப் புதுப்பித்துப் பொலிவுடையதாக ஆக்க ஒரு கோடி ரூபாய் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

கோயில்களின் சிற்பக்கலை, கட்டடக்கலை, செப்பு-வெள்ளி- பொன்-கற்சிலைக் கலை ஆகியவற்றைப் பேணிக்காக்க 'கோயில் பராமரிப்புப் பாதுகாப்பு நிதி' பெருமளவில் திரட்டப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவருக்குப் பெருமை சேர்க்கச் சட்டமன்ற மண்டபத்தில், அவருடைய திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

மதிய சத்துணவுக் கூடங்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் இடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 10,000 மருத்துவ நல முகாம்கள் நடத்தத் திட்டம் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு ரூ.42 கோடி செலவில் ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி-சேலைகள் இனாமாக வழங்கப்பட்டன.

இப்படியாகச் சாதனைகள் பலவற்றையும் நிறைவேற்றி, வெற்றிச் செல்வியாக விளங்கிவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு காலம் இன்புற்று இனிதே வாழ உளங்கனிந்த வாழ்த்துக்கள் பலவும் உரியவாகுக!

வழிகாட்டும் தெய்வம்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்

ஆதரவற்று அனாதையாய் நின்ற திராவிடக் குழந்தைக்கு அன்னையாய் வந்துதித்த அருள் வடிவமாம் எங்கள் தங்கத் தலைவிக்குப் பிறந்த நாள் விழா.

காலப் பிரளயத்தால் அணுவளவேனும் அடி பிறழாமல் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனைகளால் இந்த நாடாள முடியும் என உலகிற்குச் சேதி சொன்ன அறிவுப் பெட்டகமாம் எங்கள் அன்னைக்குப் பிறந்த நாள் விழா.

ஜனநாயகப் பூந்தோட்டத்தை அழித்திட ஆர்ப்பரிக்கும் நச்சரவங்களை, திடமான கொள்கைகளை - வலுவான ஆயுதங்களாய்ப் பயன்படுத்தி, புவியெங்கும் நியாயப் பூக்களின் வசந்தங்களைப் பரவச் செய்த ஒரு யுகப் புரட்சியின் மறுபதிப்பாம் எங்களின் இதய தெய்வத்திற்குப் பிறந்த நாள் விழா.

ஆர்ப்பரிக்கும் அலைகளாய்ச் சோதனைகளும் வேதனைகளும் சூழ்ந்து நின்று அச்சுறுத்திய போதும், பொறுத்திருந்தால் நாங்கள் புல்லாங்குழல்கள் (இனிமையான நாதம்); பொங்கி எழுந்தால் எரிமலைக் கோலங்கள் எனக் காலச் சக்கரத்தின் திசை நோக்கி, தன் வெற்றிப் பயணங்களை முடித்துக் காட்டிய எங்கள் முதல்வருக்குப் பிறந்த நாள் விழா.

கம்யூனிச சித்தாந்தங்களை உலகிற்குப் பரப்பிய சோவியத் மண்ணில், ஒரு விரல் அசைப்பில் உலகமே அழியும் எனச் சூளுரையேற்று அந்த ரஷ்ய பூமியில் காய்ந்து போன ரொட்டித் துண்டுக்காகச் சுட்டுக் கொள்கின்ற சூழ்நிலை.

அது போலவே அனைத்துலகிலும் வீழ்ச்சியுற்ற பொருளாதாரத்தின் நிலை - இந்தியப் பூமியிலும் என்றுமே இல்லாத பணவீக்கம் - பொருளாதார முடை.

காலச் சூறாவளியின் கடுந் தாக்குதல்களால், கன்னித் தமிழர்தம் இல்லங்கள் சூறையாடப்பட்டு விடக் கூடாதே என்ற கவலையால், கண்ணுறங்காத கவனத்தினால், புரட்சிகரமான திட்டங்களினால் இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளியேற்றி அமைதிப் பூங்காவாக மாற்றி தமிழ் மக்களின் நலன்களையும் தமிழ் மண்ணின் பெருமைகளையும் பாதுகாக்க நாளெல்லாம் கண் துஞ்சாது உழைக்

கும் எங்கள் இதய தெய்வம் தமிழக முதல்வ
டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசிய
பாதையில் அறிவாற்றல் மிக்க நடைமுறைகளை
யும், மனிதாபிமானமிக்க அணுகுமுறைகளையு
காணலாம். உதாரணத்திற்கு ஒரு சில:

எவ்வளவு பெரிய இலக்கியவாதியாக இரு
தாலும், அரசியல்வாதியாக இருந்தாலும் பல்வே
மொழிகளை அறிந்து வைத்துக் கொள்ளலாம்
தெரிந்து வைத்துக் கொள்ளலாம். ஆறுமொழ
களில் எளிதாகப் பேச, தெளிவாக எழுத, திற
பட விவாதிக்கும் ஆற்றல் பெற்ற ஒரே ஒ
ஒப்பற்ற முதலமைச்சர் இந்தியத் திருநாட்டிலே
நமது முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சி
தலைவி அவர்கள்தான் என்பதை நாடே விய
பாராட்டிக் கொண்டிருக்கிறது.

வன்முறைகளும், அராஜகங்களும் தாண்ட
மாடும் இந்திய அரசியலில் பெண்கள் அதிகமா
ஈடுபடுவதில்லை. அப்படியே இருந்தாலும் பொ
வாழ்வில் அவர்கள் நிலைத்து நிற்பதில்லை
உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த சுசேத
கிருபளானி, ஒரிசா முதல்வராக இருந்த நந்தி
சத்பதி ஆகியோர் இவ்வளவு பெரிய சோதனை
களைச் சந்தித்ததுண்டா?

ஒரு மாபெரும் இயக்கத்தின் உயிர் மூச்சா
விளங்கிய தலைவர் மறைந்தார். கழகம் உடை
தது. ஆட்சி கவிழ்ந்தது. காலமெல்லாம் நம்
அழிக்க வேண்டும் எனக் கருதிய அரசிய
வல்லூறுகள் நம்மைச் சுற்றி வட்டமிட்டன.

மூன்றாண்டு காலம் எத்தனைச் சோதனைகள்
எத்தனை வேதனைகள்? களத்திலே எதிரிகளி
போர் ஒருபுறம், உடன் இருந்தவர்கள் முதுகி
குத்திய சோதனை மறுபுறம். இந்தியாவில் ந
கேன் இந்த வம்பு என்று எண்ணியிருந்தால் ம
சோர்ந்திருந்தால், திராவிட இயக்கத்தின் '
லாறே அழிந்திருக்காதா? கண்ணீரும் செந்நீ
சிந்தி இலட்சோப இலட்சம் தொண்டர்களா

வலுவான கழகமெனும் மணி மண்டபம் இடிந்து தரை மட்டமாகி இருக்காதா?

கழக அரசு இருந்த அடிச்சுவடே மறைந்து போயிருக்காதா? 91-ஆம் ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி அமைந்த நேரம், எப்படிப்பட்ட நேரம். வேங்கடம் முதல் தென் குமரி வரை எங்கு பார்த்தாலும் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம், கள்ளச் சந்தையில் போதைப் பொருட்களை விற்கும் தேச விரோதக் கும்பலின் நடமாட்டம், திருட்டுக் கொள்ளையர்களாய்க் கள்ளத் தோணியின் வழியாகப் பிழைப்பைத் தேடி வந்தவர்கள் இங்கு இருக்கும் தலைவர்களைப் பட்டியல் போட்டுக் கொலை செய்வோம் என மிரட்டிக் கொண்டிருந்த நேரம்.

தேர்தல் பிரச்சாரத்திற்கென வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியையே சுட்டுக் கொன்ற வெறியர்கள் உலவிய காலம். உயிரைத் திரணமாக மதித்து கடுமையான நடவடிக்கையால் நாட்டை அமைதிப் பூங்காவாக மாற்றிய பெருமை நம் முதல்வர் அவர்களையே சாரும்.

ஒரு சில தலைவர்கள் மிகப் பெரிய பொறுப்பிற்கு வரும்போது சில சட்ட விதிகளையும் மரபுகளையும் கடைப்பிடிப்பதில்லை. ஆட்சி மன்றமும், நீதி மன்றமும் ஒருங்கிணைந்த உறவுடன் இருந்தால் தான் மக்கள் மன்றம் பலன் தர முடியும்.

அந்த வகையில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்றபின் தலைமை நீதிபதியைச் சந்தித்தும் சட்டமன்றத்தில். முதல்வர் செய்ய வேண்டிய பணியினை முறைப்படுத்தியும் சட்டமன்றத்தில் கொண்டு வரும் வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு [illegible] முறையான பதில் அளித்தும் [illegible] முறையாக கடைப்பிடித்தும் [illegible] நம் முதல்வர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

முந்தைய ஆட்சியின்போது, நாட்டைச் சீரழித்துக் கொண்டிருந்த தாய்மார்களின் துன்பத்திற்குக் காரணமான கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியதோடு அல்லாமல், ஆண்டாண்டுக் காலமாகத் தீர்க்க முடியாமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பை உச்ச நீதி மன்றம் உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து தன் கட்சி ஆளுகின்ற மாநிலமாக இருந்தாலும் உடனடியாக மத்திய அரசு அரசிதழில் அறிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி, மத்திய அரசாக இருந்தாலும் அது செய்ய வேண்டிய கடமையிலிருந்து தப்பிச் செல்ல நினைக்குமேயானால், அதைச் சுட்டிக் காட்டுகின்ற துணிச்சலும் வீரமும் நம் முதல்வரிடம் மட்டுமே உண்டு.

திராவிட இயக்கத்தின் வரலாற்றுத் தலைவர் தந்தை பெரியாரின் நெஞ்சிலே இருந்த முள் அகன்றது என்று மாற்றுக் கட்சியினரும் வியந்து

பாராட்டும் அளவிற்கு அரசுப் பணம் இல்லாமல் திருக்கோவில் நிதியிலிருந்து வேத ஆகமப் பள்ளியை அமைத்து எல்லா ஜாதியினரும் படிக்கலாம்- ஆதி திராவிடர்களும் கோவில் அர்ச்சகராக வரலாம் என்று ஜாதி பேத மற்ற சமதர்மச் சமுதாயம் காண, புதுமைப் புரட்சியை உருவாக்கியது நம் முதல்வர் அல்லவா?

அரசு ஊழியர்கள் இறந்தால் அவரது குடும்பத்திற்கு அறுபதினாயிரம் ரூபாய் தந்ததும் நமது இதய தெய்வம் அல்லவா?

எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி, மாற்றிக்கட்ட ஆடையில்லாமல் ஏங்கித் தவித்த ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழைகளுக்கு வேட்டி, சேலை வழங்கிய கொடைத் தன்மை யாருக்கு உண்டு? பல்வேறு தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, புதிய தொழிற் கொள்கையை அறிவித்த பெருமை யாருக்கு உண்டு?

இப்படி ஆட்சி அதிகாரம் அனைத்தையும் மக்கள் நலனையே மையமாக வைத்து, எதிரிகளின் ஏசல் மொழிகளையே தன் வளர்ச்சிக்கு உரமாக்கி யார் எதைச் சொன்னாலும் அதில் நியாயங்களை மட்டுமே செய்து, உழைப்பிற்கு மட்டுமே மதிப்பு அளித்து, உண்மைக்கு மட்டுமே தலை வணங்கி இன்று 44-ஆம் ஆண்டில் தன் வெற்றிக் காலடியைப் பதிய வைக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தியாக வரலாற்றுக்குத் துணை நிற்போம்.

அவர் ஏற்றிருக்கும் சத்திய சோதனையில் வெற்றி பெற எங்களின் இன்னுயிரையும் காணிக்கையாக்குவோம்.

இருண்டு கிடந்த எங்கள் அரசியல் பாதையில் ஒளி ஏற்றி வழி காட்டிய எங்கள் வழிபாட்டிற்குரிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 'எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.'

புதுயுகம் கண்விழித்த திருநாள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. அழகு திருநாவுக்கரசு

தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதி வருகிற புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் வாழ்பவர்கள் நாம் என்ற வரலாற்று உணர்வு நமக்குள் பெருமிதத்தை ஏற்படுத்துகிறது. 1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி ஐந்தரைக் கோடி தமிழ் மக்கள் எழுதிய தீர்ப்பு அகிலம் இதுவரை அறியாத அற்புதத்தைச் செய்தது. மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பும் மணித் திருநாடுகளில், எந்த நாட்டிலும் என்றும் இல்லாத அளவுக்கு மாபெரும் வெற்றியை மக்கள் ஒரு அரசியல் கட்சிக்கு அளித்தது அன்றுதான். அளித்தவர்கள் தமிழக மக்கள்; அளிக்கப்பட்டவர் தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். அந்தச் சத்திய நிகழ்ச்சிக்குச் சாட்சியாக இருந்தவர்கள் நாம்! இருப்பவர்கள் நாம்!

தேசங்கள் அறியாத இந்தத் திருப்புகழைப் பெற்ற பெருமாட்டியின் 44-ஆம் பிறந்த நன்னாள் பிப்ரவரித் திங்கள் 24- ஆம் நாள்! இந்த நன்னாளில் தேசம் முழுவதும் வாழ்த்துகிறது! தென்னகம் வாழ்த்துகிறது! தமிழகம் வாழ்த்துகிறது! நல்லவர்கள் வாழ்த்துகிறார்கள்! நாவார நாமும் வாழ்த்துகிறோம்! புரட்சித் தலைவியின் பிறந்த நாள் ஒரு புதுயுகம் கண் விழித்த திருநாள்.

தேசிய ஒருமைப்பாட்டில் திண்ணமான நம்பிக்கை வைத்துள்ளவர் புரட்சித் தலைவி. அவரால்தான் தென்கோடி பாரதத்தில் அராஜகம் வீழ்ந்தது; அமைதி எழுந்தது; பாரதத்தாயின் பாதுகாப்புக்குப் புரட்சித் தலைவி அளித்த புதுக்கவசம்தான் இந்த நடவடிக்கை. தேசிய நெஞ்சம் கொண்டோரின் திரு உள்ளங்களில் இந்தச் சாதனைச் சரித்திரம் சத்திய வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது.

'நல்லவை எங்கே இருந்தாலும் பிரகாசிக்கும். கெட்டவை இமயமலையின் உச்சியில் வைக்கப் பட்டாலும் இருள் கவிழ்ந்து மறைக்கப்படும்' என்றார் புத்தர் பெருமான். புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று அமர்ந்த நாள் முதல், இன்று அவரின் பிறந்த நாள் வரை நிகழ்த்தப்பட்ட சாதனைகள் ஒளிவீசும் திருமணிகள்.

சாராயத்தை ஒழித்த புரட்சித் தலைவியின் தீராத தீரம் புலவர் பாடும் புகழ் மிக்கது. ஏழைத் தாய்மார்களின் இன்னலைப் போக்க, துணிச்சலோடு நடவடிக்கை எடுத்தவர் புரட்சித் தலைவி அவர்கள். மது உள்ளே சென்றதும் அறிவு வெளியே வந்து விடுகிறது. ஆகவே அறிவார்ந்த ஒரு சமுதாயத்தில் மதுவுக்கு இடமில்லை என்று அவர் பிரகடனப்படுத்தினார். அதற்காக அவர் எடுத்து வரும் முயற்சிகள் நிகழ்காலத்தின் போற்றுதலுக்கும் வருங்காலத்தின் வாழ்த்துதலுக்கும் உரியவை.

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையில் இம்மியளவும் உரிமையை விட்டுக் கொடுக்காது போராடிப் போராடிப் புதுப்புது வெற்றிகளைப் பெற்று வரும் புரட்சித் தலைவியின் துணிச்சலும், வீரமும் ஒரு புதிய புறநானூற்றுக்குப் பொருளாக அமையத் தக்கவை.

காவிரிப் பிரச்சினையில் கர்நாடக அரசு தவறுக்கு மேல் தவறு செய்தது, தமிழர்களை வஞ்சித்தது ஆனாலும் அன்னை மனம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்துக் கன்னடர்களைப் பாதுகாத்து உண்மையான அமைதிப் பூங்காவை இங்கே உருவாக்கிக் காட்டினார்கள்.

தேர்தல் காலத்து உறுதி மொழிகளுக்கு ஒப்பற்ற மதிப்பளித்து, மக்கள் மன்றத்தில் வைத்த திட்டங்களைச் சட்டமன்றத்தில் செயல்படுத்தும் தனிப்பெருமை புரட்சித் தலைவி அவர்களுக்கே உண்டு.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தமிழகம் இன்று ஒரு தொழிற் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. காரணம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற புதிய, எளிய தொழிற் கொள்கைகள்.

துறை தோறும், துறை தோறும் புரட்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி வரும் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளாட்சித் துறையில் புரிந்து வரும் சாதனைகள் மிகப் பெரியவை.

கிராமங்களிலுள்ள மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செப்டம்பர் 91 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற செப்டம்பர் 1992-க்குள், தமிழ்நாட்டின் அனைத்து ஒன்றியங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகளும் நிறைவேற்றப்படும்:

1. 50,000 இலவச வீடுகள் ஆதி திராவிடர்களுக்கு.
2. 1,400 கி.மீ. நீளம் தார்ச்சாலை.
3. 2,000 கி.மீ. நீளம் கற்சாலை.
4. 500 புதிய பள்ளிக் கட்டடங்கள்.
5. 500 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுக் கூடங்கள்.
6. ஆதிதிராவிடர்களுக்கு 2,100 இலவச பாசனக் கிணறுகள்.
7. 1,000 சிறுபாசன ஏரிகள் மேம்பாடு.
8. 500 கசிவு நீர்க் குட்டைகள்.
9. 10,000 எக்டேர் நிலத்தில் ரூ.3 கோடி கன்றுகளுடன் சமூகக் காடுகள்.

இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், மிகவும் அத்தியாவசியமான, குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு விளக்குகள், ஆகியவற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றப்படவேண்டுமென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் ஒரு குடிநீர் வசதியும் இல்லாத கிராமங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாகக் குடிநீர் வசதி செய்யப்பட வேண்டுமென்ற முதல்வர் அவர்களின் ஆணை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 1,48,749 குடும்பங்களுக்கு ரூ.46.50 கோடி மானியமாகக் கொடுத்து, சொத்துக்களை உருவாக்கி வங்கிக் கடனும் அளித்து அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்நிதியாண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மகளிர்க்கு 550 குழுக்கள் அமைத்து வருவாய் ஈட்டக் கூடிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எரிசக்தியைச் சேமிக்கவும், இயற்கையிலிருந்து எரிசக்தியைப் பயன்படுத்தவும் ஏதுவாக, சாண எரிவாய்வு, தூளா போன்ற திட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் அவர்கள் ஒரு மகத்தான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். சாதி, மத, இன வேறுபாடற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு 'மாதிரிக் குடியிருப்புத்' திட்டத்தை தர்மபுரி மாவட்டம் பர்கூரில் தொடங்கி வைத்துள்ளார்கள். இந்த மாதிரிக் குடியிருப்பில் சாதி சமய வேறுபாடு இல்லாமல், அனைத்துச் சமுதாயத்தினரும் உள்ள 300 வீடுகள் அமைக்கப்படும். இதில், இந்து இஸ்லாமியர் மற்றும் கிறித்துவர்களுக்காக மூன்று ஆலயங்கள் அமைக்கப்படும். மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப்பள்ளி, அங்காடிகள், பூங்கா, தாய்சேய் நிலையம் போன்ற அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். தர்மபுரி மாவட்டம் பர்கூரில் அமையவிருக்கும் இந்த மாதிரிக் குடியிருப்பு 'ஜெயலலிதா நகர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது போன்ற மாதிரிக் குடியிருப்பு தமிழ் நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட உள்ளது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, கிராம மக்களுக்கு நிறைவான - நிலையான நன்மைகளைத் தொடர்ந்து உருவாக்கிக் கொண்டிருக்கும் வகையில், ஆய்வுக்குழு, கண்காணிப்புக்குழு போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. காவல்துறை, பொதுப்பணித் துறை போன்று ஊரக வளர்ச்சித் துறையிலேயும் சிறப்பாகச் செயல் புரியும் அலுவலர்களுக்கு, ஆண்டு தோறும் பரிசு வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் 3 மாநகராட்சிகள், 31 நகராட்சி நகரியங்களில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.54 கோடி செலவில் அடிப்படை வசதிகளும், 28 நகராட்சிகளில் 'ஹட்கோ' நிறுவனத்தின் கடனுதவியுடன், குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இலட்சியங்களைச் சிலைகளைப் போல் கல்லில் உருவாக்க வேண்டும் என்பார்கள். அப்படிச் சிலை செதுக்கும் சிற்பியின் சீரிய பொறுமையோடும், சிதறாத கவனத்தோடும், ஒப்பற்ற திறனோடும், உறுதி வாய்ந்த மனத்தோடும் தமிழகத்தை உருவாக்கிவரும் தன்மான முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 44-ஆம் பிறந்த நாளான இந்தத் திருநாளில், அவர்களின் தலைமையின் கீழ் ஒப்பற்ற பொற்காலத்தைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தருவோம் என்று உறுதிகொள்வோமாக!

புரட்சித் தலைவி அவர்கள் -
வாழ்க பல்லாண்டு
வளமார் தமிழ் நாடாண்டு!



மகாமகப் பெருவிழா - பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை, குளத்தில் மலரும் குறிஞ்சி மலர் - பக்திப் பெருவிழா - பரமனருள் திருவிழா - அந்த மகத்தான விழா 1992-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் செவ்வாய்க் கிழமை மலர்ந்தது. எங்கே? குடந்தை எனப்படும் கும்பகோணத் திருநகரில்! விழாவின் விழுப்புகழுக்குக் காரணம் இரண்டு. தமிழக அரசே 10 கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு விழா ஏற்பாடுகளைச் திறம் படச் செய்திருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நட்சத்திரம் மகாமகமாகப் பரிணமித்தது அதன் பயனாய் மக்கள் நீராடும் புனித வேளையில், மகாமகக்குளத்தில் புரட்சித் தலைவி அவர்களும் புனித நீராடியது.

கும்பகோணம்

குடமூக்கு என்று நாயன்மார்களாலும், திருக்குடந்தை என்று ஆழ்வார்களாலும், கல்யாணபுரம், பாஸ்கரச் சேத்திரம் என்று புராணங்களாலும் புகழப்படும் புண்ணிய நகரம் கும்பகோணம். காவிரி ஒரு பக்கம், அரிசிலாறு மறுபக்கம் நீர் வளம் பெருக்க, 'சீரார் செந்நெல் கவரிவீசும் திருக்குடந்தை' என்று நம்மாழ்வார் பாடிப்பரவுவதுபோல் பல்வளமும் பாங்கோடு படைத்த பழம்பதி; இறை வழிபாட்டுச் சிறப்பாலும், ஈகை மனத்தாலும் அன்பாலும் பண்பாலும் சிறந்த ஆடவரும் பெண்டிரும் வாழ்வதனால் நலத்தால் மிக்கார் குடந்தை என்று நாவாணரால் நற்சான்றிதழ் அளிக்கப்பட்ட நன்னகரம். இது கோயில் மாநகரம். திரும்பும் திசையெல்லாம் தெய்வீக மணம் வீசும் திருக்கோயில்கள். சிவபெருமானுக்கு 12 கோயில்கள், பெருமாளுக்கு 7, பிரம்மாவுக்கும் ஒன்று என்று மூவர்க்கும் கோவில் கண்ட கொள்கைச் சிறப்புடையது குடந்தை. இங்குள்ள கும்பேஸ்வரர் கோயில் புகழ் மிக்கது. வரலாற்றுச் சிறப்புடையது. குடந்தையிலுள்ள கீழ்க்கோட்டம் அப்பரடிகளின் பாடல் பெற்றது.

மகாமகக்குளம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூவகையிலும் சிறப்புடையது குடமூக்கு என்னும் கும்பகோணம். அதிலுள்ள மகாமகக்குளம், தொல் பழங்காலம் முதல் தீர்த்தங்கள் பல உடையதாய்த் திருப்புகழ் கொண்டது.

பாரதத்தில் நிர்மலமான நீராடல் தலங்கள் நிறையவுண்டு. அவற்றுள் கும்பமேளா நடைபெறும் பிரயாகையும், ஆந்திரத்துப் புஷ்கரணமும், கும்பகோணத்து மகாமகக்குளமும் தனிச்சிறப்புடையவை. அவற்றுள்ளும் முதலிரண்டும் ஓடும் நீர்த் தீர்த்தங்கள். மகாமகக்குளம் மட்டுமே தேங்கிய நீர் நிலை. இறையருள் நிலையாய் நின்று அருள் தரும் குளமே மகாமகக்குளம். இதில் நீராடுவோர் பாவம் அகலும். இது பண்டைய புராணம் முதல், பைந்தமிழ்க் கவிஞன் பாரதி வரை சொல்லும் செய்தி. கங்கையினும் இது புனிதமானது என்பதைக் கங்கையினும் வீசம் அதிகம் என்னும் வாசகம் விளக்குகிறது.

'பூமருவும் கங்கை முதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மகாமகந்தான் ஆடுதற்கு வந்து
வழிபடுங்கோயில்'

என்று சேக்கிழார் பெருமான் மகாமகச் சிறப்பைப் பாடும் அளவுக்கு இங்குள்ள மகாமகக்குளம் மகிமை வாய்ந்தது.

மகாமக விழா

பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை வருவது மகாமகம். சூரியன் கும்பராசியிலும் (தமிழ் மாசி மாதம்) குரு சந்திரனுடன் சிம்ம ராசியிலும் இருக்கும்போது வரும் மக நட்சத்திர நாள் மகாமகம் ஆகும். அன்று பௌர்ணமி அமைவது இயல்பு. இன்னொரு வானியல் கோட்பாட்டின் வழியும் இதை விளக்கலாம். வியாழன் (குரு) கதிரவனைத் தன் பாதையில் சுற்றிவர எடுத்துக் கொள்ளும் காலம் 11.8618 ஆண்டு. எனவே 12 ஆண்டுக்கு ஒரு முறை மகாமகம் மலர்கிறது.

இருபதாம் நூற்றாண்டில் வந்த மகாமகங்கள் எட்டு. அவை வந்த நாட்கள்.

1. 6.3.1909
2. 22.2.1921
3. 10.3.1933
4. 26.2.1945
5. 25.2.1956
6. 14.2.1968
7. 1.3.1980
8. 18.2.1992

இந்த எட்டு விழாக்களில் திக்கெட்டும் புகழ்படைத்த விழா 18.2.1992.

விழாக்கோலம்

குடந்தைக்கு வரும் எல்லாச் சாலைகளிலும் சாரிசாரியாக மக்கள் கூட்டம். பார்ப்பவர் விழிகளில் பரவசம். வியப்பு! எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கியே செல்கின்றன (All roads lead to Rome) என்பது பழமொழி. எல்லாச் சாலைகளும் கும்பகோணம் நோக்கியே செல்கின்றன என்பது புதுமொழி.

சிறப்புப் பேருந்துகள் - சிறப்புப் பேருந்து நிலையங்கள் - சிறப்புப் போக்குவரத்து ஏற்பாடுகள் என்று எங்கும் சிறப்பு மயமாயிருந்தது. கையும் பையுமாகக் காணப்பட்ட மக்களைக் காணும் போதெல்லாம் 'நோக்கு திசையெல்லாம் நாமன்றி வேறில்லை' என்னும் பாரதியின் பாடல் வரியே அனுபவமாயிற்று.

புனித நீராடல்

மகாமக நாளுக்கு முதல்நாளே, கும்பலில் நீராடுவதைத் தவிர்க்க விரும்பியவர்கள் நீராடத் தொடங்கினார்கள். முறைப்படியான புனித நீராடல் விழா 18-ஆம் தேதி கடவுளர் திருவீதி உலாவுடன் தொடங்கியது. மகாமகக்குளத்தில் தீர்த்தவாரிக்கு உற்சவ மூர்த்திகள் எழுந்தருள, மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், துறவியரும் வருகைதர அன்பர்களின் வெள்ளம் அலை மோத, குறிக்கப்பட்ட புனித வேளையாகிய 11.45 முதல் 12.30 வரையுள்ள காலத்தில் புனித நீராடல் தொடங்கியது.

கும்பகோணத்துச் சிவன் கோயில்களிலிருந்து திரு

வீதியுலா வந்து குளக்கரையில் காத்திருந்த 12 உற்சவ மூர்த்திகளிடமிருந்தும் 12 அஸ்திரதேவர்களைக்கையில் ஏந்தியபடி '12' குருக்களும் 11.58 மணிக்கு நீராடினர்.

அதே நேரத்தில் குளத்தின் வட கரையில் இருந்த 16 கால் மண்டபத்தின்கீழ் மடாதிபதிகளும் துறவியரும் புனித நீராடினர்.

மகாமகக்குளத்தில் மாண்புமிகு முதல்வர்

முற்பகல் 11.25-க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மக்கள் பெருந்திரளாய்த் திரண்டிருந்த மகாமகக் குளத்துக்கு வந்தார். அவருடன் அமைச்சர் பெருமக்களும் வந்தார்கள். முதல்வர் படித்துறையில் இறங்கியதும், காசி விசுவநாதர் கோயிலைச் சேர்ந்த இராமநாத குருக்கள் பூரண கும்ப மரியாதையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார். 11.30 மணிக்கு முதல்வர் அவர்களும் திருமதி சசிகலா அவர்களும் வழிபாடு செய்தபின் புனித நீராடல் தொடங்கியது 21 புனித கலசங்களில் வைக்கப்பட்ட தீர்த்த நீரில் முதல்வர் நீராடினார்.

அஞ்சல்தலை, மலர் வெளியீடு

மகாமகத்தையொட்டி மைய அரசு அஞ்சல்துறை வெளியிடும் முதல்நாள் அஞ்சல் உறையையும், மகாமகச் சிறப்பு அஞ்சல் தலையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டி வெளியிட்ட 'மகாமகம் - மலர் 1992' என்னும் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக் கொண்டார். அந்தச் சிறப்பு மலர், மிகச் சிறந்த முறையில் செய்திப் பேழையாக உருவம் உள்ளடக்கம் இரண்டிலும் உயர்ந்து விளங்கியது.

நேரில் சென்று ஆறுதல்:

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.

10 இலட்சம் பேருக்கு உணவு

அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 இலட்சம் பேருக்கு உணவு வழங்குவதன் அடையாளமாக, உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு

மாண்புமிகு தமிழக முதல்வரின் 44-ஆவது பிறந்த நாளும், பிறந்த நட்சத்திர அடிப்படையில்மகாமகமும் ஒன்றாக வருவதைக் குறிக்கும் வகையில் அவருக்கு, 44 பவுன் தங்கத்தினாலான மகாமகக்குள உருவமைப்பை நினைவுப் பரிசாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் வழங்கினார்.

அடுத்து கி.பி. 2004 ஆம் ஆண்டில் 'மகாமகம்' வரும்: இந்த நூற்றாண்டின் இறுதி மகாமகத் திருவிழாவாகிய இந்த விழா 18.2.1992 அன்று வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவாய் நிகழ்ந்தேறியது. மனதில் நிறைந்த மாபெரும் விழாவாய் அது நினைவில் என்றும் நிற்கும்.

இளந்தேவன்.

படமும் செய்தியும்

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். நாகூர் மீரான் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் பதவிப் பிரமாணமும் ரகசியக் காப்புப் பிர்மாணமும் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அமைச்சர் பெருமக்களும் இந்த விழாவில் கலந்து கொண்டனர் (15.2.'92).

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ்.ரகுபதி அவர்களுக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்ற அமைச்சர் பெருமக்களும் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர் (27.2.'92).

சென்னை கிறித்துவக் கல்லூரிப் பிரச்சினை தொடர்பான கூட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளரும் அதில் கலந்து கொண்டனர் (26.2.1992).

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள் தமது மனைவியுடன் சென்னை வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை இல்லத்தில் சந்தித்து பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார் (24.2.'92).

கும்பகோணம் மகாமகக் குளத்தில் வைத்து பூஜை செய்யப்பட்ட 20 புனித நீர் வெள்ளிக் கலசங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது பிறந்த நாளையொட்டி 20 திருக்கோயில்களுக்குக் காணிக்கையாக வழங்கினார் (24.2.1992).



காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் புதுடெல்லியில் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் (15.2.'92).

மாநிலக் கணக்காயர் அலுவலகம்

(கணக்கு மற்றும் பணிவரவு)

தமிழக அரசு ஊழியர்கள் கவனத்திற்கு

தமிழக அரசின் ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதியின் 1990-91-ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் (GPF அக்கவுண்ட் ஸ்லிப்) அனுப்பப்பட்டு வருகின்றன என்பதையும், அவை 1992-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இறுதிக்குள் உங்களுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கணக்கு அறிக்கைகள் 1991-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நீங்கள் பணிபுரிந்த அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கணக்கு அறிக்கைகள் மிக்க கவனத்துடன் எந்தவிதக் குறைபாடும் இல்லாமல் தயாரிக்கத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், தவிர்க்க இயலாத காரணங்களால் குறைகள் காணப்பட்டால், சம்பளப் பட்டியல் விவரங்களுடன் கணக்கு எண்/துறை/அலுவலகம்/ மாவட்டம்/பின்கோடு ஆகிய விவரங்களுடன், தங்கள் அலுவலக அதிகாரிகள் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

திரு. என். இராமச்சந்திரன்
கணக்கு அலுவலர்
எப்.எம். பிரிவு
(F.M.I. Section)
மாநிலக் கணக்காயர் அலுவலகம்
261, அண்ணா சாலை
சென்னை-600 018

என்றும் தங்களுக்காகப் பணிபுரியக் காத்திருக்கிறோம். தங்கள் பொது வருங்கால வைப்பு நிதியின் 'நியமனப்பத்திரம்' (நாமினேஷன்) தாக்கல் செய்தவிட்டீர்களா?

கணக்கு அலுவலர்.

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்:

பாங்காய் வளரும் பல்துறைப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில் 9 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.879 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்திருந்தது. மேலும் 1991-92-ஆம் ஆண்டில் 5 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.2.141 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது. மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 14 சமுதாயக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

தொகுப்பு வீடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 2,185 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.308.156 இலட்சம் ஒதுக்கீடு செய்த, அரசின் குறியீடான 2,135 தொகுப்பு வீடுகளும் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. மேலும், நடப்பு ஆண்டு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ரூ.367.958 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியிலிருந்து 2,240 தொகுப்பு வீடுகள் கட்ட அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. இவற்றில் இதுவரை 625 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,615 வீடுகள் கட்டி முடிக்கப்படவுள்ளன.

ஊராட்சிக் கட்டடம்

1990-91-ஆம் ஆண்டில் 75 ஊராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.49.900 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இந்நிதியிலிருந்து 75 ஊராட்சிக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சிறு பாலங்கள்

1990-91-ஆம் ஆண்டில் 144 சிறு பாலங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.17.107 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. அரசின் குறியீடான 144 பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

ஜீவன்தாரா கிணறுகள்

1990-91-ஆம் ஆண்டில் 72 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுவதற்காக அரசு ரூ.18.05 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தது. இதில் 33 கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 39 பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

தொலைக்காட்சி அறை

கிராமப்புறங்களில் அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தொலைக் காட்சிப் பெட்டிகளுக்காக130அறைக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.11.484 இலட்சம் அரசு ஒதுக்கியிருந்தது. அரசின் குறியீடான 130 தொலைக் காட்சிப் பெட்டிகள் வைக்கும் கூடங்களும் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. மேலும், நடப்பு ஆண்டிற்கு இப்பணிக்காக அரசு ரூ.8.587 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயு

1990-91-ஆம் ஆண்டில் 354 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க அரசு ரூ.13.614 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இதில் அரசின் குறியீடான 354 சாண எரிவாயுக் கலன்களும் அமைக்கப்பட்டுவிட்டன.

டிரைசம்

490 நபர்கள் சுயவேலைவாய்ப்புப் பெறும் வகையில் பயிற்சி அளிக்க அரசு ரூ.10.606 இலட்சம் நிதி ஒதுக்கியதில் குறியீட்டையும் மிஞ்சும் அளவில் 495 நபர்களுக்குச் சுயவேலைவாய்ப்புப் பெறும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கசிவுநீர்க் குட்டை

1990-91-ஆம் ஆண்டில் 31 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க அரசு ரூ.46 இலட்சம் நிதி ஒதுக்கியது. அரசின் குறியீடான 31 கசிவுநீர்க் குட்டைகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 21 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

சமூகக் காடுகள்

1990-91-ஆம் ஆண்டில் 15-10 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க அரசு ரூ.43.16 இலட்சம் நிதி ஒதுக்கியதில், அரசின் குறியீடான 15-10 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டு விட்டன. மேலும் நடப்பு ஆண்டிற்கு 15 இலட்சம் மரக்கன்றுகள் தயார் செய்து விநியோகிக்க ரூ.18.914 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதில் இதுவரை 11 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சி உள்ள மரக் கன்றுகள் விநியோகம் செய்யத் தயார் நிலையில் உள்ளன.

- கே.பி. நல்லதம்பி

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

மாணவர் பக்கம்:

அறிவுச்சுடர்

கேள்விகள்

1. இந்தியாவில் உள்ள மலையி லேயே அதிக உயரமான மலை எது?

2. தமிழ்நாட்டில் உள்ள மலை யிலேயே அதிக உயரமான மலை எது?

3. லிபியாவின் தலைநகரம் எது?

4. முதலில் இந்தியா அணு வெடிச் சோதனை எங்கு எப்பொழுது நடத் தியது?

5. மலேரியா கிருமியை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

6. உலகிலேயே மிகப் பெரிய சுற் றுப் பிரகாரம் உடைய கோயில் எது?

7. தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர் யார்?

8. நீராவியின் விசையைக் கொண்டு இயந்திரங்களை (Steam Engine) இயக்கலாம் என்று யார் கண்டு பிடித்தார்?

9. அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?

10. M.B.B.S. என்ற சுருக்கெழுத் தின் விரிவு என்ன?

11. துளசியின் மருத்துவக் குணம் என்ன?

12. 'கொலம்பஸ்' எந்த நாட்டைச் சேர்ந்த மாலுமி?

பதில்கள்

1. உத்திரப்பிரதேசத்தில் உள்ள கேதார்நாத் மலை. இதன் உயரம் 11,750 அடி.

2. உதகமண்டலம். இதன் உயரம் 7,500 அடி.

3. திரிபோலி

4. ராஜஸ்தான் பாலைவனத்தில் உள்ள 'போகரான்' மலைத்தொட ரில், 18.5.1974 அன்று நடத்தியது.

5. 'ரோனால்ட் ரோஸ்' (Ronald Ross).

6. இராமேசுவரம் கோயில் (தென் இந்தியா).

7. 'ஜான் பெய்ர்ட்' (John Baird)

8. 'ஜேம்ஸ்வாட்'

9. 'காக்ஸ்டன்'

10. Bachelor of Medicine and Bachelor of Surgery.

11. 'வைரஸ்' எதிர்ப்புத் தன்மை பெற்றது.

12. இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.

டி. சத்தியநாராயணன்
9-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு
சிங்காரம்பிள்ளை மேல்நிலைப்பள்ளி
வில்லிவாக்கம், சென்னை-600 049

பற்களைப் பாதுகாப்போம்!

'பல் போனால், சொல் போச்சு' என்பார்கள். பற்கள் முக அழகுக்கு மட்டுமல்ல, சொற்களை நன்றாக உச்சரிக்க வும் உதவுகிறது. அதே சமயம் உணவை மென்று சாப்பிடவும் அது இன்றியமை யாததாகிறது.

சிறுவயது முதலே பற்களைப் பாது காத்து வந்தோமானால், பிறகு பல் வலியாலும் அதனால் உண்டாகும் உடற் கோளாறுகளாலும் தொல்லைப்பட வேண்டியதில்லை.

அண்மையில் சென்னை எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடந்த பல் மருத்துவ முகாமில், பெரும் பாலான மாணவியருக்குப் பல் சொத்தை இருந்ததைப் பார்க்க முடிந்தது.

பல் சொத்தை எப்படி ஏற்படுகிறது?

'சாக்லேட், பிஸ்கட், ஐஸ்கிரீம் போன்ற பண்டங்களைச் சாப்பிடும்போது, அவற் றின் துகள்கள் பற்களிடையே ஒட்டிக் கொள்கின்றன. அதன்மூலம் பல் சொத்தை நோய் ஏற்படுகிறது' என்கிறார் பல் மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்கள்.

'பல் ஈறுகளில் இரத்தம் கசிதல், பற்களில் காரை படிதல், வாய்ப்புண், உதடு வெடிப்பு, நாக்கு வெளுத்தல் போன்ற நோய்கள் மாணவ மாணவி களிடம் காணப்பட்டன' என்றும், அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் குறிப் பிட்டார்-

'வசதியான குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பல் சொத்தை நோய் ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் ஏற்கெனவே, மருத்துவச் சோதனை செய் துள்ளனர்.

'கிராமப்புறக் குழந்தைகளிடம் பல் சொத்தை குறைவாக உள்ளது. ஊட்டச் சத்துக் குறைவு காரணமாக, வாய்ப்புண் போன்ற நோய்கள் பொருளாதார ரீதி யில் பின்தங்கிய மாணவர்களிடம் காணப் படுகின்றன.

'காலையிலும், மாலையிலும் பல் துலக்குவதன் மூலமும், கீரைகள், பழங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவதன் மூலமும் மேற்படி நோய்கள் வராமல் தடுக்க முடியும்.'



டாக்டர் ஞானசுந்தரம் அவர்கள் தலைமையில், 60 பல் மருத்துவர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர்.

தமிழக அரசுடன் அரிமா சங்கம், இந்தியன் வங்கி, பல் மருத்துவக் கல்லூரி ஆகியவை இணைந்து இந்த முகாமைச் சிறப்புற நடத்தின.

முத்துப் போன்ற பற்களைப் பெற வேண்டுமானால், மருத்துவர்களின் முன்யோசனைப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

இளம் வயது முதலே பற்களைப் பாதுகாத்து வந்தால், முதிய வயதில், பற்களை இழந்துவிடும் நிலையிலிருந்து நாம் விடுபடலாம் அல்லவா?

மருத்துவம்:

பக்கவாதம்

STROKE

ஒருவருடைய ஒரு கை அல்லது ஒரு கால், திடீரென்று பயன்படுத்த முடியாமல் உணர்ச்சி யற்றுப் போய்விடும்; 'ஒரு கை விழுந்துவிட்டது; ஒரு கால் விழுந்துவிட்டது' என்றெல்லாம் இதைக் குறிப்பிடுவார்கள்.

இரண்டு கைகளும், இரண்டு கால்களுமோ- முகத்திலிருந்து கால் வரையிலான முழு உடலின் சரிபாதிப் பாகமோகூட அவ்வாறு இயக்க முடியாதபடி மிகக் கொடூரமாகப் பாதிக்கப்பட்டு சிலரைப் படுக்கையிலேயே கிடக்கும்படி பரிதாப கரமான நிலைக்கு ஆளாக்கிவிடுவதும் உண்டு.

இவ்வாறான நிலைமையையே ஆங்கிலத்தில் STROKE என்றும், தமிழில் பக்கவாதம் என்றோ இழுத்துக் கொண்டுவிட்டது என்றோ பொது வாகக் குறிப்பிடுவது உண்டு. எப்போதாவது - திடீரென்று இரத்தக்குழாய் தொடர்பான பாதிப் பால் ஏற்படக்கூடிய விபத்தே இது.

இதைப்பற்றிப் பூர்வாங்கமாக அறிந்து கொள்ளு வதற்காக, டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி., அவர்களைச் சந்தித்துக் கேட்டோம்; அப்போது நாம் தொடுத்த வினாக்களும், அவர் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன:

- சந்திப்பு: பி.எல்.ஆர்.

ஸ்ட்ரோக் (Stroke) என்றால் என்ன?

இதயத்தின் ஒழுங்கான இயக்கத் தில் ஏற்படுகின்ற பாதிப்புக்கூட Stroke என்றுதான் கூறப்படும்; ஆனால், மருத்துவத் துறையில் அந்தச் சொல்லானது, நரம்பு தொடர்பான எதிர்பாராத பாதிப் பைத்தான் குறிப்பிடும்; பொதுவாக இதுவே பக்கவாதம் என்று சொல்லப் படுகிறது.

ஒருவருக்குப் பக்கவாதம் ஏற்படு வதற்கான முக்கியக் காரணங்கள் யாவை?

மூளையில் - ஆக்ஸிஜன், சர்க் கரை ஆகிய இரண்டும் தொடர்ச்சி யாக இருந்தால்தான் அதன் இயக்கம் செம்மையாக இருக்கும். நமது உடல் உறுப்புகள் எல்லாம் சரியாகச் செயல்படச் செய்யும் முக்கியக் கேந் திரம்தான் மூளை; அங்கிருந்தே நம் எண்சாண் உடம்பிலுள்ள எல்லா நரம்புகளுக்கும் தேவையான கட் டளைகள் உடனுக்குடன் பிறப் பிக்கப்படுகின்றன.

இந்த வேலை ஒழுங்காக நடை பெற இரத்தக் குழாய்களின் மூலம் ஆக்ஸிஜன், சர்க்கரை இரண்டும் இரத்தத்தோடு இரத்தமாகத் தொடர்ச்சி யாக மூளைக்குப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். ஆக்ஸிஜன் ஒரு வர் மூளைக்குக் குறைந்தது பத்து செகண்டுக்குப் போகாவிட்டால், அவர் சுயநினைவையே இழந்து விடுவார்; ஒருவர் மூளைக்கு அவை மூன்று நிமிடம் போகவில்லையென் றால் எவ்வாறான சிகிச்சையும் பயனின்றிக் கோமா நிலைமைக்கே அந்த நபர் போய்விடுவார்.

மூளையின் வேலைகள் சிறப் பாக அமைய ஆக்ஸிஜன் - சர்க் கரை ஆகியவற்றுடன் கூடிய இரத்த ஓட்டமே முக்கியம் என்றோமல்லவா? இது தடைப்படுகிறபோது மூளை யின் இயக்கம் பாதிக்கப்படும். இதுபோன்ற பாதிப்பேStroke ஆகும்.

பக்கவாதம் ஒருவருக்கு எப்படி யெல்லாம் ஏற்படக்கூடும்?

பாதிப்பிற்கு ஆளானோரைக் கணக்கெடுத்துக் கவனித்தோமானால் முக்கால்வாசிப் பேருக்குச் சற்றும் எதிர்பாராமல் திடீரென்று அவ் வாறு வந்திருக்கும்; சிலருக்குச் சிறிது சிறிதாக ஏற்பட்டிருக்கும்.

மூளைக்குச் செல்லுகின்ற இரத்த ஓட்டம் நூறு சதவிகிதம் நின்று போய்விட்டால், உடனே பக்கவாதம் உண்டாகும். இதை Acute Stroke என்கிறோம். சிலபேருக்குச் சிறிது சிறிதாக அவ்வாறான தடை ஏற் பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வரும்; இப்படி ஏற்படும் பக்கவாதம் Stroke in Evolution எனப்படும்.

இவ்வகை வாழ்க்கை விபத் தானது பெரும்பாலும் அறுபத்

டாக்டர் பி. சிற்றம்பலம், எம்.டி.,

தைந்து வயதைக் கடந்தவர்களுக்குத் தான் வரும்.

இளம் வயதினருக்கு வரவே வராதா?

அப்படிச் சொல்லமுடியாது; ஒருசில நேரங்களில் - இளைஞர்களுக்கும், கைக் குழந்தைகளுக்கும் கூட வரும்.

பக்கவாதம் என்பது பெரும்பாலும் குறிப்பிட்ட நாடுகளில் - அல்லது குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில் உள்ளவர்களுக்குத்தான் வரும் என்று சொல்லப்படுகிறதே சரியா?

இந்த வியாதிக்கு அப்படியெல்லாம் நாடு-சீதோஷ்ண நிலைப் பாகுபாடெல்லாம் இல்லை. உலகம் முழுவதுமே இந்தவகைப் பாதிப்பு உள்ள மக்களைப் பரவலாக நாம் பார்க்க முடியும். இன்னும் திட்டவட்டமாகச் சொல்வதென்றால் நோயுற்றுச் சாகின்ற உலக மக்கள் எண்ணிக்கையை நாம் ஒரு 'சர்வே' செய்தோமானால் - மாரடைப்பின் காரணமாக இறப்போர் தொகைக்கு அடுத்ததாகப் புற்றுநோயால் இறப்போர் எண்ணிக்கையும் - அதை அடுத்து மூன்றாவதாக இந்தப் பக்கவாதத்தால், இறப்போர் தொகையும் தான் அதிக அளவில் இருக்கிறது.

பக்கவாதம் எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் ஒன்று தானா?

இல்லை; இதற்கான காரணம் ஒவ்வொருவருக்கு வேறுபடும்.

மூளைக்கு இரத்தம் கொண்டு போகும் இரத்தக் குழாயில் (Intracerebral Vessel) அடைப்பு ஏற்பட்டு Stroke வருவதுதான் குறிப்பிடத்தக்க முக்கியக் காரணம்.

இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயிலோ, மகாதமனி (Aorta) போன்ற மற்ற முக்கிய இரத்தக் குழாய்களிலோ எங்காவது அடைப்பு ஏற்பட்டு இரத்தக் குழாய் சிதைந்து போவதால் ஏற்படுகிற பக்கவாதம் Embolus எனப்படும்.

இதயத்தில் இரத்த உறைவு ஏற்பட்டு, இதனால் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலும் பக்கவாதம் ஏற்படும்.

இதயத் துடிப்பு ஒரே மாதிரி 'டக்டக்' என்றில்லாமல், அந்த ஒலியானது நேரத்திற்கு நேரம்



★ பக்கவாதம் ஏற்பட்ட நோயாளி ஒருவருடைய மூளையின் சி.டி. ஸ்கேன் தோற்றம்; அடர்ந்த கறுப்பு நிறமாகக் காணப்படுவது இரத்தம் குறைவாக இருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள மூளையின் பகுதி (Cerebral Infarct)

வித்தியாசப்பட்டாலோ, இதயத்தில் இரத்தத் தேக்கம் உண்டாகி, மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டாலோ கூட பக்கவாதம் வரக்கூடும்.

மூளைக்குள் உள்ள இரத்தக் குழாய் பலவீனப்படுவதனாலோ, அல்லது இரத்த அழுத்தம் அதிகரித்தோ மூளையினுள்ளே இரத்தக் கசிவு ஏற்படுவதனாலும் பக்கவாதம் வரும்; Intracerebral Haemorage எனப்படும் இவ்வகைக் கோளாறு, பெரும்பாலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிக அளவில் வரும்.

ஏதாவது விபத்தில் சிக்கி, தலையில் பலமாக அடிபடுவதால், தலைக்குள்ளேயே ஒருவருக்கு இரத்தக் கசிவு ஏற்படுமானால், அவரும் பக்கவாத நோய்க்கு ஆளாக நேரிடும். இப்படி ஏற்படுவது Sub Arachnoid Haemorage எனப்படும்.

இன்ன வயதிற்குமேல்தான் அல்லது இந்த வயதிற்குள்தான் பக்கவாதம் வரும் என்று ஏதாவது வரம்பு இருக்கிறதா?

அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது; எந்த வயதிலும் பக்கவாதம் வரலாம். சிறுவயதிலேயே மூளை இரத்தக் குழாய் அடைப்பு சிலருக்கு ஏற்பட்டு, நீண்டகாலம் வாழ முடியாமல் மாண்டுபோகிறவர்களும் உண்டு.

இரத்தக் குழாய், சிலருக்குச் சிலவகைக் கிருமிகளால் பாதிக்கப்படுவதானாலும் இத்துன்பத்திற்கு ஆளாக நேரிடலாம்.

பக்கவாதம் ஏற்பட்டால் பெரும்பாலும் கை அல்லது கால்மட்டும் பாதிக்கப்படுகிறதே - அது ஏன்?

பக்கவாதம் எனப்படுகின்ற 'ஸ்ட்ரோக்'கினால் கையும் காலும் மட்டும்தான் பாதிக்கப்படும் என்பதில்லை; நம் பேசும் சக்தி முதலாக உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்குமே பாதிப்பு வருவதுண்டு.

மூளையில், நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளின் செயலையும் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள நரம்புகள் பல இருக்கின்றன. அந்த நரம்புக் கூட்டத்தில் எது பாதிக்கப்படுகிறதோ அதன்படி உடலுறுப்புகளும் பாதிக்கப்படும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வலதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் இடதுபாதியிலேயே அதிகம் உள்ளன; அதேபோல இடதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் வலது பாதியிலேயே இருக்கின்றன.

பேசச் செய்யும் நரம்புகள் இடது கைப் பழக்கமுள்ளவர்களுக்கு மூளை



★ பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு நோயாளியின் சி.டி.ஸ்கேன் படம் இது; இதில் வெள்ளைத் திட்டாகக் காணப்படுவது, இரத்தம் கட்டியாக உறைந்துள்ள பகுதியாகும் (Cerebral Haematoma).

யின் வலது பக்கமும், இன்னும் சிலருக்கு மூளையின் இரண்டு பக்கங்களிலும்கூட பிறப்பிலேயே அமைந்துவிடுவதும் உண்டு.

இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் உங்களுக்கே உங்கள் கேள்விக்கான விடை புரியும். மூளையின் இடதுபாக இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுமானால் வலது கை, வலது கால் ஆகியவை உணர்வை இழந்துவிடும்; முகத்தில் வலது பாகமும் இழுத்துக் கொள்ளும் பேச்சு வராது.

வலதுபுறம் உள்ள இரத்தக் குழாய்கள் சிதைந்து இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்; உடலின் இடது பக்கம் அதேபோன்ற பாதிப்புகள் இருக்கும். ஆனால், பேச்சு வரும். முழு உடலும் இந்தப் பக்கவாத நோயால் பாதிப்படைவது என்பது மிகவும் குறைவு.

இந்த நோய் கண்டால் சாதாரணக் கோளாறே ஏற்படாதா?

சின்னச் சின்ன இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகிறபோது சிலபேருக்குக் கை மட்டுமே பாதிக்கப்படும்; சில பேருக்குப் பேச்சு மட்டும் பாதிப்படையும் - அதாவது குரல் ஒலி இருக்குமே தவிர, பேச்சு தெளிவாக வராது; சிலருடைய கண் பார்வை கெட்டுவிடும்; ஒரு சிலருக்கு மறதி அதிகமாகிவிடும்.

சிலபேர் மனக் குழப்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள்; சிலருக்கு உடலின் பாதிப்பகுதி முழுவதுமே மரத்துப்போனதுபோலிருக்கும்.

பக்கவாத நோயைக் குணப்படுத்தவே முடியாது போலிருக்கிறதே; உயிருக்கு ஆபத்தான நோயா இது?

இந்த நோய் காரணமாக ஏற்படும் முக்கால்வாசிப் பாதிப்பைக் குணப்படுத்திவிடும் அளவிற்கு இன்றைய அறிவியல் உலகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது; ஆனால் எந்த இடத்தில் உள்ள இரத்தக் குழாயில், எவ்வாறான அடைப்பு உண்டாகி இருக்கிறது என்பதைப் பொறுத்தது இது!

நம் உடலில் உள்ள முக்கியமான இரத்தக் குழாய்களில், குறிப்பிட்ட இடத்தில் இரத்தம் உறைந்து அல்லது தேங்கி ஒருவரை மூச்சுவிடும் சக்தியை இழக்கச் செய்தாலோ - அவ்வாறின்றி அவருடைய இதயத்தின் இயக்கத்தைப் பாதித்து விட்டாலோ தான் அவரது உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிடும்.

சிலருக்கு, இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும் அந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி நீர்க்கோவை உண்டாகிவிடுவதுண்டு; இது Cerebral Oedema எனப்படும்; இப்படி ஆகிவிட்டாலும் ஆபத்துதான். மீதியுள்ள எல்லாவகைப் பக்கவாதங்களையும் முறைப்படி சிகிச்சையளித்தால் சரிப்படுத்திவிடலாம். குறிப்பாகச்



★ இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்களின் அமைப்பை விளக்கும் படம்.

சொல்லுவதென்றால் - 'ஸ்ட்ரோக் உண்டான அறிகுறி தோன்றியதுமே ஒருவர் உடனடியாக மருத்துவரை அணுகினால், அதனால் வரவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவரைக் காப்பாற்றிவிடும் வாய்ப்புகள் மருத்துவத்துறையில் அதிகமிருக்கின்றன.

சரியான சிகிச்சை பெற்றபிறகு, உடல் உறுப்புகளின் இயக்கத்திற்காக மருத்துவர் கற்பிக்கும் சிறப்பு உடல் பயிற்சிகளைத் (Physiotherapy) தவறாமல் அந்த நோயாளி செய்து வந்தாலே போதும்; பக்கவாதத் துன்பத்திலிருந்து ஒருவர் பக்குவமாகத்தப்பிக் குணம்பெற்றுவிடலாம்.

இந்தப் பக்கவாத நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு, எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அதிகம் உண்டு?

அ. பக்கவாதம் வருகிற வாய்ப்பானது, இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிகமிருக்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் ஸ்ட்ரோக் உண்டாவதை ஓரளவு தவிர்க்கலாம்.

ஆ. சர்க்கரை வியாதி எனப்படுகிற நீரிழிவு நோய் உள்ளவர்களையும் பக்கவாதம் எளிதில் பற்றும்; இவர்களும் அதைத் தவிர்த்தால் இதையும் தவிர்க்கலாம்.

இ. இதய நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சரியான இரத்த ஓட்டம் அமையத் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருவார்கள்; அப்படிச் சாப்பிடுவதை அவர்கள் அலட்சியப்படுத்தினால், இதயத்தினுள்ளேயே இரத்தச் சிதறல் ஏற்பட்டு, உறைந்து

தைந்து வயதைக் கடந்தவர்களுக்குத் தான் வரும்.

இளம் வயதினருக்கு வரவே வராதா?

அப்படிச் சொல்லமுடியாது; ஒருசில நேரங்களில் - இளைஞர்களுக்கும், கைக் குழந்தைகளுக்கும் கூட வரும்.

பக்கவாதம் என்பது பெரும்பாலும் குறிப்பிட்ட நாடுகளில் - அல்லது குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில் உள்ளவர்களுக்குத்தான் வரும் என்று சொல்லப்படுகிறதே சரியா?

இந்த வியாதிக்கு அப்படியெல்லாம் நாடு-சீதோஷ்ண நிலைப் பாகுபாடெல்லாம் இல்லை. உலகம் முழுவதுமே இந்தவகைப் பாதிப்பு உள்ள மக்களைப் பரவலாக நாம் பார்க்க முடியும். இன்னும் திட்டவட்டமாகச் சொல்வதென்றால் நோயுற்றுச் சாகின்ற உலக மக்கள் எண்ணிக்கையை நாம் ஒரு 'சர்வே' செய்தோமானால் - மாரடைப்பின் காரணமாக இறப்போர் தொகைக்கு அடுத்ததாகப் புற்றுநோயால் இறப்போர் எண்ணிக்கையும் - அதை அடுத்து மூன்றாவதாக இந்தப் பக்கவாதத்தால், இறப்போர் தொகையும் தான் அதிக அளவில் இருக்கிறது.

பக்கவாதம் எல்லாவற்றுக்குமே அடிப்படைக் காரணம் ஒன்று தானா?

இல்லை; இதற்கான காரணங்கள் ஒவ்வொருவருக்கு வேறுபடும்.

மூளைக்கு இரத்தம் கொண்டு போகும் இரத்தக் குழாயில் (Intracerebral Vessel) அடைப்பு ஏற்பட்டு Stroke வருவதுதான் குறிப்பிடத்தக்க முக்கியக் காரணம்.

இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயிலோ, மகாதமனி (Aorta) போன்ற மற்ற முக்கிய இரத்தக் குழாய்களிலோ எங்காவது அடைப்பு ஏற்பட்டு இரத்தக் குழாய் சிதைந்து போவதால் ஏற்படுகிற பக்கவாதம் Embolus எனப்படும்.

இதயத்தில் இரத்த உறைவு ஏற்பட்டு, இதனால் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலும் பக்கவாதம் ஏற்படும்.

இதயத் துடிப்பு ஒரே மாதிரி 'டக்டக்' என்றில்லாமல், அந்த ஒலியானது நேரத்திற்கு நேரம்

★ பக்கவாதம் ஏற்பட்ட நோயாளி ஒருவருடைய மூளையின் சி.டி. ஸ்கேன் தோற்றம்; அடர்ந்த கறுப்பு நிறமாகக் காணப்படுவது இரத்தம் குறைவாக இருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள மூளையின் பகுதி (Cerebral Infarct)

வித்தியாசப்பட்டாலோ, இதயத்தில் இரத்தத் தேக்கம் உண்டாகி, மூளை நரம்புகள் பாதிக்கப்பட்டாலோ கூட பக்கவாதம் வரக்கூடும்.

மூளைக்குள் உள்ள இரத்தக் குழாய் பலவீனப்படுவதனாலோ, அல்லது இரத்த அழுத்தம் அதிகரித்தோ மூளையினுள்ளே இரத்தக் கசிவு ஏற்படுவதனாலும் பக்கவாதம் வரும்; Intracerebral Haemorage எனப்படும் இவ்வகைக் கோளாறு, பெரும்பாலும் இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிக அளவில் வரும்.

ஏதாவது விபத்தில் சிக்கி, தலையில் பலமாக அடிபடுவதால், தலைக்குள்ளேயே ஒருவருக்கு இரத்தக் கசிவு ஏற்படுமானால், அவரும் பக்கவாத நோய்க்கு ஆளாக நேரிடும். இப்படி ஏற்படுவது Sub Arachnoid Haemorage எனப்படும்.

இன்ன வயதிற்குமேல்தான் அல்லது இந்த வயதிற்குள்தான் பக்கவாதம் வரும் என்று ஏதாவது வரம்பு இருக்கிறதா?

அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது; எந்த வயதிலும் பக்கவாதம் வரலாம். சிறுவயதிலேயே மூளை இரத்தக் குழாய் அடைப்பு சிலருக்கு ஏற்பட்டு, நீண்டகாலம் வாழ முடியாமல் மாண்டுபோகிறவர்களும் உண்டு.

இரத்தக் குழாய், சிலருக்குச் சிலவகைக் கிருமிகளால் பாதிக்கப் படுவதனாலும் இத்துன்பத்திற்கு ஆளாக நேரிடலாம்.

பக்கவாதம் ஏற்பட்டால் பெரும்பாலும் கை அல்லது கால்மட்டும் பாதிக்கப்படுகிறதே - அது ஏன்?

பக்கவாதம் எனப்படுகின்ற 'ஸ்ட்ரோக்'கினால் கையும் காலும் மட்டும்தான் பாதிக்கப்படும் என்பதில்லை; நம் பேசும் சக்தி முதலாக உடலில் உள்ள எல்லா உறுப்புகளுக்குமே பாதிப்பு வருவதுண்டு.

மூளையில், நம் உடலின் ஒவ்வொரு உறுப்புகளின் செயலையும் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள நரம்புகள் பல இருக்கின்றன. அந்த நரம்புக் கூட்டத்தில் எது பாதிக்கப் படுகிறதோ அதன்படி உடலுறுப்புகளும் பாதிக்கப்படும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வலதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப் படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் இடதுபாதியிலேயே அதிகம் உள்ளன; அதேபோல இடதுபுற உடல் உறுப்புகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நரம்புகள் மூளையின் வலது பாதியிலேயே இருக்கின்றன.

பேசச் செய்யும் நரம்புகள் இடதுகைப் பழக்கமுள்ளவர்களுக்கு மூளை



★ பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு நோயாளியின் சி.டி.ஸ் கேன் படம் இது; இதில் வெள்ளைத் திட்டாகக் காணப்படுவது, இரத்தம் கட்டியாக உறைந்துள்ள பகுதியாகும் (Cerebral Haematoma).

யின் வலது பக்கமும், இன்னும் சிலருக்கு மூளையின் இரண்டு பக்கங்களிலும்கூட பிறப்பிலேயே அமைந்துவிடுவதும் உண்டு.

இவைகளையெல்லாம் வைத்துப் பார்த்தால் உங்களுக்கே உங்கள் கேள்விக்கான விடை புரியும். மூளையின் இடதுபாக இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு இரத்த ஓட்டம் தடைப்படுமானால் வலது கை, வலது கால் ஆகியவை உணர்வை இழந்துவிடும்; முகத்தில் வலது பாகமும் இழுத்துக் கொள்ளும். பேச்சு வராது.

வலதுபுறம் உள்ள இரத்தக் குழாய்கள் சிதைந்து இரத்த ஓட்டம் பாதிக்கப்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்; உடலின் இடது பக்கம் அதேபோன்ற பாதிப்புகள் இருக்கும். ஆனால், பேச்சு வரும். முழு உடலும் இந்தப் பக்கவாத நோயால் பாதிப்படைவது என்பது மிகவும் குறைவு.

இந்த நோய் கண்டால் சாதாரணக் கோளாறே ஏற்படாதா?

சின்னச் சின்ன இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகிறபோது சிலபேருக்குக் கை மட்டுமே பாதிக்கப்படும்; சில பேருக்குப் பேச்சு மட்டும் பாதிப்படையும் - அதாவது குரல் ஒலி இருக்குமே தவிர, பேச்சு தெளிவாக வராது; சிலருடைய கண் பார்வை கெட்டுவிடும்; ஒரு சிலருக்கு மறதி அதிகமாகிவிடும்.

சிலபேர் மனக் குழப்பத்திற்கு ஆளாகிவிடுவார்கள்; சிலருக்கு உடலின் பாதிப்பகுதி முழுவதுமே மரத்துப்போனதுபோலிருக்கும்.

பக்கவாத நோயைக் குணப்படுத்தவே முடியாது போலிருக்கிறதே; உயிருக்கு ஆபத்தான நோயா இது?

இந்த நோய் காரணமாக ஏற்படும் முக்கால்வாசிப் பாதிப்பைக் குணப்படுத்திவிடும் அளவிற்கு இன்றைய அறிவியல் உலகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது; ஆனால் எந்த இடத்தில் உள்ள இரத்தக் குழாயில், எவ்வாறான அடைப்பு உண்டாகி இருக்கிறது என்பதைப் பொறுத்தது இது!

நம் உடலில் உள்ள முக்கியமான இரத்தக் குழாய்களில், குறிப்பிட்ட இடத்தில் இரத்தம் உறைந்து அல்லது தேங்கி ஒருவரை மூச்சுவிடும் சக்தியை இழக்கச் செய்தாலோ - அவ்வாறின்றி அவருடைய இதயத்தின் இயக்கத்தைப் பாதித்து விட்டாலோ தான் அவரது உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிடும்.

சிலருக்கு, இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படும் அந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றி நீர்க்கோவை உண்டாகிவிடுவதுண்டு; இது Cerebral Oedema எனப்படும்; இப்படி ஆகிவிட்டாலும் ஆபத்துதான். மீதியுள்ள எல்லாவகைப் பக்கவாதங்களையும் முறைப்படி சிகிச்சையளித்தால் சரிப்படுத்திவிடலாம். குறிப்பாகச்



★ இதயத்திலிருந்து மூளைக்குச் செல்லும் இரத்த நாளங்களின் அமைப்பை விளக்கும் படம்.

சொல்லுவதென்றால் - 'ஸ்ட்ரோக் உண்டான அறிகுறி தோன்றியதுமே ஒருவர் உடனடியாக மருத்துவரை அணுகினால், அதனால் வரவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவரைக் காப்பாற்றிவிடும் வாய்ப்புகள் மருத்துவத்துறையில் அதிகமிருக்கின்றன.

சரியான சிகிச்சை பெற்றபிறகு, உடல் உறுப்புகளின் இயக்கத்திற்காக மருத்துவர் கற்பிக்கும் சிறப்பு உடல் பயிற்சிகளைத் (Physiotherapy) தவறாமல் அந்த நோயாளி செய்து வந்தாலே போதும்; பக்கவாதத் துன்பத்திலிருந்து ஒருவர் பக்குவமாகத்தப்பி குணம்பெற்றுவிடலாம்.

இந்தப் பக்கவாத நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு, எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் அதிகம் உண்டு?

அ. பக்கவாதம் வருகிற வாய்ப்பானது, இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கே அதிகமிருக்கிறது. இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினால் ஸ்ட்ரோக் உண்டாவதை ஓரளவு தவிர்க்கலாம்.

ஆ. சர்க்கரை வியாதி எனப்படுகிற நீரிழிவு நோய் உள்ளவர்களையும் பக்கவாதம் எளிதில் பற்றும்; இவர்களும் அதைத் தவிர்த்தால் இதையும் தவிர்க்கலாம்.

இ. இதய நோயால் பீடிக்கப்பட்டவர்கள் சரியான இரத்த ஓட்டம் அமையத் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருவார்கள்; அப்படிச் சாப்பிடுவதை அவர்கள் அலட்சியப் படுத்தினால், இதயத்தினுள்ளேயே இரத்தச் சிதறல் ஏற்பட்டு, உறைந்

போய் அங்கிருந்து மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாகப் பக்கவாதம் வரும் வாய்ப்பு உண்டு.

ஈ. இரத்தத்தில் அதிக அளவு கொழுப்புச் சத்து இருந்தாலும், இரத்தம் அதிகக் கடினத்தன்மை உடையதாக இருந்தாலும் ஒருவர் பக்கவாதத்திற்கு ஆளாகக்கூடும்; அவ்வாறான நிலைமையில் உள்ளோர் அதிகக் கொழுப்புச் சத்தைக் (High Cholesterol) குறைத்தாக வேண்டும்.

உ. அதிக அளவில் புகை பிடிப்போருக்கும் பக்கவாதம் வருகிற வாய்ப்புகள் அதிகம் உண்டு.

ஊ. பிரைன் டியூமர் என்கிற மூளைக்கட்டி வளர்ந்தவர்களுக்கு - அதன் காரணமாக இரத்தக் குழாய் அழுத்தப்படுவதாலும் பக்கவாதம் வரலாம்.

எ. ஒற்றைத் தலைவலி உள்ளவர்களுக்கும் இந்நோய் வரக்கூடும்.

ஏ. மூளையிலோ, கழுத்திற்கு மேலோ பெரிய அளவில் அறுவைச் சிகிச்சை செய்யப்படும் நபருக்கும் பக்கவாதம் வரலாம்; கழுத்திற்குக் கீழே செய்யப்படும் அறுவைச் சிகிச்சையால் அவ்வாறான ஆபத்து வருவது மிகமிகக் குறைவாகும்.

ஆண்-பெண் இருபாலரில் யாருக்குப் பக்கவாதம் வரும் வாய்ப்பு அதிகமிருக்கிறது?

இந்த நோய் சாதாரணமாக இருபாலருக்குமே வரக்கூடியதுதான்; ஆனால் பெண்களுக்கு வரும் வாய்ப்பு சற்றுக் குறைவு என்று சொல்லலாம்.

கர்ப்பிணிப் பெண்கள் சில பேருக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கக்கூடும் (Eclampsia). இதனால், அவர்களுக்குப் பக்கவாதம் ஏற்படலாம்; பிரசவத்திற்குப் பிறகு இரத்தச் சேதாரம் அல்லது தேக்கம் (Cortical Venous Thrombasis) அதிகமிருந்தாலும் அவ்வாறு வரக்கூடும். இப்படிப்பட்ட நிலைமையில் பக்கவாதத்திற்கு ஆளான பெண்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று ஆலோசனை பெற்று அதன்படி நடந்து கொள்ளத் தவறக்கூடாது.

இன்னொரு முக்கிய விஷயம் - வழக்கத்திற்கு மாறான, அல்லது மூர்க்கத்தனமான உடலுறவு கொள்ளும் நிலைமையில், பால்வினை நோயால் - ஆண்கள் சிலருக்கும் இவ்வாறான பக்கவாதப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

'ஸ்ட்ரோக்' எனப்படுகிற இந்த பக்கவாத நோய்க்குச் சாதாரணமாக எத்தகைய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

இதற்கான, பரிசோதனைகள் - சிகிச்சை முறைகள் அதிகமிருக்கின்றன என்றாலும் - குறிப்பிடத்தக்க சிலவற்றை மட்டும் சொல்கிறேன்.

பாதிக்கப்பட்ட நபரை சி.டி.ஸ்கேன் (C T Scan) எடுத்துப் பார்க்கலாம்; அதன் மூலம் - உடலில் இரத்தம் உறைந்திருக்கிறதா, இரத்தக் குழலில் அடைபட்டிருக்கிறதா, அப்படிப் பாதித்த இடத்தைச் சுற்றி நீர் கோத்திருக்கிறதா, குறிப்பாகப் பாதிப்பு எந்த இடத்தில் ஏற்பட்டு இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டுவிடலாம்.

எம்.ஆர்.ஐ. டெஸ்ட் (Magnetic Resonance Imaging of Test) என்றொரு பரிசோதனை இருக்கிறது. இரத்தக் குழாய் அடைப்பு மட்டுமன்றி - அதைவிட மிக நுண்ணிய விஷயங்களையும் இந்தப் பரிசோதனையின் மூலம் அறியலாம்.

Cerebral Angiography என்றோர் மருத்துவச் சோதனை உண்டு. இதன் மூலம் இரத்தக் குழாய் வழியாகவே மருந்தைச் செலுத்தி, அது சரியானபடி மூளைக்குப் போய்ச் சேருகிறதா என்பது வரை கண்டுபிடித்துக் குணமாக்கலாம்.

Ultrasound Doppler Imaging என்கிற பரிசோதனை மூலம் இரத்தக் குழாயில் எங்கே - எந்த அளவில் அடைப்பு என்று தெரிந்துகொள்ளலாம்.

பக்கவாத நோயை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியுமா?

Carotid Endartectomy என்ற வகை அறுவைச் சிகிச்சையொன்று அயல்நாடுகளில் அண்மைக் காலமாக இதற்காகச் செய்யப்படுகிறது. இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருக்கிற இடத்தை மட்டும் வெட்டியெடுத்துவிட்டுச் சேர்த்துச் சரிசெய்துவிடும் சிகிச்சையே இது.

எந்த அளவிற்கு இவ்வகைச் சிகிச்சை பலனளிக்கும் என்பது தெரியவில்லை; இங்கெல்லாம் அந்த முறைச் சிகிச்சை வந்த பிறகுதான் அதுபற்றிச் சரியாகச் சொல்ல முடியும்.

மேனாடுகளில், மாரடைப்பு நோயாளிக்கு 'பைபாஸ்' அறுவைச் சிகிச்சை செய்வது போலப் பக்கவாத நோயாளிக்கும் ஒரு சிகிச்சையளிக்கப்படுகிறது;

EC / IC By pass என்பதே அந்தச் சிகிச்சையாகும். மூளைக்கு வெளியே உள்ள இரத்தக் குழாயை எடுத்து, மூளைக்கு உள்ளே பாதிக்கப்பட்டிருக்கும் இரத்தக் குழாயருகே பொருத்தும் சிகிச்சைதான் இது.

இப்படிப்பட்ட சிகிச்சை முறைகளெல்லாம் நம் நாட்டிற்கு வர இன்னும் சில காலம் ஆகக்கூடும்.

பக்கவாதம் மூலம் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகளைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தினால், அவற்றைப் பழைய தெம்புடன் முன்போலவே பயன்படுத்த முடியுமா?

தாய்ப்பால் அறிவுக் கூர்மைக்கு உதவுகிறது!

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே சிறந்தது என்று மருத்துவர்கள் கூறிவருகின்றனர். குழந்தையின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, கூடுதலான புத்திக் கூர்மைக்கும் அது உதவுகிறது என்று ஒரு சோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் குழந்தைகளுக்கான உணவு குறித்து டாக்டர் லூகாஸ் என்பவர் ஆய்வு ஒன்றை நடத்தினார். பத்து மாதங்களுக்கு முன்பே பிறந்த 300 குழந்தைகள் குறித்து அவர் ஆய்வுகள் நடத்தினார்.

தாய்ப்பால் மட்டும் குடித்த குழந்தைகள் சோதனைகளில் 103.7 மதிப்பெண்கள் பெற்றன. ஆனால் புட்டிப்பால் மட்டுமே குடித்த குழந்தைகள் 93.1 மதிப்பெண்கள் மட்டுமே பெற்றன. இந்தக் குழந்தைகள் எல்லாம் ஏழரை முதல் எட்டு வயதுக்கு உட்பட்டவை.



திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வரும், வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும் பொது மக்கள் அறிந்து பயன்பெறும் வண்ணம் கருத்து விளக்கக் கூட்டங்கள் நடந்து வருகின்றன.

இம் மாவட்டத்திலுள்ள செய்தி மக்கள் தொடர்பு, குடும்ப நலம், கூட்டுறவு, வேளாண்மை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, சமூக நலம், சிறுசேமிப்பு, வயது வந்தோர் கல்வி, சமூகநலக் காடுகள், மாகக் கட்டுப்பாடு, கால்நடைப் பராமரிப்பு ஆகிய மாநில அரசுத் துறைகள் மற்றும் கள விளம்பரம், நேரு இளையோர் மையம் ஆகிய மத்திய அரசுத் துறைகளின் விளம்பர அலுவலர்களை ஒருங்கிணைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள குக் கிராமங்களில் இந்தக் கருத்து விளக்கக் கூட்டங்கள் கடந்த ஏப்ரல் முதல் இவ்வாண்டு ஜனவரி முடிய நடத்தப்பட்டன.

மாதம் இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 3 நாட்கள் வீதம் மாவட்டத்திலுள்ள அனைத்து விளம்பரத் துறைகளின் மூலமாக தினமும் 7 கிராமங்களில் படக்காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. ஒரே ஒரு கிராமத்தில் மட்டும், அனைத்துத் துறை விளம்பர அலுவலர்களும் கலந்து கொள்ளும் கருத்து விளக்கக் கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதுவரை 8 பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

கருத்து விளக்கக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில், சிறுசேமிப்பு, குடும்பநலம், நூறு சதவிகித எழுத்தறிவு, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சுற்றுப் புறத் தூய்மைப் பாதுகாப்பு, பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்த செய்திகளும் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, பொதுமக்களிடையே கிராமங்களில் 'விழிப்புணர்வு' உருவாக்கப்பட்டு வருகின்றது. மேலும், அரசு ஆற்றி வரும் பணிகளை, கிராமத்திலுள்ள பொதுமக்கள் குறிப்பாக மகளிர் எளிதில் அறிந்து பயனடையும் முறையில் விளக்கிக் கூறப்பட்டு வருகின்றது.

இம்முகாம்களில், - சிறுசேமிப்பு அஞ்சலகக் கணக்குகள் மிக அதிக அளவில் ஆலங்குளம் பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளன. அரசின் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளால் இதுவரை கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் அத்தொழிலை அறவே விட்டொழித்து, ஆலங்குளத்தில் நடைபெற்ற இவ்விளம்பர முகாமின் நிறைவு நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் 11 பேர்கள் அறவே இத்தொழிலை விட்டுவிட்டதாகத் தெரிவித்தார்கள். புதிய தொழில் மேற்கொள்ள இவர்களுக்குக் கடன் உதவிகள் உடனடியாக வங்கிகள் மூலம் அளித்திட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்து உள்ளார்.

அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்' பற்றிய விழிப்புணர்வு பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பர முகாம்களில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பெருமளவில் இம்முகாம்களில் கலந்து கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

துரை. ராஜ்குமார்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்

முடியும். ஆனால் சிலருக்கு அப்படி நூற்றுக்கு நூறு சதவிகிதம் பயன்படுத்த முடியாமல் போய்விடுவதும் உண்டு.

பக்கவாதம் வரப்போவதை முன் கூட்டியே அறிய முடியாதா - அது நாளடைவில் தானாகவே குணமாகி விடாதா?

சிலரால் மட்டும் அதை முன் கூட்டியே அறிய முடியும்.

இரத்த அடைப்பால் உண்டாகிற பக்கவாதம் நாளடைவில் அல்ல, ஒரு சிலருக்கு உடனடியாகக் கூட குணமாகிவிடுவதுண்டு; இப்படி ஆவதை Transient Ischaemic Attack என்று கூறுவார்கள். ஆனால் இதே போல அந்த வகை நோயாளிகள் அனைவருக்குமே சரியாகிவிடும் என்று சொல்ல முடியாது.

ஒரு தடவை ஒருவருக்கு அது போல் உண்டாகி, உடனடியாகக் குணமாகிவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதன்பிறகு அந்த நபர் 'நலமடைந்துவிட்டோம்' என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது; அப்படி வந்தது, மிக விரைவில் மீண்டும் வரப்போவதற்கான முன் எச்சரிக்கையே என்று எண்ணி - மருத்துவரை அணுகித் தன்னைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும் அதுதான் முறை - நல்லதும் கூட.

ஒருவருக்கு மூளையில் அப்படிப் பட்ட பாதிப்பு உண்டாகி, பிறகு சரியாகிவிட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அவர் ஒரு நரம்பியல் நிபுணரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும்; அலட்சியம் செய்தால் ஆபத்துதான்.

வலிப்பு (Fits) என்பதும் பக்கவாதம் (Stroke) என்பதும் ஒன்றுதானா?

அது வேறு இது வேறு; பக்கவாதம் வந்த ஒருவருக்கு வலிப்பு நோய் வரக்கூடும்; ஆனால் வலிப்பு நோய் கண்டவருக்குப் பக்கவாத நோய் வரும் வாய்ப்பு இல்லை.

சில நேரங்களில் சில மனிதர்களுக்கு உடலின் ஒருபுறம் மட்டும் பயங்கர வலி உண்டாகக்கூடும்; (Focal Fits)எனப்படும் இதன் மூலம் ஒருபுறக் காலிலும் கையிலும் மிகுந்த பலவீனம் ஏற்படும்; ஆனால் இரண்டொரு நாளில் குணமாகிவிடும். இதனால் அவ்வளவு ஆபத்தில்லை.

கறுப்பு மாலி
டைகர் பார்ப்
ஷெர்பா டெட்ரா
கௌராமி
சிப்பிலி

இவையெல்லாம் என்ன என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா?

இவை மீனின் திருநாமங்கள்!

ஆம். இந்த வண்ண வண்ண மீன்களை, சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள மீன்காட்சியகத்தில் கண்டு களிக்கலாம்.

பொன் மீனைப் பார்த்திருக்கிறோம். ஆனால், சாதாவால் பொன்மீனைப் பார்த்திருக்கிறோமா? இது சைனாவில் இருந்து கொண்டுவரப்பட்டது. நீர்த் தொட்டியில் இது வளைந்து நெளிந்து செல்லும் அழகே அழகு!

இங்கே 57 மீன் தொட்டிகள் உள்ளன. மின்னொளி பாய்ச்சிய இந்த அழகிய தொட்டிக்குள்ளே அந்த மீன்கள் புரியும் ஜாலங்களை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

டைகர் பார்ப் என்பது ஒரு வகை மீன். சிகப்பு வால் சுரா மற்றொரு வகை. இது ஆப்பிரிக்காவிலிருந்து தருவிக்கப் பட்டது.

கண்ணாடி மீன் உண்மையில் கண்ணாடியே தான். அதன் உடலின் உள்ளே உள்ள முட்கள் அப்படியே தெரிகின்றனவே! இது பர்மாவைச் சேர்ந்தது.

தென் ஆப்பிரிக்க வகையான ஷெர்பா டெட்ரா, எகிப்தைச் சேர்ந்த பொன்னிற சிலாப்பியா, ஜப்பானைச் சேர்ந்த சாதா கெண்டை, தாய்லாந்தைச் சேர்ந்த கறுப்பு மாலி ஆகியவற்றைப் பார்த்து அதிசயிக்கிறோம்.

துணியில், வண்ணம் மாறும் சென்னைத் துணி என்றொரு வகை உண்டு. அதைப் போல வண்ணம் மாறும் மீன் ஒன்று உள்ளது. அதன் பெயர் கோய் கொண்டை.

கோதாவரி நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட மிர்கால் மற்றும் ரோகு வகைமீன் நம் கண்ணைக் கவர்கிறது. மிர்கால் மீன் சீக்கிரத்தில் வளர்ந்து விடுமாம்!

கறுப்பு மாலி, பிளாக்மூர், மார்பிள் மாலி, வெள்ளை அக்காரா, அல்பினோ மீன் இப்படிப் பார்த்துக் கொண்டே போகிறோம். இறைவன் படைப்பில் எத்தனை அற்புதம் என்று வியக்கிறோம்.

அதோ, அது என்ன? மீன் பெட்டிக்குள் பாம்பு புகுந்து விட்டதா?

ஆம். பாம்பு மாதிரி நீளமாகத் தோற்றமளிப்பதுதான் விலாங்கு மீன். இது ஐரோப்பாவிலிருந்து கொண்டு வரப் பட்டது.

அதோ! அந்த மீனின் வாலைப் பாருங்கள்! வானத்துச் சந்திரன் மாதிரி இல்லை? இதற்குக் 'கறுப்பு மூன் வால் மாலி' என்று பெயர்.

நகைகள் என்றால் யாருக்குத்தான் ஆசை வராது? அதாவது ஆபரணங்கள் அழகுக்கு அழகூட்டுபவை. அவை கண்ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுகள்! மீன்களிலும் ஆபரண மீன்கள் இருக் கின்றன. இவை ஆபரணம் போல அழகாய் இருப்பதால், இதற்கு அப்பெயர் வந்ததோ?

வெள்ளை மாலி, சிகப்பு வால் கத்தி மீன், விரால் இவையும் நம்மைக் கவரும் மீன்களாகும்.

ஆஸ்கார் என்று ஒரு வகை மீன்! இது பொல்லாதது. இதற்கு ஸ்டண்ட் எல்லா தெரியும். அதாவது இது, சண்டை போடுவதில் வல்லதாம்! அதனால் இதை மற்ற மீன்களோடு சேர்த்து வைக்காமல் தனியாக வைத்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இது தனிக்காட்டு ராஜா மாதிரி! அவ்வளவு பெரிய நீர்த் தொட்டியில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கிறது. இந்த ஒரு மீனின் விலை மட்டும் 350 ரூபாயாம்.

கீச்சான் - கடல்வாழ் மீன். இதன் உடல் வரிவரியாக உள்ளது. பார்க்க அழகுதான். ஆனால், தீனி மட்டும் நிறைய சாப்பிடுமாம்! மீன்களையே பார்த்துக் கொண்டு வந்த நாம், இங்கே பார்ப்பது இந்தியாவைச் சேர்ந்த நீர் ஆமைகளை, தரையில்தான் 'ஆமை வேகம்' என்பார்கள். ஆனால், தண்ணீரிலோ அதிக வேகம்!

'டார்குயின்' என்னும் பச்சை ஆமையைக்கூட இங்கே பார்க்கலாம்.

பர்மா நாட்டுக் 'கௌராமி' மீன் நீந்துகின்ற அழகே அலாதி.

புள்ளி புள்ளியாக உள்ள சிப்பிலி மீனும், வரிவரியாக உள்ள வரி மீனும் எல்லாரையும் கவரும் வகைகளாகும்.

தேவதை தேவலோகத்தில் மட்டும் இல்லை. கீழ்லோகத்திலும் உண்டு. அதாவது கடலுக்கு அடியிலும் உண்டு. ஆம். தேவதை மீன்கள் தாம் அவை. அதிலும் பொன் தேவதை மீன் என்றால் எப்படி இருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்! இதில் கறுப்பு தேவதை மீனும் உண்டு; மார்பிள் தேவதை மீனும் உண்டு; கடல் தேவதை மீனும் உண்டு!

மனிதரில் மட்டும் விதவையர் இல்லை. மீன்களிலும் உண்டு. கணவனை இழந்த விதவையர், எளிமையாகக் காட்சியளிப்பது போல், இந்த மீனும் சாதாரணமாகக் காட்சியளிக்கிறது. அதனால், இதற்குப் பெயர் விடோ டெட்ரா (Widow Tetra).

மலேயாவைச் சேர்ந்த நீலகுராமி, பொன் வண்ணக் குராமி, மற்றும் முத்துச் செதிள் பொன் மீன் (செதிள்கள் முத்துப்போல் இருப்பதால்), குமிழ் வடிவக்கண் மீன் (கண்கள் குமிழ் போல இருப்பதால்) ஆகியவை ஆண்டவனின் அற்புதப் படைப்புகள்!

சண்டை போடும் ஆஸ்காரைப் பார்த்தோம். இதோ இந்த மீனுக்குப் பெயர் பேபி ஆஸ்கார். இது சண்டை போடுமா என்பது தெரியாது!

சாக்லெட் மீன் என்பதால், உடனே அதைக் கையில் எடுத்துச் சாப்பிட்டுவிடப் போகிறீர்கள்! தாய்லாந்தைச் சேர்ந்த இந்த மீனுக்கு என்ன பெயர் தெரியுமா? சாக்செலட் மார்பிள் மாலி!

பொன் வண்ணத்தில் புள்ளி புள்ளியாக எழிலுடன் வலம் வருவதுதான் ரோஸி பார்ப்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பேசுகிறோம்.

ஒருமைப்பாடு மலர வழிவகுத்துச் செயல்படுகிறோம்.

'எல்லாரும் ஓரினம். எல்லாரும் ஓர் மக்கள்' என்று எழுதுகிறோம். அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வருகிறோம்.

இந்த ஒருமைப்பாடு, நீர் வாழ் உயிரினங்களான மீன்கள் உலகத்திலும் உண்டு. இதைச் சித்திரிக்கிறது ஒருமைப் பாட்டுத் தொட்டி.

நீர் நிரம்பிய ஒரு பெரிய கண்ணாடித் தொட்டி! அந்தப் பெட்டியைப் பார்க்கிறோம். ஆங்காங்கே தனித்தனியாக நாம் பார்த்துவந்த மீன்களெல்லாம், இந்தத் தொட்டியில் ஒன்றாக இருக்கின்றன. இதில் கறுப்பும் உண்டு. வெள்ளையும் உண்டு. சிறிதும் உண்டு. பெரிதும் உண்டு. ஆனால், அவை எவ்வித வேறு பாடும் இல்லாமல் ஒன்றாக நீந்துகின்றன. இதில் ஒரு விந்தை என்னவென்றால், சண்டை போடும் அந்த ஆஸ்கார் மீனும் இதில் இருப்பதுதான்!

- பி.வி. கிரி.

எந்த நாளிலும் பார்க்கலாம்!

மீன் துறையால் இயங்கும் அரசு மீன் காட்சியகம், 1950-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பிரிட்டிஷ் காலத்தில், இந்த இடம் இராணுவத் தளவாடங்களின் இருப்பிடமாக இருந்ததாம்.

1988-89-ஆம் ஆண்டில் இந்தக் காட்சியகத்தைப் பார்வையிட்ட பெரியவர்கள் 2,25,294 பேர். குழந்தைகள் 10,271 பேர் மொத்தம் இந்த மீன் காட்சியகத்தில் 57 நீர்த் தொட்டிகள் உள்ளன. இதில் நன்னீரில் வாழும் மீன் தொட்டிகள் 55. கடல் நீரில் வாழும் மீன் தொட்டிகள் 2.

காலை 8 மணி முதல் மாலை 8 வரை இயங்கும் இந்த மீன் காட்சியகத்திற்கு நுழைவுக் கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு ரூபாய்தான்! இதற்கு விடுமுறையே கிடையாது. எந்த நாளிலும் இங்கே வரலாம்.

நம் நாட்டு மக்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் இது வெகுவாகக் கவர்கிறது. குறிப்பாக, பள்ளிக் குழந்தைகள் இதைப் பார்த்துப் பயன் பெறலாம்.

அவர்கள் சொன்னார்கள்

• நட்பு' என்பது உடன்படிக்கையன்று; கைம்மாறு வேண்டாத ஓர் உறவேயாகும்.

- அண்ணல் காந்தியடிகள்

• ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட, ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.

- மெகாலே

• வருமானம் என்பது உழைத்துப் பணம் கொண்டு வருவது மாத்திரமல்ல, சிக்கனமாய் இருந்து, கையிலுள்ளதைக் கூடுமானவரை செலவழிக்காமல் இருப்பதும் வருமானமாகும்.

- சிஸரோ.

• படிப்பதைப் போல செலவு குறைந்த பொழுதுபோக்கு வேறில்லை. அதைப்போல் இன்பமளிப்பது வேறில்லை.

- மான்டெய்ன்

• உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள்.

- பெர்னார்ட்ஷா.

நூல்நயம்

நீங்களும் பத்திரிகை நிருபராகலாம்

ஆசிரியர்: மணிமாறன்

வெளியீடு:

குமரன் பதிப்பகம்,
2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

பக்கம்:84 விலை:ரூ.10/-

நாட்டு நடப்புகளை நாளும் நமக்குத் தெரிவிப்பவை பத்திரிகைகளாகும். மக்கள் தொடர்புச் சாதனத்தின் மிக முக்கியமாகக் கருதப்படும் பத்திரிகையில் நிருபர் பணி என்பது மகுடமாக விளங்குவது.

நிருபர் என்பவர்க்கான தகுதிகள், திறமைகள், பணிகள், சாமார்த்தியம், சாதுர்யம் என்பன போன்ற இலக்கணங் களைக் கூறுகிறது இந்நூல். பத்திரிகைத் துறையில் குறிப்பாக நிருபராக விரும்பும் எழுத்தாளருக்கு இந்நூல் பெரிதும் பயன் படும்.

— பி.வி. கிரி.

மறைமேகம்

ஆசிரியர்: வாழியூர் வே. இராச வேலன்

வெளியீடு:

பேரரசு பதிப்பகம்,
வாழியூர் அஞ்சல் (வழி)
ஒண்ணுபுரம்-632 315

பக்கம்:100 விலை:ரூ.14/-

இந்நூலில் எழுவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், அவர்களது கருத்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பண்டிதமணி கதிரேசனார், நாமக்கல் வெ. இராமலிங்கனார், துளாமணி இயற்றிய தோலாமொழித் தேவர், இரட்சணிய யாத்திரிக நூலாசிரியர் கிருட்டிணப்பிள்ளை, கம்பன் அடிப்பொடி ஆனைக்குடி சா.கணேசன், தமிழ்த்தென்றல் திரு.வி.க ஆகியோரைப் பற்றிய வாழ்க்கை ஏடுகளைப் புரட்டும் போது, அவர்களது தூய தமிழ்த் தொண்டு, சமுதாயத் தொண்டு முதலான தன் மைகள் நம்மை மகிழ்விக்கின்றன.

சிந்தனையைத் தூண்டும் இந்தக் கட்டுரைகள் மாணவ மணிகளுக்கு மட்டு மன்று, மற்றவர்க்கும் பயன்படும் கற் கண்டுகளாகும்.

-பொ. மறைமலை

அறிஞர்களின் அறவுரைகள்

ஆசிரியர்: பெ. வேலுச்சாமி

வெளியீடு:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:66 விலை:ரூ.7/-

நூலை இரு பகுதியாகப் பிரித்த ஆசிரியர் அணிய வேண்டிய அறவுரைகள் என்பதன் கீழ் அகிம்சை, அடக்கம், ஈகை, கருணை, நட்பு, பொறுமை, முயற்சி, வலிமை, வீரம் போன்றவை பற்றிய அறிஞர்களின் அறவுரைகளையும், அகற்ற வேண்டிய அறவுரைகள் என்ற தலைப் பின்கீழ் (அறவுரைகள் எனில், அகற்றப் படுவது எப்படிப் பொருந்தும்? அகற்ற வேண்டியவை பற்றிய அறவுரைகள் என்று தலைப்பிட்டிருந்திருக்க வேண்டும்) அச்சம், செருக்கு, பேராசை, பொறாமை போன்றவை பற்றிய பெரியவர்களின் அறிவுரைகளையும் தொகுத்து வழங்கி யுள்ளார்.

—சுகுமாரன்

'எம்மதமும் சம்மதமே'

ஆசிரியர்: அழகு பழனிச்சாமி

வெளியீடு:

துரை இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

பக்கம்:128 விலை:ரூ.15/-

அழகான தலைப்பைக் கொண்ட இந்நூலில் உள்ள 18 சிறுகதைகளும் சிறுவர்களுக்காக எழுதப்பட்டவைதான். வழக்கமான, மதஒற்றுமை, மன்னிக்கும் மனப்பான்மை, ஒற்றுமையின் உயர்வு, நல்ல நட்பு போன்ற பண்புகளை வலி யுறுத்தி அறிவுரை கூறும் கதைகள்தான் இவை என்றாலும், மாறுபட்ட கதை அமைப்பு, விறுவிறுப்பான நடை ஆகி யவை இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

ஒவ்வொரு கதையும் சிறுவர்களின் மனத்தில் நிலைத்து நிற்கும் என நம்பலாம்.

வீடியோ (VCR & VCP) இயக்கமும் பழுதுபார்த்தலும்

ஆசிரியர்: ஏ.கே. சேதுப்பா

வெளியீடு:

மயிலவன் பதிப்பகம்
17, அங்காளம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-26.

பக்கம்:136 விலை:ரூ.14/-

தொலைக்காட்சிப் பெட்டியோடு இணைத்துப் பயன்படுத்தும் வீடியோ கேசட் ரெக்கார்டர் (வி.சி.ஆர்.) வீடியோ கேஸட் பிளேயர் (வி.சி.பி.) ஆகியவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை யும், வி.சி.ஆரில் வீடியோ பதிவு செய் யும் முறைகள், இவற்றில் ஏற்படும் பழுதுகளும், அவற்றைச் சரிசெய்யும் முறைகளும் இந்நூலில் விவரமாகச் சொல்லப்பட்டுள்ளன.

தேவையான வரைபடங்களும் இந் நூலில் இருப்பதால், ஆர்வம் உள்ளவர்கள் இந்நூலின் துணையோடு வி.சி.ஆர்., வி.சி.பி. ஆகியவற்றைச் சிறந்த முறை யில், குறைந்த செலவில் பழுதுபார்த்துக் கொள்ள இயலும்.

—என்.கே.சாமி

'விண்ணிலிருந்து மண்ணிற்கு'

ஆசிரியர்: அறந்தை நாராயணன்

வெளியீடு:

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:104 விலை:ரூ.10/-

புகழின் உச்சியிலிருந்து சாதாரண நிலைக்கு இறக்கப்பட்ட ஒரு நடிகையின் கதை.

கதாநாயகி சினிமா வாய்ப்புகளை இழந்து, சொந்தத்தில் படம் தயாரிக்கத் தொடங்கி, இரண்டு படங்களிலும் தோல்வியைத் தழுவி, இதன் காரண மாகச் சொத்துக்களையும் 'தகப்பனையும் இழந்து, துரோகிகள், நண்பர்களிடையே உலவி... இறுதியில் ஊர், ஊராகச் சென்று பயனுள்ள நாடகங்களை நடத்த உறுதி கொள்ளும் 'மக்கள் மேடை' என்னும் குழுவில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்கிறாள்.

'குப்புராஜ்' நல்ல பாத்திரம். வேக மான, சிக்கனமான, கூர்மையான எழுத் தாற்றல் கதையை அற்புதமாகக் கொண்டு செல்கிறது.

விளாம்பழ ஒடு

ஆசிரியர்: புதுவை சந்திரஹரி

வெளியீடு:

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:160 விலை:ரூ.20/-

பலதரப்பட்ட மனிதர்களின் மனோ பாவங்களை விவரிக்கும் சிறுகதைகளின் தொகுப்பு

உணர்ச்சி பூர்வமான கதைகளி டையே மெல்லிய நகைச்சுவை இழைத் தோடும் சிறுகதையும் உண்டு.

தெளிவான நடையும், அப்பட்டமான வார்த்தைப் பிரயோகங்களும் ரசிக்கத் தக்கவை. பாட்டியம்மா, அப்பா, தெருப் பாடகன் போன்ற கதாபாத்திரங்கள் நினைவில் நிற்பவை.

—குமரன்

நோயற்ற வாழ்வுக்கு விளையாட்டு

'**வா**ழ்க்கை வாழ்வதற்கே!' எனும் முழக்கம் கேட்கிறது. ஆனால், 'எத்தகைய வாழ்க்கை வாழ்வதற்கு?' எனும் வினாவினை எழுப்புவோ மானால், பலர் வளமாக வாழ்வ தற்கேஎன்பதில் கூறுவர். ஆயினும் நலமாக வாழ்வதே சிறந்த வாழ்க்கை யாகும். எத்துணை வளம் இருந் தாலும், நலம் இல்லையென்றால் என்ன பயன்? நோயுடைய ஒருவன் எவ்வளவு செல்வத்தைப்பெற்றிருந்து தான் என்ன பயன்? எனவே, நலமான வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டு வளமான வாழ்வை அமைத்தால் பயன் கிட்டுமன்றோ?

மனிதன் உடல், உள்ளம், உயிர் எனும் ஆன்மா ஆகிய மூன்றினால் உருவாக்கப்பட்டுள்ளான். உடல் நலம் மனிதனுக்கு முதல் தேவை. அடுத்து மனநலம். மனநிறைவே மனநலமாகும். 'உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்னும் திருமந்திரத்தால் இந்த உண்மையை அறியலாம்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பர். வறுமை என்ற சொல், பொருள் வறுமையைக் குறித்து நிற்காமல், உடல் வறுமை, உள்ள வறுமை, எண்ண வறுமை, செயல் வறுமை, நடத்தையில் வறுமை இவற்றையே குறித்து நிற்கிறது. மனிதன் புறச்சூழல்களால் தாக்கப் பட்டு, மனக் கலக்கம் அடையும் பொழுதுதான் மேற்கூறப்பட்ட வறுமைகள் வந்தடைகின்றன.

இத்தகைய கலக்கம் மனத்தைக் கலக்காமல் இருக்க சிந்தனையில், சிரத்தையுடன் செயல்பட வேண் டும். ஒருங்கிணைந்த பண்பட்ட உள்ளம், நேர்மையான ஒழுக்க நெறிகள், ஊக்க உணர்வு, ஒற்றுமை, சுறுசுறுப்பு, தெளிவான நினைவாற் றல் முதலிய பல்வகைப்பட்ட நெறி களுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள் வேண்டும். இத்தகு செய லுக்கு விளையாட்டுப்பெரிதும்பயன் படுகிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

டாக்டர் டேவிட் ஜி. எபினேசர்
ஒய்.எம்.சி.ஏ.
விளையாட்டு மேனிலைப்பள்ளி
தலைமை ஆசிரியர்
நந்தனம், சென்னை.

'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி கூறியதற்கு முன்பே நமது சிற்றிலக்கியங்கள் விளையாட்டிற் குப் பருவங்களைக் கண்டு மகிழ்ந் தன. சிற்றில், சிறுதேர், சிறுபறை, அம்மானை, கழங்கு, ஊசல் என்று அறிமுகப்படுத்தின. இத்தகு விளை யாட்டுகள் காலத்தின் மாற்றத் தினால் பல்வேறு வடிவில் உருக் கொண்டு வளர்ந்தன. 'ஏறு தழுவு தல்' என்ற வீர விளையாட்டு இல் லற நெறிக்குக் காதல் உணர்வுக்கு வழிகாட்டி நின்றது. ஒழுக்க நெறிக்கு உரம் இட்டது எனலாம்.

இத்தகைய விளையாட்டுகள் இளை ஞர்கள் வாழ்வில் குறிப்பாக, பள்ளி மாணாக்கர்களிடத்துப்பெரிதும் இடம் பெற்று நமது நாட்டைச் சிறப்பிக்க உயர்விக்க வேண்டும் என்ற குறிக் கோளில், தமிழக அரசு 1980-81-ஆம் ஆண்டில் இளைஞர் மற் றும் விளையாட்டுப் பயிற்சித்துறை மூலம் விளையாட்டுப் பள்ளிகளை யும், விளையாட்டு விடுதிகளையும் அமைத்தது. இதன் மூலம் மாநிலத் தின் பல்வேறு இடங்களில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெளிக்கொணர்ந்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

குறிப்பாக, கிராமங்களில் பயிலும் மாணவர்கள், மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அம் மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள் மற்றும் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி விளையாட்டு மேனிலைப்பள்ளியும் ஒன்றாகும். இப்பள்ளியில் பல்வேறு விளையாட்டுகள் மாணவர்களின் கல்வித்திறன் பாதிக்கா வண்ணம் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் பல்வேறு அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிகின்றனர். குறிப்பாக வங்கிகள், துறைமுகம், இரயில்வே போன்ற துறைகளில் விளையாட்டு வீரர்களாய்த் திகழ்வதோடு நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்துள்ளனர். இம் மாணவர்களின் வாழ்க்கை வளம் பெற விளையாட்டே துணை நின்றது என்பதை அறியலாம். தன்னையும் உயர்த்திக் கொண்டு நாட்டின் பெருமையையும் உயர்த்திக் கொடுத்த இம்மாணவர்களின் செயல் போற்றத் தக்கதே.

இளைஞர்கள் மட்டுமன்றி முதியவர்களும் விளையாட்டில் கவனம் செலுத்தலாம். முதியவர்கள் தங்கள் உடல் வளத்திற்கும், மன வளத்திற்கும் தேகப் பயிற்சிகள் செய்து வருங்கால இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாய்த்திகழலாம்.

'விளையாட்டு வினையாகிவிட்டது' என்ற பழமொழியை நாம் அறிவோம். சில பெற்றோர்கள் தனது பிள்ளை படிப்பில் கவனம் செலுத்தாவிட்டால் 'எப்பொழுதும் விளையாடிக் கொண்டே இருக்கிறான். இவனைச் சற்றுக் கண்டித்து திருத்துங்கள்' என்று ஆசிரியரிடத்தில் புகார் கூறுவதுண்டு. ஆசிரியர் அவனிடம் புதைந்து கிடக்கும் விளையாட்டுணர்வை வெளிக்கொணர்ந்து நல்ல விளையாட்டு வீரனாக மாற்றி விடுவதும் உண்டு. இதனையே மேலேகூறப்பட்ட பழமொழி நினைவுறுத்துகிறது.

'விளையாட்டு விளையாட்டிற்காகவே' என்ற கொள்கை மாறி, இன்று விளையாட்டு ஒரு தொழிலாக ஏற்றம் பெற்றுள்ளது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் இக்காலச் சூழ்நிலையில் வெறுப்புற்ற இளைஞர்கள் தங்களுடைய உள்ளத்தைத் தீய வழிகளில் செலுத்திப் பல்வேறு தீய நடத்தைகளுக்கு உட்படுகின்றனர். இவர்களுடைய உள்ளம் பண்பட வேண்டுமானால் விளையாட்டுத் துறையிலே கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகு செயலினால் நற்பண்புகள் வளரும்; மனம் ஒருமுகப்படும்; உடல் வலுப்பெறும்; தன்னம்பிக்கை வளரும்; ஒற்றுமை உணர்வு மேலோங்கும்; ஒழுக்கநெறி சிறக்கும். வாழ்வு வளம் பெறும். பாரதி அழைத்த ஒளிபடைத்த கண்களையுடைய இளைஞர்களும், உறுதி கொண்ட நெஞ்சினையுடைய இளைஞர்களும், உரம் கொண்ட தோள்களையுடைய இளைஞர்களும் நாட்டிலே தோன்றி வாழ்வை வளம் பெறச் செய்வர். நமது நாடு விளையாட்டில் தலைசிறந்து விளங்கும். இளைஞர் சமுதாயம் வீறு கொண்டு எழும். அப்பொழுது புதியதோர் உலகம் அமையும்.

நோயற்ற வாழ்விற்கு விளையாட்டு அடிப்படையாகின்றது. உடல் நலம் பற்றிய அறிவை ஒவ்வொரு மனிதனுக்கும் விளையாட்டு கற்பிக்கின்றது. உடல் நலம் பெற்றால், உள்ளத்தில் நம்பிக்கை எழும். வாழ்வு வளம் பெறும்!

நிம்மதியான நிலத்தடி நீர்ப் பாசனம்

உழவுத் தொழிலுக்கு நிலம், நீர், விதை ஆகிய மூன்றும் இன்றியமையாததாகும். இவற்றுள் நீர் மிகவும் அவசியமானது. மொத்த நிலப் பரப்பில், பயிர்ச் சாகுபடி பரப்பு நீர் கிடைக்கக்கூடிய அளவைப் பொறுத்தே அமைவதாகும். வேளாண்மைக்கு நீர் கிடைக்கக்கூடிய அளவைக் கொண்டும், அதன் தன்மையைக் கொண்டும் வேளாண்மையைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்.

1. ஆற்றுப் பாசனம்
2. ஏரிப் பாசனம்
3. கிணற்றுப் பாசனம்

இம் மூன்றில், கிணற்றுப் பாசனம், நிலத்தடியிலுள்ள நீரை வெளிக் கொணர்ந்து விவசாயம் செய்வது. இம் மூன்று பாசனத்தில் கிணற்றுப் பாசனம் அல்லது நிலத்தடி நீர்ப்பாசனம் மிகச் சிறப்புக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குரிய மழைப் பருவங்கள், தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவங்கள். இவற்றில் தென்மேற்குப் பருவமழை ஆண்டொன்றிற்குச் சுமார் 450 மி.மீ. மழையையும், வடகிழக்குப் பருவமழை ஆண்டொன்றுக்குச் சுமார் 750 மி.மீ. மழையையும் கொடுக்கக் கூடியது. சராசரியாக, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1,210 மி.மீ. மழையைச் செங்கற்பட்டு- எம்.ஜி.ஆர். மாவட்டம் பெறுகிறது. மிக அதிக மழை வடகிழக்குப் பருவத்தில் கிடைக்கிறது. ஆனால் பருவமழை பலமுறை பொய்த்து விடுவதால் வறட்சியும் - அதிகம் பெய்வதால் கடும் வெள்ளமும் ஏற்பட்டு வேளாண் மக்களுக்கு ஒரு பெரிய புதிராகவே அமைந்து விடுகிறது. ஆதலால் வேளாண் மக்கள் தங்களது வாழ்க்கையையும், விளைச்சலையும் முறைப்படுத்தப் போராட வேண்டியுள்ளது. ஏரியில் நீர் உள்ளபோது விவசாயமும் மற்ற காலங்களில் வேலையற்றும் இருக்க வேண்டியுள்ளது.

அதேபோல ஏரியிலுள்ள நீர் நாற்றங்கால் முதல் அறுவடை முடிய கிடைக்குமா - கிடைக்காதா? என்ற சந்தேகத்திலேயே பயிர் செய்ய வேண்டியுள்ளது. எனவே, விவசாயிகள் தங்களது வருமானத்தை முறைப்படுத்த விவசாயத்தைக் கைவிட்டு நகரத்தை நாட வேண்டியுள்ளது.

இத்தகைய நிலைமையில், மற்ற பாசன வகைகளை ஆராயும்போது, நிலத்தடி நீர்ப்பாசனம் அவர்களுக்குக் கை கொடுக்கிறது. நிலத்தடி நீர்ப்பாசனம் மற்ற பாசனத்தைப் போல் அல்லாது விவசாயிகளுக்குத் தொடர்ந்து நீரைக் கொடுக்க வல்லது. ஒரு திறந்த வெளிக் கிணறோ, ஆழ்துளைக் கிணறோ, அமைத்திட்டால் அதில் கிடைக்கும் நீரை அளவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் முப்போகமும் பயிர் செய்ய இயலும். ஆனால் ஏரிப்பாசனத்திலும், ஆற்றுப் பாசனத்திலும் ஒரு போகம் பயிர் செய்வதே தற்போது கடினமாக உள்ளது. ஆதலால் பரம்பரை வழிமுறையாக உள்ள பாசனத்திற்கு ஒரு சிறந்த மாறுதல் நிலத்தடி நீர்ப்பாசனம் ஆகும்.

நிலத்தடி நீர்ப்பாசனமும், ஏரிப்பாசனமும்

பருவமழை பெய்தால்தான் ஏரியில் நீர் நிரம்பும். ஏரியில் நீர் உள்ளபோதுதான் பாசனப் பகுதியில் பாசனம் செய்ய இயலும். ஏரியில் வண்டல் படிவதாலும், ஏரியின் கரைகள் சரியாகப் பராமரிக்கப் படாததாலும், அதன் கொள்ளளவு குறைகிறது. அதற்கேற்றாற்போல், பாசனப் பகுதியில் பாசனப் பரப்பும் குறைகிறது. மேலும் ஏரியிலிருந்து பாயும் நீர் மதகு மூலம் நிலத்தில் பாய்ந்து, ஒவ்வொரு மடையாகக் கடை மடைக்குச் செல்கிறது. இதனால் நீர் அதிகமாகச் செலவாகிறது. முதல், இடை கழனிகளுக்குத் தேவையான நீர் கிடைத்த பிறகே கடை மடைக்குத் திறந்து விடப்படுகிறது. அதனால், கடைமடையில் நிலமுள்ள விவசாயிகள், மேல் கழனி விவசாயிகளை அனுசரித்துச் சென்றால்தான், விவசாயம் செய்ய ஏதுவாகிறது. மேலுள்ள கழனியில் உரமிட்டால், கீழுள்ள கழனிகளுக்கு நீர் திறந்து விடுவதில்லை. அதனால் பயிர் வாடினாலும் கவலையும் படுவதில்லை. அதனால் விளைச்சல் மிக மிகக் குறைகிறது. ஆயக்கட்டுகளில் ஏதாவது ஒரு மூலையில் பூச்சி தாக்கினாலும், தொடர்ந்து எல்லாப் பாசனப் பரப்பிலும் நோய் பாவி விளைச்சல் குறைவாகிறது.

அதேபோல், வடிகால் வசதிகள் ஏரிப் பாசனத்தில் இல்லாததால், கீழுள்ள கழனிகளுக்கு நீர் தேங்கி இருந்துகொண்டே இருப்பதால், பயிர் அழுகுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால் மேற்குறிப்பிட்ட அனைத்துக் குறைகளும் நிலத்தடி நீர்ப்பாசன முறையில் இல்லை. நிலத்தடி நீர் ஒரு கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு மூலம் கிடைக்கக்கூடிய அளவு மிகத் துல்லியமாகக் கணக்கிட முடியும். கணக்கிட்டுத் தகுந்த பயிர் சுழற்சி மூலம் முப்போகமும் விவசாயம் பார்க்க இயலும். நிலத்தடி நீரின் அளவைத் துல்லியமாகக் கணக்கிட முடிவதால், நாற்றங்கால் முதல் அறுவடை முடிய பயிருக்குத் தேவையான முறையில், தேவையான அளவில், தேவையான நேரத்தில் கிடைக்கப் பெறச் செய்யலாம். மிகச் சரியான அளவே நீர்ப்பாசனம் செய்வதால் வடிகால் வசதிகளே தேவையிராது. எல்லாக் கழனிகளுக்கும், தேவையான நேரத்திலும், பிறரின் தலையீடு இல்லா

இரா. மு. சக்திவேலு
செயற்பொறியாளர்

பி.வி. சுப்பிரமணியம்
உதவிப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை,
சென்னை.

மலும் தத்தம் வசதிக்கேற்ப பாசனம் செய்ய இயலும். வரப்புச் சண்டை சச்சரவுகளும் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் அறவே இல்லை.

ஏரிப் பாசனத்தில் முதல், இடை, கடை அனைத்துக் கழனிகளிலும் ஒரே சமயம் நாற்றங்கால் முதல் அறுவடை வரை உரமிடுதல், மருந்தடிப்பது முதல் அனைத்து வேலையும் நடப்பதால் வேலையாட்கள் தட்டுப்பாடு அதிகம். ஆதலால் கூலியும் அதிகம். வேலையாட்கள் தேவையான நேரத்தில் கிடைக்காவிடின் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தின் ஒரு விவசாயி தனக்குத் தேவையான நேரத்தில் பயிர் செய்ய முடிவதால் வேலையாட்களைக் குறைந்த கூலிக்கு எளிதாகப் பெற முடியும்.

ஏரிப் பாசனத்தில் நெல், மணிலா பயிர்களைத் தவிர வேறெந்தப் பயிர்களையும் பாசனம் செய்ய இயலாது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் நெல், மணிலா, பயிர் வகைகள், பூச்செடிகள், தோட்டப் பயிர்கள், பழவகைகள் மாட்டுத் தீவனப் பயிர்கள் அனைத்தும் பயிர் செய்ய இயலும். ஏரிப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைக் கடைப் பிடிக்க முடியாததால், நிலத்திலுள்ள சத்து ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே செல்லும். அதனால் ஆண்டுதோறும் செயற்கை உரமிடுதல் அவசியமாகிறது. ஆனால் நிலத்தடி நீர்ப் பாசனத்தில் பயிர் சுழற்சி முறையைப் பின்பற்ற இயலும். மேலும், அவுரி, கொளுஞ்சி, டெயின்சா போன்ற பயிர்களையும் ஊடுபயிராகப் பாசனம் செய்ய இயலுவதால் மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடுதல் போதுமானது. அதனால் நிலத்தின் தரம் தாழ்ந்து விடாமல் பாதுகாக்கப்படுகிறது. பயிர்ச்சுழற்சி முறையைப் பின்பற்றுவதால் விளைச்சல் அதிகமாகிறது.

அதேபோல, கூலி ஆட்கள் குறைந்த இடத்தில் கூட தோட்டப் பயிர்கள் அமைத்து, நிலத்தடி நீர் மூலம் பாசனம் செய்வதால் அதிகக் கூலியாட்கள் தேவையில்லாமல் பாசனம் செய்ய இயலுகிறது.

நிலத்தடி நீரின் சிறப்பு

பெரும்பாலும், முந்தைய காலத்தில் மேட்டு நிலமான புன்செய்ப் பகுதியில் மழையை எதிர் நோக்கிப் பாசனம் செய்து வந்தார்கள். ஆதலால் இப்பாசனத்தையே மழை மூலம் பாசனம் பெறும் பரப்பு என்று தனியே பிரித்து விவசாயம் செய்து வந்தனர். மழையின் அளவு, நேரம், காலம் ஆகியவற்றை மனிதனால் நிர்ணயிக்க அல்லது கணக்கிட முடியாததால் புன்செய்ப் பகுதி விவசாயிகள் குறைந்த வருமானமே பெற்று வந்தனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் மழையை நம்பியிருந்தால், மிகுந்த பிரச்சினைக்குள்ளாகியிருந்தது. அதனால் புன்செய் விவசாயிகள், விவசாயிகள் என்ற பிரிவிலும், கூலியாட்கள் என்று பிரிவிலும் சாராதிருந்தனர். மிகச் சுருக்கமாக விளக்குவோமானால், அவர்கள் பகுதிநேர விவசாயிகள் ஆவார்கள். தங்களது வாழ்க்கைத் தேவைக்கு மழை இல்லாத அல்லது தவறிய நேரத்தில் வேறு ஒரு தொழிலையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. அதேபோல நன்செய், விவசாயிகள், தங்களிடம் உள்ள புன்செய் நிலங்களில் அதிக வருவாய் இல்லாததனால், புன்செய் நிலங்களைத் தரிசாக விட்டுவிட்டு நன்செய் நிலத்தையே கவனித்து வந்தனர்.

இம்முறையை மாற்ற வேளாண் பொறியாளர்கள் முன்வந்து ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணறு அமைத்து விவசாயிகளின் தரத்தை நிரந்தரப் படுத்தும் பொறுப்பை மேற்கொண்டனர். அதனருமையை உணர்ந்த விவசாயிகள் தற்போது நன்செய் நிலத்திலும் கிணறு அமைத்து விவசாயத்தில் பெரும் இலாபம் ஈட்டினார்கள். அதை மற்ற தொழில் போலவே முழுநேரத் தொழிலாகச் செய்கின்றனர். ஆழ்துளைக் கிணறு அமைத்ததனால் புன்செய் நில மக்கள் நன்செய் நில விவசாயிகளைவிட அதிக விளைச்சலை ஈட்டி, அதிக இலாபம் பெற்றார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் நன்செய் நில விவசாயிகள் பொறாமை கொள்ளும் வண்ணம் முற்றிலும் மாறுதல் அடைந்தது.

ஒரு சிறந்த உதாரணமாக, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள திருத்தணி வட்டத்திலுள்ள, கொத்தூர் கிராம விவசாயிகளைப் பார்க்கலாம். திருத்தணி வட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலேயே குறைந்த அளவு மழை பல ஆண்டுகளாகப் பெற்று வருகிறது. சுமார் பத்தாண்டிற்கு முன் கொத்தூர் கிராமத்தில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் மானாவாரி பயிர் மட்டுமே செய்துவந்தனர். அதனால், அவர்களது வாழ்க்கை மிகவும் பிரச்சினைக்குரியதாயிருந்தது. அவ்வூரிலுள்ள சில விவசாயிகள் எமது துறையினரை அணுகி திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்றை அமைத்தனர். நிலத்தடி நீர் கிடைக்கக் கூடிய அளவைப் பொறுத்து



பயிரிட்டு இன்று ஒவ்வொரு விவசாயியும் குறைந்தது சுமார் 5 ஏக்கர் நிலம் வைத்துள்ளார்கள். அவற்றுள் 3 ஏக்கரில் நெல்லும், கடலையும் மாறிமாறிப் பயிரிடுகின்றனர். மீதியுள்ள 2 ஏக்கரில் மல்லி, முல்லை, சம்பங்கி போன்ற பூச்செடிகளைப் பயிரிட்டுள்ளார்கள். பூச்செடிகளிலிருந்து வரும் வருவாயை அன்றாடச் செலவிற்கும், நெல் கடலை போன்ற பயிரினால் வரும் வருவாயை நிலம், வீடு, தோட்டம் போன்ற முதலீட்டிலும் ஈடுபடுத்தி, சுமார் பத்தாண்டில் அவர்களது வாழ்க்கை முறையையே மாற்றிக் கொண்டுள்ளனர். அவ்விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தற்போது கொத்தூர் கிராமமே ஒரு பூஞ்சோலையாகத் திகழ்கிறது.

சிக்கனப் பாசன முறைகள்

சிக்கப் பாசன முறை என்பது வேறு எந்தப் பாசன முறையிலும் நினைக்க முடியாதது. ஒரு கிணறு அமைத்து, பயிரின் தேவைக்கேற்ப, நீரின் அளவிற்கேற்ப, சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கனப் பாசன முறைகளைப் பயன்படுத்த முடிகிறது. அதனால் அதிக விளை நிலத்தில் பயிரிடப்பட்டு அதிக விளைச்சலையையும், பெறமுடிகிறது. ஒரே வகையான பயிரிடப்படும் முறையினையும் மாற்றி, குறைந்த அளவு கூலியாட்களுடன் விவசாயம் செய்ய இயலும். வேளாண்மை ஒரு 'இலாபமில்லாத் தொழில்' என்ற பெயரையும் மாற்றி, வேளாண்மை ஒரு பெரும் இலாபம் தரும் தொழில் என்ற நம்பிக்கை வளர்ந்து வருவதற்குக் காரணம் நிலத்தடி நீரின் மூலம் செய்யப்படும், பாசனமே ஆகும். எனவேதான் இன்று பெரிய தொழிலதிபர்களும் வேளாண்மையில் பெரிய முதலீடு ஏற்படுத்தி வேளாண்மை செய்ய முன் வந்துள்ளனர்.

இதைத்தவிர விவசாயத்தை ஒட்டியுள்ள இலாபம் தரும் தொழில்களான கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்த்தல், காளான் வளர்த்தல் போன்ற தொழில்களையும் மிக நல்ல முறையில் நடத்த இயலும் என்ற நம்பிக்கையினையும் ஊட்டி வருகிறது.

★ சமூக முன்னேற்றமும், பொருளாதார வளர்ச்சியும் ஒரு நாட்டின் இன்றியமையாத தேவை என்றாலும், அதன் பலன்கள் ஏழையெளிய மக்களுக்குக் கிடைப்பது அவசியம்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

விஞ்ஞானமும் நிலத்தடி நீரும்

இன்று தரிசு நிலம் வாங்கி, விஞ்ஞானத்தின் உதவியோடு நாளை ஆழ்துளைக் கிணறு அமைத்து, நாளை மறுநாள் நாற்றங்கால் அமைக்க இயலும் என்ற கூற்று மிகையாகாது. அந்த அளவிற்கு நிலத்தடி நீரினால் விவசாயம் விஞ்ஞானத்தோடு பின்னி பிணைந்து வளர்ந்துள்ளது. அதே போல உழுவது முதல் அறுவடை வரை பல சாதனங்கள் விவசாயத்தை இலகுவாக மாற்றும் என்பது தெரிந்த ஒன்றாகும்.

இப்போது நிலத்தடி நீரின் மூலமும், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம், இரட்டைக் குழாய்ப் பாசனம் போன்ற சிக்கன முறைகளின் மூலம் பாசனம் செய்வதால் விவசாயம் ஒரு முழு இயந்திரமான நிலையை (Complete Automation) அடைந்துள்ளது.

அதாவது, இருந்த இடத்திலிருந்து எல்லாப் பயிருக்கும் தேவையான நீர், ஊட்டச்சத்து, மருந்து ஆகியவற்றைத் தேவையான அளவில், தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் - அதாவது வேரின் அருகில் கொடுக்க இயலும். அதனால் பயிர்ப் பாசனத்தைப் பொறுத்த வரையில் ஒரு இயந்திரம் முழுவதுமாகப் பார்த்துக் கொள்ளக் கூடும் என்ற நிலைக்கு இன்று விஞ்ஞானம், நிலத்தடி நீர் அமைத்துத் தரும் வாய்ப்புகளினால் வளர்ந்துள்ளது.

இதைத் தவிர நிலத்தடி நீரை வெளிக் கொணர மின்சக்தி, எரிசக்தி, காற்றாலை, சூரிய சக்தி, ஆகிய சக்திகள் பயன்படுத்தப்படுவதன் மூலம் விவசாயம் மிக எளிதாக்கப்படுகிறது.

மேலும் உவர், களர் நிலத்தைச் சீர்திருத்தவும், உவர், அமிலத் தன்மையுள்ள நீரின் தன்மையையும் விவசாயத்திற்கு ஏற்ற வகையில் மாற்றவும் நிலத்தடி நீர் வழி வகுக்கிறது. அதனால் கடல் நீரின் ஊடுருவல் பகுதியிலும் விவசாயம் செய்ய இயலுகிறது.

நிலத்தடி நீரின் உதவியால் விஞ்ஞானத்தோடு வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கையின் சீற்றங்களைப் பொருட்படுத்துவதேயில்லை. இப்படி வளர்ந்துள்ள இன்றைய விவசாயம் இயற்கைச் சீற்றங்களுக்கே ஒரு புதிர் என்ற நிலைமைக்கு மாறியுள்ளது. இனி இந் நிலத்தடி நீரை எப்படிப் பெற முடியும் என்பதைச் சிறிது பார்க்கலாம்.

முதலில் மின்னாய்வுக் கருவி மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடையைத் துல்லியமாகக் குறிக்க இயலும். மேலும் முன்னோடி ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்னணுவியல் கருவியின் மூலம் நிலத்தடியிலுள்ள நீரோடை, நீர் பிடிபட்டுள்ள இடம் (Acquifer) நிலத்தின் பாங்கு ஆகியவற்றை ஆராய முடியும். ஆராய்ச்சியின் முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து நீரைக் கொணர வேண்டும்.

நமது விவசாயிகளிடையே தற்போது துளிர்விட்டு வரும் சமுதாயப் போக்கினால், பல விவசாய மன்றங்களை ஏற்படுத்தி தனித்தனியாக ஒவ்வொரு விவசாய மன்றத்திற்கு ஓர் சமுதாயக் கிணறு மூலம் நிலத்தடி நீரை வெளிக் கொணரச் செய்யலாம். அதனால் பல சிறு குறு விவசாயிகளின் நீண்ட நாளைய கனவு நனவாகி முப்போகமும் பயிர் செய்ய ஏதுவாகும்.

மலைக் குன்றில் மாபெரும் நூலகம்!

அமெரிக்காவின் முன்னாள் அதிபர்களான ரானல்ட் ரேகன், ஜிம்மி கார்ட்டர், ஜெரால்ட் போர்ட், ரிச்சர்ட் நிக்சன் ஆகிய நான்கு பேரும், தற்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுடன் ஒரே மேடையில் உரையாற்றினர். கடந்த நவம்பர் 4-ந் தேதியன்று 'ரானல்ட் ரேகன் நூலகத்' திறப்பு விழாவின் போது இந்த அபூர்வச் சந்திப்பு நிகழ்ந்தது.

லாஸ் ஏஞ்ஜலெஸ் நகருக்கு வடக்கே 35 மைல் தொலைவில் உள்ள வென்டுரா கவுண்ட்டி பகுதியில் ஒரு குன்றின்மீது 30 ஏக்கர் பரப்பில் ''ரேகன் நூலக வளாகம்'' அமைக்கப்பட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டுக் கட்டடப் பாணியில் அமைந்துள்ள இந்த நூலக வளாகத்தை நிறுவுவதற்கு 6 கோடி டாலர்கள் செலவு பிடித்தது.

அமெரிக்காவில் தற்போதுள்ள பத்து 'அதிபர் நூலகங்க்ளில்' இதுதான் மிகவும் பெரியதாகும். தனியார் அளித்த நன்கொடைகளைக் கொண்டு இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தேசிய ஆவணக் காப்பகம் இதனை நிர்வகிக்கும். இந்த நிர்வாகச் செலவுகள் மட்டும் ஆண்டுக்கு 15 இலட்சம் டாலர்கள் பிடிக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த நூலக வளாகத்தில் ஓர் அருங்காட்சியகமும், ஆவணக் காப்பகமும் நிறுவப்பட்டுள்ளன. ரேகனின் வாழ்க்கை பற்றியும் அவரது ஆட்சிக் காலத்தைப் பற்றியும் விவரிக்கும் பல முக்கிய ஆவணங்களும், காட்சிப் பொருட்களும் இங்கே வைக்கப்பட்டிருக்கும். ரேகன், அவரது மனைவி நான்சி ஆகியோரின் தனி வாழ்க்கை தொடர்பான காட்சிப் பொருட்களும் இங்கே இருக்கும். மொத்தத்தில் 5 கோடிக்கும் மேற்பட்ட ஆவணங்கள் இங்கே காட்சிக்கு வைக்கப் படும்.

1940- களிலும், 1950- களிலும் ரேகன் ஒரு திரைப்பட நடிகராக இருந்ததைச் சித்திரிக்கும் பல படங்களும், காட்சிப் பொருட்களும் இங்குள்ள ரேகன் அருங்காட்சியகத்தில் வைக்கப் படும்.

—அமெரிக்கத் தவகல் நிலையம்

இனி பல்வேறு விசைத்துளைக் கருவிகளின் சிறப்பைத் தனித்தனியாகக் காண்போம்.

1. கைத்துளைக் கருவி

இக்கருவியின் மூலம் இலகுவான களி, மணற்பாங்கான பூமி மற்றும் ஆற்றுப்படுகையிலும் 6'' 8'' விட்டம் 100' ஆழம் வரை குழாய்க் கிணறு அமைக்கலாம். மனித உழைப்பே பெரிதும் பயன்படுவதால் குழாய்க் கிணறு அமைக்க ஓரிரு நாட்களாகும். உறவினர்கள், நண்பர்களின் கூட்டுழைப்பினால் கிணறு அமைத்தலைத் துரிதப்படுத்தலாம். ஏழை எளிய விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கக்கூடிய குறைந்த செலவில் கிணறு அமைக்கக்கூடிய கருவி ஆகும்.

2. பர்குஷன் விசைத்துளைக் கருவி

இக்கருவி பூமியினடியில் பாறை மிகுந்த இடத்திலும், பெரும் கூழாங் கற்களும் படிவங்களும் உள்ள இடத்திலும் 8'' முதல் 12'' விட்டமுள்ள 200' ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கவல்லது. கூழாங் கற்களையும் இதர படிவங்களையும் இடித்துச் செல்வதால் இதில் ஆழ் துளைக்கிணறு அமைக்கச் சிறிது காலம் ஆகும். இத்துறைக்கருவி மிக மிகத் தொன்மையானது. ஒரு குழாய்க் கிணறு அமைக்க சுமார் 60 நாட்களாகும். வேறு எந்தத் துளைச் கருவியும் உபயோகப்படுத்த இயலாத நிலத்தில் இதை உபயோகப் படுத்தி ஆழ்துளைக் கிணறு அமைக்க வல்லதால் கிணறு அமைப்பதில் காலதாமதமாகிறது. இதைத் தவிர 30 அடி விட்டம் வரையிலுள்ள திறந்தவெளிக் கிணறுகள் அமைத்தும் நிலத்தடி நீரை வெளிக் கொணரச் செய்யலாம்.

3. சுழல் விசைத்துளைக் கருவி

இக்கருவி ஆற்றுப்படுகைகளிலும், களிப்புகளிலும், மணற்பாங்கான பூமியிலும் 4'' முதல் 12' விட்டமுள்ள 1,500 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். ஆற்றுப்படுகைகளில் அமைந்துள்ள விளை நிலங்கள் அதிகம் இருப்பதால் இத்துளைக்கருவி, குழாய்க் கிணறு அமைப்பதில் அதிகப் பங்குபெறுகிறது.

4. ஹாமர் விசைத்துளைக் கருவி

இக்கருவி கடினமாகப் பாறை மிகுந்து உள்ள இடங்களில் பயன் படுத்தப்படுகிறது. இக்கருவியினால் 4.5'' மற்றும் 6'' விட்டமுள்ள 300 அடி ஆழம் வரை ஆழ்துளைக் கிணறு அமைக்கலாம். இக்கருவி ஒரு மணி நேரத்தில் 6-12' அடி வரை பூமியைத் துளைக்கவல்லதால் ஆழ்துளைக் கிணற்றை ஓரிரு நாட்களில் அமைத்துவிடலாம். மேலும் திறந்த வெளிக் கிணற்றுள்ளும் ஆழ்துளையிட்டு நிலத்தடி நீரை வெளிக்கொணரச் செய்யலாம்.

இனி இப்பாசன முறையிலுள்ள இடர்ப்பாட்டைச் சிறிது காணலாம்.

இப்பாசன முறையில், உள்ள ஒரே இடர்ப்பாடு நிலத்தடி நீரின் மட்டம் இறங்கிக் கொண்டே செல்வதாகும்.

இவ்விடர்ப்பாட்டினைத் தவிர்க்க விஞ்ஞான வசதிகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைக்கப் பட்டுவரும் ஊற்றுநீர்த்தேக்கம் மூலம், மழைக் காலங்களில் வீணாகும் உபரியான நீர் ஆங்காங்கே தடுத்து நிறுத்தப்பட்டு நில ஊடுருவலுக்கு வழிவகை செய்வதால், நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும். மேலும் Recharge wells அமைப்பதன் மூலம் பருவ மழைக் காலங்களில் கடலில் கலக்கும் நீரை நிலத்தடியில் செலுத்திச் சேமிக்க முடியும்.

அதேபோல, ஒவ்வொரு விவசாயியும் தன்னுடைய நிலத்தின் தாழ்வான பகுதியில் ஒரு பண்ணைக்குட்டை அமைக்க முன்வர வேண்டும். அப்படி குட்டை அமைத்தோமானால், பருவமழைக் காலங்களில் அவரவர் நிலத்தில் பெய்த அதிக மழை பண்ணைக் குட்டையில் தங்கி நில ஊடுருவலுக்கு வழிவகை செய்யும். அதனால் நிலத்தடி நீரின் மட்டத்தைப் பராமரிக்க முடியும்.

அதேபோல, உபயோகம் அற்றுப் போன திறந்த வெளிக் கிணற்றில் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றைச் சேதப்படுத்தாமல் விட்டு விட்டால், பருவ மழைக்காலங்களில் அதிகப்படியான மழைநீர் இக்கிணறுகள் மூலம் நிலத்தடியில் ஊடுருவப்பட்டு நிலத்தடி நீரைச் சேமிக்க உதவும்.

எனவே, வேளாண்மையில் வறட்சி என்ற சொற்றொடரை நீக்கி, - இத்தகைய வழிவகைகள் மூலம், வறட்சியில் வேளாண்மை செய்து அதிக விளைச்சலுக்கு வழி வகுப்போம்!

படர் 'சாதிப் படை' ஒழிப்போம்

புலவர் இளஞ்செழியன்

போதையிலே பொல்லாத போதை - சாதி!
போதுமடா சாமி! இந்தப் போதைச் சாதி!
போதிமரப் புத்தர்பிரான் அன்பை யன்றோ
போதித்தார்! அவர் நெறியில் சாதி ஏது?
பேதையிலே பேதைகளாய் இருப்போ ராநாம்?
பேதமற்ற சமுதாயம் அமைப்போ ராநாம்?
பாதையிலே நடப்பவர்நாம்! பகுத்த றிந்தோர்
'படர்சாதிப் படை'யதனை ஒப்ப மாட்டார்!

என்சாதி உன்சாதி என்னும் பேச்சால்
இந்நாட்டில் சமநீதி முளைப்ப தெந்நாள்?
தன்சாதி ஆணவத்தால் விளையும் தீமை
தடுப்பதெந்நாள்? தமிழ்நீதி தழைப்ப தெந்நாள்?
முன்னாளில் இல்லாத சாதி முட்கள்
முளைத்ததிந்நாள்! பெருமரமாய் வளர்ந்த திந்நாள்!
முன்னேற்றத் திசைநோக்கி நடப்போர், இந்த
முடைநாற்றச் சாதியினை விரும்ப மாட்டார்!

பெரியாரின் 'பேருழைப்பு' என்ப தென்ன?
பேசுமிந்தச் சாதிஒழிப் பன்றோ? அண்ணா
வரிவரியாய் எழுதியிங்கே குவித்த தெல்லாம்
வரிப்புலியாம் சாதியினைக் கொல்லத் தானே!
எரியாத ஈரமட்டை யாக வன்றோ,
இருக்கிறது இன்னுமிந்தச் சாதி? மீண்டும்
மரியாதை யுடன்சாதிப் பிரிவி னைகள்
வகைவகையாய்த் திரள்கிறது தமிழ கத்தில்!

இருபத்து ஒராம்நூற் றாண்டை நோக்கி,
இவ்வையம் நடக்கிறது! நடக்கின் றோம்நாம்!
வருபத்து ஆண்டுகளி லேனும், சாதி
வழுக்கலற்ற சமுதாயம் அமைப்போம் வாரீர்!
'ஒரு சாதிக் கொருநீதி' என்ப தைநாம்
ஒழித்துவிடின், சாதியெண்ணம் செத்துப் போகும்!
திருநாட்டீர்! திருக்குறளைக் கொண்டி ருந்தும்
திருந்தாமல் நாமிருத்தல் நியாயம் தானா?

சாதிக்கோர் கொடிமரத்தை நடாதீர்! உங்கள்
சாதியினால் சாதிக்க நினைத்தி டாதீர்!
வீதிக்கோர் தேரிழுத்துக் கொண்டி ருக்கும்
விளையாட்டுச் சிறுவர்களாய் விளங்கி டாதீர்!
சோதிக்கோர் வானம்தான் உண்டு! கையின்
சுடர்களெல்லாம் நீணிலத்தில் நிலைப்ப தில்லை!
ஆதிக்கோர் அந்தமுண்டு! அதுபோல் சாதி
ஆரம்பம் அறுபடும்நாள் தொலைவில் இல்லை!

கும்பகோணம் மகாமகம் திருவிழா:

துயர நிகழ்ச்சி குறித்து அரசின் செய்தி

கும்பகோணத்தில் 18.2.1992 அன்று புனித மகாமகத் திருவிழா நடைபெற்றது. இம்மகாமகம் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாடப்படுகிறது. முந்தைய மகாமக விழாக்களுக்கு வந்த மக்களின் எண்ணிக்கையை விட இந்த மகாமக விழாவுக்கு அதிகமாக வருவர் என்று எதிர்பார்த்து, தமிழ்நாடு அரசு விரிவாகப் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தது- இவ்விழாவைக் காண வரும் மக்கள் எவ்வித இன்னல்களுக்கும் உள்ளாகாமல் விழாவைக் கண்டு களித்துச் செல்வதற்கு வசதியாக முன் எப்போதும் செய்திராத அளவுக்குச் சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள், உணவு வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியன சிறப்பாகச் செய்யப்பட்டிருந்ததோடு கூட்டத்தினைக் கட்டுப்படுத்திமுறைப்படுத்துவதற்காகக் காவல்துறைப் பணியாளர்களும் ஏராளமான எண்ணிக்கையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

1968-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்குக் காவல்துறை அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட மொத்தம் சுமார் 4,000 பேர் மட்டுமே பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

1980-ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமக விழாவிற்குக் காவல்துறையைச் சேர்ந்த 6,350 அலுவலர்களும், பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆனால், இந்த ஆண்டு நடைபெற்ற மகாமக விழாவிற்குப் பாதுகாப்பிற்காகத் தமிழ்நாடு அரசு காவல்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட மொத்தம் 12,070 பேரைப் பணியில் ஈடுபடுத்தியது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடக்கத்திலிருந்தே இந்த விழாவிற்கான ஏற்பாடுகளில் நேரடி ஆர்வம் காட்டிவந்தார்கள். பல்வேறு விழா நடைமுறைகள் சீராகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்கும், இவ்விழாவைக் காண வரும் பொதுமக்களுக்குப் பல்வேறு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் இவ்விழாவுக்கு வருகைதரும் இலட்சோப இலட்சம் பக்தர்களின் பாதுகாப்புக்கும் அவசியமான, திட்டங்களை வகுப்பதில் அவர்கள் மிகுந்த அக்கறை செலுத்தினார்கள். முதல்வர் அவர்கள், மகாமக விழா தொடர்பான பல்வேறு பணிகளைக் கவனக்கின்ற மாநில அரசு அலுவலர்களின் கூட்டங்களை அடிக்கடி கூட்டி, இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்கள். மேலும், இவ்விழாத்தொடர்பான பல்வேறு ஏற்பாடுக்ளைச் சிறப்பாகச் செய்வதற்குத் தேவையான செலவிற்காகக் கும்பகோணம் நகராட்சி, பொதுப் பணித்துறை, பொது சுகாதாரத் துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை ஆகியவற்றிற்கு அரசு தாராளமாக நிதியுதவி அளித்தது. பொதுமக்களுக்கான பல்வேறு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகக் கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 85.50 இலட்சம் வழங்கப்பட்டது.

இந்த நகராட்சி ரூ. 91.81 இலட்சம் செலவு செய்து உள்ளது. 1980- இல் நடைபெற்ற மகாமகம் திருவிழாவின்போது கும்பகோணம் நகராட்சிக்கு ரூ. 8.5 இலட்சம்தான் வழங்கப்பட்டது. நெடுஞ்சாலைத் துறை கும்பகோணம் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளி லும் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், 51.40 கி.மீ. தொலைவிற்கு ஒரு வழிப்பாதைகளை இருவழிப்பாதைகளாக அகலப்படுத்தவும் மொத்தம் ரூ. 1.32 கோடி செலவிட்டது. திருக்கோயிலுக்குச் செல்லும் சாலைகளை அகலப்படுத்தும் பணியையும், மகாமகக் குளத்தில் தூர் வாரும் பணியையும், பொதுப்பணித்துறை மேற்கொண்டது.

மகாமகத் திருவிழா தொடர்பான சமயச் சடங்குகளைச் செய்யும் ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை மேற்கொண்டது. பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிக்காக 1991 மார்ச்சுத் திங்களில் ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது. திருக்கோயில்களின் திருப்பணிக்கும் மேம்பாட்டுக்கும் முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து தொகை வழங்குவது உட்பட பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் மொத்தம் ரூ. 46.28 இலட்சம் வழங்கப்பட்டது. இதுவே மகாமகத் திருவிழாவின்போது செலவிடப்பட்ட அதிகமான தொகையாகும். மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யப் போக்குவரத்துக் கழகங்கள் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தன. 16.2.92 முதல் 18.2.92 வரை மொத்தம் 4,605 பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பேருந்துகள் 15,000 பயணத் தடவைகளுக்குமேல் ஓடி சுமார் 13.9 இலட்சம் பயணிகளை ஏற்றிச் சென்றன. அத்துடன் 16.2.92 முதல் 18.2.92 வரை இரயில்வே நிருவாகம் 62 தனி இரயில்களை விட்டது. இதில் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணம் செய்தனர். மாண்புமிகு முதல்வர் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை மகாமகம் திருவிழாவின் போது பக்தர்களுக்கு வழங்கினார். திருவிழா தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் நேரில் பார்வையிடுவதற்காக மாநில அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்டனர்.

18.2.1992-ஆம் நாளன்று நடைபெற்ற மகாமகம் விழாவை இனிதே



குடந்தையில் நடைபெற்ற மகாமக விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, புனித நீராடி வழிபட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் சொந்தச் செலவில் அளித்த 10 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 108 பெண்களுக்குப் புடைவைகள் மற்றும் உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

மகாமகத்தையொட்டி சிறப்பு அஞ்சலக உறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதல் அஞ்சலக உறையைப் பெற்றுக் கொண்டார்.

மகாமகத்தையொட்டித் தயாரிக்கப்பட்ட மகாமகச் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

கும்பகோணத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை வார்டுகள் 48 படுக்கைகள் கொண்டவைகளாக வரும் 1992-93-ஆம் ஆண்டில் விரிவுப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார். இத்திட்டத்திற்கு ரூபாய் 24 இலட்சம் செலவாகும். இம்மருத்துவமனைக்கான மருத்துவர்கள், மருத்துவ சார் பணியாளர்கள் தகுந்தாற்போல அதிக அளவில் நியமிக்கப்படுவார்கள்.

கும்பகோணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, சுற்றுலாத் துறையால் சுமார் ரூபாய் 30 இலட்சம் செலவில் ஓட்டல் கட்டப்படும் எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

நடத்த மாநில அரசு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தது என்பதை இந்த ஏற்பாடுகளிலிருந்து அறியலாம். பாதுகாப்பு, பக்தர்களை நெறிப்படுத்துதல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல், குற்றங்களைத் தடுத்தல் உட்பட பல்வேறு பணிகள் குறித்துத் திட்டத்தை மகாமகம் நடைபெறும் நாளுக்குப்பல மாதங்களுக்கு முன்னரே காவல்துறையினர் நன்கு திட்டமிட்டு அந்த ஏற்பாடுகள் குறித்து காவல்துறையினரும், மாவட்ட ஆட்சியரும், பொது மக்களின் பிரதிநிதிகளுடனும் கும்பகோணத்திலும், தஞ்சாவூரிலும் விரிவாகப் பரிசீலித்தனர். பல்வேறு திசைகளிலிருந்து பக்தர்கள் ஒழுங்காக, கட்டுப்பாட்டுடன் அமைதியான முறையில் மகாமகம் குளத்திற்கு வந்து நீராடிவிட்டு அதே போன்று கட்டுப்பாடான முறையில் வெளியேறுவதை உறுதி செய்யும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டிருந்தன.

காவல்துறையினர் அனைவருக்கும் அனைத்து விவரங்களும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டன. மேற்பார்வை அதிகாரிகளும், காவலர்களும் தங்களது கடமைகளை முற்றிலும் அறிந்து செயலாற்ற இயலும். பலமுறை ஒத்திகைகள் நடத்தப்பட்டன. இதற்கு முன்னர் 1980-ஆம் ஆண்டில் மகாமகம் விழாவை நடத்தி முன் அனுபவம் பெற்றிருந்த காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்-ஒழுங்கு) திரு. வால்டர் ஐசக் தேவாரம் அவர்களின் பொறுப்பில் அனைத்து ஏற்பாடுகளும் விடப்பட்டன. இவருக்கு உதவியாக ஒரு காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், 5 காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், 20 காவல்துறை கண்காணிப்பாளர்கள், 60 காவல்துறை துணைத் கண்காணிப்பாளர்கள், 200 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 500 காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகியோருடன் காவல்துறைக் காவலர்களும் செயல்பட்டனர். செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை மேற்பார்வையிடவும் அவை முறையாக நடக்கின்றனவா என உறுதி செய்யவும் காவல்துறை டைரக்டர் ஜெனரல், திரு. எஸ். ஸ்ரீபால் அங்கேயே தங்கியிருந்து கண்காணித்தார்.

இந்த ஆண்டு நடைபெற்ற மகாமகம் விழாவிற்கான காவல்துறை ஏற்பாடுகள் இதுவரை எப்போதுமே இல்லாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் செய்யப்பட்டிருந்தன. காவல்துறை, மிக விரிவான அளவில் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்ததோடு காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொரு அலுவலரும், பணியாளர்களும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளை நன்கறிந்து செவ்விய முறையில் செயலாற்றவும், அப்பணியை ஆற்றிடும்போது குழப்பம் ஏதும் நிகழாமலும் இருக்கத் தக்க விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அவர்களுக்கும் உணர்த்தப்பட்டன.

எனவே, காவல்துறை அலுவலர்கள், பணியாளர்களுக்கிடையே போதுமான ஒருங்கிணைப்பு இல்லை என்று நாளிதழ்களில் வெளிவந்துள்ள அறிக்கைகள் முற்றிலும் தவறானவையாகும் என்பதோடு விஷமத்தனமானவையும் ஆகும். தற்போது நடைபெற்ற மகாமகம் திருவிழாவிற்குக் கும்பகோணத்திற்கு சுமார் 50 இலட்சம் பக்தர்கள் வருகை தந்துள்ளனர். ஆனால் 1980- ஆம் ஆண்டில் நடைபெற்ற மகாமகம் விழாவிற்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கை 18 இலட்சம் மட்டுமே ஆகும். காவல்துறையினரும், மாநில அரசின் ஏனைய அலுவலர்களும் இத்தகைய

பெருங்கூட்டத்தை எதிர்பார்த்தே, அதைச் சமாளிக்கத்தக்க வகையில் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். அவர்கள் கும்பகோணம் ஒரு சிறிய நகரமாக இருந்தும், மகாமகம் குளம் நெரிசல் மிக்க பகுதியில் அமைந்திருந்தும் குளத்தைச் சுற்றிலுமுள்ள சாலைகள் குறுகலாக இருந்தும் வந்திருந்த பெருங்கூட்டத்தை நல்ல முறையில் சமாளித்தனர்.

இப்பகுதி முழுவதும், வடக்குப் பக்கத்தில் காவிரி ஆற்றாலும் தெற்குப் பக்கத்தில் அரசலாற்றாலும் சூழப்பட்டுள்ளது. மகாமகம் குளத்தில் ஒரு சமயத்தில் அதிக அளவு 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்று குளத்தினுள் நீராடி வெளியேறத் தக்கவகையில் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். இதுவே முன்பு மகாமகம் விழாக்கள் நடைபெற்ற போதும் பின்பற்றப்பட்ட முறையாகும்.

எனவே, காவல்துறையினர் போதிய அளவுக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்றும், பக்தர்களின் மாபெருங்கூட்டத்தைக் கண்டு அவர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர் என்றும் சில செய்தித் தாள்களில் வெளியான தகவல்கள் தவறானவையும், உள்நோக்கம் கொண்டவையும் ஆகும்.

பக்தர்கள் வடக்குப் பக்கத்திலிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும், மேற்குப் பக்கம் வழியாகவும், கிழக்குப் பக்கம் வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. உள்ளே நுழையவும் வெளியே செல்லவும் இதுபோன்ற ஏற்பாடுகள் முன்னர் 1968, 1980-ஆம் ஆண்டுகளில் நடந்த 'மகாமகம் விழாவின்' போதும் செய்யப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் நெருங்கியடித்துக் கொண்டு மோதியதால் மகாமகக் குளத்தின் வடக்குச் சாலைகளின் 'பங்கர் தருமச் சாலையை' ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து எதிர்பாராத சூழ்நிலை உருவாகும் வரையில் இந்த ஏற்பாடுகள் நன்றாகவே இருந்தன. இந்த பங்கர் தருமச் சாலையில் 'விஸ்வ இந்து பரிஷத்' அமைப்பு

'கிளினிக்' வைத்திருந்தது. மேலும், உணவுப் பொட்டலங்களை வழங்கவும், அந்த தர்மசாலையைப் பயன்படுத்தி வந்தது. இந்த உணவுப் பொட்டலங்கள், சுற்றுச் சுவருக்கு வெளியில் காத்திருந்த பக்தர்களிடம் வீசி எறியப்பட்டு வந்தன. சுற்றுச் சுவருக்கு வெளியே மக்கள் பெருமளவில் குழுமியதற்கு இதுவே முதற் காரணமாகும்.

பெருந்திரளாகக் குழுமியிருந்த மக்கள் கூட்டம் நெருங்கியடித்து முந்தியதால் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும் தூண்களும் இடிந்து விழுந்தன. இவ்வாறு இடிந்து விழுந்தது அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்த, மக்கள் தாறுமாறாக ஓட நேர்ந்தது. அவ்வாறு அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளி முண்டியடித்துக் கொண்டு ஓடியதே பக்தர்கள் இறப்புக்குக் காரணமாக அமைந்தது. ஆனால், மக்கள் கூட்டம் குளத்தில் நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனக் கூறுவது சரியன்று. குளத்தில் மூழ்கி ஒருவர் கூட இறக்கவில்லை. காவலர் தடியடித் தாக்குதல் நடத்தியதாலேயே மக்கள் நெருங்கியடித்து ஓட நேர்ந்தது என சிலப் பத்திரிகைகள் குற்றம் சாட்டியிருப்பது முற்றிலும் ஆதாரமற்றது மட்டுமல்ல; உண்மைக்கும் புறம்பானதுமாகும்.

விழா நடைமுறைகளின்போது, எந்த நேரத்திலும் (அல்லது) எந்த இடத்திலும் காவலர் தடியடித் தாக்குதல் நடத்தவில்லை, இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவரும், இடிந்துபோன சுற்றுச் சுவர் இரும்புக் கம்பியிருந்த இடத்திலிருந்து 60 அடி தொலைவுக்குள்ளேயே கிடந்தனர். விபத்து நடந்த இடத்திற்கு மிக அருகில் அவசரச் சிகிச்சை வண்டிகளைக் கொண்டுவர காவலர் தக்க ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஆகவேதான் காயமுற்ற பலரை உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று விலை மதிக்க முடியாத உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. அவ்வாறு செய்திருக்காவிட்டால், பலியானவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாயிருக்கும்.

புனிதப் பயணம் மேற்கொண்ட பக்தர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை ஒரு முறையாவது காண

• பணம் செலவழிப்பதை எல்லாம் எழுதி வை; செலவழித்தது அவசியந்தானா என்று சிந்தித்துப் பார்; சிக்கனம் தானாக வந்துவிடும்.

- அண்ணல் காந்தியடிகள்

வேண்டுமென்று விரும்பியதால் இத்துயரச் சம்பவம் நடந்தது என்றும், அவர்களை விரட்டுவதற்காகக் காவலர்கள் தடியடித் தாக்குதல் நடத்தினர் என்றும், பக்தர்கள் பல திக்குகளிலும் ஓடினர் என்றும், மாண்புமிகு முதல்வரின் பாதுகாப்புக்காகச் செல்லும் பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததால், பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் தடை செய்யப்பட்டனர் என்றும் செய்தித்தாள்கள் விஷமத்தனமாகச் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

குளத்தின் மேற்குக் கரையின் தென்பகுதியில் மாண்புமிகு முதல்வர் பயன்படுத்துவதற்கென மிகச் சிறிய அளவிலான அடைப்பே அமைக்கப்பட்டிருந்தது. அந்த அடைப்பு, 20 × 12 அளவு மட்டுமே கொண்டதாகும் எனவே, குளம் அமைந்துள்ள இடத்தில் நான்கில் ஒருபகுதி மாண்புமிகு முதல்வருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என்று சில செய்தித்தாள்களில் குறிப்பிடப்பட்டிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். மேற்குக் கரையில் எஞ்சிய பகுதி, பக்தர்கள் எளிதில் வந்து செல்வதற்கேற்ப அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு வந்திருந்த போதும்கூட, பக்தர்கள் இந்த வழியைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். குளத்தின் விளிம்பிற்கருகில் தெற்குப் பக்கமாக மேற்குக் கரைச் சாலையில் சிறிய இடத்தில் தான் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதுகாப்பிற்காகச் சென்ற வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இது, பக்தர்கள் எளிதாக வந்து செல்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. மேற்குப் பக்கத்தில், உள்ள இடத்திலிருந்து ஆயிரக் கணக்கில், மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தனர். உண்மையில், அப்பகுதியில் எவ்விதக் குழப்பமோ, நெரிசலோ இல்லை. இத்துயரச் சம்பவம் வடகிழக்குப் பக்கத்தில் நிகழ்ந்தது. இது மாண்புமிகு முதல்வர் வழிபாடு செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு அதாவது காலை 11.30 மணிக்கு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, நண்பகல் 12.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆனால், தருமச்சாலை சுவரின் மீதிருந்த இரும்பு கம்பியும் (Wall Grill) தூண்களும் இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து வடகிழக்குப் பக்கத்தில் இச்சம்பவம் மதியம் சுமார் 1.00 மணிக்கு நிகழ்ந்தது.

மாண்புமிகு முதல்வர், வழிபாடு நடத்திய இடத்திலிருந்து வெகு தொலைவில் அமைந்திருந்த கட்டடத்தில் நிகழ்ந்ததும், மாண்புமிகு முதல்வர் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் வெகு நேரம் கழித்து நடைபெற்றதுமான இத்துயரச் சம்பவத்திற்கு மாண்புமிகு முதல்வரின் வருகை அல்லது மாண்புமிகு முதல்வரின் பாதுகாப்பு வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்ததே

தாய்

• தாயின் இதயம்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.

- பீச்சர்.

• ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்.

- ஹெர்பர்ட்

• குழந்தையைக் கையிலேந்தி நிற்கும் தாயைவிட அதிக அழகான காட்சி கிடையாது.

- கதே

காரணம் என்று கூறுவது நியாயமற்றதும் மிகவும் கொடுமையானதுமாகும்.

இந்நிகழ்ச்சிகளைப் பற்றியெல்லாம் நன்கு அறிந்த 'விசுவ இந்து பரிஷத்' நிர்வாகத்தினர், மாண்புமிகு முதல்வர் அவர்களின் வருகையாலேயே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறுவது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும் அதனைப் பெரிதாக்கிக் குற்றம் சாட்டுபவர் அரசியல்வாதிகள். ஆனால், கும்பகோணத்தில் இதற்குமுன் நடைபெற்றிராத அளவுக்குச் சீரிய முறையில் இந்த ஆண்டு மகாமகத்தை நடத்துவது தொடர்பாகத் தமிழக முதல்வர் காட்டிய ஆர்வத்தையும், ஆதரவையும், தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததையும் நன்கு அறிந்த விசுவ இந்து பரிஷத்தினர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர். இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை எந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு விசுவ இந்து பரிஷத்தினர் குற்றம் கூறியுள்ளனர் என்பதனை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மொத்தத்தில் மகாமகம் சிறப்பாகவும், சுமுகமாகவும், உரியவாறும் நடைபெற்றதற்கான பாராட்டை முதலமைச்சரும், மாநில அரசும் பெறுவதை விரும்பவில்லை; அவர்களே அப்பாராட்டைப் பெற விரும்புகின்றனர். சமய விழாக்களைப் பொறுத்தவரையில், முதல்வரோ, மாநில அரசோ எவ்வகையிலும் தலையிடுவதில்லை என்பதைப் பல்வேறு சமய விழாக்கள் சுமுகமாக நடைபெற்றதிலிருந்து அறியலாம். ஆனால், இவ்வாறு நடைபெறுவது விசுவ இந்து பரிஷத்தினருக்குப் பிடிக்கவில்லை எனத் தோன்றுகிறது.

பெருமளவில் மக்கள் கூடுவதற்கு வசதி செய்வது கடமை என்று மட்டும் கருதாமல், இப்புனித விழாவில் பங்கு கொள்வதன் மூலம் பக்தர்களும், யாத்திரிகர்களும் தங்கள் வெளிப்படுத்துவது முழு வாய்ப்பு அளிக்க உறுதி செய்வதற்கும் அரசு பெருமளவில் ஏற்பாடு செய்தது.

விசுவ இந்து பரிஷத் மட்டும்தான் நம் நாட்டில் இந்து மதத்தின் ஒரே காப்பாளர் அல்ல. விசுவ இந்து பரிஷத், அரசு செய்த சீரிய ஏற்பாடுகளை மறைக்கும் நோக்குடன் கீழ்த்தரமான குற்றச்சாட்டுக்களைக் கூறி அரசின்மீது பழி சுமத்துகிறது. ஆனால், தமிழ்நாடு மாநிலம் தான் கோயில் நிருவாக வாரியம் அமைத்த முதல் மாநிலமாகும். தமிழ்நாடு முதல்வர்தான், கோயில் திருப்பணி பராமரிப்பு நிதியை ஏற்படுத்திய முதல் முதலமைச்சராவார். புகழ்பெற்ற தொன்மைக்கால கோயில்களைப் புதுப்பித்து, இவை, இந்து மதத்தின் தலைசிறந்த சின்னங்களாக என்றும் தழைத்து நிற்கச் செய்வதில் தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை வரும் இந்த மகாமகப் பெருவிழா உள்ளிட்ட விழாக்களில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டதில் தவறேதுமில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு வரவேற்பு குறித்து, அரசியல் உள்நோக்கம் கொண்ட சில கட்சிகள் பொறாமை கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் புனித நீராட அங்கு வந்திருந்த போதும், நீராடிய பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்ற பின்னரும், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடியது, விரிவான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இத்துயரச் சம்பவம் நடந்த இடம், குளத்தின் வட கிழக்கு மூலையிலுள்ள ஒரு சிறு பகுதியாகும். இதனையடுத்து, நள்ளிரவு வரையில், பல இலட்சம் மக்கள் அக்குளத்தில் தொடர்ந்து புனித நீராடத் தடையின்றி வந்துபோன வண்ணமாக இருந்தனர்.

எனினும், துரதிருஷ்டவசமாக இத்துயரச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் துயருற்ற குடும்பங்களுக்குத் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். இறந்தவர்களின் உறவினர்களுக்கு மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடி நிவாரணத் தொகையாக ரூ.25,000 வழங்க முதலில் ஆணை

யிட்டார். இத்துயரச் சம்பவம் குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்த்து, இறந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களுக்கு, மாண்புமிகு முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து கூடுதலாக ரூ.25,000 வழங்க அதாவது, அரசு மொத்தம் ரூ.50,000 வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இறந்தவரின் குடும்பம் ஒன்றிற்கு ரூ.30,000 வழங்க, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முன்வந்துள்ளது. இதோடு சேர்த்து, இறந்தவரின் குடும்பத்திற்கு மொத்தம் ரூ.80,000 வழங்கப்படுகிறது. பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து இறந்தவரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.20,000 வழங்கப்படும். இவ்வாறு இறந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றும் மொத்தத்தில் ஒரு இலட்சம் ரூபாயைப் பெறும்.

தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 50,000, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து ரூபாய் 30,000

பிரதம மந்திரியின் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 20,000 மொத்தம் ரூ.1,00,000

இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தேவைப்படக் கூடிய கல்வி, வேலைவாய்ப்பு போன்ற பிற நிவாரண உதவிக்கு வகை செய்யவும் தமிழக முதல்வர் நடவடிக்கைகள் மேற்கொள்வார்.

மாண்புமிகு முதல்வர் மகாமகத் திருவிழாவில் கலந்து கொண்டதை ஒரு பிரச்சினையாக்கிச் செய்தித்தாள்கள் எழுதியிருப்பது மிகவும் வேதனைப்படத்தக்கதாகும்.

இந்நாட்டின் குடிமகள் என்ற முறையில் மட்டுமல்லாது மாநிலத்தின் முதலமைச்சர் என்ற வகையிலும், இந்து சமய அறநிலையத் துறையின் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர் என்ற வகையிலும், இந்த மகாமக விழாவில் கலந்து கொள்ள அனைத்து உரிமையும் உண்டு மாண்புமிகு முதலமைச்சருக்கு. கடந்த காலத்தில் எந்த ஒரு முதலமைச்சரும் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளாமல் இருந்ததைக் கொண்டு, தற்போது முதலமைச்சர் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளக் கூடாது

• மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.

- தந்தை பெரியார்

என்று கூறுவது நியாயமில்லை. திருவிழா, சுமுகமான முறையில் நடைபெற, முதலமைச்சர் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டார். எனவே, அவர் திருவிழாவில் கலந்து கொண்டது முற்றிலும் பொருத்தமுடையதும், முறையானதும் ஆகும். முதல்வர் கும்பகோணத்திற்கு வருகை தந்த போது, பெருந்திரளாக மக்கள் ஆர்வத்துடன் கூடினர். இதுவே பெருந்திரளாக மக்கள் கூடுவதற்கான தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது என்பதைக் காட்டுகின்றது. எனவே, அது மகாமகம் அல்ல ஜெயாமகம் என்று ஒரு செய்தித்தாள் குறிப்பிட்டிருப்பது கொடுமையானதும் தீய நோக்கம் உடையதுமாகும். பொறுப்பு வாய்ந்த ஒரு செய்தித்தாளால் எவ்வாறு இத்தகைய பொறுப்பற்ற சொற்களைப் பயன்படுத்த இயலும் என்பது புரிந்து கொள்ள இயலாததாக உள்ளது.

ஒரு காலத்தில் நடந்த நிகழ்ச்சியோடு பிறிதொரு காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை ஒப்பிடுவது விரும்பத்தக்கதல்ல என்றாலும், கடந்த காலத்திலும் எதிர்பாராத அளவுக்கு இத்தகைய பெருங்கூட்டம் கூடியபோது இதைப் போன்ற சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. பிரயாகையில் 3.2.1954 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 316-க்கும் மேற்பட்ட பக்தர்கள் மாண்டனர். ஹரிதுவாரில் 4.4.1986 அன்று நடைபெற்ற கும்பமேளாவில் 50-க்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். 1954-இல் பிரயாகையில் நடைபெற்ற கும்பமேளாவில் அந்நாளைய பாரதப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர் கூறிய கருத்து வருமாறு:-

• நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது; நாம் சுதந்திரத்துடன் சுகம்பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்.

- மூதறிஞர் இராஜாஜி

'ஒரு சரியான நோக்கில் அனைத்துச் சம்பவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது கும்பமேளா நடைபெற்ற பகுதியில் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கையையும், அங்கிருந்த இடத்தையும், செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். சிக்கல் என்னவெனில், இடப் பற்றாக்குறையாகும்.'

1954-இல் நடைபெற்ற கும்பமேளாவில் சுமார் 316 பேர் மடிந்தனர் என மதிப்பிடப்பட்டது. ஆனால், எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் அவ்விழாவில் கலந்து கொண்ட பிரதமர் ஜவகர்லால் நேரு மீது எந்தவொரு பழியையும் சுமத்தாததோடு அவர் கும்பமேளாவில் கலந்திருக்கக்கூடாது என்றும் குறை கூறவில்லை.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள இப்பெருந்துயர் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் தமிழ்நாடு அரசும் தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர்.

இத்துயரச் சம்பவத்திற்குக் காரணமான சூழ்நிலைகள் குறித்து விசாரணை ஒன்றினை நடத்துமாறு தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவர் ஆணையிடப்பட்டுள்ளார். அவ்வறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கையினை எடுக்கும், இதனிடையே இறந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவியும், நிவாரணமும் அளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் மக்களுக்கு உறுதியளித்துள்ளார். ●

தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியம்

இந்தியாவில் உள்ள ஆவணக் காப்பகங்களில் ஒரு தனி இடத்தை வகிக்கும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 1909-இல் அமைக்கப்பட்டது. ஆனால், 1805-லிருந்தே அது சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அறைகலன்கள் வைக்கப்பட்ட ஓர் அறையிலேயே இயங்கி வந்தது. 1968-இல் சென்னை ஆவண அலுவலகம் என்றிருந்த இதன் பெயர் அவ்வப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டு இறுதியாக 1973-இல் 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்காப்பகத்தின் மாவட்ட மையங்கள் மதுரை, கோவை, கடலூர், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் இயங்கிவருகின்றன.

பணிகளும் செயல்பாடுகளும்

ஆவணங்களைப் பல்வேறு துறைகளிலிருந்து பெறுவதும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாத்து வைத்து, ஆராய்ச்சியாளருக்கும் நிர்வாகப் பணிகளுக்கும் தேவையான ஆவணங்களை வழங்குவதே இக்காப்பகத்தின் முக்கியப் பணியாகும். இக்காப்பகத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதன்மையான ஆவணம் கி.பி. 1670-ஆம் ஆண்டைச் சார்ந்தது. நிர்வாகத் துறை நீதித்துறை உள்ளடங்கிய பல்வேறு துறைகளின் ஆவணங்களும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து ஆவணங்களும், உள்நாட்டு வெளிநாட்டுப் போர் தொடர்பான ஆவணங்களும் இங்கு சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

சென்னை எழும்பூரில் தொடர்வண்டி நிலையத்திற்கு எதிரேயுள்ள பெரிய சிவப்புக் கட்டடமே தமிழ்நாடு ஆவணக் காப்பகம். ஆங்கிலேய அரசால் விட்டுச் செல்லப்பட்ட முக்கியச் சின்னங்களுள் தமிழ்நாடு ஆவணக் காப்பகமும் ஒன்றாகும். இக்காப்பகம் ஆவணச் செல்வங்களை வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்குவதிலும் தமிழக அரசின் அன்றாட நிர்வாகத் தேவைகளுக்குப் பயன்பட்டு வருவதிலும் முக்கியப் பங்கினை வகிக்கிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தினைத் தமிழ்நாட்டின் 'செல்வக் களஞ்சியம்' என்று சொன்னால், அது மிகையாகாது.

ஆவணங்களின் அளவிற்கதிகமான எண்ணிக்கைக் குவிப்பும் அதன் வேகமான வளர்ச்சியும் உலகெங்கும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. எனவே, ஆவணங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்கவும் ஆவணக் காப்பகங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இத்தகைய ஆவணக் காப்பகம் இந்தியாவில் முதன் முதலில் சென்னையில்தான் தொடங்கப்பட்டது.

ஆவணக் காப்பக நூலகம்

இக்காப்பகத்தில் நூலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இந்நூலகத்தில் 2.5 இலட்சம் அரிய நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்ட நூல்களும், மகாத்மா காந்தி, பண்டிதர் நேரு, இராஜாஜி போன்ற பெரும் தலைவர்கள் எழுதிய நூல்களும் சென்னை கூரியர் (Madras Courier) என்னும் முதல் செய்தித்தாளும் (1793) ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு முதலியவையும் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

ஆவணப் பாதுகாப்பு முறை

இங்கு ஆவணங்கள் வரிசைக் கிரமமாக அதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட அட்டங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. ஆவணங்களில், படியும் தூசியும் அவ்வப்போது 'வாக்குவம் கிளீனர்' மற்றும் கைத்தூரிகைகளைக் கொண்டு அகற்றப்படுகின்றது.

கரையான், புத்தகப் புழு போன்ற பூச்சி வகைகளால் பாதிக்கப்பட்ட ஆவணங்கள், இதற்கென அமைக்கப்பட்டுள்ள 'வாக்குவம்' பொறியியல் இரசாயனப் புகையூட்டி மூலம் அழிக்கப்படுகின்றன. மிகப் பழமையான ஆவணங்கள் மற்றும் தூளாகக் கூடிய நிலையில் உள்ள ஆவணங்கள், அவற்றில் படிந்துள்ள அமிலத் தன்மை முதலில் நீக்கப்பட்டு பின்னர் 'சிப்பான்' என்னும் மெல்லிய பட்டுத் துணியை இருபுறங்களில் ஒட்டி

இவை தவிர டச்சு, டேனிஷ், பர்ஷியன், மராத்தி, மோடி போன்ற பிற மொழி ஆவணங்களும் இக்காப்பகத்தில் பேணிக் காக்கப்பட்டுவருகின்றன. பத்திரங்கள், அடமானப் பத்திரங்கள் போன்ற மதிப்புள்ள ஆவணங்கள் பாதுகாப்பான நிலைப் பேழைகளில் பாதுகாக்கப்படுகின்றன. வரலாறு, நிர்வாகத் தேவைகளுக்கு ஆவணங்களை வழங்குவதுடன் அரசிதழ்களிலிருந்து சான்றிட்ட பகுதி நகல்களும் முன்னோர்களின் பிறப்பு, இறப்புப் பணி ஆகியவை பற்றிய விவரங்களடங்கிய ஆவணங்களின் நகல்களும் பொதுமக்களுக்கு உரிய கட்டணத்திற்கு வழங்கப்படுகின்றன. இவை தவிர, 1962-ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பழுது பார்க்கப்பட்டு புத்தகங்களாகக் கட்டப்படுகின்றன.

இதுதவிர 'அஸிடேட்பாயில்' மற்றும் 'டிஷ்யூ பேப்பர்' என்ற இருவகைத் தாட்களைப் பயன்படுத்தி, மேலொட்டல் இயந்திரத்தின் மூலமும் ஆவணங்கள் செப்பனிடப்படுகின்றன. மூல ஆவணங்கள் ஒருவேளை அழியக்கூடுமானால், இரண்டாவது மூல ஆவணங்களாகப் பயன்படுத்தவும் ஆராய்ச்சியாளர்களுக்கு மைக்ரோ பிலிம் நகல்கள் வழங்கவும் நுண் நிழற்படக் கருவி மூலம் நகல்கள் எடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களை எளிதில் தேடியெடுக்க அட்டவணைகளும் ஆவண வழிகாட்டிகளும் இக்காப்பகத்தில் உள்ளன. இக்காப்பகம் இதுநாள் வரை நிர்வாகத்தினருக்கும், வரலாற்று ஆராய்ச்சியாளருக்கும் சமுதாயத்தினருக்கும் அரிய பணிகளைப் புரிந்து வருகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.


ஆவணக் காப்பக ஆய்வுக் கூடம்

ஆவணக் காப்பகப் பொருட்காட்சி

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 14.2.1992 முதல் 20.2.1992 வரை பொருட்காட்சி ஒன்றை நடத்தியது. இப்பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் 14.2.92 அன்று தொடங்கி வைத்தார்.

இதில் பல்வேறு ஆவணங்கள், படங்கள், அறிக்கைகள், முதலியவை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. 1680-ஆம் ஆண்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள செயிண்ட் மேரிஸ் ஆலயத் திறப்பு பற்றிய குறிப்புகள், ஆவணங்கள், 1736-45-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில் எழுதப்பட்ட ஆனந்தரங்கம் பிள்ளை நாள் குறிப்பு, 1756-ஆம் ஆண்டில் புனித ஜார்ஜ் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றியதற்கான ஆணைகள், ஆவணங்கள், திருநெல்வேலி, ஆர்க்காடு, மைசூர் சமஸ்தானப் போர் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள் முதலியவை இடம் பெற்றிருந்தன.

இவை தவிர, வெளிநாட்டுப் போர் பற்றிய ஆவணங்கள், வெளிநாட்டினர் ஆட்சி முறை பற்றிய வண்ணப் படங்கள், முதலமைச்சர்களின் கடிதங்கள், நீதிமன்ற அறிக்கைகள், சர்.சி.வி. இராமன், டாக்டர் இராமானுஜம் போன்ற விஞ்ஞானிகள், கணித மேதைகள், அண்ணல் காந்தியடிகள், பண்டித நேரு, மூதறிஞர் இராஜாஜி போன்ற தலைவர்கள் எழுதியுள்ள அரும்பெரும் நூல்கள், பிரதாப முதலியார் எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' என்னும் முதல் நாவல், 'சென்னை கூரியர்' என்னும் முதல் பத்திரிகை, பரதநாட்டியம், பழந்தமிழ்க் கலைகள் பற்றிய நூல்கள், மருத்துவ நூல்கள் முதலியவையும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆவணங்களைப் பாதுகாக்கும் முறைகள் பற்றிய விளக்கப் புத்தகங்கள், படங்கள், அவற்றிற்குத் தேவையான கருவிகள், இரசாயன மருந்துப் பொருட்கள் முதலியவையும் இப்பொருட்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இப்பொருட்காட்சி பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாக அமைந்திருந்தது. ●

தொகுப்பு: தே. மணி


ஆவணக் காப்பக நூலகம்



ஒருமைப்பாட்டை உணர்த்தும் ஒப்பற்ற பொருட்காட்சி

அன்னை பூமியின் அணிகலன்களாக விளங்குபவை, சுற்றுலாத் தலங்கள்!

அவற்றையெல்லாம் ஒரே இடத்தில் பார்த்தால் எப்படி இருக்கும்?

இந்த அரிய வாய்ப்பினைத் தருகிறது, 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி.



சென்னைத் தீவுத்திடலில் 6.1.92 முதல் நடைபெற்று வருவதுதான், இந்தப் பொருட்காட்சி.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற இந்தப் பொருட்காட்சியில் அரசுத்துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் பல பங்கேற்றுள்ளன.

பொருட்காட்சியினுள் நுழைகிறோம். ஆலயம் ஒன்று அழகாய்க் காட்சி தருகிறது. ஆம். அறநிலையத்துறையின் அந்த அரங்கினுள் சென்று பார்த்தபோது, தமிழகத்துக் கோயில்களின் வண்ணப் படங்கள், கடவுளர் திருவுருவச் சிலைகள், பூசைக்குரிய வெண்கலச் சாமான்கள், மகாமகக்குள மாதிரி ஆகியவை நம்மைக் கவர்கின்றன.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அரங்கில், மாதிரி காற்றாலை, மனிதச்சக்தி, விசைப்பம்பு, சூரிய அடுப்பு ஆகியவற்றைப் பார்க்கிறோம். மேலும் இவ்வாலையின் பிற பணிகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் எத்தனைப் போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன? அவை, பயணிகளுக்கு ஆற்றிவரும் பயனுள்ள பணிகள் என்னென்ன என்பது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்கிறோம், இந்த அரங்கில்.

ரிப்பன் கட்டடம் இங்கே எப்படி வந்தது?

அதுதான் விந்தை! சென்னை மாநகராட்சி இயங்கும் அந்த வெள்ளை மாளிகையை அப்படியே இங்கே அமைத்திருக்கிறார்கள்! நுழையும்போதே, 'இது உங்கள் நகரம்' என்கிற வாசகம் நம்மை வரவேற்கிறது.

சாலைப் பராமரிப்பு, பாலங்கள், மழைநீர் வடிகால், பொதுச் சுகாதாரம், மக்கள் தொகைத் திட்டம், குழந்தைகள் நலம், மின்சாரம், தெரு விளக்குகள் முதலான வளர்ச்சிப் பணிகள் விளக்கப் படங்களோடு காட்டப்பட்டுள்ளன.

இரவும் பகலும் இயங்குவது காவல் துறை. சமுதாய வயலில் உள்ள களைகளைக் களைவது இத்துறையின் முக்கியப் பணிகள்.

காவல்துறை அரங்கில் நுழைந்ததுமே நம்மை வரவேற்கிறார் ஒரு காவலர், ஒளி வடிவத்தில்!

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!' என்கிற பாரதியின் திருவாசகத்துக்கு உயிரோவியமாக விளங்குகிறது இப்பகுதி. வரதட்சிணைக் கொடுமை கண்முன் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

தமிழகக் காவல் பணி அமைப்பு பற்றியும், விபச்சாரத்தால் விளையும் தீவினை குறித்தும் தெரிந்துகொள்கிறோம் இங்கே.

போதை ஏறினால் என்ன தீமைகள் விளையும் என்பதும், சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமல் போனால்







விபத்துக்களை விலைக்கு வாங்கும் நிலையும் தத்ரூபமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது.

வேதாரண்யம், கோடியக்கரைக் கடற்கரையில் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் நவீன ஆயுதங்களை இங்கே பார்க்கலாம்.

தீயணைப்புத் துறையின் பணிகளைப் பார்க்கின்றபோது, தீயின் கொடுமைகளும், அதைத் தவிர்க்கும் வகைகளும் விளக்கப்படங்களாக அமைக்கப்பட்டுள்ளன. தீயணைப்புத்துறை மீட்புப் பணிகளின் வகைப்பாடுகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது தொழில்துறை. எல்காட், சிட்கோ, சிப்காட், டாமின், டிஐஐசி, டிட்கோ ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளை விளக்குகிறது தொழில்துறை அரங்கம்.

சென்னைத் துறைமுகத்தின் பணிகள் குறித்து, பலப்பலத் தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

[illegible] உருவாகும் துறைத் துறைமுகம், திசைகாட்டும் கருவி, மண் வாரும்போது கண்டெடுக்கப்பட்ட புராதனச் செப்புத் தகடு ஆகியவற்றைப் பார்த்து வியக்கிறோம். அத்தோடு, 1876 முதல் 1966 வரை உள்ள துறைமுகத் தோற்றங்களையும் கண்டு மகிழ்கிறோம். விளையாட்டு வளாகத்தின் (Sports Cor:plex) மாதிரி ஒன்றும் இங்கே காட்சியளிக்கிறது.

கண்ணாய் விளங்கும் கல்வித் துறைக்கு வருகிறோம்.

தமிழக அரசு, கல்வி வளர்ச்சிக்காக ஆற்றி வருகின்ற அரும்பணிகளை, இங்கே உள்ள பட்டியலைப் பார்த்துத்



தெரிந்து கொள்கிறோம். தொடக்கக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, பள்ளிக் [illegible] கல்வி, தொழில்நுட்பக் கல்வி இப்படி, கல்வித்துறையின் பல்வேறு கூறுகளைத் தக்க வகையில் விளக்கியிருப்பது பாராட்டத் தக்கது.

'சேமமுற வாழ்வதற்குச் சிறுசேமிப்பு' என்பதைச் சிறுசேமிப்புத் துறையும், 'உழவே தலை' என்பதை வேளாண்மைத் துறையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

செய்தித்துறை - அரசு ஆற்றி வருகின்ற அரிய பணிகளை அறிவிப்பதுதான் இத்துறையின் முக்கிய நோக்கம்.

அரங்கினுள்ளே, மகளிர் நலத் திட்டங்கள் குறித்த தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இதேபோலவே, வளரும் தமிழகம் நம் கண்முன் காட்சியளிக்கிறது. 133 அடி உயர திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் மாதிரி வடிவமும் இங்கே உள்ளது. அரசின் தகவல் அறிவிப்புச் சாதனமாக விளங்கும் 'தமிழரசு' இதழ்களும் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. 'திரைப்பட நகர்' மாதிரியும் நம் மனத்தைக் கவர்கிறது.

வெண்மைப் புரட்சிக்கு வித்திடுவது ஆவின். அதன் பணிகளின் தொகுப்பைப் பார்க்கிறோம்.

சுற்றுலாத்துறை - பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும், அதே சமயம் அமைதியாக ஆனந்தக் கடலில் நீந்தவும் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. நம் நாட்டில் குறிப்பாக, தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களுக்குக் குறைவே இல்லை. [illegible] சியான, மனதுக்கு [illegible] காட்சிகள் ஏராளம்.

தமிழகம் என்கிற மகுடத்தில், மாணிக்கங்களாக மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் விளங்குகின்றன. அவற்றைச் சித்திரிக்கிறது இந்த அரங்கு. தமிழக விழாக்கள், அவற்றைக் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகள், ஆகியவை குறித்த தகவல்கள் திரட்டித் தரப் பட்டுள்ளன.

கொடைக்கானல், ஒகேனக்கல், குற்றாலம், ஊட்டி முதலான குளிர்ப் பிரதேசங்கள் மற்றும் மாமல்லபுரம், மதுரை நாயக்கர் மகால் கண்முன் காட்டப்படுகின்றன. கண்ணைக் கவரும் ஓவியங்கள் மூலமாக!

'ஒரு இலட்சம் மகளிர்க்கு வேலை வாய்ப்பு' என்கிற மகிழ்ச்சியான அறிவிப்புடன் காட்சி தருவதுதான், சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறைக் காட்சி அரங்கம்.

இங்கே, சேவை இல்லம், ஊனமுற்றோர்க்கு வழங்கியுள்ள சலுகைகள் முதலான தகவல்களை அறிந்து கொள்கிறோம்.

இலவச வீட்டுமனை, தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம், சமூக நலக் கூடங்கள், மலைவாழ் மக்களின் மாதிரிக் கிராமம், பள்ளிக் கல்விச் சலுகைகள் முதலான சமுதாய நலப் பணிகள் குறித்த தகவல்களை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நமக்குத் தெளிவாக விளக்குகிறது.

பட்டுப் புடவைகளைப் பார்த்திருக்கிறோம். அவற்றுக்குக் காரணமாக இருக்கும் பட்டுப் புழுக்களைப் பார்த்திருக்கிறோமா? மல்பரிச் செடி இலைகளுக்கிடையே, அவை ஒவ்வொரு நிலையில் வளர்ந்துள்ள விதங்களை நேரில் பார்க்கிறோம். அத்துடன் மல்பரி பயிரிடுதல் குறித்தும் இங்கே விளக்கப் படங்கள் உள்ளன.

மீனவ மகளிர் விரிவாக்கப் பணி, தமிழகத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக விளங்குகிறது.

சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில்



மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

- இது போன்ற மீனவர் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்த அரசு [illegible] அறிந்து கொள்ள மீன்துறை [illegible]!

கோட்டூர்புரம் [illegible] பார்க்க, நெடுஞ்சாலைத் [illegible] வேண்டும். ஆம். இதன் மாதிரி [illegible] இங்கே பார்க்கிறோம்.

மேலும் இங்கே நாம் பார்ப்பது- மத்திய [illegible] கலவை இயந்திரத் தொகுதி.

பரங்கிமலை இரயில் நிலையம் அருகில் அமையவிருக்கும் வாகனச் சுரங்கப்பாதை.

கோவை கிராஸ்கட் சாலை - மேம்பாலம், காட்பாடி மேம்பாலம், கொள்ளிடம் ஆற்றுப் பாலம் ஆகியவற்றின் மாதிரிகள் இங்கே காட்சி தருகின்றன.

இப்போது நாம் பொதுப்பணித்துறை அரங்கினுள் நுழைகிறோம்.

காவிரியின் வடிகால் பரப்பு விவரங்கள், காவிரி முக்கிய துணை நதிகள், தமிழ்நாட்டில் காவிரியின் பாசனப் பரப்பு, நடைமுறையில் உள்ள பாசனத் திட்டங்கள் முதலானவை அழகிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

டான்சியின் திட்டப் பணிகளைப் பார்த்துவிட்டு வரும் நம்மை, சென்னைக் குடிநீர் அரங்கம் வரவேற்கிறது.

'குடிநீரைச் சேமியுங்கள் - விளாக் காதீர்!' என்று சொல்லாமல் சொல்கிறது இந்த அரங்கம்.

சென்னைக்குக் குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களான பூண்டி, சோழவரம், [illegible] ஆகியவற்றின் பெரிய அளவுப் படங்கள் காட்சி தருகின்றன. குடிநீர் சுத்திகரிப்பும் தரக்கட்டுப்பாடும் கண்டறியும் காட்சியும், கிருஷ்ணா நதிநீர்த்











திட்டம் - நீர் வழிப் பாதையைக் காட்டும் காட்சியும் நம்மைக் கவர்கின்றன.

இங்கே உள்ள சிறு திரையரங்கில், குடிநீர் சேமிப்பதைச் சித்திரிக்கும் படம் காட்டப்படுகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறையில் யூரியாமூலம் சத்தூட்டப்பட்ட வைக்கோல், ஆவின இனவிருத்தி, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு கால்நடைப் பண்ணைகள், பால் உற்பத்திக்குப் பராமரிப்பு முறைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன.

கோழி, முயல், ஆடு, வெண்பன்றி ஆகியவற்றையும் இங்கே பார்க்கலாம். குஞ்சு பொறிக்கும் கருவியொன்றும் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

வனத்துறைக்கு வருவோமா?
'எங்களையும் வாழவிடுங்கள்!'
என்ற வாசகம், விலங்கினங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது.



காடுபடு பொருள்களைப் பார்க்கின்ற நம் கண்களுக்கு, விலங்குகளின் வண்ணப் படங்களும் தென்படுகின்றன. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் என்ன செய்கிறது என்பதையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறோம்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் - குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் குறித்துத் தெரிந்துகொள்கிற நாம், 2011-இல் சென்னை எப்படி இருக்கும் என்பதையும் தெரிந்து கொள்கிறோம்.

மாதவரம் நன்னிறைவுத் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகிய மாதிரிகளைப் பார்க்கின்ற நமக்கு, சென்னை மாநகரின் துரித வளர்ச்சிப் பணிகள் துல்லியமாகத் தெரிகின்றன.

கட்டட விதிமுறை தவறினால் ஏற்படும் விளைவுகளை - நாம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அரங்கிலேயே நகர் ஊரமைப்புத் துறைப் பணிகளும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியப் பணிகளும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையிலே படங்களாகவும், பாடங்களாகவும் வைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அரங்கினுள்ளே-

அளவான குடும்பத்தின் அவசியம் உணர்த்தப்படுகிறது.

காசநோய்த் தடுப்பு, கொசு ஒழிப்பு பற்றிய தகவல்களும், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையின் பயன்களும் பணிகளும் பார்க்க வேண்டியவை.

மருத்துவக் கல்வி, கிண்டி நோய்த் தடுப்பு நிலையம் ஆகியவை மக்கள் நலப் பணிகளில் எப்படித் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

'கூட்டுறவே நாட்டுறவு' என்பது செயல் அளவில் காட்டப்படுகிறது இங்கே!

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற பயன்கள் ஒரு புறம், சாண எரிவாயு, புகையில்லா அடுப்பு ஆகியவற்றின் உபயோகம் ஒரு புறம் நம்மைக் கவர்கின்றன. இதேபோல, டோக்ரா திட்டம் - ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தினால் விளையும் நன்மைகள் குறித்து விளக்கப்படுகிறது.

தொழிலாளர் நலன்களுக்கு உதவிக்கரமாக இருக்கும் தொழிலாளர் நலத் துறை, சித்திரக் கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் கோ-ஆப்டெக்ஸ், ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டே போகிறோம்.

இடையிடையே தனியார் வைத்துள்ள பல்வகை அங்காடிகளையும் பிற மாநில காட்சி அரங்குகளையும் பார்க்கத் தவறுவதில்லை நம் கண்கள்.



கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டும் காட்சிகள் அமைந்த இந்தப் பொருட்காட்சியில், வயிற்றுக்கு விருந்தூட்ட இருக்கவே இருக்கிறது ஓட்டல் தமிழ்நாடு.

இந்தப் பொருட்காட்சி நடத்துவதன் மூலம் ஏறத்தாழ 20 ஆயிரம் பேர் தற்காலிக வேலைவாய்ப்பும், சுமார் இரண்டாயிரம் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதற்கான வாய்ப்பும் அமைகின்றன.

பொருட்காட்சியில் மிகப்பழமையான ஊர்திகளின் கண்காட்சி, எல்லார் மனத்தையும் கவர்ந்தது. இதேபோல, ஆடை அலங்காரம், உணவு, பொம்மை, தோட்டக்கலை, புத்தகங்கள், நாய், கோலம் ஆகிய கண்காட்சிகளும் நடந்தன.

வருவாய்த் துறைக்கு வருவோமா?

சென்னை மாவட்டம் அன்றும்-இன்றும், காட்சியைக் கண்டு வியக்கிறோம். இதேபோல, பிற மாவட்டங்கள் குறித்தும், வளர்ச்சிப் பணிகள் குறித்தும் விளக்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, பெரியார் அறிவியல் தொழில்மையம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை ஆற்றி வருகின்ற பணிகள், எதிர்காலத் திட்டங்கள் முதலான பயனுள்ள தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

ஒரே இடத்தில் உள்ளூர்ச் செய்திகளை மட்டுமல்ல, உலகச் செய்திகளை மட்டுமல்ல, உபயோகமான உண்மைச் செய்திகளையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள இந்தப் பொருட்காட்சி உதவுகிறது. அதுமட்டுமல்ல அரசு ஆற்றி வருகின்ற அரும்பணிகளை அறிய முடிகிறது. அதேசமயம் பல மாநிலத்தவரும் பங்கும் கொள்ளும் ஒருமைப்பாட்டுத் தலமாகவும் இது விளங்குகிறது.

இதை, பல்வேறு மாநிலங்களில் உள்ள புகழ்வாய்ந்த கோயில் படங்களும், கலாச்சாரங்களும் விளக்கும் படங்களும் நுழைவாயில் சித்திரிக்கப்பட்டிருப்பதிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பார்த்துப் பரவசம் கொள்ளும் வகையிலே பொழுதுபோக்கு அம்சங்களும் இணைந்திருக்கின்றன. அண்ணா கலையரங்கிலே நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், மினி இரயில் வண்டி, மின் இராட்டினம், மீன்காட்சியகம், வேடிக்கை விநோதக் காட்சிகள் அப்பப்பா! எத்தனை! எத்தனை!

இந்தப் பொருட்காட்சி, வரும் ஏப்ரல் திங்கள் வரை நடைபெறுகின்றது. பார்த்து மகிழலாமே!

- பி.வி. கிரி.









தமிழ்நாட்டில் பாய்மர மிதவைப் பலகைப் போட்டி

'விண்ட் சர்ஃபிங்' (Wind Surfing) ஒரு பிரபலமான நீர் விளையாட்டுப் போட்டியாக இந்தியாவில் வளர்ந்து வருகிறது. 1970-ஆம் ஆண்டு ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாகத் தொடங்கிய இந்த விளையாட்டுப் போட்டி, போட்டியாளர்கள் ஆர்வத்தினால் வளர்ந்து 1984-இல் இருந்து ஒலிம்பிக் போட்டிகளில் இதுவும் ஒரு போட்டியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த விண்ட் சர்ஃபிங் போட்டி, 1983-இல் சென்னையில், சென்னைத் துறைமுகத் துறையின் நூற்றாண்டு விழாவின்போது நடத்தப்பட்டது. அதன்பிறகு 9 ஆண்டுகள் கழித்து மீண்டும் இந்த ஆண்டு இந்தப் போட்டி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, இந்திய அரசு சுற்றுலாத்துறை, ரிக்கி டிக்கி டாவி எனும் விளையாட்டுக் கழகம், ஆகியவை இணைந்து நடத்துகின்றன இந்தப் போட்டி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் உதவியோடு 'சர் பேஸ் - 92' என்ற பெயரில் நடைபெற்றன.

போட்டி நடத்துவதற்கு வி.ஜி.பி. தங்கக் கடற்கரையினர், ஃபிசர்மென் கோவ், ரெசிடென்சி, அம்பாசடர் பல்லவா, கோல்டன்சன், பிரசிடண்ட் மற்றும் மாமல்ல பவன் ஆகிய ஓட்டல்களும், தம்ஸ் அப் நிறுவனமும் உதவி இருக்கின்றன.

இந்தப் போட்டிகளில் 30 புகழ் பெற்ற இந்தியா மற்றும் வெளி நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டிகள் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை நடைபெற்றன.

போட்டிகளில் கலந்து கொள்வதற்காக சுற்றுலாத்துறை, சுவீடனிலிருந்து செல்வி கிறிஸ்டினா நெல்சன் என்பவரை வரவழைத்திருந்தது. இவர் தமிழகத்தில் இந்தப் போட்டி வளர்வதற்காக உதவி செய்கிறார்.

இந்தப் போட்டி, இராயபுரம் கடற்கரை மற்றும் சென்னைத் துறைமுகம், முட்டுக்காடு படகுத்துறை ஆகிய இடங்களில் நடைபெற்றது. போட்டிகள் நடைபெறும்போது, கோர்ஸ் ரேசிங், மாரத்தான் (துறைமுகம் முதல் லைட் ஹவுஸ் வரை) ஸ்லாலாம், பாயிண்ட்டு பாயிண்ட், ஸ்கோர்பிங், சர்பிங், பூசி போர்டிங் போன்ற போட்டிகள் நடைபெற்றன.

போட்டியையொட்டி, கடல் உணவு விழா ஒன்றும் நடத்தப்பட்டது. ஆண்டுதோறும் இந்தப் போட்டிகளை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப் போட்டிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த, செய்தி சுற்றுலாத் துறைச் செயலர், திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள், ரிக்கி டிக்கி டாவி கழகத்தினரை நான்கு நாட்கள், முட்டுக்காட்டில் பயிற்சி முகாம் ஒன்றை நடத்தக் கேட்டுக் கொண்டார். இந்தப் பயிற்சிகளை சுவீடனைச் சேர்ந்த வீராங்கனையொருவர் அளித்தார்.

தமிழகச் சுற்றுலாத்துறைக் கழக நிருவாக இயக்குநர் திரு. பி. செல்வம், இ.ஆ.ப., மற்றும் தமிழகச் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., ரிக்கி டிக்கி டாவி கழகத்தின் தலைவர் திரு. திபாங்கர் கோஸ் ஆகியோரின் ஒத்துழைப்புடன், வீரம் சார்ந்த சுற்றுலா ஆர்வத்தை வளர்ப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இந்தப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் மாணவ, மாணவியர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முதலாவது அகில இந்திய விண்ட் சர்ஃபிங் போட்டி (பாய்மர மிதவைப் பலகைப் போட்டி) சென்னையில் 13.2.1992 அன்று துவங்கியது.

கடல் அலைகளில் காற்றின் வேகத்திற்கு ஏற்ப சிறு படகைச் செலுத்துவதை விண்ட் சர்ஃபிங் விளையாட்டு என்பர். இது பாய்மர மிதவைப் பலகை விளையாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. கடந்த 1969-ஆம் ஆண்டு பொழுதுபோக்காகத் தொடங்கிய இவ்விளையாட்டு, நன்கு வளர்ச்சியடைந்து 1984-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகம் முழுவதும் 20 இலட்சம் பேர் இவ் விளையாட்டில் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளனர்.

இந்தியாவிலும் இவ்விளையாட்டுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. 1983-ஆம் ஆண்டு, சென்னைத் துறைமுக நூற்றாண்டு விழாவின் போது விண்ட் சர்ஃபிங் போட்டி நடத்தப்பட்டது.

சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் திரு. பால்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்துப் போட்டியைத் துவக்கி வைத்தார். முன்னதாகத் தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார் செய்திசுற்றுலாத்துறைத் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். இறுதியில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு. மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

போட்டியில் வெளிநாட்டைச் சேர்ந்த 15 வீரர்கள், வீராங்கனைகள் உட்பட மொத்தம் 32 பேர் கலந்து கொள்கின்றனர். இவர்களில் சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், இந்தியக் கடற்படையைச் சேர்ந்த அதுல் மாத்தூர், லெப்டினன்ட் கமாண்டர் சந்தானம், தேசியப் பெண்கள் சாம்பியன் பட்டம் பெற்ற மகாராஷ்டிராவைச் சேர்ந்த கீதா, சமிர், சுவீடனைச் சேர்ந்த யாஸ்பா, இலட்சத்தீவுகளில் இருந்து கோழிக்கோடு வரை பாய்மர மிதவைப் பலகையில் சென்று சாதனை படைத்த ராகுல் ரஸ்தோகி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அகில இந்திய நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியின் நிறைவு விழா 15.2.92 அன்று கோவளத்தில் நடந்தது. விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

'சுற்றுலா வளர்ச்சித்துறை நீர்ச் சறுக்குப் படகுப் போட்டியைச் சிறப்பாக நடத்தி இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கப் பலவேறு புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். வளைகுடா போருக்குப் பிறகு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழ்நாடு சிறந்த சுற்றுலாத் தலமாகத் திகழ்கிறது. தமிழ்நாடும், கேரளாவும், தான் சுற்றுலாத் துறையில் வளர்ந்து வருகின்றன.

முட்டுக்காடு படகுத்துறையை ஆழப்படுத்த வேண்டும் என்று இங்குள்ளவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் எடுத்துக் கூறி கோரிக்கையை நிறைவேற்ற நான் பாடுபடுவேன். நீர்ச்சறுக்குப் படகுப் போட்டியில் இளைஞர்கள் வருகிற ஆண்டு அதிக அளவில் பங்குபெற வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. சுற்றுலாத்துறை பல்வேறு நிலைகளில் சிறப்பைப் பெற்று வளர்ந்துள்ளது. அது மேன்மேலும் சிறந்த இடத்தைப் பெறும்.'

நீர்ச்சறுக்குப் படகுப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஐதராபாத்தைச் சேர்ந்த ராகுல் ரஸ்தோகி, சுவீடனைச் சேர்ந்த கிறிஸ்டினா நெல்சன், பம்பாயைச் சேர்ந்த மந்தீப்தில்லான், சென்னையைச் சேர்ந்த அருண்வாசு ஆகியோருக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேடயமும், சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார்.

முன்னதாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். ரிக்கி டிக்கி டாவி கிளப் இயக்குநர் திபாங்கர் கோஷ் வரவேற்றுப் பேசினார்.

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

44-வது அகவையில் அடியெடுத்து வைக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் (24.2.1992).

இரண்டாம் அட்டை:

டெல்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காவிரிப் பிரச்சினை தொடர்பான கூட்டத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் (17.2.1992).

நான்காம் அட்டை:

கும்பகோணம் மகாமகத் திருவிழாவினையொட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு அஞ்சல் தலையையும், சிறப்பு மலரையும் வெளியிட்டு, 10 இலட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்களையும் வழங்கினார் (18.2.1992).

பொது மன்னிப்பு விடுதலை!

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டு, நல்லாட்சி நடைபெற்று வருவதை வரவேற்று, அதனால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் விதத்தில் ஆயுள்தண்டனை பெற்ற சிறைவாசிகள் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்ததைக் கருத்தில்கொண்டு, தங்களுக்குக் கருணை காட்டி தண்டனைக் குறைப்பு வழங்கிப் பொதுமன்னிப்பு அடிப்படையில் தங்களை முன் விடுதலை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சிறைவாசிகளும் திருந்தி மறுவாழ்வு பெற வேண்டும் என்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - சிறைவாசிகளுடைய அக்கோரிக்கையை மனிதாபிமானத்தோடு ஆய்வு செய்யுமாறு ஆணையிட்டார்கள். அதற்கேற்ப, 18.12.1978-க்கு முன்பு ஆயுள்தண்டனை அடைந்த சிறைவாசிகளில், கொள்ளை மற்றும் பணத்திற்காகக் கொலை, கற்பழித்தல் போன்ற கடுமையான குற்றவாளிகளைத் தவிர்த்த மற்ற அனைவரையும் விடுதலை செய்யவும் அவ்வாறே 18.12.1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள்தண்டனை பெற்ற, 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த ஆயுள் சிறைவாசிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

18.12.1978-க்குப் பின்னர், ஆயுள்தண்டனை பெற்று பத்தாண்டுக் காலம் முழுமையாகச் சிறைத்தண்டனை அனுபவித்த பெண் கைதிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்யவும் ஆணையிடப்பட்டிருந்தது.

மேலும் கொலை, களவு, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய குற்றங்களுக்காகச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பெண் கைதிகளுக்கு முழுத் தண்டனைக் குறைப்பும், ஆண் கைதிகளுக்கு 6 மாதச் சிறைத்தண்டனைக் குறைப்பும் வழங்குமாறும் ஆணையிடப்பட்டிருந்தது.

இதனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1992 அன்று 209 ஆயுள்தண்டனை பெற்ற கைதிகள் விடுதலை ஆனார்கள்.

ஆயுள்தண்டனை தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 33 பெண் கைதிகளும் அந்நாளில் விடுதலை ஆனார்கள். ஆயுள்தண்டனை தவிர்த்து, மற்ற தண்டனை பெற்றுள்ள 713 ஆண் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பும் வழங்கப்படும்.

நந்தனம் - ஜோதி தோட்டம் மற்றும் சைதாப்பேட்டை வி.எஸ். முதலி குடியிருப்புகளுக்கு உடனடி குடிநீர் விநியோகம்:

ஆளுநர் மாளிகைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புதிய அமைச்சரின் பதவி பிரமாண விழாவிற்குப் புறப்பட்டுச் செல்லுகையில், போயஸ் தோட்டப் பகுதி முகப்பில் நின்று கொண்டிருந்த பெண்களிடம் உள்ள விண்ணப் பங்களைப் பெற்றுவரச் செய்து, அவர்களின் குறைகளைத் தெரிந்து அந்தப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினையை அன்றைய தினமே (15.2.1992) தீர்த்து வைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்..

நந்தனம் ஜோதி தோட்டம் மற்றும் சைதாப் பேட்டை வி.எஸ். முதலி தெருவில் வசிக்கும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்ப தில்லை எனவும், குழாயில் விடப்படுகின்ற தண்ணீர் திருடப்பட்டு, தனியார் ஓட்டல்களுக்கு வழங்கப்படுகிறது எனவும் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளின்மீது உடனடி நடவடிக்கை எடுக்க மாண்புமிகு முதல்வர் அலுவலர்களுக்கு உத்தரவு இட்டவுடன், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப் பட்டது. மேலும் அப்பகுதியில் பதிக்கப்பட்டிருந்த பழுதடைந்த குழாய்களையும் உடன் மாற்றி அமைக்கும் பணியும் அன்றே தொடங்கப்பட்டது. கோரிக்கை மனு பெறப்பட்ட 3 மணி நேரத்திற் குள் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு மேற்கண்ட பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

-1992 ரூ. 1



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் திங்கட் கிழமைதோறும் தலைமைச் செயலகத்தில், மாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை பொதுமக்களிடமிருந்து மனுக்களை நேரில் பெற்றுக் கொள்வதாக அறிவித்து இருந்தார்கள்.

இந்த அறிவிப்பின்படி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 அன்று தலைமைச் செயலகத்தில் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மொத்தம் நான்கு மணி நேரம் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்களை நேரில் கொடுப்பதற்காக சுமார் 5000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்திருந்தனர்.

மனுக்கள் கொடுத்தவர்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் பெண்கள். கன்னியாகுமரி உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் வந்திருந்து மனுக்களைக் கொடுத்து முதல்வரிடம் தங்களது கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

பொதுமக்கள் அளித்த மனுக்களின் மீது விரைவாக, உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்த இதழில்...

தமிழக அரசின்
நிதி நிலை அறிக்கை
1992-93
—மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ... 2

மகளிர் முன்னேற்றத் திட்டங்களுக்கு
ஒரு மணி மகுடம்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 9

கலாச்சாரக் கருவூலங்களான
திருக்கோயில்களைக் காக்க வேண்டியது
நமது கடன்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 13

நமது முயற்சிகள் விரைவான தொழில்
மயமாக்கத்துக்கு உறுதுணையாய் இருக்கும்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 15

முத்தமிழ் வளர்க்கும்
தமிழக அரசு (கவிதை) ... 39

தருமபுரி மாவட்டத்தில் அதிசய பனைமரம்... 41

கன்னியாகுமரி மாவட்டம்:
விரைவான வளர்ச்சிப் பணிகள் ... 43

சுற்றுலா வளர்ச்சியில் கோவை மாவட்டம் ... 45

குடி கெடுக்கும் குடி ... 47

தமிழரசு

பங்குனித் திங்கள் - 3

திருவள்ளுவர் ஆண்டு 2023 மலர்:22 16-3-1992 இதழ்:18



தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை 1992 -'93

தமிழ்நாடு நிதி அமைச்சர்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1992 – 93 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தை சட்டமன்றப் பேரவையில் வைத்து 1992 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே!

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு.

"எப்போதும் விழிப்புடன் இருத்தல், தெளிந்த அறிவைப் பெற்றிருத்தல், துணிந்து செயல் படுதல் ஆகிய இம்மூன்று பண்பு நெறிகளும், எந்த ஒரு அரசும் கைவிடாமல் கொண்டொழுக வேண்டியவை ஆகும்" என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் பொன் மொழியாகும்.

மேற்கூறியுள்ள பண்புகளைக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் அமைந்துள்ள இவ்வரசின் சார்பாக, 1991-92 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகளையும் நான் இந்த அவை முன் வைக்க முற்படுகிறேன். உலகப் பெரும் புலவர் திருவள்ளுவனாரின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாட்டில் அமைதியையும், ஆக்கத்தையும், செல்வச் செழுமையையும் கொண்டு வரும் பொருட்டு, எதிர்ப்படும் மாபெரும் இடையூறுகளையெல்லாம் வெல்வதற்கான முயற்சிகளை, நாம் முறைப்படி மேற்கொண்டுள்ளோம்.

2. இந்த அரசு பதவியேற்ற பொழுது, மாநிலத்தில் அமைதியை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும், இதனை மீண்டும் வளமான வாழ்வை நோக்கி நடைபோட வைக்க வேண்டும் என்னும் இருபெரும் அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மாநிலத்தில் அமைதியின்றேல், வளர்ச்சியும், பொருளாதாரச் செழுமையும் இருத்தல் இயலா. இங்கே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, அமைதி தவழ்வதற்கு உறுதி செய்து, மக்கள் எவ்வித அச்சமுமின்றி வாழ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியோடும், தெளிவோடும் திண்மையோடும் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இங்கே திட்டமிட்ட வளர்ச்சிக்கு இன்றியமையாததாக வேண்டப்படும் சட்டம் ஒழுங்கு நிலைமையை நன்றாக, முழுமையாகப் பேண முடிந்ததன் மூலம், விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளிப்பது என்னும் அறை கூவலை அரசு துணிவுடன் எதிர்கொள்ள முடிந்தது.

3. நமது நாட்டில் நிலவிவரும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையைக் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கைகளைப் பொறுத்துச் சில மாறுதல்களைச் செய்ய வேண்டியது மிக இன்றியமை யாதது ஆகும். நமது அந்நியச் செலாவணிக் கையிருப்பு நிலைமையில் உள்ள நெருக்கடியும், உயர்ந்து வரும் கடன் சுமையும், நாட்டில் கிட்டத்தட்ட ஒரு பொருளாதாரச் சீர்குலைவைத் தோற்றுவித்திருந்தன. அந்நியச்செலாவணிக் கையிருப்பு நிலைமையையும், வெளிக் கடனையும் சமாளிப்பது என்பது, தற்பொழுது உள் நாட்டுப் பொருளாதார நிலையை நிருவகிக்கும் தன்மையைப் பொறுத்து, தொடர்புடைய ஒன்றாக இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த மிகப் பெரிய பொருளாதார மாறுதல்களும், வேறுபாடுகளும் குறித்த நிருவாகம், மத்திய அரசிடம் நிலை பெற்று விளங்குகிறது. 1991 டிசம்பரில் நடை பெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரது தேவைகளுக்குக் குறிப்பான கவனம் செலுத்திப் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்க வேண்டும், என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அண்மையில் தாக்கல் செய்துள்ள மத்திய அரசின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் வகையில் எந்தவித நடவடிக்கைகளும் அறிவிக்கப்படவில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். பொருளாதாரச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில், மத்திய அரசு நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அவ்வரசிடம் நாம் வலியுறுத்துகிறோம்.

4. மாநில அரசுகள் மக்களுக்கு மிக நெருக்கமாக இருந்து செயல்படுகின்ற அரசுகளாகும். எனவே, விலைவாசிகள் உயர்வதற்கான காரணங்களை விளக்கிக் கூற வேண்டிய, ஒரு கட்டாய நிலையில் மாநில அரசுகள் உள்ளன. மிகப் பெரிய பொருளாதார நிருவாகத்தைக் கவனிக்கத் துணைபுரியும் கருவிகள் அனைத்தும் மத்திய அரசிடம் உள்ளன. அதே சமயம், மக்களுடைய, குறிப்பாக ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களுடைய வாழ்க்கைத்தரம் காக்கப்படுவதற்கு, உறுதி செய்வதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். தமிழ்நாட்டில் தான், குறிப்பாக ஏழை எளிய மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு உரிய சீரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பதில், உணவு, உடை, உறைவிடம் ஆகியவை அடங்கியிருக்கின்றன. மேலும், இங்கு மிக மிகப் பலவீனமான பிரிவினர்கள் என்று கருதப்படும் கைக்குழந்தைகள், தாய்மார்கள், குழந்தைகள், ஆதரவற்ற முதியோர்கள் ஆகியோர்க்கு அளிக்கப்படுகின்ற சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இந்த ஏற்பாடுகளில் அடங்கும். 1991 ஆம் ஆண்டில், நாம் பொது விநியோக முறையின் மூலம், 17.31 இலட்சம் டன் அரிசியை வழங்கியுள்ளோம். மத்திய அரசு பொது விநியோக முறையின் மூலம் வழங்கப்படும் அரிசிவிலைகளில் ஏற்றம் ஏற்படுத்தித் திருத்தம் கொண்டு வந்ததினால், நாமும் அரிசி விலையைச் சிறிது திருத்தி அமைக்கவேண்டிய அவசியம் நேரிட்டது. இவ்வாறு திருத்தப்பட்ட பிறகும் கூட, நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான், பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை, தொடர்ந்து மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த சிறப்பு முயற்சியின் விளைவாக, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விடக்குறைவான விலையில் நமது அரசு, 18,000 டன் பாமாயிலை சிறப்பான முறையில் விநியோகித்துள்ளது. வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன், வர்த்தகர்கள் மீது லெவி விதிக்கும் முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1992 பிப்ரவரியில் அரிசியின் விலைகள் ஓரளவுக்குக் குறைந்துள்ளன. இந்த ஆண்டில் நெல் கொள்முதல் சிறப்பாக நடைபெற்றுள்ளது. நாம் இந்த ஆண்டில் 14 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்வது என்னும் உச்ச அளவை எட்ட முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். பொது விநியோக முறையில் அரிசி போதுமான அளவுக்குச் சீரானவகையில் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி கூறுகிறோம். பதுக்கலுக்கு எதிராகவும், கள்ளக் கடத்தலுக்கு எதிராகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது நிலவி வரும் ஒட்டுமொத்தப் பணவீக்க நிலைமையிலும், அரசு விலைவாசிகளைக் குறைப்பதற்குத் தன்னால் முடிந்த அளவு அனைத்து நடவடிக்களையும் மேற்கொண்டிருக்கிறது.

5. மத்திய அரசின் நிதி நிலை குறித்து அக்கறை கொள்கின்ற அதேசமயத்தில், மாநிலங்களின் நிதி நிலைமையில் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை.

கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்ட நமது நாட்டில், மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படையான நிதி ஆதாரங்களுக்கும், மாநிலங்களின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றிற்கும் இடையே சமன்பாடற்ற நிலை தான் நிலவிவருகிறது. இந்தச் சமன்பாடற்ற நிலையை முடிந்தவரையில் குறைப்பதற்கு, ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரையும்கூட உதவ முன் வரவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலையை உணர்த்துவதாகும். மாறியுள்ள பொருளாதாரச் சூழ்நிலையில், மாநிலங்களின் பங்கு மேலும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த முக்கியத்துவத்திற்கிணங்க, மத்திய, மாநில நிதி உறவுகள் முழு அளவில் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

6. "மத்தியிலே வலிவான கூட்டாட்சி. மாநிலத்திலே வளமான தன்னாட்சி" என்ற தத்துவத்திற்கு ஏற்ப, இந்தியாவைக் காப்பாற்றுவதற்கேற்ற அதிகாரங்கள் மத்திய அரசிடமும், மக்களை வாழ வைப்பதற்கு ஏற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமும் அமைய அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

7. தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி முயற்சி ஆகியவற்றுக்கு உதவுவதில், முக்கியப் பங்கு மேற்கொள்ளுமாறு மாநிலங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், நிறுவன வரியில் ஒரு சிறு பகுதியும் கூட மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். இந்த வரியில் ஒரு நியாயமான விதாச்சர அளவை மாநிலங்களுக்குப்

பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். சரக்கு ஒப்படை வரி விதிப்பதற்கான சட்டம் ஒன்றினை இயற்றுமாறு கேட்டுக்கொண்டு,மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, நமது மாண்புமிகு முதல்வர் கடிதம் எழுதியுள்ளார். நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் இந்த வரி விதிப்புக்கு வகை செய்யும் சட்ட முன் வடிவு ஒன்றைக் கொண்டுவருமாறு, நாம் மீண்டும் மத்திய அரசை வலியுறுத்த விரும்பியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. இம்மாநிலத்தின் நிதிவாயில்களை வலுப்படுத்த விரும்புகின்ற வேளையில், மத்திய நிதி அமைச்சர் வரவு செலவுத்திட்டத்தில் சிறுசேமிப்புத் தொடர்பாகச் செய்துள்ள அண்மைய அறிவிப்பு இம்மாநிலத்திற்குக் கடுமையான பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. மாநிலங்கள் தங்களுடைய திட்டப்பணிகளுக்கும், வளர்ச்சிப்பணிகளுக்கும் சிறுசேமிப்பு நிதியைப் பெரிய அளவிலான நிதி வாயிலாக நம்பிக்கொண்டிருக்கும் நிலையில் உள்ளன. சேமிப்பைக் குறிப்பாக சிறு சேமிப்பைப் பெருக்குவதற்குரிய விதிகளை நீக்குவது, சிறு சேமிப்பு வசூலை வெகுவாக குறைப்பதில் போய் முடியும். சேமிப்புக்கான எஞ்சிய விதியிலுங்கூட, அதிக ஆதாயத்தைத் தரக்கூடிய ஏனைய சேமிப்புத்திட்டங்களுடன் சிறு சேமிப்பு போட்டியிடவேண்டியுள்ளது. இந்நிலையைச் சரிசெய்யுமாறும் சிறு சேமிப்பினை அதிக அளவு கவர்ச்சிகரமாக்கவும், அதன் வாயிலாக மாநிலத்தின் நிதிவாயில்களைப் பாதுகாக்கவும் நாம் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

9. 1990 ஏப்ரல் திங்கள் முதல் நாளில் தொடங்கும் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்த எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்வதில், காலத்தாழ்வு ஏற்பட்டுள்ளது என்பதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். தேசிய வளர்ச்சிக் குழு, 1991 டிசம்பர் திங்களில் கூடி, 1992 ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்கும் என்று முடிவு செய்யப்பட்ட எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கைக்கு, இறுதி வடிவம் கொடுத்தது. நமது முதலமைச்சர் அவர்களுக்கும்,மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில், 1992-93 ஆம் ஆண்டுத் திட்டம் மட்டும் இடம் பெற்றது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இன்னும் முழுமையாக விவாதிக்கப்படவில்லை. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்கொண்டு சமாளிக்கும் வேளையில், நம்முடைய நீண்ட கால நோக்கங்களான, உற்பத்திப் பெருக்கம் பெறுதல், வேலைவாய்ப்பின்மையைக் குறைத்தல், ஏழைமை நிலையை ஒழித்தல் போன்றவற்றைப் புறக்கணித்துவிடக் கூடாது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முழுமையாக வகுப்பது குறித்து, மத்திய திட்டக்குழு விரைவில் பரிசீலிக்கும் என்று நம்பப்படுகிறது.

● காமராசர் மாவட்டம் சாத்தூர் வட்டத்தில் இருக்கன்குடிக்கு அருகே புதிய நீர்த்தேக்கம் ஒன்று ரூ.28.70 கோடி செலவில் கட்டப்படும். இந்த நீர்த்தேக்கத்தின் மூலம் 9700 ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.

● மீனவர்களுக்கு 2000 இலவச வீடுகள் கட்டி வழங்கப்படும்.

நிதி நிலைமை

10. இந்த அரசு பதவி ஏற்றபொழுது எதிர்கொள்ள வேண்டி இருந்த, முன்பு எப்பொழுதும் கண்டிராத நிதி நிலை நெருக்கடியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். திட்டத்திற்கு ரூ.1600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய நிலையில், ரூ.1220 கோடி அளவிற்குப் பெரும் பற்றாக்குறையை அரசு எதிர்நோக்க வேண்டியிருந்தது. திட்டத்தின் முழுச் செலவையும் ஏற்று, 'வளர்ச்சி நிலைக்கு வழிகோலுவதா அல்லது தேக்க நிலையிலேயே நிற்பதா' என்ற இக்கட்டான நிலையில் இரண்டிலொன்றை இந்த அரசு தேர்தெடுக்க வேண்டியிருந்தது. உண்மையில், நடப்பு ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டினைக் குறைத்துக் கொள்வது என்கின்ற எளிய வழியை நாம் தேர்தெடுத்திருக்க முடியும். ஆனாலும், அப்படிச் செய்வது, நமது வளர்ச்சிப் பணி ஒதுக்கீடுகளில் மிக் கடுமையான வெட்டுகளைச் செய்வதாக அமைந்துவிடும். ஆகவேதான், அந்த எளிய வழியைப் பின்பற்றாமல், நாம் கடுமையான வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம். அதாவது, 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு, ரூ.1600 கோடியில் எவ்விதப் பற்றாக்குறையும் ஏற்படாமல் செயற்படுவதற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவது, இழப்புக்களை நீக்குவது என்கின்ற கடினமான வழிகளைத் தேர்ந்தெடுத்தோம்.

11. மிகக்கடுமையான நிதி நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதில், இவ்வரசு குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது என்பதை, உறுப்பினர்கள் அனைவரும் புரிந்து கொண்டு போற்றுவார்கள் என்பதில் ஐயம் எதுவுமில்லை. வல்லுநர்கள் பலரும் நிதிச்சீர்குலைவு ஏற்படும் என்றும், திட்ட ஒதுக்கீட்டில் பெருமளவில் குறைவு நேரும் என்றும் கணித்துக் கூறினார்கள்.மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் திறமையான நிருவாக நெறியில் நின்று, உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, அதன் பயனாக நிதிச் சீர்குலைவு நிலைமையைத் தவிர்த்துள்ளோம் என்றும், 1991-92 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை எவ்விதக் குறைவும் இன்றிச் செயற்படுத்தியுள்ளோம் என்றும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏதொன்றையும் செய்ய முடியாத கடுமையான நிதி நெருக்கடி நிலைமை நிலவிய காலத்தில் இவ்வரசு பதவியேற்றிருந்த போதிலும், மத்திய அரசிடமிருந்து எவ்விதச் சிறப்பு உதவியையும் நாம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

12. நமது அரசை எதிர்நோக்கியிருந்த பல்வேறு நிதிப் பிரச்சினைகளை நாம் சமாளித்து வந்துள்ளோம். இன்னும் சில பிரச்சினைகள் எஞ்சிநிற்கின்றன. இவை குறித்து நாம் துணிந்து சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். ஏழை, எளிய மக்கள், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் குறித்து மிகுந்த அக்கறை கொண்டு, அந்த நோக்கிலே அமைந்த திருத்த நடவடிக்கைகளை, நாம் மேற்கொண்டுள்ளோம்.

ஆண்டுத் திட்டம்

13. நம் நாட்டில் ஒட்டு மொத்தமான பொருளாதார நிலைமை, நமது பணியை மிகவும் கடுமையாக்கியுள்ள போதிலும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். 1991-92ல், ரூ.1600 கோடிக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு அளவை நிறைவேற்ற நாம் எடுத்த உறுதியான நடவடிக்கை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு அளவை முழுமையாக எய்துவோம் என நாம் உறுதியாக நம்புகிறோம். 1992-93 ஆம் ஆண்டுக்குரிய உயரளவு திட்ட ஒதுக்கீட்டு அளவைப் பெறுவதில் இம்மாநிலம் அடைந்துள்ள இடர்ப்பாடுகளை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டின் மிகவும் இக்கட்டான நிதி நிலைச் சூழலில், வரும் ஆண்டில் தமிழ்நாடு குறைவான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு அளவை ஏற்க வேண்டுமென்று மத்திய திட்டக்குழு தெரிவித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அதனை ஏற்க மிக உறுதியாக மறுத்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சருடைய அயராத தனிப்பெரும் முயற்சிகளின் காரணமாக, 1992-93 இல் அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டும் என்கிற தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கை, இறுதியாக மத்திய திட்டக் குழுவால் ஏற்கப்பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூ.1751 கோடி அளவிற்கு ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு எடுத்த பெரும் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே நன்கு அறிவர்.

காவல் துறை

14. நமது சமுதாயத்தின் நெருக்கமாகப் பின்னியமைந்துள்ள வலிமையான கட்டுக்கோப்பினை உடைத்துத் தகர்க்க முயலும் தீய சக்திகளுக்கு எதிராக, நம்மைக் காத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்திட, காவல் துறைக்குப் புத்துணர்ச்சியும், புதிய தெம்பும், ஊக்கமும் தரப்பட்டுள்ளன. காவல் துறையை நவீனப்படுத்தும் செயல் முறையை நாம் தொடர்ந்து செயற்படுத்துவோம். நமது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை எப்போதும் பேரார்வத்துடன் காக்கும் காப்பாளராகக் காவல்துறை விளங்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காகவே, காவல்துறைச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டு வருகின்றன.

15. இந்த வரவு செலவுத்திட்டத்தில் காவல் படைக்காக ரூ.276.31 கோடி மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.80.45 கோடி செலவில் காவல் படையை நவீனப்படுத்தும் விரிவான திட்டம் ஒன்றினுக்கு உதவி அளிக்க நாம் மத்திய அரசை அணுகியுள்ளோம்.மத்திய அரசு இதுவரை ரூ.10 கோடி அனுமதித்துள்ளது முதல் கட்டப்பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி கிடைக்குமென நாம் நம்புகிறோம்.

16. சீருடைப் படைகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் பணியை முறையாக நடத்த உறுதி செய்யும் வகையில், சீருடைப் படையினர் தேர்வு வாரியத்தை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

17. காவலர் வீட்டுவசதி வாரியத்தை நாம் புதுப்பித்துள்ளோம். காவல் படைக்காக 1000 குடியிருப்புக்களைக் கட்டும் பணியை அவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. வரும் ஆண்டில் கூடுதலாக 1000 குடியிருப்புக்களை அவ்வாரியம் கட்டும்.

வேளாண்மை

18. நடப்பாண்டில், அரிசி உற்பத்தியும், ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தியும், இதற்குமுன் இருந்திராத வகையில் உயர் அளவில் இருக்குமென்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள். இத்தகைய சிறப்பான சாதனை,அரசு அளித்த முழு ஆதரவுடன் உழவர்கள்மேற்கொண்ட முயற்சிகளினால்தான் நடைமுறையாகியுள்ளது. வேளாண்மையும், அது சார்ந்த பணிகளுக்குமான திட்ட ஒதுக்கீடு, நடப்பாண்டிற்கு இருந்த ரூ.187.53 கோடி என்ற அளவிலிருந்து, வரும் ஆண்டிற்கு, ரூ.215.75 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

19. நிரந்தரமான தரிசு மற்றும் கரம்பு நிலங்களைச் சாகுபடியின் கீழ்க் கொண்டு வருவதற்தான புதிய திட்டம், குறித்தவாறு உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 1992 ஜனவரி வரை, 6500 ஏக்கர் பரப்பளவு நிலம், இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டத்தை, ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கத்தில், 12,500 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் பயனடையும் வகையில் நீட்டிக்கக் கருதியுள்ளோம்.

● மாநிலப் பள்ளி சாராக் கல்வித் திட்டம் தொடங்கப்படும். இதன் மூலம், படித்து வேலையில்லாமல் இருக்கும் 1.5 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த இளைஞர்கள் குடிப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்துப் பிரசாரம் செய்வார்கள்.

20. உலக வங்கி ஆதரவுடன், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தை, மொத்தம் ரூ.309.29 கோடி செலவில் செயல்படுத்தி வருகிறோம். இந்த விரிவான திட்டம், வேளாண்மையையும், அது தொடர்பான பணிகளையும் உள்ளடக்கியதாக அமையும். இத்திட்டம், தரமான விதைகளை உற்பத்தி செய்யவும், விரிவாக்கப் பணிகளை முறையாக மேற்கொள்ளவும், புதிய தொழில்நுட்ப உத்திகளைக் கையாளவும் வகை செய்யும்.

21. நெல்லை கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில், 'டேனிடா' உதவியுடன் விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத்திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இது போன்றதொரு திட்டம், வரும் ஆண்டில் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர் ஆகிய மாவட்டங்களில் ரூ.10.50 கோடி செலவில் 'டேனிடா' நிதியுதவியுடன் தொடங்கப்படும்.

22. பாசனத்திற்கு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதை உறுப்பினர்கள் அறிவர். சொட்டுநீர்ப் பாசன முறையையும், தெளிப்பு நீர்ப் பாசன முறையையும் எல்லோரும் அறிய விளம்பரப் படுத்துவோம். இப்பாசன முறை, அனைத்துப் பயிர்களுக்கும், குறிப்பாக எண்ணெய் வித்துக்கள், மற்றும் தோட்டப்பயிர் வளர்ப்பு ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து விளம்பரப்படுத்தப்படும். வரும் ஆண்டில் இத்தகைய பாசன முறைகளை மேற்கொள்ள உழவர்களுக்கு உதவித்தொகை அளிக்க, ரூ.1.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

23. வானவாரிப் பகுதிகளுக்கான நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டு தேசியத்திட்டம், 14 மாவட்டங்களில், 84 வளர்ச்சி வட்டாரங்களில், நடப்பாண்டில் தொடங்கிச்செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 4 ஆண்டுத்திட்டத்தில், பொருத்தமான சாகுபடி ஏற்பாட்டுடன், 2.25 இலட்சம் ஏக்கர் பயனடையும். இதற்கான மொத்தத்திட்டச் செலவு ரூ.35.61 கோடியாகும்.

24. 'டேனிடா' நிதியுதவியுடன் கூடிய, வேளாண்மைத் தொழிலில் மகளிர்க்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று வட ஆர்க்காடு அம்பேத்கார், சேலம், தருமபுரி, பெரியார், திருச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில், விரைவில் தொடங்கப்படும். இந்த 8 ஆண்டுத் திட்டம், ரூ.18 கோடி மொத்தச் செலவில் ஒவ்வோர் ஆண்டும் 9000 மகளிர்க்கு மேம்பட்ட வேளாண்மை நடைமுறைகளில் பயிற்சி அளிக்க வகை செய்கிற முறையில் இருக்கும்.

25. நாட்டில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையாக உள்ளதை உறுப்பினர்கள் அறிவர். சமையல் எண்ணெயின் விலை உயராமல் தடுக்கப் பாமாயில் எண்ணெயை நாம் இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. உள்நாட்டில் கிடைக்கக்கூடிய சமையல் எண்ணெயின் அளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இம்மாநிலத்தில் எண்ணெய் தரும் பனைமரங்களை வளர்ப்பதற்கான ஒரு திட்டத்தை மொத்தம் ரூ.24.89 கோடி செலவில்மேற்கொள்ளக் கருதியுள்ளோம். இந்தத்திட்டம், மத்திய அரசு மற்றும் வணிக வங்கிகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

26. தமிழ்நாட்டில், குறிப்பாக நீர்வளம் பற்றாக்குறையாக உள்ள நிலையில், உணவு தானிய உற்பத்தியைக் குறித்துத் தொலைநோக்கு வேண்டுமெனில், நவீன தொழில்நுட்ப உத்திகளை நாம் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. உயிரியல் தொழில் நுட்பம் என்பது, அளவிறந்த பயனளிக்க உறுதி தருகின்ற இப்போதைய புதியதொரு களமாகும். மாவட்ட உயிரியல் தொழில்நுட்பப் பயன்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க, நாம் முடிவு செய்துள்ளோம். அதன்மூலம், உயிரியல் இரசாயன உரங்கள், உயிரியல் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் பல்வேறு புதிய முயற்சிகள், வேளாண்மையின் நிலைத்த வளர்ச்சிக்கு உறுதி செய்யும் வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

27. தமிழ்நாட்டில் தோட்டக்கலை மேம்பாடு என்பது, ஒரு பெரிய வளர்ச்சிக்கான பகுதியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். 100 சதவீத ஏற்றுமதி நோக்கத்துடன் கூடிய தோட்டக்கலை எஸ்டேட்டுகளைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். இந்த எஸ்டேட்டுகள், தொழில்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் பெறும்.

பாசனம்

28. காவிரி நீர்ப் பங்கீட்டுத் தகராறு குறித்த நிலைமையை உறுப்பினர்கள் நன்கு அறிவர். உச்ச நீதி மன்றம் உறுதி செய்தவாறு, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்கிற தமிழ்நாட்டின் நிலையை, மாண்பு மிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர்.ஜெ.ஜெயலலிதா அவர்கள், பாரதப் பிரதமர் அண்மையில் கூட்டிய கூட்டத்தில், மிகத் தெளிவான முறையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நாம் அந்நிலையைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

29. தமிழ்நாடு தனது மேற்பரப்பு நீர் ஆதாரங்களை முழுவதுமாகப் பயன்படுத்தியுள்ளது. வெளி நிதியுதவியுடன் ரூ.310 கோடி செலவில் நடுத்தர, சிறு பாசனக் கூட்டுத் திட்டம் ஒன்றை, நாம் தயாரித்துள்ளோம். அத்திட்டத்திற்கான இசைவினை எதிர்பார்த்து, மேற்சொன்ன திட்டங்கள் அனைத்தின் தொடக்கப் பணிகளையும் மேற்கொள்ள நாம் முடிவு செய்துள்ளோம்.

30. ரூ.28.70 கோடி செலவில் காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடிக்கருக்கே வைப்பாற்றின் குறுக்கே, புதிதாக நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஒன்றை, நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். இத்திட்டம், 9156 ஏக்கருக்குப் பாசன வசதிகளை அளிப்பதுடன், 627 ஏக்கருக்குப் பாசன வசதியினையும் உறுதி செய்யும். மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் 18-வது கால்வாய் குறித்த விரிவான ஆய்வுப் பணியினை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

31. சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 75 பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மொத்தம் ரூ.3.55 கோடி

செலவில், வரும் ஆண்டில், 19 புதிய திட்டங்களை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

32. ஐரோப்பிய பொருளாதரக் குழுவின் நிதியுதவியுடன், ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டப் பணியைப் பொறுத்த இரண்டாம் கட்டப் பணிகள், வட ஆர்க்காடு அம்பேத்கார், தென்னார்க்காடு, செங்கை எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல் அண்ணா, திருவண்ணாமலை சம்புவராயர்,திருநெல்வேலிகட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 50,000 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 150 பெரிய ஏரிகள் பயன்பெறும். இத்திட்டத்தின் கீழ், 5,000 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட டன் 80 சிறிய ஏரிகளுக்கும் பாசனம் அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக 1992-93ல், ரூ.19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

33. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சேத்தியாத்தோப்பு, மருதாநதித் துணைத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வருமாண்டில் ரூ.5.13 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழுதூர் பொறிமதகுத் திட்டம் மேற்கொள்ளப்படும். திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், நெடுங்கால் அணைக்கட்டுப் பாசனத் திட்டம் ஆகிய திட்டப் பணிகள் அடங்கிய துணைத் திட்ட ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

காட்டு வளம்

34. நாம் ஆண்டுதோறும் சுமார் 62,500 ஏக்கர் வனப்பகுதிகளை இழந்து வருகிறோம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 15.625 இலட்சம் ஏக்கர் நிலங்களை நாம் இழந்து விட்டோம். இந்நிலைமையைச் சீர்செய்யப் பெரும் திட்டப் பணிகளை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளோம். இந்த ஆண்டில் சுமார் 1,62,500 ஏக்கரில் காடுகள் வளர்ப்புப் பணியை மேற்கொண்டுள்ளோம். வரும் ஆண்டில், மொத்தம் ரூ.47.65 கோடி செலவில், பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ் 1,70,000 ஏக்கரில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மிக அதிக நிலப்பரப்பில் காடுவளர்ப்பை மேற்கொண்ட திட்டங்களில் இதுவே மிகப் பெரியதாகும்.

35. சுவீடன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு வளர்ச்சி முகவரமைப்பின் (SIDA) நிதியுதவி பெற்றுள்ள சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் II வது கட்டப் பணி, மொத்தம் ரூ.85.40 கோடி செலவில் நடந்தேறி வருகிறது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.22.85 கோடி ஆகும். இத்திட்டத்தின் III வது கட்டப் பணிக்கு, ரூ.170 கோடி ஒதுக்கீடு உடைய திட்டத்தை, சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி முகவரமைப்பின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ்ச் சுமார் 2.5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் காடு வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. வண்டலூரில் மாநில வன ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்துவது பற்றிய பணியை, நாம் ஏற்கெனவே தொடங்கி விட்டோம். இச்செயல் நோக்கத்திற்காக, வரும் ஆண்டில், ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் III வது கட்டப் பணியில் இந்நிறுவனத்தை அமைக்கும் பணியையும் சேர்ப்போம்.

36. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், ரூ.60.00 கோடி ஒதுக்கீட்டுடன், 7,500 ஏக்கரில் தேயிலையைப் பயிரிடும் புதிய பெரும் திட்டப் பணி ஒன்றைத் தொடங்கியுள்ளது. வரும் ஆண்டில், 1,500 ஏக்கரில், தேயிலையைப் பயிரிடுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

37. புதிய ஏகக் காகிதக்கூழ் மரங்களை 75,000 ஏக்கரில் வளர்க்கும் பெரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த, நிதியுதவி பெறப்பட்டுள்ளது என்பதை அறிவதில், பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டம், 6 ஆண்டுக் காலத்தில், மொத்தம் ரூ.84.73 கோடி செலவில், செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் 12,500 ஏக்கர் நிலத்தில் மரம் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

38. சந்தன மரக் கடத்தலைக் கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். நவீன ஆயுதங்கள், துப்பாக்கிகள், செய்தித் தொடர்பு சாதனங்கள், மோட்டார் வண்டிகள் ஆகியன வாங்குவதற்காக, ரூ.65 இலட்சம் ஒதுக்கியுள்ளோம்.சிறப்புப் பரிசுகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் உயர்த்தியுள்ளோம். காடுபடு பொருள்கள் தொடர்பான குற்றங்களை, குறிப்பாகச் சந்தனமரக் கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்கக்கூடிய தனி நீதி மன்றம் ஒன்று திருப்பத்தூரில் விரைவில் அமைக்கப்படும்.

39. காடு வளர்ப்புப் பணிகளை அரசு மட்டுமே மேற்கொண்டால் போதுமானதாக அமையாது. இப்பணியில் மக்களையும் முழுமையாக ஈடுபடுத்த வேண்டியிருக்கிறது. இவை தவிர, பெரும் அளவில் குறிப்பாக, காடுகள் வெட்டி அழிக்கப்பட்ட பகுதிகளில், மரங்களை வளர்க்கும் பணியை மேற்கொள்வதில், உழவர்களை ஊக்கப்படுத்த வேண்டியுமிருக்கிறது. அவ்வாறு மரங்கள் வளர்ப்பதற்காகவும், தனியார் நிலங்களில் காடுகள் வளர்க்கும் திட்டப் பணிகளுக்காகவும், 1992-93ல், .மொத்தம் ரூ.1.92கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

40. நிலை நிறுத்தக் கூடிய மாவட்டக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதென, நாம் எடுத்துள்ள முடிவு குறித்துப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் மகிழ்வார்கள். ஒவ்வொரு மாவட்டமும், தேவைப்படும் விறகு மரங்களை வளர்த்துத் தனது தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளச் செய்வதே, இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் முதற்கண், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர், மதுரை, வட ஆர்க்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும்.

- ***புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.256.32 கோடியாக உயர்த்தப்படுகிறது.***
- ***6 முதல் 24 மாதங்கள் வரையிலான குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இந்தச் சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.***

கால்நடைச் செல்வம்

41. கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவப் பணிவசதிகள் அளிக்கவும், கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தவும், நாங்கள் மிகவுயர்ந்த முன்னுரிமை வழங்க முடிவு செய்துள்ளோம். ரூபாய் 1 கோடி செலவில் எஞ்சியுள்ள 1127 கால்நடை மருந்தகங்களுக்கும், துணை மையங்களுக்கும் உறைவிந்துப் பணிவசதிகள் அளிக்கும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 1992 ஜுன் திங்கள் 30 ஆம் நாளுக்குள் முடிக்கப்படும். ஒசூரிலும், ஈச்சங்கோட்டையிலும் உள்ள உறை விந்து உற்பத்தி செய்யும் வசதிகள், ரூ.2.68 கோடி செலவில் விரிவு படுத்தப்படவுள்ளன. மாவட்டத் தலைமையிடங்களில் உறைவிந்து வங்கிகளை ஏற்படுத்தி, உறைவிந்து வழங்கும் முறையை நாங்கள் திருத்தியமைத்துள்ளோம். உலகவங்கியின் உதவியுடன் கால்நடை மருத்துவப் பணிகளின் மேம்பாட்டிற்காகவும், கால்நடைகளின் தரம் உயர்த்தும் திட்டங்களுக்காகவும், 1992-93 ஆம் ஆண்டில் ரூ.2.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

42. ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 10 கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 1.25 கோடி செலவில் 400 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். வரும் ஆண்டிலேயே புதிய மருந்தகங்கள் 400-ம் ஏற்படுத்தப்படும். கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கும் இந்தப் பேரளவிலான முயற்சியினை அவையின் உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். குளிர்சாதன வசதி செய்யப்பட்ட நடமாடும் வேன்கள் வழங்கி, மருந்துப் பொருட்கள் வழங்கும் முறை வலுப்படுத்தப்படும். இராணிப்பேட்டையில் உள்ள, கால்நடை மருந்துகள், நோய்த் தடுப்பு மருந்துப்பொருள்கள்ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான வசதிகள் மொத்தம் ரூ.1.12 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

43. பதினெட்டு இலட்சம் உழவர்கள் பயனடையும் வகையில், பால், பால்படு பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் வகுக்கப்பட்ட பால்பெருக்கத்திட்டம் III என்ற திட்டம், மொத்தம் ரூ.62.2 கோடி செலவில், 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித்திறன் கொண்ட புதிய பாற்பண்ணை ஒன்று, சோழிங்கநல்லூரில் கட்டப்பட்டு வருகிறது. பாலின் விலையைத் திருத்தி அமைத்ததன் விளைவாக, உழவர்களுக்குப் பாலுக்கு அதிகவிலை கொடுக்க முடிந்தது. எருமைப் பாலின் விலை, ஒருகிலோ கொழுப்புச் சத்திற்கு ரூபாய் 65 லிருந்து ரூபாய் 90 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பால் உற்பத்தி குறையும் கோடைகாலங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்க நாங்கள் உறுதி அளிப்போம். கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் வழங்கியுள்ள உழவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு பால்உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு,ஆதரவு தரும் வகையில், அரசு ரூ.10 கோடி உதவி வழங்கியுள்ளது.

44. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தின் நிதியுதவியுடன், சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், வடார்க்காடு அம்பேத்கார்,திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில், மொத்தம் ரூ.13.67 கோடி

செலவில், செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடைகளின் தரத்தை உயர்த்த "டேனிடா" உதவி பெறும் திட்டம், மொத்தம் ரூ.4.4 கோடி செலவில், புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மீனளம்

45. வரும் ஆண்டில் 2500 ஏக்கர் உவர் நீர்ப் பரப்பில், இறால் வளர்க்க நாம் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், இறால் மீன் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஒன்றைச் சிதம்பரனார் மாவட்டத்தில் நிறுவ இருக்கிறது. மொத்தம் ரூ.7.2 கோடி செலவில்,222 ஏக்கர் நிலப் பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். பெரிய தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டங்களை நிறுவுவதற்கு ஊக்கம் அளிக்கப்படும்; அதே சமயத்தில், சிறிய அளவில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற கொள்கையையும் நாங்கள் பின்பற்ற இருக்கிறோம். நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பு நிலையங்களை நிறுவும் முன்னோடித் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொள்வோம்.

46. புதிய ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனளத் திட்டம் ஒன்றை, ரூ.15.88 கோடி செலவில், நாம் இறுதி செய்துள்ளோம். புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனளக் கூட்டுறவு இணையம் இத்திட்டத்தைச் செயற்படுத்தும். இத்திட்டத்தின் கீழ் 34 கடலோரக் கிராமங்களில் வசிக்கின்ற 6050 மீனவர்களுக்கு, மீன்பிடி படகுகள், வலைகள், படகுக்கு உள்ளேயும், படகின் வெளியேயும் பொருத்தப்படும் எஞ்சின்கள் முதலானவை வழங்கப்படும்.

47. மீன் குஞ்சுகள் உற்பத்தியையும், வழங்கலையும் உயர்த்த நாம் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். தமிழ்நாட்டின் ஆண்டுத்தேவை 17 கோடி மீன்குஞ்சுகள் ஆகும்; இவற்றில் நம்முடைய பற்றாக்குறை ஆண்டுக்கு 11 கோடி மீன்குஞ்சுகள் ஆகும். மீனவர்களும், மீன்குஞ்சு வளர்ப்பை மேற்கொள்ள, அவர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளோம். வரும் ஆண்டில், தேவையை முழுவதுமாக நிறைவு செய்ய இயலும் என்று எதிர்பார்க்கிறோம்.

48. மீனவர் வாழ்க்கைத் தரத்தை மேற்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டுள்ளோம். மீனவர்களுக்காக ரூ.3.46 கோடி செலவில், 2100 இலவச வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுபோல் இன்னும் 2000 வீடுகள் வரும் ஆண்டில் கட்டப்படும். மீன் பிடிக்கச் செல்லும் பொழுது, கடலில் இறக்க நேரிடும் மீனவர்கள் குடும்பத்திற்கு, இதுவரையில் குடும்ப ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த தொகை, ரூ.15,000 இனி ரூ.21,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும். மீன்பிடித் தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில், மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.60/-மாதம் ஒன்றுக்கு ரூ.270/- ஆக உயர்த்தப்படுகிறது.

கல்வி

49. இந்த வரவு செலவுத் திட்டத்தில், பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்விக்காக மொத்தம் ரூ. 1518 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், திட்ட ஒதுக்கீடான ரூ.70.81 கோடியும் அடங்கும்.

50. ஒட்டுமொத்த நிதிநிலையைக் கருதிப்பார்க்கையில், கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களைப் பள்ளிக் கல்விக்கு, குறிப்பாகத், தொடக்கக் கல்விக்குப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படக்கூடிய ரூ.62.47

கோடி செலவிலான திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டம், மூன்று ஆண்டுக்கால அளவில் செயல்படுத்தப்படக்கூடியதாகும். இத்திட்டம், ஒவ்வொரு தொடக்கப்பள்ளியிலும், குறைந்தது மூன்று ஆசிரியர்கள் இருப்பதை உறுதிசெய்யும். இத்திட்டத்தின்கீழ்ப் போதுமான அளவிற்குக் கட்டிட வசதிகளும் கல்வித் துணைச் சாதனங்களும் வழங்கப்படும்.

51. ஏழு ஆண்டுக்கால அளவில், ரூ.1200 கோடி செலவில் செயல்படுத்தப்படக்கூடிய விரிவான பள்ளிக்கல்வித் திட்டம் ஒன்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உதவுமாறு உலக வங்கியை அணுகியுள்ளோம்.

52. உடனடி நடவடிக்கையாக, 459 ஓராசிரியர் பள்ளிகள் அனைத்திலும் இரண்டாவது ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். 500க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்டவையும், 1 கி.மீ. சுற்றளவிற்குள் தொடக்கப்பள்ளி இல்லாதவையுமான 200 குடியிருப்புப்பகுதிகளில் புதிய பள்ளிகள் தொடங்கப்படும். கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களுக்காக, மொத்தத்தில் 1400 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

53. வரும் ஆண்டில், 20 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்படும். ஏற்கெனவே வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிதியுதவியைத் திரட்டி, ரூ.3 கோடி மொத்தச் செலவில் 64 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளோம். கூடுதலாக ரூ.3 கோடி செலவில், மேலும் 64 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். 1375 பள்ளிகளில், கூடுதல் வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில், வாழ்க்கைத் தொழில்கல்வி முறை, படிப்படியாக மேம்படுத்தப்படும். 50 மேனிலைப் பள்ளிகளில், அறிவியல் ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்திச் சாதனங்களை வாங்கி வழங்க ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளோம்.

54. உயர்கல்விக்கு நிதி ஒதுக்குவது என்பது நமக்கு மிகவும் இடர்ப்பாடானதாக உள்ளது. ஆகையால், இத்தகைய கல்விப் பணிக்கு உரிய செலவுத்தொகையில், ஓரளவுத் தொகையையாவது திரும்ப வசூலிப்பது இன்றியமையாததாகிறது. இந்த அதிகரித்து வரும் செலவுத் தொகையை ஓரளவிற்காவது சரிக்கட்ட, உயர் கல்விக்கான கட்டணங்களில் சில மாற்றங்களைக் கொண்டுவருவது அவசியமாகும். நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், உலகவங்கி நிதி உதவியுடன் ரூ.76 கோடி செலவில், பல்தொழில் நுட்பப் பயிலகங்களை மேம்படுத்தத் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

55. நடப்பாண்டில் 7 மாவட்டங்களில் முழு அளவு

(தொடர்ச்சி 17 ஆம் பக்கம் பார்க்க)

மகளிர் முன்னேற்றத் திட்டங்களுக்கு ஒரு மணிமகுடம்

ஒரு இலட்சம் மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத் தொடக்க விழா

மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை ஏற்பாடு செய்த, சீரோடும், சிறப்போடும் நடைபெறுகிற இந்த விழாவில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதிலும், பெண்ணுரிமைக்கு மரியாதை தருவதிலும், தனக்கென்று ஒரு தனி இடம் பெற்றுள்ள மாநிலம் தமிழ்நாடு. இந்த மாநிலத்திற்கு ஒரு பெண்ணை முதல்வராகத் தேர்ந்தெடுத்ததோடு மட்டுமல்லாமல், அவர் சார்ந்துள்ள இயக்கத்திற்கு மாபெரும் வெற்றியைக் கடந்த தேர்தலில் வழங்கியுள்ள தமிழகத் தாய்மார்களுக்கு, என் நன்றியை இன்று மட்டுமல்ல, என்றென்றும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா - அவர் பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரினில் அறங்கள் வளருதம்மா" என்று பெண்களின் சிறப்பைக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடிப் புகழ்கிறார். சுவாமி விவேகானந்தர், ராஜா ராம் மோகன் ராய், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோர், பெண் சமத்துவத்திற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள், நமக்கு நடைமுறையில் இன்று பல்வேறு வெற்றிகளை ஈட்டித் தந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி, தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்ற பெருமை சரித்திரத்தில் நிலைத்துவிட்ட உண்மை.

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த பெண்கள் சமுதாயத்தில் பட்டங்கள் பெறவும், சட்டங்கள் செய்யவும், பாரினில் சிறந்தோங்கவும் செய்திருக்கிற சாதனைக்கும், வெற்றிக்கும் பின்னால், எத்தனையோ கடுமையான போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன.

பெண்களை ஆண்களுக்கு நிகராகக் கருதுவதே தவறு என்கிற எண்ணம் ஒரு காலத்தில் உலவி இருந்தது. அதுபோன்ற சமுதாயக் கொடுமைகளை எல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாமல், சுவாமி விவேகானந்தர் -

"பெண்களை மதிக்காத எந்த ஒரு நாடும்
இதுவரை சிறப்பான நிலைமை அடைந்ததுமில்லை;
இனி அடையப் போவதுமில்லை. பெண்களைத்
துன்பத்தில் ஆழ்த்தும் வீட்டுக்கோ அல்லது
நாட்டுக்கோ, விமோசனத்துக்கான
வாய்ப்பே கிடையாது"

என்று மனங்கொதித்துக் கூறினார்.

வேத காலத்திலும், திராவிடர் காலத்திலும், ஏன் - சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையிலும் கூட, பெண்கள், சமுதாயத்தில் பிரிக்க முடியாத அங்கமாக விளங்கி வந்திருக்கின்றனர். பெண்களில் பலர் ஆண்களைவிட திட சிந்தனையும், நல்ல அறிவாற்றலும் கொண்டு விளங்கினர் என்று 'ரிக் வேதம்' கூறுகிறது.

காலங்காலமாகப் பல்வேறுபட்ட எதிர்ப்புகளைச் சமாளித்து, பல்வேறு சட்டப் பாதுகாப்புகள் தரப்பட்டிருந்தாலும், சமுதாயத்தில் பெண்கள், நாம் எதிர்பார்த்த நிலையை அடைந்திருக்கிறார்களா என்றால், அவ்வாறு இல்லை என்றுதான் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையில் இன்னும் பெண்கள் குறைவாகவே உள்ளனர். இதற்கு இயற்கையான காரணங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால், எனக்குக் கிடைத்துள்ள தகவல்களும், புள்ளி விவரங்களும் மிகுந்த வேதனையைத் தருகின்றன. அவை அனைத்தும் பொய்யாக இருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். பெண் குழந்தைகளைக் கருவிலேயே அழிக்கும் பாவச் செயல், இன்றும் பல இடங்களில் நடைபெறுகின்றது. குழந்தைகளின் இறப்பு விகிதத்திலும், பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் 82 ஆகவும், ஆண் குழந்தைகளின் இறப்பு விகிதம் 70 ஆகவும் இருக்கிறதென்றும், புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, 35 வயதுக்குக் கீழ் இறப்பவர்களில் பெண்களே அதிகமாக உள்ளனர். 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, நாட்டில் 75 சதவிகிதப் பெண்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்து வருகிறார்கள். அதேபோலப் பள்ளியில் சேரும் பெண்களில், 55.5 சதவிகிதத்தினர் தொடக்கப் பள்ளியிலும், 77.7 சதவிகிதத்தினர் நடுநிலைப் பள்ளியிலும் பள்ளிக்குச் செல்லாமல் நின்று விடுகின்றனர் என்பதெல்லாம், நமக்குக் கிடைக்கும் மிகவும் கசப்பான செய்திகளாகும்.

இன்னும் சில விஷயங்களைக் கேட்பதற்கே அதிர்ச்சியாய் உள்ளது. ஆனால், உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களிடம் அவற்றை மறைத்துப் பயனில்லை.

பெண் தொழிலாளர்களில் 89.5 சதவிகிதத்தினர், எவ்வித அமைப்பு ரீதியிலும் இல்லாமல் உள்ளவர்கள் ஆவர். இவர்களுள் 82.3 சதவிகிதத்தினர் விவசாயம் தொடர்பான வேலைகளையே செய்து வருகிறார்கள். தற்போது வேலைக்காகப் பதிவு செய்து காத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை, ஏறத்தாழ 51 இலட்சமாக உயர்ந்துள்ளது. வீட்டிற்கு வெளியே ஊதியம் ஏதுமின்றி, ஒருவேளை உணவுக்கு மட்டும் ஒரு பெண், நாள்தோறும் சராசரி 6 மணி முதல் 7.30 மணி நேரம் வேலை செய்கிறார். விவசாயம் போன்ற வேலை செய்பவர்கள் தினமும் 12 மணி நேரம் வரை உழைக்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் தமிழக மக்கள், ஆட்சி நடத்தும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார்கள். எங்களுடைய தேர்தல் அறிக்கையில், இந்த உண்மைகளில் பல, ஆட்சிக்கு வருவதற்கு முன்பே எங்களுக்குத் தெரிந்ததால் தான், இயக்கத்தின் கருத்தை அப்போதே நாங்கள் தெளிவாக வெளியிட்டிருந்தோம்.

எங்கள் தேர்தல் அறிக்கை என்ன சொல்லுகிறது? ''சட்டங்கள் அனுமதிக்கும் சம உரிமைகளைப் பெறச் செய்வதும், கல்வியறிவு பெறச் செய்வதும், சொந்தக் காலில் நிற்கும் அளவிற்குப் பெண்கள் தாங்களே சம்பாதிக்கும் திறன் பெற்று, பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற வைக்க

சொந்தக் காலில் நிற்க..

●● பெண்களானாலும், ஆண்களானாலும், தங்களது சொந்தக் காலில் நின்றால்தான் எந்தத் துயரமும் வராது, எவருக்கும் பாரமாக இருக்கும் நிலை உருவாகாது என்பது உலக நடப்பு!

அதனால்தான், பெண்கள் முன்னேற்றத் திட்டங்களுக்கு எல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை நாங்கள் அறிவித்து இருக்கின்றோம். ●●

வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். அதற்கான புதிய திட்டங்கள் தீட்டப்படும். பெண்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலமும், தகுந்த தொழிற் கல்வியும், பயிற்சியும் தருவதன் மூலமும், அவர்களைச் சமுதாயத்திற்கு மேலும் பயனுள்ளவர்களாக ஆக்குவோம்''- என்கிற எங்கள் உயர்ந்த நோக்கத்தின் உண்மையான வெளிப்பாடாக, எங்கள் தேர்தல் அறிக்கை அப்போது வெளியிடப்பட்டது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு இந்தக் குறுகிய காலத்தில், பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்கள், மேற்சொன்ன கருத்துக்களைப் பற்றுக்கோடாக வைத்துத்தான் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில்தான் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை பெண்களையே ஆசிரியைகளாக நியமிக்கவும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்குப் போதிய ஊட்டச் சத்தும், சுகாதார வசதியும் அளிப்பதற்கு, உலக வங்கி உதவியுடன் திட்டம் ஒன்றை நிறைவேற்றவும் ஆணையிடப்பட்டுள்ளது.

குறிப்பாகத் திண்டுக்கல்-அண்ணா, சேலம், பெரியார் ஆகிய மாவட்டங்களில், இத்திட்டத்தின் மூலம் பல தாய்மார்கள் பலன் அடைந்துள்ளனர். அடுத்த ஆண்டு தர்மபுரி உள்பட, மேலும் நான்கு மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

அதை நடைமுறைப்படுத்துகிற அளவில், 800 பெண்களுக்குத் தொழில் நிர்வாகத்தில் பயிற்சி அளித்து உதவி செய்யவும், தற்போது ஆணையிடப்பட்டுள்ளது. பிரச்சினைகள் பெரியதாகிய பின்பு அவைகளைத் தீர்த்துவைக்க தீவிர முயற்சி மேற்கொள்வதைவிட, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதே நல்ல அணுகுமுறையாகும்.

ஆகவே, பெண் குழந்தைகளின் நலனைப் பேணிக் காப்பதில், ஒரு தொடர்ச்சியான பாதுகாப்பு வழியினை மேற்கொள்வது, நிலையான நன்மைகளை வழங்குமென்று நான் நம்புகிறேன்.

அதனால் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும், அவர்களை வேண்டாதவர்களென்று ஒதுக்கித் தள்ளுவதைத் தடுப்பதற்காகவும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆண்டுதோறும் 20,000 பெண் குழந்தைகளின் ஒளிமயமான எதிர்கால வாழ்க்கைக்கு, அரசே ஒவ்வொருவருக்கும் ரூ.2,000 முதலீடு செய்து வருகின்றது. அதன்மூலம் அவர்களது எதிர்காலத்திற்கு வழியும், பெண்கள் சமுதாயத்தின் எழுச்சிக்கு ஒரு வழிகாட்டுதலும், எங்கள் அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களானாலும், ஆண்களானாலும், தங்களது சொந்தக் காலில் நின்றால்தான் எந்தத் துயரமும் வராது, எவருக்கும் பாரமாக இருக்கும்

சாதனைச் சரித்திரம்!

●● பெண்களின் முன்னேற்றத்திற்கு, கல்வியறிவு, அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற, அறிவொளி இயக்கத்தை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, ஒரு புறம் திருமண உதவி, மகப்பேறு கால உதவி, இலவச சேலை போன்றவற்றை வழங்குவதோடு, மற்றொரு புறம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளையும் இந்த அரசு உருவாக்கித் தந்து வருகிறது.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எங்களின் இந்த உன்னத முயற்சி, தமிழ் நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன்.

—மாண்புமிகு முதல்வர்

ஒரு இலட்சம் மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத் தொடக்க விழா

தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தமிழக அரசின் திட்டத் தொடக்க விழா 3.3.'92 அன்று மாலை கலைவாணர் அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது. விழாவையொட்டி, கலைவாணர் அரங்கம் முழுவதும் மலர்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. கலைவாணர் அரங்கின் நுழைவாயிலில் இருந்து அரங்கம் வரை மலர்ப் பாதை அமைக்கப்பட்டிருந்தது.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமைத் தாங்கினார். விழாவில், திட்ட விளக்கவுரை ஆற்றிய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி புலவர் ஆர். இந்திரகுமாரி அவர்கள் பேசுகையில், "ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் இத்திட்டத்தில் கீழ், மாவட்டத்திற்கு ஐயாயிரம் பெண்கள் பயன் பெறுவார்கள். இத்திட்டம் ஆறு மாதத்திற்குள் முழுமை பெறும்" என்று கூறினார்.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 10,980 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. இத்திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்துத் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில், ஆட்டோ ரிக்ஷா, கணனி (கம்ப்யூட்டர்), முயல் பராமரிப்பு, காளான் வளர்ப்பு, பட்டு வளர்ப்பு, வேளாண்மைப் பொறியியல், துணி வியாபாரம், மாவு அரவை நிலையம், பிஸ்கட் வியாபாரம், சுயவேலை வாய்ப்பிற்கு மிக்ஸி, தச்சுத் தொழில், சிற்றுண்டி வியாபாரம், ஊறுகாய் வியாபாரம், தையல் இயந்திரம், சூப் கடை ஆகிய பணிகளில் ஈடுபடும் 21 பெண்டிர்களுக்குப் பண உதவியும் இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்களின் சாவிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன. மொத்தம் 10,980 பெண்களுக்கு ரூ.8 கோடியே 7 இலட்சத்து 30 ஆயிரம் மானியமாகவும் கடனாகவும் வழங்கப்படுகிறது.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை, சமூக நலத்துறைச் செயலர் திரு. இரா. கிருபாகரன் வரவேற்றார். விழா முடிவில் சமூக நலத் துறை இயக்குநர் கண். தீனதயாளன் நன்றி கூற, விழா இனிது நிறைவேறியது.

—என். இளங்கோ.

நிலை உருவாகாது என்பது உலக நடப்பு!

அதனால்தான், பெண்கள் முன்னேற்றத் திட்டங்களுக்கு எல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை நாங்கள் அறிவித்து இருக்கின்றோம்.

இதன்மூலம் கிராமங்களிலும், நகரங்களிலும் வசிக்கும் ஏழைப் பெண்கள், தாங்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒரு தொழிலைத் தேர்வு செய்து, அதன்மூலம் சுயவேலைவாய்ப்புப் பெற அரசு உதவி செய்கிறது. "தனிமரம் தோப்பு ஆகாது" என்ற பழமொழிக்கிணங்க, பெண்கள் ஒன்று சேர்ந்தால் அவர்களின் பலம் பன்மடங்காகும். அதன் பயன் இந்த மாநிலத்தை வாழ வைக்கும் என்பது, நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ், பெண்களைக் குழுக்களாக ஏற்படுத்தி, அவர்கள் தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப்படுவதோடு, மூலப் பொருட்களைப் பெறுவதற்கும் உற்பத்தியான பொருள்களை விற்பதற்கும், அரசு ஆங்காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடனே, பூர்வாங்க வேலைகள் துவங்கப்பட்டு, இன்றைக்கு முதல் கட்டமாக 10,000-க்கு மேற்பட்ட பெண்களுக்கு, சுயவேலைவாய்ப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இந்த அரசு எப்போதும் உதவும் என்கிற எனது உத்தரவாதத்தின் பிரதிபலிப்புதான், நடைமுறை செயல்பாடுதான் இந்த நிகழ்ச்சி என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு, கல்வியறிவும், அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற, அறிவொளி இயக்கத்தை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, ஒருபுறம் திருமண உதவி, மகப்பேறு கால உதவி, இலவச சேவை போன்றவற்றை வழங்குவதோடு, மற்றொருபுறம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளையும் இந்த அரசு உருவாக்கித் தந்து வருகிறது.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எங்களின் இந்த உன்னத முயற்சி, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன்.

இதுபோன்ற மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு, எங்கள் அரசு எப்போதும் உதவத் தயாராக இருக்கிறது என்று உறுதி கூறுகிறேன். எங்கள் அரசின் காக்கும் கரங்களாக விளங்கும் தமிழகத் தாய்மார்களும், சகோதரிகளும், இத்திட்டத்தில் முழுமையாகப் பங்கேற்று, பயன்பெற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்●

'கலாச்சாரக் கருவூலங்களான திருக்கோயில்களைக் காக்கவேண்டியது நமது கடன்'

மாண்புமிகு முதல்வர் உரை

தமிழகத் திருக்கோயில்கள் தொன்மையானவை. அவை தெய்வீக வழிபாட்டுத் திருத்தலங்கள் மட்டுமன்றி, நம் பண்பாட்டுச் செழுமையையும், வரலாற்றுச் சிறப்பினையும், நமக்கு இன்றும் எடுத்துரைக்கும் அரிய கலைச் செல்வங்கள்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களை ஒருமுறை தரிசித்து வந்தாலே, தமிழகத்தின் பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் பின்னணியை நாம் நன்கு அறிந்துகொள்ள முடியும். நம்முடைய முன்னோர்களின் உழைப்பின் பயனாகவும், அவர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சிகளின் பயனாகவும் அவைகள் தோன்றி வளர்ந்துள்ளன.

அத்தகைய திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் நம் முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள அரிய கலைப் பொக்கிஷங்களாகும். சரித்திரப் புகழ்பெற்ற தொன்மையான நமது சமூகத்தின் பண்பாட்டு நிலைக்கலன்களாகவும், நாகரிகத்தின் சின்னங்களாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும் அவை இன்று விளங்குகின்றன.

தொன்றுதொட்டு, நமது கலாச்சாரக் கருவூலமாக விளங்குகின்ற நமது திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை, ஒவ்வொரு இந்தியருக்கும் உண்டு. அந்த அடிப்படையில் எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் இத்தகைய பெருமை வாய்ந்த திருக்கோயில்கள் சீரமைக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தோம்.

நமது வருங்காலச் சந்ததியினருக்கு இந்தக் கலைச் செல்வங்களை அழியாது, பேணிப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுமென்ற மாபெரும் கடமையை ஆற்றத்தான், எங்கள் அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் முக்கியத் தொடர் நடவடிக்கையாக, மாநில அளவிலான திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது. இந்தத் திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் உள்ள பல புராதனத் திருக்கோயில்கள் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக பராமரிப்பின்றி உள்ள நிலையை அறிந்து, அவைகளைப் பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நிதி ஆதாரத்தைப் பொதுமக்களிடமிருந்து பெறும் வகையில், "தமிழக முதலமைச்சரின் திருக்கோயில் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய தினம் இந்த நிதியில் ரூபாய் 3.46 கோடி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிர்வாக வாரியம் அமைப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட சட்டத்தின் சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளின்படி இந்த நிர்வாக வாரியம், தனது கடமையை இன்று முதல் தொடங்குகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த 8 மாதக் காலத்தில் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூபாய் 12.5 இலட்சம் அரசு மானியமாகவும், முதல்வரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூபாய் 5.77 இலட்சம் நிதியுதவியாகவும் அளிக்கப்பட்டு, 11 திருக்கோயில்களில் முழுமையாகத் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாமகத் திருவிழா சம்பந்தப்பட்ட திருக்கோயில்களின் பராமரிப்புக்காக ரூபாய் 46 இலட்சம் செலவில் பல்வேறு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு மகாமகத் தீர்த்தவாரி உற்சவம், தீர்த்தவாரி விழா, சைவத் திருக்கோயில்கள் மகாமகத் திருக்குளத்திலும், வைணவத் திருக்கோயில்களுக்குக் காவிரிக்கரையில் அமைந்துள்ள சக்கரப்படித் துறையிலும், 18.2.1992 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகம் மேலும் சிறப்புடன் அமைவதற்காகப் புதிதாக வேலூரை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆணையர் அலுவலகமும், சிவகங்கையை மையமாகக் கொண்டு ஒரு துணை ஆ

மும் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்திற்குக் குளிர் சாதன வசதி அமைத்துத்தர அரசு ஆணை யிட்டுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நடத்தி வரும் பாலிடெக்னிக்குகளுக் குத் தேவையான கட்டடங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 46.8 இலட்சமும், அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கு வதற்கு ரூபாய் 75.9 இலட்சமும் உலக வங்கியிட மிருந்து கடன் உதவியாகப் பெறுவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித்தொகையாக அளிக்கப் பட்டு வந்த ரூபாய் 10,000 இந்த அரசு பொறுப் பேற்ற உடன் ரூபாய், 20,000 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளது. பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஓதுவார்களுக்கு ஓய்வூதியமாக வழங் கப்பட்டு வந்த தொகையான ரூபாய் 250-ஐ 300 ஆக உயர்த்தி வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

மேலும், வேதபாராயணம் செய்பவர், நாலா யிர திவ்யபிரபந்தம் ஓதுவோர், அறையர் சேவை செய்பவர் ஆகியவர்களுள் ஒவ்வொரு ஆண்டும் பணியில் இருந்து ஓய்வு பெறும் 100 நபர்களுக்கு மாதம் ரூபாய் 300 வீதம் ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி யுள்ளது 1992-ஆம் ஆண்டில் திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பொங்கல் பரிசாக முதுநிலைப் பணியாளர்களுக்கு ரூபாய் 350-ம், முதுநிலை அல்லாத பணியாளர்களுக்கு ரூபாய் 300-ம் வழங்கப்பட்டது.

நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் அறிவித்த வாறு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்றினை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்கோயில் களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக, எந்த ஒரு கட்டத்திலும் திருக்கோயில் சொத்துக்களை நீண்டகாலக் குத்தைக்கு விடக்கூடாது என்று அரசு முடிவு செய்துள்ளது. நீண்டகாலக் குத்தைகையில் இருக்கும் கோயில் சொத்துக்களைத் திரும்பப் பெறவும், அல்லது நியாயமான வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளினால் திருக்கோயில் நிலங்கள் பாதுகாக்கப்படுவதுடன், அவைகளில் இருந்து கிடைக்கும் வருவாய்களும் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பொதுவாக இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் மக்களிடையே திருக்கோயில்களில் திருப் பணி செய்யவேண்டுமென்ற ஒரு விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டு, பல திருக்கோயில்களில் தற்போது திருப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பக்தர் களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக இந்த வாரியம் அனைத்து ஆக்கபூர்வமான நட வடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதனை இங்கே தெரிவித்து, மதிப்பிற்குரிய வாரிய உறுப் பினர்கள் அனைவரையும் வரவேற்று, இங்கு விவாதிக்க உள்ள பொருள்களின் மீது தங்களின் மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் நல்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(2.3.1992 அன்று தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தின் முதற் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை:)

தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரிய முதல் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமை யில் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரி யத்தின் முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 2.3.'92 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தின் பின் வரும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

1. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், உறுப்பினர்.

2. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், உறுப்பினர்.

3. இந்து சமய அறநிலையத்துறை அரசுச் செயலாளர், உறுப்பினர் (பதவி வழி)

4. ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, உறுப்பினர் (பதவி வழி)

அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள்:

5. தலைமைச் செயலாளர்

6. தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை.

7. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

அலுவல் சார்பில்லாத உறுப்பிலர்கள்:

8. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்.

9. திரு. டி.எஸ்.சந்தானம், தலைவர், சுந்தரம் நிதி நிறுவனம்.

10. திரு. எம்.ஏ.எம். ராமசாமி

11. அல்லூர் விஸ்வநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சி.

12. திரு. கே. பராசரன், இந்திய அரசின் முன்னாள் சட்ட ஆலோசகர்.

13. திரு. வானமாமலை-இராமானுஜ ஜீயர், நாங்குனேரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

14. அக்னிகோத்ரம் இராமானுஜ தாத்தாச் சாரியார்.

15. திருமதி ராணி டி. இந்திராதேவி, இராமநாதபுரம்.

நமது முயற்சிகள் விரைவான தொழில்மயமாக்கத்துக்கு உறுதுணையாய் இருக்கும்

— மாண்புமிகு முதல்வர் உரை

சிறுதொழில்களைப் பாதிக் கின்ற பிரச்சினைகள் பற்றி விவா திக்க இங்கே கூடியிருக்கும் உங் களனைவரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் பொரு ளாதாரத்தில் ஒரு பெருமைமிக்க இடத்தைச் சிறுதொழில்கள் பெற்றுள்ளன. நமது மாநிலத்தின் புதிய தொழில் கொள்கைக்கு இணங்க, அதன் முழுச் சக்தியைப் பயன்படுத்தும் வகையில் சிறு தொழில்களை வளர்த்திட நம் அரசு மிகவும் ஆர்வத்தோடிருக்கின்றது.

தமிழகத்தின் பொருளாதாரத் தில் ஒரு குறிப்பிடத்தக்க முன் னேற்றத்தை உருவாக்குவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளை யும் புதிய தொழில் கொள்கை வெளிப்படுத்துகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்; இதில் அடிப் படை வசதிகளை ஏற்படுத்தித் தருவ தென்பது மிகவும் முக்கியம். மின் உற்பத்தியின் திறனையும் அளவை யும் எவ்வளவு விரைவில் முடி யுமோ, அவ்வளவு விரைவில் அதி கரிக்கச் சிறப்பான கவனம் செலுத் தப்படுகிறது.

கிராமப் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைக்கும் வகையில் ஒரு திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது

நாட்டின் ஏற்றுமதியிலும் தொழில் வளர்ச்சியிலும், வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும் குறிப் பிடத்தக்க பங்கை வகிக்கும் சிறு தொழில்களை மேம்படுத்தப் புதிய தொழில் கொள்கையில் முதலிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

நலிந்த தொழிற்சாலைகள் மிகவும் கவலைப்படத்தக்கவை என் பதை நான் அறிவேன். நல்ல சக்திவாய்ந்த தொழிற்சாலைகள் சரியான உதவிகிடைக்காத காரணத் தால், நலிவடையாதிருக்க அனைத்து முயற்சிகளையும் அரசு மேற் கொள்ளும்.

நலிவடைந்த தொழிற்சாலை களுக்கு மறுவாழ்வு அளிக்கும் முறை களில் விரைவான முடிவுகளை எடுக்கும் எல்லா அதிகாரங்களுடன் தொழில்துறைச் செயலாளர் தலை மையில் ஒரு சிறப்பு அதிகாரம் பெற்ற குழு (Empowered Committee) அமைக்கப்பட உள்ளது.

நடைமுறை முதலீடு அற்றதும், அதிக வட்டி விகிதமும் சிறு தொழில்கள் மேம்பாட்டிற்கு மிகுந்த பாதிப்பை உண்டாக்குகிறது. நடை முறை மூலதனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வங்கிகள் நிதி நிறு வனங்கள் ஆகியவற்றின் ஒத் துழைப்பை நாம் நாடுவோம்.

தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் களின் நுட்பத்திறனை வளர்ககவும், இயந்திரங்களை நவீன மயமாக்கவும் உதவத் தமிழ்நாட்டின் தொழில் முத லீட்டுக் கழகத்தின் (TIIC) அமைப் பின் உட்பிரிவாக ஒரு புதிய தொழில் நுட்ப வளர்ச்சி விதி (Technology Development Fund) அமைக்கப்பட உள்ளது. இதற்குத் தேவைப்படும் நிதியை அரசும், அரசு நிறுவனங்களும் வழங்கும்.

மேலும், ஏற்கெனவே நான் அறிவித்துள்ள உறுதிமொழிகளை நிறைவேற்றும் வகையில் புதிய தொழில்நுட்பங்களை வளர்ப்பதற் கெனத் தமிழ்நாடு தொழில் முதலீட் டுக் கழகம் ஒரு புதிய 'முதலீட்டு நிதி' (Capital Fund)-யை நிறுவிட உள்ளது.

சிறு தொழிற்சாலைகளிடம் உள்ள குறைந்த நிதிநிலையைக் கருத்தில்கொண்டு அவைகளால் அரசுக்கு வழங்கப்படும் பொருட் களுக்கான தொகையை அவை வழங் கப்பட்ட 30 நாட்களுக்குள் தந்து விட வேண்டுமென்று மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் மற்ற அமைப்புகளுக்கும் ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணை சரியான முறையில் செயல் படுத்தப்படுகிறதா என்பதை அரசு அமைத்துள்ள ஒரு நிர்வாக அமைப்பு கண்காணிக்கும்.

தொழிற்சாலைகளை அமைப்பதில் உள்ள ஆரம்பகட்ட இடர்ப்பாடுகளைக் களைய உதவும் வகையில், தொழிற்சாலைகளை அமைக்கும் போதே அரசின் முதலீட்டு மானியத் தொகையைப் படிப்படியாக வழங்க அரசு முன்பே ஆணைகள் பிறப்பித்துள்ளது.

சிறுதொழில்களுக்கு அனுமதிகள் பெறுவதில் இடர்ப்பாடுகள் பல இருப்பதை நான் அறிவேன்.

மாசுக்கட்டுப்பாடு முறைகள், தொழிற்சாலைச் சட்டம், பொதுச் சுகாதாரச் சட்டம் ஆகியவைகளின் கீழ் அனுமதிகளைப் பெறுவது சட்டப்படி கட்டாயம் என்றாலும்கூட அதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்தே ஆகவேண்டும். இது பற்றிய முக்கியப் பங்கை மாவட்டத் தொழில்மையங்கள் ஆற்றிடத் தேவையான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுமதிகளை வழங்கும் ஒரு அமைப்பாக அவைகள் விளங்கத் தேவையான பொறுப்புகள் வகுக்கப்படும். இது பற்றிய உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

தொழில் முனைவோர்கள் முற்போக்கான எண்ணத்தோடும், போட்டி மனப்பான்மையுடனும் தமது பங்கை ஆற்றிடத் தொழில் பிரிவில் ஒரு முன்னோடியான நிர்வாகத்தை நிறுவிட எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

நமது முயற்சிகள், விரைவான தொழில் மயமாக்கத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்றே இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. சிறுதொழில் துறை ஒட்டுமொத்த சாதனைகளை மேம்படுத்தத் தங்களுடைய மேலான கருத்துகளையும் ஆலோசனைகளையும் நான் மிக்க ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறேன்.

- 4.3.1992 அன்று தலைமைச் செயலகத்தில் சிறுதொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை.

'புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்ட' முகாம்கள் குறித்து- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கை

18.1.1992 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 'புரட்சித்தலைவி மருத்துவ நலத் திட்டத்தை'த் தொடங்கி வைத்தார்கள். அதற்குப் பின் ஐந்து வாரங்கள் முகாம்கள் நடந்து முடிந்தன. இந்த முகாம்கள் சம்பந்தமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

நடந்து முடிந்த மொத்த முகாம்கள்	...	2,344
கலந்து கொண்ட மருத்துவர்கள்	...	12,608
முகாம்களுக்கு வந்த மொத்த நபர்கள்	...	14,54,165
அவர்களுள் தீவிர சிகிச்சைக்காகப் பரிந்துரைக்கப்பட்டவர்கள்	...	22,781

இதில் 7,50,418 பேரில் பெரும்பாலானோர் இதுவரை இந்த நோய் அவர்களுக்கு இருப்பது தெரியாமல் இருந்திருக்கிறார்கள். இந்த முகாம்கள் மூலமாக அவர்களுக்குள்ள நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்குத் தொடர்ந்து அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தனியார் மருத்துவர்கள், பொதுச் சேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களும் இதில் பங்கு கொண்டு அவர்களால் முடிந்த வரை அவர்கள் பொறுப்பில் இந்நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முன்வர வேண்டும் என்று இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

நோய் வாரியாக நோயாளிகளின் எண்ணிக்கை

இரத்தச்சோகை	...	86,044
உயர் இரத்த அழுத்தம்	...	5,689
முன் கழுத்து வீக்க நோய்	...	890
புற்றுநோய்	...	1,357
விதை திரம்	...	1,436
குடல் இறக்கம்	...	1,017
யானைக்கால் நோய்	...	1,104
பல் மருத்துவம்	...	62,753
பிறப்பிலேயே ஏற்படும் குறைபாடுகள்	...	4,378
விபத்துக்களால் ஏற்படும் குறைபாடுகள் (ஊனங்கள்)	...	28,953
தோல் சம்பந்தமான நோய்	...	83,424
மூளை மைய நரம்பு மண்டலம் சம்பந்தமான நோய்	...	39,377
காது, மூக்கு, தொண்டை	...	38,252
கண் நோய்	...	1,06,777
இருதய இரத்தக் குழாய் சம்பந்தமான நோய்	...	13,523
நுரையீரல் சுவாசம் சம்பந்தமான நோய்	...	1,79,639
வயிறும் ஜீரண உறுப்புகளும் சம்பந்தப்பட்டவை	...	73,066
மகப்பேறு சம்பந்தப்பட்டவை	...	22,739
மொத்தம்	...	7,50,418

—இவ்வாறு இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி

எழு[illegible]வுத் திட்டம் மேற்[illegible] ஆண்டில், இத்[illegible] இராமநா[illegible], திண்டு[illegible], தஞ்சாவூர், நாகப்[illegible] காயிதே மில்லத், சென்னை, [illegible]புத்தூர், பெரிய[illegible], தென்னார்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்ட[illegible] [illegible]படும். வரும் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்[illegible] ரூ.15.00 கோடியாக இருக்கும். இத்திட்டம், 1992-93 ஆம் [illegible] கூடுதலாக 25 இலட்சம் பேர்களுக்கும் பயன் அளி[illegible].

56. மாணவர்கள் [illegible]ப்பை இடையில் நிறுத்திவிடும் நிலையை மாற்றிட, "மாநிலப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்" எனும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும் என்று நான் என்னுடைய சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்து இருந்தேன். இத்திட்டத்திற்கு உதவி நல்குமாறு மத்திய அரசை அணுகினோம். மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க இயலவில்லை. இத்திட்டத்தை நாமே செயல்படுத்துவது என்று முடிவு செய்துள்ளோம். இத்திட்டம் முழு எழுத்தறிவு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்படும். எனவே, இத்திட்டத்தையும் படிப்படியாகச் செயல்படுத்தவேண்டும். படித்துவிட்டு வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர்களுக்கு தற்பொழுது அளிக்கப்படும் நிவாரண உதவித் தொகைத் திட்டம் திருத்தி அமைக்கப்படும். இத்திட்டத்தில் படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை அளிக்கப்படும். இத்திட்டத்தில் படித்துவிட்டு வேலைவாய்ப்பற்றிருக்கும் 1.5 இலட்சம் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று எதிர்பாக்கிறோம். இவர்கள் குடிப்பழக்கத்தின் கொடுமையை எடுத்துரைக்கும் பணியையும் மேற்கொள்வார்கள்.

57. நூலக இயக்கத்திற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்துள்ளோம். தற்போது, 2465 பொது நூலகங்கள் உள்ளன. அதன்படி, 5000க்கு மேல் மக்கள் தொகை கொண்டுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு பொது நூலகம் ஏற்படுத்தப்படும் என்கிற ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தொடங்கவுள்ளோம். பொது நூலகம் ஒவ்வொன்றிலும் அகராதி நூல்கள், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் [illegible] இன்றியமையாத பொது நூல்கள் பலவும் [illegible]படும். 625 கிராமங்களில் இத்தகைய நூலகங்கள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ.85 இலட்சமாகும். பகுதிநேர நூலகங்களுக்கு [illegible] இடங்களில், அத்தகைய பகுதி நேர நூலகங்களை ஏற்படுத்த ஊக்கம் அளிப்போம். வரும் ஆண்டில், 300 பகுதிநேர நூலகங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம். பொது நூலகங்களை மேம்படுத்துவதற்கான இத்திட்டத்திற்கு, நிதியுதவி செய்யும்பொருட்டு, சொத்துவரியில் ஒரு ரூபாய்க்கு 5 காசு என்றுள்ள நூலகத் தீர்வையை, 10 காசாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. முழு அளவு எழுத்தறிவுத் திட்டமும், பொது நூலக இயக்கமும் நம் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்.

- **புதிய பண்பாட்டுப் பழங்கலை இயக்ககம் ஒன்று தோற்றுவிக்கப்படும். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக 'இருக்கை' ஒன்று ஏற்படுத்தப்படும்.**
- **1,400 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்படும்.**

தமிழ் வளர்ச்சி பண்பாடு

58. புதிதாகப் பண்பாட்டு பழங்கலைகள் இயக்ககம் ஒன்றை நாம் தோற்றுவித்துள்ளோம். தற்போது, அந்த வகையில் இயங்கிவரும் அமைப்புகள் அனைத்தும், இந்த இயக்ககத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். இதன் மூலம் பல்வேறு பணித் திட்டங்களில் உரிய ஒருங்கிணைப்பையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்த இயலும்.

59. பண்டைத் தமிழர்கள் பெருங்கடல்களிடையே கலம் செலுத்திய மரபுகளுக்குச் சான்று பகரும் தொல்பொருள் தடயங்களை, அவை மூழ்கிக் கிடக்கும் இடங்களில் ஆய்வு நடத்திக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட கடல் அகழ்வாய்வுத்திட்டம், தேசியக் கடலியல் நிருவாகத்துடன் கூட்டாகச் சேர்ந்து, தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும்.

60. தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப்பல்கலைக் கழகத்தில், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக, 'இருக்கை' ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ் இலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கும் அவர் ஆற்றிய அரும் பங்கினைக் குறித்து, இந்த இருக்கை ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்.

61. அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்படுவதற்கு ஊக்கம் அளிக்கப்படும். அலுவலர்கள் தங்கு தடையின்றி எளிதில் தமிழைப் பயன்படுத்த உதவும் வகையில், இப்பணியில் ஆர்வம் கொண்ட, அரசு சார்பு அல்லாத நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்று, ஆங்கிலம் தமிழ், தமிழ் ஆங்கிலம் அகர முதலிகள் வெளியிடப்படும். இப்பெரு முயற்சியினை மேம்படுத்தும் வகையில், அண்மைக்காலத்தில் வழக்கில் வந்துள்ள சொற்களும் அகர முதலிகளில் இடம் பெறச் செய்யப்படும்.

62. வரும் ஆண்டில் கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும்.

63. தமிழ் இலக்கியத்தில் நிலவும் மிகச் சிறந்த படைப்புகளை மொழி பெயர்க்க முன்வருகின்ற தமிழ் அறிஞர்களுக்கு அரசு உதவி புரிய முன்வரும்.

சத்துணவு

64. **புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, வரும் ஆண்டில் ரூ.256.32 கோடி ஆகும். நடப்பாண்டில் இது ரூ.235.94 கோடி ஆகும்.** இத்திட்டத்தை நாம் விரிவு படுத்தி, வலுப்படுத்தியுள்ளோம்.

65. இப்போது, 6 முதல் 24 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கும் கூடுதலான துணைச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இடருக்கு ஆட்படும் நிலையிலுள்ள கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ்ப் பயன் பெறுவர். விரிவுப்படுத்தப்பட்ட இத்திட்டத்தினால் 7 இலட்சம் குழந்தைகளும் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைவர். தற்போது விரிவு படுத்தப்பட்ட இத்திட்டம், 15 மாவட்டங்களில் செயல்படுகிறது. வரும் ஆண்டில் இத்திட்டம், தருமபுரி, தென்னார்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். சத்துணவுத்திட்டத்தில் கூடுதல் பணிகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

66. இத்திட்டத்தின்கீழ் 2.45 இலட்சம் பகுதி நேரப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பணியாளர்கள், தங்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமாறு அரசை வலியுறுத்தி வந்துள்ளனர். பகுதி நேர அடிப்படையில் பணிபுரிந்தும்

இப்பணியாளர்கள் தற்போது 'வரையறுத்த ஊதியம்' பெறுகின்றனர். பகுதிநேரப் பணி ஆனதால் அவர்கள் அகவிலைப்படி பெறத் தகுதியுடையவரல்லர். விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு, 1.4.92 முதல் மதிப்பூதியத்தில் தனி உயர்வு அளிக்க முடிவு செய்துள்ளோம். மாதம் ஒன்றுக்கு ரூ.150/-க்குமேல் ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.20/-ம், மாதம் ஒன்றுக்கு ரூ.150/- க்கும் குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.10/-ம் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஓராண்டுக்கு ரூ.4.00 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

சுகாதாரம் குடும்பநலம்

67. 'புரட்சித்தலைவி மருத்துவ நலத்திட்டம்' என்கிற நல்வாழ்வுத்திட்டத்தைத் தொடங்கிவைப்பதன் வாயிலாக, 'அனைவர்க்கும் நல்வாழ்வு' என்கிற அரசின் கோட்பாட்டினைப் பொருள் பொதிந்ததாகச் செய்ய நாம் முயன்றுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2347 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன; 14.54 இலட்சம் மக்களுக்கு மருத்துவப்பரிசோதனை செய்யப்பட்டுள்ளன; மொத்தத்தில் 10,000 முகாம்கள் நடத்தப்படும். இது இந்திய நாட்டிலேயே வேறு எங்கும் நடத்தப்படாத மிகப்பெரிய நல்வாழ்வுத்திட்டமாகும்.

68. சுகாதார மருத்துவப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு, நடப்பாண்டில் உள்ள ரூ.409.09 கோடியிலிருந்து ரூ.463.66 கோடியாக வரும் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மருந்துகள் மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கம், வரும் ஆண்டில் ரூ.46 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

69. கிராம அளவில், துணைச் சுகாதார நிலையங்களிலிருந்து தொடங்கி பெரிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை, மருத்துவ ஏற்பாட்டினைத் திறம்பட நடத்த வேண்டியது அவசியமான பணியாக அமைந்திருக்கிறது. உரிய கட்டுப்பாட்டு, நிருவாக வசதி குறித்து அதிக முக்கியத்துவத்தை நாம் அளித்துள்ளோம். கிராம அளவில் சத்துணவு, சுகாதாரப்பணிகள் இரண்டும் முழுமையாக ஒருங்கிணைக்கப்படும். தற்பொழுது தொடக்கச் சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1505 ஐ அடைந்துள்ளது. நடப்பாண்டில் தொடக்கச் சுகாதார நிலைய அளவில் மருந்துகளுக்கான நிதிஒதுக்கத்தை ஆண்டொன்றுக்கு ரூ.30,000 லிருந்து ரூ.40,000 ஆக நாம் உயர்த்தியுள்ளோம். இந்நிதி ஒதுக்கம், வரும் ஆண்டில் ரூ.40,000 லிருந்து மேலும் ரூ.50,000 ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவு ரூ.1.5 கோடியாக இருக்கும். ரூ.9.41 கோடி செலவில் 159 தொடக்கச் சுகாதார நிலையக்கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ1.57 கோடி செலவில் 21 . தொடக்கச் சுகாதார நிலைய கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

70. குறைந்தது 32 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவ மனைகளை நிலை உயர்த்தும், ஏற்கெனவே அறிவித்திருந்த திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், ரூ.1.25 கோடி செலவில் 14 மருத்துவ மனைகளில் கூடுதலாக 222 படுக்கைகள் வசதியினை அமைக்கும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில், ரூ. 1.56 கோடி செலவில் 14 வட்ட மருத்துவமனைகளில் 175 படுக்கை வசதியினை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும்.

71. அனைத்துத் தலைமையிட மருத்துவமனைகளிலும், படுக்கைகள் எண்ணிக்கையை, குறைந்தபட்சம் 200 ஆக படிப்படியாக உயர்த்தும் திட்டம் குறித்தும், உறுப்பினர்கள் நன்கு அறிவர். வரும் ஆண்டில், சிவகங்கை, தருமபுரி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில்,

24 படுக்கைகள் கொண்ட வார்டுகளைக் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து மாவட்டத்தலைமையிட மருத்துவமனைகளுக்கும், வரும் ஆண்டில், "அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர்" வசதி செய்து கொடுக்கப்படும். வட்ட, மாவட்ட மருத்துவமனைகளுக்கு நோயாளர் ஊர்தி வழங்கும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் 14 நோயாளர் ஊர்திகள் வழங்கப்படும்.

72. உலக வங்கி ஆதரவு பெற்ற இந்திய மக்கள் தொகைத் திட்டம் V, ரூ.10.00 கோடி செலவில் 8 நகரங்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும். ரூ.59.2 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களுக்கும் பயனளிக்கும் சுகாதாரப் பெருந்திட்டத்தை மேற்கொள்ள, 'டேனிடா' நிதியுதவியை நாம் கோரியுள்ளோம்.

73. உலக வங்கி, அனைத்திந்திய அடிப்படையில் 'பார்வையின்மைக் கட்டுப்பாட்டுப் பெருந்திட்டம்' ஒன்றினுக்கு ஆதரவளிக்குமென நம்பப்படுகிறது. மொத்தம் ரூ.44.23 கோடி செலவில் இதைச் செயல்படுத்துவதற்கு நாம் திட்டம் வகுத்துள்ளோம்.

74. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு இடவசதி அளிக்க, ரூ. 1.1 கோடி செலவில், புதிய கட்டிட வளாகம் ஒன்று, வரும் ஆண்டில் கட்டப்படும். சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிப் பணி விரைவுபடுத்தப்படும். இக்கல்லூரியில் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்க இந்த வரவு செலவுத் திட்டம் வகை செய்கிறது. மூன்று மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளையும் நாம் தொடங்கிவைப்போம்.

75. இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் உள்ள வசதிகளை மேம்படுத்த, ரூ.80.00 கோடி திட்டச் செலவிலான பெருந்திட்டம் ஒன்று, ஜப்பானிய உதவியைப் பெறக் காத்துள்ளது. இத்திட்டம் தற்போது மத்திய அரசிடம் முடிவு எடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இத்திட்டத்திற்கான ஜப்பானிய உதவியைப் (OECF) பெற்றுத் தருமாறு மத்திய அரசை நாம் கேட்டுக் கொள்ளவிருக்கின்றோம்.

குடிநீர் வழங்கல்

76. 1-4-1991 ஆம் நாள் அன்றுள்ளபடி, 2483 கிராம குடியிருப்புகளில், முற்றிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லை என்று, அண்மையில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியது. இந்த 2483 குடியிருப்புகள் அனைத்திற்கும், மொத்தம் ரூ.13.36 கோடி செலவில் குடிநீர் வழங்கப்பட்டுவிட்டது என்பதை அறிவதில், பேரவை உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். 1-4-1990 ஆம் நாள் அன்றுள்ளபடி, 1,956 ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வழங்கு ஆதாரம் ஒன்றுகூட இல்லை. இவற்றில் 1,418 குடியிருப்புகளுக்கு, 1-4-1991 ஆம் நாள் அன்றுள்ளபடி குடிநீர் வழங்கப்படாமல் இருந்தது. இக்குடியிருப்புகள் அனைத்திற்கும், இவ்வாண்டில் குடிநீர் ஆதாரம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

77. கோடைக் காலத்தில் குடிநீர் இல்லாத குடியிருப்புகளில், குடிநீர் கிடைக்கச் செய்வது, கிராமக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் அடுத்த நடவடிக்கையாகும். இத்தகைய 9,000 குடியிருப்புகளுக்குத் தங்கு தடையின்றிக் குடிநீர் வழங்கும் வகையில், மொத்தம் ரூ.474 கோடி செலவில், புதிய விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். இத்திட்டத்திற்காக உலக வங்கியிடம் நிதியுதவி கோரியுள்ளோம். சேலம், தென்னார்காடு, தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில், கிராமக் குடிநீர் வழங்கும் பெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் கீழ்க் கிடைக்கின்ற நிதியுதவியைப் பயன்படுத்திக் கொள்வோம். மொத்தம் ரூ.47.68 கோடி செலவிலான இந்தத் துணைத் திட்டத்தினால், இந்த 4 மாவட்டங்களிலும் கிராமக் குடிநீர் வழங்குவது தெளிவாகச் சீரடைய இயலும்.

78. நகர்ப்பகுதிகளில், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும் நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளோம். மொத்தம் 99 நகராட்சிகளில், 95 நகராட்சிகளில் அடிப்படை குடிநீர் வழங்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 4 நகராட்சிகளில், அதாவது, சீர்காழி, பொன்மலை, குளச்சல், பத்மநாபபுரம் ஆகிய நகராட்சிகளில் பணிகள் நடந்தேறி வருகின்றன. 7 நகரியங்களில், 5 நகரியங்களில் அடிப்படைக் குடிநீர் வழங்கல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. கத்திவாக்கமும், மாதவரமும் சென்னை மாநகர்க் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். மொத்தம் ரூ.4.97 கோடி மதிப்பீட்டுச் செலவில், 5 நகராட்சிகளுக்கான குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்கள் நடப்பாண்டில் முடிக்கப்படும். மொத்தம் ரூ.104 கோடி மதிப்பீட்டுச் செலவில், 20 நகராட்சிகளுக்கான மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன. வரும் ஆண்டில் இப்பணி விரைவு படுத்தப்பட்டு முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

79. மொத்தம் 366 நகர்ப்பகுதி பேரூராட்சிகள் உள்ளன. இவ்வாண்டு இறுதிக்குள், 260 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றிவைக்கப்படும். வரும் ஆண்டில், 61 நகர்ப்பகுதி பேரூராட்சிகளில் இப்பணி விரைவுபடுத்தப்படும். மொத்தம் 266 கிராமப் பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில், 86 கிராமப் பேரூராட்சிகளில், இவ்வாண்டு இறுதிக்குள் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். வரும் ஆண்டில், 72 கிராமப் பேரூராட்சிகளில் இப்பணி விரைவுபடுத்தப்படும்.

80. காங்கேயம், முத்தூர் மற்றும் 6 கிராமப் பேரூராட்சிகள், தாராபுரம் நகராட்சி, 83 வழியோர கிராம ஊராட்சிகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்கக்கூடிய ரூ.20 கோடி செலவிலான புதிய திட்டம் ஒன்றையும், மேற்கொள்ள இருக்கிறோம். தருமபுரி மாவட்டத்தில் குடிநீர்ப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ரூ.250 கோடி செலவிலான ஒகேனக்கல் குடிநீர் வழங்கு திட்டம் குறித்த விரிவான ஆய்வையும் மேற்கொள்ள இருக்கிறோம்.

• மதிய உணவுத் திட்டத்தில் பணியாற்றும் பகுதிநேரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பு ஊதியம் உயர்த்தப்படுகிறது.

• சுகாதார மருத்துவப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.409.09 கோடியிலிருந்து ரூ.463.66 கோடியாக உயர்த்தப்படுகிறது.

81. குடிநீர் வழங்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, உலக வங்கி, இந்திய ஈட்டுறுதிக் கழகம், வீட்டுவசதி நகர்ப் பகுதி வளர்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளிலிருந்து, நாம் நிதியுதவி பெறுகிறோம். நிதியுதவி கடன் வடிவில் பெறப்படுகிறது. இந்தக் கடன் தவணைகளை உள்ளாட்சி மன்றங்கள் அரசுக்குத் திருப்பிச் செலுத்துகிறதோ, இல்லையோ, அரசு கடனைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டிய நிலையிலுள்ளபடியால், அதனையொட்டிக் கடனைத் தீர்க்கும் பிரச்சினை கடுமையானதாகத் தற்போது எழுந்துள்ளது. இந்தக் கடன் பிரச்சினையை உடனடியாகச் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இந்தக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு நிதி அளிப்பது என்பது நின்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிடும். உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து அரசுக்கு வரவேண்டிய மொத்தக் கடன் தொகை ரூ.60 கோடியைத் தாண்டியுள்ளது.

82. கீழ்க்கண்ட முறையில் இச்சூழ்நிலையை ஒருவாறு சரிசெய்ய நாங்கள் முடிவு செய்துள்ளோம். உண்மையிலேயே நிதி இடர்ப்பாடு உள்ள உள்ளாட்சிமன்றங்களுக்கு, கணிசமான அளவிற்கு நிவாரணம் அளிக்கும் வகையில், அவர்களிடமிருந்து வரவேண்டிய கடன் நிலுவைகளையும், வட்டி நிலுவைகளையும் வசூலிக்கும் கால அளவு, தக்கவகையில் மாற்றி அமைக்கப்படும். அதே நேரத்தில், நீர்க் கட்டணங்கள் திட்டமிட்ட முறையில் சீரமைக்கப்படும். ஆயிரம் லிட்டருக்கு ரூ.2/- என்ற வீதத்தில், குடிநீர் வழங்கு கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கு கட்டணங்கள் இந்த வீதத்தைவிட இரண்டு மடங்காகவும், வணிகப் பயன்களுக்கான நீர் வழங்கு கட்டணங்கள் மூன்று மடங்காகவும் இருக்கும். நீர் வழங்கு ஏற்பாட்டினைப் பராமரிக்கும் பணி தடைப்பட்டு விடாமலிருக்கும் வகையில், இந்தக் குறைந்த அளவு கட்டண வீதங்கள் பின்பற்றப்படும்.

83. கிருஷ்ணா நதி நீரைச் சென்னை மாநகருக்குக் கொண்டுவரும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி, அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள், அதாவது 1995, ஜூன் திங்களுக்குள், கிருஷ்ணா நதி நீரைச் சென்னை மாநகருக்குக் கொண்டுவர இலக்கு நிர்ணயித்திருப்பதை இரு முதலமைச்சர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மொத்த நிதியொதுக்கம், ரூ. 75 கோடியில், ஆந்திரப் பிரதேசத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்காக நம்முடைய பங்கு ரூ. 50 கோடியும், தமிழ்நாட்டிற்குள் மேற்கொள்ள வேண்டிய கால்வாய்ப் பணிகளுக்கான ரூ. 25 கோடியும் அடங்கும். சென்னை மாநகரின் எல்லைப் பகுதிகளுக்கு நீர் கொண்டுவரும் திட்டம் மட்டுமின்றி, கூடுதல் நீரை மாநகருக்குள்ளும் அதனைச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கும் வழங்குதல், கழிவு நீரகற்றுதல் குறித்த பெரிய திட்டமொன்றை நிறைவேற்ற, நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற்காகத் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்றுத் திட்டங்களை முழுமையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. கிட்டத்தட்ட ரூ. 1100 கோடி மொத்தச் செலவில், சென்னை மாநகர குடிநீர் அனுப்புகை, விநியோக ஏற்பாட்டுத் திட்டத்தை நாங்கள் வகுத்துள்ளோம். உலக வங்கியிடம் இத்திட்டத்திற்காக நிதியுதவி கோரியுள்ளோம். கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை முடிக்கும் கால இலக்கு குறித்து ஒரு முடிவு எடுப்பதற்காக, இத்திட்டத்தில் மேற்கொண்டும்

நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு முதலமைச்சர்களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் மனநிறைவளிக்கக் கூடிய முடிவு ஏற்பட்டதையடுத்தும், கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை முடிப்பதற்கான நாள் தற்போது உறுதியாக நிர்ணயிககபபட்டுள்ளதன்பேரிலும், சென்னை மாநகரக் குடிநீர் அனுப்புகை, விநியோக ஏற்பாட்டுத் திட்டத்திற்கு, விரைவில் அனுமதி அளிக்குமாறு கேட்டு நாங்கள் உலக வங்கியை அணுகியுள்ளோம்.



சுற்றுச் சூழல்

84. நம்முடைய சுற்றுச் சூழல் குறித்து, உலகளாவிய நிலையில், பெரும் அளவிற்குப் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்குகந்ததாக இருக்கக் கூடிய வளர்ச்சிப் பணிச் செயல்முறைகளை, நாம் தொகுக்க வேண்டியுள்ளது. நிலையான வளர்ச்சியே நம்முடைய நோக்கமாக இருக்கும்.

85. வாணியம்பாடியில் தொழிற்சாலைகளின் கழிவுநீர்ச் சுத்திகரிப்புப் பொது நிலையம் ஏற்படுத்தும் பணி, முடியும் தருவாயில் உள்ளது. ஆம்பூர், இராணிப்பேட்டை, பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சி, ஆகிய இடங்களில், தொழிற்சாலைகளின் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவைதவிர பம்மல் , பல்லாவரம், ஈரோடு, அய்யம்பேட்டை, முத்தியால்பேட்டை, திருப்பூர், பிபி.அக்கிரஹாரம், பெரியசேமூர், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி, காசிப்பாளையம், பவானி, கரூர் ஆகிய இடங்களிலும் கழிவுநீர்ச்சுத்திகரிப்புப் பொதுநிலையம் அமைக்கப்படும். அனைத்து நிலையங்களுக்குமான மொத்தச் செலவு ரூ.50.50 கோடியாக இருக்கும்.

86. என்னுடைய முந்தைய ஆண்டு வரவுசெலவுத் திட்ட உரையில், சென்னை மாநகரில், பெரிய நீர்வழிகளில், அதாவது அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றிலும், பெரிய வடிகால் கால்வாய்களிலும் உள்ள தூய்மைக்கேடு குறித்து நான் குறிப்பிட்டிருந்தேன். சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், ரூ.6.5 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை, இப்போது நிறைவேற்றி முடித்துள்ளது. இதன் மூலம் தூய்மைக்கேடு ஏற்படுத்தும் பெரும் வாயில் ஒன்று அகற்றப்பட்டுள்ளது. தூர்வாரும் பணிகளைத் தொடங்க ஆதரவு நல்குமாறு இங்கிலாந்து நாட்டின் வெளிநாட்டு மேம்பாட்டு நிருவாகத்தை அணுகியுள்ளோம்.

87. காவிரி ஆற்றில் தூய்மைக்கேட்டைத் தடுக்க, விரிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்திற்கு ரூ.332.00 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நிதியுதவி அளிக்குமாறு ஜப்பான் நாட்டு, வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியத்திடம் கோரியுள்ளோம். இதற்கிடையில்,இத்திட்டத்திற்கு, மத்திய அரசும் உதவி நல்கலாம். காவிரி ஆற்றின் செயல் திட்டத்திற்கு விரைவில் நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

88. உலக வங்கி ஆதரவுடன் கூடிய புதிய தொழிற்சாலை தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு திட்டத்தில், தமிழ்நாடு சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்க் கிடைக்கக்கூடிய நிதியுதவியின் பெரும்பகுதி, தொழிற்சாலைகள் தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை அமைக்க, அல்லது, நிலையுயர்த்த, அவற்றிற்கு நிதியுதவி நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும். இந்த நிதியுதவி, குளோரோப்ளோரோ கார்பன்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்களைப் படிப்படியாக ஒழிக்க உதவவேண்டும் என்ற கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

89. இத்திட்டத்தின் கீழ்த் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வலுப்படுத்தப்படும். மணலி பகுதி, இரசாயனத் தொழிற்சாலைகளைக் கொண்ட பகுதியாக மாறி வருகிறது. மணலியில் அவசரகால இடர் உதவி நிலையத்தைத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஏற்படுத்தும்.

தொழில்கள்

90. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கான இந்த விரிவான திட்டத்தை அனைவரும் வரவேற்றுள்ளனர்.

91. 1969 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மத்திய முதலீடு 10 சதவீதமாக இருந்தது. அது, 1989 ஆம் ஆண்டில் 5.21 சதவீதமாகப் பெரிதும் குறைந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்வதில் ஏற்பட்டுள்ள காலத்தாழ்வு, எதிர்கால வாய்ப்புவளம் குறித்த நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. பெருந்திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை அணுகியுள்ளோம். ''பாம்பே ஹை'' பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டுவரத் தென் மாநிலங்களுக்கான எரிவாயு இணைப்பு அமைக்கும் திட்டத்திற்கு, உடனடியாக அனுமதியளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். ''தேசிய வேதிம நறும் பொருள் திட்டத்திற்கு'' (NAPCO) அனுமதியளிப்பது காலந்தாழ்த்தப் பட்டுவருகிறது. பெருமளவில் துணைத் தொழில் பிரிவுகளை உருவாக்கும் வளவாய்ப்புடைய இந்தப் பெருந்திட்டத்திற்கு, உடனடியாக மத்திய அரசு அனுமதியளிப்பது அவசியமாகிறது.

92. புதிதாக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID), நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான், , பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, தருமபுரி மாவட்டத்திலுள்ள பர்கூர் ஆகிய இடங்களில் நான்கு பெரிய தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவும். இத்திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி அளிக்குமாறு, ஆசிய வளர்ச்சி வங்கியை நாங்கள் அணுகியுள்ளோம். இந்த வளர்ச்சி மையங்களின் பணியைத் தொடங்க, தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளோம்.

93. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 2800 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில், மொத்தம் ரூ.755 கோடி முதலீட்டுடன், 9 புதிய திட்டங்கள் குறித்த பணியைத் தொடங்கியுள்ளது. இத்திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

94. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக்கழகம், 1991-92 ஆம் ஆண்டில் , ரூபாய் 42 கோடி கடனாக வழங்கும். 1991-92 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் கடன் வழங்கு அளவு, ரூ.145 கோடியை எட்டும். இவை, முன் எப்போதும் அடைந்திராத மிக உயர்ந்த நிலைகளாகும். 1992-93 இல், இவ்வாறு கடனாக வழங்கப்படும் தொகைகள் மேலும் உயர்த்தப்பட்டு, முறையே தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம், ரூபாய் 50 கோடியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம், ரூபாய் 180 கோடியும் என்கிற இலக்கினை எய்தும்.

95. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறுதொழில் அதிபர்களுடன் 4.3.92 ஆம் நாளில் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஜப்பானைச் சேர்ந்த 'அயல்நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் (OECF) உதவியுடன், மொத்தம் ரூபாய் 70 கோடி முதலீட்டில், குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளை அமைக்கும் திட்டத்தைச் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் முக்கியத் துறைகளில் குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் நிறுவப்படும்:

- தொழில் மின்னணுவியல்
- தோல்பொருட்கள்
- உள்ளாடைகள்துணி தயாரிப்பு
- பொறியியல் பொருட்கள்
- மோட்டார் வண்டி துணைப் பாகங்கள்
- பெட்ரோலியம்இரசாயனப் பொருட்கள்
- உணவுப் பொருட்கள் பதப்படுத்தல்

96. நாங்கள் அளிப்பதாக உறுதியளித்த உதவித்தொகைகளும், ஊக்க உதவிகளும், உரிய நேரத்தில் உறுதியாகக் கிடைக்க உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அவற்றை உடனுக்குடன் வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில், போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

97. நமது நாட்டின் இடர்ப்பாடான பொருளாதார நிலைமை, உற்பத்தித் தொழில் பிரிவுகளைத் திருத்தியமைப்பது பற்றிக் கடுமையான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. இப்போது நிலவும் தொழில் நுட்பவியல்முன்னேற்றமும், பொருளாதாரக் கட்டாயங்களும் உற்பத்தித் தொழில் பிரிவுகளைச் சீரமைப்பது குறித்தும், தொழிலாளர்களுக்கு அதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் நன்றாகச் சீர்தூக்கி ஆய்ந்து முடிவு செய்யவேண்டிய அவசியத்தை நமக்கு ஏற்படுத்தியுள்ளன. வெளியேற்றக் கொள்கை (Exit policy) குறித்துத் தேசிய அளவில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இப்பொருள் குறித்து நடைமுறை சாத்தியமான கருத்தை நாம் மேற்கொள்ள வேண்டிவரும் என்று நம்புகிறோம். எவ்வாறு இருந்தாலும், சிறிதளவு ஆட்குறைப்பு செய்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் எனில், அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை நாம் காண வேண்டியிருக்கும். மாநிலத் தொழிலாளர் மறுவாழ்வு நிதிக்காக, ரூ. 50.00 கோடி தொகுப்பு நிதி அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு மத்திய அரசை அணுகியுள்ளோம். இந்த நிதி, பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களைத் திருத்தி அமைப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்படும். எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்கள் நலம் புறக்கணிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

• குடிநீர் வசதிக்கு வழியில்லாத 2,483 குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும் ரூ.13.36 கோடி செலவில் குடிநீர் வழங்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

• ரூ.104 கோடி செலவில் 20 நகராட்சிகளில் மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

98. நலிந்தத் தொழிற் பிரிவுகளை மீண்டும் தொடங்குவதில் இடையூறுகள் இருந்தபோதிலும், மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் பிரிவுகளை எதிர்நோக்கியுள்ள இடையூறுகளைத் தீர்ப்பதற்காக, தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு நாங்கள் சிறப்பு முயற்சிகளை எடுத்துள்ளோம். கடந்த மூன்று ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுடைய பெருமுயற்சிகளின் காரணமாகத் தற்போது மீண்டும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. தொழிலாளர் நலனைக் காக்கின்ற வகையில் இப்பணி அரசினுடைய குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்தத் தொழிற்சாலையில் வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காகவும் தொழிற்சாலையைத் திறக்கவும் அரசு ரூ. 3 கோடி அளவுக்கு நிதி வசதி செய்து தந்துள்ளது. ஏறத்தாழ ஓராண்டுக் காலமாகக் கதவடைப்பு செய்யப்பட்டிருந்த கே.சி.பி. லிமிடெட் நிறுவனம், தற்போது மீண்டும் திறக்கப்பட்டு, அக்டோபர் 1991-லிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது. பின்னி ஆலை தொழில் தகராறை நேரிய வழியில் தீர்த்து வைக்க அரசு தக்க முயற்சி எடுத்து வருகிறது. நிருவாகமும், தொழிலாளர் தரப்பும் அரசிடம் மறு ஆய்வு மனு கொடுத்துள்ளன. இந்தத் தகராற்றை விரைந்து தீர்த்து வைத்துத் தொழிற்சாலையைத் திறக்க, அரசு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் முறையாக எடுத்து வருகின்றது.

99. துணி ஆலைகளில் ஊதியக் கொடை குறித்த தகராற்றில் ஏறத்தாழ 45,000 தொழிலாளர்கள் நலன் சம்பந்தப்பட்டிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டுப் பயனுள்ள முறையில் இதனைத் தீர்த்து வைத்தார். மூடிக் கிடக்கும் 6 தொழில் நிறுவனங்களையும், 9 துணி ஆலைகளையும் சேர்ந்த 21,137 தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ.400 என்னும் வீதத்தில் நடப்பு ஆண்டில் ரொக்க உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

100. தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கான நல நிதியில் 54,924 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிதிக்குத் தற்போது அரசு ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொழிலாளருக்கு ரூ.2/- வீதம் தொகை அளிக்கிறது. தொழிலதிபர்கள் ஒரு தொழிலாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் தமது பங்குத் தொகையை இந்நிதிக்குச் செலுத்துகிறார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கல்வி, மனமகிழ் வசதி, மருத்துவ உதவி மற்றும் பிற வசதிகளை அளிக்க இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. இந்நிதிக்கு அரசின் பங்கும், தொழிலதிபர் பங்கும் இனி ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 10 ஆக உயர்த்தப்படும். மேலும், பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழிலாளர்களையும் சேர்க்கும் வகையில் இந்நிதி விரிவுபடுத்தப்படும்.

101. புதிய பொருளாதாரச் சூழ்நிலையில், தொழிலாளர்களுக்குப் பயிற்சியும், மறுபயிற்சியும் அளிப்பதற்கு மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். மாறிவரும் தொழில் நுட்பவியலையொட்டித் தொழில் நுட்ப உத்திகளில் மாறுதல்களைக் கையாளுகின்ற திறன் மிகவும் அவசியம். தொழிலாளர்களுக்குப் பயிற்சியும், மறுபயிற்சியும் அளிக்கின்ற தக்க பயிற்சி வசதிகளைத் தொழில் துறைக்கு அளித்துவரும் கொள்கையை நாம் தொடர்ந்து பின்பற்றுவோம். நம்முடைய தொழிற் பயிற்சி நிறுவனங்களைத் தரம் உயர்த்தும் பொருட்டு தொழில் நுட்பப் பயிற்சித் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவோம்.

மின்சக்தி

102. நீர்த்தேக்கங்களில் போதிய அளவு நீர் இருந்ததாலும், தேவையான அளவுக்கு நிலக்கரியைப் பெறுவதில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும், தமிழ்நாட்டில் மின்வெட்டு இல்லாமல் பார்த்துக்கொண்டோம். நடப்பாண்டில், மின் உற்பத்தியைக் கூடுதலாக 220 மெகா வாட் திறன் அளவிற்கு அதிகரிப்போம்.

103. வட சென்னையில், மொத்தம் 630 மெகாவாட் திறன் கொண்ட மூன்று 210 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவுகள் அமைக்கும் பணியின் முன்னேற்றத்தை, நமது நிதி இடர்ப்பாடு பாதிக்காதவாறு பார்த்துக்கொண்டோம். மொத்தம் ரூ.845 கோடி ஒதுக்கீட்டிலான இப்பெருந்திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின்(ADB) நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவருகிறது. மேற்கொண்டும் ரூ.944 கோடி செலவில் 500 மெ. வா. திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை வடசென்னையில் ஏற்படுத்துவதற்காகவும், ஆசிய வளர்ச்சி வங்கியை அணுக உள்ளோம்.

104. ஜெயங்கொண்டசோழபுரத்தில், பழுப்பு நிலக்கரி சுரங்கம் வெட்டுதல், மின் உற்பத்தி செய்தல் ஆகிய ஒருங்கிணைந்தப் பெரும் திட்டம் ஒன்றை, கூட்டுத் துறையில் ஏற்படுத்த அரசு மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகளைப் பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள். மொத்தம் ரூ.7000 கோடி செலவில், 1500 மெ. வா. மின் உற்பத்தி செய்யும் இப்பெருந்திட்டம், படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்குத் (டிட்கோ) தொடக்கத்தில், பங்கு முலதனவகையில், தொகை அளிக்க, வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2.5 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

105. தமிழ்நாட்டில் மத்திய அரசின் பல்வேறு மின் உற்பத்தித் திட்டப்பணிகள் மெத்தனமாக நடந்துவருவது குறித்து, நாம் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். முதல் சுரங்க விரிவாக்கப் பணியும், நெய்வேலியில் 420 மெ. வா. திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்திப் பிரிவு ஏற்படுத்தும் பணியும் விரைவுபடுத்தப்பட வேண்டும். மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியும், அதையிணைந்த மின் உற்பத்தித் திட்டமும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும். கூடங்குளம் அணுமின் திட்டம் தொடர்பான ஐயப்பாடான நிலையைப் போக்கி, மத்திய அரசு அதனைத் தெளிவுபடுத்த வேண்டும். உள்நாட்டுத் தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, அல்லது, ஏனைய வெளிநாட்டு உதவியைப் பெற்று, இந்த மின் திட்டத்தை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம். திட்டப்பகுதியில் ஆயத்தப் பணிகளும் ஏற்கெனவே நிறைவு பெற்றுவிட்டதால், இப்பெருந்திட்டம் குறித்து, விரைவாகத் தக்க முடிவு எடுப்பது அவசியமாகும்.

106. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், வரும் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி மேம்பாட்டுத் திட்டத்தை 2 புதிய வட்டாரங்களில் செயல்படுத்தும். காற்றுச் சக்தி மூலம் இயங்கும் 100 மெ.வா. மின் சக்தித் திறன் கொண்ட பிரிவு ஒன்று அமைக்கும் திட்டம் ஒன்றை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். காற்றுச் சக்தி நம் மின் மைய இணைப்பு ஏற்பாட்டில் நிலையான சக்தி ஆதாரமாக விளங்கும் வகையில், இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பது குறித்த புதியவழிகள் பற்றிப் பரிசீலித்து வருகிறோம்.

107 வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்க, நிறுவன நிதியைப் பெறுவதில் இடர்ப்பாடு இருந்து வந்துள்ளது. எனவே, உழவர்கள் இதற்கான செலவுத் தொகையைச் செலுத்துவதின் பேரில், மின்னிணைப்பு பெறுவதற்கான புதிய திட்டம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளோம். வரும் ஆண்டில், காத்திருப்போர் பட்டியல்படி, 20,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும். புதிய திட்டத்தின் கீழ், மேலும் 20,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும். வரும் ஆண்டில், 40,000 குடிசைகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படும்.

108. தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி இடர்ப்பாடு குறித்த பிரச்சினையும் நம்முன் உள்ளது. தமிழ்நாடு மிவாரியம் திறமையாகச் செயல்பட்டபோதிலும், இரண்டு காரணங்களால் அதன் நிதிநிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. முதலாவதாக நமது மாநிலம், நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து மிகுந்த தொலைவில் இருப்பதால், பிற மாநிலங்களைக்காட்டிலும், தமிழ்நாட்டில் நிலக்கரியின் விலை மிக அதிகமாக ஆகிறது. இரண்டாவதாக, உழவர்கள் அனைவர்க்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவதால், ஓராண்டுக்கு உண்மையில் ரூ.560 கோடி இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பின் ஒரு பகுதியை அரசு ஈடு செய்கிறது. வரவு செலவுத் திட்டத்தில், இழப்பீட்டுக்கு ரூ.350 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து வரவேண்டிய ரூ.100 கோடி வட்டித் தொகையையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இத்தொகையை அளிப்பதில் அரசுக்கு மிகுந்த இடரப்பாடு உள்ளது. இச்சூழ்நிலையில், மேற்கொண்டும் அதிகரித்துள்ள செலவுகளையும் நிலக்கரியின் விலை அண்மையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதையும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மின்சக்தி ஒரு விலைமதிப்புள்ள இடுபொருள் என்னும் வகையில், அதற்கு முறைப்படி மின் கட்டணம் விதிப்பதன் அவசியம் பற்றி, அனைத்து நிதி நிறுவனங்களும் வலியுறுத்தி வந்துள்ளன. இந்நிலைமைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றிப் பொதுக்கருத்து ஒன்றினை உருவாக்க வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

கைத்தறி

109. என்னுடைய கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட **உரையில் அறிவித்துள்ளபடி, நாங்கள் இரண்டு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். கட்டுபடியாகாத கைத்தறிகள் அனைத்தையும் நீக்கிவிட்டு, படிப்படியாக அவற்றை விசைத்தறிகளாக மாற்றும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடரப்படும். வரும் ஆண்டில், நாங்கள் 5,000 விசைத்தறிகளை நிறுவ இருக்கிறோம்.**

110. கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டமொன்றும் செயல்படுத்தப்படுகிறது. வருமாண்டில் 5,000 கைத்தறிகள் நவீனப்படுத்தப்படும்.

111. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன், ரூபாய் 22 கோடி செலவில், பர்கூரில் புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான சமவீதப் பங்குவகையிலான மூலதன உதவியளிக்கும் பொருட்டு, வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

112. பட்டுத் துணி விற்பனைக்காகக் காஞ்சிபுரத்தில் விற்பனை வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும். பருத்தித் துணி விற்பனைக்காக, அதேபோன்று வளாகம் ஒன்று ஈரோட்டில் நிறுவப்படும். கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடித் தொகை வழங்க, வரவு செலவுத் திட்டத்தில் ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

113. நெசவாளர்களின் நலனுக்காக இவ்வரசு எப்போதும் பாடுபட்டு வந்துள்ளது. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுறுதித் தொகை ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 15,000ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இறந்துபோகும் நெசவாளரின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூபாய் 250/- வழங்கும் ஓய்வூதியத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் நெசவாளர்களுக்காகத் தறிக்கூடங்கள் இணைந்த வீடுகள் 2,000 கட்டப்படும்.

ஊரக வளர்ச்சி

114. நடப்பாண்டில், சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்,மேற்கொள்ளவிருக்கின்ற பல்வேறு பணிகளுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.1 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.386 கோடியாகும். முதல் நிலையில், நடப்பாண்டில் நாம் ரூ.193 கோடி வழங்கியுள்ளோம். எஞ்சிய ரூ.193 கோடி 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

திட்டத்தின் பெயர்	பணிகளின் எண்ணிக்கை	செலவு (ரூ. கோடியில்)
* குடிநீர் வழங்கல்	5,999	53.36
* சாலைகள் மேம்பாடு	3,874 கி.மீ	83.34
* தெருவிளக்குகள்	69,781	19.88
*தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்	1,068	14.79
* சத்துணவு மையங்கள் அமைத்தல்	1,409	9.98
* சிறுபாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்தல்	2,677	11.82
* தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கல்	978	1.45

• கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.75 கோடியாக இருக்கும்.

• சென்னை மாநகரக் குடிநீர் அனுப் புகை-விநியோக ஏற்பாட்டுத் திட்டம் ரூ.1,100 கோடி செலவில் வகுக்கப் படும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பது நம்முடைய நோக்கமாகும். இந்தப் பெருந்திட்டத்தில், மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். அப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யும் நோக்குடன், 1993 மார்ச்சுக்குள் திட்டப்பணிகளை முடிக்க வேண்டுமென நாம் முடிவு செய்துள்ளோம்.

115. உள்ளாட்சி மன்றங்களுக்குப் போதிய நிதி வசதியினை அளிக்க நாம் தனி நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். உள்ளூர் சாலைகளுக்குரிய பராமரிப்பு மானியம் ரூ.9 கோடியிலிருந்து ரூ.12 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கைப்பம்புகள், விசைப் பம்புகள் ஆகியவற்றின் பராமரிப்புக்காகக் கூடுதலாக ரூ.5.65 கோடி தொகை ஒதுக்க இந்த வரவு செலவுத் திட்டம் வகைசெய்கிறது. நிதிவகையில் நலிவுற்ற ஊராட்சிகளில் பழைய தெரு விளக்குகளுக்குப் பதிலாகப் புதியனவற்றை அமைக்க, வரும் ஆண்டில் ரூ.3 கோடிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடிப்படை ஊரகப்பணி வசதிகளை வழங்கவும், பராமரிக்கவும் அரசு எடுத்த தனி நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் போற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

நகர்ப்பகுதி மேம்பாடு

116. நகர்ப்பகுதிகள் மிக விரைவாக வளர்ந்து வருகிற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நகர்ப்பகுதிகளில் 34 சதவீதம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம்மாநிலத்தில் நகர்ப்பகுதி மேம்பாட்டிற்காக விரிவான திட்ட அணுகுமுறை ஒன்றை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது.

117. நகர்ப்பகுதி மேம்பாட்டிற்காகப் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பல பணிகளுக்காக நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. நிதி ஆதாரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய, நிதியுதவி ஏற்பாடுகள் குறித்தும் நாம் முனைப்பாகக் கவனம் செலுத்திவருகிறோம்.

118. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் உலக வங்கி ஆதரவு பெற்ற நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி, இம்மாநிலத்தில், நகர்ப்பகுதி மேம்பாட்டிற்கு உதவும் முதன்மையான நிதியுதவியமைப்பாகவுள்ளது. இந்நிதியின் கீழ், நகராட்சிகளின் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பாண்டில், மொத்தம் ரூ.36.90 கோடி செலவில், 34 திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மொத்தம் ரூ.50 கோடி செலவில்; திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க இந்நிதியமைப்பு ஒப்புதலளிக்கும். நகராட்சிகள், தங்களுடைய திட்டங்களுக்குத் தேவைப்படுகிற நிதியின் பொருட்டு, இந்த நிதியமைப்பை அணுகலாம். அதே நேரத்தில், நகராட்சிகள் தாங்கள் பெற்ற கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த ஏதுவாகத் தங்களுடைய நிதி ஆதாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

(தொடர்ச்சி 26-ஆம் பக்கம் பார்க்க)

நிதிநிலை அறிக்கை: சிறப்பு அம்சங்கள்!

● தமிழக அரசின் 1992-93-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள் வருமாறு:

● மளிகைப் பொருள்கள் மீதான விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைப்பு.

● நெய், பால் பொருள்கள், வெந்தயம், கிராம்பு, குச்சிக் கிழங்கு வறுவல், சேமியா மீதான விற்பனை வரி 8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைப்பு.

● கண் மை, குங்குமங்களுக்கு முழு வரி விலக்கு

● 'லேமினேட்' செய்யப்பட்ட சாக்குப் பைகள் மீதான வரி 8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைப்பு.

● 'கவரிங்' நகைகள் மீதான வரி 8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறையும்.

● டாக்ஸிகளுக்கான வரி 15 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைப்பு.

● தோட்டக்கலை எஸ்டேட்டுகளைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

● 222 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் மீன் வளர்ப்புத் தொழிற்பேட்டை சிதம்பரனார் மாவட்டத்தில் நிறுவப்படும்.

● வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.60, ரூ.270 ஆக உயர்த்தப்படுகிறது.

● வரும் ஆண்டில் 20 உயர்நிலைப் பள்ளிகள், 10 மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்படும்.

● மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடும் நிலையை மாற்றிட, 'மாநிலப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்' செயல்படுத்தப்படும்.

● 625 கிராமங்களில் நூலகங்கள் ஏற்படுத்தப்படும்.

● சத்துணவுத் திட்டத்தின்கீழ், 1.4.'92 முதல், மதிப்பூதியத்தில் தனி உயர்வு அளிக்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.150-க்கு மேல் ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.20-ம், ரூ.150-க்கும் குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ.10-ம் வழங்கப்படும்.

● 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்' என்கிற இத்திட்டத்தின்கீழ், இதுவரை 2,347 முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன. மொத்தத்தில் 10,000 முகாம்கள் நடத்தப்படும்.

● 'எழில்மிகு சென்னை 2000' திட்டத்துக்கு முதல் கட்டத்திற்கு ரூ.1,250 கோடி ஒதுக்கப்படும்.

● ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்க, ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

● நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூட்டுறுதித் தொகை ரூபாய் 10,000-லிருந்து ரூபாய் 15,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

● ஏழைக் குடும்பத்தில் யாராவது ஒருவருக்கு உயிர் மீட்புக்கான முக்கிய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தால், மாநில அரசு 15,000 ரூபாய் நிதி உதவி அளிக்கும்.

● தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. கடலூரைத் தலைமை இடமாகக் கொண்ட மாவட்டம், 'தென்னார்க்காடு மாவட்டம்' என்றும், விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் புதிய மாவட்டம் '- 'விழுப்புரம்-வள்ளலார் மாவட்டம்'என்றும் பெயரிடப்படும்.

● 'பட்டா பதிவுப் புத்தகத் திட்டம்' தொடங்கப்படும்.

● அரசுப் பணியாளர்கள், வீடு கட்டுவதற்கு வழங்கப்படும் முன்பணத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.18.89 கோடியிலிருந்து ரூ.25 கோடியாக உயர்த்தப்படுகிறது.

● அரசுப் பணியாளர், விடுப்புப் பயணச் சலுகைத் தொடர்பாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' மூலமாகப் பயணத் தொகுப்பு ஏற்பாடு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

● முதியோர் ஒய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.50-லிருந்து ரூ.75-ஆக உயர்த்தப்படுகிறது. இதற்கான ஒதுக்கீடு ரூ.32.5 கோடியிலிருந்து ரூ.52.25 கோடியாக உயர்த்தப் படுகிறது.

இறந்த நெசவாளர் குடும்பத்திற்கு ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்பேரில், தமிழகத்தில் உள்ள, இறந்த நெசவாளர்களின் குடும்பங்களுக்கு, மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில், கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் இறக்க நேரிட்டால் (இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ) அவருடைய குடும்பத்திற்கு ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் 10 ஆண்டுக் காலத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த ஓய்வூதியத் தொகை, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கப்படும் தொகையுடன், கூடுதலாக வழங்கப்படும், நெசவாளர்களின் குடும்பங்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெறலாம்.

இந்தத் திட்டம் 1.1.92-பின்பு, இறந்தவர்களின் குடும்பத்திற்குப்' பொருந்தும். இத்திட்டத்தின்மூலம், இறந்த நெசவாளர்களின் வாரிசுதாரர்கள், வாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்கு உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் மூலம் பயனடைய விரும்பும், கூட்டுறவுச் சங்க நெசவாளர்களிடமிருந்து இதற்காக மாதம் ரூ.2 (ரூபாய் இரண்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு, குடும்ப ஓய்வூதிய, அரசின் நிதிக்கணக்கில் செலுத்தப் படும்.

23-ஆம் பக்கத் தொடர்ச்சி

119. மாநில நகர,ஊரமைப்புத்திட்ட நிதி ரூ.33 கோடி அளவுக்கான நிதி வசதியைக் கொண்டு, தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது. இந்நிதி, பேரூராட்சிகள், மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்ற நகராட்சிகளின் திட்டப் பணிகளுக்குப் பெரிதும் உதவிபுரிவதாக இருக்கும். ரூ.2.70 கோடி மதிப்புடைய 16 திட்டப்பணிகளுக்கு, நடப்பாண்டில் இந்நிதியிலிருந்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், ரூ.5.00 கோடி மதிப்புடைய திட்டப்பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்படும்.

120. உலக வங்கி நிதியுதவி பெற்று நடைபெறுகின்ற, பெரிய திட்டப்பணிகளில் ஒன்றாக விளங்கும் தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விளைந்த பயன், கடந்த காலத்தில், மனநிறைவளிப்பதாக இல்லை. பெரிய திட்டப்பணிகளின் இந்நிலைமை முழுவதையும் நாம் மறுமதிப்பீடு செய்துள்ளோம். தற்போது, அவற்றின் பயன்பாடு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.65 கோடி மட்டுமே ஆகும். வரும் ஆண்டில் அவற்றின் பயன்பாட்டினை ரூ.127 கோடியாக உயர்த்த நாம் முடிவு செய்துள்ளோம். பல்வேறு புதிய சாலை மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

121. நடுத்தர, சிறிய நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக மத்திய அரசும் ஆதரவளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில் ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ.1.2 கோடி செலவில், கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், எடப்பாடி, திருத்தணி ஆகிய நகரங்களில் மேம்பாட்டுப் பணிகளை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

122. ஒவ்வொரு நகரத்தின் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்து திட்டமிட, நாம் நவீனத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. முப்பது சிறிய, நடுத்தர நகரங்களுக்கு, ரூ.30 இலட்சம் செலவில் போக்குவரத்து சாலை வசதிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. கரூர், திருவண்ணாமலை, கும்பகோணம், தேனி அல்லி நகரம் ஆகிய நகரங்களில், பெரிய அளவிலான தரை வரைப்படங்கள், பல புகைப்படங்கள் இணைந்த பேரளவுப்படம் தயாரிக்க, விமானமூலம் புகைப்படம் எடுக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படும்.

123. நகர்ப்பகுதியிலுள்ள ஏழை மக்களுக்குப் பல்வேறு திட்டப்பணிகள் உள்ளன. இப்பணிகளைச் செம்மையாகச் செயல் படுத்துவது அவசியமாகும். எனவே, நகராட்சிகள் ஆணையகத்தில் நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கு எனத் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் நாம் முடிவுசெய்துள்ளோம்.

சென்னை மாநகர் வளர்ச்சி

124. என்னுடைய கடந்த வரவுசெலவுத் திட்ட உரையில், நான் அறிவித்த "எழில்மிகு சென்னை 2000" திட்டம் முழு வடிவம் பெற்றுள்ளதுடன், உலகளாவிய வகையில் ஆர்வத்தை ஈர்த்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகாரமன்றம், அண்மையில், "கி.பி.2011-இல் சென்னை" எனும் எதிர்காலத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. அத்திட்டத்திற்கான தடைகள், வாய்ப்பு வளங்கள் அனைத்தும் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில், "எழில் மிகு சென்னை 2000" செயல்பாட்டுத் திட்டமாக அமையும். முதல் கட்டத்தில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு, ரூ.1250 கோடியாக இருக்கும்.

125. சென்னை மாநகர குடிநீர் அனுப்புகை விநியோகத் திட்டப்பணியும், சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டப்பணியும் உலக வங்கியின் இசைவு பெறப்பட்டதும் செயல்படத் தொடங்கும்.



இப்பணிகள் கிருஷ்ணா நீர்த்திட்டத்துடன், இணைக்கப்பட்டுள்ளன.

126. மின் பகிர்வு முறை மேம்பாட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நடப்பாண்டில் ரூ.15 கோடி செலவிடப்பட்டுள்ளது; வரும் ஆண்டில் ஒதுக்கீடு ரூ.53 கோடியாக இருக்கும்.

127. போக்குவரத்து ஏற்பாடுகளில் பெரிய சீரமைப்புப்பணிகள் குறித்தும் திட்டமிடப்பட்டுள்ளன. அண்ணா சாலையில் ஒரு பகுதியில் முற்றிலும் பேருந்துகளுக்கான மேல் நிலை வழித்தடத்திட்டத்திற்கு ரூ.100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான திட்டம் தயாரானதும் இப்பணியை நாம் ஒப்படைக்கவுள்ளோம். பல்லவன் போக்குவரத்துக் கழகம், வரும் ஆண்டில், ரூ.15 கோடி செலவில், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதிய பேருந்துகளை வாங்கும், மற்றும் பேருந்துகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் திட்டத்தை மேற்கொள்ளும். வரும் ஆண்டில் சென்னை மாநகரில் ரூ.20 கோடிநிதி ஒதுக்கீட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

128. வெள்ள நீர் வடிகால்கள், தெருவிளக்குகள், திடக்கழிவுப் பொருள்களைக் கையாளுதல் மற்றும் ஏனைய நகராண்மைப் பணிகளைச் சீரமைப்பதற்கான துணைத் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 20 கோடி செலவு பிடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

129. மாநகரில் நெரிசலைக் குறைக்கும் நோக்குடன், மாநகர எல்லையோர நகர் வளர்ச்சிப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை அருகே, அம்பத்தூரில் ரூ.40 கோடி செலவில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பெரிய அளவிலான மனைகள், பணியிடங்கள் திட்டம் ஒன்றைப் புதிதாக மேற்கொள்ளும். குடிசைமாற்றுப் பணித்திட்டங்களும் வேகமாக நடந்தேறி வருகின்றன.

சாலைகள்

130. சாலைகளைப் பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசு, மிக உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. சாலைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கம், 1990-91 ஆம் ஆண்டில்,ரூ. 200.35 கோடி என்ற அளவில் இருந்தது. 1992-93 ஆம் ஆண்டிற்கு அது ரூ.314.51 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், சாலைகளுக்கான நிதி ஒதுக்கம், மோட்டார் வண்டிகள் வரியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயை விட அதிகமாகவே இருக்கும்.

131. சாலைகளைப் பராமரிக்க, ஒன்பதாம் நிதிக்குழு வரையறுத்துள்ள நெறிமுறை அளவிற்குமேல், முதல்முறையாக, 1992-93 ஆம் ஆண்டில், சாலைகளைப் பராமரிப்பதற்கு நாம் நிதி ஒதுக்கியுள்ளோம் என்பதை அறிந்து உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். சாலைகளைப் பராமரிப்பதற்கு நாம் ரூ.125 கோடி ஒதுக்கியுள்ளோம். இது, 1990-91 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூ.65.83 கோடியுடன் ஒப்பிடும்போது, ஏறத்தாழ இருமடங்காகும்.

132. ரூ.20 கோடி செலவில் நடப்பாண்டில் தொடங்கப்பட்ட 'சிறப்பு பழுதுபார்ப்புப் பணித்திட்டம்', வரும் ஆண்டிலும்,ரூ.30 கோடி என்ற உயர் அளவு நிதி ஒதுக்கத்துடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ரூ.5 கோடி செலவில் தொழிற்சாலைப் பகுதிகளுக்கு அருகே சாலைகளைச் சிறப்பான முறையில் பழுதுபார்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

133. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ், 800 கி.மீ சாலைகளை மேம்படுத்துவதற்கான, ரூ.45.28 கோடி மொத்த நிதிஒதுக்கத்துடன் செயல்படுத்தக்கூடிய ஊரக அங்காடிச் சாலைகள் துணைத்திட்டம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர், வடஆற்காடு அம்பேத்கார், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ.3.12 கோடியாக இருக்கும்.

134. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில், சாலைகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை, மொத்தம் ரூ.30 கோடி செலவில் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். இத்திட்டம், பொதுத்துறை அடிப்படைவசதி மற்றும் குத்தகை நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் (ILFS) ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் குறிப்பிட்ட இடங்களில் சுங்க வசூல் செய்யப்படும்.

135. சென்னை முதல் கடலூர் வரையிலான கிழக்குக் கடற்கரையோரச்சாலைப்பணி ரூ.75 கோடி செலவில் நடைபெற்றுவருகிறது. வரும் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, நடப்பாண்டு அளவான ரூ.8.5 கோடியிலிருந்து, ரூ.11.2 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

136. மொத்தம் ரூ.328.44 கோடி செலவில் புதிய சாலை மேம்பாட்டுத்திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இத்திட்டம் 3919 கி.மீ. சாலைகளை வலுப்படுத்தி மேம்படுத்த வகை செய்கிறது. இது இம்மாநிலத்தில், போக்குவரத்து சீராக அமைய வழி வகுக்கும். அதே சமயம், இது கிராமப்பகுதிகளில் மக்கள் அங்காடிகளுக்கு எளிதில் சென்று வரும் வசதியை மேம்படுத்தும். இத்திட்டத்திற்கு வெளி நாட்டு நிதியுதவி கிடைக்குமென நம்புகிறோம்.

137. தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி, மிகக்காலத்தாழ்வோடு நடைபெற்றுவருவது குறித்துக் கவலை கொண்டுள்ளோம். சென்னை முதல் மதுரைவரையிலான தேசிய நெடுஞ்சாலையில், நான்கு வழித்தடம் அமைக்கும் பணி, பகுதி பகுதியாகத்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 374 கி.மீ.நீளத்திற்கான பணியை, உயர் முன்னுரிமை கொடுத்து மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதேபோல மொத்தம் 316 கி.மீ.நீளமுள்ள வேலூர், கிருஷ்ணகிரி வழியாகச் செல்லும் சென்னைபெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி , உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். இந்தப் பெரிய தேசிய நெடுஞ்சாலை அடிப்படை வசதித்திட்டத்தை, மேற்கொள்வதில்,மத்திய அரசு தயக்கம் காட்டக்கூடாது. இதற்காக சுங்க வசூல் மேற்கொள்வது பொருத்தமானதாக இருக்குமாயின், அது குறித்தும் பரிசீலிக்கலாம். சென்னையையும் கன்னியாகுமரியையும் கடற்கரையோரச் சாலைமூலம் இணைக்கும், 737 கி.மீ.நீளத்திற்கான புதிய தேசிய நெடுஞ்சாலை மட்டும்தான் நாட்டின் கடற்கரையோர தேசிய நெடுஞ்சாலைகளில் விடுபட்டுப்போன ஒன்றாகும். இச்சாலையை அமைக்கும் பணியை விரைவில் மேற்கொள்ள வேண்டும். மத்திய சாலை நிதிக்குக் கிடைத்துள்ள உயர்த்தப்பட்ட வசூல்களை, மாநிலத்தில் சாலை மேம்பாட்டிற்கு அளித்துதவ வேண்டுமென்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவோம்.

• தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் புதிதாக 4 வளர்ச்சி மையங்களை நிறுவும்.

• சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைத் திட்டத்தை மொத்தம் ரூபாய் 70 கோடி முதலீட்டைக் கொண்டு செயல்படுத்தும்.

வீட்டுவசதி

138. இவ்வரசு, 'குடும்பத்திற்கு ஒரு வீடு' அமையவேண்டும் என்கிற கொள்கை நோக்கத்தைக் கொண்டுள்ளது. நடப்பாண்டில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஏனைய துறைகள் போன்ற பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வாயிலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டில், மேற்சொன்ன அரசுத் துறை நிறுவனங்கள், அமைப்புகள் வாயிலாக 1,10,000 வீடுகளைக் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

139. தனியார் துறையில் வீடுகள் கட்டுவதை ஊக்குவிக்கவும் நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். 'வீட்டு வசதி மையஇணைப்பு வளர்ச்சி' (Grid Development) என்கிற புதிய திட்டம் ஒன்றை நாம் தொடங்கியுள்ளோம்; அதன் மூலம், தனியார் துறை வீட்டுவசதியில் விரைவான வளர்ச்சியினை மேற்கொள்வது சாத்தியமாகும். வீட்டுவசதி மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்த வீட்டுவசதி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்தும் நாம் முறைப்படி பரிசீலனை செய்வோம்.

140. இத்துடன், வீட்டு உரிமையாளர்கள் வீடுகளின் தரத்தினை உயர்த்தும் புதிய திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் கிராமப்பகுதிகளில் 27,000 வீடுகள் தரமுயர்த்தப்படும். நகர்ப்பகுதிகளில் 30,000 வீடுகள் தரமுயர்த்த எடுத்துக் கொள்ளப்படும்.

மகளிர் மேம்பாடு

141. ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்க, ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கியுள்ளார்கள் . இந்த மாபெரும் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்தும், ஏனைய திட்டங்களிடமிருந்தும் ஆதரவைத் திரட்டியுள்ளோம். இத்திட்டத்தை தருமபுரி, சேலம், தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களில் செயல்படுத்த, வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியம் (IFAD) உதவி அளித்துள்ளது.

நடப்பாண்டில், இத்திட்டத்தை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீட்டித்துள்ளோம். இந்த இரு மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியம் உதவி அளிக்குமென நம்புகிறோம்.

142. இந்தத் திட்டத்தை எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் மேற்கொள்ளக் கருதியுள்ளோம். என்னுடைய முந்தைய ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளது போல, இத்திட்டம் கவனமாக முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொண்ட பின்னர், முறையாகச் செயல்படுத்தப்படும். சுய உதவிக் குழுவினர் மூலம் நிலையான சுயவேலைவாய்ப்பு கிடைக்கச் செய்வதே எங்களின் நோக்கமாகும்.

143. மாண்புமிகு முதலமைச்சர் . புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சிறு குடும்பக் கோட்பாட்டை ஊக்குவிக்கவும் பெண் குழந்தைகளுக்குப் பயனளிக்கவும் புதிய திட்டம் ஒன்றை அண்மையில் அறிவித்துள்ளார்கள். ஆண் குழந்தைகள் ஏதுமில்லாத ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் பெற்றோர் கருத்தடை செய்து கொண்டுள்ள குடும்பங்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும். அத்தகைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ.2000, நிதி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யப்படும். அதனைக் கொண்டு தொடக்க, நடுநிலை, உயர் நிலை, மேல் நிலைக்கல்விக்கும், கல்லூரி படிப்புக்கும் குறித்த காலத்திற்கொருமுறை, அப்பெண் குழந்தைகளின் கல்விக்காகக் குடும்பத்திற்குத் தொகை வழங்கப்படும். அப்பெண் குழந்தைக்கு 20 வயது ஆகும் போது, தனக்கென்று குடும்பத்தை அமைத்துக்கொள்ள உதவும் வகையில், அல்லது மேற்படிப்பைத் தொடர இயலும் வகையில் ஒரு மொத்தத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் சுமார் 20,000 குடும்பங்களுக்குப் பயன்கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்

144. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்காக, அரசு, புதிய 10 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்தி வந்துள்ளது. இந்தத் திட்டம் நல்ல வளர்ச்சியை அளித்துள்ளது.

இனம்	1991-92ல் சாதனை
* பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்	65,000 குடும்பங்கள்
* 10,000 கிணறுகள் வெட்டும் திட்டம்	3,000 கிணறுகள்
* தொழில் முனைவோர் மேம்பாட்டுத்திட்டம்	1,000
* தொழில் பயிற்சிப் பள்ளிகளில் கல்வித் தகுதி பெற்று வேலை வாய்ப்பற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்	1,000
* இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்குதல்	1.24 இலட்சம்
* ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு வசதி திட்டம்	35,000
* குடிநீர் வசதி செய்து கொடுத்தல்	1,418 குடியிருப்புப் பகுதிகள்
* இணைப்புச் சாலைகள் அமைத்தல்	500
* குடியிருப்புப் பகுதிகளுக்குத் தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல்	357
* குடிசைக்கு ஒரு விளக்கு அளிக்கும் திட்டம்	30,000

145. இந்தப் பத்து அம்சத் திட்டம், இதே இலக்குகளுடன் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஆதிதிராவிடர்களும் பழங்குடியினர்களும் பயனடைவதை உறுதி செய்ய இது சிறந்த வழியாக அமையும்.

146. வரும் ஆண்டில், ரூபாய் 43.81 இலட்சம் செலவில், ஆதி திராவிட வகுப்பு மாணவர்களுக்காக 30 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படும். ஆதி திராவிட மாணவரில்லங்கள் ஒவ்வொன்றிற்கும் நூலகப் புத்தங்கள் வாங்கி வழங்கப்படும். ரூ.12.33 இலட்சம் செலவிலான இத்திட்டம், உடனடியாக செயல் படுத்தப்படும்.

147. நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், உபரி நிலங்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலங்களை ஒதுக்கப் பெற்றுள்ள ஆதி திராவிட உழவர்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களை மேற்கொள்ளத் தனியார் அமைப்புகள் முன் வந்துள்ளன. அத்தகைய உழவர்கள் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் கடன் உதவி பெறவும், மானிய உதவி பெறவும் நாம் வழிவகை ஏற்படுத்தியுள்ளோம்.

பிற்படுத்தப்பட்டோர் நலன்

148. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குரிய இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், போதிய கல்வி வசதிகளை அளிப்பதேயாகும். பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்கள் 746 இலும் உள்ள வசதிகள் குறித்து விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய மாணவரில்லங்களுக்கு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று விரைவில் மேற்கொள்ளப்படும். மாணவர்கள் படிக்கும் பழக்கத்தைமேம்படுத்திக் கொள்ளவும், தரமான புத்தகங்களைப் பெற இயலும் வகையில், மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் மாணவரில்லங்கள் 746 இலும் சிறு அளவிலான நூலகங்கள் ஏற்படுத்தப்படும். இதன் வாயிலாக படிக்கும் பழக்கமும், தரமான புத்தகங்கள் கிட்டும் வசதியும் ஏற்படும். வரும் ஆண்டில் ரூபாய் 23 இலட்சம் செலவில் 13 புதிய மாணவியரில்லங்கள் தொடங்கப்படும் .

149. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஏனைய மத்திய அரசுப் பணித்தேர்வுகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் தனிப்பயிற்சி நிலையம் சிறந்த முறையில் செயல்பட இயலவில்லை. இப்பயிற்சி நிலையத்தை முழு அளவில் நிலையுயர்த்தவும், புதிய வளாகம் ஒன்றில் அதை அமைக்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தை வரும் ஆண்டில் ரூபாய் 35 இலட்சம் செலவில் மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. படிப்பில் சிறந்த மாணவர்கள் இறுதிச் சுற்றுத் தேர்வுக்கு உரியவாறு பயிற்சி பெற இயலும் வகையில், தொடக்க நிலைத்தேர்வில் சிறப்பிடம் பெற்றுள்ள அத்தகைய மாணவர்களுக்குத் தனியார் நடத்தும் தனிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கும் புதிய திட்டமொன்றைக் கொண்டுவர நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்திற்காகும் முழுச்செலவையும் அரசு ஏற்கும்.

150. சில வகுப்புகளைச் சேர்ந்த வீடற்ற நபர்களுக்கு வீட்டுமனை வழங்க, வீட்டுமனைகளைக் கையகப்படுத்துவதற்காக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழ்மையுள்ள வீட்டு வசதி அற்ற மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகையைச் சேர்ந்த சமுதாயத்தினர் அனைவருக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின் கீழ் 5000 வீட்டுமனைகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.

151. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக புதிதாக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வரும் ஆண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்தை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மேற்கொள்ளும். பிற்படுத்தப்பட்டோர் வருமான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5000பேருக்கு அவர்களுடைய பொருளாதார நிலையை மேம்படுத்த. உதவியளிக்கப்படும்.

ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு

152. நான் இது வரையிலும் அரசின் திட்டங்களையும், பணிகளையும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். சமுதாயத்தில் பல்வேறு பிரிவினர்களின் நலனுக்காக எடுக்கப்பட்டுள்ள சிறப்பு நல நடவடிக்கைகள் பற்றியும் நான் எடுத்துக் கூறியுள்ளேன். மாறுதல் அடைந்து வரும் பொருளாதாரத்தில், அதுவும் ஒரு நெருக்கடியான கால கட்டத்தைக் கடந்துகொண்டு இருக்கின்ற நிலையில், ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் பொருளாதாரத்தை நிலைப்படுத்துகின்ற நடவடிக்கைகளால் மிக மிக எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையில் இருப்பவர்கள் ஆவர். ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, நாம் மிக உயர்ந்த முன்னுரிமை கொடுத்துள்ளோம். இல்லாமையாலும், வறுமையாலும் தமிழகத்தில் தனியொருவர் எவரும் தவிக்கின்ற நிலை, அறவே இல்லாதவாறு உறுதி செய்திட நாம் மிக விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். ஏழை, எளியவர்களையும், வசதி வாய்ப்பற்றவர்களையும் முழுமையாகப் பாதுகாத்திட எடுக்கப்படுகின்ற இந்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம் வலுப்படுத்தி, விரிவுபடுத்துவோம்.

* *மாநிலத் தொழிலாளர் புது வாழ்வு நிதி ஏற்படுத்தப்படும்.*
* *விசைத்தறிகளை நிறுவும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*
* *கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டமொன்று மேற்கொள்ளப்படும்.*

153. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க, இது வரையில் முதியோர், விதவைகள், ஆதரவு அற்ற மகளிர், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியமான ரூ.50-ஐ, ரூ.75-ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளோம். ஓய்வூதியத்திற்கான ஒதுக்கீடு ரூ.32.50 கோடி என்பதிலிருந்து ரூ.52.29 கோடியாக உயர்த்தப்படும். இது தவிர காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் 27,592 பேருக்கு ஓய்வூதியம் வழங்கவும் நாங்கள் ஆணை பிறப்பித்துள்ளோம்.

154. கருவுற்று இருக்கும் தாய்மார்களுக்கு, ஏற்படுகின்ற ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்க உதவியாக மொத்தம் ரூ.200 வழங்கப்படுகிறது. இந்த ரொக்க உதவி, இனி ரூ.300 ஆக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் பயன் பெறுவர். இதற்காகும் கூடுதல் செலவு ரூ.2 கோடி ஆகும்.

155. 'ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம்' என்றொரு புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருந்தால், அந்தச் சிகிச்சை, ஏற்பளிக்கப்பெற்ற தனியார் மருத்துவ மனையில் செய்யப்படுகின்ற பொழுது, அவருக்கு அரசு ரூ.15,000 உதவித் தொகையாக வழங்கும்.

நிருவாகச் சீர்திருத்தம்

156. நிருவாகம், மக்களிடம் மிக நெருங்கிவர வேண்டும் என்ற எங்களது கொள்கைக்கிணங்க, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து,' நாகப்பட்டினம் காயிதே மில்லத்' மாவட்டம் என்ற புதிய மாவட்டத்தை அமைத்துள்ளோம். தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கக் கருதியுள்ளோம். கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் 'தென்னார்க்காடு' என்னும் முந்தைய பெயரைக் கொண்டிருக்கும். விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அமையும் புதிய மாவட்டம் 'விழுப்புரம் வள்ளலார் மாவட்டம்' என்று பெயரிடப் பெறும்.

157. "பட்டா பதிவுப் புத்தகத் திட்டம்" குறித்த பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. உழவர்கள், தங்கள் நிலங்கள் பற்றிய விவரங்களைச் சரியாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ள, இது ஒரு பெரும் நடவடிக்கையாக அமையும். கிராமப் பகுதிகளில் தடையின்றிக் கடன் வழங்கப் பெறுவதை உறுதி செய்யும் ஒரு சீர்திருத்த நடவடிக்கையாகவும் இருக்கும்.

158. முன்னுரிமை அடிப்படையில், தற்போதுள்ள கிராமக் கணக்கு முறையை எளிமைப்படுத்தும் ஒரு திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். தற்போதைய நடைமுறை, பழைமையானது; வாலாயமான மிகப்பல நடைமுறைப் பணிகளைக் கொண்டது. கிராம நிருவாகத்தை எளிமைப்படுத்துவதன் மூலம், மக்களின் தேவைகளில் மிகுந்த நாட்டம் செலுத்த இது வழிவகுக்கும்.

159. நிருவாகம் பொதுமக்கள் குரலுக்குப் பெரிதும் செவிசாய்த்து உடனுக்குடன் செயல்படுவதாக இருக்கும் வகையில், அலுவலக நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் சீர்படுத்தும்பொருட்டு, செயல்திட்டம் ஒன்றை வகுக்க, முக்கியத் துறைச் செயலாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 'பொதுமக்கள் குறை கேட்கும் நாள்' தொடர்பான அலுவல் நடைமுறைகளில் காணும் குறைபாடுகளைப் போக்கி, நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவது பற்றியும், இக்குழு ஆராய்ந்து வருகிறது. இக்குழு பல்வேறு இடங்களுக்கும் நேரில்

சென்று பார்வையிட்டு, பின்னர் தமது அறிக்கையை விரைவில் இறுதியாக்கும். இக்குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயலுவோம்.

160. பணியாளர்கள் ஒரு துறையிலிருந்து பிறிதொரு துறைக்கு எளிதில் செல்லும் வகையில், பணியாளர் விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குவது பற்றி நாங்கள் ஆய்வு செய்ய இருக்கிறோம். இப்போது இந்த நடைமுறைகள் காரணமாக, பலவேளைகளில் ஒரு துறையில் உள்ள உபரிப் பணியாளர்களை வேறு ஒரு துறைக்கு எளிதில் அனுப்பிப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. ஒருதுறைப் பணியாளர் பிற துறைகளுக்கு எளிதில் சென்று பணியாற்ற இயலும் வகையில், இந்த நடைமுறை ஏற்பாட்டை எளிமையாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள இருக்கிறோம்.

161. மாவட்ட அளவில் திட்டமிடுவதைப் பரவலாக்குவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்திட நாங்கள் முடிவு செய்துள்ளோம். கடந்த பல ஆண்டுகளில் அரசு அலுவல்கள் அதிகரித்துள்ளதாலும், அதற்கேற்ப வரவு செலவுத் திட்டத்தில் திட்டமதிப்பீட்டு அளவு கணிசமாக உயர்ந்துள்ளதாலும், திட்டமிடும் நடைமுறையைச் செம்மைப் படுத்துவது பற்றி பரிசீலிக்கவுள்ளோம். இதற்கு முன்னர், அடிப்படைநிலையில் திட்டமிடும் பிரிவு, வட்டார அளவில் இருக்கலாம் என்று கருதப்பட்டது. இது பற்றி நாங்கள் ஆராய்ந்து, மாவட்ட அளவில் திட்டம் வகுப்பதே சிறந்தது என்று முடிவு செய்துள்ளோம். மாவட்டத் திட்டம் தயாரிக்கும் பொறுப்பு மாவட்ட வளர்ச்சி மன்றத்திடம் விடப்படும். இதற்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் உதவிபுரிவார்கள். வட்டார அளவிலும் ஊராட்சி அளவிலும் போடப்படும் திட்டம், மாவட்டத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

வேலைவாய்ப்பு

162. கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நடப்பாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மனநிறைவளிக்காத சூழ்நிலையில் வேலைவாய்ப்பு நிலைமை, அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. தொழில் நுட்பத்தின் முன்னேற்றம், உலக நாடுகளின் பொருளாதாரத்துடன் இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைத்தல் ஆகியவையும்கூட, வேலைவாய்ப்பு வசதிகள் குறித்து ஐயப்பாட்டினை எழுப்பியுள்ளன. இந்தச் சிக்கல் வாய்ந்த நிலையைப் புதிய முன்னேற்ற நிலைமையுடன் சரிக்கட்டிச் செல்வதில் சில இடர்ப்பாடுகள் இருக்கலாம்; அவற்றை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. வேலைவாய்ப்பு குறித்த மாற்றுத் திட்ட அணுகுமுறை ஒன்றை உருவாக்குவது அவசியமாகிறது.

163. வேளாண்மை வணிக வளர்ச்சியை மேம்படுத்த ஒரு அமைப்பு ஏற்படுத்துவது குறித்து மத்திய நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டத்தில் தமிழ்நாடு சேர்க்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில், வேலைவாய்ப்புக்களை அதிகப்படுத்தக்கூடிய வகையில் வேளாண் வணிகத்தில் அதிக நிறுவனங்களை மேம்படுத்தவும் திட்ட அணுகுமுறை அமையவேண்டும். வல்லுநர்களது உதவியுடன், இத்திட்டத்தை நாம் தொடங்க இருக்கிறோம்.

164. நடப்பாண்டில் பரவலாக வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த நாம் பல்வேறு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். ஒரு இலட்சம் பேருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதியினை அளிக்க, கிராமத்தொழில் துணைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதியினை அளிக்க ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கியுள்ளார்.

ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியளிக்கும் தனித்திட்டத்தினால் 65,000 பேர் பயனடைவர். இத்திட்டங்கள், மேலும் வேலைவாய்ப்பளிக்க வரும் ஆண்டிலும் தொடரும். பெரிய அளவில் வேலைவாய்ப்பளிக்கும் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு, பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் நடவடிக்கைகளைச் சமாளிப்பது என்பது நமது திட்ட அணுகுமுறையைச் சேர்ந்த ஒன்றாகும்.

165. கிராமப்பகுதிகளில், குறிப்பாக நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில், பல்வேறு ஊரகப்பணித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்பது ஒரு பெரும் திட்டமாகும். சிறப்புத்தன்னிறைவுத்திட்டம் ஒன்றையும் நாம் செயல்படுத்தி வருகின்றோம். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1992-93ல் குறைக்கப்படக்கூடும் என்பது நமக்குக் கவலையை அளித்துள்ளது. இதற்குத் தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து (National Renewal Fund) துணை நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளித்துள்ளார். ஊரகப் பணித் திட்டங்களால், பெரும்பாலான கிராமப்புற ஏழை, எளிய மக்கள் குறைந்தளவுக்காவது ஊதியங்களைப் பெற்று வருவதால், இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை, மத்திய அரசு குறைக்காமல் இருக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

166. விலை உயர்வால் ஏற்படக்கூடிய பாதகமான நிலையைச் சமாளிப்பதற்கான நம் முயற்சியின் ஒரு பகுதியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய உறுதியான வேலைவாய்ப்புத் திட்டமொன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். மகாராட்டிர மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் மாதிரியில் வகுக்கப்பட்டுள்ள இத்திட்டம், முதல் கட்டமாக, தருமபுரி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், புதுக்கோட்டை மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். பல்வேறு திட்டப்பணிகளின் கீழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து விரிவான திட்டம் ஒன்று தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும் வகையில், இப்பணிகள், வேளாண்மைப் பருவ நிலைகளுக்கு ஏற்ப வகுக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றிலும் ஒருவருக்காவது உத்தரவாத வேலைவாய்ப்பு அளிக்க முயற்சி மேற்கொள்ளப்படும். அவர்கள் அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொண்ட பிறகு, திட்டம் தொடங்கிய உடன், நாள் ஒன்றுக்குத் தினக்கூலி ரூ.14 கிடைக்கும் வகையில் முறையாக வேலை கொடுக்கப்படும். குறிப்பிட்ட பகுதியில் திட்டம் தொடங்கிய பின் தொடர்ந்து 7 நாட்களுக்கு வேலைகொடுக்க முடியாமலிருக்கும்போது நாள்

ஒன்றுக்கு குறைந்த அளவு கருணைத்தொகை ரூ.2 வழங்கப்படும். வரும் ஆண்டில், இத்திட்டத்திற்காக முதற்கண் சிறப்பு ஒதுக்கீடாக ரூ.10 கோடி ஒதுக்கியுள்ளோம். இத்திட்டத்திற்கும்,தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி நல்குமாறு மத்திய அரசை வலியுறுத்த இருக்கிறோம். அவர்களிடமிருந்து இந்த உதவி கிடைக்குமென்பதில் எனக்கு ஐயமேதும் ஏற்படவில்லை.'

அரசுப் பணியாளர்களுக்கான நன்மைகள்

167. ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்த கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலனை செய்யும் பணியை நாம் அலுவலர் குழு ஒன்றிடம் ஒப்படைத்துள்ளோம். பல்வேறு பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விரிவாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். குழுவின் அறிக்கையும் தற்போது அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் மீது அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

168. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள 2.15 இலட்சம் பகுதிநேரப் பணியாளர் உட்பட, மொத்தம் 2.72 இலட்சம் பகுதிநேரப் பணியாளர்கள் உள்ளனர் நான் முன்னரே கூறியுள்ளபடி இந்தப் பகுதிநேரப் பணியாளர்கள் அகவிலைப்படி உயர்வுக்குத் தகுதியுடைவர் அல்லர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள பகுதிநேரப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், மதிப்பூதிய தனி உயர்வு ஒன்றை நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். மாதமொன்றுக்கு ரூ.150 க்கும் அதிகமாக மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர்களுக்கும், மாதமொன்றுக்கு ரூ.150 க்கும் குறைவாக மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர்களுக்கும் முறையே மாதமொன்றுக்கு ரூ.20, ரூ.10 மதிப்பூதியத் தனி உயர்வு ஒன்றை இவ்வரசு வழங்கும். இதற்காகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.1.35 கோடியாக இருக்கும். உள்ளாட்சி மன்றங்களின் பகுதிநேரப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும்.இது, 57,000 பகுதிநேரப் பணியாளர்களுக்கு பயன் அளிக்கும். இந்த மதிப்பூதியத் தனி உயர்வு 1-4-1992 முதல் செயலுக்கு வரும்.

169. அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடிய பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். பல்வேறு சம்பள நிலைகளில் உள்ளவர்கள் செலுத்தத்தக்க குறைந்த அளவு பங்குத் தொகையின் அளவு, கடந்த முறை 1976 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதாகும்: சம்பள வீதங்களிலும், ஊதியங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையொட்டி, இவற்றையும் திருத்தி அமைக்க வேண்டியுள்ளது. ஊதிய உயர்வைக் கருதிப் பார்க்கையில், வருங்கால வைப்பு நிதியில் வைப்பீடு செய்யப்பட வேண்டிய மாதாந்தர குறைந்த அளவு சேமிப்புத் தொகை அளவைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இது வருமான வரிச் சட்டத்தின்கீழ் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள

- **ரூ.50 கோடி செலவிலான திட்டங்களுக்கு அனுமதி வழங்க நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி செயற்படுத்தப்படும்.**
- **நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கெனத் தனிப்பிரிவு ஒன்று நகராட்சிகள் ஆணையகத்தில் ஏற்படுத்தப்படும்.**

திருத்தங்களை ஒத்ததும் ஆகும். இக்கருத்தைப் பணியாளர் சங்கங்கள் வரவேற்றுள்ளன. எவ்வித இடர்ப்பாடும் இன்றி இதிலிருந்து தற்காலிகமாகப் பணம் பெறுவதை எளிதாக்க உள்ளோம்.

170. வீடுகட்டுவதற்கான முன்பணம் வேண்டி அரசுப் பணியாளர்களிடமிருந்து கணிசமான அளவில் கோரிக்கைகள் வருகின்றன. வீடு கட்டுவதற்கான முன்பணம் குறித்த ஒதுக்கீட்டை நடப்பாண்டு அளவான ரூ.18.89 கோடியிலிருந்து வருமாண்டிற்கு ரூ.25 கோடியாக உயர்த்தியுள்ளோம். அரசுப் பணியாளர்கள், ஏற்பளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற இப்போது வகை செய்துள்ளோம். இந்த வகைக் கடன்களுக்கான வசூல் தொகை, சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யும் வகையில் இருக்க வேண்டுமென இந்த நிறுவனங்கள் வலியுறுத்தின. ஏற்பளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து வீடு கட்டுவதற்கான கடனை அரசுப் பணியாளர்கள் பெறும் வகையிலான இந்த நடைமுறை ஏற்பாட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

171. சிலவகையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் கணினியைச் சொந்தமாக வாங்க உதவும் பொருட்டும் நாம் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளோம். இது, அவர்கள் தங்களுடைய பணியைச் சிறந்த திறமையுடன் செய்வதற்குத் துணைபுரியும்.

172. அரசு ஊழியர்களுக்குக் கிடைத்துவரும் விடுப்பு பயணச் சலுகையின்கீழ், அரசு பயணச் செலவை மட்டுமே ஏற்றுவருகிறது. இதுபோல பயணம் செல்லும்பொழுது அரசு ஊழியர்கள் நல்ல இடவசதி பெறுவதில் இடர்ப்பாடுள்ளது. இனி, இதன்பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின்மூலம் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றுவரும் பல்வேறு சுற்றுலாப் பயணத் தொகுப்பு ஏற்பாடுகள் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும். இந்தச் சுற்றுலாப் பயணத் தொகுப்பின்கீழ், போக்குவரத்து வசதியும் தங்கும் இடவசதியும் கிடைக்கும்.

கடன் திட்டம்

173. முன்னுரிமைத் துறைகளுக்குத் தடையின்றிக் கடன் வழங்கப்படுவதன் முக்கியத்துவம் பற்றி, எனது கடந்த வரவு செலவுத் திட்ட உரையில் சுட்டிக்காட்டினேன். நடப்பாண்டில், வேளாண்மை, மற்றும் அதனைச் சார்ந்த பணிகள், தொழில்கள், பணிகள் ஆகியவற்றிற்கான ரூ.2154.84 கோடி கடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்களின் கீழ், ஏழை எளியவர்களுக்குத் தடையின்றிக் கடன் கிடைப்பதை, இத்திட்டம் உறுதி செய்யும்.

174. திருத்தியமைக்கப்பட்டுள்ளவாறு, மொத்தக் கடனில், 10 சதவீதம் மட்டுமே முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படலாம் என்று நிதி ஏற்பாட்டுக்குழு தெரிவித்த பரிந்துரைகள் குறித்து, நாம் பெரிதும் கவலை கொள்கிறோம். தற்போது முன்னுரிமைத் துறைக்கு அளிக்கப்பட்டுவரும் கடன், மொத்தக் கடன் அளவில், 40 சதவீதம் ஆகும். கடந்த காலத்தில், வகை தொகைமுறையின்றிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதே, இந்நிலைமைக்குக் காரணமாகும். முன்னுரிமைத் துறைகளுக்கு நிதி வழங்கும் வகையில், வங்கி அமைப்புகள் ஊக்கப்படுத்தப்படவேண்டும். அதே நேரத்தில், முன்னுரிமைத் துறைகளுக்குத் தடையின்றிக் கடன் வழங்குவதில் கடுமையான அளவுக்குக் குறைவு ஏற்படக்கூடாது. இது குறித்து தேசிய அளவில், கருத்தினை உருவாக்குமாறு நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள இருக்கிறோம். ஏழை எளியவர்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கடன் கிடைக்க இயலும் வகையில், பெரும்பாலான மாநில அரசுகள் அவர்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றன. திடீர் மாற்றம் ஏதேனும் செய்யப்படுமானால், அது பெரிதும் துன்பமளிக்கக் கூடும்.

175. கடந்த காலத்தில் கடன்களைத் தள்ளுபடி செய்ததன் மூலம், இம்மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டினைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுக் கடன்கள் மொத்தம் ரூ.289 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கெதிராக, மத்திய அரசிடமிருந்து ரூ.218.29 கோடி மட்டுமே வரப்பெற்றது. மீதமுள்ள தொகை இன்னும் வரப்பெறவில்லை. பெற்ற தொகையில் 50 சதவீதத்தை 3 ஆண்டுத் தவணைகளில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும். முதல் தவணைத் தொகை 1991 மார்ச்சில் செலுத்தப்பட்டது. இரண்டாவது தவணைத் தொகை ரூ49.06 கோடி 1992 மார்ச்சில் செலுத்தப்பட வேண்டும். இத்தவணைத் தொகையைச் செலுத்துவதை ஒத்திப்போடுமாறு மாண்புமிகு மத்திய நிதியமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இம்மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள மிகுந்த நிதி இடர்ப்பாட்டினைக் கருத்தில் கொண்டு, இந்த வேண்டுகோள் மீது விரைந்து முடிவு எடுக்கப்படும் என்று நம்புகிறோம்.

176. வழக்கத்திற்கு மாறாக, அடிக்கடி இப்படிக் கடன் தள்ளுபடி செய்தது, கடன் ஏற்பாடு முழுமைக்கும் தீங்குபயப்பதாக முடிந்துள்ளது. எனவே அடிக்கடி ஏற்படுகிற பயிரிழப்புகளிலிருந்து உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையான ஏற்பாடு ஒன்றினைக் கொண்டுவர வேண்டும். உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நிலைத்த ஏற்பாட்டிற்கு வகை செய்யும் தேசியக் கடன் நிவாரண நிதி(NACREF) ஏற்படுத்துவது பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு செய்யவில்லை. நடப்பாண்டில் மழையும் நன்கு பெய்துள்ளது; விளைச்சலும் நன்றாகவுள்ளது; இதைப்போன்ற நல்ல பலன்கிட்டும் ஆண்டுகளிலாவது, விவசாயிகள் கடன்களை அடைக்க முன் வரவேண்டும்; அதன் மூலம், கடன் திட்டத்திற்குச் சீர்குலைவு ஏற்பட்டுவிடாமல் காக்க வேண்டும்.

177. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு விரைவாகவும், முறையாகவும் நிவாரணம் கிடைக்கும் வகையில், தற்போது பொதுக் காப்புறுதிக் கழகம் செயல்படுத்தி வருகின்ற பயிர்க் காப்புறுதித் திட்டம், திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். பயிர்ச் சேதத்திற்கு வழங்கப்படுகிற நிதியுதவிக்கான நடைமுறைகள் திருத்தப்பட வேண்டும். உழவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், பயிர்க்காப்புறுதி திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

178. ஒரு இலட்சம் பேருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகைத் தொழில்கள் துணைத் திட்டத்தை நாம் செயல்படுத்தியுள்ளோம். இத்துணைத் திட்டத்தின் கீழ் நல்ல பயன் கிட்டியுள்ளது. வரும் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம். இத்துணைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படக் கூடிய திட்டவட்டமான பணிகளைக் கண்டறியும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 'நாபார்டு' நிறுவனம் வகுத்தளிக்கும் வள வாய்ப்புகள் இணைந்துள்ள திட்டத்தை நாம் சார்ந்திருப்போம். வரும் ஆண்டில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்கக் கருதியுள்ளோம்.

வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள்

179. நிதிநிலைமை மிகவும் இடர்ப்பாடுடையதாக இருந்தபோது, இவ்வரசு பதவியேற்றது. ரூ.1600 கோடிக்குத் திட்ட ஒதுக்கீட்டின் அளவை ஏற்படுத்த வேண்டிய நிலையில், நம்முடைய மொத்தப் பற்றாக்குறை, ரூ. 1220 கோடியாக இருந்தது; இந்நிலைமையைச் சமாளிப்பது என்பது உண்மையிலேயே பெரும் இடர்ப்பாடுடையதாகும். அரிசி, பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியதானது, நம்முடைய பணியின் கடுமையை

இருமடங்காகப் பெருக்கியுள்ளது. 1991-92 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீடு குறைக்கப்படமாட்டாது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னரே தெளிவுபடுத்தியுள்ளார். நிதிநிலைமையைச் சரிசெய்யவும், தமிழகத்தை மீண்டும் வளர்ச்சி வழியில் இட்டுச்செல்லவும் துணிவான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகியது.

180. வருவாய்க் கணக்கில், மொத்த வரவுகள் ரூ. 5347.34 கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூ.6249.83 கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப்பற்றாக்குறை ரூ. 902.49 கோடியாகும் என்பதையும், 1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஏனைய கணக்குகளில் உள்ள நிகர பற்றுவரவுகளையும், ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ரூ. 207.94 கோடி பற்றாக்குறையையும் சேர்த்து, மொத்தப் பற்றாக்குறை, ரூ.785.35 கோடியாகும். இப்பற்றாக் குறையை ரூ. 575.35 கோடியாக குறைப்பதற்கான நடவடிக்கைகளை நான் அறிவித்திருந்தேன். முன் எப்போதும் கண்டிராத வகையில் ஏற்பட்டுள்ள நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசு நிதியுதவி அளிக்க முன்வரும் என நாங்கள் பெரிதும் நம்பியிருந்தோம்.

181. இடர்ப்பாடுடையான நிதிநிலைமையைச் சமாளிக்க மத்திய அரசிடமிருந்து தனி நிதியுதவி எதனையும் நாங்கள் இதுவரை பெறவில்லை. இந்நிதிநிலைமையைச் சீர்செய்ய விரைவாகவும், செம்மையாகவும் செயல்படவேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் ஆட்பட்டோம். வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ.5879.52 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.6529.57 கோடியாகும் என்பதையும் இதில் பற்றாக்குறை ரூ.650.05 கோடியாகும் என்பதையும் 1991-92 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஆண்டின் தொடக்கத்தில் இருந்த பற்றாக்குறையையும், ஏனைய கணக்குகளில் உள்ள நிகரப் பற்று வரவுகளையும் சேர்த்து, 1991-92 ஆம் ஆண்டின் முடிவில் இறுதி நிலைப்பற்றாக்குறை ரூ.401.47 கோடியாகும்.

182. 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க்கணக்கில் வரவுகள் ரூ.6446.54 கோடி எனவும் வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ.7255.27 கோடி எனவும், இதன் காரணமாகப் பற்றாக்குறை ரூ.808.73 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய கணக்குகளில் உள்ள நிகரப் பற்றுவரவுகளைக் கருத்தில்கொண்டு, 1992-93ல் பற்றுவரவுகளில் ஏற்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ.217.62 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1991-92 திருத்த மதிப்பீடுகளின்படியான இறுதிநிலைப் பற்றாக்குறை ரூ.401.47கோடியுடன் சேர்த்து 1992-93 ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ.619.09 கோடியாக இருக்கும்.

183. 1992-93 ஆம் ஆண்டில், அனைத்துப் பற்றுவரவுகளின் நிகரப்பற்றாக்குறையையும் கட்டுப்படுத்துவதில் நாம் வெற்றிபெற்றுள்ள அதே சமயம், நடப்பாண்டில், நாம் சந்தித்துள்ள இடர்ப்பாடுகள், வரும் ஆண்டில் தொடர்ந்து நமக்குக் கடுமையான பிரச்சினையை உண்டாக்கும். தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏற்பட்ட ஈடுசெய்யப்படாத பற்றாக்குறைத் தொகையான சுமார் ரூ.80 கோடி இந்த மொத்தப் பற்றாக்குறைத் தொகையான ரூ.619.09 கோடியில் அடங்காது.

184. நாங்கள் ஒட்டுமொத்த நிதி நிலைமையைக் கவனமுடன் ஆராய்ந்துள்ளோம். நடப்பாண்டில் நாம் சந்தித்துள்ள மிகவும் கடுமையான நிதிநிலைமையைச் சமாளிக்க, மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி நமக்கு அவசியமாகும். இக்கட்டான இந்த நிதிநிலைமையைச் சமாளிக்கத் தொகுப்பு நிதியுதவி பெற வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப்பிரதமரையும், மாண்புமிகு மத்திய நிதியமைச்சரையும் சந்தித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றின்மூலம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நடப்பு நிதியாண்டின் முடிவுக்குள் மத்திய அரசு ஏதேனும் நிதியுதவி வழங்குமென நாங்கள் இன்னும்கூட நம்பிக்கையுடன் தான் இருந்து வருகிறோம்.

185. 1987-88 ஆம் ஆண்டு முதற்கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து வருவாய்க்கணக்கில் பற்றாக்குறை இருந்து வந்துள்ளது. இது மேலும் ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்நிலை, கடன்களைத் திரட்டுவதன்மூலம் சமாளிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் கொடுக்கவேண்டிய வட்டிச்சுமை அதிகரித்து வந்துள்ளது. வருவாயைப் பெருக்க மாநில அரசுகளுக்கு ஒரு சில வழிவகைகளே இருப்பதால், வருவாயைப் பெருக்குவது இடர்ப்பாடான ஒன்றாக உள்ளது. நம்முடைய செலவைக் குறைப்பதும், இழப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும் ஆன ஒரே வழிதான் உள்ளது. இத்தகைய பின்னணியில், நம்முன் உள்ள பற்றாக்குறையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

186. பல்வேறு உதவித்தொகைகளும், இலவச மானியங்களும் வழங்குவதால் நமக்குப் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்கள் அறிவர். மிக்க ஏழைகளையும், அறவே வசதிவாய்ப்பற்றவர்களையும் பாதிக்கக்கூடிய வகையில், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துள்ளார். அதே நேரத்தில் மிகவும் இடர்ப்பாடான நிதிநிலையாலும், பெருகிவரும் கடன்சுமையாலும் சிக்கித் தவிக்கும் நாம் இனிமேல் செலவுகளின் அதிகரிப்பைத் திரும்பப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

• சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இதற்காக 1992-93-ஆம் ஆண்டில் ரூ.193 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

• தனியார் துறையில் வீடு கட்டும் பணிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

187. நடப்பாண்டில் உணவு உதவித் தொகைக்கான நிதியொதுக்கம் ரூ.346 கோடி என்பதை உறுப்பினர்கள் அறிவர். 1992-93 ஆம் ஆண்டில் உணவு உதவித் தொகையாக வழங்கப்படவேண்டிய தொகை ரூ.503 கோடியென்று வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டுள்ளோம். இதில் அடுத்த ஆண்டிற்கான தொகை ரூ.343 கோடியும் நடப்பாண்டில் கொடுக்க இயலாமல் நிலுவையாக உள்ள தொகை ரூ.160 கோடியும் அடங்கும். இத்தகைய சூழ்நிலையில் பொது விநியோக முறையில் வழங்கப்படும் மிகவும் மலிவு விலையிலான அரிசி ஏழை எளியவர்களுக்கு மட்டும் கிடைக்கும் வகையில் இந்த முறையை மாற்றி அமைப்பது குறித்து நாம் கருதிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

188. அரசுச் செலவில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட வேண்டியுள்ளது. வரும் ஆண்டில் ரூ.55 கோடி மிச்சப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளக் கருதியுள்ளோம். இதன்பொருட்டு, பலவகைப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கொண்டுவரப்படும். சிக்கன நடவடிக்கைகள், மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்துவது குறித்தும், பயணச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது குறித்தும், மேற்கொள்ளப்படும். உற்பத்தி நோக்கில் அமையாத செலவுகள் அனைத்தையும் கண்டறிந்து களைவதற்காகச் செய்யும் செலவிற்குரிய பயன் கிட்டும் அடிப்படையில், வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் முறையை நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவோம். இத்தகைய சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம், பற்றாக்குறையை ரூ.564.09 கோடி என்ற அளவிற்குக் கொண்டு வருவோம்.

189. பல நிதியுதவித் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கும் அதே சமயத்தில், இந்தப் பற்றாக்குறையை ஓரளவிற்காவது குறைக்க ஏனைய சில நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது.

190. மிக்க ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் அளிக்க நாம் எப்போதும் முயன்று வந்துள்ளோம். மாநில வளர்ச்சிக்கு உதவ முடிந்த வசதியுடையவர்கள் மட்டுமே தங்கள் பங்கிற்கு உரியதைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். பொருளாதாரம் விரைந்த வளர்ச்சியைப் பெற நம்முடைய வரிவிதிப்புக் கொள்கைகளும், வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படும்.

வரிகள்

191. நிதி நிலை அறிக்கையில் ஏற்படும் பற்றாக் குறையை ஈடு கட்டுவதற்கு நிதி அமைச்சர்கள் வழக்கமாக விற்பனை வரியைத்தான் நாடுவார்கள். நான் சில பொருட்கள் மீதான விற்பனை வரி விகிதங்களைக் குறைக்க முடிவு செய்துள்ளேன். விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கவும் அதே நேரத்தில் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கவும் நாம் முயன்று வருகிறோம்.

192. இல்லத்தரசிகள் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க ஆவலோடு அரசிடமிருந்து உதவி எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே சில வீட்டு உபயோகப் பொருள்களின் மீதான வரி விகிதங்களைக் குறைக்க முடிவு செய்துள்ளோம்.

* மளிகைப் பொருள்களின் (அட்டவணை I மற்றும் II ல் சேராதவை) மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.
* வர்த்தக வணிகப் பொருள் குறிகள் சட்டத்தின் (Trade and Merchandise Marks Act 1958) கீழ் பெயர் பதிவு செய்யப்படாத நெய் மற்றும் இதரப் பால் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.
* வெந்தயம் மற்றும் கிராம்பு நம்முடைய உணவில் தினந்தோறும் சேர்க்கப்பட்டு வருகிறது. இவைகள் மீதான வரியை 8 சதவீதத்திலிருந்த 5 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்துள்ளோம்.
* குச்சிக் கிழங்கு வறுவல் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.
* நமது வீடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சேமியா மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

193. குங்குமப் பொடிக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதரக் குங்குமங்கள் மற்றும் கண் மை இவற்றிற்குத் தற்பொழுது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. கண் மைக்கும் எல்லாவிதமான குங்குமங்களுக்கும் வரி விதிப்பிலிருந்து முழுமையான விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளோம். மகளிர் இதனைப் பெரிதும் வரவேற்பார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

தற்பொழுது மகளிரிடையே கவரிங் நகைகள் பெரிதும் பரவலாக உபயோகத்தில் உள்ளன. கவரிங் நகைகள் மீதான வரி விகிதத்தை 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைப்பதற்கு முடிவு செய்துள்ளோம். இதையும் மகளிர் பெரிதும் வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

194. லேமினேட் செய்யப்பட்ட (laminated)சாக்குப் பைகளுக்குத் தற்பொழுது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. பெரும்பாலான மற்றச் சிப்பப் பொருட்களுக்கு (packing materials) 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதனையொட்டி லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள் மீதான வரி விகிதம் 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

195. மோட்டார் கார்களுக்குத் தற்பொழுது 5 சதவீத விற்பனை வரி விதிக்கப் படுகிறது. ஆனால் வாடகைச் சிருந்து(Taxi)களுக்கு இது 15 சதவீதமாக உள்ளது. வாடகைச் சிருந்துகளுக்கு இதனை 5 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்துள்ளோம். டிராக்டர்கள் மீதான நுழைவு வரி 12 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்படும். பின்புறத்தில் சுமை ஏற்று இயந்திரம் (rear loader), சரக்கைக் கவிழ்த்துக் கொட்டும் வண்டி (dumper), மண் அகற்றும் ஊர்தி(Scraper) இவற்றின் மீதான வரி 9 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

196. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பச்சை உரிவைகள், தோல்கள்(hides and skins) மற்றும் பதனிடப்பட்ட உரிவைகள், தோல்கள் மீதான வரி விகிதம் திருத்தி அமைக்கப்பட்டது. பச்சை உரிவைகளும், தோல்களும்

பெருவாரியான இனங்களில் பிற மாநிலங்களில் வாங்க நமது மாநிலத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகப் பதனி உரிவைகள், தோல்கள் மீது சலுகை முறையில் 1 சதவீ விதிக்கப்படும்.

197. இதுவரை குறிப்பிட்ட சலுகைகளினால் அ ஆண்டுக்குச் சுமார் ரூ.4 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.

198. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வ மீது தற்போது கடைசிக் கட்டம் தவிர்த்து மற்ற ஒவ் கட்டத்திலும் 25 சதவீத விற்பனை வரி விதிக்கப் படுகிறது. 30 சதவீதமாக உயர்த்தப்படும்.

199. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 195 3(3)-ன் கீழ் மூலப் பொருள்களுக்கு படிவம் XVII கீழ் உறுதி கொடுக்கப்பட்டால், சலுகை விகிதமான 3 சதவீதம் விதிக்கப்படுகிறது. கருப்பஞ் சாற்றுக் கசண்டுக்கு(Mol பொதுவாக 25 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படுதிறது. சாராயம் காய்ச்ச முற்படுவோர் இச்சலுகையைத் த முறையில் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே விற்பனை சட்டப் பிரிவு 3(3)ன் கீழ் இதற்கு அளிக்கப்படும் நீக்கப்பட்டு, 25 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படும்.

200. கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் மீதா விகிதம் குறித்த நிலையைத் தெளிவாக்க உத்தேசித்துள் தற்பொழுது கோதுமைக்கு மட்டுமே வரி விலக்கு அளிக்க வருகிறது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கும். கோ பொருட்களான கோதுமை மாவு, ரவை, மைதா, முதலானவற்றிற்குத் தொடர்ந்து 4 சதவீத விற்பனை விதிக்கப்படும்.

201. தற்பொழுது ஆண்டொன்றிற்கு ரூ இலட்சத்திற்கு மேல் மொத்த விற்பனை செய்கின்ற ஒட்டல்க உணவு விடுதிகளிலும் உணவு மற்றும் குளிர் பானங்கள் சதவீத விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந் விலக்கு அளவு மிகவும் அதிகமெனக் கருதப்படுகிறது. கர் மற்றும் ஆந்திர மாநிலங்களில் வரி விலக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2 இலட்சம் ஆகும். எனவே மாநிலத்திலும் இந்த வரி விலக்கு ஆண்டொன்றுக்கு ரூ இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகக் குறைக்கப்படும்.

202. மக்களிடமிருந்து வணிக வரி வசூலிக்கப் பட் நிலையில், சில இனங்களில் வரி விதிப்பு குறித்து நீதி மன்ற வழக்குகள் தொடரப் படுகின்றன. இத்தகைய இன வசூலிக்கப்பட்ட வரியை அரசாங்கத்திடம் செலுத்துவ முறையானது. இதனை அரசிடம் ஒப்படைக்க வகை செய்யு புதிய சட்டப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

203. வணிக வரி ஆணையாளருக்குக் கீழ்ப்பட்ட அதிகாரியாலும் இடப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தை வணிக வரி ஆணையாளருக்கு அளிக்கும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை மாற்றி அமைக்க உள்ளோம். கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்க இது அவசியமாகிறது.

204. விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு ஒன்று அண்மையில் உருவாக்கப் பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு விற்பனை வரி அமைப்பு மற்றும் விற்பனை வரி விதிப்பு ஆகியவற்றை முழுமையான அளவில் ஆய்வு செய்யும் வகையில் விரிவான ஆய்வு எல்லை வகுக்கப்பட்டுள்ளது. கூடுதல் விற்பனை வரி என்பது வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவின் மீதான வரியாகும். இதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கக்கூடாது. இதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இக் கோரிக்கை விற்பனை வரிச் சீர்திருத்தக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும்.

205. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 50 கன சென்டி மீட்டர் கொள்ளளவு மற்றும் அதற்குக் குறைவான இயந்திர இரு சக்கர வாகனங்கள் மீதான வாகன வரிக்கு முற்றிலும் விலக்கு அளிக்கப் பட்டது. மத்திய அரசு இயந்திர இரு சக்கர வாகனங்கள் மீது கொள்ளளவின் அடிப்படையில் ஆயத் தீர்வையை மாற்றி அமைத்துள்ளது. இம்மாற்றத்தைக் கருத்தில் கொண்டு நமது மாநிலத்தில் உள்ள வரி விகிதங்களைக் கொள்ளளவின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மேலும் சீரமைக்க உத்தேசித்து உள்ளோம்:

இயந்திர இரு சக்கர வாகனத்தின் கொள்ளளவு (க.செ.மீ.)	தற்போது விதிக்கப்படும் வரி விகிதம்	புதிய வரி விகிதம்
	(ஆண்டொன்றுக்கு)	
	ரூபாய்	ரூபாய்.
50க்கு மேல் 75 வரை	150	125
75க்கு மேல் 170 வரை	150	180
170க்கு மேல் 300 வரை	200	210
300க்கு மேல்	300	210

இந்த மாற்றங்களுக்கேற்ப புதிய வாகனங்கள் மீதும், பழைய வாகனங்கள் மீதும் விதிக்கப்படும் ஆயுட்கால வரிகளும் மாற்றி அமைக்கப்படும்.

206. மோட்டார் வாகன வரி அமைப்பில் ஒரு சிறிய மாறுதலைச் செய்யக் கருதியுள்ளோம். 700 கிலோவுக்குக் குறைவான எடையுள்ள மோட்டார் வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரி ஆண்டொன்றுக்குத் தற்போது ரூ.300/- என்ற அளவில் உள்ளது. இனிமேல் இது ஆண்டொன்றுக்கு ரூ.400/- ஆக மாற்றியமைக்கப்படும். இதனையொட்டி நிறுவனங்களுக்குச் சொந்தமான இதே பிரிவைச் சார்ந்த மோட்டார் வாகனங்கள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூ.600 லிருந்து ரூ.800 ஆகவும், இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூ.900 லிருந்து ரூ.1200 ஆகவும் மாற்றி அமைக்கப்படும்.

• சிறுகுடும்பக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதை ஊக்குவித்து, பெண் குழந்தைகளுக்கு நன்மை அளிக்கும் திட்டம் தொடங்கப்படும். இதற்கு ரூ.4 கோடி ஒதுக்கப்படும். இதன் மூலம் 20 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும்.

207. பேருந்து வாகன வரி மீதான மேல் வரி தற்போது கிராமப்புறங்களில் இயங்கும் பேருந்துகளுக்கும் விரைவுப் பேருந்துகளுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற விகிதத்தில் வசூலிக்கப்படுகின்றது. இனிமேல் பேருந்து வாகன மேல் வரியானது அடிப்படை வரியில் 25 சதவீதம் என இருக்குமாறு திருத்தி அமைக்க உத்தேசித்துள்ளோம். மாநகரப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் தவிர மற்ற எல்லாப் பேருந்துகளுக்கும் இந்த வரி விகிதம் பொருந்தும்.

வாகன வரி விதிப்பில் உள்ள மாற்றங்கள் அனைத்தும் 1.4.1992 முதல் அமலுக்கு வரும்.

208. சில குறிப்பிட்ட வகையான பத்திரங்கள் மீதான முத்திரைத் தாள் வரி விகிதத்தை மாற்றி அமைக்க உத்தேசித்துள்ளோம். தற்போது சிலவகையான குத்தகை, உடைமை இல்லாத அடமானம், பாகப் பிரிவினை, விடுதலைப் பத்திரம், குடும்ப அங்கத்தினருக்குள் ஏற்பாடு ஆவணம் முதலானவற்றின் மீது விதிக்கப்படும் 3 சதவீத முத்திரைத் தாள் வரி 4 சதவீதமாக மாற்றியமைக்கப்படும். இதர சில பத்திரங்களுக்கு, நிலைப்பட்ட விகித்தில் முத்திரைத் தாள் வரி விதிக்கப்படுகின்றது. இதனைத் தகுந்த முறையில் மாற்றியமைக்க இருக்கிறோம். கடன் ஏற்பளிப்பு, கடன் உறுதி ஆவணம், மாற்று முறி, பங்கு மாற்றம், ரசீதுகள், கப்பல் சரக்குப் பட்டி முதலான நடவடிக்கைகளின் மீது வரி விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மாநிலங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் இந்த வரி விகிதங்களை மாற்றி அமைக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

209. உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமையை நாம் உடனடியாகக் கவனித்தாக வேண்டும். தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வசதி மற்றும் துப்புரவு போன்ற அடிப்படைப் பணிகளைக் கூட செய்ய இயலாத அளவிற்கு அவற்றின் நிதி நிலை பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே நிதி நிலையை முழுவதுமாகச் சீரமைக்க வேண்டியுள்ளது. 1958-ல் இருந்து உள்ளாட்சி வரி, நில வரியில் ரூபாய்க்கு 45 பைசா என்ற அளவில் இருந்து வருகின்றது. உள்ளாட்சி மேல் வரியும் 1972-ல் இருந்து நில வரியில் ரூபாய்க்கு ரூ.2.50 என்ற அளவில் மாறாமல் அப்படியே உள்ளது. எனவே உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலை நலிவடைந்ததில் வியப்பொன்றும் இல்லை. இதனைச் சரி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

210. உள்ளாட்சி வரி, நிலவரியின்மீது ரூபாய்க்கு 45 பைசாவிலிருந்து ரூ.1-ஆக மாற்றி அமைக்கப்படும். தற்போது கிராமப் பஞ்சாயத்துக்களும் நகரப் பஞ்சாயத்துக்களும் உள்ளாட்சி வரியில் சுமார் 55 சதவீதத்தை மானியமாகப் பெற்று வருகின்றன. இனி இது 75 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். கிராமப் பஞ்சாயத்துக்களும் நகரப் பஞ்சாயத்துக்களும் மக்களுக்குத் தேவையான இன்றியமையாத பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளப் போதுமான நிதி ஆதாரத்தைப் பெற இது வகை செய்யும்.

211. உள்ளாட்சி மேல் வரி தற்போதுள்ள அளவான ஒரு ரூபாய் நிலவரிக்கு ரூ.2.50 என்ற அளவிலிருந்து குறைந்த பட்சமாக ரூ.5/- முதல் அதிக பட்சமாக ரூ.10/-வரை உயர்த்தி வசூலிக்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் இவ்விரு வரம்புகளுக்குள் ஒரு வரி விகிதத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

212. இந்த மாறுதல்கள் 1.7.92 முதல் அமலுக்கு வரும்.

213. ஏற்கனவே கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட தொழில்கள், வணிகங்கள், கைவினைகள் மற்றும் வேலைகள் மீதான தொழில் வரியை விதிக்கத் தேவையான சட்டங்கள் இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ.1500-க்கு கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இந்த வரி விதிப்பு முறையானது குறைந்த வருமானம் உள்ள பிரிவினருக்குக் குறைவாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாத ஊதியம் பெறுவோர்களுக்கு இந்த வரி விதிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்:

வரிசை எண்	மாத வருமானம்	அரையாண்டுக்கான வரி விகிதம் குறைந்த பட்சம் ரூ.	அதிக பட்சம் ரூ.
1.	ரூ.1500ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.2000-க்குள்	30	48
2.	ரூ.2000ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.2500-க்குள்	48	72
3.	ரூ.2500ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.3000-க்குள்	72	120
4.	ரூ.3000ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.5000-க்குள்	120	240
5.	ரூ.5000ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.7500-க்குள்	300	450
6.	ரூ.7500ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.10,000-க்குள்	450	600
7.	ரூ.10,000ம் அதற்கு மேலும் ஆனால் ரூ.15,000-க்குள்	600	900
8.	ரூ.15,000க்கு மேல்	900	990

இதரப் பணியாளர்களுக்குப் பொருத்தமான குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச வரி விகிதம் பற்றிய விவரங்கள் நிறைவேற்றப்படவுள்ள சட்ட முன் வடிவில் அறிவிக்கப்படும். இந்த வரியின் மூலம் வசூலிக்கப்படும் முழுத் தொகையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும். இந்த மாற்றியமைக்கப்பட்ட வரி விகிதம் 1992, ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும்.

214. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் விதிக்கப்படும் சொத்து வரி விகிதம் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்து வருகின்றது. நாட்டின் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு விதமான வரி விகித முறைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இந்த முறைகளைப் பரிசீலித்து நமது மாநிலத்துக்குத் தகுந்த முறை ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டும். சொத்து வரியில் முறையான வரி விதிப்பு விகிதங்கள் குறித்து விரைவில் முடிவெடுக்க ஏதுவாக இருக்கும் வகையில் ஒரு ஆய்வு மேற்கொள்ள விருக்கின்றோம்.

1992-93-ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையில், புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடவை முதல் முறையாக, முழுக்க முழுக்க, ஆவணங்கள் தயாரிப்பும், அச்சிடுதலும் கணினி உதவி கொண்டு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

215. 1992-93 ஆம் ஆண்டில், இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ. 619.09 கோடியாக இருக்கும் என்று நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளேன். செலவுகளைக் குறைக்கச் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அடிப்படையில், இப்பற்றாக்குறை ரூ.564.09 கோடியாகக் குறைக்கப்படும். சற்று முன்னர் நான் அறிவித்த செயற்குறிப்புகளின் மூலம், கூடுதலாக ரூ.70 கோடி நிகர வருமானம் ஈட்டலாம். அதன் பயனாக, 1992-93 ஆம் ஆண்டு முடிவில் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ.494.09 கோடியாக இருக்கும். மத்திய அரசு அறிவித்துள்ள கூடுதல் நிதித் திரட்டு நடவடிக்கைகளின் வாயிலாக, மாநிலத்தின் பங்கு என்ற வகையில் ஓரளவு கூடுதல் நிதி பெறவும் வாய்ப்பு உள்ளது. இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருந்தபோதிலும், வரும் ஆண்டில் நாம் நமது வாய்ப்பு வளங்களை ஒருங்கு திரட்டி வலுப்படுத்திக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆண்டுதோறும் அதிக அளவிற்குத் தொடரும் வருவாய்ப்பற்றாக்குறைப் பிரச்சினையையும் நாம் சமாளிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

216. கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வருவாய்ப்பற்றாக்குறையும், கணக்கில் கொண்டுவரப்பட்ட தொடக்கப்பற்றாக்குறையும் சேர்ந்து நமக்குத் தொடர்ந்து பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன. குறைந்தது தொடக்கப் பற்றாக்குறையையாவது சரிக்கட்டச், சிறப்பு நிதியுதவி அளிக்குமாறு விடுத்த நம்முடைய வேண்டுகோளை மத்திய அரசு பரிசீலிக்குமென நாம் நம்புகிறோம். அப்போதுதான், அரசின் நிதிநிலையை முழுமையாகச் சரி செய்யும் நிலைமையை நாம் அடையலாம்.

217. ஆண்டுத் திட்டத்திற்குச் சிறப்பு நிதியுதவி அளிக்குமாறு விடுத்த நம்முடைய வேண்டுகோளைப் பரிசீலிக்குமாறு மத்திய அரசை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நபர்வாரி வருமானத்தைத் தேசிய சராசரி நபர்வாரி வருமானத்திற்கும் மேற்பட்டதாக எடுத்துக்கொள்வதால் ஏற்படுகிற பிரச்சினையை, நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். மேற்சொன்ன நபர்வாரி வருமானத்திற்குப் பொருள் விளக்கம் அளிப்பதில் உண்மையான சிக்கல்கள் உள்ளன. மத்தியத் திட்டக்குழுவானது இப்பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஒன்று, தேசிய சராசரிக்குக் குறைவாக நபர்வாரி வருமானம் உள்ள மாநிலங்களுக்குரிய 20 சதவீதத் தொகுப்பில் தமிழ்நாட்டிற்கு ஒரு பங்கை அனுமதிக்க வேண்டும்; அல்லது, தனிப்பிரச்சினைகளுக்குரிய பங்கான 7.5 சதவீத நிதியில் தமிழ்நாட்டிற்குத் தனி ஒதுக்கீடு ஒன்றை வழங்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஏழாவது திட்டக்காலத்தில் அத்தகைய நிலைமை ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிற்குத் தனி ஒதுக்கீடு ஒன்று வழங்கப்பட்டது என்பதையும் நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

218. கடற்கரைஎல்லைப்பகுதி மேம்பாட்டிற்காக, 1991-92ல் தமிழ்நாட்டிறகு மத்திய திட்டக்குழு ரூ.15 கோடி ஒதுக்கியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு குறித்துத் தெரிவிக்கப்படவில்லை. நம்முடைய கடற்கரை எல்லைப் பகுதியில், பாதுகாப்பு முக்கியத்துவத்தைக் கருதி, சிறப்புப்பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறோம். இந்தக்கடற்கரை எல்லைப் பகுதியில் வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளைச் சமாளிக்கும் பிரச்சினை உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகிறது. 1992-93ல் இதற்காகத் திட்டக்குழு தனி ஒதுக்கீடு செய்யும் என நம்புகிறோம்.

219. திட்ட வருவாய் மானியங்கள் தொடர்பான ஒன்பதாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளில் சமன்பாடற்ற நிலை உள்ளது என்பது குறித்து எடுத்துரைக்க விழைகிறேன். ஒன்பதாம் நிதிக்குழு மட்டும், நியாயமான முறையில் கருதிப்பார்த்திருந்தால், தமிழ்நாட்டில் மிக அதிகமான அளவிற்குத் தொடரும் வருவாய்ப் பற்றாக்குறை இன்னும் குறைவாகவே இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். 1990-95 வரையிலான ஐந்தாண்டு கால அளவிற்குத் தமிழ்நாட்டிற்குத் திட்ட வருவாய் மானியமாக வெறும் ரூ.43 கோடி மட்டும் ஒதுக்கியுள்ளதன் மூலம், பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. 1992-93ல் நிலவக்கூடிய நிலையைப் புதிதாக எடுத்துக்கொண்டு, நாம் பெறுவதற்குரிய திட்ட வருவாய் மானிய அளவு கணக்கிடப்படுமெனில், நமக்கு அதிக அளவிற்குப் பங்குத்தொகை கிடைக்கவியலும். ஒன்பதாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளைத் திட்டவட்டமாக முடிவு செய்யப்பட்டுவிட்ட ஒன்றாக எடுத்துக்கொள்ளாமல், மத்திய திட்டக்குழு, இப்பிரச்சினையை மறுஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. திட்ட வருவாய் மானியம் அளிப்பதன் செயல்பாடு, மனநிறைவளிப்பதாக இல்லையென்பதே நம் கருத்தாகும்.

220. கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டுமென்ற நம் கோரிக்கையை, மத்திய அரசு, அதன் நிதிநிலைமை சற்று மேம்பட்டிருக்கும் இந்த நேரத்திலாவது தீவிரமாக பரிசீலிக்கும் என்று நம்புகிறோம். நடப்பாண்டில் நிதியுதவித் தொகுப்பு ஒன்று அளிக்கப்படவேண்டுமென்பதே, நம்முடைய திட்டவட்டமான வேண்டுகோளாகும். அப்போதுதான், நடப்பாண்டின் இறுதியில் ஏற்படக்கூடிய பற்றாக்குறை சரிக்கட்டப்பட முடியும். அத்தகைய நிதியுதவி கிடைக்குமென நம்புகிறோம்.

221. இப்போது நான் இந்த வரவு செலவுத்திட்ட அறிக்கையின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும் அவரது சீரிய தலைமையில் இயங்கிவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியுந்தான் தமிழ்நாட்டை எதிர்நோக்கியிருந்த தீவிர அறைகூவல்களை சமாளிக்கமுடியும் என்றும், தமிழகத்தை வளம் பொருந்திய வழியில் இட்டுச்செல்ல முடியும் என்றும் தமிழகத்து வாக்காளப் பெருமக்கள் பெரிதும் நம்பினார்கள்; அந்த நம்பிக்கையுடன் நமக்குப் பெரும் வெற்றியையும் வழங்கினார்கள். அந்த நம்பிக்கை பொய்க்காத வகையில், அரசை எதிர்நோக்கிய பல்வேறு அறைகூவல்களையும் நாம் வெற்றிகரமாகச் சமாளித்து வந்துள்ளோம். சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டது. வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் நமது மாநிலத்தின் அமைதியைக் குலைக்க முயன்று விடுத்திருந்த மிரட்டல்கள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. முன்னொருபோதும் கண்டிராத வகையிலான நிதி நெருக்கடி என்னும் இருண்ட காலகட்டத்தையும் நாம் ஒருவாறு வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளோம். 'இந் நிதிநெருக்கடிச் சூறாவளியைத் தாங்கி, நிலைக்கும் வலிமையும் திறனும் இந்த அரசுக்கு உண்டா' என்று பலரும் ஐயப்பாடு தெரிவித்திருந்தார்கள். இந்த நிதிநெருக்கடியைச் சமாளிக்க நாம் துணிவுடனும் திண்மையுடனும் நடவடிக்கை எடுத்து வந்துள்ளோம். இனி நாம் நம்பிக்கையுடன் வளர்ச்சிப் பணிகளில் கருத்தூன்ற முடியும். தமிழகத்திற்குச் செழுமையையும் வளமையையும் சேர்க்க நாம் உறுதி பூணுவோம். மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு மக்களுடைய அரசாகும். ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் அனைவரும் தங்கள் வாழ்வில் ஒளி தோன்றும் என்ற பெரும் நம்பிக்கையுடன், எப்போதும் எங்களுக்கு ஆதரவு தந்து வருகிறார்கள். நமது புரட்சித்தலைவி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எல்லா மன்றங்களிலும், ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காகக் எப்பொழுதும் குரல் கொடுத்துக் கொண்டு வருகிறார். அவாது சீரிய தலைமையில் அவர் வகுக்கும் நெறிமுறையின்படி, எத்தகைய பாதகமான சூழலிலும், ஏழை, எளிய, வசதிவாய்ப்பற்ற மக்களின் நலங்கள் எப்போதும் காக்கப்பட்டு வருவதற்கு இவ்வரசு உறுதியளித்து வருகிறது. நமது வாய்ப்பு வளங்களை ஒருங்கு திரட்டி வளர்ச்சி வழியில் மேலும் அடி எடுத்து வைக்கும் வகையில் இந்த வரவு செலவுத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மிகமிகக்கடுமையான, பாதகமான சூழ்நிலையை நாம் வெற்றி கொண்டுள்ள நிலையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுடைய, திறமையும் ஆற்றலும் வாய்ந்த தலைமையின் கீழ் இனி நாம் முன்னேற்ற வழியில் வீறு நடை போடுவோமாக.

222. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முறை தங்களுடைய வரவு செலவுத் திட்ட உரைப் புத்தகத்தில் ஒரு மாறுதல் காணப்படுவதைப் பார்த்திருப்பார்கள். அதாவது, வரவு செலவுத் திட்ட ஆவணங்களை அளிப்பதில் புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் காண்பார்கள். இந்தத் தடவை முதல் முறையாக, முழுக்க முழுக்க, வரவு செலவுத் திட்ட ஆவணங்கள் தயாரிப்பும், அச்சிடுதலும் கணினி உதவி கொண்டு செய்யப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

223. இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மையாகவும், உருவாக்கித்தர பேருதவியையும் பெரும் ஒத்துழைப்பையும் அளித்த நிதித் துறைச் செயலாளர் திரு ந.நாராயணன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து அரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

224. 1992-93 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

இரா.நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

சென்னை,
1992 ஆம் ஆண்டு
மார்ச் திங்கள் 6 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2023
மாசித் திங்கள் 23 ஆம் நாள்.

முத்தமிழ் வளர்க்கும் தமிழக அரசு!

கவிஞர் ஆர்.சி. தமிழன்பன்

நல்வழி காட்டி நலம்தரும் செம்மொழி
இலக்கிய நாட்டின் எழிற்பே ரரசி

இத்தரை எங்ஙனும் இனிதுற மேவும்
இலக்கிய வழக்கும் இயல்புடன் கூடிய

வழக்குத் தமிழே வளர்நடை போடும்
எழுத்தும் பேச்சும் இன்னியல் கலையாம்

காற்றின் நர்த்தனம் இசைவடி வாகும்
போற்றிடும் ஏழிசை பண்பட ஈர்க்கும்

ஒழுக்கமும் இனிமையும் உயர்நற் பண்பும்.
ஓங்கிடும் கவிதை உறுபயன் பாடல்

பண்ணெனும் ராகம் தானம் பல்லவி
அணிபெறும் சந்தம் அழகுறு இசையாம்

உணர்வின் அசைவுகள் நவரச மென்னும்
ஒன்பான் சுவைதரும் உளம்கவர் நாடகம்

பற்பல நூற்கள் படிக்கும் காலமும்
பரந்த புவியின் விரிந்த விந்தையும்

சிலமணித் துளிகளில் சிறப்புடன் காட்டும்
செழுங்கலைக் களஞ்சியம் சீர்மிகு நாடகம்

கரகம், காவடி, கும்மி, கோ லாட்டம்
புரவி, ஒயிலுடன் பொன்மயி லாட்டம்

நாட்டின் சிறப்பை நயம்பட விளக்கும்
நாட்டுப் புறக்கலை நாட்டிடும் நற்பணி!

நாடகக் கலையெனும் நற்றாய் ஈன்ற
ஆடகப் பசும்பொன் அறிவியல் திரைக்கலை

முக்கனிச் சுவையினும் மிஞ்சிடும் சுவையென
முத்தமிழ்க் கலைகளை முழுதுற வளர்க்கும்.

'கலைமா மணி'யெனும் கன்னிய விருதினை
நிலைபெறு புகழின் நினைவாய் வழங்கி

நலிந்தவர் வாழ்வில் நன்மைகள் நுழைய
நல்லுத வித்தொகை பல்வகை உதவிகள்

அனைத்தும் வழங்கி அருங்கலை வளர்க்கும்
இயலிசை நாடக மன்றம் காக்கும்

தமிழக அரசின் தன்னே ரிலாப்பணி
தரணியில் என்றும் பெரும்புகழ்
பெறுக! அரும்பெரும் பேற்றுடன் வாழ்க!

எரிவாயுப் பேருந்து அறிமுகம்

எரிவாயுவைப் பயன்படுத்தி பேருந்துகளை இயக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார். சோழன் போக்கு வரத்துக் கழகம், சோதனை முறையில் பத்துப் பேருந்துகளை அழுத்தப்பட்ட எரிவாயுவைப் பயன்படுத்தி இயக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

எரிவாயுவினால் ஓட்டப்படும் பேருந்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தலைமைச் செயலகத்திலிருந்து போர் நினைவுச் சின்னம் வரை சென்று மீண்டும் தலைமைச் செயலகத் திற்குத் திரும்பி வந்தார். அவருடன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு ஆகியோரும் பயணம் செய்தனர் (28-2-92)

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், சோழன் போக்குவரத்துக் கழகம், சாலைப் போக்குவரத்துப் பயிற்சி நிறுவனம், எண்ணெய் எரிவாயுக் கமிஷன், அசோக் லேலண்டு, டி.வி.எஸ். நிறுவனங்களில் ஒன்றான 'டிரான்ஸ் எனர்ஜி', இந்தியப் பெட் ரோலியப் பயிற்சி நிலையம் உள்பட பல்வேறு அமைப்புகள் இணைந்து பேருந்தை இயக்க அழுத் தப்பட்ட எரிவாயுவைப் பயன்படுத்தும் நடவடிக் கைகளில் ஈடுபட்டன. இந்தத் திட்டம் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் தலைவர் திரு. எச். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செய்தி யாளர்களிடம் கூறியதாவது:

'தற்போது 50 சதவிகித டீசலையும், 50 சதவிகித அழுத்தப்பட்ட எரிவாயுவையும் பயன் படுத்தி, பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 70 சதவிகித எரிவாயுவைப் பயன்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு பேருந் திலும் டீசல் டாங்கின் அருகே தலா 300 பவுண்டு எரிவாயு அடைக்கப்பட்ட ஆறு சிலிண்டர்கள் வைக்கப்படும். இவற்றில் உள்ள எரிவாயுவைப் பயன்படுத்தி 320 கிலோ மீட்டர் தூரம் பேருந்து களை ஓட்ட முடியும்.

'எரிவாயுவைப் பயன்படுத்துவதற்காக இந்தப் பேருந்துகளின் என்ஜின்களில் 80,000 ரூபாய் செலவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சோழன் போக்குவரத்துக் கழகம் இன்னும் ஓரிரு தினங்களில் 10 பேருந்துகளை சோதனை முறை யில் இயக்கும். எரிவாயுவைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன்கள்' பற்றி ஆறு மாதம் சோதனை செய்யப்படும். சோதனை வெற்றிகர மாக அமைந்தால் எரிவாயுவால் இயக்கப்படும் 1,000 பேருந்துகளை மாநிலம் முழுவதும் விட திட்டமிட்டுள்ளோம்.

'முதலில் நன்னிலத்துக்கும் - திருவாரூருக்கும் இடையே பேருந்து விடப்படும். எரிவாயுவைச் சிலிண்டர்களில் அடைக்கும் பணி, நாகப்பட்டினத் தில் நடைபெறும் இந்தப் பேருந்துகள் அதிக அளவில் புகை மண்டலத்தை ஏற்படுத்தாது. அதிகச் சத்தமும் இருக்காது. இதன்மூலம் டீசலைக் கணிசமான அளவில் சேமிக்க முடியும். சுற்றுப் புறச் சூழலும் பாதுகாக்கப்படும். முழுக்க முழுக்க டீசலில் இயக்கும் பேருந்துகளைவிட, குறைந்த செலவில் இந்தப் பேருந்துகளை இயக்க முடியும்.

வளமான வாழ்வுக்கு
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
விஜய்
உரங்கள்

VIJAY

மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்
இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 734

தருமபுரி மாவட்டத்தில்

அதிசய பனைமரம்

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் பண்ணந்தூர் கிராமத்தில் 100 கிளைக்கு மேல் உள்ள அதிசய பனைமரம் உள்ளது. பொதுவாக, மரங்கள் என்றாலே கிளைகள் அதிகமாகக் காணப்படும். இயற்கையின் படைப்பில் உள்ள தென்னை, பாக்கு, பனை போன்ற ரக மரத்தில் ஒரு கிளை மட்டுமே காணப்படும். ஆனால், இவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் உள்ள இந்த அதிசய பனைமரத்தில் 100-க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.

பண்ணந்தூரில் உள்ள பெருமாள் கோவிலின் அருகே இந்த அதிசய பனைமரம் மிகப் பெரிய அளவில் வளர்ந்து நாலாபுறமும் ஆலமரம் போல் கிளைகள் விட்டு நிழல் தரும் மரமாக உள்ளது. ஆனால், இந்தப் பனை மரத்தில் ஆண் பனையாக ஒரு கிளையும், பெண் பனையாக ஒரு கிளையும் பரவலாக உள்ளது. இப்பனைமரம் 80 அடி உயரமுள்ளதாகவும், இந்தப் பனையின் வயது 65 ஆண்டுகளாகும்.

பண்ணந்தூரைச் சேர்ந்த துரைசாமிநாயுடு என்பவரின் மகனான ராமச்சந்திர நாயுடுவைப் பேட்டி கண்ட போது, 1927-ஆம் ஆண்டு எனது அப்பா காசியாத்திரை சென்று இருக்கிறார். அப்போது குஜராத் மாநிலம் பரோடாவில் கிளைகளுடன் கூடிய ஒரு பனையைப் பார்த்துள்ளார். பரோடாவில் உள்ள அதிசய பனைமரத்தைப் பண்ணந்தூருக்கு கொண்டு வரவேண்டும் என்ற ஆவலில் அங்கிருந்து கொண்டு வந்த விதையினை இங்கு நட்டு வைத்தார்.

முளைத்த கொஞ்சநாளில் இரட்டைப் பனை மரமாக உயர்ந்து பின்னர் இரண்டு கிளைகள், நான்கு கிளைகளாகவும், நான்கு கிளைகள் எட்டாகி பெருகி வந்து இன்று 100-க்கும் மேற்பட்ட கிளைகளாக உயர்ந்து, மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் பார்த்துச் செல்கின்றனர். மேலும் ஆண்டுகள் அறுபதைக் கடந்தாலும் ஒரு கிளைகூடப் பழுதுபடாமல் பச்சைப்பசேல் என்று காட்சி தருகிறது.

மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்த அதிசய பனை மரத்தைக் கண் பாதுகாப்பது போலக் காத்து வருகிறேன் என்றும், இதுபோன்ற அதிசயக் கன்றினை உருவாக்க யாரும் முயற்சி எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்த அதிசய பனைமரம் எப்படி உருவாகியிருக்கக்கூடும் என்றும், இதுபோல் பல கிளைகள் உண்டாவதற்கான காரணம் பற்றி தருமபுரி அரசு கலைக்கல்லூரி பேராசிரியர்களிடம் கேட்டபோது அவர்கள் பின்வருமாறு விளக்கம் அளித்தார்கள்.

நுனி மொட்டின் வளர்ச்சியினால் வளரும் பனை போன்ற தாவரங்களில் நுனி மொட்டு பாதிக்கப்படுவதால், கீழே இருக்கும் கோண மொட்டுக்கள் பல வளர்ச்சியடைவதால் இத்தகைய கிளைகள் கொண்ட தோற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. இந்தத் தாவரத்தின் விதையை எடுத்து வளர்த்தால் இதேபோன்று கிளைத்த தன்மையுடன் தாவரம் வளர வாய்ப்பில்லை. ஆனால், காசியில் இருந்து கிளைத்த பனையின் காயை கொண்டு வந்து வளர்த்ததாகத் தோட்டக்காரர் சொல்வதால், கிளைக்கும் தன்மை பாரம்பரியம் பண்பாக விதையில் அமைந்துள்ளதா என்பதைச் சோதனை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள் குறிப்பிடும்போது, எப்படிப் பார்த்தாலும், பல கிளைகளுடன் இருக்கும் தன்மையும், ஆண் பனை, பெண் பனை என்று தனியாக இருக்கும் பனை மரத்தில் ஒரு கிளை ஆண் கிளையாகவும், மற்றொரு கிளை பெண் கிளையாகவும் இருப்பதும் அதிசயமாகத்தான் கருத வேண்டியுள்ளதாக கருத்து தெரிவித்தார்கள்.

—சி.க. சரவணன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி மாவட்டம்.

கொலம்பஸ் கடற்பயணத்தின் 500-வது ஆண்டு விழா

புது உலகமான அமெரிக்காவில் கிறிஸ்டோபர் கொலம்பஸ் காலடி எடுத்து வைத்ததன் 500-வது ஆண்டு விழா அடுத்த ஆண்டு கொண்டாடப்



படுகின்றது. 1492-ஆம் ஆண்டு அக்டோபர் 12-ஆம் தேதியன்று அவர் மூன்று கப்பல்களுடன் பஹாமா தீவில் இறங்கினார். "மனிதகுல வரலாற்றின் மகத்தான கடற்பயணம்" என்று அது வருணிக்கப்படுகிறது.

ஆசியாவுக்குக் குறுக்கு வழியொன்றைக் கண்டுபிடிப்பதற்காகக் கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டிலிருந்து கப்பலில் புறப்பட்டு மேற்கு நோக்கிப் பயணமானார். ஆனால், அவர் கண்டுபிடித்ததோ முற்றிலும் புத்தம் புதியதோர் நிலப்பரப்பாகும்.

இத்தாலியில் உள்ள ஜெனோவா நகரில், ஓர் ஏழை நெசவாளியின் மகனாக 1451-ஆம் ஆண்டில் கொலம்பஸ் பிறந்தார். வறுமை ஒரு பக்கம்; முறையான கல்வியறிவின்மை ஒரு பக்கம்; எனினும் அவர் எல்லாவற்றுக்கும் ஈடு கொடுத்து, அனுபவம்மிக்க கப்பல் தலைவனாக, முன்னோடியான புவி இயல் வல்லுநராக உருவெடுத்தார்.

அட்லாண்டிக் பெருங்கடலில் மேற்கு நோக்கிப் பயணமானால் இந்தியாவை எட்டிவிடலாம் என்று கிரேக்கத் தத்துவ ஞானி அரிஸ்டாடிலும், கிரேக்கப் புவி இயல் வல்லுநர் ஸ்ட்ராபோவும் எழுதி வைத்திருந்ததைக் கொலம்பஸ் அறிந்திருந்தார். எனவே, அத்தகைய பயணத்தை மேற்கொள்வதற்காகத் தமக்கு மூன்று கப்பல்களைத் தந்து உதவுமாறு ஸ்பெயின் நாட்டு மன்னரிடமும் அரசியிடமும் 1486-ஆம் ஆண்டில், அவர் கோரிக்கை விடுத்தார். அதற்கு 5 ஆண்டுகள் கழித்துத்தான்அவரது அந்த நெடுநாள் கனவு நன்வாயிற்று.

இடர்ப்பாடான பயணம்

இந்தப் பயணத்தின்போது, கொலம்பசும் அவரது தலைமையின் கீழிருந்த 90 மாலுமிகளும் எதிர்கொள்ள வேண்டியிருந்த துன்பங்களும் துயரங்களும் கொஞ்ச நஞ்சமல்ல.

அந்த நாட்களிலே, நிலப்பரப்பை விட்டு விலகி நெடுந்தொலைவுக்குக் கடற்பயணம் மேற்கொண்ட கப்பல்கள் மிகவும் குறைவுதான். நடுக்கடலில் கப்பல்கள் மூழ்கிப் போகக்கூடிய அபாயங்கள் நேரும் என்று அஞ்சியதே இதற்குக் காரணமாகும். ஆனால், ஒரு சில வரைபடங்களையும் தேசப்படங்களையும் மட்டும் வைத்துக் கொண்டு, மிகவும் புராதனமான கடற்பயணக் கருவிகளின் துணையுடன், கரைகாணாப் பெருங்கடலில் துணிச்சலோடு தமது பயணத்தைத் துவக்கினார் கொலம்பஸ். அவரது கப்பல்களிலேயே மிகவும் பெரியதன் நீளமே 26 மீட்டர்கள்தான்.

வரைபடம் மாறியது

கொலம்பஸின் முயற்சிகளுக்குக் கைமேல் பலன் கிடைத்தது. அவரது பயணத்திற்குப் பிறகு உலகின் வரைபடமே மாறிவிட்டது. 1492-ஆம் ஆண்டு முதல் 1504-ஆம் ஆண்டு வரையில் நான்கு முறைகள் பயணம் மேற்கொண்டார் கொலம்பஸ். இவற்றின் மூலம் அவர் மேற்கிந்தியத் தீவுகளிலே ஐரோப்பியக் குடியிருப்புகளை ஏற்படுத்தினார்; தென் அமெரிக்கக் கரையைக் கண்டுபிடித்தார்; கரீபியன் கடலை உலக வரைபடத்தில் சேர்த்தார். அட்லாண்டிக் கடலைக் கடப்பதற்குப் புதிய வழியை உருவாக்கிக் கொடுத்தார். அடுத்து வரும் பல நூற்றாண்டுகளுக்கு மாலுமிகளுக்கு இந்த வழியானது பேருதவியாக இருந்து வந்தது

கொலம்பஸைப் பின்பற்றி இந்தப் புதிய உலகத்தில் குடியேறிய ஐரோப்பியர்கள் தத்தமது தாய்நாட்டின் கலாசாரங்களை அங்கே உருவாக்கினர். இப்பகுதியில் அமைந்த ஸ்பானிஷ், போர்த்துகீசிய, ஆங்கிலேய, பிரெஞ்சு மற்றும் டச்சுக்காலனிகள், பின்னாளில் தனி நாடுகளாக உருவெடுத்தன. அந்தப் பகுதியில் வாழ்ந்த பழங்குடியினருடன் ஏற்பட்ட தொடர்பும், அந்தப் பகுதிக்கே உரிய தனித்தன்மைகளும் சேர்ந்து அங்கே குடியேறிய மக்களை அவ்விடத்திற்கு ஏற்றாற் போலத் தங்களது வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ள வழிகோலின. இதன் எதிரொலியாக, வட அமெரிக்காவில் பிரிட்டன் தனது காலனிகளுக்கு அதிக சுயாட்சி உரிமைகளை அளித்தது. தற்சார்பு உணர்வும், சுதந்திர வேட்கையும் கொண்ட இந்தக் காலனிகள் காலப் போக்கில் 'அமெரிக்க ஐக்கிய நாடுகள்' என்னும் புதிய நாட்டை நிறுவின. மிதமான அரசு நிர்வாகம், தனிமனித சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் இந்த மகத்தான நாடு உருவானது.

கொலம்பஸ் தினம்

1991 அக்டோபர் 14-ஆம் தேதியை கொலம்பஸ் தினமாக அறிவித்து, அமெரிக்க அதிபர் புஷ் ஒரு பிரகடனம் வெளியிட்டார்.

"கலாசாரங்களின் சங்கமத்திற்குக் கிறிஸ்டோபர் கொலம்பஸ் வழிகோலினார். இது மனிதகுல வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் துவக்கியது. பழைய உலகிற்கும், கொலம்பஸ் கண்டுபிடித்த புதிய உலகிற்கும் இடையே எண்ணங்களும், கருத்துக்களும், வளங்களும் பரிமாற்றம் செய்து கொள்ளப் பட்டன. இதன் விளைவாக இரு புதிய கண்டங்கள் உருவாயின. சுதந்திரம், நல்வாய்ப்பு ஆகிய கொள்கைகளுக்குப் பாடுபடும் ஒரு புதிய தேசம் பிறந்தது" என்று அந்தப் பிரகடனத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

கன்னியாகுமரி மாவட்டம்:

விரைவான வளர்ச்சிப் பணிகள்

இந்திய நாட்டின் தென்கோடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழக அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளுக்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு 2 கோடியே 91 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 678 வேலைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதில் 300 தொகுப்பு வீடுகள், 12 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 9 பள்ளிக் கட்டடங்கள், 30 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூட மையங்கள், மூன்று சிறு பாலங்கள், 56.28 கி.மீ. தூர 68 தார்ச் சாலைகள், 117 ஊராட்சிப் பணிகள், 134 பேரூராட்சிப் பணிகள் ஆகியவைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

1990-91-ஆம் ஆண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில், 53 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் சிக்கன நடவடிக்கையின் மூலம் மீதம் சேமிக்கப்பட்டது. இந்தத் தொகையில் 35 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஒரு பேருந்து நிழற்குடை, 6 சமுதாய நலக் கூடங்கள், 22 சாலை வேலைகள், ஒரு சிறு பாலம், ஒரு குளம் மேம்பாடு செய்யும் பணி, 2 தடுப்புச் சுவர்கள், ஒரு பேரூராட்சி அலுவலகக் கட்டடம், ஒரு பாலம் ஆகிய வேலைகள் இவற்றுள் அடங்கும்.

1990-91-ஆம் ஆண்டு சிறு சேமிப்பு வதூல் ஊக்கத் தொகையில் வேலைக்கு 41 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இந்தத் தொகையில் 59 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில்13 பள்ளிக் கூடக் கட்டடங்கள்,'' ஒரு குடும்ப மற்றும் குழந்தைகள் நலக் கூடம், 7 சமுதாய நலக் கூடங்கள், 2 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 2 பலநோக்கு சமுதாய நலக்கூடம், பத்துக் காணியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட 34 வீடுகள் சீரமைப்பு போன்ற வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் 300 தொகுப்பு வீடுகளுக்கு 50.10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இதில் 75 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 53 வீடுகளுக்குக் கூரை போடப்பட்டு உள்ளது. 100 வீடுகள் தரை மட்டத்திலும், 36 வீடுகள் லிண்டல் மட்டத்திலும், 36 வீடுகள் அடித்தள மட்டத்திலும் உள்ளன.

ஒரு பள்ளிக் கட்டடத்திற்கு 1.38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டப் பட்டு வருகின்றன. இதில் ஒன்றுக்கு, மேற்கூரை போடப்பட்டுள்ளது. ஒன்று கூரை மட்டத்திலும், 4 அடித்தள மட்டத்திலும் உள்ளன.

ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் ஒன்று 0.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படுகிறது. இந்த மாவட்டத்தில் 12 ஊராட்சி மன்ற அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 2 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றவை முன்னேற்ற நிலையில் உள்ளன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள் 30 கட்டப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு சத்துணவு மையமும் 0.70 லட்சம் ரூபாய் செலவில்கட்டப்பட்டுவருகின்றன. இரண்டு சத்துணவுக்கூடங்கள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. மற்றுள்ளவைகளின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேல்புறம் வட்டாரத்தில் 2 இலட்சம் ரூபாய் செலவில் சிறிய பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதைப்போன்று கிள்ளியூரில் 0.50 இலட்சம் ரூபாய் செலவிலும், தக்கலையில் 0.50 இலட்சம் ரூபாய் செலவிலும் சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

தார்ச்சாலை அமைக்க கிலோ மீட்டர் ஒன்றுக்கு 1.65 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. 68 கி.மீ. தூரச் சாலைகளைச் செப்பனிடும் பணி முழு மூச்சில் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் பிப்ரவரி மாதம் முடிவடையும் வகையில் திட்டப் பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

117 ஊராட்சிப் பணிகள் 32.94 இலட்ச ரூபாய் செலவில் எடுக்கப் பட்டுள்ளன. இதில் 106 பணிகள் தொடங்கப்பட்டு 10 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 67.56 இலட்ச ரூபாய் செலவில் 134 பேரூராட்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 115 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துக்காக ஒரு கோடியே 10 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 72.03 இலட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் 3 ஆயிரத்து 542 பேர்களுக்குக் கடன் வழங்கக்குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவருக்கும் உடன் வழங்கப் பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 615 ஆதி திராவிடர் குடும்பங்களும் 28 பழங்குடியினர் குடும்பங்களும் ஆயிரத்து 338 பெண் குடும்பங்களும் பயன் அடைந்துள்ளன.

வை. புண்ணியமூர்த்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்

மாணவர் பக்கம்

அறிவியல் அற்புதங்கள்

புதுமையான ஆராய்ச்சி!

அமெரிக்காவில் மிகப் பெரிய பணக்காரர் ஒருவர், ஆராய்ச்சிக்காகப் பெரும்பணம் செலவழிக்கிறார்; அவர் புதுமையான ஆராய்ச்சியைத் தற்போது மேற்கொண்டிருக்கிறார். அரிசோனா பகுதியில், பல ஏக்கர் கொண்ட நிலப் பரப்பில், சர்க்கஸ் கொட்டகை மாதிரி, மிகவும் பெரிய கண்ணாடி முகடு கொண்ட மாபெரும் கட்டடம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உயிர்க் கோளம் (Bio-Sphere) என்று பெயர். அதன் உள்ளே, சூரிய ஒளிமட்டும் கண்ணாடி வழியாக வரும். காற்றோ ஒலியோ, உள்ளே நுழைய முடியாது. மனிதனுக்குத் தேவைப்படும் இன்றியமையாத பொருள்கள் உள்ளே இருக்கும். அதன் ஒருபக்கம் கடலாக மாற்றப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் காடு வளர்க்கப்படுகிறது. இந்த உயிர்க் கோளத்தில் பலவகை செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவை இடம் பெற்றுள்ளன இவற்றின் எண்ணிக்கை 3,800.

இங்கு நெல், கரும்பு ஆகியவற்றை வளர்க்கும் வயல்களும் தோட்டங்களும் உள்ளன. வயலில் மீன்களும் விடப்பட்டிருக்கின்றன. இதனுள்ளே, 8 பேர் வாழப்போகிறார்கள். இவர்கள் ஏற்கெனவே, கண்ணாடி வீட்டுச் சோதனைச் சாலையில் தங்கியிருந்து தேர்ச்சி பெற்றவர்கள். ஒரு குறிப்பிட்ட நாள் அன்று இந்த உயிர்க் கோளத்தின் கதவு மூடப்படும். இரண்டு ஆண்டுகள் வரை, இவர்கள் இங்கே வாழ்க்கை நடத்துவார்கள். இவர்களுக்கும் வெளியுகத்திற்கும் எந்த விதமான தொடர்பும் இருக்காது. அவர்கள் எப்படி வாழ்வார்கள். என்பதைப்பற்றி இந்த ஆராய்ச்சி நடக்கப் போகிறது.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படை நோக்கம் என்ன தெரியுமா? அழிவிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பது தான்!

ஒலிம்பிக் ஓட்டக்காரர்கள்

ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள், கடுமையான பயிற்சி பெறுவார்கள். காலையிலும் மாலையிலும் ஓடுவார்கள். உடற்பயிற்சி செய்வார்கள். ஓட்டப் போட்டிக்காரர் வளரும் நாட்டினராக இருந்தால், வேகமாக ஓடுவது மட்டுமே, அவருடைய பயிற்சிக் கடமையாக அமையும். அறிவியல் வளர்ச்சி கொண்ட நாட்டுக்கு உரியவராக இருந்தால் அவருடைய பயிற்சிக்கு இயந்திரச் சாதனங்கள் உதவி புரியும். ஜப்பான் நாட்டில், ஒரு சிறிய மோட்டார் போன்ற கருவி, ஓட்டப்பாதையில் வேகமாக ஓடும். ஓட்டப்போட்டி வீரர், அதன் பின்னால் விரைவாக ஓடுவார். தன் வேகத்திறனை, அந்தக் கருவியின் வேகத்திற்கு இணையாக வளர்த்துக் கொள்வார்.

அமெரிக்காவில், வேறு ஒரு முறையைத் தற்போது மேற்கொண்டிருக்கிறார்கள். ஓடுபவரின் முகத்

தில், அவருடைய மூக்குடன் ஒரு கருவி இணைக்கப்பட்டிருக்கும். அதன் மறுமுனை, உருண்டை வடிவக் காற்றுப் பை ஒன்றுடன் இணைக்கப் பட்டிருக்கும். அதை ஏந்திக் கொண்ட ஒருவர், சிறு மோட்டாரில் அமர்ந்து, வீரரின் பக்கவாட்டில் விரைந்து கொண்டிருப்பார். அந்தக் காற்றுப் பையில் ஓட்ட வீரர் விட்ட மூச்சு சேகரிக்கப்பட்டு, ஆராய்ச்சி செய்யப் படும். அவர் எந்த அளவுக்கு உயிர் வளியை (உயிர் மூச்சு) உள்ளிழுத்துக் கொண்டார் என்பது கணக்கிடப்படும். அவர் அதிகமாக உயிர் வளியை நுகர்ந்தவராக இருந்தால் - அவர் ஓட்டப் போட்டிக்குத் தகுதியானவர் என்பது உணரப்பட்டு - அவருக்கு மேலும் பயிற்சி தரப் படும். (கல்லூரியில் படிக்கும் ஓட்டக்காரர் 45 மில்லி லிட்டர் உயிர்வளி சுவாசிப்பார். ஒலிம்பிக் ஓட்டக்காரர் 80 மில்லி லிட்டர் சுவாசிக்க வேண்டும்.) எனவே, இந்த உயிர் வளியின் அடிப்படையில், அவருக்கு முனைப்பாகப் பயிற்சி தரப்படும்.

விளையாட்டுப் பயிற்சிகளுக்குக் கணினி (Computer) பயன்படுத்தப் படுகிறது. அது வீரர் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறது. வீரரைத் திருத்துகிறது. கணினி, ஓட்டப் போட்டி, நீச்சல், கோல் கொண்டு தாண்டுதல், முதலியவற்றுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றை விளையாட்டு அறிவியலாளர்கள் (Sports Scientists) பயன்படுத்திப் பயிற்சி தருகிறார்கள்.

- மலையமான்.

தியாகம் செய்திடு

பள்ளி செல்லும் பிள்ளைகாள்
பாடம் நன்கு பயில்வீர்கள்
பட்டம் பெற்றே நீங்களெலாம்
பாரை உயர்த வேண்டாவோ?

குற்றம் இல்லா உளத்தோடு
கூடி ஒன்றாய்ப் பழகிடுக!
நாடி நானிலம் நலம்பெறவே
கோடி நன்மை செய்திடுக!

வள்ளுவன் பாரதி போல்நீங்கள்
வையகம் தழைக்க வாழ்ந்திடுக!
வறுமை பிணியெலாம் அகன்றிடவே
வல்லமை யோடு வாழ்ந்திடுக!

அணுவை அகற்றி உலகையெலாம்
அகிம்சை நெறியில் செலுத்திடுக!
அன்னை தந்தை குருசொல்லை
அன்பாய்க் கேட்டு நடந்திடுக!

காந்தி நேரு போல்நீங்கள்
கடமை உயிராய்ப் போற்றிடுக!
மடமை என்றும் புகுந்தாமல்
திடமாய் மனத்தைக் காத்திடுக!

மாணவர் நீவிர் எல்லீரும்
மனத்தில் இவற்றைப் பதித்திடுக!
மக்கள் ஆட்சி மாண்புறவே
மாபெரும் தியாகம் செய்திடுக!

— அகரம் அந்தாரம்

சுற்றுலா வளர்ச்சியில் கோவை மாவட்டம்

தமிழகத்திலுள்ள மூன்றாவது பெரிய நகரான கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்ட கோவை மாவட்டம் குளுமையான தட்ப வெட்ப நிலையின் காரணமாகப் பெரிதும் மக்களால் - விரும்பப் படும் மாவட்டமாகும். நீலகிரி மலைத்தொடரையும், ஆனைமலை, வால்பாறை மலைக் குன்றுகளையும் எல்லையாகக் கொண்டும் - பெரியார், நீலகிரி, அண்ணா மாவட்டங்களை அண்டை மாவட்டங்களாகவும், கேரளா, கர்நாடக மாநிலங்களை அருகாமையில் கொண்டும் திகழும் கோவை இயற்கை எழில் வாய்ந்த நகராகவும், மாவட்டமாகவும் திகழ்கிறது.

கொங்கு நாட்டின் சிகரமாக விளங்கும் கோவை, தொழில் துறையில் தமிழகத்தின் பெருமையிலும், வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதைப் போல, இப்பொழுது கோவை மாவட்டம் சுற்றுலாத் துறையில் வேகமாக முன்னேறி ஒரு சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அருகாமையில் உள்ள நீலகிரி மாவட்டத்திற்குச் சுற்றுலா வரும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் இப்பொழுது கோவை மாவட்டத்திலும் ஓரிரு நாட்கள் தங்கி, சுற்றுலா இடங்களையும், ஆலயங்களையும் கண்டு களித்திடும் நிலைமையைக் கோவையில் காண முடிகிறது.

கோவைக் குற்றாலம் (சீங்குபதி நீர்வீழ்ச்சி)

கோவையிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலையில் மேற்கு மலைத் தொடரின் கிழக்குச் சரிவில் போளுவாம்பட்டி ஒதுக்குக் காட்டில் எழில் சூழ்ந்த மரக் கூட்டங்களின் இடையில் அமைந்துள்ளது இக்கோவைக் குற்றாலம். கோடைக் காலத்திலும் கூட நீர் நிறைந்துள்ள இந்நீர்வீழ்ச்சி எல்லாக் காலங்களிலும் மக்களைக் கவர்ந்திழுக்கிறது. தமிழக அரசு 1989-ஆம் ஆண்டு கோவைக் குற்றாலம் என்றழைக்கப்படுகிற சீங்குபகுதி நீர்வீழ்ச்சிப் பகுதியைச் சுற்றுலா மையாமாக ஆக்க முடிவெடுத்து உரிய பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இங்கு, ஆண்டு முழுவதும் யானை, மான், குரங்கு, காட்டு அணில் போன்றவைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப் படுகிறது.

ஒரு காலத்தில் இந்த அருவியைச் சுற்றிலும் வளர்ந்தோங்கிய தேக்கு, வேங்கை, கருமருது, வெண்தேக்கு, பில்லமருது, மலைவேம்பு, நாவல் போன்ற விலை உயர்ந்த மரவகைகளும், மூங்கில், எலந்தை, சீயக்காய், பூக்கொள்ளை, பூச்சக்காய் போன்ற மரவகைகளும், அகாசியா, அல்பிசியா போன்ற மர-செடி வகைகளும் மிகுதியாகக் காணப் பட்டன. இம்மரவகைகள் ஒரு சில காணப்பட்டும், கடந்த காலத்தில் எல்லா இயற்கை வளங்களிலும் காணப்படும் அழிவு (Degradation) இங்கும் காணப்படுகிறது. ஒரு காலத்தில் மிகவும் அடர்ந்த காடுகள் (Most deciduous forests) என்ற நிலையில் இருந்த வளங்கள் காலப் போக்கில் தேய்மானம் அடைந்து கருகிய(Dry deciduous) மற்றும் முள் நிறைந்த (Thorny forests) என்ற நிலையை நோக்கி நிற்கின்ற இவ்வகைப் பகுதிகளை மேற்கொண்டும் சீர்கெடாமல் மேன்மையடையச் செய்ய மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், பல்வேறு விதமான வேலைகள் மேற்கொள்ளப்பட்டுக் காடுகளை வளர்ச்சி அடையச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோவைக் குற்றாலத்தின் வளர்ச்சிக்கென, நடப்பு 1991-92-ஆம் ஆண்டில் கோவை மாவட்ட நிர்வாகம் சிறுசேமிப்புத் திட்டச் சாதனையின் பொருட்டு வழங்கப்பட்ட, பரிசுத் தொகையிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கிப் பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்து உள்ளது.

இதற்கான வளர்ச்சித் திட்டம் (Master Development Plan) மூன்று பகுதிகளாகச் செயல்படுத்தப்பட உள்ளது. முதற்பகுதியாக இங்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல், நீர் நிலைகளை வளப்படுத்துவது பூங்கா அமைப்பது, சிறு குடில்கள் மற்றும் தங்குமிட வசதிகள் ஏற்படுத்துவது போன்ற பணிகளிலும், இரண்டாவது பகுதியாக, ஏரி அமைக்கப்பட்டு உல்லாசப் படகு விட ஏற்பாடு செய்கின்ற பணியும், மூன்றாவது பகுதியாகக் கேபிள் கார் எனப்படுகிற இரண்டு குன்றுகளுக்கிடையே இயற்கைக் காட்சிகளைப் பார்த்த வண்ணம் பயணம் செய்கிற வகையில் ஆகாய ஊர்தி அமைக்கின்ற பணியும் இதில் அடங்கும்.

இயற்கை எழில் சூழ்ந்த இக்கோவைக் குற்றாலத்தின் சிறப்பை அனைவரும் அறிய, இதன் வனப்பினைப் பலரும் நுகர்ந்து இன்புற அரசு அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறது.

சிறுவாணி அணை

உலகின் இரண்டாவது சுவையான நீர் என்ற பலராலும் போற்றப் படும் சிறுவாணி நீர் கோவைக்கு மேற்கே 35 கி.மீ. தூரத்தில் உள்ள தமிழ்நாடு-கேரள எல்லையில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. மலையின் பல்வேறு இடங்களில் உற்பத்தியாகும் இந்த நீரருவிகள் இயற்கை மூலிகைகளுடன் கலந்து நீர்த் தேக்கத்தை அடைவதால் இந்தச் சுவையைப் பெறுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். மலைச்சாரலும், குளிர்ச்சியும் தொடர்ந்து இருக்கும். இப்பகுதியில் பல்வேறு வனவிலங்குகள் இயற்கையாகச் சுற்றித் திரிவதை நேரில் காணலாம்.

தா. மனோகரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்

அரசு ஊழியர்கள் பணி நேரம்மாற்றம்-மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

"பல்வேறு அரசு அலுவலர்களின் சங்கங்கள் என்னைச்சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்து, அவற்றின் மீது என்னுடன் பேச வேண்டும் என்று கேட்டிருந்தார்கள்.

அக்கோரிக்கைகளை ஏற்று, நான் அரசுப் பணியாளர்களின் சங்கப் பிரதிநிதிகளை 2.3.'92 அன்று சந்தித்துப்பேசினேன். அப்பொழுது, தற்போது காலை 9.45 மணிக்குத் தொடங்கி மாலை 5.45 மணிவரை பணியாற்றும் அலுவலக நேரத்தை காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை என்று மாற்றி அமைக்குமாறு சங்கப் பிரதிநிதிகள் கோரினார்கள். காலை வேளையில் பேருந்துகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால் அலுவலகத்திற்கு 9.45 மணிக்கு வருவது என்பது சிரமமாக உள்ளது என்பதையும், குறிப்பாக அலுவலகத்தில் பணியாற்றும் பெண்கள் வீட்டுவேலைகளைமுடித்துக்குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு காலத்தே அலுவலகம் வர சிரமமாக உள்ளது என்பதையும் என் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். நான் இக்கோரிக்கையினைப் பரிசீலித்து அரசு அலுவலக நேரத்தை காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை மாற்ற ஆணை பிறப்பித்துள்ளேன்.

இந்த நேர மாற்றம் உடனடியாக அமலுக்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உடனடியாக என்பது நாளை முதல் (12.3.'92) அமலுக்கு வரும்".

டாப்சிலிப்

தமிழகத்தின் எல்லையில் உள்ள முக்கியமான இடமான ஆனைமலைப் பகுதியில் உள்ள இன்னொரு சுற்றுலா மையம் டாப்சிலிப். சுற்றிலும் தேயிலைத் தோட்டங்கள் அமைந்துள்ள இப்பகுதி புலி, சிறுத்தை, யானை, கருஞ்சிறுத்தை போன்ற வனவிலங்குகள் இயற்கையாக உலவும் பகுதி. குளிர் அதிகமாக இருக்கும் காலத்தில்தான் இம் மிருகங்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். மிருகங்கள் இயற்கையாக உலவுவதை அடர்ந்த மரங்களின் மேல் அமர்ந்து பார்க்க ஏதுவாக மூங்கில் குடிசைகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் பார்க்க வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் திரைப்படத்துறையினரின் வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புகள் அதிகம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமூர்த்தி அணை

கோவை மாவட்ட நிர்வாகத்தின் சீரிய முயற்சியால் இன்று சுற்றுலாத் தலமாக்கப்பட்டிருக்கும் பகுதி பொள்ளாச்சி அருகில் உள்ள திருமூர்த்தி அணையாகும். அருவி மற்றும் மலைகளில் பொழியும் மழைநீர், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீர் ஆகியவைகளின் மூலம் இந்த அணை நீர் ஆதாரத்தைப் பெறுகிறது. புகழ்மிக்க கோயில் ஒன்று இந்த அணையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. கோயில், அருவி இரண்டையும் இணைக்க இரும்புப் பாலம் ஒன்று தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் காட்டாறு போல் ஏற்படும் வெள்ளத்தால் சிலர் மரணம் அடைவதுண்டு; இந்த ஆபத்தைப் போக்க தற்போது ரூ.5 இலட்சம் செலவில் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இது தவிர, உல்லாசப் பயணிகளுக்காக இந்த அணையில் 2 மோட்டார்ப் படகுகள் அண்மையில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் தினசரி 200-லிருந்து 250 வரை சுற்றுலாப் பயணிகள் பயனடைகின்றனர். தற்போது தனியார் நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் படகுத்துறை (போட் அவுஸ்) ஒன்று வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது. மேலும், சிறுவர்களைக் கவரும் வண்ணம் இங்கு முதலைப் பண்ணை ஒன்றும், மான் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. பல்வேறு வகை வண்ண ரோஜாப் பண்ணை ஒன்றும் பெரிய அளவில் அணையின் அடிவாரத்தில் உள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிடங்கள் அமைப்பது, கழிப்பிடங்கள் அமைப்பது, உணவு விடுதிகள் அமைப்பது, பேருந்து நிற்குமிடம் அமைப்பது, பாதுகாப்பிற்காகச் சிறு காவல் நிலையம் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. சுமார் ரூ.2 இலட்சம் செலவில் ஆழியாறு நீரைக் குழாய் மூலம் எடுத்துச் சென்று பாறையின் வழியாகப் பாய்ச்சி, செயற்கை நீர் அருவி ஒன்றும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. சமீப காலத்தில் வளர்ந்து வரும் சுற்றுலா மையங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஆனைக்கட்டி உயிரியல் பூங்கா

200 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழக அரசின் உதவியுடன் தனியார் நிறுவனம் ஒன்று ஆனைக்கட்டியில் உயிரியல் பூங்கா ஒன்று அமைத்து வருகிறது. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் இந்த உயிரியல் பூங்கா அமைவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சென்னை வண்டலூரில் உள்ளது போலவே மிருகங்கள் இயற்கையாகச் சுற்றி வருவதுபோல அமைக்கப்படும் இந்த உயிரியல் பூங்கா, இன்னும் இரண்டாண்டுகளில் பொது மக்கள் பார்வைக்குத் திறக்கப்பட உள்ளது. கல்லாறு, ஆழியாறு, அமராவதி பில்லூர் அணைகள் சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடங்களாகும். மிளகு, ஏலக்காய், கிராம்பு, சீரகம் போன்ற பொருட்கள் கல்லாறு பகுதியில் மலிவான விலையில் கிடைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கோயில்கள்

கோவை மாவட்டத்தில் ஆலய வரிசையில் எடுத்துக் கொண்டால், பேரூர், அவிநாசி, மருதமலை உட்பட புகழ் பெற்ற கோயில்கள் பல உள்ளன. அதுவும் பேரூரில் உள்ள நடராசர் ஆலயத்தில் உள்ள கலைநயம் மிக்க சிற்பங்கள் பண்டைய நம் கலைச் சிற்பிகளின் கைவண்ணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. அவிநாசித் தேர் தமிழகத்தில் உள்ள பெரிய தேர்களில் ஒன்று என்ற அளவில் பெருமைமிக்கது. ஈச்சனாரி விநாயகர், தண்டு மாரி அம்மன் கோயில், சிங்காநல்லூர் அரவான் கோயில், வெள்ளிங்கிரி சிவன் கோயில், அன்னூர் சிவன் கோயில், பூண்டி சிவன் கோயில், பொள்ளாச்சி அம்மன் கோயில், வால்பாறை பாலாஜி ஆலயம் ஆகியவை கண்டு மகிழத்தக்க சிறப்பு மிக்க ஆலயங்களாகும்.

குடி கெடுக்கும் குடி

—ஆர். மணிவண்ணன்

நமது நாட்டைப் பொறுத்த அளவில் குடிப்பழக்கம் பொருளாதார ரீதியாகவும், கலாசார வழிமுறையிலும், சமுதாய மேம்பாட்டு நிலையிலும் பெரிய அளவில் கேட்டை விளைவிக்கின்றது.

கற்றோர் முதல் கல்வியறிவில்லாதார் வரை பல நூறாயிரம் பேர் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். குடியினால் ஏற்படும் தவறான விபரீத விளைவுகளைத் தெரிந்து வைத்திருந்தாலும், குடிப்பழக்கத்தில் இவர்களுக்குள்ள உறவை அடியோடு அறுத்தெறிந்து விட்டு வெளியே வரமுடியாமல் உள்ளனர்.

"இதுதான் கடைசிமுறை, இனி மேல் குடிக்கப் போவதில்லை!" என்று அடுத்தடுத்துக் குடிக்கும் போது சபதம் எடுத்துக் கொள்வார்கள். ஆனால், இந்தச் சபதமோ அன்றாடம் செய்யும் சபதமாகத்தான் உள்ளதே தவிர, குடியை விட்டதாகத் தெரியவில்லை!

மது அருந்துபவர்கள் பலவகைப்படுவர். எப்போதாவது குடிப்பது, விழாக்காலங்களில் குடிப்பது. தொல்லையை மறந்திடக் குடிப்பது. நாகரிகத்திற்காகக் குடிப்பது. பழக்கத்திற்கு அடிமையானதால் குடிப்பது; எப்போதும் குடிப்பது என்று இவர்களை வகைப்படுத்தலாம். இந்தப் பட்டியலில் மதுவின் தீமைகளை நன்குணர்ந்தவர்களும் அடங்குவர்!

மது அருந்துவதால் மனித உடலின் எல்லா உறுப்புக்களும் சிறிது சிறிதாகப் பாதிப்புக்குள்ளாகின்றன. மூளை, இருதயம், இரைப்பை, ஈரல், சிறுகுடல், பெருங்குடல், நரம்புகள் இவையெல்லாம் நாளடைவில் பாதிக்கப்படுகின்றன.

மதுவை அருந்துவதால் மூளையின் இயக்கச் சக்தி குறைகின்றது. மூளை மந்த நிலைக்குச் செல்கின்றது. மதுவின் முக்கியமான கருப்பொருள் மூளையைத் தாக்குகின்றது. உடனுக்குடன் மூளை ஆணைகள் பிறப்பித்து, உடல் உறுப்புக்களை 'வேலை செய்!' என்று கட்டளையிட முடியாது காலதாமதமாகின்றது. இதனால் உறுப்புக்கள் அவைகளின் பணிகளைத் தள்ளிப் போடுகின்றன.

மூளை தன்னுடைய உயர்ந்த தன்மையினின்று விலகி, பணியில் மந்தப்படுவதால் மூளைக்கும் நரம்புக்கும் இடையே உள்ள தொடர்பு (communication) குறைந்து வருகின்றது. இதனால் நரம்புகளுக்கு மூளையினின்று வரும் ஆணைகள் சரியாகக் கிடைக்காமல், அவை பணியின்றிச் செயல் முறையில் தளர்ச்சி பெறுகின்றன.

மது உண்ட மூளை பாதிக்கப்படுவதால் இதயமும் பாதிக்கப்படுகிறது. உடலமைப்புக்குத் தக்கவாறு சரியான முறையில் இருந்து வரும் தசைகளில் மாற்றம் ஏற்படுகிறது. இரத்தம் உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் சுழன்று ஓட்டம் தட்டுப்படுகிறது. இரத்தத்தில் நல்ல சதவிகிதத்தில் ஒழுங்காகவும், சீராகவும் கலந்துள்ள பிராணவாயுவை மது உட்கொண்டு விடுகிறது. இதனால் இரத்தத்திற்குத் தேவையான பிராணவாயு குறைந்து கொண்டே வருகிறது. இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் நோய்க்கிருமிகளை அணுகித் தாக்காமல் தடுத்து வருவதையும் மதுவின் மூலப்பொருள் கெடுத்துவிடுகின்றது. வெள்ளணுக்கள் வேலை குறைவினால் நோய்கள் பரவுகின்றன.

உடலில் மூளை, இதயம், நரம்புகள் ஒன்றுக்கொன்று கட்டுப்பாடின்றித் தத்தம் பணிகளைத் தாமதிக்கச் செய்கின்றன. இந்த நேரத்தில் உடம்பு தடுமாடுகின்றது. தள்ளாடித் தள்ளாடி நடக்க வேண்டி வருகின்றது. உடலில் இருக்கும் வலியும், உணர்வும் தற்காலிகமாக மறைவது போல் தெரிகின்றது. மதுவின் சக்தி சென்ற பின்னர் இந்த உபாதைகளுக்கு மனிதன் மறுபடியும் உட்படுகின்றான். இதைப்போக்க மது அருந்துகின்றான். இது நாளடைவில் சங்கிலித் தொடராக வாழ்க்கையில் இணைந்து விடுகின்றது.

குடிப்பழக்கம் உள்ளவர்கள் அதிக அளவில் சிறுநீர் கழிப்பார்கள் சிறுநீரகமும்,சிறுநீர் சேமிப்பு பையும் (Kidney and bladder) இதனால் அதிக உழைப்பிற்கு உள்ளாகின்றன. முறையான உழைப்பைவிட, அதிக உழைப்பினால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, பலவித நோய்கள் வரக் காரணமாகிறது.

மது பானங்களைக் குறைவாகக் குடிப்பவர்களாக இருந்தாலும் சரி, அதிக அளவில் குடிப்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்களின் உடலில் மதுவகையின் வெப்ப அளவுகள் (Calone) அதிகரித்து, உணவு வகைகளின் வெப்ப அளவுகள் குறைக்கப்படுகிறது. எனவே, கொழுப்புச் சத்து அதிகரித்து, உடலுறுப்புகளின் பொதுவான முறையான இயக்கங்கள் பாதிக்கப்படுகின்றன.

குடிப்பழக்கத்தால் தனிமனிதனின் பொருளாதாரம் சீர்கெடுகிறது. திட்டமிட்டபடி குடும்பம் நடத்த முடியாமல் குடிகாரர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்படுகிறார்கள். உணவிற்கும், பிள்ளைகளின் கல்விக்கும் தேவையான பணம் கிடைக்காமல் போகிறது. குடும்பத்தில் மரியாதை குறைந்து, சண்டை சச்சரவுகள் அதிகரித்துப் பிரிவினையும் ஏற்படுகின்றது. சக நண்பர்கள், உறவினர் நம்பிக்கையிழந்து விலகி நிற்கின்றார்கள்.

இல்லாளும் ஒதுக்கி, ஈன்றெடுத்த மக்களும் வெறுத்து, சமுதாயமும் இகழ்ந்து செல்லுமிடமெல்லாம் செல்லாக் காசாக மனிதனை மாற்றும் தன்மை மதுவுக்கு உண்டு. மதுபானம் அருந்துபவர்களின் குடியை, குடி கெடுத்து விடுகின்றது!

நூல் நயம்

கிராம சுயராஜ்யம்

(மகாத்மா காந்தி எழுதியது)
தமிழாக்கம்: அ. ராமசாமி
வெளியீடு:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.
பக்கம்:351 விலை:ரூ.30/-

"கிராம சுயராஜ்யத்தைப் பற்றிய என்னுடைய கருத்து என்னவென்றால், அது ஒரு பூரணக் குடியரசாக, தன்னுடைய ஜீவாதாரமான தேவைகளுக்காக அண்டை அயலார்களை எதிர்பார்க்காத பூரணக் குடியரசாக இருக்கும். அதே சமயம் எதெதற்குப் பிறரைச் சார்ந்திருப்பது அவசியமோ அவைகளில் பிறரைச் சார்ந்திருக்கும்..." இப்படி கிராம சுயராஜ்யத்தின் அமைப்பைக் கூறிச் செல்கிறார் அண்ணல் காந்தியடிகள்.

'கிராமங்கள் இந்தியா' என்பது அண்ணலின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்நூலில் 30 அத்தியாயங்கள் உள்ளன. உடல் உழைப்பு, கூட்டுறவு, பஞ்சாயத்து ராஜ்யம், ஆதாரக் கல்வி கதர், கிராமக் கைத்தொழில்கள், கிராமப் பாதுகாப்பு முதலான கருத்துக்கள் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

கிராம வளர்ச்சிக்கு, முன்னேற்றத்துக்கு அண்ணல் காந்தியடிகள் கூறும் கருத்துக்கள், யோசனைகள் எல்லாம் ஒரு நல்ல சமுதாய அமைப்புக்கு அடித்தளமாக அமையும் எனலாம்.

மாணவர்கள், காந்தீயத்தில் பற்றுடையவர்கள் பொதுவாக எல்லாருமே படித்துப் பயன்பெறக் கூடிய அருமையான நூலாகும் இது. தமிழாக்கம் எளிய இனிய நடையில் உள்ளது. பெரிய எழுத்தில், தெளிவான அச்சமைப்பு.

காற்றுக்குதிரை

ஆசிரியர்: கவியரசர் இளந்தேவன்
வெளியீடு:
வெண்ணிலவுப் பதிப்பகம்,
28ஏ, ஆர்க்காடு தெரு,
தியாகராயநகர், சென்னை-17.
பக்கம்:112 விலை:ரூ.15/-

காற்றுக் குதிரை என்னும் தலைப்பில் மரபுக் கவிதைக் குதிரைகளை உலா வரச் செய்திருக்கிறார் நூலாசிரியர் கவியரசர் இளந்தேவன். புதிய சமுதாயத்தின் மலர்ச்சி, உழைப்பின் பெருமை, தீண்டாமை ஒழிப்பு, தமிழ்வளர்ச்சி, உலக ஒற்றுமை, காதல் மற்றும் பல்வேறு பொருள்கள் குறித்து இடம்பெற்றுள்ள செஞ்சொற் கவிதைகள் படிப்போரின் நெஞ்சைக் குளிர்விக்கின்றன.

நூலாசிரியர், சமுதாயத்தின் இழிநிலையைச் சண்ட மாருதம் போலக் கனன்றெழுந்து தாக்குகிறார்: சான்றாக 'இறைவன் வீட்டு முற்றத்தில்' என்ற கவிதையில்,

பொழுதுபோக்க மீன் பிடித்தால்
உயர்ந்த சாதியா-சிலர்
பொருளைத்தேட மீன் பிடித்தால்
தாழ்ந்த சாதியா

என்னும் வைரவரிகளின் வாயிலாகச் சமுதாயத்திற்குச் சாட்டையடி கொடுக்கிறார்.

அம்பேத்கர், பாவேந்தர், நெல்சன் மண்டேலா, விவேகாநந்தர், ராஜீவ் காந்தி ஆகிய பெருமக்கள் குறித்து எழுதப் பெற்றுள்ள கவிதைகள் இதயத்தைத் தொடுகின்றன. இனிமையான உவமைகள், அருமையான சொல்லாட்சி, புதுமையான அணுகுமுறை, புரட்சிகரமான சிந்தனை, துணிச்சலான கருத்துரை, தூய்மையான நோக்கம், பொன்னான தத்துவங்கள், பொருத்தமான தலைப்புகள் இக்கவிதைத் தொகுப்பில் உள்ளன. மொத்தத்தில் இந்நூல் கன்னல் சாறு- கனிச்சுளை- கற்கண்டுப் படையல் எனச் சுவையூட்டுகிறது.

கர்ப்பக்கோள் மருத்துவம்

ஆசிரியர்:
டாக்டர் எஸ். சிதம்பர தாணுப்பிள்ளை
வெளியீடு:
சித்த மருத்துவ நூல்
ஆராய்ச்சி நிலையம்,
இ 32, அண்ணாநகர் (கிழக்கு)
சென்னை-600 102.
பக்கம்:134 விலை:ரூ.35/-

அகத்தியர் பாடல் போல, எண்சீர் விருத்தத்தில் எழுதப்பட்ட இந்நூல், ஆசிரியரின் தமிழ்ப் புலமைக்கும் மருத்துவத் திறமைக்கும் சான்று பகர்கிறது. எளிமையான செய்யுள்கள் எனினும் மருத்துவச் சொற்களுக்குரிய விளக்கங்கள் எல்லோருக்கும் எளிதில் புரிய வேண்டும் என்பதால் இந்நூலுக்கு உரையையும் நூலாசிரியரே, எழுதியிருப்பது பாராட்டுக்குரியது.

மங்கையர்க்கு வாய்த்த தனிப்பேறான மகப்பேறு, பேறுகால நோய்கள், அவற்றை நீக்குதற்குரிய மருந்துகள், மகப்பேறு கிட்டுவதற்குரிய மருத்துவ முறை, கருவை வளர்க்கும் விதம், குழந்தை எளிதில் பிறப்பதற்குரிய வழிவகை - இப்படிப் பல்வேறு செய்திகள் இந்நூலில் செறிந்துள்ளன. சித்த வைத்தியத்தின் தனிப்பெரும் சிறப்பு இந்நூலால் தெற்றென விளங்குகிறது. பேறுகால நோய்களை, நீக்குவதற்கும் தடுப்பதற்கும் உரிய அறிவை, இந்நூலைப் படிப்பதன் மூலம் பெறலாம்.

—தமிழ்ப்பித்தன்

புதுமழை
(குழந்தைப் பாடல்கள்)

ஆசிரியர்: தண்டரை முகில்வண்ணன்
வெளியீடு:
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.
பக்கம்:40 விலை:ரூ.5/-

குழந்தைப் பாடல்களில் ஓசைக்குத்தான் முதலிடம் என்பதைக் கருத்தில் கொண்டு எளிமையான சந்தங்களில், பெரிய விஞ்ஞானக் கருத்துக்களைக் குழந்தைகள் பாடி மகிழுமாறு ஆக்கியிருக்கிறார்.

'காற்று' பாடலில்,

'மூக்கில் நுழைந்தால் மூச்சாவாய் - என்
நாக்கில் தவழ்ந்தால் பேச்சாவாய்'.

என்ற வரிகளில் கவிஞரின் கவித்துவம் புலனாகிறது.

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

1992-93-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடன், மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சட்டப் பேரவைக்கு வரும் காட்சி (6.3.'92).

இரண்டாம் அட்டை:

இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்திப் பேருந்தை இயக்கிடும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (28.2.'92).

நான்காம் அட்டை:

ஒரு இலட்சம் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைத்தார் (3.3.92).

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 564036, 568037

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு

தமிழரசு
1-4-1992

Khadi Kraft HONEY!
A pure product of nectar and pollen now comes your way!

Nature's bounty comes your way. Now from Khadi Kraft. In the shape of honey a sweetener, so pure and divine. A food product for the family. Khadi Kraft Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal as a soft drink. A true miracle food. Khadi Kraft Honey comes in enticing bottles.

Honey-Nature's own gift!
For you and the family.

Available at all
Khadi Kraft

Tamilnadu Khadi and Village Industries Board,
Kuralagam, Madras-600 108

இந்த இதழில்...

சட்டமன்றத்தில் ...	2
காவிரி (கவிதை) ...	4
தமிழகத்தில் மின்வெட்டே இல்லை! —மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ...	5
மதுவிலக்கு ஆயத்தீர்வை, தீயணைப்புத்துறை, காவல்துறை - விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை ...	9
நெஞ்சையள்ளும் செஞ்சி ...	19
பெரியார் மாவட்டத்தில் சமுதாய நலப்பணிகள் ...	22
காவியமும் கற்பனையும் (இலக்கியம்) ...	24
தண்டமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ...	27
கீரைகளின் மருத்துவக் குணங்கள் (மருத்துவம்) ...	30
சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் சலுகைகள் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு ...	44
பயணிகளின் சொர்க்கம் கன்னியாகுமரி ...	46

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
பங்குனித் திங்கள் - 19
மலர்:22 இதழ்:19
1-4-1992

சென்னையில் குழந்தைகள் திரைப்பட விழா!

குழந்தைகள் திரைப்பட விழா சென்னையில் ஜூன் மாதம் நடத்தப் படஉள்ளது. தமிழக அரசும் இந்தியக் குழந்தைகள் சங்கமும் இவ்விழாவை நடத்தும்.

இந்தியக் குழந்தைகள் திரைப்பட சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அல்லது அந்தச் சங்கத்திடம் உரிமம் பெற்று வெளியிடப்படும் திரைப் படங்களுக்குக் கேளிக்கை வரி ரத்து செய்யப்படும். இதன்மூலம் அதிக அளவில் குழந்தைகளுக்கான திரைப் படங்களைத் தமிழ் மொழியில் தயாரிக்க வாய்ப்பு உருவாகும்.

மதுவின் தீமையைப் பிரச்சாரம் செய்யும் நோக்குடன் அரசு சார்பில் ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக் கப்படும் திரைப்படம், மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். இதேபோலத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர் ஆர்.எஸ். மனோகர் ரூ.2 இலட்சம் செலவில் தயாரிக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகம் மே மாதம் முதல் தேதி அரங்கேற்றப்படும்.

ஆபாச சுவரொட்டி

ஆபாசமான சுவரொட்டிகள் ஒட்டினால் அரசு கடுமையான நட வடிக்கை எடுக்கும்.

திரையரங்குகளில் போலி நுழை வுச் சீட்டுகள் விற்கப்படுவதைத் தடுக்கவும் அரசு கடுமையான நட வடிக்கை எடுத்து வருகிறது.

அண்ணா சாலை மேம்பாலம்

சென்னையில் உள்ள அண்ணா சாலையில், போக்குவரத்து நெரி சலைக் குறைக்க 12.8 கி.மீ. தூரத் திற்குத் தனிவழிப் பேருந்து மேம் பாலம் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டம் குறித்துப் பொறியாளர் களின் ஆய்வுக்கு விடப்பட்டுள்ளது. 1987-இல் நாள் ஒன்றுக்கு அண்ணா சாலையில் 94,600 மோட்டார் வாகனங்கள் ஓடியதாகவும், 2011-இல் 1,77,800 வாகனங்கள் ஓடக்கூடும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

1989-இல் சென்னைப் பெரு நகர் வளர்ச்சிக் குழுமத்தின் உதவி யுடன் பல்லவன் போக்குவரத்து ஆய்வுக்குழுவால் 2000-ஆம் ஆண்டில் வாகனக் கொள்ளளவு பற்றி ஆராயப்பட்டது.

சட்டமன்றத்தில்...

பிற்படுத்தப்பட்டோர் நலனை ஆராய புதிய கமிஷன்

பிற்படுத்தப்பட்டோர் நலன்களை ஆராய மூன்றாவதாக ஒரு கமிஷனை அமைக்கத் தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (23.3.1992).

193689

தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ரூ.9 கோடியே 72 இலட்சம் வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அறிவித்தார்

இந்தத் தொகையில் 1,500 ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு 4 கோடியே 75 இலட்சம் ரூபாயும், வேலைவாய்ப்புக்காக ரூபாய் 3 கோடியும், இதர பணிகளுக்காக ரூபாய் ஒரு கோடியே 97 இலட்சமும் ஆக மொத்தம் 9 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

(23.3.1992).

மாணவிகளுக்கு 13 புதிய விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவிகளுக்காக இவ்வாண்டு தமிழ்நாட்டில் 23 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் 13 புதிய விடுதிகள் கட்டப்படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை, 31.3.92 அன்று, இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஸ்ரீஜனசி எனும் சமணப் பெரியாரின் மடத்தைச் சார்ந்த சமணப் பெண் துறவிகள் சந்தித்தனர்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளில் ரூபாய் 15 இலட்சம் செலவில் நூலகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பணிகளுக்குத் தேர்வு எழுத மாணவ- மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க ரூ.35 இலட்சம் செலவில் தனிப்பயிற்சி நிலையம் ஒன்று சென்னையில் கட்டப்படும் என்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார் (23.3.1992).

எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார். (24.3.1992).

3 புதிய பாலிடெக்னிக்குகள்

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்காகச் சென்னை, தருமபுரி மற்றும் திருநெல்வேலியில் மூன்று புதிய பாலிடெக்னிக்குகள் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

மின்சாரத்தில் ஓடும் பஸ்

தமிழகத்திலேயே முதன்முறையாகச் சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகமும், கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகமும் மின்கலத்தால் (பேட்டரி) இயக்கப்படும் பேருந்துகளைப் பரீட்சார்த்தமாக இயக்கும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் அறிவித்தார் (24.3.1992).

வனப்பகுதிகளில் திருட்டுகளைத் தடுக்க ரூ.52 இலட்சம் செலவில் 45 வயர்லெஸ் கருவிகள் அமைக்கப்படும் என்றும் - நடப்பு ஆண்டில் புதிதாக 2,000 பேருந்துகள் இயக்கப்படும். 1,842 பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (24.3.1992).

பார்வையாளருக்குக் கட்டணம்

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளை பார்க்கச் செல்லும் பார்வையாளர்களிடம் இனி கட்டணம் வசூலிக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை. அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார் (20.3.1992).

மக்கள் குறை நீக்க...

மாவட்ட மக்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் 22 புதிய துணை மாவட்ட ஆட்சியரை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார் (19.3.1992).

சத்யஜித்ரேக்குப் 'பாரத ரத்னா' விருது

உலகப் புகழ்பெற்ற வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரேக்கு இந்தியாவில் வழங்கப்படும் விருதுகளில் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறைக்கு இவர் ஆற்றியுள்ள சேவையைப் பாராட்டி இவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

திரு. சத்யஜித்ரேக்கு 1959-இல் 'பத்ம ஸ்ரீ' பட்டமும், 1965-இல் 'பத்ம பூஷன்' பட்டமும், 1976-இல் 'பத்ம விபூஷன்' பட்டமும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

காவிரி

மடந்தையெழில் காவிரியாள் கடலை யடைய
மகிழ்ச்சியுடன் வருகின்றாள் தமிழகந்தான்
அடைந்திடத்தான் செய்வதும்நம் கடமையாகும்
அஃதேதான் நடுவர்தம் தீர்ப்பும் ஆகும்.
''நடந்தாய்வாழி காவேரி'' என்று சொல்லும்
நல்லுரைக்குப் பொருளாகும் அவள் நடந்தால்!
நடந்துஅவள் வருவதாலே செழிக்கும் நாடே!
நீருக்குத் தடை போட்டால் நேரும் கேடே!

தென்னாட்டுக் கங்கைதானே காவிரி யாறும்?
தடுத்தாலதைச் செழித்திடுமா ஒருமைப்பாடும்
தென்னகந்தான் செழித்திடவே கங்கை நீரைத்
திருப்பிடுவார், அதுவரைக்கும் காவிரிதானே!
இந்தியத்தாய் பெற்றெடுத்த மக்கள் நாமே.
இனிதேதான் ஒற்றுமையாய் வாழ்வதாலே
தண்ணீரை யிரக்கமின்றித் தடுத்தா லங்கே
தழைப்பதெங்கே தமிழர்கள்நாம் மடிவோமிங்கே

தஞ்சையுந்தான் சிறந்திடுமா பொன்னி யின்றி?
தானழியும் மனித நேயம் அன்பும் குன்றி
கொஞ்சுமந்த யியற்கையினி யழிந்தே போகும்
குழந்தைகூட சிரிப்பதற்கு மறந்தே போகும்
நஞ்சைநிலம் என்பதப்போ ஏது நாட்டில்?
நெல்மணிகள் வீட்டிலிரா, இருக்கும்ஏட்டில்
புஞ்சைக்கும் பஞ்சந்தான் இனிமேல், வானம்
பருவமழை தருவதில்லை தந்தால் சேதம்!

தண்ணீர்தான் காவிரியில் இல்லை யென்றால்
தமிழ்நாடே கடுகாடாய் வறண்டு போகும்
கண்ணீரே பின்நாளில் செந்நீராகும்
குடிப்பதற்கும் நீரின்றி உயிர்கள் சாகும்
அன்னையினும் தயவுடைய முதல்வர் தம்மின்
அறிவுத்திறம், அணுகுமுறை, ஆற்றல் தம்மால்
மண்ணகமே போற்றப் பல வெற்றி கொண்டார்
மகத்தான வெற்றிதனை யிதிலும் கொள்வார்.

கேசவாநந்த கிருஷ்ண குரு

'தமிழகத்தில் மின்வெட்டே இல்லை'

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தின் ஈடில்லாத் தொழில் வளர்ச்சிக்கும், தொழில் பெருக்கத்திற்கும் மின்சாரம் இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த இந்த அரசு பொறுப்பு ஏற்ற நாள் முதல் மின் உற்பத்தியை அதிகரிப்பதில் முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

கடுமையான சூழ்நிலையினிடையே இந்த அரசு பொறுப்பு ஏற்றபொழுது உயர் அழுத்தத் தொழிற்சாலைகளில் மின் உபயோகத்தில் 25 சதவிகித மின் வெட்டும், மின் சுமையில் (Maximum Demand) 30 சதவிகித மின் வெட்டும் அமலில் இருந்து வந்தது. இதனால் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்ட

சென்னை துரித இரயில் திட்டம்: கூட்டு நிறுவனம் அமைப்பு

சென்னை விரைவு போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளைச் செயல்படுத்தத் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிறுவனத்துக்குச் ''சென்னை மாநகர விரைவுப்போக்குவரத்து நிறுவனம்'' எனப் பெயரிடப்படும். கூட்டுத்துறை நிறுவனமாக இது செயல்படும். சென்னை துரித இரயில் இரண்டாம் கட்டப் பணிகள் மயிலாப்பூர்லலிருந்து தரமணி வரை செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக இந்த நிறுவனத்தின் பங்குத் தொகைக்கு அரசின் பங்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 190 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரைவாகச் செயல்படுத்தத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் பல்வேறு நிதி நிறுவனங்கள், கூட்டுத்துறை தொழிலதிபர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் என்று மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. டி.எம்.செல்வகணபதி அவர்கள் அறிவித்தார் (27.3.'92).

தோடு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலையும் கணிசமாக அதிகரித்தது.

மின்னாக்கிகள் (Generators) மிக அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டதால், டீசல்

நுகர்வும் (Consumption) அதிகரித்து, பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. இயற்கை ஒரு புறம் உதவாத நிலையில், மற்றொருபுறம் அனல் மின் நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலக்கரி கிடைக்காது ஓரிரு நாட்களுக்கு மட்டுமே நிலக்கரி கையிருப்பு உள்ள அவல நிலை இருந்தது.

மக்கள் நலனில் தீவிர ஆர்வம் கொண்ட இந்த அரசு எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, இந்நிலை தற்போது முற்றிலும் மாற்றப்பட்டு ஒரு மாதத்திற்குத் தேவையான நிலக்கரி நம் கைவசம் தாராளமாக உள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் இந்த அரசு எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கைகளின் காரணமாகத் தற்போது நன்முறையில் இயக்கப்பட்டு, தங்களுடைய முழுமையான உற்பத்தித் திறனை எட்டியுள்ளன. புனல் மின் சக்தி நிலையங்களும் சிறந்த முறையில் தங்கள் முழு உற்பத்தித் திறன் அளவிற்கு மின் உற்பத்தி செய்ய தேவையான நீரையும் இயற்கை நமக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்த ஆண்டு அளித்துள்ளது.

நாங்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் பலனாகச் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு மின் உற்பத்தி சுமார் 10 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியில் நாம் எடுத்துக் கொண்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் காரணமாக, மின் வினியோகத்தில் தற்போது அமலில் உள்ள மின் சுமையில் 10 சதவிகித மின் வெட்டையும் (Power cut) இன்று முதல் முழுமையாக நீக்க ஆணையிட்டுள்ளேன்.

தமிழகத்தின் சரித்திரத்தில் இது ஒரு மாபெரும் திருப்பு முனை ஆகும். கோடைக்காலத்தில் மின் வெட்டு அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்புகளை எதிர்பார்த்த தமிழக மக்களுக்கு, மின்வெட்டே இல்லை என்ற இந்தச் செய்தி தேனாக இனிக்கும் என நான் நம்புகிறேன்.

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் 26.3.92ல் வெளியிட்ட அறிவிப்பு)

டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் இந்த ஆண்டே புதுப்பிக்கப்படும்

கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவகத்தை மாற்றி அமைக்கும் பணி அவரது நினைவு நாளான டிசம்பர் 24- ஆம் தேதிக்குள் முடிவடையும்.

எம்.ஜி.ஆரின் நினைவகத்தை மாற்றி அமைக்க ரூ.1.25 கோடியில்

திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல ராஜீவ் காந்திக்கு ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகப் பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையில் உள்ள குழுவில் நானும் உறுப்பினராக இருக்கிறேன். ராஜீவ் காந்தி நினைவகத்துக்கு வடிவமைக்கப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

திருவள்ளுவர் சிலை

கன்னியாகுமரியில் 135 அடி உயரத் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி, சிற்பக் கலைஞர் கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சிலை, பீடம் ஆகியவற்றை அமைக்கும் பணி சோளிங்கநல்லூர், கன்னியாகுமரி, அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு இதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. பணியின் தன்மைக்கு ஏற்ப அவ்வப்போது தேவையான தொகை ஒதுக்கப்படும்.

தந்தை பெரியார் நினைவகம்

தந்தை பெரியாருக்குக் கேரள மாநிலம் வைக்கத்தில் நினைவகம் அமைக்கும் பணி முடிந்துவிட்டது. அவரது நினைவகம் விரைவில் திறக்கப்படும்.

சிவகங்கையில் சிறப்பாக ஆட்சி புரிந்த மாமன்னர்கள் பெரிய மருது, சின்ன மருது சகோதரர்களுக்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் காளையார் கோயிலில் நினைவுச் சின்னமும் சிலையும் அமைக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. திறப்பு விழா விரைவில் நடைபெறும்.

திரைப்பட நகர்

திரைப்படத் தொழிலுக்காகச் சென்னையில் திரைப்பட நகர் அமைக்க ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா ஏப்ரல் 16-ஆம் தேதி நடத்தப்படும். இந்நகர் அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித்தரக் கூடியதாக அமையும்.

பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் ரூ.400-லிருந்து ரூ.500 ஆக ஏப்ரல் மாதத்திலிருந்து உயர்த்தப்படும்.

மாவட்டத் தலைமையகத்திலிருந்து செய்திகளையும் புகைப்படங்களையும் விரைவாகப் பெற்றிடவும் செய்திகளை அனுப்பவும் ஃபாக்ஸிமிலி என்ற நவீன சாதனம் ரூ.4 இலட்சம் செலவில் சென்னை கோட்டையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை அலுவலகத்தில் வைக்கப்படும்.

கேபிள் டி.வி.

தமிழ்நாடு வீடியோ. கேசட் மூலம் தொலைக்காட்சியில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) தொடர்பாகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்மூலம் கேபிள் டி.வி. தொழில் உரிமம் வழங்கும் முறையின் கீழ், கொண்டு வரப்பட்டுள்ளது. மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களும், சென்னை நகரில் காவல்துறை ஆணையரும் கேபிள் டி.வி.-க்கு உரிமம் வழங்குவார்கள்.

வள்ளுவர் கோட்டம்

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படும்.

செய்தி மையம்

வெளி மாநில மக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் உதவும் வகையில் தில்லியில் தமிழக அரசின் செய்தி மையம் ஒன்று அமைக்கப்படும்.

ஊர்ப்பெயர் பிழைதிருத்தத் தனிக் குழு

தமிழகத்தில் சில ஊர்ப் பெயர்களில் உள்ள இலக்கணப் பிழை, பொருள் பிழைகளைத் திருத்தி சரியான பெயர்களை நடைமுறைக்குக் கொண்டுவர தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உலகத்தமிழ் மாநாடு

டாக்டர் எம்.ஜி.ஆர். முன்பு மதுரையில் நடத்தியதைப் போலத் தமிழ்நாட்டில் மீண்டும் உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த எண்ணியுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

செய்தி-தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்துப் (25.3.'92) பேசுகையில் அவர் கூறியதாவது:

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை மேலும் வலுப்படுத்த உரிய வழிவகைகளைக் கண்டறிய மூத்த தமிழ் அறிஞர்களைக்

கொண்ட குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியக அரங்கில் மாதந்தோறும் 'பண்பாட்டுப் பலகணி' என்ற பெயரில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதைப் போல இனி வாரம் இரு முறை கலை நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்திலுள்ள 2,000-க்கும் மேற்பட்ட கலைப் படிமங்களை வைத்து அரிய கண்காட்சியை அடுத்த மாதத்தில் தொடங்க அரசு உத்தேசித்துள்ளது.

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தி ஊக்கம் அளிக்கும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட, வட்ட நிலை அலுவலர்கள் பங்குபெறும் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை அரசு தொடர்ந்து நடத்தும்.

பாரதிதாசன் பாடல்கள் 3 மொழிகளில் மொழிபெயர்ப்பு

பாவேந்தர் பாரதிதாசனின் 100 பாடல்களை கன்னடம், மலையாளம், தெலுங்கில் மொழி பெயர்த்து வெளியிடும் பணி தொடங்கிவிட்டது.

செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் தயாரிப்புத் திட்டத்தில் இந்த ஆண்டில் 'ஆ' முதல் 'ஔ' முடிய உள்ள இரு பகுதிகள் வெளியிடப்படும்.

தேவநேயப் பாவாணரால் ஆராய்ச்சி செய்து தொகுக்கப்பட்ட அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் பேரகர முதலியின் முதல் பகுதி 1985-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன்பின் 1989-ஆம் ஆண்டு முதல் தன் இயக்கமாகச் செயல்படும் அகர முதலித் திட்ட இயக்ககம் பேரகர முதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்களைச் சொல்லடைவு செய்துள்ளது.

தமிழக மரபு வழிக் கலையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவற்றைப் பதிவு செய்யத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் முடிவு செய்துள்ளது.



தமிழகத்திலுள்ள புகழ் வாய்ந்த வாய்ப்பாட்டுக் கலைஞர்களின் இசையையும் மன்றம் ஒலிப்பேழையில் பதிவு செய்யும்.

உதகை, மதுரை ஆகிய இடங்களில் ஓவியக் கலையரங்கு அமைக்கப்படும்.

ஆட்சிச் சொல்லகராதியின் கையடக்கப் பதிப்பு அச்சில் உள்ளது. அரசு ஊழியருக்குப் பயன்படும் புதிய ஆங்கிலம் தமிழ், தமிழ்-ஆங்கிலம் அகராதிகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றத்தில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை மானிய விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய உரையிலிருந்து (25.3.1992).

நூல் நயம்

இதழியல் உலகில் 'தமிழரசு'

ஆசிரியர்: புலவர் தமிழ்ப்பித்தன்

வெளியீடு:

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு
சென்னை-600 001

விலை: ரூ.35 பக்கம்: 288

தமிழக அரசின் அதிகாரபூர்வ ஏடான 'தமிழரசு' [illegible] கடந்த 21 ஆண்டுகளாக, தகவல் அறிவிப்புச் சாதனங்களில் [illegible] முக்கியப் பங்காற்றி வருகின்றது.

'தமிழரசு' வெறும் அரசு இதழாக மட்டுமின்றி, பல்சுவைத் திங்களிருமுறை இதழாகவும் வெளிவருவதை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

அரசின் திட்டங்களையும், சட்டங்களையும், செயல்பாடுகளையும் தெள்ளத் தெளிவாகக் கூறும் இதழாக மட்டுமின்றி, வெண்பாப் போட்டி, தமிழ் வளர்த்த பெரியார், இலக்கிய விருந்து போன்ற பகுதிகளையும் கொண்டு தமிழிலக்கியத் தொண்டையும் ஆற்றி வருகின்றது.

இதேபோல தலைவர்கள், அறிஞர்கள் நினைவாகச் சிறப்பு மலர்களையும், அரசின் வளர்ச்சிப் பணிகளை விளக்கிடும் மாவட்டச் சிறப்பு மலர்களையும், அரசின் சாதனைகளை விளக்கிடும் தொகுப்பு மலர்களையும், தமிழர் திருநாள் போன்ற சிறப்பிதழ்களையும் வெளியிட்டு வாசகர்களின் மனமுவந்த பாராட்டுகளைப் பெற்று வருகின்றது.

அத்துடன் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர்- அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இலவச இணைப்புகளையும் அவ்வப்போது இது வழங்கி வருகின்றது.

அரசு இதழ்களிலேயே வடிவமைப்பிலும், அச்சமைப்பிலும் இது தன்னிகரற்று விளங்குவது, இதன் தனிச் சிறப்பாகும்.

இத்தனைச் சிறப்புகளையும் உள்ளடக்கிய இந்த நூலை, புலவர் தமிழ்ப்பித்தன் அவர்கள் எழுதியிருப்பது இன்னொரு சிறப்பு அம்சமாகும்.

புலவர் தமிழ்ப்பித்தன் தமிழரசு தொடங்கப்பட்ட காலம் முதலே பணி ஆற்றி வந்தவர். தமிழரசோடு இணைந்து இழைந்து உழைத்தவர். இந்தத் தொகுப்பை எழுத இவரே ஏற்றவர்.

அந்த வகையில் இந்த நூலை மிக அழகாக, தெளிவாக நல்ல தமிழில் எழுதித் தந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

ஒரு அரசு இதழின் ஏறக்குறைய கால் நூற்றாண்டுப் பணிகளைத் தொகுத்தும் பகுத்தும், வகுத்தும் தருவது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. அந்த அருஞ்செயலை ஆற்றியிருக்கின்ற நூலாசிரியரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

இதழியல் உலகில் தமிழரசுக்கு ஒரு' நிலையான இடமுண்டு என்பதைக் காட்டும் காலக் கண்ணாடியாக இந்நூல் விளங்குகிறது.

இளைய தலைமுறையினர்க்கு, குறிப்பாக இதழாராய்ச்சியாளர்க்கு இந்நூல் மிகச் சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை.

- பொ. மறைமலை

ஆரோக்கிய வாழ்விற்குப் பயன்தரும் கீரை வகைகள்

ஆசிரியர்: டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

வெளியீடு:

கற்பகம் புத்தகாலயம்
59, ஆடம் தெரு
மைலாப்பூர், சென்னை-600 004

விலை: ரூ.25 பக்கம்: 222

கீரைகளின் பயன்கள் பற்றி நாம் ஓரளவேனும் அறிந்திருந்தாலும், அவற்றின் முழுப் பயன்கள் மற்றும் செய்முறைகள் பற்றி இந்நூலில் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். இந்திய நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற சுமார் [illegible] கீரை வகைகளின் குண இயல்புகளையும், இந்தக் கீரைகளின் சிறப்பான குணங்கள் பற்றிய சித்தர் பாடல்கள் மற்றும் சங்கப் புலவர்களின் பாடல்களையும் கோடிட்டுக் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, சிறுநீரகம் நன்றாகச் செயல்பட, தீராத இருமலை நிறுத்த, சிலந்திக் கடிக்கு என்று இன்னும் பல்வேறு பிணிகளுக்கு 'ஆடாதொடை' என்ற மூலிகை எவ்வாறு பயன்படுகிறது என்பதை ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். 'துளசி'யின் பயன் நமக்குத் தெரிந்திருந்தாலும், அதன் மூலம் குணமாகும் நோய்கள் பற்றியும் ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

நோயின்றி நீண்ட நாள் நலமுடன் வாழ, எளிதாகக் கிடைக்கும் கீரைகளின் பயன்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

- ஜே. சந்திரன்.

சிந்தனை மொழிகள்

ஆசிரியர்: பெ. வேலுச்சாமி

வெளியீடு:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்,
சென்னை-600 098.

பக்கம்:59 விலை:ரூ.6/-

பழமொழிக்ள் சுவையானவை. சிந்தனையைத் தூண்டுபவை. ஆன்றோர்களின் அனுபவ மொழிகளாகவும் அவை இருப்பதால் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்குபவை. இந்நூலின் ஆசிரியர் அகர வரிசையில் தொடங்கி, பல அரிய பழமொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

''ஒரு துளி மை பத்து இலட்சம் பேர்களைச் சிந்தனை செய்யத் தூண்டக் கூடியது''

''ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு. ஆனால் அம்மனிதனை வெறுக்காதே'' - போன்ற புதுமொழிகளை இடையே புகுத்தியுள்ளது பாராட்டுதற்குரியது.

—சுகுமாரன்

மங்கையர் அனுபவத் தையற்கலை ஆசான் (முதல் மற்றும் இரண்டாம் பாகங்கள்)

ஆசிரியர்: பி. தாமோதரன்

வெளியீடு:

வாணி கலாமந்திர் கலைநூற் பதிப்பகம்
மயிலாப்பூர்,
சென்னை-600 004

விலை: (இரண்டு பாகங்களும் தலா ரூ.45)

இந்நூல், இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. இவை, தையற்கலையின் அடித்தளத்தைப் பலப்படுத்தவும், அதன்மேல் மிகவும் உறுதியான 'தையற்கலை' என்னும் கட்டடத்தை ஏற்றவும் உதவும்.

சாதாரண முறைமட்டுமல்ல இக்கலையின் நூதன முறையும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர், முதல் பக்கத்தில் மங்கையரின் அத்தியாவசியமான உடைகளைப் பற்றிய விளக்கம் கூறியிருக்கிறார். இதில் சோலியைப் பற்றி நான்கு வகைகளைக் குறிப்பிட்டு விளக்கம் கொடுத்திருக்கிறார். சோலியைத் தைக்க அவர் கொடுத்திருக்கும் தெளிவான வரைபடம், விளக்கவுரை, நூதன முறையைச் சொல்லி இருக்கும் விதம், மிகச் சுலபமாக நாம் மாதிரி பேப்பர் பேட்டர்ன் எடுத்து தைத்து விடலாம். ஆங்காங்கே இவர் கொடுத்திருக்கும் குறிப்பு மிகவும் உதவியாக இருக்கிறது. இப்புத்தகத்தில் மேலும் சில நவநாகரீக ஆடைகளை குறிப்பாகத் தேர்ந்தெடுத்து விளக்கம் தந்திருக்கிறார். — இ. நித்தியக்கல்யாணி

மதுவிலக்கு - ஆயத்தீர்வை
தீயணைப்புத்துறை - காவல்துறை
விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில்
மாண்புமிகு முதல்வர் பதிலுரை !

அரசியல் சாதுரியமும், தொலைநோக்குப் பார்வையும் படைத்த தமிழக மக்கள், தமிழகத்தில் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், அக்கிரமங்கள், அலங்கோலங்கள், அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் அதிருப்தி அடைந்து, தங்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிற, மக்கள் பணி செய்கிற ஒரு நல்ல நிலையான, முறையான ஆட்சி தமிழகத்திற்கு வரவேண்டும் என எண்ணினார்கள். அந்த எண்ணத்திற்குச் செயல்வடிவம் தந்து, அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த எங்களைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து, மகத்தான தேர்தல் வெற்றியை வழங்கி, இந்த மாமன்றத்திற்கு, அனுப்பி வைத்தார்கள். நல்லது நடக்கும், பாதுகாப்புக் கிடைக்கும் என்று கருதிய மக்களின் பெரும் எதிர்பார்ப்புகளையும், ஏக்கங்களையும் நிறைவேற்றுகிற வகையில், நாங்கள் உழைத்து வருகிறோம்; இனியும் மக்களுக்கு உழைத்திடத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். ஆட்சிக்கு வந்த 9 மாதங்களுக்குள், இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தினை இப்போது சமர்ப்பித்துள்ளோம். விண்ணை முட்டும் அளவில் மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகள் ஒரு புறம், எதையுமே செய்ய முடியாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை மறுபுறம். இவற்றோடு-தேர்தல் களத்திலே படுதோல்வியைச் சந்தித்தவர்கள், எங்களின் மாபெரும் வெற்றியைக் கண்டு பொறாமைப்பட்டுப் பொறுக்க முடியாதவர்கள், நாங்கள் செய்யும் எதையுமே குற்ற நோக்கோடும், குறுகிய மனப்பான்மையோடும் பார்த்துக்கொண்டு, வசைபாடிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நலன்களுக்காகவும், வசதிகளுக்காகவும் செய்யப்படும் மாபெரும் நற்காரியங்களுக்குக் கூட, மாசு கற்பிக்கிறார்கள்; மனக்குழப்பம் அடைகிறார்கள். இவற்றை எல்லாம் நான் இங்கே சூசகமாகச் சொல்லுவதற்குக் காரணம், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசு தனது கடமையைச் செய்ய வேண்டி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டத்தானே தவிர, யார் மீதும் சுடுசொல்லை வீச வேண்டும் என்பதற்காக அல்ல. மக்களுக்காகச் செயல்படத் தயாராக உள்ள, எங்கள் அரசின் அணுகுமுறை பற்றிய விளக்கங்களை, நான் பல முறை இந்த மாமன்றத்தில் பேசியிருந்தாலும், அவைகளை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளதைக் கருதி, எனது பதிலுரையை வழங்க விழைகிறேன்.

மதுவிலக்கு

நமது மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அவை சர்க்கரையை உற்பத்தி செய்வதோடு, உபபொருளாக (By product) கருப்பஞ்சாற்றுக் கசண்டையையும் (Molasses) உற்பத்தி செய்கின்றன. வடிசாலைகளில் (Distilleries) கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியைத் (Alcohol/Sprit) தயாரிக்கின்றனர். அவ்வாறு தயாரிக்கப்பட்ட சாராவியில் இருந்துதான் சாராயம், மது தயாரிக்கப்படுகிறது. அவை மட்டுமின்றித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பல்வேறு இரசாயனப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, சர்க்கரை ஆலைகளில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வெகுவாகத் தேங்கிக் கிடந்தது. அவற்றை இரும்புத் தொட்டிகளில் சேமித்து வைக்க இடமில்லாததால், திறந்த வெளிகளில் வெட்டப்பட்ட குழிகளில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாய நிலையில் சர்க்கரை ஆலைகள் இருந்தன. இதனால் ஆலைகளுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க, நீண்ட காலத் திட்டங்களையும், குறுகிய காலத் திட்டங்களையும், தொலைநோக்குப் பார்வையோடு வகுக்க, இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. மத்திய அரசின் மூலமாக, ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு, வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

கருப்பஞ்சாற்றுக் கசண்டு தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில், இருந்துவந்த தடை தளர்த்தப்பட்டது. இந்திய அரசின் மூலமாக வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது போன்ற குறுகிய கால நடவடிக்கைகளை, உடனடியாக மேற்கொண்டதால், இந்தப் பிரச்சினை கணிசமான அளவிற்குத் தீர்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சர்க்கரை ஆலைகளால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை வீணாக விடாமல், நாமே நிரந்தரமாகப் பயன்படுத்தும் தொலைநோக்கு எண்ணத்தில், புது வடிசாலைகளை (Distilleries) அமைப்பதற்கு அனுமதி வழங்குவது, என்ற ஒரு கொள்கை முடிவினை இந்த அரசு எடுத்தது. அதில் குறிப்பாகச் சர்க்கரை ஆலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கப்படும் சர்க்கரை ஆலைகளில் தனியாருக்கும் வாய்ப்பு அளிக்கலாம்; அதே நேரத்தில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கொள்கை அடிப்படையில் Aruna Sugars, Aroo.an Sugar Mills, Kothari Sugars & Chemicals Limited, Rajashree Sugars & Chemicals Limited ஆகிய நான்கு தனியார் சர்க்கரை ஆலை நிறுவனங்களுக்கு, ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை, ஆண்டுதோறும் வழங்குவது என்ற ஒரு முடிவை இந்த அரசு எடுத்துள்ளது. இது தவிர, ஏற்கெனவே இயங்கி வரும் வடிசாலைகளை விரிவாக்க விரும்பினால், அவர்களுக்கும் தகுதி அடிப்படையில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்கலாம் என்ற முடிவினையும் இந்த அரசு எடுத்து இருக்கிறது.

அடுத்து, மாநில ஆயத்தீர்வை பற்றிய கருத்தைச் சொல்லுகின்றபோது, டாஸ்கோ நிறுவனத்திடமிருந்து பீர் தொழிற்சாலையை ஏன் விற்றீர்கள்? என்ற ஒரு பெரும் கேள்வி" எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றத்திற்கு நன்றாகவே தெரியும். மலிவு விலை மதுவை ஒழிப்பது இந்த அரசின் கொள்கை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான் மலிவு விலை மதுவைத் தயாரிக்கும் பிளண்டிங் யூனிட்டுகளை நிறுவுவதற்காகத் தமிழ்நாடு சாராவிக் கழகம் (TASCO) என்ற ஒரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. அரசுக்குச் சொந்தமான டாஸ்கோ நிறுவனம்தான், சாராவிக் கலவைத் தொழிற்சாலைகளை நிறுவி நடத்தி வந்தது. இந்தக் கழகம் EMPEE DISTILLERY என்னும் தனியார் பீர் தொழிற்சாலையை அரசுத் தரப்பில் எடுத்துக் கொண்டு பீர் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

இந்த அரசு பதவி ஏற்றவுடன், மலிவு விலை மதுவை ஒழித்து, அரசுத் துறையில் பீர், மது போன்றவற்றை உற்பத்தி செய்வதைக் கைவிட வேண்டும் என்ற கொள்கை முடிவு எடுத்தது.

மலிவு விலை மதுவை ஒழித்ததால், அதைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை (பிளண்டிங் யூனிட்டுகளை) மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. டாஸ்கோ நிறுவனத்தின் பெரும் வேலையாகிய சாராயத் தயாரிப்பு ஒழிக்கப்பட்டபின், டாஸ்கோ நிறுவனத்தின் வேலை வெகுவாகக் குறைந்து விட்டது. அந்த நேரத்தில் இந்த பீர் தொழிற்சாலையை மட்டும் நடத்துகின்ற ஒரு சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக முந்தைய அரசு வாங்கிய பீர் தொழிற்சாலையைத் திரும்பக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தச் சூழ்நிலையில், யாரிடமிருந்து அந்தத் தொழிற்சாலையை எடுக்கப்பட்டதோ, அவருக்கே, அவர் விரும்பினால், திருப்பிக் கொடுப்பதில் முன்னுரிமை வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இது நியாயமும் கூட. அதன்படி, ஏற்கெனவே யாரிடமிருந்து இந்தத் தொழிற்சாலையை அரசு வாங்கியதோ - அவருக்கே தற்போதைய விலை நிர்ணயிக்கப்பட்டு, அதுவும் உயர்மட்ட அதிகாரிகளையும், வல்லுநர்களையும் கொண்ட குழு நிர்ணயித்த விலைக்கே விற்கப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பில் சுட்டிக் காட்டியபடி, ரூ.8.02 கோடிக்கு 1989-இல் வாங்கிய இந்தத் தொழிற்சாலை இப்போது ரூ.10.44 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன். ஒரு வேளை Empee Distillery - தனக்கு இந்த பீர் தொழிற்சாலையை வேண்டாம் என்று சொல்லியிருந்தால், டெண்டர் முறையைப் பின்பற்றி அது விற்பனை செய்யப்பட்டிருக்கும். எனவே, இதனை விற்றதில், அரசுக்கு இலாபமே தவிர எவ்வித இழப்பும் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதே சந்தர்ப்பத்தில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இப்போது மூடிக்கிடக்கின்ற சாராவிக் கலவை ஆலைகள், ஆவினுக்குக் கொடுப்பதாகக் கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறதே, இதை வைத்து ஆவின் நிறுவனத்தார் என்ன செய்ய போகிறார்கள்? அவர்கள் சாராயமா தயாரிக்கப் போகிறார்கள் என்று கேட்டார்.

'ஆவின்' மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனம், சென்னை மாநகரத்தில் 'ஆவின்' மூலமாகப் பால் பொட்டலங்கள் வழங்கப்படுவது, உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதைப்போல ஏனைய நகரங்களில் பால் பொட்டலங்கள் வழங்குவதற்கு, இந்தச் சாராவி கலவைத் தொழிற்சாலைகள் மூலமாக ஏற்பாடு செய்வதற்காகத் தான், 'ஆவின்' நிறுவனத்தார் சில பிளண்டிங் யூனிட்டுகளைக் கேட்கிறார்கள். சாராயப் பாக்கெட் போடும் அதே மெஷின்களைச் சிறிது மாற்றம் செய்து, பால் பாக்கெட் போட 'ஆவின்' நிறுவனத்தால் பயன்படுத்த இயலும் என்பதற்குத் தான் அவர்கள் கேட்கிறார்கள். ஆகவே அவர்களுக்குக் கொடுத்ததுபோக எஞ்சிய இயந்திரங்களை ஏனையவர்களுக்கும், மற்றவர்களுக்கும் விற்கலாம். எப்படி விற்பது, என்ன விலைக்கு விற்பது என்பதற்கு, அதிகாரிகளைக் கொண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாராவி கலவை ஆலைகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.22 கோடி ஆகும்.

இதே பொருள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு பி.வி. ராஜேந்திரன் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தார். அவருக்கும் .இதில் விளக்கம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அயல் நாட்டு மது, பீர் போன்றவற்றைப் பொருத்த வரையில், முந்தைய காலங்களில் நடந்து வந்ததைப் போல, 5 தனியார் நிறுவனங்கள் மூலமாக அவை தயாரிக்கப்பட்டு, அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (TASMAC) மூலம் மொத்தமாக வாங்கப்பட்டு, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சில்லரை விற்பனைக் கடைகளின் மூலம், விற்பனை செய்யப்படுகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய (தி.மு.க.) அரசின் காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மது வகைகளுக்கும் பீர்களுக்கும், விலை நிர்ணயித்துப் பரிந்துரைக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. இம்முறையினால் பல குறைபாடுகளும், அரசிற்கு இழப்புகளும் ஏற்பட்டன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் மொத்த வியாபாரதாரராகிய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மார்க்கெட் நிலவரத்தை அறிந்து உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடி, விலை நிர்ணயிக்கும் முறை இருந்தது. எங்கள் அரசும் அந்த முறையையே பின்பற்றலாம் என்று முடிவு செய்துள்ளது. சில்லரைக் கடையாளர்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும், ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்குமேல் இலாபம் வைத்து விற்கக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. சில்லறைக் கடைகள் எல்லாம் உரிய காலத்தில் ஏலத்திற்கு விடப்படும் என்பதையும், இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பூவுக்குள்ளே நாகம் போல...

மலிவு விலை சாராயத்தை ஒழித்ததில் மெத்த மகிழ்ச்சி அடையும் அதேநேரத்தில், 'கள்ளச் சாராயம் தாராளமாகவும், ஏராளமாகவும் கிடைக்கிறது' என்ற ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் பழித்தும்; இல்லை, இல்லை அவை கட்டுப்படுத்தப் பட்டுள்ளது, ஏன்; பல பகுதிகளில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது' என்று பலர் பாராட்டியும் குறிப்பிட்ட கருத்துக்கள், என் கவனத்தை ஈர்த்துள்ளன.

என்னைப் பொறுத்த வரையில், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையை உறிஞ்சி, அவர்களது உயிரைக் குடிக்கும் மலிவு விலை சாராயத்தை, இந்த மாநிலத்தை விட்டே விரட்ட வேண்டும்; முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதில் நான் தீவிரமாக இருக்கின்றேன் என்பதை, ஆணித்தரமாக மீண்டும் கூற விரும்புகிறேன். எக்காரணத்தை முன்னிட்டும் இந்த முடிவினைத் தளர்த்த நாங்கள் தயாராக இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

இதற்காக வெளியிடப்பட்டுள்ள ஆணைகளும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் முடிவில்லாத் தொடர்கதையாகத் தொடருமே தவிர, முடிந்து விட்ட சிறுகதையாக இருக்காது என்பதையும், இங்கே உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நோக்கத்தை அடைவதற்காக உருவாக்கப் பட்ட சிறப்புப் பிரிவைச் சார்ந்த காவல்துறை அலுவலர்களும், வருவாய்த்துறை அலுவலர்களும், சமீப காலத்தில் எடுத்துள்ள அதிரடி நடவடிக்கைகள், அதன்மூலம் கைப்பற்றிய பொருட்கள், கையாண்ட கெடுபிடி யுக்திகள், மற்றும் அவர்கள் பணியாற்றிய பாங்கு, செயல்படுத்திய வேகம், அனைத்தும் நமது பாராட்டுக்கு உரியவை ஆகும். அண்டை மாநிலத்திலிருந்து கடத்தி வரப்படும் சாராயங்களைக் கைப்பற்றுவது, கள்ளச்சாராயம் காய்ச்சும் இடங்களைக் கண்டறிந்து சோதனையிட்டு அவற்றை அழிப்பது, மேலும் இந்த வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளையும், பெரும் புள்ளிகளையும், கடத்தல்காரர்களையும் உடன் கைது செய்வது, போன்ற தீவிர நடவடிக்கைகளால், இவர்களின் கொட்டம் பெருமளவு அடக்கப்பட்டு இருக்கிறது; இருந்தாலும் பூவுக்குள்ளே நாகம் இருப்பதுபோல, சில புல்லுருவிகள், கொடியவர்கள், நமது கண்காணிப்பையும், கவனத்தையும் தாண்டி, ஏதுமறியாத ஏழை மக்களின் இன்னுயிரைப் போக்கிடும் ஈனச் செயல்களைத் திட்டமிட்டுச் சில இடங்களில் செய்து விடுகிறார்கள்.

அவர்கள் சில காலம் தப்பி வாழலாம். ஆனால் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால், மறுநாளே அவர்கள் கைது செய்யப்படுகிற நிலைமை உருவாகிவிடும்.

ஒருபுறம் கள்ளச்சாராயத்தைத் தடுப்பது, மறுபுறம் மதுவைக் குடிப்பதால் மன வளத்திற்கும்,

உடல் நலத்திற்கும் கேடு என்ற கருத்தை நாடெங்கிலும், குறிப்பாக ஏழை எளியவர்கள் மத்தியில் வேகமாகப் பரப்பவேண்டும் என்பதில், இந்த அரசு மிகுந்த தீவிரத்தைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை, இந்த மாமன்றம் நன்றாக அறியும். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும், மதுவை விலக்க வேண்டும் என்பதில், மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்கள் எவரிடமும் இருப்பதற்கு நியாயம் இல்லை.

ஓரணியில் திரளுவோம்

மதுவை விலக்குவதை, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதை, ஒரு மாபெரும் சமுதாய இயக்கமாக மாற்றுவதற்கு மக்கள் முன்வர வேண்டும். மக்களிடம் அதற்குரிய பொதுக் கருத்து உருவாக்கப்பட வேண்டும்; அந்த நோக்கத்தில்தான் மாநில மட்டத்தில், பிரச்சாரக் குழு ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட, வட்டார, கிராம அளவிலும் இதுபோன்ற குழுக்களை அமைத்து, மதுவிலக்குக் கொள்கைகளின் அவசியத்தை மக்களிடம் வலியுறுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, நாடகம், சினிமா, போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களை முழுமையாகப் பயன்படுத்தி, மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை உருவாக்க நாம் அனைவரும் ஒரே அணியில் திரண்டிட வேண்டும்.

தீயால் ஏற்பட்ட சேதத்தைத் தடுப்பதும், அதில் சிக்குண்டோரின் உயிரையும், உடைமைகளையும் காப்பதும், அரசின் தலையாய கடமை என்ற எண்ணத்தின் செயல்பாடாகத்தான், தீயணைப்புத் துறை நிறுவப்பட்டுள்ளது. தீ விபத்தோடு நில்லாது, ஏனைய விபத்துக் காலங்களிலும், மீட்புப் பணிக்குத் தீயணைப்புத் துறையினர் பயன்பட்டு வருகிறார்கள். இதுபோன்ற பயனுள்ள மற்ற பல சேவைகளிலும் இவர்களுக்குப் பங்குண்டு.

நமது தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில், கடந்த 25 ஆண்டுக் காலமாக, நற்பணியை ஆற்றி நல்ல பெயர் எடுத்துள்ளது. நடப்பு நிதியாண்டில், ஜனவரி 1992 முடிய, தமிழகம் முழுமையும் உள்ள தீயணைப்பு நிலையங்களில், 11,982 'தீ' அழைப்புகள் வரப்பெற்று, அவற்றிற்குத் தகுந்த மேல் நடவடிக்கையும் எடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் தீ விபத்துக்களினால் ஏற்பட்ட பொருட்சேதத்தின் மதிப்பு, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 10.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் துறையினரால் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் மதிப்பு, சுமார் 53.50 கோடி ரூபாய் என்ற உண்மையும் குறிப்பிடத்தக்கது. 2,763 மீட்பு அழைப்புகளையும், 3,500-க்கு மேற்பட்ட நோயாளி ஊர்தி அழைப்புகளையும், இத்துறை சந்தித்து, நன்முறையில் கையாண்டுள்ளது.

பெரும் தீ விபத்துக்களில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், கடந்த 12.7.91 அன்று காமராசர் மாவட்டம், மீனப்பட்டி கிராமத்திலுள்ள Dawn Fireworks Industries என்ற பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்தத் தீ விபத்தில் 39 பேர் உயிர் இழந்தனர். உரிய நேரத்தில் சென்று தீயணைப்புப் படை அலுவலர்களும், பணியாளர்களும் தங்கள் உயிரைத் துச்சமென மதித்துப் போராடி, 72 நபர்களைத் தீ விபத்து நடந்த இடத்திலிருந்து உயிருடன் மீட்ட சாதனை, இந்தத் துறையின் பணிகளுக்கு வைத்த மகுடம் ஆகும். இந்தத் தீ விபத்தில் சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களுக்குச் சேதம் எற்பட்டிருந்தாலும், 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எந்த மாநிலத்தையும்விட...

அடுத்து, சமீபத்தில் கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் பயனாக, 18.2.92 அன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில், இறந்தவர்களையும், காயமடைந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களையும் திறமையாக மீட்டு, மிகக் குறுகிய கால கட்டத்திற்குள் அவர்களை அரசு மருத்துவமனையில் அனுமதித்து, தீயணைப்புத் துறையினர் காத்தனர் என்பதை அனைவரும் அறிவர். தமிழ்நாடு தீயணைப்புத் துறை, அகில. இந்திய அளவில் தனக்கெனத் தனியொரு பெயரையும், புகழையும் பெற்றுள்ளது என்றால், அது மிகையாகாது.

மேலும் தீயணைப்பு நிலையங்களின் தேவை பற்றிப் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பல சந்தர்ப்பங்களில் வினவியபோதிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில்தான் தீயணைப்பு நிலையங்கள் அதிகமாக நிறுவப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடு

ஆடுதானே என்று அலட்சியம் வேண்டாம். பால், உரோமம், உரம் இவற்றோடு அதன் இறைச்சியும், தோலும் கூட நமக்கு உபயோகப்படுகின்றன. ஆண்டொன்றுக்கு நம்நாட்டில் 41 இலட்சம் டன் இறைச்சியும், 18 இலட்சம் டன் பாலும் ஆட்டினால் கிடைக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

உலகில் 557 மில்லியன் ஆடுகள் உள்ளன; ஆசியாவில் மட்டும் 322 மில்லியன். உலக உற்பத்தியோடு ஒப்பிடுகையில், ஆசிய ஆடுகள் மூலம் பெறப்படும் பால், இறைச்சி அளவு முறையே 47 சதவிகிதம், 64 சதவிகிதம் ஆகும்.

எனவே, கிராம ஏழைகளின் வருமானம்-வேலை வாய்ப்பு பெருகவும், சத்தான பால்-இறைச்சி கிடைக்கவும் ஆடுகள் அவசியம்தானே! இதற்காகத்தான், அண்மையில் புது தில்லியில் 'ஆடுகள்' பற்றி ஐந்தாவது சர்வதேச மாநாடு நடைபெற்றது.

தற்போது 205 தீயணைப்பு நிலையங்கள் உள்ள இத்துறையில், சுமார் 5,763 பேர் பணிபுரிகின்றனர். இத்துறையில் 237 நீர்தாங்கி வண்டிகளும், 75 நோயாளர் ஊர்திகளும், 193 இதர ஊர்திகளும், 59 சிறப்புச் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஊர்திகளைப் பழுது பார்க்கத் தனிப் பணிமனையும், பட்டறையும் இருக்கின்றன. பணியில் செம்மை சேர்த்திட, பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்திட ஒரு பயிற்சிப் பள்ளியும் இயங்குகின்றது. பழைய பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன.

நவீன தீயணைப்பு இயந்திரங்கள்

குறிப்பிட்ட உழைப்புக் காலத்தை முடித்து, பயன்படுத்த இயலா நிலையை அடைந்த ஊர்திகளை ஒதுக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாகப் புதிய ஊர்திகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவைகளைத் தவிர, நமது தீயணைப்புத் துறையின் இன்னொரு முக்கிய அம்சம், அடுக்கு மாடிக் கட்டடங்களிலும், பாதையே இல்லாத குடிசைப் பகுதிகளிலும், தீ விபத்தைத் தடுப்பதற்கும், அதில் சிக்குண்டவர்களை மீட்பதற்கெனவும் மிக நவீன தீயணைப்பு இயந்திரங்களை ரூ.3.32 கோடிக்கு ஜப்பான் நாட்டிலிருந்து வாங்கி, அதை இப்பொழுது பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இந்த இஸுசு (ISUZU) சுழல் மேஜை ஏணி, அடுக்கு மாடிக் கட்டடங்களில் விபத்துக்களில் சிக்கியவர்களை, வேகமாக வெளியேற்றி மீட்க உதவும் கருவியாகும். இந்தியாவிலேயே, நாக்பூர் தேசிய தீயணைப்புக் கல்லூரியைத் தவிர, தமிழகத்தில்தான் இதுபோன்ற நவீன சுழல் மேஜை ஏணி பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தின் எல்லா இடங்களிலும் 25 கி.மீ. தொலைவுக்கும், ஒரு தீயணைப்பு நிலையம் இருந்தாக வேண்டும்; உடனடி சேவைக்கு அது தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதில், இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. குறிப்பாகத் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகள், குடிசைகள், மண்டிக் கிடக்கும் பகுதிகள் போன்ற இடங்களுக்குத் தனி முக்கியத்துவம் அளித்து, தீயணைப்பு நிலையங்கள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கோடைக் காலங்களில், குறிப்பாக அதிக அளவு தீ விபத்து ஏற்படா வண்ணம் தடுப்பதற்காகப் பற்கோல், (Fire Rake) கூரை கொக்கி (Ceiling Hook) போன்ற எளிய தீயணைப்புச் சாதனங்களை, குடிசைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள புறநகர் தீயணைப்பு நிலையங்களில் தயாராக வைத்திருந்து, அப்பகுதிகளில் இத்துறை அலுவலர்கள் இரவு பகல் எந்நேரமும் பணியாற்றுவதுடன், தீ விபத்து பற்றித் தொடர்பு கொள்வதற்கு 'வாக்கி டாக்கி' கருவிகளும் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாகக் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள் பெருமளவு கட்டுப்படுத்துவதோடு, உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் குறைக்கப்பட்டுள்ளன.

மனம் உண்டு பணம் இல்லை!

இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, 9 தீயணைப்பு நிலையங்களைத் திறக்க ஆணை பிறப்பித்தது. இந்த ஆண்டில் மட்டும் குளச்சல், தென்கனிக்கோட்டை, சேத்தியாத்தோப்பு, வேதாரண்யம், மண்டபம், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில், புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் திறக்கவிருக்கிறோம் என்ற செய்தியை, மகிழ்ச்சியுடன் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ற மனம் எனக்கு இருக்கிறது; ஆனால் அரசு கஜானாவில் போதிய பணம்தான் இல்லை. தற்போது வரையறுத்த வருவாயும், நிதிப்பற்றாக்குறையும் இருந்தபோதிலும், தீயணைப்புப் பணியில் ஈடுபடுவோரின் நலன் பேணப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது.

நல நிதி உயர்வு

இதனை மனதில் கொண்டுதான், சென்ற வரவு-செலவுத் திட்டத்தில், இத்துறையில் பணிபுரிவோருக்கு வழங்கும் உணவுப்படியை, இந்த அரசு உயர்த்தி வழங்கியது. பஞ்சால் ஆன சீருடை டெரிகாட்டன் சீருடையாக மாற்றப்பட்டது; தீயணைப்புப் படையினருக்கான நல நிதி (Benevolent Fund) அறுபது ஆயிரம் ரூபாயிலிருந்து, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கியது.

தீயணைப்புப் பணியாளர்களின் நலன், இந்த ஆண்டு இந்தத் துறையில் பணிபுரிவோருக்குச் சீருடை சலவைப் படி மாதந்தோறும் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

1. கோட்ட தீயணைப்பு அலுவலரின் படி ரூ.30 என்பது ரூ.40 ஆக உயர்த்தப்படுகிறது.

2. துணைக் கோட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலர் (நிலையப் போக்குவரத்து அலுவலர் உட்பட) ஆகியோரின் படி ரூ.20 என்பது ரூ.30 ஆக உயர்த்தப்படுகிறது.

3. லீடிங் பயர்மென் மற்றும் அவருக்குக் கீழ் (Leading Fireman & below) உள்ளோரின் படி ரூ.15 என்பது ரூ.25 ஆக உயர்த்தப்படுகிறது.

இதனால் அரசுக்கு ஏற்படும் மொத்த செலவு, ஆண்டொன்றுக்குச் சுமார் ரூபாய் 6.50 இலட்சம் ஆகும். இதனால் 5,427 பேர்கள் பயனடைவார்கள்.

வளரும் தேவைகளை விரைந்து சந்திக்க இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்தி, புதுப்புது அணுகுமுறைகளைக் கையாண்டு, இந்தத் துறையை மென்மேலும் பயனுள்ள ஒரு சிறந்த துறையாக ஆக்கி, இதில் பணிபுரிவோர்களின் குறைகளைக் கனிவோடு பரிசீலித்து, அவர்களைப் பேணிக் காத்து, நாட்டு

மக்களின் நலம் காக்க அவர்களை முழுமையாகப் பயன்படுத்த, இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும்.

பொது அமைதிகாக்கும் காவல் துறை

நாட்டில் அமைதியான ஒரு சூழ்நிலையை ஆக்கித் தருவது ஆட்சியின் தலையாய பொறுப்பு. குறிப்பாக மக்களின் மன அமைதிக்குச் சுற்றுச் சூழ்நிலை மிக மிக இன்றியமையாதது. இதற்கத் தான், கற்காலத்தில் இருந்து தற்காலம் வரை ஆட்சியாளர்கள் முன்னுரிமையும் முக்கியத்துவமும் கொடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். பப்ளிக் ஆர்டர் (Public Order) என்று சொல்லப்படுகின்ற பொது அமைதியை நேரடியாகச் செயல்படுத்தும் அரசு இயந்திரம்தான் காவல் துறை. குற்றம், கொடுமைகளைக் களைந்து, அமைதி காத்து மக்களின் உயிரையும், உடமையையும் பேணிப்பாதுகாத்துச் செயல்படும் பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்ததாகும்.

சுருக்கமாகச் சொன்னால் கடமை ஆற்றும் போது தன் உயிரைப் பணயம் வைத்து மற்றவர் உயிரையும், உடமையையும் காக்க வேண்டிய கட்டாயமும் காவல்துறையினருக்கு உண்டு. எனக்குக் கிடைத்த தகவலின்படி இந்த நாட்டில், இராணுவ வீரர்கள் சண்டையிட்டு ஆண்டுதோறும் மடியும் எண்ணிக்கையைவிட, கடமையில் இறக்கின்ற காவல்துறையினர் அதிகம் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

இருந்தும் இவர்களின் பணியை, பணியாற்றும் விதத்தை இங்கே பேசிய உறுப்பினர்களில் சிலர் விமர்சித்து இருக்கிறார்கள். நல்ல விமர்சனங்கள் நன்மைகளையும் வழங்கும் ஆற்றல் பெற்றவை என்பது எனக்குத் தெரியும். உறுப்பினர்களில் சிலர் காவல் நிலையங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிக் கடுமையாக இங்கே சாடி இருக்கிறார்கள். காவல்துறையினர், பரிகாரம் தேடி வருவோரிடம் பக்குவம் காட்டாது, கடுமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் சில இடங்களில் காவல் துறையினரே குற்றவாளிகள் உருவாகக் காரணமாக இருக்கிறார்கள் என்ற பெரும் குறைபாட்டையும் கோபத்தோடு இங்கே கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். நாட்டில் குற்றங்கள் மலிந்துவிட்டன, நடவடிக்கை எடுக்கும் தரம் போதாது என்பது போன்ற பல்வேறு கோணங்களிலிருந்து காவல் துறையினரின் செயல்பாட்டினை நமது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தப் பின்னணியில் நீங்கள் கூறியவை அனைத்தும் உண்மையற்றவை என்று ஒதுக்கவும் முடியாது; அத்தனையும் முழுக்க முழுக்கச் சரியானது எனவும் எடுத்துக் கொள்ளவும் முடியாது.

அதே நேரத்தில், உண்மையான குறைபாடுகள் உடனடியாகக் களையப்படவேண்டும்; அவைகளுக்குக் காரணமானவர்கள் இனம் கண்டு கண்டிக்கப்படவும், தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. காவல் துறை தக்கன செய்தால் தட்டிக் கொடுப்பதும், தகாதன செய்தால் தட்டிக் கேட்பதும் இவ்வரசின் அணுகுமுறை என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். காவல்துறையின் இயக்கத்தில் தயக்கம் ஏற்படாதவாறு, என்னென்ன நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டுமோ அதைச் செய்ய இந்த அரசு தயங்காது என்பதையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காலை உணவு வாழைப்பழம்!

நம் நாட்டில் காலை உணவாக் அரிசி அல்லது கோதுமைப் பண்டங்களை உண்ணுகின்றனர். ஆனால், ஜப்பானில் காலை உணவாகப் பெரும்பாலும் பாலையும், வாழைப்பழத்தையும் பயன்படுத்துகிறார்கள்.

வாழைப்பழத்தை ஜப்பான் இறக்குமதி செய்கிறது. விளையாட்டு வீரர்கள் கூடப் போட்டிக்குப் போகும் முன்பு அதிக வைட்டமின் அடங்கிய, எளிதில் செரிக்கக்கூடிய உணவாக வாழைப்பழத்தைச் சாப்பிடுகிறார்கள். வாழைப்பழத்தையும், பாலையும் கலந்து சுவைக்கப் பானமாகச் செய்து பருகுகிறார்கள். இதில் வைட்டமின்கள்; தாதுக்கள் உள்ளன. மேலும், இந்த வாழைப்பழத்தில் பூரி கூடச் செய்து சாப்பிடுகின்றனர் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

இன்றைய சூழ்நிலையில், அரசாக இருந்தாலும் சரி; அதைச் சார்ந்த எந்த அமைப்பாக இருந்தாலும் சரி - விரைந்து செயல்படுவதில், சட்ட வழியில் தொடர்ந்து இயங்குவதில் எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நீங்களும் அறிவீர்கள்; நானும் அறிவேன். அளவுக்கு மீறிய மக்கள் பெருக்கம், அதனால் விளைந்த சமூக பொருளாதார சிக்கல்கள், கேடுகள் மனித நேயத்தின் வீழ்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. அதே நேரம் மக்கள் தமது கடமையை மறந்து உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளத் துடிக்கும் ஆர்வம் அதிகமாக வளர்ந்துள்ளது. இன்னொரு பக்கம், சட்டம் மற்றும்அதிகாரத்தைப் போற்றாத தன்மை, அரசியல் குறுக்கீடு, ஆகியவை சமூகத்தின் பூதாகார பிரச்சினையாக இருக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில், காவல் பணி ஆற்றுவது மிக மிகக் கடினமான வேலைதான் என்பது நம் அனைவருக்கும் தெரியும். காவல்துறையைப் பொருத்த வரையில், இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அதில் போதுமான ஆட்கள் இல்லாததோடு, துரிதமாகப் பணி புரிய உதவும் ஆயு

தங்கள், சாதனங்கள் வண்டிகள் போதாத நிலையும் உள்ளது.

காவல்துறை சாதனைகள்

இத்தனை இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், நமது காவல்துறை சந்தித்த சவால்கள், நிகழ்த்திய சாதனைகள், குவித்த வெற்றிகள், கடமையின் போது காட்டிய வீரம், மற்றும் வினைத் திட்பம், இவற்றையெல்லாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். அவர்களின் செயல்பாடுகளைச் சில சமயங்களில் நேரடியாகவும் நான் கண்ட அனுபவத்தையும் நினைவு கூர்கிறேன். விடுதலைப் புலிகள், அவர்களுக்கு உதவிய தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகள், ஆகியோரின் கொட்டத்தை அடக்கி, அமளிக்காடாகி இருந்த தமிழகத்தின் ஆயுத கலாச்சாரத்தை விரட்டி அடித்து, எங்கள் ஆட்சியின் மூலம் தமிழகத்தில் அமைதியை நிலவ வைத்த பெருமை, தமிழகக் காவல்துறையினரை வெகுவாகச் சாரும் என்கிற என் கருத்தை, நீங்கள் அனைவரும் ஏற்று இருக்கிறீர்கள் என எண்ணுகிறேன்.

இந்த அரசு பொறுப்பு ஏற்கும் முன், முந்தைய அரசு காலத்தில், விடுதலைப் புலியினருக்கு அளித்த ஆதரவு, அனுசரணை, பரிவு, பச்சாதாபம், அதனால் இந்த மாநிலத்திற்கும், இந்திய நாட்டிற்கும் விளைந்த கேடு, அவர்கள் அடித்த கொள்ளை, செய்த கொலை, அச்சுறுத்தல், அடாவடித்தனம், நடத்திய கடத்தல் மற்றும் சுரண்டல் ஆகியன பற்றியும், அதன்பின் எங்கள் ஆட்சி வந்த உடன், எடுத்த அதிரடி நடவடிக்கையால், அடுக்கடுக்கான திட்டங்களால், செயல்பாடுகளால், அவர்கள் எப்படி அடக்கப்பட்டனர் என்பதையும், நான் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் நீங்கள் இல்லை.

இன்றைய தினம் விடுதலைப் புலியினர் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது என்ற நிலையை, இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. இதற்குப் பெரும் பின்னணியாக நின்றவர்கள் காவல் துறையினர் என்றால், அது மிகையாகாது. அதே நேரத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ந்து விட்ட ஒன்றாகவும் கொள்ள முடியவில்லை. எனவே இவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு தொடர்கிறது.

காவல்துறையினரைக் கொண்டு கடற்படைப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது; தமிழ்நாட்டைச் சேர்ந்த கடத்தல்காரர்களுக்கும், விடுதலைப் புலியினருக்கும் இடையே உள்ள தீய தொடர்புகளையும் அதன் விளைவாக எழக்கூடிய சட்ட விரோத நடவடிக்கைகளையும் தகர்த்தெறிய உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்குள்ளே விடுதலைப் புலிகளின்பால் பரிவு காட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருவோர்களைச் செயலிழக்கச் செய்யப்படுகிறது; விடுதலைப் புலிகளின் பல்வேறு மறைவிடங்களைக் கண்டுபிடித்து அவர்களை வெளியேற்றும் முயற்சி தொடர்கிறது; விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்புச் சாதனங்கள் இன்னும் இருப்பின் அவற்றைக் கண்டுபிடித்து அழிக்கும் வேலை நடந்து வருகிறது.

விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுடைய அனுதாபிகள் யாரேனும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களை ஒடுக்குவது போன்ற பணிகள் இன்னும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. மேற்கூறிய நோக்கங்களுக்காகக் கடற்கரையை ஒட்டிய முக்கியப் பகுதிகளில் 34 சோதனைச் சாவடிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சோதனைச் சாவடிகளில் லைட் மெஷின் துப்பாக்கி, ஸ்டேன் கன் (Sten Gun) துப்பாக்கி, ஏ.கே. 47 துப்பாக்கி ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையினர் பணியாற்றி வருகின்றனர். கடற்கரைப் பகுதி முழுவதையும் கண்காணிக்கின்ற வகையில் வாகன ரோந்தும் நடை ரோந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. வான் வசதித் தகவல் தொடர்புச் சாதனங்களும் அதிரடிப் படையினரும், அதிவேகமாக ஓடும் வாகனங்களும், முக்கியப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணியில் 10 கம்பெனி மத்திய ரிசர்வ் படையினரும், 10 கம்பெனி தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரும் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அகதிகள் முகாம்கள் முறைப்படுத்தப்பட்டு உள்ளன. அகதி முகாம்களில் இல்லாத இலங்கைத் தமிழர்களும் இனம் காணப்பட்டுள்ளனர். சுருங்கக் கூறின் விடுதலைப் புலிகளுக்காக வெடிகுண்டு, வெடிமருந்து, எரிபொருள்கள், மருந்து வகைகள், சீருடை துணிகள் மற்றும் இதர பொருட்கள் வழங்கும் நபர்கள் முழு அளவில் ஒடுக்கப்பட்டுள்ளனர். கள்ளத்தனமாக வெடிகுண்டுகள் தயாரிக்கப்பட்ட இடமும் கண்டுபிடிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் கள்ளத்தனமாகப் பயன்படுத்திய திறம் வாய்ந்த தகவல் தொடர்புச் சாதனங்களும், பெரும் அளவில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. இயந்திரங்களையும் ஆயுதங்களையும் வாங்குவதற்காக உலகம் முழுவதும் உள்ள இலங்கைத் தமிழர்கள் அந்நியச் செலாவணியில் செலுத்தியுள்ள பணத்தில் இதற்கான செலவினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுவிட்டன. விடுதலைப் புலிகளின் கொள்கை பரப்புப் பிரிவின் சார்பாகத் தமிழகத்தில் கள்ளத்தனமாக இயங்கி வந்த அச்சகம் ஒன்று காவல்துறையினரால் கண்டுபிடித்து நிறுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினரின் மகத்தான பணி

நமது காவல்துறையைக் கொண்டு நாகப்பட்டினம், இராமேஸ்வரம் எல்லையில் ஏற்கெனவே இயங்கி வரும் கடற்படைப் பிரிவு தவிர, புதிதாக 5 கடற்படைப் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கடல் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு உள்ளனர் இந்தியக் கடற்படை,

சுற்றுலா

நமது நாட்டின் இயற்கை அழகினைக் கண்டு களிக்க வெளிநாட்டினர் வந்தவண்ணம் உள்ளனர். கடந்த ஆண்டு 16,77,461 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து உள்ளனர். அந்நியச் சுற்றுலாப் பயணிகளின் வரவால் ரூ.2,918 கோடி அந்நியச் செலாவணி நமக்குக் கிடைத்தது.

வெளிநாட்டுப் பயணிகளின் வரவை அதிகரிப்பதற்காக, சிறப்பு சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதியைப் பெருக்குதல், வெளிநாடுகளில் விளம்பரங்களைச் செய்தல் முதலிய பணிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. காலத்தால் அழியாத ஓவியங்களையும், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களையும் காண வரும் 'வெளிநாட்டினர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவது கண்கூடு!

—நன்றி: 'தூவானம்'

கடலோரப் பாதுகாப்புப் படை, தமிழ்நாடு காவல் துறையினர் ஆகியோர் இணைந்து எல்லா வகையிலும் செயல்படுவதால் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் அடங்கி விட்டார்கள், ஒடுங்கி இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடிகிறது.

நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விஷயத்தில் காவல் துறையினரின் பணி மகத்தானது.

தி.மு.க. அரசு காலத்தில் விநியோகிக்கப்பட்ட மலிவு சாராயத்தை இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே (16.7.91-லிருந்து) ஒழித்து விட்டது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். மலிவு சாராயத்தை ஒழித்த அதே நேரத்தில் கள்ளச் சாராயம் தனது கை வரிசையைக் காட்டி விடும் என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால் இதற்கென ஒரு சிறப்புக் காவல் துறைப் பிரிவினை உருவாக்கியதை நீங்கள் அறிவீர்கள். அதன்பின் இந்தச் சிறப்புக் காவல் துறை பிரிவினர் தமிழகம் முழுவதும் பம்பரமாகச் சுழன்று பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கள்ளச் சாராயம் காய்ச்சும் இடங்களையெல்லாம் கண்டுபிடித்துச் சோதனையிட்டு, கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றி அழித்தனர்.

காவல் துறையினரும் கிராம அலுவலர்களும் இணைந்து எடுத்த நடவடிக்கைகளின் பயனால் இன்று கள்ளச்சாராயம் வெகுவாகக் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சருக்கும், முக்கியப் பிரமுகர்களுக்கும் சிறப்புப் பாதுகாப்பு அளிப்பதற்கென ஒரு தனிப் பாதுகாப்புக் குழு காவல் துறையிரைக் கொண்டு அண்மையில் தொடங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பயிற்சி; வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளினால், இவர்கள் எல்லாம் மத்திய அரசின் கருப்புப் பூனைப் படையினருக்குச் சமமாக அமையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளனர் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவிக்க விழைகிறேன். தமிழகக் காவல்துறையினரின் சில சிறப்புகளை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

அகில இந்திய அந்தஸ்து

சமீபத்தில் நடந்தேறிய அகில இந்திய பணி சார்ந்த போட்டியில், நமது மாநிலக் காவல் துறையினர், பிற மாநிலக் காவல்துறையினரை வென்று பல பதக்கங்களைப் பெற்றுத் தமது அகில இந்திய அந்தஸ்த்தை நிலை நாட்டியுள்ளனர் என்ற செய்தியும் நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவத்தை உலகிற்கு வழங்கிய தமிழ் மண்ணில் சாதி, சமய, இனக் கலவரங்கள் எழுவது எந்த வகையிலும் நியாயம் இல்லைதான். ஆனால் பல்வேறு மாநிலங்களில் வீசுகின்ற இந்த விஷக்காற்று, சிற்சில சமயங்களில் தமிழகத்தை நோக்கியும் தனது வீச்சை விரிவுபடுத்தி வருகிறது. இந்த வகையில் நிகழ்ந்த ஒருசில நிகழ்ச்சிகள் மிகச் சிறு சிறு காரணங்களாலும் விரும்பத்தகாதவர்களின் தலையீட்டினாலும், ஒரு சில அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் உருவானவை, என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். அதே நேரத்தில் சாதி மத அடிப்படையில் வெறுப்பு உணர்ச்சியைத் தூண்டும் வகுப்புவாத சக்திகளை இந்த அரசு இனம் கண்டு, இரும்புக்கரம் கொண்டு அடக்கி உள்ளது.

1991-ஆம் ஆண்டில் 33 வகுப்புவாத மோதல்கள் நிகழ்ந்தன. அதில் 5 பேர் உயிர் இழந்தனர்; 88 பேர் காயம் அடைந்தனர். சட்டம் ஒழுங்கைக் காக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 11 முறை துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்து 13 பேர் உயிர் இழந்தனர் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தச் சம்பவங்களின்பொழுது 207 காவல் துறையினரும், அதிகாரிகளும் பலத்த காயமடைந்தனர் என்ற உண்மையும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு காயம் பட்டபோதும் காவல் துறையினர் கோபத்தைக் கட்டவிழ்த்துவிடாது, நிதானத்தைக் கடைப்பிடித்தனர் என்பது பாராட்டுதலுக்குரியது; பலராலும் வரவேற்கக் கூடியது. எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்கிற முயற்சியில், தேவையான விமர்சனங்கள் செய்யப்படுவதில் தவறில்லை. ஆனால்

(தொடர்ச்சி. 33,—ஆம் பக்கம் பார்க்க)

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

கதர் கிராமத் தொழில் பணிகள்

கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திடவும், கதர் கிராமத் தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கதர் அலகுகள்

இம்மாவட்டத்தில் 28 கிராமிய நூற்பு நிலையங்கள், 5 கதர்த் துணைக் கிளைகள், 8 கதர் அங்காடிகள், ஒரு நேபாளித் தறி அலகு, ஒரு ஜக்காடு அலகு, ஒரு பஞ்சடைக்கும் அலகு, ஒரு பிணடம் கிடங்கு ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

கிராமிய நூற்பு நிலையங்கள் மூலம் 585 நூற்பாளர்களுக்கு ரூ 5.90 இலட்சம் கூலியாகவும், கதர்த் துணைக் கிளைகள் மூலம் 172 நெசவாளர்களுக்கு ரூ.1.16 இலட்சம் கூலியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

கதர் மற்றும் பாலிஸ்டர் நூல் உற்பத்தி மற்றும் துணி உற்பத்தி

கதர்நூல் உற்பத்தி 16.30 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய 6:64 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பாலிஸ்டர் நூல் 7 இலட்சம் சிட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய 5.07 இலட்சம் சிட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை

கதர் விற்பனை இந்த ஆண்டுக்கு ரூ.65 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், ஜனவரித் திங்கள் முடிய ரூ.67.20 இலட்சம் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இலக்கை விஞ்சியுள்ளது. கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை இலக்கு ரூ.20 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.16.73 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

காலணி, உற்பத்தி நிலையம் ஒன்றும், காலணி விற்பனை நிலையம் ஒன்றும், சோப்பு அலகு ஒன்றும், கிராம சில்பா ஒன்றும், தேன் பக்குவப்படுத்தும் அலகு ஒன்றும், தேனீப்பண்ணை இரண்டும், தேன் வளர்ப்பு நிலையம் நான்கும் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்த இயங்கி வருகின்றன.

காலணி உற்பத்தி நிலையத்திற்கு இவ்வாண்டு ரூ.25 இலட்சம் உற்பத்திக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு ஜனவரித் திங்கள் முடிய ரூ.3.40 இலட்சம் கூலியாக வழங்கப் பட்டுள்ளது.

காலணி விற்பனை நிலையத்திற்கு இந்த ஆண்டிற்கு விற்பனைக் குறியீடு ரூ.7 இலட்சம் நிர்ணயிக்கப் பட்டதில் ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கிராம சில்பாவிற்கு நடப்பாண்டிற்கு ரூ.7 இலட்சம் விற்பனைக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு



ஜனவரித் திங்கள் முடிய ரூ.4.63 இலட்சம் குறியீட்டளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்குக் கிளஸ்டர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 100 சதவிகிதம் மானியத்துடன் 91 நபர்களுக்கு ரூ.6.37 இலட்சம் ஜனவரித் திங்கள் முடிய வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பின்தங்கிய மக்களுக்காக 13 பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துச் செயல்பட்டு வருகின்றன.

தேனீ வளர்ப்புத் தொழில் இம்மாவட்டத்தில் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. காமனூர், வெள்ளிநீர் வீழ்ச்சி ஆகிய இடங்களில் தேனீ பண்ணை வைத்து, தேனீக் குடும்பங்கள் பெருகவும், தேன் உற்பத்தி பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 4 தேனீ வளர்ப்பு நிலையங்கள் அமைத்துத் தேன் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கிளை நிலையங்களில் உற்பத்தியாகும் தேன்களைத் திண்டுக்கல் தேன் பக்குவப்படுத்தும் அலகில் பக்குவப்படுத்தி, அவை கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சுயதொழில் செய்திட 130 நபர்களுக்குத் தேனீ வளர்ப்புப் பயிற்சியும், 25 நபர்களுக்குக் காகிதப் பொம்மைத் தயாரிக்கும் பயிற்சியும், 10 நபர்களுக்குச் சோப்பு செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குக் காலணி செய்யும் பயிற்சியும், 10 நபர்களுக்குத் தச்சுத் தொழில் பயிற்சியும், 40 நபர்களுக்கு நூற்பு, நெசவுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

மு. பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்கள்

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் உள்ள 24 பேரூராட்சிகளின் வளர்ச்சித் திட்டத்திற்கு, தமிழக அரசு ரூ.38 இலட்சத்து 22 ஆயிரத்து 391 அனுமதித்துள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 22 பேரூராட்சிகளில் 276 வீடுகள் கட்டவும், 12 பேரூராட்சிகளில் 23 சாலைகள் அமைக்கவும், 24 பேரூராட்சிகளில் 33 தார்ச் சாலைகள் அமைக்கவும், 8 பேரூராட்சிகளில் 12 கழிவுநீர்ச் சாக்கடை அமைக்கவும், 10 பேரூராட்சிகளில் 11 சமுதாயக் கூடம் கட்டவும், மேலும் பிற பணிகளுக்காக 16 பேரூராட்சிகளில் 30 பணிகள் செய்திடவும் தமிழக அரசு ரூ.38,22,391 அனுமதியளித்துள்ளது. இப்பணி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டம்

சித்தையன்கோட்டை, வத்தலகுண்டு, நத்தம், பண்ணைக்காடு, நிலக்கோட்டை ஆகிய பேரூராட்சிகளில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடைகள், கிட்டங்கிகள், தங்கும் விடுதிகள், ஆடு அடிக்கும் இடங்கள், பேருந்து நிலையங்கள் கட்டுதல் போன்ற பணிகளுக்காக ரூ.97.55 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. இப்பணிகள் வைப்பு நிதி திட்டத்தின்கீழ் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறைந்த அளவு சுகாதாரப் பணிகள்

ஒட்டன்சத்திரம் பேரூராட்சியில் தனிநபர் கழிப்பறை கட்டுதல் திட்டத்தின்கீழ், 295 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூபாய் ஒரு இலட்சத்து, 45 ஆயிரத்து 66 தமிழக அரசு அனுமதித்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 'குடிநீர் வசதி மற்றும் குடிநீர்க் குழாய் விரிவாக்கப் பணிகளுக்காக நிலக்கோட்டை மற்றும் அம்மையநாயக்கனூர் பேரூராட்சிகளுக்குத் தமிழக அரசு ரூபாய் ஒரு இலட்சம் அனுமதித்துள்ளது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை மார்க்கத்தில், 25 கி.மீ. தூரம் சென்றோமானால், எழுந்து நிற்கும் மலைமீது, விண்தொட நிமிர்ந்து நிற்கின்ற செஞ்சிக்கோட்டையைக் காணலாம். ராஜாதேசிங்கால் புகழ்பெற்ற இந்தக் கோட்டையின் வயது 700- க்கு மேலாகிறது. நாயக்க வம்சத்தாரும், மராட்டியர்களும், மொகலாயர்களும், கர்நாடக நவாபுகளும், ஃபிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் கொலுவிருந்து அரசோச்சிய சிறப்பு மிக்கதான நெஞ்சையள்ளும் செஞ்சிக்கோட்டை வரலாறு தெரிவிக்கும் கட்டுரை இது:

தென்னாட்டில் பல்வேறு மன்னர்கள் எழுப்பிய எழில்மிகு கோட்டைகள் பல உண்டு; எனினும், இன்றைக்கும் பழைய மெருகோடு கவர்ச்சிகரமாகக் காணப்படுவது, தென்னார்க்காடு மாவட்டத்தின் வடமேற்கே, 15 மைல் பரப்பளவில் அமைந்திருக்கின்ற செஞ்சிக்கோட்டை மட்டுமேயாகும்.

ஏறத்தாழ 13-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான், இந்தக் கோட்டைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

நெஞ்சையள்ளும் செஞ்சிக் கோட்டைப் பற்றி எண்ணுகிறபோது, நமக்குத் தேசிங்குராஜனைத் தான் நினைவு வரும்; ஆனால், தொடக்க காலத்தில் மலையுச்சிக் கோட்டையை உருவாக்கியவன் ஆனந்தக்கோன் என்ற சிற்றரசனே என்கிறது வரலாறு.

இளமையில் அப்பகுதியில் ஆடு மாடு மேய்த்து வந்த ஆனந்தகோனுக்கு, ஆங்கோர் பெரும் புதையல் கிடைத்ததாகவும், அதன் மூலம் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்ட அவனே அப்பகுதிக்குத் தன்னை அரசனாக்கிக் கொண்டான் என்றும், அப்போதுதான் அந்த மூன்று மலைகளில் ஒன்றின் மீது முதன்முதல் அவனால் கோட்டை கட்டப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அவனது ஆட்சிக் காலத்தில்

இம்மலைக்கு 'ஆனந்த கிரி' என்ற பெயர் இருந்திருக்கிறது. பிறகு அதுவே 'இராசகிரி' என்று மாற்றம் பெற்றிருக்கிறது.

ஆனந்தக்கோனுக்குப் பிறகு 'கிருஷ்ணக்கோன்' என்பாரின் ஆட்சி அங்கே நிலவியிருக்கிறது. அப்போது, இராசகிரிக் கோட்டைக்குப் பக்கத்துக் குன்றில் இன்னொரு பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டிருக்கிறது; அப்போது முதலே இப்பகுதி 'கிருஷ்ணகிரி' என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

கோனார் வமிச ஆட்சிக்குப் பின், இங்கே குறும்ப வம்சத்தார் ஆட்சிக்கு வந்தார்கள்; 'கோபிலிங்கன்' என்பான் அவர்கள் தலைவனாக இருந்தான்.

அதன்பின், விஜயநகர மன்னர்களின் ஆட்சி தொடங்கியது; கிருஷ்ண தேவராயர், கி.பி.1490-இல் இங்கே துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரை ஆட்சியில் அமர்த்தினார். கி.பி. 1521 வரை இந்த ஆட்சி நீடித்தது.

செஞ்சியை ஆண்ட முதலாவது மன்னர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேதான் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டது; செஞ்சி நகரும் விரிவாக்கப்பட்டது.

கி.பி.1649-இல் இப்பகுதியில் பீஜப்பூர் சுல்தான் ஆட்சிக் கொடி உயர்ந்தது. மாவீரன் சிவாஜி, தெற்கு நோக்கிப் பெரும்படையுடன் வந்தபோது, செஞ்சியை ஆண்ட பீஜப்பூர் சுல்தானின் ஆளுநர் நாசர் முகமது - சிவாஜியின் படைத் தளபதி சந்திப்பு நடைபெற்றது. அப்போது ரூ.50 ஆயிரம் வருவாய் உள்ள ஜாகீரைக் கொடுத்து, செஞ்சியின் ஆட்சி உரிமையைப் பெற்றுக் கொண்டான் அவன்.

மராட்டிய மன்னராட்சிக் காலத்திலும் செஞ்சிக்கோட்டை பலப்படுத்தப்பட்டதுண்டு. சிவாஜியும், சம்பாஜியும், இராமராஜா ஆகியோரும் அரசாண்ட பின் - செஞ்சிக்கோட்டையின் ஆட்சிபீடத்தில் மொகலாயர்கள் அமர்ந்தனர். ஔரங்கசீப் அரசில் பெரும் திறமையாளராக இருந்து புகழ்பெற்ற சுல்பீர் என்பவராலேயே மொகலாயர்கள் இங்கே ஆட்சிக்கு வர முடிந்தது.

பண்டில்கன்டின் தலைவர் சொரூபசிங்கிடம், செஞ்சியை அரசாளும் பொறுப்பை ஒப்படைத்தார் ஔரங்கசீப்.

மன்னர் சொரூபசிங்கிற்குச் சிங்கக்குட்டிபோல் பிறந்தவனே தேசிங்குராஜன்.

இளமை முதலே இணையற்ற வீரனாகத் திகழ்ந்தவன் தேசிங்கு. முகமதுகான் என்னும் முஸ்லீம் சிறுவனே சிறுவயது முதல் தேசிங்குடன் குறைவற்ற நட்புக் கொண்டிருந்தான்.

டில்லி பாதுஷாவிடம் - 'பஞ்ச கல்யாணி' அல்லது 'பாராசாரி' என்று குறிப்பிடப்படும் முரட்டுக் குதிரையொன்று அப்போது இருந்தது; அதை அடக்குகிற வீரனுக்கே அக்குதிரை சொந்தம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தம்முடைய வீரத்தை வெளிப்படுத்த தக்க தருணம் வாய்த்ததாக எண்ணிச் சென்ற சொரூபசிங், அப்பந்தயத்தில் தோற்றுப்போய் டில்லிச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இது பற்றிய விவரங்களைத் தாய் மூலம் அறிந்தான் தேசிங்கு; குதிரையேற்றத்தில் சிறு வயதிலிருந்தே சிறந்த பயிற்சி பெற்றவனான தேசிங்கு 'அந்த முரட்டுக் குதிரையை அடக்கி எப்படியும் தந்தையை மீட்பேன்' என்று சூளுரைத்தான்.

நெஞ்சுறுதியோடும், நண்பன் முகமது கானோடும் டில்லிக்குச் சென்றான்.

செஞ்சிக்கோட்டைக்கு அருகிலுள்ள வெங்கட்ரமணா கோவிலையொட்டிக் காணப்படும் மண்டபத் தூண்கள் சிறந்த கலை நுணுக்கமும் சிற்பச் சிறப்பும் மிக்கவை. ஆயிரங்கால் மண்டபம் அமைப்பதற்காகத் தொடங்கப்பட்ட இப்பணி பாதியில் நின்றுபோனதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட நாளில் - டில்லி பாதுஷாவின் அந்த முரட்டுக் குதிரையை - திரண்டு நின்று வேடிக்கை பார்த்த மக்களெல்லாம் திகைத்துப் போகும் வண்ணம் அடக்கிக் காட்டி, அதன் மீதேறி அமைதியாகச் சவாரி செய்தும் காட்டினான் வீர இளைஞன் தேசிங்கு.

அப்போது அவனுக்கு வயது என்ன தெரியுமா? வெறும் பதினைந்து மட்டுமே!

டில்லி பாதுஷா, தேசிங்கின் விருப்பப்படி அவன் தந்தையை விடுவித்தது மட்டுமல்ல; அந்தப் பஞ்சகல்யாணி குதிரையோடு, விலை மதிப்பற்ற வேறு பல பரிசுப் பொருட்களையும் சிறுவன் தேசிங்கிற்குச் சிந்தை மகிழ்ந்து தந்தனுப்பினார்.

டில்லியிலிருந்து வெற்றி வீரனாகச் செஞ்சிக்குத் திரும்பினான் தேசிங்கு. வயது முதிர்ந்த அவன் தந்தை சொரூபசிங், கி.பி.1716-இல் இயற்கை எய்தினார். அதற்கு அடுத்த ஆண்டே தேசிங்கு ஆட்சி பீடமேறினான். அது முதலே அவன் ராஜா தேசிங்கு எனப்பட்டான்.

கப்பத்தொகை தொடர்பாக - ஆர்க்காடு நவாப் சதாத் உல்லா கானுக்கும் ராஜாதேசிங்கிற்கும் பெரும்பூசல் ஏற்பட்டது.

ராஜாதேசிங்கின் படைத்தலைவனான அவன் தோழன் முகமது கான், தன் திருமணத்தின் பொருட்டு தனது சொந்த ஊரான வழுதாவூருக்குப் போயிருந்தான்.

இதுதான் சமயம் என்று ஆர்க்காட்டு நவாப் செஞ்சியின் மீது முன்னறிவிப்பு ஏதுமின்றிப் போர் தொடுத்தான். ஆர்க்காட்டுப் படையானது அணிவகுத்து வருவது பற்றி, ஒற்றர் மூலம் அறிந்த ராஜா தேசிங்கு, உடனே தன் உயிர் நண்பனும் படைத்தலைவனுமான முகமது கானுக்குச் செய்தியனுப்பினான். மணமேடையில் இருந்த முகமதுகான் இதையறிந்து இதயம் குமுறினான்.

'முதலில் தேசிங்குராஜனுக்கு வெற்றி தேடித்தருவேன்; பிறகுதான் திருமணம்' என்று கூறிக் கொதித்தவனாய்க் குதிரை மீதேறி செஞ்சிக்குப் பறந்தான்.

ராஜாதேசிங்கைச் சந்தித்து 'நானிருக்க பயமேன்' என்று சொல்லாமல் சொல்லி, புயல் வேகத்தில் போர்க்களம் புகுந்தான். அவன் வாள் வேகத்திற்கு ஈடுகொடுக்க அங்கே யாராலும் முடியவில்லை. எதிர்ப்பட்டோர் தலைகளெல்லாம் பந்தாடப்பட்டன.



★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!

'களத்தில் இனி எவருமில்லை வெற்றி நமதே' என்ற களிப்போடு வெற்றிச் செய்தியை ராஜாதேசிங்கிற்கு அறிவிக்க வீரன் முகம்மது கான் அரண்மனைக்குத் திரும்பினான்.

அப்போது, போர் மரபை எண்ணாமல்-எதிர்பாராமல் மறைந்திருந்து தாக்கிய கொடியவன் ஒருவனால் முகமதுகான் கொல்லப்பட்டான்.

தோழன் முகமதுகான் சூழ்ச்சியால் வீழ்த்தப்பட்டதறிந்து, பெரும் படையோடு களம் நோக்கிக் கனல் போல் எழுந்தான் ராஜாதேசிங்கு. நீலவேணி எனப்பட்ட பஞ்சகல்யாணிக் குதிரை, வாயு வேகம் மனோ வேகம் என்பார்களே? அப்படிப் பறந்தது அமர்க்களம் நோக்கி.

இதைக் கேள்விப்பட்டுக் குலை நடுங்கிப் போனான் ஆர்க்காட்டு நவாப். செஞ்சியை அடுத்த சங்கராபரணியாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திவிட்டால் தேசிங்கின் போர்க்களப் பயணத்திற்குப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் என்று எண்ணினான்; முடிவில் - மேல்மலையனூர் ஏரி, தேவனூர் ஏரி, மேலச்சேரி ஏரி ஆகியவைகளின் கரைகளை உடைத்து, ஆற்றில் நீர் பெருகச் செய்தான்.

'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்பார்களே? அதேபோல ஆர்க்காட்டு நவாபு இந்த வகையில் போட்ட கணக்கு தப்புக் கணக்காகி விட்டது; அந்த வெள்ளப் பெருக்கையெல்லாம் துச்சமெனக் கடந்து பறந்தது தேசிங்கின் குதிரை.

ஆர்க்காட்டு நவாப் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கி - அவனது படைவியூகங்களைத் தகர்த்து ராஜா தேசிங்கு பறந்து சென்றபோது, பகைவனொருவனால் - பஞ்ச கல்யாணியாம் குதிரை நீலவேணியின் ஒரு கால் வெட்டப்பட்டது. துள்ளித் துடித்துக் குதிரை கீழே விழ- பாய்ந்தெழுந்த தேசிங்கு ராஜன் எதிர்பாராமல் எதிரி முகாமிலிருந்து வெடித்த பீரங்கிக் குண்டுக்குப் பலியானான். இந்தக் கொடுமை நடந்தது கி.பி. 1714 அக்டோபர் 14-ஆம் நாளில் ஆகும்.

நடுங்கிப் போயிருந்த நவாப், பெருமூச்சு விட்டுக் கொண்டான். 22 வயதே உடைய இளைஞனான தேசிங்குராஜனின் உடலை செஞ்சிக்கு உரிய மரியாதையுடன் எடுத்து வரச் செய்தான்; இந்து சமய முறைப்படி தன் முன்னிலையிலேயே இறுதிச் சடங்குகள் நடைபெறச் செய்தான்.

கணவன் தேசிங்குராஜனின் பிரிவுத்துயரால் அவனது இளம் மனைவியும் உடன் உயிர்நீத்தாள்.

செஞ்சியைக் கைப்பற்றிய நவாப் சாதத் உல்லாகான் இந்த வெற்றிக்காக மகிழ முடியாத அளவுக்கு மனம் கலங்கிப் போனான்; இத்தனை இளமையில் இவ்வளவு வீரமா? என்று ராஜாதேசிங்கைப் போற்றி வியந்தான். ஆர்க்காட்டுக்கு அருகிலேயே ஓர் சிற்றூர் உருவாக்கி, அதற்கு 'இராணிப்பேட்டை' என்று பெயரிட்டான்.

நெஞ்சையள்ளும் நினைவுச் சின்னமான செஞ்சிக்கோட்டை மட்டுமல்ல; இராணிப்பேட்டையும் கூட தேசிங்குராஜனின் தேயாப் புகழை நினைவூட்டிக் கொண்டிருப்பதை நாம் இன்றும் காணலாம்; அவனாண்ட அந்தக் கால வீர வாழ்வை எண்ணிக் களிக்கலாம்.

- புலவர் பழனி. சாமியப்பன்.

பெரியார் மாவட்டத்தில்

சமுதாய நலப் பணிகள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது. பயன்தாரர்கள் தேர்வு 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டு தகுதியுள்ள பயன்தாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வங்கிகளில் கடன் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இது வரை 7,500 பயனாளிகளுக்கு ரூ.162 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் 3,025 நபர்களுக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1991-92-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் செயல்திறன் மற்றும் நிதி ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டு அரசு ஆணை வரப்பெற்றுள்ளது. 1,950 தொகுப்பு வீடுகள், 110 தார்ச் சாலைகள், 125 கப்பிச் சாலைகள், 79 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 22 பள்ளிக் கட்டடங்கள், 22 சத்துணவு மையக் கட்டடங்கள், 18 பாலங்கள், 761 ஊராட்சிப் பணிகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைப் பணிகளுக்காகவும், 450 சமூகக் காடுகள் அமைக்கவும் 20 கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் 17 சிறு பாசனக் குளங்கள் அமைக்கவும் ரூ.846.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ.146.550 இலட்சம் மதிப்பில் 106 பள்ளிக் கட்டடங்களும், ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் 92 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களும், ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கவும், ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் 404 ஊரகக் குடிநீர்களுக்காகவும், ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் 3,500 தெரு விளக்குகள் அமைக்கவும், ரூ.381.71 இலட்சம் மதிப்பீட்டில் 196 கி.மீ. சாலைப் பராமரிப்பு மற்றும் ரூ.27.640 இலட்சம் மதிப்பீட்டில் 22 கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.833.423 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்:

விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.35,000 கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. தற்போது ரூ.5,000 மட்டும் உள்ளது. உரிய பயன்தாரர் பெரியார் மாவட்ட சமூக நல அலுவலருக்கு விண்ணப்பித்து பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்றுகோல் வழங்குதல்

கண் பார்வையற்ற நபர்களுக்குச் சமூக நலத்துறை மூலம் கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்கு ஊன்று கோல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வுதவியை இதுகாறும் பெறாத, இரண்டு கண்களிலும் பார்வையற்ற நபர்கள், மாவட்டச் சமூகநல அலுவலருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு மேற்படி உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆதிதிராவிட விவசாயிகளுக்குப் பாதி விலையில் வேளாண் இடுபொருட்கள்

பெரியார் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிட விவசாயிகளின் நலனுக்காக ஆதிதிராவிட சிறப்பு நலத் திட்டத்தின் கீழ், ரூ.3.3 இலட்சம் மானிய உதவியுடன் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அமோக விளைச்சல் தரும் புதிய ரக நெல் மற்றும் சிறுதானிய விதைகள், பருத்தி மற்றும் பயறுவகை விதைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், நுண்ணூட்டச் சத்து உரங்கள் ஆகியவற்றை வாங்கிடும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் 50 சத மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.750 வரை மானிய உதவிகள் கிடைக்கும். சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே மானிய உதவிகள் பெற்றிருந்தால் அதையும் சேர்த்து மொத்தம் ரூ.750 வரை மானிய உதவியைப் பெறலாம். ஆண்டுதோறும் ஒரே விவசாயியே தொடர்ந்து மேற்கண்ட பயன்களைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு புதிய விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய ஆவன செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, எண்ணெய் வித்து விதைகள், தென்னங் கன்றுகள் ஆகியன ரூ.1.7 இலட்சம் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குப் பாதி விலையில் வழங்கப்படுகின்றன.

சிறப்பு அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.19 இலட்சம் மதிப்புள்ள மானிய உதவிகள் இம் மாவட்டத்திலுள்ள நெல் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 32,480 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கிவருகின்றன.

1992 ஜனவரி திங்கள் முடிய குறுகிய காலக் கடன் ரூ.1327.54 இலட்சமும், மத்திய காலக் கடன் ரூ.203.32 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.753.21 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 193.72 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டுக்கு ஜனவரி 1992 திங்கள் முடிய ரூ.174.71 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித் துறை - தாளவாடி

தாளவாடி உதவி இயக்குநர் அலுவலகம் பெரியார் மாவட்டம் சத்திய மங்கலம் வட்டத்தில் தாளவாடி மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளை உள்ளடக்கியது. இங்கு சுமார் 4,000 மல்பரி பரப்புச் சாகுபடியில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டு குறியீடு 400 ஏக்கருக்கு 1992 ஜனவரித் திங்கள் முடிய 436 மல்பரி புதிய நடவு மேற்கொண்டு சாதனை அடைந்துள்ளது.

மாவட்டத் தொழில் மையம்

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஜனவரி மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதிதிராவிடர்களுக்காக ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 721 நபர்களுக்கு ரூ.160.35 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 200 நபர்களுக்கு ரூ.43.43 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 100 நபர்களுக்கு ரூ.25.13 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 35 வயதுக்குட்பட்டுள்ள ஆண்/பெண்களுக்குக் குடும்ப வருமானம் ஓராண்டுக்கு வருடம் ரூ.10,000-க்கு மிகாமல் இருந்தால் சொந்தமாகத் தொழில் அமைத்து வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புள்ளது.

பட்டு வளர்ப்புத் துறை - ஈரோடு

கடந்த ஆண்டில் 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன. ஜனவரி 1992 வரை 3,12,945.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ.469.41750 இலட்சம் ஆகும்.

நடப்பாண்டில் 600 ஏக்கர்கள் அளவில் மல்பரி பயிர் இறைவை சாகுபடியின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 601.00 ஏக்கர்களில் மல்பரி இறைவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சி பயிற்சிக்கென நடப்பாண்டிற்கு 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ரூ.60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 200 பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு 1992 ஜனவரி மாதம் வரை ரூ.34,358 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு 15 பட்டு நூற்பகங்கள் அமைக்கக் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1992 வரை 24 நூற்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

பிற்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் ரூ.1,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.76,211 செலவு செய்யப்பட்டு இதனால் 3,299 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.14,62,456 செலவு செய்யப்பட்டு 5,615 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,61,136 செலவு செய்யப்பட்டு 1,112 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள்.

இலக்கிய விருந்து:

காவியமும் கற்பனையும்

வித்துவான் எம்.சி.கண்ணபிரான்

காவியம் கற்போருக்கு ஒரு பெரும் நந்தவனம், மலர் வனத்தில் பல நிறமுள்ள மலர்கள் ஒளிர்கின்றன. மணமிகுந்த மலர்கள் கமழ்கின்றன. நிறமும் மணமும் இனிமையும் அழகும் அமைந்த அரும்புகள் மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. அது போல் கவிஞரின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் அழகும் இனிமையும் சுவையும் உணர்வும் தரும் கவிகளாக மலர்ந்து மகிழ்ச்சி தருகின்றன. பாக்களாகிய மலர்களுக்குக் கவிஞர் உணர்வும் கவர்ச்சியும் ஊட்டி உணர்த்துகின்றனர். அங்ஙனம் செய்வதே கற்பனை அல்லது புனைந்துரை எனப்படும். கற்போர் உள்ளத்தில் உவகை தோற்றுவிப்பதே கற்பனை செய்வதன் முக்கிய நோக்கமாகும். கவிஞர், மக்கள் மனப்பாங்குக்கு ஏற்றவாறே கற்பனை செய்து தம் கவிகளை இயற்றுகின்றனர். ஆதலால் காவிய வனங்களில் கற்பனை நிறைந்த கவிமலர் பலவற்றைக் காண்கிறோம். மக்கள் வழக்கத்தில் பயன்படுத்தும் முறைகளைக் கவிஞர் மேற்கொண்டு காவியங்களை இயற்றுகின்றனர்.

மணி அடிக்கிறது. அப்போது, 'பள்ளிக்குச் செல்லும் நேரமாயிற்று; பாடசாலைக்குப் போ' என்கிறாள் பாட்டி. 'பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் நேரமாயிற்று என்று விரைந்து செல்லுகிறார் ஆசிரியர்' 'வண்டி புறப்படும் காலம் நெருங்கிற்று' எனப் பிரயாணம் செய்யும் ஒருவன் வேகமாகச் செல்லுகிறான். வியாபார சம்பந்தமாய் வெளியூர் சென்ற மகன் 'வரவில்லையே' என்று ஏங்கி எதிர்பார்க்கும் ஒரு தாய்க்கு 'இன்று வருவான்' என்றும் கூறும் பாட்டி 'அதோ மணி கூட அடிக்கிறது. கட்டாயம் இன்று வருவான்' என்கிறாள். மணி அடிப்பது எதற்கு என்பதை அப் பாட்டியும் அறிவாள். ஆனாலும், அப்போது பாட்டி கூறும் கருத்தோடு அம்மணியோசையாகிய நிகழ்ச்சியைச் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறாள். தான் கூறுவதை அம்மணியோசை ஆமோதிப்பதாக உறுதி செய்வதாக எடுத்துக் காட்டுகிறாள். மக்கள் இது போலவே, ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசும்போது அப்போது நிகழும் பல்லி சொல்லுக்கோ மக்கள் தும்மலுக்கோ மதிப்புத் தந்து தங்கள் பேச்சோடு அவற்றையும் சம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர்.

வெளியே சென்ற தலைவன் வருவதாகக் கூறிய மாலைக் காலம் வந்ததும் ஒரு காதலி தன் நாயகன் வருவான் என்று எதிர்பார்த்து வராதபடியால் வருத்தப்படுகிறாள்.

மன்னன் வரக் காணேன்
மாலை வந்தது ஈதோ;
மாலை கட்டி நானே,
மகிழ்வாய் சூடுவேனே.

என்று தலைவியின் வருத்தத்தை நாம் எளிய பாடலில் எழுதி மகிழ்கின்றோம். இவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதிய 'முல்லைப் பாட்டு' என்னும் ஒரு நூலில் தலைவி தன் தலைவன் வருகையை எதிர்பார்த்து வராமையால் வருந்தியிருக்கிறாள். அதை அறிந்த தோழி ஆற்றுவிக்கிறாள். அதற்கு, அவள் நான் வெளியே போய் நின்று, 'தலைவர் இப்போது வருவாரா?' என்று எண்ணி நின்றேன். அங்கே ஒரு நற்சொற் கேட்டது. அதாவது, வீட்டிலிருந்து காலையில் மந்தைக்குச் சென்ற தாய்ப் பசு, அந்திப் பொழுதாகியும் வராமையால் தூணில் கட்டப்பட்டிருந்த கன்று 'அம்மா' எனக் கதறியது. ஆங்கிருந்த ஆயர் மங்கை 'இப்பொழுது வருகுவார் தாயார்' என்று கூறினாள். அந்தச் சொல்லைக் கேட்டு வந்தேன் 'ஆனால் தலைவர் வருவார்' என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். இந்நிலையினை இலக்கணத்தில் விரிச்சிக் கேட்டல் என இலக்கணமும் வகுத்துள்ளனர். பிற்காலத்தார் இவ்வாறு கேட்டு வந்ததைத் தான் அசரீரி என்று கூறினர் போலும், சரீரம்-உடல், அ-சரீரம்-உடலற்றது. நேரில் உருவத்தைக் காணாமல் குரல் ஓசை ஒன்றை மட்டுமே கேட்பதனால் பிற்காலத்தார் அங்ஙனம் கூறினர் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

இன்றும் ஒரு வேலையின் பொருட்டு நாம் வெளியே செல்லும் போது வாயிற்படி தடுத்தாலும், காலில் கல் பட்டாலும், 'போகும், வேலை முடியாது; புறப்படும்போது தடுக்கிறது' என்று கூறுகின்றோம். காலிலோ தலையிலோ படுவதற்கும், கருதிச் செல்லும் வேலைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாதிருந்தும் வழக்கில் தொடர்புபடுத்திக் கூறுகின்றதை நம்மிற் பலரும் அறிகின்றோம். அவ்வகையான உலக இயற்கையை உணர்ந்த புலவர்கள் உலகிற்கு இயற்றித் தரும் காவியங்களில் அதை அமைத்து அழகு செய்கின்றனர்.

வில்லிபாரதத்தில் கூறும் ஒரு நிகழ்ச்சியைக் காணுவோம்; துரியோதனன் கண்ணபிரானைத் தன் படையில் சேர்த்துக் கொள்ளுவதற்கு அழைப்பதற்காக அஸ்தினாபுரத்திலிருந்து துவாரகைக்குச் செல்லுகின்றான். அப்போது துவாரகையின் மதில் மேல் அமைக்கப்பட்டுள்ள துணி கட்டிய கொடிகள், காற்றால் அசைகின்றன. அந்நிகழ்ச்சி இயற்கையில் நிகழ்கிறது. ஆனால், அதை ஆசிரியர் கதை நிகழ்ச்சியோடு சம்பந்தப்படுத்துகிறார்., கதைப் போக்குடன் தொடர்புபடுத்துவதிலும் கதாபாத்திரமாகிய துரியோதனன் மனநிலை உணர்ந்து செய்வதாகக் கூறுகிறார். 'கொடிகள் தன் துணிகளாகிய கைகளால், 'பாண்டவர்க்கு அல்லாமல் கண்ணன் படைத்துணை ஆக மாட்டான்; மீண்டு நீ போ' என்று தடுப்பன போன்றன' என்கிறார்.

'ஈண்டுநீ வரினும் எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட்கு அல்லால்
படைத்துணை ஆகமாட்டான்
மீண்டுபோ கென்றென்று
அந்தவியன் மதில் குடுமிதோறும்
காண்தகு பதாகை ஆடைகைகளால்
தடுப்ப போன்ற.'

என்பது வில்லியின் வாக்கு.

இதே கொடி அசைவைக் கம்பர் இராமாயணத்துள் இராமனை வரவேற்பதற்காகப் புனைந்துரைக்கின்றார். விசுவாமித்திரர் இராம இலக்குமணரை அழைத்துக் கொண்டு மிதிலை நகர்நோக்கிச் செல்லுகின்றார். முன்னே இராமரும் விசுவா

மித்திரர்க்குப் பின்னே இலக்குமணரு மாக மிதிலை நகரின் மதிலுக்கு அருகே நடந்து செல்லுகின்றனர். மதில்மேலுள்ள கொடிகள் அசைக் கப்படுகின்றன. 'தாமரை! போன்ற கண்களுடைய இராமபிரானே, நாங்கள் செய்த தவத்தால் செந் தாமரையில் இருந்து நீங்கி இலக்குமி இங்கு வந்திருக்கிறாள். விரைந்து வாருங்கள்' என்று அழைப்பது போலக் கொடிகள் அசைந்தன என்று கம்பர் கற்பனை செய்கிறார்.

'மையறு மலரினீங்கி யான்
செய்மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்' என்று
செழுமணிக்கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச் செங்கண்
ஐயனை ஒல்லைவா என்றழைப்பது
போன்ற தம்மா.'

என்பது கம்பர் கூறும் கற்பனைச் செய்யுள்.

இவ்வாறு இயற்கை நிகழ்ச்சி யைத் தடுப்பது வரவேற்பது எனக் கற்பனை செய்து கூறும் நிலை பெரிய புராணத்திலிருந்து எடுத் தாளப்பட்டதாகக் கருத இடமுண்டு. சேக்கிழார் பெரிய புராணத்தில் இரு வேறுவகைக் கொடிகள் மாளிகை மேல் ஆடின என்று கூறுகிறார். திருக்கோவலூரில் தங்கிச் சேதி நாட்டை ஆண்டு வந்த மலை நாட்டு மன்னனாகிய மெய்ப்பொருள் நாயனாரை வெல்லக் கருதிய பகை மன்னன் சிவனடியார் வேடந் தாங்கி முத்திநாதன் என்னும் பெயருடன் செல்லுகிறான். அவன் செல்லும் வீதியில் மாளிகை மீது இரு கொடிகள் ஆடுகின்றன. ஒன்று பெண்களின் கூந்தலாகிய கருநிற முள்ள கொடிகள், மற்றொன்று ஒளியுள்ள வெண்ணிறக் கொடிகள், பகை மன்னன் மெய்ப்பொருள் நாயனாரின் பக்தியை அறிந்து வஞ்சகமாக வெல்ல எண்ணி,

'மெய்யெலாம் நீறுபூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக்
கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்புவைத்துப்
பொய்தவ வேடங்கொண்டு
புகுந்தனன் முத்தநாதன்'.

என்கிறார். அதற்கேற்றவாறு வெளிக் கோலத்தை வெண்ணிறக் கொடிகள் வரவேற்கின்றன. உட்கோலத்தைக் கூந்தலாகிய கருநிறக் கொடிகள் வரவேற்கின்றன. வஞ்சகமாய் மன்னனை வெல்ல எண்ணிய தீய எண்ணத்தைக் கொண்ட மனத்திற் கேற்றவாறு கருநிறக்கொடி மாதவ வேடத்திற்குத் தக்கவாறு வெண் ணிறக் கொடி என இரு கொடி ஆடு வதை ஆசிரியர் கூறுகிறார். இவை முறையே, மாறித் தடுப்பன போன் றன என்பதும் கொள்ளலாம்.

'மாதவ வேடங்கொண்ட
வன்கணான் மாடந்தோறும்
கோதைசூழ் அளகபாரக்
குழைக்கொடி ஆட, மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் சேர்ந்தான்.'

என்பது சேக்கிழார் செம்மொழி யாகும். இப் பாடலில் வரவேற்றன கொடிகள் என்று கூறாவிட்டாலும், உட்கோலத்தைக் கண்டு கூந்தலாகிய கொடிகள் ஆட அதற்கு மேலே இருக்கும் கொடிகள் மறுப்பதுபோல ஆடுகின்றன என்னும் குறிப்பையே எடுத்துக் கொண்டு இரு ஆசிரியர் களும் மேலும் புனைந்துரை செய் துள்ளனர் போலும்,

இனி, 'சூரியன், சந்திரன் மறை வதையும் தோன்றுவதையும் இவை போன்ற பிற இயற்கை நிகழ்ச்சி களையும் கதைக்கேற்றவாறு கதா பாத்திரங்களோடு சம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர். காவியங்களில் பல இடங்களில் இவைகளைக் காண லாம். ஓர் உதாரணங் காட்டுவேன். சூரியன் மறைவதைக் கம்பர் தசரதன் இறந்ததால் குலத்திற்குத் தலைவனா கிய சூரியன் கடலில் மூழ்கினான் எனக் கற்பிக்கிறார். உறவினர் ஒருவர் இறந்ததால் உடனே தலை முழுகுவர். அதனால், சூரியன் கடலில் மூழ்கினான் என்கிறார். சூரியனுக்கும் தசரதனுக்கும் உள்ள தொடர்பை விளக்க ஆசிரியர். ஆழ்ந்து யோசிக்கிறார். இராமர் பிறப்பதற்கு இடமாக இருந்து பழங் குலத்திற்குச் சூரியன் தலைவன் ஆதலால் கடமையைச் செய்வது போலக் கடலில் மூழ்கினான் என் கிறார்.

'படஞ்செய் நாகனைப் பள்ளி
நீங்கினான்
இடஞ்செய் தொல்குலத்
திறைவன் ஆதலால்
தடஞ்செய் தேரினான்
தானும் நீரினால்
கடஞ்செய் வானெனக் கடலில்
மூழ்கினான்.

இவ்வாறு கவிஞர் உலகில் உணரும் இயற்கைகளை, காவியங் களில் அழகு செய்து அமைத்துச் செல்லுகின்றனர்.

- நன்றி: 'ஆவண அமுதம்'.

உலக செஸ் வீரர்கள் வரிசையில் சென்னையைச் சேர்ந்த ஆனந்த்

உலக செஸ் வீரர்கள் வரிசை யில் சென்னையைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பெற்றிருக்கிறார். உலக செஸ் சங்கம், ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச செஸ் வீரர்களைத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுத்து அறி விப்பு செய்து வருகிறது. இந்த ஆண்டு முடிவடைவதையொட்டி, 1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரைத் தேர்ந் தெடுத்து இந்தச் சங்கம் அண்மை யில் அறிவித்தது. இந்த 10 முன்னணி வீரர்களில் இந்தியாவின் "கிராண்ட் மாஸ்டர்" விஸ்வநாதன் ஆனந்த் 5-வது இடத்தைப் பிடித்திருக்கிறார். உலக செஸ் அரங்கின் பத்தாவது நிலையில் இருந்து ஐந்தாவது நிலைக்கு உயர்ந்துள்ளார் இந்தியா வின் செஸ் மேதை ஆனந்த்.

1992-ஆம் ஆண்டின் முன்னணி செஸ் வீரர்கள் 10 பேரில் ஆசியா கண்டத்திலிருந்து ஆனந்த் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கதும், மகிழ்ச்சிக் குரியதுமாகும். இந்த வரிசையில் ரஷியாவைச் சேர்ந்த காரி காஸ்பரோவ் முதலிடத்தில் இருக் கிறார்.

தண்டமிழ் வளர்க்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம்

முனைவர்
சி. பாலசுப்பிரமணியன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாய் அதன் இலக்கிய இலக்கணங்களுடன் செம்மையாக அமைந்துள்ளது. இலக்கணத்தில் எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற நான்கினோடு பொருளுக்கு அகம், புறம் என இருவகை இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. இப்பொருள் இலக்கணம் இடைக்காலச் சோழர் ஆட்சியில் முறையே அமைக்கப்பட்டுள்ளது. சோழ வளநாட்டின் காவிரித் தாயின் நற்கருணையால் வளங் கொழிக்கும் சோறுடைத்த வள நாடாம் தஞ்சைத் தரணியில் மாமன்னன் இராசராசன் புகழ் பாடும் பொதுவுடையார் வீற்றிருக் கும் பெருநகரில் தமிழ் மணம் பரப்ப வந்துதித்த சிகரமே 'தமிழ்ப் பல்கலைக்கழகம்'.

தமிழுக்குத் தமிழ்ச் சங்கம் ஏற் படுத்திய 'தமிழவேள் உமாமகேசு வரனார்' அவர்கள் அறுபது ஆண்டு களுக்கு முன்பே 'நம் தமிழ்நாட்டில், நம் மொழிக்கெனப் பல்கலைக் கழகம் காணமுயன்றோமா?' என ஏக்கம் தெரிவித்தார்கள். அத் தமிழ்ச் சான்றோரின் ஏக்கம் 1981 செப்டம்பர் 15-ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அன்றைய தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச் சந்திரனார் அவர்களின் பெரு முயற்சியால் அப்போதைய மேதகு தமிழக ஆளுநராக இருந்த திரு. சாதிக் அலி அவர்கள் கொண்டு வந்த ஒரு விரைவுச் சட்டத்தின்கீழ், நிறைவேறியது. முழுமையாக அகவை பத்து நிறைவெய்துள்ள இப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்த ராக முதுமுனைவர் வ.அய்.சுப்பிர மணியனார் அவர்கள் பொறுப்பேற் றார். இவரது முயற்சியால், பல் கலைக்கழக நல்கைக் குழுவின் (U.G.C.) சட்டவிதி 2(அ) பிரிவின் கீழ்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை, நடுவண் நிறுவனங்களின் நல்கை பெறத்தக்கது என ஏற்றுக்கொண்டது.

தண்டமிழின் வளர்ச்சிக்கென்றே மாண்புமிகு முன்னால் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் இதனுடன் இணைப்புப் பெற்ற கல்லூரி (Affiliated College) எதுவும் இல்லாத ஓர் உயர் ஆய்வு மைய மாகத் தோற்றுவிக்கப் பெற்ற இப் பல்கலைக்கழகம், இலங்கை, மலேசியா, மொரீசியசு, தென் ஆப்பிரிக்கா, பிஜி போன்ற பிற நாடுகளில் வாழுகின்ற தமிழர் நலன் காத்து, பண்டையச் சுவடிகள், கல் வெட்டுகள் ஆகியவற்றை ஆய்ந்து உண்மையை வரலாற்றுச் சான்று களை வெளிக்கொணர்தல், தமிழ்க் கல்வியை மேம்பாடடையச் செய்து, தமிழ் ஆராய்ச்சியினை வளப் படுத்தி, தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்கி தமிழ்மொழியை உலக அரங்கில் தனக்குரிய இடத்தைப் பெறவதைத் தலையாயக் குறிக் கோளாகக் கெண்டு விளங்குகிறது.

தொடங்கப்பெற்ற காலத்தில் தஞ்சை 'அரண்மனை வளாகத்தில்' பணியினைத் தொடங்கிய இப் பல்கலைக்கழகத்தினை, விரிவான

அளவில் உலக அளவில் பலரும் போற்றவேண்டுமென்ற உயர்ந்த நோக்கங்கொண்ட அந்நாளைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர், புலக் கட்டடங்களின் உருவ அமைப்பினை 'தமிழ்நாடு' என்ற சொல்லில் வருகிற 'த, மி, ழ், நா, டு' ஆகிய எழுத்து வடிவங்களைப் போல இருக்கவேண்டும் எனவும், தமிழ் நாட்டின் வரைபடத்திலுள்ள மாவட்டத் தலைநகர் மற்றும் ஆறுகளின் வழித் தடங்களையொத்த அலுவலக வளாகம் இருக்கவேண்டுமெனவும் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

தற்போது 'ழ்' வடிவக் கட்டடம் செயல்பாட்டில் இருந்து வருகிறது. மையத்தில் அமைந்துள்ள நூலகக் கட்டடம் வட்ட வடிவில் அமைத்து, பார்வைக்கு நம் நாடாளுமன்றக் கட்டடத்தினை ஒத்த அமைப்பில் அமைந்துள்ளது. இந் நூலகக் கட்டடத்தினைச் சுற்றி அரைவட்ட வடிவில் 'தமிழ்நாடு' என்ற எழுத்தமைப்பில் தனித்தனிக் கட்டடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன.

ஐம்பெரும் காப்பியங்களால் அணிசெய்யப்பட்ட தமிழ் மொழியைப் போல, ஐம்புலத்துறையால் தமிழ்ப் பல்கலைக்கழகம் அணிசெய்யப்பட்டுள்ளது எனலாம்.

இலக்கியம், மொழியியல், நாட்டுப்புறவியல், இந்திய மொழிகள் பள்ளி, தத்துவமையம், மலையின மக்கள் ஆய்வுமையம் (உதகை) இவற்றைக் கொண்டது மொழிப் புலம்.

ஓலைச்சுவடித் துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டியல் துறை, நீரகழாய்வு மையம் ஆகியற்றைக் கொண்டது சுவடிப்புலம்.

இசை, நாடகம், சிற்பம் என்ற மூன்று துறைகளைக் கொண்டது கலைப்புலம். அயல்நாட்டுத் தமிழ்க் கல்வி, மொழிபெயர்ப்பு, தொகுப்பியல் சமூகவியல், அறிவியல் தமிழ்-வளர்ச்சி முதலான துறைகளைக் கொண்டமைந்தது வளர்தமிழ்ப் புலம். மற்றும் அறிவியல் புலத்தில் சித்த மருத்துவம், தொல் அறிவியல், தொழில், கட்டடக் கலை, கணிப்பொறி ஆகியன அடங்கியுள்ளன.

இவை தவிர, நீண்ட கால-குறுகிய கால ஆய்வுத் திட்டங்களை உள்ளடக்கிய சில துறைகளும் உள்ளன.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பல்துறைகளிலும் பல்துறை அறிஞர்களைக் கொண்டு அவர்களின் ஆய்வுப் பணிகளை மக்கள் பெறுகின்ற வகையில் அதனை அச்சுருவாக்கி வருவதில் முதலிடம் வகித்து வருகின்றது.

இந் நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் கல்வி என்ற அரசின் இலக்கினைக் கருத்தில்கொண்டு, தஞ்சைத் தரணியை அடுத்துள்ள பகுதிகளில் முதியோர்க்குக் கல்வி புகட்டும் உயர்நோக்கில் 'எழுத்தறிவுத் திட்டம்' ஒன்றினையும் நடத்தி வருகின்றது. இப் பல்கலைக்கழகத்தின் நூலகம் 'செய்திச் சேகரிப்பும் நூலகக் கண்காணிப்பும்' என்னும் துறையின்கீழ் தமிழில் உள்ள அனைத்துத் தரவுகளையும் (Data) சேகரித்துத் தொகுத்து ஆய்வுக்கு உதவும் சீரிய நோக்கத்துடன் செயல்பட்டுவருகின்றது. தமிழ்ப் புலவர் பெருமக்கள் தம் சொந்தப் பயன்பாட்டிற்காகத் தங்கள் இல்லங்களில் சேகரித்து வைத்திருந்த பல அரிய நூல்களையெல்லாம் வாங்கிப் பாதுகாப்பாக இந் நூலகத்தில் வைத்துள்ளோம். ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட இந்நூலகத்தில், தமிழில் வெளிவருகின்ற அனைத்துப் பருவ இதழ்களும் (Journals) ஆங்கிலத்தில் நூறு பருவ இதழ்களும் வரவழைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மொழிப் பயிற்சிக்கென ஒலித்தட்டுகள், பன்னாட்டு நில வரைபடங்கள், ஒளி வில்லைகள், நுண்படச் சுருள்கள் (Micro film) முதுபெரும் தமிழ் அறிஞர் பெருமக்களின் உருவப் படங்கள் ஆகியனவற்றை இங்குக் காணலாம். கணிப்பொறித் தகவல் மையம் (Computerized Information System) மூலம் இங்குள்ள நூற்பட்டியலைப் பெற்று எளிதில் நூல்களை எடுக்கக்கூடிய அளவிற்கு உயர்ந்துள்ள இந் நூலகம், இந்தியாவிலேயே தலைசிறந்ததொரு நூலகம் என்று சொல்லுமளவிற்கு மேலோங்கி வருகின்றது எனலாம்.

பண்டைய தமிழர் நாகரிகம், அவர்களின் சமுதாய வரலாறு, பண்பாடு ஆகியனவற்றை நமக்குப் புலப்படுத்தவல்ல ஓர் அருங்காட்சியகத்தை உள்ளடக்கியது இப் பல்கலைக்கழகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துறைதோறும் துறைதோறும் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும்; வளப்படுத்தவேண்டும்; உயர்த்தவேண்டும், அதனோடு தமிழராகிய நாமும் உயர்ந்து தலைநிமிர்ந்து நிற்கவேண்டுமென்கிற வகையில் தமிழில் பல்துறை ஆராய்ச்சி நூல்களை நாளும் அழகுற வெளியிட இப் பல்கலைக்கழகத்தில் அண்மைப் புதுமையுடன்கூடிய அச்சுக்கூடம் ஒன்றும் செயல்பட்டுவருகின்றது. இதன் வாயிலாக இலக்கணம்; இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புறக் கலைகள், இசை, நாட்டியம், சமயம், அறிவியல் ஆகிய பல்வேறு துறை சார்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட அரிய ஆராய்ச்சி நூல்களை



வெளியிட்டுள்ளது. அவற்றில் சில நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்றுள்ளன. தமிழில் அறிவியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் பல விளக்க நூல்களையும் இப் பல்கலைக்கழகம் வெளியிட்டுக் கொண்டு வருகின்றது.

இப் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா 24.3.1984-இல் நடைபெற்றது. இவ் விழாவில் தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றிற்காகப் பாடுபட்ட ஐவருக்கு முனைவர் (டாக்டர்) பட்டங்கள் வழங்கப்பட்டன. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், சு.மு. கௌரி சங்கர தபதி, திருவெண்காடு ப. சுப்பிரமணிய பிள்ளை, தவத்திரு. தனிநாயக அடிகள் ஆகியோர்க்கு 'இலக்கிய முதுமுனைவர்' பட்டமும், தி.சு. அவினாசிலிங்கம் செட்டியாருக்கு 'அறிவியல் முதுமுனைவர்'ப் பட்டமும், வழங்கப்பட்டன. தற்பொழுது 11.12.1991-இல் நடந்த சிறப்புப் பட்டமளிப்பு விழாவின்போது 'அருள்மொழி அரசு' என அனைவராலும் புகழ்ந்து போற்றப்படும் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள், தமிழ் இலக்கிய வரலாற்றுத் துறை ஆராய்ச்சியில் சிறப்புப் பெற்று விளங்கும் பேராசிரியர் மு. அருணாசலம் அவர்கள்; சைவசித்தாந்தத்தில் வித்தகச் செல்வராக விளங்கும் சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்; பத்தூர் நடராசத் திருமேனியை மீட்டுத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து சேர்த்த செம்மல் டாக்டர் எல்.எம். சிங்கி அவர்கள் ஆகிய இந் நால்வர்க்கும் 'மதிப்புறு முதுமுனைவர்'ப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகப் புது வளாகத்தில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி நடுவண் அரசிடமிருந்து இதற்காகச் சுமார் பதினைந்து இலட்ச ரூபாயினைப் பெறுவதற்கான இசைவோடு இது காறும் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன்படி சுற்றுச் சூழலைக் காக்கவும், சக்தி வளங்களைப் பெருக்கவும் 'சக்தி மரக்காடுகள்' எனும் திட்டத்தின்கீழ் 3,75,000 மரக்கன்றுகள் நான்கு ஆண்டுகளுக்குள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்லூரி அளவிலான மொழியியல் ஆசிரியர்களுக்கு மைய அரசின் நிதி உதவியுடன் 'கணிப் பொறிப் பயிற்சி வகுப்பு' நடத்தி 'இயற்கை மொழியாய்வு-ஆசிரியப் பயிற்சித் திட்டம்' (Natural Language Processing-Teacher Training Programme) என்ற 'சான்றிதழ் வகுப்பும் (Certificate Course) இங்கே நடத்தப்பட்டுவருகின்றது.

வடமொழியில் உள்ள ஆகமங்கள், இயந்திரங்கள் இவற்றை எளிதில் புரிந்துகொள்ள ஏதுவாக, தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்காகத் தமிழக அரசு ஐந்தேகால் இலட்ச ரூபாய் நல்கை அளிக்கப் பெருமனத்துடன் இசைந்துள்ளது. பல்கலைக்கழக நூலக முகப்பில் 'மகரத் தோரண வாயில்' ஒன்று, ரூபாய் ஒன்பது இலட்சம் மதிப்பில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனைத் தமிழக அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஆய்வாளர்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்குகின்ற வகையில், இவ்வாண்டு முதல் பல துறைகளில் எம்.ஃபில்., பிஎச்.டி., முழு நேரப் பட்டப்படிப்பு வகுப்பாகத் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பரதக் கலைக்கென்றே பயிற்சி வகுப்பு ஒன்றும் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையினை எடுத்துக் கொண்டால், இங்குள்ள சித்த மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள்மூலம் நீரிழிவினைத் தடுக்கவும், கொழுப்புச் சத்தினைக் குறைக்கவும், கொடிய பாம்புக் கடிக்கு மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், சென்னை, தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் நல்கையுடன் (TNSCS & T) 'சேராங்கொட்டை திசு வளர்ப்புத் (Tissue Culture of Emdamgered Medicinal Plant Semecarpus, Anacardium) திட்டம் தற்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

இப் பெருமைமிகு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நாளும் ஆற்றிவருகின்ற தமிழ்த்தொண்டு எண்ணில. இப் பல்கலைக்கழக வளர்ச்சி மென்மேலும் பெருகித் தமிழின் பெருமைகளை உலகறியச் செய்து, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனச் செய்வோம்.

கீரைகளின் மருத்துவக் குணங்கள்

நாம் எப்போதாவது, ஏதா வது ஒரு கீரையை உணவோடு சேர்த்துக்கொள்கிறோம்; ஆனால், அந்தக் கீரை எந்தவிதத்தில் நம் உடலுக்குப் பயன்படுகிறது என்பது பற்றியெல்லாம் நமக்குத் தெரியாது.

'இந்தக் கீரையைச் சாப்பிடு - அதற்கு நல்லது' ..... 'அந்தக் கீரையைச் சேர்த்துக் கொள் - இதற்கு நல்லது' என்று நம் வீட்டில் உள்ள பெரியவர்கள் சொல்லு வதுண்டு.

எந்தெந்தக் கீரைகள் உட்கொள் ளுவது எதற்கெல்லாம் நல்லது என் பதை முறைப்படி தெரிந்துகொள்ளு வது - சைவ உணவை உட்கொள்ளு கிறவர்களுக்கு மட்டுமல்ல; அசைவர் களுக்கும் நல்லதுதானே?

முக்கியமாகச் சில கீரைகளுக்கு உள்ள மருத்துவக் குணங்கள் என் னென்ன? அவைகளால் எந்தெந்த நோய்கள் நீங்கும்?... என்று பிரபல சித்தவைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ், R.I.M.P., அவர்களைப் பேட்டி கண்டோம்.

நாம் அவரிடம் கேட்ட வினாக் களும், அவர் நமக்களித்த விடை களும் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

- சந்திப்பு பி.எல்.ஆர்.

கொடிப் பசலை

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடும் அரைக்கீரை, நமது உடல்நலத்திற்கு எந்த விதத்திலாவது உதவுகிறதா?

ஆமாம்; நிறையவே உதவுகிறது. அரைக்கீரையை ஓர் உன்னத சஞ்வீசி என்றேகூட சொல்லலாம். அந்த அளவிற்கு நம் உடல்நலிவை நீக்குவதாக இருக்கிறது இந்தக் கீரை.

ஜூரம், நடுக்கம், வளி நோய், மலச்சிக்கல், குளிர் ஜூரம், ஜல தோஷம், ஜன்னி, சீதளம், நரம்புத் தளர்ச்சி, பலவீனம், கபரோகம், வாய்வு சம்பந்தமான வியாதிகள் - உடல்வலி, நீரக்கோவை, வாத நோய், சளி, இருமல், வாத ஜூரம், பிடரி நரம்பு வேதனை, நரம்பு வலி, மண்டைப் பீநிசம் - போன்ற பல துன்பங்களைப் போக்க வல்லது அரைக்கீரை.

இதில் உள்ள நார்ச்சத்தானது செரிமானத்திற்கும் நல்லது; ஆகவே இதைத் தினசரி சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம். இழந்த தாது வைத் திரும்பப் பெறவைக்கிற இந்தக் கீரையானது, சிறுவர் சிறுமியர் நல்ல நினைவாற்றல் கொள்ளவும்கூட உதவி செய்யும். தலைமுடி கருகருவென்று வளரவும் உதவுகின்றது இக்கீரை. இதைப் பத்தியத்தில் இருப்பவர்களும் சேர்த்துக் கொள்ளலாம்.

அருகம் புல்லுக்கு மருத்துவக் குணம் ஏதாவது உண்டா?

உண்டு. அதிகாலையில், அருகம் புல் சாறு ஒரு மண்டலம் - அதாவது 48 நாட்கள் அருந்தி வந்தால் உஷ்ணம், பித்தம் சம்பந்தமான வியாதிகள் அடியோடு நீங்கிவிடும். முக்கியமாக இதயநோய்க்கும் இது நல்லது.

இரத்தக் கொதிப்பு, பலவீனம், மூலநோய், வெட்டை, ஆஸ்த்துமா, தலைபாரம், வயிற்றுநோய், உதிரப் பெருக்கு, மார்பு வலி, மூளை பாதிப்பு, கைகால் வலி, குடைச்சல், சொறி, சிரங்கு, ரண காயங்கள் ஆகியவற்றைக்கூட அருகம் புல் உதவியால் குணப்படுத்திவிட முடியும்.

அகத்திக் கீரையில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன; அவை மனித உடலுக்கு எந்த வகைகளி லெல்லாம் பயன்படுகின்றன?

இந்தக் கீரையில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, உயிர்ச்சத்து, விட்டமின் 'ஏ' ஆகியவை உள்ளன. நம் உடலில் உள்ள எலும்புகள் வலிவடையவும், பற்கள் உறுதிபெறவும் இவை உதவும். மலச்சிக்கல் இதனால் நீங்கும்.

பச்சையாக இந்தக் கீரையை மென்றுதின்றாலே - வாய்ப்புண், தொண்டை ரணம், தொண்டை வலி ஆகியவை நீங்கிவிடும். மூளைக் கோளாறு உள்ளவர்கள், உணவோடு அகத்திக் கீரையை அதிகம் சேர்த்துவந்தால், விரைவில் அவர்கள் நலம்பெறும் வாய்ப்பு உண்டு. தோல் வியாதிகள், கண் கோளாறு, தலைவலி, சிறுநீர் நோய், இரத்தக் கொதிப்பு ஆகியவற்றையும் இந்தக் கீரையானது நீக்கிவிடும். இதன் இலை, காய், பூ, பட்டை, வேர் ஆகிய எல்லாமே மருத்துவத்தில் பலவகையில் கையாளப்படுகிறது.

டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

வெந்தயக் கீரை

வாயுக் கோளாறு உள்ளவர்கள் இதைச் சாப்பிடாதிருப்பது நல்லது; இன்னொன்று-அகத்திக் கீரைக்குப் பத்தியத்தை முறித்துவிடும் குணமும் உண்டு; ஆகையால் பத்தியம் இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆடோ, மாடோ தொடாத அளவிற்குக் கசப்புடைய 'ஆடா தொடை'க்கு மருத்துவக் குணம் உண்டா?

உண்டு. உண்டு. நம் நாட்டுக் கிராமப்புற வேலிகளிலெல்லாம் ஆடாதொடைச் செடி காணப்படுவதால், இதைச் சாதாரணமாக நினைத்துவிட்டீர்கள் போலிருக்கிறது; நம் முன்னோர்கள் கண்டு பிடித்த மிகச் சிறந்த மூலிகைகளில் ஆடாதொடையும் ஒன்றாகும்.

இதன்மூலம் குணமாகும் நோய்கள் பற்றி ஒரு பட்டியலையே சொல்லுகிறேன் கேளுங்கள் - ஜூரம், சளி, ஜலதோஷம், இருமல், தும்மல், அடிக்கடி மூச்சுத் திணறல், இரைப்பு, ஈஸனோபீலியா, மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல், கபம், மூச்சு வாங்குதல், ஆஸ்த்துமா, பிரசவச் சிக்கல், கப ஜூரம், விஷம், கக்குவான் இருமல், காமாலை, சிலந்திக் கடி, வயிற்றுநோய், மலடு, இரத்த விக்கல், ஜன்னி, பித்த ஜூரம், கோழைக் கட்டு முதலான பல துன்பங்களை நீக்கக் கூடிய அருமருந்து ஆகும் இந்த ஆடாதொடை.

இதனுடைய இலைமட்டுமல்ல; பூ, பட்டை, வேர் ஆகியவைகளும்கூட மருத்துவத்தில் நன்றாகப் பயன்படுபவைகளாகும்.

ஈஸனோபீலியா நோய்க்கு ஆடா தொடையை எப்படிப் பயன்படுத்துவது?

ஆடாதொடை இலை, வேப்ப இலை, அத்தி இலை, துளசி, முருங்கைக் கீரை ஆகியவற்றைச் சம அளவில் எடுத்துக் கொண்டு சாதம் வடித்த நீரை(கஞ்சி) ஊற்றி நன்றாக அரைத்துச் சுண்டைக் காயளவு மாத்திரை களாக உருட்டி மூன்று நாட்கள் வெயிலில் நன்றாகக் காய வைத்துக் கொள்ளவேண்டும். சாப்பாட்டுக்குப் பிறகு வேளைக்கு இரண்டு மாத்திரை வீதம் உட்கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி முப்பது நாட்கள் சாப்பிட்டு வந்தாலே ஈஸனோபீலியா நோய் நீங்கிச் சுகம் பெறலாம்.

ஆடு தீண்டாப்பாளை என்கிறார்களே அது என்ன?

அதுவும்கூட கீரை வகையைச் சேர்ந்ததுதான். ஆங்கிலத்தில் இதை Worm-Killer என்பார்கள். தமிழில் போலவே மலையாளத்திலும் இதன் பெயர் ஆடுதீண்டாப் பாளைதான்!

குடற்புழு நீங்கவும், விஷப் பூச்சிக்கடி, மேகவாய்வு, கபால வலி, கருங்குஷ்டம், கரும்படை கரப்பான், அரையாப்புக் கட்டி, ரணம் ஆகியவற்றை நீக்கவும், தாது விருத்திக்கும் இது மிகவும் நல்ல மருந்தாக உதவக்கூடியது ஆகும். இதை உபயோகிக்கிறபோது உப்பு, புளி, மாமிசம், புகை ஆகியவை கூடவே கூடாது.

மஞ்சட்காமாலைக்கு உதவுவதாகச் சொல்லப்படும் கீழாநெல்லி வேறு எதற்கெல்லாம் உதவும்?

சோகை நோய், கல்லீரல் - மண்ணீரல் - சிறுநீரக நோய்கள், மாலைக்கண், நீரிழிவு, பெரும்பாடு, வெள்ளை வெட்டை, மேகவெட்டை, தாபம், அரிப்பு, இரத்தக் கழிச்சல் போன்ற பல பிணிகளுக்கும் இந்தக் கீழாநெல்லிக் கீரை மிக அருமையான மருந்துப் பொருளாகப் பயன்படுவதாகும்.

நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்ளுகிற கொத்துமல்லிக் கீரையால் என்னென்ன நோய்கள் விலகக்கூடும்?

இரத்தச் சூடு, வயிறு சம்பந்தமான நோய்கள், கண் நோய், அக்னி மாந்தம், மயக்கம், பித்த வாந்தி, மனநோய், நாவறட்சி, வாய்வு, சிறுநீர்க் கடுப்பு, பலவீனம், உறக்கமின்மை, சளி, மூச்சடைப்பு, மலச் சிக்கல், ஆண்குறியில் ஏற்படும் ரணம், பேதி, பல் நோய்கள், தாது நஷ்டம், வீக்கம் ஆகியவற்றை நீக்க கொத்துமல்லிக் கீரை மிகவும் நல்லது. அதிக அளவு இரும்புச் சத்து உடையது இக்கீரை; விட்டமின் 'சி' உயிர்ச்சத்தும் இதில் உண்டு.

நரைமுடியைக் கறுப்பாக்கும் வகையில் உதவுகிற கீரைகள் ஏதாவது இருக்கின்றனவா?

கரிசலாங்கண்ணி கீரை மூலம் இதைச் சாதிக்க முடியுமே! எப்படி

புளிச்சக் கீரை

யென்றால், கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், கொட்டைக் கரந்தை இலை 50 கிராம் எடுத்து நன்றாகக் காய வைத்துச் சருகாக்கிக் கொள்ள வேண்டும்; பிறகு அம்மியில் வைத்துத் தட்டி சூரணம் செய்து, மெல்லியதுணியில் சலித்து வைத்துக்கொள்ள வேண்டும். தினசரி இரண்டு கிராம் சூரணத்துடன் தேன்கலந்து 40 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் போதும்; நரைமுடி படிப்படியாகக் கருநிறம் அடையும். கரிசலாங்கண்ணி இலையைத் தேங்காயெண்ணெயில் போட்டுத் தேய்த்து வந்தால் தலைப்பொடுகும்கூட நீங்கிவிடும்.

உடலுக்கு உரம் ஊட்டவல்ல இந்தக் கீரை இரத்தத்தைச் சுத்திகரிக்கும்; மங்கலான கண்ணொளியைக் கூர்மையாக்கும்.

கரிசலாங்கண்ணி இலைச் சாறை 5 கிராம் எடுத்து, அதனுடன் மோர் கலந்து கொடுத்தால் பாம்புக் கடியால் உண்டான நஞ்சுகூட நீங்கும்; இலையைக் கசக்கி வைத்துக் கட்டினாலே தேள்கடி நஞ்சும் விலகும். இப்படி இன்னும் ஏராளமான நல்லகுணம் இந்தக் கீரைக்கு இருக்கிறது.

உணவில் மணம் ஊட்டப் பயன்படுத்தும் கறிவேப்பிலையின் மருத்துவக் குணம் என்ன?

பழஞ்சுரம், மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, வாந்தி, அம்மைத் தழும்பு, வயிற்றுவலி, அஜீரணபேதி, பித்தம், உடல் சூடு, கிரகணி, பைத்தியம் ஆகியவற்றை நிறுத்தும் மருத்துவக் குணம் கறிவேப்பிலைக்கு உண்டு. இது ஜீரணத்தைச் செம்மையாக்கிப் பசி உண்டாக்கக் கூடியதும் ஆகும்.

அம்மைத் தழும்பு மாற அதை எப்படிப் பயன்படுத்துவது?

ஒரு கைப்பிடி கறிவேப்பிலை இலையோடு, கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம் ஆகியவைகளும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ள வேண்டும்; அம்மைத் தழும்புள்ள இடத்தில் அதைத் தடவி, அரைமணி நேரம் வைத்திருக்க வேண்டும்; பிறகு கடலை மாவோ, பச்சைப் பயிறு மாவோ போட்டுக் குளித்து விடலாம்.

இப்படி இரண்டு வாரம் குளித்து வந்தாலே அம்மைத் தழும்பு நிரந்தரமாக மாறிவிடும்.

மணத்தக்காளி கீரையினுடைய சிறப்புக் குணத்தைச் சொல்லுங்களேன்?

மணத்தக்காளி கீரையால் நமக்கு நிறையப் பலனிருக்கிறது. காய்ச்சல், உடல்வலி, களைப்பு, வலிப்பு நோய், தலைவலி, கட்டி, கல்லீரல், மலச்சிக்கல், மர்மநோய், காமாலை, வீக்கம், வைசூரி நோய், தேமல், கோழை, இருமல், வாய்ப்புண், குடல்புண், பித்த நீர், கரப்பான் நோய், க்ஷயம் போன்ற பிணிகளையெல்லாம் நீக்குகின்ற மருத்துவக் குணம் மணத்தக்காளிக்கு இருக்கிறது.

எலிக்கடி, தேள்கடி, பாம்புக்கடி ஆகியவற்றிற்கெல்லாம்கூட இது நல்லது. மணத்தக்காளிக் கீரை நம் வாய் நாற்றத்தை நீக்கும்; களைப்பைப் போக்கும்; நல்ல தூக்கம் உண்டாக்கும்; நீர்ப்பாண்டு, பெரு வயிறு ஆகியவற்றிற்கெல்லாமும் இது நல்லது.

இதனுடைய காய், பழம், வேர் எல்லாம்கூட சில மருந்துகளுக்கு உதவும்.

முருங்கைக் கீரை எவ்வாறெல்லாம் நம்முடைய உடலுக்கு உதவுகிறது?

பொதுவாக முருங்கைக் கீரை இரத்த விருத்திக்கு ஏற்றது. இதன் மூலம் நம் உடல் வலிமை பெறும்; மேலும், தாது புஷ்டி பெறுகிற வாய்ப்பும் கிட்டும்.

இதில் ‘ஏ-பி-சி’ விட்டமின்களும், தாது உப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவைகளும் அடங்கியுள்ளன. சர்க்கரை வியாதி, ஆஸ்த்துமா நோய், மாலைக்கண் போன்றவை இருப்பவர்களுக்கு இது மிகவும் நல்லது; அப்படிப்பட்டவர்கள் அடிக்கடி உணவோடு இதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

முருங்கைக் கீரை, பிஞ்சு, விதை, முருங்கைக் காய், மரப்பட்டை, வேர், பிசின் ஆகிய எல்லாமே பல விதத்திலும் மிக நல்ல மருந்துப் பொருளாக நமக்குப் பயன்பட்டு வருகின்றன.



சுக்காங் கீரை

முளைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, வெந்தயக் கீரை, புதினா கீரை ஆகியவற்றில் ஏதாவது நோய் நீக்கும் தன்மைகள் இருந்தால் சுருக்கமாகச் சொல்லுங்களேன்?

உட்சூடு, இரத்தக் கொதிப்பு, பித்த எரிச்சல், சொறி- சிரங்கு, உடல் உஷ்ணம், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப் புண் ஆகியவற்றைப் போக்கும் சக்தி முளைக்கீரைக்கு உண்டு. இது கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து, உடலின் பலத்தைப் பெருக்கி, செரிமான சக்தியை அதிகரிக்கவும் செய்யும்.

இதயத்திற்கும் மூளைக்கும் வலிமை தரும் சக்தி பொன்னாங்கண்ணிக் கீரைக்கு இருக்கிறது. இக்கீரையில் ஏ-பி- சி போன்ற விட்டமின்களும், தாதுப்புகளும், மாவு, புரதப் பொருட்களும், சுண்ணாம்புச் சத்தும், மணிச் சத்தும், அயச் சத்தும் நிறைய அடங்கியிருக்கின்றன.

காச நோய், சொறி சிரங்கு, பார்வைக் கோளாறு ஆகியவை வெந்தயக் கீரையால் நீங்கும். இதன் இலைகள் மட்டும் உண்ணத் தகுந்தவை; தண்டும் காயும் உணவாகப் பயன்படாது. இந்தக் கீரை - பித்தக் கிறுகிறுப்பு, மாதவிடாய்க் கோளாறு, வாதநோய், மேக நோய், அக்கினி மாந்தம், வாயு, இடுப்பு வலி, மார்புவலி, மூச்சடைப்பு ஆகியவற்றுக்கெல்லாம்கூட நல்ல மருந்து ஆகும்.

மாதவிடாய்க் கோளாறுக்குப் புதினாக் கீரையும் நல்ல மருந்தாகும். வாதநோய், நரம்புத் தளர்ச்சி, பல்நோய், மலச்சிக்கல், சிறுநீர்ப் பெருக்கு ஆகியவற்றையும் இந்தக் கீரை போக்கும்.

மொத்தத்தில் - நாள்தோறும் ஏதாவது ஒரு கீரையை நாம் உணவோடு சேர்த்துக் கொண்டோமானால் எந்தவிதமான நோய்நொடியும் நம்மை அண்டாது; மிகப்பெரிய செலவு எதுவும் இல்லாமலே நோயற்ற நல் வாழ்வு நாம் வாழலாம்.

16ஆம் பக்கத் தொடர்ச்சி

விமர்சனங்களுக்காகப் பிரச்சினையைத் தேடி அலையும் நிலை உருவாகக்கூடாது.

குடந்தை மகாமகம்

கும்பகோணத்தில் நடந்த மகாமகம் திருவிழாவில் நடந்த சம்பவம் குறித்து தஞ்சாவூர் மாவட்டக் கூடுதல் ஆட்சியாளர், கூடுதல் மாவட்ட மாஜிஸ்திரேட் ஒரு விசாரணை நடத்தி வருகிறார். எனவே, இது பற்றி இந்த மன்றத்தில் இப்போது குறிப்பிடுவதைத் தவிர்க்க விரும்பினேன். விசாரணை அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் இந்த மன்றத்திற்கு விவரங்களைத் தெரிவிக்கிறேன். இருந்தாலும்கூட, இதைப்பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை என்றால் இதைப் பற்றிப் பேசுவதற்கே பின்வாங்குகிறேன், அஞ்சுகிறேன் என்கிற ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, இது குறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் இந்த அவை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

கும்பகோணம் மகாமக விழாவில் மாண்டு போன பக்தர்களைப் பற்றி என்னையும் இந்த அரசையும் பலத்த விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார்கள். அந்த விழாவிற்கு வந்த பக்தர்கள் நெரிசலில் அகால மரணம் அடைந்தது துயரச் சம்பவம்தான்; துக்கச் சம்பவம்தான், சோகமானதுதான்; நான் அந்நிகழ்ச்சிக்குப் பெரிதும் மனம் வருந்தி இன்னும் அந்த சோகச் சுமையிலிருந்து விடுபட முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறேன். எனக்குக் கிடைத்த தகவலை வைத்து இந்நிகழ்ச்சியின் பின்னணியை இந்த மாமன்றத்திற்கு விளக்கிச் சொல்லி அதன் மூலம் மக்களுக்குப் புரிய வைப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் இந்த மகாமகத் திருவிழாவை இம்முறை கொண்டாடுவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அளவுக்கு மீறிய ஆன்மீகக் கூட்டம் இப்பெருவிழாவிற்கு வரக்கூடும் என்று கணிக்கப்பட்டு, பாதுகாப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு விழாவிற்கான சீரமைப்புப் பணிகள், கட்டுமான ஏற்பாடுகள், நிவாரண ஏற்பாடுகள் ஆகியவைகளெல்லாம் முன்னுரிமையோடு செய்யப்பட்டு, குறிப்பாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும் காவல்துறையினர் சிறப்புக் கவனம் செலுத்தினர்.

இந்த விழா ஏற்பாடுகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து நானே உயர் அலுவலர்கள் கூட்டங்களைக் கூட்டி ஆய்வு செய்தேன். தேவையான ஆலோசனை கூறினேன்; வேண்டிய நிதியை வழங்கினேன்; அந்த வகையில் சாலைகளை மேம்படுத்த ஒரு வழிப்பாதை, இரு வழிப்பாதை ஆகியவற்றை அகலப்படுத்த - சுமார் 1.32 கோடி ரூபாயும், நகராட்சிப் பணிக்குச் சுமார் 1.75 கோடி ரூபாயும், கோவில் திருப்பணிக்காகச் சுமார் 50 இலட்சம் ரூபாயுமாகப் பல்வேறு பணிகளுக்குப் பல்வேறு கட்டங்களில் நிதி வழங்கப்பட்டது.

காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற மகாமகத்தின்போது பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறையினரை விட இது சுமார் இருமடங்காகும்.

இறக்க நேரிட்டதேன்?

கும்பகோண மகாமகக் குளத்தில் ஒரு சமயத்தில் சுமார் 40 ஆயிரம் பக்தர்கள் நீராட இயலும். எனவே, பக்தர்கள் தொகுதி தொகுதியாகச் சென்ற குளத்தினுள் நீராடி வெளியேறும் வண்ணம் காவல்துறையினர் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். பக்தர்கள் வடக்குப் பக்கத்திலிருந்தும் தெற்குப் பக்கத்திலிருந்தும் உள்ளே நுழையவும்; மேற்குப் பக்கம் வழியாகவும் கிழக்குப் பக்க வழியாகவும் வெளியே வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

இதேபோன்ற ஏற்பாடுகள்தான் கடந்த 1968, 1980 ஆண்டுகளில் நடந்த மகாமக விழாவின் போதும் செய்யப்பட்டிருந்தன. இம்முறை மகாமகத்திற்கு 50 இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்திருக்கிறார்கள் எனக் கணக்கிட்டு இருக்கின்றனர். மகாமக விழாவை ஒட்டிய மூன்று நாட்களில் மட்டும் 4,205 பேருந்துகள் இயக்கப்பட்டன; 62 தனி இரயில்கள் விடப்பட்டன. மகாமகக் குளத்திற்கு உள்ளும், குளத்திற்கு வெளியேயும், கரைகளிலும் மற்றும் அவற்றை ஒட்டியுள்ள பல வீடுகளிலும் நிரம்பி வழிந்த கூட்டத்தில், விஸ்வ இந்து பரிஷத் வைத்து நடத்திய தர்ம சாலைக்கு அருகே உள்ள பகுதியில் அச்சாலையை ஒட்டியிருந்த சுற்றுச் சுவர் மீதிருந்த இரும்புக் கம்பிகளும், தூண்களும் இடிந்து விழுந்து, அங்கு குழுமியிருந்த மக்களிடம் பீதியை ஏற்படுத்தவே, மக்கள் முண்டியடித்துக்கொண்டு தாறுமாறாக ஓட நேர்ந்தது. அப்போது ஏற்பட்ட பதட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் இறக்க நேரிட்டது.

மக்கள் கூட்டம் குளத்தில் இறங்க நெருங்கியடித்துக் கொண்டதாலேயே இறந்துவிட்டனர் எனச் சொல்வது சரியல்ல. காவல்துறையினர் தடியடி நடத்தியதாலேயே மக்கள் சிதறி ஓட நேரிட்டது என்று கூறுவதும், அதனால் மரணம் நிகழ்ந்தது என்று கூறுவதும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. இந்த விபத்தில் பலியானவர்கள் அனைவருமே இடிந்துபோன சுற்றுச் சுவர்கம்பிகளுக்கு அண்மையிலே கிடந்திருக்கின்றார்கள்.

குளத்திற்குள்ளே நெரிசல் ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்திருந்தால் காவலர்களில் ஒரு சிலரும் இறந்திருக்கக்கூடும். இந்த விபத்தில் காவல்துறையினர் முறை கேடாகவோ, முரட்டுத்தனமாகவோ நடந்து கொள்ளவில்லை. அப்படி நடந்துகொண்டு இருந்தால் பொதுமக்கள் மத்தியில் அமளியும் கொந்தளிப்பும் ஏற்பட்டு இருக்கக்கூடும். காவல்துறையினர்கூட தாக்கப்பட்டிருக்கக்கூடும். இந்தத் துர்மரணங்களுக்கு முக்கியக் காரணமாக இருந்தது, உணவுப் பொட்டலங்களையும், ரட்சை மஞ்சளை

யும் மக்களை நோக்கி விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் வீசியதுதான் என்று கருதவேண்டி இருக்கிறது. அதோடு காவல்துறையினரின் கட்டுப்பாட்டையும் வழிநடத்தலையும் விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினர் அங்கங்கே எதிர்த்துச் சிறு குழப்பங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். போக்குவரத்து ஏற்பாடுகள் சரியாகச் செய்யப்பட்டு இருந்ததால்தான், விபத்து நடந்த இடத்திற்கு மிக அருகில் அவசர சிகிச்சை வண்டிகளைக் கொண்டு வர முடிந்தது; காயமுற்றவர்களை மருத்துவ மனைக்கு விரைந்து எடுத்துச் செல்ல முடிந்தது; அதனால் பலரைக் காப்பாற்ற முடிந்தது.

தவறான செய்திகள்

இந்நிலையில் எனக்குப் பாதுகாப்புக்காகச் செல்லும் பல வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டதால் பக்தர்கள் வெளியே செல்ல இயலாமல் போய்விட்டது என்ற கூற்று முற்றிலும் தவறானது. அதுபோலவே குளத்தின் பெரும்பகுதி என்னுடைய வருகைக்காக ஒதுக்கப்பட்டது என்ற செய்தியும் தவறானதாகும். மேற்குக் கரையில் ஒரு சிறு பகுதி நீங்கலாக, எஞ்சிய பகுதி முழுவதையும் பக்தர்கள் பயன்படுத்திக் கொண்டுதான் இருந்தார்கள். எனது பாதுகாப்பிற்காகச் சென்ற வண்டிகள் கூட, பக்தர்களின் பாதைகளைப்

> **தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.**
>
> **—தமிழ்த்தென்றல் திரு.வி.க.**

பாதிக்காதவாறு சாலையின் ஓரத்தில்தான் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட கார்களால் பக்தர்களின் போக்குவரத்து எந்தவிதத்திலும் தடைப்படவில்லை இத்துயரச் சம்பவம் நடந்த வடகிழக்குப் பகுதி, நான் வழிபட்டுச் சென்ற இடத்திலிருந்து மிகத் தொலைவில் அமைந்துள்ளது.

நடக்கக்கூடாத இந்தச் சோக நிகழ்ச்சி நடந்து விட்டது துரதிர்ஷ்டவசமானதுதான். அதற்காக நான் வருந்துகிறேன். இந்த அரசும் வருந்துகிறது. ஆனால் அந்நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு, என்னுடைய வருகையை அதனுடன் இணைத்து, என் மீது மாசு கற்பிக்கும் நோக்கத்தோடு விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினரும், என்னை விரும்பாதவர்களும் திரித்துக் கூறுகிற உண்மைக்குப் புறம்பான தகவல்களும், பொய்களும் எனக்குப் பெரும் வேதனையை அளிக்கின்றன.

ஆண்டவனே கூலி கொடுப்பான்

கொஞ்சமும் சம்பந்தப்படாத என்னையும், எனது பெயரையும் இழிவு படுத்த எண்ணி, களங்கப்படுத்த முனையும், விஸ்வஹிந்து பரிஷத் இயக்கத்தினருக்கும், ஏனைய விமர்சகர்களுக்கும், ஆண்டவனே தக்க கூலி கொடுப்பான் என மட்டும் கூறிக் கொள்ள விழைகிறேன்.

இலங்கைப் போராளிகள்த் /தீவிரவாதிகள்/ விடுதலைப் புலிகள் தமிழகத்தில் நடமாடத் தொடங்கியதை நாம் அறிவோம். முந்தைய அரசின் காலத்தில் வெடிமருந்துவைத்துத் தகர்க்கும் நிகழ்ச்சிகள் அதிகமாகிவிட்டிருந்தன. 30-க்கும் மேற்பட்ட வெடிகுண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. அதனால் பலர் இறந்தும், காயப்பட்டும் ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட பின்னணியை மனதில் வைத்துத்தான், எங்களின் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பயங்கரவாதிகளின் கொட்டத்தை ஒருபுறம் அடக்கவும் அதற்குத் துணையிருக்கின்ற ஏனைய சக்திகளை ஒடுக்கவும், 'தடா' சட்டத்தையும் தமிழகத்தில் செயல்படுத்த ஆரம்பித்தோம்.

தவறு செய்து பாதிக்கப்பட்ட சிலர், இந்தச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் பண்ணுகிறோம். அரசியல் நோக்கத்திற்காக அதை அனாவசியமாகப் பயன்படுத்துகிறோம் என்று கூப்பாடு போட்டதெல்லாம் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நான் தொடக்கத்தில் சொன்னதைப்போல, விடுதலைப் புலிகளை ஒடுக்கி இருக்கிறோம். ஆனால், அவர்களை ஒழித்துவிட்டோம் என்று சொல்லவில்லை. அவர்களுடைய நடமாட்டம் முழுவதும் கட்டுப்படுத்தப்படவில்லை. இலங்கைக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

தடா சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறதா?

இந்த மாமன்றத்தில் மீண்டும் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தடா சட்டத்தை இந்த அரசு வேண்டாதவர்கள் மீது நிச்சயமாகப் பாயவிடாது. எந்த நிலையிலும் தடா சட்டம் அனாவசியமாகப் பயன்படுத்தமாட்டாது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் பட்டியலையும், அதன் தேவைகளையும், மாநில மட்டத்தில் உள்துறைச் செயலாளர் ஆய்வு செய்வதோடு, மத்திய அரசும் இதைக் கவனிக்கிறது. இந்நிலையில் இச்சட்டம் துஷ்பிரயோகப் படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை, இந்த மாமன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மானியக் கோரிக்கையின் மீது பேசிய சில மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள், திருட்டு, களவு போன்ற குற்றங்கள் (Property Crimes) தமிழகத்தில் மிகுந்து கொண்டு இருப்பதாகவும், அவை இன்னும் அதிகமாகி வருவதாகவும் கூறினார்கள். கொடுக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டில் 36,731 குற்றங்கள் பதிவாகி இருக்கின்ற நிலையில், 1991-இல் 37,283 குற்றங்கள் பதிவாகி இருக்கின்றன. ஆனால் 1990-ஆம் ஆண்டில் களவு போன சொத்துக்களின் மதிப்பு 13.60 கோடி ரூபாய். 1991-இல் அவ்வாறு களவாடப்பட்ட பொருள்களின் மதிப்பு 13.30 கோடி ரூபாய் ஆகும். முந்தைய ஆண்டுகளில் எல்லாம் சுமார் 5 கோடியிலிருந்து 8 கோடி வரை இருந்த களவுபோன சொத்துக்களின் மதிப்பு, 1989-90-ஆம் ஆண்டுகளில்தான், அதிக அளவுக்கு உயர்ந்து உள்ளது. இந்த ஆண்டுகளில் ஆட்சியில் இருந்தவர்கள் யார் என்பதை நான் குறிப்பிட வேண்டியதில்லை. அக்காலங்களில் தான் விடுதலைப் புலிகளும், பயங்கரவாதிகளும் தமது அடாவடித்தனத்தை அவிழ்த்து விட்டு, கடும் குற்றங்களைப் புரிந்தார்கள் என ஏற்கெனவே சொன்னேன். கொள்கைக் குறிப்பில் 1990-ஆம் ஆண்டு களவுக் குற்றக் கண்டுபிடிப்பு 65.1 சதவிகிதம் என்ற நிலையில் வைத்திருந்த தமிழகக் காவல்துறை, 1991-ஆம் ஆண்டில் 64 சதவிகிதம் என்ற நிலைக்குக் குறைந்துவிட்டது என்பதை நான் அறியாமல் இல்லை. அந்தந்த ஆண்டுகளில் நடக்கும் குற்றங்கள், அந்தந்த ஆண்டுகளிலேயே கண்டுபிடிக்கப்படுவதில்லை. நீதிமன்றத்தில் குற்றவாளிகள் தண்டனை அடைவதை வைத்துத்தான் இந்தச் சதவிகிதம் நிர்ணயிக்கப்படுகிறது. 1991- ஆம் ஆண்டிற்கான பல வழக்குகள் தற்பொழுது நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. அவை முடியும்போது, குற்றவாளிகள் தண்டனை பெறும்பொழுது, 1991-ஆம் ஆண்டிற்கான குற்றக் கண்டுபிடிப்பு மேலும் அதிகமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும் கூட, நாட்டில் நடக்கும் களவு, கொள்ளை போன்ற குற்றங்கள் விரைவாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கு உதவுகிற வகையில் நவீன சாதனங்களைக் காவல்துறை பயன்படுத்த வேண்டும். உங்களின் கருத்து எனக்கும் ஏற்புடையது என்பதால், இதைக் காவல்துறையினரும் கவனத்தில் ஏற்க வேண்டும் என்பதை அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல்துறை நவீனப்படுத்தப்படும்

நமது காவல்துறையினருக்கு உதவுகிற வகையில், நவீன ஆயுதங்கள், பயிற்சிகள், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை வலுப்படுத்த, ஒரு மாபெரும் திட்டம் 80.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசும் ரூபாய் 10 கோடியை அதற்காக இதுவரை வழங்கியுள்ளது. தற்போது, ஆயுதங்கள், வெடி மருந்துகள், 200-க்கும் மேற்பட்ட ஜீப்புகள், காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் காவல் துறையை நவீனப்படுத்தும் முயற்சியில் சுமார் 2.25 கோடி ரூபாய்க்கு மேல், வெவ்வேறு இனங்களில் செலவிடவும் இந்த ஆண்டில் திட்டங்கள் உள்ளன.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரிலேயே காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், சிறைத் துறையினர் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென, ஒரு வாரியத்தை நியமிக்க இந்த அரசு அறிவித்து ஆணை பிறப்பித்துள்ளது. காவல் துறைத் தலைவர் பணித் தகுதியுள்ள ஒரு உயர் அலுவலரைத் தலைவராகக் கொண்டு அந்த வாரியம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. காவல் துறையில் தற்போது காலியாக உள்ள சுமார் 4,000 இடங்களுக்குப் பணியாளர்களை இந்த வாரியம் விரைந்து தேர்ந்தெடுத்துத் தரும். இன்னும் ஒரிரு மாதங்களில் இந்தத் தேர்வுப் பணி தொடங்கும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குச் சொல்வதில், மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த வரவு செலவுக் கூட்டத் தொடரில் மீண்டும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு, தற்போது இயங்கி வரும் காவல் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், இந்த ஆண்டிலேயே வீடு கட்டுவதற்கென 8 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, 1,000 வீடுகளைக் கட்டி வழங்கும் செயலில், அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

எத்தனையோ நிதி நெருக்கடிக்கு இடையிலும் கூட, சென்ற வரவு- செலவுக் கூட்டத் தொடரின் பொழுது, காவல் துறையினருக்கெனச் சில நல்ல திட்டங்களை அறிவித்தேன். அவர்களுக்கான உணவுப் படி உயர்த்தப்பட்டது. சீருடை பணியாளர் தேர்வாணை வாரியம் ஏற்படுத்தப்பட்டது. கடமை ஆற்றும்பொழுது வீர மரணம் எய்திய காவல்துறையினரின் குடும்பத்திற்கு உதவி வழங்கப்பட்டது. பயணப்படி, தினப்படிகளில் சலுகைகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதி உயர்த்தப்பட்டது. சீருடை மானியம் உயர்த்தப்பட்டது. அதுபோலவே இந்த ஆண்டிற்கென 21 புதிய திட்டங்களை வழங்க அரசு முடிவெடுத்திருக்கிறது. அவை இந்தத்துறை விரைந்து செயல்படுத்துவதற்கென அடிப்படை வசதிகளை வழங்குகின்ற பல்வேறு திட்டங்கள் ஆகும். ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல்துறை குடியிருப்புகளில் கழிப்பிடம்

தற்போது 17 மாவட்டங்களில் உள்ள 135 காவல்நிலைய, காவல்துறை குடியிருப்புகளில் உலர் கழிப்பிடங்கள் (Dry Latrines) பல ஆண்டுகளாக உள்ளன. சுகாதாரக் கேடு விளைவிக்கும் இந்தக் கழிப்பிடங்களையெல்லாம் நீக்கி, அதற்குப் பதிலாக நீரடிக் கழிப்பிடங்களாக (Flush out latrines) அவற்றை அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

அனைத்துச் சுகாதார வசதிகளும் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் ரூபாய் 70 இலட்சம் செலவில் உடனடியாக நிறுவப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறை ஓய்வு விடுதி

பணி நிமித்தம் சென்னை நகருக்கு வரும் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் போன்ற கீழ்நிலைப் பணியாளர்கள் குறைந்த

வாடகையில் தங்கிப்போகிற வகையில், நடப்பு ஆண்டில் ஓய்வு விடுதியொன்று ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்ட இந்த அரசு தீர்மானித்துள்ளது.

காவல்துறை உணவுமானியத் திட்டம்

1980-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது வரை நடைமுறையில் உள்ள, காவலர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை, உணவுப் பொருட்களை 50 சதவிகித மானியத்தில் வழங்கும் திட்டம் சீரமைக்கப்பட்டு, இன்றைய விலைவாசி நிலையில் 50 சதவிகித மானியம் என்று உயர்த்தி வழங்க ஆணையிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முடிவு 1.4.92 முதல் செயல்படுத்தப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 1.50 கோடி வரை ஆண்டொன்றுக்குக் கூடுதலாகச் செலவாகும். இத்திட்டத்தினால் 68,000-க்கு மேற்பட்ட பணியாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும்.

கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள்

காவல்துறையில் அமைச்சுப் பணியின் வேலைப் பளுவைக் கருத்தில் கொண்டு, அரசால் நியமிக்கப்பட்ட 1981-ஆம் ஆண்டு ஆய்வுக்குழு பரிந்துரைத்த 2,150 கூடுதல் அமைச்சுப் பணியிடங்களில் இதுவரை பல்வேறு காலகட்டங்களில் வழங்கப்படாமல் உள்ள, 80 கூடுதல் அமைச்சுப் பணியாளர்களையும் ஒட்டு மொத்தமாக இந்த அரசு இந்த ஆண்டு வழங்கும் என அறிவிக்கிறேன். இதனால் ஆண்டொன்றிற்கு ஏற்படும் மொத்தச் செலவு ரூபாய் 30 இலட்சம் ஆகும்.

காவல்துறையில் சார் ஆய்வாளர் நேரடி நியமன விகிதம்

காவல்துறையில் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடித் தேர்வு மூலமும், பதவி உயர்வு மூலமும், நடைமுறையில் உள்ள சிறப்பு விதிகளின்படி, 70 சதவிகிதம் நேரடி நியமனமாகவும், 30 சதவிகிதம் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்பப்படுகிறது. பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்ற காவலர்களுக்கு, காவலர் நிலையிலிருந்து பதவி உயர்வு வழங்கி ஊக்கப்படுத்தும் வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கத்தில், இப்போதுள்ள 30 சதவிகித பதவி உயர்வு 1.4.1992 முதல் 40 சதவிகிதமாக உயர்த்தப்படும்.

சில ஆய்வாளர்களின் பதவிகளைத் துணைக் கண்காணிப்பாளர் பதவிகளாகத் தரம் உயர்த்தல்

காவல்துறையில் பணிபுரியும் ஆய்வாளர்களில் பலர், 15 ஆண்டுகளுக்கு மேலாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லாமல் உள்ள தேக்க நிலைக்குத் தீர்வு காணும் நோக்கத்திலும், காவல்துறையிலுள்ள சில பிரிவுகளின் செயல்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும், மாவட்டங்களிலுள்ள தனிப் பிரிவு (Special Branch) ஆய்வாளர்கள் பதவிகளையும் மாவட்டங்களிலுள்ள புலனாய்வுப் பிரிவு (Intelligence Wing) ஆய்வாளர்கள் பதவிகளையும், துணைக் கண்காணிப்பாளர் நிலைக்குத் தரம் உயர்த்த, இந்த அரசு முன் வந்திருக்கிறது என்பதையும், இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதனால் பயன்பெறும் ஆய்வாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆகும். அரசுக்கு இதனால் ஆகும் செலவு ரூபாய் 40,000.



புறக்காவல் நிலையங்களை உயர்த்துதல்

தமிழகக் காவல்துறையின்கீழ் இயங்கும் 175 புறக்காவல் நிலையங்கள் சிலவற்றை, அப்பகுதியிலுள்ள மக்களின் தேவைக்கும், சேவைக்கும் போதுமான அளவில் பயன்படுகிற வகையில், முழு அளவிலான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன் வந்துள்ளது. இந்த நிதி ஆண்டில், பதினோரு புறக்காவல் நிலையங்களை முழுமையான தகுதியுடைய காவல் நிலையங்களாக மாற்றி ஆணையிட, இந்த அரசு முன் வந்துள்ளது என்பதை உங்களுக்குச் சொல்லுவதில் பேருவகை கொள்கிறேன்.

சரித்திரம் படைக்கும் செயல்பாடுகள்

அதன்படி தற்போது,திருவாலங்காடு, ஓரத்தி, ஆசனூர், மல்லிக்கரை, ஆயில்பட்டி, கோட்டப்பட்டி, பாகலூர், பொன்னை, தேரூர், கொப்பம்பட்டி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் புறக்காவல் நிலையங்கள், முழுமையான காவல் நிலையங்களாக உயர்த்தப்படும்.

இந்த அரசைப் பொருத்தவரையில், காவல் துறையை ஒரு வலிவுள்ள, திறமையான, பயனுள்ள துறையாக மாற்ற வேண்டும் என்பதோடு, அதில் பணியாற்றுகிற காவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் சரியான நேரத்தில், மனிதாபிமான எண்ணத்தில் வழங்க வேண்டும் என்பது தான். இந்த அரசின் நோக்கம் சரியாக இருப்பதால், காவல்துறையின் செயல்பாடுகள் நிச்சயம் இனி சரித்திரம் படைக்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, சேலத்திற்கு அருகே விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிற மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வயர்லெஸ் செட் கண்டுபிடிக்கப்பட்டதாகவும்; 'என்னைக் கொலை செய்வதற்குத் தற்கொலைப் படையினர் தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள் என்பன போன்ற தவறான செய்திகளைச் சிலர் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றனர்' என்றும் குறிப்பிட்டார்.

இது குறித்த உண்மை நிலையினை இந்த அவைக்கு எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

சேலம் மாவட்டம் ஏர்க்காட்டில் அமைந்துள்ள காவல்துறையின் 'வயர்லெஸ் ரிபீட்டர்' நிலையத்தில், (Wireless Repeater Station) ஏதோ ஒரு சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி இயக்கப்படுவதால், தொலைத் தொடர்பில் குறுக்கீடுகள் ஏற்படுவது தெரிய வந்தது. அது எங்கே இருக்கிறது, எவ்வாறு இயக்கப்படுகிறது என்று காவல்துறையினர் சேலம் மாவட்டப் பகுதியில் தேடி வருகின்றனர். அதை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

கவலைப்படுகிற நபர் நானில்லை!

விடுதலைப்புலியினரின் தற்கொலைப் படையினர் தமிழகத்திற்கு வந்துள்ளனர் என்ற செய்தியும் உண்மையானது. இந்தச் செய்தி நமது இராணுவத்தினராலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தற்கொலைப் படையில் எத்தனை விடுதலைப் புலிகள் வந்தனர் என்ற விவரம் தெரியவில்லை. ஆனால், அவர்கள் என்னைக் கொலை செய்வதற்காகவும், ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் சிறப்புப் புலனாய்வுக் குழு (SIT) அமைந்துள்ள 'மல்லிகை' கட்டடத்தைத் தகர்ப்பதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பதும், அவர்கள் தமிழகத்திற்குள் நுழைந்து விட்டனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

மேலும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுச் சிறைச் சாலையில் உள்ள கைதிகளை மீட்பதற்கு, அல்லது கொலை செய்வதற்கும், அவர்கள் திட்டம் தீட்டியுள்ளதாகவும் காவல் துறையினருக்குத் தகவல் தெரிய வந்துள்ளது. எது எப்படி இருந்தபோதிலும், இதற்கெல்லாம் கவலைப்படுகிற நபர் நானில்லை என்பது உங்களுக்கும் தெரியும்; எனது எதிரிகளுக்கும் தெரியும்.

தமிழக மக்களின் நல்லெண்ணமும், பாசமும் என்னுடன் என்றென்றும் இருப்பதால், அவர்களுக்காகப் பணியாற்றுகின்ற பெருமையைத்தான் நான் என் வாழ்வின் பேறாகக் கருதுவேனே தவிர, என் உயிரை அல்ல. எனவே என் உயிரென மதிக்கும் தமிழக மக்களின் நல் வாழ்விற்காக, நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

எங்கே, எந்த இடத்தில் எந்த ஒரு அசம்பாவிதம் நடந்தாலும், பொதுமக்களும் அரசியல்வாதிகளும், காவல்துறையைத்தான் வழக்கமாகக் குறை கூறுகின்றனர். எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்றால், கடந்த பிப்ரவரி, 18-ஆம் நாள், கும்பகோணம் மகாமகம் திருவிழாவில், 12,000 காவலர்கள் தொடர்ந்து பணியாற்றி, சுமார் 50 இலட்சம் பக்தர்களின் வழிபாட்டிற்கு உதவுகிற வகையில், சிறப்பாகக் காவல் பணி புரிந்தனர். ஆனால் அவர்களது பாராட்டத்தக்க பணி மறைக்கப்பட்டு, பத்திரிகைகளின் மூலம் சிலர் காவல்துறையினரைக் கடுமையாகச் சாடுகிற நிலைமை உருவாகிவிட்டது.

என்னையும் சிலர் விடவில்லை. சமயத் தலைவர்களும் அரசியல்வாதிகளும், நான் அங்கு சென்றதால்தான் காவல்துறையின் கவனம் போதுமான அளவு மக்கள் பக்கம் செலுத்த முடியாமல் போய்விட்டது, என்ற தவறான கருத்தை இன்று வரை பரப்ப முயற்சித்து வருகிறார்கள். மகாமகம் விபத்து பற்றி, நடந்த உண்மைகள் பற்றி, தேவையான அனைத்துக் கருத்துக்களும் மக்களுக்கு நிரம்பவே சொல்லப்பட்டு விட்டன. ஆனால் தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் என்னை விரும்பாத ஒரு சிலரே இதில் தவறான கருத்துக்களைக் காவல்துறையின் மீது தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். சொந்த விருப்பு, வெறுப்புகளுக்காகக் காவல்துறை மீது பழிபோடுகிறவர்களுக்கு எந்தப் பதிலும் நிறைவைத் தந்துவிட முடியாது.

காவல்துறையினருக்கு உறுதுணையாய் இருப்பீர்!

காவல்துறையின் பணி மேலும் சிறக்க வேண்டுமென்றால், பொதுமக்களும், அரசியல்வாதிகளும், அவர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டிய காலத்தில் ஊக்கமூட்டி, உறுதுணையாக இருக்கவேண்டும். குறிப்பாக அவர்கள் புரியும் பெருமைமிகு சாதனைகளையும், செயற்பாடுகளையும் மனமாரப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களது ஆற்றல் வெளிப்படும்; மக்களுக்காக அவர்கள் ஆற்றும் பணிகளில் ஆர்வம் ஏற்படும்.

'காவல் துறையினருக்கு மனத்தெம்பு ஊட்ட வேண்டும் அவர்கள் Demoralise ஆகி இருக்கிறார்கள்' என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், இன்னும் சிலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

காவல்துறையினரைச் சதா சர்வகாலமும் குறை கூறிக் கொண்டே இருந்தால் - அவர்கள் எதைச் செய்தாலும் தவறு என்று கடுமையாக விமர்சித்துக்கொண்டே இருந்தால் - அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படாமல் வேறு என்ன நடக்கும்? கடமையாற்றுவதில் எப்படி ஆர்வம் இருக்கும்?

காவல்துறையினரை மனச்சோர்வு அடையச் செய்வதில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்கு உண்டு. அரசியல்வாதிகளும் சரி, பத்திரிகைகளும் சரி, நாட்டு மக்களின் நன்மையைக் கருதி பொறுப்புடன் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்பொழுது, 'பழங்கி

மலை புறநகர் காவல் நிலையத்தில் மத்திய இரயில்வே காவலர் அடையாளம் தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று கூறினார். மாண்புமிகு உறுப்பினர் பேசும் பொழுது, யாருடைய ஆட்சியில் அந்தச் சம்பவம் நடந்தது என்று தெரிவித்துப் பேசி இருந்தால், மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் 3.5.1991 அன்று, அதாவது நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு முன்பு, குடியரசுத் தலைவர் ஆட்சியில் நடந்த நிகழ்ச்சி குறித்துக் குறை கூறி இருக்கிறார்.

3.5.1991 அன்று, காலை 9.45 மணிக்கு, மத்திய இரயில்வே காவலர் திரு ஹுமாயூன் கபீர், பரங்கிமலை புறநகர் காவல் நிலையத்தில், பயணச் சீட்டு இல்லாத ஆண் பயணி ஒருவரை விசாரணைக்கு, பயணச்சீட்டு சேகரிப்பவர் அறைக்குக் கொண்டு வரும்போது, அந்த இளைஞர் 9 எம்.எம். கைத்துப்பாக்கியால் மேற்படி காவலரைச் சுட்டுவிட்டு ஓடிவிட்டார். அந்தக் காவலர் அன்று மாலையே மரணம் அடைந்து விட்டார். தற்போது இவ்வழக்கினைக் கியூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்து, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. பீட்டர் அல்போன்ஸ் இந்தச் சம்பவத்தைப் பற்றி கூறுகிறபோது, ஏதோ இந்த அரசு ஆட்சிக் காலத்தில் இது நிகழ்ந்துவிட்டதைப்போல இருந்தது. எனக்கே தெரியாமல் இப்படியொரு சம்பவம் எப்போது நடந்தது என்று நானும் வியப்படைந்தேன். விசாரித்தபோதுதான் இது குடியரசுத் தலைவர் காலத்தில் நடந்தது என்று தெரிய வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிறபோது, யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது என்று தெரிவிப்பதுதான் முறையாகும்.

கண்டுபிடிக்கப்பட்டவை

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், பெருங்குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை குறைவாகவும், சில குற்றங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை அதிகமாகவும் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

கொள்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட விவரங்கள் பற்றித் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் என்று குறிப்பிட்டிருப்பது, வழக்குகள் முடிக்கப்பட்டு குற்றவாளி என்று தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மட்டுமே. இதில் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் சேர்க்கப்படவில்லை.

எனவே, காவல்துறையினர் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த வழக்குகளின் எண்ணிக்கை, மிக அதிகமாக இருந்தபோதிலும், நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட விவரங்களை மட்டுமே 'கண்டுபிடிக்கப்பட்டவை' என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிறு வழக்குகளை நீதிமன்றங்களில் விரைவாக முடிவு செய்ய



ஜனநாயகவாதி சிறிதளவுகூட சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

இயலும்; ஆனால் பெருங்குற்றங்களுக்கான வழக்குகளை முடிவு செய்ய, நீண்டகாலம் ஆகும் என்பது நீங்கள் அறிந்த ஒன்றுதான்.

பூரண மதுவிலக்கை அமலாக்கத் தயார்

மதுவிலக்கை ஏன் தமிழகத்தில் முழுமையாக அமல்படுத்தக் கூடாது என்றும், இங்கே வினா எழுப்பப்பட்டது. ஏழை, எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க மலிவு விலை மதுவைத் தமிழகத்தில் ஒழித்து, அதனால் ஏற்பட்ட ரூ.322 கோடி வருவாய் இழப்பு முழுமையும், இந்த அரசு தானே ஏற்று இருப்பதை அனைவரும் அறிவார்கள். இந்தச் சீரிய முடிவிற்கு ஏதேனும் உதவி மத்திய அரசிடமிருந்து கிடைத்ததா என்றால், ஒன்றும் இல்லை.

திரும்பத் திரும்ப நாங்கள் மத்திய அரசை, எங்களது இந்த வருவாய் இழப்பைச் சிறிதேனும் ஈடுகட்ட வேண்டும் என்று கேட்டு வந்தும், இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்தியாவில் தயாராகும் அயல்நாட்டு மதுபானங்களையும் (I.M.F.S.) ஒழித்துவிட்டு, பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்கள் அரசிற்கு முழுமையாக இருந்த போதிலும், அதனைச் செயல்படுத்த நிதிநிலை இடம் தரவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

பூரண மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பை மத்திய அரசு ஈடுசெய்ய முன்வந்தால், தமிழகத்தில் உடனடியாகப் பூரண மதுவிலக்கை அமல்படுத்த, எங்கள் அரசு எப்போதும் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர் சிறக்கவேண்டும்

தமிழகக் காவல்துறையின் திறமை இந்தியா வெங்கும் புகழ்பரப்பும் வண்ணம், ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டாக வேண்டும்.

டெல்லியிலுள்ள திகார் ஜெயிலில் பன்னாட்டுக் குற்றவாளிகளும், கடுங்குற்றவாளிகளும் அடைக்கப்பட்டு உள்ளது யாவருக்கும் தெரிந்ததாகும். இந்தச் சிறைச்சாலையின் வெளிப்புறச் சுவரிலிருந்து, காவல் காக்கும் தமிழகச் சிறப்புக் காவல் படையைச் சார்ந்த காவலர்கள் ஆரோக்கியராஜ், ஏசுபி என்ற இருவர், அன்றாட ரோந்துப் பணியைச் செய்து வரும்போது, இந்த ஆண்டு ஜனவரி 28-ஆம் தேதி சிறைச்சாலைக்கு வெளியே, ஒரு தோண்டப்பட்ட பள்ளத்தைக் கண்டு, புலனாய்வு செய்தபோது ஒரு (Tunnel) சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இதன் வழியே சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் தப்பிக்கச் செய்த முயற்சியும் தெரிந்து முறியடிக்கப்பட்டது.

அண்மையில் நான் டெல்லி சென்றிருந்த போது, அவர்களின் பணித்திறமையைக் கேட்டு மகிழ்ந்தேன்; பாராட்டினேன். இப்படி எங்கு பணிபுரிந்தாலும், தம் திறமையை வெளிப்படுத்தும் தமிழகக் காவல் துறையினர், மென்மேலும் சிறக்க வேண்டும் என்பதே என் அவா.

சென்ற வரவு செலவுக் கூட்டத்தொடரில், காவல்துறையினருக்குப் பல சலுகைகளையும் நலத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, 14 அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவித்திருந்தேன். அவை எல்லாம் ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டு, அவை உரியவர்களுக்குச் சேரவில்லை என்ற குறைபாட்டை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். நான் அறிவித்த 14 இனங்களிலும், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன என்ற செய்தியை, உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு குறையைச் சுட்டிக் காட்டினார்கள். காவலர் குடியிருப்புகளில் தனித்தனியாக மீட்டர் வைக்காது, மின் கட்டணம் ரூபாய் 4 ஆயிரம் வரை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலுள்ள 4,344 குடியிருப்புகளில், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோரின் குடியிருப்புகளுக்குத் தனித்தனி மின் அளவுகள் உள்ளன. தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளில் 3876-இல், 1,476 குடியிருப்புகளுக்கு மட்டும் தனி மின் அளவைகள் பொருத்தப்பட்டுள்ளன. அதை மாற்றி 2431 குடியிருப்புகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தை, புது மின் அளவைகள் மூலம் கணக்கிட்டு, ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் 20 யூனிட் சலுகைக்கு மேலும் பயன்படத்தப்படும் மின்சாரத்திற்கு, மொத்த உபயோகிப்போர்களில் சமமாகப் பங்கிடப்பட்டு, கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

1984 முதல் 1991-ஆம் ஆண்டு வரை, சென்னை நகரக் காவலர்களிடம் இருந்து, மின் கட்டணம் வசூலிக்காமல் விடப்பட்டதால், 7 ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள தொகையை, மாநிலக் கணக்காயர் தணிக்கையில் சுட்டிக்காட்டியதன் பேரில், வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது, மாதம் ஒன்றுக்குச் சுமார் 200 ரூபாய் சுலபத் தவணையில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் கூறியதைப்போல, ஒரு ஆண்டுக்குக் காவலரிடம் ரூ.4,000 வசூலிக்கப்படுகிறது என்பது சரியல்ல. 7 ஆண்டு பழைய பாக்கியைத் தவணை முறையில் வசூலிக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டுள்ளது.

காவலரின் விடுமுறைகள்

காவல் பணியாளர்களுக்கு சனி, ஞாயிறு விடுமுறை கிடைப்பது இல்லை. எனவே அவர்களுடைய தற்செயல் விடுப்பை உயர்த்தி, 20 நாட்கள் ஆக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

காவல்துறையில் போதுமான ஆட்கள் தற்சமயம் இல்லை. சுமார் 4,000 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு நியமனக் குழு ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளது. காலியாக உள்ள இந்தக் காவல் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டுவிட்டால், இந்தப் பிரச்சினை பெருமளவு தீரும் என்று கருதுகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம், குள்ளஞ்சாவடி காவல் நிலையத்தில் 16.3.1992 அன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள், நியாயம் கேட்கப்போன பொதுமக்கள் மீது காவல்துறையினர் அநியாயமாகத் துப்பாக்கிச் சூடு நடத்திய தாக்க் குற்றம் சாட்டியுள்ளார்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் அன்று குள்ளஞ்சாவடி காவல்துறையினர் சமட்டிக்குப்பம் என்ற கிராமத்தில் இருந்து 9 நபர்களை கள்ளச் சாராயம் காய்ச்சிய குற்றத்திற்காகக் கைது செய்து கொண்டுவந்தனர். அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. விருப்பலிங்கம் என்பவர், 100 அடி ஆட்களுடன் பயங்கர ஆயுதங்களைக் கையில் ஏந்தி, குள்ளஞ்சாவடி காவல் நிலையத்திற்கு வந்து கைது செய்யப்பட்ட அவரது மைத்துனரை விடுவிக்க வேண்டும் என்றும், இல்லையேல் காவல் நிலையத்தைத் தாக்கி விடுவதாகவும் மிரட்டினார். திரு. விருப்பலிங்கம் ஏற்கெனவே ஒரு கொலை வழக்கில் குற்றவாளி என்று ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, தற்போது உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி பெயிலில் இருப்பவர். காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் எவ்வளவோ எடுத்துக் கூறியும், கூட்டத்தினர் வன்முறையில் ஈடுபட்டு துணை ஆய்வாளரையும், காவலர்களையும் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினார்கள். கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் பயனற்றுப் போகவே, வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தும், கூட்டம் கலையாத சூழ்நிலையில், தற்பாதுகாப்பிற்காக இரண்டு ரவுண்டு சுடப்பட்டது. இதில் விருப்பலிங்கம் தொடையில் காயம் அடைந்து, கீழே விழுந்த போது தலையில் அடிபட்டது. அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்தார். மற்றொருவரான செல்வராஜ், கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் இல்லை. இறந்துபோன விருப்பலிங்கம், ஆயுள் தண்டனை பெற்றவர் மட்டுமல்ல, இரண்டு கொலை முயற்சி வழக்குகளும் அவர்மீது நிலுவையில் இருக்கின்றன.

இதே வழக்கைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும் சுட்டிக்காட்டினார். ஆனால் அவர் - 'காவல் துறையினருக்குப் பாதுகாப்பு இல்லையே, இது போன்ற காவல் நிலையத்தைத் தாக்கும் பொது மக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது?' என்று தான் குறிப்பிட்டார். நியாயமாகப் பேசினார்.

ஒருதலைப் பட்சமான குறைகள்

போலீஸ் துப்பாக்கிச் சூடு என்றவுடனே, காவல்துறையினர்தான் தவறு செய்துவிட்டார்கள் என்ற தவறான கருத்து பொதுவாகப் பரப்பப் பட்டு வருகின்றது. அந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணமோ, அப்போது இருந்த சூழ்நிலையோ வெளிப்படுத்தப்படாமல், ஒருதலைப்பட்சமாகவே குறைகள் கூறப்படுகின்றன. இவ்வாறு நடைபெறும் துயரச் சம்பவங்கள் ஒவ்வொன்றுக்கும், காவல்துறையினரைக் குறை கூறி, பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும், சமூக விரோத சக்திகளும், ஒரு பொய்யான மாயையை உருவாக்கி வருகின்றனர். நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சுமார் 6 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழகத்தில், 68,987 காவல் துறையினர்தான் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியுள்ளது; குற்றங்களைக் கட்டுப்படுத்திக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது; மற்றும் பல்வேறு சட்டபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர வேண்டி உள்ளது. சராசரியாகத் தமிழகத்தில் ஒவ்வொரு ஆயிரம் மக்களுக்கும் ஒரு காவலர் என்ற நிலைதான் தற்பொழுது உள்ளது. இந்தச் சக்தியை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் இன்றைய தினம் காவல்துறையினர் சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்தி உள்ளனர் என்றால், நிச்சயமாக அவர்கள் பாராட்டுக்குரியவர்கள் மட்டுமன்றிப், போற்றுதலுக்கும் உரியவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் காவல்துறையில் உள்ள காலியிடங்களை விரைவாக நிரப்பும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இது விரைவில் நிரப்பப்படும். அடுத்து, தம் தொகுதியில் கள்ளச்சாராயம் நிரம்பி உள்ளதாகவும், குறிப்பாக சினிமா கொட்டகைகளில் பாக்கெட் சாராயம் விற்கப்படுவதாகவும் கூறினார்.

திரு. போளூர் வரதன் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைப் பரிசீலித்ததில், இவரது தொகுதியில் காவல்துறையினர் நிறைய சாராய வழக்குகள் பதிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஸ்ரீபெரும்புதூரிலுள்ள சுமதி சினிமா தியேட்டரை ஒட்டி உள்ள பகுதியில், சாராயம் விற்பனை இல்லையெனச் சொல்லப்படுகிறது. இருப்பினும், பாப்பாம்மாள் என்பவர், சுமதி தியேட்டரிலிருந்து சுமார் 1½ கிலோமீட்டர் தூரத்தில் சாராயம் விற்பனை செய்தார். அவரை இருமுறை கைது செய்துள்ளார்கள்.

அடுத்துப் பேசிய டாக்டர் குமாரதாஸ் அவர்கள், குற்றங்களின் கண்டுபிடிப்புச் சதவிகிதம் ஏன் குறைந்துள்ளது எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். தமது விவாத உரையின்போது, காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தாமே பயங்கர ஆயுதங்களுடன் சென்று, கொள்ளை அடித்து இருக்கிறார் என்று சொன்ன பிறகும், நடவடிக்கை இல்லையென்று ஒரு புகார் இங்கே கூறினார்.

தொழிலாளர்களுக்கு ஊட்டி, கொடைக்கானலில் தங்கும் விடுதிகள்

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் எண்ணூர் அனல் மின்நிலைய ஊழியர்கள் குடியிருப்பில் தையல் பயிற்சி நிலையம் நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சி நிலையத்தில் வெற்ற பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் விழாவில் தொழிலாளர் நல ஆணையாளர் திரு. நா. ஆதிமூலம் கலந்து கொண்டு பேசியதாவது:

தொழிலாளர் நல வாரியம் மூலமாக தமிழ்நாட்டில் 68 தொழிலாளர் நல மையங்கள் உள்ளன. இவற்றில் 58 மையங்களில் தையல் பயிற்சி நிலையமும், குழந்தைகள் காப்பகமும் உள்ளன. மற்ற 10 இடங்களில் தையல் பயிற்சி நிலையம் மட்டும் இயங்கி வருகிறது.

இந்த மையங்களில் தொழிலாளர்களின் மனைவி, மகள் அல்லது திருமணம் ஆகாத தங்கை ஆகியோருக்கு ஒரு வருடம் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் உதவித் தொகையாக மாதம் ரூ.80 வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் நலத்துறை மிகச் சிறப்பாக இயங்குகிறது. மற்ற மாநிலங்களைவிட இங்கு தொழில் உறவு சுமுகமாக உள்ளது. தொழிலாளர் துறையினர் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்தி இரு பிரிவினருக்கும் பாதகம் இல்லாமல் பல பிரச்சினைகளைத் தீர்த்து உள்ளனர்.

தொழிலாளர் நலத்துறைக்கு தொழிலாளர் மூலம் ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் செலவோ ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் ஆகிறது. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் செலுத்தும் கட்டணம் ரூ.2. இது மற்ற மாநிலங்களைவிட மிக குறைவாகும்.

தொழிலாளர்கள் குடும்பத்துடன் சென்றால் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்குக் குற்றலாம், மகாபலிபுரம், சென்னை போன்ற இடங்களில் தங்கும் விடுதிகள் கட்டப்பட உள்ளன. அத்துடன் ஊட்டி, கொடைக்கானல், இராமேசுவரம் போன்ற சுற்றுலா மையங்களில் விரைவில் தங்கும் விடுதிகள் கட்டப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியது - துணைக் கண்காணிப்பாளர் திரு. பெருமாள் என்பவர், தனிப்பட்ட முறையில் சம்பந்தப்பட்டிருக்கிற வழக்கே தவிர, அவருக்கும், அவரது அலுவலகப் பணிக்கும் சம்பந்தம் இல்லை என்பது, பல உறுப்பினர்களாலேயே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் துணைக் கண்காணிப்பாளர் இல்லவே இல்லை. இருப்பினும், புகார் கொடுக்கப்பட்ட காரணத்தால், வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினை தனிப்பட்ட முறையில் நிலம் விற்றது பற்றியதாகும்.

மேலும் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் பேசும் போது, காவல் நிலையங்களில் அடைத்து வைக்கப் பட்ட விசாரணைக் கைதிகள் நிறையப் பேர்கள் இறக்கிறார்கள் என்றும், குறிப்பாகத் தமது தொகுதியில் ஜோசப் என்பவர் இறந்து விட்டதாகவும், அதன்மீது விசாரணை என்ன ஆனது என்றும் கேட்டார்.

1989-90-இல் 12 பேர் இதுபோன்ற இறப்புக்கு ஆளாகி உள்ளார்கள் என்றும், 1990-91-இல் 9 பேர் என்றும், 1991-92-இல் 7 பேர் என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து அடைத்து வைக்கப்பட்ட விசாரணைக் கைதிகளின் இறப்பு எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்பது வெளிப்படை. எந்த ஒரு நபரும் அடைத்து வைக்கப்பட்டு, விசாரணையில் இருக்கும் போது இறந்தால், விதிமுறைகளின்படி கோட்டாட்சியர் விசாரணை நடத்தி, அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஜோசப் இறந்ததைப் பற்றிக் கோட்டாட்சியர் விசாரணை நடத்தியிருக்கிறார். அந்த அறிக்கையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. குமாரதாஸ் அவர்கள் கோவை மாவட்டத்தில் மாவட்டக் கருவூலக் கழிப்பறையில், இரண்டு அரசு ஊழியர்கள் கொலை செய்யப்பட்டது இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே உள்ளது என்று அங்கலாய்த்துக் கொண்டார். 23.9.91 அன்று மகாலஷ்மி, கோமதி ஆகிய இருவரும், கோவை மாவட்டக் கருவூலக் கழிப்பறையில் கொலையுண்டு கிடந்த சம்பவத்தின் வழக்குப் பதிவு செய்து, இதற்கான தனிப்படை அமைக்கப்பட்டு, வழக்கு தீவிர புலன் விசாரணையில் உள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மீது பரிவு - பச்சாதாபம்

அடுத்துப் பேசிய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், காவல்துறையில் உயர் பதவிகளை உருவாக்கியதில், கோஷ்டிப் பூசல் உருவாவதாகக் கூறினார். காவல்துறையில் தேவையான பதவிகள், தேவையான நேரங்களில் மட்டும் உருவாக்கப்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, காக்கிச் சட்டையைக் காவல்துறையினர் மட்டுமே அணிய வேண்டுமென்று கேட்டார். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று நாம் யோசிக்க வேண்டியதுதான். தொடர்ந்து பேசிய அவர், சார்பு ஆய்வாளர்களை நியமிக்கும்போது, ஆயுதப் படையிலிருந்து சட்டம் ஒழுங்குப் பிரிவிற்கு மாறுதல் செய்யும் வசதி வேண்டுமென்று சொன்னார். இதனுடைய சாத்தியக்கூறுகள் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது பேச்சில் அழுத்திச் சொன்னது, நடக்கும் துப்பாக்கிச் சூட்டில் எல்லாம், பாதிக்கப்படுபவர்கள் அதிகமாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னார். இந்த அரசைப் பொறுத்த வரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பச்சாதாபமும், பரிவும் அதிக அளவில் கொண்டிருக்கிறது, என்று சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். காவல்துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் எப்போதும் நடத்தப்படுவதில்லை. மாறாக, தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், நிலைமை கட்டுக்கடங்காது போகும்போது, துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்கமுடியாததாக ஆகிப் போகின்றது. அந்தச் சமயத்தில் பாதிக்கப்படுபவர்கள் தாழ்த்தப்பட்டவர்களா, மற்றவர்களா என்று பார்க்க முடிவது இல்லை. இருப்பினும் திரு. தமிழரசன் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்து, என் மனதிலேயே பதிந்துள்ளது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் வெகுவாக ஒழிக்கப்பட்டுள்ளது என்று சொல்லும் அவர், பதனீர் இறக்கும் பேரில் கள் இறக்குகிறார்கள் என்று சுட்டிக் காட்டினார். இதைக் காவல் துறையினருக்கு அறிவுறுத்தி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

நன்கு செயல்படும் அமைதிக் குழு

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் போடப்படுகின்ற வழக்குகள், திறமையாக நடத்தப்படுவது இல்லை. அதற்குரிய அழுத்தம் கொடுக்கப்படுவது இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். அது சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். மேலும், இனக் கொடுமைகளைத் தடுக்க வேண்டும், அதற்கு மேல்மட்ட ஆலோசனைக் குழு அமைத்தால் நல்லது என்று சொன்னார்கள்.

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும், எல்லா இனங்களையும் சேர்த்து, அமைதிக் குழு ஒன்று நன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் இது தேவை இருக்காது என்று கருதுகிறேன்.

சங்கரன்கோவிலை அடுத்துள்ள திருவேங்கடத்தில் நடந்த கொலை வழக்குப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். ஆதிதிராவிடர்கள் மற்றும் நாயக்கர்கள் கோவில் கட்டும் பணியில், முன் விரோதம் காரணமாக, 14.3.92 அன்று இரவு திரைப்படம் பார்த்துவிட்டு வந்த 6 ஆதிதிராவிட நபர்களை, திருவேங்கடத்தில் சுமார் 20 நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வழிமறித்து, ஆயுதங்களால் தாக்கி, ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 3 நபர்களைக்

"பொதுத்தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லை, அவன்தன் இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலையாகும்."

கொலை செய்துவிட்டதாக வழக்குப் பதிவாகி, இதைத் தீவிரமாக விசாரணை செய்வதற்காகத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 3 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு விசாரிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

தடா சட்டம் பற்றிச் சிந்திக்கலாம்

அடுத்துப் பேசிய திரு. சிவசுப்பிரமணியன், இலங்கை விடுதலைப் புலிகளுக்குத் துணை போகும் யாராக இருந்தாலும் (திரு. பண்ருட்டி ராமச்சந்திரன், திரு. திருநாவுக்கரசு போன்றவர்கள்) அவர்களைத் 'தடா' சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுத்து கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

இதுபோன்ற கருத்தைப் பல உறுப்பினர்கள் வலியுறுத்தி இருக்கின்றார்கள். சட்டப்படி, நிலைமைக்கு ஏற்றபடி, இதில் என்ன செய்ய முடியும் என்பதைச் சிந்திக்கலாம்.

நமது சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்பவர். பேசுகிறபோது, ஆழ்ந்த கருத்துச் செறிவோடு விஷயங்களை அவர் பேசுவதால், அனைவரும் கவனத்தோடு அவரது பேச்சுக்குச் செவி மடுக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் பாராட்ட வேண்டிய அம்சங்களைத் தாராளமாகப் பாராட்டுவார். அவரது வாழ்த்து, அளவானது: அதே நேரத்தில் விமர்சிக்க வேண்டிய விஷயங்களை விவரத்தோடும், ஆதாரத்தோடும் சுட்டிக் காட்டுவார். அவரது விமர்சனம் தெளிவானது: எத்தனை மணி நேரம் உழைத்து, எத்தனைப் புத்தகங்களைப் படித்திருந்தால், இத்தனைக் கருத்துக்களை அவர் கூற முடியும் என்கிற வியப்பு நமக்கு ஏற்படும். அது அவரது உழைப்பின் விளைவு!

சிலருக்குக் குற்றம் மட்டுமே கூற வரும். பாராட்ட மனமே வராது. தனது சொந்தக் குரலைத் தானே திரும்ப திரும்பக் கேட்பதற்காக, சத்தம் போட்டுப் பேசுகிற உறுப்பினர்களும் உண்டு. சிலர் கூச்சல் போடுவதற்காகவே சட்டமன்றத்திற்கு வந்து, சத்தற்ற வாதங்களை எழுப்பி, மன்ற நடவடிக்கைகளுக்குத் தொந்தரவு தருவதும், நமக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், தனது சட்டமன்றப் பணிகளின் மூலம், மக்களது எதிர்பார்ப்புகளின் நியாயத்தையும், தான் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கு மரியாதையையும் என்றென்றும் நிலைக்க வைக்கிறவர். அவரை மனந்திறந்து பாராட்டுகிற வாய்ப்பாக, இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

சில சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், விமர்சனங்களை எடுத்துரைத்தாலும், ஆக்கப்பூர்வமான வகையில் அவர்களது விமர்சனங்கள் அரசுக்குப் பயன்பட வேண்டும் - நிர்வாகத்தில் குறைபாடுகள் இருப்பின், அவற்றைச் சீர் செய்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கூறப்படுபவை ஆகும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. சிங்காரம் ஆகியோரும், அவர்களைப் போன்ற இன்னும் சிலரும் பேசுகிறபோது, அரசு நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை; பாராட்ட வேண்டியவற்றைப் பாராட்டுகிறார்கள். ஆனால், அதே சமயம் அவர்கள் அரசை விமர்சிக்கவும் பின் வாங்குவது இல்லை. ஆனால் எப்பொழுதுமே ஆக்கபூர்வமான யோசனைகளைத்தான் கூறுகிறார்கள். அவர்களுடைய அடிப்படை நோக்கமே, தங்களது விமர்சனங்களினால், நிர்வாகத்திலுள்ள தவறுகள் திருத்தப்பட வேண்டும், அதனால் மக்களுக்கு நன்மைபயக்க வேண்டும் என்பதுதான்.

விளம்பர தாகத்தினால், மோகத்தினால்...

ஒரு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது, ஆளுங்கட்சிக்கு எரிச்சலை மூட்ட வேண்டும், ஆட்சியில் உள்ளவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டும், அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்த வேண்டும், முடிந்தவரை சட்டப் பேரவைக்குள் அமளி, துமளியை ஏற்படுத்த வேண்டும், என்ற அடிப்படை நோக்கத்துடன்தான் சில குற்றச்சாட்டுக்களை கூறி, அரசு மீது பழி சுமத்துகிறார்களே தவிர, எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண வேண்டும் என்றோ, மக்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்றோ, அவர்கள் எண்ணுவதில்லை. அபாண்டமான பழிகளை அரசு மீது சுமத்தி, தாக்குகிற தொனியிலேயே பேசி, சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்ட போனால், அப்படியாவது தங்கள் பெயர், பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வராதா, என்ற விளம்பர தாகத்தினால், மோகத்தினால், ஏக்கத்தினால் இப்படியெல்லாம் பேசுகிறார்களே தவிர-உண்மையில் அவர்களுடைய விமர்சனங்களினால் எந்த நன்மையும் விளைய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒரு நபரைப் பிடிக்கவில்லை, அவர்களுக்கு அரசியல் வாழ்க்கையில் விரக்தியே மிஞ்சியுள்ளது என்பதால், அந்த நபர் எதைச் செய்தாலும் எதிர்க்கவேண்டும் என்ற முடிவுடன், கண்மூடித்தனமாக எதிர்க்கிறார்களே தவிர, அவர்களுடைய வாதங்களில் சத்தும் இல்லை அவர்களுடைய கூற்றுக்களில் உண்மையும் இல்லை.

எல்லோரும் பாராட்டும் இந்த அரசின் சாதனைகளைக்கூட பாராட்ட மனமில்லாமல், எல்லாவற்றையும் குறை கூறுவதால், யாரும் இவர்களுடைய பேச்சுக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்வதில்லை. இம்மாநில மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு, இவர்களைப் பற்றிய நினைப்பும் இல்லை; இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. இவர்களும் ஆங்காங்கே சில பொதுக்கூட்டங்களில் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். கூட்டந்தான் கூடுவதில்லை. இவர்களுடைய பேச்சுக்கள் பத்திரிகைகளில் மட்டும் தவறாமல் வருகின்றன. நம் மாநிலத்தில் பத்திரிகை படிப்பவர்கள், மொத்த மக்கள் தொகையில் 10 சதவிகிதம் கூட இல்லை. ஆனால் அந்த 10 சதவிகித மக்கள்கூட, பத்திரிகைகளில் இவர்களுடைய பேச்சுக்களைப் படிக்கும்போது, 'இவர்கள் எப்போதும் இப்படித்தான் - குறை சொல்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வேலையே இல்லை' என்று அலுத்துக் கொள்கிறார்கள்.

இருப்பினும், இப்படிப்பட்ட சிலர் இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களாக இருப்பதால், அவர்களுக்கும் பதில் அளிக்க வேண்டியது எனது கடமையாகிறது.

நேற்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும் இங்கு தெரிவித்த சில கருத்துக்களுக்கு, எனது பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பாதிவிலையில் உணவுப் பொருட்கள்

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பேசும்பொழுது காவல் துறையினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டத்தில், குறிப்பிட்ட தொகைக்குப் பதிலாக, விலையில் 50 சதவிகிதம் மானியமாக வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். காவல்துறை அலுவலர்கள் மீது அக்கறை கொண்ட எங்கள் அரசு ஏற்கெனவே சில வாரங்களுக்கு முன்னரே இது குறித்து எடுத்த நல்ல முடிவினை நான் எனது பதிலுரையிலேயே தெரிவித்தேன்.

மீண்டும் அதனை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இனி, காவலர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் இன்றைய விலையில் 50 சதவிகிதம் மானியம் அளித்து பாதிவிலையில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித நேயத்தோடு அணுகவும்

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் உரையாற்றும் பொழுது பொதுவாக 'மனித நேயத்தை'ப் பற்றிக் குறிப்பிட்டார். மனித நேயம் என்பது அடுத்தவரை தன்னைப்போல் கருதி நடத்தும் மாபெரும் பண்பு ஆகும். அவ்வாறு பார்க்கும்போது அரசு காவல் துறையினரை மனித நேயத்தோடும், காவல்துறையினர் பொதுமக்களை மனித நேயத்தோடும் நடத்த வேண்டும். அதே நேரத்தில் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் காவல்துறையினரின் பல்வேறு பணிகளில் உள்ள சிக்கல்களையும் இடர்ப்பாடுகளையும் கருத்தில் கொண்டு அவர்களையும் மனித நேயத்தோடு அணுகுவதுதான் சிறந்த பண்பாகும்.

> உலகத்திலே மிகவும் மலிவான பொருள் அன்பு தான். வாங்குகின்றவனுக்கும், கொடுக்கின்றவனுக்கும் அது பண்டைக்கு மிகுதியான இலாபத்தைத் தரும்.
>
> —இங்கர்சால்

மக்கள் - குறிப்பாக ஏழை எளியோர், நீதிக்காகக் காவலரை அணுகும்போது, காவலர்கள் அவர்களை மதித்து, உதவியாக இருந்து, அவர்களுக்கு நீதி கிடைக்கப் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் தான், எங்கள் அரசு காவலர்களைப் பலவகைகளில் ஊக்குவித்து வருகின்றது. அவர்களிடையே மனித நேய மனப்பான்மையையும் எங்கள் அரசு வளர்த்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெஞ்சார்ந்த நன்றி

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை, தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறை மானியக் கோரிக்கைகளின் மீது, தேவையான விளக்கங்களோடு நான் ஆற்றிய பதில் உரை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மன நிறைவு அளித்திருக்கும் என நம்புகிறேன். இம்மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, அரசுக்கு அறிவுரைகளையும், தேவையான யோசனைகளையும் வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அறிவுரைகளும், யோசனைகளும், கருத்துக்களும் அரசால் கவனத்தோடு கவனிக்கப் படவும், அவசியத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படும். அடிக்கடி விமரிசனத்திற்கு உள்ளாகும் இம்மூன்று துறைகளின் செயல்பாட்டைச் செப்பனிடுகிற வகையில், மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்கள் அரசின் கவனத்தை வெகுவாகவே கவர்ந்திருப்பதால், அது குறித்த செயல்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய உரையில் தேவையான பதில் வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

என்னால் பதில் சொல்லப்படாத கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள் அனைத்தும் குறிப்பெடுப்பில் இருப்பதால், அவைகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

● ●

சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு அரசின் பல்வேறு சலுகைகள்! சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

சுற்றுலா மையங்களில் நீர் விளையாட்டு, மலையேறுதல், மலைப் பாதை நடைப்பயணம், வானில் பறத்தல் ஆகிய வசதிகளை ஏற்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்து உள்ளது.

முட்டுக்காட்டில் தேசிய நீர் விளையாட்டுப் போட்டி நடத்தும் நிறுவனம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு நீர் விளையாட்டுப் போட்டிகள் நடத்தத் தேவையான வசதிகள் செய்யப்படும். முட்டுக்காடு உப்பங்கழி ஆழப்படுத்தப்படும்.

மன்னார் வளைகுடா முயல் தீவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் உணவகம் அமைக்கப்படும். முயல் தீவிற்கும் இதர தேசீய கடல் பூங்கா தீவுகளுக்கும் சென்று வர படகு வசதிகள் ஏற்படுத்தப்படுத்தித் தரப்படும்.

பண்பாட்டு நகரங்கள்

மாமல்லபுரம், தரங்கம்பாடி, காஞ்சிபுரம், தஞ்சாவூர், இராமேசுவரம், சிதம்பரம், கும்பகோணம், ஸ்ரீரங்கம், திருத்தணி, கன்னியாகுமரி, பழனி ஆகிய நகரங்கள் பண்பாட்டுப் பாரம்பரிய நகரங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு நகருக்கும் சிறப்புச் சுற்றுலா மேம்பாட்டுக் குழுமம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நகரங்களில் பொது மக்களுக்காகச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும். திட்டமிடப்படாத ஒழுங்கற்ற வளர்ச்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது.

இதேபோல் உதகமண்டலம், குன்னூர் அடங்கிய நீலகிரி மலைப் பகுதி, கொடைக்கானல் அடங்கிய பழனி மலைப்பகுதி, ஏர்க்காடு அடங்கிய சேர்வராயன் மலைப் பகுதி, குற்றாலம் ஆகியவை இயற்கையெழில் பாரம்பரியப் பகுதிகளாக இனம் பிரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

சிறப்புச் சுற்றுலாப் பகுதிகள்

முட்டுக்காடு, மாமல்லபுரம், காஞ்சிபுரம், தரங்கம்பாடி ஆகிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச் சிறப்புச் சுற்றுலாப் பகுதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

போதிய வசதிகள் இல்லாததால் அயல்நாட்டுப் பயணிகள் இங்கு செல்வதைத் தவிர்க்கிறார்கள். மத்திய அரசின் நிதியுதவியோடு இந்தப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரங்கம்பாடிக்கு அயல்நாட்டுப் பயணிகள் விரும்பி வரும் வகையில் ஒரு மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையும் கூட்டுத் துறையும் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்த வழிவகைகள் செய்யப்படும்.

ஈட்டுத்தொகை உயர்வு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்தால் ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது போல் ரூ.60,000 ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

இதுவரை இந்த ஊழியர்கள் இறந்தால் ரூ.25,000 ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும் வீட்டு வாடகைப் படியும் வழங்கப்படும்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் ஓட்டல்கள், சிற்றுண்டி விடுதிகள், சாலையோர உணவகங்கள் நன்முறையில் செயல்படவும், ஓட்டல்களில் உள்ள தோட்டங்கள் சீரிய முறையில் பராமரிக்கப்படவும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

சிறந்த ஓட்டலின் மேலாளருக்கு ரூ.5,000 ரொக்கப் பரிசும், பணியாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500-ம் பரிசாக வழங்கப்படும்.

புதிய சுற்றுலாக் கழக ஓட்டல்

சென்னை மாநகரத்தில் பிராட்வேயில் பழைய சட்டக் கல்லூரி மாணவர் விடுதி நவீனமயமாக்கப்பட்டு நட்சத்திர ஓட்டலாக மாற்றப்படும். இதற்கு ரூ.2 கோடி செலவாகும்.

புதிதாக இரண்டு குளிர் சாதன வசதியுடைய சொகுசுப் பேருந்துகள் ரூ.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

சுற்றுலாத் தொழிலுக்குச் சலுகை

சுற்றுலா, ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பல சலுகைகளை மாநில அரசு வழங்குகிறது. சலுகை வட்டி வீதத்தில் சுற்றுலாத் தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. புதிதாகத் தொடங்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற ஓட்டல்கள், உணவகங்களுக்கு ஐந்து ஆண்டுகள் வரை விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். கேளிக்கை வரியிலிருந்து 50 சதவிகிதம் தள்ளுபடி ரூ.10 இலட்சத்திற்கும் மேற்படாமல் செய்யப்படும். முதலீட்டிற்கு நிலத்தின் மதிப்பு நீங்கலாகப் பத்து சத ஊக்க உதவித் தொகை உள்பட பல சலுகைகள் தரப்படும்.

சாந்தோம் கடற்கரை

சாந்தோம் கடற்கரையைப் பாதுகாக்கத் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மெரீனா கடற்கரையின் மேம்பாட்டிற்காகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு திட்டத்தைத் தயாரித்து வருகிறது. மெரீனா கடற்கரையை மேம்படுத்திய பின்னர் சாந்தோம் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

-சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் முடிவில் அளித்த பதிலுரை (25.3.1992).

வெளிநாடுகளில் சுற்றுலாப் பிரச்சாரம்

தமிழகச் சுற்றுலா மையங்கள், தமிழகக் கலை, கைவினை, பண்பாடு குறித்து வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும் வகையில் விளம்பரச் சுவரொட்டிகள், சிறு புத்தகங்கள், வீடியோ மற்றும் திரைப்படங்களைத் தயாரிக்க அரசு திட்டமிட்டு உள்ளது.

வெளிநாடுகளில் உள்ள மத்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், இந்தியத் தூதரகங்கள், ஏர்-இந்தியாவின் விற்பனை நிலையங்கள் முக்கியச் சுற்றுலா முகவர் அமைப்புகள் (ஏஜென்சிகள்) ஆகியவற்றிலும், இந்தியாவுக்கு வரும் முக்கிய ஏர்லைன்ஸ் விமானங்களிலும் வீடியோ, திரைப்படங்கள் காட்டப்படும். மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வரும் வகையில் மோரிஷஸ் நாட்டுச் சுற்றுலா வணிக நிறுவனத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்படும்.

தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் உதகை, கொடைக்கானல், மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் தொலைபேசி இணைப்பகம் ஏற்படுத்தப்படும். உணவுக் கலை நிறுவன உணவகப் பணியாளர்களுக்குப் பயிற்சி தரப்படும். இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன் (ஐஓசி) பணியாளர்களுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களில் அறைகள் ஒதுக்கப்படும். எல்.டி.சி. பயன்படுத்துவோருக்குத் தனிச்சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்படும். திருச்சி, தஞ்சை, குமரி ஆகிய இடங்களில் ஓட்டல்கள் அமைக்கப்படும்.

கேபிள் கார்

உதகைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளையும், பொதுமக்களையும், குழந்தைகளையும் கவரும் வகையில் அங்கு ஒரு 'கேபிள் கார்' அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கடலூர், சேலம், நெல்லை, குடந்தை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் கட்டப்படும். மத்திய அரசின் உதவியுடன் நீலகிரியில் வட்டார உணவுக் கலை நிறுவனம் அமைக்கப்படும்.

மாம்பழ விழா

தருமபுரி மாவட்டத்தில் புதிதாக மாம்பழ விழா இந்த ஆண்டு நடத்தப்படும்.

சென்னை சட்டக் கல்லூரியின் பழைய விடுதியைப் புதுப்பித்துச் சுற்றுலா ஓட்டலாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25.3.1992 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்த சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து.

பயணிகளின் சொர்க்கம்

கன்னியாகுமரி

டாக்டர் எஸ். பத்மநாபன்.

கன்னியாகுமரி மாவட்டம் பரப்பிலே சிறியது. ஆனால், பழமையும் பெருமையும் வளமையும் மிக்கது. வரலாற்றுப் பழமை, பண்பாட்டு மேன்மை, இலக்கியச் சிறப்பு, கலை அழகு, இயற்கை வளம் இவை யாவற்றையும் கொண்டது அம்மாவட்டம். செழிப்பான மலைப் பகுதிகள் வற்றாத ஜீவநதிகள், அடர்ந்த காடுகள், 68 கி.மீ. நீளம் கொண்ட வளைந்த கடற்கரை, இவையாவும் இணைந்து நம் குமரி மாவட்டத்திற்கு நம் நாட்டிலே ஒப்பற்றதோர் இடத்தைக் கொடுத்துள்ளன. அந்த அழகிய மாவட்டத்தில் பயணம் செய்வது கண்ணிற்கு மட்டுமல்ல, உள்ளத்திற்கும் ஒரு விருந்தாக அமைகிறது. குமரி மாவட்டத்தைப் பயணிகளின் சொர்க்கம் என்றால் அது மிகையாகாது.

மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோயிலான சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயம், சித்திரை மாதம் பத்தாம்நாள் சூரிய ஒளி மூலவரின் காலிலே படும்படி கட்டப்பட்ட பறக்கை மதுசூதனர் ஆலயம், நான்கு இந்திய சமயங்களையும் ஒன்று கூட்டிநிற்கும் நாகர்கோவில் நாகராஜர் ஆலயம், நம்மாழ்வாரைப் பெற்றெடுத்த திருவண்பரிசாரத்தில் அமைந்துள்ள திருவாழ்மார்பர் கோயில், முருகவேளுக்கும் வள்ளியம்மையாருக்கும் காதல்வேள்வி நடந்த வேளிமலைக் குமாரகோயில், அக்குமரனின் திருவருளைப்பெற்ற ஒளவையாரின் அரிய திருக்கோயில்கள், இராமாயணக் கதை முழுவதையும் மரப் பலகைகளில் செதுக்கிவைத்துள்ள பத்மநாபபுரம் இராமசாமி கோயில், கலைக் கூடமாகத் திகழும் திருவட்டாறு ஆதி கேசவப்பெருமாள் ஆலயம், ஆறுமாதம் கறுப்பாகவும் ஆறுமாதம் வெள்ளையாகவும் மாறிவரும் கேரளபுரத்து விநாயகரின் கோயில், சமண சமயத் துறவிகள் பல் கலைக்கழகம் அமைந்திருந்த சிதரால் குகைக்கோயில், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட திருநந்திக்கரைக் குடைவரைக்கோயில், இயற்கையெழில் பொங்கித் ததும்பும் திருப்பரப்பு அருவியும், அங்கு அமைந்துள்ள மகாதேவர் ஆலயமும், தாடகையைக் கொன்ற பாவத்திற்காக இராமபிரானால் எழுப்பப்பட்ட திருசரம்கோர்ப்பு இராகவேஸ்வரர் கோயில், சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வரும்போது அனுமானால் எழுப்பப்பட்ட மருந்து வாழ்மலை சிவன் கோயில், மான்மழுவுடன் சிவன், திருமால், சக்தி மூவரும் ஒரே கருவறையில் அமர்ந்து அருள்பாவிக்கும் கருங்கல் பகவதி கோயில், பதினான்கு அடி உயரத்தில் கண்ணன் திருவுருவைக்கொண்ட திப்பரமலைக் கிருஷ்ணன் கோயில், இந்தியத் தாயின் பாதச் சிலம்பென முக்கடலும் கூடி முழங்கும் குமரித்துறையில் தவம் செய்து நிற்கும் குமரியம்மனின் பேராலயம் இவையாவும் அழியா வரம்பெற்ற கலைச் செல்வங்களாக இம்மாவட்டத்திலே காட்சி தருகின்றன.

கடலின் நடுவே

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்' எனத் தொல்காப்பியமும், 'குமரியம் பெருந்துறை' எனப் புறநானூறும், சிலப்பதிகாரமும் 'தென்றிசைக்குமரியாடி' வருவதை மணிமேகலையும்'தெரிவிக்கின்றன. மேனாட்டு வரலாற்று ஆசிரியர்களான தாலமியும், பிளினியும் குமரித்துறையின் சிறப்பை எடுத்து எழுதியுள்ளனர். காசியையும் கன்னியாகுமரியையும் ஒரே நிலையில் வைத்துப் போற்றிப் புகழுவதைக் 'கங்கையாடிலென், குமரியாடிலென்' என்று அப்பர் தேவாரம் எடுத்துரைக்கின்றது.

இறைவன் விசுவநாதராகக் காசியிலும், அவரது சக்தியாம் தேவி கன்னியாகுமரியிலும் நின்று அருளுவதாக ஐதீகம். சிவனில்லையேல் சக்தியில்லை. சக்தியில்லையேல் சிவனில்லை. இதனை உருவகப் படுத்தவே இந்து சமயத்தினர் காசியையும் கன்னியாகுமரியையும் சிறந்த புண்ணியத் தலங்களாகக் கருதுகின்றனர். ஆன்மிகத் துறையில் வடக்கும் தெற்கும் காலகாலமாக இணைந்து நிற்கின்றன. கன்னியாகுமரிக் கடற்கரையோர மணலில் அணுகுண்டு செய்வதற்குரிய 'தோரியம்' என்னும் அரும்பொருள் காணப்படுவது கன்னியாகுமரி சக்தியின் இருப்பிடம் தான் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

இந்தியத் தாயின் புனித பாதத்தைக் கிழக்கே வங்காளக் கடலும், தெற்கே இந்துமகா சமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும் தழுவி நிற்கின்றன. இச்சங்கமத்தில் மூழ்கி எழுந்தால் இறந்த மூதாதையர்கள் முக்தியடைவர் என்பது இந்து சமயத்தினரின் நம்பிக்கை. குமரிமுனையிலிருந்து நோக்கினால் காலையில் சூரியன் உதிப்பதையும், மாலையில் அவன் மறைவதையும் நன்றாகக் காணலாம். பௌர்ணமியன்று சூரியன் மறைவதையும், சந்திரன் தோன்றுவதையும் ஒரே நேரத்தில் இங்குத் தவிர வேறெங்கும் காண முடியாது. சித்திரை மாதப் பௌர்ணமி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதைக் காண பக்தர்கள் கூட்டம் கூட்டமாக இங்குவந்து குவிகின்றனர்.

கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமம்

உலக நலனுக்காகப் பரமனை நோக்கித் தவம் செய்து நிற்கும் அன்னை பகவதியை 'நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி' எனக் கவியரசர் பாரதியார் கூறிச் சென்றார். தமிழ் மூவேந்தர்களும் வணங்கிய தெய்வம் 'கன்னியாகுமரி' என்று அக்கோவிலில் கிடைத்த கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. குமரியம்மனின் வடிவம் கலையம்சம் மிக்கது. அவ்வுருவை வடித்தெடுத்த கலைஞன் என்றுமே போற்றுதற்குரியவன். அத் திருவுருவின் முகப்பொலிவு காண்போர் உள்ளத்திற்கு அருளைத்தந்து தெய்வீக உணர்வை ஊட்டும். காணக் காணப் பரவசப் படுத்தும் தன்மை கொண்டது அத் திருவுருவம்.

பத்மநாபபுரம் அரண்மனை

கடற்கரையிலுள்ள காந்தி நினைவு மண்டபம், அதனை அடுத்துள்ள தவக் கோல விவேகானந்தர், ஆதி சங்கரர் ஆலயங்கள், கடலின் நடுவே கம்பீரமாகக் காட்சி தரும் விவேகானந்தர் நினைவுச் சின்னம் ஆகியவை குமரிப் பெருந்துறையை இந்து சமயத்தினரின் புண்ணியத் தலமாக மட்டுமல்ல; இந்தியத் தாயின் தலைப்புதல்வர்களது நினைவுச் சின்னங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு திவ்விய தலமாகவும் திகழ வைக்கிறது. குமரியம்மன் கோயிலின் தெற்கே காணும் சங்கிலித்துறையும், அதனை அடுத்துள்ள பதினாறுகால் மண்டபமும், இராஜராஜ சோழனால் எழுப்பப்பட்ட குகநாதேஸ்வரர் கோயிலும், புனிதச் சவேரியார் வருகை தந்த மாதா கோயிலும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த வட்டக்கோட்டையும் பயணிகள் குமரிமுனையில் காணவேண்டிய தலங்களாகும்.

உலகத்துப் பழம்பெரும் சமயங்கள் மும்மூர்த்தியின் தத்துவத்தை ஒப்புக் கொண்டாலும் மும்மூர்த்திக்காக எழுப்பப்பட்டுள்ள ஒரே கோயில் இம் மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம்தான். (தாணு-சிவன், மால்-விஷ்ணு, அயன்-பிரம்மன்). சேர சோழ பாண்டியர்களின் கை வண்ணங்களை மட்டுமல்ல; நாயக்கர்களின் கலை நுட்பங்களையும் இக் கோவிலிலே நாம் காணலாம். தட்டினால் சுரம் எழுப்பக் கூடிய இசைத் தூண்களும், பதினெட்டடி உயரங்கொண்ட ஆஞ்சநேயர் திருவுருவமும், சங்கினால் செய்யப்பட்ட நந்தியும், நாசித் துவாரத்தைக் காதுவரை கொண்ட நாயக்கரின் உருவமும், பெண் உருவிலே காட்சிதரும் விநாயகரும், மும்மூர்த்தியாக நின்று கீதோபதேசம் செய்யும் பார்த்தசாரதியும் இங்கே கண்டு இன்புறத்தக்கவை.

குமரி மாவட்டத்தின் தலைநகராகத் திகழும் நாகர்கோவில், அதன் நடுவே அமைந்துள்ள நாகராஜர் கோயிலின் பெயரால் வந்ததாகும். இது ஒரு காலத்தில் கோட்டாறு என்னும் பெயரில் வணிகத் துறையில் சிறந்து விளங்கிய ஒரு பெருநகராக இருந்தது. நாகராஜா கோவிலில் மூலவரான ஐந்து தலை நாகராஜரைத் தவிர்த்து, சிவன் வாயு வடிவிலும், திருமால் அனந்தனடியிலும் உள்ளனர். கோவில் தூண்களில் சமண சமயத் தீர்த்தங்கரர்களான பார்சுவ நாதரும், மகாவீரரும் தவக் கோலத்திலே நின்றும் அமர்ந்தும் காட்சி தருகின்றனர். கோயிலின் தென் வாயில் சீனத்து புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது.

இவ்வாறு இக்கோயில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இந் நான்கு மதக்கோட்பாடுகளின் கூட்டு உருவமாக நமக்குக் காட்சியளிக்கின்றது. இங்குள்ள கருவறையின் மேற்கூரை ஓலை வேயப்பட்டதாக இருப்பது இங்கு ஒரு தனிச் சிறப்பாகும். மேலும் நாகராஜர் அமர்ந்துள்ள இடம் எப்போதும் ஈரமாக வேயிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே முக்கியப் பிரசாதமாகும். இது ஆறுமாதகாலம் கறுப்பு நிறமாகவும், எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவோ காலமாக எடுத்தும் அந்த மண் குறையாமலிருப்பது அதிசயித்தக்க பேருண்மையாகும். கோயிலைச் சுற்றிலும் நாகப்பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்தில் பாம்பு கடித்து யாரும் இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இது வரை கிடையாது என்று அமெரிக்க நாடு பதிப்பித்த சமயங்களின் கலைக்களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. நாக தோஷங்களை ஒழிக்க இது ஒரு புண்ணியத்தலமாக விளங்குகின்றது. வெண்ணை ஏந்தி நிற்கும் நவநீதனின் பெயரால் அமைந்துள்ள கிருஷ்ணன் கோயிலும், ஈஸ்வரன் பெயரால் அமைந்துள்ள வடிவீஸ்வரமும் நாகை நகரில் பயணிகள் காணவேண்டிய ஆலயங்களாகும்.

நாகர்கோவிலில் வேறொரு பகுதியான கோட்டாற்றில் புனித சவேரியார் பெயரால் அமைந்த கத்தோலிக்கர்களின் பெரிய கிறித்தவ ஆலயம் ஒன்று பெரும் புகழும் பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்தில் அப்புனிதரால் வணங்கப் பட்ட மாதா பீடம் ஒன்று அமைந்துள்ளதைக் காணலாம். நமது நாட்டில் மிகப் பெரிய கிறித்தவ ஆலயங்களுள் ஒன்றாகக் கிரேக்கக் கட்டடக்கலையில் கட்டப் பட்ட கற்கோயில் ஒன்றும் இந்நகரில் உள்ளது. இது இலண்டன் நன்னெறிக் குழுவினரால் கி.பி. 1819-இல் எழுப்பப் பட்டது. இந்நகர் முகமதியர்களுக்கும் ஒரு முக்கியத் தலமாக விளங்குகின்றது. இங்குள்ள வேம்படிப்பள்ளியிலே கி.பி. 1585-ஆம் ஆண்டு முஸ்லீம் கவிஞரான ஆலிப்புலவர் மிகுராஜ்மாலை என்ற நூலை அரங்கேற்றினார் என்பர். நாகர் கோவில் நகரங்பூங்காவில் கலைவாணரால் எழுப்பப்பட்டு காந்தியண்ணலின் அறிவுரைகளையும், கவிமணியின் வாழ்த்துக் கவிதைகளையும் தாங்கி நிற்கும் காந்தி ஸ்தூபி இன்று அம்மூவரின் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. இந்த ஸ்தூபி அமைந்துள்ள பூங்கா சர். சி.பி. இராமசாமி அய்யர் பெயரால் இருப்பதும், ஸ்தூபி திறப்பு விழாவிலே சிறப்புரையாற்றியவர் பேரறிஞர் அண்ணா என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கவை.

குமரி மாவட்டத்தில் நம்மாழ்வார் மங்களா சாசனம் செய்த திருப்பதிகள் இரண்டு. ஒன்று திருவண்பரிசாரம் என்ற திருப்பதிசாரம், மற்றொன்று வட்டாறு என்ற திருவட்டாறு. திருவண்பரிசாரத்தில் திருமால் இருந்த நிலையிலும் திருவட்டாற்றில் அவர் கிடந்த நிலையிலும் காட்சி தருகிறார். திருவண்பரிசாரத்தில் அமர்ந்துள்ள பெருமாளை நம்மாழ்வார் 'வண்பரிசாரத்து இருந்த என் திருவாழ் மார்பர்' என்று உரிமை கொண்டாடுகிறார். இதை அடிப்படையாகக் கொண்டு நம்மாழ்வார் பிறந்த தலம் திருவண்பரிசாரம் என்பர். அவரை ஈன்ற தாயார் உடையநங்கையின் வீட்டை நாம் இன்றும் காணலாம். நம்மாழ்வாரால் 'வளமிக்க வட்டாறு' என்று புகழப்பட்ட திருப்பதி தான் திருவட்டாறு. அங்கு அமர்ந்துள்ள ஆதிகேசவப்பெருமாள் ஆலயம் திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோயிலை ஒத்திருப்பதைக் காணலாம். இதனை ஆதி அனந்தபுரம் என்றும் அழைப்பர். கல்லிலும், மரத்திலும் செதுக்கிய பல கலைச்செல்வங்களை இந்த ஆலயத்திலே நாம் கண்டு களிக்கலாம்.

ஒரு காலத்தில் முருகவேளின் அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்கிய

திருப்பரப்பு அருவி



தோற்றமளிப்பது விஞ்ஞான உலகிற்கு ஒரு புதிராகவே இருக்கின்றது.

குழித்துறையை அடுத்துள்ள திருச்சாரணத்து மலை (சிதரால்) ஒரு காலத்தில் சமணத்துறவிகள் வாழ்ந்த ஒரு புண்ணியத் தலமாகத் திகழ்ந்தது என்று அங்கே கிடைத்த ஆதாரங்களிலிருந்து அறியலாம். பல மாவட்டங்களிலிருந்தும் சமண சமயத் துறவிகள் இங்கு வந்து தாவளமிட்டிருந்தனர் என்றும், கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வட்டாரத்தை ஆண்டு வந்த ஆய்குல அரசன் விக்கிரமாதித்த வரகுணன் சமண சமயத்தைத் தழுவி, துறவிகளுடன் இங்கே தங்கினார் என்றும், பெண் துறவிகள் (குரத்தியர்) இங்குப் பலருக்கு அறிவூட்டி, அற்நெறிக் கருத்துக்களை மக்களிடையே பரவச் செய்ய அவர்களை நாலா திசைகளிலும் படை படையாக அனுப்பினர் என்றும் அங்கே கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது.

கோட்டாறு சவேரியார் ஆலயம்

வேளிமலைக் குமாரகோயில் இம்மாவட்டத்திலே தான் உள்ளது. முருகவேளுக்குக் காதல் வேள்வி நடந்ததும், திரிகூட ராசப்பக் கவிராயரால் 'நாஞ்சில் நாட்டு வேள்வி மலை' எனப் போற்றிப் புகழப் பட்டதுமான மலைதான் இன்று வேளி மலை என்ற பெயருடன் விளங்குகின்றது. வேங்கை மர சந்நிதியும், கல்யாண விநாயகரும், குறவர் படுகள விழாவும் முருகவேள் மலைநாட்டுக் குறத்தியான வள்ளியை இம்மலைப் பகுதியிலேதான் மணமுடித்தார் என்பதற்குச் சான்றுகளாக உள்ளன. இங்கு முருகவேள் 8 அடி 8 அங்குலம் உயரத்துடன் விஸ்வரூபத்தில் காட்சி தருகிறார். வள்ளியம்மையாரின் உயரம் 6 அடி 2 அங்குலம். திருப்பரங்குன்றத்தில் தெய்வானையுடன் காட்சி தரும் வேலவன் இங்கு வள்ளியுடன் தரிசனம் தருகிறார்.

வேணாட்டின் தலைநகராகத் திகழ்ந்த பத்மநாபபுரம் இன்று இரண்டரை மைல் நீள கற்கோட்டையால் சூழப்பட்டுப் பல தெருக்களையும், கோயில்களையும், பழமையான ஓர் அரண்மனையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. கோட்டையினுள் திராவிடக் கட்டடக் கலையில் அமைந்துள்ள நீலகண்ட சுவாமி கோயிலும், கேரளக் கட்டடக் கலையில் எழுப்பப்பட்டுள்ள இராமசுவாமி கோயிலும் காணவேண்டிய கலைக்கூடங்களாகும். இராமசுவாமி கோயிலில் இராமாயணக்கதை முழுவதும் 45 பலகைகளில் நாடக ரூபமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இக்கலைச் செல்வத்தை மர வேலைப்பாடில் இந்திய நாட்டின் சிறந்த கலைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம்.

பத்மநாபபுரத்திலிருந்து ஒரு மைல் மேற்கே கேரளபுரம் சிவன் கோயில் உள்ளது. இங்கு ஓர் அரச மரத்தின் அடியில் வெயிலையும் மழையையும் தாங்கிக் கொண்டிருக்கும் ஒரு விநாயகர் நிலை ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதம் வெள்ளை நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து கறுப்பு நிறமாகவும்

நாகர்கோவில் பேச்சிப்பாறைப் பாதையில் குலசேகரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது திருநந்திக்கரை. பாறையைக் குடைந்து கட்டப்பட்ட இங்குள்ள கோயில் மிகவும் பழமையானது. இக்குடைவரைக் கோயிலில் கிடைத்த கல்வெட்டு ஒன்று இராஜராஜ சோழன் இக்கோவிலுக்கு விட்டுக் கொடுத்த மானியங்களையும், கோயிலில் சதய நாள் விழாவெடுத்த செய்தியையும் குறிப்பிடுகிறது.

திருப்பரப்பு அருவியும், அதன் அருகில் அமைந்துள்ள பழமையான மகாதேவர் ஆலயமும், அவைகளைச் சுற்றியுள்ள குன்றுகளின் இயற்கையழகும் காண்போர் மனதிற்கு இன்பமூட்டுகின்றன. பெயருக்கேற்றாற்போல் இத் திருவிடத்திலே திருமகள் தங்கியிருந்து நம்மைக் களிப்பூட்டுகிறாள். தக்கனை வதம் செய்துவிட்டு வீரபத்திரனும், பத்திரகாளியும் தங்கள் கோபம் தணிய இயற்கையெழில் கொழிக்கும் இத்திருவிடத்தைத் தேர்ந்தெடுத்து தியானம் இருந்தனர் என்பது ஐதீகம். தோவாளை வட்டத்தில் பொதிகைமலைச் சாரலில் உலக்கருவி எனும் அழகிய, என்றுமே வற்றாத நீர்வீழ்ச்சி ஒன்று உண்டு. அங்கு அகஸ்தியர் கோயில் ஒன்றும் உள்ளது. பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, கோதையாறு நீர்நிலை மின்சாரத் திட்டம் இவைகள் இம்மாவட்டத்திலே காணத்தக்கவை.

தமிழகத்தின் பிற மாவட்டங்களைப் போலவே குமரி மாவட்டத்திலும் ஊரெல்லாம் இறைவன் கோயில் கொண்டுள்ளதைக் காணலாம். இறைவனின் சக்தியாம் தேவி கன்னியாகுமரியில் குமரியம்மனாகவும், கொல்லங்கோட்டில் காளியம்மனாகவும், ஆரல்வாய்மொழியில் மீனாட்சியம்மனாகவும், மண்டைக்காட்டில் பகவதியம்மனாகவும், வடிவீஸ்வரத்தில் அழகம்மனாகவும், ஒழுகினசேரியில் புவனேஸ்வரி அம்மனாகவும், வடசேரியில் காமாட்சி அம்மனாகவும், பூதப்பாண்டியில் சிவகாமி அம்மனாகவும் நின்று குமரி மாவட்டத்தைக் காவல் புரிகின்றனள் என்று கூறும்படி இங்கு ஆலயங்கள் அமைந்துள்ளன. சைவ வைணவ வேறுபாடுகள் இம்மாவட்டத்திலே சிறிதும் கிடையாது. சிவன் கோயிலில் பெருமாளும், பெருமாள் கோயிலில் சிவனும் வீற்றிருந்து அருள் புரிகின்றனர். கேரளபுரத்துச் சிவன் கோயில் நந்தி மண்டபத்தில் இராமர் இலட்சுமணர் சிலைகளைக் கண்டு களிக்கலாம். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தின் கருவறையில் மகாதேவர் இருந்து அருளுகிறார். இம்மாவட்டக் கோயில்களில் ஆண்கள் மேலுடை அணிந்து செல்லக் கூடாது என்ற நியதியை இன்றும் கடைப் பிடித்து வருகின்றனர். குமரி மாவட்ட மக்கள் கோயிலில் வணங்கும் முறையும், அவர்கள் சமயக்குறிகளை நெற்றியில் அணிந்து செல்லும் பாங்கும் போற்றிப் புகழத்தக்கவை. இவ்வாறு அரிய பல ஆலயங்களையும், வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களையும் தன்னகத்தே கொண்ட கன்னியாகுமரி மாவட்டம் பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

அட்டைப்பட விளக்கம்

முதல்பக்க அட்டையில்: மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 9.3.92 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் பொது மக்களைச் சந்தித்துக் கோரிக்கை மனுக்களைப் பெற்றபோது எடுத்த படம்.

கடைசிப்பக்க அட்டையில் – செஞ்சிக் கோட்டை

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலைய

தமிழரசு
Licence No. TN/MS(C)/PP-23



செஞ்சிக்கோட்டை

தமிழரசு

16-4-1992 ரூ.1

Khadi Kraft HONEY!
A pure product of nectar and pollen now comes your way!

Nature's bounty comes your way. Now from Khadi Kraft. In the shape of honey a sweetener, so pure and divine. A food product for the family.

Khadi Kraft Honey brings a lost tradition to your home. It contains vitamins and necessary ingredients to ensure perfect health, nourishment and strength. It can be used with every meal or as a soft drink. A true miracle food.

Khadi Kraft Honey comes in enticing bottles.

Honey-Nature's own gift!
For you and the family.

Available at all
Khadi Kraft

Tamilnadu Khadi and Village Industries Board.
Kuralagam, Madras-600 108

இந்த இதழில்...

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை
முதன்மைநிலை அடையச் செய்வோம்!
—சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் ... 2
பதிலுரை
திருக்கோயில்களில் சிலை உடைப்புகள்:
—சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் ... 9
அறிக்கை
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ... 11
போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா... 12
டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே... ... 17
பெரியார் மாவட்டம்: குடிநீர்த்
திட்டப் பணிகள் ... 21
கல்வி சிறந்த தமிழ்நாடு ... 24
கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்
தன்னை உயர்த்திய இசைக் கருவியின்
பெருமையை உயர்த்தியவர்
— திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு ... 45
விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023
சித்திரைத் திங்கள் - 4
மலர்:22 இதழ்:20
16-4-1992

இந்தியாவிலேயே

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டை

முதன்மை நிலை அடையச் செய்வோம்!

தொழில்மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குச் சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

நமது நாட்டை எதிர்கொண்டிருக்கிற பொருளாதாரச் சிக்கல்களும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளும், நாம் இது வரை பின்பற்றி வந்த தொழிற்கொள்கைகளுக்குத் தற்போது தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்கிற படிப்பினையை நமக்கு வழங்கியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னேற்றக் கொள்கையைச் சார்ந்தும், தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை முன்னுரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையிலும், சில சிறப்பு நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்துள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற உடன், இந்திய மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முன்னணித் தொழிலதிபர்களை நான் அழைத்து, தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்மை நிலை அடையச் செய்வதற்காக, அவர்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்டறிந்தேன். அந்தக் கூட்டத்தில் தொழிலதிபர்கள் அளித்த சில ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு இந்தப் பேரவையில் நடைபெற்ற தொழில் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சில அறிவிப்புகளையும் வெளியிட்டேன். அவற்றின் மீது தற்போது தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளில் சிலவற்றை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாக, மிகவும் பின்தங்கிய வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியம், நிலையான சொத்துக்களின் மீது செய்யப்பட்ட முதலீட்டில் 15 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும், உயர்ந்த பட்ச மானியம் ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தொழில்கள் தொடங்கப்பட்டு, அவை போதிய அளவு வளர்ச்சியடைய அடிப்படை வசதிகள் இன்றியமையாதது. இதனை நிறைவேற்றும் வகையில் ஏற்கெனவே அமைந்துள்ள தொழிற்பகுதிகள், தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்காகத் 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்' (Tamil Nadu Corporation for Industrial Infrastructure Development (TACID) என்ற நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுச் செயலாற்றி வருகிறது.

தொழில்வளம் பெருக...

தொழில்கள் ஏற்கெனவே வளர்ந்துள்ள பகுதிகளில், மேலும் விரைவான வளர்ச்சியை அடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் முனைவோருக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, தேவைப்படும் நிதியைக் கடனாக அளித்தல், தொழில் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்தல், கல்வி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் வளர்ச்சி மையங்களைத் தோற்றுவித்தல், போன்ற பணிகளை, இக்கழகம் இந்த ஆண்டு மேற்கொள்ள இருக்கிறது. இக்கழகத்திற்கு, அரசின் பங்கு மூலதனமாக ரூ.5 கோடி வழங்கப்படும்.

தொழில் வளம் பெருக, இம் மாநிலத்திற்குள்ளும் வெளியிலும் உள்ள தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து, இம்மாநிலத்தில் தொழில்களைத் துவக்க ஊக்கமும், ஆலோசனைகளும் வழங்கவும், அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான பல்வேறு துறைகளின் அனுமதிகளைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவும் வகையில், 'தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (Industrial Guidance and Export Promotion Bureau) ஒன்று அமைக்கப்பட்டு, விரைவில் தன்னுடைய பணியைத் துவக்க இருக்கிறது.

பெருமளவில் ஏற்றுமதி செய்யும் தொழில்கள் அமைந்துள்ள திருப்பூர், இராணிப்பேட்டை, திண்டுக்கல், வாணியம்பாடி போன்ற நகரங்



களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்கு மத்திய அரசின் உதவி நாடப்பட்டுள்ளது. மத்திய அரசும் இச்செயற்குறிப்பைக் கவனிப்பதாகத் தெரிவித்துள்ளது.

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குகிற எங்கள் அரசின் நோக்கம் அனைவரும் அறிந்ததே. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில், 30 சதவிகிதத்துக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக, முதலீட்டில் 5 சதவிகிதமும், உச்ச அளவாக ரூ. 5 இலட்சம் சிறப்பு மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் எல்லாப் புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் வளாகங்களிலும் உள்ள தொழிற்கூடங்களில், மகளிர் தொழில் முனைவோர்களுக்காக, 30 சதவிகிதத் தொழிற்கூடங்கள் அல்லது மனைகள் ஒதுக்கப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டு, 800 மகளிருக்குத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது.

புதிய தொழில் கொள்கையின் முக்கிய அம்சங்கள்

தொழில் அதிபர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில் முன்னிலையில் நிறுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கையாக, இந்த அரசு முதன் முதலாகப் புதிய தொழிற்கொள்கை ஒன்றை, 20.1.1992 அன்று, முன்னணித் தொழிலதிபர்களின் முன்னிலையில் வெளியிட்டது. இக்கொள்கையில், மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றியும், தனியார் துறையின் மூலம் மின் உற்பத்தித் திட்டங்களை அமைப்பது குறித்தும், மாநிலத்தில் பெருந்தொழில்கள் நிறுவுவதற்கான ஒப்புதல்களை விரைவில் பெறுவது குறித்தும், தொழில் துறையின் முதலீட்டைப் பெருக்குவது குறித்தும், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும், வரிச் சலுகைகள் குறித்தும், தொழில் வளர்ச்சிக்கான ஊக்கத் திட்டங்கள் குறித்தும், தொழிலாளர்கள் - தொழில் முனைவோர் உறவு பற்றியும், பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றி அரசின் கொள்கை பற்றியும், சிறுதொழில் வளர்ச்சி மற்றும் விரைவான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் மிகுந்துள்ள தொழில்களைத் துவக்குதல் பற்றியும், தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தனியார் துறையில் புதிதாகத் தொழில்கள் துவங்க முன்வரும் நிறுவனங்களுக்கு, TIDCO மற்றும் ELCOT நிறுவனங்கள், ஆலோசனைகளையும் மற்ற உதவிகளையும் நல்கும் வகையில், இவ்விரு நிறுவனங்களிலும், 'வழிகாட்டும் சேவைத் துறை' (Escort Sector Projects) என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்குகொள்ளும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு சதவிகிதம் பங்கு மூலதன உதவி அளிக்கப்

படும். இத்திட்டத்தின் மூலம், தனியார் நிறுவனங்களுக்குத் தொழில்கள் துவங்கத் தேவையான அனுமதிகள் பெற்றுத் தரப்படும். தனியார் நிறுவனங்களின் நிர்வாகத்தில் அரசின் தலையீடு கூடாது என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப, இத்திட்டத்தினால் தனியார் நிர்வாகக் குழுவில், அரசின் பிரதிநிதிகள் இடம்பெறமாட்டார்கள்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் வகையில், அவர்களை ஈர்ப்பதற்குப் புது டில்லியிலுள்ள தமிழக அரசின் ஆணையர், (Resident Commissioner) தலைமையில், 'வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மிகப் பெரும் தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் அமைய ஊக்கமளிக்கும் வகையில், ரூ.200 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, முன்பு இருந்த ரூ.50 இலட்சம் என்ற மானியத்தை, ஒரு கோடி ரூபாயாக உயர்த்தவும், முறையை எளிதாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது அதில் உள்ள இடர்ப்பாடுகள் களையப்படும்.

3. மாவட்டத் தொழில் மையங்களைப் பலப்படுத்தி, ஒரு கூரையின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய Single Window Clearance அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4. அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, (Empowered Committee) ஒன்று, நலிவடைந்த சிறுதொழில்களின் புனரமைப்பிற்காகத் தொழில் துறைச் செயலாளரின் தலைமையில் அமைக்கப்படும்.

5. பொது நிறுவனங்கள், சிறு தொழிற்சாலைகளிலிருந்து வாங்கும் பொருட்களுக்கு, 30 நாட்களுக்குள் பணம் வழங்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைக் கண்காணிக்க ஒரு தனிக் குழு (Monitoring Committee) அமைக்கப்படும்.

சிறுதொழில் வளர்ச்சிக்கு அரசின் புதிய நடவடிக்கைகள்!

ரூ. 300 கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொடங்கப்படும் தொழில்களுக்கு, ஏற்கெனவே உள்ள 6 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி என்பதை 7 ஆண்டுகளாகவும், 12 ஆண்டு விற்பனை வரி ஒத்திவைப்பு என்பதை 14 ஆண்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழிற் பிரிவுகளைச் சீரமைத்து, நவீனப்படுத்தும்பொழுது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காகத் 'தொழிலாளர் மறுவாழ்வு நிதி' (Labour Rehabilitation Fund) என்ற ஒரு புதிய திட்டம், எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டம் நம் மாநிலத்தில்தான் முதன் முதலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிய தொழில் கொள்கையில் கண்டுள்ள அம்சங்களைச் செயல்படுத்த, ஆணைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிறு தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றினையும், 4.3.1992 அன்று கூட்டி, சிறு தொழில் தொடர்பான அவர்களது குறைகளைக் கேட்டறிந்தேன். அவர்கள் கோரிக்கைகளின் அடிப்படையில், சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. அவை:

1. சிறு தொழில்களின் நடைமுறை மூலதனத் தேவையைப் பூர்த்தி செய்ய, ரிசர்வ் வங்கி மற்றும் முன்னோடி வங்கிகளுடன் கலந்துரையாடி, அவர்கள் விரைவில் மூலதனம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. சிறு தொழில்களைப் பதிவு செய்யும்

6. சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், நிதி வழங்கப்படாததால் தாமதமாகின்றது என்ற குறையைப் போக்குவதற்கு, இம்மானியத் தொகை ரூ.300 இலட்சத்திலிருந்து ரூ.853.75 இலட்சமாக, 1991-92-ஆம் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்த மின் அழுத்த மானியமாக வழங்கப்பட்ட ரூ.25 இலட்சத்தை, ரூ.77.87 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் தயாரிக்கும் Generator Set வாங்குபவர்களுக்கு வழங்கவேண்டிய மானியத்திற்காக, ரூ.24.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆண்டுகளில், தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் அமைவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்த, எங்கள் அரசு ஏற்கெனவே அறிவிப்பு ஒன்றை வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். துணை மற்றும் சார்புத் தொழில்கள் துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய கணக்கெடுப்பு, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நிதி நிறுவனங்களின் உதவியுடன், ஆண்டொன்றுக்கு 20,000 சிறு தொழில்களைத் தகுந்த தொழில் முனைவோர்களைக் கொண்டு அமைக்கும் பொறுப்பை மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்க உள்ளோம். இதற்கென ஒரு செயல் திட்டத்தைத் தொழில் துறை இயக்குநர் தயாரித்து வருகிறார். இந்தத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி, தமிழகத்தின் சிறு தொழில் வளர்ச்சியை, அரசு அசுரமான வகையில் உயர்த்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்க வழக்கங்களும் சமூகத்தின் முதல் பகைகள்.

தொழில் வளர்ச்சி மையங்கள்

நிலக்கோட்டை வட்டத்தில் வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான, 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள், தர்மபுரி மாவட்டம் பர்கூர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கங்கைகொண்டான், பெரியார் மாவட்டம் பெருந்துறை, மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் பனங்குடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொன்றும் சுமார் ரூ. 20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கின்றன. புதிய தொழில் வளர்ச்சி மையங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் பகுதியில், தொழிற்சாலைகள் அமைக்கப் பெரும்பாலான அடிப்படை வசதிகள் இருந்தபோதிலும், போதுமான தண்ணீர் வசதி இல்லை. அதன் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கொடுங்கையூரிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைக், குழாய் வழியாக அரக்கோணத்திற்கு வழங்க முன் வந்துள்ளது. எனவே விரைவில் அரக்கோணத்தில், ஒரு தொழில் மையம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

'காஸ்டிக் சோடா' தொழிற்சாலை

வேதாரண்யம், உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உப்பைப் பயன்படுத்தி, காஸ்டிக் சோடா தயாரிக்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமான, 'தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ்' நிறுவனத்திற்கு, மத்திய அரசு இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை விரைவில் அமைக்க, 'பெட்ரோ ப்ராடக்ட்ஸ்' நிறுவனம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

'ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்' நிறுவனம் திறப்பு

இந்த அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக, 2½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நிறுவனத்தைத் திறப்பதற்காக அரசு ரூபாய் 3 கோடியைக் குறைந்த வட்டியான 9 சதவிகிதத்தில் கடனாகக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான, தமிழ்நாடு பெட்ரோ புராடக்ட்ஸ் நிறுவனம், இந் நிறுவனத்தில் பங்கு மூலதனமாக, ரூ.6.03 கோடி முதலீடு செய்யவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், விற்பனை வரி ஒத்திவைத்து செலுத்தும் சலுகையினையும், ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது. இந் நிறுவனம் திறக்கப்பட்டதால், 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள். ஏனைய 1,000 தொழிலாளர்கள் விருப்ப ஓய்வுக்கு இசைவு தந்துள்ளனர்.

தமிழ்நாடு எஃகு நிறுவனத்தை நவீனப்படுத்துதல்

தமிழ்நாடு எஃகு நிறுவனம், டிட்கோவின் துணை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவனம் 1991-92-இல் (31.12.1991 வரை). ரூ.214.84 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இந்த ஆலையின் உற்பத்தி இந்த ஆண்டில், சுமார் 69,746 டன்களாகும்.

நாட்டிலுள்ள புதிய எஃகு உருட்டாலைகளுக்கு இணையாக, இதனை மேம்படுத்தும் வகையில், இந் நிறுவனத்தினைச் சுமார் ரூ.23 கோடி முதலீட்டுச் செலவில் நவீன மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்ற அரசு உத்தேசித்துள்ளது.

அயல்நாட்டு முதலீடு

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் துவங்கவும், தமிழகத்திலுள்ள தொழில்களில் முதலீடு செய்யவும், அவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகளைத் துரிதப்படுத்துகின்ற வகையில், சிப்காட்டில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இக்குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி, தமிழகத்தில் தொழில் அமைக்க விரும்பும் அயல்நாடு வாழ் இந்தியர்களின் தேவைகளைக் கவனித்து, உதவி வருகிறது. இதுவரை மொத்தம் ரூ.108.60 கோடி முதலீட்டில், 60 தொழில் பிரிவுகளை அயல்நாடு வாழ் இந்தியர்கள் அமைத்துள்ளனர். மேலும் ரூ.51.06 கோடி முதலீட்டில், 19 தொழிற்பிரிவுகளை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, சிங்கப்பூரில் உள்ள தொழில் அதிபர்கள் சிலர், நமது நாட்டில் தொழில் தொடங்க விருப்பம் தெரிவித்துள்ளனர். இதற்காக மத்திய அரசு, இந்தியா- சிங்கப்பூர் தொழில் இணைப்பு மையம் (India-Singapore Industrial Corridor) ஒன்றினை அமைக்கக் கருதியுள்ளது. இதன் மூலம் சிங்கப்பூர் தொழிலதிபர்கள், இந்தியாவில் தொழில்களை அமைக்க முன்வருகிற வாய்ப்புகள் பெருகும். சென்னையில் பெரிய துறைமுகம், பன்னாட்டு விமான நிலையம், மற்றும் இவை சார்ந்த அடிப்படை வசதிகள் ஆகியவை, ஏற்கெனவே சிறந்த நிலையில் உள்ளதால், இந்த

இணைப்பு மையத்தினைச் சென்னையில் அமைக்கும்படி கோரி, மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இதன் மீது தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கும் முயற்சியினை மேற்கொள்ள, உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறிய மிகச் சிறிய, மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்து வருகிறது. கோவை மாவட்டம் திருப்பூரில், இந்நிறுவனத்தின் கிளை ஒன்று இந்த ஆண்டு திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தற்போது தொழில் முனைவோர்களுக்கு நிலம், கட்டடம், இயந்திரத் தளவாடங்கள் வாங்குவதற்குக் கடன் வசதி அளிக்கிறது. அவர்களுக்கு மேலும் வசதி செய்து தரும் நோக்குடன், இந்நிறுவனமே தளவாடங்களை வாங்கி, குத்தகை அடிப்படையில் தொழில் முனைவோருக்குக் கொடுப்பதற்கான, குத்தகை நிதியுதவித் திட்டத்தை அதாவது (Lease Finance) திட்டத்தை நடப்பாண்டில் அறிமுகப்படுத்தும்.

1991-92-ஆம் ஆண்டு, கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, ரூ.225 கோடியாகும். குறிப்பாக, 29.2.1992 முடிய, இதுவரை 4,070 தொழில் பிரிவுகளுக்கு, ரூ.239 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 3,903 சிறு தொழில் பிரிவுகளுக்கு ரூ.185 கோடி கடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு கடன் வழங்குவதற்கான இலக்கு ரூ.250 கோடியாக உயர்த்தப்படும்.

தொடர்பு, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற பல்வேறு துறைகளில் பயன்படும், மின்னணுச் சாதனங்களைத் தயாரிக்கத் தேவைப்படும் அடிப்படைப் பாகமாகும். ஒருங்கிணைந்த சுற்றுகளைத் தயாரிக்கும் ஒரு தொழில் திட்டத்தை, எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. இந்தத் தொழில் திட்டத்தை ரூ.300 கோடி செலவில், கூட்டுத்துறையில் அமைக்க, எல்காட் நிறுவனம் ஆராய்ந்து வருகிறது. இத்திட்டம் நாட்டின் மின்னணுத் தொழில் வளர்ச்சிக்குப் பேருதவிபுரியும் வகையில் அமையும்.

எல்காட்டின் தொலைத் தொடர்புப் பிரிவு, ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில், செய்தி மற்றும் தகவல் விவரங்களைப் பரிமாறிக்கொள்ள வகை செய்யும், நுண்ணலைத் தொலைத் தொடர்புக் கருவிகள், அதாவது Digital Microwave Communication Equipment தயாரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்பம், மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டால்தான், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழிற்சாலைகள் உலக அளவில் பெருமை அடைய முடியும். இந்த நிலையை உருவாக்க, உலகிலேயே மின்னணுத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாக விளங்கும் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரத்தில், ஒரு தொடர்பு நிலையம் (Overseas Window) ஏற்படுத்த, எல்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மின்னணுப் பொருள் விற்பனை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறுவனம் (Electronics Trade and Technology Development Corporation) மின்னணு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (Electronics and Software Export Promotion Organisation) ஆகிய மத்திய அரசு

'வெளிநாட்டு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவு'
'வழிகாட்டும் சேவைத் துறை'
'தொழிலாளர் மறுவாழ்வு நிதி'
— திட்டங்கள் உருவாக்கம்!

இந்நிறுவனத்திடம் கடன் பெற்றோர், கடன் தவணைகளைக் குறித்த காலத்தில் செலுத்தினால் தான், மேலும் பல புதிய தொழில்களுக்கு நிதியுதவி தர வாய்ப்பு ஏற்படும். எனவே, தொழில் முனைவோர் இதற்கு முழு ஒத்துழைப்பினை நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மின்னணுத் தொழில்

ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated Circuits) என்ற மின்னணுப்பாகம், பாதுகாப்பு, தொலைத்

நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், இந்தத் தொடர்பு நிலையம் செயல்படும். இத்தொடர்பு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் செயலாக்கப் பணிகளில், அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களின் ஆர்வத்தையும் வியாபாரத் திறமையையும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இந்தத் தொடர்பு நிலையம் அமைக்கப்படும். இந்த நிலையம், தமிழ்நாட்டின் மின்னணுத் தொழில்கள், உலக அளவில் வளர்ச்சி பெற உதவும்.

மணலி ஆரோமேடிக்ஸ் தொழில் வளாகம்
(Aromatics Complex)

சென்னை மணலியில் (NAPCO) நிறுவனத்தால், பெட்ரோலிய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஆரோமேடிக் பொருட்கள் உற்பத்தி வளாகம் ஒன்றினை அமைப்பதற்குத் தேவையான, 1655.92 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த, சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைக்கு முதலீட்டு அனுமதி வழங்குமாறு, மைய அரசு கோரப்பட்டுள்ளது.

ஏற்றுமதி தொழில் வளர்ச்சி

தமிழகத்திலிருந்து ஏற்றுமதியைப் பெருக்க, இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 100 விழுக்காடு ஏற்றுமதிக்கான உற்பத்தி செய்யும் தொழில் பிரிவுகளுக்கு, மின் வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியைப் பெருக்கிட குறுகிய காலத் திட்டம், மற்றும் நீண்ட காலத் திட்டம் வகுத்தளிக்கவும், ஏற்றுமதிக்கான தொழில் பிரிவுகளின் சிக்கல்களைக் களையவும், அரசுக்கு ஆலோசனைகள் வழங்கிட, தொழில் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு நிறுவி வருகிற, 'தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம்' (Industrial Guidance and Export Promotion Bureau) இம் மாநிலத்தில் ஏற்றுமதி செய்யக்கூடிய தொழிற் பிரிவுகள் அமைத்திடவும், அவைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும், தேவையான உதவிகளை நல்கும்.

தரமணியில் அமைக்கப்படும் நிரந்தரத் தொழிற் பொருட்காட்சி வளாகமும், இம் மாநிலத்தின்



தொலைபேசி வசதி

நாட்டில் உள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்க அரசு முடிவு எடுத்துள்ளது. இவ்வாண்டு 59,044 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும். இன்னும் 1,69,625 ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி கிடைக்கவில்லை. எல்லா ஊராட்சிகளுக்கும், கிடைக்கக்கூடிய நிதியைக் கொண்டு 1995, மார்ச் 31-ஆம் தேதிக்குள் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதியைப் பெருக்குவதற்குப் பெரிதும் உதவும். ஏற்றுமதித் தொழில் நிறைந்த திருப்பூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி, திண்டுக்கல் போன்ற நகரங்களுக்கு, அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க, மைய அரசின் உதவியை இந்த அரசு நாடியுள்ளது.

கிராபைட் மேம்படுத்தும் திட்டம்

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிராபைட் மேம்படுத்தும் தொழிற்சாலையைச் சிவகங்கையில் அமைப்பதற்கு, இந்த அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்தொழிற்சாலையை நிறுவும் பணிகள் அனைத்தும், ஒரே ஒப்பந்தக்காரர் மூலம் செய்கின்ற வகையல், Turn Key Basis-இல் ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யத் தமிழ்நாடு கனிம நிறுவனம் செய்துள்ள பரிந்துரைகள், அரசின் ஆய்வில் உள்ளன. ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட 15 மாதங்களில், தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கும்.

இத்தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு, 66,000 மெட்ரிக் டன் கிராபைட் கனிமத்திலிருந்து, 9,240 மெட்ரிக் டன் அளவிலான மேம்படுத்தப்பட்ட கிராபைட்டை உற்பத்தி செய்யும்.

சர்க்கரை ஆலைகள்

தமிழகத்தில் தற்போது 31 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. மதுராந்தகம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி, மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை விரிவுபடுத்தும் திட்டமும், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தும் திட்டமும், இந்த ஆண்டு செயலாக்கப்படும்.

அருரில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும் சர்க்கரை ஆலை, 1992-ஆம் ஆண்டின் இறுதியில் கரும்பு அரைவையைத் தொடங்க உள்ளது.

பொதுவாகச் சர்க்கரைத் தொழில் தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது. மேலும், வரும் ஆண்டுகளில் 5 புதிய சர்க்கரை ஆலைகளை -

1. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்
2. தஞ்சாவூர் மாவட்டம்
3. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்
4. தென்னார்க்காடு மாவட்டம்
5. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

ஆகிய மாவட்டங்களில் அமைக்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆலைகள் கூட்டுறவுத் துறையில் நிறுவப்படும். தேவையானால் தனியார் துறையில் நிறுவுவதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

மின் உற்பத்திப் பெருக்கம்

விரைந்த தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, மின்



உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். நம் மாநிலத்தில் உள்ள பொதுத் துறை மின் நிறுவனங்களாகிய, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆகியவைகளில், கூடுதல் முதலீடு செய்து மின் உற்பத்தியை அதிகரிக்குமாறு, மைய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

மைய அரசின் புதிய தொழில் கொள்கையின்படி, மின் உற்பத்தியில் தனியார் துறை பங்கேற்க வழி காணப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி ரூ.7,000 கோடி செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு, கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றைத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அமைத்துள்ளது. இந் நிறுவனத்திற்குத் தேவைப்படும் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்க, மைய அர்சின் அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்து, அனல்மின் நிலையம் ஒன்றினைத் தனியார் அல்லது கூட்டுத் துறையில் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மைய அரசின் திட்டங்கள்

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்காக மைய அரசின் முதலீடு 1969-ஆம் ஆண்டில் 10 விழுக்காடாக இருந்தது, 1989-ஆம் ஆண்டில் 5.21 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. எனவே, மைய அரசு முதலீடு இம் மாநிலத்தில் மேலும் உயர்ந்திட இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

தென்னக எரிவாயு குழாய்த் திட்டம் (Southern Gas Grid) நெய்வேலி பழுப்பு நிலக்கரி விரிவாக்கத் திட்டம், எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டம் ஆகியவற்றை விரைவில் செயல்படுத்த, மைய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அறிவிப்புகள்

புதிய கிரானைட் கொள்கை (New Granite Policy)

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து, பல்வேறு வண்ண கிரானைட் பாறைகளை, வெட்டி எடுப்பதற்கான குத்தகை உரிமையை, தற்போது மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை நிறுவியுள்ளவர்களுக்கும், மெருகு ஊட்டும் தொழிற் கூடத்தை, இரண்டாண்டுக் கால அளவிற்குள் துவக்கத் திட்டத்தை வகுத்து உள்ளவர்களுக்கும், வழங்கப் படுவதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. இவ்வுரிமைகள் மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர் மூலம் அளிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பட்டா நிலங்களில் கிரானைட் பாறைகளை வெட்டி எடுப்பதற்காக அனுமதி, மெருகூட்டும் தொழிற்கூடம் உள்ளவர்களுக்கும், இரண்டாண்டுக் காலத்திற்குள் இத்தொழிலைத் துவக்கத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தொழிலைத் துவக்க திட்டமிட்டுள்ளவர்களுக்கு முதலில் உறுதிக் கடிதம் (Letter of Commitment) வழங்கப்படுகிறது. இவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டவர்களுக்கு, தொழிற் கூடத்தை நிறுவிய பின், முறையான குத்தகை உரிமம் வழங்கப்படுகிறது.

அரசு புறம்போக்கு நிலங்களில், கிரானைட் கற்கள் முறையாக வெட்டி எடுக்கப்படவில்லை என்பதும், இவ்வாறு வெட்டி எடுக்கும் கற்களைப் பணி நிறைவு பெற்ற கற்களாக உருவாக்குவதில், அதிக சேதாரம் ஏற்படுகிறது என்பதும், இதனல் நமக்குக் கிடைக்க வேண்டிய அந்நியச் செலாவணி வருவாய் குறைந்துவிடுகிறது என்பதும், அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. தமிழகத்தில் கிடைக்கும் பல்வேறு வண்ண கிரானைட்டைச் சிறப்பாக

(41—ஆம் பக்கம் பார்க்க)

திருக்கோயில்களில் சிலை பாதுகாப்பு நடவடிக்கைகள்

மாண்புமிகு முதல்வர் அறிக்கை

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், டாக்டர் குமாரதாஸ், திரு. ஆர். சிங்காரம், திரு. ஆர். நடேசன், திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, திரு. சி. ஞானசேகரன், திரு. பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களில் நடைபெற்றுள்ள சிலை உடைப்புகள் தொடர்பாகவும், திருட்டுகள் தொடர்பாகவும் விவாதிக்க வேண்டுமென்று 6 சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளனர். இவை அனைத்தும் ஒரே பொருள் தொடர்பானவை என்பதால், என்னுடைய பதிலினை ஒட்டுமொத்தமாக அளிக்க விரும்புகிறேன்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கைகொண்டான் அருள்மிகு கைலாசநாத சுவாமி திருக்கோயிலில், கடந்த 4.2.1992 அன்று இரவு, திருடர்கள் ஒரு குழுவாகச் சென்று, கோபுரத்தின் வடக்கே உள்ள மதில் சுவர் வழியாகக் கயிறு கட்டி உள்ளே நுழைந்து, சுவாமி சன்னதியின் அருகே இருந்த விநாயகர் சிலையைப் பீடத்தில் இருந்து அகற்றியுள்ளனர். கர்ப்பக் கிரகக் கதவின் பூட்டினை உடைத்து, 5 அடி உயரமுள்ள அருள்மிகு ஆனந்தவல்லியம்மன் கல் திருமேனியை உடைத்து, பீடத்திலிருந்து அப்புறப் படுத்தியுள்ளனர். அதே கோயிலில், 4 அடி உயரமுள்ள துவார பாலகர் கற்சிலையையும், ஒரு அடி உயரமுள்ள நந்தீஸ்வரர் கற்சிலையையும், 2 அடி உயரமுள்ள சிறிய விநாயகர் சிலையையும், 3 அடி உயரமுள்ள மற்றுமொரு சிலையையும் பீடங்களிலிருந்து அகற்றியுள்ளனர். மேலும் 2½ அடி உயரமுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சிலையை உடைத்துள்ளனர்.

அம்மன் சன்னதியில் இருந்த உண்டியலின் வெளிப் பூட்டை உடைத்துள்ளனர். ஆனால் உண்டியலின் உள் பூட்டுத் திடமாக இருந்தமையால், அதனைத் திறக்க முடியவில்லை. எனவே, உண்டியல் பணம் களவு போகவில்லை. இந்த நிகழ்ச்சி காவல் துறையினருக்குத் தெரிவிக்கப் பட்டவுடன், கங்கைகொண்டான் காவல் நிலையக் குற்ற எண்.46/92-இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினர், கைரேகை நிபுணர், மற்றும் புகைப்பட வல்லுநரை அனுப்பி வைத்துப் புலன் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் திருக்கோயில், ஊரைவிட்டுத் தள்ளி, தனியாக உள்ள நிலையில் இவ்வாறு திருட்டு முயற்சிகள் நடந்துள்ளன. இதுமட்டுமின்றி, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மற்றும்

சிதம்பரனார் மாவட்டங்களில், அடிக்கடி சிலை உடைப்பு மற்றும் களவு நடைபெற்று வருவதால், ஒவ்வொரு திருக்கோயிலிலும் இரவுக் காவல் பணியைத் தீவிரப்படுத்தவும், இரவுக் காவலர்கள் இல்லாத திருக்கோயில்களின் இதரப் பணியாளர்களில் ஒருவரை, இரவுக் காவல் பணி செய்திட நியமிக்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உடைக்கப்பட்ட அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் சிலைக்குப் பதில், புதிய சிலை விக்கிரகத்தினை விரைவில் செய்து வைக்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படிச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அதன் மூலம் பொது மக்கள் மனதில் நம்பிக்கை தோற்றுவிக்குமாறும், தக்க அறிவுரைகள், காவல் துறையினருக்கும், இந்து அறநிலையத் துறையினருக்கும் வழங்கப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்த 14.2.1992 அன்று, திருநெல்வேலியில் உள்ள அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் இருந்த, சுமார் 750 கிராம் எடையுள்ள வெள்ளி பிரம்ம வளையத்தை, 'யாரோ திருடிச் சென்று விட்டனர். உள்ளூர்க் காவல்துறையினர் தீவிரப் புலன் விசாரணை செய்து, அக்கோயிலில் பணி புரியும் இரண்டு அர்ச்சகர்களைக் கைது செய்து, களவாடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.)

(குற்றாலத்தில் உள்ள செண்பகாதேவி அம்மன் ஆலயத்தினுள், சில அடையாளம் தெரியாத நபர்கள், 17.3,1992 அன்று இரவு, பூட்டை உடைத்து உள்ளே புகுந்து, ரூபாய் 800 மதிப்புள்ள, வெள்ளி மற்றும் பித்தளைப் பொருட்களைக் களவாடியுள்ளனர். இது குறித்தும் காவல் துறையினர் வழக்குப் பதிந்து, தீவிரப் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்)

(திருட்டு சம்பந்தமாகத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் - ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர்கள் மற்றும் 4 காவலர்கள் அடங்கிய தனிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

புலனாய்வில் உள்ள சிலைத் திருட்டு வழக்குகள், மாநிலக் குற்றப்பிரிவின் சிலைத் திருட்டுத் தனிப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு, ஒரு காவல்துறைக் கண்காணிப்பாளரின் தலைமையில், தீவிரப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத்தகைய குற்றங்கள் நடவாமல் தடுக்கவும், நடந்துவிட்ட குற்றங்களை விரைவில் கண்டுபிடிக்கவும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்கள் பேசுகிறபோது, தருமபுரி மாவட்டத்தில் ஒரு கோயிலில் பணிபுரிந்த காவலர் கொலை செய்யப்பட்டது பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசினார்.



ஆசை

● ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒவ்வொருவரும் முதுமைப் பருவம் அடைகின்றனர். ஆனால், ஆசை மட்டும் எப்போதும் இளமையாய் இருக்கின்றது.

- அண்ணல் காந்தியடிகள்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், கோவில் திருட்டு மற்றும் சிலை உடைப்பு பற்றிக் குறிப்பிட்டு, கோவில்களைப் பாதுகாக்கத் தெரிவித்த அனைத்துக் கருத்துக்களும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமது கலாச் சாரப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும், கலைப் பொக்கிஷங்களாகத் திகழும் நமது திருக்கோவில்களையும், அவற்றின் உடைமைகளையும் பாதுகாப்பதே, எங்கள் அரசின் தார்மீகக் கடமை என்பதை, நான் ஏற்கெனவே இம்மாமன்றத்திற்கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துள்ளேன்.

சமீப காலமாக நடைபெற்றுவரும் கோவில் திருட்டுகளையும், சிலை உடைப்புகளையும், நான் உன்னிப்பாகக் கவனித்தக் கொண்டுதான் வருகிறேன். இதனை முற்றிலுமாகத் தடுத்து நிறுத்த, நிரந்தரமாக ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது, மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இந்தச் சிறப்பு ஏற்பாட்டினைக் குறித்து, விரைவில் ஆய்ந்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம சுப்பு அவர்களும், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் பேசுகின்றபோது - அரசியல் காரணங்களுக்காக இந்தக் கோவில் திருட்டுச் சம்பவங்கள் திட்டமிட்ட செயல்களாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டினை இங்கே தெரிவித்தார்கள். இதுவும் அரசின் பரிசீலினையில் இருக்கிறது; நான் ஏற்கெனவே சொன்னதுபோல இத்தகைய கோவில் திருட்டுகள், சிலை உடைப்புகள், கோவில்களில் கொலை போன்ற குற்றங்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு ஒரு நிரந்தர ஏற்பாட்டினை நான் இப்போது உருவாக்கிக் கொண்டு வருகிறேன். இதனைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகிறேன். எனவே, அதைப்பற்றிய விவரங்களை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2.4.92 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழா

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக்கழகத்தொடக்கவிழா 31.3.'92 அன்று காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. புதிய போக்குவரத்துக் கழகத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக அரசுத் தலைமைக் கொறடா திரு. கா.ப.பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புதிய போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், "பெரியார் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களிலிருந்து 639 பேருந்துகளைப் பிரித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவரத்துக் கழகம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த 639 பேருந்துகள், 587 வழித்தடங்களில் இயக்கப்பட இருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்கள் தான் சிறப்பாகச் செயல்படுகின்றன. காஞ்சிபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்குப் பேருந்து ஒன்று விடப்படும். பெரிய கோயில்கள் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பேருந்துகள் விடப்படும்'' என்று கூறினார்.

எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் முதல் பேருந்து காஞ்சிபுரத்திலிருந்து திருத்தணிக்கு விடப்பட்டது. இப்பேருந்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார். விழாவுக்கு, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கே.ஞான தேசிகன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார். அரசு போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. ஆர்.சந்தானம், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு. ம.கா.சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா தொடங்குவதற்கு முன்பாக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இன்னிசைக் குழுவின் மெல்லிசை நடைபெற்றது.

—இரா.இராஜசேகரன்

டாக்டர் அம்பேத்கர் வாழ்விலே

- எஸ். பழனியப்பன்

ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத்தில் பஞ்சம் இருந்ததோ இல்லையோ, மக்கட்செல்வத்தில் பஞ்சமில்லை. ஏற்கெனவே பதின்மூன்று பிள்ளைகளின் பெற்றோராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்காவதாக ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப்பட்டது அக்குழந்தைக்கு.

அந்தக் குழந்தைதான் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம்பேத்கர் ஆவார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடிபெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதெனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார். தேடினார். கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில்தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர் தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில் அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அவர் சகோதரர் அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்து போவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றி அவர்கள் தந்தைக்குத் தகவல் தெரிவித்து விடுவார்கள். புகைவண்டி நிலைத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப் போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகைவண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப் போய் நின்றார்கள். விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான் வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப் போய், வசைபாடியபடி வண்டியை விட்டுக் கீழே குதித்தான் வண்டியோட்டி, திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது. இருந்தாலும் பாதிவழிக்கு மேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும் வரை பொறுத்துக் கொண்டிருந்தார் ஆனந்தராவ். பிறகு மெலிதான குரலில், பேசியதைப்போல் இரண்டு பங்கு வண்டிக்கூலி தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறி விட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே தனது வண்டியை ஓட்டிப் போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்.

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் ஆங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், ஆனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்து விட்டார்கள். கடுமையான நா வறட்சியுடனேயே கடைசி வரை தாகத்தோடு ஊர்போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.

சதாராவில் இருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது.

'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல் வித்து அங்கேதான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது. அனைவரும் சமம் என்ற உணர்வுக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர்களாலும் உதாசீனப் படுத்தப்பட்டதுண்டு. தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந்தார்கள்; அதுவும் வெறுந்தரையில்!

வகுப்பறையில் இருந்த தண்ணீர் பானையில் அவர் தண்ணீர் குடிக்கக் கூடாது; யாராவது தூர நின்று ஊற்றுவார்கள்; இவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற் போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக் கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது!

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படி ஒரு பேதம் கொண்டிருப்பது தேவைதானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்டுப் புத்தகத்தை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால் அவர் மனநிலை எப்படியிருக்கும்?

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர்முத்தும் விளையும் என்பதுபோல, சாதி வெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருப்பதும் உண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர்நிலைப் பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நமது அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் படிப்பே குறியாக இருந்தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.

அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாலை அணிவித்தார் (14-4-1992).

சதாரா பள்ளியில் அவர் சமஸ்கிருதம் படிக்க முடியாது என்ற தடை விதிக்கப்பட்டது. அது தெய்வ மொழி என்பதால் அப்படியாம்! இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத்கர். ஆனால், வெளியே தனியாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம் ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறையில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத்தோடு படித்து வரலானார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம். அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம்பேத்கர். அந்தத் தெருவிலிருந்த இரண்டொரு சிறுவர்கள் இந்த மழையில் எப்படிப் போவது என்று நின்று விட்டனர். அவர்களிடம் பந்தயம் கட்டிவிட்டு, அந்த அடைமழையிலும்கூட பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தார் அம்பேத்கர்.

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டி விட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார். இது மட்டுமல்ல; தனக்காக எடுத்துவைத்திருந்த சாப்பாட்டை அவருக்கும் தனக்குமாகப் பங்கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒரு நாள் மட்டுமல்ல; பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட்டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத்துடன் நின்று விடவில்லை. பீமராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரையும் இணைத்து 'பீமராவ் அம்பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக்கூட வருகைப் பதிவேடு முதலிய ஆவணங்களிலெல்லாம் கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத்கர் என்ற அந்தப் பெயர் பிற்காலத்தில் இந்திய வரலாற்றில் இடம் பெறப்போகிறது என்பது அப்போதெல்லாம் அந்த ஆசிரியருக்குத் தெரிந்திருக்காது!

1907-இல் பம்பாயில் உள்ள எல்பின்ஸ்டன் மெட்ரிகுலேஷன் தேர்வில் மிக நல்ல மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் தேர்ச்சியடைந்தார். அம்பேத்கர். அதுவரை அந்தப் பகுதியில் அப்படி வேறெந்த வகுப்பு மாணவனுமே இப்படிப் படித்துத் தேறியதில்லை!

ஆகையால், அவருக்குப் பாராட்டு விழாவே கூட அங்கே நடத்தப்பட்டது.

பாராட்டு விழாவிற்கு எஸ்.கே.போலே தலைமை வகித்தார். கிருஷ்ணராவ், அர்ஜூன் கெலூஸ்கர் போன்ற சிறந்த கல்வியாளர்களெல்லாம் அம்பேத்கரைப் பாராட்டிப் பேசினார்கள். விழா முடிவில் அம்பேத்கருக்குக் 'கௌதம புத்தரின் வாழ்க்கை வரலாறு' என்ற புத்தகத்தை அன்பளிப்பாக வழங்கினார் கெலூஸ்கர்.

பிற்காலத்தில் அம்பேத்கர் புத்த மதத்தில் சேர, அந்த நூலே முதல் காரணம் என்றும் கூறுவதுண்டு.

பால்ய விவாகம் அப்போதெல்லாம் சர்வ சாதாரணமாக நாடெங்கும் நடந்து கொண்டிருந்தது. ஆகையால், அம்பேத்கர் படித்துக் கொண்டிருக்கும்போதே அதாவது 14 வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டது.

பிக்குவலாங்கர் என்பவரின் ஒன்பது வயது மகள், ராமி என்கிற ரமாபாய் என்ற சிறுமியையே அவர் மணந்தார்.

தீண்டத்தகாத குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், பம்பாயில் எந்தத் திருமண் மண்டபத்திலும் அவர்கள் திருமணம் அனுமதிக்கப்படவில்லை. அதனால், பைகுல் மார்க்கெட்டில் இருந்த ஒரு தகரக் கொட்டகையில் - அதுவும், இரவு நேரத்திலேயே அந்தத் திருமணம் நடந்தது.

திருமணம் ஆகிவிட்டதால் அம்பேத்கரின் படிப்புத் தடைப்பட்டதா என்றால், அதுதான் இல்லை. எப்போதும்போல் ஊக்கத்துடன் படித்து வந்தார், அவர்.

சில காலத்திற்குப் பிறகு - அரசியலில் ஈடுபட்டு தான் ஒரு மேல் சபை உறுப்பினர் ஆகிவிட்டபோதிலும் - மேல்சாதியினர் எனப்படுவோருக்கு மனிதத் தன்மை உண்டாக்குவதில் அவருக்கு ஏற்பட்டிருந்த போர்க்குணம் அப்படியே இருந்தது.

'மகாடு' குடிநீர்க் குளத்தில் அரிசனங்கள் தண்ணீர் எடுப்பது பற்றி அறிவிப்பொன்று வெளியிட்டார் அம்பேத்கர். மகாடில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் அவருடைய ஆலோசனையின் பேரில் ஏற்பாடு செய்யப்பட்டது. 1927-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி நடைபெற்ற அக்கூட்டத்திற்கு மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களைச் சேர்ந்த அரிசன மக்களெல்லாம் மாபெரும் எதிர்பார்ப்புடன் ஒன்று திரண்டு வந்திருந்தார்கள்.

அப்படி வந்தவர்களுக்கும் அங்கே குடிக்கத் தண்ணீர் கிடைக்கவிலை; விலை கொடுத்தே தண்ணீர் வாங்கிச் சாப்பிடும் நிலைமையிருந்தது.

அம்பேத்கர் தலைமையில் நடைபெற்ற கூட்ட முடிவில், மகாடில் இருந்த சௌடார் குளத்தில் எல்லோருமாக இறங்கித் தண்ணீர் எடுப்பதாக முடிவாயிற்று.

மாபெரும் மக்கள் கூட்டத்தோடு அம்பேத்கர் அங்கு சென்றார். வாழ்த்து முழக்கம் பூமியை அதிரச் செய்ய, அவரே முதன் முதலாக அக்குளத்தில் இறங்கினார். முழங்கால் அளவு ஆழத்தில் நின்று தண்ணீரை அள்ளிக் குடித்தார். அதன் பிறகு, மகிழ்வுடன் அரிசன மக்களெல்லாம் அக்குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுக்கலாயினர்.

சுயமரியாதை இயக்கத் தலைவர் பட்டிவீரன்பட்டி டபிள்யூ பி.ஏ. சவுந்திர பாண்டியனார் திருவுருவச் சிலையினை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் திறந்து வைத்தார் (14-4-1992).

ஒரு சமயம் அம்பேத்கரின் மனைவி உடல்நலம் குன்றியது. பந்தார்பூரில் உள்ள கோயிலுக்குப் போய் சாமி கும்பிட ஆசைப்பட்டார் அந்தப் பெண்மணி.

அம்பேத்கரோ அன்பு மனையாளை அந்தக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். தீண்டத்தகாத இனத்தார் என்பதால், அங்கே அவர்கள் உள்ளேபோய் தெய்வத்தைத் தரிசிக்க அனுமதி மறுக்கப்பட்டது. அம்பேத்கர் எவ்வளவோ வாதாடிப் பார்த்தார், பயனில்லை.

அந்த அம்மையார் வெளியே நின்றே கடவுள் வணக்கம் செலுத்தினார்; கலங்கிய கண்களோடு தன் கணவனைப் பார்த்தார்.

மனைவியின் கண்களைத் துடைத்துவிட்ட அம்பேத்கர் - 'கவலைப்படாதே கூடிய சீக்கிரம் நானே இந்த பந்தார்பூர் கோயில் போல ஒரு கோயிலைக் கட்டுகிறேன். அங்கே நீ கடவுள் சன்னிதானத்திலேயே சுதந்திரமாகப் போய் மனமார சாமி கும்பிட்டுக் கொள்ளலாம், வா' என்று சமாதானப்படுத்தினார்.

ஆனால், அவரது அன்பு மனையாள் திருமதி ரமாபாய் அதுவரை காத்திருக்கவில்லை. 1935-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாளன்று இறந்து போய்விட்டார். இந்துமத முறைப்படியே அன்னாரின் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன.

'அறிவு பெறப் படியுங்கள்; அமைப்புரீதியில் ஒன்று படுங்கள்; உரிமைக்குப் போராட ஒருபோதும் அஞ்சாதீர்கள். (Educate....... Organise ...... and Agitate......)'

'நான் எப்போதும் உங்களோடிருக்கிறேன்; அதேபோலவே நீங்கள் எப்போதும் என்னோடிருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. (I shall always be with you; as I know, You will be with me)...'

- இப்படிப்பட்ட சொற்றொடர்கள், அண்ணல் அம்பேத்கரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி இடம் பெறுபவைகளாக இருந்தன.

ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாள் முழுவதும் மாணவன் போலவே கற்க வேண்டும். தனக்கென்று ஒரு நூல் நிலையம் வைத்திருக்க வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ள வறியவர்களுக்கு உதவ வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் பண்பாடுள்ள குடிமகனாக இருக்க வேண்டும். மனிதனைப் பகுத்தறிவு உள்ளவனாக மாற்றுவது எப்படி என்பதுதான் சமுதாயத்தின் முக்கிய சிந்தனையாக இருக்க வேண்டும்.

— அம்பேத்கர்

பம்பாய் தொகுதியில் நின்று பெரு வெற்றிபெற்று, பாராளுமன்றத்திற்குள் வந்து உட்கார்ந்தார் அம்பேத்கர்.

சட்ட நுணுக்கங்களால் பெரும் புகழ் பெற்றிருந்த டாக்டர் அம்பேத்கரைச் சட்ட அமைச்சராக்கலாமா என்ற கருத்து மகாத்மா காந்தி அடிகளோடு கலந்து பேசப்பட்டது. பெரிய மனதுடன் அவர் சம்மதம் தெரிவித்தார். அதன்பின் - சர்தார் வல்லபாய் படேல், எஸ்.கே. பட்டீல் இருவராலும் இந்த விஷயம் டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு காந்தியார்மீதும் காங்கிரஸ் கட்சி மீதும் இருந்த வெறுப்புணர்ச்சி அவருடைய மனதை விட்டு விலகியது. அமைச்சர் பொறுப்பேற்க ஒப்புதல் அளித்தார்.

சட்டமேதை அம்பேத்கர், 1947-ஆம் ஆண்டு ஜூலையில் சட்ட அமைச்சராக்கப்பட்டார்.

அப்போது இந்துமகா சபைத் தலைவராக இருந்த டாக்டர் ஷியாம் பிரகாஷ் முகர்ஜியும் அமைச்சர் ஆனார்.

ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி நள்ளிரவில், நம் இந்திய நாட்டின் அடிமை இருள் விலகியது; சுதந்திரச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு ஒளி வீசியது. 29-ஆம் தேதி கூடிய அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சட்ட முன்வரைவுக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவராக டாக்டர் அம்பேத்கர் நியமிக்கப்பட்டார்.

சர். அல்லாடி கிருஷ்ணசாமி, சர். பி.என். ராவ், சர். கோபாலசாமி ஐயங்கார், டாக்டர் கே.எம். முன்ஷி, பி.எல். மிட்டர், டி.பி. கெய்தான் ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகித்தார்கள்.

பிறகு - மிட்டர் மறைவுக்குப் பின் அவர் இடத்தில் மாதவராவும் கெய்தான் மறைவுக்குப் பின்பு அவர் இடத்தில் டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் நியமிக்கப்பட்டார்கள்.

1949-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் நாளன்று பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டு இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

'இந்திய அரசியல் சட்டம் இணையற்ற வகையில் உருவாக்கப்பட டாக்டர் அம்பேத்கர் மேற்கொண்ட முழுமுயற்சியே காரணம். உலக நாடுகளிலெல்லாம் உள்ள அரசியல் சட்டங்கள் இதற்கு எந்த வகையிலும் ஒப்பாக முடியாது. நீக்குப் போக்கற்ற நிலையில் அது அமைந்திருக்கிறது...' என்றெல்லாம் பார்லிமெண்டிலேயே பாராட்டிப் பேசினார் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார்.

எழுத்தாளர் அம்பேத்கர்

அம்பேத்கர் 1915-இல் 'பழங் கால இந்திய வர்த்தகம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதி எம்.ஏ., பட்டம் பெற்றார்.

1916-ஆம் ஆண்டு மே மாதத்தில் மனித தத்துவம் பற்றி நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், 'இந்தியாவில் சாதிகள், அவற்றின் செயல்முறை, தொடக்கம் மற்றும் வளர்ச்சி' என்பவை பற்றி விளக்கமான ஒரு கட்டுரையை அளித்தார்.

1916-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்கு, 'இந்தியாவில் தேசிய லாபப் பங்கீடு' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை வரைந்தார். அதனையே விரிவுபடுத்தி, 'இந்தியாவின் சாம்ராஜ்ய, மாகாண பொருளாதார பரிணாமம்' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

1921-இல் ஜூன் மாதத்தில், 'பிரிட்டிஷ் இந்தியாவில் மத்திய நிதியை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளித்தல்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.எஸ்ஸி., பட்டம் பெற்றார்.

1922-ஆம் ஆண்டு அக்டோபரில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் 'ரூபாயின் பிரச்சினை' என்ற கட்டுரையை வழங்கினார். அதற்காக 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற பட்டத்தைப் பெற்றார். அந்தக் கட்டுரை 1923-ஆம் ஆண்டு டிசம்பரில் இலண்டனில் உள்ள 'கிங் அண்டு சன்' பதிப்பகத்தாரால் நூலாக வெளியிடப் பெற்றது.

3.4.1927-இல் 'பகிஷ்கிரிட் பாரத்' என்ற மாதமிருமுறை இதழை மராத்தியில் வெளியிட்டார்.

'புத்தரும் அவருடைய தர்மமும்' என்ற நூலை எழுதினார். அதில் புத்தமதச் சாரத்தை விளக்கமாக வரைந்துள்ளார்.

'சாதிகள் ஒழிப்பு' என்ற தம் நூலில் அவர் சமூகம் பகுத்தறிவின் அடிப்படையில்தான் அமைய வேண்டுமே தவிர, சாதி அடிப்படையின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து அமைதல் கூடாது என்பதை விளக்கி இருக்கிறார்.

1920-இல் 'மூக் நாயக்' என்ற கிழமை இதழ் தொடங்கினார். 'மூக் நாயக்' என்ற சொல்லுக்கு 'ஊமையர் தலைவன்' என்று பொருள். தாழ்த்தப்பட்டோரின் உரிமைக் குரலாக அவ்விதழ் வெளிவந்தது.

அம்பேத்கரின் நூல்கள் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை நன்கு அலசின. அவருடைய நூல்களில் உண்மைகள் ஆதாரங்களோடு விளக்கப்பட்டன. அவரது நடையில் எளிமையும் தெளிவும் இணைந்திருந்தன. தம் கருத்தைக் கற்போர் நெஞ்சில் அழுத்தமாகப் பதியும் வண்ணம் எழுதும் ஆற்றல் அவருக்கிருந்தது. தம்முடைய எழுத்தாற்றலைக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு எழுதாமல், சமுதாய சீர்திருத்தத்துக்காகவும், அரசியல் பொருளாதார விளக்கத்துக்காகவும், மக்களை எழுச்சி அடையச் செய்வதற்காகவுமே அவர் எழுதினார்.

ஒதுக்கப்பட்ட இந்தியா, மக்கள், சமத்துவம் என்ற பெயர் கொண்ட பத்திரிகைகளையும் அவர் நடத்தினார்.

- திரு. பூவை அமுதன் எழுதிய 'அரும்பெருந் தலைவர் அம்பேத்கர்' என்னும் நூலிலிருந்து.

இப்போதும்கூட, அந்த அரசியல் சட்டத்தை, காலத்தை வென்றதாக நாம் கருதலாம்.

1948 ஏப்ரல் மாதத்தில்தான் டாக்டர் சபீதா கபீர் - அம்பேத்கர் திருமணம் நடைபெற்றது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் டாக்டர் அம்பேத்கரின் 56-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 27-ஆம் நாளன்று, தமது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துவிட்டார் டாக்டர் அம்பேத்கர். தாழ்த்தப்பட்டோருக்கு அரசு உதவியாக இல்லை என்ற குறை அவருக்கு இருந்ததும் அந்த விலகலுக்கோர் காரணம். பிறகு வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமே அவர் நீடித்தார்.

1951-ஆம் ஆண்டே 'பாரதீய புத்த ஜனசங்கம்' என்றோர் அமைப்பை உருவாக்கியிருந்தார் அம்பேத்கர்.

1956-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் நாளன்று, நாகபுரியில் மிகப் பெரிய அளவில் பௌத்தர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த நாளை நேபாள அரசு விடுமுறை நாளாகக் கடைப்பிடித்தது.

டாக்டர் அம்பேத்கர், தனது மனைவியோடு அங்கு வந்து சேர்ந்தார். வெள்ளைக் கோட்டுப் பட்டு வேட்டியுமாக வந்த அவர், புத்த பிக்குகளால் இன்முகத்தோடு வரவேற்கப்பட்டார். அவர்களோடு ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாகப் பலபேர் வந்திருந்தார்கள்.

முதன்மை புத்தபிக்கான சந்திரமணியும், மற்றும் நால்வரும் அதற்கான சடங்குகளை நடத்தினார்கள். அவர்கள் முன்னால், அண்ணல் அம்பேத்கரும் அவரது துணைவியாரும் வணங்கி நின்றனர். சந்திரமணி கூறும் புத்தமத உறுதிமொழிகளைத் திரும்பச் சொல்லுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

'கொலைத் தொழில் புரிவதில்லை; பொய் பேசுவதில்லை; திருடுவதில்லை; பாலுறவில் திளைப்பதில்லை; குடிப்பதில்லை...' என்று தொடங்கி 22 உறுதிமொழிகளை எடுத்துக் கொண்டு தலை வணங்கினார்கள் அவர்கள். 'இந்து மதத்திலிருந்து விலகி டாக்டர் அம்பேத்கர் புத்தமதத்தில் சேர்ந்து விட்டார்' என்று அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

ஒரு முக்கிய விஷயமாய் பம்பாய்க்குப் போகவேண்டியிருந்தது. 1956 டிசம்பர் 14-ஆம் தேதி டில்லியிலிருந்து புறப்படத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், அதற்கு முன்பாகவே அவரது இறுதிப் பயணம் இருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

டிசம்பர் ஆறாம் தேதியன்று அதிகாலை நேரம். பறவைகள் சோககீதம் இசைத்தன. டாக்டர் அம்பேத்கரின் துணைவியார், கண்ணைக் கசக்கியபடி எழுந்தார். 7 மணிக்குக் கணவனை எழுப்பினார். அவர் உடலில் எந்தவித அசைவும் இல்லாதிருப்பது கண்டு திடுக்கிட்டார்.

ஆம்; அந்தச் சட்ட மேதையின் 66 வயது உடல் மட்டுமே படுக்கையில் கிடந்தது. உயிர் உடலைவிட்டுப் பிரிந்திருந்தது; உறக்கத்திலேயே அவருக்கு மரணம் சம்பவித்திருந்தது!

பெரியார் மாவட்டம் குடிநீர்த் திட்டப் பணிகள்

கொங்கு மண்டலத்தின் ஒரு பகுதியான பெரியார் மாவட்டம் செழிப்பின் பிறப்பிடமாகவும், வளத்தின் தோற்றமாகவும், இருந்த நிலை மாறி, இம்மாவட்டத்தில் நிலத்தடி நீர்வளம் தற்போது குறைய ஆரம்பித்து பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இப்பிரச்சினைகளைத் தீர்க்க மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் முனைப்புடன் செயல்படுகின்றன.

கடந்த ஒரு மாதமாக, பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரா.கண்ணன் அவர்கள் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து, குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், ஆழ்குழாய்க் கிணறு இல்லாத இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், உத்தரவிட்டு தற்போது அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரே நாளில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சுற்றிப்பார்த்து, கிராம மக்களின் தாகம் தீர்க்க அரும் பணியை மேற்கொண்டார்.

நடப்பாண்டில் (1992-93) மட்டும் ரூ.27.53 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் படவுள்ளன. காங்கேயம், அம்மாப்பேட்டை, சென்னிமலை, மொடக்குறிச்சி, நம்பியூர், சத்தி, கோபி, ஈரோடு, பவானி, பெருந்துறை ஆகிய பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைவதோடு, இப்பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை இத்திட்டத்தின் மூலம் தீர்வு காணப் படவுள்ளது.

விவசாயிகள் முன்பு கால்நடைகள் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டிய பகுதியான காங்கேயம், வெள்ளக்கோயில், தாராபுரம் பகுதிகளில் இன்று குடிநீர் கூட மக்களுக்குப் பிரச்சினையாக இருப்பதை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 22.1.92 அன்று காங்கேயம் வருகையின்போது ரூ.20.43 கோடி செலவில் இப்பகுதிக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, இப்பகுதி மக்களின் இதயங்களைக் குளிர வைத்தார்.

இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தைக் காங்கேயத்தில் அமைக்கவுள்ளதாக அண்மையில் பெரியார் மாவட்டத்திற்கு வருகை புரிந்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பணிகளைப் பார்வையிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வி.கே.சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் உள்ள சில ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.2.80 கோடி செலவில் 276 கைப்பம்புகளும், 53 விசைப்பம்புகளும் போடப்பட்டுள்ளன. இதனால் பெரியார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் இருந்து விடுதலை பெற்றன.

குடிதண்ணீர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ், ஈரோடு நகரில் ஒரு நாளைக்கு ரூ.85 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. ஆனால், அந்நிலை மாறி தற்போது ஒரு நாளைக்கு 165-180 இலட்சம் லிட்டர் விநியோகம் செய்யப்படுகிறது.

அரசு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் இடங்களின் அருகாமையில் தனியார் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்விசைப் பம்புகள் மூலம் தண்ணீர் எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் எச்சரித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் கோடைக் கால வறட்சியைப் போக்கிடும் விதத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மட்டும் இம்மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.1 இலட்சமும், புதிதாக 75 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதி அளித்துள்ளன. இதற்கான தொடக்கப் பணிகள் செயல்படத் தொடங்கி விட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின்

போக்குவரத்துக் கழகங்களுக்கு

ஏழு தேசிய விருதுகள்

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தித் திறன், உற்பத்திச் செயல் திறன், கிராமப்புறப் போக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத் தமிழக போக்குவரத்துக் கழகங்களான அன்னை சத்யா, சோழன், பட்டுக்கோட்டை அழகிரி, இராணி மங்கம்மாள் ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று முதன்மை இடம் பெற்றுள்ளன.

2.4.'92 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற தேசிய விருதுகளைப் பார்வையிட்டு, இந்தச் சாதனைக்கான மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களையும், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களையும் பாராட்டி, இனி வருங்காலங்களில் தொடர்ந்து மக்கட் பணிகளில் ஈடுபட்டு இதுபோன்று மென்மேலும் சிறப்புகளைப் பெற வேண்டுமென்று வாழ்த்தினார்.

தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருதுகள்

1.	தேசிய உற்பத்தித் திறன் குழுவின் விருது	கிராமப்புறப் பயணிகள் சேவையில் சாலைப் போக்குவரத்துத் துறையில் இந்தியாவிலேயே மிகச் சிறந்த உற்பத்திச் செயல் திறனுக்காக முதல் இடம்	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்
2.	"	" இரண்டாம் இடம்	இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்

மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருதுகள்

3.	மாநில சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் பேரவையின் விருது	ஒரு லிட்டர் டீசலுக்கு மிக அதிக தூரம் செலுத்திய நகரப் பேருந்துகளுக்கான விருது முதல் இடம்	சோழன் போக்குவரத்துக் கழகம்
4.	" "	பேருந்துகளின் செயல்திறனில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம்	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்
5.	" "	பேருந்துகளின் உற்பத்தித் திறனில் அதிகபட்ச செயல்திறன் - முதல் இடம்	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்

எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருதுகள்

6.	எரிபொருள் சேமிப்பு ஆராய்ச்சிப் பேரவையின் விருது	ஒரு லிட்டர் டீசலில் அதிக தூரம் செலுத்தியதில் அதிகபட்ச முன்னேற்றம் - முதல் இடம்	பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்
7.	" "	" இரண்டாம் இடம்	அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்

சென்னை நேரு ஸ்டேடியம் ரூ.30 கோடி செலவில் புதுப்பிக்கப்படுகிறது

பத்தாவது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியை, சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத்தரம் உள்ளதாக மேம்படுத்தும் நோக்கத்தோடு புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் திட்டமிடப்பட்டு, இதற்காகும் உத்தேசச் செலவு சுமார் 30 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு 5 கோடி ரூபாய் வழங்குமாறு மத்திய அரசை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கேட்டுள்ளார்.

நேரு அரங்கத்தைப் புதுப்பிக்க மத்திய அரசு உடனடியாக ரூ.2 கோடி வழங்கியுள்ளது. மாநில அரசு ரூ. 5 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை வள்ளல்கள் மற்றும் விளையாட்டை விரும்பும் மேன்மக்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

நேரு விளையாட்டு அரங்கைப் புதுப்பிக்கவும், புதுமையாக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி 1993-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெறும்.

—இந்தத் தகவலை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் சட்டப் பேரவையில் தெரிவித்தார் (1.4.'92).



★ எவ்வகையான துன்பங்களையும் கண்டு கொதித்தெழுவோரே மனிதாபிமானம் கொண்ட மக்களாவர். யார் துன்பப்படுகிறார்கள் என்பதைக் கவனியாமல், மனச்சாட்சி கொண்ட ஒவ்வொருவரும் அத்துன்பப்படுவோருக்குத் துணை நின்று அவரை விடுவிக்க வேண்டும்.

★ பொருள் ஆதாயத்தைவிட சுயமரியாதை மிக முக்கியமானதாகும். நம்முடைய போராட்டம் கௌரவத்திற்கும், சுயமரியாதைக்குமான போராட்டம்; பொருளாதார முன்னேற்றத்திற்கு மட்டுமான போராட்டம் அல்ல.

நூல் நயம்

மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்

ஆசிரியர்: பின்னலூர் மு. விவேகானந்தன்

வெளியீடு:

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க்டவுன்,
சென்னை-3.

பக்கம்:120 விலை:ரூ.28/-

எளிமையும் இனிமையும் தமிழ் என நிகண்டு விளக்குகிறது. இந்த இரண்டு இயல்புகளும் இயல்பிலே அமையப் பெற்றவர் கவிஞர் பி.வி.கிரி. படைப்பாளன் இயல்புகள் படைப்புகளிலே ஊடுருவி நிற்பது வாழ்க்கை. அந்த வகையில், கவிஞர் கிரியின் குழந்தைப் பாடல்களில் எளிமையும் இனிமையும் நிறைந்து நிற்கின்றன என்பது வாசக அனுபவம். அத்தகைய கவிஞரின் அருமையான படைப்புகளை அவர் வாழுங்காலத்திலே ஆய்வு செய்வதும், அதை அரிய நூலாக வடிப்பதும் போற்றத்தக்கவை.

'மழலை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்' என்னும் அழகிய, தலைப்பில் பின்னலூர் மு.விவேகானந்தன் எழுதியுள்ள இந்நூல், ஏழு தலைப்புகளில் கவிஞர் பி.வி.கிரியின் பல துறைப் பணிகளையும் பரக்கப் பேசுகிறது. கவிஞர், எழுத்தாளர், குழந்தை எழுத்தாளர், இதழியலாளர், நாடக ஆசிரியர் என்ற வகைகளில் பி.வி.கிரி பெற்றுள்ள இடத்தை இந்நூலில் உறுதிப்படுத்துகிறது. நீரோட்டமான நடையில் நிகழ்காலத்தை வரலாறாக்கும் தொடர்பணியில் ஈடுபட்டுள்ள நூலாசிரியர் விவேகானந்தனுக்கு இது இன்னொரு வெற்றிப்படி.

சி.எல்.எஸ்.நிறுவனத்தின் வெளியீடாக மலர்ந்துள்ள இந்நூலின் அச்சும், வடிவமும் மெச்சும்படி உள்ளன.

இலக்கிய வரலாற்றில் இதுபோன்ற முயற்சி ஒரு மைல்கல்.

—இளந்தேவன்.

முதுமையிலும் இன்பம்

ஆசிரியர்: வ.செ.நடராசன்
(மூப்பியல் மருத்துவ நிபுணர்)

வெளியீடு:

சக்தி பதிப்பகம்
17, 17-வது தெரு, Q பிளாக்,
அண்ணாநகர், சென்னை-600 040.

பக்கம்:200 விலை:ரூ.18/-

முதுமை என்பது தவிர்க்க முடியாதது. இளமை என்பது கடந்து செல்வது. இளமையில் தெம்பிருக்கும்; முதுமையில் சோர்வு அடுக்கும். நோய்கள் பற்றும்; நலவாழ்வு குன்றும்; இது இயல்பு. முயன்றால் முதுமையை வெற்றி கொள்ள முடியும். முதுமையை வெல்வது எப்படி? முதுமையிலும் இளமை உணர்வுடன் திகழ்வது எவ்வாறு? இவற்றிற்குரிய விளக்கத்தை இந்நூல் வழங்குகிறது.

நூலாசிரியர், மூப்பியல் மருத்துவத் துறையில் பணியாற்றித் தான் பெற்றிருக்கும் அனுபவத்தை இந்நூலின் வாயிலாக, படிப்போருக்குப் பரிமாறியிருக்கிறார். முதுமையில் ஏற்படுகிற நோய்களையும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிமுறைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார். மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்னும் முதுமொழியை நாமறிவோம். மூத்தோர்க்குச் சொல்லும் வார்த்தையும் அமிர்தம் என்னும் புதுமொழியை இந்நூல் உணர்த்துகிறது. இந்நூலில் சொல்லப்பட்டுள்ளபடி, முதியவர்கள் தம்து அன்றாட நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டால் முதுமையை எளிதில் வெல்லலாம். இது சிறந்ததொரு வழிகாட்டி நூலாகத் திகழ்கிறது. எளிய நடை-உயர்ந்த பதிப்பு-தரமான தாள் + விளக்கப் படங்கள் - ஆகியவை இந்நூலின் சிறப்பம்சங்கள்.

—தமிழ்ப்பித்தன்

மரபில் பூத்த மலர்கள்

ஆசிரியர்:
முனைவர்-நெல்லை. ந. சொக்கலிங்கம்

வெளியிட்டோர்:

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சங்க இலக்கியத்திலிருந்து இந்தக் காலப் புதுக்கவிதை வரை பழந்தமிழ் மரபு எங்கெல்லாம் எவ்வாறெல்லாம் ஆழமாகக் காலூன்றியிருக்கிறது என்கிற பாங்கு இனிய - எளிய தமிழில் ஆய்வு செய்யப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது; இதிலுள்ள எட்டுக் கட்டுரைகளும் வெட்டிவைத்த செங்கரும்புத் துண்டுகளாக இனிப்பவை; மெய்ப்பாடுகள் எட்டின் எடுத்துக்காட்டாய்த் திகழ்பவை.

திருக்குறள், புறநானூறு, இராமாயணம், நந்திக் கலம்பகம், அங்கதப் பாடல்கள் ஆகியவற்றிலிருந்து - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் குறுங்காவியங்கள் உட்பட இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டிருப்பதே நூலாசிரியரின் தமிழ்ப் புலமை, இலக்கியத்திறன் ஆகியவற்றை [illegible] குணர்த்துகிறது.

தமிழிலக்கிய ஆர்வலர்களால் இந்நூல் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

- 'சோழராஜா'

நெற்றியில் ஓர் எரிமலை.

ஆசிரியர்: கவிஞர் பல்லவன்

வெளியீடு:

குமணன் பதிப்பகம்,
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம்-603109

பக்கம்:114 விலை:ரூ.15/-

எழுச்சியூட்டும் உணர்ச்சிக் கவிதைகளின் உருவாக்கமே இக்கவிதைத் தொகுப்பு. முதல் கவிதையே (உயர் தமிழே, உயிர் தமிழே!) நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. நூலில் தென்றலும் வீசுகிறது., புயலும் வீசுகிறது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, 'சரித்திர நூலில் வாழ்வேன்!' என்னும் ஒரு பாடலே போதும் இத்தொகுப்புக்கு. தமிழ் மணம் கமழும் இந்நூலில் சமுதாயக் களைகளைக் களைந்திடவும் வழி வகுக்கிறார் கவிஞர்.

கவிதை என்பது என்ன?

'கவிதை என்பது எழுத்தல்ல-அது கரைந்து போகும் மெழுகல்ல. கவிதை குருதிப் புனலாகும்-இருட்காட்டை அழிக்கும் அனலாகும்!' என்கிறார் கவிஞர். அருமையான கவிதை மாலை. அனைவரும் சூட்டிக் கொள்ளலாம்.

—மறைமலை.

இராமாயணரத்தினங்கள்

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசன்

வெளியீடு:

ஓரி நிலையம்
3/37, சத்தியமூர்த்தி நகர்
நந்தனம், சென்னை-600 035

விலை: ரூ.30 பக்கம்: 278

புராண இதிகாசங்கள் நம் பண்டைய செல்வங்கள். காலத்தால் அழிக்க முடியாத கருப்பொருள்கள். இராமாயணம் அவற்றுள் ஒன்று. அதை எளிய இனிய நடையில் தனக்கே உரிய பாணியில் எழுதியுள்ளார் ஆசிரியர். 109 தலைப்புகளில், இரத்தினச் சுருக்கமாக வரையப்பட்டிருக்கிறது இந்த 'இராமாயண ரத்தினங்கள்.

- பி.வி. கிரி.

கல்வி சிறந்த தமிழ்நாடு

பள்ளிக் கல்வித்துறையில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கும் மற்றும் முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளைச் சார்ந்த 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கும் இடையில் சில பிரச்சினைகள் 1978-ஆம் முதற்கொண்டு தீர்க்கப்படாமல் நிலுவையாக உள்ளன. அதன் விளைவாக, பள்ளிக் கல்வித்துறையில் 712 மேற்பார்வையாளர்கள் போன்ற பதவிகள் நிரப்பப்படாமல் இருந்தன.

மேற்கண்ட 712 பதவிகளை நிரப்புவதற்கு ஏதுவாக உச்ச நீதி மன்றத்தில் அரசு இடைக்கால உத்தரவு பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் தலைமை ஆசிரியர் முதலான பதவிகளை நிரப்பியது.

பெண்களுக்கான அரசுத் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு முதல்வராகப் பெண்கள் தொழில்நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் பெண் ஆசிரியர்களைக் கொண்ட தனி பணிமூப்புப் பட்டியலிலிருந்து நியமனம் செய்யப்படுவார்கள் எனக் கொள்கை முடிவெடுத்துள்ளது.

பள்ளிகளில் அறிவியல் கல்வியை வளர்ப்பதற்காக மைய அரசிடமிருந்து ரூ.5.00 கோடி மானியமாகப் பெறப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினால் பயன்பெற உள்ள பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1,306 ஆகும்.

எம்.ஈ., எம்.எஸ்., மற்றும் பி.எச்டி. போன்ற தொழில்நுட்பப் பட்டமேற்படிப்புக் கல்விக்காக நமது மாணவர்கள் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வதைத் தவிர்க்க, அவர்களுக்கு இங்கேயே அந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

பதினொன்றாம் வகுப்பின் முடிவில் மாவட்ட அளவில் பொதுத் தேர்வு நடத்த அரசு தீர்மானித்துள்ளது. இது அடுத்த கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படும்.

பல்வேறு ஆசிரியர் சங்கங்கள் தங்கள் பணிநிலையில் உள்ள சில குறைபாடுகள் குறித்து அவ்வப்போது அரசிற்கு விண்ணப்பித்துள்ளன . ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானதாக இருந்ததால் அரசு அந்தக் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து அதை ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆசிரியர்களிடம் மனநிறைவு ஏற்பட்டால்தான் கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும் என்பதால் ஆசிரியர் நலத்திட்டங்கள் சில அறிவிக்கப்படுகின்றன.

உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் பதவி உயர்வுக்கு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுடன் 2:5:2 என்ற விகிதத்தில் கருதப்படுவர்.

குறைந்தபட்சக் கல்வித் தகுதிக்கு மேல் உயர்கல்வித் தகுதியுடைய பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படும்.

ஈரோட்டில் சேரன் போக்குவரத்துக் கழகம் நடத்தி வரும் சொந்த நிதி பொறியியற் கல்லூரியைப் போன்று ஆசிரியர் நலநிதியிலிருந்து சொந்த நிதி பொறியியற் கல்லூரி ஒன்று தொடங்கப்பெறும். இதில் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு 50 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பெறும்.

மத்திய அரசு நிறுவியுள்ள நவோதயப் பள்ளிகளில் தாய் மொழியில் எட்டாம் வகுப்பு வரையிலும், ஆங்கில மொழியில் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலும் பயில்வதற்குக் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர் தங்கிப் பயிலவும் அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் உதவிகளைச் செய்யவும் இவ்வரசு எண்ணியுள்ளது. இந்தப் பள்ளிகளில் இந்தி போதனா மொழியாக இருக்காது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ.2.4 கோடி தொடராச் செலவினத்தில் ஜவகர் நவோதயப் பள்ளிகள் துவக்கப்படும்.

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி போதனா முறைக்குத் தொடர்ந்து கோரிக்கை இருந்து வருகிறது. இதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இவ்வகுப்புகளில் சேரும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக் கட்டணம் செலுத்த வேண்டும். அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வி முறை வகுப்புகளை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வகுப்புகளில் சேரும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணத்தைக் கொண்டு அப்பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப்படும்

ஆசிரியர்களின் ஊதியத்தைச் சரி செய்யவேண்டும்.

பேச்சு வழக்கு ஆங்கிலம் உட்பட அம்மொழியில் மாணவர்களின் திறனை மேம்படுத்த தற்போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள மண்டல ஆங்கில மொழிப் பயிற்சி மையங் களை வலுப்படுத்தி மேலும் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

வேலூர் அரசு பாலிடெக்னிக் வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் தந்தை பெரியார் அரசுப் பொறியியற் கல்லூரி தொழிற்கல்வி வசதி குறைந்த தர்மபுரி மாவட்டம் பர்கூருக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மாற்றப்படும்.

கல்வித்துறையானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தும், எனவே, கல்வித்துறையின் பெயர், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை என்று மாற்றம் செய்யப்படும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் விழிப்புணர்ச்சி ஏற் படுத்தும் பொருட்டு, சூரிய சக்தி யைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான சிறப்பு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்நிறுவனம் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும். இந்நிலையத்தை அமைக்க அரசு தொடக்க மானியமாக ரூ.10 இலட்சம் வழங்கும்.

கிராமப்புற மக்களுக்குச் சாதாரண மான முறையில் குடிநீர் வழங்கு வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவே, கடல்நீரைச் சூரிய சக்தி மூலம் குடிநீராக்குவது ஒன்றுதான் இப்பிரச்சினைக்கு நிரந் தரத் தீர்வாக அமையும் என்று அரசு கருதுகிறது. தற்போதுள்ள தொழில் நுட்ப வசதிகளுக்கு இடையில் கடல் நீரைக் குடிநீரைக்குவதால் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும். எனவே, சூரிய சக்தி மூலம் கடல்நீரைக் குடிநீராக்கக் குறைந்த செலவில் திட்டமிட்டுத் திட்டம் நிர்மாணம் செய்யும் அறிவியல் வல்லுநர்களுக்கு ரூ.10 இலட்சம் சன்மானம் அளிக்க அரசு மகிழ்ச்சியுடன் முன்வருகிறது.

பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் இலக்கினை அடைய வேண்டுமாயின் தேர்வு செய்யப் படும் ஆசிரியர்களின் தரத்தை மற்றும் திறத்தை உயர்த்தவேண்டும் என்பதை அரசு அறிந்தே உள்ளது. எனவே, இடைநிலை ஆசிரியர் களைத் தேர்ந்தெடுப்பதில் பின் பற்றப்படும் முறைகளுக்குத் திருத் தங்கள் செய்ய அரசு முடிவு செய் துள்ளது. எனவே, இனிமேல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆசிரியர் பயிற்சி பெற்றுள்ள அனைத்து நபர்களுக்கும் மாவட்ட அளவில் வடிகட்டும் முறை (Screening Test) நடத்தப்படும். அதில் எவர் குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண் பெறுகிறார் களோ அவர்கள் ஒரு குழுவால் நேர்முகமாகத் தேர்வு செய்யப்பட்டு இடைநிலை ஆசிரியர் பதவிக்குப் பொருத்தமானவர்களை அக்குழு தேர்வு செய்யும்.

புதிய பாடத் திட்டத்தில் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்வ தற்காக ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய பாடத் திட்டத்தில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

தற்போது தொகுப்பூதியம் பெற்று வரும் ஒரு நேர மற்றும் இருநேரத் தொழிற்பயிற்சி ஆசிரியர்களின் நீண்டகாலக் கோரிக்கையான முறை யான ஊதிய விகிதத்தில் ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசால் ஆய்வு செய்யப் பட்டு, பின்வருமாறு முடிவு செய்யப் பட்டுள்ளது:-

(அ) முழுத் தகுதி வாய்ந்த 587 இரு நேரப் பகுதி தொழிற் பயிற்சி ஆசிரியர்கள் பள்ளி உதவி யாளர்கள் பணியிடத்திற்குரிய முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

(ஆ) மீதமுள்ள 450 முழுத் தகுதி பெறாத இரு பகுதி நேர தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் பணியில் ஈர்த்துக் கொள்ளப்படு வார்கள்.

(இ) முழுத் தகுதி வாய்ந்த ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரி யர்கள் தற்போதுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்குக் கொண்டுவரப்படுவார்கள்.

(ஈ) மீதமுள்ள முழுத் தகுதி பெறாத ஒரு பகுதி நேரத் தொழிற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இனிமேல் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தற்பொழுது, 324 விரிவுரை யாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அரசுக் கல்லூரிகளில் பணி புரி கிறார்கள். இவர்களில் 242 பேர் எம்ஃபில் மற்றும் பி.எச்டி கல்வித் தகுதிகளைக் கொண்டிருப்பதால் இவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு விதிகளின்படி 'எழுத்துத் தேர் விலிருந்து' விலக்களிக்கப்படுகின் றனர். எனினும், இவர்கள் ஆசிரியர் தேர்வாணைக் குழு மூலமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு காலியாகவுள்ள இடங்களில் பணியிலமர்த்தப்படுவர்.

மற்ற ஆசிரியர்கள் 'எழுத்தறிவுத் தேர்வு' எழுதி ஆசிரியர் தேர் வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப் படுவர்.

தொடக்கப் பள்ளிகளில் 1-லிருந்து 3-ஆம் வகுப்பு வரை கட்டாயமாகப் பாஸ் போடும் திட்டத்தை மாற்றித் தேர்வுகள் நடத்தப்படும்.

அரசுப் பள்ளிகளில் பணி யாற்றும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களில், தகுதி வாய்ந்தவர் களின் பணி விதிகளின்படி படிப் படியாகக் காலியிடங்கள் ஏற்படும் போது, அவற்றில் முழு நேர ஆசிரி யர்களாக நியமிக்கப்படுவர்.

நடப்பு ஆண்டில் உருவாக்கப் படும் புதிய ஆசிரியர் பணியிடங்கள் பல்வேறு தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப் படும்:-

(அ) ஆசிரியர் பணியிடம் தோற்று விக்கப்படாத, புதியதாகத் திறக்கப் பட்ட பள்ளிகளுக்கு மேலும் ஆசிரி யர்கள் நியமிக்கப்படுவார்கள்.

(ஆ) ஓர் ஆசிரியர் பள்ளி களுக்கு மேலும் ஓர் ஆசிரியர் பணி யிடம் தோற்றுவிக்கப்படும்.

(இ) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி, நகரியம் மற்றும் பயிற்சி நிறுவனப் பள்ளிகள் என்ற வரிசைக் கிரமத்தில் பணியிடங்கள் பகிர்ந் தளிக்கப்படும்.

★ பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய இலட்சியமாகிய சுயமரியா தையை மேலும் வளர்ப்பதில் ஒவ் வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப் பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர்வீரர் வகுப்பைச் சேர்ந்த வர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப் பற்று இல்லாமல் பற்றின்றி வாழ்வதைவிடச் சாவதே ஒரு வீர னுக்கு உகந்த வழியாகும்.

(ஈ) ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலப் பள்ளிகளைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட விதி முறைகள் தளர்த்தப்படும்.

எட்டாம் வகுப்பைப் படிப்படி யாக உயர்நிலைப் பள்ளிகளோடு இணைத்து எட்டாம் வகுப்புக்குக் கல்வியியல் பட்டம் (B.Ed.) படித்த ஆசிரியர்களைப் படிப்படியாக நிய மித்தல். இதனால் கல்வியின் தரம் உயர வாய்ப்புள்ளது.

கிராமப்புறங்களில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி களுக்குப் புதியதாகக் கட்டடம் கட்டப்படுவதோ அல்லது ஏற் கெனவே உள்ள கட்டடங்களைப் பராமரிப்பதோ ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும்.

கீழ்த்திசை நாடுகளில் உள்ள தைப்போல மாணவர்களிடையே நாட்டுப்பற்று (Patriotism) வளர்ப்ப தற்கு உண்டான பாடல்கள் அறி முகப்படுத்தப்படும்.

வனத்திடமிருந்து செ-கொள்ளை யாண்டு 1991-92-இல் 64 [illegible] கட்டடங்கள் கட்டுவதற்காக ரூபா_ 225 இலட்சம் கடன் பெற்று அரசு பங்குத் தொகையாக ரூ.75 இலட்சம் செலவழிக்கப்பட்டது. அதே போன்று நடப்பாண்டிலும் 64 பள்ளிக் கட்ட டங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

459 ஓராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும், 6,545 ஈராசிரியர் பள்ளிகளை 3 ஆசிரியர் பள்ளிகளாகவும் மாற்ற கரும் பலகைத் திட்டத்தின் கீழ் மைய அரசின் நிதி உதவியுடன் செயல் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் அதுவும் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த நிலையில், 15 வயதிற்கு மேற் பட்டோர், பள்ளி இறுதித் தேர்வுச் சான்றுக்குச் சமமானதொரு படிப் பைத் தொடரும் வாய்ப்பளிக்கும் வகையில், பள்ளிசாராக் கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட பள்ளி ஒன்று மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் நடத்திச் சான்றுகள் வழங்கப் பட்டு வந்தது; இது 1989-90 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மேற்கொண்டு பலர் பயன் பெற்றுத் தகுதியை உயர்த்திக்கொள்ள முடி யாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, அத்தகையோர் வசதிக்காக இப் பள்ளி மறுபடியும் வரும் கல்வி யாண்டு 1992-93-லிருந்து துவக்கப் படும்.

தனியார் துறையில் புதிதாகத் தொடங்கும் கல்வி நிறுவனங்கட்கு- பள்ளிகள், கல்லூரிகளுக்கு இனி மேல் நிதி உதவி கிடையாது.

அங்கீகாரம் மட்டும் அரசு நிபந் தனைகளுக்கு உட்பட்டு, துவக்கப் படும் பள்ளிகளுக்கும், கல்லூரி களுக்கும் தேவையான இடங்களில், தேவைகளைப் பொறுத்து வழங்கப் படும்.

இந்த நிலை, சிறுபான்மை, பெரும்பான்மை ஆகிய இரு பால ருக்கும் பொருந்தும்.

- மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் 1.4.92- 2.4.92 ஆகிய நாட்களில் அறிவித்த வற்றிலிருந்து.



கோயில்களும் பழந்தமிழர் பண்பாடும்

டாக்டர் சி. செல்வராஜ்,
வரலாற்றுத் துறை விரிவுரையாளர்
நே.நி. கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம்
கன்னியாகுமரி மாவட்டம்-629 165

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் ஓலை, களிமண் போன்ற பொருட்களால் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆனால், கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே, என்றும் அழியாத கல் கொண்டு கோயில் கட்டும் பழக்கத்தைத் தமிழகத்தில் பல்லவர்கள் அறிமுகப்படுத்தி, அதைச் சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள் போன்ற அரச வம்சத்தினர் விரிவுபடுத்திக் கையாண்டனர்.

இத்தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அவர்கள் படையெடுத்துச் சென்று வெற்றி கண்ட அண்டை நாடுகளிலும் கட்டடக் கலையின் நுணுக்கங்களுடன் கோயில் கட்டி இறைவனை வழிபட்டனர். இக்கோயில்கள் அக்காலத்தில் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல், அக்கால அரசியல், சமுதாய, பொருளாதார மற்றும் பண்பாட்டின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. ஆகவே, பழந்தமிழரின் பண்பாட்டில் கோயில்களின் பங்கைப் பற்றி ஆராய்வோம்.

அரசியல்

பழந்தமிழ் நாட்டில் கோயில்கள் அக்கால அரசியலின் தலைமைச் செயலகம் போல் செயல்பட்டன. கோயில்களில் அரசன் தங்கியிருக்கவும், அவன் அமைச்சு நடத்த அவையும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த அவையிலீ அரசன் அவ்வப்போது அமர்ந்து நாட்டு நிர்வாகங்களைக் கவனிப்பது வழக்கம். அக்கால அரசர்களுக்கு ஆலோசனை கூற ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. இக்குழுக்கள் கோயில் வராந்தாவில் கூடி நாட்டில் உள்ள பிரச்சினைகளை விவாதம் பண்ணி, தகுந்த ஆலோசனைகளை அரசனுக்கு வழங்கி வந்தன. இது மட்டுமல்லாமல் அரசில் பல்வேறு நடவடிக்கைகள், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு சலுகைகள் போன்றவைகளைக் கோவிலிலிருந்தே அரசன் அறிவித்தான்.

மேலும் அவ்வரசர்கள் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் கோயி[l] சுவர்களில் மக்களின் பார்வைக்கு வசதியாகச் செதுக்கி வைக்கப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளை பழந்தமிழ் அரசர்கள் கட்டி[ய] அனைத்துக் கோயில்களிலும் இன்று காணலாம்.

இராஜராஜ சோழன் கட்டி[ய] தஞ்சைப் பெரிய கோயில் சுவர்களில் அவ்வரசன் வெளியிட்டுள்ள அரசு ஆணைகள் செதுக்கி வை[க்கப்பட்டு] இருக்கும் பாங்கு, பார்ப்போரை[க்] களிப்புறச் செய்கிறது. மேலு[ம்] இக்கல்வெட்டுகளில் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மு[க்]கியமான நிகழ்ச்சிகள், வெளி நாட்டுப் படையெடுப்புகள், அவ[ற்]றின் வெற்றி தோல்விகள், போரின் முடிவில் கவரப்பட்ட செல்வங்கள், போரின் விளைவுகள் போன்றவ[ற்]றையும் பொறித்து வைத்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல், அரசனே அக்காலத்தில் தலைமை நீதிபதியாகவும், நீதி அரசனாகவும் செயல்பட்டான். கோவிலிலுள்ள அறையிலேயே நீதிமன்றம் அமைக்கப்பட்டு, ஆண்டவன் முன் குற்றவாளிகளை விசாரித்து, முறையான தண்டனைகள் வழங்கப்பட்டதாகப் பழந்தமிழ்க் கோயில் கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன. இவைகளைப் பார்க்கும்போது, அக்காலக் கோயில்கள் இறைவனை வழிபட மட்டும் பயன்படாமல் ஆட்சி செய்யும் அரசனின் தலைமைச் செயலகமாகவும், நீதி வழங்கும் நீதிமன்றமாகவும் செயல்பட்டன என்று நன்கு புலனாகிறது.

பொருளாதாரம்

பழந்தமிழர்களின் ஆட்சிக் காலத்தில் ஆலயங்கள் ஆட்சி செய்யும் அரசனின் துணைக் கருவூலமாகச் செயல்பட்டன. அக்காலத்தில் மக்கள் கோயிலுக்குத் தானங்கள் செய்வதைப் பெரும் பேறாகவும், தாங்கள் செய்த பாவத்திலிருந்து விடுதலை கிடைக்க உதவும் என்றும் வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினார்கள்.

ஆகவே, அவ்வப்போது அரசர்கள், அதிகாரிகள் மற்றும் பொது மக்களும் கோயில்களுக்குத் தானமாக ஏராளமான நிலங்கள் மற்றும் பொன், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களைத் தானமாக வழங்கினர். இவ்வாறு தானமளிக்கப்பட்ட நிலங்களைக் கோயில் நிர்வாகிகள் குத்தகைக்கு விடுவதால் கிடைக்கும் வருமானம் மற்றும் நன்கொடையால் கிடைக்கும் வருமானம் போன்றவைகளால், கோயில்கள் பெரும் செல்வத்துடன் காணப்பட்டன.

வெளி நாட்டுடன் போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது, தான் போரிட்ட நாட்டிலிருந்து ஏராளமான விலையுயர்ந்த பொருட்களைக் கவர்ந்து வருவதைப் பழந்தமிழர்கள் தம் மரபாகக் கடைபிடித்தனர். அப்பொருட்களைத் தமிழ் அரசர்கள் தாம் கட்டிய கோயில்களில் சேமித்து வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அப்படி கோயிலில் வைக்கும்போது, அப்பொருட்கள் எல்லாம் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. அவற்றின் பெயர், எடை போன்றவைகளைப் பட்டியல் போட்டு அரசன் தன் கையில் வைத்துக் கொண்டான்.

உதாரணமாக முதலாம் இராஜராஜ சோழன் தான் சேர, பாண்டிய, சாளுக்கிய நாட்டின் மீது போரிட்டு வெற்றியுடன் திரும்பும்போது கொண்டு வந்த பொருட்களை எல்லாம், தான் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவூலத்தில் வைத்துப் பாதுகாத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. கல்வெட்டின் கூற்றுப்படி ஏராளமான அளவு தங்கம், தங்க ஆபரணங்கள், தங்க மலர்கள், முத்து, பவளம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் உட்பட ஏராளமான பொருட்கள் கொடையளிக்கப்பட்டுள்ளன. இதைப்போல் முதலாம் இராஜேந்திர சோழன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது ஒருக்கட்டு தங்க மலர்களைக் கொண்டு வந்து தஞ்சைப் பெரிய கோயில்லுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான். இதே போல் இவ்வரசன் கடாரத்தின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியபோது, அங்கிருந்து கொள்ளையடித்துக் கொண்டு வந்த செல்வங்களைத்தான் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவன் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்துள்ளான்.

அவ்வாறே, தமிழ் அரசர்கள் தாங்கள் போரில் வெற்றியடைந்து தாய் நாடு திரும்பியதும், வெற்றிக்கு உதவிய இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் முறையாகத் தாம் கொண்டு வந்த பொருட்களைத் துலாபாரம் (தனது எடைக்கு நிகராகப் பொன் நிறுத்துக் கொடுத்தல்) செய்து கோயிலுக்குத் தானமாகச் செய்து கொடுத்தனர். இவ்வாறு செய்தால் தங்கள் எதிரி நாட்டில் போரிடும் போது கொல்லப்பட்ட ஏராள வீரர்கள் மற்றும் யானை, குதிரை போன்ற விலங்குகளிலிருந்தும் தனக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்கும் என்றும், வீடு பேறு அடைய உதவும் என்றும் நம்பினர்.

உதாரணமாக முதலாம் இராஜேந்திரன் வட நாட்டின் மீது படையெடுத்துத் திரும்பி வந்ததும், தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்தான் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் போல் பாண்டிய நாட்டிலும் அரசன் ஜடாவர்மன்



பொன்மொழிகள்

எப்போதும் தொண்டு செய்வதற்குத் தயாராக இரு. அதற்குரிய சந்தர்ப்பம் எதையும் தவற விட்டு விடாதே. சாதனை படைக்கச்சமயம் போதாது என்று குறை கூறாதே. எப்போதும் அடக்கமாகவும் எளிமையாகவும் இருக்கப் பழகிக் கொள்.

— சுவாமி சிவானந்தர்.

உண்மையே உள்ளத் தூய்மையை உண்டாக்கும். உள்ளத் தூய்மையே ஒழுக்கத்தின் உயிர்நாடி.

நல்ல நம்பிக்கையின்றி நல்ல அறிவு உண்டாகாது. நல்ல அறிவின்றி நல்ல ஒழுக்கம் உண்டாகாது.

— மகாவீரர்.

சுந்தர பாண்டியன் தான் ஹொய்சள நாட்டின் மீது படையெடுத்து வெற்றியுடன் திரும்பியதும் சிதம்பரம் மற்றும் ஸ்ரீரங்கம் சிவன் கோயிலுக்குத் துலாபாரம் செய்து கொடுத்ததாக அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் சோழ அரசர்கள் சில சமயங்களில் தாங்கள் இவ்வாறு கொண்டுவந்த செல்வத்தினால் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குத் தங்கத்தால் கூரை வேய்ந்தனர் என்று அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இவ்வாறு பழந்தமிழ் அரசர்கள் தாங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட செல்வத்தில் பெரும்பகுதி கோயிலுக்குப் பல வழிகளில் போய்ச் சேர்ந்ததால், அக்காலக் கோயில்கள் மிகவும் செல்வத்துடன் காணப்பட்டன. இச்செல்வம் நாட்டில் செல்வமாகவும் அரசனின் ஒரு துணைக் கருவூலமாகவும் செயல்பட்டன. அச்செல்வத்தைக் கொண்டு அரசன் பல சமுதாய, மற்றும் பண்பாட்டுப் பணிகளைச் செய்தான்.

மேலும் கோயில்களுக்கு அரசன் முதல் சாதாரண ஏழை வரை தானமாக நிலங்களும், பொன்னும், பொருளும் வாரி வழங்குவதால் அக்காலக் கோயில்கள் பெரும் செல்வச் செழிப்புடன் காணப்பட்டன. இந்தக் கோயில் நிலங்களைப் பராமரிக்கவும், விவசாயம் செய்யவும், கோயிலைச் சுத்தம் செய்யவும், கோவிலுக்கு வேண்டிய பொருட்களைப் படைக்கவும், மற்றும் பணிவிடைகள் செய்யவும் ஏராளமானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர் இவர்கள் காலை முதல் மாலை வரை கோயில் நிலத்தால் உழைத்து, கோயில் வருமானத்தில் ஊதியமும் பெற்றனர். ஆகையால் கோயில்கள் அக்காலத்தில் பலரை ஆண்டு முழுவதும் வேலையில் அமர்த்தும் அமைப்பாகவே செயல்பட்டது.

கல்வி

பழந்தமிழர்கள் கல்வியின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே பல கல்விக் கூடங்களை ஏற்படுத்திப் படிக்க வசதிகள் பல செய்து கொடுத்தனர். அவைகள் கட்டிகா, மதா, சாலை என்று அழைக்கப்பட்டு கோயில்களுடனே செயல்பட்டன. இவைகளை நிர்வகிக்க ஆகும் செலவு மற்றும் பராமரிப்பு எல்லாவற்றையும் கோயில்களே ஏற்றிருந்தன. இக்கல்லூரிகளில் வட மொழியில் பயிற்றுவிக்கப்பட்டு, மதம், விஞ்ஞானம், வானவியல், சோதிடயியல் போன்றவைகள் போதிக்கப்பட்டன.

உதாரணமாக - கும்பகோணம் இராஜேஸ்வரசுவாமி கோயிலில் பரகேசரிவர்மன் என்கிற அரசன் கி.பி.959-இல் கல்வி பயிற்றுவிக்கக் கல்விச் சாலை ஒன்றைக் கட்டி, கல்வி கற்பிக்க ஏற்பாடு பண்ணியதாக அக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது.

இதேபோல் எண்ணாயிரம் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயிலில் மிகப் பெரிய வேதக் கல்லூரியொன்றும் செயல்பட்டதாகச் சொல்லப்படுகிறது; இதைக் குறிக்கும் கல்வெட்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பராமரிப்புப் போன்ற விவரங்கள் யாவும் தெளிவாக உள்ளன.

அக்காலக் கோயில்களில் தொழில் கல்விக்கெனத் தனிப்பட்ட கல்லூரிகள் செயல்பட்டதாகக் காண்கிறோம். வீர இராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டு, அவ்வூர் சிவன் கோயிலில் மருத்துவக் கல்லூரி ஒன்று செயல்பட்டதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டின் கூற்றுப்படி அதில் சுமார் 340 மாணவர்கள் பயின்றதாகவும் அவர்களுக்கு நிதி உதவி, இலவச உணவு, உடை போன்றவைகள் அளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதுமட்டுமல்லாமல், இம்மாணவர்களின் சோதனைப் பயிற்சிக்கு வேண்டி ஒரு பெரிய மருத்துவமனை அக்கோயிலோடு இணைந்து செயல்பட்டதாகவும் இதற்குத் தேவையான மருத்துவ வசதிகள் இருந்ததாகவும் செவிலியர் மற்றும் உதவியாளர் போன்றவர்கள் அங்கே வேலை செய்ததாகவும் அவர்களின் மாதச் சம்பளம், சலுகைகள் போன்ற விவரங்கள் அனைத்தும் அக்கோயில் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

இவைகளைப் போன்று திருவொற்றியூர், திருத்தணி, திருவெறும்பூர் போன்ற ஊர்களில் அமைந்துள்ள கோயில்களிலும், கல்விச் சாலைகள் செயல்பட்டதாக அந்த ஊர் கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன.

கலை வளர்ச்சி

பழந்தமிழரின் கோயில்கள் கலையின் உறைவிடங்களாய்த் திகழ்ந்தன. இவர்கள் கட்டிய கோயில்கள் திராவிடர் கோயில் கட்டடக் கலையின் சின்னங்களாகத் திகழ்கின்றன. இக்கோயில்கள் கம்பீரமான தோற்றம், உயரமான கோபுரம், அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம், போன்ற பல பிரிவுகளைக் கொண்டது. கோயிலைச் சுற்றிலும் மதில் சுவர்கள் கட்டப்பட்டிருக்கும்.

முதலாம் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தென்னிந்தியக் கட்டடக் கலையின் சின்னமாய்த் திகழ்கிறது. மேலும் இக்கோயில்களின் சிற்பக் கலைகள் சிறந்து விளங்குகின்றன. வெண்கலம், செம்பு, வெள்ளி, கல், தங்கம் ஆகியவற்றில் சிற்பிகள் தங்களது திறனை வெளிப்படுத்தி மிகச் சிறந்த சிற்பங்களை அமைத்துள்ளனர். இச்சிற்பங்களில் இறைவனின் திருவுருவங்கள் பல்வேறு கோணங்களில் அழகுடனும் உயிரோட்டத்துடனும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோழர்கள் தம் கோயில்களின் கருவறைச் சுவர்களில், அழகான ஓவியங்கள் தீட்டி தங்கள் கலைத் திறனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஓவியங்கள் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றின் செய்தியைச் சித்திரிப்பவைகளாய் உள்ளன. தஞ்சை, திருமயம், மாமண்டூர், நார்த்தாமலை, சித்தன்ன வாசல், மலையப்பட்டி ஆகிய இடங்களில் உள்ள சோழர் ஓவியங்கள் என்றும் காண்பதற்கு வியப்பாக உள்ளன. இவைகளின் மூலம் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாடு, நடை, உடை, பாவனைகள், அணிகலன்கள், தலை அலங்காரம், சமயம், வாழ்க்கை முறை முதலியவற்றை அறிய முடிகிறது.

இசை

சோழ அரசர்கள் இசையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் முக்கியமான விழாக்கள் நடைபெறும் போது இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இசைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள் போன்ற பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்பட்டன. மேலும் இவற்றுடன் 23 வகைப் பண்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழர் கோயில்கள் இசையின் உறைவிடங்களாகத் திகழ்ந்தன. கோயில்களில் இசை வல்லுநர்கள் பரம்பரை பரம்பரையாகப் பணியில் அமர்த்தப்பட்டனர். அவர்கள் யாகங்கள் செய்யும் போதும், விழாக்களின் போதும் பல்வேறு இசைக் கருவிகளை இசைத்து விழாவினைச் சிறப்புறச் செய்தனர்.

> ★ மனத்தில் மாசு, மதவெறி,
> சாதி, சுயநலம், ஆணவம்
> இவற்றை மக்கள் விட்டொழிக்க
> வேண்டும்; அப்போதுதான்
> நம்நாடு முன்னேறும்!
> — அறிஞர் அண்ணா

கூத்து

தமிழகத்தில் சங்க காலம் முதலாகவே - அதாவது தொன்று தொட்டே இக்கலை சிறந்து விளங்குகிறது. சிலப்பதிகாரம் 11 வகைக் கூத்துக்களைக் கூறுகிறது. சோழர்கள் காலத்தில் தேவரடியார் என்னும் சிறப்புமிக்க பெண்கள் இறைவனுக்குத் தொண்டு செய்ய அர்ப்பணிக்கப்பட்டனர். இவர்கள் ஆடல், பாடல் மற்றும் ஏனைய கலைகளில் சிறந்து விளங்கினர். இவர்கள் கோயில்களில் தங்கியிருந்து அவ்வப்போது ஆடல், பாடல் போன்ற கலைகளைச் செய்து காட்டினர். சோழ அரசர்கள், குறிப்பாக முதலாம் இராஜராஜ சோழன் அரியணை ஏறியபோது இக்கலைக்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டது. அவன் தனது போர் வெற்றியின் சிறப்பினைப் பாராட்டும் வண்ணம், தஞ்சையில் பிரகதீஸ்வரர் கோயில் கட்டி சுமார் 400 தேவரடியார்களைக் கொண்டு வந்து சேர்த்து, அக்கலைக்குப் பெரிதும் மெருகூட்டினான்.

இதேபோல் திருவாரூர் தியாகராசர் கோயில், திருவானைக்கா கோயில் போன்றவைகளில் தேவரடியார்கள் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கி அக்கலையைச் சிறப்பித்தமையை அக்கோயில் கல்வெட்டுகள் கூறுகின்றன. பரவை நாச்சியார், நங்கை பரவை போன்ற தலைசிறந்த கலைஞர்கள் இக்கலையில் சிறந்து விளங்கியதாகச் சோழர் காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் காலையில் எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து, தரையைப் பெருக்கி, சாணியால் மெழுகி, பூக்களால் மாலை தொடுத்து, விளக்கேற்றி இறைவனை வணங்கினர். இக்கலை, சங்க காலத்தில் தமிழகத்தில் அறிமுகமாகி சோழர், பாண்டியர் காலத்தில் சிறப்புற்று, பின்னர் அண்டை நாடுகளிலும் பரவியது.

ஒருமைப்பாட்டின் சின்னம்

பழந்தமிழர்கள் கோயில்கள் நாட்டின் ஒருமைப்பாட்டின் சின்னமாய் விளங்கின. இக்கோயில்களில் அவ்வப்போது விழாக்களும், கூத்துகளும், ஆராதனைகளும் நடைபெறுவதாய் உள்ளது. இவைகளில் மக்கள் சாதி, மத, எல்லைகளைக் கடந்து பங்கேற்று இறைவனை வழிபடல் மட்டுமல்லாமல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் கண்டு ரசித்தனர். மக்கள் தாங்கள் வேறுபாடுகளை மறந்து, ஒரே இடத்தில் அவ்வப்போது கூடி ஆண்டவனை வழிபட்டதாலும் கலை நிகழ்ச்சிகளை ரசித்ததாலும் ஒருவகை சகோதர மனப்பான்மை வளரக் கோயில்கள் பெரிதும் உதவின.

மேற்கூறிய கருத்துக்களை ஆராயும் போது கோயில்கள் பழந்தமிழ் மக்களின் வாழ்வில் பெரும்பங்கு பெற்றிருந்தமை தெரிகிறது. இவைகள் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டின் உறைவிடமாகவும் பலதரப்பட்ட மக்களை அணைக்கும் ஒருவகைப் பாலமாகவும் செயல்பட்டன என்பது உண்மை.

தற்போது இக்கோயில்கள் பல தன் பழைய செல்வாக்கினை இழந்து, கலையிழந்து, ஆதரிப்பாரின்றிப் பொலிவிழந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் பாரம்பரியத்தையும், அதன் புனிதப் பண்பாட்டையும் பேணிக்காக்க என்னும் ஒவ்வொருவரும் இச்செல்வங்களை அழியாது பேணிக்காப்பது தலையாய கடமையாகும்.

தமிழகத்தில் மீனவர்

நல்வாழ்வுத் திட்டங்கள்

மீன் துறையின் குறிக்கோள்களில் ஒன்று மீனவர் சமுதாயத்தின் சமூகப் பொருளாதார முன்னேற்றமாகும். இதற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் மீன் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகின்றன.

- இலவச வீடுகள்
- மீனவர் குழுக் காப்புறுதி
- சேமிப்பு மற்றும் நிவாரணம்
- மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்
- சாலை வசதி
- சமூகக் கூடங்கள்
- புயல் பாதுகாப்பு இல்லங்கள்

இவை தவிர, மீனவர் மேம்பாட்டிற்காகவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- கட்டுமரம், வள்ளம், படகுகள் மற்றும் வலைகள் வாங்க மானியம் அளித்தல்
- வெளிப் பொருத்தும் மற்றும் உட்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் அளித்தல்.
- விசைப் படகுகளுக்கான டீசல் மீதான ஆயத் தீர்வையைக் குறைத்தல்.
- தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்.
- ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்
- மீனவர் பயிற்சி
- மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்.

இலவச வீடுகள்

சென்ற 15 ஆண்டுகளாகத் தமிழக அரசு இலவசமாக மீனவர்களுக்குச் சுமார் 180 கடலோர மீனவ கிராமங்களில் சுமார் 13,000 கான்கிரீட் வீடுகள் கட்டி வழங்கியுள்ளது. இன்னும் சுமார் 5,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது தமிழக அரசு இத்திட்டத்தினை விரைவாக்கி அதிக வீடுகளைக் கட்டி பெரும்பாலான மீனவக் குடும்பங்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகள் பெறுவதற்காக ஆண்டு ஒன்றுக்கு 3,000 வீடுகள் கட்ட ஒப்பளித்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் இலவச வீடு பெற விரும்பும் கடல் மீனவர்

- கூட்டுறவுச் சங்கங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தவிர,
- வீடு ஒன்றுக்கு சுமார் மூன்று செண்ட் பரப்பளவு மனையைத் துறையிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். இம்மனை கடற்கரையிலிருந்து 300/500 மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருக்க வேண்டும்.

குழுக் காப்புறுதி

இத்திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகவுள்ள சுமார் 1.67 இலட்சம் மீனவர்கள் இறப்பு மற்றும் விபத்துக்காகக் காப்பீடு செய்யப்படுகின்றனர். ஒவ்வொரு மீனவருக்கும் இதற்காக ஆண்டுத் தவணையாக ரூ.9 மத்திய, மாநில அரசுகளால் பகிர்ந்து செலுத்தப்படுகிறது. மீனவரிடமிருந்து எத்தொகையும் வசூலிக்கப்படுவதில்லை.

விபத்தினால் மீனவர் இறந்தால் அல்லது முழு ஊனமுற்றால் அவரது குடும்பத்திற்கு அல்லது அவருக்கு ரூ.21,000 காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது. விபத்தினால் பகுதி ஊனமுறும் மீனவருக்கு ரூ.10,500 நிவாரணமாக வழங்கப் படுகிறது.

இதுவரை 902 மீனவக் குடும்பங்கள் அல்லது மீனவர்களுக்கு ரூ.127 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

காப்புறுதி பெற நிபந்தனைகள்

1. மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
2. வயது 18-லிருந்து 65 வரை இருக்க வேண்டும்.

காப்புறுதி பெற அளிக்க வேண்டிய முக்கிய சான்றுகள்:

1. விபத்தில் இறந்த ஊனமுற்றவர் பெயர்.
2. கூட்டுறவுச் சங்கத்தினருக்கான சான்று.
3. வாரிசுதாரரின் பெயர் மற்றும் வாரிசுச் சான்று.
4. காவல்துறையின் முதல் தகவல் அறிக்கை.
5. பிரேதப் பரிசோதனைச் சான்று.

சேமிப்பு மற்றும் நிவாரணம்

மீன் பிடிப்பு மந்தமாகவுள்ள காலங்களில் அல்லலபடும் கடல் மீனவர் துயர்துடைக்க அரசு மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தில் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள மீனவர் ஒவ்வொரு வரும் மாதம் ரூ.10 வீதம் ஒன்பது மாதங்கள் செலுத்தி, இத்தொகைக்கு ரூ.180-ஐ அம்மீனவர் மாதம் ரூ.60 வீதம் மூன்று மாதங்களுக்கு அரசிடமிருந்து பெறலாம். இத்திட்டத்தினால் ஆண்டொன்றுக்குச் சுமார் 58,000 மீனவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

1991-92-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தில் மாற்றம் செய்து மீனவரிடமிருந்து மாதம், ரூ.45 வீதம் எட்டு மாதங்கள் வசூலித்து இத்தொகையுடன் மத்திய, மாநில அரசுகளால் ரூ.720 அளிக்கப்படுவதுடன் சேர்ந்து மொத்தத் தொகையான ரூ.1,080 மாதம் ரூ.270 வீதம் மீன் பிடிப்புக் காலமல்லாத நான்கு மாதங்களில் மீனவருக்கு வழங்க உத்தேசித்துள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலிவாக்குதல்

தமிழ்நாட்டில் தற்போது 645 பதிவுபெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 1,52,013 மீனவர்கள் உறுப்பினர்களாகவுள்ளனர். மீனவர்கள் தங்களின் மேம்பாட்டுக்கான வழிமுறைகளைக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பெற நல்ல வாய்ப்புள்ளது.

உறுப்பினர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் விநியோகம் செய்யவும், நியாயவிலைக் கடைகள் மூலம் பொது விநியோகம் மேற்கொள்ளவும், நீர்நிலைகளில் மீன்பிடி உரிமம் பெறவும், நிதி நிலைப் பற்றாக்குறையால் இடைத் தரகர்களின் பிடியில் சிக்கும் நிலையைப் போக்கவும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்திடமிருந்து அதிக நிதியுதவி பெறும் வகையில் கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக ஒரு வருடத்திற்கு ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு ரூ.25,000 அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சிறந்த 10 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஒரு இலட்சம் பங்கு மூலதன உதவி வழங்கப் படவுள்ளது.

சாலை வசதி

கடலோரப் பகுதியிலுள்ள மீனவர் கிராமங்களிலிருந்து மீன்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக இணைப்புச் சாலைகள் தேவைப் படுகின்றன. சுமார் ரூ.300 இலட்சம் செலவில் 113 இணைப்புச் சாலைகளுக்கு நிதி ஒப்பளித்து வழங்கப்பட்டதில், இதுவரை 110 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

புயல் அபாயமுள்ள மாவட்டங்களில், மீனவர்கள் பாதுகாப்பிற்காகக் கடற்கரையோரப் பகுதியில் 108 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

அரசின் மானிய உதவிகள்

இனம்	மீனவர் பங்கு விகிதம்	வங்கிக் கடன் விகிதம்	மான்ய விகிதம்	அதிக பட்ச மான்யம் (ரூபாய்)
கட்டுமரமும் வலையும்	20%	60%	20%	3,000
வலை	20%	60%	20%	500
விசைப்படகு	20%	60%	20%	1,00,000
18' பினைவுட் படகு	20%	60%	20%	20,000
வள்ளம்	20%	60%	20%	12,000
வெளிப்பொருத்தும் இயந்திரம்	—	50%	50%.	7,500

ஆயத்தீர்வையைக் குறைத்தல்

விசைப் படகுகளுக்குப் பயன்படுத்தப்படும் டீசல் எரி எண்ணெய் மீதான ஆயத் தீர்வைக் குறைத்திடும் திட்டத்தின்கீழ், செலவினத்தை 80:20 விகிதத்தில் மத்திய, மாநில அரசுகள் ஏற்றுள்ளன. 20 மீட்டர் நீளத்திற்குக் குறைவான மீன்பிடி விசைப்படகுகளுக்கு வாங்கப்படும் டீசல் விசைப்படகுகளுக்கு லிட்டர் ஒன்றுக்கு 35 காசு வரிகுறைப்பு செய்யப்படுகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மூலம் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

தேசிய நல்வாழ்வு நிதித் திட்டம்

மத்திய அரசிடமிருந்து 50 சதவிகித மானியம் பெற்று கடலோர மீனவக் கிராமங்களைத் தேர்ந் தெடுத்து, அங்குள்ள மீனவர்களுக்கு வீடுகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதி, கூட்டுறவு வளர்ச் சிக்காக ஆதார நிதி (சீட்டு மணி) போன்றவற்றை வழங்கக் கூடிய திட்டம் தொடர்ந்து இவ்வாண் டிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தமிழகத்தில் கீழ்க்கண்ட 10 மீனவக் கிரா மங்கள் மாதிரிக் கிராமங்களாக உருவாக்கப் படுகின்றன.

ஒப்பளிக்கப்பட்ட ஆண்டு	கிராமத்தின் பெயர்
1987-88	வள்ளவிளை இரட்சன்யபுரம் கீழ்த் தோட்டம் டி.வி.எஸ். பேட்டை தமினார் குப்பம்
1989-90	சாவடிக் குப்பம் கூனிமேடு கோபாலப்பட்டினம் காரங்காடு இரவிபுத்தன்துறை
1990-91	10 கிராமங்கள்

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாதவையாகும். ஆனால், இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

—விவேகானந்தர்

வாழ்க்கைத்தரம் உயர....

ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம்

மீனவர் வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களிடையே சிக்கனம், சேமிப்பு வழக்கத்தை ஏற்படுத்தவும், மீன் உற்பத்தி யைப் பெருக்கவும் விற்பனை முறையை ஒழுங்கு படுத்தி மீனவர்களின் பொருளாதார வசதிகளைப் பெருக்குவதற்கும் கடலோர மீனள ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மீன்பிடி சாதனங்கள் குளிர்ப்பதனப் பெட்டிகள், வெளிப்பொருத்தும் மற்றும் உள் பொருத்தும் இயந்திரங்கள், கண்ணாடி இழைப்படகுகள் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டம் ஆறு கடலோர மாவட்டங்களான செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., காயிதே மில்லத், தஞ்சை, இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 34 கிராமங்களிலுள்ள 27 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 4.6 இலட்சம் மீனவர் நலன் கருதி வரும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயலாக் கப்படும். இத்திட்ட மதிப்பீடு ரூ.10.72 கோடியாகும்.

மீனவர் பயிற்சி

விசைப்படகினை இயக்குவதற்கும், இயந்திரங்களைப் பராமரிப்பதற்கும் மற்றும் நவீன மீன்பிடி கருவிகளை இயக்குவதற்கும் மீனவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காகத் தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் மீனவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்துடன் மூன்று மீனவர் பயிற்சி நிலையங்களில், சிறு தரக்கும்மியர் பயிற்சியும் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 50-60 மாணவர் களுக்கு 10 மாதக் காலத்திற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மீனவ மகளிர் முன்னேற்றத் திட்டம்

தற்போது தமிழ்நாட்டில் 62 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இச்சங்கங்களின் மூலம் மீனவ மகளிருக்குக் கூடுதலான வருவாய் ஈட்டவும், கல்வி அறிவினை மேம்படுத்தவும் கீழ்க் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- மீனவ மகளிர் மீன் விற்பனை செய்வதற்குக் கடனுதவி பெற ஏற்பாடு செய்தல்.
- கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பயிற்சி அளித்தல், சுயவேலை வாய்ப்பு.
- மீனவ மகளிரே நியாயவிலைக் கடைகள் மூலம் தேவை யான பொருட்களை விற்பனை செய்தல்.
- மருத்துவ வசதி அளித்தல்.
- முதியோர் கல்வித் திட்டம்.
- குழந்தைகள் காப்பகம் பராமரித்தல்.
- மீனவ மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது.
- மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிக்க ஊக்கு வித்தல்.



உலக அதிசயங்கள்:

பிரமிட் கோபுரம்

பிரமிட் கோபுரம் பற்றி நீங்கள் பாடப் புத்தகங்களில் படித்திருப்பீர்கள்.

எகிப்து நாட்டில் இன்றும் காட்சி யளிக்கும் இந்தப் பிரமிட் உலக அதிசயங் களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இவை, அக்கால மன்னர் களின் உடல்களை அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகளாகும்.

பிரமிட் கோபுரத்தின் கீழ்த்தளம், சதுரமாக அல்லாமல், பலகோணங் களில் கட்டப்பட்டிருக்கும். மேல்பாகம், கோபுரம் போல் குறுகிக் காட்சியளிக்கும்.

இவற்றுள் கி.மு. 2700 ஆண்டு களுக்கு முன் கட்டப்பட்ட ஒரு பிரமிட், 481 அடி உயரம் கொண்டதாகும்.

சரித்திரம் படைப்போம்

ஆன்றோர் வாக்கு அருள்வாக்கு;
அதன்படி நடந்தால் நலம்சேர்க்கும்!
சான்றோர் வகுத்த வழியினிலே
சரித்திரம் படைப்போம் உலகினிலே!

உண்மை அன்பு ஒழுக்கமென
உயரிய பண்புகள் அனைத்திலுமே
கண்ணாய் இருந்து காத்திடுவோம்;
காசினி போற்ற வாழ்ந்திடுவோம்!

பரிவு பாசம் பந்தமுடன்
பழக நாளும் பழகிடுவோம்;
விரிந்து பரந்த மனதுடனே
விருட்ச மாகத் திகழ்ந்திடுவோம்!

விலங்கும் நாமும் ஒன்றாமோ?
வேறு பாடு வேண்டாமோ?
நிலைத்து நிற்கும் வழியினிலே
நெஞ்சை நிமிர்த்தி நடை பயில்வோம்!

—கவிஞர் அ. சுப்பையன்

விளையும் பயிர்:

சென்னை அண்ணாநகர் மேற்கு, எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி- இளநிலைக் கல்லூரியில், எல்.கே.ஜி. படிக்கும் மாணவன் ஏ. வினோத் கிஷோர்.

இம்மாணவன், நூற்றுப்பத்துத் திருக்குறளை எப்படிக் கேட்டாலும் சொல்கிறான். சின்னஞ்சிறு வய திலேயே ஆற்றல்மிக்க இந்த இளைஞ ருக்கு ஊக்கந் தந்தவர்கள் கல்லூரி முதல்வர் திரு. ஜே.டி. ஜான்சன், தமிழாசிரியர் திரு. சி. வெற்றி வேல், வகுப்பாசிரியை திருமதி ரோஸி கிரேசியஸ்.

வளமான வாழ்வுக்கு

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

விஜய்

உரங்கள்

VIJAY

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

தேசிய பொருளாதாரத்தின் மூலாதாரம், பொதுத்துறை... அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343

திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் புகழாரம்!

இந்தியத் திரைப்பட மறுமலர்ச்சிக்கு வித்திட்டு தான் வாழும் காலத்திலேயே ஒரு சகாப்தத்தை உருவாக்கிய பெருமை திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர் திரு. சத்யஜித்ரே அவர்களையே சாரும். தன்னுடைய 40 ஆண்டுக் காலத் திரைப்பட அனுபவத்தின் மூலம் இந்தியத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு இமாலயச் சாதனையைப் படைத்தவர் அவர்.

பழமையிலேயே ஊறிப்போயிருந்த இந்தியத் திரைப்படத் துறைக்குத் தனது புரட்சிகரமான திரைப்படங்களால் புத்துணர்வையும் புதிய எழுச்சியையும் கொடுத்து நம் நாட்டில் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களை வழங்கியவர். வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக் கூட, கலை நுட்பத்துடன் சித்திரித்துத் திரை உலகில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். திரைத்துறையைச் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, வெற்றியின் எல்லைகளைத் தொட்டு அவர் நிகழ்த்திய சாதனைகள் திரைப்பட உலகினர் என்றென்றும் கற்று உணர வேண்டிய கலைக் களஞ்சியம் ஆகும்.

தன்னுடைய முதல் படமான 'பதர் பாஞ்சாலி' (Pather Panchali) முதல், விரைவில் வெளியிடப் பட உள்ள 'அகன்டுக்' (Agantuk) படம் வரை பல்வேறு திரைக்காவியங்களை உருவாக்கி, தனது தனித்தன்மையை அனைத்திலும் பதித்துத் திரைத் துறைத் திறனாய்வாளர்களின் கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு வெற்றிவாகைகளைச் சூடிய விற்பன்னர் அவர். திரைப்படத் துறையில் அவர் புரிந்துள்ள மகத்தான சாதனைகளால் இன்று திரைப்படத் துறையின் வளர்ச்சியைத் திறனாய்வு செய்பவர்கள் 'சத்யஜித்ரேவிற்கு முன் - சத்யஜித்ரேவிற்குப் பின்' என்று இரு கால கட்டங்களாகப் பிரித்து ஆய்வு செய்யுமளவிற்கு அவர் உயர்ந்து விளங்குகிறார்.

திரையுலகில் நம்பிக்கையோடு நுழையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இவரது அனுபவம் ஓர் அகராதி. இந்திய நாட்டின் கலையுலகப் பெருமைகளை முதன் முதலாக உலக அளவில் அறிமுகப்படுத்திய பெருமையும், ... திரு. சத்யஜித்ரே அவர்களையே ... திரையுலக அனுபவத்தால் விரிந்து பரந்து ஆலமரமாய் வியாபித்துள்ள இவர் புதியவர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் நிழலாகவும், திரை உலகில் ஏற்கெனவே தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகிறார்.

திரு. சத்யஜித்ரே அவர்கள் திரைப்படத் துறைக்கு மட்டுமே சொந்தமானவர் அல்லர். தான் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் தலைசிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், தனக்கே உரித்தான முத்திரையையும் அவற்றில் அவர் பதித்தார். அவர் குழந்தைகளுக்காக எழுதிய வங்க மொழி நூல்கள், மேற்கு வங்கத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவை. அவர் ஓவியத்திலும், இசையிலும், சிற்பக் கலையிலும் தனது புகழ் முத்திரையைப் பதித்தவர்.

இவ்வாறு பல்வேறு சிறப்புகளைப் பெற்று பல்துறை விற்பன்னராகத் திகழும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. தற்போது American Academy of Motion Pictures, Arts and Sciences என்ற அமைப்பு, திரை உலகின் மிக உயர்ந்த அரிய விருதான OSCAR AWARD- ஐ திரைப்படத் துறையில் அவர் வாழ்நாள் முழுவதும் புரிந்த சாதனைகளுக்காக திரு. சத்யஜித்ரே அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருதினைப் பெறும் முதல் இந்தியரும் இவரே. இந்த விருது தொடங்கப்பட்ட நாள் முதல் கடந்த 80 ஆண்டுகால வரலாற்றில் உலகிலேயே இவரையும் சேர்த்து 6 சான்றோர்களுக்குத்தான் இந்த உயர்ந்த விருதினைப் பெறுகின்ற பெருமை கிடைத்து உள்ளது. அந்த வரிசையில் திரு. சத்யஜித்ரே அவர்கள் இடம் பெற்று நமது நாட்டின் பெயரையும் புகழையும் உலகளவில் உயர்த்தியுள்ளார். இந்த விருதினைப் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி, பெருமை அடைவது ஒவ்வொரு இந்தியரின் கடமை ஆகும்.

திரு. சத்யஜித்ரே அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய பெருமையினைப் பாராட்ட நமது மாமன்றமும் மகிழ்ச்சியோடு முன் வந்துள்ளது. அந்த வகையில் இம்மாமன்றத்தின் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், தற்போது உடல் நலம் குன்றி இருக்கும் அவர் விரைவில் பூரண குணமடைந்து - இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து மென்மேலும் பல பெருமைகள் பெற்று இந்தியத் திரை உலகிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் பல சிறப்புகளைச் சேர்க்க வேண்டுமென்று உளமார வாழ்த்துகிறது என்ற செய்தியினைப் பேரவையின் சார்பாக திரு. சத்யஜித்ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

வளரும் வேளாண்மை

டாக்டர் சோலையப்பன் ஜெயராஜ்
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்

நமது நாட்டில் பெரும்பாலான கிராம மக்கள் உழவுத் தொழிலை நம்பியே இருக்கின்றார்கள். வருகின்ற ஆண்டு களிலும் இந்நிலையே நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

அறிவியல் தொழில்நுட்பங்களை அடிப் படையாகக் கொண்ட, இலாபகரமான வணிக ரீதியிலான வேளாண்மையை நனவாக்கித் தந்த வேளாண்மை அறிவி யலார்க்கும், விரிவாக்கப் பணியாளர் களுக்கும், தொழில் முனைவதில் பேரார் வம் கொண்ட உழவர் பெருமக்களுக்கும் நாம் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம்.

உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வும், பண்ணை வருமானம் பெருகவும், நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகம் பல்வேறு ஆராய்ச்சிகளைச் செவ்வனே செய்து, பயனுள்ள தொழில் நுட்பங்களை முனைப்புடன் வழங்கி வரு கின்றது.

அண்மைக் காலத்தில், வணிக ரீதியில் வேளாண்மைச் சார்புத் தொழில்களை இலாபகரமாகவும், எளிதாகவும் நடத்து வதற்குப் பல்வேறு தொழில்நுட்பங்களை நமது பல்கலைக்கழகம் கண்டுபிடித்து, கிராம மக்களை - குறிப்பாக கிராம இளைஞர்களை ஊக்குவித்து வருகின்றது. இதன் மூலமாக, வேளாண்மைக்குத் தேவை யான அனைத்து இடுபொருள்களையும், தேவையான அளவு, கிராமங்களிலேயே உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இவ்வணிக ரீதி யிலான முன்னோடி வேளாண்மையே நாளைய வேளாண்மை வளர்ச்சிக்கு வித் திட்டு, கிராமங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

விதை உற்பத்தி

நல்விதையே விளைச்சலின் மூல காரணி. உயர் விளைச்சல் பயிர் இரகங் களைப் பற்றி அறிந்தவுடன், உழவர்கள் தேடும் முதல் இடுபொருள் 'விதை'. விதை உற்பத்தி செய்வது, விதைகளை அறிவியல் முறைகளினால் நன்கு பக்கு வப்படுத்துவது, விதை நேர்த்தி செய்வது - போன்றவை இலாபகரமான வேளாண் சார்புத் தொழில்களாகும். தரமான விதை உற்பத்தி செய்வது இலாபகரமான தொழில் மட்டுமல்ல - உழவர் பெரு மக்களுக்கு நாம் ஆற்றுகின்ற மிகச் சிறந்த பணியுமாகும்.

விதைகளைப் பக்குவப்படுத்தத் தேவை யான விதை தரம் பிரிக்கும் கருவி, விதை உலர்த்தி, விதை நேர்த்திக் கருவி, கடலை உடைக்கும் மற்றும் விதை தரம் பிரிக்கும் கருவி போன்றவைகளை, கிராமங்களில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் வாங்கி, பயிற்சிபெற்று, சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கலாம். மேலும், விதை உற்பத்தியின் போது கிடைக்கும் உபபொருள்கள் குறிப்பாக, தக்காளி விதை எடுக்கும்போது கிடைக்கும் சாற்றி னைக் கொண்டு, ஜாம், பழச்சாறு, போன்ற உணவுப் பொருள்கள் தயாரித்து, நல்ல இலாபமடையலாம்.

செடிகள் உற்பத்தி

பழச்செடிகள், காய்கறிச் செடிகள், மற்றும் நகர்ப்புறங்களில் வீடுகளில் அழகுக் காக வைக்கப்படும் பூச்செடிகள் முதலிய வற்றை, ஓட்டுக்கட்டுதல் மூலம் குறுகிய காலத்தில் அதிகமான மாஞ்செடிகளை உற்பத்தி செய்து, உயர்ந்த தரமான ஒட்டுமாங்கன்றுகளை உழவர்களுக்களித் துப் பயன்பெறலாம். திசு வளர்ச்சி முறை மூலம், வாழையில் ஒரு இளம் தண்டி லிருந்து இருபதுக்கும் மேற்பட்ட புதிய தர மான வாழைக்கன்றுகளை உற்பத்தி செய்யலாம். ஏலக்காய்ச் செடிகளையும் இம்முறையில் தயாரிக்கலாம்.

திசு வளர்ச்சி முறை மூலம் ஆர்க்கிட் எனப்படும் மிக அழகிய பூச்செடிகளை, இலைநுனி, வேர்நுனிகளிலிருந்து, குறைந்த காலத்தில் அதிக அளவில் வளர்க்க இய லும். இம்மாதிரியான பூச்செடி நாற்றுக் களை, கிராமங்களில் உற்பத்தி செய்து, நகரங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி, அதிக இலாபமடையலாம்.

பப்பெயின் தயாரித்தல்

பப்பாளி, பொதுவாக பழமாகவே விற்கப்படுகின்றது. நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள கோ.2 மற்றும் கோ.5 ரகங்கள் அதிகப் பப்பெயின் கொடுக்கக் கூடியவை. கோ.5 பப்பாளி ஒரு எக்டேருக்கு 1,500 கிலோ பப் பெயின் தரவல்லது. ஒரு கிலோ பப்பெயின் சுமார் நூறு ரூபாய்க்கு விற்கலாம். இதனால், ஒரு எக்டருக்கு, மூன்று ஆண்டுகளில் 1.50 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் வழி உள்ளது.

நுண்ணுயிர் உர உற்பத்தி

பயிர் வளர்ச்சிக்கு; முக்கியமாகத் தேவைப்படும் தழைச்சத்து , மணிச்சத்து போன்றவற்றை நாம் இரசாயன உரங் களாகவே இட்டு வருகின்றோம். இதனால் ஏற்படும் பணச் செலவைக் குறைக்கவும், மண்ணின் தரத்தைப் பாதுகாக்கவும் பல இயற்கை உரங்களை நமது வேளாண் மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது. இவற்றுள் அசோலா எனப் படும் ஒரு நீர்த்தாவரம், தண்ணீரிலேயே வளர்ந்து, தழைச்சத்து சேகரித்து, நெற் பயிருக்கு அளிக்கின்றது. நன்கு வளர்ந்த அசோலா 30 முதல் 40 கிலோ வரை தழைச்சத்தினைச் சேகரித்து அளிக்கும் திறனுடையது. இதுபோலவே, அசோஸ் பைரில்லம் மற்றும் ரைசோபியம் எனப் படும் நுண்ணுயிர்களும் காற்றிலுள்ள தழைச்சத்தினைச் சேகரித்து, பலவிதமான பயிர்களுக்குக் கொடுக்கும் திறன் பெற்றவை. இந்த இயற்கை உரங்களையும் தயாரித்து, வினியோகித்துப் பயன்பெறலாம்.

உணவுக் காளான் உற்பத்தி

நகரங்களில், காளான் ஒரு சிறந்த புரதச்சத்துள்ள உணவுப் பொருளாக இப்போது விற்கப்படுகின்றது. காளான் உற்பத்தி செய்தல் மற்றும் காளான் விதை உற்பத்தி செய்தல் மிகவும் எளியது. இதனைத் தயாரிக்க, வேளாண் கழிவுப் பொருள்களான வைக்கோல், கழிவுப் பஞ்சு, மக்காச்சோளக் கதிர், சக்கைத்தூள்

சட்டமன்றத்தில்...

உள்ளாட்சி அமைப்புகளில் சிறப்பாகப் பணி யாற்றுபவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றும் பணிகளை அதன் பொறுப்பிலே உள்ள வர்கள் ஆர்வத்தோடும், சிறப்பாகவும் செய்தல், மக்களிடையே ஏற்படும் இன வேறுபாடுகளைக் களைவது, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேவை யான நிலம், கட்டடங்கள் ஆகியவற்றை நன் கொடையாகப் பெறுவது போன்றவற்றில் ஆர்வம் காட்டுதல் ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள், ஊழியர்கள் ஒவ்வொரு மட்டத் திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

போன்றவையே போதுமானது. காளான் வளர்க்க அதிக இடவசதியும் தேவை யில்லை. காளான் வளர்த்தல், காளான் விதை தயாரிக்கும் முறை பற்றியும், நமது வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், ஒவ்வொரு மாதமும் 5-ஆம் தேதி பயிற்சி அளித்து வருகின்றோம். இப்பயிற்சிக்குக் கட்டணம் ஏதுமில்லை.

கம்போஸ்ட் உரம் தயாரித்தல்

தென்னை மரங்கள் அதிகமாக உள்ள கோவை, தஞ்சை, மதுரை போன்ற மாவட்டங்களில் தென்னை நார்த் தொழிற் சாலைகள் அதிகமாக உள்ளன. இவற்றில் இருந்து கழிவுப் பொருளாக வெளிவரும் தென்னை நார் மஞ்சு எளிதில் மக்கு வதில்லை. இதனை நாம் இத்தொழிற் சாலைக்கு அருகில் சாலை ஓரங்களில் மலைபோல் குவித்து வைத்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்தத் தென்னை நார் மஞ்சினை மக்க வைத்து உரமாக நெல், கடலை, போன்ற பயிர்களுக்கு இடும் முறை ஒன்றினை, நமது வேளாண்மைப் பல் கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. இதனை, தொழில் அளவில் பெருக்கி, உரமாக உழவர்களுக்கு அளித்துப் பயன் பெறலாம். இதனைத் தயாரிக்க, ஒரு டன் நார்க்கழிவிற்கு 5 கிலோ யூரியாவும், 5 புட்டிகள் புளுரோட்டஸ் உணவுக் காளான் வித்து மட்டுமே தேவை. இதனை இடுவதால் களர் நிலங்களைச் சீர்திருத்த முடியும். இதேபோல, கரும்புச் சோகைகளையும் கம்போஸ்ட் செய்ய முடியும்.

காய்கறி, பழங்களைப் பதனப்படுத்துதல்

வேளாண் விளைபொருள்கள் ஒரே சமயத்தில் அதிக அளவில் கிடைப்பதால் சரியான விலை கிடைப்பதில்லை. இதனைத் தவிர்க்க, எளிதில் அழுகிக் கெடக்கூடிய பொருட்களான பழங்கள், காய்கறி களைப் பக்குவப்படுத்தி, நீண்ட நாட்கள் கெடாமல் வைத்திருந்து, நல்ல விலைக்கு விற்று இலாபமடையலாம். பல்கலைக் கழக உணவு மற்றும் சத்துத்துறையில், மகளிருக்கென்றே பழச்சாறு தயாரித்தல், உலர்ந்த பழங்கள் தயாரித்தல், ஊறுகாய், கெச்செப், ஜாம், ஜெல்லி போன்ற வற்றைத் தயாரிப்பதில் பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இவைகளைத் தயாரிக்க அதிக விலையுள்ள கருவிகள் தேவை இல்லை. இது ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிக இலாபம் தரக்கூடிய சிறந்த வேளாண் சார்ந்த தொழிலாகும். வீட்டிலிருந்த படியே தயாரித்து, விற்று, இலாபம் அடையலாம்.

பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பதனப்படுத்துவதற்கென்றே பல்கலைக் கழகத்தில் பல கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. காய்கறி உலர்த்தி, விதையைப் பிரிக்கும் கருவி, பழங்களுக்கு மெழுகு தடவும் கருவி, பாட்டில்கள் அடைக்கும் கருவி போன்றவற்றைத் தயாரித்து விற்பனை செய்யலாம்.

வாசனைத் திரவியங்கள் தயாரிப்பது

தமிழ்நாடு பல வாசனைத் திரவியங்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயற்கைச் செடிகள் மற்றும் பூக்கள் உற்பத்தியில் சிறந்த இடம் வகிக்கின்றது. இதனால் நமது நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைக்கும். மல்லிகை மற்றும் முல்லைப் பூவிலிருந்து வாசனைச் சாந்து தயாரிக்கும் கருவி ஒன்று பல் கலைக்கழகத்தில் தயாரித்து வினியோகித் துள்ளோம். இக்கருவியினை, பூக்கள் அதிகமாக உற்பத்தியாகும் இடங்களில் நிறுவி, வாசனைச்சாந்து தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிக இலாபமடையலாம்.

பண்ணை இயந்திரங்கள் உற்பத்தி

பல புதிய வேளாண் கருவிகள், குறிப்பாக உழவுக் கருவிகள், விதைக்கும் கருவிகள், அறுவடை இயந்திரம், மானா வாரியில் களை எடுக்கும் கருவி, கதிரடிக் கும் கருவிகள், உலர்த்திகள், பூச்சி மருந்து தெளிப்பான்கள் போன்றவை கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும், தகுந்த பணி மனைகள் இல்லாமையும், அதிக அளவில் இவை உற்பத்தி செய்யாததாலும், இவை அதிகமாக உழவர்களிடையே பரவ வில்லை. உழவர்களுக்கு இக்கருவிகளின் பயன்களை எடுத்துக்காட்டி, உற்பத்தி செய்து, வினியோகிப்பதன் மூலமும் அதிக வேலைவாய்ப்புள்ளது.

பட்டுப்புழு வளர்ப்பு

பட்டு உற்பத்திக்கு இவ்வாண்டு நமது அரசு அதிக முக்கியத்துவம் அளித்து உள்ளது. பட்டு உற்பத்தி செய்யும் முறைகள், முசுக்கொட்டைச் செடி பயிர் செய்யும் முறைகளில் பல்கலைக்கழகத் தின் தொடர்ச்சியாகப் பல பயிற்சிகள் இளைஞர்களுக்கு அளித்து வருகின் றோம். மிகவும் குறைந்த நிலமும், குறைந்த தண்ணீர் வசதியும் உள்ள உழவர்களுக் குப் பட்டுப்புழு வளர்த்தல், மிகவும் சிறந்த, தொடர்ந்து வருமானம் தரக்கூடிய தொழிலாகும்.

தேனி வளர்ப்பு

கிராம மகளிர்களுக்கு வீட்டுத் தோட்டங் களில், எளிதில் பராமரித்து குடும்பத் திற்கு வருமானம் கொடுக்கக்கூடிய ஒரு உபதொழில் தேனீ வளர்ப்பாகும். தேன் கூடு தயாரித்தல், வளர்த்தல், தேன் சேகரித்தல், தேனீயைத் தாக்கும் பூச்சி களிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றில் பல பயிற்சிகள் அளித்து வருகின்றோம். இப்பயிற்சியில் கிராம இளைஞர்களும் பங்கு பெற்றுப் பயன்பெறலாம்.

தாவரமுறையில் பயிர்ப் பாதுகாப்பு

நாம் சாகுபடி செய்யும் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த, பூச்சி மற்றும் நோய்க் கொல்லி மருந்துகளையே இதுநாள்வரை உபயோகித்து வந்தோம். இப்பொழுது, தாவரப் பொருட்களைக் கொண்டே இவற்றினைக் கட்டுப்படுத்தும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வேப்பெண்ணை மற்றும் வேப்பங்கொட்டையில் பூச்சி எதிர்க்கும் திறன், பூச்சி உண்ணுவதைத் தவிர்க்கும் திறன், பூச்சி வளர்வதைக் கட்டுப்படுத்தும் திறன், முட்டையிடும் திறன் குறைத்தல் போன்ற பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. எனவே, வேப்ப மரத்தின் இலைத்தூள், எண் ணெய், பருப்புத்தூள் போன்றவை பூச்சி மற்றும் நோய்க்கட்டுப்பாட்டில் சிறப் பிடம் வகிக்கின்றன. எனவே, வேம்பி லிருந்து புதிய மருந்துகளை வேப்ப விதைச்சாறு, வேப்பெண்ணைய் எமலிசல் போன்றவற்றை வணிக ரீதியில் தயாரித்து, புதிய தொழில்களைத் தொடங்கப் பல வழிமுறைகள் உள்ளன.

உயிரியல் முறைப் பயிர்ப் பாதுகாப்பு

பயிர்ப் பாதுகாப்பு பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிப்பதால், பூச்சி களில் இம்மருந்திற்கு எதிர்ப்புத்திறன் உண்டாவதுடன், சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுகின்றது. இதனைத் தவிர்க்க, எளியமுறையில் புரமனியா வெட்டுப்புழு மற்றும் ஹீலியோதிஸ் பச்சைப் புழு வினைக் கட்டுப்படுத்த நமது பல்கலைக் கழகம் புதிய வழிமுறையினைக் கண்டு பிடித்துள்ளது. இம்முறை மூலம் வைரஸ் நச்சுயிரிகளைத் தயாரித்து, இப்புழுக் களை அழிக்கலாம். இந்நச்சுயிரிகளை வணிக அளவில் தயாரித்து விற்பனை செய்ய நல்ல வாய்ப்புகள் உள்ளன. கரும்புத் தண்டுப் புழுக்கள், பருத்திக் காய்ப் புழுக்கள், தென்னைக் கருத்தலைப் புழுக்கள் போன்றவற்றை அழிக்க ஒட்டுண்ணிகளையும், வெள்ளை ஈ, அசுவினி மற்றும் அந்துப் பூச்சிகளின் முட்டைகளை அழிக்க பொறிவண்டு ஊன் உண்ணிகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். அதேபோல, பல பயிர்களைத் தாக்கும் வேர் அழுகல் நோயைத் தடுக்கும் நன்மை செய்யும் பூசணத்தை உற்பத்தி செய்து விதை நேர்த்தி செய்யப் பயன்படுத்தலாம்.

வேளாண்மைக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தும் தொழில்கள்

வேளாண்மையில் நமக்குக் கிடைக்கும் கழிவுப் பொருள்களான வாழை மட்டை, பருத்திமார், கரும்புச்சக்கை, பப்பாளித் தண்டு போன்றவற்றை உபயோகித்து காகித அட்டைகள் எழுதும் பலகைகள், அலுவலக ஏடுகள், அஞ்சல் உறைகள் போன்றவற்றைத் தயாரிக்கலாம். இது போன்ற வேளாண் கழிவுப் பொருள் களிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ளது. இத் தொழிற்கூடத்தில், மாணவ மாணவியர் களுக்கு காகித அட்டைகள் தயாரிக்கும் முறைகள் பற்றிய பயிற்சியளித்துத் தாங்களாகத் தொழில் துவங்கத் தேவை யான தொழில்நுட்ப உதவிகள் வழங்கி வருகின்றோம்.

இவை போன்றே, நெல் உமியிலிருந்து சிமெண்ட் செய்யும் தொழில்நுட்பமும், தேங்காய் ஓடுகளிலிருந்து ஊட்டமேற்றிய கரி, நெல் வைக்கோலை உபயோகித்து சிமெண்ட் கூரைகள் தயாரிக்கும் முறை களையும் பல்கலைக்கழகம் கண்டுபிடித்து உள்ளது.

இவைபோன்ற வேளாண்மை சார்பு உடைய தொழில் முறைகளைக் கிராமங் களிலேயே நடத்தலாம். பண்ணை வருமானத்தைப் பெருக்கலாம். வீட்டி லுள்ள அனைவருக்கும் வேலைவாய்ப் பளிக்கலாம். இம்முறையில் அமையப் பெற்ற வணிக வேளாண்மையே வருங் கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ●

சட்ட மன்றத்தில்...

அழகு சென்னை - ரூ. 1,250 கோடித் திட்டம்

சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்காக ரூ.1,250 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அதன் முதல் கட்டமாக, சாலைகள், பாலங்கள், அடுக்கு மாடி வாகனம் நிறுத்தும் இடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெரு விளக் குகள், கால்நடைகளை அகற்றுதல் போன்ற பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் 24 மணி நேரத்துக்குள் குப்பை களை அகற்றும் ஏற்பாடு நடப்பு ஆண்டில் நடை முறைப்படுத்தப்படும். இதற்காகக் கூடுதல் ஊர் திகள் வாங்க நடப்பு ஆண்டில் தமிழ்நாடுநகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நிதிஉதவி பெற்று ரூ.8 கோடி செலவிடப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

தமிழ்நாட்டில் 'பாசுமதி' நெல்

பஞ்சாபில் உற்பத்தியாகும் பாசுமதி நெல் போன்ற வாசனை நெல் தமிழ்நாட்டிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது தஞ்சை மாவட்டம் ஆடுதுறை யிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிறுவனம் புதிதாகக் கண்டுபிடித்துள்ள இந்த வாசனை ரக நெல்லுக்கு மாண்புமிகு முதல்வரின் அனுமதியைப் பெற்று 'ஜெ.ஜெ' எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் சட்டப் பேரவை யில் அறிவித்தார் (7.4.1992).

கைத்தறிக் கிராமம்

நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் கிராமங் களை அரசு தத்தெடுத்து, மேம்பாட்டுத் திட்டங் களை நிறைவேற்றவிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத் தில் வளாகம் என்ற கிராமம் கைத்தறிக் கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ரூ.25 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

கைத்தறி நெசவாளர்களுக்கு வங்கி

கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக தனியே கூட்டுறவு வங்கி ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு அமைப்புகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட தனியாக மாநில மற்றும் வட்டார வங்கிகளை அமைக்க முடிவு செய்து, இதற்கான அனுமதியைப் பெற ரிசர்வ் வங்கிக்கு, கைத்தறித் துறையின் சார்பில் கடிதம் எழுதும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார் என மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

18-வது அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா

18-வது அகில இந்தியச் சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா, சென்னைத் தீவுத் திடலில் 9.4.1992 அன்று நடைபெற்றது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில், மேதகு ஆளுநர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றிப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திப் பேசுகையில், இவ்வாண்டு இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சிக்குச் சுமார் 15 இலட்சம் மக்கள் வருகை புரிந்திருப்பதாகவும், இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 4 இலட்சம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகையில், 'இவ்வாண்டு ஜனவரி மாதம் 6-ஆம் நாள், மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் பொருட்காட்சி மூலம் ரூபாய் ஒரு கோடி வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டு வருமானத்தை விட ரூ.10 இலட்சம் கூடுதலாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கியது எல்லாமே சிறப்படையும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். 1988 ஒரு ஆண்டைத் தவிர, 1974 முதல் தொடர்ந்து இந்தப் பொங்கல் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. (வறட்சியின் காரணமாக 1988-இல் பொருட்காட்சி நடத்தப்படவில்லை) இந்தப் பொருட்காட்சியில் பங்கு கொண்ட அனைத்துத் துறைகளும் தங்கள் முத்திரைகளைப் பதித்திருக்கின்றன' என்று கூறினார்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் நிறைவு விழாப் பேருரையாற்றுகையில், 'இந்த 18-வது அகில இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சி தமிழகத்தின் தொன்மையையும், பண்பாட்டையும், பொருளாதார வளர்ச்சியையும் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டு இருந்தது.

இங்கு அமைக்கப்பட்ட பொருட்காட்சி தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் வகையில் கேரளா, பாண்டிச்சேரி, மத்தியப் பிரதேசம், குஜராத், பீகார், இமாசலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மாநிலங்கள் உட்பட 35 மாநில அரசுத்துறை நிறுவனங்களும், 16 பிற மாநிலச் சுற்றுலாத் துறைகளும், மத்திய அரசுத் துறைகளும் பங்கேற்றுள்ளன.

'விசிட் இந்தியா' ஆண்டான 1991-இல் சென்னைக்கு வருகை புரிந்த அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1990-ஆம் ஆண்டைக் காட்டிலும் 13.19 சதவிகிதம் கூடுதல். இதைப்போல 1990-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1991-இல் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 15.05 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவில் 1991-இல் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டில் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது' என்று கூறினார்.

பின்னர், இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சியில் கலந்து கொண்ட சிறந்த அரங்குகளுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் பரிசுகள் வழங்கினார். சிறந்த மாநில அரசுத் துறைகளுக்கான முதல் பரிசு குடும்ப நல்வாழ்வுத் துறைக்கும், இரண்டாம் பரிசு கதர் வாரியத்துக்கும், மூன்றாம் பரிசு தொழில் துறைக்கும் வழங்கப்பட்டது. சிறந்த அரசுத் துறை நிறுவனங்களுக்கான 'முதல் பரிசு போக்குவரத்து நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசு சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகத்திற்கும், மூன்றாம் பரிசு சென்னை மாநகராட்சிக்கும் வழங்கப்பட்டது.

முன்னதாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப.சிவகாமி, இ.ஆ.ப. அவர்கள் அறிக்கை வாசித்தார். விழா முடிவில் சுற்றுலாத்துறை இயக்குநர் திரு.எஸ்.மச்சேந்திரநாதன், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.



கண் பாதுகாப்புக்குச் சில யோசனைகள்

கண்களில் ஏற்படும் காயம் பார்வையை மிகவும் பாதித்துவிடும். ஒரு சாதாரணமான காயம் கூட சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அது கண்களைப் பாதித்து பார்வையை இழக்கச் செய்யும்.

உடம்பில் காயம் ஏற்பட்டால் அது அந்தப் பாகத்தை மட்டும்தான் பாதிக்கும். மற்ற பகுதிகளைப் பாதிக்காது. ஆனால், கண்ணில் கருவிழியிலோ, உட்பகுதியிலோ ஏற்படும் தழும்பு, பார்வையை வெகுவாகப் பாதிக்கும். இந்தக் காயங்களை முழுமையாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும் இவை வெகுவாகத் தவிர்க்கக் கூடியவையே.

காரணங்கள்:

கண் பார்வையின்மை வெவ்வேறு காரணங்களினால் ஏற்படுகிறது. இதில் 5 முதல் 10 சதம் காயத்தால் வருகிறது. இது பெரும்பாலும் 10 வயதுக்கு உட்பட்டவர்களைத்தான் தாக்குகிறது. மருத்துவத் துறையின் வளர்ச்சியினால் இன்று குழந்தை பிறப்பின்போது வெவ்வேறு காரணங்களினால் ஏற்படும் கண் பார்வையின்மையை வெகுவாகத் தடுத்துவிடலாம். மிகவும் சாதாரணமாக ஏற்படும் காயங்களை இயற்கையே குணப்படுத்தி விடுகிறது. மிகவும் கூர்மையான பொருள்கள் காயங்களை ஏற்படுத்தி பார்வையைப் பாதிக்கின்றன.

இராமாயண, மகாபாரதத் தொலைக்காட்சித் தொடர்கள் பிரபலமானதால் குழந்தைகள் வில், அம்பு போன்ற பொருள்களால் விளையாடிக் கண் காயம் அடைவது அதிகரித்தது. அசுத்தமான துடைப்பத்தின் நுனியைக் கூராக்கி அம்பாக உபயோகிக்கிறவர்களைவிட அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்தப் பொருட்கள் மிகவும் நுண்ணிய கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை எடுத்துச் சென்று கண்ணில் சீழ் உண்டாக்குகின்றன. இதிலிருந்து மீள்வது கடினம்.

கூர்மையான பென்சில் நுனி (Graphite) கண்ணுக்குள் புகுந்தால் அது அங்கிருக்கும் திசுக்களைக் கொல்கிறது. சில சமயம் இது கருவிழிக்குள் ஊடுருவி லென்சைப் பாதித்து கண் புரை (Cataract) நோய்க்கு ஆளாக்குகிறது.

பட்டாசு எப்படி பாதிக்கும்?

பட்டாசு வெடிப்பதனால் வரும் காயங்கள் இரண்டு வகைப்படும். பட்டாசின் வெப்பத்தினால் ஏற்படுவது ஒன்று. இன்னொன்று, பட்டாசு வெடித்து அதில் வெளிப்படும் சிறு துகள்க்ள் கண்களைத் தாக்குவதால் ஏற்படுவது. சுண்ணாம்புத் தண்ணீர் கூடக் கண்களை மிகவும் பாதிக்கும். கடைகளில் சுண்ணாம்பு பாலித்தீன் பைகளில் விற்கப்படுகிறது. இதைக் கையில் வைத்து அழுத்தி விளையாடும்போது, அதில் உள்ள சுண்ணாம்பு கண்ணில் பட்டு எரிச்சலை ஏற்படுத்தும். இது முதலில் கண்ணின் ஓரத்தில் தங்கி பின்பு சிறிது சிறிதாகக் கண்ணின் உள்பாகத்திற்குச் சென்று பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீயக்காய்கூட இதே போல் கண்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இம்மாதிரி கண்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களைக் கவனமாக உபயோகிக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தகுந்த அறிவுரை கூறினால் அவர்களுக்குக் கண்களைப் பாதுகாத்து கொள்ளும் பக்குவம் வரும். அவர்களைக் கூர்மையான குச்சி, கம்பி போன்றவைகளுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது. பென்சில், காம்பஸ், பட்டாசு ஆகியவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும். சீயக்காயோ, சுண்ணாம்போ கண்ணில் விழுந்தால் உடனே கண்ணை சுத்தமான தண்ணீரினால் கழுவி விட வேண்டும். கண்ணில் காயம் பட்டவுடன் உடனே கண் மருத்துவ நிபுணரைப் பார்ப்பது மிகவும் அவசியம். குழந்தைகளை வெறும் வயிற்றோடு கண் சிகிச்சை நிபுணரிடம் கூட்டி வந்தால் உடனே மயக்க மருந்து கொடுத்து முழுமையாகப் பரிசோதிக்கலாம். கண்களைக் கழுவி நுண்ணுயிர்களை நீக்கும் சிகிச்சையே சிறந்தது.

கண்ணாடி இல்லாமல் 'வெல்டிங்' வேண்டாம்

தொழிற்சாலை விபத்துகளினால் சில சமயம் கண் பார்வை பாதிக்கப்படுகிறது. பெரும்பாலும் கண்களைப் பாதுகாக்கும் முறைகளைத் தகுந்தபடி அனுசரிக்காததே இதற்குக் காரணம். இரும்புப் பொருட்களை வெட்டும் வேலை செய்பவர்கள் அவசியம் பாதுகாப்புக் கண்ணாடி அணிய வேண்டும். இல்லையென்றால் இரும்புத் துகள்கள் கண்ணில் விழுந்து மிகுந்த துன்பத்தை விளைவிக்கும். வெல்டிங் வேலை செய்பவர்கள் கண்ணாடி அணியாமல் வேலை செய்தால் பணி செய்து முடித்து சுமார் நான்கு மணி நேரம் கழித்து கடும் கண் வலியுடனும் எரிச்சலுடனும் அவதிப்படுவார்கள்.

பறந்து வந்து காயத்தை விளைவிக்கும் கூர்மையான பொருள்கள் கண்களைப் பெரிதும் பாதிக்கும். உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தால்தான் பார்வையைக் காப்பாற்ற இயலும். அமிலங்கள், விஷவாயுக்கள் கண்களைத் தாக்கி காயம் உண்டாக்கலாம். அப்போது முதலுதவியாக உடனடியாகக் கண்களைச் சுத்தமான தண்ணீரினால் குறைந்தது 30 நிமிஷங்கள் கழுவவேண்டும். சாலை விபத்துகளில் கண்ணாடித் துண்டுகள் சில சமயம் கண்களுக்குள் ஊடுருவிவிடும்.

சட்டமன்றத்தில்...

திருச்சி, சேலம், நெல்லை-மாநகராட்சிகள் ஆகின்றன

திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படுகின்றன.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகளாக இணைந்து திருநெல்வேலி மாநகராட்சி இந்த ஆண்டில் அமைக்கப்படும். சேலம், திருச்சி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்த நகராட்சிகள் விரைவில் மாநகராட்சிகளாக உயர்த்தப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

முதல்வர் பெயரில் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரி நகர்கள்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

சாதி, சமயமற்ற சமுதாயத்தினை அமைத்து, அனைத்து சமுதாயத்தினரும் சுமுக உறவோடு வாழ வழிவகுக்கும் 'புரட்சித் தலைவி நகர்' என்ற புதுமை நிறைந்த மாதிரி நகர் ஒன்று தருமபுரி மாவட்டம் பர்கூரில் உருவாக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுகாதார நல மையம், நூலகம், கரிம வாயுக்கலன், பள்ளிக் கூடங்கள், வணிக வளாக மையம், பூங்கா வசதி, இஸ்லாமியர், கிருத்துவர் ஆகியோருக்கான கோயில்கள் உள்ளிட்ட வசதிகள் ரூ.3 கோடி செலவில் அங்கு அமைக்கப்படுகின்றன.

உயர் நோக்கம் கொண்டு உருவாக்கப்படும் இந்த நகரைப் போன்றே தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்ற பெயரில் மாதிரி நகர்களை இந்த ஆண்டு அரசு உருவாக்கும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

தமிழக நகரங்களில் திருமண மண்டபங்கள்

தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயரில் திருமண மண்டபங்கள் கட்டப்படும்.

விளையாட்டு அரங்கங்கள் இல்லாத நகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டு அவற்றிற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் வைக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளான, பிப்ரவரி 24-ஆம் நாளன்று கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ளாட்சித்துறை சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கங்களும் முதலமைச்சர் பெயரில் விருதுகளும் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

முதல்வர் பெயரில் மருத்துவ, பொறியியல் கல்லூரிகள்

உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் துவங்கப்படும். இக்கல்லூரிகளில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்களின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (6.4.1992).

கிராமப்புறங்களில் வயல்களில் வேலை செய்யும்பொழுது கண்ணில் ஏற்படும் காயங்களில் பெரும்பாலும் காளான் ஊடுருவி பெரும் கேடு விளைவிக்கிறது. இதற்கு உடனே சிகிச்சை அளிக்காவிட்டால் கண் பார்வையை முற்றிலும் இழந்துவிட நேரிடும். களிமண், சேறு ஆகியவை படுவதாலும் கண் ரணமாகி விடுகிறது. கிராம மக்கள் பெரும்பாலும் தங்கள் அறியாமையால் பச்சிலை மருந்து, கோழி ரத்தம் ஆகியவற்றைக் கண்களில் விட்டு, கண் மிகவும் பழுதடைந்த பிறகே கண் மருத்துவத்திற்கு வருகிறார்கள்.

காயமடைந்த கண்களுக்குச் சிகிச்சையளிப்பதை மூன்று கட்டமாகப் பிரிக்கலாம். முதலில் அவசர முதல் உதவி அளிப்பது. இரண்டாவது அருகில் உள்ள சிறு மரு துவமனையை அணுகி வைத்திய பெறுவது. மூன்றாம் கட்ட பெரிய கண் மருத்துவம் மற்று ஆராய்ச்சி நிலையத்தில் சிகிச்சை பெறுவது. இவை எல்லாவற்றையு விட, கண்களைக் காயம் படாம பாதுகாப்பதே மிகச் சிறந்ததாகும்.

டாக்டர் கே. ஆனந்தக்கண்ண

—நன்றி 'தினமணி

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குவதே எங்களுடைய அரசின் நோக்கம்!

பயன்படுத்துவதற்கு ஏற்ற முறையில், இப்போதுள்ள கிரானைட் கொள்கையை மாற்றுவது குறித்து, தீவிரமாக அரசு பரிசீலனை செய்தது. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கொள்கை முடிவுகளை அறிவிக்கின்றேன்.

1. இனிமேல், அரசு புறம்போக்கு நிலங்களில், உறுதிக் கடிதம் வழங்கப்பட்டவர்கள் தவிர, மற்ற நபர்களுக்குக் கிரானைட் குத்தகை வழங்கப்படமாட்டாது; புது குத்தகைகள் இனிமேல், அரசுக்குச் சொந்தமான டாமின் நிறுவனம், மற்றும் அதன் கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

2. இனிமேல், பட்டா நிலங்களில் கிடைக்கும் விலை மதிப்புள்ள (Paradiso, Kashmir White) போன்ற சில குறிப்பிட்ட கிரானைட் கற்களை வெட்டியெடுப்பதற்கு வழங்கும் குத்தகையில் அரசு நிறுவனங்கள் அல்லது கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. பட்டா நிலங்களில் கிரானைட் வெட்டியெடுக்க அனுமதி பெறும் குத்தகைதாரர், தொழில் திட்டம் வைத்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

4. பட்டா நிலமோ, அரசு புறம்போக்கு நிலமோ, எத்தகைய நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கிரானைட் ஆனாலும், இனிமேல் கிரானைட் தொடர்பான அனைத்து வர்த்தகமும், அரசுக்குச் சொந்தமான 'TAMIN' நிறுவனம் மூலமாகத்தான் நடத்தப்படும். கிரானைட் வணிகமானது, பாதிக்கப்படாமலும், அதே நேரத்தில், இவ்வணிகம் பெருகுவதற்கு வகை செய்யும் நோக்கத்துடனும், வேண்டிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டு, விரைவில் அறிவிக்கப்படும்.

அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து கிரானைட் கற்களை வெட்டியெடுக்கவும், வெட்டியெடுக்கப்பட்ட கற்களை செய்முறைப்படுத்தவும், பல புது நிறுவனங்கள் கூட்டுத்துறையில் அமைக்கப்படுவதை அரசு வரவேற்கும்.

பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வட்டங்கள்

தமிழகத்தில் ஏற்கெனவே 31 வட்டங்கள் மிகவும் பின்தங்கிய வட்டங்களாகவும், 76 வட்டங்கள் பின்தங்கிய வட்டங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பட்டியலில், கோவை மாவட்டத்தில் அவினாசி, காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர், சேலம் மாவட்டம் ராசிபுரம், புதுக்கோட்டை வட்டம், சிதம்பரனார் மாவட்டம் சாத்தான்குளம், மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை ஆகிய வட்டங்கள், பின்தங்கிய வட்டங்களின் பட்டியலில், இந்த ஆண்டு முதல் சேர்க்கப்படுகின்றன என்று அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த வட்டங்களும் அரசின் சலுகைகளை இனிப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் புதிய தொழிற்கூடங்கள்

கோவை மாவட்டம் திருப்பூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்காகத் தனியார் தொழில் முனைவர்களால் வாங்கப்பட்ட நிலத்தில், தொழிற்பேட்டை அமைப்பதற்கான அடிப்படை வசதிகளைத் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செய்துள்ளது. அத்தொழிற்பேட்டையில் தனியார் துறையில், பின்னல் ஆடை ஏற்றுமதி மின் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு, அவைகள் செயல்பட்டு வருகின்றன.

இதேபோன்று இந்த ஆண்டு, இன்னும் 3 இடங்களில் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவி கொண்டு, தனியார் தொழிற்பேட்டைகள் நிறுவப்படும். மதுரை மாவட்டம் வேடத்தகுளம், மற்றும் வல்லகுண்டு கிராமங்களில், பின்னலாடை தொழிற்பேட்டையும், பெரியார் மாவட்டத்தில் வடமுகம், காங்கேயம் பாளையம் கிராமத்தில் பல்தொழிற்பேட்டையும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் ஆட்டோ உதிரிப்பாகங்கள் தயாரிப்புத் தொழிற்பேட்டை ஒன்றும், தனியார் துறையில் நிறுவப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் உற்பத்திப் பெருக்கம்

கூட்டுத் துறையில் ஜெயங்கொண்டபுரத்தில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுத்து, அதன் மூலம் மின் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், பிள்ளைப்பெருமாநல்லூரில், காவேரிப் படுகையில் கிடைக்கும் நிலவாயுவைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப் பட்டது. மத்திய அரசு முதலில் மின் உற்பத்திக்காக, நாளொன்றுக்கு 2 மில்லியன் கன மீட்டர் அளவு நில வாயுவை, மின் உற்பத்திக்காக நம் மாநிலத்திற்கு அளிப்பதாகக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து இருந்தது. ஆனால், தற்போது, 0.25 மில்லியன் கன மீட்டர் நில வாயுவை மட்டுமே கொடுக்க முடியும் என்று கூறியுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, கூட்டுத் துறையில் பிள்ளைப் பெருமாநல்லூரில், PY-1 என்ற கடற்பகுதியில் சோதனைகள் மேற்கொண்டு, நிலவாயுவை எடுப்பதற்கும், அதனைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கும், ஒருங்கிணைந்த முறையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அயல்நாட்டு இந்தியர் மற்றும்
வெளிநாட்டு முதலீடு

அயல்நாடு வாழ் இந்தியர்கள், மற்றும் ஏனைய அயல் நாட்டினர்களின் முதலீடு, தமிழகத்தில் பெருகுவதற்குத் தீவிர் முதலீடு ஊக்குவிப்பு இயக்கம் (Investment Campaign) மேற்கொள்ளப் படும். அரசுத்துறை அலுவலர்களும், தொழில் அதிபர்களும் அடங்கிய சிறப்புக் குழுவினை, அயல் நாடுகளுக்கு அனுப்பி, நமது மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கருத்தரங்கு, வீடியோ படக்காட்சி ஆகியவைகள் மூலம் விளக்கிக் கூறி, அயல்நாடுகளில் வாழும் இந்தியர்கள், தம் மாநிலத்தில் முதலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க
எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை, தொழிலாளர்களின் நலன் கருதி மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை, இந்த அரசு எடுத்து வருகின்றது என்பதை, இந்த மாமன்றம் அறியும்.

சென்னையில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் தற்போது திறக்கப்பட்டு, இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று, பின்னி மில்லைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, அதாவது 13.4.1992 அன்று திறப்பதற்கான நடவடிக்கைகளை, அரசு எடுத்துள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நான் நேரடியாக 4.2.1992 அன்று பின்னி மில் தொழிற் சங்கத்துடனும், அரசியல் கட்சித் தலைவர்களுடனும், பின்னி மில் நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி, தொழிலாளர் நல ஆணையாளர், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு முத்தரப்புக் குழுவினை அமைத்து, ஆலையைத் திறப்பதற்குச்

• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என்பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

- சுவாமி விவேகானந்தர்

சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி அறிவுரைகள் வழங்கினேன். இவ்வாலையின் பதப்படுத்தும் நிலையத்தைப் புவனகிரிக்கு மாற்றுவதைத் தவிர்க்க முடியாது என்று எடுக்கப்பட்ட முடிவைத் தொழிற்சங்கமும் ஏற்றுக்கொண்டது. இதனால் புவனகிரிக்குச் சென்று பணி செய்ய விரும்பாதவர்களை, வேலையிலிருந்து நீக்கக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் மேம்பாட்டு வங்கியின் மூலம், நிதி உதவி பெறவும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாலையில் பணியாற்றிய எல்லாத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகம், இவ்வாலையைத் திறக்கும் நாளன்று, ஒரு மாத ஊதியத்தைக் கருணைக் கொடையாக வழங்கவும் ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது. எனவே, தொழிற்சங்கம், நிர்வாகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன், இவ்வாலை 13.4.1992 அன்று திறக்கப்படும்.

மால்கோ (Malco)

மேட்டூர் மால்கோ நிறுவனம் தற்போது மூடப் பட்டுள்ளது. இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. தொழிற்சங்கங்கள் இந்த ஆலையைத் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன. அதன் தொர்டர்பாக அலுவலர்களுடனும், நிர்வாகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, ஏறத்தாழ ரூ.25 கோடி மின்சாரக் கட்டணத்தை, பாக்கித் தொகையாக வைத்துள்ளது. அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை 'அலுமினியம் ரெகுலேசன் நிதி'-யிலிருந்து கட்டவும், மீதமுள்ள தொகையைத் தவணை முறையில் செலுத்துவதற்கும், நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இந்த நிறுவன்த்திற்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ஒரு ரூபாய் வீதம் நான்கு ஆண்டுகளுக்கு சலுகைக் கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவும், நான்கு ஆண்டுச் சலுகைக் காலம் முடிந்ததும், அப்போதைய கட்டண விகிதத்தின்படி மின் கட்டணம் செலுத்த வேண்டுமென்றும் அரசு அனுமதி வழங்கி உள்ளது.

தற்போது MALCO நிறுவனம் உயர்ந்தபட்ச 'மின் சுமை'யின் (Maximum Demand) அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட, குறைந்தபட்ச மின் கட்டணம் செலுத்தி வருகிறது. அதை மாற்றி, 1.4.1991 முதல், எவ்வளவு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு மட்டும் மின் கட்டணம்

செலுத்த, இந்த அரசு சலுகை அளித்துள்ளது. மேலும், 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைக்கும் சலுகையையும் அளிக்க, அரசு முன் வந்துள்ளது. இந்தச் சலுகைகள் அனைத்தும், தொழிலாளர்களின் நலன் கருதியே, அரசு இந்த நிறுவனத்திற்கு அளிக்க முன் வந்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி, மால்கோ நிறுவனம் அலுமினியத் தொழிற்சாலையை மூன்று மாத காலத்திற்குள் மீண்டும் திறந்து, அனைத்துத் தொழிலாளர்களுக்கும், முழுமையாகப் பணியினை அளிக்கும் நிலைமை உருவாகும், என்று நம்புகிறேன்.

தொழில் - நிதி புனரமைப்புக் குழுமம்

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழுமத்தினால் (Board of Industrial Finance and Reconstruction) புனரமைப்புச் செய்யப்படும் நலிவுற்ற நிறுவனங்களுக்குத் தற்பொழுது 3 ஆண்டுகளுக்கு விற்பனை வரி ஒத்தி வைத்துச்செலுத்தும் சலுகை, வழங்கப் பட்டு வருகிறது. இனிமேல் தகுதி வாய்ந்த நலிவுற்ற நிறவனங்களுக்கு, விற்பனை வரி ஒத்தி வைத்து செலுத்தும் சலுகை ஐந்து ஆண்டுகள் வரை வழங்கப்படும்.

அரசு முதலீட்டைத் திரும்பப் பெறுதல்
(Policy of Disinvestment)

நேரடி உற்பத்தியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு, தனியார் துறைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், ஊக்கச் சலுகைகளை அறிவிப்பதிலும், அரசு கவனத்தைச் செலுத்தும் என ஏற்கெனவே இந்த அரசு அறிவித்துள்ளது.

இந்த அடிப்படையில் 9 கூட்டுத்துறை நிறுவனங்களில், தொழில் வளர்ச்சிக் கழகம் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, (Disinvestment) முடிவெடுத்துள்ளோம். மேலும் நான்கு கூட்டுத் துறை நிறுவனங்களில், செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெறும் நடவடிக்கை, முடிவடையும் தறுவாயில் உள்ளது. பொதுத் துறை நிறுவனங்களில் செய்துள்ள முதலீட்டைத் திரும்பப் பெற, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப் படும். முதல் கட்டமாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வெடி மருந்துக் கழகம் ஆகிய நிறுவனங்களைக், கூட்டுத் துறைக்கு மாற்றவும், பின் இந் நிறுவனங்களின் பங்கு மூலதனத்தில், அரசின் முதலீட்டைச் சிறிது சிறி

அயல்நாடு வாழ் இந்தியர்கள்
தமிழ்நாட்டில் தொழில் தொடங்க -
தொழில் முதலீடு செய்ய வசதி!

தீப்பெட்டித் தொழில்

முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளைத் தவிர, நம் நாட்டில உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் முழுமையும், தமிழகத்தில் உள்ள சிறு தொழில், மற்றும் மிகச் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்கண்ட மூன்று வகைத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, தனித்தனியாக விதிக்கப்பட்டுள்ள இன்றைய ஆயத்தீர்வை முறை, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டி தொழிற்சாலைகளைப் பாதிக்கிறது.

தீப்பெட்டி, ஒவ்வொருவர் வீட்டிலும் உபயோகப்படுத்தப்படும் பொருளாக உள்ளது. இத்தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே, சிறு மற்றும் மிகச் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு, ஆயத்தீர்வையிலிருந்து முழு விலக்களிக்க, மத்திய அரசை நாட இருக்கிறேன். இச்சலுகையால் சிறு தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலைகளுடன் போட்டியிட்டுத் தங்களுடைய பொருட்களை விற்பனை செய்யும் வாய்ப்பினைப் பெறும்.

தாகத் திரும்பப் பெறுவது எனவும் உத்தேசித்துள்ளோம். சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், தமிழ்நாடு உப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மெக்னீசியம் மற்றும் மரைன் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களைத், தனியார் துறைக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

புது நிறுவனங்கள்

இந்தியத் தொழில் கடன் மற்றும் தொழில் முதலீட்டுக் கழகத்தின் (Industrial Credit and Investment Corporation of India) ஆதரவுடன், சென்னையில் ஒரு நிர்வாகப் பயிற்சி நிலையம் (Institute of Management) அமைக்கவும், வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளுடன், ஏற்றுமதி ஊக்குவிப்பு நகர் ஒன்றை (Export City) கிழக்குக் கடற்கரையில் (East Coast) உருவாக்கவும், அரசு நடவடிக்கை எடுக்கும்.

மோட்டார் வாகனத் தொழிற்சாலை

இந்தியாவில் முன்னணியில் உள்ள அசோக் லேலண்டு நிறுவனம், சுமார் ரூ.550 கோடி முதலீட்டில், ஒசூரில் மோட்டார் வாகனங்கள்

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் மாற்றியமைக்கப்பட்டது.

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்

துணைத்தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்

அதிகாரிகள் அல்லாத உறுப்பினர்கள்

1. திரு. கே. மாயாண்டி, திருச்சி மாவட்ட வர்த்தகச் சபைத் தலைவர்.
2. திரு. ஆர். ஜெகதீசன், கோவை மாவட்டச் சிறுதொழில்கள் சங்கப் பொதுச் செயலாளர்.
3. திரு. ஆர். ரத்தினசாமி, மோட்டார் உதிரிப் பாகங்கள் விற்பனையாளர்கள் சங்க முன்னாள் தலைவர்.
4. திரு. ஒபுல் ரெட்டி, இந்துஸ்தான் வர்த்தகச் சபை.
5. திரு. வி.ஆர். முத்து, விருதுநகர் வர்த்தகர் கழக முன்னாள் செயலாளர்.
6. திரு. ஏ.ஆர். தாமோதரன், முன்னாள் எம்.எல்.சி - அகில இந்தியப் பெட்ரோலிய வர்த்தகக் குழுவின் கூட்டமைப்பு உறுப்பினர்.
7. திரு. டி. சாந்தகுமார், கீர்த்திலால் காளிதாஸ், வைர வியாபாரி, கோவை.

தேசிய அறிவொளி இயக்கத்தில் பசும்பொன் மாவட்டம்

தேசிய அறிவொளி இயக்கத் திட்டத்தின்கீழ் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், 85 சதவிகிதம் எழுத்தறிவு பெற்று தேசிய அறிவொளி இயக்கத்திட்டத்தின்கீழ் மாநிலத்திலேயே முதன் மாவட்டமாகத் திகழ்கிறது.

சிறுசேமிப்பு: தமிழ்நாடு சாதனை

1991-'92-ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பு வாயிலாகத் தமிழகம் ரூ.500 கோடி திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட ரூ.100 கோடி அதிகமாகும்.

1991-'92-ஆம் ஆண்டுக்குச் சிறுசேமிப்பு வாயிலாக ரூ.300 கோடியைத் திரட்ட அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது.

முதன்முறையாக முகவர்களுக்கு 2.25 சதம் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது. முகவர்களுக்கும் பல சலுகைகள் அளிக்கப்பட்டன.

உறுப்பினராக உள்ள அதிகாரிகள்

1. செயலர், இந்து அறநிலையத்துறை.
2. செயலர், நிதித்துறை.
3. செயலர், தொழில் துறை.
4. செயலர், விவசாயத்துறை.
5. ஆணையர், வர்த்தக வரி.
6. இணை ஆணையர், வர்த்தக வரித்துறை, இவ்வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும், செயலாளராகவும் செயல்படுவார்.

வணிகர் நல வாரியம் வர்த்தக வரி ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசை அணுகியுள்ளது. இத்தொழிற்சாலை நிறுவிட அடிப்படை வசதிகள், மற்றும் வேறுபல உதவிகளையும், சலுகைகளையும் அளித்திட Ashok Leyland அரசை வேண்டியுள்ளது. இது அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

இத்தொழிற்சாலை மிக விரைவில் அமைக்கப்படும் என்று நம்புகிறேன். இதனால் ஓசூரைச் சுற்றிலும் தொழில் வளர்ச்சி மேலும் பெருகும்.

மற்ற தொழில் அதிபர்களையும், இதுபோன்ற மிகப் பெருந் தொழில்களை, தமிழகத்தில் அமைக்க வரும்படி, இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக இந்த அரசு எல்லா உதவிகளையும் அளிக்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'டிட்கோ' நிறுவனம் ரூ.75 கோடி செலவில் அலுமினியம் உருட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தஞ்சாவூர் மாவட்டத்திலும், புதிதாகக் கூட்டுத் துறையில் நிறுவ உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் கூட்டுத் துறையில் பழங்கள் பதனிடும் ஆலை ஒன்றை நிறுவுவதற்காகச் சந்தை நிலவர ஆய்வு (Market Survey) தொழில்நுட்ப ஆய்வு போன்ற முதன்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் உற்பத்தித் திறன், ஆண்டொன்றிற்கு 10,000 டன்கள் ஆகும். இத்திட்டத்தின் முதலீடு ரூ.15 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை விரைவில் செயல்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முதல்வர் அவர்கள் 6.4.92 அன்று, தொழில் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு அளித்த பதிலுரை.

தன்னை உயர்த்திய இசைக் கருவியின் பெருமையை உயர்த்தியவர்

திரு. குன்னக்குடி வைத்தியநாதன் பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், தனது 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பூர்த்தி செய்தமையைப் பாராட்டும் முகத்தான், நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் பங்கேற்பதில், நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

கலைத் துறையிலே ஈடுபட்டவர்களுக்கு, ஏதாவது ஒரு துறையில் சாதனை புரியவேண்டும் என்ற ஆர்வமும், அதனைத் தன்னுடைய கடுமையான உழைப்பினால், எப்படியும் அடைய முடியும் என்ற நம்பிக்கையும் பொதுவாக இருக்கும். தனது துறையில் புதிய உத்திகளைக் கையாண்டு, அதன் மூலம் மக்கள் மனதில் என்றென்றும் நிரந்தர இடம் பெற வேண்டும் என்ற தணியாத தாகம்தான், உண்மையான கலைஞர் ஒவ்வொருவருக்கும் இருக்கும்.

இந்த உண்மையைக் கலைத்துறையில் ஈடுபட்ட பல பெரியவர்கள் உலகிற்கு உணர்த்தி உள்ளனர்; சாதனை படைத்துள்ளனர். அந்தச் சாதனையாளர்களின் பட்டியலில், 25 ஆண்டுகள் சிறப்பான முறையில் கலைச் சேவை புரிந்து, நமது பாராட்டையெல்லாம் பெற்று, இடம் பெறுகிறார் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

இன்று இந்தியாவிலேயே, ''வயலின்'' என்று கூறினால், உடனடியாக அனைவருக்கும் நினைவு வரும் பெயர், ''குன்னக்குடி'' தன் கலைச் சேவையால், தான் பிறந்த மண்ணிற்கு நாள்தோறும் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருப்பவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் என்றால், அது மிகையாகாது. ஏன், தன்னை உயர்த்திய இசைக் கருவியான வயலின், இன்று அவர் பெயரால் பெருமை அடைந்துள்ளது என்று கூறினால் கூட, எவராலும் மறுக்க முடியாது!

அவ்வகையில் தனக்கும், தனது திறமையால்தான் இயக்கும் இசைக் கருவிக்கும் புகழ் கிடைக்கும் அளவு, உயர்ந்துள்ள திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக்கு, இன்றைய விழாவில் 25 பொற்காசுகள் பதித்த வயலின் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கியுள்ளது, சாலப் பொருந்தும். அதனை அவருக்கு வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

1935-ஆம் ஆண்டு, குன்னக்குடி என்ற சிறிய ஊரில் பிறந்த இவர், சிறு வயது முதலே கர்நாடக இசையிலும், கதாகாலட்சேபத்திலும் மிகுந்த ஆர்வத்தைக் காட்டினார். தனது 12 வயதிலேயே, கர்நாடக இசையில் தலை சிறந்த பாடகர்களான, திரு. அரியக்குடியார், திரு. செம்மங்குடியார், ஏன் - இன்றைய விழாத் தலைவர் திரு. மகாராஜபுரம் சந்தானம் போன்ற சான்றோர்களுடன் சென்று, பல கச்சேரிகளில் பங்கு கொண்டுள்ளார்.

தனது சிறு வயது முதலே இசை மீது மோகம் கொண்டு, இசை என்பது தனிப்பட்ட குழுவினருக்கு மட்டும் உரியது அல்ல; எல்லாப் பொது மக்களும் எளிதில் புரிந்து கொண்டு, இன்புற வேண்டியதே இசைக்கலை என்றும், எனவே சாதாரண மக்களும் ரசிக்கக்கூடிய வகையில், அதனை அமைக்கவேண்டுமென்று, தனக்கென ஒரு தனி பாணியை உருவாக்கிக் கொண்டவரும், அதில் தலைசிறந்து உயர்ந்தவரும்தான் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள்.

வயலின் ஒரு கூட்டு இசைக் கருவி என்றாலும், முதன் முதலாக வயலினில் தனிக்கச்சேரி செய்து, சாதனை படைத்ததோடு, இதுவரை 780 பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்துள்ளவர் என்ற பெருமையும் இவரைச் சாரும்.

கலைத் துறையிலே எல்லா இடங்களையும் பார்த்துவிட வேண்டும் என்ற தணியாத எண்ணம் கொண்ட இவர், சில திரைப்படங்களுக்கு இசை அமைத்ததோடு, தானே இசையை மையமாகக்

கொண்ட ஒரு திரைப்படத்தையும் தனியே தயாரித்து வெளியிட்டார்.

பெரியவர் - சிறியவர்; ஆண் - பெண் என்ற பாகுபாடின்றி, அனை வரும் இவரது இசை நிகழ்ச்சிகளை இன்றும் ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.

கர்நாடக இசையையும் இவரால் திறமையாக வாசிக்க முடியும்; ஜன ரஞ்சகமான இசையையும் இவரால் தர முடியும்; திரை இசையும் இவருக் குத் தாராளமாக வரும். எத்தகைய கூட்டத்தினரின் எதிர்பார்ப்புகளை யும் முழுமையாகச் சிந்திக்கக்கூடிய ஒரு சிறந்த கலைஞர் உண்டென் றால் - அவர் குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள்தான்!

இவரது வயலினில் இருந்து இசை மட்டுமல்ல; வார்த்தைகளே வரும். இசை விழாவில் மட்டுமன்றிப் பொது வாழ்விலும் ஈடுபட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் கொண்ட இவர், மழை பெய்யாது சென்னை நகர் குடிநீர்ப் பஞ்சத்தால் பாதிக்கப் பட்டபொழுது, தனக்கே உரித்தான பாணியில், புழல் ஏரிக்குச் சென்று மேக ரஞ்சனி, ஜலார்ணவம் மற்றும் அம்ரிதவர்ஷிணி ஆகிய இராகங் களில் இரண்டு மணி நேரம் தொடர்ந்து வயலின் வாசித்து, வருண பகவானை வேண்டிய நிகழ்ச்சி, மக்களின் நலனில் இவர் கொண்டுள்ள அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

வயலின் சக்ரவர்த்தி என்றும், எழில் இசை ஏந்தல் என்றும், திரை இசை மன்னன் என்றும், கலை மாமணி என்றும் பல பட்டங்களைப் பெற்ற இவருக்கு, இன்று தங்க வயலின் வழங்கும் வாய்ப்பை எனக்கு அளித்த சபாக்களின் கூட்ட மைப்பிற்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தனது 25 ஆண்டுக்காலக் கலை வாழ்வில், அவர் எத்தனையோ சவால்களைச் சந்தித்து, சாதனைகள் புரிந்து, இன்று நம் முன்னே வெள்ளி விழா நாயகனாகக் காட்சி அளிக்கின்றார்.

அவரது கலைப்பணி இன்னும் மென்மேலும் தொடர வேண்டும், வளர வேண்டும், குறைந்தது இன் னும் ஒரு 25 ஆண்டு காலத்திற் காவது, இவர் தன்னைக் கலைத் துறைக்கு அர்ப்பணித்துச் சேவை செய்யவேண்டும், என்ற என் விருப் பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சென்ற இடங்களில் எல்லாம் சீரும் சிறப்பும் பெறவேண்டும்; வயலின் இசைக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டும், இனிவரும் வயலின் இசைக் கலைஞர்களுக்கு, இவர் ஓர் நிரந்தர வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 31.3.92 அன்று, வயலின் சக்ர வர்த்தி திரு. குன்னக்குடி வைத்திய நாதன் அவர்களின் 25 ஆண்டுக் காலக் கலைச் சேவையைப் பாராட்டி 'தங்க வயலின்' பரிசளித்து ஆற்றிய உரை.

இந்தியக் கலைச் செல்வங்கள்

இந்தியக் கலைச் செல்வங்களா கக் கருதப்படும் அஜந்தா, எல் லோரா குகைகளைப் பாதுகாக்க வும், மேம்படுத்தவும், ஜப்பானில் உள்ள வெளிநாட்டுப் பொருளா தாரக் கூட்டுறவு நிதியமைப்புடன் 4,406 மில்லியன் யென் கடன் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட் டுள்ளது. இதில் 3,745 மில்லியன் ஜப்பானிய யென், அஜந்தா, எல்லோரா குகைகளைப் பாதுகாக்க வும், அடிப்படை வசதிகளை மேம் படுத்தவும் பயன்படுத்தப்படும். அது தவிர இக்குகைகளுக்கு அருகிலுள்ள அவுரங்காபாத் விமான நிலையம் நவீனமாக்கப்படும்.

அஜந்தா மற்றும் எல்லோரா குகைகளைப் பற்றி சுற்றுலாத்துறை கவர்ச்சிகரமான கையேடுகளை வெளியிட்டு, சுற்றுலாப் பயணி யரைக் கவர்ந்திழுக்கப் பார்க்கிறது. அதேபோன்று பீகாரில் உள்ள புத்த கயாவில் சுற்றுலாவை வளர்ப்பதற் காக ஓட்டல்கள், குடிநீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள், தொலைத் தொடர்பு வசதி, சாலை வசதி முதலியவற்றை ஜப்பான் உதவியுடன் அரசு செய்து வருகிறது.

சட்டமன்றத்தில்...

மேட்டூர் அணை ஜூன் 12-ஆம் தேதி திறப்பு

மேட்டூர் அணையிலிருந்து இவ்வாண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்து விடப்படும். வழக்கமாக ஒவ்வொரு ஆண் டும் ஜூன் மாதம் 12-ஆம் தேதிதான் மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால், பருவமழை தவறியதன் காரணமாகக் கடந்த 8 ஆண்டுகளாகக் குறித்த தேதியில் இவ்வணை திறக்கப்படவில்லை. இவ்வாண்டுதான் குறித்த தேதியில் மேட்டூர் அணை திறக்கப்படுகிறது என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தார் (31.3.'92).

காவிரி பாசனப் பகுதிகளை அதிகரிக்க 2 திட்டங்கள்

காவிரிப் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்த இரண்டு திட்டங்களை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது. காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் இத்திட்டத்தைத் தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தலாம். 250 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும், 500 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டமும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஏதாவது ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரி நீரை மேலும் அதிக இடங்களுக்குப் பாசனம் செய்ய லாம் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ்.கண்ணப்பன் சட்டப்பேரவை யில் தெரிவித்தார் (31.3.'92).



"நீதி வென்றது; நியாயம் வென்றது!"

காவிரிப் பிரச்சினைத் தீர்ப்பு குறித்து முதல்வர் மகிழ்ச்சி

சட்டப்பேரவையில் 7.4.'92 அன்று கேள்வி நேரம் முடிந்ததும், வ.கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. ஜி.பழனிச்சாமி அவர்கள் எழுந்து, ஒரு பிரச்சினையை எழுப்பினார். அவர் கூறியதாவது:

"காவிரி டெல்டா பகுதியில் ஜூன் 12-ந் தேதி தண்ணீர் திறந்து விடுவதாக அறிவித்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு குறுவை சாகுபடி செய்யப் போகிறோம் என்ற நிலையில் மராமத்து வேலைகளை விவசாயிகள் தொடங்கிவிட்டார்கள்

ஏற்கெனவே வழங்கப்பட்ட நடுவர்மன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கர்நாடக அரசின் கோரிக்கையை மறுத்ததோடு மட்டுமல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீரைத் திரும்பவும் வழங்க வேண்டும் என்ற நல்ல தீர்ப்பையும் வழங்கியுள்ளனர்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்ப்பையொட்டி மத்திய அரசாங்கத்தை அணுகி இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் நல்ல செய்தியைச் சொல்ல வேண்டும்.

மேற்கண்டவாறு ஜி.பழனிச்சாமி கூறினார்.

இதற்குப் பதில் அளித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசியதாவது:"

இப்போது உறுப்பினர் குறிப்பிட்ட செய்தி உண்மையிலேயே தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியும், உவகையும் அளிக்கக்கூடிய செய்திதான். நீதி வென்றது, தர்மம் வென்றது, நியாயம் வென்றது என்று தான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கர்நாடகம் செய்திருந்த மனுவினைப் பரிசீலித்த பிறகு, அதை நடுவர் மன்றம் நிராகரித்து இருக்கிறது. ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை, செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்பதை நடுவர் மன்றம் திட்டவட்டமாக நியாயப்படுத்திவிட்டது.

இது தமிழகத்துக்கும், தர்மத்திற்கும், நியாயத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

கர்நாடக அரசு இனியும் தாமதம் செய்யாமல், வீண் சர்ச்சைகளிலோ, வீண் விவாதங்களிலோ இறங்காமல் ஏற்கெனவே நடுவர்மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி சரியான நேரத்தில் குறித்த அளவு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும்.

இதற்கு மத்திய அரசும் கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டும். இதைத்தான் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

இதை மத்திய அரசும், கர்தாடக அரசும் செய்யும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது."

—மேற்கண்டவாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா கூறினார்.

தீப்பிடிக்காத வீடுகள் கட்டித் தரப்படும்

2.4.1992 அன்று அதிகாலை இராயபுரம் தொகுதி 6-வது வட்டத்தில் பல்லவன் நகர் மற்றும் திடீர் நகர்ப் பகுதியில் 150 குடிசைகள் தீக்கிரையானது.

இந்தச் செய்தி கிடைத்தவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக காலை சுமார் 7.00 மணியளவில் நேரில் சென்று பார்த்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

மேலும் தீ விபத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டுமெனவும் உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்று உணவு வழங்க வேண்டுமென்றும் கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, தீப்பிடிக்காத வீடுகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கம்ப்யூட்டர் அருங்காட்சியகம்

கம்ப்யூட்டர்களுக்கென்றே தனி அருங்காட்சியகம் ஒன்று உள்ளது. ஆண்டுதோறும் 1,50,000 பேர் இதனைக் கண்டுகளிக்கிறார்கள்; பல புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் செய்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரில் இந்த அருங்காட்சியகம் உள்ளது.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட, ஒரு பெரிய கட்டடம் அளவிலான கம்ப்யூட்டர் முதற்கொண்டு, மேசை மீது கச்சிதமாக வைத்துக் கொள்ளக்கூடிய 'டெஸ்க்டாப்' கம்ப்யூட்டர் வரையில், விதவிதமான கம்ப்யூட்டர்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இங்கேயுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கம்ப்யூட்டர்களைப் பார்வையாளர்கள் தாங்களாகவே இயக்கி மகிழலாம். பல விளையாட்டுக்களையும் ஆடிக் களிக்கலாம்.

இங்கு கம்ப்யூட்டர்கள் பொருத்தப்பட்ட மாதிரி விமானத்தை, இடத்தை விட்டு நகராமலே ஓட்டி மகிழலாம். இங்குள்ள கம்ப்யூட்டர்களைக் கொண்டு வீட்டு வரைபடத்தை வரையலாம்; ஓர் ஓவியத்தை உருவாக்கலாம்; என்ன நோய் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்; புதிய இசைக்கோலம் ஒன்றை உருவாக்கலாம்; தாங்கள் பேசும் ஆங்கிலம் இலக்கணச் சுத்தமாக உள்ளதா என்று சரி பார்க்கலாம்; இங்குள்ள வீடியோவில் தோன்றும் தங்கள் உருவத்தைத் தங்களது விருப்பத்திற்கு ஏற்றபடி திருத்தி அமைத்துக் கொள்ளலாம்.

அறிவுள்ள ரோபோட்கள்

'செயற்கை அறிவூட்டல்' துறைக்காக ஒரு தனிப்பிரிவே இந்த அருங்காட்சியகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இங்குள்ள 'ரோபோட்கள்' மிகவும் துடிதுடிப்பானவை.

உங்கள் உயரம் என்ன என்பதை இவை உங்களைத் தொடாமலேயே அளந்து சொல்லிவிடும். 10 டாலர் நோட்டுக்கும் 5 டாலர் நோட்டுக்கும் எளிதாக அடையாளம் கூறும். உங்கள் பெயரைச் சொன்னால் எழுத்துக்கூட்டிச் சொல்லிவிடும்.

இந்த அருங்காட்சியகத்தில் மிகப் பெரிய கம்ப்யூட்டர் ஒன்றையும் காட்சிக்கு வைத்துள்ளனர். பார்வையாளர்கள் இதற்கு உள்ளே புகுந்து நடக்கலாம். இது எப்படி இயங்குகிறது என்பதை நேருக்கு நேர் பார்வையிடலாம்.

ஒரு கம்ப்யூட்டர் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பொதுமக்களுக்கு விளக்கிக்காட்ட வேண்டும் என்பதற்காகவே 12 இலட்சம் டாலர்கள் செலவில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதாகும் இந்த இராட்சதக் கம்ப்யூட்ட...

\- அமெரிக்கத் தகவல் நிலையம்

அட்டைப்பட விளக்கம்:

முதல் அட்டை:

அண்ணல் அம்பேத்கரின் 102-வது பிறந்த நாளையொட்டி, அண்ணாரின் திருவுருவப்படம் முகப்பை அலங்கரிக்கிறது (14.4.1992).

நான்காவது அட்டை:

தமிழ்நாட்டின் போக்குவரத்துக் கழகங்கள் பெற்ற இது தேசிய விருதுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டினார். (2.4.1992).

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட...
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927



தமிழரசு



FOR FORMAL WEAR

★ Pure Khadi Silk Sarees
★ Khadi Cotton and Polyester Varieties
★ Readymades

PLEASE VISIT

Khadi Kraft

Tamilnadu Khadi & Village Industries Board, Kuralagam, Madras-600 108.

இந்த இதழில்...

அருங்காட்சியகக் கலைவிழா ... 2
சர் பிட்டி தியாகராயர் ... 6
மே நாளில் சிந்திப்பீர் —புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ... 9
பக்கிங்காம் கர்னாடிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு ... 11
தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் - பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்கள்! ... 15
—மாண்புமிகு முதல்வர் உரை ... 17
கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு ... 19
மகளிர் காவல் நிலையம் ... 23
பாட்டாளி உழைப்பினிலே! (கவிதை) ... 24
அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி ... 27
மரம் வளர்ப்போம்! ... 30
வளரும் வேளாண்மை ... 48
சத்யஜித்ரே மறைவு

மே நாள்

—பேரறிஞர் அண்ணா

அகில உலகமெங்கும் அக மகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மேதின விழாவைக் கட்சி - கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங் காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மேநாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மேநாள் பயன் படுகின்றது.

திருநாள் - பெரு நாள்!

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

தொழிலாளர் வட்டாரங்களில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த இந்த மே நாள் தமிழகம் முழுவதும், தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் கொண்டாடும்படி தனது பேனா வாலும், நாவாலும் கிளர்ச்சி ஊட்டிய பெருமை மட்டுமன்று, அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு, மே நாளைக் கட்டாய விடுமுறை நாளாக்கிய பெருமையும் பேரறிஞர் பெருந்தகை அமரர் அண்ணா அவர்களுக்கே உரியதாகும்.

தொழிலாள வர்க்கம் தனது கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மட்டுமே போரா டும் தன்மை படைத்தது என்ற நிலையை மாற்றி, மொத்த சமுதாயத்தின் உயர்வுக்காகவும், சமத்துவ சமுதாயம் அமைப்பதற்காகவும் போராடும் முன்னோடிகளாகத் தொழிலாளர்கள் விளங்க வேண்டும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2023

சித்திரைத் திங்கள் - 19

மலர்:22 இதழ்:31

1-5-1992

173689

அருங்காட்சியகக் கலைவிழா

அருங்காட்சியகக் கலைவிழா, 14.4.92 அன்று, சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தார்.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தலைமை அஞ்சல்துறைத் தலைவர் திரு. எம்.எஸ்.இராகவன், இ.அ.ப., செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., இண்டாக் நிறுவனத் தலைவர் திருமதி தெபோரா தியாகராசன் ஆகியோர் பேசினர்.

சிறப்பு அஞ்சலுறையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கலைப் பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கிரிஜா வைத்திய நாதன் பொன்னாடை அணிவித்தார். அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. இராமன் இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் உரை

தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, பல்லவபுரம் தென்னகக் கலை நகரமைவுத் திட்டம், நினைவு அஞ்சலுறை வெளியீடு, கலை பண்பாட்டு இயக்ககம்- முத்தமிழ்க் கலைவிழா ஆகியவற்றைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

தமிழ்ப் புத்தாண்டு மலர்ந்துள்ள சித்திரைத் திங்கள் இரண்டாம் நாளாகிய இன்று, தமிழக அரசின் அருங்காட்சியகத் துறை, நம் அனைவரின் நினைவுகளிலும், தொடர்ந்து நிலைத்து நிற்கக்கூடிய சாதனை ஒன்றினை, சாதித்துக் காட்டியுள்ளது. கடந்த 140 ஆண்டுகளாக, நீடித்த புகழோடு திகழ்ந்துவரும், இந்த அரசு அருங்காட்சியகத்தின் அரங்கம், இன்று முதல் குளிர்சாதன வசதியினைப் பெறுவதோடு, தமிழகத்தில் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு, தங்களது கலைத் திறமைகளை வெளிக் காட்டுகிற நல்வாய்ப்பினை வழங்கும் பணியினையும், தொடங்குகிறது.

இனி இந்தக் கலையரங்கத்தில், வாரம் இரண்டு கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்த, அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த விழாக்களுக்கு மகுடம் சூட்டுவதுபோல, இன்று தென்னகக் கலைப் படிமக் கண்காட்சியைத் திறந்து வைப்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அரசு அருங்காட்சியகம், சாதாரண மக்கள் பார்த்துப் பலனடையும் பார்வைக் கூடமாகவும், கற்றோருக்கு மேலும் சிந்தனையைத் தூண்டும் அறிவுக் கூடமாகவும், ஆராய்ச்சி அன்பர்களுக்கு ஆய்வுப் புதையலாகவும் அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, பதினெட்டாம் நூற்றாண்டுவரை, பல்வேறு தென்னிந்தியச் சிற்பக்கலை விற்பன்னர்கள் உருவாக்கிய படிமங்கள், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கற்காலம், உலோகக் காலம், தற்காலம் என்ற எல்லாக் கால எல்லைகளுக்கும் உரித்தான பொருட்களும், பல்வேறு சமய சிற்பங்களையும் கொண்ட, அரிய கலைப் பொருட்களின் தொகுப்பு, இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

கல்லும் சொல்லாதோ கவி!

நான் சிறுமியாக இருந்தபோது, என் அன்னையாரோடு இங்கே வந்து, சிற்பங்களையும் கலைப் படிமங்களையும் கண்ணுற்ற நிகழ்ச்சி, இப்போதும் என் நினைவில் நிழலாடுகிறது.

அனைத்து வளங்களும் மலிந்த நமது தமிழகத்தில், நமது முன்னோர்கள், தங்களுடைய சந்ததியினருக்கு விட்டுச் சென்ற அழியாச் சொத்துக்களில், கண்கவர் கோயில்களும், கவின்மிகு எழிற்சிற்பங்களும், இன்றும் நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்தும் பேறு பெற்றவை.

'கல்லும் சொல்லாதோ கவி' என்றும், 'செம்பும் பேசாதோ செழுந்தமிழை' என்றும், புலவர் பெருமக்களால், புகழ்ந்து பாடப்படுகின்ற அரிய கலைப் படிமங்கள், உலகின் ஈடற்ற கலைச் செல்வங்களாக, நமக்குப் பெருமை அளிக்கின்றன.

பேரறிஞர் Arnold Toynbee, உலக நாகரீகங்களிலேயே பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவன, தமிழ் நாகரீகமும், சீன நாகரீகமும் என்று கூறியுள்ளார். அதேபோல, தென்னகக் கலைப் படிமங்களின் வடிவமைப்பையும், கைத்திறனையும், கண்டு வியந்த அறிஞர்கள், இவற்றை சுமேரிய நாகரீக காலத்தில் கிடைக்கப்பெற்ற, எஃகுப் படிமங்களோடும், நைல் நதி நாகரீகக் காலத்தில் கிடைக்கப்பெற்ற, தங்கப் படிமங்களோடும் ஒப்பிட்டு, வியப்படைந்துள்ளார்கள்.

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்கள்!

உயிரோட்டம் வாய்ந்த சிற்பங்களையும், சிலைகளையும் வடிப்பதில், நமது தமிழக மக்கள், தலைசிறந்து விளங்கினார்கள். மண், மரம், சுதை, செங்கல், கல், பளிங்கு, தந்தம், பித்தளை, வெண்கலம், செம்பு, இரும்பு, பொன், ஐம்பொன் போன்ற பல பொருட்களால், சிலைகள் வார்க்கப்பட்டன; சிற்பங்கள் செதுக்கப்பட்டன; படிமங்கள் சமைக்கப்பட்டன. நவீன உலோகவியல், அதாவது Metallurgy -யின் நுணுக்கங்களையெல்லாம் அன்றைக்கே நம் தமிழர், இந்தச் சிலைகளை வடிப்பதில் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியும் போது, நாம் பெருமையும், பெருமிதமும் கொள்கிறோம்.

நம்நாட்டுச் சிலைகள், சிற்பங்கள், கலையழகு வாய்ந்தவை, நேர்த்தியானவை என்பது, நிலைபெற்றுவிட்ட உண்மை. ஆனால், அவைகளுக்கு மேலும் தனிச்சிறப்புகள் உண்டு. நாம் அவற்றைக் கண்ணுறும்போது, அவை வெறும் உருவங்கள் மட்டும்தான், என்று நம் மனதில் தோன்றாது. அவை நம்மை ஆன்மீக உணர்வுக்கு, அழைத்துச் செல்லும் வழிகாட்டி என்கிற நிம்மதியையும் வழங்குகின்றன. சரியாகச் சொன்னால், நமது சிற்பங்கள், அயல்நாட்டுச் சிற்பங்களைப் போன்று, வெறும் காட்சிப் பொருளாக இல்லாமல், கடவுளின் பெருமைகளைப் போதிக்கும் காட்சிப் பொருள்களாகவும் அமைந்திருக்கின்றன. கடவுள் நம்பிக்கை, நம்மவர்களின் வாழ்க்கை முறையில் இயற்கையாகவே ஏற்பட்ட பற்று, பாசமாகும்.



தொழில் நுட்பத்தின் சிகரம்

அதனால்தான், நம் முன்னோர்களின் கற்பனையில் உதித்த வடிவங்களில் எல்லாம், கடவுளர் சிலைகளை உருவாக்கிப் பார்த்தனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும், புராணங்களில் வர்ணிக்கப்படும் பல்வேறு உருவங்களை, கல்லால் வடித்து மகிழ்ந்தனர். இந்த வகையில் பார்த்தால், சிவபெருமானுக்கு மட்டும் 25 வடிவங்கள் இருக்கின்றன. திருமாலுக்கு நாராயணன், மாதவன், கோவிந்தன், அனந்தசயனன் முதலிய

V211m N707A
N92

பல வடிவங்கள் உள்ளன.

இப்படி வடிக்கப்பட்ட தெய்வ உருவங்களிலேயே, அமைதியின் வடிவமாகத் திகழும், நடனமாடும் நடராஜர் சிலை, உலகப் பிரசித்தி பெற்றது என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆடல் சிறப்பும், அமைதியான அழகும் கொண்ட, நடனமாடும் நடராஜர் சிலையைக் கண்டு, உலகில் வியக்காதவர்களே இல்லை. தஞ்சை, திருவாலங்காட்டிலே உள்ள நடராஜர் திருமேனி, அனைத்து உருவங்களிலும், முழுமையும் அழகும் வாய்ந்தது என்று, அறிஞர்கள் பாராட்டுகின்றனர். Cosmic Dance என்று போற்றப்படும் இவ்வடிவம், சிற்பமாக மட்டும் இல்லாமல், தத்துவமாகவும், கணிதமாகவும், கலைத் தேர்ச்சியின் முடிவாகவும், தொழில் நுட்பத்தின் சிகரமாகவும் அமைந்திருப்பதை, அறிஞர் ஆனந்த குமாரசுவாமி' போன்றவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை, இங்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னும் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தஞ்சை திருவெண்காடு அர்த்தநாரீஸ்வரர், ராம லட்சுமணர், நடனமாடும் கணேசர், ரிஷப வாகனர் சிலைகளும், இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. நாகப்பட்டினத்தில் கிடைக்கப் பெற்ற, சரித்திரப் புகழ் வாய்ந்த புத்த விக்கிரகங்கள், அரிய கலைப் பொக்கிஷங்கள் ஆகும். அவைகளும் இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. மேலும், இக் கண்காட்சிக்குப் பொலிவூட்டுவதாக அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளைச் சேர்ந்த, ஏறத்தாழ 1,600 வெண்கலச் சிலைகள், கற்சிற்பங்கள், விக்கிரகங்கள், கவின்மிகு கண்ணாடிப் பேழைகளில் இங்கே இடம் பெற்றுள்ளன.

திருக்கோயில் பாதுகாப்புப் படை

இத்தகைய கலைக் கருவூலங்களைப் பார்த்து மகிழ்வதோடு, அவற்றைப் பாதுகாப்போடு, வரும் தலைமுறைகளுக்கு விட்டுச் செல்வது, நம்முடைய தலையாயக் கடமையாகும்.

அந்த நோக்கத்தை நிறைவு செய்கிற வகையில்தான், வெண்கலப் படிமங்களைப் பாதுகாக்க, 'உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்', திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுபோன்ற 3 மையங்களை, மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அமைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நம்முடைய வரலாற்றுப் பெருமையின் சிறப்பு அறியாத சிலர், நம் நாட்டு கலைப் பொக்கிஷங்களை, வெறும் உலோக மதிப்பிற்கான விலைக்கு மட்டுமே விற்க முற்படுவதால், அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி, ஒரு சாரார் மேலை நாடுகளுக்குக் கடத்திச் சென்று, அவற்றை விற்றுவிடுகின்றனர்.

இப்படிக் களவாடப்பட்ட கற்சிலைகளும், செப்புத் திருமேனிகளும், மேலை நாடுகளில் தனிப்பட்டவர்களின் வீடுகளிலும், விடுதிகளிலும், காட்சியகங்களிலும், அலங்காரப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது, நமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவை மீட்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்பு, தமிழகத்திலிருந்து அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட, பத்தூர் நடராஜர் செப்புத் திருமேனி, இப்படித்தான் மீண்டும் கொண்டு வரப்பட்டு, திருக்கோயிலுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதற்காகவே, பழமை வாய்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்கென, தனியாக, திருக்கோயில் பாதுகாப்புப்படை அமைக்கப்படவுள்ளது என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளால் மட்டுமே, நமது கலாச்சாரம் அயலாருக்கு விலைபோவதை, தடுத்துவிட முடியாது. உண்மையில் கலாச்சாரப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்க வேண்டுமானால், நம் மூதாதையர்களின் ஒப்புயர்வற்ற வாழ்வும், பெருமையும், வரலாற்றில் இடம் பெறுவதோடு, அந்த வரலாற்றின் ஆதாரங்களாக உள்ள சிலைகளும், படிமங்களும், கட்டிக் காக்கப்பட வேண்டும்; அந்த வரலாற்றின் உண்மைகள் தொடர்ந்து, இன்றைய சந்ததியினருக்கும் கற்றுத் தரப்பட வேண்டும். இந்தக் குறிக்கோள்களை நிறைவு செய்யவும், அதற்கான சூளுரை ஏற்கவுமே, இன்று நான் தொடங்கி வைத்திருக்கின்ற தென்னகக் கலைப் படிமக் கண்காட்சி, என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள சிற்பங்களின் வண்ணப் படங்கள் அச்சிடப்பட்ட போஸ்ட் கார்டுகளும், வெளியிடப்பட்டுள்ளன.

பல்லவபுரம்

இவ்விழாவிற்கு மேலும் சிறப்பு சேர்க்கிற வகையில், இவ்விழா, ஐம்பெரும் விழாவாக இங்கே கொண்டாடப்படுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வரிசையில் அடுத்து, 9-ஆம் நூற்றாண்டில், ஓங்கி வளர்ந்து, சிறப்புற்றிருந்த பல்லவப் பேரரசின் பண்பாட்டைச் சித்திரிக்கும் வண்ணம், சென்னை மாமல்லபுரம் சாலையில் அமைந்துள்ள முட்டுக்காட்டிற்கு அருகில், 'பல்லவபுரம்' அமைக்கும் திட்டத்தையும் துவக்கி வைப்பதில், மகிழ்ச்சி அடைகிறேன். தென்னிந்தியக் கலாச்சாரங்களை வெளிப்படுத்தும், மத்திய அரசுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தப் 'பல்லவபுரம்' திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு, 5 ஏக்கர் நிலத்தையும், ரூ.15 இலட்சத்தையும் வழங்கியுள்ளது. இந்தப் 'பல்லவபுரம்' அன்றைக்குப் பல்லவப் பேரரசில் இயங்கிக் கொண்டிருந்த, ஒரு கிராம வாழ்க்கைச் சூழலை, அதன் சிற்ப வேலைத் திறத்தோடு சித்திரிக்கும் வண்ணம் அமையும், என்று நான் நம்புகிறேன். மேலும் இந்த அரங்கத்தில், வாரம் இருமுறை நடக்க இருக்கும் கலை நிகழ்ச்சிகளையும், இன்று துவக்கி வைப்பதில் பெருமிதம் அடைகிறேன்!

ஒரே குடையின் கீழ்...

கலை, கலாச்சாரத்தின் பல்வேறு அம்சங்களில் நடைபெற்று வரும் அரசுப் பணிகளை, ஒருங்கிணைத்து, ஒன்றுக்கொன்று தொடர்பு ஏற்படுத்தி, அதன்மூலம் நிறைந்த பயனை மக்களுக்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில், கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த அத்துணை அமைப்புகளையும், ஒரு குடையின்கீழ் கொண்டு வர எங்கள் அரசு தீர்மானித்தது. அதற்கெனத் தனியாக ஒரு இயக்குநரகத்தையும் அண்மையில் ஏற்படுத்தியது. அதையும் இன்று நான் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!

நமது முயற்சிகளுக்கு முகமன் கூறுவது போல, இந்திய அஞ்சல் துறையினர், இந்த நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பளிக்கும் வண்ணம், சிறப்புத் தபால் உறை ஒன்றை வெளியிட்டுள்ளது, வரவேற்கத்தக்கதாகும். இதற்காக நான் அத்துறையினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தொடங்கி வைக்கப்பட்ட ஐம்பெரும் விழாவில் கலந்து கொண்டு, நம் கலாச்சாரத்தின் தொன்மையையும், சிறப்பையும் பார்த்துப் பெருமிதம் அடைவதோடு, அவைகளைப் பாதுகாக்கிற பணியினையும் நாம் மேற்கொள்ள, உறுதியேற்க வேண்டுமென அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்புரைக்குப் பிறகு, செல்வி இலட்சுமி விசுவநாதன் அவர்களின் நாட்டியக் கலை நிகழ்ச்சி நடந்தது. அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. ம.இராமன் இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு
— பி.வி. கிரி

மேதினி விழித்தது மேதினம் பூத்தது!

—பேரறிஞர் அண்ணா

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டவர். ஆண்டை - அடிமை, உயர்ந்தவன் - தாழ்ந்தவன், மதகுரு - பக்தன், மிராசு - உழவன், பிரபு - பணியாள், முதலாளி - தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.

இந்தப் போராட்டங்களில் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள் - முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள்ளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது.

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுதிட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!

உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாள்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் மே தின வாழ்த்துச் செய்தி

உழைப்பவர்களின் பெருமையை, உலகெங்கும் பறைசாற்றி, உழைப்பின் வெற்றியைக் கொண்டாடும் திருநாளாக மே தினம் மிளிர்கிறது. உழைப்பவர்கள் தங்களது உரிமைகளை நிலைநாட்டிட, துணிவோடு கிளர்ந்தெழுந்த தோழர்களின் முழக்கம், உலகம் தழுவிய உரிமை கீதமாகப் பரவிய நாள் தான் மே தினம்.

உலக அரங்கில் பல்வேறு நாடுகளின் விடுதலைக்கு வித்திட்ட சக்தியாகவும், ஆதிக்க மேலாண்மையை வீழ்த்துகின்ற ஆயுதமாகவும், தொழிலாளர்களின் உழைப்பும் பணியும் பெருமையோடு இடம்பெற்று உள்ளன.

அத்தகைய உழைப்பாளிகளின் நினைவைப் போற்றுகின்ற வகையிலும், அவர்களது தியாகத்தை மதிக்கின்ற வகையிலும், மலர்கின்ற மே தின நன்னாளில், உழைக்கும் வர்த்தகத்தினருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்.பிட்டி தியாகராயர்

சா.பழநியப்பன்

திராவிட சமுதாயச் சிற்பிகளில் குறிப்பிட்டுப் பாராட்டத்தக்க பெருமை பெற்றவர் வெள்ளுடைவேந்தர் சர். பிட்டி. தியாகராயர் ஆவார்.

தேவாங்கர் வகுப்பில் 1852-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் பிறந்தார். இதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது.

இவருடைய முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார், இவர். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலை வாய்ப்புத் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார், செல்வமும் செல்வாக்கும்பெற்ற குடும்பத்தவரான சர்.பிட்டி. தியாகராயர்,

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார், இவர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்றிதழையும் பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் இருவரும் ஒருவர். அச்சபையின் தொடக்க காலமான 1910-விருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

செங்கல்வராய நாயக்கர் தொழிற் பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுக்காலம் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கேற்றார்; சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். நாளடைவில் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, அவர் உள்ளம் வேதனையடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையை-பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை-1916 நவம்பர் 20-ஆம் நாள் சர் தியாகராயர் தமது கையெழுத்திட்டே வெளியிட்டார்.

அந்த அறிக்கை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் செயல் வீரர் தியாகராயர்.

ஒரு வகுப்புமீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர்.

சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் லார்டு வெல்லிங்டன், முதலமைச்சர் பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரும் நீதிக் கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக்கொண்டார்; ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டுத் தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். அவர் ஆளுநருக்கு எழுதிய கடிதத்திலும், நேரில் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்டதாவது:

'இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும், அகாலமரணமடைந்த என் அருமை துணைத் தலைவர் டாக்டர் டி.எம். நாயரையும் வெள்ளையரின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன்; மன்னிக்க வேண்டும்.' சர்.பிட்டி. தியாகரர்யரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய வரலாற்றில், முதல் பொதுத் தேர்தலில் தனது நீதிக் கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனார் தியாகராயர்.

> • எங்கு மிக உயர்ந்த உண்மைகள் நடைமுறைக்குக் கொண்டு வரப் படுகின்றனவோ அதுவே மிக உயர்ந்த சமுதாயமாகும்..
>
> \- சுவாமி விவேகானந்தர்

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் தொண்டு புரிந்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு பிறப்பிக்கப் பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923-ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரின் தூய தொண்டினைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-இல் ராவ்பகதூர் பட்டத்தையும், 1919-இல் திவான் பகதூர் பட்டத்தையும், 1921-இல் சர் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

மதுரை-மணியாச்சி அகல ரயில்பாதை

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

கரூர் - திண்டுக்கல் - மதுரை - தூத்துக்குடி அகல ரயில்பாதைத் திட்டத்தை அமல்படுத்தும்பொழுது, ஏற்கெனவே மதுரை- மணியாச்சி இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப்புறப்படுத்தி அகலப் படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவு, நமது மாநிலத்தின் தென் மாவட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் நிலையை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கெனவே மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே மணியாச்சி வழியாக உள்ள Metre Gauge ரயில் பாதையை அப்புறப்படுத்தி அகலப் படுத்தினால், தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் இருந்து தற்போது நேரடியாகச் சென்னை வந்து சேரும் 9 ரயில்கள் ரத்து செய்யப்படுவதுடன், சென்னை வரும் பயணிகள், கூடுதலாக 104 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் பிரயாண நேரம் மட்டுமன்றி ரயில் கட்டணமும் கூடுதலாகும்.

Broad Gauge Line அமைத்துக் கொடுப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற வசதிகளை இழக்க வேண்டும் என்ற முடிவுதான் ஏற்புடையதாக இல்லை.

இது குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 11.2.1992 அன்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. சி.கே. ஜாஃபர் ஷெரீப் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மதுரைக்கும் மணியாச்சிக்கும் இடையே உள்ள Metre Gauge Line-ஐ அப்புறப்படுத்தாமல் அப்படியே வைத்துக் கொண்டு திட்டமிட்டவாறு Broad Gauge Line-ஐயும் தனியாக அமைக்க வேண்டுமென்று கேட்டு இருந்தார்.

மத்திய ரயில்வே அமைச்சர் அவர்களின் 20.4.1992 தேதியிட்ட பதில் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள குறிப்பில், Metre Gauge Line - Broad Gauge Line ஆக அகலப்படுத்தப்படும் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. Metre Gauge Line-ஐ தொடர்ந்து வைத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பது அதன் மூலம் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இப்பிரச்சினை, தென் மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிப்பதாகவும், அவர்களுக்குக் கூடுதல் பயண நேரத்தையும், கூடுதல் பிரயாணச் செலவையும் ஏற்படுத்துவதாக அமைவதோடு, தற்போது இருக்கின்ற வசதிகளைக் குறைப்பதாக இருப்பதால், இது குறித்து மத்திய அரசினை அணுகி தற்போதுள்ள Metre Gauge Line-ஐ அகலப்படுத்தாமல் தனியே ஒரு Broad Gauge Line அமைக்க வேண்டும் என்று எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(சட்டப் பேரவையில் 28.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு)

அந்நாளில் சர். பிட்டி. தியாகராயர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்புற்ற பல குடும்பங்களை இன்புற்று வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வேதனை நீக்கினார்.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28-ஆம் நாள் அன்று, தமது 73-வது வயதில் இயற்கை எய்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத்தெளிவுக்கும் உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே, தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காகச் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதிபெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட சமூகநலத் தொண்டர் சர். பிட்டி. தியாகராயர். சீரிய அரசியல்வாதியாகவும் புகழ்மிக்க சட்டப்பேரவை உறுப்பினராகவும் தேர்ந்த ஆட்சியாளராகவும் வர்த்தகத்தில் பெருமை பெற்ற தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை அவர்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நவீன முறையில் தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய இரயில் பாதைகள் அமைத்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடையவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாகப் பயன்படவும் பெரிதும் உழைத்த உத்தமர் அவர். 1914-1915-இல் முதல் உலகப்போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தவர்.

இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டும் பணியின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு வழிவகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவை மட்டும் தரும் கல்வியை அவர் சாடினார். தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார்.

கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாட்டில் செல்வ வளம் பெருக்கத் தக்க கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையிலே மாற்றம் ஏற்பட்டுத் தொழில்நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் அவர். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்கமூட்டிய சீலர் தியாகராயர்.

பேரறிஞர் அண்ணா அவர்களே கூட தியாகராயரின் சமூகப் பணிகளால் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர். பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவரது உயரிய தன்மை பற்றி-

"சர். தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்!"

- எனத் தொடங்கிப் பலபடக் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயரின் 141-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள சர்.பிட்டி. தியாகராயரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (27.4.1992).



பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில்

சமூக நலப்பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டச் சமூகநலத்துறை பெண்களின் மேம்பாட்டிற்கும், உடல் ஊனமுற்றோர்கள் மறுவாழ்வு பெறவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

1991-92-ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களுக்கான அரசின் குறியீட்டை அடைந்து இத்துறை சாதனை புரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டிற்குத் தலா ரூ.5,000 வீதம் அரசின் ஒதுக்கீட்டின்படி 295 பெண்களுக்கு ரூ.14.75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், ரூபாய் 200 வீதம் 6,255 பெண்களுக்கு ரூபாய் 12.51 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.விதவையின்மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின் மூலம் 45 பெண்களுக்கு ரூபாய் 90 ஆயிரமும், டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் மூலம் 6 பெண்களுக்கு ரூ.30 ஆயிரமும், தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ்,9 தம்பதியருக்கு ரூ.44,300ம் வழங்கப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 2 பெண்களுக்கு ரூபாய் 2,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளன. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 170 குழந்தைகளுக்கு ரூ.13,900 வழங்கப்பட்டுள்ளது. 13 பேருக்கு உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ.1,000 வீதம் ரூ.13 ஆயிரமும், கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 413 பேருக்கு ரூபாய் 19 ஆயிரமும், கடும் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 20 பேருக்கு ரூபாய் 32,500 மார்ச்சு 1992 முடிய வழங்கப்பட்டுள்ளது.

ஆபரேசன்-போலியோ சிறப்புத் திட்டம்

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்ற நபர்களுக்கு முழுமையான அளவில் மருத்துவப் பொருளாதாரக் கல்வி மற்றும் சமூக மறுவாழ்வு உதவிகள் அளிப்பதே இத்திட்டம். ஆண்டிற்கு இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு உடல் ஊனமுற்றவர்கள் பற்றிய கணக்கெடுப்புச் செய்து அதன் அடிப்படையில் மருத்துவக் குழுவின் மூலம் இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் தேர்வு முகாம்களில் தேர்வு செய்யப்படுவார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு உதவித் தொகை ரூ.400 உடன் இலவச அறுவைச் சிகிச்சை முடநீக்கியல் சாதனம், ஊன்று கோல்கள், மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், கல்வி உபகாரச் சம்பளம், கடன் உதவி, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகைபோன்ற மறுவாழ்வு உதவிகள் மாவட்டச் சமூக நல அலுவலகத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

1989-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம், கடந்த மூன்று ஆண்டுகளில் மானாமதுரை, திருப்பத்தூர், காளையார்கோவில், இளையாங்குடி, சிங்கம்புணரி, சாக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள விவரப்படி இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

ஆண்டு	திட்டம் செயல்படுத்தப் பட்ட ஊராட்சி ஒன்றியம்		பயன்பெற்ற பயனாளிகள் எண்ணிக்கை
1. முதற் கட்டம் 1989-90	1.	மானாமதுரை	226
	2.	திருப்பத்தூர்	242
		மொத்தம்	468
2. இரண்டாம் கட்டம் 1990-92	1.	இளையான்குடி	273
	2.	காளையார்கோவில்	183
	3.	சிங்கம்புணரி	223
		மொத்தம்	679
3. மூன்றாம் கட்டம் 1991-92	1.	சாக்கோட்டை	162
		மொத்தம்	162

இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் சிறப்புத் திட்டத்தில் மகளிர் மேம்பாட்டிற்கெனக் கீழ்காணும் உதவிகள் 1991-92-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு உள்ளன. தையல் கூட்டுறவு மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் தமிழக அரசின் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், சீருடை தையல்பணி வழங்கியதன் மூலம் 525 மகளிர்க்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு உறுப்பினர் ஒருவர் சராசரி கூலியாக ரூ.1,800 வரை பெற்றுள்ளனர்.

காலணி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கங்கள் மூலம் 100 ஆதிதிராவிடர் மகளிர்க்கு 30,768 இணை காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டது. உறுப்பினர் ஒவ்வொருவரும் சராசரியாக ரூ.1,230 கூலி பெற்று உள்ளனர். சாக்குக் கட்டி உற்பத்தி மகளிர் மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி முறையே 50 மற்றும் 25 மகளிர்க்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. கம்பளிப் பயிற்சி மையத்தின் மூலம் 20 நபர்களுக்குக் கம்பளித் தயாரிப்புத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

குழந்தைகள் பராமரிப்பு இல்லம்

மானாமதுரையில் இயங்கும் அரசு குழந்தைகள் இல்லத்தில் 250 குழந்தைகளுக்கு 230 குழந்தைகள் சேர்க்கப்பட்டுக் கல்வி பயின்று வருகிறார்கள்.

அரசு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.6,74,300-இல் 230 குழந்தைகள் 1991-92-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு ரூபாய் 6,59,710 செலவு செய்யப்பட்டுள்ளது.

- ந. பாலையா
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை.

பக்கிங்காம் கர்நாட்டிக் பஞ்சாலை மீண்டும் திறப்பு

கடந்த ஓராண்டுக் காலமாக மூடிக்கிடந்த பக்கிங்காம் கர்நாட்டிக்ஆலை (பின்னி ஆலை) சென்னையில் தமிழ்ப் புத்தாண்டு தினமான 13.4.1992 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை பெரம்பூரிலுள்ள இந்த ஆலையின் வளாகத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்தார்.

விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்திய பின்னி ஆலையின் செயல்தலைவர் திரு எத்திராஜன் அவர்கள், ஆலை நிர்வாகத்தினரையும் தொழிலாளர்களையும் இரு கண்களாகப் பாவித்து, இருதரப்பினரையும் அழைத்துப் பேசி, பிரச்சினையைத் தீர்த்து வைத்து, தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் ஆலையைத் திறக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பின்னர், பின்னி ஆலையின் சார்பாகவும், தொழிற் சங்கங்களின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. பாண்டியன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், 'கடந்த ஓராண்டுக்கு மேல் மூடப்பட்டுக் கிடந்த இந்த ஆலையின் சுமார் 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்கள், தமிழ்ப் புத்தாண்டில் புது வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள்' என்று கூறினார்.

பின்னி ஆலைத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திரு உ.ரா. வரதராசன் அவர்கள் பேசுகையில், 'தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முதல்வர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறார்கள். இதற்கு மைய அரசின் ஒத்துழைப்பும் வேண்டும். முதல்வர் அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்புத் தருவார்கள்' என்று கூறினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், "ஆலை மூடப்பட்டு சுமார் 12 மாதங்களுக்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி மற்றும் ஆர்வத்தின் காரணமாக இன்று 8 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களில் வாழ்வு மலர்ந்திருக்கிறது. தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் நமது முதல்வர் யாருக்கும் சளைத்தவரல்ல. எந்தத் தொழிலாளிக்கும் பாதிப்பு இல்லாமல், ஆலையைத் திறக்க முதல்வர் அவர்கள் பாடுபட்டார். கூடிய விரைவில் பின்னி ஆலை நவீன ஆலை என்ற பெயரெடுக்கப் பாடுபட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தொழிலாளர்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர் நமது முதல்வர் அவர்கள். எந்தத் தொழிலாளியும், பாதிக்கப்படாமல் தொழிலாளர்களின் வேலைக்கு உத்தரவாதம் தந்தவர் முதல்வர்' என்று கூறினார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலையின் இயந்திரத்தை இயக்கிவைத்து, ஆலையைத் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

"பழம்பெரும் பக்கிங்காம் கர்நாடிக் பஞ்சாலை, இன்று மீண்டும் திறக்கப்படும் இந் நன்நாளில், நானும் உங்களுடன் இருக்கின்றேன் என்பதை எண்ணிப்பெருமகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய இந்த மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?

கடந்த 115 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டு, வளர்ந்து, 88,208 கதிர்களையும், 2,074 தறிகளையும் தன்னகத்தே கொண்டு, இயங்கி வந்த இந்த மாபெரும் ஆலையில் ஏற்பட்ட பிரச்சினைகளை, நான் தலையிட்டுத் தீர்த்து வைத்தது தான் என் மகிழ்ச்சிக்குக் காரணம் என்றும், அதனால் மீண்டும் இன்று அது திறக்கப்படுவதை எண்ணித் தான் பெருமிதம் கொள்கிறேன் என்றும், யாரேனும் ஊகித்தால், அது சரியல்ல. ஏனெனில், கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேல் மூடிக் கிடந்த ஆலையின் தொழிலாளர்கள், ஏறத்தாழ 8,000 தொழிலாள உடன்பிறப்புகளின் இல்லங்களில், இன்று முதல் விளக்கெரியப் பேகின்றதை நினைத்துத் தான், உவகை கொண்டேன். இன்று மீண்டும் ஏற்றப்படும் அந்தத் திருவிளக்குகள், என்றும் அணையாது, தனது இருகரம் கொண்டு இந்த அரசு காக்கும் என்பதை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு தொழிற்சாலை மூடப்படுவதற்குப் பலவேறு காரணங்கள் இருக்கலாம். என்னைப் பொறுத்தமட்டில், இந்த ஆலை மூடப்பட்டிருப்பது தெரியவந்த உடன், என் கண் முன் தோன்றியது, அதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட 8,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்கள் தான். மாதந்தோறும் ஊதியம் பெற்று, அதனையே நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த, ஆயிரக் கணக்கான தொழிலாள உடன் பிறப்புக்களின் குடும்பங்கள், நிலை குலைந்து தடுமாறி, தாங்கொணாத்துயரம் அடைகின்றனரே என்ற எண்ணம் தான்.

திருப்பூரில் ஏற்றுமதி மையம்

பின்னலாடை தொழிலுக்கு சிறப்புப் பெற்ற திருப்பூரில் ஏற்றுமதி மையம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத் தின்கீழ், திருப்பூர் நகருக்குத் தேவையான குடிநீர் வசதி, சாலை வசதி, மின் விளக்கு, கழிவுநீர் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படும். இந்தப் பணி தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதி நிறுவனத்திடம் ஒப்படைக்கப் படும் என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (7.4.1992).

நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே, பல்வேறு பிரச்சினைகள் இருக்கலாம். அவை ஒரு சாராரின் நியாயமான கோரிக்கைகளாகக் கூட இருக்கலாம். ஆனால், அந்தக் கோரிக்கைகளை நிதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாமல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதோ, அல்லது கதவடைப்பில் முடிவாவதோ, என்னால் என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும்.

ஆலை நிர்வாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளினால், உண்மையாகப் பாதிக்கப்படுபவர்கள், பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் குடும்பத்தினரே.

கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேற்பட்ட இந்த ஆலையின் கருப்பு நாட்களில், எத்தனைத் துயரங்களையும், வேதனைகளையும், அன்புத் தாய்மார்களும், அவர்தம் குழந்தைகளும் அனுபவித்தனர் என்பதை எண்ணிப் பார்த்தால், என் கண்கள் கலங்குகின்றன.

தனியார் துறை ஆலையின் பிரச்சினைதானே இது, அரசு ஏன் இதில் தலையிட வேண்டும், என்ற ஐயப்பாடு கூட, ஒரு சிலருக்கு ஏற்படலாம். நான் ஒன்றை இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது தனியார் பிரச்சினை அல்ல. பல்லாயிரக்கணக்கான இந்த ஆலைத் தொழிலாளர்களின் இல்லப் பிரச்சினை. தவறு ஏதும் செய்யாத அவர்களின் குடும்பத்தினர், தண்டிக்கப்படும் வாழ்க்கைப் பிரச்சினை.

எனவேதான், நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல், இந்த ஆலையின் பிரச்சினைக்கு, சுமூகமான ஒரு தீர்வு காணவேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டேன்.

ஒரு காலக்கட்டத்தில், ஆலையின் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம், உணவுப் பொருட்களை விநியோகம் செய்யக்கூட, போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தால், உணவுப் பொருட்களை வழங்குவதை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட பொழுது, ஏறத்தாழ 9 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கான உணவுப் பொருட்களையும், இதர பண்டங்களையும், Tamil Nadu Civil Supplies Corporation-இல் இருந்து, கடனாக வழங்க ஆணையிட்டேன்.

ஏனென்றால் மூடிக்கிடந்த இந்த ஆலையின் தொழிலாளர்களின் குடும்பங்கள், பசியினால் வாடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் தான்.

மேலும் சென்ற ஆண்டு, தீபாவளித் திருநாளை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்களே, ஆனால், தமிழகத்தில் மூடிக்கிடக்கும் ஆலைத் தொழிலாளர்களின் குடும்பத்தினர், அதனைத் துக்க நாளாகக் கொண்டாடும் நிலை ஏற்பட்டுவிட்டதே, என்ற ஆதங்கத்தில் தான், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏதாவது ஒரு சிறு உதவியாவது செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்து, 400 ரூபாய் வீதம், இந்த ஆலையின் 8,136 தொழிலாளர்களுக்கும், உரிய நேரத்தில் உதவித் தொகை வழங்க ஆணையிட்டேன்.

இந்த ஆலையின் பிரச்சினை ஒரு சுமூகமான முடிவுற்கு வராமல், வளர்ந்துகொண்டே சென்றதால், ஆலையின் நிர்வாகத்தையும், அனைத்துத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும், கடந்த 4.2.1992 அன்று நேரில் அழைத்து, கலந்துரையாடி, இன்று இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். அன்றைய தினம் நான் விடுத்த அன்புக் கட்டளையை ஏற்று, ஆலை நிர்வாகத்தினரும், தொழிற் சங்க நிர்வாகிகளும், தொழிலாளர்களும், நான் குறிப்பிட்ட நாளிலேயே ஆலையை மீண்டும் திறப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு, நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

வரவேற்புரை ஆற்றிய திரு எத்திராஜ் அவர்கள், இனிமையாக இத் தொடக்கத்தை அமைக்கும் முகத்தான், ஒவ்வொரு தொழிலாளருக்கும் இனிப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து மேலும் சில இனிப்புச் செய்திகளை, இங்கு நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கொடுத்துள்ள கடன் தொகையான 9 இலட்சம் ரூபாயை, தொழிலாளர்களிடமிருந்து 9 தவணைகளில் பிடித்தம் செய்துகொள்ள வேண்டும், என்ற உங்களின் கோரிக்கை, எனது கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஓராண்டிற்கு மேல் அல்லல்பட்ட நீங்கள், ஊதியம் பெறாத காலத்தில், வாழ்க்கைக்கு வழி இல்லை என்ற நிலையில், கடனாக வழங்கப்பட்ட இந்த 9 இலட்சம் ரூபாயையும், மனிதாபிமான அடிப்படையில், பிடித்தம் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துள்ளேன். எனவே நீங்கள் அந்தக் குறிப்பிட்ட கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகத்தினரும் அதனைப் பிடித்தம் செய்ய மாட்டார்கள். உங்களது இந்தக் கடனை, அரசே ஏற்கும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உங்களது B & C Mills Employees Co-operative Society-யின், சென்ற ஆண்டுக் கடனின் வட்டித் தொகையைத், தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் உள்ளதாக, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இது குறித்த மட்டில், வங்கிக் கடனைத் திரும்பச் செலுத்தினால் தான் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, சென்ற ஆண்டின் வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், உங்கள் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து இயங்குவதற்கு உதவும் வகையில், இந்த ஆண்டு செலுத்த வேண்டிய வட்டித் தொகையை ஒத்தி வைத்து, தவணைகளில் அதை செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

• நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். நமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.

— தந்தை பெரியார்

ஆலையின் நிர்வாகத்தினர், சில புதிய திட்டங்களையும் இங்கே அறிவிக்குமாறு, என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அதன்படி, இனி ஒவ்வொரு ஆண்டும், 25 ஆண்டுக்காலப் பணியினை முடித்த ஒவ்வொரு தொழிலாளருக்கும், ஒரு கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும்.

இந்த ஆண்டு முதல், பணியில் உள்ள தொழிலாளர் எவரேனும் அகால மரணமடைந்தால், மனிதாபிமான அடிப்படையில், அவரது வாரிசுதாரர் ஒருவருக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த ஆலையிலேயே வேலை கொடுக்கப்படும்.

இந்த ஆண்டு முதல், தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பள்ளிக் கட்டணத்தை,ஆலையின் நிர்வாகமே செலுத்தும். அவர்களுக்குத் தேவையான பள்ளிச் சீருடைகளையும் நிர்வாகமே இலவசமாக வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவிலேயே, நான் ஏற்கெனவே கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வழங்கப்படும் ஒரு மாத ஊதியத்துடன், சென்ற ஆண்டிற்கான போனஸ் தொகையும் சேர்த்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, ஒவ்வொரு தொழிலாளருக்கும் இன்று இரண்டு மாத ஊதியம் வழங்கப்படும், என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

இத்தனை மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் மீண்டும் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கும் தொழிலாளர் குடும்பங்கள், அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் பெற்று, வாழ்க்கையில் உயர வேண்டும், என்ற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆலையினை மீண்டும் திறந்தது குறித்து, ஒரு சிலர், அரசு இறங்கி வந்தது, போராட்டம் வெற்றி கண்டது, என்பது போன்ற வக்கிரமான சுயநலக் கருத்துக்களைத் தெரிவித்தாலும், இந்த

அரசின் உண்மையான முயற்சிகள், உலகம் அறிந்தது. அதைவிட நீங்கள் ஒவ்வொருவரும் மிகவும் நன்றாகவே உணர்ந்திருக்கின்றீர்கள். எனவே, அதுபற்றி நான் ஏதும் குறிப்பிட விரும்ப வில்லை. உரிமைக்காகப் போராடுங்கள். ஆனால், உங்களது குடும்பத்தினரின் வாழ்க்கையை இருட் டாக்காதீர்கள். அவர்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைச், சிறிது சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் உங்களது கடமைகளை உணர்ந்து செயல்பட்டால், கடந்த ஓராண்டுக் காலத்தில் ஏற்பட்ட அவல நிலை போன்று, இனி என்றென்றும் நிகழாது.

இந்தத் தருணத்தில், தமிழகத்திலுள்ள அனைத்து நிர்வாகத்தினரையும், தொழிற் சங்க உடன்பிறப் புக்களையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எக்காரணத்தைக் கொண்டும் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற அழிவுச் செயல்களில் ஈடுபடாதீர்கள்.

எத்தகைய பிரச்சினையாக இருப்பினும், அதனை அமைதியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளினால் 'தான், ஓராண்டிற்குமேல் மூடிக்கிடந்த இந்த ஆலை இன்று மீண்டும் திறக்கப் பட்டுள்ளது. உரிமைகளையும் கடமைகளையும் சரி யாகச் சீர் தூக்கிப் பார்த்தால், உங்களின் வீடுகள் நலம் பெறும், அதனால் நாடும் நலம் பெறும் என் பதைத் தெரிவித்து, இந்த இனிய விழாவில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொண்டு, உங்கள் வாழ்க்கை ஒளிமயமாக அமைய வேண் டும், உயரவேண்டும் என வாழ்த்துகிறேன்."

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த் திய பின், பின்னி ஆலைத் தொழிலாளர்களுக்கு இனிப்புடன் கூடிய டிபன் கேரியர்களையும், 25 ஆண்டுகள் பணி முடித்த தொழிலாளர்களுக்குக் கைகடிகாரங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.

பின்னி ஆலையை மீண்டும் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, வெள்ளி யாலான ஆலையின் சின்னத்தை ஆலையின் நிர் வாகிகள் நினைவுப் பரிசாக வழங்கினார்கள்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக் களும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களும் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் இயக்குநர் திரு. எஸ். நடராஜன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: ஜேசி.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ), ரூபாய் 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 21.3.1983-இல் ஒரு அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. 31.3.1991-ஆம் நாளன்று உள்ளபடி இந்நிறுவனத்தின் அரசின் மூலதனப் பங்கு ரூ.2.50 கோடியாகும். இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:-

- தமிழ்நாட்டில் தோல் தொழிலை வளர்ச்சி யடையச் செய்தல்.
- தோல் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர் களுக்கு உதவியளித்தல்;
- சிறிய தோல் பதனீட்டாளர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல்;
- தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

இந்நிறுவனத்தின் 1990-91-ஆம் ஆய்வு ஆண்டின் மொத்த விற்பனை அளவு ரூ.742.30 இலட்சமாகும். கடந்த ஆண்டு 1989-90-இல் இதன் அளவு ரூ.931.13 இலட்சமாகும்.

இவ்வாண்டில், இந்நிறுவனம் காலணி மற்றும் தோல் பொருட்கள் குறித்த 7 பொருட்காட்சி களில் கலந்து கொண்டுள்ளது. இத்தகைய பொருட் காட்சிகளின் மூலமும் விற்பனை நிலையங்களின் மூலமும் நடைபெற்ற விற்பனையில் ஈட்டிய ஆதாயம் முறையே ரூ.54.74 இலட்சம், ரூ.6.77 இலட்சம் ஆகும். பொருட்கள் வங்கிகள் மூலம் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விற்பனைத் தொகையும் அதன் மூலம் கிடைத்த ஆதாயத் தொகையும் முறையே ரூ.45.80 இலட்சமும், ரூ.5.92 இலட்சமும் ஆகும்.

இலவசக் காலணி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.437.25 இலட்சம் செலவில் ரூ.6.50 இலட்சம் இணை காலணிகளை வழங்கும் பணி இந்நிறு வனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனம் 31.3.1991 வரையான காலத்தில் ரூ.116.49 இலட்சம் மதிப்புள்ள 7.06 இலட்சம் இணை காலணிகளை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் இந் நிறுவனம், 2,500 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட இணைப்புப் பாலங்களேயாகும்!

இந்து சமய அறநிலையத்துறை விவாதங்களுக்குச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் பதிலுரை

உலக அளவில் இன்றைக்கு இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்ப்பனவற்றுள் முதன்மையானது இந்தியாவின் ஆம்மீகச் சிறப்பு. சமய நெறி முறைகள் பலவும் தழைத்தோங்கி, அவற்றைச் சார்ந்த அறம் கூறும் நல்லோர் பலர், இறையுணர் வுக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வழி பாட்டுத் தலங்களைப் படைத்து, நமது பண்பாட்டி னைச் செம்மையாக்கிய பாங்கினை, நமது நாட்டின் பிற பகுதிகளைக் காட்டிலும் தமிழகத்தில் நாம் நன்கு காணலாம்.

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் ஒவ்வொன் றும், பழமைக்கும் புதுமைக்கும் உள்ள இணைப்புப் பாலங்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் நமது திருக்கோயில்களின் வரலாற்றுப் பின்னணி, அவற்றின் ஆன்மீகச் செறிவு, அவை வெளிப்படுத்தும் கலையழகு ஆகியவை நமக்குப் பழமையின் சாதனையை எடுத்துரைக்கும் கலாச் சாரக் கருவூலங்கள். அதே நேரத்தில், அந்தத் திருக்கோயில்களில் புதைந்துள்ள அரிய கலைச் செல்வங்கள், இன்றைக்கும் நாம் கற்றுணர வேண்டிய பல்வேறு உண்மைகளையும் மாபெரும் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கலைப் பொக்கிஷங்கள். சிற்பம், ஓவியம், இசை, மற்றும் தத்துவம் என்று பல்வேறு துறைகளிலும், காலத்தின் மாற்றத்தினால் எழுந்துள்ள புதிய சிந்தனைகளுக்கும்கூட விளக்கம் தருபவைகளாக அவை அமைந்துள்ளன. எனவே, நமது திருக் கோயில்களைப் 'புதுமையின் உறைவிடம்' என்று கூறுவது சாலப்பொருந்தும்.

எங்கள் அரசு கோவில் நிர்வாக வாரியம் (Temple Administration Board) என்ற அமைப் பினை ஏற்படுத்தி அதன் மூலம் எத்தகைய சீரிய முறையில் தமிழகத் திருக்கோயில்களைப் பரா மரிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்பது இத்துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், அரசின் தலையீடு திருக்கோயில்களின் நிர்வாகத்தில் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும் என்ற ஒரு வாதம் இன்றைக்கும் கூறப் பட்டு வருவதையும் நான் அறிவேன்.

அரசு என்பது நிர்வாகத்தை நடத்துகின்ற ஒரு வெற்று இயந்திரம் அல்ல. எங்களைப் பொறுத்த வரையில் ஆறு கோடித் தமிழக மக்களின் உள் ளார்ந்த உணர்வுகளையும், எதிர்பார்ப்புகளையும்,



இலட்சியங்களையும் கண்டறிந்து, அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற ஒரு மக்களாட்சி அமைப்புதான் அரசாங்கம். எனவேதான், ஒரு குறிப்பிட்ட சாராரின் எதிர்ப்புகளைப். பொருட் படுத்தாமல், சவால்களைச் சந்தித்து, மக்களாட் சிக்கு மாட்சிமை சேர்க்கவேண்டும் என்ற எங் களின் நல் உணர்வுகளின் வெளிப்பாடுதான் எங்கள் அரசின் செயல்பாடு. திருக்கோயில்களை யும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளை நிறுவனங் களையும் பராமரிப்பதில் சிலர் நினைப்பது போன்று, தேவையற்ற நிர்வாகத் தலையீடுகள் இருக்காது. ஆனால், அதேநேரத்தில் இந்த அரசு ஆக்கபூர்வமான விஷயங்களில் தலையிட்டு, தனது சீரிய பங்கினைச் செயலாற்ற என்றைக்கும் தயங்காது.

தமிழகத்தின் தனிச் சிறப்பான ஆலயங்களின் புனிதம் காக்கப்படும்; மரபுகள் கெடாத வகையில் இந்தியக் குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற்று, 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ஆம் நாள் முதல் செயல்படுகின்ற வகையில், தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப் பட்டது. இந்த வாரியத்தில் சைவ, வைணவத் திரு மடங்களின் மடாதிபதிகள், சமயச் சான்றோர்கள், ஆன்மீகப் பெரியோர்கள் மற்றும் சட்ட வல்லு நர்கள், கோவில் நிர்வாகத்தில் ஆர்வமும் அக் கறையும் கொண்ட சான்றோர்கள் உறுப்பினர் களாக உள்ளனர். இவ்வாறு உயர்ந்த பெருமக்கள் பங்கு கொண்டிருப்பதன் மூலம், தமிழகம் முழு வதுமுள்ள ஆலயங்கள், மற்றும் அறநிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் பணி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆலய நிர்வாகத்தில், மாநில அளவில், தமிழ்நாடு மாநில ஆலய நிர்வாக வாரியமும், மாவட்ட அளவில், மாவட்டக் குழுக்களும் உள்ள

ஏறத்தாழ 400 கோயில்களுக்கு

மூலதன வைப்புநிதி

ஏற்படுத்த முடிவு!

கோயில் நிர்வாகங்கள் சீரமைக்கப்படும். பக்தர்கள் மனதைப் புண்படுத்தும் வகையிலான எக்காரிய மும் தமிழகத்தில் அனுமதிக்கப்பட மாட்டாது என்று, எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தோம். மேலும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில் களைத் தவிர, தமிழகக் கிராமங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான சிறுசிறு புராதனக் கோயில்கள், பராமரிப்பு இன்றிப் பாழ்பட்டுக் கிடக்கின்ற நிலையில், அவைகளை நன்கு பரா மரித்து, அவற்றின் அன்றாடப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்திருந் தோம். அந்த அறிவிப்புக்குச் செயல்வடிவம் கொடுக்கின்ற வகையில், 'தமிழ்நாடு ஆலய நிர்வாக வாரியம்' என்ற அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதனிடம் ஆலயங்களின் நிர்வாகத்தை ஒப்படைக்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் கொண்டுவருவோம் என்று, சென்ற மானியக் கோரிக்கையின்போது நான் தெரிவித்திருந்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, அவை இரட்டை அடுக்கு அமைப்பு உருவாக்கப்பட்டுள் ளது. ஆலயத்தின் ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேலும் உள்ள ஆலயங்களின் அறங்காவலர் குழுவை, மாநில அளவில் அமைக் கப்பட்டிருக்கின்ற ஆலய நிர்வாக வாரியம் அமைக்கும்.

அதேபோன்று, மாவட்ட அளவிலே, ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கீழே உள்ள ஆலயங்களுக்கு, அறங்காவலர்களை நியமிக்கும் பொறுப்பு, மாவட்டக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டு உள்ளது. அண்மையில் மாநில அளவிலான ஆலய நிர்வாக வாரியத்தின் முதல் கூட்டம் கூட்டப்பட்டு, ஆலயத் திருப்பணிகள், உற்சவத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு, திருமண மண்டபங்கள் மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல் போன்ற பொருட்கள், அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு, திருப்பணிகளுக்கு ரூ.3.19 கோடி அளவிற் கான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள் ளது. மேலும், மாநிலம் முழுவதும் 17 மாவட்டக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(33—ஆம் பக்கம் பார்க்க)

கபாலீசுவரர் கோயில் திருக்குளச் சீரமைப்பு

சென்னை-மயிலாப்பூரில் நடைபெற்ற அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் திருக்குளச் சீரமைப்புத் துவக்கவிழா 13.4.1992 அன்று சிறப்புடன் நடைபெற்றது.

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை-தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியத்தின் சார்பில் நடத்தப் பெற்ற இவ்விழாவில், அவ்வாரியத்தின் தலைவரும், மாண்புமிகு தமிழக முதல்வருமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுத் திருக்குளச் சீரமைப்புப் பணியைத் துவக்கிவைத்தார்.

விழாவுக்கு வருகைதந்த அவரை மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், டில்லியில் உள்ள மாண்புமிகு தமிழக அரசு சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பித்துரை, மாண்புமிகு துணைச் சபாநாயகர் திரு. பொன்னுசாமி, மாண்புமிகு அரசு கொறடா, திரு. கா.ப. பட்டாபிராமன், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் மயிலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.எம். ரங்கராஜன், டாக்டர் ஸ்ரீதரன் எம்.பி. ஆகியோரும் வர வேற்றுத் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பூச்செண்டுகள் வழங்கியும் பொன்னாடை அளித் தும் தெரிவித்துக் கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, வேத மந்திரங்களும், நாதசுரமும் முழங்கப் பூரணகும்ப மரியாதையுடன் விழாக் குழுவினர் வரவேற்றார்கள். அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கப் பட்டது.



அறநிலையத்துறைச் செயலாளர் திரு. சி. தங்கராசு அவர்கள் தம்முடைய வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''இக்கோயில் திருக்குளத்தில் 1987-ஆம் ஆண்டு தெப்பத் திருவிழா நடைபெற்றது; அதற்குப் பிறகு தண்ணீர் இல்லாததால் தெப்பத் திருவிழா நடைபெறவில்லை.

''2.3.1992-இல் நடைபெற்ற திருக்கோயில் களின் நிர்வாக வாரியக் கூட்டத்தில் மயிலாப்பூர் கோயில் திருக்குளத்தின் சீரமைப்புப்பற்றி ஆராயப் பட்டது. ஒரு கோடி ரூபாய் செலவில் குளச் சீரமைப்புப் பணி செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கூட்டத்தில் முடிவு செய்து 35 இலட்சம் ரூபாயை முதல்கட்டமாக ஒதுக்கினார்; குளத்தில் இரண்டடி உயரத்திற்குக் களிமண் போடப்படும்; அதன் பிறகு அதற்கு மேல் அரை அடி உயரத்திற்குக் குறுமணல் போடப்பட்டுத் தண்ணீர் தேக்கிவைக்கப்படும். இந்தத் தண்ணீர் எப்போதும் சுத்தமாக வைத்திருக்கப்படும். எப் போதும் போல அடுத்த தை மாதம் பௌர்ணமி நாளன்று இங்கே மிகச் சிறப்பாகத் தெப்போற் சவம் நடைபெறும்'' -இவ்வாறு செயலாளர் பேசினார்.

இதையடுத்து மங்கள இசை முழங்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்துத் திருப்பணி துவக்கம் குறித்த கல்வெட் டைத் திறந்துவைத்தார்.

பெயர்ப் பலகைக்கு முன்னால் வெள்ளிமயில் மின்ன-வெள்ளியால் ஆன சிவலிங்கமாகக் கபாலீசுவரர் விக்கிரகம் அலங்கரிக்கப்பட்டிருந் தது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரங்கூப்பி வணங்கிவிட்டு அங்கிருந்து மகிழ்வுடன் விடை பெற்றார்.

விழாக் கோலம் பூண்டிருந்த மயிலாப்பூரில் - இந் நிகழ்ச்சியை ஏராளமாகத் திரண்டிருந்த மக்கள் கண்டுகளித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தி வாழ்த்தொலி முழக்கினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
இல. இராசேந்திரன்.

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் 1990-91-ஆம் ஆண்டில், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.11 இலட்சம் செலவில் நிலம் கையகப்படுத்தப் பட்டு 2 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

ரூ.14 ஆயிரம் மதிப்பில் 20 நபர்களுக்குச் சலவைத் தொழில் செய்ய உதவி செய்தலின் பொருட்டு, சலவைப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. 11 நபர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்குத் தலா ரூ.1,500 வீதம் ரூ.16,500 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தூய்மையாகப் பராமரிக்கப்படும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வானொலிப் பெட்டி வழங்கும் திட்டத்தின்கீழ், 6 ஆதிதிராவிடர் கிராமங்களுக்குத் தலா ரூபாய் ஒரு ஆயிரம் வீதம் ரூ.6 ஆயிரம் செலவில் வானொலிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

இலவசக் காலணிப் பணிக்கூடம் வழங்கும் திட்டத்தின்கீழ், 1991- 92-ஆம் ஆண்டில் 9 நபர்களுக்கு 99 ஆயிரம் மதிப்பில் இலவசக் காலணிப் பணிக்கூடம் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

சிறு, குறு விவசாயிகளுக்குப் பாசனக் கிணறுகள் இலவசமாக வெட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், 21 கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

7 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.90 ஆயிரம் மதிப்பில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்பு களுக்குச் சாலை வசதி, மயானச் சாலைக்குப் பாதை வசதி, தெரு விளக்கு போன்ற வசதிக்கு ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

நம்மோடு நமக்காக

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டி விட்டார். படைக்கலன்களும் தாயார். முரசும் கொட்டிவிட்டுக் கூப்பிடுகிறார்.

''கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே''

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட் போரின் வளைந்த முதுகை நிமிர்த்திவிடும் வீரக் குரலாகிவிட்டது. எனவேதான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்துவிட்டார். நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார். அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். `அவர் வாழ்க. அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றி யினால் நமக்கு வெற்றி ஓங்குக' என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடே கூறு கிறது.

—பேரறிஞர் அண்ணா.

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்

மகளிர் காவல் நிலையம்

சென்னை மாநகரில் - முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 13.4.1992 அன்று கிரீம்சு சாலையில் தொடங்கிவைத்தார்.

காவல் துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் அவர்கள் மலர்ச் செண்டு கொடுத்தும் - அக் காவல் நிலையம் அமைந்துள்ள ஆயிரம் விளக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு சட்ட அமைச்சருமான திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பொன்னாடை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்கள்.

குதிரைப் படை அணிவகுத்து நிற்க, விழா மேடைக்கு வருமுன் பெண் காவலர்கள் மாண்புமிகு முதல்வருக்கு அணிவகுப்பு மரியாதை அளித்தார்கள்.

பெண் காவலர்கள் புதிய நிலையத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்து - பார்வையாளர் சிறப்பேட்டில் குறிப்பெழுதி முதல் கையெழுத்திட்டார்; கட்டடத்தைச் சுற்றிப் பார்த்தார்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் முதலான, சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலரும் வருகை தந்திருந்தார்கள். அரசு தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளும், காவல்துறை உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

வரவேற்புரை:

காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் ஒளிமயமான எதிர்காலம் அமையப் பாடுபட்டு வருகிறார். இந்த இனிய தமிழ்ப் புத்தாண்டு நாளில், இங்கே மகளிர் காவல் நிலையம் அவர்களது திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுவது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி தருவதாகும்.

'வேண்டப்பட்டது அறிவோ இனி, வேண்டப்பட்டது திருவோ இனி' என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகப்படி - காவல் துறையினராகிய நாம் கேட்காமலே இந்தப் பத்துமாத காலத்தில் பல்வேறு உதவிகளையும் சலுகைகளையும் நமக்களித்துள்ள அவர்களுக்கு, மனநிறைவைத் தரும் வகையில் நாம் பணியாற்றுவோம் என்று இந்நாளில் உறுதிகூறிச் செயல்படுவோம்''

- இதன்பின், 'டாக்டர் புரட்சித் தலைவி வாழ்க' என்ற பொதுமக்களின் வாழ்த்து முழக்கங்கள் தொடர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

பெண் காவல் நிலையப் பணிகள்

சென்னை நகரக் காவல்துறையில், 1973-ஆம் ஆண்டு முதன்முதலாகப் பெண் காவல் பிரிவு தொடங்கப்பட்டது; இந்தப் பிரிவு தமிழ்நாட்டிலேயே முதன்முதலாகத் தொடங்கப்பட்டதாகும். இந்தப் பிரிவில் ஒரு பெண் உதவி ஆய்வாளர், ஒரு பெண் தலைமைக் காவலர் மற்றும் 20 பெண் காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

இந்தப் பிரிவு படிப்படியாகப் பலப்படுத்தப்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன், ஒரு ஆய்வாளர், 3 உதவி ஆய்வாளர், 6 தலைமைக் காவலர் மற்றும் 24 பெண் காவலர்களைக் கொண்ட 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' தொடங்க முடிவு எடுக்கப்பட்டது. சென்னை நகரில் பெண் காவலர்களின் எண்ணிக்கை தற்போது ஒரு ஆய்வாளர், 12 உதவி ஆய்வாளர், 26 பெண் தலைமைக் காவலர் மற்றும் 140 பெண் காவலர்கள் (மொத்தம் 179) கொண்டதாக உள்ளது.

இந்தத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று தொடங்கப்படுகின்ற 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' சென்னை நகர் முழுவதும் அதிகார வரம்பைக் கொண்டது. பெண்கள், வரதட்சிணைக் கொடுமை, அநீதி இழைப்பு இன்னபிற புகார் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் பகுதி எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம்; அப்படி அவர்களுக்கு அங்கே புகார் கொடுக்கத் தயக்கமாக இருந்தால், சென்னை நகரம் முழுவதும் அதிகார வரம்பு உள்ள இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையத்'திற்கு வந்து புகார் கொடுக்கலாம். இந்த 'அனைத்துப் பெண் காவல் நிலையம்' பெண் புகார்தாரர்களின் குறைகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

அனைத்துப் பெண் காவல் நிலையத்தின் பணிகள் விவரம் வருமாறு:-

1. பெண்களுக்கு எதிரான அச்சுறுத்தல், வன்முறை, காயப்படுத்துதல் போன்ற குற்ற வழக்குகளில் தக்க நடவடிக்கை எடுத்தல்.

2. பெண்களுக்கு எதிராக நடைபெறும் வரதட்சிணைக் கொடுமை வழக்குகளை விசாரித்தல்.

3. பாதிக்கப்பட்ட இளங்குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட புகார்களை விசாரணை செய்தல்.

4. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் குற்றவாளிகளைப் பரிசோதித்து விசாரணை செய்தல்.

5. இளங்குற்றவாளிகள் மற்றும் பெண் கைதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து அழைத்துச் செல்லுதல்.

6. பெண்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணி செய்தல்.

7. பெண்களைச் சோதனை செய்தல் மற்றும் கோவில், பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் பெண்களுக்கு உதவியாக இருத்தல்.

8. விபச்சார ஒழிப்புப் பிரிவுச் சட்டத்தை அமல் செய்வதில் விபச்சார ஒழிப்புப் பிரிவினருக்கு உதவியாக இருத்தல்.

9. பெண் சாட்சிகளை விசாரிப்பதில், விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு உதவியாக இருத்தல்.

அவர்கள் பேச்சு முழுவிவரம் வருமாறு:

''காவல் துறையின் சரித்திரத்திலேயே இன்று ஒரு புரட்சிகரமான நாள். உலகில் எங்குமே பொதுவாக மகளிருக்குத்தான் காவல் தேவை என்று இருந்த நிலை மாறி, மகளிரே காவலர்களாகி, இன்று தனியே இயங்கும் மகளிர் காவல் நிலையம் தொடங்கப்படுகின்றது என்ற பரிணாம வளர்ச்சியைக் காணும் பொழுது, எனக்குப் பெருமையாக இருக்கின்றது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அனைவரும் - பெண்களைப் பேணிக்காக்க வேண்டும், அவர்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகர் சம உரிமை பெற வேண்டுமென்று போராடிய சத்திய சீலர்கள்.

அவர்கள் வழி நடக்கும் எங்கள் அரசின் காலத்தில்தான், அகில இந்தியாவிலேயே முதன்முறையாக, முற்றிலும் மகளிரே பணிபுரியும் காவல் நிலையம், ஓர் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்படுவதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்டம் முழுமைக்கும்...

இந்த மகளிர் காவல் நிலையம் ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தாலும், இதன் ஆளுகை எல்லை, மற்ற காவல் நிலையங்களைப் போல் குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் அல்லாமல், சென்னை மாவட்டம் முழுமைக்கும் செயல்படத்தக்க வகையில், தனித்தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளது. பெண்களின் நலன் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் காவல் நிலையத்தில், சென்னை மாவட்டத்தின் எந்தப் பகுதியைச் சார்ந்த பெண்களாக இருந்தாலும், அவர்கள் தங்கள் புகார் மனுக்களை இந்தக் காவல் நிலையத்தில் கொண்டுவந்து கொடுக்கலாம். இக்காவல் நிலையம் அவற்றைப் பெற்றுக்கொண்டு, முறையாகப் பதிவு செய்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் தொடர முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நமது தாய்மார்களும், சகோதரிகளும் தங்களது வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளையும், துயரங்களையும் அனுபவித்து வருகிறார்கள். சொல்ல முடியாத சில பிரச்சினைகளில் சிக்குண்டு, தாங்கொணாத் துயரம் காரணமாகத் தற்கொலை செய்துகொள்ளும் சூழ்நிலைக்குக் கூட தள்ளப்படுகிறார்கள். தங்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து உதவ, யாரும் இல்லாத நிலையில் இருக்கும் இந்த அபலைச் சகோதரிகள், தங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினையும், அநீதியினையும் வெளியில் சொல்லக் கூட வெட்கப்பட்டுத் தன்னுள்ளே மனம் புழுங்கி, செய்வதறியாது வாழும் நிலை சில இடங்களில் இன்றும் நிலவுகிறது.

சட்டத்தில் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருந்தபோதிலும், தனிப்பட்ட தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, அவர்கள் காவல் நிலையத்தை அணுகுவது அரிது. ஏனெனில், ஆண்களே பெரும்பாலும் பணிபுரியும் காவல் நிலையங்களில், தங்களது சோகக் கதையை வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றி எடுத்துச் சொல்லத் தயங்குகிறார்கள். எனவே அங்கு செல்வதையே தவிர்க்கிறார்கள். எனவே அங்கு தன் தலைவிதி இதுதான் என்று நொந்து, தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க வேண்டுமென்று, எங்கள் அரசு கொண்டுள்ள எண்ணத்தின் வெளிப்பாடு தான், இன்று இங்கே தொடங்கப்பட்டுள்ள, தமிழகத்தின் முதல் மகளிர் காவல் நிலையம். இக் காவல் நிலையத்திற்குத் தங்களது குறைகளை எடுத்துச் சொல்ல, பெண்கள், எவ்விதத் தயக்கமும் இன்றி வந்து பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வாழ்க்கையில் எவ்வித உதவியும் இன்றி நிராதரவாய் நிற்கும் பெண்களுக்கு, இப்புதிய திட்டம் நல்லதொரு பாதுகாப்பு அரணாக அமையும் என்று, நான் திடமாக நம்புகிறேன்.

தாயன்பின் மேன்மை

தாயின் அன்பை உணராதோர் உலகில் இல்லை. அந்த அன்பு எதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத உயர்ந்த ஒன்றாகும். தவறு செய்யும் குழந்தைகளைத், தாயன்பால் நிச்சயமாகத் திருத்த முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவ்வாறே மகளிர் காவலர்களின் கடந்த காலப் பணியினை உற்று நோக்கினால், குற்றவாளிகளின் மன மாற்றத்திற்கு, அவர்களின் அணுகுமுறை பேருதவியாக இருந்துவருவது தெரியவரும்.

பெரும்பாலும் இளங் குற்றவாளிகளும், முதல் முறையாகக் குற்றம் புரிவோர்கள் பலரும், அவர்கள் செய்துவிட்ட குற்றத்தினை எண்ணி வருந்தும் நிலையிலேயே இருப்பார்கள். அந்த மனநிலையில் உள்ளோரை, மீண்டும் தவறு செய்யாமல் நிரந்தரமாகத் தடுத்தாட் கொள்ளும் திறமை, மகளிர் காவலர்களிடையே உள்ளது. இதுபோன்ற குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி, கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்தும், அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம், பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கின்றது.



எனவேதான் முற்றிலும் மகளிரையே கொண்ட காவல் நிலையத்தை அமைக்கலாம்; அதில் குறிப்பாக இளங் குற்றவாளிகளையும், முதல் குற்றவாளிகளையும் கையாளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. சட்டங்களின்படி ஒருவர் புரிந்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்பட்ட போதிலும், அவர் மீண்டும் குற்றங்கள் செய்யாமல் தடுக்கத் தேவையான முயற்சிகள், இதுவரை காவல் துறையினரால் மேற்கொள்ளப்படவில்லை.

திருத்தும் முயற்சி

ஆக்கபூர்வமான இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால், நாள்தோறும் உயர்ந்து கொண்டே இருக்கும் குற்றவாளிகளின் பட்டியலை, நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும். இது மேலும் சிறப்பாகச் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வழிவகுக்கும்.

முதல் முயற்சியாக மேற்கொண்டுள்ள இந்தப் புதிய மகளிர் காவல் நிலையம், அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்யும் என்று நம்புகிறேன். இந்த மகளிர் காவல் நிலையத்தில், ஒரு காவல்துறைப் பெண் ஆய்வாளரும், 3 பெண் உதவி ஆய்வாளர்களும், 6 பெண் தலைமைக் காவலர்களும், 24 பெண் காவலர்களும் பணியில் இருப்பார்கள்.

இப்புதிய திட்டத்தின் செயல்பாட்டினை, மூன்று மாத காலத்திற்குக் கண்காணித்து, தேவை இருப்பின் தக்க மாற்றங்கள் செய்து, அனைத்து மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். அதன் பின்னர், இதர முக்கிய நகரங்களுக்கும்விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுவகைச் சீருடை

பெண் காவலர்களுக்கான சீருடை, விரைவில் மாற்றி அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் தெரிவித்தேன். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் பணிபுரியும் பெண் காவலர்கள், புதிய மாதிரியான சீருடையை அணிவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் கலந்துகொண்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று தொடங்கப்பட்டுள்ள மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் துறையினர், சிறப்பாகப் பணியாற்றி, இத்திட்டத்தை வெற்றி அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.'

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

மூவருக்கு வேலைவாய்ப்பு

விழா முடிவில் - காவல் துறையில் பணியாற்றி இறந்த மூன்று காவலர்களின் துணைவியார்களான திருமதி கே.எம். சரோஜா, திருமதி கே. பச்சையம்மாள், திருமதி அஞ்சலிதேவி ஆகிய மூவர்க்கும் கருணை அடிப்படையில், அவரவர் தகுதிகளுக்கேற்ப வேலைவாய்ப்புக்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

பாட்டாளி உழைப்பினிலே...

—புலவர் சி. துரைசுவாமி

பாட்டாளி உழைப்பினிலே உலகம் ஓங்கும்
பரிதி ஒளி கண்டவுடன் இருளும் நீங்கும்
தீட்டுகின்ற கல்வியிலே அறிவும் தேங்கும்
தித்திக்கும் இனிய சொல்லே நட்பில் சேரும்
கூட்டாளி நல்லமைப்பில் சக்தி வாழும்
குணமிகுந்த உயர் இடமே குடிகள் சூழும்
சூட்டுகின்ற மகுடமதில் நீதி தேறும்
தூய்மையுறும் ஞானமதே உலகை ஆளும்!

மின்னுகின்ற வானமதில் இடியும் தோன்றும்
மேன்மைமிகும் உழைப்பாலே வளங்கள் தோயும்
பொன்னை புது அனலில்இடப்புதுமை காணும்
பொய்யில்லா மெய்மைதனை புகழே வாழ்த்தும்
தன்னலத்தை விடுத்துழைப்பை உலகம் போற்றும்
தாவுகின்ற ஈகைவளம் ஏழ்மை போக்கும்
சின்னஞ்சிறு ஆலின்வித்தே நிழலாய்க் காக்கும்
தேயத்தோர் உழைப்பனைத்தும் இன்பம் தேக்கும்!

வளமான இருகரையின் நதியும் போன்று
வாழ்வினிலே உழைக்கின்ற உழைப்பும் ஆமே
களங்காணும் வீரத்தின் வெற்றி ஒப்ப
காசினியில் போற்றமைதல் படைப்பின் ஆற்றல்
பளபளக்கும் காஞ்சிநகர் பட்டாம் ஞாலம்
பாடுபடும் உழைப்பிலுறும் இசையும் அஃதாம்
உளம்வருத்தும் உறுபசியே மாந்தர்க்(கு) அற்று
உலகமெலாம் போற்றுதல் பாட்டாளி நாடாம்!

பொம்மையினை சர்க்கரையால் செய்து வைத்துப்
புதுமையுற சுவைத்திட நா இனிக்கும் எங்கும்
இம்மையிலே சான்றோர்கள் படைத்த தேசம்
எல்லோர்க்கும் பயன்விளைத்தல் உழைப்பே யாகும்
செம்மையிலே குடிக்கமைந்த செங்கோல் நீளும்
செழுமைமிக பாடமைந்த வளங்கள் நன்றாம்
எம்முடையர் என்றும்பிறர் இனத்தா ரென்றும்
இனம்பிரியா உடல்உழைப்பால் காத்தல் இறையாம்!

தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம் தமிழக அரசால் மீண்டும் அமைக்கப்பட்டது!

அனைத்துக் காவலர்க்கும் குடியிருப்பு வசதி!

மாண்புமிகு தமிழக முதல்வர் உறுதி!

சென்னையில் உள்ள புளியந்தோப்புப் பகுதியில், காவல் துறையினருக்கான குடியிருப்புக் கால்கோள் விழா, 13.4.1992 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு புதிதாக அமையவிருக்கும் காவலர் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்பித்தார்.

வரவேற்புரை:

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. இராஜசேகரன் நாயர் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

'காவலர்களுக்காக இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் அரசு மூலம் கட்டித் தரப்படும். அதற்கான முதல்கட்டப் பணியே இது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், மூன்று கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் சென்னை, விழுப்புரம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மணிமுத்தாறு, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படும்' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

முதல்வர் உரை:

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில், புளியந்தோப்பில், ஒரு கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் 112 வீடுகள் கட்டப்படவிருக்கின்றன.

இதற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:



"தமிழ்ப் புத்தாண்டான இன்று மகிழ்ச்சிகரமான நாள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட காவலர் குடியிருப்புக்கான வாரியம், யாருக்கும் நன்மை செய்யக்கூடாது என்ற எண்ணமுடைய கடந்த கால ஆட்சியில் கலைக்கப்பட்டுவிட்டது; நான் யாரைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்கெல்லாம் புரிந்திருக்கும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழி நின்று இன்று வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் இன்று அதே வீட்டு வசதிக் கழகத்தை மீண்டும் அமைத்திருக்கிறோம்; அதற்குப் புத்துயிரூட்டியிருக்கிறோம்.

காவலர்களின் பணி எளிதானதல்ல; மக்களின் உயிருக்கும் உடைமைக்கும், தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருப்பது காவல்துறை. எங்காவது ஒரு தவறு நடந்துவிட்டால் காவல்துறையே அதற்குப் பொறுப்பு என்று பழி சுமத்துகிறார்கள்; எங்கோ ஒரு கோயில் சிலை உடைந்துவிட்டாலும் கூட காவல்துறை தூங்கியதா என்கிறார்கள்; வீட்டிலே திருட்டு நடந்துவிட்டாலும் காவல்துறை கவனக்குறைவாக நடந்ததாகக் கேள்விகேட்டுப் பழிசுமத்துகிறார்கள்.

தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் ஆறு கோடியாகும்; உயிருக்கும் உடைமைக்கும் தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருக்கும் காவலர்களின் எண்ணிக்கையோ 69 ஆயிரம்; அதாவது, ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் தான் இருக்கிறார்கள்.

இப்படி இருந்தும், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டிப் பாதுகாப்புத்தருவதில் நாம் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறோம்.

இப்படிப் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாவலர்களாக இருக்கும் காவல் துறையினருக்குப் போதுமான குடியிருப்புகள் இல்லை; காவலர்களின் மனைவிகளும் குழந்தைகளும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய நிலையிலிருந்து அவர்களை மீட்க - அவர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தோடு மீண்டும் வீட்டுவசதிக் கழகத்தை உயிர்ப்பித்துப் புதிய பல திட்டங்களைச் செயல்படுத்தவிருக்கிறோம்; முதல் கட்டமாக இந்தக் குடியிருப்பு உருவாகவிருக்கிறது.

எல்லா மட்டத்திலும் உள்ள அனைத்துக் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்துதருவது என்பது இந்த அரசின் இலட்சியமாகும்; காவல் துறை மற்றும் பொது மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் இந்த இலக்கை எட்டிப் பிடிப்போம்..."

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில் - காவல்துறை உயர் அதிகாரி திரு. எஸ். ஸ்ரீபால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. கே.கே. ராஜசேகரன் நாயர் இருவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புத்தாண்டு நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு - மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் முதலான மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு-காவல்துறை உயர் அதிகாரிகளும் வருகை தந்திருந்தார்கள்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: 'ராஜு'

பகுத்தறிவுக் கவிஞர்

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்.

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை.

அவர் புதுமைக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால், அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

—தந்தை பெரியார்.



பெரியார் மாவட்டத்தில்...

சமுதாய நலப்பணிகள்

பெரியார் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 147 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்களையும், 439 குழந்தைகள் நல மையங்களையும் பழுது நீக்கம் செய்து தர, தொழிலதிபர்கள், தொண்டு நிறுவனங்கள், தாராள மனம் படைத்த தனியார் தத்து எடுத்துக் கொண்டனர். அதில் இதுவரை 94 பள்ளி சத்துணவு மையங்களின் சமையற் கூடங்கள் ரூ.63,765 செலவிலும், 320 குழந்தைகள் நல மையங்கள் ரூ.2,73,806 செலவிலும் பழுது நீக்கம் செய்யப் பட்டுள்ளன.

மொடக்குறிச்சி, கொடுமுடி, பெருந்துறை, தாராபுரம், குண்டடம், மூலனூர், காங்கேயம், வெள்ளக் கோயில், கோபி, நம்பியூர், தாளவாடி ஆகிய ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட அனைத்து மராமத்துப் பணிகளும் முடிக்கப் பட்டு விட்டன.

பிற்பட்ட வகுப்பினருக்கு 'பிரிமெட்ரிக்' கல்வி உதவித்தொகைத் திட்டத்தின்கீழ், ரூ.1,52,000 ஒதுக் கீட்டுத் தொகையில், ரூ.79,385 செலவு செய்யப்பட்டு இதனால் 3,346 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளார்கள். போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ரூ.15,08,000 ஒதுக்கீட்டில் ரூ.17,83,068 செலவு செய்யப்பட்டு, 6,263 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர். இலவசக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ரூ.8,62,000 ஒதுக்கீட்டில் ரூ.8,83,618 செலவு செய்யப்பட்டு 1,260 மாணவ மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் நீர் வளத்தை மேம்படுத்தும் பொருட்டும், இறவைப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும், சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டும் தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் 170 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.9.5 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கிணறு வெட்ட, கிணறு ஆழப்படுத்த, பம்ப் செட் வைக்க போன்ற பணிகளுக்காகக் கடன் பெறும் விவசாயிகளுக்கு 25 முதல் 50 சதம் வரை உதவி வழங்கப்பட்டுள்ளது. பெருந்துறை, சத்தியமங்கலம், தாராபுரம், கோபி, பவானி வட்டார விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் ரூ.4.5 இலட்சம் மானிய மதிப்பில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானிய உதவியுடன், சிறு குறு விவசாயிகளுக்கு 50 சத மானிய உதவியுடனும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியத்துடனும் தூவல் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நபர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வரை மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் (1990-91) 3.50 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத், திட்டமிடப்பட்டுள்ளது. 3,58,478.650 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.358.478 இலட்சம் ஆகும்.

நியாய விலையில் பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திற்கும் ஒரு அங்காடி என்ற முறையில் பொது விநியோகத் திட்டம் தமிழக அரசால் 1978-79-இல் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படி, 745 கிராம அங்காடிகளையும், 102 நகர்ப்புற அங்காடிகளையும் நடத்தி குடும்பக் கார்டுதாரர்களுக்குத் தேவைப்படும் கட்டுப்பாட்டுப் பொருட்கள் வழங்கி இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றன. மாதந்தோறும் திடீர் ஆய்வுகள் நடத்தி, பொது விநியோகத் திட்டத்தில் எந்தவித முறை கேடுகளும் நடைபெறாவண்ணம் கண்காணிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப் பட்டுள்ளது. 31.3.92 முடிய 8,409 பயனாளிகளுக்கு ரூ.212.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில் பொருளியல் 107 சதவிகிதம் சாதனை எய்தியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டு சமூகக் காடுகள் திட்டத்தில் 10 இலட்சம் செடிகள் உருவாக்கப்பட்டு 450 எக்டேரில் நடவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 28.10 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. சமூகக் காடுகள் திட்டத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 3 ஊராட்சிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 இலட்சம் பனை விதைகள் 211 எக்டேரில் நடும் பணி முடிவுற்றுள்ளது.

பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அவர்கள் தலைமையில் 3.4.92
அன்று நடைபெற்ற
செய்தியாளர்கள் கூட்டத்தில்
தெரிவிக்கப்பட்ட தகவல்கள்.

ஒவ்வொரு நிமிடமும் இன்பமாக இருக்க, அறிவுடன் கூடிய விடா முயற்சியும், பிறரை நேசிக்கும் அருங்குணமும் இருந்தால் போதும். நமது சேமிப்பில் இருந்து எவ்வளவு எடுத்துக் கொடுத்தாலும் இந்த இரண்டின் அளவும் குறையவே குறையாது. வடடியுடன் முதலும் நிச்சயமாக மீண்டும் வந்து சேர்ந்துவிடும். முதலில் செய்யுங்கள். பிறகு வெற்றியைச் சந்திக்கலாம்.

-ஜேம்ஸ் ஆலன்

மரம் வளர்ப்போம்

சமுதாய வளத்துக்கும் நலத்துக்கும் மரங்கள் இன்றியமையாததாகிறது. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும், மழை வளத்துக்கும் அது துணைபுரிகிறது.

'வீட்டுக்கொரு மரம் வளர்ப் போம்!' என்பது செயல் வடிவில் வர அனைவரும் ஆர்வம் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் சில மரங்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்வோம்:

மூங்கில்

மூங்கில் சிறு மூங்கில் (கல் மூங்கில்) பெரு மூங்கில் என இரு வகைப்படும்.

கடல் மட்டத்திலிருந்த 1000 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் இது வளரும். ஆற்று ஓரம், ஓடை ஓரம் ஈரமான இலையுதிர்க் காட்டுப் பகுதிகளிலும் நிழலுள்ள அடர்ந்த காடுகளிலும் இம்மரம் செழித்து வளருகின்றது.

சதுப்பு நிலப்பகுதிகளிலும், ஆறு, ஓடை, வயல், நதி ஆகியவைகளின் ஓரப் பகுதிகளிலும் ஈரமுள்ள தரிசு நிலப் பகுதிகளிலும் இம்மரங்களை வளர்க்கலாம்.

மூங்கில், காகிதம் மற்றும் ரயான் தயாரிக்க பெரும்பாலும் உபயோகிக் கப்படுகிறது. சாரம் கட்டவும் குடிசைகள் கட்டவும், ஓட்டு வீடுகள் கட்டவும் பயன்படுகின்றன. விவசாய இரும்புக் கருவிகளுக்குக் கைப் பிடிகள் செய்யவும், கூடை, தட்டிகள், பெட்டிகள், கட்டில், விசிறி, குடை, பொம்மை, குழாய், வாத்தியக் கருவி, ஏணி, கூடாரக் கழிகள் போன்ற அநேக விதமான உபயோகமுள்ள பொருட்கள் செய்யப் பயன் படுகிறது. வேலி அமைத்தல், மரச் சாமான்கள், ஈட்டி, பாய், கட்டு மரம் ஆகியவைகளுக்கும் பயன்படும். இதன் இளம் துளிர் ஊறுகாய்க்கும் பயன்படுகிறது.

சவுண்டல் மரம்

சவுண்டல் மரத்தில் பல உயர் இரகங்கள் உள்ளன. அவைகளில் கே-8, கே-28, கே-29, கே-67, கே-72, மற்றும் கே-32 சிறந்தவையாகும். நமது மாநிலத்தில் கே-28 இரகம் நன்றாக வளர்வதால் இதைப் பெருமளவில் நடுவது நன்று. சவுண்டல் மிக உயரமாக வளரக் கூடிய மர வகையைச் சார்ந்தது. சவுண்டல், தழை மற்றும் முதிராத காய்கள் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகக் கருதப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 1000 கி.மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் நன்கு வளரும். மழை, வெய்யில், நெருப்பு, காற்று, தூறாவளி, வறட்சி ஆகியவைகளால் ஏற்படும் பாதிப்புகளை ஓரளவு தாங்கக் கூடியது. இதை மானாவாரியாகவும் பயிரிடலாம். இருப்பினும் நீர் பாய்ச்சுவதன் மூலம் வளர்ச்சியைக் கணிசமான அளவில் அதிகரிக்கலாம். சதுப்பு நிலங்களிலும், நீர் நீண்ட நாட்கள் தேங்கி நிற்கும் இடங்களிலும் சவுண்டல் வளராது. கற்களும், சரளையும் நிறைந்த மண்ணிலும், அமிலத் தன்மையுள்ள மண்ணிலும் சவுண்டல் நன்கு வளராது. வடிகால் வசதியுள்ள மண்ணிலும், சத்துள்ள மண்ணிலும் போதுமான அளவில் மழை அல்லது நீர்ப்பாசனம் இருப்பின் சவுண்டல் நன்றாக வளரும்.

கால்நடைகள் சவுண்டல் இலை, முதிராத காய்களை விரும்பிச் சாப்பிடுவதால் வேலியிட்டுப் பாது காப்பது அவசியம்.

புல் விதைத்த 6 மாதங்களுக்குப் பிறகு புற்களை அறுத்துக் கால்நடைகளுக்குப் போடலாம். இத்தகைய அமைப்பில் சவுண்டல் தழைகளும் புற்களும் கலந்து உள்ளன. அதனால் புரதச்சத்து நிறைந்த தீவனம் கால் நடைகளுக்குக் கிடைக்கிறது.

கால்நடைத் தீவனமாக உபயோகிக்கும் முறை

சவுண்டல் தழையில் மையோசின் என்ற இரசாயனப் பொருள் உள்ளது. எனவே, அசை போடுகின்ற கால்நடைகளின் உணவில் சவுண்டல் தழைகளைச் சுமார் 30

சதவிகிதம் வரை சேர்த்துக் கொள்ளலாம். அதற்கு மேல் சேர்க்கக் கூடாது. அசை போடாத கால்நடைகளின் உணவில் 10 சதவிகிதம் சேர்த்தால் போதுமானது. கோழி, பன்றி, முயல், வான்கோழி போன்றவைகளுக்கும் உணவில் சேர்த்துக் கொடுக்கலாம்.

புளிய மரம்

புளிய மரம் கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகளிலும் நன்கு வளரும். எல்லா வகையான நிலப்பகுதிகளிலும் இம்மரம் வளரும். வெப்பப் பிரதேசத்திலும் சரி, அல்லது மித வெப்பப்பிரதேசத்திலும் சரி, இது நன்றாக வளரும். இந்தியத் துணைக் கண்டத்தில் நெடுநாள் வாழக்கூடிய மர இனங்களில் இதுவும் ஒன்று. 750 மி.மீ. முதல் 1250 மி.மீ. வரை சாதாரணமாக மழை பெய்யும் இடத்தில் வளரும்.

சாலை ஓரங்கள், தரிசு நிலப் பகுதிகள், உபயோகமற்ற வளம் குறைந்த நிலப் பகுதிகள், ஆகிய எப்படிப்பட்ட இடத்திலும் உற்பத்தி செய்யலாம். செடிகள் வறட்சியைத் தாங்கும் தன்மையுடையன. வண்டல் மண் பிரதேசங்களில் நன்றாக வளரும்-

இதன் தழை கால்நடைகளின் தீவனத்துக்கும், பூ, காய், பழம் ஆகியவை சமையலுக்கும் பயன்படுகிறது. இதன் கொட்டைகள் எருவாகவும் மாட்டுக்குத் தீவனமாகவும் பயன்படுகிறது. மரம் நல்ல விறகாகப் பயன்படுகிறது. இதன் பழத்தோலும் நல்ல எரிபொருள். மேலும், இம்மரத்தைச் சுட்டு எரித்து நல்ல கரியும் தயாரிக்கலாம். இம்மரம் கெட்டியானதாகவும் உறுதியானதாகவும் இருப்பதால் இதனை உலக்கை மற்றும் கருவிகளின் கைப்பிடிகள் போன்றவை செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றது. புளியன் கொட்டையில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் வர்ணம், வார்னிஷ் முதலியனவும் செய்யப்படுகிறது.

சவுக்கு மரம்

சவுக்கு மரங்கள் ஆஸ்திரேலியா நாட்டில் இயற்கையாக வளர்கிறது. மற்றும் சிட்டகாங், அந்தமான், நிக்கோபார், மலேசியா மற்றும் கிரீன்ஸ்லேண்ட் ஆகிய நாடுகளிலும் வளர்கிறது. கர்நாடக மாநிலத்தில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சவுக்கு மரங்கள் வளர்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. இம்மரம் சுமார் 30 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. இம்மரம் 50 ஆண்டுகள் வரை உயிருடன் இருக்கும் ஆனால் 5 முதல் 7 ஆண்டுகளுக்குப் பிறகு வளர்ச்சியின் அளவு குறைவதால் மரங்களை அந்த வயதில் அறுவடை செய்வது நல்லது.

சவுக்கு மரங்களில் சுமார் 35 வகைகள் உள்ளன. அவற்றில் Casuarina Equisetifolia என்ற வகை நம் நாட்டில் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ற வகையாகும். விதைகள் கடுகை விடச் சிறியதாக இருக்கும். ஒரு கிலோ கிராம் எடையில் சுமார் 7,50,000 விதைகள் கிடைக்கும்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளில் மணற்பாங்கான மண் வகைகளில் நன்கு வளரும்.

இது அதிக மழை பெய்யும் இடங்களிலும் தண்ணீர் அதிகமாகத் தேங்கி நிற்காத இடங்களிலும் நன்கு செழித்து வளரும் அதிக வறட்சியை இம்மரம் தாங்காது.

இம்மரத்தை விறகிற்காக அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். சவுக்கு விறகு ஒரு சிறந்த எரிபொருளாகக் கருதப்படுகிறது. இம்மரத்தின் (கலோரிபிக் மதிப்பு) வெப்ப நிலை அதிகமாக உள்ளதால், அடுப்பு எரிக்க அதிக அளவில் உபயோகிக்கப்படுகிறது.

சவுக்கு மரக்கொம்புகள் கட்டட வேலைகளுக்குச் சாரம் கட்டவும், கூரை, பந்தல் போடுவதற்கும், மின் சாரக் கம்பங்களாகவும், விவசாயக் கருவிகளுக்குக் கைப் பிடிகளாகவும் பல வகைகளில் உபயோகப்படுகின்றது.

கடற்கரை ஓரங்களில் பலத்த காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடை செய்வதற்கும், காற்றில் பறந்து செல்லும் மணலைத் தடை செய்து மணல் மேடுகள் நகர்வதைத் தவிர்க்கவும் இது உதவுகிறது.

கொசுத் தொல்லையைக் குறைக்க...

சென்னை மாநகராட்சி கொசுத் தொல்லையைக் குறைக்கப் போர்க்கால அடிப்படையில் தீவிர திட்டத்தைத் துவக்கியுள்ளது. 155 கோட்டங்களிலும் கொசு உற்பத்தி நிலைகள் கண்டறியப்பட்டு அங்கெல்லாம் வாரம் ஒருமுறை மருந்தடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 50 புகைபோடும் எந்திரங்கள் (கைகளால் இயக்கப்படுபவை) பயன்படுத்தப்பட்டு கொசுக் கொல்லிப் புகைபோடப்படுகின்றன. இதைத் தவிர 250 முதல் 300 மருந்தடிப்பவர்கள் மூலம் நாள்தோறும் கொசு மருந்து தெளிக்கப்படுகின்றது.

சென்னை மாநகரில் 4 பெரிய நீர் வழிகள் (அடையாறு, கூவம்-பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா) மற்றும் 9 பெரிய வடிகால்வாய்கள் உள்ளன. இவற்றிலேயே சென்னையில் உள்ள கொசுக்களில் 50 சதவிகிதம் உற்பத்தியாகின்றன. இவற்றில் கொசுப் புழுக்களை அழிக்கும் மருந்துகள் தெளிக்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் திரு. இரா.பூர்ணலிங்கம், 18.3.92 அன்று அடையாறு கூவம் இவை கடலோடு கலக்கும் கழிமுகத்தை பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளருடனும், மாநகராட்சி அதிகாரிகளுடனும் சென்று பார்வையிட்டார்.

கூவம் அடையாறு கழிமுகப்பகுதிகள் மணல் தடை அகற்றப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளன. இதனால் மேலேற்றத்தின் போது கடல்நீர் ஆறுகளின் உள் அதிகமாகப் புகுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இது கொசுக்களைக் கட்டுப்படுத்த உதவும். எனினும், இப்போது உள்ள திறப்பு மேலும் அதிகக் கடல்நீர் உட்புகுவதற்கும் போதுமானதாக இல்லை. ஆகையால், கழிமுகப்புகளை முழுமையாகத் திறந்து தாராளமாகக் கடல்நீர் உட்புக வழி வகுக்குமாறு பொதுப்பணித் துறையைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுப் பணித்துத் தலைமைப் பொறியாளர் உடனடியாக இப்பணியை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளார். இதனால் இன்னும் அதிகமாகக் கடல்நீர் உட்புகுந்து, கொசு உற்பத்தியைக் குறைக்க வழிபிறக்கும்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சித் திட்டப் பணிகள்



திண்டுக்கல்-அண்ணா மாவட்டில், கடந்த 1991-ஆம் ஆண் போதுமான மழை கிடைக்கப் ...வில்லை. இயல்பான மழையள ...ன 836 மி.மீட்டருக்கு 746.1 ... மழை மட்டுமே கிடைத்தது. ...யும் 1992-ஆம் ஆண்டில் ...ச்சு முடியப் பெய்ய வேண்டிய ...ல்பான மழை 60.4 மி.மீட்ட... இதுவரை மழை ஏதுமின்றி ...ட்சியாகவே உள்ளது.

தென்மேற்கு, வடகிழக்குப் பருவ...ங்களில் பெய்த மழையைக் ...ண்டு நீர்த்தேக்கங்கள், கண் ...ய்கள், கிணறுகளில் நீர்நிலை ...ளவு உயரப் பெற்றது. இதனைக் ...ண்டு இனவைப் பயிர்கள் சாகு... நடைபெற்றது. மானாவாரி ...ங்களில் சிறுதானியங்கள், பயறு ...வகைகள், பருத்தி, நிலக்கடலை ...ன்ற பயிர்கள் சாகுபடி முழு...வில் நடைபெற்றுத் தற்சமயம் ...பயிர்கள் அறுவடையும் முடியும் ...லையில் உள்ளது.

சாகுபடி மற்றும் எதிர்பார்க்கும் உற்பத்தி:

நெல் சாகுபடி பரப்பு 25,000 எக்டேர் இலக்கில் 18,827 எக்டேர் நிலப்பரப்பு பயிர் செய்யப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் 1,15,000 எக்டேர் இலக்கில் 97,799 எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளது. பயறு வகைகள் 41,000 எக்டேருக்கு 43,648 எக்டேர் பயிர் செய்யப்பட்டுள்ளது. பருத்தி 9,100 எக்டேருக்கு 3,873 எக்டேரும், கரும்பு 5,000 எக்டேருக்கு 5,326 எக்டேரும், நிலக்கடலை 38,000 எக்டேருக்கு 33,395 எக்டேரும் பயிர் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் 90,000 மெ.டன் நெல் உற்பத்திக்குப் பதிலாக 75,308 மெ.டன் நெல் உற்பத்தியும், சிறு தானியங்கள், 1,70,000 மெ.டனுக்குப் பதிலாக 1,56,282 மெ.டன்னும், பயறு வகைகள் 20,000 மெ.டன்னுக்கு 22,871 மெ.டன்னும், பருத்தி 30,000 பேல்களுக்கு 12,780 பேல்களும், நிலக்கடலை 50,750 மெ.டன்னுக்கு 48,160 மெ.டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கோடைச் சாகுபடித் திட்டம்

1992-ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி, கரும்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கத் தற்சமயம் கோடைச் சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இம்மாவட்டத்திற்கு 2 இலட்சத்து 80 டன்கள் உணவு உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை சாகுபடி செய்யப்பட்டுள்ள 1 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேர் உணவுப் பயிர்களிலிருந்து 2 இலட்சத்து 55 ஆயிரம் டன்கள் உணவு உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் கோடைச் சாகுபடியில் தீவிரக் கவனம் செலுத்தி உணவு உற்பத்தியை மேலும் அதிகரிக்கச் செய்ய செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உர விநியோகம்:

இம்மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.192 இலட்சம் மதிப்பிற்கான உரங்கள் சலுகை விலையில் வழங்கப்பட உள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் உரம் பெறுவதற்கான அடையாள அட்டைகள் வேளாண் துறையினராலும், கிராமத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உரங்கள் கூட்டுறவுத் துறையினராலும் வழங்கப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் மொத்தம் 1,56,644 சிறு, குறு விவசாயிகள் உள்ளனர். இவர்களில் 1,06,073 சிறு, குறு விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.143.47 இலட்சம் மானியத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தெளிப்பு நீர்ப்பாசன மானியம்:

தேசியப் பயறுபெருக்கத் திட்டம் மற்றும் எண்ணெய்வித்துப் பெருக்கத் திட்டத்தின்கீழ் 80 தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்திட ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கிட நிதி இலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிறு, குறு விவசாயிகளுக்கு 50 சத மானியமும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 75 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 25 சத மானியமும் வழங்கப்படுகிறது.

சிறுபாசனத் திட்டம்:

மைய அரசு உதவியுடன் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, நத்தம், பழனி வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.17.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. சிறு விவசாயிகளுக்கு 25 சத மானியமும், குறு விவசாயிகளுக்கு 33.33 சதவீதமும், ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 50 சத மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கிணறு அமைத்தல், டீசல் பம்புகள், மின் கம்பிகள், பாசனக் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

—எம்.பி[illegible]

செய்தி-மக்கள் தொடர்பு [illegible]
திண்டுக்கல்-அண்ணா[illegible]

வளரும் வேளாண்மை:

டி.கே.எம். 10 - புழுதிக்காலுக்கேற்ற உயர் விளைச்சல் புதிய நெல் ரகம்

டாக்டர் எம். சுப்பிரமணியன்,
அ. தியாகராஜன், எ. கோவிந்தன்,
கே. நீலகண்டபிள்ளை,
டாக்டர் டி.பி. இரங்கநாதன்,
டாக்டர் கே.எஸ். பரமசிவன்
நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 44,000 எக்டர் நிலத்தில் புழுதிக்கால் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. புழுதிக்கால் சாகுபடிக்கேற்ற குறிப்பிடும் படியான உயர் விளைச்சல் நெல் இரகம் இல்லை. எனவே டி.கே.எம். 1 (பிசினி) உள்ளூர் நெல் இரகம் இளம் பருவத்தில் ஏற்படும் வறட்சியைத் தாங்கி, பின்பு பருவ மழை கிடைத்தவுடன் துளிர் விட்டு வளரும் தன்மை கொண்டதன் காரணமாக, பெரும்பான்மையான இடங்களில் புழுதிக்கால் சாகுபடி செய்யப்படுகிறது.

இது தவிர பி.ஏ.எம். 3 (பய்ய குண்டா), வாடன்சம்பா, சுப்ப சம்பா போன்ற நாட்டு இரகங்களும் ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளை பொன்னி போன்ற உயர் விளைச்சல் இரகங்களும் பயிர் செய்யப்படுகிறது. மேற்கூறிய நாட்டு இரகங்கள் குறைந்த மகசூல் தருவதாலும் உயர் விளைச்சல் இரகங்கள் இளம் பருவத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மை இல்லாமையின் காரணமாக மகசூல் ஒரே சீராக இல்லாமல் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே புழுதிக்காலுக்கேற்ற வறட்சியைத் தாங்கி வளரும் உயர் விளைச்சல் இரகம் ஒரு நீண்டகாலத் தேவை. அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொண்டதன் பயனாக டி.கே.எம். 10 நெல் இரகம் 1992-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் வெளியிடப்பட்டது.

டி.கே.எம். 10 நெல் இரகமானது செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்குப் புழுதிக்கால் சாகுபடிக்கேற்றது. இந்த இரகமானது நடுத்தர வயது கொண்டது. (135 நாட்கள்) வறட்சியைத் தாங்கவல்லது. கோ 31 (ஒட்டு மானாவாரி சம்பா) இரகத்தையும் சி.22, பிலிப்பைன்ஸ் நாட்டு வறட்சியைத் தாங்கும் உயர் விளைச்சல் இரகத்தையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டது. டி.கே.எம். 10 புதிய இரனமானது 1985 ஆண்டிலிருந்து நான்கு சம்பா பருவத்திலும் திரூர், நெல் ஆராய்ச்சி நிலைய சோதனைத் தளைகளில் சராசரி மகசூலாக எக்டருக்கு 2000 கிலோ கொடுத்துள்ளது.

இந்த இரகம் ஐ.ஆர். 20-ஐக் காட்டிலும், 85 சதவிகிதம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும், 82 சதவிகிதம், மற்றும் கோ 31-ஐக் காட்டிலும் 30 சதவிகிதம் கூடுதல் மகசூல் தந்து உள்ளது.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 47 இடங்களில் அனுசரணை ஆராய்ச்சிச் சோதனைகள் மூலம் இரண்டு ஆண்டுகளாகப் பரிசோதனை செய்யப்பட்டதில் டி.கே.எம்.10 நெல் இரகம் சராசரியாக எக்டருக்கு 2,900 கிலோ மகசூல் தந்துள்ளது. இந்த இரகம் டி.கே.எம். 1-ஐக் காட்டிலும் 28 சதவிகிதமும், ஐ.ஆர்.20-ஐக் காட்டிலும் 9.5 சதவிகிதமும் அதிக மகசூல் கொடுத்துள்ளது.

புழுதிக்கால் சாகுபடியில் டி.கே.எம். 10 நெல் இரகம் அதிகப்பட்சமாக எக்டருக்கு 5,200 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. நடுத்தர உயரம் கொண்ட இப்புதிய ரகம் எக்டருக்கு 5,500 கிலோ வைக்கோல் கொடுக்க வல்லது. இந்த இரகம் 15 முதல் 25 நாட்கள் இளம் பருவ வறட்சியைத் தாங்கவல்லது. பருவ மழை அல்லது நீர் கிடைக்கும்பொழுது உடன் துளிர் விட்டு வேகமாக வளரும் தன்மை கொண்டது.

இப்புதிய இரகத்தின் நடுத்தரச் சன்னமான வெள்ளை அரிசி பச்சை அரிசி மற்றும் புழுங்கல் அரிசி சமையலுக்கு மிகவும் ஏற்றது. டி.கே.எம். 10 நெல் ரகம் ஆனைக் கொம்பன், பச்சைத்தத்துப்பூச்சி, இலைச்சுருட்டுப் புழு ஆகியவற்றிற்கு மிதமான தாக்குதலும் கொண்டது. மேலும் குலைநோய், பழுப்பு நிறப் புள்ளி இலையுறை அழுகல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத் திறனும் உள்ளது.

டி.கே.எம். 10 நெல் இரகம் ஜூலை - ஆகஸ்ட் மாதம் விதைப்புக்கு நாட்டு இரகங்களான டி.கே.எம் 1 (பிசினி), வாடன் சம்பா, உயர் விளைச்சல் இரகங்களான ஐ.ஆர்.20 மற்றும் வெள்ளைப் பொன்னி போன்ற இரகங்களுக்கு மாற்றுப் பயிராகப் புழுதிக்கால் பயிர் சாகுபடி பரிந்துரை செய்யப்படுகிறது.

மாணவர் பக்கம்:

அறிவுச்சுடர்

விருது

1. பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண்மணி திருமதி இந்திரா காந்தி

2. அமெரிக்காவின் மிகப்பெரிய விருதான 'மெடல் ஆப் பிரீடம்' என்ற சிவிலியன் விருது (Medal of Freedom) இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சருக்கு வழங்கப்பட்டது.

3. தென் ஆப்பிரிக்கத் தேசியத் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கு லெனின் சமாதானப் பரிசு 1990-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் வழங்கப்பட்டது.

சில முக்கியமான நாடுகளும் அதன் தலைநகரங்களும்

ஆப்கானிஸ்தான்	-	காபூல்
ஆஸ்திரேலியா	-	கான்பெர்ரா
பாங்களாதேஷ்	-	தாகா
மியான்மார் (பர்மா)	-	யாங்கோன் (ரங்கூன்)
கனடா	-	ஒட்டாவா
ஸ்ரீலங்கா	-	கொழும்பு
சீனா	-	பெய்ஜிங்
கொலம்பியா	-	பொகோடா
டென்மார்க்	-	கோபன்ஹேகன்
எத்தியோப்பியா	-	அடிஸ் அபாபா
பிரான்ஸ்	-	பாரீஸ்
ஹங்கேரி	-	புடா-பெஸ்ட்
இந்தியா	-	புதுடெல்லி
ஈரான்	-	டெக்ரான்
ஈராக்	-	பாக்தாத்
இஸ்ரேல்	-	டெல்அவிவ்
இத்தாலி	-	ரோம்
ஜப்பான்	-	டோக்கியோ
ஜோர்டான்	-	அம்மான்
மலேசியா	-	கோலாலம்பூர்
நேபாளம்	-	கத்மாண்டு
நெதர்லாந்து	-	ஆம்ஸ்டர்டாம்
நியூசிலாந்து	-	வெலிங்டன்
நைஜீரியா	-	லாகோஸ்
பாகிஸ்தான்	-	இஸ்லாமாபாத்

தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்

யானை

நமது நாட்டில் யானைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா! 17,075 முதல் 22,080 யானைகளே உள்ளதென்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளம், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து, அசாம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் 8,525 முதல் 11,930 யானைகளும், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 6,000 முதல் 7,150 யானைகளும், ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் 2,000 முதல் 2,300 யானைகளும், உத்திரப் பிரதேச மாநிலத்தில் 550 முதல் 700 யானைகளும் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.





ஒரு சொல் கேளீர்!

—குழ. கதிரேசன்

வாழைப் பழத் தோலை வழியில்
போடக் கூடாது — அதில்
வழுக்கி விழுந்து உடலும் ஊனம்
ஆகக் கூடாது!

உடைந்து போன கண்ணாடியை
ஓரம் போடணும் — ஆணி
காலைக் குத்திக் கிழித்துவிடும்
தூரப் போடணும்!

ஈ மொய்க்கும் பண்டங்களை
வாங்கக் கூடாது — நாம்
அழுகிப் போன பழங்களினை
உண்ணக் கூடாது!

விலை கொடுத்து நோய்களினை
வாங்கக் கூடாது — தலை
விதி செய்த கொடுமை என்று
கூறக் கூடாது!

நூல் நயம்

'காட்டுக் குயில்கள்'

ஆசிரியர்: கொ.மா. கோதண்டம்

வெளியீடு:

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

பக்கம்:92 விலை:ரூ.9/-

மலைவாழ் மக்களின் அவல வாழ்க்கையை மண்வாசனையுடன் சொல்லும் கதைகள்.

கொத்தடிமைகளாக்கப்பட்ட அவர்களின் துன்பங்களும், துயரங்களும் மென்மையாகக் கூறப்பட்டிருக்கின்றன.

மக்களையும், அவர்களின் சுற்றுப்புறச் சூழல்களையும் சித்திரித்திருக்கும் விதம். நாம் அந்தச் சம்பவம் நிகழும் இடங்களிலேயே நின்றிருக்கும் பிரமையை உண்டாக்குகின்றன. மாறுபட்ட கதைத் தொகுப்பு. படித்து முடித்தபோது நெஞ்சம் கனக்கிறது.

—என்.குமார்.

விண்வெளிப் படிகளில் இந்தியா

ஆசிரியர்: நெல்லை சு. முத்து

வெளியீடு:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-98.

பக்கம்:191 விலை:ரூ.26/-

நம்நாடு பல்வேறு' துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகிறது. அவற்றுள் விண்வெளி ஆராய்ச்சியும் ஒன்று. விண்வெளிப் படிகளில் இந்தியா படைத்து வரும் சாதனைகளை விளக்குகிறது இந்நூல்.

முதல் கட்டுரையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. இலக்கியத்தில் வானவியல் என்பது குறித்து - தமிழ் இலக்கிய மேற்கோள்களோடு அரிய கட்டுரையைப் படைத்திருக்கிறார் ஆசிரியர்.

விந்தைக்குரிய விண்வெளிப் பயணத்தில் பங்கேற்றுச் சாதனை புரிந்த முன்னோடிகளை நம் கண்முன்னே கொண்டு வருகிறார் ஆசிரியர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி குறித்தும், வானிலை இயல் குறித்தும் கூறப்பட்டுள்ள செய்திகள் அற்புதம். இவற்றோடு தொலைத் தகவல் தொடர்பு, தொலையுணர்வுச் செயற்கைக்கோள் பற்றிய தகவல்கள் மிகவும் பயனுள்ளவை. நல்ல தமிழில் எல்லாத்திறத்தாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய தமிழில் படைத்திருக்கும் இந்த அறிவியல் படைப்பு பாராட்டுக்குரியது.

இறைவா! இறைவா!

ஆசிரியர்: த்ங்கவயல் லோகிதாசன்

வெளியீடு:

பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.10 பக்கம்: 96

மனிதன் இறைவனைப் பார்த்துக் கேட்கிறான். இறைவன் மனிதனுக்கு அறிவுரை கூறுகிறான். ஆசிரியரின் சிந்தனைச் சிதறல்களைப் பரக்கக் காண்கிறோம். சுவையான நூல்.

பந்தயக் குதிரை

ஆசிரியர்: விமலாரமணி

வெளியீடு:

மயிலவன் பதிப்பகம்
92, கங்கையம்மன் கோவில் தெரு
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:196 விலை:ரூ.22/-

வசதியான தந்தை தன் மகளின் காதலை எதிர்க்க, காதலுக்காகப் பெற்றோரைத் துறந்து காதலோடு வர, காதலுக்குப் புற்று நோய்... வேலையின்மை... இப்படிப் போகிறது முதல் கதை பந்தயக் குதிரை.

அலுவலகத்தில் பரிவின் காரணமாக, காதல்வயப்பட்டு மணந்து பின்னர் அவன் தன்னைப் பணங்காய்ச்சி மரமாக மட்டுமே கருதுவது கண்டு வெதும்பும் கௌரி, கணவன் எதிர்ப்பை மீறி குழந்தைகள் பெற்று சுமங்கலியாகப் போய் விட கணவன் நிர்க்கதியாகிறான் இரண்டு கதைகளுமேசாதாரண,வழக்கமான கருவைக் கொண்ட கதைகள்தான். ஆசிரியரின் எழுத்தாற்றலால் இக்கதைகள் சுவை பெறுகின்றன.

விஞ்ஞானிகள் வாழ்விலே...

ஆசிரியர்: பி.வி.கிரி

வெளியீடு:

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5. ஸ்ரீபுரம் 2-வது தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:96 விலை:ரூ.12/-

வாழ்க்கை வரலாறுகள் நம் வாழ்வை வளமாக்க மட்டுமல்ல, வழிகாட்டவும் உதவுகின்றன. அந்த வகையில், இந்திய-மேலைநாட்டு அறிவியல் அறிஞர் பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்க வகையிலே எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இதன் சிறப்பு. இந்நூலில் 16 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரைக்கும் படங்கள் இருப்பது வரவேற்கத் தக்கது.

—தே.மணி

கா. நமச்சிவாயரின் நாடகங்கள்- ஓர் ஆய்வு

ஆசிரியர்: சோ. கருப்பசாமி

கிடைக்குமிடம்:

பயோனியர் புக் சர்வீஸ்
47, நல்லதம்பி தெரு,
சென்னை-600 005.

பக்கம்:176 விலை:ரூ.30/-

பேராசிரியர் கா. நமச்சிவாயர் இயற்றிய நூல்கள் பல. நாடகம், உரை நடை, புராண, இதிகாசப் பழங்கதைகள், வரலாற்றுக் கதைகள், இலக்கண உரை இவற்றோடு, அவர் பதிப்பித்த நூல்களும் ஏராளம். அன்னைத் தமிழில் அரிய பல படைப்புகளைப் படைத்த வள்ளல் கா. நமச்சிவாயரின் நாடகங்களைக் குறித்து ஆய்கிறது இந்நூல்.

நாடகக் கதையும் கருவும், நாடக மாந்தரின் பண்பு நலன்கள், நாடக மொழிநடை, நாடக நலன்கள் ஆகிய நான்கு இயல்களாகப் பகுத்துத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நூல் முழுவதும் நமச்சிவாயரின் பாத்திரப்படைப்புகளும், பண்பு நலன்களும் பேசப்படுகின்றன. அழகுத் தமிழில் ஆசிரியரின் ஆழ்ந்த புலமைத் திறம் நன்கு வெளிப்படுகிறது. தமிழ் ஆர்வலர், ஆராய்ச்சி மாணவர் ஆகியோர் படிக்க வேண்டிய பயனுள்ள படைப்பு.

- பொ. மறைமலை.



(16–ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக அமைப்பு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் செயல்பாட்டிற்காக, நமது மாநிலம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் கீழ் இயங்கி வந்தது. நிர்வாகச் சுமை மற்றும் பணிப்பளு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், கூடுதலாகப் புதிய 2 மண்டலங்கள், ஒன்று வேலூரையும், மற்றொன்று சிவகங்கையையும் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் என்று, சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்திருந்தேன். அறிவிப்பிற்குச் செயல்வடிவம் தருகிற வகையில், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், மற்றும் சைதாப்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர் வட்டங்களைத் தவிர்த்த செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் அடங்கிய பகுதிகளைப் புதிய மண்டலமாகப் பிரித்து, துணை ஆணையர் அலுவலகம் ஒன்று வேலூரில் தொடங்கப்பட்டு விட்டது.

அடுத்து, பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் காமராசர் மாவட்டம் ஆகியவை புதிய மண்டலமாகப் பிரிக்கப்பட்டு, துணை ஆணையர் அலுவலகம் ஒன்றும், சிவகங்கையில் தொடங்கப்பட்டு விட்டது. தற்போது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ், 10 மண்டலங்கள், ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையரின் தலைமையில், இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலம் 17 கோட்டங்களாகப் (Divisions) பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையரின் கீழ் இயங்கி வருகிறது. அறநிலையத் துறையின் நிர்வாகம் மேலும் சீராக அமையவேண்டும் என்ற நோக்கத்துடன், 1992-92-ஆம் ஆண்டு, பகுதி-2 திட்டத்தின் கீழ், 2 புதிய அறநிலையத்துறைக் கோட்டங்களையும் உருவாக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு, சிதம்பரனார் மாவட்டத்தை ஒரு புதிய கோட்டமாகவும் அமைக்க, விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். எனவே தற்போது 17 ஆக இருக்கும் அறநிலையத்துறைக் கோட்டங்கள், விரைவில் 19 ஆகச் செயல்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாக அமைப்பில் ஏற்பட்டுள்ள இத்தகைய கூடுதல் மண்டல மற்றும் கோட்ட அமைப்புகளினால், ஆலய நிர்வாகம் மேம்படும் என்று நம்புகிறேன்.

கோயில்கள் என்றாலே, வருமானம் சார்ந்த கணக்கு- வழக்குகளைப் பற்றிய பிரச்சினைகள் எப்போதும் எழுந்து வருவது, தற்போது வாடிக்கையாகிவிட்டது. ஆகவே, கோயில்களின் கணக்குகளைச் சரியான முறையில் தணிக்கை செய்ய, தணிக்கைப் பிரிவை மேம்படுத்துதல் மிகுந்த அவசியமாகிறது. எனவே, தற்போதுள்ள தலைமைத் தணிக்கை அதிகாரியினுடைய பதவித் தரத்தை, இணை ஆணையர் தகுதிக்கு உயர்த்தவும்; திருத்தணி, ஸ்ரீரங்கம், இராமநாதபுரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பெரிய கோயில்களில் உள்ள, உதவித் தணிக்கை அலுவலர் பணியிடத்தை, தணிக்கை கண்காணிப்பாளர் நிலைக்கு உயர்த்தவும்; தலைமையிடத்தில் ஒரு 'கணக்காளர்' பதவி ஏற்படுத்தவும், அரசு முடிவு செய்துள்ளது. இத்

துறையால் நடத்தப்பட்டு வரும் 'திருக்கோயில்' மாத இதழுக்கு, ஒரு இளநிலை ஓவியர் பதவியை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த, அரசுக்கு ஆண்டொன்றுக்கு, ரூ.20.15 இலட்சம் கூடுதல் செலவு ஆகும்.

திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள்

இந்த அரசு பொறுப்பேற்ற பின், தற்போது ஆலயங்களின் முக்கியத்துவம் பற்றி ஓர் புதிய விழிப்புணர்ச்சி, மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தில் உள்ள பல கோவில்களில், திருப்பணிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள், அரசுக்கு வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. பொருளாதார அடிப்படையிலும் சரி, நிர்வாக அடிப்படையிலும் சரி, இவ்வனைத்துக் கோயில்களுக்கும், ஒரே சமயத்திலோ அல்லது உடனடியாகவோ, திருப்பணி செய்வது என்பது இயலாத காரியம். பொது மக்களோ அல்லது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களோ, தாங்கள் பரிந்துரை செய்யும் கோவில்களுக்குத் திருப்பணி உடனடியாகச் செய்யவில்லையே என்றும் நினைக்க வேண்டாம். இப்பணியினைச் செய்யவேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே தான், ஆலயங்கள் புனரமைப்புக்கு என்று 'முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி' என்ற தலைப்பில் ஒரு தனி நிதி திரட்டப்பட்டு வருகிறது. இந்த நிதியின் மூலம், தினந்தோறும் ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டும் என்பதற்கு, முயற்சிகள் மேற்கொண்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் பெரும்பான்மையானவை, பழமையானவை. அவைகளுள் திருப்பணி செய்யப்படவேண்டிய ஆலயங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) பாடல் பெற்ற ஆலயங்கள். அதாவது, ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடப்பட்டு, போற்றப்பட்ட ஆலயங்கள்.- (2) வரலாற்றுச் சிறப்பு மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள். (3) ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகட்கு ஒரு முறை திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய ஆலயங்கள்.

அரசு மானியம்

மேற்குறிப்பிட்ட திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்வற்காக, ஓர் முன்னுரிமை (Priority) திட்டத்தைத் தயாரித்து, அதன்படி திருப்பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயங்களின் திருப்பணி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ.45 இலட்சம் மானியமாக, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு வழங்குகிறது. கடந்த ஆண்டும் இந்த மானியத்தோடு, அண்மையிலே கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவையொட்டி, 6 ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்காக, ரூ.12.50 இலட்சம் அரசு மானியமாகவும்,

★ அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, அரசியல் கொடுமையைவிட சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அதிதைரியசாலி.

காமராசர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்காக, ரூ.15 இலட்சம் தனியாகவும், மொத்தத்தில் கடந்த ஆண்டில் அரசு மானியமாக மட்டும், ரூ.72.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளில், அரசு மானியமாகத் திருப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகைகளிலே, சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இந்த 72.50 இலட்சம் ரூபாய் தான் மிக அதிகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நலநிதி

இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி, யாரேனும் தாமாக முன்வந்து வழங்குகின்ற நன்கொடைகள், மற்றும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் வருவாயிலிருந்து, ஒரு சதவீதம் (1%) ஆலயப் பொதுநல நிதி என்ற தலைப்பின் கீழ் தனியே வைக்கப்படுகிறது. இந்நிதி தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில், முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து சமூக நலப் பணிகளுக்காகவும், நலிந்த திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காகவும், நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 1991-ஆம் ஆண்டில் மட்டும் 54 திருக்கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.17.15 இலட்சம் இந்த நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நலிந்த மற்றும் நிதி உதவி தேவையுள்ள ஆலயங்களுக்காகத் திருப்பணி நிதி உதவித் திட்டம் ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி

கிராமங்களில் நிதி வசதியற்ற கோயில்கள் பல உள்ளன. இக்கோயில்களின் திருப்பணிக்காக, அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ரூபாய் ஒரு கோடி பெறப்பட்டு, அதை வைப்பு நிதியாகக் கொண்டு, அதிலிருந்து பெறப்படுகின்ற வட்டித் தொகை மட்டும், மேற்படி நிதி வசதியற்ற சிறு கோயில்களின் திருப்பணிக்காகச் செலவிடப்படுகிறது. இந்த வைப்பு நிதி 1984-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1990-ஆம் ஆண்டு வரை திருப்பணிக்காக ஆலயம் ஒன்றுக்கு, ரூ.10,000 வீதம் உதவித்தொகை அளிக்கப்பட்டு வந்தது. 1991-ஆம் ஆண்டிலிருந்து இத்தொகை ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-லிருந்து இதுவரை, மொத்தம் 619 ஆலயங்களுக்கு, ரூ.70.93 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபங்கள்

வணிக வளாகங்களும், திருமண மண்டபங்களும் கோயில்களின் வருமானத்திலிருந்தும், வங்கிக் கடன் பெற்றும் கட்டப்பட்டு வருகின்றன. இவைகள் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அன்றி, கோயில்களுக்கு நிரந்தரமாக நல்ல வருவாயையும் ஈட்டித் தரும். அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலின் உபரி நிதியிலிருந்து, மதுரையில் 'ஏழு கடல் அங்காடி' என்ற ஒரு வணிக வளாகக் கட்டடம், ரூ.93.92 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலின் உபரி நிதியிலிருந்து, ஒரு வணிக வளாகக் கட்டடம், திருத்தணி நகரத்தில், பேருந்து நிலையத்திற்கு அருகில், ரூ.35 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சென்னை இராயப்பேட்டையில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான, டாக்டர் இ/ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இடத்தில் ஒரு வணிக வளாகத்தை, ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டது. அதன் முதல் கட்டம், ரூ.34 இலட்சம் செலவில், கட்டி முடிக்கப்படும் தறுவாயில் உள்ளது. இரண்டாம் கட்டக் கட்டுமானப் பணிகள், இன்னும் ஒரு சில மாதங்களில் தொடங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் சார்பாக, இரண்டு திருமண மண்டபங்கள் ரூ.48.50 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வடபழனியில் இரண்டு திருமண மண்டபங்களும், திண்டுக்கல்லில் ஒன்றும், காரைக்குடியில் ஒன்றும், ஆக மொத்தம் நான்கு திருமண மண்டபங்கள், ரூ.52.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் ஆறு திருமண மண்டபங்கள், ரூ.56 இலட்சம் செலவில் கட்டப்படவுள்ளன.

திருப்பணி மற்றும் இதரக் கட்டுமானப் பணிகள்

மொத்தம் 611 ஆலயத் திருப்பணி வேலைகள், ரூ.10.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் 266 பணிகளுக்கு, ரூ.10.41 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மேலும் 218 இதரக் கட்டுமானப் பணிகள், ரூ.7.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இன்னும் ரூ.3.82 கோடி மதிப்பீட்டில், 103 கட்டுமானப் பணிகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் இப்பணிகளும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாமகம்

கும்பகோணத்தில் நடைபெற்று முடிந்துள்ள மகாமகத் திருவிழாவினையொட்டி, அங்குள்ள 19 கோயில்களில், 11 கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்கு விழாவும் நடைபெற்றுள்ளது. இதரக் கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. இதற்காக அரசு மானியமாக ரூ.12.50 இலட்சமும், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சமும், கோயில்



உபரி நிதியிலிருந்து ரூ.12 இலட்சமும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.5.77 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.40.27 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

ஒரு காலப் பூஜை:
அரசு நிதியுதவி

தமிழகத்திலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் அனைத்தும், ஆரம்ப காலத்தில் மாமன்னர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் நேரடிப் பராமரிப்பிலிருந்து வந்து, பின்னர் அவர்களால் வழங்கப்பட்ட மானியங்கள், சொத்துக்கள், ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில், பராமரிக்கப்பட்டு வந்தன. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக மாற்றும் பொருளாதார மாறுதல்களினாலும், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டங்கள் ஆகியவற்றாலும், கோயிலுக்குக் கிடைத்து வந்த வருமானம் வெகுவாகக் குறைந்தது. இதனால் கோயில்களை உரிய முறையில் பராமரிக்க முடியாத நிலையேற்பட்டு, தினசரி விளக்கேற்றுதல், அன்றாடப் பூஜைகள் செய்தல், அர்ச்சகர் போன்ற சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தல் போன்றவைகளுக்குக்கூட, போதிய நிதி வசதியில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. இச்சூழ்நிலையில், கோயில்களில் தினசரி ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்கின்ற நோக்கத்துடன், உபரி வருமானம் உள்ள கோயில்களின் வருமானத்திலிருந்து ரூ.5 கோடியை எடுத்து, வைப்பு நிதியாக வைத்து, ஒரு புதிய திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஒவ்வொரு கோயிலுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.2,500 வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 4,462 கோயில்களுக்கு, ரூ.145.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள இத்திட்டத்தினால், நலிவுற்ற கோயில்களுக்குத் தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைத்து வருகிறது. இதற்கு நிரந்தரமாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, நலிவுற்ற கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு, எதிர் வரும் ஆண்டுகளில், தவறாது ஒரு காலப் பூஜையாவது நடத்த வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது.

இதற்காகக் கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வைப்பு நிதியாக ஏற்படுத்தினால், அதில் கிடைக்கும் வருவாயிலிருந்து ஒரு காலப் பூஜையாவது செய்ய முடியும். ஒவ்வொரு கோயிலுக்கும் இந்த வைப்பு நிதியை, இந்து சமய அறநிலையத் துறையே வழங்க இயலாது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்களே இதற்கு உதவவேண்டும். அந்தந்தப் பகுதிகளில் உள்ள கோயில்களைப் பராமரிக்க முன்வர வேண்டும்.

பொது மக்களாக முன்வந்து, வைப்பு நிதி மூலதனமாக ரூ.25,000 செலுத்த இயலாத சூழ்நிலையில், அவர்கள் ரூ.12,500 செலுத்தினால், அரசின் சார்பில் மீதமுள்ள ரூ.12.500 உதவியாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, சுமார் 400 கோயில்களுக்கு மூலதன வைப்பு நிதி ஏற்படுத்தலாமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். ஒவ்வொரு கோயிலுக்கும் ரூ.12,500 நிதி உதவி என்ற அடிப்படையில், 400 கோயில்களுக்கு ரூ.50 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும். இந்தத் தொகை, முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அரசின் உதவியால் பயன்பெறும் கோயில்கள் 400 ஆக இருந்தாலும், மக்களின் ஆர்வத்தாலும், ஆதரவாலும், இந்தத் திட்டத்தில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள் பயன்பெறும் என்று நம்புகிறேன்.

பொதுமக்கள் இத்திட்டத்தை வரவேற்று, அவரவர் பகுதியிலுள்ள கோயில்களின் மறுமலர்ச்சிக்காக, முழுமனதுடன் இத்திட்டத்தில் பங்கேற்று, அவர்கள் சார்பாக ரூ.25,000 நிதியினைத் திரட்டி, வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களால் ரூ.25,000 நிதி திரட்ட முடியாத இடங்களில் உள்ள கோயில்களுக்கு மட்டுமே, அரசின் பங்காக ரூ.12,500 கொடுக்கப்படும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

என் விருப்பம்

வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும், பயிலாவிட்டாலும் எனக்குக் கவலை இல்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும், இதுதான் என் விருப்பம். நான் ஒருக்கால் மனிதனுக்கு அடிமையானேன்; ஆனால் மனத்திற்கு ஒருபோதும் அடிமைப்பட மாட்டேன். அப்பாவத்தைவிடக் கொடுமையானது வேறொன்றுமில்லை. நீங்கள் நன்கு பயின்று மனத்தைக் கட்டுப்படுத்துங்கள்.

-அண்ணல் காந்தியடிகள்

வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி

சென்ற ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு நான் பதில் அளித்தபோது வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். இதற்கான கருத்துரு ஒன்று இந்து சமய அறநிலையத் துறையினரால் தயாரிக்கப்பட்டு, தற்போது அது அரசின் பரிசீலனையில் உள்ளது. வேதங்களைப் பற்றிய முழுமையான அறிவைப் புகட்டக்கூடிய கல்வி நிலையமாக இது அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்தக் கல்லூரி யில் வேதங்கள் ஆகம சாஸ்திரங்கள், உபநிட தங்கள், பன்னிரு திருமுறைகள், மற்றும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் ஆகியவற்றைக் கற்பிப்பதற்கான பாடத் திட்டங்களையும், பிரிவுகளையும் பற்றி 2.3.1992 அன்று நடைபெற்ற கோவில் நிர்வாக வாரியக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதுகுறித்துக் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு வாரிய உறுப்பினர்களும், சமயச் சான்றோர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.



இந்தக் கல்லூரியை அமைப்பதற்காகத் தேவையான நிலம் மற்றும் நிதி உதவி அளிக்கச் சில பெரியவர்களும் முன் வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்லூரியை அமைதி சூழ்ந்த இடத்தில் ஆன்மீக உணர்வுக்குத் தகுந்த இயற்கைச் சூழலில் அமைக்கப்பட வேண்டும் என்றும், அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் இடம் ஆழ்ந்த தியானத்திற்கும், வழிபாட்டிற்கும் உகந்ததாக இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இதற்குத் தேவைப்படும் 40 ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழகத்தின் கல்வி நிறுவனங்களில் தற்போது பின்பற்றப்படும் இட ஒதுக்கீட்டு முறை இந்தக் கல்லூரியிலும் பின்பற்றப்படும். அதாவது ஆதி திராவிடருக்கு 18 விழுக்காடு இடங்களும், பழங்குடியினருக்கு ஒரு விழுக்காடு இடமும் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு இடங்களும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படும் என்பதை மீண்டும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை எதிர்வரும் கல்வி ஆண்டில் தொடங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ப்தை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தக் கல்லூரியில் பல ஆராய்ச்சிப் பிரிவுகளைத் தொடங்கி, இதனை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்தும் எண்ணமும் எங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள, தேவஸ்வம் என்று அழைக்கப்படும் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம், 490 கோயில்களைப் பராமரித்து வருகிறது. இதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் மானியமாக ரூ.17.70 இலட்சம் வழங்கி வருகிறது.

ஆலயங்களின் பராமரிப்புச் செலவு மிக அதிகமாக உயர்ந்துள்ளதாலும், இவ்வாரியத்திற்குக் கடந்த 34 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் இந்த மானியத் தொகை உயர்த்துப்படாததாலும், அவ்வாரியத்தின் கோயில்கள் பெரிதும் சீரழிந்து, சாதாரண பராமரிப்புப் பணிகள் கூட செய்ய முடியாத நிலையில் இருந்தன.

இதனைப் போக்குவதற்காக 1992-93-ஆம் ஆண்டு முதல், இதற்குக் கூடுதலாக ரூ.10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் செலுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, இந்தக் கூடுதல் ஒதுக்கீடான ரூ.10 இலட்சம் கொடுக்கப்படும், என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சர் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து, முதற்கட்டமாக 19 பாடல் பெற்ற கோயில்கள், மற்றும் 16 மங்களா சாசனம் செய்யப்பட்ட கோயில்களின் திருப்பணிக்காக, ரூ.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாரூர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

திருவாரூரில் உள்ள, உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளை முறையாகப் பராமரிக்க, அந்த மையத்தில் குளிர் சாதன வசதி ஏற்படுத்த, ரூ.9 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 8,443 கோயில்களில், 66,534 உலோகத் திருமேனிகள் உள்ளன. இந்த உலோகத் திருமேனிகள் திருடப்பட்டால், அவற்றை எளிதில் கண்டுபிடிக்க உதவியாகச் சிலைகள் புகைப்படம் பிடிக்கப்பட்டு, தொகுத்து வைக்கப் பட்டுள்ளன. அவ்வாறு புகைப்படம் எடுக்கப்பட்ட சிலைகள், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பழம் பொருள் கலைச் செல்வங்கள் சட்டத்தின் கீழ், பதிவும் செய்யப்படுகின்றன. இதுவரை 2,563 கோயில்களில், 23,910 சிலைகள் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ளவற்றில், 3,883 கோயில்களைச் சேர்ந்த, 21,505 சிலைகளுக்குப் புகைப்படத் தொகுப்புகள் தயாரிக்கப் பட்டுள்ளன. இந்தப் புகைப்படத் தொகுப்புகளை விரைவில் பதிவு செய்யவும், எஞ்சியுள்ள 1,997 கோயில்களைச் சேர்ந்த 21,129 உலோகத் திருமேனிகளைப் புகைப்படம் எடுத்து, அவற்றைப் பதிவு செய்யவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்த உலோகத் திருமேனி பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுவாமி சிலைகளுக்கு, வெள்ளிக்கிழமைகளில் மட்டும் பூஜை செய்யப்படுகின்றது. இனிமேல் அங்குள்ள சுவாமி சிலைகளுக்கு, வாரத்தில் மூன்று நாட்கள், அதாவது, திங்கள், செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில், பூஜை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களின் நகைகள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள் பாதுகாப்பு

கோயில்களில் உள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் குறித்து, சரியான மதிப்பீடு செய்யவும், பாதுகாப்பாக அவற்றை வைத்திருப்பது குறித்தும், ஆய்ந்து வழிமுறைகளை எடுத்துரைப்பதற்காக, ஓய்வு பெற்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அந்தக் குழு ஆய்வு செய்து சில யோசனைகளைத் தெரிவித்தது. அதன் அடிப்படையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய அறிவுரைகள், அனைத்துக் கோயில் செயல் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டன. இது தவிர, கோயில்களுக்கு இரும்புக் கதவுகள் பொருத்தவும், திருடர்கள் எச்சரிக்கை மணி (Burglar Alarm) பொருத்தவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோயில் பாதுகாப்புப் படை

நமது பண்பாட்டைப் பாரம்பரியத்தினைப் பிரதிபலிக்கின்ற திருக்கோயில்கள், நமது கலைப் பொக்கிஷங்களாகும். அவற்றையும், அவைகளுக்குச் சொந்தமான உடைமைகளையும் பாதுகாப்பது என்பதை தனது தார்மீகக் கடமையாக இவ்வரசு கருதுகிறது. கடந்த சில மாதங்களாகக் கோயில்களில் திருட்டு மற்றும் சிலைகள் உடைக்கப் படுவதாகச் செய்திகள் வந்த வண்ணமுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட, இது குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைத்து இருக்கிறார்கள். இவைகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த, ஒரு சிறப்பு ஏற்பாட்டை, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குரிய, எனது பதிலுரையில் அறிவிக்கிறேன், என்று தெரிவித்திருந்தேன்.

கோயில்களில் உள்ள விலையுயர்ந்த உலோகத் திருமேனிகளையும், சிலைகளையும், ஆபரணங்களையும் மற்றும் ஆராதனைக்குரிய பொருள்களையும், முழுமையாகப் பாதுகாப்பதற்காகக் காவல் துறையில், ''கோயில் பாதுகாப்புப் படை'' ஒன்று, தனியே ஏற்படுத்தப்படும் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்புப் பிரிவு விரைவில் அமைக்கப்படும். ஏற்கெனவே Idol Theft wing என்ற ஒரு பிரிவு காவல் துறையில் உள்ளது. சிலைகள் திருட்டுப் போனால், அவற்றைக் கண்டுபிடிக்க இப் பிரிவு செயல்படுகிறது. அதில், சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில், ஒரு துணைக் காவல்துறைக் கண்காணிப்பாளர், 5 ஆய்வாளர்கள், 3 துணை ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 3 முதல்நிலைக் காவலர்கள், 13 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆக மொத்தம் 30 பேர் மட்டுமே உள்ளனர். அது வேறு - இது வேறு. இந்தப் பிரிவு, திருட்டுக் குற்றங்கள் நடவாமல் தடுப்பதற்கு ஏற்படுத்தப்படும் பிரிவு.

கோயில் பாதுகாப்புப் படைப் பிரிவில் ஆயிரம் இரண்டாம் நிலைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்கள் தவிர, மாதம் ரூ.750 தொகுப்பு ஊதியத்தில், 3000 முன்னாள் இராணுவத்தினரும் இந்தப் பிரிவில் நியமிக்கப் படுவார்கள். பணியில் அமர்த்தப்படும் 1000 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கும், 3000 முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்கள் பாதுகாப்புப் பணியில் உள்ள நேரங்களில், துப்பாக்கி கொடுக்கப்படும். அவர்கள் காவல் பணிபுரியும் கோயில், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்றதோ, அந்தக் காவல் நிலையத்தில் காவலர்களாகப் பணியில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் அங்கிருந்து சென்று, அந்தந்தக் கோயில்களில் காவல் பணிபுரிவார்கள்.

இந்த அமைப்பை ஏற்படுத்த, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5.28 கோடி செலவாகும்.

இந்தப் பெரும் செலவினை, நிதி வசதி இல்லாத காரணங்களினால், கோயில்கள் முழுமையாக ஏற்க முடியாது என்பதால், மொத்தச்செலவினத்தில் 10 சதவிகிதத் தொகையை மட்டும் கோயில்கள் ஏற்கும். மீதமுள்ள 90 சதவிகிதத் தொகையை, அரசே ஏற்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், மற்றும் அறநிலையத் துறை துணை ஆணையர், அல்லது உதவி ஆணையர் ஆகியோர், இந்தக் கோயில் பாதுகாப்புப் படைக் காவலர்கள் செய்யும் பணிகளை, மாதம் ஒரு முறை ஆய்வு செய்வார்கள். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளர், மாநிலக் காவல் துறைத் தலைவர், மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக்குழு, இப்பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிகளை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில் பணியாளர்கள் நலன்

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில், மொத்தம் 49,713 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 4,166 பணியாளர்கள், உதவி ஆணையர் அல்லது செயல் அலுவலர்கள், மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள அதிகாரிகளின் கீழ் உள்ள, பெரிய கோயில்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட அரசு ஊழியர்களுக்கு நிகராக இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதர சிறிய கோயில்களின் பணியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் பணியாற்றும் கோயிலின் வருமானத்தைப் பொறுத்து, ஊதியம் வழங்கப்படுகிறது. மொத்தத்தில், 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஆலயத்தின் ஆண்டு வருவாயில் 40 சதவீதத்திற்கு மிகாத அளவு, அவ்வாலயத்தினுடைய பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

நலிந்த திருக்கோயில்களில் பணியாற்றிவரும் பணியாளர்களுக்கு, நிதியின்மை காரணமாக, ஊதியத் தொகை கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினால், அவை வழங்கப்படாமல் வைக்கப் பட்டிருந்தது. அப்படிப்பட்ட நிலுவைத் தொகையை வழங்குவதற்காகப் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயில் உபரி நிதியிலிருந்து,

• தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் அறிஞர்களின் கருவூலங்களே புத்தகங்கள்.

—ஜோசப் அடிசன்

• என் மனதுக்குப் பிடித்த புத்தகங்களை மட்டும் என்னிடம் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.

—மாஜினி

ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியாகக் கொண்டு, ஆலய ஊழியர் நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஆண்டு வருமானம் ரூபாய் 25,000-க்குக் குறைவாக உள்ள ஆலயங்களில் பணிபுரிந்து வரும், மாத ஊதியம் ரூபாய் 300-க்கும் குறைவாகப் பெறுவோருக்கு, ஆண்டுதோறும் ஊதியத் தொகை நிலுவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் பல கோயில் பணியாளர்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்தில் ஆலய வருவாய் வரம்பினை உயர்த்தி, அதாவது ஆண்டு வருவாய் ரூபாய் 40,000 வரை உள்ள கோயில்களில் பணியாற்றும், ரூபாய் 400-க்கும் கீழ் மாதச் சம்பளம் பெறும் நிரந்தர மற்றும் முழுநேரப் பணியாளர்களின் சம்பளப் பாக்கியும், இந்த ஆண்டு முதல், ஆலய ஊழியர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் சுமார் 500 ஆலய ஊழியர்கள் பயன்பெறுவார்கள். இது தொடர்பாக 1.7.90 முதல், 30.6.91 வரை உள்ள காலத்திற்கான சம்பளப் பாக்கிகள், உடனடியாக வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ரூபாய் 20 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, 20 ஆண்டுகள் பணி செய்து, 60 வயதைக் கடந்து ஓய்வு பெற்ற, வேதபாராயணம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், மற்றும் அரையர் சேவை செய்த 100 பேர்களுக்கு, ஓய்வு ஓதியமாக மாதம் ரூ.300 வழங்கப்படும் என்று நான் அறிவித்தேன். அத் திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்படுகிறது என்பதையும், அதேபோன்று, அர்ச்சகர்களர்க 20 ஆண்டுக் காலம் பணி செய்து 60 வயதைக் கடந்து, ஓய்வு பெற்ற 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியமாக வழங்கும் புதிய திட்டமும் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 18 இலட்சம் செலவாகும்.

கோயில்களில் தற்போது பணிபுரியும் பூசாரிகளுக்கும், அர்ச்சகர்களுக்கும், முறையாக அன்றாடப் பூஜைகளையும், வழிபாடுகளையும் செய்வதற்கு உதவும் வகையில், அவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சித் திட்டம் (Refresher Course) ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதற்காக ரூபாய் 8 இலட்சம் செலவிடப்படும். இத்திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும், 500 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களின் அசையாச் சொத்துக்கள் மற்றும் பலதரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடுதல் குறித்து

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள், மற்றும் பல தரப்பட்ட உரிமைகளைக் குத்தகைக்கு விடும்போது, சட்ட விதிகளின்படி பொது ஏலம் மூலம்தான் விடப்பட வேண்டும். மேலும் தனிப்பட்ட முறையில் (Lease otherwise than by public auction) குத்தகைக்கு விடுவதற்குத் தற்போதுள்ள விதிகளில் இடம் உள்ளது. இந்த விதியைக் கொண்டு, பெரும்பாலான குத்தகைகள் பொது ஏலத்தில் அல்லாமல், தனிப்பட்ட முறையில் குத்தகைக்கு விடுவதற்கு முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இதனால் கோயில்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் பெரும் அளவு குறைகிறது. எனவே, இதனைத் தடுக்கும் பொருட்டு, விதிகளில் திருத்தம் செய்து, அனைத்து அசையாச் சொத்துக்கள் மற்றும் பல தரப்பட்ட உரிமைக் குத்தகைகளில், தவிர்க்க முடியாத இனங்களைத் தவிர, மற்ற வழக்கமான இனங்களைப் பொது ஏலத்தில்தான் விடவேண்டும் என்ற சட்டத் திருத்தம் விரைவில் கொண்டு வரப்படும்.

ஒழுக்கம்

● உங்கள் திறமையைப் புலப்படுத்த நீங்கள் செய்யும் நூறு சொற்பொழிவுகளைவிட, உங்கள் நடத்தை ஒன்றே போதுமானது.

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தின் திருக்குளச் சீரமைப்பு

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் புராதன ஆலயங்களில் ஒன்றாகும். அந்தக் கோயிலின் பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்று, 'தெப்பத் திருவிழா' ஆகும்.

அது கடந்த 1988-ஆம் ஆண்டிலிருந்து, குளத்தில் போதிய நீரின்மை காரணமாக, ஒவ்வொரு ஆண்டும் நடத்த இயலாமல் போய்விடுகிறது. இதனால் பக்தர்களின் உள்ளத்தில் ஒரு பெருங்குறை இருந்து வருகிறது. இக்குளத்தில் மீண்டும் தொடர்ந்து, அத்தகைய தெப்பத் திருவிழாவை நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்காகக் குளத்தில் போதுமான தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் திட்டமிடப்பட்டு, அதற்கான முதல் கட்டமாக ரூ.35 இலட்சத்திற்கான மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். நான் 13-ஆம் தேதியன்று தொடங்கி வைக்க உள்ளேன்; இப்பணி விரைவாக முடிக்கப்பட்டு, அடுத்த ஆண்டு ஜனவரித் திங்களில் தெப்பத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இதைப் போலவே, தமிழ்நாட்டிலுள்ள முக்கிய திருக்கோயில்களின் குளங்களுக்கும் படிப்படியாகத் திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலய நிர்வாக வாரியம்:

மாண்புமிகு முதல்வர் விளக்கம்!

ஆலய நிர்வாக வாரியத்தில், பண்களையும் உடல் ஊனமுற்றோர்ளையும் சேர்க்க வேண்டும் ன்றும், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர ரஸ்வதி சுவாமிகள் ஆலய நிர்வாக ாரியத்திலோ அல்லது மாவட்டக் ழுவிலோ இடம்பெறச் செய்ய வண்டும் என்றும், ஆலய நிர்வாக ாரிய உறுப்பினர்களுக்கும் மாவட்டக் ழு உறுப்பினர்களுக்கும், வாகன சதி மற்றும் பயணப்படி வழங் வது குறித்தும், குறிப்பிட்டுள் ார்கள். மாநில ஆலய நிர்வாக ாரியத்திலும் மாவட்டக் குழுக்களி லும், தகுதியுடைய பெண்களையோ, டல் ஊனமுற்றவர்களையோ, றுப்பினர்களாக நியமிக்கத் தடை யதும் இல்லை என்பதைத் தெரி த்துக் கொள்கிறேன். ஆலய மேம் ாட்டில் அக்கறை கொண்ட, தர்ம ிந்தனை உள்ள பெருமக்கள், அனு வம் பெற்ற அதிகாரிகள், மற்றும் ான்மீக மதத் தலைவர்கள், தகுதி ின் அடிப்படையில் இக்குழுக்களில் டம் பெற்றுள்ளனர். எனவே, தில் இட ஒதுக்கீடு முறை இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டபோது, தவத்திரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந்த வாரியத்தில் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை விரும்பாத சூழ்நிலையில், அவருடைய சார்பாக ஒருவரை முன்மொழியுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. சுவாமிகளிடமிருந்து எந்தப் பதிலும் வராத காரணத்தினால், வாரியம் அமைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. பின்னர் நான் அனுப்பிய கடிதத்திற்கு, விருப்பமில்லை என்ற பதில் வந்தது. எனவே, குறை அரசிடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இருப்பினும், அரசுக்கு ஒத்துழைக்க இணங்கிய சமயப் பெரியோர்களின் ஆசியுடன், வாரியம் அமைக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை அரசிடமும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடமும் குவிந்து இருந்த பல அதிகாரங்கள் தற்போது இந்த நிர்வாக வாரியத்திடம் தரப்பட்டு இருக்கிறது என்பதையும், மிகுந்த அனுபவமும் அறிவாற்றலும் பெற்ற சமயச் சான்றோர்கள் மற்றும் பெரியோர்களுடைய வழிகாட்டுதலும் இந்த வாரியத்திற்குக் கிடைத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது

கடந்த 2.3.1992 அன்று நடைபெற்ற இந்த வாரியத்தின் முதல் கூட்டத்தில், 132 பொருட்கள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டு, சீரிய கருத்துப் பரிமாற்றத்திற்குப் பின் முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த முதல் கூட்டத்திலேயே 3.19 கோடி ரூபாய் அளவிலான திருப்பணித் திட்டங்களைச் செயல்படுத்த அனுமதியும், வழங்கப்பட்டுள்ளது. வாரியக் கூட்ட நடவடிக்கைகளில் பங்கு பெற்றவர்களுக்குத் தெரியும், அவர்களுடைய கருத்துக்களுக்கு எங்ஙனம் மதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதும், அவை எவ்வாறு சீர்தூக்கிப் பார்க்கப்பட்டது என்பதும்.

ஒரு சிலர் குறை கூறுவது போல, இந்தக் கோயில் நிர்வாக வாரியம் ஒரு ஆலோசனை வழங்கும் குழு அல்ல. இது அதிகாரம் பெற்ற, சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட, ஒரு முழுமைபெற்ற வாரியம் ஆகும்.

தனிப்பட்ட முறையில் முதல் அமைச்சர் அவர்களின் கோவில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்குச் சமுதாயத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் மக்கள் – ஏன், பிற மதத்தினரும் கூட மனமுவந்து நன்கொடையாக அளித்த தொகை இந்தக் குறுகிய காலத்தில் ரூ.3.96 கோடியைத் தாண்டிவிட்டது என்றால், அது பொதுமக்கள் இந்த அரசு எடுக்கும் முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் அங்கீகாரம் கொடுத்துள்ளனர் என்பதைத்தான் தெளிவுபடுத்துகிறது.

விந்தையிலும் விந்தை

இத்தனை முயற்சிகளையும் பாராட்ட மனம் இல்லாமல் ஒரு சிலர் இந்த நிர்வாக வாரியத்தைக் குறை கூறியும் தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கும் அவற்றில் உள்ள விலை உயர்ந்த பொருட்களுக்கும் ஏதோ பாதுகாப்பு இல்லை என்பது போன்ற தவறான கருத்தைப் பரப்பி அதற்கெனத் தனியாக மக்கள் பாதுகாப்புப் படை ஒன்று நிறுவ வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியும் உள்ளனர். முந்தைய அரசுகள் எல்லாம் கோயில் நிர்வாகம் குறித்து எவ்வித ஆர்வமும், காட்டாதிருந்த காலத்தில் எல்லாம் வாளாவிருந்தவர்கள் இப்பொழுது குறை கூறத் தொடங்கி உள்ளார்கள் என்பது தான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

தமிழகத்திலுள்ள கோயில்களின் மிக முக்கியச் சொத்தான விவசாய நிலங்களில் இருந்து வர வேண்டிய குத்தகைப் பாக்கித் தொகையை வசூலிக்க இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற தவறான குற்றச்சாட்டையும் கூறி வருகிறார்கள். தமிழ்நாடு குத்தகை விவசாயிகள்

பாதுகாப்புச் சட்டம் மற்றும் பொது அறநிலையக் கட்டளைகள் சட்டம் ஆகியவற்றின்பால் இருந்த தடை ஆணைகள் இப்போதுதான் நீக்கப் பட்டுக் குத்தகைப் பாக்கியை வசூ லிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. மேலும், ஏற்கெனவே இருந்த 5 வருவாய் நீதிமன்றங்களோடு இந்த அரசு புதிதாக 6 வருவாய் நீதிமன்றங்களை அமைத்து இப் பணியை விரைவுபடுத்தியுள்ளது.



நகர்ப்புறங்களில் உள்ள விலை உயர்ந்த நிலங்களைக் குறைந்த காலக் குத்தகைக்கு விடுவது என்ற அரசின் முடிவைப் பற்றியும் சிலர் குறை கூறி உள்ளார்கள். நீண்டகாலக் குத்த கைக்குக் கோயில் நிலங்களை விடா மல், அதுவும் குறிப்பாகக் குத்த கைக்கு விடப்படுவதைத் தவிர்த்து, கோயில்களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் வரவேண்டுமென்று எடுக் கப்பட்ட நடவடிக்கைகளைக்கூட குறை கூறுகின்றனர். 5 ஆண்டு களுக்கு ஒருமுறை குத்தகைத் தொகையை உயர்த்தலாம் என்ப தைக்கூட உணராமல் பேசுகிறார்கள். இந்த நடவடிக்கைகள் நகர்ப்புறங் களில் உள்ள கோயில்களுடைய வருமானத்தைப் பெருக்குமே ஒழிய குந்தகம் விளைவிக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில்களின் வருமானமும் செலவும்

கோயில்களுடைய வருமானத்தை ஒருபோதும் அரசு எடுத்துக் கொள் வது இல்லை. மாறாக எப்போதும் அரசுதான் நிதி உதவி வழங்கி வருகிறது. இந்தத் துறையினுடைய மொத்த வருமானமும் கோயில் களுடைய திருப்பணிகளுக்காகவும், நிர்வாகத்திற்காகவும், அன்றாடம் நடத்தப்பட வேண்டிய பூசைகளுக் காகவும் தான் செலவிடப்படுகிறது. சில நேரங்களில் கோயில் சிப்பந்தி களுக்குக்கூட மாதச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்பொழுது அரசு அவர்களுக்கு வேண்டிய உதவித்தொகைகளை வழங்கி வரு கிறது.

கன்னியாகுமரி தேவஸ்வம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் பணி புரியும் சிப்பந்திகளுக்குச் சம்பளம்கூடக் கொடுப்பதற்குப் பணம் இல்லாமல் 10 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக அரசு வழங்க வேண்டு மென்ற கோரிக்கையின் மீது ஆணைக் காகச் சமீபத்தில் என்னிடம் ஒரு கோப்பு வந்தது. அதில் அரசுச் செயலர் 3 இலட்சம் ரூபாய் மட்டும் வழங்கலாம் என்று பரிந்துரை செய் திருந்தார். கன்னியாகுமரி தேவஸ் வத்தின் தேவைகளை உணர்ந்த எங்கள் அரசு, அவர்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் கோயில் புனரமைப்பு மற்றும் பரா மரிப்பு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயைப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் முதலீடு செய்து அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் ரூபாய் கிடைக்க வழி வகை செய்து இருப்பதை ஏற் கெனவே தெரிவித்தேன்.

இதுபோன்று கடந்த 34 ஆண்டு களாக அவர்களுக்குக் கிடைக்காத உதவியைச் செய்தது தவறாகுமா? அல்லது அதில் ஏதேனும் உள் நோக்கம் இருக்கிறதா?

இப்படித் தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 40 ஆயிரம் திருக்கோயில் களையும் நன்கு பராமரிக்க வேண் டும்; அவற்றை இயற்கைச் சீற்றங் களிலிருந்தும் பிற அழிவுகளிலிருந் தும் காக்க வேண்டும்; சீரமைக் கப்பட வேண்டும்; அவற்றின் சொத் துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எங்களது அரசின் உயர்ந்த கொள்கைகளைச் சாடும் வகையில் கருத்துக்களை ஒரு சிலர் கூறுவது நியாயமா? இவர்கள் எதற்காக இவ் வாறு பேசி வருகின்றார்கள் என்பது தமிழக மக்களுக்கு நன்கு புரியும்; எனவே, இவர்களது வாதங்களைப் பற்றி நான் எப்பொழுதும் கவலைப் பட்டது கிடையாது.

சமயத்தின் அடிப்படையில் வன்முறையாளர்கள்

கோயில்களில் திருட்டு மற்றும் சிலை உடைப்புப் போன்ற சம்ப வங்கள் அவ்வப்போது நடை பெற்று வருவதை நிரந்தரமாகத் தடுக்கவும் இந்த அரசு தனியாக ஒரு கோயில் பாதுகாப்புப் படையை ஏற்படுத்தி உள்ளதை ஏற்கெனவே தெரி வித்தேன். இந்தச் சூழ்நிலையில் திருக்கோயில்களைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும் தனிப்பட்ட நபர் களால் ஆங்காங்கே மக்கள் பாது காப்புப் படை உருவாக்கப்பட வேண் டும் என்று சிலர் கூறுவது அறி வார்ந்த செயலாகத் தெரியவில்லை.

சமய அமைதி பூத்துக் குலுங்கும் தமிழகத்தில் சமயத்தின் அடிப்படை யில் வன்முறையாளர்கள் தோன்று வதற்குத்தான் இந்த மக்கள் பாது காப்புப் படை வழி வகுக்கும் என்ப தால் இதனை முறியடித்து, முளை யிலேயே கிள்ளி எறியத் தேவை யான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு சிறிதும் தயங்காது என் பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

கோயில் நிர்வாக வாரிய உறுப் பினர்களுக்கு வாகன வசதி செய்து கொடுப்பது என்பது இயலாத காரியம். ஏனெனில், கோயில் நிர் வாக வாரியத்திற்கு மொத்தம் 18 உறுப்பினர்களும், ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் 12 உறுப் பினர்கள் வீதம் 17 மாவட்டக் குழுக்களும் உள்ளன. அத்தனைப் பேருக்கும் தனித்தனியே வாகன வசதி அளிப்பது என்பது, பொரு ளாதார ரீதியில் சாத்தியமாகாது. இருப்பினும் அலுவல்சாரா உறுப் பினர்களுக்குப் பயணப்படி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என் பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சட்டப்பேரவையில் 9.4.92 அன்று ஆற்றிய பதில் உரையிலிருந்து.

பாரதிதாசன் கண்ட சமூக நீதி

புலவர் நடேச நாராயணன்

பாரதிதாசனார், பாரதிக்குப் பின் வந்த பைந் தமிழ்ப் பாவலர்; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்; புதுவை தந்த புதுமைப் புலவர்; புரட்சிக் கவிஞர்.

ஆம் அவர் கண்ட உலகு, புதிய உலகுதான். அவரே பாடுகின்றார்;

`புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.'

அவ்வுலகில் சமூக நீதிகள் சிறந்து விளங்கக் காண லாம். அங்கே சாதிச் சண்டைக்கு இடமில்லை; சமயப் பூசலுக்கு வாய்ப்பில்லை; மூட நம்பிக்கைக்கு வாழ் வில்லை; முதலாளி தொழிலாளி என்ற பேதமில்லை.

அங்கே கல்வியற்ற மக்களைக் காண முடியாது; இளம் விதவையர்களின் இதயக் குமுறலைக் கேட்க முடியாது; கடவுளையும் மதத்தையும் தங்கள் நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சுயநலமிகளைப் பார்க்க இயலாது.

எந்தச் சமூகத்தில் நீதி நிலைபெறவில்லையோ அந்தச் சமூகம் பிற எவ்வகையில் உயர்ந்திருப்பினும் நிலைத்து வாழ முடியாமல் நிலை குலைந்து வாழ நேரும். அதனால்தான் நமது புரட்சிக் கவிஞர், அரசி யலைவிட பொருளாதாரத்தைவிட சமூக நீதியையே தமது இலட்சிய கீதமாக - இதயப் பாட்டாக - உயிர் மூச்சாகக் கொண்டு அறிவுறுத்தி வந்தார்.

அரசியல் பொருளாதாரம் அனைத்தும் சமூகத்திற் கேயன்றோ? எனவே அரசியல் பேசும் இடமாயினும் சரி, பொருளாதாரம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி, குடும்பம் பற்றிப் பேசும் இடத்திலும் சரி; அவர் சமூக நீதிகளை வற்புறுத்தத் தவறவே இல்லை.

சமூக நீதிகளைச் சுருதியாக வைத்துக் கொண்டுதான் அவர் அரசியல் பொருளாதாரம், குடும்பம் எனும் பாடல்களைப் பாடினார். இந்த வகையில் அவர் பாடல்கள் அபஸ்வரமில்லாமல் சுருதியோடு இயைந்தே இருந்தன.

சமூக நீதிகளை வற்புறுத்தி மறுமலர்ச்சிக்கு ஆக்கம் தேடிய காரணத்தினால்தான் பாரதிதாசனார் 'புரட்சிக் கவிஞர்' எனப் புகழாரம் சூட்டப் பெற்றார்.

சாதியிலும் சமயத்திலும் வெறி கொண்டவர்கள் மிகுதியாக இருக்கும் சமூகத்தில் நீதி என்பது இடம் பெற இயலாது, நிம்மதி என்பது நிலைபெற முடியாது. எனவேதான் நமது புரட்சிக் கவிஞர், மக்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சமூக அநீதிகளில் மிகப் பெரிய அநீதியாகும் என்று கருதினார்.

கடல் மேற்குமிழிகள் என்ற நூலிலே செம்மறி வாயிலாகச் செப்புகின்றார் நம் கவிஞர்...

திறல் நாட்டு மக்கள் தம்பால்
மெய்ம்மையே புகல்வேன்; மக்கள்
மேல் என்றும் மட்டம் என்றும்
பொய்மையால் புகலும் ஏட்டை
புகலுவார் தம் ஏற்பாட்டை
இம்மா நிலத்தில் மாற்ற
ஆவன இயற்றித் தீர்வேன்
இதுவே நான் மக்கட்கு இந்நாள்
இயற்றிட எண்ணுந் தொண்டு'

என்று புகல்கிறார். இதிலிருந்து சாதி வேறுபாட்டை ஒழிப்பதில் - சமூக நீதியை நிலைநாட்டுவதில் - எவ்வளவு அக்கறை காட்டியுள்ளார் என்பதை அறியலாம்.

இருட்டறையில் உள்ளதடா
உலகம் - சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின்றானே '

என்று கொதிப்புடன் வியக்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் 102-வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப் படுகிறது.

பாவேந்தர் பாரதிதாசனின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள பாவேந்தர் பாரதிதாசனின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (29.4.1992).

எல்லோரும் தாயின் கர்ப்பத்திலிருந்து தோன்றியவர்கள்தாம் ; அந்தத்தாய் தீண்டத்தகாதவர்களையும் ஈன்று தருவதுண்டோ? எனவே தீண்டத் தகாதவர் எனச் சிலரை ஒதுக்குவது சமூகத்திற்கு இழைக்கும் அநீதியல்லவா?

அற்பத் தீண்டாதார் என்னும்
அவரும் பிறரும் ஓர்தாய்
கர்ப்பத்தில் வந்தோரன்றோ - சகியே
கர்ப்பத்தில்வந்தோரன்றோ?
தீண்டும் மக்களின் அன்னை
தீண்டாரையும் பெற்றாளோ
ஈண்டிதை யார் நம்புவார் - சகியே
ஈண்டிதை யார் நம்புவார்?'

சிலரை, பிறப்பால் தாழ்ந்தவர் எனக்கூறி அவரைத் தீண்டத்தகாதவர் என ஒதுக்கியதோடன்றி எல்லா உயிர்களையும் வேறுபாடின்றிக் காக்கும் ஆண்டவனின் பொதுமன்றத்திலும் அவர் நுழைவதற்கு அருகதையற்றவர்கள் என்றும் விதி வகுத்திருந்தார்கள். இது நம் சமூகத்தின் ஊடுருவிட்ட அநீதியாக இருந்தது. இதையும் கண்டிக்கத் தவறவில்லை நம் புரட்சிக் கவிஞர்.

இறைச்சியுண்ணும் நாயும் காகமும் கோயிலில் நுழைவதால் வராத தீட்டு, மக்களில் சிலர் மட்டும் போவதால் வந்திடுமோ? நாய்க்கும் காகத்திற்கும் தரும் மதிப்புக் கூடவா மனிதனுக்கு இல்லை என்று கேட்கிறார்.

'குக்கலும் காகமும் கோயிலிற் போவதில்
கொஞ்சமும் தீட்டில்லையோ-நாட்டு
மக்களிலே சிலர் மாத்திரம் அந்த
வகையிலும் கூட்டில்லையோ?'

தேகம் சுமை என்று கருதும் ஞானியர் நிரம்பிய நாடு நம்நாடு, இந்த நாட்டில்தான் அதேதேகத்தைக் காரணமாக வைத்து பேதத்தை வளர்க்கிறார்கள். எத்தனை கேவலமான புத்தி என்று இகழ்கிறார் புரட்சிக் கவிஞர்.

தேகம்சுமை நமைச் சேர்ந்ததில்லை என்று
செப்பிடும் தேசத்திலே - பெரும்
போகம் சுமந்து உடற்பேதம் கொண்டோம் மதி
போயிற்று நீசத்திலே.'

இமய முதல் குமரி மட்டும் உள்ளோர் அனைவரும் ஒரு சாதியே. நாம் அனைவரும் பாரத நாட்டின் படைமக்களே - இந்த உணர்ச்சி தோன்றினால்தான் ஒருமைப்பாடு நிலைக்கும்; வெற்றி பல விளைக்கும்.

கோரும் இமாசலமுதல் தெற்கில்
கொட்டும் புனல் நற்குமரி மட்டும்
இருப்போர் - இவர்
யாருமொரு சாதி எனவும் - இதில்
எள்ளளவும் பேதமெனல் இல்லை
எனவும் - நம்
பாரத நற்றேவி தனக்கே - நாம்
படைமக்கள் எனவும் நம்மிடை
இலக்கணம் - அந்த
ஓருணர்ச்சி தோன்றியவுடன் - அந்த
ஒற்றுமையன்றோ நமக்கு வெற்றியளிக்கும்'

இவ்வாறாகச் சாதிபேதத்தை நீக்குவது மக்கள் சரிநிகர் சமானம் என வகுப்பது சமூகநீதிகளில்முக்கியமான நீதி என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமூக அநீதிகள் எந்த உருவத்தில் வந்தாலும் அதை இனங்கண்டு சாடத் தவறவில்லை நம் மறுமலர்ச்சிக் கவிஞர். கடவுளின் பெயரால் ஆகட்டும், சமயத்தின் பெயரால் ஆகட்டும்,சமூக நீதிகள் பாதிக்கப்படுமானால் - தகர்க்கப்படுமானால் அவர், அந்த அநீதிகளைப் புறக்கணிக்கத் தவறவில்லை. ஏனெனில் அவருக்குத் தெரியும் சமூக நீதிகளைத் தகர்ப்பதன் வாயிலாகத் தன்னலத்தைக் காத்துக் கொள்ளக் கருதும் சுயநலமிகள் தாம் சமயத்தையும் கடவுளையும் குறுக்கே இழுத்து வருகிறார்கள் எனக் கருதினார். எனவே தயங்காமல் அவற்றைப் புறக்கணித்தார். சிலரது மனம் புண்படுமே என்பதற்காக அவர் தயங்கவில்லை; சமூகம் பண்பட்டால் போதும் என்று கருதினார்.

உயர்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், தாழ்ந்த சாதியாருக்கு ஒரு கடவுள், பணக்காரருக்கு ஒரு கடவுள், ஏழைக்கு ஒரு கடவுள் என்று கடவுளையும் பிரிக்கும் கொடுமையைக் கண்டார் கவிஞர். சினம் பிறக்கிறது! சிரிப்பும் வருகிறது அவருக்கு. நகைச்சுவையோடு தன் கருத்தைத் தெரிவிக்கிறார்.

என்னை அளித்தவர் ஓர் கடவுள் மற்றும்
ஏழைக்கோர் கடவுள் எனில்
முன்னம் இரண்டையும் சேர்த்துருக்குங்கள்
முளைக்கும் பொதுக் கடவுள்'

இளம் விதவையர்களின் ஏக்கப் பெருமூச்சை - இதயக் குமுறலை - இரத்தக் கண்ணீரை - கேட்டும் பார்த்தும் உணர்ந்தும் நெஞ்சம் நொந்தவர் நம் புரட்சிக் கவிஞர். கைம்பெண்கள் கலங்குவது சமூக அநீதியாகும். அந்த அநீதியை ஒழித்து அவர்களை மறுமணம் செய்து கொள்ள அனுமதித்துச் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும் எனச் சங்கென முழங்கினார்; முரசென அறைந்தார்.

இதோ இளம் விதவை ஒருத்தி தன் குமுறலை - ஏக்கப் பெருமூச்சை - வெளியிடுவதைக் கேளுங்கள்.

'எனை மணந்தார் இறந்தார் என் குற்ற மல்ல
இறந்தவுடன் மங்கல நாண் நல்லாடைகள்
புனைமலர் குங்குமம் அணிகள் போனதுண்டு
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?'

என்று கேட்கின்றாள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் காதலில் மாற்றம் இருக்க முடியுமா? வயது முதிர்ந்த கிழவன், தன் மனைவி இறந்து விட்டால் வேறொரு இளம் பெண்ணைத் தேடி மணக்கிறான். இதைச் சமூகம் அனுமதிக்கிறது. ஆனால் இளமையிலேயே தன் கணவனை இழந்துவிட்ட கைம்பெண், வேறொரு ஆடவனை மணக்கக் கூடாதாம். இதுதான் சமூக நீதியா? கிழவனுக்கு மட்டுந்தான் காதலுணர்வு இருக்கும்; இந்த இளம் விதவைக்குக் காதலுணர்வு இருக்காது என்பது எண்ணமா?

பாடாத தேனீக்களை, உலவாத தென்றலை, பசியாத நல்வயிறை யாரேனும் பார்த்திருக்க முடியுமா என்று கேட்கிறார்.

வாசனைப் பொருட்கள்

• வாசனைப் பொருட்கள் என்றாலே நினைவுக்கு வருவது கக்கு, ஏலம், கிராம்பு முதலியன. பண்டைக் காலத்திலிருந்தே வாசனைப் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்தும் பயன்படுத்தியும் வருகிறது நம்நாடு.

உலக நாடுகளுக்கு 40,000 கோடி டன் வாசனைப் பொருட்கள் தேவை. இதில் இந்தியாவில் மட்டுமே 25 சதவீதம் நுகரப்படுகிறது. வாசனைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மத்திய அரசின் ஒருங்கிணைந்த வாசனைப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

1990-91-இல் வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.238.67 கோடியும் 1989-90-இல் ரு.275-76 கோடியும் 1988-89-இல் ரூ.274.81 கோடியும் அன்னியச் செலாவணி கிடைத்தது.

'ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்றான்
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

என்று கேட்கிறார்.

இளங் கைம்பெண் ஒருத்தி மறுமணம் செய்து கொள்ளச் சாத்திரம் தடையாக இருக்குமானால் அச் சாத்திரத்தை ஒதுக்குங்கள், சமூகத்தில் நீதியை நிலைநாட்ட முயலுங்கள் என்கிறார்.

இனி, ஆடவர்தான் கல்விகற்க உரியவர் என்றும் அடுக்களை வேலைகளை மட்டுமே செய்யும் பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்றும் வேறுபாடு காட்டினர். இதுவும் அநீதியே என்றுணர்ந்தார் கவிஞர். பெண்ணடிமை நீங்க வேண்டும் என எண்ணினார்; ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் வாழ வேண்டும் எனக் கருதினார். அதனால் பெண் கல்வியை வற்புறுத்திப் பாடினார்.

வளர்ப்பவர்கட்குக் கல்வி அறிவு இருந்தால்தான் வளர்க்கப்படுபவர்கள் நல்லவர்களாக விளங்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

'கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?'

என்று கேட்பதன் மூலம் பெண் கல்வியின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

பெண்கள் அடிமை வாழ்வு வாழ்வதை விரும்பாதவர் நம் புரட்சிக் கவிஞர்.

'பெண்ணடிமை தீரு மட்டும்
பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல்
முயற் கொம்பே'

என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார் நம் கவிஞர்.

நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட வேண்டுமா? முதலில் நாம் பெண்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டு விடுதலையும் நாம் பெற முடியும். பெண்கட்குச் சுதந்திரம் தராதவரை நம் மண்ணுக்கும் சுதந்திரம் கிடைக்காது என்கிறார்.

குடியரசு நாட்டில் சமூக நீதிகளைச் சம்பிரதாயமாக மட்டும் வற்புறுத்தினால் போதாது; சட்டங்களாக ஆக்க வேண்டும் என்று கூறுகிறார்.

பாரதிதாசன் கண்ட உலகு பரந்து விரிந்த உலகு. அது அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு திகழ்வதாகும்.

கூட்டுறவு வங்கி விவசாயக் கடன்: வட்டி தள்ளுபடி

சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பு.

தமிழ்நாடு அரசின் புதிய ஊக்கத் திட்டம் பற்றிய ஒரு அறிவிப்பினை இப்பொழுது செய்ய விரும்புகிறேன்.

தமிழக விவசாயிகளைப் பாதுகாக்கவும், கூட்டுறவு வங்கிகளைக் காப்பதோடு, அவற்றின் பயன்பாட்டை விரிவாக்கவும், பல்வேறு கருத்துக்களை இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம், விவசாயக் கடன் பெற்ற விவசாயிகள், வட்டி மற்றும் அபராத வட்டிகளை, உரிய நேரத்தில் செலுத்த முடியாத நிலையில் இருப்பதோடு, அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அதிகரித்து, அவர்களால் அவற்றைத் திருப்பிக் கட்ட இயலாத நிலை உள்ளது. மேலும், உரிய காலத்தில் கடன்களைத் திரும்ப வசூல் செய்யாததால், கடன் வழங்கும் வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து மீண்டும் கடன் பெற்று, விவசாயிகளுக்குக் கடன் அளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளையே, இந்த நிலை பலவீனப்படுத்தி விடுகிற பின்னணி எழுந்துள்ளதால், அரசு இதில் தலையிட்டு, விவசாயிகள் செலுத்த வேண்டிய விவசாயக் கடன், வட்டி மற்றும் அபராத வட்டிகளை முழுமையாகத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும் என, உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோது, இதனைப் பரிவுடன் அரசு பரிசீலனை செய்யும் என்று நான் தெரிவித்தேன்.

அந்த உறுதிமொழியின் தொடர் நடவடிக்கையாக, இந்தக் கருத்துக்களை அரசு பரிசீலனை செய்தது. மாநிலத்தில், கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் விவசாயக் கடன்கள் அனைத்திற்கும், நாம் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, NABARD, அதாவது National Bank for Agriculture and Rural Development நிறுவனத்தைத் தான், எதிர்நோக்கி இருக்கின்றோம். எனவே, கூட்டுறவு வங்கிகள், NABARD நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும், வகுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டே, செயல்பட வேண்டிய கட்டாய நிலை உள்ளது.

NABARD நிறுவனம், விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைகளைத் தள்ளுபடி செய்யும்பொழுது, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த வேண்டும் என்ற நல்ல பழக்கம், விரைவில் மறைந்துவிட வழி வகுக்கின்றது என்றும், இதனால் கடன் வசூல் பெருமளவு பாதிக்கப்படுவதுடன், கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கவே முடியாத ஒரு நிலை ஏற்படுகின்றது என்றும், அது மட்டுமின்றி, உண்மையிலேயே வசதி உள்ளவர்கள் கூட இதுபோன்ற தள்ளுபடிச் சலுகைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, தாங்கள் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாமல் இருக்க, இது அவர்களை ஊக்குவிக்கும் என்றும் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு, இத்தகைய தள்ளுபடியினால் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில், NABARD நிறுவனம் மிகவும் கண்டிப்பாக உள்ளது. அவ்வாறு கூட்டுறவு வங்கிகளைப் பாதிக்கும் வகையில், தள்ளுபடி ஏதும் செய்யப்பட்டால், NABARD நிறுவனம், மாநிலத்திற்கு வழங்கி வரும் கடன் உதவியை, முற்றிலுமாக நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இருந்தபோதிலும், கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில், தேவையான உதவிகளைச் செய்யவும், அதே நேரத்தில் கூட்டுறவு வங்கியின் செயல்பாடு, எந்த விதத்திலும் பாதிக்கப்படாத வகையில் NABARD நிறுவனத்தின் சட்டத் திட்டங்களும், நிபந்தனைகளும் மீறப்படாத வகையில், ஒரு திட்டத்தை உருவாக்கவும் அரசு முடிவு செய்து உள்ளது.

தமிழக விவசாயிகளுக்கு ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கி, முழுமையாக உதவி செய்து, அவர்கள் தங்களது கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர்களைக் கடன் சுமையிலிருந்து முழுமையாக விடுவிப்பதுடன், கூட்டுறவு வங்கிகளும் முழுமையாகத் தங்களின் வசூல் குறியீட்டை எய்தித் தொடர்ந்து கடன் வழங்கும் தகுதியைப் பெறக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், அரசு பின்வரும் முடிவினை எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன், வட்டி, மற்றும் அபராத வட்டி முழுவதையும், வருகின்ற 30.6.92-க்குள் திருப்பிச் செலுத்த உதவும் வகையில், அரசு பின்வரும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடும்.

இந்தத் திட்டத்தின் கீழ், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களில், தவணை கடந்த அசல் தொகையையும், அதன்பிறகு 1.7.91-முதல் 30.6.92 வரை உள்ள காலத்தில் வசூலுக்குத் தகுதியாகும் தொகைகள் அனைத்தையும், விவசாயிகள் 30.6.92-க்குள் தவறாது செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தும் விவசாயிகளுக்கு, 1.7.92-அன்றுள்ள நிலவரப்படி, தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை, அரசே அவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கும்.

இந்த ஊக்கத் தொகைத் திட்டம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட, குறுகிய கால மற்றும் மத்தியக் காலக கடன்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த ஊக்கத் தொகை ஒவ்வொரு விவசாயிக்கும் காசோலை (Cheque) மூலமாக நேரடியாக வழங்கப்படும். அரசு வழங்கும் இந்த ஊக்கத் தொகையை, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய பாக்கிகளுக்காக, பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவசாயிகள், 1.7.91-அன்று இருந்த நிலவரப்படி, தவணை கடந்த அசல், அதன் பின் 30.6.92-வரை வசூலுக்குத் தகுதியான அனைத்துத் தொகைகளையும் செலுத்தும் பட்சத்தில், அரசு 1.7.91-அன்று நிலவரப்படி, தவணை கடந்த வட்டி மற்றும் அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கி, விவசாயிகள் மூலமாக வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேலும், 1.7.91-அன்று நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டியை, 1.7.91-க்குப் பிறகு செலுத்திய விவசாயிகளுக்கும், அதற்கு ஈடாக ஊக்கத் தொகை இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்கள் மீது, 1.7.91 அன்று நிலவரப்படி நிலுவையில் இருக்கும் தவணை கடந்த வட்டி, மற்றும் அபராத வட்டித் தொகைகளுக்குச் சமமான தொகையை, நேரடியாக விவசாயிகளுக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்க, 69.07 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். இந்தத் திட்டத்தின் மூலமாக, தமிழகத்திலுள்ள 13 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டத்தை, அரசின் நிதி நிலைமை கடுமையாக இருக்கும் தற்போதைய சூழ்நிலையிலும், தமிழக விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், எங்கள் அரசு அறிமுகப்படுத்த உள்ளது. நீண்ட நாட்களாகக் கடன் சுமையால் தத்தளித்து வரும் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையில் ஒரு பகுதியையேனும் எங்கள் அரசு ஏற்றுக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்வதுடன் அவர்கள் வளமுடன் வாழ வழி வகுத்துள்ள இந்தத் திட்டத்தை, இம்மாமன்றத்தில் அறிவித்ததில் பேருவகை அடைந்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சட்டமன்றத்தில் 28.4.1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு)

உழைப்போம்! உயர்வோம்!
—டாக்டர் எம்.ஜி.ஆர்.

உழைக்கும் வர்க்கத்திற்கே இவ்வுலகம் உரிமையானதென்பதை உணர்த்திய நான்தான் மே முதல் நாள். அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரில் 1886-ஆம் ஆண்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி உரிமை முழக்கம் எழுப்பினர். தொழிலாளர்களின் உரிமை வாழ்விற்குத் தங்களுடைய செயற்கரிய தியாகத்தால் அடித்தளம் அமைத்தனர். இரத்தத்தை ஆறாக ஓடவிட்டு, உயிர்களைப் பலிகொடுத்து, "உழைக்கும் மக்களே உலகின் உண்மையான உரிமையாளர்கள்" எனும் தத்துவத்தை நிலைநாட்டினர்.

சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புகளை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்; புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

உழைப்போம்! உயர்வோம்! உழைப்பால் உலகை உயர்த்துவோம்! உழைக்கும் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவோம்! ஒற்றுமையைக் குலைக்கும் தீய சக்திகளை ஒதுக்குவோம்! சமுதாயச் சமதர்மச் சிற்பிகளாக உழைக்கும் வர்க்க உடன் பிறப்புகளே கடமையாற்ற முன்வருவீர்! உழைப்பின் மேன்மையை, உழைப்பாளரின் உயர்வை உலகம் உணரச் செய்வோம்!

சத்யஜித்ரே மறைவு



'**பா**ரத ரத்னா' பட்டம் பெற்றவரும், உலக அரங்கில் இந்தியத் திரைப்படங்களுக்குப் பெருமை தேடித் தந்தவருமான பிரபல வங்காளத் திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித்ரே 23.4.'92 அன்று கல்கத்தாவில் மருத்துவமனை ஒன்றில் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 71.

1955-ஆம் ஆண்டு திரைப்படத் தொழிலில் நுழைந்த சத்யஜித்ரே, முதன்முதலாகத் தயாரித்த 'பதர் பாஞ்சாலி' என்ற வங்காள மொழிப்படம் உலகப்பட விழாக்களில் பல பரிசுகளைப் பெற்றது. அதைத் தொடர்ந்து அவர் தயாரித்த எல்லாப் படங்களும் சர்வதேச அளவில் புகழ் பெற்றன.

சத்யஜித்ரே உடல் நலக் குறைவின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் இறுதியில் கல்கத்தாவிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்போதே, உலகில் திரைப்படங்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த விருதான 'ஆஸ்கார் விருது' அவருக்கு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அண்மையில் இந்திய அரசு நமது நாட்டின் மிகப் பெரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை சத்யஜித்ரேக்கு வழங்கிச் சிறப்பித்தது.

சத்யஜித்ரே 1921-ஆம் ஆண்டு மே மாதம் 2-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார். கல்கத்தாவிலுள்ள மாநிலக் கல்லூரியில் படித்து 1940-இல் பட்டம் பெற்றார். பிறகு சாந்தி நிகேதன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து ஓவியக் கலை பயின்றார். இளம் வயதிலேயே திரைப்படத் துறையிலும் இசைத்துறையிலும் நாட்டம் கொண்டவர் ரே.

'ஆஸ்கார்' விருது பெற்ற சத்யஜித்ரேக்கு, தமிழ்நாடு சட்டப்பேரவை 8.4.'92 அன்று பாராட்டு தெரிவித்தது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருமதி. பிஜோயா ரே அவர்களுக்கு அனுப்பிய இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:

"இந்தியத் திரைப்படத் துறையில் புரட்சிகரமான கருத்துக்களைத் துணிச்சலுடன் படம் பிடித்துக் காட்டிய டாக்டர் சத்யஜித்ரே அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு நான் மிகவும் துயரமடைந்தேன்.

"அவருடைய மறைவு, இந்தியத் திரைப்படத் துறையில் மிகப் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப யாராலும் முடியாது.

"புரட்சிகரமான தமது திரைப்படங்களின் மூலம் இந்தியத் திரைப்படத் துறையை மாற்றியமைத்து அதன் மூலம் சர்வதேசப் பார்வையாளர்கள் மத்தியில் இந்தியா மீது ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் டாக்டர் ரே. தன்னுடைய உணர்வு பூர்வமான கலைப்படைப்புகள் மூலம் இந்தியத் திரைப்பட வரலாற்றில் தனக்கென்று ஒரு தனி இடத்தை உருவாக்கி கொண்டார். சத்யஜித்ரேயை இழந்து தவிக்கும் திருமதி பிஜோயா ரே மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

தமிழரசு சந்தா விவரம்

தமிழ் .... ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் : தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு
16-5-1993 ரூ.1

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப்
குறளகம், சென்னை - 600 108.

தமிழரசு

வைகாசித் திங்கள் - 3
மலர்:22 இதழ்:22
திருவள்ளுவர் ஆண்டு 2023 16-5-1992

இந்த இதழில்...

அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின்கீழ் வர வேண்டும்! —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 2

'நீங்க நல்லா இருக்கணும்' தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்கவிழா —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 6

செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது. —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 11

இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு ... 15

தூத்துக்குடி விமான நிலையத் தொடக்க விழா —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 17

வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை ... 24

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் குடிநீர்த் திட்டப் பணிகள் ... 27

வாழ்வு தரும் வசம்பு ... 29

ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதே என் வாழ்நாள் நோக்கம்! —*மாண்புமிகு முதல்வர் உரை* ... 33

செயற்கைக்கோள் மூலம் ஒலி ஒளி தொலைத் தொடர்பு ... 38

சேலம் மாவட்டம்: பாலமலைப் பழங்குடி மக்கள் ... 43

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டப் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டார் (11.5.1992).

173689

அரசு வழங்கும் உதவிகளின் பலனைப் பெற நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும்!

மிகுந்த எழுச்சியோடும், ஏற்றத்தோடும் இன்று நடைபெறும், அகில இந்தியக் கைத்தறி நெசவாளர்களின் மாநாட்டைத் தொடங்கி வைப்பதிலும், நெசவாளர் உடன்பிறப்புக்களை நேரில் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன்.

வேளாண்மைத் தொழிலுக்கு அடுத்து, நமது மாநிலத்தின் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்குகிற பெருமை, நெசவுத் தொழிலுக்குத்தான் உண்டு. அதனால்தானோ என்னவோ, ஏறத்தாழ ஒரு வாரக் காலத்திற்குள், கைத்தறி நெசவாளர்கள் சார்ந்த இரண்டு விழாக்களில், நான் கலந்து கொள்கிற சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ளேன். இது கைத்தறி நெசவாளர்களுக்கும், எனக்கும் இயற்கையாகவே ஏற்பட்ட இணைப்பு.

தொன்மை வாய்ந்த இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையான சகோதரர்களும், சகோதரிகளும், இன்று ஏழ்மையிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கின்றனர் என்ற உண்மையை, நான் நன்கு அறிவேன். அதனால்தான், தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, முழு முயற்சியுடன் எங்கள் அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களது வாழ்க்கையில் ஒளியேற்றி வருகிறது. உதாரணமாக, ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், சென்ற ஆண்டு நூலின் விலை, மிக அதிக அளவு உயர்ந்த நிலையில், பல நெசவாளர்கள் வேலை வாய்ப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபொழுது, குறைந்த விலையில் அவர்களுக்கு, 2,000 பேல் நூலினை வழங்க

அனைத்திந்தியக் கைத்தறி நெசவாளர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

அறிவீர்கள்.

அவ்வாறு உங்களைத் துயர் வந்து அணுகும்பொழுது, தயங்காது முன் வந்து, உதவிக் கரம் நீட்டும் அரசாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது; தொடர்ந்து செயல்படவும் தயாராய் இருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடுத்தித் தெரிந்துகொள்ள வேண்டிய இந்தத் துறையின் பெருமைகளோடு, படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளும் பல உண்டு. மாறிவரும் காலத்திற்கு ஏற்றவாறும், பொருந்துவதாகவும், தங்கள் தயாரிப்புகளை மாற்றிக்கொண்டால் தான், எதிர்காணும் தொழில் போட்டிகளில், கைத்தறி நெசவாளர்கள் வெற்றி காண முடியும் என்பதை, நெசவாளப் பெருங்குடி மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவேதான், நெசவாளர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய ரகங்களைத் தயார் செய்யவும் உதவும் வகையில், நவீன யுக்திகளைக் கையாள, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளோம். அவர்களுடைய தறியில் சிறு மாறுதல்கள் செய்து, உற்பத்தித் திறனையும், தரத்தையும் உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விஞ்ஞானம் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிற இந்தக் காலத்தில், கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்காக, விசைத்தறிகளின் வளர்ச்சியைத் தடுத்து, நிறுத்தி விடவும் முடியாது. ஏனெனில், விசைத்தறிகளின் வளர்ச்சி, நவீன காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால், அதற்குப் பதிலாக, நமது கைத்தறி நெசவாளர்களின் உயர்விற்கு, என்ன என்ன சிறப்புத் திட்டங்கள் வகுத்து, எப்படி எப்படி அவர்களுக்கு ஊக்கம் தந்து, உதவிகள் புரியலாம் என்கிற சிந்தனையின் அடிப்படையில்தான், நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அந்த முயற்சியின் விளைவே, கைத்தறி நெசவாளர்களில், விசைத்தறி வாங்க விரும்பி முன் வருவோருக்கு உதவும் திட்டமாகும். தற்போது கைத்தறி நெசவாளர்களைவிட, மற்றவர்கள்தான் வியாபார ரீதியாக முன்னேற்றம் அடைந்து வருகின்றார்கள்.

எனவே, எங்கள் அரசு வகுத்துள்ள திட்டத்தின் கீழ், விசைத்தறி அமைக்க முன் வருபவர், கைத்தறி நெசவாளராக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் மேலும் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்பதற்காக, கைத்தறி வைத்துள்ள நெசவாளர்களுக்கு, இதில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும், எங்கள் அரசு முடிவு செய்து உள்ளது. இந்த எண்ணத்தின் செயலாக்கமாகத்தான், எதிர் வரும் 10 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

நாள்தோறும் உழைத்தும், நெசவாளர்கள் ஈட்டக்கூடிய ஊதியம், மிகக் குறைவாக இருப்பதாலும், உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகள் உரிய தரம் இல்லாததாலும், போதிய வருவாய் கிடைக்காது அல்லல்படும் நெசவாளர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் விசைத்தறிகள் வாங்க உதவிகள் செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது தான், எங்கள் அரசின் நோக்கமாகும். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில், நெசவாளர்களை எங்கள் அங்கமாக நாங்கள் காண்கின்றோம். அவர்களது வாழ்க்கையை எப்படியும் உயர்த்த வேண்டும், என்று உறுதி பூண்டுள்ளோம்.

எனவே தான், கைத்தறியையே நம்பி, அவர்கள் தயாரிக்கும் பழமையான துணி ரகங்கள், விலை போகாத நிலையில், விரும்பி வாங்கப்படாத நிலையில், வறுமையில் வாடும் அந்த நெசவாள உடன்பிறப்புக்களுக்கு, கைத்தறிக்குப் பதிலாக, விசைத்தறிகள் வழங்கிக் கை கொடுத்தால் தான், அவர்களை ஓரளவு உயர்த்த

அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். அதே நேரத்தில், மக்களைக் கவரும், அவர்களால் விரும்பி வாங்கப்படக்கூடிய துணி ரகங்களை நெய்யும் கைத்தறிகளை மாற்றும் எண்ணம், எங்கள் அரசுக்குச் சிறிதும் இல்லை. அத்தகையோரின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களையும், அரசு கவனத்தோடு செயல்படுத்துகிறது என்பதை, இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கைத்தறிகளின் செயல்பாடுகள், நெசவாளர்களின் அணுகுமுறை பற்றிய சில கருத்துகளும், என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்குகின்றன. அவ்வாறு ஒரு அமைப்பின் கீழ் அவர்கள் இருப்பதால், அவர்களின் நலனைப் பேணிக் காப்பதில், அரசு நேரடிக் கவனம் செலுத்த எளிதாக இருக்கிறது. ஆனால், கூட்டுறவுக் குடையின் கீழ் வராத கைத்தறிகளுக்கு, அரசு நேரடியாக உதவுவதில், சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. சில காலகட்டங்களில், அவர்களுக்குக் கொடுக்கும் உதவிகள், அவர்களைப் போய்ச் சேராத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் அனைவரும், கூட்டுறவு அமைப்பின் கீழ் முழுமையாக வர வேண்டும் என்ற என் எண்ணத்தை, இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்குக் கைத்தறி நெசவாளர்கள், தங்களது ஒருமித்த ஆதரவினைத் தருவார்கள் என்றும் நம்புகின்றேன்.

அரசு வழங்குகிற ஆதரவினை, உதவிகளின் பலனை, நீங்கள் முழுமை

அனைத்திந்தியக் கைத்தறி நெச வாளர் மாநாடு 9.5.1992 அன்று சென்னைத் தேனாம்பேட்டைக் காம ராசர் திடலில் நடந்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்து, நவீன மயமாக்கப்பட்ட கைத்தறியை நாட்டுக்கு அர்ப்பணித் தார். மறைந்த சரவண பவானந்தர் அறக்கட்டளை சார்பில், நலிந்த எட்டு நெசவாளர் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கினார். முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார்.

மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு அசோக் கேலோத் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், 'நெசவாளர்களுக்குத் தேவையான நூல் குறைந்த விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நூல் வியாபாரத்தை அதிகரிக்க இவ் வாண்டு ரூ.90 இலட்சம் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது' என்றார்.

கைத்தறித்துறை வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ராஜீவ்காந்தி உள்ளிட்ட வர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைத்து, மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் பேசுகையில், 'கைத்தறித் துறைக்கும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் துறைக்கும் இடையே உறவு தேவை. இதற்கு உதவும் வகையில் தமிழகத் தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதி ஒன்றைத் தேர்ந் தெடுத்து, அங்கு ஆயத்த ஆடைகள் ஏற்றுமதிக் குழுவின் கிளையை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்ட தமிழ்நாடு இ.காங் கிரஸ் கட்சித் தலைவர் திரு வாழப்பாடி கே. ராமமூர்த்தி அவர்கள் பேசுகை யில், 'கைத்தறிக்கென 22 ரகங்களை ஒதுக்குவது குறித்து உச்ச நீதிமன்றத் தில் உள்ள வழக்கை விரைந்து முடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு தமிழகக் கைத்தறித் துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், 'தமிழகத் தில் இதுவரை 500 கைத்தறிகள் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளன' என்றார்.

விழாவில், கேரள முன்னாள் ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், திரு நல்லி குப்புசாமி, கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவின் தலை வர் திரு. எம்.பி. ராதாகிருஷ்ணன், அகில இந்தியக் கைத்தறி சம்மேளனத் தலைவர் திரு சுப்பிரமணியம் ஆகி யோர் பேசினர். மாண்புமிகு அசாம் கைத்தறித்துறை அமைச்சர் திரு பருவா அவர்கள் விழாவில் கலந்து கொண் டார். முன்னதாக, மாநாட்டு வர வேற்புக் குழுவின் செயலாளர் திரு ஆர். தாமோதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழாக்குழு சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

—செய்தித் தொகுப்பு: - பி.வி. கிரி.

யாக அடைய வேண்டும் என்றால், நீங்கள் அனைவரும் கூட்டுறவுக் குடையின் கீழ் வர வேண்டும் என்பது, தற்போதைய அவசிய மான அவசரத் தேவை என்பதை, மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைய தினம், இங்கே உரை யாற்றிய பெரியோர்கள், நெசவாளர் களின் நிலையைப் பற்றியும், பிரச்சி னைகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்து, பல்வேறு கோரிக்கை களை எடுத்து வைத்துள்ளார்கள். அவை அனைத்தையும் பரிவுடன் பரிசீலனை செய்து, தக்க நடவடிக் கைகள் மேற்கொண்டு, முடிந்த உதவிகளை விரைவில் எங்கள் அரசு செய்யும், என்று உறுதி கூறுகின்றேன்.

குறிப்பாக, தமிழகத்தில் தற்போது சிட்ட நூலுக்கு (Hank Yarn) விதிக் கப்படும், 2 சதவிகித விற்பனை வரியை, நீக்க வேண்டும் என்றும், மற்ற தென் மாநிலங்களில் இந்த வரிவிதிப்பு இல்லை என்றும் குறிப் பிட்டார்கள். இதனைப் பொறுத்த மட்டில், அரசு இக்கோரிக்கையினை ஏற்கெனவே விரிவாகப் பரிசீலனை செய்துள்ளது.

அரசின் தற்போதைய நிதி நிலையில், விற்பனை வரியை நீக்கி ஆணையிட வேண்டும் என்ற கோரிக் கையை ஏற்க முடியாத நிலையில் உள்ளது. இருப்பினும், இது குறித்து தக்க சமயத்தில் அரசு பரிசீலனை செய்யும்.

அடுத்து, தனியாரிடம் உள்ள கைத்தறிகளுக்கும், குறைந்த விலை யில், கூட்டுறவு நூற்பு ஆலைகளில் இருந்து நூல் வழங்க வேண்டும் என்றும், இங்கே கேட்டுக்கொள்ளப் பட்டது. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. வியா பார நோக்கத்தோடு, இதனை ஒரு தொழிலாக நடத்தி வருபவர்கள், மற்றவர்களுடன் நேரடியாகப் போட்டி யிடுவது தான் நியாயமாகும். அவ் வாறு அவர்களுக்குக் குறைந்த விலை யில் நூல் வழங்குவதால், கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயன் பெறப் போவதில்லை.



எனவே, எவ்வித நேரடிப் பய னும் நெசவாளர்களுக்கு இல்லாத இத்திட்டத்திற்கு, அரசு உதவ முன் வர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், கைத்தறி வைத் திருக்கும் நெசவாளர்களுக்கும், நேரடி யாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்களுக்கும், அவர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாவிடிலும், அவர்களுக்கு முடிந்த அளவு, எவ்வளவு உதவ முடியுமோ, அவ்வளவு உதவிகளையும் செய்ய, எங்கள் அரசு முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், தமிழக நெச வாளர்களின் சார்பாக, மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் அவர்களுக்கு, நான் ஒரு கருத்தினை முன் வைக்க விரும்புகின்றேன். இந்தியாவில் உள்ள நெசவாளர்களின் நலன், காக்கப்பட வேண்டும் என்ற நல் லெண்ணத்தில் மத்திய அரசு அதன் ஜவுளித்துறை ஆணையர் (Textile Commissioner) மூலமாக, ஒவ்வொரு நூற்பு ஆலையும், அதன் உற்பத்தியில் 50 சதவிகிதம் சிட்ட நூல் (Hank Yarn) தயாரிக்க வேண்டும், என்ற நிபந்தனையை விதித்துள்ளது.

தனியார் துறையில் இயங்கும் நூற்பு ஆலைகள், இந்த ஆணை யினை எதிர்த்து வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றத்தின் தடை ஆணைகள் பெற்ற நிலையில், குறிப்பிட்ட அளவு சிட்ட நூல் உற்பத்தி செய்யாமல் இந்த நூற்பு ஆலைகள் இருந்து வருகின்றன. தமிழக அரசின் கட்டுப் பாட்டில் இயங்கும், அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளும், இந்த ஆணையை மதித்து, ஏற்றுக்கொண்ட தோடு மட்டுமன்றி, தேவையின் அடிப்படையில், 50 சதவிகிதத்திற் கும் மேல் சிட்ட நூல் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, உதவி வருகிறது. ஆனால், மத்திய அரசின் பொது நிறுவன மான, National Textile Corporation -

''எதிர் வரும் 10 ஆண்டுகளுக் குள், தமிழகத்தில் உள்ள 37,500 கைத்தறி நெசவாளர்களுக்கு, 75,000 விசைத்தறிகள் வழங்கும் திட்டத்தை, சமீபத்தில் அறிமுகப் படுத்தியுள்ளோம்.''

எனவே, National Textile Corporation- இன் நூற்பு ஆலைகளும், 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்து கொடுத்தால், நமது கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையை, இன்னும் சற்று திருப்திகரமாகப் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும்,

''ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர்களுக்கு ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத் துடன்தான், அரசு செயலாற்றி வருகிறது.''

இன் ஆளுகைக்கு உட்பட்ட நூற்பு ஆலைகள், குறிப்பிட்ட இந்த 50 சதவிகிதம் சிட்ட நூல் உற்பத்தி செய்வதில்லை, என்று தெரிய வருகிறது.

என்பதை இத்தருணத்தில் தெரி வித்து, இது தொடர்பாக மாண்பு மிகு மத்திய அமைச்சர் அவர்கள், National Textile Corporation ஆலை களுக்கு, தக்க அறிவுரைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் மட்டு மல்ல, தமிழகத்தில் வாழும் அனைத்து ஏழை, எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்; அவர் களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும், என்ற உறுதி யான எண்ணத்துடன்தான், எங்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நான் முதல், செயலாற்றி வருகிறது. அந்த முயற்சிக்கு, நெசவாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கி, உங்கள் அரசாகிய இந்த மக்கள் அரசிற்கு, உறுதுணையாக நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தொடங்கும் இந்த மாநாடு, வெற்றி அடைய வேண்டும், உண்மை யான கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாத்து, உயர்த்தும் பல நல்ல புதிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று வாழ்த்தி, உங்கள் அனைவரை யும் சந்திக்கின்ற இந்த நல்வாய்ப்பினை அளித்த, விழாக் குழுவினருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள் கிறேன். ●

‘நீங்க நல்லா இருக்கணும்’

- தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத் தொடக்க விழா.

மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசின் ‘நீங்க நல்லா இருக்கணும்’ என்ற இந்த முழு நீள மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க - விழாவில் கலந்து கொண்டு, திரை உலகத்தைச் சார்ந்த என் இனிய சகோதரர்களையும், சகோதரிகளையும் இங்குச் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னுடைய இந்த உயர்ந்த நிலைக்கு அடித் தளம் அமைத்துத் தந்த எனது ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத் தான், நான் இந்தக் குத்து விளக்கை ஏற்றி வைத்தேன். இன்றும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்று, மக்கள் ஆட்சிக்கு மகுடம் சூட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கிவிட்டுத்தொடங்கப்படும்எந்த ஒரு முயற்சியும், வெற்றி அடையும் என்பதை நான் நன்கு அறிவேன்.

இன்றைய தினம் இந்த இனிய விழாவில் கலந்துகொள்ள நான் இங்கு வரும்பொழுது, எனது எண்ண அலைகள் கட்டவிழ்ந்து ஓடின, நான் இங்குத் திரைப்பட நடிகையாகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வந்த நேரத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், சம்பவங்கள் அனைத்தும், பசுமையாகவும் இனிமையாகவும் என் கண் முன் தோன்றின. நான் இந்த இடத்திற்கு இப்பொழுது தமிழ்க முதலமைச்சராக வந்திருப்பதை எண்ணிப் பார்க்கிறேன். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய தமிழக மக்களை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

மக்கள் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள உங்கள் சகோதரி, மக்களுக்கு உதவும் ஒரு புதிய திட்டத்துடன் உங்களை நாடி வந்துள்ளேன். அந்தப் பொது நலத் திட்டம், புத்துணர்ச்சியுடன் செயல்படுத்தப்பட்டு, மக்களிடையே விழிப்புணர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

மதுவின் மாயையில் மயங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பி, தடுத்தாட்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், திரைப்படம்

தமிழக அரசின் ‘மதுவிலக்குப் பிரச்சார’த் திரைப்படத்தின் தொடக்க விழா 29.4.92 அன்று, சென்னை பிரசாத் ஸ்டுடியோவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கிவைத்தார்.

இந்தப் படத்தைத் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள திரு. ஜி. வெங்கடேஸ்வரன் (ஜி.வி.) வரவேற்புரையாற்றினார். அவர் பேசுகையில், ‘நீங்க நல்லா இருக்கணும்’ திரைப்படம் வியாபார ரீதியில் எடுக்கப்படும். இந்துப்படம் தயாரிக்கப்பட்டு அக்டோபர் 2-ஆம் தேதி வெளியிடப்படும். முன்னணி நடிக நடிகையர்கள் நடிப்பார்கள். இப்படம் பல விருதுகளைப் பெறும் வகையில் எடுக்கப்படும். முதல்வர் அவர்களுக்குத் திரை உலகம் பாராட்டுவிழா நடத்தக் கருதி வருகிறது. கிருஷ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி கொண்டாடுவதுபோல், நாங்கள் ஜெய ஜெயந்தி நடத்துவதற்கு முதல்வர் அவர்கள் தேதியைத் தரவேண்டும். நாங்கள் தயாரிக்கப்போகும் ‘நீங்க நல்லா இருக்கணும்’ திரைப்படத்தில் சூப்பர் ஸ்டார் முதலமைச்சர் அவர்கள், முதல்வராக நான்கு காட்சிகளில் நடிக்கின்றார்கள்’ என்று கூறினார். வரவேற்புரைக்குப்பின், முதல்வர் அவர்களுக்கு திரு. ஜி.வி. பொன்னாடை போர்த்தினார்.

முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றித் திரைப்படத்தினைத் தொடங்கி வைத்தார்.

இப்படத்தின் இயக்குநர் திரு ‘ விசு தன்னுடைய விளக்கவுரையில், ‘இப்படத்திற்கான கதை வசனத்தை மிகச் சிரமப்பட்டு எழுதியிருக்கிறேன். நான் முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், ‘இது படமாக இருக்காது, பாடமாக இருக்கும்,’ என்றார்.

தலைமச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

வாழ்த்துரைக்குப்பின் திரு. ஜி.வி. வழங்கிய நினைவுப்பரிசான வெள்ளித் தட்டைப் பெற்றுக்கொண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உரையாற்றினார். அவர்கள் பேசுகையில், இந்தத் திரைப்படம் படமாகவும் இருக்க வேண்டும், பாடமாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, எனக்குப் பாராட்டு அளிக்கத் திரு ஜி.வி. தேதியொன்று தரவேண்டும் என்றார். வரும் ஜூன் 24-ஆம் தேதியோடு நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு ஆகிறது. ஜூன் 25-ஆம் தேதி உங்கள் பாராட்டை ஏற்கிறேன்’ என்று குறிப்பிட்டார்.

உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., நன்றி நவின்றார்.

— நிகழ்ச்சித் தொகுப்பு:
ஆர். இராஜசேகரன்.

ஒன்றைத் தயாரித்து வெளியிட, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. மக்கள் தங்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும் வகுத்துக்கொள்வதில், தற்போதுள்ள மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. குறிப்பாக, திரைப் படங்கள் மக்களின் மனதில் நல்ல கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்கவும், தவறுகள் இவை என்று சுட்டிக்காட்டி, அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற போதனைகளையும், சிறப்பாகவே செய்து வருகின்றன.

அந்த வகையில் திரைப்படங்கள் ஒரு வலிமை மிக்க சாதனம் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை. எனவேதான் எங்கள் அரசின் கொள்கையான பூரண மதுவிலக்கைப் படிப்படியாகத் தமிழகத்தில் அறிமுகம் செய்ய, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அவர்கள் விரும்பிப் பார்க்கக்கூடிய திரைப்படத் துறையினையும், எங்கள் முயற்சிக்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், மலிவு விலை சாராயத்தை முழுமையாக ஒழித்ததை இந்த நாடே நன்கு அறியும். எதிர்வரும் காலத்தில், தமிழகத்தில் பூரண மதுவிலக்கு என்ற நிலையை அடைய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டங்களின் மூலம், அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மதுவிலக்குக் கொள்கைகளை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இருப்பினும் குடிப்பழக்கம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்துத்தான் அமைவது. அதனைச் சட்டங்களினால் மட்டுமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை, நாங்கள் நன்கு அறிவோம். உண்மையில் ஒருவர் குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டும் என்றால், அதற்கு மனமாற்றம் அவசியம். அந்த மனமாற்றம் ஏற்படுவதைத் தூண்டும் வகையில் அவர்களுக்கு உதவினால், நிச்சயமாக, தாங்கள் கொண்டுள்ள தீய பழக்கத்தின் கொடுமைகளை உணர்ந்து, அவர்கள் அதனை நிரந்தரமாகக் கைவிட வாய்ப்புகள் ஏற்படும்.

இதுபோன்ற பொது நலக் கருத்து ஒன்றினை மக்களுக்கு எடுத்துரைக்கும்பொழுது, எவ்விதக் கட்டாயமும் இன்றி, அவர்கள் தாங்களாகவே விரும்பி வந்து, தங்களை அந்த முயற்சியில் ஈடுபடுத்திக் கொண்டால் தான், எடுத்துக் கூறும் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நீங்காது ஆழமாகப் பதியும். மேலும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வெற்றி அடையும். எனவேதான், அதிக அளவில் மதுவிற்கு அடிமையாக உள்ளவர்கள், அத்தகைய மனமாற்றம் பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், தமிழக அரசு இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்க முன் வந்துள்ளது.

இந்தத் திரைப்படம் தமிழக அரசின் மதுவிலக்குத் துறைக்காக, செய்தி-சுற்றுலாத் துறை

யின் மூலமாகத் தயாரிக்கப்படும் படம் ஆகும். அரசுக்காகத் திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மாநில மதுவிலக்கு உயர்மட்டக் குழு வின் உறுப்பினரும், பிரபல திரைப்படத் தயாரிப்பாளருமான திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத் திரைப்படத்தை இயக்கும் பொறுப்பு திரு விசு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திரைப்படத்திற்கு இசை அமைக்கும் பொறுப்பு பிரபல இசையமைப்பாளர் திரு இளையராஜா அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத் திரைப் படத்தின் மூலக் கரு, மதுவிலக்குப் பிரச்சாரமாக அமையுமே அன்றி, இது அரசின் வழக்கமான Documentary படமாக இருக்காது.

இன்று தொடங்கப்படும் அரசின் 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படம், மக்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். ஏனென்றால், இந்தத் திரைப்படத்தை Documentary படமாகத் தயாரிக்காமல், இதனை இதர வியாபார ரீதியான தமிழ்த் திரைப்படங் களைப் போலவே உருவாக்க முடிவு செய்து உள்ளோம். இது தமிழக அரசின் ஒரு வழக்கமான செய்திப் படம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தனியார் தயாரிப்பாளர்கள் எவ்வாறு திரைப்படங்களைத் தயாரித்து வெளி யிடுகின்றார்களோ, அதே அடிப்படையில் இந்தப் படத்தையும் அரசு தயாரித்து வெளியிடும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோலவே நாடகம் ஒன்றையும் அரசு தயாரித்துள்ளது. இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளர் 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களின் நாடகங்களைப் பற்றி, உங்களுக்கு நன்றாகவே தெரியும். அவை மக்களால் பெரிதும் வரவேற்கப்படுபவை; விரும்பிப் பார்க் கப்படுபவை. தமிழகத்தில் இன்று அவருடைய நாடகங்கள்தான் பிரமாண்டமானவை மட்டுமல்ல, பிரசித்தி பெற்றவையும் கூட. எனவே, திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் நாடகம் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

தமிழக அரசிற்காக 2 இலட்சம் ரூபாய் செல வில் அவர் தயாரித்துள்ள 'வெளிச்சம்' என்ற மதுவிலக்குப் பிரச்சார நாடகம், வருகின்ற 1.5.1992 அன்று மாலை, மியூசிக் அகாடமி அரங்கத்தில் அரங்கேறுகிறது. இந்த நாடகம் மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் மட்டுமல்லாமல், பல சிற்றூர் களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரவேற்புரை ஆற்றிய திரு ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள், என்னைச் சந்தித்தபொழுது நிகழ்ந்த உரையாடலை, இங்கே குறிப்பிட்டுப் பேசினார். அதை மேலும் நான் இங்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அரசின் திரைப்படம் என்பதற்காக நடிக-நடிகையருக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக் கும் கொடுக்க வேண்டிய தொகையை ஒருபோதும்



• மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடடைய வேண்டுமானால் தன்னம்பிக்கை உடையவனா கவும் தனது சக்தி என்ன என்பதை உணர்ந்த வனாகவும் இருக்க வேண்டும்.

குறைக்கக்கூடாது என்று, திரு ஜி.வி. அவர்களிடம் நான் கண்டிப்பாகத் தெரிவித்தேன். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, வழக்கமாக வியாபார ரீதியில் எடுக்கப் படும் படம் போலவே இந்த அரசின் படத்தையும் எடுத்து, இதர தனியார் தயாரிப்பாளர்களுடன் போட்டியிட்டு, இதனை வெளியிட்டு, வெற்றி கண்டால் தான், இது ஒரு நல்ல திரைப்படம் என்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, விரும்பி வந்து இதனைப் பார்ப்பார்கள்;

நாம் இந்தத் திரைப்படத்தில் கூறவுள்ள கருத் துக்களைக் கவனித்துக் கேட்டு உணர்வார்கள், பயன்பெறுவார்கள். ஒரு திரைப்படத்தின் வெற்றியே, அதனைப் பெருந்திரளாக மக்கள் வந்து காண் பதில் தான் உள்ளது. எனவே, இந்த அரசின் திரைப்படத்தையும், மக்கள் திரளாக வந்து காண வேண்டும், பயன்பெற வேண்டும் என்றால், அவர்கள் எதிர்பார்க்கும் வகையில், அதனை ஜன ரஞ்சகமான முறையில் தயாரிக்க வேண்டும் என்ப தனால் தான், தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக, அரசே வியாபார ரீதியில் ஒரு முழு நீளத் திரைப்படத்தை 85 இலட்சம் ரூபாய் செல வில் தயாரிக்க முன் வந்துள்ளது. வியாபார ரீதியில் தயாரிக்கப்படும் இந்தப் படத்திற்கு, எந்தவிதச் சிறப்புச் சலுகைகளையும் எவரிட மிருந்தும் எதிர்பார்ப்பது முறையல்ல.

இரண்டாவது, தமிழகத் திரை உலகில் உள்ள கலைஞர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள், தங்களின் உழைப்பிற்குப் பெறும் ஊதியத்தை அரசிற்காகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல. ஏதோ இலவசமாக அல்லது குறைந்த ஊதியத்திற்குத் தானே இந்தத் திரைப்படத்தில் நடிக்கின்றோம், அல்லது பணி ஆற்றுகின்றோம் என்ற எண்ணம், எவர் மனதிலும் ஏற்படக் கூடாது. அவ்வாறு ஏற்பட்டால், அது திரைப்படத்தின் தரத்தைக் குறைத்துவிடும் என் பதை, நான் நன்கு அறிந்திருப்பதால் தான், இதில் பங்கு பெறும் கலைஞர்கள் அனைவரும் மன நிறைவோடு பணியாற்ற வேண்டும் என்ற எண் ணத்தில் தான் ஒவ்வொருவருக்கும் தற்போது திரை உலகில் கிடைக்கும் ஊதியத்தை, இந்தத் திரைப்படத்திற்கும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்

இன்றைய தமிழ்த் திரைப்பட உலகில் முன்ன ணித் தயாரிப்பாளராகத் திகழும் திரு ஜி.வி. அவர்களும், முன்னணி இயக்குநர் திரு விசு அவர்களும், முன்னணி இசையமைப்பாளரான திரு இளையராஜா அவர்களும் இணைந்து, ஒரு தலைசிறந்த வெற்றிப் படத்தைத் தயாரித்து, நிச்சயமாக அரசிற்குத் தருவார்கள் என்ற நம் பிக்கை எனக்கு உண்டு. இந்தத் திரைப்படத் தயாரிப்பைப் பற்றிச் சில குடும்பத் தலைவிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் 'படத்தை யார் direct செய்யப் போகிறார்கள்' என்று கேட்டார்கள். 'திரு விசு தான்' என்று சொன்னேன். உடனே அவர்கள் 'விசுவா! அப்படியானால் படம் நிச்சயமாக நன்றாக இருக்கும்' என்றார்கள்.

எனவே, இந்தப் படம் சிறப்பாக அமையும் என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

இந்தத் திரைப்படத்தை விரைவில் எடுத்து முடித்து, வருகின்ற அக்டோபர் திங்கள் இரண் டாம் நாள் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் முதல் முயற்சியான இந்தத் திரைப்படம் தயாரிக்கும் திட்டத்தை, நமது நாட்டில், மது விலக்குக் கொள்கைக்கு முதல் வித்திட்ட அண்ணல் காந்தி அவர்களுக்கு அர்ப்பணிக்கும் வகையில், அவரது பிறந்த நாள் அன்றே, 2.10.1992 அன்றே, வெளியிடப்படும் என்பதையும் மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் ஒரு முழு வெற்றிப் பட மாக அமைய வேண்டும். தமிழக மக்கள் பெரிதும் விரும்பிப் பார்த்துப் பயனடையும் வண் ணம் அது அமைய வேண்டும் என்ற என் எண்ணத் தைத் தெரிவித்து, இந்த என் நல்லெண்ணம் ஈடேற, இதில் பங்குகொள்ளும் அனைத்துத் திரை உலகச் சகோதரர்களும், சகோதரிகளும், ஒத் துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ●

குங்குமப்பூ

பழங்காலம் தொட்டே பயன்படுத்தப் பட்டு வந்துள்ள வாசனைப் பொருட் களுள் குங்குமப்பூவும் ஒன்றாகும்.

கிறித்துவ பாரம்பரியத்தில் வரும் சாலமன், தனது பாடல் ஒன்றில் இனிய மணமிக்க தாவரங்களுள் ஒன்றாக குங்குமப் பூவையும் குறிப்பிடுகிறார். கிரேக்கத் திலும், ரோமானியப் பேரரசிலும் குங் குமப்பூ வாசனைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ரோமில், வரவேற்பு அறைகள், நீதிமன்றங்கள், கேளிக்கை அரங்கங்கள், குளியல் அறை களில்கூட குங்குமப்பூ வாசனையூட்டும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. ரோம் மன்னன் நீரோ, நகருக்குள் நுழையும்போது அவன் நடந்துவந்த பாதையெங்கும் குங்குமப்பூ தூவி வர வேற்பளிக்கப்பட்டதாம்!

கிரேக்கர்கள் காலத்தில் குங்குமப்பூ நிறமானது அரசு பரம்பரையினரைக் குறிக்கும் வண்ணமாகக் கருதப்பட்டதாம். ரோமப் பேரரசிலும் கூட குங்குமப்பூ நிற மூட்டும் பொருளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பின்னர் குங்குமப்பூ, சமையலறையிலும் ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டது. இதன் இனிய மணத் திற்காக உணவுப் பொருட்கள் பலவற்றில் பயன்படுத்தும் வழக்கம் அப்போதே தொடங்கி விட்டதாம்!

உலகம் முழுவதையும் தன் ஆளுகைக் குள் கொண்டுவரத் துடித்துப் போரிட்டு வந்த அலெக்ஸாண்டர், காஷ்மீர் பள்ளத் தாக்கைப் பார்த்ததும், தனது தாயகம் திரும்பும் எண்ணத்தையே மறந்து விட்டா ராம். காரணம்? அங்கு பூத்துக் குலுங்கும் குங்குமப்பூக்கள் தான்! அவர் உள்ளத் தைக் கொள்ளை கொண்டுவிட்ட குங்குமப் பூக்களைப்பிரியமனமின்றி அவர் பிரிந்து சென்ற நிகழ்ச்சி இன்றளவும் சரித்திரம் கூறிவரும் உண்மை!

பழங்கால இந்தியர்கள், குங்குமப் பூவின் சூலகத் தண்டிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் எடுத்து அவற்றை ஆடை களில் கறையேற்றி உடுத்தி வந்தார்களாம். கிரேக்கத்திலும், அயர்லாந்திலும் உள்ள உயர் குடும்பத்தினர் இதே போன்ற செயல்பாட்டினைச் செய்து வந்திருக் கிறார்கள்.

புத்தபிரானின் காலத்திற்குப் பின்னர் அவருடைய கொள்கைகளை விளக்க குங்குமப்பூ வண்ணம் பயன்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையிலேயே புத்தத் துறவிகள் தற்போதும் குங்குமப்பூ வண்ண ஆடை அணிந்து வருகிறார்கள்.

குங்குமப்பூ பலவேறு மொழிகளில் குரோகஸ், கார்காஸ், கேசார், கார்குமா, சாபர், சாபரான் என்றெல்லாம் அழைக் கப்பட்டு வருகிறது. சிசிலியா நாடே, குங்குமப்பூவின் தாயகமாகக் கருதப்படு கிறது. லெவான், கோரிகஸ் ஆகிய சிசிலியா நாட்டின் பகுதிகளில் மிக ஆரம்ப காலத்தில் குங்குமப்பூ வளர்ந்ததற் கான குறிப்புகள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் பெர்சியா, ஆசியாமைனர் போன்ற இடங்களிலும், குங்குமப்பூ மிகுதி யான அளவில் விளைந்திருக்கின்றன.

பத்தாம் நூற்றாண்டில் தர்பரா, இஸ் பேஹான் பகுதிகளில் குங்குமப்பூ மகசூல் நடைபெற்றிருக்கிறது. அதன் பின்னர் கி.பி. 961-ஆம் ஆண்டு, அரேபியா, ஸ்பெயின் போன்ற நாடுகளில் குங்குமப்பூ விளைச்சல் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கிழக்கிலிருந்து மேற்காக குங்குமப்பூ பயிரிடும் வழக்கம் பரவியிருக் கிறது. இங்கிலாந்தில் தற்போது வழங்கப் படும் 'சாபரான் வால்டன்' எனும் இடம், இங்கு குங்குமப்பூ அதிக அளவில் விளைந்ததாலேயே இப்பெயர் பெற்றுள்ளது.

இன்று, ஸ்பெயின், பிரான்ஸ், சிசிலி, இத்தாலி, ஈரான் ஆகிய நாடுகள் குங்குமப்பூவை அதிக அளவில் விளை விக்கின்றன. இந்தியாவில் காஷ்மீரில் மட்டுமே-அங்கேயும் பாம்பூர், கிஷ்ட்வார் பகுதிகளில் மட்டுமே குங்குமப்பூ விளை விக்கப்படுகிறது. பாலஸ்தீன், பெர்சியா ஆகிய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந் தவர்கள் மூலம், குங்குமப்பூ காஷ்மீர் பகுதிகளில் பயிரிடப்பட்டிருக்கிறது.

ஒரு கிலோ குங்குமப் பூவைத் தயாரிக்க 1,66,000 மலர்ந்த பூக்கள் (அதாவது சூல்முடிகள்) பயன்படுத்தப்படுவதாகக் கணக்கெடுத்துள்ளனர். மேலும் 5,000 கிலே உலராத சூல் முடியிலிருந்து 1,000 கிலோ மட்டுமே உலர்ந்த சூல்முடி கிடைப் பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களுக்கு நிற மூட்ட வும் இப்பூ பயன்படுகிறது. இப்பூவின் ஒரு பங்கினையும் ஒரு இலட்சம் பங்கு நீரை யும் கலந்தால் தனித்துவமான மஞ்சள் நிறம் கிடைக்கும். அரிசி மற்றும் மீன்வகை உணவுப் பொருட்களை நிறமூட்ட குங் குமப்பூ பயன்படுத்தப்படுகிறது. ஆடை களுக்கு மஞ்சள் நிறமூட்டவும், குங்குமப் பூவைப் பயன்படுத்தலாம். ஆனால் ஏனைய சாயங்கள் மலிவான விலைக்குக் கிடைப்பதால் குங்குமப்பூ இதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.

—நன்றி: திட்டம்

8-வது ஐந்தாண்டுத் திட்டம்

தமிழகத்துக்கு ரூ.10,200 கோடி ஒதுக்கீடு

தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்து மத்தியத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜியுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18.4.92 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில் விரிவான விவாதம் நடத்தினார். முதலமைச்சருக்குத் துணையாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், தலைமைச் செயலாளர் திரு. டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப. திட்டம் மற்றும் வளர்ச்சித்துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்-செயலாளர் ஆகியோர் இருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய அனைத்து விஷயங்களும் விவாதிக்கப்பட்டன. தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ள விசேஷப் பிரச்சினைகளை எடுத்துக்கூறி, மாநிலத்தின் திட்டமிட்ட வளர்ச்சியை வேகப்படுத்தத் தேவையான அதிக அளவு நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். விவசாயம் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்கான வளர்ச்சிக்கு உயர்ந்த முன்னுரிமை வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார். அதிக உற்பத்தித் திறன் மூலமாக உயர்ந்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் சிறந்த நீர் நிர்வாகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

விரைவான தொழில் வளர்ச்சிக்கு மாநிலத்தின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக இடம் வழங்கப்படும். இதை அடைய அடிப்படை வசதிகளில் குறிப்பாக மின்சாரத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். இப்போது நடைபெறும் மின் திட்டங்கள் தவிர, 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒருங்கிணைந்த லிக்னைட் சுரங்கம் மற்றும் மின்சார உற்பத்தி திட்டத்தைத் தொடங்க தமிழக அரசு கொண்டுள்ள ஆர்வத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.

புதிய மின் திட்டங்களுக்கு தேவையான மத்திய முதலீட்டை, குறிப்பாக நெய்வேலி முதல் சுரங்க விரிவாக்கம், 3-வது சுரங்கம் வெட்டுதல் மற்றும் கூடாங்குளம் அணுமின்சார நிலையத்தின் தேவையைப் பற்றியும் முதல்வர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

மனிதவள மேம்பாட்டுக்குக் குறிப்பாக கல்வி, மக்கள் நல்வாழ்வு, ஏழைகளுக்கான முழுப்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். கிருஷ்ணா குடிநீர்த்திட்டத்தைக் குறிப்பிட்டு சென்னைக்குக் குடிநீர் விநியோகம் செய்யும் அது தொடர்பான திட்டங்களுக்கு மத்திய உதவி வேண்டும் என்றும் முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயம், தொழில், மனிதவள மேம்பாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ள விசேஷ ஊக்கத்தை மத்தியத் திட்டக் குழவின் துணைத்தலைவர் பாராட்டினார். தமிழ்நாட்டின் நிதிநிலையைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வரவேற்ற அவர், நிதி நிலையைப் புதுப்பிக்க அடைந்த வெற்றிக்காகவும், 1991-'92-ஆம் ஆண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்காகவும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழ்நாட்டை, பாராட்டினார்.

தமிழகம் மிகப்பெரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், போதுமான மத்திய உதவி மற்றும் கடன் பெறுவதில் பங்கு ஆகியவற்றின் மூலமாகத்தான் திருப்திகரமான 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். தமிழ்நாட்டின் விசேஷப் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, கூடுதலாக மத்திய உதவித் தேவையை முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார்.

ரூ.10,200 கோடி ஒதுக்கீடு:

அலுவலர்கள் மட்டத்தில் பேசியதையும், முதல்வர் அவர்கள் விடுத்த சிறப்பு கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் 8-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடாக ரூ.10,200 கோடி என்று நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இது 7-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.5,750 கோடியைவிட 77 சதவிகிதம் அதிகமாகும்.

செய்யும் தொழில் அனைத்திலும் நெய்யும் தொழில் நிகரற்றது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உரை

மிகுந்த எழுச்சியோடும், சிறப் பாடும் கொண்டாடப்படும், 38- து கைத்தறி விழாவைத் தொடங்கி வக்கும். வாய்ப்பினைப் பெற்ற மக்காக, நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். இதற்கு முன்பு ஒரு றை, சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன், 1982- இல், நான் இதே விழாவில் உரையாற்றியதைப் பெருமிதத்தோடு நினைவுகூர்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் 28-வது கைத்தறிக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தபோது நானும் அந்த விழாவில் கலந்து கொண்டேன். அப்போது நான் அரசியலுக்கு வரவில்லை. அ.இ.அ.தி.மு.க. உறுப்பினராகவும் இல்லை. பொது வாழ்விலும் ஈடுபடவில்லை. அப்படி இருந்த என்னைத் திடீரெனப் புரட்சித் தலைவர் கைத்தறி விழாவில் பேசுமாறு உத்தரவிட்டார். நானும் பேசினேன். எதற்காக அவர் என்னைப் பேசச் சொன்னார் என்று பின்னர்தான் தெரிய வந்தது. என்னை அரசியலுக்குக் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறார் என்று.

திரைப்பட விழாக்கள் சிலவற்றில் கலந்து கொண்டு ஆங்கிலத்தில் பேசியிருக்கிறேன். பொதுகூட்ட மேடையில் பேசியது கிடையாது. முதன் முதலில் கைத்தறி விழா மேடையில்தான் பெரிய உரை ஆற்றினேன். இதைப் புரட்சித் தலைவர் எனக்குத் தெரியாமல் 'டேப் ரிக்கார்டரில் பதிவு செய்து தனியாகப் போட்டுக் கேட்டிருக்கிறார். அதன்பிறகுதான் என்னைக் கட்சியில் சேர்த்தார் என்று எனக்குப் பின்பு தெரியவந்தது. அன்று ஆலோசனை வழங்குகிற நிலையில் இருந்த என்னை, இன்று தமிழகத்தின் அரசாங்கத்தைத் தலைமையேற்று நடத்துகிற அளவிற்கு, உயர்த்திய தமிழகப் பெருங்குடி மக்களுக்கு, என் நன்றியறிதலையும் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன்.

இந்தியாவில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு, நெசவுத் தொழில் சிறப்புற்று, செழித்தோங்கி வளர்வது நம் தமிழ்நாட்டில்தான், என்கிற உண்மை வெளிப்படும்போது, மக்கள் மானம் காப்பதில், தமிழகம் முன்னணியில் நிற்கிறது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, எனக்குத் தனித்த பெருமிதம் ஏற்படுகிறது. நம்முடைய பெருமிதமும், பெருமையும் நிலையானதாகும், நியாயமானதும் ஆகும். செய்யுந் தொழில்கள் அனைத்திலும், நெய்யுத் தொழில் நிகரற்றது என்பதால், அப்பணியில் ஈடுபட்டுள்ள நெசவாளர் உடன் பிறப்புகளை நாம் அதிகமாகப் பெற்றிருப்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமையாகும். இப்பெருமை, மேலும் காக்கப்பட வேண்டுமானால், நவீன காலத்திற்கேற்ப சில அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கைத்தறித் தொழில் பழமை மிக்கதாக இருக்கலாம். ஆனால், புது யுகத்தின் தேவைகளையும், வளர்ந்து வரும் மக்களின் விருப்பத்தையும், இந்தத் தொழில் நிறைவு செய்கின்ற வகையில், தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும், உயர்த்திக்கொள்ள வேண்டும். கைத்தறித் தொழிலுக்கு அந்தச் சக்தி அதிகமாகவே உண்டு என்பதை நாம் அறிவோம்.

காலங்காலமாக எத்தனையோ தொழில்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால் கைத்தறித் தொழில் மட்டுமே, கால வேகத்திற்கும், மாற்றத்திற்கும் ஈடு கொடுத்து, இன்றும் மக்கள் மத்தியில், தனக்கென ஒரு நிலையான இடத்தைப்பெற்றுத்திகழ்கின்றது என்றால், அதற்கு இத் தொழில் எந்திர கதியில் இயங்காமல், மனித உயிர்த் துடிப்போடு இயங்குவது தான் காரணம். எனவே, இத்தொழில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

தமிழ்நாட்டில், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கு

வதில், வேளாண்மைக்கு அடுத்தபடியாக, கைத்தறித் தொழில் தான் மிகச் சிறப்பான பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலுள்ள சுமார் 4.27 இலட்சம் கைத்தறிகளில், இன்றைய புள்ளி விவரப்படி, சுமார் 3.27 இலட்சம் கைத்தறிகள், கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டு, கூடித் தொழில் செய்வதன் மேன்மையை, உலகிற்குப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன. இந்தத் தறிகள் அனைத்தும், தமிழகத்திலுள்ள சுமார் 1,473 கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, சிறப்பாகச் செயல்படுகின்றன. இதனை எண்ணும்பொழுது, கூடித் தொழில் செய்யும் கூட்டுறவுத் தத்துவத்தின் மகத்தான மேன்மையை, நாம் உணர முடிகிறது.

தனித் தனியாகச் சிதறிக் கிடந்த நெசவாளர்களை, கூட்டுறவின் கீழ் கொண்டு வந்து செயல்பட வைக்கின்ற பணியினை, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், கோ-ஆப்டெக்ஸ் ஏற்று, நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது என்பது, பாராட்டுதலுக்குரியது ஆகும். நெசவாளர்களுக்குத் தேவையான மூலப் பொருளைத் தங்கு தடையின்றி வழங்கி, அவர்களது உற்பத்திப் பொருள்களை உடனுக்குடன் கொள்முதல் செய்து, நாடெங்கும் அமைந்துள்ள தனது 457 விற்பனைக் கூடங்களின் மூலம், கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்து உதவி வருகிறது.

நெசவாளர்களின் நலனைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வரும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், கடந்த 37 ஆண்டுகளாக இந்தக் கைத்தறி விழாவினை, சிறப்புடன் கொண்டாடி வருகிறது. இக்கைத்தறி விழாவிற்குப் பொதுமக்கள் எத்தகைய ஆதரவை அளித்து வந்துள்ளார்கள் என்பதை, ஆண்டுக்காண்டு உயர்ந்து வரும் விற்பனையின் மூலமே, நாம் அறிந்து கொள்ளலாம்.

'நூல் என்றாலே சிக்கல் இருக்கும்' என்றார், காலமெல்லாம் கைத்தறியாளரையும், கைத்தறியையும் போற்றிக் காத்த பேரறிஞர் அண்ணா அவர்கள். நெசவாளர் வாழ்விலே என்றும் சிக்கல் இல்லாமல், சிரமம் இல்லாமல், சங்கடம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற சீரிய அடிப்படையில் தான், அவர் வழிவந்த நாங்கள், இன்று அரிய பல திட்டங்களை அவர்களுக்காகத் தீட்டி, செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழகத்திலுள்ள 37,500 கைத்தறிகளை, 75,000 விசைத்தறிகளாக மாற்றும் ஒரு நவீன திட்டத்தினைத் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன், எதிர் வரும் 10 ஆண்டுகளில் செயல்படுத்த உள்ளோம். மேலும், வரும் ஐந்தாண்டுகளில், 42.31கோடி ரூபாய் செலவில், 50,000 கைத்தறிகளை, தற்காலத் தேவைக்கேற்றவாறு, துணி வகைகளை உற்பத்தி செய்யும் வண்ணம், நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாடும் நெசவாளர் இறப்பின், அவரது குடும்பம் ஆதரவின்றி அல்லல்படும் நிலையைப் போக்க, தாயுள்ளம் கொண்ட எங்கள் அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு, 10 ஆண்டுகளுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் நிதி உதவி, ஓய்வூதியமாக வழங்கும் ஒரு புரட்சிகரமான பாதுகாப்புத் திட்டத்தினை, அறிமுகப் படுத்தியுள்ளோம். மேலும் இறந்துவிட்ட நெசவாளரின் குடும்பத்திற்கு, இதுவரை வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையான, 12,000 ரூபாயை உயர்த்தி, 17,000 ரூபாயாக வழங்க ஆணையிட்டுள்ளோம்.

வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும், போதிய இடவசதியற்ற வீடுகளில் வாழும் நெசவாளர்கள் பயன் பெறுகின்ற வகையில், அவர்களுக்கு இவ்வாண்டு தறிக் கூடத்துடன் கூடிய 2,000 வீடுகள், ஒவ்வொன்றும் 25,000 ரூபாய் மதிப்பீட்டில் க்கட்டித்தர ஆணையிட்டுள்ளோம். இவைகளுக்கெல்லாம் மேலாக, பெண்களின் முன்னேற்றத்தில் பெரிதும் கவனம் செலுத்தும் எங்கள் அரசு, பலநூறு பெண்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில், முற்றிலும் பெண்களுக்கெனவே, தனியாக ஒரு கூட்டுறவு நூற்பாலையினை, இவ்வாண்டில், பருகூரில் நிறுவ முடிவு செய்து உள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள, 'விளாகம்' என்னும் கிராமத்தை அரசு தேர்ந்தெடுத்து, அக்கிராமத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் ஒரு முன்னோடித் திட்டத்தை, இந்த ஆண்டு அறிமுகப் படுத்தி உள்ளோம். இந்தியாவிலேயே நம் மாநிலத்தில் தான் முதன் முறையாக, 25 இலட்சம் ரூபாய் செலவிலான இத்திட்டம், செயல்படுத்தப் படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், தமிழகம் முழுவதுமுள்ள ஏழை நெசவாளர்கள், ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெறும் வகையிலான திட்டத்தையும், அதே நேரத்தில் ஏழ்மையில் உழலும் மக்களுக்கு, புத்தாடை வழங்குகிற புனிதத் திட்டத்தையும், ஒருங்கிணைந்து நிறைவேற்றும் முகத்தான், 42 கோடி ரூபாய் செலவில், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தை, சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தி செயல் படுத்தினோம். இத்திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல் படுத்துவோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் இந்த ஆண்டு, முழுமையாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

இப்படி ஏழை எளிய மக்கள் எந்தப் பிரிவினராக இருந்தாலும், அவர்களது வாழ்வுக்கு ஊன்றுகோலாக, அவர்களது பளுவைச் சுமக்கிற சுமைதாங்கியாகத்தான், எங்கள் அரசு செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து அவ்வாறே செயல்படுவோம். நம் மாநிலத்தில் வாழும் கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பேணிக் காப்பதில், அவர்களுக்கு உதவுவதில், நாங்கள் எப்போதும் பின்வாங்கமாட்டோம் என்பதை, இந்த நேரத்தில் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

'பட்டினில் ஆடையும்
பஞ்சில் உடையும் பண்ணி
மலைகளென வீதி குவிப்போம்'
- என்றார் மகாகவி பாரதியார்.

'ஆடையிற் சிறந்தது கைத்தறி ஆடை
- மக்கள்
அனைவர்க்கும் நல்லது அந்தத்
தேனோடை
ஓடையில் தேனை அள்ளி உண்ண
வாரீர் - அள்ளி
உண்டு கைத்தறிக்கு உதவி பண்ண
வாரீர்.

என்று புகழ்ந்து பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.

புதுமைக் கவியும், புரட்சிக் கவியும், பாடி மகிழ்ந்து போற்றிய இந்நெய்யுந் தொழிலை நம்பி, தங்கள் வாழ்க்கையைத் தொடரும் நெசவாளர்களின் வாழ்வில், ஒளி விளக்கை ஏற்றி வைக்க, ஒரு போதும் எங்கள் அரசு தயங்காது. தமிழக நெசவாளர்களின் வாழ்வு வளம் பெற, அனைத்து உதவிகளையும் எங்கள் அரசு தொடர்ந்து செய்யும் என்று கூறுகிறேன். ●

தமிழகத்தில் தேயிலைச் சாகுபடி

தமிழ்நாடு தேயிலை வளர்ச்சிக் கழகத்தின் தேயிலைச் சாகுபடி திட்டமொன்றுக்குத் தேயிலை வாரியம் அனுமதி அளித்துள்ளது. இதன்படி 1996-97-ஆம் ஆண்டு வரை கூடுதலாக 3000 எக்டேர் பரப்பளவில் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். இதில் ஆனைமலையில் 2370 எக்டேரிலும், மீதமுள்ளவை நீலகிரிப் பகுதியிலும் தேயிலைச் சாகுபடி செய்யப்படும். 1500 எக்டேரில் தேயிலைச் சாகுபடிச் செய்வதற்கு நிதி உதவி அளிக்கத் தேயிலை வாரியம் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கெனத் தேயிலை வாரியம் ஆறு கோடி ரூபாய் கடனாகவும், ரூ.3.75 கோடியை மானியமாகவும் 1997-98-ஆம் ஆண்டு வரை வழங்கும். இதில் முதல் தவணையாக ரூ.40 இலட்சம் இந்த ஆண்டில் வழங்கப்படுகிறது.

'நீலகிரி மாவட்டத்தில் ஆட்சிமொழிக் கருத்தரங்கம்'

நீலகிரி மாவட்ட ஆட்சி மொழிக் கருத்தரங்கம், உதகமண்டலம் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில், அக் கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் த. பெரியாண்டவன் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார். அப்போது அவர், இம்மாவட்டத்தில் தமிழ் ஆய்வு அலுவலகம் கடந்த 8 மாதங்களாகச் செயல்பட்டு வருகின்றது என்றும், இம்மாவட்டத்தில் 303 அரசு அலுவலகங்கள் உள்ளன. இது வரை 280 அலுவலகங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சில தகவல்களைக் குறிப்பிட்டார்:

ஆட்சியாளர்களுக்கும், பாமர மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த ஆட்சி மொழிச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது.'

'தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ்ச் சொற்களைத் திரட்டி ஆட்சிச்சொல் அகராதி இதுவரையில் 4 பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. சிறப்புச் சொல் அகராதியும் வெளியிடப்பட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் கோப்புக்களைத் தமிழில் எழுதுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்படுகிறது. வறுமையில் வாழும் தமிழ் அறிஞர்கள் மற்றும் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு அலுவலர்கள் தமிழில் கையெழுத்திட ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வாணிப அங்காடிகளில் தமிழில் பெயர்ப் பலகை வைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தலைமை அலுவலகங்களில் 75 விழுக்காடு தமிழில் தட்டச்சு செய்ய வேண்டும். 25 விழுக்காடு தான் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்ய வேண்டும். சார்பு அலுவலகங்களில் அனைத்தும் தமிழில்தான் தட்டச்சு செய்ய வேண்டும் என்ற ஆணை இருக்கிறது. இவ்வாண்டு மாநிலத்திலுள்ள கல்லூரிகளில் உள்ள தமிழ் மன்றங்களுக்கு விழாக் காலங்களில் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்க ரூ.75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.'

இக்கருத்தரங்கில் உதகை அரசு கலைக்கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வி வே.அ. வசந்தா, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் முப்பால் மணி, கணிதத்துறைப் பேராசிரியர் திரு ஆரோக்கியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரிப் பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், மாணவ-மாணவியர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நீலகிரி மாவட்டத் தமிழ் ஆய்வு அலுவலர் டாக்டர் மு. இராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். நீலகிரி மாவட்ட அருங்காட்சியகக் காப்பாளர் திரு இட்சுமண நாராயணன் நன்றி கூறினார்.

மூ.நா. கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

நிலக்கரி

கடந்த நிதியாண்டில் (1991-92) 229.29 மில்லியன் டன் நிலக்கரி நாட்டில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 228 மில்லியன் டன்களை விட சற்றே அதிகமாகும்.

நடப்பு நிதியாண்டில் 237.09 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என மத்திய நிலக்கரித் துறையின் 1991-92-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை தெரிவிக்கிறது. மின் நிலையங்களுக்கு அனுப்பப்படும் நிலக்கரியின் அளவு 118.77 மில்லியன் டன்னிலிருந்து (1990-91) 136.88 மில்லியன் டன்னாக (1991-92) உயர்ந்துள்ளது. இது 15.2 சதவிகித வளர்ச்சியாகும்.

இந்தியாவிலிருந்து பெருமளவிற்கு நிலக்கரி ஏற்றுமதி ஆவதில்லை; எனினும், அண்டை நாடுகளான நேபாளம், பூடான், வங்காளதேசம் ஆகியவற்றிற்கு சுமார் ஒரு மில்லியன் டன் அளவில் நிலக்கரி ஏற்றுமதி ஆகியுள்ளது.

ஒலிம்பிக்

வரும் ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரை பார்சிலோனாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் 12 பிரிவுகளில் கலந்துகொள்ள இந்தியாவிலிருந்து 50 விளையாட்டு வீரர்கள் அடங்கிய குழு செல்ல இருக்கிறது. எனினும் இவர்கள் பங்கேற்பது, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தரக் கட்டுப்பாட்டில் தேறுவதைப் பொறுத்ததாகும். ஹாக்கி, ஜூடோ, மல்யுத்தம், குத்துச் சண்டை, எடை தூக்குதல், வில் வித்தை, டேபிள் டென்னிஸ், பாட்மின்டன், டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், தடகளப் போட்டிகள், படகுப் பந்தயம் ஆகிய பிரிவுகளில் இந்திய வீரர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

பயணங்கள் முடிவதில்லை!

1853 ஏப்ரல் 16-ஆம் தேதி தான் முதன் முதலாக போர்பந்தருக்கும் தானேவிற்கும் இடையே இரயில் விடப்பட்டது. இதைக் குறிக்கும் விதமாக, ஆண்டுதோறும் ஏப்ரல் 10 முதல் 16 வரை இந்திய இரயில்வே வாரம் அனுசரிக்கப்படுகிறது.

இராமேசுவரத்தில் புத்தர் சிலை கண்டுபிடிப்பு

இராமேசுவரம் தீவில் அரியாங்குண்டு என்ற கிராமத்திற்கருகிலுள்ள 'புங்கடித் திடல்' என்ற இடத்தில் புத்தர் சிலையொன்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புங்கடித்திடல் இராமேசுவரம் நகரிலிருந்து வடமேற்குத் திசையில் சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ளது. இப்புங்கடித்திடல் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் புள்ளியடிச்சாலை அல்லது புள்ளியடித்திடல் என்று அழைக்கப்பட்டுள்ளது.

இராமேசுவரத்தில் இராமபிரான் சிவனை இலிங்க வடிவில் வழிபட்டதாகப் புராணம் கூறுவதன் அடிப்படையில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது.

இராமேசுவரத்தை உள்ளடக்கிய இப்பகுதி மறவர் நாடு, அல்லது சேதுநாடு அல்லது சேதுபதி சீமை என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டது.

கடற்கரைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இவ்வழகிய புத்தர் சிலையைக் கொண்டு தமிழ்நாட்டின் இப்பகுதியில் புத்த மதம் பரவியிருந்ததை உறுதிப்படுத்த முடிகிறது. பராமக்கிரமபாகு என்ற இலங்கை வேந்தன் இவ்விடத்தில் புத்த விகாரையைப் புதுப்பிக்கத் திரிகோணமலையிலிருந்து தேவையான பொருட்களைக் கொண்டு வந்ததாக அறிய முடிகிறது. இம்மன்னன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்துள்ளான். எனவே, கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்த புத்த விகாரை இவ்விடத்திலிருந்தமை ஐயத்திற்கிடமின்றிப் புலனாகிறது.

கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்கள் கொண்டு வந்த சீனப் பீங்கான் ஓடுகள் பல இங்கு கிடைத்துள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது. இவ்வோடுகள் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகின்றன. இங்கு கிடைக்கக்கூடிய ஓடுகளைக் கொண்டு இங்கிருந்த புத்த விகாரையும் சேதியமும் கீழ்த்திசை நாட்டுப் பக்தர்களைப் பெருமளவில் கவர்ந்துள்ளதாகக் கருதலாம்.

இப்புத்தர் சிலை உடைந்து காணப்பட்டாலும் அதன் கலையழகு அதனை வடித்த சிற்பியின் அரிய திறமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. மடிப்புகளுடன் கூடிய மேலாடையும், தியான முத்திரையும் இது புத்தர் சிலையே என உறுதிப்படுத்துகின்றன. இதன் காலம் சுமார் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

இவ்விடத்தில் முதுமக்கள் தாழி ஒன்றும் கூம்பு வடிவ ஜாடிகளின் உடைந்த பகுதிகளும் கிடைத்துள்ளன. இப்புத்தர் சிலை, இத்துறையைச் சேர்ந்த இராமேசுவரம் அகழ்வைப்பகக் காப்பாட்சியர் நா.க. கணேசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நடன. காசிநாதன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட அரிய கல்வெட்டு கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி வட்டத்தைச் சார்ந்த மரக்கோணம் என்னும் ஊரில் ஆதித்ய சோழன்

காலத்திய கல்வெட்டொன்றைக் கண்டுபிடித்துள்ளது.

இக்கல்வெட்டு மூன்று வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. முதலாவதாக, தொண்டை மண்டலத்தில் இம்மன்னன் காலத்தியக் கல்வெட்டுகள் கிடைத்திருப்பதில் இது மூன்றாம் கல்வெட்டாகும். தொண்டை மண்டலத்தில் இதுவரை இம்மன்னன் காலத்திய கல்வெட்டு திருக்கழுக்குன்றம், தக்கோலம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இரண்டாவதாக இக்கல்வெட்டு 'கோவிசைய இராசகேசரி' என்று தொடங்குவது. மூன்றாவதாக

இக்கல்வெட்டின் தொடக்கமான 'கோவிசைய இராசகேசரி' என்ற சொல்லின் மூலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் ஆட்சி மாறி சோழர்களின் ஆட்சி உருவாகிவிட்டது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது. 'கோவிசைய' என்ற தொடக்கச் சொல் பெரும்பாலும் பல்லவர்களின் கல்வெட்டுக்களிலேயே பயிலப்படுகிறது. ஆனால் இக்கல்வெட்டில் சோழ மன்னனது பெயரான இராசகேசரிக்கு முன்பாகக் காணப்பெறுவது முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

பல்லவ குலத்து இறுதி மன்னனான அபராஜிதவர்மனைத் தோற்கடித்துப் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றியவன் சோழ மன்னன் ஆதித்யனாவான். சுந்தரசோழனின் அன்பில் செப்பேட்டில் ஆதித்ய சோழன் இராசகேசரியென்றும், விஜயாலயச் சோழனின் மகன் என்றும் கூறப்படுகிறான். திருக்கழுக்குன்றம், தக்கோலம் கல்வெட்டுகளிலும் ஆதித்யன், இராசகேசிரியென்று மட்டுமே அழைக்கப்பட்டுள்ளான். அக்கல்வெட்டுக்கள் 'இராசகேசரி' என்ற சொல்லைக் கொண்டும், எழுத்தமைதியைக் கொண்டும் முதலாம் ஆதித்ய சோழனைச் சார்ந்தவை என்று கருதப்படுகின்றன. ஆதலால் இம்மரக்கோணம் கல்வெட்டும் முதலாம் ஆதித்யச் சோழனைச் சார்ந்தது என்று கருதுவதில் தவறில்லை. ஆதித்ய சோழனின் 'தொண்டை நாடு பாவின சோழன்' என்றும், 'கோதண்டராமன்' என்றும் பட்டப் பெயர்கள் பூண்டிருந்தான். இம்மன்னன் தொண்டை மண்டலம் வரை தன் ஆட்சி எல்லையை விரிவாக்கினான். சேர மன்னன் தாணுரவியோடும், கங்க மன்னன் இரண்டாம் பிரித்விபதியோடும் நல்லுறவு கொண்டிருந்தான். காவிரிக் கரையின் இரு மருங்கிலும் எண்தோள் ஈசனுக்கு எண்ணற்ற கோயில்களை எடுப்பித்தவன் என்று புகழப்படுபவன். கி.பி. 871 முதல் 907 முடிய ஆட்சி புரிந்தவன்.

இக்கல்வெட்டு 'உவாஏர்' என்னும் புதுவகையான கொடையைக் குறிப்பதாகும். இக்கொடை பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த குழைப்பலூர் நாட்டு மரக்குன்றத்தூர் நம்பி அருமுறைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இக்கல்வெட்டு மரக்கோணத்தில் திரு கண்ணப்ப முதலியாரின் வயலில் காணப்பெறும் பாறையில் வெட்டப்பட்டுக் காணப்படுகிறது. ஆதித்ய சோழனின் 26-ஆம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 897-இல் எழுதப்பட்டிருக்கிறது. மரக்கோணம் என்னும் இவ்வூரின் பெயர் கல்வெட்டில் மரக்குன்றத்தூர் என்று அழைக்கப்படுகிறது. அப்பெயரின் மருவிய வழக்கே மரக்கோணமாக இருக்கலாம்.

சோழ மன்னன் ஒருவனது பெயருக்கு முன்பாக 'கோவிசைய' என்ற முன்னொட்டு காணப்படும் கல்வெட்டு இம்மரக்கோணம் கல்வெட்டொன்றேயாகும். இக்கல்வெட்டில் காணப்பெறும் 'உவாஏர்' என்ற தானத்தின் பொருள் அறிய இயலவில்லை. நிலத்தை உழுவதற்கு வழங்கப்பட்ட உரிமையைக் குறிப்பாக இருக்கலாம்.

காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் திரு வெங்கடேசன் என்பவர் தந்த தகவலின் அடிப்படையில், இத்துறையின் இயக்குநர் திரு நடன காசிநாதன் ஆணையின் பேரில் மரக்கோணம் சென்று இக்கல்வெட்டைத் திரு இராமமூர்த்தி என்னும் கல்வெட்டாய்வாளர் படியெடுத்து வந்துள்ளார்●

தூத்துக்குடி விமான நிலையத் தொடக்க விழா

மாண்புமிகு முதல்வர் பேருரை

"பாண்டி நாடு முத்துடைத்து" - என்ற பெருமைக்குரிய தென் பாண்டி மண்டலத்தின் - தனிச் சிறப்புமிக்க இத் தூத்துக்குடி நகரில் - மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை - நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் நல்லாட்சியை அமைத்த பின்னர், உங்களை எல்லாம் முதன் முறையாகச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். தூத்துக்குடியைத் தலை நகராகப் பெற்ற வ.உ.சி. மாவட்டம், சரித்திரப் புகழ் வாய்ந்தது. வீர பாண்டிய கட்டபொம்மன், சிறையில் செக்கிழுத்த சிதம்பரனார், தன்னுயிரைத் துச்சமென மதித்த விடுதலை வீரன் வாஞ்சிநாதன், நாட்டு விடுதலை தன் பிறப்புரிமை என முழங்கிய மகாகவி பாரதி, என எண்ணற்ற தியாக சீலர்கள் - தியாகிகள் - தீரர்கள் - வல்ல வர்கள் - நல்லவர்கள் தோன்றிய பூமி, இதுவாகும். இந் நகர் இன்று வரலாறு காணாத மாபெரும் விழாக் கோலம் பூண்டிருக்கிறது. கடல் அலை என மக்கள் கூடி உள்ளனர். நாம் கூடியுள்ள திடல், விமான நிலையத் திடலா, அன்று கப்பல்கள் நிற்கும் வங்கக் கடலா என ஐயுறும் வகையில், திரும்பிய திக்கெல்லாம் மக்கள் வெள்ளமாகக் காட்சி தருகிறது.

அதுவும் நல்லிணக்கத்தோடு ஆட்சி புரிந்து வரும் மத்திய அரசும் - மாநில அரசும் இணைந்து நடத்திடும் ஓர் நல்ல நிகழ்ச்சியில் - 'தூத்துக் குடியில் முத்துக் குவியல்' என்ற கூற்றினை மெய்ப்பித்துக் கொண்டிருப்பதுபோல், கொத்துக் கொத் தாய் மனிதக் கூட்டம், இலட்சக் கணக்கில் கூடியுள்ள பாங்கினைக் காணுவதில், உண்மையிலேயே பேருவகை கொள்கிறேன்.

என்னை விடப் பேருவகையினையும், பெருமகிழ்ச்சியினையும் இங்கே கூடியுள்ள நீங்கள் அனைவரும் கொண்டிருக்கிறீர்கள் என்பதை, என்னால் உணர முடிகிறது. காரணம்;

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி; மாநிலத்தில் எங்கள் சகோதரி ஆட்சி என்ற வைராக்கியத்தோடு, எங்களை அமோகமாக வெற்றி பெறச் செய்திட்ட உங்களுக்கு, இன்று இந்த அரிய காட்சிகளை எல்லாம் காணுகிறபோது, குதூகலமும் - கொண்டாட்டமும் பொங்கி வழிகிற தன்மையை, என்னால் உணர முடிகிறது.

இந்த நன்னாளில் தூத்துக்குடி நகருக்குப் புதிய விமான நிலையம்

இன்று முதல் தொடங்கப்படுகிறது - இது மத்திய அரசின் நிகழ்ச்சி. தூத்துக்குடி நகரம் மட்டுமல்லாது, இம்மாவட்டம் முழுவதற்கும் பயன் அளிக்கும் ஏறக்குறைய 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தொடங் கப்படுகின்றன.

குறிப்பாக இம்மாவட்ட மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில், மிகப் பிரமாண்டமான அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைய உள்ளது; இவை எல்லாம் மாநில அரசின் நிகழ்ச்சிகள். இந்த இரு பெரும் நிகழ்ச்சிகள் இணைந்து இங்கே நடைபெறுகிறது- நாம் விரும்பி அமைத்திட்ட இரு ஆட்சிகளும், நமக் காக இணைந்து காரியமாற்றும் பாங் கறிந்து, குதூகலம் கொப்பளிக்க, மகிழ்ச்சி பொங்க, ஆடிப்பாடி மகிழ்ந்த வண்ணம் கூடி உள்ளீர்கள்.

ஆனால், எங்கள் இரு அரசு களும் இவ்வாறு இணைந்து நிற்பதே சிலருக்கு எரிச்சலாக உள்ளது; உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி பொங்கு கிறதென்றால், அவர்களுக்கு ஆத் திரம் தான் பொங்கி வழிகிறது; 'ஐயோ, ஆட்சி போயிற்றே' என்ற ஆதங்கம் தான் பொங்கி வழிகிறது.

கடந்த 10 மாதக் காலத்தில், உங்கள் சகோதரியின் ஆட்சி இங்கே நடைபெறுகிறது. இந்த அளவு குறு கிய ஓர் காலக் கட்டத்தில், எண் ணற்ற நன்மைகளை நாட்டு மக்களுக் கென ஆற்றிய 'நல்லரசு', என நல் லோர் அனைவரும் பாராட்டும் - போற்றும் வாய்ப்பை இன்று பெற்று இருக்கிறோம்.

இவ்வளவுக்கும், நாங்கள் ஆட் சிப் பொறுப்பேற்ற நாளில், கடந்த ஆட்சியாளர்களால் - வஞ்சகமும், சூதும் மட்டுமே ஓர் அரசியல் தலை வருக்கான அத்தியாவசிய இலக் கணம், என்ற புது வரலாறு படைத் துள்ள முன்னாள் முதல்வரால், விட்டுச் செல்லப்பட்ட பற்றாக்குறை மட்டும், 900 கோடி ரூபாய் ஆகும். அப்படி ஆட்சியை விட்டு வெளி யேற்றப்பட்ட நேரத்தில், கஜானா வைக் காலி செய்ததோடு, ஒன்றி ரண்டு கோடி பற்றாக்குறை அல்ல; 900 கோடி ரூபாய் பற்றாக்குறையை விட்டுச் சென்றவரைத் தான், சிலர் 'நிர்வாகத்தில் புலி' என்றெல்லாம் பீற்றிக்கொள்கிறார்கள் - போற்றிக் கொண்டிருக்கிறார்கள். 'என்னைப் போல் பட்ஜெட் போட முடியுமா' என, அவரும் தற்பெருமையும், தம் பட்டமும் அடித்துக்கொள்கிறார்.

அவ்வாறு 900 கோடி ரூபாய் பற்றாக்குறையோடு, தமிழக அரசின் கஜானா காலியாக்கப்பட்டிருந்த நேரத் தில் தான் - நாங்கள் ஆட்சி அமைத் துக் கோட்டைக்குள்ளே நுழைந்தவு டன், முதல் வேலையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்தபோதே, நான் போட்ட முதல் உத்தரவு, 322 கோடி ரூபாய் இழப்பை - சுமையைத் தாங்கவேண்டிய உத்தரவான, இந் நாட்டு மக்களை ஆட்டிப் படைத்து வந்த, மலிவு விலை மதுக்கடைகளை

- **தூத்துக்குடி விமான நிலையம்**
- **தூத்துக்குடி அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவு**
- **இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம்**
- **700 கோடி ரூபாய்க்கான அரசுத் திட்டப் பணிகள் தொடக்கம்**

மூடிய உத்தரவு என்பதை, நன்கு அறிவீர்கள்.

தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள கிராமப் பகுதிகள் அனைத் தும், அடிப்படை வசதிகளைப் பெறு வதற்கான ஒவ்வொரு ஒன்றியத் திற்கும் ஒரு கோடி ரூபாய், என்னும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தமிழ கத்தின் எந்த மூலையில், எந்தக் குக்கிராமத்திற்கு இன்று நீங்கள் சென்றாலும், அங்கே இன்று, அர சின் ஏதாவது ஒரு திட்டவேலை நடந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடியும்.

பழைய கால ஆட்சியாளர்கள் போல், 'அதைச் செய்தோம்; இதைச் செய்தோம்' என நாங்கள், 'அகன்ற வான வெளியில் ஆழக் கிணறு வெட்டிய' வாய்ப்பந்தல் சவடால் அடித்துக் கொண்டிருக்கவில்லை. கண்ணுக்கு நேரே நீங்கள் காணக் கூடிய திட்டங்கள் பலவற்றைச் செய்துகொண்டு இருக்கிறோம்.

நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த, இத்தகைய கடும் நிதிப் பற்றாக் குறை இருந்த காலக் கட்டத்தில், இயற்கையான பல கோளாறுகள் காரணமாக, சாதாரண மக்களைப் பாதிக்கும் அளவில், 'கிடுகிடு' வென விலைவாசிகள் உயர ஆரம்பித்தன. குறிப்பாக அரிசி விலையே கூட மிகக் கடுமையாக, கூட ஆரம்பித் தது. உடனே இந்த விமரிசனக் கர்த்தாக்கள் - 'இந்த அம்மாவுக்கு ஓட்டுப் போட்டீர்களே, அரிசி விலை என்னவாயிற்று பார்த்தீர்களா? அனுபவியுங்கள்' என ஊர் ஊருக் குக் கூப்பாடு போட்டனர்.

அந்தச் சூழ்நிலையில்தான், உங்க ளாலே - உங்கள் அன்பினாலே - ஆதரவாலே - பற்றாலே - பாசத் தாலே ஆட்சிக்கு வந்த நான், உடனடி யாக அதிரடி நடவடிக்கைகள் சில வற்றை மேற்கொண்டேன். அரிசி, நெல் கையிருப்பை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரிசி நடமாட்டம் தாராளமாக்கப்பட்டது. கொள்முதல் முறையாகப் பெறப் பட்டது. கடத்தல்காரர்கள் - பதுக் கல்காரர்கள் தயவுதாட்சண்யமற்ற முறையில் ஒடுக்கப்பட்டார்கள்; ஒரு சிலர் இன்றும் கூட 'தடா' சட்டத் தில் உள்ளே உள்ளனர். பொது விநியோக முறை சீராக்கப்பட்டது. மத்திய அரசு ரேசன் அரிசி விலையை உயர்த்தியபோதிலும், தமிழக மக்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் அனல் மின்நிலைய நான்காவது-ஐந்தாவது பிரிவினைத் தொடங்கிவைத்தார்.

களுக்குக் குறைந்த விலையில் சன்ன ரகம், மிகச் சன்னரகம் ரூபாய் 3-க்கும், சாதாரண ரகம் ரூபாய் 2-க்கும் வழங்கிட உத்தரவிட்டேன். இதனாலே மட்டும் அரசுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு நேர்கிறது. இத்தகைய நடவடிக்கைகளால் இன்று அரிசி விலையும் - ஏனைய விலை வாசிகளும் குறைய ஆரம்பித்துள்ளதே - அன்றைக்கு விலைவாசி ஏறிய வுடன் என்னைத் தூற்றியவர்கள், இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? ஏதாவது வாய் திறக்கிறார்களா? எனவே, இதற்கெல்லாம் நீங்கள் தான் பதில் கூறவேண்டும். அவர் களுக்குத் தக்க பாடமும் புகட்ட வேண்டும்.

ஏளனம் பேசுவோர் பேசிக் கொண்டே இருக்கட்டும். குறை கூறுவோர் கூறிக்கொண்டே இருக் கட்டும். நாங்கள் ஒரு பொழுதும் அவர்களுக்கு செவிமடுக்கப் போவ தில்லை. 'போற்றுவோர் போற்ற லும் - புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றலும் தொடர்ந்திடினும், ஏற்ற தொரு செயலை நாம் தொடர் வோம்' என்பதற்கேற்ப, எங்கள் பணி அமைந்து வருகிறது என்பதற் கான எடுத்துக்காட்டே இவ்விழா வாகும். ஆக்கபூர்வமான அறி வுரைகள் என்றால் அதனை ஆராய லாம். ஆனால் அவர்களோ, ஆதங்கத்தாலும் - ஆத்திரத்தாலும், அப்பட்டமான பொய்களையே தொடர்ந்து கூறி வருவதை, நாங்கள் மட்டுமல்ல, வேறு எவரும் பொருட் படுத்தமாட்டார்கள்.

'தமிழகத்தின் திட்ட ஒதுக்கீட்டில் வெட்டு; நாங்கள் ஆட்சியில் இருந்த பொழுது இவ்வளவு வாங்கினோம்; இவர்கள் ஆட்சியில் குறைந்து விட்டது' என மார்தட்டியவர்கள், மத்திய அரசு நமது மாநிலத்தின் 1992-93-க்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை, 1,751 கோடி ரூபாய் என நாம் கோரியவாறே கொடுத்த பொழுது, வாயடைத்துப் போயினர். கடந்த ஆண்டு கிடைத்த 1,605 கோடி ரூபாய் ஒதுக்கீட்டைச் செலவு செய்ய முடியுமா, என்று மத்தியத் திட்டக் குழுவே சந்தேகித்தபொழுது, திட்ட ஒதுக்கீட்டையும் மிஞ்சி, 1,640 கோடி ரூபாய் என 1991-92-ஆம் ஆண்டிற்குச் செலவு செய்து, சாதனை படைத்து நிற்கும் எங்கள் அரசைப் பற்றியும், என் னைப் பற்றியும், நிதி நிர்வாகத்தில் தன்னைப் புலி என்று கூறிக்கொள் ளும் பெரியவர், முன்னர் குற்றம் கூறியவர் இன்று ஏன் வாய் திறக்க வில்லை? தான் பொய்யாகக் கூறிய குறை, பொய் என்பதை நிரூபித்து விட்டார்களே! நாட்டு மக்கள் முன், தன் அறிவாற்றலைத் தோலுரித்துக் காட்டி விட்டார்களே என்று கவலை தான்!

நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற கடந்த 10 மாத காலத்தில், எத்தனைத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ளோம். அவற்றை எல்லாம் சாடினால், மக்கள் எள்ளி நகையாடுவார்கள் என்பதால், இன்று என்னைப் பற்றித்தனிப்பட்ட முறையில் புழுதி வாரித் தூற்றும் முயற்சியில் இறங்கி உள்ளனர்.

என்னைப் பற்றி என்ன வேண்டு மானாலும் கூறட்டும். நான் அதற்கு எப்போழுதும் கவலைப்பட்டதே கிடையாது. எத்தனை எதிர்நீச்சல் போட்டு, ஏளனங்களைச் சந்தித்து, நான் இன்று இந்த நிலையை அடைந் துள்ளேன் என்பதை, நாட்டு மக்கள் நன்கு அறிவீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போன்று, 'மக்கள் சேவையே மகே சன் சேவை' என்று ஏற்றுக்கொண்டு அரசியலில் இறங்கிய நான், சுயநல வாதிகளின் கொடுஞ்செயல்களுக்கு என்றும் அஞ்சியதில்லை; இனி அஞ்சவும் போவதில்லை என்பதை, மெத்தவும் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக் கப்பட்ட நான், அவர் வழி தொடர்ந்து நடக்கும் நான், எந்தத் தீய சக்தி களுக்கும், மக்கள் விரோதச் சக்தி களுக்கும் அஞ்சமாட்டேன். அவர் களை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்வேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீப காலமாகப் பத்திரிகைகளில், என்னைப் பற்றி எண்ணற்ற விமரி சனங்களை, திட்டமிட்டு சிலர் பரப்பி வருவதை நீங்கள் அறி வீர்கள்; தவறான, சிறிது கூட உண்மையே இல்லாத கற்பனைச் செய்திகளை வெளியிட்டு வரு கிறார்கள். இது ஒரு திட்டமிட்ட சதிச் செயலோ என்று கூட எண் ணத் தோன்றுகிறது. சட்டமன்றப் பேரவையின் உரிமை மீறல் பிரச் சினையில், பாதிக்கப்பட்ட சில உறுப்பினர்கள் கொடுத்த புகார் களின் மீது, பேரவைத் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டார். சம் பந்தப்பட்ட உறுப்பினர்கள் உரிமை பாதித்ததாகவும் - பேரவையின் கவுர வத்திற்குக் களங்கம் ஏற்படுத்திய

செயலில் ஈடுபட்டதாகவும், சம்பந்தப்பட்ட சில பத்திரிகை ஆசிரியர்களையும், நிருபர்களையும் விதிமுறைகளின்படி விசாரணைக்கு அழைத்தார். ஒருவர் அழைப்பு பெற்றுக் கொண்டும் வர மறுத்திருக்கின்றார். மற்றவர் நேரில் வந்து அவையில் நடவாத ஒரு நிகழ்வினை, நடந்ததாகக் கூறி வாதம் செய்திருக்கிறார். 'செய்த தவறுக்கு வருத்தமாவது தெரிவிக்கிறீர்களா?' என, விசாரணை செய்த உரிமைக் குழுவில் இருந்த பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் கேட்டனர். வருத்தம் தெரிவிக்க மாட்டோம் எனப் பிடிவாதமாக அவர்கள் கூறினார்கள். பேரவையின் உரிமைக்குழு, இவர்களின்



செயல்கள் அவையின் உரிமை மீறல்தான் என்று முடிவு செய்து, தண்டனை வழங்க அவைக்குப் பரிந்துரை செய்தது. பேரவை அதனைப் பரிசீலனை செய்து, பரிந்துரைகள் ஏற்றுக்கொண்டு, தக்க தண்டனை வழங்கப் பேரவையின் தலைவருக்கு அனுமதி அளித்தது.

அதன் அடிப்படையில், தாங்கள் புரிந்துள்ள அவையின் உரிமை மீறல் செயலுக்காக, வருத்தம் கூடத் தெரிவிக்க மறுத்த நிருபர் மீதும், வர மறுத்தவர் மீதும், வந்திருந்து உண்மைக்குப் புறம்பாக, தான் எழுதியது தான் சரி என்று வாதிட்டவர்கள் மீதும், நடவடிக்கை எடுத்து, பேரவைத் தலைவர் தண்டனை வழங்கினார். இதுதான் நம் தமிழகச் சட்டப் பேரவையில் நடந்தது. இதில் நான் எவ்வகையில் பொறுப்பாளியாக முடியும்? உண்மை இவ்வாறிருக்க, பத்திரிகைச் சுதந்திரம் தமிழ்நாட்டில் பறிக்கப்படுகின்றது; நசுக்கப்படுகின்றது; என என் பெயரை இழுத்து, திட்டமிட்ட விஷமப் பிரச்சாரத்தைச் செய்து வருகிறார்கள் என்றால்... இவர்களுக்கான தண்டனையை நீங்கள் தான் கொடுக்க வேண்டும்.

பேரவையின் மீது பழி சுமத்தப் பட்டது; அவை உறுப்பினரின் உரிமைகள் மீறப்பட்டன; அவையின் முடிவுகள் மதிக்கப்படவில்லை என்றால், அது மாபெரும் குற்றமாகும். அதனைச் சட்ட ரீதியாகத் தட்டிக் கேட்கக்கூடாது என்று வாதிட்டால், அதை என்ன என்று சொல்வது? அந்த வாதத்திற்குப் பல பத்திரிகைகளும் உறுதுணையாகச் சென்று உதவும் நிலை, தற்பொழுது நமது நாட்டில் நிலவுகின்றது என்றால், இதனை எப்படி நியாயப்படுத்துவது?

இந்தக் கட்டத்தில் தமிழகப் பெருமக்களுக்கு நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். தமிழகச சட்டமன்றப் போவையின் முடிவு, மக்களாகிய உங்களின் முடிவு. உங்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஜனநாயக அரசியல் அமைப்பில், உங்கள் பிரதிநிதியாக, உங்கள் நலன் காக்க, சட்டமன்றத்தில் உங்களுக்காக வாதாட உள்ள உங்கள் பிரதிநிதிகள், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகள். அவர்களின் உரிமைகள் மீறப்பட்டன என்றால், அச்செயல் மக்களாகிய உங்கள் உரிமைகள் மீறப்பட்டதாகத்தான் பொருள்படும்.

சட்டப் பேரவையில் முடிவை மதிக்காமல் எதிர்ப்பவர்கள், உங்களை எதிர்ப்பவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்திட வேண்டும். பத்திரிகைச் சுதந்திரத்தைக் காக்க வேண்டியது அரசின் கடமை.

அதே நேரத்தில் தரம் தாழ்ந்த பத்திரிகைகளில் வெளியிடப்படும் பொய்களையும், அவதூறுகளையும், தட்டிக் கேட்க வேண்டிய கடமையும் அரசிற்கு உண்டு. அவ்வாறு கேட்கும்பொழுது, அதனை எப்படிப் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப் பட்டது என்று கூற முடியும்?

எனவே, இன்று என்னையும் - தமிழக அரசையும், எப்படியேனும் தரம் தாழ்ந்து விமரிசிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், இப்பிரச்சினையைச் சிலர் பெரிதுபடுத்தி வருகிறார்கள் என்பதைத் தவிர, வேறொன்றுமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தமட்டில், மக்கள் சேவைக்கெனவே என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளதால் - எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாது, உங்களுக்கான நற்பணிகளை ஆற்றிட, உங்களை நோக்கி ஓடோடி வந்துள்ளேன்.

எங்களைக் குறை கூறி வருவோருக்கும் - எங்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்பதை, எங்களது செயல்பாடுகள் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதே தூத்துக்குடிப் பகுதியில், மத்திய அரசு 225 கோடி ரூபாய் முதலீட்டில், Titanium மற்றும் Zirconium தொழிற்சாலை ஒன்றை நிறுவத் திட்டமிட்டு இருந்தது.

அத்தொழிற்சாலை, தூத்துக்குடியை மட்டுமல்ல, நமது மாநிலத்தைவிட்டே சென்றுவிடக்கூடிய ஓர் அபாயகரமான சூழ்நிலை தான், நாங்கள் ஆட்சிக்கு வந்தபொழுது, பழைய ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இங்கே அத்தொழிற்சாலை அமைப்பதற்காக எடுக்கப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்கள் சிலர், உயர் நீதிமன்றத்தில் நில எடுப்புக்கு எதிராக தடையாணை பெற்று, அதனால் அத்தொழிற்சாலையினைத் தொடங்க முடியாத ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அப்பேர்ப்பட்டோருக்கு உடந்தையாக, பழைய

ஆட்சியாளர்கள் இருந்தனர் என்றால், எவ்வளவு பெரிய வெட்கக்கேடு என்பதை நீங்கள்தான் கூற வேண்டும்.

ஆனால், நாங்கள் எடுத்த தனி முயற்சியின் காரணமாக, ஒரு மாதக் காலத்திலேயே அந்தத் தடை ஆணைகளை நீக்கி, அவ்வழக்கில் அரசுக்குச் சாதகமான முடிவு கிடைக்கச் செய்தோம். இன்று, அந்த நிலம், மத்திய அரசிடம் ஒப்படைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதன் தொடக்கப் பணிகள் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன என்றால், அது உங்களின் அன்பான ஆதரவோடு, உங்கள் அரசு எடுத்த துரிதமான நடவடிக்கைகளினால் தான் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதேபோல, இன்னொரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நேற்று இரவு, மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு. பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தமிழகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து இருந்த சுமார் 2,000 கோடி ரூபாய் செலவிலான Aromatic Complex நிறுவுவதற்கான மத்திய அரசின் அனுமதியை அமைச்சரவை அளித்து உள்ளது என்ற இனிய செய்தியைத் தெரிவித்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தேன்.

மத்திய, மாநில அரசுகளுக்கிடையே இணக்கமான, சுமுகமான உறவு என்றென்றும் பாதுகாக்கப்படும் என்ற நிலையை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், ஸ்பிக் நிறுவனத்துடன் கூட்டாக இந்த National Aromatics and Petrochemicals Corporation Limited நிறுவனத்தை நிறுவுவதற்கு 1988 முதல் முயற்சி எடுத்து வந்தது.

தமிழகத்தில் தொய்வடைந்திருந்த தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் கொடுத்தோம் என்று தற்பெருமை அடித்துக் கொண்ட முந்தைய அரசு இந்த மகத்தான தொழில் நிறுவனத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான முயற்சியையும் எடுக்கவில்லை. மக்களின் ஏகோபித்த நம்பிக்கையை யும், ஆதரவையும் பெற்ற எங்கள் அரசு ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு மத்திய அரசிடம் தேங்கிக் கிடந்த அனுமதிக் கடிதங்கள் மற்றும் உரிமங்களை விரைவில் வழங்கக்கோரி பாரதப் பிரதமருடன் கலந்து உரையாடினேன்.

குறிப்பாக NAPCO நிறுவனத்திற்கு அனுமதியை விரைவில் அளிக்க வேண்டும் என்று கடிதங்கள் மூலமும், நேரிலும் பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்தினேன். எங்கள் கோரிக்கையின் நியாயத்தையும், அவசியத்தையும் உணர்ந்த மத்திய அரசு இன்று NAPCO நிறுவனத்தைத் தொடங்க அனுமதி அளித்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் தமிழகத்திற்கு முதல்முறையாகக் கிடைத்த மிகப் பெரிய தொழிற்சாலை இதுதான் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்நிறுவனம் தமிழகத்தின் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதனால் தமிழகத்தில் ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். மேலும் இதன் தொடர்புடைய மற்ற சிறுதொழில்கள் வளர்வதன் மூலம், பல சிறு தொழிற்சாலைகள் தொடங்கவும் இது வழி வகுக்கும். Purified Terephthalic Acid Ortho Xylene மற்றும்Benzene போன்ற ரசாயனப் பொருட்களைப் பெட்ரோலியத்திலிருந்து தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையை அமைக்க 1987-ஆம்

ஆண்டு நிலவரப்படி 1,386 கோடி ரூபாய் முதலீடு தேவை எனக் கணக்கிடப்பட்டது. ஆனால் தற்போது ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் அளவு உயர்ந்துள்ளது. இதுபோன்று மேலும் பல அனுமதிக் கடிதங்களையும், உரிமங்களையும் வழங்குவதோடு மட்டுமன்றி மத்திய அரசு தானே முன் வந்து மத்திய அரசின் முதலீட்டை அதிகரித்து பல பெரிய தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டில் தொடங்க வேண்டுமென்று நான் தொடர்ந்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்துவேன் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திற்கு இத்திட்டத்தை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களுக்கு, மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியினை என் சார்பாகவும், உங்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம் 20.10.1986 அன்று, புரட்சித் தலைவர் 'எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டது. ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆகியும், இதுவரை இந்த மாவட்டத்திற்கென, ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கூட கட்டப்படவில்லை. விந்தை என்னவென்றால், இதற்கென முந்தைய அரசு, 1989-ஆம் ஆண்டில் ஒரு பெரும் விழாவையே நடத்தி, அடிக்கல் நாட்டினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு, மக்கள் சென்றுவரப் போக்குவரத்து வசதி கூட இல்லாத ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், பணியைத் தொடங்காமல் விட்டுச் சென்றார்கள். இன்று உங்கள் அரசு, அது மக்களின் நலம் காக்கும் அரசு என்பதால், அந்த நிலையை முற்றிலுமாக மாற்றி, சிப்காட் வளாகத்திலேயே, துறைமுகச்சாலைக்கு மிக அருகிலேயே, இப்பகுதி மக்கள் அனைவரும் வசதியாகச் சென்றுவரும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இதர மாவட்ட நிர்வாக அலுவலகங்கள், மற்றும் அவர்களுக்கான வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், அனைத்தையும் 420 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க முடிவு செய்துள்ளது என்ற நல்ல செய்தியினை, உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் போதிய பேருந்து வசதி, இரயில் போக்குவரத்து, மற்றும் கப்பல் போக்குவரத்துக்கள் இருந்தாலும், இங்குள்ள மக்களின், அதிலும் குறிப்பாக பல தொழில் அதிபர்கள், மற்றும் வணிகப் பெருமக்களின் நெடுநாளைய கனவு, இன்று இந்த விமான நிலையத்தைத் தொடங்கி வைப்பதன் மூலம் நனவாகிறது. விமான நிலையத்தைத் திறந்து, விமானப் போக்குவரத்தைத் தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய மத்திய அரசிற்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடித் துறைமுகத்தின் விரைவான வளர்ச்சிக்கு, அன்று வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான். 2,500 ஏக்கர் நிலத்தினை இலவசமாக மத்திய அரசிடம் கொடுத்து, இத் துறைமுகத்தைத் தமிழகத்திற்கு வாதாடிப் பெற்றவர், பேரறிஞர் அண்ணா அவர்கள்

இத்துறைமுகத்தின் வளர்ச்சிக்கு மிக்க தொடர்புடையது சேதுசமுத்திரம் திட்டம். 1860-ஆம் ஆண்டு, (Taylor) எனும் ஆங்கிலேயக் கப்பற்படைத் தளபதியால் வகுக்கப்பட்ட திட்டமே. சேதுசமுத்திரத் திட்டம். அன்றே அதனைச் செயல்படுத்தி முடித்திருந்தால், ஐம்பது இலட்சம் ரூபாய் தான் செலவாகியிருக்கும். ஆனால், இன்று அத்திட்டத்தை நிறைவேற்ற 400 கோடி ரூபாய்க்கும் மேல் செலவு ஏற்படும் நிலையில் உள்ளது. மாறிவரும் பொருளாதாரச் சூழ்நிலையில், இன்று 400 கோடி என்பது, ஒரு மிகப் பெரிய தொகை அல்ல. சேதுசமுத்திரத் திட்டத்தால், நாட்டின் கடலோரப் பாதுகாப்பு பன்மடங்கு உயரும்.

பல பெரிய கொள்ளளவு கொண்ட வெளிநாட்டுக் கப்பல்கள், தூத்துக்குடித் துறைமுகத்தைத் தொட்டுச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டு, அந்நியச் செலாவணி அதிகரிக்கும். இதனால் கப்பல் போக்குவரத்தும் கணிசமாக அதிகரிக்கும். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், மத்திய அரசு தயக்கம் காட்டுவதுதான், ஏன் என்று விளங்கவில்லை! எனவே, நாட்டின் பாதுகாப்பையும், தமிழகத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற, மத்திய அரசு முன்வர வேண்டும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என, எங்கள் அரசு வலியுறுத்தும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று 630 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் நான்காவது, மற்றும் ஐந்தாவது பிரிவுகளையும், தொடங்கி வைக்கும் நல்வாய்ப்பும் எனக்குக் கிட்டியுள்ளது. இவை ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகளாகும். ஏற்கெனவே உள்ள 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளுடன் சேர்த்து, மொத்தம் 1,050 மெகாவாட் மின்சாரம் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திற்குக் கிடைக்கவிருக்கிறது. தேசிய அளவில், உற்பத்தித் திறனில் பல்வேறு விருதுகளைப் பெற்ற, நமது தூத்துக்குடி அனல்மின் நிலையம், மேலும் பல சாதனைகளைப் புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இன்று இந்த விழாவில், இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தரும், 'இறால்' ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம், ஏழு கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள, 160 கிலோமீட்டர் கடலோரப் பகுதிகளில், இந்த இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இம்மாபெரும் விழா நிகழ்ச்சி மூலம் மட்டும், ஏறத்தாழ 700 கோடி ரூபாய்க்கான திட்டங்கள், இன்றுதொடங்கி வைக்கப்படுகிறது என்பதை, மெத்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏழை, எளிய மக்கள் பயன் பெறும் வகையில், 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நேரடி உதவிகள், இன்று வழங்கப்படுகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற, மக்களின் நம்பிக்கைக்குரிய, மக்களின் தேவைகளை நிறைவேற்றும், மக்களுக்குரிய அரசாக, எங்கள் அரசு திகழ்கிற காரணத்தால் தான், தென் மாவட்ட மக்களைப் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாக்கத்தக்க, 'மதுரை-மணியாச்சி-தூத்துக்குடி' மீட்டர் கேஜ் ரயில்பாதையை அகற்றும் திட்டத்தைக் கைவிடுங்கள் என, மத்திய அரசை இம்மாநில அரசே பெரிதும் வற்புறுத்தி, சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அகல ரயில் பாதையை மட்டும் வைத்துக்கொண்டு, மீட்டர் கேஜ் ரயில் பாதையை அகற்றும் திட்டம்,



• உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்கள்தான்.

—கதே

அப்படியே நடைமுறைப் படுத்தப்பட்டால், 9 ரயில்கள் ரத்து செய்யப்பட வேண்டியதோடு, சென்னைக்குச் செல்லும் மற்றும் திரும்பி வரும் பயணிகள், 104 கிலோ மீட்டர் தூரம் சுற்றிப் பயணம் செய்ய வேண்டியதோடு, ரயில் கட்டணச் செலவும் அதிகமாகிற சூழ்நிலை உருவாகும்.Meter Gauge Line -ஐ, அப்புறப்படுத்தாமல், அப்படியே வைத்துக் கொண்டு, Broad Gauge Line -ஐ தனியாக அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. சட்டப்பேரவையிலும், இதே கருத்தை நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன். மீட்டர் கேஜ் ரயில்பாதை அகற்றப்படாமல் இருக்க, மாண்புமிகு பாரதப் பிரதமரையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வேன், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெறும் பேச்சோடு மட்டும் நின்றுவிடுகிற அரசல்ல, மக்கள் அரசாகிய உங்கள் அரசு. நிதிச்சுமை, மாநில அரசை அழுத்துகிற நேரத்திலும், கடன் சுமை, விவசாயிகளை அழுத்திடக் கூடாது என்பதற்காக, மனிதாபிமானத்திற்கு மதிப்பளித்து, அண்மையில் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்யாத வகையில், சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் மூலம் வாங்கியிருந்த குறுகிய கால, மற்றும் மத்தியக் காலக் கடன்களுக்கு உரிய வட்டி, மற்றும் அபராத வட்டியினை, அரசே விவசாயிகளுக்கு வழங்குகிற ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கடன் தொகை யில் அசலை மட்டும் அவர்கள் கட்டினால் போதும், என்கிற நிலைமை உருவாக்கப்பட்டு, கடன் சுமையால், விவசாயிகளின் முதுகெலும்பை முறித்துவிடக் கூடாது, என்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம், கடன் சுமையால் தவிக்கும் விவசாயிகளுக்கு, நேரடியாக 69.07 கோடி ரூபாய் வழங்கிட உள்ளோம். இதன் மூலம், 13 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள், என்கிற நிம்மதியை நாங்கள் பெற்றுள்ளோம். இந்த நிம்மதியை உங்களுக்கு நான் வழங்குவேன் என்று நீங்கள் நம்பினீர்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாத வகையில், நாங்களும் செயல்பட்டு வருகிறோம். இதுதான் எனக்கும், மக்களுக்கும், இந்த அரசுக்கும் உள்ள உறவு. இது தெரியாமல், என்மேல், வேண்டுமென்றே, உண்மைக்குப் புறம்பாகவும், அரசுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும், சிலர் பேசி வருகிறார்கள், எழுதியும் வருகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையே சண்டைக்கு இழுக்கிறார்கள்.

நீதிக்குத் தலை வணங்கத்தான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாரே ஒழிய, அநீதிக்குத் தலை வணங்க, அவர் என்றுமே எனக்கு அறிவுரை கூறியதில்லை. அப்பேர்ப்பட்ட இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அடியொற்றி, அவரின் வாரிசாக, ஆட்சி நடத்தி வரும் நான், இந்த விழாவின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திக்கிற வாய்ப்பு பெற்றதற்காக, மகிழ்ச்சியடைகிறேன், பெருமிதம் கொள்கிறேன்; பெருமை அடைகிறேன்!

இந்த மாபெரும் விழாவினை மிக மிகக் குறுகிய காலத்தில், சீரும் சிறப்புமாக ஏற்பாடு செய்த அனைவருக்கும், எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல்மின்நிலையப் பணியாளர்களுக்குப் புதிதாக யூனிட் 4 மற்றும் 5 ஆகிய இரண்டையும் இயக்கி வைக்க வழங்கப்படும் ஊக்கத் தொகையாக (Commissioning Incentive) ரூ.75 இலட்சம், 2,500 பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்ப்பினை நல்கிய மத்திய அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், இங்கு கடலெனத் திரண்டு வந்து, விழாவினைச் சிறப்பித்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். ●

ஏதேனும் ஒரு குடியிருப்பு மனையில் வீடு கட்டுவதானால்

வீடு கட்டுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை



மனை:

மனையானது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் அங்கீகரிக்கப் பட்டு, மனை அமையும் உள்ளூராட்சியின் ஒப்புறுதி பெறப்பட்டதாயும் இருக்க வேண்டும்.

அணுகு பாதை:

மனைக்கான அணுகுபாதையாக உள்ளூராட்சியின் பராமரிப்புக்கு ஏற்கப்பட்ட தாக அமைய வேண்டும்.

கட்டடத்தைச் சுற்றிலும் விடப்பட வேண்டிய திறவிடங்கள் மற்றும் ஏனைய விதிகள்:
குறைந்தபட்சப் பரப்பு:

தொடர் கட்டடப் பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் 80 ச.மீட்டர் அளவிலும், பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதியாயின் சென்னை நகருக்குள் 20 ச.மீட்டர் அளவிலும், ஏனைய பெருநகர் வளர்ச்சி எல்லைக்கு 40 ச.மீட்டர் அளவிலும், மேற்சொன்னவாறு அறிவிக்கப்படாத பகுதியில் 150 ச.மீட்டர் அளவிலும் இருக்க வேண்டும்.

மனையின் அகலம்:

தொடர் கட்டடப் பகுதியில் 4.5 மீட்டர் ஆகவும், பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாயின் 4 மீட்டர் அளவிலும், ஏனைய பகுதிகளில் 6 மீட்டர் அளவிலும் அமைதல் அவசியம்.

	ஜார்ஜ் டவுன் மற்றும் தொடர் கட்டடப் பகுதி	சென்னை நகரத்தின் ஏனைய பகுதிகள் நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகள்:	சென்னைப் பெருநகர் குழும எல்லைக்குட்பட்ட முதல் இரண்டு பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள்.
மனையில் கட்டக் கூடிய கட்டடத்தின் மொத்தப்பரப்பு:	1.75	1.50	1.25
மனையில் கட்டக்கூடிய தரைத் தளப்பகுதி:	65%	60%	55%

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாயின் 75%

அதிகப்பட்ச உயரம்:

சாதாரணமாக அணுகுபாதையின் அகலத்தைப் போல் ஒன்றரைப் பகுதி.

முன் பக்கத்திறப்பிடம்:

	சாலையின் அகலம்	**விடவேண்டிய அளவு**
	30 மீட்டருக்கு மேல்	6 மீட்டர்
1.5 மீட்டர்	15 மீட்டருக்கு மேல் 30 மீட்டருக்குள்	4.5 மீட்டர்
அனைத்துச் சாலைகளுக்கும்	10 மீட்டருக்கு மேல் 15 மீட்டருக்குள்	3 மீட்டர்
	10 மீட்டருக்குக் கீழ்	1.5 மீட்டர்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியாகச் சாலை அகலம் எவ்வளவாக இருப்பினும் 1 மீட்டர் விட வேண்டும். சாலைக்குக் கட்டட வரிசை அளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பின் அந்த அளவுக்கு முன் பக்கத்திறவிடம் விட வேண்டும்.

பின்பக்கத் திறப்பிடம்:

	மனையின் நீளம்	**விடவேண்டிய அளவு**
15 மீட்டர் வரை	1.5 மீட்டர்	
ஏதும்	15 மீட்டருக்கு மேல்	
தேவையில்லை	30 மீட்டருக்குள்	3 மீட்டர்
	30 மீட்டருக்கு மேல்	4.5 மீட்டர்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதியில் பின் பக்கத்திறவிடம் ஏதும் விட வேண்டியதில்லை.

பக்கத்திறப்பிடம்:

ஏதும் தேவையில்லை	1.5 மீட்டர் ஒவ்வொரு பக்கத்திலும் ஏதேனும் ஒரு பக்கத்தில் 3 மீட்டர் திறவிடம் விட்டு ஒரு பக்கம் எல்லையை ஒட்டிக் கட்டடம் அமைக்க விரும்பினால், ஒட்டிக் கட்டப்படவிருக்கும் பக்கத்தில் பக்கத்து மனை சொந்தக்காரரிடமிருந்து மறுப்பின்மைச் .சான்றிதழ் பெற வேண்டும். பொருளாதாரப் பின்தங்கிய பகுதியில் ஏதேனும் ஒரு பக்கம் 1 மீட்டர் திறவிடம் விட்டால் போதுமானது.

மேற்கண்ட விதிகள், உதாரணத்திற்காகக் காட்டப்படுகிற விதிகளின்படி தேவையான வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளைப் புத்தகத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கொண்டு தகவலுக்கு, தகவல் மற்றும் ஆலோசனை மையத்தை அணுகவும். திட்ட அனுமதியுடன் உள்ளூராட்சியின் கட்டட உரிமமும் பெற வேண்டும். அனுமதியின்றிக்கட்டப்படும்கட்டடங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதியின்றி கட்டடம் கட்டுவதைத்தவிர்த்துச் சிக்கல்களை தவிர்ப்பது சாலச் சிறந்தது.

நூல் நயம்

புலவர் இளஞ்செழியன் கவிதைகள்

ஆசிரியர்: புலவர் இளஞ்செழியன்
வெளியீடு:
மலர்மாமணி பதிப்பகம்,
9, சிவராமன் தெரு,
சென்னை-600 005.

பக்கம்:168 விலை:ரூ.25/-

முதல் கவிதையே நூலுக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது. தமிழ்மொழிகுறித்துக் கவிஞர் கொஞ்சு தமிழில் கவிதை படைத்திருப்பது அருமை. காதல், கல்வி, சமுதாயம் ஆகிய தலைப்புகளில் கவிதைக் கனிகள் இனிக்கின்றன. ஆழ்ந்த தமிழ்ப் புலமை ஒவ்வொரு கவிதையிலும் இழைந்திருக்கிறது. அருமையான கவிதைத் தொகுப்பு.

தமிழில் பூத்த தாழம்பூ

ஆசிரியர்: அருணா பொன்னுசாமி
வெளியீடு:
திரு.வி.க. மன்றம்
அண்ணா நகர்,
கரூர்-639 002.

பக்கம்:104 விலை:ரூ.15.50

தமிழ்மணம் கமழும் 'தாழம்பூ'த் கவிதை, நூலின் தலைப்பாய் விளங்குகிறது. இதேபோல, சமுதாயம் குறித்தும் கவிஞர் பல கருத்து மணிகளைக் கோர்த்து, படிப்போர் இதயத்தில் இடம் பிடிக்கிறார்.

அன்றாட வாழ்வில் அறிவியல்

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்
வெளியீடு:
ரவி பதிப்பகம்,
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:312 விலை:ரூ.36/-

சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுத முடியும்? உடல் வ...மாக இருந்தால் தான், உருப்படியான செயல்களைச் செய்ய முடியும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்நூல். அன்றாட வாழ்வில் நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய பல அறிவியல் குறிப்புகள் பொதிந்துள்ளன.

கவிதைக் கனிகள்

ஆசிரியர்: அகரம் பெருமாள் மைந்தன்,
வெளியீடு:
பிரபாவதி பப்ளிகேஷன்ஸ்,
88, எல்.ஜி.பி.லைன்,
புதுப்பேட்டை, சென்னை-2.

பக்கம்:112 விலை:ரூ.14/-

சிந்தனையின் சிதறல்கள் கவிதைகளாக உருவெடுத்திருக்கின்றன. தமிழ் மொழி, நாடு, பெண்ணுரிமை ஆகியவற்றோடு இயற்கைக் காட்சிகள் குறித்தும் இதயம் திறந்து பாடுகிறார் ஆசிரியர்.

மாறிவரும் சமுதாயத்தில் மகளிர்

ஆசிரியர்: கோக்கோதை
விற்பனை உரிமை:
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
சென்னை-600 005.

பக்கம்: 81 விலை:ரூ. 15/-

இளஞ்சமுதாயம் முன்னேறவும், பெண் சமுதாயம் மறுமலர்ச்சி பெறவும் நல்ல பல கருத்துக்களைக் கூறும் ஆசிரியர், பெண்கல்வி, பெண் உரிமை, தாய் மொழிக் கல்வி முதலான கருத்துக்களையும் அலசி ஆராய்கிறார்.

சூரிய நாற்றுகள்

ஆசிரியர்: ரவீந்திர பாரதி
வெளியீடு:
தி நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
பிரவேட் லிமிடெட், சென்னை-98.

பக்கம்:60 விலை:ரூ.6/-

புதுக்கவிதைகளின் அழகிய தொகுப்பு. பாரதியைப் பற்றிக் கூறுகையில்,
'இந்தப் பூமியில்
முளைத்து
வானத்தை பிடிக்கும்
கவிதை மலை'
என்கிறார் கவிஞர்.

திருவள்ளுவரின் நல்வழிக் கதைகள்

ஆசிரியர்: முருகானந்தன்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94.

பக்கம்:96 விலை:ரூ.12/-

வாழ்வாங்கு வாழ வழிவகை சொன்னவர் வள்ளுவர். அவரது கருத்துக்கள் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது கதை வடிவில். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் படிக்கலாம்.

புற்றுநோயைத் தடுக்க சித்த வைத்தியம்

ஆசிரியர்: சீதாராம் சுப்பிரமணியம்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு),
சென்னை-600 094.

பக்கம்:96 விலை:ரூ.12/-

மனிதனை வருத்தும் நோய்களுள் புற்றுநோயும் ஒன்று. இது எப்படி ஏற்படுகிறது? ஆரம்ப அறிகுறிகள் என்ன? என்பது குறித்த தகவல்களுடன், இந்நோயைச் சித்த மருத்துவ முறைபடிக் குணமாக்கும் வழிவகை குறித்தும் கூறுகிறது இந்நூல்.

கவிஞர் போற்றும் அம்பேத்கர்

தொகுப்பாசிரியர்: புலமைதாசன்
வெளியீடு:
புலமைப் பதிப்பகம்,
10, பார்த்தசாரதி சந்து,
சென்னை-600 005.

பக்கம்:128 விலை:ரூ.25/-

சமுதாயத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கரின் அருமை பெருமைகளை விளக்கிடும் கவிதைத் தொகுப்பு. பக்கத்துக்குப் பக்கம் கவிதைகள் அண்ணலின் அரிய பணிகளைப் பறை சாற்றுகின்றன.

—பொ. மறைமலை.

அறிஞர் அண்ணா ஒரு சகாப்தம்

ஆசிரியர்: பூவை அமுதன்
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.14/-

பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளோடு, அவர் ஆற்றிய அரும்பணிகளும் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன எளிய, இனிய நடை.

வர்மக் கலையும் வைத்தியமும்

ஆசிரியர்:
டாக்டர் சீதாராம் சுப்பிரமணியம்
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:128 விலை:ரூ.16/-

போர்க் கலைகளில் ஒன்று வர்மக் கலை. சித்தர்களால் உருவாக்கப்பட்ட இதை, எப்படியெல்லாம் மருத்துவ ரீதியாகப் பயன்படுத்தலாம் என்பது படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில்

குடிநீர்த்திட்டப் பணிகள்

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களில் 4,553 கைப் பம்புகள் இரண்டு இந்திய மார்க் ஆழ்துளைக் கிணறுகள் உள்ளன. இவற்றுள், நீர் ஆதாரமின்மையால் 229 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்றவையாக உள்ளன. 258 பம்புகள் வறட்சி காரணமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் சிறு பழுதுகள் 48 மணி நேரத்திற்குள் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விசைப் பம்புகள்

இம்மாவட்டத்தில் 1,059 விசைப் பம்புகள் உள்ளன. இவற்றுள் 138 பம்புகள் நிரந்தரமாகப் பயனற்று உள்ளன. பிற பம்புகளில் ஏற்படும் பழுதுகளான மோட்டார் ரீவைண்டிங், ஸ்டார்ட்டர் ரிப்பேர் போன்றவை ஐந்து நாள்களுக்குள் பழுது நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை முன்கூட்டியே எதிர்நோக்கி, குடிநீர்ப் பிரச்சினைகளைச் சமாளிக்க தற்போது மாவட்டத்தில் நிலவும் குடிநீர்த் தேவைகளைக் கருத்தில் கொண்டு குடிநீர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.301.063 இலட்சம் நிதியுதவி கோரி அரசுக்குச் செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்தொகையைக் கொண்டு 440 புதிய ஆழ்துளைக் கிணறுகள், 91 பைப் லைன் விரிவாக்கப் பணிகள், 213 ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்தும் பணிகள், 177 மாற்று ஆழ்துளைக் கிணறுகள், 1 திறந்தவெளிக்கிணறு, 43 திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், பழைய நீர்த்தேக்கங்களைத் தூர் வாருதல், 2 தனி பீடர் லைன் அமைத்தல், 53 பம்பு செட்டுகள் நிறுவுதல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் ஆகிய பணிகள் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்த் தேவையை நிறைவேற்ற முதல் தவணையாக அரசு, இம்மாவட்டத்திற்கு ரூ.41 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இத்தொகையைக் கொண்டு ரூ.25 இலட்சம் செலவில் 100 ஆழ்துளைக் கிணறுகள், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஆழ்துளைக் கிணறுகளைத் தூர் வாருதல், ரூ.2 இலட்சம் செலவில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைத்தல், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் திறந்தவெளிக் கிணறுகளை ஆழப்படுத்துதல், ரூ.5 இலட்சம் செலவில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் வழங்குதல்,

அறிஞர் சொல்...

• ஒழுக்கம் என்பது சொல்லுகிறபடி நடப்பதும், நடந்தபடி சொல்லுவதுமே ஒழிய தனிப்பட்ட குணங்கள் அல்ல.

—தந்தை பெரியார்

மரம் தனக்காகப் பழுப்பதில்லை
ஆறு தனக்காக ஓடுவதில்லை
சான்றோர் தமக்காக வாழ்வதில்லை.

—குருநானக்

• முயற்சியை எவனொருவன் எப்பொழுது கைவிடுகிறானோ, அப்பொழுது அவன் சக்தி அற்றவனாக விடுகின்றான்.

• ஒரு நாட்டின் நாகரிகத்தை அளக்கும் கோல் அதன் மக்கள் தொகையோ, நகரங்களின் பரப்பளவோ, செல்வத்தின் மிகுதியோ அல்ல. அதில் பிறக்கும் மனிதரின் சிறந்த குணமே ஆகும்.

—எமர்சன்

ரூ.4 இலட்சம் செலவில் பைப் லைன்கள் விரிவாக்கம், ரூ.3 இலட்சம் செலவில் புதிதாக மாற்றுக் குழாய்கள் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இம்மாவட்டத்தில் வறட்சிக் காலத்தில் வேலை இல்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின்கீழ், நீர்ப்பாசனக் குளங்கள், பழுதுபார்த்தல், தூர் வாருதல், கசிவுநீர்க் குட்டைகள் தூர் எடுத்தல், குறுக்கு அணைகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.202.82 இலட்சம் அரசிடம் ஒதுக்கீடு செய்யக் கோரி செயல் குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளது.

செயல் திட்டம்

மாவட்ட அளவிலும், கோட்ட அளவிலும், நகராட்சி அளவிலும், பேரூராட்சி அளவிலும், ஊராட்சி ஒன்றியங்கள் அளவிலும் குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கச் செயல் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் 8 முதல் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்படும். மண்டலங்கள் ஒவ்வொன்றும் ஒரு விரிவாக்க அலுவலரின் தலைமையில் ஊர்நல அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி மன்ற உதவியாளர்கள் உதவியுடன் செயல்படும். இவர்கள், கிராமங்களில் உள்ள நீர்நிலை ஆதாரங்களைத் தினமும் சோதனையிட வேண்டும். குடிநீர் விநியோகத்தில் ஏதேனும் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடனே வட்டார வளர்ச்சி அலுவலரின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். அல்லது அவசரக் காலப் புகார் புத்தகத்தில் பதிந்து வைக்க வேண்டும். புகார்ப் புத்தகத்தில் பொதுமக்களும் குறைகளை எழுதி வைக்கலாம். கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகள் 48 மணி நேரத்திலும், விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகள் ஐந்து நாள்களிலும் சரிபடுத்தப்படும்.

கோட்ட அளவில், வெள்ளிக்கிழமைதோறும், கோட்ட வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவர்கள், பம்ப் மெக்கானிக்குகள், உதவிப் பொறியாளர் (விசைப் பம்பு பராமரிப்பு) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தைச் சார்ந்த நடமாடும் குழுமம் (Mobile Squad) ஆகியோர் குடிநீர் விநியோகம் பற்றி ஆய்வு செய்வர். தவிரவும், கோட்ட வளர்ச்சி அலுவலரும் ஒரு புகார்ப் புத்தகம் பராமரித்து குடிநீர் விநியோகத்தை உன்னிப்பாகக் கண்காணிப்பார்.

பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், செயல் அலுவலர்கள், புகார் புத்தகம் பராமரித்தும், மாலை நேரங்களில் தெருக் குழாய்களைப் புலத் தணிக்கை செய்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளும் குடிநீர் விநியோகப் பணிகளைக் கவனித்து வருவார். மாவட்டப் பேரூராட்சிகளின் அலுவலர் குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணித்து வருவார்.

நகராட்சிகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நகராட்சியும், நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நகராட்சி ஆணையர், சுகாதார அலுவலர், நகராட்சிப் பொறியாளர், நகர்ப்புறத் திட்ட அலுவலர் ஆகியோரின் தலைமையின்கீழ் குடிநீர் விநியோகப் பணிகள் கண்காணிக்கப்படும். அவர்களும் புகார்ப் புத்தகங்களைப் பராமரித்து வருவார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் குடிநீர் விநியோகப் பணிகள் பற்றிய அறிக்கை அளிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவற்றை ஆய்வு செய்வார்.

குடிநீர் விநியோகப் பணிகளில் கண்காணிப்பு முறையை மேலும் நெறிப்படுத்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பேரூராட்சிகளுக்கும் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மண்டல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் விரிவான சுற்றுப்பயணம் செய்து, குடிநீர் விநியோகப் பணிகளைக் கண்காணிப்பார்கள்.

எம். பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்

வாழ்வு தரும் வசம்பு

- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

பல ஆண்டுகளாகவே நமது முன்னோர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் வீட்டில் உள்ளவர்களுக்கு வேண்டிய மருத்துவத்தைத் தாங்களே செய்து வந்துள்ளனர். 'பாட்டி வைத்தியம்' என்பது இப்படிப்பட்ட குடும்ப வைத்திய முறையேயாகும். இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய நம் முன்னோர், இயற்கையில் கிடைக்கும் மூலிகைத் தாவர வர்க்கங்களின் பயனை அறிந்து, அவற்றை உடல் பிணிகளுக்கான மருந்துகளாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இப்படிப்பட்ட மூலிகைகளில் வசம்பும் ஒன்று.

வசம்பு இந்தியா, பர்மா, வட அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் விளையக்கூடிய ஒரு விதப் பூண்டு இனம். இதன் இலை பசுமையான நீண்ட ஓலைகளாகக் காணப்படுகிறது. இதன் தண்டின் மேல் சற்று சாம்பல் படிந்த நிறம் இருக்கும். இதன் வேரைத்தான் 'வசம்பு' என்கிறார்கள். வசம்பிற்கென்று ஒருவிதத் தனி மணமுண்டு. இது வாணிப ரீதியிலும் பயிர் செய்யப்படுகிறது.

தீரும் நோய்கள்

இரத்த பித்தம், இரணப்புண்கள், வாய்நாற்றம், சூலை, கால் ஆணி, முப்பிணி, இருமல், ஈரல் நோய்கள், யானைக் கால், வயிற்றில் காணப்படும் புழு எல்லாவிதமான நஞ்சுகள், வாயு, சொறி-சிறங்கு, செரியாமை, பேதி, வயிற்றுப் பொருமல் போன்ற நோய்களைப் போக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு.

குழந்தைகளுக்கு வரும் இருமல், சளி, காய்ச்சல், வயிற்று நோய் அகல, வசம்புடன் அதிமதுரத்தைச் சேர்த்துக் காய்ச்ச வேண்டும். காய்ச்சியவுடன் இறக்கி வடிகட்டி, அந்த நீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

தொண்டைக் கம்மல், இருமல் நீங்க வசம்புத் துண்டைச் சிறிதளவு வாயில் போட்டுச் சுவைத்தால் வாயில் நீர் பெருகும். அப்போது ஒருவித அனல் எழும்பும். இதனால் தொண்டைக் கம்மல், இருமல் ஆகியவை நீங்கும்.

பசியின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு இரண்டு தம்ளர் நீரை நன்றாகக் காய்ச்சி, அது கொதிக்கின்றபோது சிறிது வசம்பு போட்டு ஊற வைத்து, பிறகு வடிகட்டி, அந்த நீரைப் பருகவேண்டும். அத்துடன் குழந்தைகளுக்கு உண்டாகும் பேதி, காய்ச்சல் ஆகியவற்றையும் இது தடுக்கும்.

நாள்பட்ட கீல்வாத நோய்களுக்கு-காசுக்கட்டியுடன் சிறிது வசம்பும் சேர்த்து நீர்விட்டு அரைத்துப் பற்றுப்போட நாளடைவில் கீழ்வாத நோய் நீங்கும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி வரும் மாந்தம், இழுப்பு, வயிற்று நோய் ஆகியவற்றிற்கு, வசம்புத்துண்டு ஒன்றை நெருப்பில் சுட்டு எடுத்தால் கரியாகும். இந்தக் கரித்தூளுடன் தேன் கலந்து குழந்தையின் நாக்கில் தடவ வேண்டும்.

வயிற்றுப் பொருமல் நீங்க-சிறிதளவு வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி, அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் (ஆமணக்கு எண்ணெய்) ஆக மூன்று எண்ணெய்களையும் சிறிய அளவில் கலந்து குழைத்து அடிவயிற்றில் பூச, வயிற்றுப் பொருமல் நீங்கும்.

விஷக் காற்று ஏற்பட்டால், விஷக் காற்றால் நோய்கள் பரவும்; அக்காலத்தில் கொஞ்சம் வசம்பை எடுத்து வாயில் போட்டு மெல்லுவது உடலுக்கு நல்லது.

செரியாமை, உடல் வலிகள், மந்தம்; மந்தக் காய்ச்சல், வயிற்றுப் பொருமல் ஆகியவற்றிற்கு வசம்பு, பெருங்காயம், அதிவிடயம், திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய்த்தூள், இந்துப்பு ஆகியவற்றை நம் உபயோகத்திற்குத் தகுந்தாற்போல் வாங்கி, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, அம்மியில் தட்டித் தூள் செய்து எடுத்துக் கொள்ளவும். நமக்கு வேண்டிய போது அத்தூளில் சிறிது எடுத்து வாயில் போட்டுத் தண்ணீர் அருந்த நாளடைவில் நோய்கள் நீங்கி நலம்பெறும்.

குழந்தைகளின் வயிற்று நோய்க்கு வசம்பைச் சுட்டுக் கரியாக்கி, தாய்ப் பாலில் இழைத்து நாவில் தடவினால் குழந்தைகளின் வயிற்றுவலி தீரும்.

நாள்பட்ட வெள்ளை நீங்க, வெள்ளைக் குங்கிலியம் 18 கிராம், காசுக்கட்டி 5 கிராம், மேல்தோல் நீக்கிய பூண்டு 5 கிராம், வசம்பு 5 கிராம் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து அம்மியில் வைத்து இடித்து, அரைப் படி நல்லெண்ணெய்யில் போட்டுச் சூரியபுடம் வைத்து வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் 15 நாள் சாப்பிட நாள்பட்ட வெள்ளை நீங்கும். குறிப்பு: பத்தியம் - ஆவின்பால், நெய், தயிர் சேர்க்கவும்.

திக்குவாய் குணமாக, சிறிது வசம்பை எடுத்துச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து, சிறிது தூளைத் தேனில் குழைத்து, அதிகாலையில் தினமும் உட்கொண்டு வந்தால், திக்குவாய் குணமடையும். குறிப்பு: தொடர்ந்து ஒரு மண்டலம் (40 நாட்கள்) சாப்பிட்டு வந்தால் குணமடைவது நிச்சயம்.

கால் ஆணி மறைய, மஞ்சள் 5 கிராம், வசம்பு 5 கிராம், இரண்டையும் அம்மியில் வைத்து, கைப்பிடியளவு மருதாணி (மருதோன்றி) இலையையும் சேர்த்து நீர்விட்டு, மை போல அரைத்து, கால் ஆணி உள்ள இத்தில் அடைபோலக் கனமாக வைத்து, மேலே ஒரு வெற்றிலையை வைத்துத் துணியினால் இறுகக் கட்டிவிட வேண்டும். படுக்கும்முன் இதைச் செய்ய வேண்டும். இதே மாதிரி தொடர்ந்து அரை மண்டலம் (20 நாட்கள்) வரை கட்டி வந்தால் கால் ஆணி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். ஆனால், இதைத் தினமும் புதியதாகவே அரைத்துக் கட்டவேண்டும்.

காலரா பேதி நிற்க, வசம்பு 10 கிராம் எடுத்து சுத்தம் பார்த்து ஒரு

பாத்திரத்தில் போட்டு அதில் போதுமான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு காய்ச்சி ஊறவைத்து எடுத்து வடிகட்டி அருந்த காலரா என்ற தொத்து நோய் வராமல் தடுக்கலாம். மேலும், காலரா நோய் கண்டவர்கள் 15 நிமிடத்திற்கு ஒரு முறை இவ்வாறு அருந்திவரும் பட்சத்தில் பேதி நின்று நலம் காணும்.

மேலும், இதே செய்முறையை முறைக் காய்ச்சல், துர்மலம், வயிற்றுப் பொருமல், அஜீரணம், வாதநோய்கள், சொறி-சிரங்கு ஆகியவற்றிற்கும் தரலாம். சிறுவர்களுக்கு இதில் பாதி அளவு தரவேண்டும். இவ்வாறு செய்தால் இந்த நோய்கள் நீங்கி நலம் பெறலாம்.

நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய்நாற்றம் நீங்க, வசம்புத் துண்டை எடுத்துத் தூளாக்கிப் பொடி செய்து வைத்துக் கொண்டு 3 கிராம் அளவு எடுத்து வாயில் போட்டுச் சுவைத்து வெந்நீர் அருந்த நாளடைவில் நரம்புத் தளர்ச்சி மற்றும் வாய் நாற்றம் ஆகியவை நீங்கி நலம் பெறும்.

முளை மூலத்திற்கு வசம்பு 10 கிராம், பிரதமண்டிக் கிழங்கு 10 கிராம், மிளகு 5 கிராம், இவற்றை அம்மியில் வைத்துத் தூள் செய்து ஒரு புட்டியில் சேமித்து வைத்துக் கொள்ளவும். காலை- மாலை, திரிகடிப்பிரமாணம் - அதாவது (மூன்று விரல்களால் சேர்த்து எடுக்கும் அளவு) எடுத்து வாயில் போட்டு நீர் அருந்த, நாளடைவில் முளை மூலம் கரைந்து நலமாகும். குறிப்பு: புளி, கடுகு, நல்லெண்ணெய் ஆகாது. உப்பு வறுத்துச் சேர்க்கவும். புளி சுட்டுச் சேர்க்கவும்.

நாய் ஈ காதில் புகுந்தால் அது சாவதற்கு மருந்து வசம்பு, தொட்டாற் சுருங்கி, வெங்காயம், மூன்றை நசுக்கி காதில் பிழிந்தால் காதில் புகுந்த ஈ சாகும்.

நமைச்சல், சொறி நீங்க, இந்துப்பு 35 கிராம், எடுத்துத் தூள் செய்து வசம்பு 9 கிராம் தூள் செய்து, இரண்டையும் கலந்து வெண்ணெய் போட்டுக் குழைத்துக் காலையில் உடம்பு முழுவதும் பூசி, பகலில் சியக்காய் தேய்த்துக் குளித்து வந்தால் நாளடைவில் நமைச்சல், தடிப்பு, சொறி ஆகியவை நீங்கும்.

வசம்புக்கென ஒருவித நறுமணம் உண்டு. உடலிலுள்ள தொற்றுக் கிருமிகளை அழித்து, உடலில் தங்கிய நஞ்சுகளையும் முறிக்கும் ஆற்றல் வசம்பிற்கு உண்டு. வசம்பை ஆங்கிலத்தில் Glucoside Aeorinஎன்பார்கள். வசம்பு ஒரு குழந்தை ஸ்பெஷலிஸ்ட் மூலிகை. தமிழகத்தின் பல வீடுகளில் வசம்பு வளர்க்கப்படுவதைக் காணலாம். வசம்பு உண்மையில் ஒரு வாழ்வு தரும் மூலிகையே ஆகும்!

வெப்பம் தணிக்கும் வேப்ப மரம்!

வெப்பம் தணிக்கும் வேப்ப மரம். ஆம். இது அம்மை நோய் தீர்க்கும் மரம்.

வேப்ப மரம் எக்காலத்திலும் பசுமையாகக் காட்சியளிக்க கூடிய ஒரு சிறந்த மரம். இது பொதுவாக 14 முதல் 16 மீட்டர் உயரமும் 3 முதல் 4 மீட்டர் சுற்றளவும் வளரக்கூடிய மரமாகும். இதன் இலைகள் மார்ச், ஏப்ரலில் உதிரத் தொடங்கும். இம்மரத்தின் மூலம் ஊடுருவி சுத்தப்படுத்தப்பட்டு வரும் காற்று பல நோய்களை தீர்க்கக் கூடியதாகும். இது ஓர் நல்ல நிழல் கொடுக்கும் மரம் ஆகும்.

வளரும் இடம்:

தென்னகத்தில் சாதாரணமாக எல்லா இடங்களிலும் வளர்கின்றது. குளிர்ப் பிரதேசங்களில் இது வளராது. கடல் மட்டத்திலிருந்து 1000 மீட்டர் வரை உயரமுள்ள இடங்களில் எத்தகைய வெட்ப நிலையிலும் எல்லாவித மண்ணிலும் வளரக் கூடியது. எனினும் சிறப்பாக களி மண்ணிலும் கரிசல் நிலங்களிலும் நன்கு வளரும். வறண்ட ஆழம் குறைந்த கற்கள் நிறைந்த மண்ணிலும், சுக்கான் மண்ணிலும், மற்ற எந்த மரங்களையும் விட பசுமையாக வளரக் கூடியது. நீர் தேங்கி இருக்கும் இடங்கள் இதற்கு உகந்ததல்ல. ஆண்டுக்கு 450 மி. மீட்டரிலிருந்து 1,100 மி.மீட்டர் வரை மழை கிடைக்கும் இடங்களில் இம்மரம் வளரக்கூடியது.

வளர்க்கும் இடம்:

வரப்பு ஓரங்களிலும், கிணற்று மேடுகளிலும், வீட்டு வளாகத்திலும், தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும் மேய்ச்சல் தரைகளிலும் இதை கலபமாக வளர்க்கலாம். இதை விவசாயப் பயிர்களுடன் நட்டுப் பயன் பெறலாம்.

விதை சேகரம், மரம் வளர்ப்பு முறை:

ஜூன் முதல் ஆகஸ்டு வரை பழங்கள் கிடைக்கும். பின்னர் தரமான மரங்களிலிருந்து விதைகளைச் சேகரித்து 15 தினங்களுக்குள் நேரடியாக விதைகளை ஊன்றியோ அல்லது நாற்றங்காலில் நாற்று விட்டு, கன்றுகளாகவோ நடலாம். பாலிதீன் பைகளில் விதைகள் ஊன்றியும் கன்றுகள் வளர்க்கலாம். 3 மீட்டர் இடைவெளிகளில் 30 செ.மீ. கன சதுரக் குழிகள் எடுத்து 15 நாட்கள் ஆறப்போட்டு ஓரிரண்டு மழை கிடைத்தவுடன் "ஆடிப்பட்டம் தேடி விதை" என்னும் பழமொழிக்கு இணங்க கன்றுகளை நடுவது சிறப்பானது.

பயன்கள்:

இம்மரத்தின் இலைகள், பூக்கள், பட்டைகள் நோய் தீர்க்கும் இயற்கை மருந்தாகும். இம்மரத்தை நோய் தீர்க்கும் மரம் என கூறலாம். இம்மரம் கட்டட வேலைகளுக்கும் மரச்சாமான்கள் செய்யவும், வேளாண்மைக் கருவிகள் செய்யவும் பயன்படுகின்றது. இம்மரத்தின் விதைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய், சோப்பு மற்றும் பற்பசை செய்யவும் பயன்படுகின்றது. சமீப காலங்களில் வேப்பெண்ணெய் கலந்து பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயப் பயிர்ப் பாதுகாப்புக்கும் பயன் படுத்தப்படுகிறது.

அறிவுச்சுடர்

தொலைக்காட்சி

நாம் நாள்தோறும் தொலைக்காட்சியை ரசித்துப் பார்க்கிறோம். அது எப்படி நம் வீட்டிலுள்ள தொலைக் காட்சிப் பெட்டியில் தெரிகிறது?

தொலைக்காட்சி நிலையத்தினுள் ஒலி, ஒளிபரப்பப் படும் அலைகள் காற்றிலுள்ள ஈதர் மூலம் வந்து நம் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டியுடன் இணைக்கப் பட்டிருக்கும் ஏரியலில் மோதுகிறது. அவை ஈர்க்கப்பட்டு, தொலைக்காட்சிப்பெட்டியில் ஒளியைக் காண்கிறோம். ஒலியைக் கேட்கிறோம்.

பூமி அதிர்ச்சி

இப்பொழுதெல்லாம் உலகின் பல பாகங்களில் பூமி அதிர்ச்சி ஏற்படுவதைக் காண்கிறோம். ஏன், சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் கூட சிறு பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிகிறோம். அது எதனால் ஏற்படுகிறது?

பூமிக்கு அடியில் ஏற்படும் சில நில மாறுதல்கள் காரணமாகப் பக்கவாட்டிலும், செங்குத்தாகவும் நெகிழ்வுகள் ஏற்படுகின்றன. இதனால் பூமி இலேசாக உள்ள இடத்தை உடைத்துக் கொண்டு மண் சூடான திரவமாக வெளிவருகின்றது. சில சமயங்களில் திரவம் வெளிவராமல் நில நடுக்கம் ஏற்படும். இதையே பூமி அதிர்ச்சி என்கிறோம். இது சில நொடிகள் இருந்தாலும் ஏற்படும் விளைவு மிகப் பயங்கரமானது. பூமி அதிர்ச்சி, ஜப்பான், இந்தோனேசியா, துருக்கி, இத்தாலி போன்ற நாடுகளில் அதிகம் ஏற்படுகிறது.

இந்தியாவில் முக்கிய தாதுப்பொருட்களும் அவைகள் கிடைக்கும் இடங்களும்

அலுமினியம்,		
தோரியம்	-	கேரளா
ஆஸ்பெஸ்டாஸ்	-	மைசூர்
பாக்லைட்	-	பீகார், மகாராஷ்டிரம்
துத்தநாகம்	-	இராஜஸ்தான்
யுரேனியம்	-	பீகார்
நைட்ரேட்	-	பீகார், உத்திரப் பிரதேசம்
மைகா	-	பீகார், தமிழ்நாடு
வெள்ளி	-	மைசூர், பீகார், தமிழ்நாடு
சலவைக்கல்	-	ஜெய்ப்பூர்
மாங்கனீசு	-	மத்தியப் பிரதேசம்
லிக்னைட்	-	நெய்வேலி (தமிழ்நாடு)
தாமிரம்	-	பீகார், இராஜஸ்தான்
சீனக்களிமண்	-	இராஜஸ்தான், பீகார்
சிமெண்ட்	-	மத்தியபிரதேசம், இராஜஸ்தான்

— தொகுப்பு: ஸ்வீட்லின் பிரபாகரன்



சாலைகள் ஓரம் மரம் வைப்போம்!
சாலவும் போற்றி அதைக்காப்போம்!
ஆலைகள் சுற்றி மரம் நடுவோம்
ஆர்வமாய்க் காத்து வளர்த்திடுவோம்!
மேலை நாடும் வியப்புறவே
மேவியே மரங்களைக் காத்திடுவோம்!
சோலைகள் சூழும் நாடாக
சோதரரேநாம் மரம் வளர்ப்போம்

காற்றிலும் மாசுகள் சேராது
காட்டிலும் விலங்கினம் அழியாது
தூற்றிடும் காற்றால் மண்வளமும்
தூரப்பறந்தும் போகாது!
ஆற்றிலும் நீர்வளம் குறையாது
அணைகளில் வறட்சி நிலவாது!
மாற்றமும் மண்மேல் நிகழாது
மணல்வெளி, அரிப்பும் தோன்றாது!

ஆலைப் புகையும் தெளிவடையும்
ஆகாயத்தும் குளிர் நிலவும்
நூலை நூற்கும் ஆலையிலும்
நூதன நச்சும் பரவாது!
வேலைப் பஞ்சம் ஒழிந்து விடும்!
வேண்டிய மழையும் பொழிந்துவிடும்!
காலை மாலை எப்போதும்
கார்முகில் வானில் தவழ்ந்தோடும்!

ரயில் பயணம்

• இந்திய மக்கள் தொகையில் 1.2 சதவீத மக்கள் நாள்தோறும் ரயில் பயணம் செய்கின்றனர். சரக்கு, பயணியர் போக்குவரத்து ஆண்டுதோறும் ஐந்து சதவிகிதம் அதிகரித்து வருகிறது. 63,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மீட்டர் கேஜ் மற்றும் குறுகிய ரயில்பாதையில் 45 சதவிகிதத்தினை அகல ரயில்பாதையாக மாற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதில் 6,000 கிலோ மீட்டர் நீளம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அகல ரயில்பாதையாக மாற்றப்படும். ஆண்டுதோறும் 700 கிலோ மீட்டர் இருப்புப்பாதை மின்மயமாக்கப்பட்டு வருகிறது. 3,000 கிலோ மீட்டர் நீளத்துக்கு ரயில் பாதை ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப்பதே என் வாழ்நாள் நோக்கம்!

''வெளிச்சம்'' மது விலக்குப் பிரச்சார நாடக அரங்கேற்ற விழாவில்

மாண்புமிகு முதல்வரின் உரை

தமிழக அரசு ரூ.2 இலட்சம் செலவில் தயாரித்த 'வெளிச்சம்' என்ற மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தின் அரங்கேற்ற விழா, சென்னை மியூசிக் அகாடெமி கலையரங்கத்தில் 1.5.1992 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, இந்த மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மதுவிலக்குப் பிரச்சாரத்துக்குத் திரைப்படமும், நாடகமும் சக்திவாய்ந்த சாதனங்கள், வீடியோக்கள் மூலமும், இசைப்பாடல்கள், கேசட்டுகள் மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரத்தைப் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரப்ப ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

வரவேற்புக்குப் பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உள்துறைச் செயலர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் பொன்னாடை அணிவித்தார். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர்- செயலர் நடிகர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றிப் பேசுகையில், இந்த 'வெளிச்சம்' மதுவிலக்குப்

விமர்சனம்:

வெளிச்சம்

நேஷனல் தியேட்டர்சின் 'வெளிச்சம்' என்னும் மதுவிலக்குப் பிரச்சார நாடகம், சென்னை மியூசியம் அகாடமியில் அரங்கேறியது.

குடியின் கொடுமையை மையமாக வைத்துக் கதை சித்திரிக்கப்பட்டிருக்கிறது. 'வேதம் புதிது' கண்ணன் இதன் கதை வசனம் பாடல்களை எழுதியுள்ளார். முதல் முறையாக நாடகத்துக்கு இசையமைத்துள்ளார் குன்னக்குடி வைத்தியநாதன். நடன அமைப்பு இந்திரா ராஜன். நாடகத்தை இயக்கி, தயாரித்திருப்பவர், நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர்.

வாத்தியார் ஒருவரின் மகன் பெருங்குடிகாரன். அவன் மனைவி அவனைத் திருத்த முற்படுகிறாள். அந்த ஊரில் உள்ள அயோக்கியன் ஒருவன் கள்ளச்சாராயம் காய்ச்சி ஊர் மக்களையே கெடுக்கிறான். இந்த இரு திறத்தாருக்கும் நடக்கும் மனப் போராட்டங்களை உருவகப்படுத்தும் கதையே இந்நாடகம்.

முதல் காட்சியில் இடம் பெறும் 'கும்மியடி பெண்ணே கும்மியடி' எனும் குழு நடனம் நாடகத்துக்கு முத்தாய்ப்பாக விளங்குகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சும் காட்சி, தத்ரூபமாகக் காட்டப்பட்டிருக்கிறது. சாராயத்தைக் குடித்துவிட்டு வீதியிலே விழுந்து கிடக்கும் காட்சியும், அதையொட்டிய பாடலும் பொருத்தமாக உள்ளன.

இடையே இந்திய அன்னை பேசுகின்ற இனிய குரலும், அதையொட்டிய காட்சியமைப்புகளும் அருமை.



இந்நாடகத்தில் வரும் வாத்தியார், ஒரு நேர்மையான பாத்திரம். நடிப்பில் அதோடு ஒன்றி விடுகிறார். 'அப்பன் காந்தியவாதி... மகன் பிராந்தியவாதி...' என்று தந்தை (வாத்தியார்) மகனிடம் பேசும்போது அவரது ஏக்கம் தொனிக்கிறது. நல்ல நடிப்பு. அவரது மகனாக வரும் பெருங்குடியன், தோற்றத்திலும் சரி, வசன அமைப்பிலும் சரி அனைவரையும் கவர்ந்து விடுகிறார். அவரது மனைவியாக வருபவரும் - முதலில் வங்கி அலுவலராகவும், பிறகு காவல்துறை அதிகாரியாகவும் வந்து அசத்தி விடுகிறார்.

பரம்பரை நகையை மருமகளிடம் கொடுக்க, அதைச் சமயம் பார்த்து குடிகாரக் கணவன் திருடிச் செல்ல 'மோசம் பண்ணிட்டானே! என்று தந்தை (வாத்தியார்) புலம்ப... இந்த ஒரு காட்சி போதும் குடிகாரர்களின் மனத்தை மாற்ற!

'மகன் குடியின் பழககத்திலிருந்து விடுபட வேண்டும். அவன் மற்றவர்களைப் போல நல்லவனாக வாழ வேண்டும். அவன் மனம் திருந்த வேண்டும்' என்பதில் தந்தைக்கு இருக்கும் அதே உறுதி, அவன் மனைவிக்கும் இருப்பதைக் கதையோட்டத்திலே காண முடிகிறது. அந்தத் தளராத உறுதியே அவர்களது தன்னம்பிக்கைக்கு உரமூட்டுகிறது.

இடையிலே வரும் நாட்டாண்மைக்காரர், வங்கி மேலதிகாரி போன்றவர்கள் நடிப்பில் சோடை போகவில்லை.

'குடிகாரனுக்கு மனைவியாக இருப்பதே ஒரு கொடுமைதான்' என்பதைச் சொல்லாமல் சொல்ல வைக்கிறது அந்தப் (குடிகாரனின் மனைவி) பாத்திரம்.

அதற்கு மெருகேற்றும் வகையில் அவர் திறம்பட நடித்திருக்கிறார்.

குடிகாரனின் மனைவி வங்கி அலுவலராகப் பணியில் சேர்ந்து பிறகு படித்து, காவல்துறை அலுவலராகப் பதிவியேற்றபின், 'அம்மா! நீ மதுவை ஒழிக்க உறுதி எடுத்துக்கணும்!' என்று மாமனார் ஆணையிட' மருமகள் அதை ஒரு சவாலாக ஏற்று வீறு நடைபோடும் போதும்-

அடிபட்ட மகனுக்கு ரத்தம் செலுத்த நீ 48 மணி நேரம் குடிக்காமல் இருக்க வேண்டும் என்று தந்தை மன்றாடும் போதும்-

கட்டிய மனைவி காலைப் பிடித்துக் கொண்டு, குடிக்க வேண்டாம் என்று கதறிக் கதறி அழுகிற போதும்-

வாத்தியார், அடிபட்டு மயங்கிக் கிடக்கும் சிறுவனைக் கையிலேந்தி, தன் மகன் காலிலே கிடத்தி, மகன் காலையே பிடித்துக் கண்ணீர் சிந்துகின்ற காட்சியின் போதும் - நம் இதயம் கனக்கின்றது; இமைகள் நனைகின்றன.

இறுதியில் - தந்தையின் மனஉறுதி தாரத்தின் தன்னம்பிக்கை வெற்றி பெறுகிறது. ஆம், அவன் கணவனின் கண்கள் திறக்கின்றன. அவன் தன் தவறை உணர்கிறான்.

தன் தாயின் படத்தின் முன்னே நின்று, 'இனிமே நான் குடிக்கமாட்டேன்!' என்று உறுதி ஏற்கிறான். அந்த உறுதிமொழியிலே, அந்தக் குடும்பத்தினரின் விழிகளிலே மட்டுமல்ல, நம் விழிகளிலேயும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கிறது!

கருத்துக்கினிய காட்சி அமைப்புகள், கண்ணுக்கு இனிய ஒளி அமைப்புகள், காதுக்கினிய இசையமைப்பு எல்லாவற்றுக்கும் மேலாக நாடக இயக்கத்தோடு இழைந்த நாடக அமைப்பு - இவையனைத்தும் பாமர மக்களின் நெஞ்சிலே பதியத்தக்க வகையிலே இருப்பது இந்நாடகத்தின் தனிச்சிறப்பு!

மதுவின் மயக்கத்திலே, மனைவி மக்களை உதறித் தள்ளி இருளிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற ஏழை எளியவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது, தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான 'வெளிச்சம்'. — பி.வி. கிரி

பிரச்சார நாடகத்தை 160 காட்சிகளுக்குக் குறையாமல் தமிழ்நாட்டில் நடத்த வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றுகையில், 'முதன்முதலில், மதுவிலக்குக் கோப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையொப்பமிட்டு ஆட்சியைத் தொடங்கினார்' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி 'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். உரைக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த மதுவிலக்குப் பிரச் சார நாடகக் கலைஞர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

விழா முடிவில் தமிழக அரசின் உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

'வெளிச்சம்' மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இறுதி வரை பார்த்தார்.

விழாவில் மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு க. பொன்னுசாமி உட்பட, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதல்வர் உரை

தமிழக அரசின், மதுவிலக்குப் பிரச்சார மேடை நாடகமான, 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்ற விழாவில் கலந்துகொண்டு, அதைத் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞராகத் திகழும், 'நாடகக் காவலர்' திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள், இந்த நாடகத்தினை உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். அவரது நாடகங்களின் சிறப்பையும், பெருமையையும், தமிழக மக்கள் பல ஆண்டுக் காலமாகவே நன்கு அறிவார்கள். மக்களை விரைந்து கவர்ந்திழுக்கும் கவர்ச்சி பெற்ற திரைப்படங்களுக்கு நிகராக, நாடகங்களை நோக்கி, மக்களை ஈர்த்து வரவழைத்த ஆற்றல் பெற்றவர் அவர்.

மாபெரும் சாதனை

விஞ்ஞான முன்னேற்றம் அடையாத காலங்களில், மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் மாபெரும் சாதனங்களில், நாடகம் தலையாயதாகக் கருதப்பட்டதோடு, கூத்து, கும்மி, ஒயிலாட்டம் போன்ற நாடோடிக் கலைகளின் பரிணாம வளர்ச்சியாகவும், நிறைவு பெற்ற கலை, நாடகமாகும். நாடகக் கலை மட்டும் அழிந்து போயிருந்தால், இன்றைய தினம், கிராமியக் கலைகளைத் தேடிப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பது, அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

அப்படிப்பட்ட நாடகக் கலையே, இப்போது அழிந்து கொண்டு வருகிற பின்னணிக்குத்

ஒலி-ஒளி மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரம்!

நாடகம், திரைப்படம் ஆகிய வற்றின் மூலம் தற்போது மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்படும் மது விலக்குப் பிரச்சாரத்தை ஒலி-ஒளிப் பேழைகளின் (ஆடியோ-வீடியோ கேசட்டுகள்) மூலமும் தொடரு வோம்.

முதல் கட்டமாக, தற்போது பிரச் சார நாடகம் அரங்கேறுகிறது. காந்தி அடிகள் பிறந்த தினத்தன்று பிரச் சாரத் திரைப்படம் வெளியாகும். அதன்பிறகு இசைப் பாடல்கள், நிகழ்ச்சிகள் அடங்கிய ஒலி-ஒளிப் பேழைகளின் மூலமும் பிரச்சாரம் தொடரும்.

- 'வெளிச்சம்' நாடக அரங்கேற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர்.

தள்ளப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம், High Technique பயன்படுத்தப்படும் நவீன சினிமா, டி.வி. போன்ற சாதனங்களின் வருகைதான் என்றால், அது மிகையாகாது. விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி அக்கலைகள் வெற்றிபெற்று வந்தா லும், தத்ரூபமாகப் பார்க்கும்போதும், நேருக்கு நேராக நாடகக் கலையை ரசிக்கும்போதும் தான், நாடகக் கலைக்கு இவைகளையெல்லாம் மீறி, இயற்கையாகவே உள்ள உயிரோட்டம், நமக்குத் தெரிய வரும்.

பாடம் உண்டு படிப்பினை உண்டு!

ஒரு காட்சியை, நிகழ்ச்சியை, திரைப்படம் எடுக்கும்போது, சரியாக அமையாவிடில், மீண்டும் எடுத்து நிறைவு செய்யலாம். ஆனால், நாடகத் தைப் பொறுத்தவரையில், மக்களுக்கு முன்னே தோன்றும்போது, ஒத்திகைக்கோ, திரும்பத்திரும்ப ஓடிவந்து நடிப்பதற்கோ சந்தர்ப்பம் இருக்காது. ஆகவே, நாடகம், ஒரு நடிகருக்கு மக்களுக்கு முன்னே தரப்பட்ட ஒரே சந்தர்ப்பத்தில், தனது திறமையைப் பதிவு செய்து, பாராட்டுப் பெறும் பழங்கலையாகும் என்பதே, சரியான விளக்க மாகும். அப்படிப்பட்ட திறமை மிக்க நடிகர்களை உருவாக்கி, மக்களுக்குச் சொல்லவேண்டிய கருத் துக்களை, எடுப்பான முறையில் எடுத்துச் சொல் லும் திறமை, திரு ஆர்.எஸ். மனோகருக்கு இருந்ததால் தான், இந்த நாடகத்தை உருவாக்கும் பெரிய பொறுப்பு, அவருக்கு வழங்கப்பட்டது. அவர் புராண இதிகாச நாடகங்களை நடத்தும் போது, நம்மை எல்லாம் அக்காலத்திற்கே அழைத் துச் சென்றுவிடுவார். கற்கால நிகழ்ச்சியைத் தற்காலத்திற்குக் கொண்டுவர அவரால் முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், அவரது நாடகத்தில் பாடம் உண்டு, படிப்பினை உண்டு, வேடிக்கை உண்டு, விஷயம் உண்டு, இனிமை உண்டு, இன்பம் உண்டு - எல்லாமே உண்டு.

எனவேதான் 'அரசுக்கு, அதுவும் மக்களுக்குப் பாடஞ்சொல்லுகிற மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு என, ஒரு நாடகத்தை ஆக்கித் தாருங்கள்; அனைத்து மக்களையும் கவரும் அந்த சமுதாயப் பணியில், உங்களை உடனே ஈடுபடுத்திக் கொள் ளுங்கள்', எனக் கேட்டுக் கொண்டேன். அந்தக் கோரிக்கையின் நிறைவேற்றம் தான், இன்றைய 'வெளிச்சம்' நாடகத்தின் அரங்கேற்றம். எனது வேண்டுகோளை ஏற்று, இந்த நாடகத்தை உரு வாக்குவதில் அவர் காட்டிய ஈடுபாடு, எடுத்துக் கொண்ட முயற்சி, அவரது உழைப்பு, உத்வேகம், என்னை வெகுவாகக் கவர்ந்தது. திரு ஆர்.எஸ். மனோகர் அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள 'வெளிச்சம்', ஓர் வெற்றிகரமான நாடகமாக அமையும் என்பதில், எனக்கு எவ்வித ஐயப்பாடும் கிடையாது.

மது அரக்கனை ஒழிக்க...

எங்கள் அரசு, தமிழக மக்களின் பேராதரவு டன் ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடன் ஏழை எளிய தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்கும் முகத் தான், மலிவுவிலை சாராயத்தை அறவே ஒழித்தது. அதிரடி நடவடிக்கைகள் பல மேற்கொண்டு, கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், விற்பனை செய்வதையும், வெகுவாகத் தடுத்தோம். இச் செயல்களில் ஈடுபட்டோரின் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுத்தோம். இப்பணியை இன் றும் தீவிரமாகத் தொடர்கிறோம். ஒரு அரக்கனைக் கொல்லுவதற்கு, பல்வேறு வியூகங்கள் வகுப்பது போல, இந்த மது அரக்கனை ஒழிக்க, மேலும் பல்வேறு முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

இருப்பினும், இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்றால், குடிப்பழக்கத் திற்கு அடிமையாகியுள்ளவர்கள், தாங்களாகவே முன் வந்து, இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட வேண்டும். குடியால் ஆட்கொள்ளப்பட்டவர் களின் மன நிலையே, மாறுபட்டதாக உள்ளது. குடிப்பழக்கத்தால் ஏற்படும் அவமானம், அவர் களிடம் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்துவ தில்லை. அரசு சட்ட திட்டங்களினால் இதனைக் கட்டுப்படுத்தினாலும், உற்றார் உறவினர்கள் எடுத்துக் கூறினாலும், இந்தத் தீய பழக்கத்தைக் கைவிட, அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

எனவே, உண்மையிலேயே ஒருவர் குடிப் பழக்கத்தைக் கைவிட வேண்டுமென்றால், அதற்கு மனமாற்றம் தேவை. மற்றவர்களின் அறிவுரை களாகவோ, போதனைகளாகவோ இல்லாமல், அவர்களே தங்களின் நிலையை அறிந்து, உணர்ந்து, ஒரு முடிவிற்கு வந்தால்தான், இத்தீய குடிப் பழக்கத்தை மறக்க முடியும். கைவிட முடியும் என்பது, கண்டறியப்பட்ட உண்மை. அந்த நிலையை மக்களிடையே உருவாக்க, அதற்குரிய

நிலையை உண்டுபண்ண, மக்களின் மனதைத் ...டும், அவர்களது மனநிலையை மாற்றியமைக் ... சக்தி படைத்த மக்கள் தொடர்புச் சாதனங் ...ா, சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற ...ற்சியின் விளைவுதான், இப்போது தயாரிக்கப் ...டுள்ள நாடகம்.

...க நல்லா இருக்கணும்!

தற்போது திரைப்படங்களும், நாடகங்களும், ...ச நிகழ்ச்சிகளும், பொதுமக்களின் மனதைத் ...டும் மகத்தான சாதனைகளை நிகழ்த்தி வரு ...றன. இப்படி, சக்தி படைத்த விளம்பரச் ...னங்களை, மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற் ...த்தும் முயற்சிகளில், தேவையான அளவு ஈடு ...த்த வேண்டும் என்ற கருத்தில் தான், அரசு ...விலக்குப் பிரச்சார நாடகம் ஒன்றையும், ...ரப்படம் ஒன்றையும் தயாரித்து வெளியிட ...வு செய்து, அந்த முயற்சியில் தீவிரமாக ...ங்கியது.

நேற்றைய முன்தினம் சென்னையில் நடந்த, ...க நல்லா இருக்கணும்' என்ற அரசின் மது ...க்குப் பிரச்சாரத் திரைப்படத்தின் தொடக்க ...ாவில் கலந்து கொண்டேன். இன்று 'வெளிச்சம்' ...க அரங்கேற்ற விழாவில் கலந்து கொள் ...றன். மக்கள் நல்லா இருந்தால்தான், அவர் ...து வீட்டுக்குள் வெளிச்சம் வரும். வீட்டில் ...ளிச்சம் இருந்தால்தான், நாட்டில் சுபிட்சம் ...ளையும் என்பது, எனக்கு நன்றாகவே தெரியும். ...கவே தான், இருட்டைக் குறை சொல்லுவதை ..., ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைப் ...த, எனது வாழ்நாள் நோக்கமாக எண்ணி, ...ன் செயல்பட்டு வருகிறேன்.

...ழகம் முழுவதும்...

இரண்டு இலட்ச ரூபாய் செலவில் தமிழ்நாடு ...ரசு தயாரித்து, இன்று இங்கே அரங்கேறும் இந்த ...வளிச்சம்' நாடகத்தை, தமிழகம் முழுவதிலும் ...த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நாடகத்தின் மூலம், குடிப்பழக்கத்திற்கு ...ளானவர்கள் மனம் திருந்தி, ஒரு வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதால், அனைத்து இடங்களிலும் இந்த நாடகத்தை இலவசமாக நடத்த, அரசு முடிவு செய்தள்ளது. இதற்காக அரசிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டாலும், இந்தச் செலவையும் ஏற்று, இந்த நாடகம் தடையின்றி எங்கும் நடைபெற முடிவு செய்துள்ளோம். ஏனெனில், தமிழகத்தில் பூரண மதுவிலக்கு வேண்டும் என்ற எங்களின் கொள்கையை எளிதில் செயல்படுத்த, இந்த முயற்சியும் தனது பங்கினைச் செலுத்தும் என்று திடமாக நம்புகின்றேன்.

கருத்தூட்டமிக்க இந்த இனிய நாடகத்திற்கு, வயலின் சக்கரவர்த்தி திரு குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள் இசை அமைத்துள்ளார். கலை மாமணி திருமதி இந்திரா ராஜன் அவர்கள் இந்த நாடகத்திற்கு நடனம் அமைத்துக் கொடுத்திருக் கிறார். வேதம் புதிது கண்ணன் அவர்கள் கதை, வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். பல்வேறு திறமையாளர்களின் கூட்டுத் தயாரிப்பாக உரு வெடுத்துள்ள இந்த நாடகம், தகுதியில் எந்த அளவுக்குத் தனித்தன்மை பெற்றதாக இருக்கும் என்பதை, நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

வாழ்க்கையில் வெளிச்சம் வீச

மேலும், தலைசிறந்த நாடகக் கலைஞர்கள் பங்கு பெறும் இந்த 'வெளிச்சம்' நாடகத்தை, மக்கள் பார்த்துப் பயன் பெறுவதோடு, நாடகத்தின் மூலம் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கு வலிவு சேர்க்கிற பணியில், தாங்கள் அயராது ஈடுபடு வார்கள் என நம்புகிறேன். அரசின் இந்த முதல் முயற்சி மாபெரும் வெற்றியாக அமையும், குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மத்தியில் மாபெரும் மனமாற்றத்தை ஏற்படுத்தும், அவர்கள் வாழ்க்கையில் 'வெளிச்சத்தை' வீச உதவும், என்ற என் கருத்துக்களை மீண்டும் தெரிவித்து, இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

- நிகழ்ச்சித் தொகுப்பு
ஜே. சந்திரன்

• தூண்டில் மீனைப் பிடிக்கும் தொழிலில் இந்தியா ஏழாவது இடத்தை வகிக்கிறது. நமது நாட்டில் 56 சதவீத மக்கள் மீன் சாப்பிடுகின் றனர். மீன் சாப்பிடும் மக்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 0.6 சதவீதம் அதிகரித்து வரு கிறது. தனி நபர் ஒருவருக்குத் தேவைப்படும் சராசரி மீன் உணவின் எடை ஆண்டொன்றுக்கு 10 கிலோவாகும். ஆனால், கிடைக்கும் மீனின் அளவோ 700 கிராம்.

கடலுணவுப் பொருட்களின் மூலம் 1990-91-இல் ரூ.893 கோடியும் 1989-90-இல் ரூ.635 கோடியும் அன்னியச் செலாவணியாகக் கிடைத்தது. ஜப்பான் நாட்டிற்குத்தான் மிக அதிக பட்சமாக 47.68 சதவீத கடலுணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

செயற்கைக் கோள் மூலம் ஒலி, ஒளி தொலைத்தொடர்பு

நில உலகை ஒட்டிய நிலையான வட்டத்தில் (Geostationary orbit) சுற்றி வரும் செயற்கைக் கோள் (Satellite) நுண் அலைச் செய்திகளைத் திருப்பி அனுப்பும் தானியங்கிக் கருவியாக (Repeater Station) இயங்கி, இவ்வுலக முழுவதிற்கும், ஒலி, ஒளி வடிவம் கொண்ட செய்திகளை அனுப்புகிறது.

இந்த நிலையான வட்டம் பூமத்திய ரேகைக்கு இணையாக பூமியின் மட்டத்திலிருந்து 36,000 கி.மீ. தொலைவில் உள்ளது. செயற்கைக் கோளும், பூமியில் அமைக்கப்படும் உணர்கொம்பும் (Antenna) ஒரு நேர்க்கோட்டில் இருக்குமானால், செயற்கைக் கோள் அனுப்பும் ஒலி, ஒளிச் செய்திகளை உணர்கொம்பு பெற முடியும். இத்தகைய செயற்கைக் கோள் உணர்கொம்பின் ஒரு நேர்க்கோட்டில் சேர்க்கை, செயற்கைக் கோள் நிலையான வட்டத்தில் சுற்றிவரும்போது, இயற்கையாகவே சாத்தியமாகிறது. செயற்கைக் கோள் அனுப்பும் நுண் அலைகள் நிலத்தின் ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்கு மட்டும் பரவுகின்றன. இந்த பரப்பிற்குச் செயற்கைக்கோளின் அடிச்சுவடு (Satellite foot print) என்று பெயர். இப்பகுதி அல்லாத மற்ற இடங்களில், நுண் அலைகளின் வீரியம் மிகவும் குறைந்து காணப்பட்டு, பயனற்றதாக இருக்கும்.

செயற்கைக் கோள் மூலம் பெறும் கருவியின் (Satellite Receiver) அமைப்பு மூன்று முக்கிய பாகங்களைக் கொண்டுள்ளது. அவை (1) சாய்மாலை வட்ட உணர்கொம்பு (Parabolic Reflector-Dish Antenna) (2) மின் ஆற்றலை அதிகம் செய்யும் கருவி (LNA/LNB) (3) மின் அலை பெறும் கருவி (Satellite receiver).

டாக்டர் ந. குணசேகரன்,
உதவிப்பேராசிரியர்,
மின்னணுவியல் மற்றும் தொலைத் தொடர்புத் துறை
பொறியியல் கல்லூரி,
அண்ணா பல்கலைக் கழகம்.

விண்வெளி செயற்கைக் கோள் அனுப்பும், நுண் அலைகள் பூமியை அடையும்போது வீரியம் மிகமிகக் குறைந்து செயலிழந்து காணப்படுகின்றது. இதன் காரணங்கள்:

1. சூரிய ஒளி மூலம் சக்தி பெறும் மின்கலங்களே (Solar cell) செயற்கைக் கோளிலுள்ள மின்னணுக் கருவிகளை இயக்குகின்றன. இம்மின்கலங்கள் குறைந்த சக்தி கொண்டதால், செயற்கைக் கோள் அனுப்பும் நுண் அலைகளுக்கு அதிக வீரியம் கொடுக்க இயலாது. எனவே, செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைகள் மிதமான வீரியம் கொண்டதாக இருக்கிறது. இது 10 W அளவாக இருக்கும் இதை 10dBW என்று குறிப்பிடலாம்.

2. நுண் அலைகள் பூமியை நோக்கிச் செலுத்த 'உணர்கொம்பு' (Antenna) பயன்படுத்தப்படுகின்றது.

நுண் அலைகளின் வீரியம் உணர்கொம்பின் வடிவத்தையும் அளவையும் பொறுத்திருக்கிறது. ஆனால் விண்வெளியில் சுற்றி வரும் செயற்கைக் கோள் பெரிய 'உணர்கொம்புகளை' எடுத்துச் செல்லுதல் இயலாத காரியம். எனவே, சிறிய உணர்கொம்புகளே செயற்கைக் கோளில் இருக்கும். இந்த உணர்கொம்புகள் தரும் வீரியத்தின் அளவு 100 ஆக இருக்கும். இதை 20 dB என்று சொல்லலாம்.

3. செயற்கைக் கோளிலிருந்து வரும் நுண் அலைச் செய்தி 36,000 கி.மீ. தூரத்தைக் கடந்து, பரவி வருவதால், அத்ன் வீரியம் பெருமளவில் குறைகிறது. இதைத் 'தூரத்து இழப்பு' (Path loss) என அழைக்கிறோம். இதன் அளவு -200 dB என்று குறிக்கப்படுகின்றது.

4. நுண் அலைச் செய்திகள் விண்வெளிமூலம் பூமியை நோக்கி வரும்போது, விண்வெளியின் பல்வேறு அமைப்பினூடே வருவதாலும், பயனற்றமின் அலைகள் (noise) பலவற்றோடு கலப்பதாலும், அதனுடைய வீரியம் மேலும் குறைகிறது.

இப்படியாக விண்வெளிக் கோளிலுள்ள உணர்கொம்பு 10 W (10 dB) சக்தி கொண்ட நுண் அலைச் செய்திகளை, ஓரளவிற்கு 100 மடங்கு (20 dB) வீரியத்தைக் கூட்டி (Antenna gain 20 dB), 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளாகப் பூமியை நோக்கி அனுப்புகிறது. இந்நுண் அலைச் செய்தியின் மொத்த வீரியம் 30 dB (20+10) அளவு கொண்டதாகும். இந்த அளவை 'சமமடிப்பு செலுத்தும் சக்தி' என்று குறிப்பிடுகிறோம் (EIRP: Equivalent istropic radiated power) 'சமமதிப்பு செலுத்தும் சக்தியோடு' பூமியை நோக்கி வரும் நுண் அலைச் செய்திகள் 'தூரத்து இழப்பு' மூலம் -200 என்பி அளவு வீரியம் குறைக்கப்பட்டு உயிரற்ற நுண் அலைகளாய் பூமியை அடைகின்றது. இவைகளுக்கு மிகமிக அதிக வீரியம் உடனே கொடுத்தால்தான் தேவையான செய்திகளை அவை கொடுக்க முடியும். இதைத்தான் பூமியில் மிக பெரிய அளவில் உள்ள உணர்கொம்பு செய்கிறது.



பூமியிலுள்ள உணர்கொம்பு (Antenna) மூன்று முக்கிய பாகங்களைக் கொண்டுள்ளது:

1. சாய்மாலை வட்ட உணர்கொம்பு (Parabolic reflector dish Antenna) இதன் அளவு 3-5 மீட்டர் விட்டமுள்ளதாக இருக்கும் இதன் வேலை மிக அதிக அளவில் நுண் அலைகளைப் பெற்று, அதை ஒரு முகப்படுத்தி அதன் வீரியத்தைப் பல மடங்கு (சுமார் 10^5) உயர்த்தி, (50dB) உணர்கொம்பின் குவிமையத்தில் (Focal point) கொண்டு சேர்ப்பதாகும். இதைத் துணை உணர்கொம்பு என்று அழைக்கலாம். (Secondary Antenna)

2. சிறிய முகப்பு கொண்ட 'செய்தி உட்கொள்ளும் உணர்கொம்பு' (Feed horn Antenna). இந்த உணர்கொம்புதான் 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண் கொண்ட நுண் அலைகளைப் பெறும் சக்தி கொண்டது. எனவே, இதனை முதல்நிலை உணர்கொம்பு (Primary Antenna) என்கிறோம். இது துணை உணர்கொம்பின் குவிமையத்தில் வைக்கப்பட்டிருப்பதால் அதிக வீரியம் கொண்ட நுண் அலைகளைப் பெறுகின்றது. சிறிய முகப்பு கொண்டதால் தனிப்பட்ட முறையில் இது செயல்படமுடியாது. துணை உணர்கொம்போடு சேர்ந்து இது திறமையாகச் செயல்படுகின்றது.

3. மின் ஆற்றலை உயர்த்தும் கருவி (LNA - Low noise Amplifier). இது ஒரு மின்னணுவியல் கருவி. மிக விலை உயர்ந்தது. (Rs.4000) மிக திறமை வாய்ந்தது. இக்கருவியில்லாமல் 'செயற்கைக்கோள் செய்தி பெறும் கருவி' இயங்க முடியாது. இக் கருவி வீரியம் குறைந்து வரும் நுண் அலைகளுக்கு அதிக அளவு (10^6 = 60 dB) வீரியத்தைச் சேர்க்கிறது. இக்கருவிக்குப் பதிலாக மற்றொன்றையும் (LNB - Low noise block down coverter) பயன்படுத்தலாம். இம்மின்னணுக் கருவி நுண்ணலைக்கு வீரியத்தையும் தருகிறது (10^6), நுண்ணலையின், 3.7-4.2 GHZ அலை அதிர்வு எண்ணை, 940-14500 MHZ அலை அதிர்வு எண்ணாகக் குறைக்கிறது.

இப்படியாக விண்வெளியிலிருந்து வரும் நுண் அலைச் செய்திகளை பெரிய உருவம் கொண்ட சாய்மலை வட்ட உணர்கொம்பு (Dish Antenna) அதிக அளவில் பெற்று, அதனை ஒருமுகப்படுத்தி, குவிமையத்தில் சேர்க்க, குவிமையத்தில் பொறுத்தப்பட்ட சிறிய முகப்பைக் கொண்ட உணர்கொம்பு (Feed horn), நுண் அலைகளைத் தடம் கண்டுகொள்ள, மின் ஆற்றல் உயர்த்தும் கருவி, நுண் அலைச் செய்தியின் வீரியத்தைப் பலமடங்கு உயர்த்துகிறது. இந்த மூன்றின் ஒருங்கிணைந்த அமைப்பால், உயிரற்று பூமியை அடையும் நுண் அலைகளுக்குப் பெருமளவு சக்தி கொடுக்கப்பட்டு, அந்நுண் அலைகள், மின்னணுக் கருவிகளை இயக்கும் தகுதியைப் பெறுகிறது. -170B.W (30-200) அளவு சக்தியோடு வரும் நுண் அலை தற்போது -60 B.W (-170+50+60) அள்வு சக்திக்கு உயர்த்தப்படுகிறது. நுண் அலையின் அலை அதிர்வு எண்ணும் 3.7 GHZ - 42 GHZ மதிப்பிலிருந்து 940 MHZ - 1500 MHZ மதிப்பிற்குக் குறைக்கப்படுகிறது.

மின் அலை அதிர்வு குறைக்கப்பட்டு, வீரியம் பெற்ற நுண் அலை சுமார் 20-30 மீட்டர் நீளம்

பட்ஜெட் பிறந்த கதை!

பிரஞ்சு மொழியில் பொகெட் OUGETTE) என்றால் சிறிய பை ன்று அழைப்பர், அது வரவு- செலவு பற்றிய செய்திகளின் சேர்க்கை என்பதாகவும் கூறப்படும்.

பொகெட் என்ற சொல்லே கால வெள்ளத்தில் பட்ஜெட் ஆகி வழக் கில் வந்து விட்டது. கி.பி. 1733- இல் இங்கிலாந்தில் தான் முதன் முதலாக அரசு வரவு-செலவு கணக்கு வழங்குவது துவங்கியது. இன்றைய பட்ஜெட் மாதிரி கிடையாது. சாதா ரண வரவு-செலவு பட்டியல் தான்.

இங்கிலாந்தின் மூன்றாம் ஜார்ஜ் அரசர் (1738-1820) காலத்தில் பிரதமராக இருந்தவர் வில்லியம் பிட். இளையவர். இவர்தான் பட் ஜெட்டின் தந்தை என்ற கருதப் படுகிறவர். அப்போது பிரஞ்சுப் படைகளுடன் போர் ஏற்பட்டது. நெப்போலியனுடன் மோதி இங்கிலாந் திற்காக வெற்றியைத் தேடித் தந்த வர் நெல்சன். போரில் வெற்றி பெற்றாலும் இங்கிலாந்துக்கு பொருளா தார நெருக்கடி ஏற்பட்டது. வரவு- செலவு சரிகட்ட பணம் மிகுதியாகத் தேவைப்பட்டது. அது சமயம் வில்லி யம் பிட் தீவிர சிந்தனைகளுடன் செயல்பட்டதின் விளைவே பட் ஜெட் உருவாயிற்று. அதன் தொடர் பாய் 1799-இல் முதன் முதலாக வருமான வரி உதயமாயிற்று. நாட் டின் வரவு-செலவுக் கணக்குகளை பாராளுமன்றம் பரிசீலிக்கும் முயற்சி துவங்கியது. பொதுக் கணக்கு (பப்ளிக் அக்கெவுண்ட்) அது முதல் பட்ஜெட்டிற்கு அடிப்படையாயிற்று.

அதன் பின்னரே விரிவான வகையில் வரவும், செலவும் கணக் கிடப்பட்டு உபரி வருமானங்களுக் கான திசைகளை ஆராயும் தொடக் கம் ஏற்பட்டது. இந்தவிதமாக பட்ஜெட் சமர்ப்பித்தல் உருவாகி பல நாடுகளிலும் இந்த வழக்கம் பின்பற்றப்படலாயிற்று.

இந்தியாவில் இந்த ஆண்டு பட் ஜெட்டையும் சேர்த்து (இடைக்கால பட்ஜெட் உட்பட) இதுவரை 58 பட்ஜெட்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கொண்ட இணைவுக்கம்பி மூலமாய் (Coaxial Cable) 'செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிக்கு' எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த இணைவுக் கம்பியும் நுண் அலைகளின் வீரியத் தைக் குறைக்கும் தகுதி பெற்றது. நுண் அலையில் அலை அதிர்வு எண் அதிகமாக அதிகமாகச் சக்தி இழப்பும் அதிகமாகிறது. எனவே, முடிந்தமட்டும் அலை அதிர்வு எண் மதிப்பைக் குறைத்தல் நலம். 'பெரும் கருவியை' அடையும் நுண் அலை யின் சக்தியின் அளவு -60dB அல்லது -30 dBm மதிப்பைக் கொண்டதாக இருக்கும். 'பெரும் கருவி' நுண் அலையின் அலை அதிர்வு எண்ணை மேலும் குறைத்து, வீரியத்தை உயர்த்தி, பின்னர் ஒளி, ஒலி செய்திகளைத் தனியாகப் பிரித்து நமக்குத் தருகின்றது. இதை நாம் தொலைக்காட்சி மூலம் கண்டு ரசிக்கலாம்.

செயற்கைக்கோளின் செய்தி பெறும் கருவிகளின் முழு அமைப் பையும் செய்வது கடினமல்ல. இதற்கு மிக உயர்ந்த பொறியியல் வல்லுநர் தேவையில்லை. ஆனால், இதன்விலை இன்று ரூபாய் 60,000 தாண்டிவிட்டது. இதைச் செய்ய இவ்வளவு அதிக விலை தேவையா? அண்ணா பல்கலைக் கழகத்திலுள்ள பொறியியல் கல்லூரியில் மின்னணு வியல் மற்றும் தகவல் தொடர்பு பொருளியல் துறையில் BE, பகுதி நேர மாணவர்கள் இந்தக் கேள் விக்கு விணை காணும் எண்ணத் தோடு 'ஆசியா சேட்' என்ற செயற் கைக்கோளிலிருந்து வரும் செய்தி களைப் பெறும் வகையில் இந்த கருவியைச் செய்து முடிக்கும் பணி யில் இறங்கியுள்ளார்கள். துணைப் பேராசிரியர் டாக்டர் ந. குண சேகரன் மேற்பார்வையில் சீனிவாசன், மணிவண்ணன், சுப்பிரமணியம், முருகேசன், முத்துகிருஷ்ணன், பரஞ்சோதி, அன்சாரி, உதய பாஸ்கர், கணேசன், சந்திரசேகர், காதர் சுலைமான் சந்திரபிரகாசம், கார்த்திகேயன் முதலிய மாணவர்கள் இக்கருவியை ரூ.20,000 விலை மதிப்பில் செய்து முடிப்பதற்கு உறுதிகொண்டு இதில் ஈடுபட்டுள் ளார்கள்.

இந்தச் செயற்கைக்கோள் செய்தி களை, கண்ணாடி இழைக்கம்பி மூலம்(Optical glass fiber) அண்ணா பல்கலைக் கழகத்தின் பலதுறை களுக்கும் அனுப்பும் திட்டத்தையும் வெகுவிரைவில் செயல்படுத்துவார்கள்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் BE பகுதி மாணவர்கள் டாக்டர். ந.குணசேகரன் மேற்பார்வையில் சுழல் உணர்கொம்பின் (Helical Antenna) செய்து, EKRON எனப் படும் ரஷ்ய செயற்கைக்கோளி லிருந்து செய்திகளைப் பெறும் முயற்சியில் வெற்றி கண்டனர்.

இந்தக் செயற்கைக்கோள் செய்யும் கருவிகளை மிக அதிக அளவில் செய்ய முற்பட்டால் அதன் விலை மேலும் குறைவது திண்ணம். இதனால் நகரப் பகுதி மக்கள் மட்டு மல்லாது, கிராமப்புற மக்களும் இவ்வசதியைப் பெற வழி உண்டா கிறது. கிராமப்புற மக்களின் முகத் தில் வியப்பையும் மகிழ்ச்சியையும் இந்தச் செயற்கைக்கோள் உண்டாக்குவது உறுதி.

உலக நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பு பெறும் அவர்களின் எண் ணமும் மனப் போக்கும், செயல் முறைகளும் தரம் உயர்ந்து காணப் போவதில் ஐயமில்லை!



இராமநாதபுரம் மாவட்டத்தில் செயற்கை முத்து உற்பத்தி

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருமளவில் வளர்ப்பு முத்துக் களை உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும், ஸ்பிக் உர உற் பத்தித் தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மண்டபம் மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்து பண்ணையை அமைத்தது, பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற் பத்தி செய்யப்பட்டன.

செயற்கை முத்து உற்பத்திக்காக தமிழ்நாடு முத்து நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியில் வெற்றியடைந்து வர்த்தக ரீதியில் உற்பத்தியைத்துவக்கி யுள்ளது. இந்த நிறுவனம் கடந்த ஓராண்டுக் காலமாக நடத்திய ஆராய்ச்சியின்போது 12,000 காரட் முத்துக்களை உற்பத்தி செய் துள்ளது.

வளர்ப்பு முத்து உற்பத்தியைக் குடிசைத் தொழிலாக மாற்ற வேண்டு மென்ற அரசின் கொள்கையைச் செயலாக்கத் திட்டத்தை மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். இவ்வகை யில் இராமநாதபுரம் மாவட்டம் ''வாலி நோக்கம்'' என்ற கிராமத் தில் முத்து வளர்ப்பின் செயலாக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இக்கிராம மக்களின் முழு ஒத்துழைப்பில் சிறப்பாக நடை பெற்று வருகிறது.

இந்தியக் கடலில் ஆறு வகை யான முத்துச் சிப்பிகள் கிடைக்கின் றன. அவைகளுள் இந்திய முத்துச் சிப்பி (பிங்க்டேடா ஃபுகேட்டா) பெருமளவில் கிடைக்கிறது. இச் சிப்பியின் மென்மையான உடற் பகுதி இரண்டு ஓடுகளால் மூடப் பட்டிருக்கும். ஓட்டின் ஒரு பகுதியில் காணப்படும் துவாரத்தின் வழி யாகப் பச்சை நிறம் கொண்ட மயிரிழைகள் போன்ற நார்கள் வெளிவருகின்றன. இதற்குப் பைசஸ் நார்கள் என்று பெயர். அதனைக் கொண்டு கடலின் அடியில் உள்ள பாறை, நுரைகல் ஆகிய கடினமான பொருள்களில் ஒட்டி வாழும். அசம்பாவிதமாக மயிரிழை நார்கள் அறுந்துவிடில் சிறிது தூரம் ஊர்ந்து செல்ல கால் ஒன்று உண்டு. பெரும் பாலும் இடம் விட்டு இடம் நக ராமல் வாழும் தன்மையுடையது. இந்த மெல்லிய தசை கொண்ட முத்துச்சிப்பி கடல் நீரில் உள்ள நுண்ணுயிரிகளை உணவாக உட் கொள்ளும். இதைத் தவிர மற்ற ஐந்து வகை முத்துச்சிப்பிகள் நமது கடலில் அதிக அளவில் காணப் படுவதில்லை.

முத்துச்சிப்பி கிடைக்கும் இடங்கள்

தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்களில் முத்துச்சிப்பிகள் கிடைக்கின்றன. குறிப்பாக தமிழ் நாட்டின் மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடியைச் சார்ந்த கடல் பகுதி யில் இலட்சக்கணக்கான சிப்பிகள் 10-25 மீட்டர் செழித்து வளர்வதற் கான சூழ்நிலை உள்ளது. கடல் அடியில் மணல், சேறு உள்ள பகுதிகளில் முத்துச்சிப்பிகள் காணப்படுவதில்லை. பாறைகள் மிகுந்த பகுதிகளில்தான் கிடைக் கின்றன. மன்னார் வளைகுடாவில் பெரும்பாலான பகுதி பாறைகளி னால் ஆனது. முத்துச்சிப்பிகள் செழித்து வளர இது ஒரு முக்கிய காரணமாகும்.

இயற்கை முத்து உருவாக்கும் முறை

முத்துச்சிப்பிகள் கடலினடியில் பாறைகளில் ஒட்டி வாழும் போது தவறுதலாகச் சிறிய மண் துகள், நுண்ணிய பூச்சிகள், வேறு ஏதாவது ஒரு பொருள் மேனடில் என்று சொல்லக்கூடிய மிருதுவான தோலுக்கும் ஓட்டிற்கும் இடையில் செல்ல நேரிடலாம். அவ்வாறு உள்ளே சென்ற பொருள் அத் தோலுக்கு ஒரு நமைச்சலை ஏற் படுத்தும். நமைச்சலைப்போக்க அத்தோல் முத்து திரவத்தைச் சுரந்து அப்பொருளின் மேல் ஆடையாகப் படியச் செய்யும். இப்பணி சிப்பி உயிர் உள்ளவரை தொடர்ந்து நடை பெறுவதால் முத்துதிரவம் மீண்டும் மீண்டும் படிந்து நாளடைவில் இதுவே இயற்கை முத்தாகிறது. இயற்கை முத்தின் வடிவம் உள்ளே சென்ற பொருளின் வடிவத்தைப்

முத்து

செயற்கை முத்து (கல்சர்டு முத்து) தயாரிப்புத் தொழில் நுட்பம் நம் நாட்டில் 1973-இல் கண்டறியப் பட்டது. முத்துக்குப் பெயர் பெற்ற தூத்துக்குடியில் அமைந்துள்ள மத் தியக் கடல் மீன் ஆராய்ச்சிக் கழகம் இதனைக் கண்டறிந்தது. 1981-இல் முத்துச் சிப்பிகளை உருவாக்கும் முறையை இக்கழகம் மேம்பாடு செய்து ஒரு திருப்பத்தை உண்டு பண்ணியது.

வர்த்தக நிறுவனங்கள் இதில் ஈடுபட்டால், செயற்கை முத்து உற் பத்தி நன்கு வளர்ச்சி அடையும் வாய்ப்பு உள்ளது. கடந்த இருநூறு ஆண்டுகளாகவே முத்து வியாபாரத் தலமாக ஐதராபாத் புகழ் பெற்று உள்ளது. முத்துக்களின் வாழ் நாளை யும், வண்ண பளபளப்பையும் அதி கரிக்கும் விதமாக அங்கு நிலவிடும் சாதகமான காலநிலையே இதற்கு முக்கியக் காரணமாகும். ஜப்பான் தேசத்துக் கோகிச் மிகிமோடோ (Kokich Mikimoto) என்பவரே முதன் முதலாகச் செயற்கை முத்தினை உருவாக்கியவர் ஆவார்.

பொறுத்து அமையும். எனவே, நல்ல உருண்டையான இயற்கை முத்துக்கள் கிடைப்பது அரிது. மேலும் கடலில் கிடைக்கும் எல்லா சிப்பிகளிலும் இயற்கை முத்துக்கள் கிடைப்பதில்லை.

வளர்ப்பு முத்து உற்பத்தி சாதனை

கடலில் முத்துச்சிப்பிகள் குறைந்து வருவதால் இயற்கை முத்துக்கள் அதிகம் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எல்லா முத்துக்களும் உருண்டையாக நாம் விரும்பும் பருமனில் இருப்பதில்லை. இதனை மனதிற்கொண்டு மத்தியக் கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் 'வேப்பலோடை' என்ற சிற்றூர் கடல் பகுதியில் 1972-ஆம் ஆண்டு சிறிய முத்து உற்பத்தி சோதனைச் சாலையை நிறுவியது. 1973-ஆம் ஆண்டு நல்ல உருண்டையான வளர்ப்பு முத்துக்கள் உருவாக்கும் முறையில் வெற்றி கண்டது. நமது நாட்டில் வளர்ப்பு முத்து உற்பத்தி மேலோங்கி வளர இவ்வெற்றி உதவியது.

நம் நாட்டில் முத்து உற்பத்தி நிலை:

கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்துச்சிப்பிகளைப் பயன்படுத்தி 1973-ஆம் ஆண்டு மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் வளர்ப்பு முத்து உருவாக்கும் முறையில் சாதனை படைத்தது. ஆனால், அத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருளான முத்துச் சிப்பிகள் கடலில் சிறிதளவே காணப்படுகின்றன என்பதனை அறிந்து அதே நிறுவனம் 1981-ஆம் ஆண்டு முத்துச்சிப்பிக் குஞ்சுகள் வளர்க்கும் முறையில் வெற்றிக்கண்டது. இவ்வெற்றி நமது நாட்டில் முத்து உற்பத்தித் தொழில் வளர வழிவகுத்தது. வியாபார ரீதியில் பெருமளவில் வளர்ப்பு முத்துக்களை உற்பத்தி. செய்ய தமிழ்நாடு அரசு நிறுவனமும் ஸ்பிக் உர உற்பத்தி தொழில் நிறுவனம் இணைந்து 1982-ஆம் ஆண்டு மன்னார் வளைகுடாவில் உள்ள குருசடித்தீவில் முத்துப்பண்ணையை அமைத்தது. பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கு முத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

—உல. இரவீந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்.

அதிக மகசூல் தரும் ஜெ.ஜெ.-92 நெல்

திருச்சி மாவட்டம் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஜெ.ஜெ.-92 புதிய சன்னரக நெல் 77 சென்ட் நிலத்தில் பயிரிடப்பட்டு இன்னும் சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகவுள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் திருச்சியில் தெரிவித்தார்.

இந்த நெல்லை 105 நாட்களிலிருந்து 110 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம். குறுவை, தாளடி பயிரிடப்படும் நிலங்களில் இந்த ரக நெல்லைப் பயிரிடலாம்.

அறுவடை செய்யப்படும் இந்த ரக நெல் மேலும் பல்கிப் பெருக மாநில விதைப் பண்ணைக்கும், முற்போக்கு விவசாயிகளுக்கும் தரப்படும். இதன் விளைச்சலை அதிகரித்து வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்.

சத்துணவுத் திட்டத்தால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைகிறது உலக வங்கி பாராட்டு!

சத்துணவுத் திட்டத்தால் தமிழ்நாட்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்து வருவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். 12 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தைத் தொடங்கினார். ஒருங்கிணைந்த இந்தச் சத்துணவுத் திட்டத்தினால் தமிழ்நாட்டில் குழந்தைகள் உணவில் ஊட்டச்சத்துக் குறைவாக இருந்தது நீக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது என்று உலக வங்கி 10,5,1992 அன்று வாஷிங்டனில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில் உணவுக்காகச் செலவிடப்படும் தொகையில் 5 சதவிகிதம் மட்டுமே சத்துணவுக்குச் செலவிடப்படுகிறது. ஆனால் இதில் நல்ல பயன் ஏற்பட்டுள்ளது என்றும் உலக வங்கி தனது அறிக்கையில் பாராட்டி உள்ளது.

இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது உலக வங்கி இந்தத் திட்டத்துக்கு உதவி செய்தது. ஆனால், இப்போது இந்த வங்கியின் உதவி இல்லை என்ற போதிலும், இந்தத் திட்டத்துக்குத் தமிழ்நாடு அரசு தனது சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தொடர்ந்து நடத்தி வருகிறது என்றும் உலக வங்கி பாராட்டி இருக்கிறது.

சேலம் மாவட்டம்:

பாலமலைப் பழங்குடி மக்கள்

மலைகளுக்குப் பெயர் பெற்றது சேலம் மாவட்டம், இம்மாவட்டத்தில் சிறு குன்றுகளாகவும், பெரிய மலைகளாகவும் பல்வேறு திசைகளில் பரந்து கிடக்கும் மலைகளில் ஒன்று பாலமலை. சேலத்திலிருந்து 52 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேட்டூரின் அருகில் இம்மலை உள்ளது. வடக்கு மேற்காக அமைந்திருக்கும் இம்மலை சுமார் 5,000 அடி உயரத்தையும் 25 கிலோ மீட்டர் நீளத்தையும் கொண்டுள்ளது. இம்மலைக்கு மேட்டூரிலிருந்து கொளத்தூர் வழியே சென்று, மலையின் மேற்குப் புறமாக மலையை ஒட்டிச் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஊர்களான செட்டியூர், கண்ணாமூச்சி, குருவரெட்டியூரிலிருந்து செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்து மலைக் கிராமங்களை அடையலாம். மலையின் கிழக்குப் புறமாக அமைந்துள்ள நெருஞ்சிப்பேட்டையை அடைந்து, அங்கிருந்து நடந்தும் இம்மலைக் கிராமங்களை அடையலாம். இம்மலைக்குச் செல்வதற்கு இவை தவிர வேறு போக்குவரத்து வசதிகள் இல்லை.

மலையின் வடக்குப்புற மூலையான கொளத்தூர் அருகே மேலெழும்பும் இம்மலை ஒரே சமமாகச் சென்ற கண்ணாமூச்சியின் அருகில் அதிக உயரமான மலையுச்சிகளைக் கொண்டு, பின்பு மறுபடியும் இறங்க ஆரம்பித்து குருவ ரெட்டியூர் அருகில் முடிந்துவிடுகிறது. இம்மலையின் முக்கியமான மலையுச்சிகளாக சின்னமலை, கதிரப்பன் கரடு, கொசக்கரடு, கொம்பாரப்பட்டிக்கரடு, பாதக்கரடு, செம்மலை, செங்கல் மலை ஆகியவற்றைக் கூறலாம். இம்மலையின் அடிப்பகுதி முட்காடுகளாகவும் (Shrub Jungle) மேல்பகுதி இலையுதிர்க் காடுகளாகவும் (Deciduous Forests) காணப்படுகிறது. ஒரு காலத்தில் சந்தன மரங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்ட இம்மலையில் தற்பொழுது குறைந்த அளவிலேயே சந்தன மரங்கள் உள்ளன. மலையின் உச்சியில் மிகவும் பிரசித்திப் பெற்ற சித்தேஸ்வரர் கோவில் உள்ளது. இக் கோவிலைச் சுற்றி அடர்ந்த காட்டுப் பகுதி காணப்படுகிறது.

மலை உச்சியில் காணப்படும் சித்தேஸ்வரர் கோவிலின் தென்புறமாக மலைவாழ் பழங்குடிகளின் குக்கிராமங்களான பெரிய குளம், திம்பொதி, நாகம்பொதி, நத்தக்காடு, துவரங்காடு, குங்கிலியக்காடு, ஈச்சங்காடு ஆகியவை காணப்படுகின்றன. கோவிலின் வடபுறமாக, கெம்மம்பட்டி, ராமன்பட்டி, புல்லாம்பட்டி, நமங்காடு, கடுக்காமரத்துக்காடு, தலக்காடு, கொட்டக்காடு, ஓரலை மரத்தூர், சிங்காரத்தோப்பு, செட்டிகாடு, பாத்திரமடவு, சோத்தாங்காடு, எருக்கலாங்காடு ஆகியவை அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் பெரிய கிராமங்களாக ராமன்பட்டி, கெம்மம்பட்டி, பாத்திரமடவு, பெரிய குளம் ஆகியவற்றைக் கூறலாம். இவற்றில் ஒவ்வொன்றிலும் சுமார் 60 வீடுகள் காணப்படுகின்றன. இதரக் கிராமங்கள் மிகவும் குக்கிராமங்களாக 15 முதல் 30 வீடுகளையே கொண்டுள்ளன. மலையின் வடபுறமாக உள்ள கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மலைவாழ் மக்கள் மலையாளி வகுப்பைச் சார்ந்தவர்கள். மலையாளி என்பது பிறப்பியல்புபடி மலையில் வசிப்பவர் அல்லது அதை ஆட்சி செய்பவர் என்று பொருள்படும். இவர்கள் பேசும் மொழி ஒருவிதக் கலப்புத் தமிழ் மொழியாகும். சேலம் மாவட்டத்தில் காணப்படும் முக்கிய மலைகளில் ஒன்றான கொல்லிமலையிலிருந்து தம் மூதாதையர் காலத்தில் இவர்கள் குடிபெயர்ந்ததாக நம்பப்படுகிறது.

பாலமலைக் கிராமங்கள் அனைத்தும் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்குகிறது. இருந்தும், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஊர்க்கவுண்டர்கள் உள்ளனர். இவர்கள் கிராமத்தில் சாதாரணமாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றனர். ஊர்க்கவுண்டர் எனும் பதவி பரம்பரைப் பதவியாக விளங்குகிறது. இம்மலைக் கிராமப் பகுதிகள், சிறிய மலைச் சரிவுகளையும், சமமான பகுதிகளையும் கொண்டு விவசாயத்தில் நல்ல முன்னேற்றத்துடன் காணப்படுகின்றன.

இங்கு கேழ்வரகு, சாமை, கம்பு, தினை, அவரை, கொள்ளு ஆகியவை சாதாரணமாகப் பயிரிடப்படுகின்றன. இப்பயிர் தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் கஞ்சி, கூழ், களி முதலியவற்றையே உணவாக உட்கொள்கின்றனர். சிறப்புப் பயிராக அரிசி, நிலக்கடலை,

ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்.

மஞ்சள் ஆகியவை பயிரிடப்படுகின்றன. சித்தேஸ்வரர் கோவிலின் வடபுறமாக ஓடும் ஓடையிலிருந்து, எண்ணெய் இயந்திரங்களின் (ஆயில் மோட்டார்) மூலம் நீர் இறைக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், கிராமங்களில் காணப்படும் குடிநீர்க் கிணறுகள் மட்டுமின்றி பட்டா நிலங்களில் காணப்படும் சொந்தக் கிணறுகளும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. பயிரிடப்படும் பயிர்கள் அனைத்தும் சொந்த உபயோகத்திற்கே பயன்படுத்தப்படுகின்றன. இதரத் தேவையான பொருட்களை மலை அடிவார ஊர்களில் பெற்றுக்கொள்கின்றனர். மலை அடிவாரக் கிராமங்களான குருவரெட்டியூரில் ஞாயிறு சந்தையும்; கொளத்தூர், அந்தியூரில் முறையே வெள்ளி, திங்களில் சந்தைகளும் நடைபெறுகின்றன. மேலும், கண்ணாமூச்சியில் உள்ள அரசு விநியோகக் கடையின் மூலம் தமக்கு வேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், பாமாயில் ஆகியவற்றை இவ்வூர் மக்கள் பெறுகின்றனர். விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள இவர்கள் சமவெளியின் பல பகுதிகளுக்கும் சென்று தினக்கூலியாக விவசாயத் தொழில் பார்க்கின்றனர்.

இதரத் தொழில்களாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்க்கப்படும் ஆடுகள் சந்தைகளுக்கு ஓட்டிச் சென்று விற்கப்படுவதுண்டு. ஆனால் வளர்க்கப்படும் மாடுகள் நிலத்தை உழுவதற்கே பயன்படுத்தப்படுகின்றன. பலவகைப்பட்ட மரங்களுடன் வாகை, ஊஞ்சை, சரக்கொன்றை, புளி, பலா, தென்னை, பனை ஆகியவையும் காணப்படுகின்றன. புளி உரிய பருவக்காலத்தில் சேகரிக்கப்பட்டு சமவெளியில் காணப்படும் பூலாம்பட்டிச் சந்தையில் விற்கப்படுகிறது. விவசாயத்திற்கு உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், அனைத்துப் பொருட்களும் தலைச் சுமையாக மலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. பட்டுப்பூச்சி வளர்ப்பிற்காக மல்பெரி செடிகள் பயிரிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிராமத்தில் காணப்படும் வீடுகள் பெரும்பாலும் மண்ணாலேயே கட்டப்

கெம்மம்பட்டிக் கிராமம் -

பட்டுள்ளன. அவற்றிற்குக் கூரையாக, மலைகளில் அதிக அளவில் காணப்படும் கிணாங்கு என்ற புல்லையே பயன்படுத்துகின்றனர். ராமன்பட்டி, கெம்மம்பட்டி ஆகிய கிராமங்களில் தற்பொழுது அரசின் சார்பில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இவை கல்லால் கட்டப்பட்டு கல்நார் ஓடுகள் (Asbestos) அல்லது சீமை ஓடுகளால் வேயப்படுகின்றன. அரசின் சார்பில் ராமன்பட்டியிலும், கடுக்காமரத்துக் காட்டிலும் பள்ளிகள் இயங்குகின்றன. ராமன்பட்டியில் எட்டாவது வரை படிக்க வசதியும், கடுக்காமரத்துக்காட்டில் ஐந்தாவது வரை படிக்க வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. உணவு, உடை, உறைவிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. மருத்துவ் வசதிக்காக, தமிழ்நாடு டேனிடா திட்டத்தின் கீழ் துணைச் சுகாதார நிலையம் ராமன்பட்டியில் இயங்குகிறது. மேலும் மேட்டூர் அரசு மருத்துவமனையிலும், கொளத்தூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் மருத்துவ வசதிகள் பெறுகின்றனர். குழந்தை பிறப்பு பெரும்பாலும் மலைகளிலேயே நடைபெறுகிறது. சிரமம் ஏற்பட்டால் தொட்டில்களில் அல்லது கட்டிலில் படுக்க வைத்து கீழே கொண்டு வந்து விடுகின்றனர். கொளத்தூரை மையமாகக் கொண்டு இயங்கும் அஞ்சல் அலுவலகம் மூலம், தபால்கள் நடைப் பயணமாக வரும் தபால் சேவகரால் சேர்க்கப்படுகின்றன.

திருமண உறவுகள் பெரும்பாலும் மலைக் கிராமங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன. சிலசமயம் இதர மலைகளிலும் சம்பந்தம் வைத்துக் கொள்கின்றனர். பரிசல் பணமாக மாப்பிள்ளை இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் வரை தர வேண்டியிருக்கிறது. பெண்ணிற்கு ஒரு பவுன் அல்லது இரண்டு பவுனாக அவரவர் வசதிக்கேற்றவாறு நகை போட்டு திருமணம் செய்து வைக்கின்றனர். விவாகரத்தும், மறுகல்யாணமும் பழக்கத்தில் உள்ளது.

ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாக மாரியம்மன் கோவிலும், விநாயகர் கோவிலும் உள்ளது. கோவில் விழாக்கள் தனித்தனியாகக் கிராமங்களில் கொண்டாடப்படுகின்றன. மாரியம்மன் விழா பங்குனி மாதத்தில் 3 நாட்கள் முதல் 15 நாட்கள் வரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் வைத்து, கடா வெட்டிக் கொண்டாடுகின்றனர். பொங்கல் சமயத்தில், தை நோன்பின்போது பொங்கல் மட்டும் மாரியம்மனுக்குப் படைக்கப்படுகிறது. சித்தேஸ்வரர் கோவிலில் புரட்டாசி, மாசி அம்மாவாசைத் தினங்களில் சிறப்பாகப் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன. பெரிய குளம் கிராமத்தில் வைக்கப்பட்டிருக்கும் சித்தேஸ்வரர் சிலை மாசி அம்மாவாசை சமயத்தில் கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டு பூசை செய்விக்கப்படுகிறது.

விவசாயம், மின் வசதி, மருத்துவ வசதி ஆகியவற்றுள் ஓரளவு முன்னேற்றத்துடன் காணப்படும் இக்கிராம மக்கள், விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் ஆடு வளர்ப்பு, கரை கட்டுதல், பயிர் வளர்ப்பு ஆகியவற்றிற்குக் கடன் வசதி பெற்றுப் பயன் பெறுகின்றனர். ●

தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

டாக்டர் கொ. சத்தியகோபால், இ.ஆ.ப.
திட்ட அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்
தருமபுரி

தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகமானது, கம்பெனிச் சட்டத்தின் கீழ் 7.11.75-இல் தோற்றுவிக்கப்பட்டது. கழகத்தின் முக்கிய நோக்கம் இம்மாவட்டத்தின் கிராம, நகர்ப்புறங்கள் மேம்பாடு அடைவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது. மேலும் உள்ளாட்சி நிறுவனங்களில் நிதி ஆதாரங்களை, மேம்படுத்துவதற்காகப் பேருந்து நிலையம், அங்காடி தொகுப்புகள், வங்கிக் கட்டடங்கள் போன்றவைகளை மானிய திட்டத்தின் கீழ் கடன் வழங்கி ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதுவரை 18 கிராமம் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.40.22 இலட்சத்திற்குக் கட்டடங்கள் கட்டியும் அதில் ரூ.13.38 இலட்சம் மானியமும் அளித்துள்ளது.

மேலும், இக்கழகத்தின் சுயநிதி ஆதாரம் மேம்பாடு அடையும் வகையிலும் அதே சமயத்தில் தருமபுரி மாவட்டம் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைய சுமார் 65.75 இலட்சத்தில் அங்காடி தொகுப்புகள் வங்கிக் கட்டடங்கள் கட்டியும், சுற்றுலா வளர்ச்சியுடைய ஒகேனக்கல், தீர்த்தமலையில் தங்கும் விடுதி, கடைகள் சுமார் ரூ.16.25 இலட்சத்திலும் மற்றும் விளையாட்டுத் துறையில் மற்ற வளர்ச்சியடைந்த மாவட்டங்களில் இல்லாத வகையில் நீச்சல் குளம் விளையாட்டு அரங்கம், உள் விளையாட்டு அரங்கம் போன்றவற்றிற்கு மானியம் வழங்கி விளையாட்டுத் துறைக்குக் கட்டிக் கொடுத்துள்ளது.

மேலும், நாகமங்கலத்தில் 128 ஏக்கர் தரிசு நிலத்தைச் சீர் செய்து பட்டு எடுக்கத் தேவையான மல்பரிச் செடிகளைப் பயிரிட்டும், மாந்தோப்பை ஏற்படுத்தியும் மற்ற அரசுப் பண்ணைகளுக்கு ஒரு முன்மாதிரிப் பண்ணையாகத் திகழ இக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் மேலும் பல பகுதிகளில் பழப்பண்ணைகள், பட்டு வளர்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களில் கிராமச் சாலைகள், தகவல் தொடர்புகளை மேம்படுத்துதல், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், பட்டு வளர்ப்புத் திட்டம் தோட்டக்கலை, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைப் பெருக்குத் திட்டம், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களும், அறிவியல் - தொழில் நுட்பத் திட்டம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்புத் திட்டங்கள் ஆகியவையும் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும். இத்திட்டங்களுக்கான திட்டமிடல், செயலாக்கம், கணிப்பாய்வு ஆகிய பணிகள் இந்நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டு, இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மனிதனின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம், ஆகியவற்றினைப் பெறுவதற்கான வேலைவாய்ப்பை உருவாக்கித் தருதல், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அடித்தள மக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் அளித்தல், ஆகிய திட்டங்களில் செயலாக்

கத்தினால் தருமபுரி மாவட்டம் இன்று ஒரு முன்னோடி மாவட்டமாக இருந்து வருகிறது.

'நமது கிராமங்கள் முழுமையாக வளர்ந்து விட்டால் கலைத்திறனும், செயல்திறனும் மிகுதி யாக உள்ள மனிதர்களுக்குக் குறைவே இருக்காது. கிராமக் கவிஞர்களும், கிராமக் கலைஞர்களும், கிராமக் கட்டடக் கலைஞர்களும் பன்மொழிப் புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் அங்கிருப் பார்கள்' - அண்ணல் காந்தியடிகளின் இந்த எண் ணங்கள் முழுவதும் முழு வடிவம் பெறும் வகை யில் திட்டப் பணிகள் இம்மாவட்டத்தில் முழு வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1990-91 வரை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள 64.541 அடித்தள மக்கள் பயனடைந் துள்ளனர். 1991-92-ஆம் ஆண்டில் மட்டும் வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள 5,487 மக்கள் பயனடைந்துள்ளனர் இத்திட்டத்தின் மூலம் 23,470 ஆதிதிராவிடர் பழங்குடியினப் பெரு மக்களும், 27,547 பெண்களும் பயனடைந்து உள்ளனர். இதன் மூலம் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

ஆதிதிராவிடப் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வசதிகள்

ஜகவர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 12,776 வீடுகள் கட்டி வறுமைக்கோட் டிற்குக் கீழே உள்ள ஆதிதிராவிடர், பழங்குடி யினருக்கு வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டும் 2,200 தார்சு வீடுகள் கட்டப்பெறுகிறது. இது விரைவில் பயனாளி களிடம் ஒப்படைக்கப்படும். இன்னும் 8,561 நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவை நிதி வசதிக்கேற்ப படிப்படியாகக் கட்டிக் கொடுக்கப் படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுக்கான மிகப் பயனுள்ள திட்டம் ஜீவன்தாரா கிணறு வெட்டும் திட்ட மா கும். இத்திட் டத் தின் கீழ் பொருளாதார நிலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு இலவச மாக கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படும். 1990-91-இல் 100 கிணறுகள் வெட்டப்பட்டன. 1991-92-ஆம் அண்டில் 900 பாசனக் கிணறுகள் வெட்டப்படுகின்றன. இதற்காக ரூ.145.62 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை அரசு அளித்துள் ளது.

சாலை வசதிகள்

1990-91-ஆம் ஆண்டிற்கு முன் இம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சாலை வசதி செய்யப்பட்டிருந்தது:

1. மண் சாலைகள் - 1181.77 கி.மீ.
2. கப்பிச் சாலைகள் - 249.00 கி.மீ.
3. சரளைக்கல் சாலைகள் - 1233.22 கி.மீ.
4. தார்ச் சாலைகள் -. 307.16 கி.மீ.

1990-91-ஆம் ஆண்டில் 223.10 கி.மீ. இரண்டடுக்குச் சரளைக் கற்கள் சாலையும், 93.30 கி.மீ., தார்ச் சாலையும், அமைக்கப் பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் 82.35 கி.மீ. கற்சரளைச் சாலையும், 77.50 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நெடுஞ் சாலைக் கிராமப் பணித்துறையின் (கிராமச் சாலைகள்) மூலம் 48.40 கி.மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் படிப்படியாகப் பேருந்துச் சாலைகள், தார்ச் சாலைகளாக மாறும், போக்குவரத்து வசதிகள் எளிதாக்கப்பட்டு எரிபொருள் சேமிப்புக்கு வழி வகுக்கும்.

ஒரு நிரந்தரக் கட்டடமே இல்லாத ஆரம்பப் பள்ளிகள் இல்லை என்ற நிலையும், 442 ஊராட்சி களுக்கு அலுவலகக் கட்டடங்களும் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன.

பாசன ஆதாரங்களை மேம்பாடு செய்ய 900 கசிவு நீர்க்குட்டைகள் கட்டப்பெற்றுள்ளன. இதனால் நிலத்தடி நீர் உயரவும், அதன்மூலம் உணவு உற்பத்தி பெருகவும் வாய்ப்புகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் வறட்சியின் கொடுமை யினால் பாதிக்கப்படும் மக்களின் துயர்த் துடைப்புத் திட்டங்கள் மாவட்டம் முழுவதும் பரவலாக ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டு வந்தன. 1985-86-ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

'வெளிச்சம்' - மதுவிலக்குப் பிரச்சார நாடகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார் (1.5.92).

நான்காம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தூத்துக்குடி விமான நிலையத்தைத் திறந்து வைத்து, ரூ.700 கோடிக்கான நலத் திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தார் (30.4.92)

படுகின்றது. தமிழக அரசின் சிறப்புத் தன்னிறை வுத் திட்டத்தின் மூலம் 34 கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும். ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத் தின் கீழ் 60, கசிவு நீர்த் தேக்கக் குட்டைகளும் கட்டப்பெறுகின்றன. இத்திட்டம் முடிவடையும் போது பாசனக் கிணறுகள் நீருற்றைப் பெருக்கிக் கொள்ளவும், அதன்மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் ஏதுவாக இருக்கும்.

மனித வாழ்வின் எரிசக்தியின் முக்கியத்துவம்

தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் 1985-ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் இயங்கி வருகிறது. நாகரீக உலகில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஏற்கெனவே உள்ள கரிசக்திகளோடு இயற்கை நமக்கு அளித்துள்ள காற்று, சூரிய ஒளி போன்ற சக்திகளை மனிதனின் அன்றாட வாழ்வுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளும் அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் அரூர் பகுதி மக்களின் மேம்பாட்டுக்காக 1989-90-இல் எரிசக்தித் திட்டம் தொடங்கப்பட்டது. 1991-92-இல் பர்கூரில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரூர் வட்டாரத்தில் எரிசக்தி நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மக்களின் அன்றாட வாழ்வில் உணவு அவசிய மாகும். இதற்குத் தேவைப்படும் எரிபொருள் களான விறகு, எரிமூட்டை, பிற எரிபொருள் சாதனங்களைச் சிக்கனப்படுத்த மேம்படுத்த தூளா அடுப்புகள் 2,600 அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 15 முதல் 20 சதம் எரிபொருள் சிக்கனத்துடன் புகை, வீட்டில் தங்காமல் வெளி யேறிவிட வசதியாக உள்ளது. இதற்கான முழுச் செலவும் எரிசக்தி நிறுவனமே ஏற்கிறது.

விவசாயத்திற்குத் தேவையான நீர் பாய்ச்ச மின் மோட்டார்கள் மற்றும் ஆயில் இன்ஜின்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் குறைந்த அழுத்தத்தில் அதிக அளவில் நீர் பாய வசதியாக உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்கப் படுகின்றன. இதற்கான செலவில் 75 சதம் அரசு ஏற்கிறது. இதுவரை அரூர் ஒன்றியத்தில் 740 நபர்கள் பயனடைந்துள்ளனர். உணவு சமைக்க சரியான முறையில் அடுப்புகள் அமைக்காத காரணத்தால் எரிபொருள் பெருமளவில் விரய மாகிறது. இதைக் கட்டுப்படுத்த 'பிரியாக்கினி' (எரிபொருள் சிக்கன உலோக அடுப்பு) என்ற அடுப்புகள் வழங்கப்படுகின்றன. இது எரி பொருளைச் சுமார் 20 சதம் சேமிக்க வழி செய் கிறது. இத்திட்டத்தின் கீழ் அரூர் ஒன்றியத்தில் 850 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். இதற்குரிய அரசு மானியம் 75 சதம் ஆகிறது.

இயற்கை நமக்களித்துள்ள வரப்பிரசாதமான சூரிய ஒளியைக் கொண்டு உணவு சமைக்கும் 6 அடுப்புகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இதற்கு அரசு ரூ.400 நிதி உதவி அளிக்கிறது. சம்பந்தப்பட்ட நபர் ரூ.650 செலுத்தினால் போதுமானது. ஓரளவு சக்தி படைத்தவர்கள் இதை விரும்புகின்றனர். இதன் தேவை தற்போது அதிகரித்துள்ளது.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களில் ஓரளவு வசதி படைத்தவர்களுக்கு நிலத்தை உழுவதற்கு உறுதுணையாகக் கலப் பைகள் பூட்டப்பட்ட, ஒரு டன் எடைக்குக் குறை யாமல் பளு ஏற்றிச் செல்லும் பல நோக்கு வசதி கொண்ட மாடுகள் பூட்டப்பட்ட 5 வண்டிகள் கடந்த ஆண்டுகளில் 5 வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 6 வண்டிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கான மொத்த செலவினம் ரூ.75,000 ஆகிறது. இதில் 75 சதம் மானியமாக வழங்கப் படுகிறது.

பர்கூர் வட்டாரத்தில் நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

1. குழாய்க் கிணற்றில் காற்றாடி அமைத்து நீர் இறைத்தல்
2. வீட்டு உபயோகத்திற்கென 10 சூரிய ஒளி அடுப்புகள் 10 வழங்குதல்.
3. நீர் இறைக்க வசதியாக 200 உராய்வு குறைந்த ஃபுட்வால்வுகள் வழங்குதல்.
4. மேம்படுத்தப்பட்ட 1000 தூளா அடுப்புகள் அமைத்தல்
5. எரிபொருள் சிக்கனத்திற்கான 400 'பிரியாக் கினி' உலோக அடுப்புகள் வழங்குதல்.
6. வேளாண்மை உபயோகத்திற்கு நிலத்தில் 4 மருந்து தெளிக்கும் ஸ்பிரேயர் வழங்குதல்.

மேற்கண்ட செயல் திட்டங்களை நிறைவேற்ற வும், அவைகளில் செயல்பாடுகளைப் பொது மக்களுக்கு விளக்கவும் மொத்தம் இவ்வாண்டு பர்கூர் ஒன்றியத்திற்கு மூன்று இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

கரிமவாயுத் திட்டம்

இத்திட்டம், இம் மாவட்டத்தில் 1981-82-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த கரிமவாயுக் கலன்

அமைப்போர்க்கு கலன் கொள்ளளவுக்குத் தக்கவாறு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. கரிம வாயுக் கலன்களைப் பயனடைவோர் சொந்தச் செலவிலோ அல்லது வங்கிக் கடன் மூலமாகவோ அமைத்துக் கொள்ளலாம். 1981 முதல் இன்று வரை இம்மாவட்டத்தில் 3,250 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நடப்பு நிதி ஆண்டிற்குக் குறியீடு 250-க்கு இதுவரை 125 கரிம வாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கரிம வாயுக் கலன்கள் கே.வி.ஐ.சி., தீனபந்து, மற்றும் ஜனதா என மூன்று வகைப்படும். அவைகளில் கே.வி.ஐ.சி. மற்றும் தீனபந்து வகை மிகச் சிறந்தது. கரிமவாயுக் கலன்கள் டர்ன்கீ அமைப்பாளர் உதவி கொண்டும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலமாகவும் அமைக்கப்பட்டு வருகின்றன. அமைக்கப்பட்ட கரிம வாயுக் கலன்களில் ஏதாவது பழுது ஏற்படின் கலன்களைப் பழுது பார்க்க தொழில் நுட்ப உதவி, மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

விறகுக்காகக் காடுகளை அழிப்பதைத் தடுப்பதும் எரிபொருள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

சாண எரிவாயுவின் பலன்கள்:

1. கரிமவாயுக் கலனிலிருந்து கிடைக்கும் வாயு எரித்துச் சமையல் செய்ய உதவுகிறது. வீடுகளைச் சுத்தமாகவும் வைத்திருக்கலாம்.

2. மாண்டில் பொருத்தி கரிம வாயுவைக் கொண்டு ஒளி விளக்கு எரிக்கலாம்.

3. கரிம வாயுவைக் கொண்டு டீசல் என்ஜின்களையும் இயக்கலாம்.

4. கரிம வாயுக் கலன்களில் வெளியேறும் சாணக்கரைசல் மறுபடியும் சக்திவாய்ந்த உரமாகப் பயன்படுகிறது- அமோக விளைச்சலுக்கும் உறுதுணையாயிருக்கிறது.

கரிமவாயுக் கலன் கட்டி முடித்த பின்பு பராமரிப்புச் செலவும், எரிபொருள் செலவும் ஏற்படுவதில்லை.

மேம்படுத்தப்பட்ட அடுப்புகள்

இத்திட்டம் 1982 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு மேம்படுத்தப்பட்ட 4,000 அடுப்புகள் கிராமங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் மூலம் செயலாக்கப்படுகிறது. இவ்வடுப்பு (சுகாத் மாடல்) மண்ணினால் பல பாகங்களாகச் செய்து, சுட்டு, பின்பு பயனாளிகள் விரும்பும் இடத்தில் அமைத்துத் தரப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மூலமாகச் செயலாக்கப்படுகிறது. மேம்படுத்தப்பட்ட அடுப்பு ஒன்றுக்கு ரூ.62 செலவு செய்யப்பட்டு இத்தொகை முழுவதும் மானியமாகவும் வழங்கப்படுகிறது.



நாகரிகம்

நாகரிகம் என்ற சொல்லுக்கு, குஜராத்தி மொழியில் நல்ல நடத்தை என்று பொருள்.

- அண்ணல் காந்தியடிகள்.

இந்நிதியாண்டில் இம்மாவட்டத்திற்கு 5,000 குறியீட்டிற்கு இதுவரை 4,283 மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் இத்திட்டத்தினால் விறகு சிக்கனமாகப் பயன்படுத்துவதோடு, விறகுக்காகக் காடுகள் அழிக்கப்படுவது கணிசமாகத் தடுக்கப்படுகிறது. குறைந்த விறகில் வெப்பத்தை வீணாக்காமல் ஒரே அடுப்பில் விறகை எரித்து இரண்டு பாத்திரங்களில் ஒரே நேரத்தில் குறைந்த கால அளவில் சமையல் செய்யலாம்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றோரின் தொழில் வளர்ச்சித் திட்டம்

மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் ஆதரவுடன் 1985-86-ஆம் முதல் இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டத்திலுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் சுய தொழில்கள் அமைக்க அனைத்து உதவிகளும் இத்திட்டத்தின் மூலம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 79 அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் பயின்றவர்கள் பயனடைந்து தொழில் நிறுவனங்களை நிறுவியுள்ளனர்.

வேலைவாய்ப்புப் பெருக்குத் திட்டம்

பல்வேறு திறன் அபிவிருத்திப் பயிற்சிகளை அளித்து அவற்றின் மூலம் சுயவேலை வாய்ப்பை அடையச் செய்ய இத்திட்டம் 1990-91- ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 69 நபர்கள் திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்று சுயவேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நடப்பு ஆண்டில் 392 நபர்களுக்கு 12 துறைகளில் பயிற்சி அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

இம்மாவட்டத்தின் 4 வட்டாரங்கள் தவிர ஏனைய வட்டாரங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் மண்வளப் பாதுகாப்பு, நவீன முறை புன்செய் விவசாயம், தோட்டக்கலை, வனவளம், நீர்வளம் பெருக்குதல், பட்டு வளர்ச்சி முதலிய இனங்களின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.183 இலட்சத்திற்குப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை சுமார் ரூ.136 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு மைய, மாநில அரசுகளால் சமமாக வழங்கப்படுகின்றன. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

கவிதை

விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீது

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 9.3.92 முதல் வாரந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை, மாவட்டவாரியாக சுழல்முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் உடல் ஊனமுற்றோர், வயதான பெரியவர்கள் மற்றும் தாய்மார்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், அனாதைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர் தங்களது குறைகளான முதியோர் ஓய்வூதியம், குடியிருக்க இடம், வேலைவாய்ப்பு, கடன் உதவி, காவல்துறையின் பாதுகாப்பு, நிலப்பட்டா, குடும்ப அட்டை, பணியிட மாறுதல், பண உதவி மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் வேண்டி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்களை அளித்து வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களின் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டு வருகிறார்கள்.

முதல்கட்டமாக 598 மனுதாரர்களின் மனுக்களின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு 190 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையும், 247 மனுதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தக்க போலீஸ் பாதுகாப்பும், 110 மனுதாரர்களின் கோரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டது. 34 நபர்களுக்கு [illegible], 5 நபர்களுக்குக் குடியிருக்க இடமும், 4 நபர்களுக்குப் பட்டாவும், 8 நபர்களுக்குக் குடும்ப அட்டையும் வழங்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது. இதர மனுக்களின் மீது தக்க நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தவிர, 1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், இருதய அறுவை சிகிச்சைக்காக 29 பேர்களுக்குத் தலா ரூ.15,000-மும், சிறுநீரகச் சிகிச்சைக்காக ஒருவருக்கு ரூ.15,000-மும் நிதி உதவி வழங்கினார்கள்.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட 7 தம்பதியினருக்குத் தலா ரூ.5,000-மும், விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் ஒரு தம்பதியினருக்கு ரூ.5,000 நிதி உதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மகளிர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் இருவருக்குத் தலா ரூ.5,000-மும் வழங்கினார்கள்.

மேலும் 7 ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும், சொந்தத் தொழில் தொடங்க 10 பேர்களுக்கு வங்கிக் கடனுதவியும், 11 ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும், ஒருவருக்கு சக்கர நாற்காலியும் வழங்கினார்கள்.

1.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த இதழில்...

புதியதோர் உலகம் படைப்போம்! —புதுடெல்லியில் நடந்த தேசிய [illegible] (முழு விவரம்) ... 2

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள் —மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி ... 9

திரைப்பட நகர் — முதல்வர் அடிக்கல் நாட்டினார் ... 11

கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா ... 13

உதகை - உவகைமிகு சிறப்பிடம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 17

உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி ... 22

பெரியார் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்: ... 24

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள் ... 27

குழந்தை நலம் ... [illegible]

[illegible] ... [illegible]

[illegible] ... [illegible]

சிவகங்கையில் ரூ.2.5 கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு ... 37

வளரும் வேளாண்மை ... 38

பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான காகித அட்டைகள் ... 39

ஒருமைப்பாடு மலர்ந்திட... (கவிதை) ... 41

ஆசிய ஜோதி ... 44

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
வைகாசித் திங்கள் 19
மலர்: 22 இதழ்: 1
1-6-1992

• வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி...

• பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து...

புதியதோர் உலகம் படைப்போம்!

புதுடெல்லியில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து விவாதித்து முடிவெடுக்க இங்குக் கூடியிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்து 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைத்திருப்பது, வளமான ஓர் எதிர் காலத்திற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

தேசிய வளர்ச்சி என்னும் அவசரப் பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். சற்றுக் காலதாமதமானாலும் சுதந்திர இந்தியாவில் திட்டமிட்ட வளர்ச்சியின் வரலாற்றில் 8-வது ஐந்தாண்டுத் திட்டம் முக்கியமானதொரு கட்டத்தைக் குறிக்கிறது. 8-வது திட்டத்தின் அளவையும் அம்சங்களையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் உங்களுடன் ஒரு சில கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொருளாதாரச் சிக்கல்கள் என்ற இருட்டுக் குகையின் முடிவில் வெளிச்சத்தை இப்போதுதான் நாம் காணத் தொடங்கியுள்ளோம். கோடிக்கணக் கான மக்களுக்கு வளமான வாழ்க்கையை ஏற் படுத்திக் கொடுக்க நாம் உறுதி கொள்ளும் அதே நேரத்தில் இந்தப் பணியில் நம்மை எதிர்நோக்கி யுள்ள கடுமையான எதார்த்தங்களையும் நாம்

"ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்பதற்கு வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்".

ளைக்கிற் கொள்ள வேண்டும். நாம் பேரினப் பொருளியல் கோட்பாட்டின் சிக்கலான பகுதி களுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனால், மாபெரும் மக்கட் தொகையின் இலட்சக்கணக் கான ஏழைகளையும் கொண்டுள்ள நம்மைப் போன்ற ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பொருத்த வரையில் வளர்ச்சித் திட்டம் என்பது நம்முடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் அமைந்த நமது தயாரிப்பாக இருக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஏழை மக்களின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்னும் இறுதிச் சோதனையிலும் அது வெற்றிபெற இணக்கமான அணுகுமுறைகளை மேற் கொள்வதே புத்திசாலித்தனம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் வேளையில் நமது நாட்டைப் போன்ற ஒரு நாட்டின் பொருளியல் [illegible] ஏழை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை அளிப்பது என்னும் இறுதிச் சவாலைச் சந்திப்ப தற்கு, வளர்ச்சிப் பொருளாதாரம் புதிய வழிவகை களைக் கண்டறிய வேண்டும். ஏழ்மையை அகற்று வது என்னும் இந்தப் பிரமாண்டமான வேலையே 8-வது திட்டத்தின் மையப் பொருளாக அமைய வேண்டும். இந்த வகையில் இந்தியா மேற்கொள்கின்ற சோதனை, [illegible] இணையற்றதாக இருக்க வேண்டும்.

விரைந்து மாறிவருகின்ற ஓர் உலகத்தில் நாம் தன்னந்தனியாக இருந்துவிட முடியாது. வளர்ந்த நாடுகளில் கூட மறுபரிசீலனைக்கான அடை யாளங்கள் தென்படும் இந்த நேரத்தில் உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணைந்து செல்வது என்பது எளியது அல்ல. பண வீக்கம் கட்டுப் படுத்தப்பட வேண்டும். குறிப்பாக உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு ஏழை மக் களைப் பாதித்திருக்கிறது. அந்த ஏழைகள் நலம் காக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். எங்களைப் பொருத்த வரையில் ஒரு திறமையான பொது விநியோக முறையை ஏற்படுத்தி அரிசி, தானியங்கள் ஆகியவற்றின் விலைகளை எளிய மக்கள் வாங்கக்கூடிய நிலையில் தொடர்ந்து வைத் திருக்கின்றோம்.

மாநில அரசுகள் மக்களோடு அவர்களது அன்றாட வாழ்க்கையில் நெருங்கியிருக்க வேண்டி யுள்ளது. ஆகவே, உணவுப் பொருள் விலையுயர் விலிருந்து ஏழை மக்களைக் காக்கும் நிதிச் சுமையை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டி யுள்ளது. நிதிக் கட்டுப்பாட்டின் தேவை முதலீடு செய்வதற்கான நிதியாதாரங்களைத் திரட்டுதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்ற நேரத்தில் பட்டினி யையும் இல்லாமையையும் அகற்றுவதே நமது பொருளாதாரத் திட்டத்தின் முதல் குறிக்கோளாக வும் உடனடிக் குறிக்கோளாகவும் இருக்க வேண்டு மென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உணவுப் பொருட்களின் விலையை ஒரு தலைப் பட்சமாக உயர்த்திவிடக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையும் கவனமும் செலுத்தப்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஏனென்றால், மாநிலங்களின் நிதிநிலைமையே தடுமாறச் செய்துவிடக் கூடியதாகும்.

வேளாண்மை ஆராய்ச்சிக்கு நாங்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறோம். மேலும், உழவர் பெருமக்களுக்குப் புதிய தொழில் நுட்பம் சென்று சேரும் வகையில் திறன்மிக்க விரிவாக்கப் பயிற்சியையும் அளித்து வருகிறோம். அதே நேரத்தில் தமிழ்நாட்டில் மேலும் நீர்நிலை ஆதாரங்கள் அமைவதற்கில்லை என்பது குறித்தும் [illegible] குறித்தும் நாங்கள் கோடிட்டுக் காட்டுகிறோம்.

மத்திய அரசால் வெளியிடப்பட்டிருக்கின்ற திட்டம் சம்பந்தமான குறிப்புகள் தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற இந்த மோசமான சூழ்நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன. தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு உபரி நீரையும் வெள்ளப் பெருக் கையும் கொண்டுசெல்ல வேண்டும் என்பதில் புதிய பார்வை தேவை என்பதை அழுத்த நான் வலி

"8-வது திட்டத்தின் மையக்கருத்து இந்த நூற்றாண்டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும்".

புறுத்தி வருகிறேன். துணைத் தலைவர் அவர்கள் 8-வது திட்டத்தில் படுகை நீர்ப் பரிவர்த்தனை களை நிறுவுவதற்கும் குறிப்பாக தீபகற்ப இந்தியா வின் நதிநீர்த் தொகுப்பை அமைப்பதற்கும் என்னிடம் உறுதி வழங்கியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தத் திட்டத்திற்காகப் போதுமான ஒதுக் கீடுகள் இருக்குமென நான் நம்புகிறேன். தற் போதுள்ள நீர்ப்பாசன முறையைக் குறிப்பாகக் காவிரி டெல்டாப் பகுதியை மேம்படுத்த மத்திய அரசு சிறப்பான உதவியை வழங்க வேண்டியதன் அவசியத்தை நாம் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

8-வது திட்டத்தின் மையம் இந்த நூற்றாண் டின் இறுதியில் முழு வேலைவாய்ப்பு என்னும் இலட்சியமாக இருக்க வேண்டும், விரைந்து முன் னேறுதல், நாட்டை நிர்மாணிக்கும் நற்பணியில் அதிகார வர்க்கத்தின் தடைகளிலிருந்து விடுபட்டு ஈடுகொடுத்தல் ஆகியவற்றில் தனது அடிப்படை நம்பிக்கையை மீண்டும் காணும் இலட்சியப் பயணமே 8-வது திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

குறிப்பீட்டுத் திட்டமானது தனியார் துறை பங்கேற்பு மலரும் வகையில் உதவிகரமாக இருக்க வேண்டும். எங்களது மாநில புதிய தொழிற் கொள்கையில் இதைத் தெளிவாகவே விளக்கி யிருக்கின்றோம். தனியார் துறை ஈடுபாட்டுக்கு வசதியளிக்கும் வகையில் முனைப்பான ஓர் அணுகுமுறையோடு விரைந்து தொழில், மயமாக்கு வதில் நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டி ருக்கின்றோம். இந்த முயற்சியில் மத்திய அரசின் [illegible] ஆதரவு எங்களுக்குத் தேவைப்படுகிறது.

புதிய [illegible] கடனுதவி [illegible] யுள்ளது. இந்த யோசனை வரவேற்கத் தக்கது. ஒழுங்கு முறை இல்லாத சூழ்நிலையில், முனைப் பான தொழில் வளர்ச்சியின் அதிகாரங்களும் பொறுப்பும் இப்போது முழுவதுமாக இதைப் போன்ற நிறுவனங்களையே சார்ந்திருக்கின்றன. இந்தப் புதிய சூழ்நிலையில் ஒரு நிலையான முறைக்

"தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல் மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம்".

"சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண்மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும்".

கனத் திட்டமிடுவது அவசியமாகும். நிதி முறைக் கான குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பிராந்திய நிலையில் 4 அல்லது 5 தொழில் வளர்ச்சி வங்கிகளை நிறுவ யோசனை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வங்கிகளின் குழுவில் மாநில அரசின் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்வது மேலும் பொருத்தமானதாகும். அவர் களின் செயல்முறையில் இது தெளிவை உறுதிப் படுத்தும். சென்னை ஒரு பெரிய நிதி சேவை மையமாக இருப்பதால், தென்மண்டலத் தொழில் வங்கியின் தலைமையகமாக இருக்கலாம். வேலை வாய்ப்பில் தன்னிறைவை அடைய வேண்டும் என் னும் எங்களது முயற்சியில் நாங்கள் சிறு தொழில் களுக்கும் வர்த்தகத்திற்கும் குறிப்பாக பண்ணைகள் இல்லாத கிராமப்புறங்களுக்குச் சிறப்பிடம் அளிக்க வேண்டியுள்ளது. நிதித் துறையின் சீர்திருத்தங்கள் முன்னுரிமைத் துறைக்குக் கடனுதவி அளிப்பதில் எந்த ஒரு [illegible] வருக்கக்கூடாது. [illegible], பொருள் உற்பத்தித் துறையின் மாற்ற[illegible] குறித்தான பகுப்பு இத் துறையின் இன்றியமையாத முக்கியத்துவத்தைத் [illegible] நிலையில், அதிக அளவில் வேலை வாய்ப்பு உற்பத்தித் திறனை ஏற்படுத்தக்கூடிய முன்னுரிமை பெறத்தக்க துறைகளுக்குத் தேவையான கடனுதவி அளிப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் எந்த ஒரு மத்திய முதலீடும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தில்லை என்பதைக் குறிப்பிட்டேன். 8-வது திட்டத்தில் மத்திய பொதுத்துறைத் திட்டங்களில் தமிழ்நாட்டிற்கான பங்கு குறித்து நான் அதிருப்தி தெரிவித்தேன். எனது வேண்டுகோள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது குறித்து மகிழ்ச்சி யடைகிறேன். சென்னையில் பொதுத்துறை சார் பில் நிறுவப்படவிருக்கும் ஏரோமேடிக்ஸ் திட்டத் திற்கு ஒப்புதல் அளித்தமைக்காக பிரதமர் அவர் களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த மகிழ்ச்சிகரமான தொடக்கத்தோடு பழைய நிலைமாறும் என்றும், 8-வது திட்டத்தில் தமிழ்நாட்டில் மத்திய முதலீடு அதிகரிக்கப்பட

"கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம்".

வேண்டும் என்னும் எங்களது தொடர்ந்த வேண்டு கோளுக்கு மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத் திப் பரிசீலிக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

எரிசக்தித் துறையின் விரைவான வளர்ச்சிக்கு உயர்ந்தபட்ச முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். குறிப்பாக, நெய்வேலியில் 3-வது லிக்னைட் சுரங்கம் வெட்டுவது குறித்து குறிப்பிட விரும்பு கிறேன். திட்டக் குழுவில் குறிப்புகளில் இது காணப்படவில்லை. 8-வது திட்டத்தில் இதனை விரைந்து தொடங்குவது அவ்சியமாகும்.

அதுபோலவே தமிழ்நாட்டுக்கு எரிவாயு கொணரும் சதர்ன் கேஸ் கிரிட் பற்றிய எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. காவிரிப் படுகை யில் PY-3, PY-1 ஆகிய இரண்டையும் பயன்படுத் துவம் அதனுடைய தொடர்போடு எரிவாயுவைக் கொண்டு செயற்படும் 300 மெகாவாட் மின் திட்டத்தைப் பொதுத்துறை அல்லது கூட்டுத்துறை மூலம் மேற்கொள்ள விரும்புகிறோம்.

என்னுடைய இந்த ஆலோசனை கருத்திற் கொள்ளப்படும் என்று நான் நம்புகிறேன். விரைவில் நிறைவடைய இருக்கின்ற புதிய அனல் மின் திட்டங்களுக்குத் தேவையான நிலக்கரி கொண்டு வருவதற்காகச் சென்னைக்கு அருகில் எண்ணூரில் அமைக்கப்படும் துணைத் துறைமுகத் திட்டத்திற்கு உடனே ஒப்புதல் அளிக்கப்பட்டு இந்த அதிமுக்கிய மான திட்டத்துக்குரிய பணிகள் தொடங்கப்படு மென்று நான் நம்புகிறேன்.

[illegible] மின்னாற்றலுக்கான திட்ட [illegible], வளர்ச்சி ஆகியவற்றில் கூடுதல் தனியார் துறை அழைக்கப்பட வேண்டும் என்று அண்மை யில் அறிவிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், எல்லா மட்டங் களிலும் விரைந்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஜெயங்கொண்ட சோழபுரத்தில் 1,500 மெகாவாட் உற்பத்தி செய்யும் மகத்தான லிக்னைட் சுரங்க மற்றும் அனல்மின் திட்டத்தை நிறுவ நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்த மாபெரும் திட்டம் மொத்தம் 7 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்தில் கூட்டுத் துறை மூலம் அமைக் கப்பட இருக்கிறது. இதற்காக ஒரு புதிய கம் பெனியை நிறுவி செயல் சாத்தியக் கூறுகளைப் பற்றிய அறிக்கையை உருவாக்கி வருகிறது. இந்தத் திட்டத்திற்கான இசைவு விரைவில் அளிக்கப் படுமென்று நான் நம்புகிறேன்.

தனியார் துறையில் தூத்துக்குடியில் ஒன்றும் கடலூரில் ஒன்றுமாக ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன்கொண்ட, நிலக்கரியைப் பயன் படுத்தும் அனல்மின் திட்டங்களை உருவாக்க நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். இந்த மின் நிலையங்களை இயக்கத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி விரைவில் கிடைக்கு மென்று நான் நம்புகிறேன். சோவியத் யூனியன் துண்டு துண்டுகளாக்கப்பட்ட பின்னணியில் கூடங் குளம் அணு ஆற்றல் திட்டம் பற்றிய கருத்துக்கள் மறுபடி வகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நம் நாடு மிகப் பெரியது. இது ஒரு மாபெரும் சந்தை. இந்தச் சந்தையை நிலையாக வைத்திருக்கக் கூடிய சில கோட்பாடுகள் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்குத் தீங்கு பயக்கும் வகையில் மாறு தல்கள் அடைந்துள்ளன. எஃகு, நிலக்கரி போன்ற முக்கியமான பொருள்களுக்கு விலை குறிக்கும் விஷயத்தில் தெள்ளத் தெளிவாக ஒரு பாதகமான சூழ்நிலைக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. சரக்குக் கட்டணம் சமன் செய்யப்பட வேண்டு மென்ற எங்கள் வேண்டுகோளுக்கு எந்த மறு மொழியுமில்லை. குறைந்தபட்சம் தொலைதூர மாநிலங்களிலிருந்து இந்த விலை உயர்வான பொருள்களைப் பெறக்கூடிய கடுமையான நிலை யிலிருந்து நாங்கள் விடுவிக்கப்படலாம். குறிப்பாக நிலக்கரி கொண்டு வருவதில் நாங்கள் அடையும் இன்னல்களை நான் குறிப்பிடுகிறேன்.

நிலக்கரி போன்ற மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முழுமையான வசதி மேலும் வளர வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் போன்ற ஒரு மாநிலம் வெளிச்சந்தையிலிருந்து அடிப்படை மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு ஏன்

"எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் [illegible] ஒழிப்புத் திட்ட[illegible] முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலை வாய்ப்பு, சிறந்த விநியோக் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும்".

அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு எந்த ஒரு காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

திட்டக் குழுவின் கடந்த கூட்டத்தில் வெளிப்புறச் சார்பான பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான வழிமுறைகளைக் குறிப்பிட்டிருந்தேன். இதைச் சாத்தியமாக்கும் இரண்டு சாதனங்களையும் கூடத் தெரிவித்திருந்தேன். நான் குறிப்பிடுபவை வரியில்லாத் துறைமுகமும் சிங்கப்பூருடன் வணிகச் சந்தையும் ஆகும். வரியில்லா ஒரு துறைமுகத்தை அறிவித்திருப்பது தமிழகத்தில் வரியில்லா இன்னொரு துறைமுகத்தை விரைவில் அமைப்பதற்குத் தடையாக இருக்காது என்று நம்புகிறேன். இந்த இரண்டு கருத்துக்களுக்கும் விரைவில் செயல்வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் ஆர்வமாக இருக்கின்றேன். அதன் மூலம் 8-வது திட்டத்தில் நல்லதொரு வளர்ச்சி நாம் எட்டுவது உறுதி செய்யப்படும்.

சாலை அமைத்தல், குடிநீர் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் போதுமான ஒதுக்கீடுகளை நாம் ஏற்படுத்த வேண்டும். உண்மையான வளர்ச்சி அதனால்தான் ஏற்படும். குறிப்பாக எங்கள் மாநிலத்திலுள்ள சாலைகளின் நிலையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கிழக்குக் கடற்கரை தேசிய நெடுஞ்சாலை அமைப்பது பற்றியும், சில தேசிய நெடுஞ்சாலைகளில் 4 வழிப்பாதைகள் அமைப்பதற்கும் மாநில நெடுஞ்சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றம் செய்வதற்கும் நாங்கள் விண்ணப்பம் செய்திருந்தோம். இந்தத் திட்டங்களுக்கான விரைவான அனுமதியை எதிர்பார்க்கின்றோம். மத்திய சாலை நிதியிலிருந்து மாநிலங்களுக்குக் கூடுதலாகத் தொகை ஒதுக்குவது குறித்து விரைவான முடிவெடுக்குமாறும் நான் வேண்டிக் கொள்கிறேன். நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும் இந்த நிதிக்கு அளிக்கப்படும் கூடுதல் தொகைகள் மாநிலங்களுக்குக் கிடைக்க இன்னும் வழிவகை செய்யப்படவில்லை. சாலை மேம்பாட்டுக்காக நிதியளிப்பதற்குச் சுங்கம் வசூலிக்கும் ஒரு திட்டத்திற்கு நாங்கள் இறுதி வடிவம் தந்திருக்கின்றோம். சாலைகளைச் சரியாகப் பேணுவதற்கு நாங்கள் உயர்ந்த பட்ச முன்னுரிமை வழங்கியிருக்கின்றோம்.

8-வது திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு நாங்கள் மிகுந்த முன்னுரிமை அளித்திருக்கின்றோம். ஒவ்வொரு குடியிருப்புக்கும் குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரத்தையாவது வழங்குகின்ற சோதனையில் நாங்கள் வெற்றி கண்டிருந்தாலும் கோடை காலத்தில் முற்றிலும் சிரமத்திற்கு உள்ளாகின்ற எண்ணற்ற குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குகின்ற பிரமாண்டமான பணியை நாங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு நாங்கள் வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தபடவிருக்கும் ரூ.528.50 கோடி திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இந்தத் திட்டத்திற்குக் கூடிய விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் நீண்டகாலமாக நிலவிவரும் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறை நன்றாகத் தெரிந்ததே. நான் ஆந்திர முதல்வருடன் பயனளிக்கக் கூடிய ஆலோசனைகளை நடத்தினேன். அதன் விளைவாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சென்னைக்கு, கிருஷ்ணா நதிநீர் கிடைக்க உறுதி செய்யும் வகையில் நாங்கள் புதிய ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடிந்திருக்கிறது. அதே காலகட்டத்தில் ரூ.1,180.20 கோடி முதலீட்டில் கிருஷ்ணா நீரைச் சுத்தப்படுத்தி வழங்குவதற்கான மிகப்பெரிய திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டம் உலக வங்கியின் ஒப்புதலுக்குக் காத்திருக்கிறது.

உண்மையில் நான்கு பெருநகர்களிலும் பிரச்சினைகள் பயமுறுத்திக்கொண்டு இருக்கின்றன. 8-வது திட்டத்தில் இந்த நான்கு பெருநகர்களிலும் நிலவும் மோசமான நிலைமையைச் சமாளிக்க ஒரு திட்டவட்டமான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். சென்னையை எதிர்நோக்கியுள்ள சில முக்கிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக சென்னை 2000 என்னும் ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதற்குத் தேவைப்படும் செலவினமோ பெரிய அளவிலிருக்கிறது. இந்தச் சிறப்பான நிதி ஆதாரங்களைத் தேடுவது மாநிலத்துக்கு இயலாத காரியம்.

1989-90-வது ஆண்டுக்கான 9-வது நிதித் திட்டத்தில் சென்னை எந்த ஒரு உதவி அடிப்படையிலான பரிந்துரைகளிலும் இடம் பெறவில்லை. இந்த நான்கு பெருநகரங்களிலும் உள்ள நகர்ப்புற ஏழை மக்களின் மறுவாழ்வுத் திட்டத்திற்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் புதிய திட்டமொன்றை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஏழைகளின் பாதுகாப்பான ஏற்பாட்டிற்கு முக்கிய இடத்தை அளித்திருக்கின்றோம். அதே நேரத்தில் மனித வளத்தை மேம்படுத்துவதற்கே திட்டத்தில் முதலிடம் தந்திருக்கின்றோம். கல்வி, சத்துணவு, நலவாழ்வு, நலிந்தோர்க்கான திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளுக்குச் சிறப்பிடம் தந்திருக்கின்றோம். ஓர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்திற்காக வெளிநாட்டு உதவியை வேண்டியிருக்கிறோம். பெண் குழந்தைக் கல்வி, கல்வியின் தர மேம்பாடு, ஆகியவற்றுக்கு இத்திட்டம் மிகவும் முக்கியமானதாகின்றது. விரைவில் இதற்கான இசைவை எதிர்பார்க்கின்றோம். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் பெற்றுள்ள வெற்றி, பரிசு பெறுவதற்கும் பதிலாக நிதி ஆதாரங்கள் மறுக்கப்படுவதற்கே வழிகோலியிருக்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினைக்குத் தேவையான அரசியல் அர்ப்பணிப்பைப் பெறுவதற்கு ஆற்றல் மிக்க ஓர் ஊக்குவிப்பை எதிர்பார்க்கிறோம். தேசிய சராசரிக்குக் கீழாகத் தனிநபர் வருமானங்கொண்ட மாநிலங்களுக்கு காட்கில் பரிந்துரைபடி நிதி ஒதுக்கீடு செய்யும் போது வருமானக் கணக்கீடு, 1971-ஆம் ஆண்டு மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி அமைய வேண்டும் என்னும் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் தொகை அடிப்படையில் 60 சதவிதப் பங்கைப் பிரித்தளிக்கும் நடைமுறைக்கு இயைபுடையதாக இது இருக்கும். மக்கள் தொகைக் குறைப்பில் மிகச் சிறப்பான பணியாற்றியிருக்கும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து விடக்கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறேன். அவ்வாறு குறைத்து விடுவது முறையற்றதாகும்.

எங்கள் மாநிலத்தின் 8-வது திட்டத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் முன்னுரிமை பெறும். நிலையான வளர்ச்சி, அதிக அளவில் வேலைவாய்ப்பு, சிறந்த விநியோகக் கோட்பாடு, நேரடி வறுமை ஒழிப்புக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் சிறப்பிடம் பெறும், ஜவஹர், ரோஜ்கார் யோஜனா திட்டத்துக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டிருப்பது குறித்து என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புற ஏழை மக்களின் கைகளில் வருமானத்தை நேரடியாக அளிக்கும் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடுகள் உண்மையிலே தொடர்ந்து காக்கப்பட வேண்டியவை. கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் கூட ஏழைக்குத் தினசரி உணவை மறுத்துவிடக்கூடாது. விநியோக முறைகளின் நிர்வாகத்தில் புதுமை காணல், உடல்நலம் பேணல், சத்துணவு வழங்குதல், நேரடி ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கு நாம் சிறப்பிடம் தரப்பட வேண்டும். புதிய வழிகளை அறிமுகப்படுத்துதல் அடிப்படை

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் முதலாண்டு நினைவு நாளன்று (21.5.92), தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலக அலுவலர்களும், ஊழியர்களும் "பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி" எடுத்துக் கொண்டார்கள்.

"சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது, சிறுசேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும்":

நிலையை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்காக இந்தத் திட்டங்கள் பற்றிய இன்னும் கூர்ந்த பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

முக்கியமான துறைகளிலும் புதிய துறைகளிலும் தனியார் துறை பெருமளவில் பங்கு பெறுகையில், உண்மையிலேயே நேரடிப் பொறுப்பு தனக்கு ஓரளவு குறையுமென்று மத்திய அரசு எதிர்பார்க்கலாம். சமூகப் பணிகளில் பெரும் பங்கு ஆற்றும் பொறுப்புள்ள மாநிலங்களுக்கு நிதிச்சுமை இன்னும் கூடும். எனது பார்வையில் மாநிலங்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்புகள் பங்கீடு செய்யப்படுகின்றனவே ஒழிய அந்த அளவுக்கு நிதி ஆதாரங்களில் பங்கீடு இருப்பதில்லை. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவிகள் மேம்படுத்தப் பட வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்த உயர்ந்து வரும் பொறுப்புகளும் வட்டிச் சுமைகளும் அதிகரிக்க அதிகரிக்க மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிகர நிதி மாற்றம் உண்மையில் மிகக் குறைவாகவே உள்ளது. 8-வது திட்டம் கடினமான சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று நாம் ஒத்துக் கொண்டிருக்கிற அதே வேளையில், மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதியளவு உயர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உண்மையில் ஒவ்வொரு திட்டக் காலத்திலும் இவ்வாறு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். 8-வது திட்டத்திலும் இது இயலும் என்றே நான் நம்புகிறேன்.

1991 டிசம்பரில் தேசிய வளர்ச்சிக் குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்ட காட்கில் திட்டத்தால் மாநிலங்களுக்கான மத்திய உதவி பிரித்தளிக்கப் படுகிறது. தனிநபர் வருமான விவரங்களைச் சரியாகக் கணக்கிடுவதில் உள்ள சிக்கல்களை அந்தக் கூட்டத்திலேயே நான் எடுத்துக்காட்டியிருந்தேன். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை தனிநபர் கணக்கீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படலாம் என்னும் என்னுடைய யோசனை இந்த சிக்கலைத் தீர்த்து வைக்கக் கூடும்.

தனிநபர் வருமானம் ஒவ்வொரு ஆண்டும் கணக்கிடப்படுவதால் இந்த ஆலோசனையைச் சுலபமாக அமல்படுத்தலாம். தமிழ்நாடு சந்திக்கவிருக்கும், பல்வேறு சிறப்புப் பிரச்சினைகளுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. நிதி ஒதுக்கீட்டின் பொழுது இது கருத்தில் கொள்ளப்படும் என நான் நம்புகிறேன்.

நம் கடல் எல்லைப் பிரச்சினை அறியப் பட்டது. கடந்த ஆண்டு சிறு உதவியைப் பெற்றுள்ளோம். குறிப்பாக எல்லைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள மாநிலங்களுக்குள்ள மத்திய அரசின் சிறப்பான நிதி ஒதுக்கீடு தொடர வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாநிலத் திட்டங்கள் பெரும் அளவில் வெளிநாட்டு உதவியை அடிப்படையாகக் கொண்ட நிதி ஆதாரங்களையே நம்பி உள்ளது. புதிய திட்டங்கள், மற்ற பிரச்சினைகளைக் குறித்து மத்திய மாநில அரசுகளுக்கிடையே நல்லதொரு பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும். வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிக்குப் போடப்படும் நிபந்தனைகள் குறித்து நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை. மத்திய நிதி நிலையறிக்கையைச் சரி செய்யும் குறுகியகாலக் கண்ணோட்டத்தோடு இதை நாம் வழங்கக்கூடாது. மாநிலங்கள் பெரும்பாலும் சமூக நலப் பிரிவில் கடினமான திட்டங்களை அமல்படுத்தி வருகிறார்கள். அவர்களைக் கூடுதல் செலவினை ஏற்கச் சொல்வது சரியாகாது. வெளியிலிருந்து பெறப்பட்ட 100 சதவிகித உதவிகள் இன்னும் சில மாநிலங்களிலுள்ள துறைகளுக்குப் போய்ச் சேராமல் உள்ளது. ஏற்கெனவே அளிக்கப்பட்ட உறுதிகளின் அடிப்படைகளில் 100 சதவிகித உதவி எந்தவித விலக்கும் இல்லாமல் மாநிலங்களிலுள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.

சிறுசேமிப்பு, கடன் வசதிகளை வெகுவாகக்

"8-வது திட்டத்தைத் தொடங்குகின்ற இவ்வேளையில், கோடிக் கணக்கான இந்தியர்களுக்குச் சிறப்பான வாழ்க்கையை வழங்குகின்ற நற்பணிக்கு நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம்!"

(42—ஆம் பக்கம் பார்க்க

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாள்

மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் மலர் அஞ்சலி

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், கொடுமையான முறையில் ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு முடிவடைந்து, 21.5.1992 அன்று முதலாம் ஆண்டு நினைவு நாள் நாடெங்கும் அனுசரிக்கப்பட்டது.

அன்னாரது நினைவு நாளை முன்னிட்டு ஸ்ரீபெரும்புதூரில் அவர் உயிர் நீத்த இடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்தில், மலர் அஞ்சலி செலுத்துவதற்காக மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் டெல்லியிலிருந்து விமானப்படை விமானம் மூலம் 21.5.92 காலை சென்னை வந்தார்.

மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, திரு. வாழப்பாடி கே. ராமமூர்த்தி, மத்திய அமைச்சர்கள் ஆகியோர் ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபெரும்புதூருக்கு அன்று காலை 10 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் இருந்து இறங்கியவுடன், நேராக ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்திற்குச் சென்றனர். அங்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். அவர்களைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு. சங்கரானந்த், திரு. விஜயபாஸ்கர் ரெட்டி, திரு. பொதேதார், திரு. குலாம்நபி ஆசாத், மாண்புமிகு கேரள முதல்வர் திரு. கருணாகரன், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி ஆகியோரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்களும் மலர் அஞ்சலி செலுத்தினார்.

மலர் அஞ்சலி செலுத்தி முடிந்ததும், மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ராஜீவ் நினைவிடம் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடைக்குச் சென்றனர். மாண்புமிகு பிரதமர் அவர்கள், 'பயங்கரவாத எதிர்ப்பு' உறுதிமொழியை ஆங்கிலத்தில் படித்தார். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் உள்பட அனைவரும் திரும்பச் சொல்லி 'பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி' எடுத்துக் கொண்டனர்.

அந்த உறுதிமொழி வாசகம் வருமாறு:

'அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகிய நம் நாட்டின் மரபுகளில் தளராத நம்பிக்கையுடைய இந்திய மக்களாகிய நாம், எல்லா வகையான பயங்கரவாதங்களையும் முழு ஆற்றலோடு எதிர்ப்போம் என உறுதி கூறுகிறோம். எல்லா மக்களிடத்தும், அமைதி, சமுதாய ஒற்றுமை, நல்லுணர்வு ஆகியவற்றைப் போற்றி வளர்க்கவும், மக்களுடைய உயிர்களுக்கும் மற்றும் நற்பண்புகளுக்கும் ஆபத்து விளைவிக்கும் பிரிவினைச் சக்திகளை எதிர்த்துப் போராடவும் நாம் உறுதி கொள்வோம்.''

பிரபல கர்நாடக இசை மேதை திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினார். அதற்குப்பின் 10.40 மணிக்கு மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஹெலிகாப்டரில் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

முன்னதாக, கோவையிலிருந்து வந்த ராஜீவ் காந்தி ஜோதியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், மறைந்த மாபெரும் தலைவர் ராஜீவ் காந்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
என். இளங்கோ.

அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தவிர்க்க மாநகராட்சியின் புதிய நடைமுறை

''திட்ட அனுமதிக்கு மாறாக அத்துமீறிக் கட்டடம் கட்டுவதைத் தொடக்க நிலையிலேயே அதாவது அடித்தளம் போடும்போதே தடுத்து நிறுத்துவதற்கு ஒரு புதிய நடைமுறையை அறிமுகப் படுத்தியுள்ளது.

''இதன்படி கோட்ட இளம் பொறியாளர், உதவிப் பொறியாளர் தங்கள் பகுதிகளில் திட்ட அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் அடித்தளம் போடும்போதே பரிசோதனை செய்யப்பட்டு அவை யாவும் அனுமதித்த திட்டப்படியே உள்ளன என்று சான்றிதழ் ஒன்றினை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். ஏதாவது மாறுதல் இருக்குமானால், அவர்கள் உடனடி யாக உரிமையாளருக்கு நோட்டீசு அளித்து மேலும் கட்டடம் கட்டுவதைத் தடுத்து நிறுத்தத் தலத்திலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டடம் கட்டி முடியும் வரை பின்னர் ஏதும் மாறுபாடுகள் செய்யாதவாறு கண்காணிக்க வேண்டும்.

''கட்டடம் கட்டப்பிட்ட . பிறகு அடித்தள மட்டத்திலேயே வேறுபாடுகளோ அத்துமீறல்களோ கண்டுபிடிக்கப்பட்டால் கோட்ட-இளம் பொறியாளர்கள், உதவிப்பொறியாளர்கள் பொறுப்பாவார்கள். உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். திட்ட அனுமதிக்குப் புறம்பாக அத்துமீறிக் கட்டடம் கட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வருகிறது. எனவே, அனைவரும் கட்டட விதிகளின்படி கட்டடம் கட்டுவதை உறுதி செய்ய மாநகராட்சியோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்'' என்று சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. இரா. பூர்ணலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

திரைப்பட நகர்

முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை - தரமணியில் இருக்கின்ற தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி வளாகத்தில், 28.5.92 அன்று மிக எளிமையாக நடைபெற்ற 'திரைப்பட நகர் அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டார்.

செய்தி சுற்றுலாத் துறைச் செயலாளர் திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., அவர்கள், திட்ட விளக்கத்தோடு கூடிய தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

திட்ட விளக்கம்:

''இந்தத் திரைப்பட நகரின் முதல் கட்டப் பணிகள் 70 இலட்சம் ரூபாய் முதலீட்டில் துவங்கும். படம் பிடிக்கத் தேவையான பள்ளி, கல்லூரி, பாலம், விமான நிலையம், புகைவண்டி நிலையம் குடிசைகள், கோயில் அரண்மனை, மாளிகைகள், நீச்சல் குளம் போன்ற எல்லாம் இங்கேயே உருவாக்கப்படும்; தண்ணிருக்குள் படம் பிடிக்கும் வசதியும் செய்து தரப்படும். ஒலிப்பதிவு, படத்தொகுப்பு, ஒப்பனை நிலையமெல்லாம் இங்கேயே அமையும்.

''இந்நகரில் - படப்பிடிப்பிற்காக வரும் நட்சத்திரங்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் தங்க ஓய்வில்லங்களும் உருவாக்கப்படும்; சுற்றுலாப் பயணிகள் படப்பிடிப்பைக் காணச் செய்து அதன் மூலம் அரசுக்கு ஒரு வருவாயும் ஈட்டப்படும்.''



திரைப்பட நகர் - மாதிரி வடிவம்

விளக்கேற்றி வைத்தல்:

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - புதிதாக அமையவிருக்கும் 'திரைப்பட நகருக்கு' அடிக்கல் நாட்டி - அதற்கான பெயர்ப் பலகைகளையும் திறந்து வைத்தார். அதன் மாதிரி வடிவமைப்பையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பூச்செண்டு:

திரைப்படக் கல்லூரி மாணவ-மாணவிகள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்ச்செண்டும் -

திரைப்படக் கல்லூரி நிர்வாகத்தினர், அலுவலர்கள் சார்பில் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

பங்கேற்றோர்:

இந்த இனிய விழாவில் - மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி திரு. தம்பிதுரை அவர்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர் முதலான உயர் அதிகாரிகளும் பங்கேற்றார்கள்.

எளிய விழா:

மிக எளிய முறையில் நடைபெற்ற இந்த விழா நிகழ்ச்சிகளைச் செய்தித்துறை இயக்குநர் திரு. க. கணேசன் இ.ஆ.ப., அவர்கள் தொகுத்து வழங்கினார்.

விழா நிறைவுற்றபின் - செய்தியாளர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்த செய்தித்துறை இயக்குநர் அவர்கள், "இந்தத் திரைப்பட நகருக்கு வரும் படத் தயாரிப்பாளர்கள், திரைப்படம் தொடர்பான எந்த ஒரு பணிக்காகவும் வெளியே செல்ல வேண்டிய அவசியமில்லாமல், படத்தயாரிப்புத் தொழில் எல்லாவற்றையும் இங்கேயே செய்து படத்தை முடித்துக்கொண்டு மனநிறைவோடு வெளியே செல்லத்தக்கதாக இந்நகரை ஓராண்டுக் காலத்திற்குள்ளேயே உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

தனி அதிகாரி:

மேலும் இயக்குநர் அவர்கள் விளக்கமாக அதுபற்றித் தெரிவித்ததாவது:

"இந்தத் திரைப்பட நகரம் 86 ஏக்கர் பரப்பளவில் அமையும். இதன் திட்ட மதிப்பீடு இரண்டு கோடி ரூபாய்க்குள் இருக்கலாம். இந்தியாவில் இது போன்ற திரைப்பட நகரம் இப்போது பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் மட்டுமே உள்ளது; மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனைப்படி, அவற்றையெல்லாம்விட மேலானதாக நவீன வசதிகளோடு இது அமையும். திரைப்பட நகரின் தனி அதிகாரியாக அரசு மூலம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு. எம். சண்முகம் நியமிக்கப்பட்டிருக்கிறார்."

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.

கோவை புதிய விமான நிலையக் கட்டடத் திறப்பு விழா

கோவையில் புதிய விமான நிலையக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்.

கோவை பீளமேடு விமான நிலையம் ரூ.10 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அதன் தொடக்க விழா, 15.5.1992 அன்று நடந்தது. அத்துடன் ரூ.165 கோடியில் தொழில்பேட்டை மற்றும் கோவை மாவட்ட நலப்பணித் திட்டங்கள் தொடக்க விழாவும் நடந்தது.

விமான நிலையம் அருகே பிரம்மாண்டமான விழா மேடை அமைக்கப்பட்டு இருந்தது. விழா மேடை அருகே கேரளாவில் நடைபெறும் புகழ்பெற்ற 'பூரம்' திருவிழாவின் போது யானைகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதைப் போல 9 யானைகள் வரிசையாக நின்று இருந்தன. யானைகளின் மேல் அமர்ந்தபடி பல வண்ணக் குடைகளை யானைப்பாகர்கள் பிடித்து இருந்தனர். ஒரு யானையின் மீது, 'தமிழக முதல் அமைச்சரே வருக வருக' என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.

விழாவுக்கு மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் தலைமை தாங்கினார். தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேடையில் இருந்த பொத்தானை அழுத்தி விமான நிலையப் புதிய கட்டடம் மற்றும் ரூ.164 கோடி செலவிலான வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

'கோவை விமான நிலைய விரிவாக்கத்தினைத் திறந்து வைக்கும் வாய்ப்பினை வழங்கியுள்ள மத்திய அரசுக்கும், இங்கே இன்றைய தினம் வருகை புரிந்து - நான்தான் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு என் மீது அன்பு பாராட்டியுள்ள மாண்புமிகு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் புதிய திட்டங்கள் எதனையும், எந்த மாநில அரசும் தொடங்க முடியாத ஓர் இக்கட்டான நிலை உள்ளதை அவர்களும் நன்கு அறிவார்கள். அத்தகைய இக்கட்டான அவல நிலை சூழ்ந்துள்ள



நேரத்தில்தான் தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநிலமாக்கும் எங்கள் இலக்கு நோக்கி நாங்கள் விரைந்து பணியாற்றிவருகிறோம். அந்த இலக்கின் ஓர் பணிதான், இன்றைய தினம் தொடங்கப்படும் திருப்பூர் சிட்கோ தொழிற்பேட்டை ஆகும். இதேபோல் தொழில்துறையில் பின்தங்கியுள்ள பிற பகுதிகளிலும் இவ்வாண்டு தொழிற்பேட்டைகள் அமைக்கும் திட்டங்களுக்கு நிதி நிலை அறிக்கையில் வழி வகுத்துள்ளோம் என்னும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

மேலும் இவ்வளவு கடுமையான நிதி நெருக்கடியிலும் பற்றாக்குறையிலும் இன்றைய தினம் திருப்பூர் தொழிற்பேட்டை மட்டுமல்லாது - கோவை மாவட்டத்திலும் ஏறத்தாழ 161 கோடி ரூபாய்க்கான நலத் திட்டங்கள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்தில் நிலவும் கடும் குடிதண்ணீர்ப் பஞ்சத்தின் கொடுமையைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நீண்ட நாட்களாகக் கோரிக்கை வடிவில் மட்டுமே இருந்து வந்த திட்டங்கள் இன்றைய தினம் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

இவை மட்டுமல்லாது வளர்ந்து வரும் கோவை நகர் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளின் தேவைகளையும் மனதில் கொண்டு, உரிய மருத்துவ வசதிகளுக்கும்-தொழிலாளர் நலனுக்கும் - வீட்டு வசதி மற்றும் சுகாதார வசதி போன்ற ஏனைய வசதிகளுக்கும், திட்டம் தீட்டப்பட்டு இன்று அத்திட்டங்களுக்கான பணிகள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன.

கோவை மாவட்டத்திற்கு மட்டுமல்லாது, தமிழகம் முழுமைக்கும் எங்கள் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் கடும் நிதி நெருக்கடிச் சுமைகளையும் தாங்கிக் கொண்டு எண்ணற்ற நன்மைகளைச் செய்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

'குறிப்பாக ஏழை எளிய விவசாயிகள் பலகாலமாகவே கடன் சுமையால் விழி பிதுங்கி நிற்கும் அவலத்தை உணர்ந்து கடன் சுமையால் வாடிநிற்கும் விவசாயிகளின் வாட்டம் போக்குவோம், எனத் தேர்தல் நேரத்தில் எல்லாத் தொகுதிகளிலும் நான் நேரில் வந்து வாக்குறுதி வழங்கி இருந்தேன்.

கடந்த 10 மாத காலமாக எனது அப்பிரதான வாக்குறுதியை நிறைவேற்றும் யோசனைகளை அதிகாரிகளிடம் கேட்டு வந்தேன். அரசின் வரவு செலவுத்திட்ட நிதி நெருக்கடியைச் சுட்டிக்காட்டி அது இயலாதே என்பதை அதிகாரிகள் என்னிடம் தெளிவாகக் கூறி வந்தனர். அவர்களிடம் நான் 'அத்தகைய பற்றாக்குறையைப் போக்கும் வழிமுறைகளைக் கூறுங்கள். அரசின் வருவாயைப் பெருக்கும் திட்டங்களைக் கூறுங்கள், ஏற்றுக் கொள்கிறேன்.

'இந்நாட்டின் முதுகெலும்பாய்த் திகழும் விவசாயி, ஒடிந்து மெலிந்து ஓடாய்த் தேய்ந்து போகாது தடுக்கும் இம்முயற்சிக்கு மட்டும் குறுக்கே நிற்காதீர்கள்' எனத் திட்டவட்டமாக நான் கூறியதை அடுத்து - இன்றைய தினம், நபார்டு நிறுவனம் தள்ளுபடி என்ற பேச்சே இருக்கக்கூடாது எனக் கடுமையாக கூறிய பின்னரும் கூட நாங்கள் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவது என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி 69.07 கோடி ரூபாய் அளவிலான விவசாயிகளின் கடன் சுமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதை அனைவரும் பாராட்டுவீர்கள் என நம்புகிறேன்.

இந்த 69 கோடியே 7 இலட்சம் கடன் சுமையை அரசு ஏற்றுக்கொள்வது என்பது வெறும் ஏட்டளவில் செய்துவிட்டு அதன் விளைவை அடுத்து வரும் அரசாங்கத்தின் தலையில் சுமத்திவிட்டுச் சென்றதைப் போல அல்லாமல், ஒவ்வொரு விவசாயிக்கும் அந்த விவசாயிக்குரிய ஊக்கத்தொகையை 'செக்' மூலம் நேரடியாக வழங்கும் அரசாங்கம், உங்கள் சகோதரி தலைமையில் அமைந்துள்ள இந்தத் தமிழக அரசு ஒன்றாகத்தான் இருக்குமே ஒழிய வேறொரு அரசாங்கமாக இருக்காது என்பதையும் பெருமிதத்தோடு கூறிக் கொள்கிறேன்.

மேலும் இதுவரையில் பணம் கட்டாது, தவணை கடந்த நிலையில் இருந்த விவசாயிகளுக்குத்தான் தள்ளுபடிச் சலுகை அரசாங்கத்தின் மூலம் முன்பெல்லாம் அறிவிக்கப் படும். ஆனால் இப்பொழுதுதான் முதல் முறையாக ஏற்கெனவே தாங்கள் வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்திய அந்த நல்ல விவசாயிகளுக்கும், அவர் செலுத்திய தொகையின் அளவைக் கணக்கிட்டுக் கடன் கட்டாத விவசாயிகளுக்குத் தற்போது வழங்கப்படும் ஊக்கத்தொகையைப் போலவே விவசாயிகள் ஏற்கெனவே கட்டிய தொகையையும் திருப்பித் தரும் அரசாகத் திகழ்கிறது உங்கள் அரசு

என்பதை மகிழ்ச்சியோடு வரவேற்பீர்கள் எனக் கருதுகிறேன்.

அடுத்து நாங்கள் ஆட்சிக்கு வந்த சில தினங்களில் இயற்கையாகவே அன்றைக்கு ஏற்பட்ட சில சூழ்நிலைகளினால் விலைவாசிகள் கூடின. ஆனால் இன்று நாங்கள் எடுத்துள்ள சில தீவிர நடவடிக்கைகளால் பொதுவாக விலைவாசிகள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளன. மேலும் நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கொஞ்சம் கூட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டோம். அதன் காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து அடுத்த கணமே 3 ரூபாய் 30 காசு என்றிருந்த அரிசி விலையை 50 காசு குறைத்து 3 ரூபாய் என அறிவித்தோமே இதைப்போல் 50 காசு அளவிற்கு அரிசி விலையைக் குறைத்த வேறு ஆட்சி ஏதேனும் உண்டா என எண்ணிப்பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு குறைந்த விலையில் அரிசி போடுவதால் மட்டும் அரசுக்கு ஆண்டுக்கு 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்பதையும், சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன். இது மட்டுமின்றி இன்றும் கூட இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் அரிசி மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது என்பதையும் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

'செயற்கரிய இத்தகைய சாதனைகளை நிகழ்த்தி வரும் எங்கள் அரசு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மூடப்பட்டுக் கிடந்த பல தொழில் நிறுவனங்களைத் திறந்து சாதனை படைத்துள்ளது.

புகழ்மிக்க பி அண்டு சி மில்லினைச் சென்னை நகரத்தில் நாங்கள் இயங்கச் செய்த விதமும், முந்தைய அரசாங்கத்தின் பழி வாங்கும் போக்கு காரணமாகத் திறக்கப் படாமல் இருந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தை மீண்டும் இயங்கச் செய்த பாங்கும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள தொழிலாளர் நலம் நாடும் அமைப்புகளால் பாராட்டப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இன்னும் மூடப்பட்டிருக்கும் சில ஆலைகளும் விரைவில் திறக்கப் படும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் இந்த நல்லநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்லநேரத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகருக்கு நேர்த்தி மிக்க விமான நிலைய வசதிகளைச் செய்திட முன்வந்துள்ள மத்திய அரசிற்கும், மாண்புமிகு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கும் இங்கே வருகை புரிந்து சிறப்பித்துள்ள மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்களுக்கும்- தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது அமையப்பெற்றுள்ள வசதிகளைக் கொண்டு இவ்விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலைய அந்தஸ்துக்கு உயர்த்த முடியும் எனக்கூறப்படுகிறது.

எனவே 'தென்னகத்தின் மான்செஸ்டர்' என அழைக்கப்படும் இக்கோவை மாநகருக்கு மிக விரைவிலேயே பன்னாட்டு விமான வசதிகளையும் பெற்றுத்தர வேண்டும் என மத்தியப் பேரரசைத் தமிழக அரசின் சார்பில் இந்த நல்ல நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் சார்பில் இந்த நல்ல நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொடுத்துள்ள சிவில் விமானப் போக்குவரத்து நிர்வாகத்தினருக்கும், மாநில அரசின் சார்பில் பலரும் பாராட்டும் வகையிலான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை இங்கே நான் தொடங்கி வைக்கும் நல் வாய்ப்பினை அமைத்துத் தந்த மாவட்ட நிர்வாகத்தினருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்

சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஹெக்சேன் உற்பத்திப் பிரிவு

நாட்டில் பெருகிவரும் ஹெக்சேன் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஹெக்சேன் உற்பத்தி செய்யும் ஒரு பிரிவை நிறுவியுள்ளது. ரூ.10 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பிரிவு ஆண்டுக்கு 36,000 கிலோ மீட்டர் ஹெக்சேன் உற்பத்தி செய்யும். ஹெக்சேன் பிரித்தெடுக்கும் பிரிவு, ஹெக்சேன் பதப்படுத்தும் பிரிவு மற்றும் உற்பத்தியாகும் ஹெக்சேனை வெளியில் அனுப்பும் பிரிவு என மூன்று பிரிவுகள் இந்த ஆலையில் இயங்கும். ஹெக்சேன் எனப்படும் இந்த பெட்ரோலிய திரவம், சமையல் எண்ணெய், மருந்து வகைகள், ரப்பர், பெயிண்டுகள், வாசனைத் திரவியம் மற்றும் பிளாஸ்டிக்ஸ் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும்.

உள்நாட்டில் கிடைக்கும் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்களிலிருந்து ஹெக்சேனை அளிக்கும் மூலப்பொருளான LSRF-ஐ உற்பத்தி செய்யும் வசதிகள் எம்.ஆர்.எல்-ல் உள்ளன. இதனால் ஹெக்சேனை எம்.ஆர்.எல். குறைந்த செலவிலேயே உற்பத்தி செய்ய இயலும். 1,000 கிலோ லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சேமிப்புத் தொட்டிகளை இதற்காக எம்.ஆர்.எல். நிறுவியுள்ளது.

இந்தப் பிரிவுக்குத் தேவையான அனைத்துப் பொறியியல் வடிவமைப்பு, தொழில்நுட்பம் போன்றவைகளை என்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனமும், இந்தியப் பெட்ரோலியக் கழகமும் இணைந்து வழங்கியுள்ளன. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தி செய்யப்படும் ஃபுட் கிரேடு ஹெக்சேனின் தரம், ப்யூரோ ஆப் இண்டியன் ஸ்டாண்டர்டுஸ் (BIS) மையத்தாரால் பரிசோதிக்கப்பட்டு ஐ.எஸ்.ஐ. முத்திரையைப் பெற்றுள்ளது.

நாட்டில் தற்பொழுது சுமார் 400 பிரிவுகளுக்கு ஆண்டிற்கு ஏறக்குறைய 105,000 கிலோ லிட்டர் அளவு தேவைப்படுகின்ற ஹெக்சேன், ஆண்டிற்கு 15 சதவிகிதம் என்ற அளவில் உயரக்கூடும். தென்பகுதிகளில் இருக்கும் 130 பிரிவுகளுக்கு நாட்டின் தேவையில் 35 சதவிகித அளவு ஹெக்சேன் தேவைப்படுகிறது.

தற்போது இத்தகைய ஹெக்சேன் பம்பாயில் பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. எம்.ஆர்.எல்-ல் உற்பத்தியாகும் ஹெக்சேனை எம்.ஆர்.எல். விற்பனை செய்யும் பொழுது, இது தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா முழுவதையும் ஆந்திரா, கர்னாடக மாநிலங்களில் உள்ள சால்வண்ட் பிரித்தெடுக்கும் பிரிவுகளின் தேவையில் 50 சதவிகிதத்தை நிறைவு செய்யும்.

இதுவரை 125 வாடிக்கையாளர்கள், ஹெக்சேன் தேவைக்காகப் பதிவு செய்துள்ளனர். எம்.ஆர்.எல்-ல் கிடைக்கும் மிகுதியான ஹெக்சேனைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் பின்னர் பரிசீலிக்கப்படும்.

களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் தேசிய விமான நிலையக்குழுத்தலைவர் ஏர்மார்ஷல் சி.கே.எஸ்.ராஜேஷ்வரவேற்றார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துணை அமைச்சர் திரு. பரூக் மரைக்காயர் விழாவில் கலந்து கொண்டார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு.எ[illegible]. முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. இ. மது சூதனன், திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன், திரு. செல்வகணபதி, திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. நாகூர் மீரான், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர், விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கலைவாணன் நன்றி கூறினார்.

கோவை விமான நிலையம் ரூ.12 கோடி செலவில் புதுப்பிக்கப் பட்டது ஆகும். பயணிகள் இருக்கும் இடம் குளிர்சாதன வசதி செய்யப் பட்டுள்ளது. உள்ளே வங்கி, அஞ்சல் நிலைய வசதிகள் உள்ளன. உணவு விடுதியும் உண்டு. ஒரே நேரத்தில் 350 பயணிகள் வந்து செல்ல முடியும்.

ஓடு பாதை, தளமாக்கப்பட்டிருப்பதால், 'ஏ 320' ரக ஏர் பஸ் விமானங்கள் வந்து இறங்க முடியும். விமானங்கள் வந்து இறங்கவும், புறப்பட்டுச் செல்லவும், கண்காணிக்கவும் நவீனக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ள. இரவில் விமானம் இறங்குவதற்கு வசதியாக ஓடு பாதையில் வண்ண விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

உதகை-உவகைமிகு சிறப்பிடம்!

உதகையில் மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

எழில் மிகு இயற்கைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு, மலைகளின் அரசியாய்த் திகழும் நீலகிரி மலையில் நடைபெறும், மலர்க் கண்காட்சித் தொடக்க விழாவிலும், அரசு நலத்திட்டங்களின் தொடக்கம், மற்றும் அடிக்கல் நாட்டும் விழாவிலும் கலந்து கொண்டு, குளுமையான இச்சூழ்நிலையில், வெள்ளம் போல் திரண்டிருக்கும் இம்மாவட்ட மக்களையும், வளமும் வசந்தமும் பொருந்திய இந்நகரைக் கண்டுகளிக்க, வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளையும் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைதிக்கும் இயற்கை எழிலின் கண்கொள்ளாக் காட்சிக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்த காஷ்மீர் பள்ளத்தாக்கு, தீவிரவாதிகளின் அதிரடி நடவடிக்கைகளுக்கு ஆளான பின்னர், இன்று இந்திய நாட்டிற்கு விரும்பிச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் பயணிகள், அதிக அளவில் வருகை புரியும்- நேர்த்தி மிக்க ஸ்தலம்தான், நம் உதகமண்டலமாகும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை, பச்சைப் பசேல் எனக் காட்சி அளிக்கும் வளர்ந்தோங்கிய மரங்களும் - அம்மரங்களைத் தாங்கி நிற்கும் மாமலைகளும் - பள்ளத்தாக்குகளும், இவை அனைத்தும் இணைந்த பெரும் வனங்களும்; அவற்றிடையே உலவும் வன விலங்குகளும், வண்ணத்துப் பூச்சியிலிருந்து வண்ண வண்ண நிறங்களையும், அழகிய தோற்றங்களையும் கொண்ட பறவை இனங்களும்; அவை இடையறாது எழுப்பும் இனிய ஒலிகளும்; செல்லும் இடமெல்லாம் மணக்கும் யூகலிப்டஸ் கலந்த இனிய நறுமணமும்; கனவுலகக் காட்சி போல் அமைந்துள்ளதால், உலகம் முழுவதுமிருந்து இம்மலைகளின் இராணியாம் உதகை நோக்கி ஓடி வருகிறார்கள்.

அந்த அளவுக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இதன் காந்தச் சக்திக்கு, இம்மலையெங்கும் ஓங்கி வளர்ந்து உயர்வுடன் காட்சி அளிக்கும் மரங்களே காரணமாகும்.

எனவே தான் உதகையில் மட்டுமல்லாது, தமிழகத்தின் அனைத்து மலைப் பகுதிகளிலும் உள்ள மரங்களைப் பாதுகாக்க, முழு மூச்சான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

நமது தமிழகத்தின் வன வளத்தினைக் காப்பது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும். ஆண்டாண்டுக் காலமாக ஓங்கி, உயர்ந்து வளர்ந்துள்ள

மரங்களை, ஒரே நாளில் ஒரு சிலர் அழித்து விடும் கொடுமை, சில இடங்களில் நடந்து கொண்டு இருப்பதை முற்றிலும் தடுக்க, எங்கள் அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்டுள்ளது. ஒரு மரத்தை வளர்ப்பது என்பது, எத்தனைக் கடினமான காரியம் என்பதை, எல்லோரும் உணர்ந்திருந்த போதிலும், எளிய குறுக்கு வழியில், விரைவில் செல்வம் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில், ஒரு சிலர் இது போன்ற அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இயற்கை வளத்தையே பாழாக்கி விடுகின்றனர். இவர்களுக்குத் தீய சக்திகள் சிலர் உறுதுணையாக உள்ளனர் என்பதை, நான் நன்கு அறிவேன். இவர்களை எல்லாம் கட்டுப்படுத்தவே, அரசு கடுமையான நடவடிக்கைகள் தொடர்வதோடு, கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்ய, சட்டத்திருத்தம் ஒன்றைக் கூட அண்மையில் கொண்டு வந்துள்ளோம்.

இங்குள்ள இனிய காட்சிகளை எல்லாம் காணும்தோறும், எல்லையற்ற ஆனந்தமடைந்து செல்கிறார்கள் இங்கே வரும் அயல்நாட்டார். இந்நாட்டாரும் திரும்பத் திரும்ப ஊட்டி சென்று வரவேண்டும், என்ற உணர்வோடு வந்து செல்கின்றனர்.

ஆனால், உதகை மலையின் பேரழகைக் காணும் ஒவ்வொரு நொடியும், என் மனதில், 'இத்தகைய இயற்கையின் எழில் செருக்கை, இம் மலைக்குச் சேர்த்திட, எத்தனைத் துன்பங்களை இம்மலை வாழ் மக்கள் ஏற்றிருப்பார்கள்?' என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கிறது.

இதனைத் தான் எனக்கு அரசியல் பாலபாடம் சொல்லித் தந்த, நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள் உணர்த்திச் சென்றுள்ளார்.

'சித்திரச் சோலைகளே! உம்மை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ,
உங்கள் வேரினிலே'

எனும் உணர்வினைத்தான், எங்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஊட்டிச் சென்றுள்ளார்.

எனவேதான் உதகமண்டலத்திற்கோ, கொடைக்கானலுக்கோ, உல்லாசப் பயணிகளின் வசதிக்கெனத் திட்டம் தீட்டுகிற அதே நேரத்தில், இம் மலைவாழ் மக்களாக இங்கேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மக்களின் நன்மைக்கென திட்டமிடுவதையும், எங்கள் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

உல்லாசப் பயணிகளின் வசதிக்கென இங்கே செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், இங்கேயே வாழ்ந்து வரும் மக்களின் வாங்கும் சக்தியை, ஒவ்வொரு ரூபாய் அளவுக்குக் குறைத்திடும் என்பதை மனதிலே கொண்டு அந்த அளவுக்குப் பல திட்டங்கள், இப்பகுதி மக்களின் நன்மைக்காகவும், நிறைவேற்றி விட்டுத்தான், ஏனைய உல்லாசப் பயணத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம் என்னும் செய்தியை, மெத்த மன நிறைவோடு உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இக்குளிர் மலைப் பிரதேசத்தில், கடுங்குளிர் காலத்தில், அக்குளிரைத் தாங்கும் உரிய கம்பளி ஆடைகள் எதுவும் இல்லாது, சணல் சாக்குகளையே கோணிகளாக்கிக் கொண்டு, தங்கள் காலத்தை கழித்து வரும் இம் மலை வாழ் மக்களான, தோடர் மற்றும் படுகர் ஆகிய இன மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்த, உங்கள் சகோதரியான நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன் என்பதை, உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், என்னை இந்த அளவுக்கு வளர்த்து உயர்த்திய பெருமக்கள் உங்களைப் போன்று, சமுதாயத்தில் அடித்தளத்து மக்கள் தான். இதனை நான் என்றென்றும் மறந்திட மாட்டேன் என்ற உணர்வினை, நன்றிப் பெருக்குடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல் முறையாக இந்த ஆண்டு, 'Carnival-92' நிகழ்ச்சியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். நாளைக் காலை நடைபெறவுள்ள Carnival-1992, அனைவரையும் கவர்ந்திழுக்கும் வண்ணம், அதற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பான முறையில் செய்திருப்பதாக என்னிடம் தெரிவித்துள்ளார்கள். இன்று புதிதாக உதகையின் கோடைவிழாவில் அறிமுகப்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சி; சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும்; இனி ஒவ்வொரு ஆண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு, கூடுதலான சிறப்பை இது சேர்க்கும் எனவும் நம்புகின்றேன்.

Ooty lake-ஐத் தூய்மைப்படுத்தி, விரிவாக்கி, இதனைக் காஷ்மீர் பள்ளத்தாக்கின் 'டல்' ஏரியைப் போல் சிறப்பு பெறச் செய்ய வேண்டும் என்பதே, எனது ஆசை ஆகும். ஊட்டி நகருக்குத் தேவையான குடிநீர்த் தட்டுப்பாடின்றிக் கிடைக்க, நல்லதொரு நிரந்தரத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது, என்ற மகிழ்ச்சியான செய்தியையும், இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் சுற்றுலாக் கொள்கையை வெளியிட்டுள்ள இந்த நல்ல நேரத்தில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. [illegible] சிந்தியா அவர்கள் நேற்று (15.5.[illegible]) [illegible]லும் இன்று இங்கு நடைபெற்ற [illegible] தமிழகத்தில் சுற்றுலாத் [illegible] கொடுத்து மத்திய அரசு உதவும் என்று தெரிவித்தார்கள். இன்றைய தினம் வெளியிடப்படும் சுற்றுலாக் [illegible] முக்கிய [illegible] மூன் [illegible] விளக்கப்பட்டுள்ளன.

[illegible] இந்தத் திட்டங்களை மாநில அரசு நிறுவனங்கள் மூலமாகவும், தனியார், கூட்டுத் துறை நிறுவனங்கள் மூலமாகவும் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த அரசுக்கு மத்திய அரசு விரைவில் அனுமதி அளிக்கும் என்றும், தேவையான நிதி உதவி வழங்கும் என்றும் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் நேற்று என்னிடம் தந்த உறுதிக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஏற்கெனவே மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள 'Regional Catering Institute' அமைக்கும் திட்டத்தை விரைவில் உதகையில் உள்ள 'கேத்தி' கிராமத்தில் நிறுவுவதற்கு அனுமதியும் நிதி உதவியும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலிருந்து இனி அனுப்பப்படும் சுற்றுலா முன் மாதிரித் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து நிதி உதவியுடன் அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் சிந்தியா அவர்கள் நேற்று பேசியபோது, தமிழகத்தில் புதிய சுற்றுலாத் திட்டங்களுக்கு மத்திய அரசினை அணுகுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். இதுபோன்ற சில புதிய திட்டங்களுக்காக நாங்கள் மத்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு அவர்கள் நாங்கள் கவனிக்கிறோம், பரிசீலனை செய்கிறோம் [illegible] இது குறித்து தெரிவிக்கிறோம் [illegible] தான் தந்திருக்கிறார்[illegible] அரசு மேற்கொள்[illegible] திட்டப்பணிகளை [illegible] போன்ற விழாக்களில் [illegible] மாநில அமைச்சர்களும் [illegible] மாநில அரசின் திட்ட[illegible] வலியுறுத்த[illegible] சர்கள் [illegible] ஆரா[illegible]

விரைவில் பதில் வரும் என்று தெரிவிப்பார்கள். தமிழகத்தின் வரலாற்றிலேயே ஒரு மத்திய அமைச்சர் மாநில அரசின் திட்டங்களுக்காக எங்களை அணுகுங்கள் என்று சொல்வது இதுவே முதல் முறை. அதற்காக மத்திய அமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Palace on Wheels ரயில் விடுவது குறித்து பேசும்போது நான் ரயில்வே அமைச்சராக இருந்தபோது என்னிடம் கேட்டிருக்கலாம். நான் இப்போது சுற்றுலாத் துறை அமைச்சராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். இது குறித்து மத்திய அமைச்சருக்கு ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். இந்த Palace on Wheels என்பது சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தத்தான் என்பதால் இதை மத்தியச் சுற்றுலாத் துறை அமைச்சர் ரயில்வே அமைச்சகத்தைச் சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்பதால் அவர்களை அந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டிற்குப் பெற்று தரவேண்டும். இந்த Palace on Wheels என்ற பெயரை மாற்றலாம் என்று இங்கே மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகம் புராதன சிறப்புகளுக்கும், கலைகளுக்கும் பெயர் பெற்ற இடமாக இருப்பதால் அந்த ரயிலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் தாங்கள் மகாராஜா போல பயணம் செய்கிறோம் என்று மகிழ்வார்கள். எனவே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கும்போது Palace on Wheels என்ற பெயரை மாற்றாமல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டியில் ஒரு சிறிய விமான தளம் அமைப்பதற்கு ஆன அனுமதியை மத்திய அமைச்சர் அவர்கள் விரைவில் வழங்க வேண்டும். கோவையில் பெரிய விமான நிலையம் இருக்கும்போது இங்கு ஒரு விமான தளம் தேவையா என்று அமைச்சர் அவர்கள் கேட்கலாம். காஷ்மீரில் பயங்கரவாத சூழ்நிலை இருப்பதால் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருவதால் சாலைப் போக்குவரத்து மூலம் உதகை அடைவது சிரமமாக உள்ளது. எனவே, இந்தச் சூழ்நிலையில் உதகைக்கு ஒரு சிறு விமான தளம் அமைத்து வாயு தூத், ஹெலிகாப்டர் ஆகியவை வந்து செல்ல வசதி செய்து தர அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதகையில் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்க மக்கள் உதவ வேண்டும் என்று மத்திய அமைச்சர் குறிப்பிட்டார். உதகை உலக வரைபடத்தில் சிறந்த சுற்றுலாத் தலமாக இடம்பெற இந்த மாவட்ட மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அந்த உழைப்பின்றி எதையும் சாதிக்க முடியாது. நான் சிறு வயது முதற்கொண்டே உதகைக்கு வந்துள்ளேன். ஆனால், இன்று மின்விசிறியைப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு நகரின் சுற்றுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பெருமளவில் கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமையப்பெற்றதே காரணமாகும். எனவே உதகையின் சுற்றுச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டுமெனில், இனி வரும் காலங்களில் அத்தியாவசியமான கட்டடங்கள் அல்லாது பிற புதிய கட்டடங்களும், தொழிற்சாலைகளும் அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற முடிவை எடுத்தால்தான், இந்த முடிவில் கண்டிப்பாக இருந்தால்தான், உதகையின் இயற்கைச் சூழலை நாம் காப்பாற்ற முடியும். பெரிய Convention Centre போன்ற அத்தியாவசியமான கட்டடங்கள் கட்டுவதற்குதான் அனுமதி வழங்கலாம். இதற்கு உதகை மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் இன்றைய தினம், தமிழகத்தின் சுற்றுலாக் கொள்கையினை வெளியிடுவதில், பெருமிதம் அடைகின்றேன். சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், அரசு, கூட்டுத்துறையின் மூலமோ, அல்லது அரசின் வழிகாட்டும் திட்டத்தின் மூலமோ, செய்து தர முடிவு செய்துள்ளோம். தமிழகத்திலுள்ள எல்லாச் சுற்றுலா மையங்களையும் மேம்படுத்த, அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. அத்தகைய எங்கள் முயற்சியில் உதகை முதலிடம் பெற்றுள்ளது.

வெகு விரைவில் உதகை, உலகம் தழுவிய உல்லாசப் பயண வரைபடத்தில், சிறப்பிடம் பெறும் அளவுக்குப், பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

'உதகை - உவகை மிகு
சிறப்பிடம் - சீரிடம்'

எனும் சிறப்பை விரைவில் பெறும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.



அந்த அடிப்படையில்தான், நீலகிரி மலையின் பூர்வீகக் குடிமக்களாகிய தோடர் இன மக்களுக்கு, எங்கள் அரசு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றுள் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்று, ஒவ்வொரு தோடர் குடும்பத்திற்கும் 5 ஏக்கர் நிலம், வேளாண்மை செய்வதற்கு, அல்லது மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலங்களை மேம்படுத்திப் பயிர் செய்வதற்காக, ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக 25,000 ரூபாய், Toda Primary Agricultural Co-operative Bank மூலமாக, நீண்ட காலக் கடனுதவி பெற, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகையை வைத்துக் கொண்டு, அவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட அரசு நிலங்களில், தேயிலை பயிர் செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்ற செய்தி, என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

எனவே, இந்த ஆண்டு முதல், இவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை, 25,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி, கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்க ஆணையிட்டு உள்ளேன், என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். NABARD - நிறுவனத்தின் நிதி உதவியுடன், 7 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம், தோடர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5 ஏக்கர் நிலத்திலும், தேயிலை பயிர் செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள். ஆதிவாசிகளான அவர்கள், வறுமையில் வாடாமல் தடுத்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, எங்கள் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும், அவர்களைப் பாதுகாக்கும்.

இன்றைய தினம், தொழில் துறையின் கீழ் இயங்கும், INCOSERVE நிறுவனத்தின் சார்பில் BIKKETTY-இல் அமைக்கப்பட்டுள்ள, 15-வது கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையைத் தொடங்கி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இப்புதிய தொழிற்சாலை தொடங்கப் படுவதால், அப்பகுதியிலுள்ள சுமார் 1,000 சிறு விவசாயிகள், தங்களது தேயிலைகளை இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையில், நியாயமான விலைக்கு விற்பனை செய்து, பயனடையும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய விழாவில், இம்மாவட்டத்திற்கு மொத்தமாக, 32.29 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி வைத்ததிலும், மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வருடா வருடம் உதகையில் நடைபெறும் மலர்க் கண்காட்சி, இந்த ஆண்டு மிகவும் சிறப்பாகவும், நேர்த்தியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் அனைவரும், மலர்க் கண்காட்சியைக் கண்டு களித்து, மன நிறைவோடு செல்வார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டுகளில் இருந்ததைப் போல, மலர்க் கண்காட்சி எனக் கூறிவிட்டு, மலர்களே இல்லாத நிலை, இந்த ஆண்டு முதல் இருக்காது என்ற உத்தரவாதத்தையும், இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

உள்ளம் கவர் உதகை மலர்க் கண்காட்சி

மலைகளின் அரசியாம் உதகையில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற வண்ணமிகு மலர்க் கண்காட்சி இவ்வாண்டு 16.5.'92-ஆம் நாள் கோலாகலமாகத் தொடங்கியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பதவியேற்றபின், முதன் முறையாக உதகைக்கு வருகை புரிந்து மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைப்பதால் இந்நிகழ்ச்சி மிகுந்த முக்கியத்துவத்தையும் பொலிவினையும் பெற்றுள்ளது. முதல்வர் அவர்களை வரவேற்க உதகை சுறுசுறுப்பாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. பச்சைப்பசேலெனும் புல் வெளிகளாலும், கவின்மிகு மலர்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு புதுப்பெண்ணாகப் பூத்துக் குலுங்கினாள் உதகை ராணி.

16.5.1992 காலை நீண்டதொரு பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டது போன்று தோற்றமளித்த தாவரவியல் பூங்காவில் குவிந்திருந்த ஆயிரமாயிரம் மக்களின் கண்கள் முதல்வரை எதிர்நோக்கியிருந்தன.

முதல்வர் அவர்கள் சரியாக 10.50 மணிக்குத் தாவரவியல் பூங்காவிற்கு வருகை தந்தார். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீலா நாயர் மலர்ச்செண்டு கொடுத்து முதல்வரை வரவேற்றார். அமைச்சர் பெருமக்கள் பலரும் அவரை வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு மத்தியச் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் முன்னிலையில், உதகை மலர்க்கண்காட்சியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பல வண்ண மலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தார்.

தாவரவியல் பூங்காவில் முதல்வர் அவர்கள் 'கினார்' எனும் மரக் கன்றை நட்டார்.

மலர்க் கண்காட்சியில் ஓட்டல் சவேரா, வெடி மருந்துத் தொழிற்சாலை, ராஜ்பவன், ஸ்டேட் பாங்கி, உபாசி, நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம், தோட்டக் கலைத்துறை உள்பட 12 அரங்குகள் பங்கேற்றன. மொத்தம் 8,000 பூந் தொட்டிகளில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. அனைவரின் விழிகளுக்கும் விருந்தளித்தன. 1,600 வகை ரோஜாக்களும் 150 வகை டேலியாவும், பேன்சியூ, டியூப்ரஸ், பிகோலியா, இரசாந்தம், சந்துலியம், டெலிபினியம், அன்டிரேனியம், பிரெஞ்சு மெரி கோல்டு, பிலிமிளா, லேடிஸ் பர்ஸ் மற்றும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மலர்களும் பூத்துக் குலுங்கின.

நுழைவு வாயிலில் மலர்களால் 'மலர்க் கண்காட்சி 1992' என அழகுற எழுதப்பட்டிருந்தது. மலர்களால் அலங்கார யானைகளும், மலர்க் கிரீடமும் அமைக்கப்பட்டிருந்தன.

நெஞ்சையள்ளும் இம்மலர்க் கண்காட்சி காணக் கண்கோடி வேண்டும் என வியக்காத உள்ளங்களே கிடையாது எனக் கூறலாம்.

அரசு நலத்திட்டத் தொடக்க விழா

மலர்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்து விட்டு, பள்ளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அரசு நலத்திட்ட தொடக்க விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11.10 மணிக்கு வந்தார். விழாவுக்கு, தமிழக மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சந்தியா அவர்கள் முன்னிலை வகித்தார். ரூ.36 கோடிக்கான அரசு நலத்திட்டப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது அடிக்கல்லின் மேல் புறம் உள்ள ஒரு மூடி திறந்து கொள்ள, அங்கிருந்து பறவைகள் விடுதலை பெற்று வானத்தில் பறந்தன.

பின்னர் புதிய வழித்தடங்களைத் தொடங்கி வைப்பதற்கு அடையாளமாக மற்றொரு பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தியதும், வட்டமான மேசை மீது இருந்த வட்டமான திரைச்சீலை கீழே இறங்கியது. அந்தச் சிறிய மேடையில், ஒரு சிறிய சேரன் பேருந்து காட்சி அளித்தது.

பின்னர், தமிழக அரசின் சுற்றுலாத் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்தக வடிவில் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை, மாண்புமிகு மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இதே விழாவில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் ''டைம் ஷேரிங்'' என்ற சுற்றுலாத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தில முதலில் சேர்ந்த, கோவை சக்தி சாமிநாதன் மற்றும் அவர் மனைவியிடம். அதற்கான அனுமதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

'கார்னிவெல்-92'

இந்த ஆண்டு முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'கார்னிவெல்-92' என்ற அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடக்க விழா ஊட்டியில் சி.டி.சி. சதுக்கத்தில் நடைபெற்றது. இந்த அலங்கார அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிடுவதற்காகத் தனியாக மேடை அமைக்கப்பட்டிருந்தது.

விழாவில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 17.5.92 அன்று காலை 9.55 மணிக்கு சி.டி.சி. சதுக்கத்துக்கு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் லீலாநாயர், இ.ஆ.ப. மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்றார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. செ. அரங்கநாயகம், திரு. எஸ். முத்துசாமி, திரு. செங்கோட்டையன், திரு. எஸ். கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. ஜி. விசுவநாதன், திரு. கு.ப. கிருஷ்ணன், திரு. செல்வகணபதி, திரு. நாகூர் மீரான், திருமதி இந்திரகுமாரி, திரு. எம். ஆனந்தன், திரு. ஜெயக்குமார், திரு. ரகுபதி, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொன்னுசாமி, அரசு கொறடா திரு. ச.பா. பட்டாபிராமன் ஆகியோர் வரவேற்றனர்.

சற்று நேரத்தில் மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் விழா நடைபெறும் இடத்துக்கு வந்தார். அவரை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் அமைச்சர்கள் வரவேற்றார்கள்.

பின்னர் விழா நிகழ்ச்சி தொடங்கியது- 'கார்னிவெல்-92' என்று எழுதப்பட்ட அட்டை 'கியாஸ்' அடைக்கப்பட்ட பலூன்களில் 'பாராசூட்' போன்ற அமைப்பில் தொங்கவிடப்பட்டு இருந்தன. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தனர். விழா தொடங்கியதற்கு அறிகுறியாக இந்தப் பலூன்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பறக்கவிட்டார். வண்ணப் பலூன்கள் அழகாக வானத்தில் பறந்து சென்றன. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்களும் பலூன்களைப் பறக்கவிட்டார். இதையடுத்து விழா தொடங்கியது.

முதலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நாதசுரம், தவில், வாசித்தபடி கலைஞர்கள் வந்தனர்.

அடுத்து, முகப்பட்டயம் அணிந்த 9 யானைகளும் நடுவே குட்டி யானையும் நடந்து வந்தன. இதைத் தொடர்ந்து தர்மபுரி மாவட்ட போலீஸ் பாண்டு வாத்தியக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர், நீலகிரி மாவட்ட மலைச்சாதியினரான படுகர் இனத்தவர் நடனம் இடம் பெற்றது.

அடுத்து, கேரளாவைச் சேர்ந்தவர்கள் செண்டைமேளம் அடித்தபடியும், கொம்பு வாத்தியத்தை ஊதியபடியும் மேளத்தை ஏற்றி இறக்கிக் காட்டினார்கள். அடுத்து, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அலங்கார வண்டி இடம் பெற்று இருந்தது. அதில் மக்கள் மனம் குளிர, மலர்ந்த முதல்வரின் முத்தான திட்டங்கள் என்ற வாசகம் எழுதப்பட்டு இருந்தது.

தமிழகத்தில் புதிதாக 41 துணை மின் நிலையங்கள்

தமிழகத்தில் மின் விநியோகத்தை அதிகரிக்க, புதிதாக 41 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் உதகமண்டலத்தில் தெரிவித்தார்.

உதகையில் 10 கிலோவாட் துணை மின் நிலையம் ஒன்று ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். ஓர் ஆண்டுக்குள் அதற்கான பணிகள் முடிவடைந்துவிடும்.

பல்வேறு நீர்மின் நிலையங்களில் ஆய்வு நடத்தி அவற்றில் உள்ள குறைபாடுகள் பற்றி அரசுக்கு அறிக்கை அளிக்க சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

பெரியார் மாவட்டத்தில்:

வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1992-93-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடாக 7,870 நபர்களுக்கு ரூ.245.945 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.34.970 இலட்சம் வறட்சி நிவாரணப் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் கசிவு நீர்க் குட்டைகள், சிறு பாசனக் குளங்கள் மேம்பாடு செய்தல், சாலை மேம்பாட்டுப் பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், 106 பள்ளிக் கட்டடங்கள், ரூ.146.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 98 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் 92 ரூ.64.653 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க எடுக்கப்பட்டதில், இதுவரை 88 சத்துணவு மையங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 48 தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.7.200 இலட்சம் மதிப்பீட்டில் வழங்குவதில், இதுவரை 30 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ரூ.135.670 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 404 ஊரகக் குடிநீர்ப் பணிகளில் இதுவரை 220 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.70 இலட்சம் செலவில் 3,500 தெரு விளக்குகள் அமைப்பதில், இதுவரை 1,754 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 196 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் ரூ.381.71 இலட்சம் செலவில் டுக்கப்பட்டதில், இதுவரை 89.36 கி.மீ. சாலைப் பராமரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.25.20 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்ட 20 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணிகளில், இதுவரை 16 முடிக்கப்பட்டுள்ளன. ரூ.2.390 இலட்சம் மதிப்பீட்டில் 2 சிறுபாசனக் குளங்கள் அமைக்க எடுக்கப்பட்டதில், இரண்டும் முடிக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயுத் திட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 1,050, நிர்ணயம் செய்யப்பட்டது. நாளது வரையில் 30 கலன்கள் நிறுவப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ், பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை மீறி, பெரியார் மாவட்டத்தில் தக்க பில் இன்றி, அத்தியாவசியப் பொருட்களைக் கடத்தியும், உரிமம் இன்றிக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்ததையும், கண்டுபிடித்து இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் ரூ.41,000 மதிப்புள்ள 13.39 டன் நெல்லும், ரூ.5,631 மதிப்புள்ள 1.717 டன் அரிசியும், ரூ.52 மதிப்புள்ள 20 கிலோ கோதுமையும், ரூ.83,000 மதிப்புள்ள 10 டன் நிலக்கடலைக்காயும், ரூ.3,290 மதிப்புள்ள 1,100 லிட்டர் மண்ணெண்ணெயும், ரூ.27,978 மதிப்புள்ள 0.81 டன் மிளகாய் வற்றலும், ரூ.820 மதிப்புள்ள 150 லிட்டர் டீசலும், ரூ.258 மதிப்புள்ள 15 லிட்டர் பெட்ரோலும் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.1,62,029 ஆகும்.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக 1992 ஏப்ரல் மாதம் முடிய மொத்தம் 365 நபர்களுக்கு ரூ.72.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 3 ஆதி திராவிடர்களுக்கு ரூ.0.65 இலட்சம் அடங்கும். இத்திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 764 நபர்களுக்கு ரூ.171.10 இலட்சம் கடன் வழங்க வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது, இதில் 402 நபர்களுக்கு ரூ.106.70 இலட்சம் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் 212 நபர்களுக்கு 46.65 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.



வேளாண்மைக்குத் தேவைப்படும் குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அத்துடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. ஏப்ரல் 1992 திங்கள் முடிய குறுகிய காலக் கடன் 99.04 இலட்சமும், மத்தியக் காலக் கடன் 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 58.08 இலட்சமும், மத்தியக் காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 2.95 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்க பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டுக்கு ஏப்ரல் 1992 திங்கள் முடிய ரூ.0.93 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் பணியினை, பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு விற்பனை சங்கங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. 1992-93 நிதியாண்டுக்கு 1992 ஏப்ரல் திங்கள் முடிய இச் சங்கங்கள் 201.43 இலட்சத்திற்கு சங்க உறுப்பினர்களின் வேளாண் விளைபொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளது.

கடந்த 1991-92-ஆம் ஆண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டன. நடப்பாண்டில் 8 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 1992 வரை 48,758.200 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன. 1992-93-ஆம் நடப்பாண்டில் 1,200 ஏக்கர்கள் அளவில் மல்பரிப் பயிர் இறவைச் சாகுபடியின் கீழ் கொண்டு வர இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 155.75 ஏக்கர்களில் மல்பரி இறவையின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு 24 இலட்சம் மல்பரி நாற்றுக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 1992 ஏப்ரல் வரை 11.00 இலட்சம் நாற்றுக்கள் உற்பத்திச் செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த முறையில் அதாவது உழவியல், இரசாயனம், உயிரியல், இயந்திர முறைகளை ஒருங்கிணைந்துப் பயன்படுத்தி குறைந்த செலவில் சிறப்பான முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க, மாவட்ட அளவில் 440 விவசாயிகளுக்கு இருநாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்கும் விவசாயிகளுக்குப் பயணம் மற்றும் இதரச் செலவினங்களுக்கான உதவித் தொகையும், பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களும், தொழில்நுட்பக் கையேடுகளும், ரூ.44 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

மலேரியா நோயைத் தடுத்திட..

சென்னை நகரில் மலேரியா நோய் தற்போது அதிக அளவில் காணப்படுகிறது. நகரில் உள்ள கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தொட்டிகளில் உற்பத்தியாகும் கொசுக்களின் மூலம் தான் மலேரியா நோய் பரவுகிறது. ஏறத்தாழ ஒரு இலட்சம் கிணறுகளும், 75,000 மேல் நிலைத் தொட்டிகளும் சரிவர மூடப்படாமல் கொசு உற்பத்திக்கு ஏதுவாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தகைய கொசு உற்பத்தியினைத் தடுத்தால்தான், சென்னை மாநகரில் மலேரியா நோயினை ஒழிக்க முடியும்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் உள்ள அத்தகைய நீர் நிலைகளைக் கொசு உற்பத்திக்கு இடமளிக்காதவகையில் மூடிகளைப் பொருத்தி, மாநகராட்சியின் சுகாதாரப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுகிறோம்.

நான்கு அடி விட்டமுள்ள ஒரு கிணறு இரண்டு அங்குல சிமெண்ட் பலகையினால் மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்பு தகடு மூடியைப் பொருத்துவதற்கும் ரூ.430 செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதேபோல் 4 சதுர அடி மேல்நிலை நீர்த் தொட்டியை மூடுவதற்கும் அதில் 1½ சதுர அடி இரும்புத் தகடு மூடி பொருத்துவதற்கும் ரூ.415 செலவாகக்கூடும்.

இத்தகைய பணியினை மேற்குறிப்பிட்ட செலவில் செய்து முடித்திட சம்மதம் அளித்துள்ள ஒப்பந்தக்காரர்களின் பட்டியல், மாநகராட்சி மண்டல அலுவலர்களிடமும் உதவி சுகாதார அலுவலர்கள், பூச்சியியல் வல்லுனர்களிடமும், கோட்ட அலுவலகங்களிலும் உள்ளது. மற்ற விவரங்களுக்குத் தொலைபேசி மூலம் எண்.584510 இணைப்பு எண்.272 தொடர்பு கொள்ளவும்.

சூரிய வெளிச்சம் படாமல் மூடிவைப்பதால் கிணற்றுத் தண்ணீர் எப்போதும் கெடுவதில்லை.

வீடுகளில் உள்ள நீர் நிலைகளைக் கொசு வளர்ச்சிக்கு ஏதுவாக வைத்திருப்பது, தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டத்தின்கீழ் குற்றமாகும்.

குடும்ப நலம்

• சிறிய குடும்பமே வளத்துக்கு வழி என்ற அடிப்படையில் குடும்ப நலத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை, சுமார் 13 கோடி குழந்தை பிறப்புகள் தவிர்க்கப் பட்டுள்ளன. 1991-இல் மட்டும் 1.2 கோடி பிறப்புகள் தவிர்க்கப் பட்டன. 1980 வரை நான்கு கோடியும், 1990 வரை 11.8 கோடி யும் குழந்தை பிறப்புகள் தவிர்க்கப் பட்டன.

சிறு குடும்ப நெறித்திட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்வதற்காக அரசு தொடர்ந்து பல புதிய முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. இதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்ப நலச் சேவையின் தரத்தை மேம்படுத்துவது தாய்-சேய் நலத் திட்டத்தை விரிவுபடுத்தி, வலுப் படுத்துவது, துறைகளிடையே ஒத் துழைப்பை மேம்படுத்துவது ஆகிய வற்றில் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

பட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்கு

உலகப் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாமிடத்தை வகிக் கிறது. 1989-90-இல் 12,016 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. 1990-91இல் இது 12,665 மெட்ரிக் டன்னாக உயர்ந் தது. சென்ற நிதியாண்டில் 1991-92 டிசம்பர் வரையிலுமான ஒன்பது மாத காலத்தில் 8,523 மெட்ரிக் டன் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பட்டு ஜவுளி வகைகள் ஏற்றுமதியும் செய்யப் படுகின்றன.

1989-90-இல் ரூ.392 கோடி மதிப்பிற்கு 358 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதி யானது. 1991-92-இல் (பிப்ரவரி 92 வரை) ரூ.600 கோடி மதிப் பிற்கு 350 இலட்சம் சதுர மீட்டர் பட்டு ஜவுளி ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது.

(23—ஆம் பக்கம் தொடர்ச்சி)

அணிவகுப்பில் அடுத்து, சிதம்பரனார் மாவட்ட வீரர்களின் ஒயிலாட்டம் இடம் பெற்றிருந்தது. கையில் சிவப்பு நிறத் துணியைக் கட்டிக்கொண்டு, கால்களை ஒரே சீராக அடி எடுத்துவைத்து ஆடி னார்கள். ஊட்டி லாரன்ஸ் பள்ளி மாணவர்களின் பாண்டு வாத்தியக் குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இதே பள்ளி மாணவ-மாணவியர், கையில் வண்ணப் பந்து களுடன் உடற்பயிற்சி செய்து காட்டினர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் களின் கோலாட்டம் நிகழ்ச்சி இடம் பெற்றது. அணிவகுப்பில் அடுத்து இடம் பெற்றது, ஆந்திர மாநிலத் தின் லம்பாடி நடனம் ஆகும். ஆண்களும், பெண்களும் பல வண்ண உடைகள் அணிந்து ஆடிய ஆட்டம் அனைவரையும் கவர்ந்தது. சுற்றுலாத் துறையின் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு அடுத்து இடம் பெற்றது. பிறகு, கோவை நகரக் காவலரின் பாண்டுவாத்திய இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டம் பர்கூரைச் சேர்ந்த இளைஞர்களின் சேவை ஆட்டம் நடைபெற்றது. கால்களில் சலங்கை கட்டி, கையில் கம்பு களுடன் உறுமி மேளத்திற்கு ஏற்ப நடனம் ஆடினார்கள். தோட்டக் கலைத்துறை சார்பில் அலங்கார வண்டி வந்தது. அடுத்து புனித ஹில்டா பள்ளி மாணவ-மாணவி களின் ஸ்காடிஷ் நடனம், கூட்டு உடற்பயிற்சி, பஜன் நடனம் ஆகி யவை இடம்பெற்றன.

அடுத்து, போலீஸ் துப்பறியும் நாய்களின் சாகச நிகழ்ச்சி இடம் பெற்றது. முதலில் இரண்டு துப்பறி யும் நாய்கள் மாண்புமிகு முதல்வர் முன்பு மண்டியிட்டு வணக்கம் தெரி வித்தன. பிறகு தீப்பந்தத்திற்குள் பாய்ந்து சாகசம் புரிந்தன.

மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கு, துப்பறியும் நாய் மலர்ச் செண்டை வாயில் கவ்விக் கொண்டு சென்று கொடுத்தது. அதை வாங் கிய முதல்வர் நாயை அன்புடன் தடவிக் கொடுத்தார்.

சீனா நாட்டுக் கதைகளில் இடம் பெறும் தீயைக்கக்கும் 'டிராகன்' என்னும் நடனமும் இடம்பெற்றி ருந்தது. 40 அடி நீளமுள்ள டிராகன் விலங்கின் உருவத்தை சுமந்தபடி நடனக் கலைஞர்கள் ஆடினர்.

வனத்துறை அலங்கார ஊர்தியும் கண்ணைக் கவர்ந்தது. பாண்டிச்சேரி சார்பில், களியாட்டம், கோலாட்டம், கேரள மாநிலத்தின் தையம் நடன மும் இடம் பெற்றன. சேரன் போக்குவரத்து அலங்கார ஊர்தி யுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

நிகழ்ச்சி நிறைவுபெற்றதற்கு அடையாளமாக, மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பல வண்ணப் பலூன்களை வானில் பறக்க விட்டனர்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம் தாட்கோ மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகள்

திண்டுக்கல் அண்ணா மாவட் டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) மூலம், 1991-92-ஆம் ஆண்டில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 200 நபர்கள் பயன்பெறும் வகையில் சுய வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு ரூ.10 இலட்சம் மானியமாக வழங் கப்பட்டுள்ளது.

தையல் மற்றும் எம்பிராயிடிங் இரண்டு சக்கர வண்டி பழுது பார்த்தல் மற்றும் வயரிங் போன்ற தொழில்களுக்குப் பயிற்சி அளித்திட ஆறு மாதத்திற்குத் தலா ரூ.250 வீதம் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கும் பொருட்டு ரூ.1,300 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 50 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

ஆயில் எஞ்சின் வழங்கும் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு 10 நபர்களுக்கு ரூ.50 இலட்சம் நிதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 8 நபர்களுக்கு ஆயில் எஞ்சின் ரூ.40 இலட்சம் மதிப்பில் வழங்கப் பட்டுள்ளது.

இரட்டை மாட்டு டயர் வண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 60 நபர் களுக்கு ரூ.3 இலட்சம் நிதி அளிக் கப்பட்டிருந்தது. இதில் 60 நபர் களுக்கு இரட்டை மாட்டு டயர் வண்டிகள் ரூ.3 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு விட்டது.

நடப்பு நிதியாண்டில், உழவு மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 25 நபர்களுக்கு ரூ.612 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில், 25 நபர் களுக்கு ரூ.612 இலட்சம் மதிப்பில் உழவு மாடுகள் வழங்கப்பட்டு விட்டன.

125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டி வழங்கிட அரசு நிதி ஒதுக்கி யுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 125 நபர்களுக்கு ரூ.5.9375 இலட்சம் மதிப்பில் இரட்டை மாட்டு வண்டிகள் வழங்கப்பட்டு விட்டன.

வேளாண்மைப் பயிற்சிகளுக்கு மருந்து தெளிக்கும் வகையில் மிதி வண்டி மற்றும் விசைத் தெளிப்பான் வழங்கும் திட்டத்தின்கீழ், 5 நபர் களுக்கு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கி யுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 5 நபர் களுக்கு மதிவண்டி மற்றும் விசைத் தெளிப்பான் ரூ.10 இலட்சம் மதிப் பில் வழங்கப்பட்டுவிட்டது.

ஸ்டீல் பங்க் கடை, அத்தொழி லுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 15 நபர்கள் பயன் பெறும் வகையில் ரூ.6750 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளதில், இதுவரை 8 நபர்களுக்கு ரூ.36 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

தனி நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 100 நபர்கள் பயன்பெறும் வகை யில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டது. இத்திட்டத்தில் 147 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது.

பிறப்புச் சான்றிதழ் விரைவில் கிடைத்திட...

"சென்னை மாநகராட்சியின் மண்டல மற்றும் கோட்ட அலுவலகங்களிலிருந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெறுவதில் காலதாமதமாகிறது எனப் பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் வந் ததையடுத்து, மாநகராட்சி இச்சான்றிதழ்களை வழங்கும் முறையினை சற்று மாற்றிக் காலதாமத மின்றி விரைவில் வழங்க முடிவு செய்துள்ளது. தற்போது பிறப்புச் சான்றிதழ்களுக்கு மனுச் செய்த ஒருவாரக் காலத்தில் சான்றிதழ்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

"மேலும் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க் கும் தருணமாதலால் தன்னார்வம் மிக்கவர்களைக் கொண்டு விரைவில் சான்றிதழ்கள் வழங்க உதவும் பொருட்டு மண்டல அலுவலகங்களில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் பிரிவில் கூடுதலாக உதவி யாளர்களை மாநகராட்சி தற்காலிகமாக நியமித் துள்ளது.

"ஆகையால் பொதுமக்கள் கடைசிவரை காத்திராமல் உடனே பிறப்புச் சான்றிதழ் வழங்க மனுச்செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இதன் மூலம் நெரிசலைத் தவிர்த்து ஒரே சமயத்தில் மனுக்கள் குவிந்து அதனால் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். பொது மக்களுக்குப் பிறப்புச் சான்றிதழும் விரைவில் கிடைக்கும். எனவே, பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. கா. அலாவுதீன் அவர்கள் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

நூல் நயம்

ஆட்சித் தமிழ்

ஆசிரியர்: டாக்டர் த. பெரியாண்டவன்

வெளியீடு:

வளர் தமிழ் பதிப்பகம்,
40, அஞ்சுகம் நகர்,
சென்னை-600 005.

பக்கம்:295 விலை:ரூ.75/-

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என விரிந்தும் இணைந்தும், உடன் பட்டும் ஒன்றியும் முத்தமிழ் எனப் பெயர் பெற்றுப் பெருமை பெற்று, தமிழ் இனத்திற்குப் பெருமை சேர்க்கும் தமிழ் மொழிக்கு 'ஆட்சித் தமிழ்' எனும் அழகிய பெயரோடு அரியதோர் அணி கலனை ஆக்கித் தந்துள்ளார், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் பெரியாண்டவன். அவரது அரிய ஆய்வின் பயனாக அவருக்கு முனைவர் பட்டத்தினை ஈட்டித்தந்த எழில்மிக்க நூலாகவும் இது திகழ்கிறது.

ஆய்வுக் கருத்துக்களை அளித்ததோடு நில்லாது, அரசுப் பணியாளர்கள் அன்றாடம் பயன்படுத்தும் படிவங்கள், வரைவுகள், குறிப்புகள் ஆகியவற்றையும் இணைப்பாக அளித்திருப்பது பாராட்டத் தக்கது மட்டுமல்ல; மிகவும் பயன்படத் தக்கது.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சிமொழியைச் செயற்படுத்தும் பணிகளோடு தொடர்பு கொண்டிருந்த தமது பட்டறிவினைப் பயன்படுத்தி, ஆட்சித் தமிழைச் செயலாக்குவதில் தாம் கண்டறிந்த சிக்கல்களையும், அவற்றைக் களையும் நெறி முறைகளையும் இந்நூலில் ஆசிரியர் விரிவாக விளக்கியுள்ளார்.

தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் வளர்க்கவும் காக்கவும் சங்ககாலம் முதல் மதுரையில் அமைக்கப்பட்ட மூன்று தமிழ்ச் சங்கங்கள், நான்காம் தமிழ்ச் சங்கம், தஞ்சைக் கரந்தையில் உமா மகேசுவரனார் தோற்றுவித்த கரந்தைத் தமிழ்ச் சங்கம், நாகைத் தமிழ்ச் சங்கம், தலைநகர்த் தமிழ்ச் சங்கம் எனப் பல வேறு தமிழ்ச் சங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகளையும் பணிகளையும் இந்நூல் விவரிக்கிறது.

தமிழ் வளர்ச்சி இயக்கம் வளர தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டமும், அதன் பின்னர் தமிழ் வளர்ச்சித்துறையின் வளர்ச்சி பற்றிய அனைத்து வரலாற்றுக் குறிப்புகளும் நூலில் விரிவாகத் தரப்பட்டுள்ளன. தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை நிறைவேற்ற முற்படும் போது ஏற்படுகிற சில சிக்கல்களைச் சுட்டிக்காட்டி அதற்குரிய தீர்வுகளையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் அரசின் கடிதங்கள், ஆணைகள், விண்ணப்பப் படிவங்கள் போன்றவை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நூலில் பல் வேறு படிவங்களையும் வரைவுகளையும் தந்துள்ளார். நேர்காணல், நியமனம், பணிவரன்முறை செய்தல், தகுதிகாண் பருவம் முடித்தல், நியமனம் போன்ற பல வற்றுக்கான வரைவுகள் படிவங்கள் பலவற்றுடன் பொது வருங்கால வைப்பு நிதி, பகுதி இறுதித் தொகை பெறுதல், விண்ணப்பம் போன்றவற்றையும் தந் துள்ளார்.

இவ்வாறு பலவகையிலும் பயன்படுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

—சி.ந.

ஜீவகாருண்ய ஒழுக்கம்

ஆசிரியர்: இராமலிங்க அடிகளார்.

வெளியீடு:

காந்திய இலக்கிய சங்கம்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625 020.

பக்கம்:64 விலை:ரூ.6/-

வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடிய வள்ளல் பெருமான் எழுதிய சன்மார்க்க விளக்கத்தின் முதற் பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம் அவரின் தத்துவத்தின் மூலக் கூறுகளைக் கொண்டதாகும். இந்நூல் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். அண்ணல் காந்தியடிகளின் 'ஹிந்து சுயராஜ்யம்' நூலும் 'கேள்வி-பதில்' முறையில் அமைந்ததாகும். காந்தியடிகள் அகிம்சைக் கொள்கைக்கு விளக்கம் தரும் வகையில் முன்னோடியாக வந்த நூல் 'ஜீவ காருண்ய ஒழுக்கம்' அகிம்சைக் கொள்கையில் ஈடுபாடுடைய அனைவரும் படிக்க வேண்டிய நன்னூல் இந்நூல்.

—மாமூலன்

பாரதிதாசன் கவிதைகள்

வெளியீடு:

வசந்தா பப்ளிகேஷன்ஸ்,
34, பெரிய தெரு,
சென்னை-5.

பக்கம்:289 விலை:ரூ.16/-

புரட்சிக்கவி, பாவேந்தர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் பாரதிதாசனின் கவிதைகள், கால காலத்துக்கும் நிற்கும் கருத்துக் குவியல்கள், காலக் கண்ணாடிகள்.

இரண்டு தொகுதிகள் இணைந்த கவிதைகள் தொகுப்பாக இது வெளி வந்துள்ளது. கண்ணைக் கவரும் வண்ண முகப்பு; கையடக்கப் பதிப்பு; இடையிடையே எண்ண இன்பமூட்டும் எழிலோவியம், இதன் சிறப்பு. அத்தனைக்கும் கை கொடுக்கிறது அழகிய அச்சமைப்பு.

எல்லாவற்றுக்கும் மேலாக குறைந்த விலையில் - மலிவு விலையில் இந் நூலைத் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

எத்தனை தடவை படித்தாலும் தெகட்டாத தெள்ளமுதாய் விளங்கும் இந்நூலைப் பெரியவர் சிறியவர் என்று எல்லாத் திறத்தாரும் படித்துப் படித்துச் சுவைக்கலாமே!

தமிழ் நெஞ்சங்களில் பதிக்கத்தக்க கவிதைகள். படித்துப் பயன் பெறலாம்.

எம்.ஜி.ஆர். கதை

(இரண்டு தொகுதிகள்)

ஆசிரியர்: எஸ். விஜயன்

வெளியீடு:

அருள்மொழிப் பதிப்பகம்
32/20 ராணி அண்ணா நகர்
கே.கே. நகர், சென்னை-78.

பக்கம்: (ஒவ்வொரு தொகுதியும் 192 கொண்டது)

விலை: (ஒவ்வொரு தொகுதியும் ரூ.15/-)

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டும் அற்புத நூல்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கலை, அரசியல் தொண்டுகள் முதலானவை அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. எண்ணம் கவரும் வண்ண முகப்புடன், இடையிடையே அரிய புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன.

இளைய தலைமுறை மட்டுமல்ல, எல்லாருமே படித்துப் பயன்பெறவும், வாழ்க்கையில் முன்னேறவும் இந்நூல் ஒரு முழுமையான வழிகாட்டியாக விளங்குகிறது என்று கூறலாம்.

—பி.வி.கிரி

குழந்தை நலம்

உலகில் உள்ள மற்ற எல்லா நாடுகளைவும்விட இந்தியாவில் மட்டுமே குழந்தைகள் மரணம் அதிக அளவில் உள்ளது.

இது தற்போது குறைந்து வருகிறது என்றாலும், குழந்தைகள் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்து விடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதற்கு முக்கிய காரணம், மக்களின் அறியாமை, போதிய கல்வி வசதிகள் இல்லாததால் மழலைகள் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாமை... மழலையர்க்குத் தரமான பொருள்களை அளிக்காமல் இருப்பது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு இவைகள் பற்றித் தெரியாமல் இருப்பது ஆகியவையாகும்.

இவைகளைக் கருத்தில் கொண்டே இந்தியத் தர நிர்ணய அமைவனம், குழந்தைகளுக்கான பொருள்களுக்குத் தர நியமங்களை வரையறுத்தது தோடு ஐஎஸ்ஐ தர முத்திரைச் சான்றிதழ்த் திட்டத்தினையும் கொண்டு வந்துள்ளது. அவை:

1. குழந்தை உணவு, 2. குழந்தைகள் குளியல் சோப்பு, 3. பேபி இன்குபேட்டர்கள், 4. குழந்தைகள் எடை பார்க்கும் கருவிகள், 5. குழந்தைகள் பவுடர், 6. குழந்தைகள் மருத்துவமனைக் கட்டில்கள், 7. நம்பகமான, பாதுகாப்பான விளையாட்டுப் பொருட்கள்.

இன்குபேட்டர் என்பது பற்றி நம் அனைவருக்கும் தெரியும். உரிய காலத்துக்கு முன்பே பிறந்திடும் சிசுக்களைப் பத்திரமாகப் பாதுகாக்கும் சாதனம் இவைகளின் செயல்திறன், பத்திரத் தன்மை, மற்றும் மின்சாரத்தால் கதகதப்பூட்டக் கூடியனவாக மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. இவை சரியான முறையில் வடிவமைக்கப்படா விட்டால், மழலையர் உயிருக்கே பாதகம் விளையலாம். இதைக் கருத்தில் கொண்டே ஐ.எஸ்.3120 - 1978 என்னும் தர நியமத்தினை அமைவனம் உருவாக்கி, மழலையர் இன்குபேட்டர் தயாரிப்பாளர்களுக்கு உதவி செய்கிறது.

ஐஎஸ்:5337 - 1969 என்னும் இந்தியத் தரநியமம் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான கட்டில்கள் பற்றி அதாவது இவ்வகைக் கட்டில்கள் உறுதியாகவும், மழலையர் சௌகரியமாகவும் இருக்கும்படி வடிவமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் கூறுகிறது.

சத்தான மழலையர் உணவு

மழலையர்க்குச் சத்தான முதல் உணவு தாய்ப்பால் தான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அது உலகெங்கும் ஒப்புக் கொள்ளப் பட்ட கருத்தாகும். தாய்ப்பால் மட்டுமே குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை முழுமையாக அளிக்க முடியும். ஒருக்கால் தாய்ப் பால் கிடைக்காவிடில் செயற்கைக் குழந்தைகள் உணவு தேவைப்படுகிறது.

இப்படிப்பட்ட செயற்கை உணவு, குழந்தைகள் நலமாகவும், ஒழுங்காகவும், சீராகவும் வளர்ச்சி பெற ஊட்டம் நிறைந்ததாக, கலப்படமில்லாமலும் இருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டே

ஐஎஸ்:1547 என்னும் குழந்தைகள் உணவு பற்றியும் ஐஎஸ்:11156 என்னும் தர நியமங்களையும் உருவாக்கியுள்ளது.

தாய்ப்பாலில் காணப்படும் தாதுப் பொருள்களுக்குச் சமமாகப் பால் புரதம், பால் கொழுப்பு மற்றும் தேவையான வைட்டமின் ஏ,டீ இவைகளைச் செயற்கை உணவில் உள்ளடக்கியதாக இருக்க இந்தத் தர நியமங்கள் அமைந்துள்ளன. இந்தத் தர நியமங்களின்படி குழந்தைகள் உணவு தயாரிக்கப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டால் அது ஒரு முழுமையான உணவாக, தாய்ப்பாலுக்கு ஈடானதாகக் கருதப்படும்.

குழந்தைகள் பால் பவுடர் ஐஎஸ்ஐ தர முத்திரையுடன் கடைகளில் கிடைக்கிறது. இவைகளை வாங்கி உபயோகித்தால், மழலையர் பாதுகாப்பு நிச்சயம்.

திரவ உணவில் ஆரம்பித்து நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாகத் திட உணவும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். புரத உணவுகள் குழந்தைகள் நன்றாகச் செயல்பட உதவுகின்றன. நான்கு மாதத்திலிருந்து புரத உணவைக் குழந்தைகளுக்குக் கொடுக்க ஆரம்பிக்கலாம். குழந்தைகளுக்கு எட்டு மாதம் ஆகும்போது பால் உணவு பாதி, புரத உணவு பாதி என்ற விகிதாச்சாரத்தில் அமையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ், மத்திய அரசு சிறப்பு அரசிதழ் அறிக்கையின் மூலம் குழந்தை உணவுகளாகிய பால்; பதப்படுத்தப்பட்ட தானிய வகைகள் தயாரிப்பைக் கட்டாய ஐஎஸ்ஐ தர முத்திரைத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. ஐஎஸ்ஐ தர முத்திரை பெறாமல் மழலையர் உணவு வகைகளைத் தயாரிப்பதோ விற்பதோ சட்டப்படிக் குற்றமாகும்.

பீடிங் பாட்டில்கள்...

இவ்வகைப் பாட்டில்கள் சுலபமாகச் சுத்தப்படுத்தும்படியும் ஸ்டெரிலைஸ் என்னும் கொதிநீரில் கழுவிச் சுத்தப்படுத்தும் வகையில் அமைந்திருத்தல் அவசியம். தவிர பீடிங் பாட்டில் ரப்பர்கள் பாட்டில்களில் சரியாகப் பொருந்தியிருக்கும்படியும் கசிவு ஏற்படாதவாறும் இருத்தல் அவசியம். இதைக் கருத்தில் கொண்டே அமைவனம் ஐஎஸ்:5168 என்னும் தர நியமத்தை உருவாக்கியுள்ளது. இத்தர நியமம் பீடிங் பாட்டில்களின் வடிவமைப்பு மூலப் பொருள், கொள்ளளவு, நீள அகலங்கள், நேர்த்தித் திறன், மற்றும் அளவைகளைக் குறிப்பதாக அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் துல்லியமாக விளக்குகின்றது.

பீடிங் பாட்டில் ரப்பர்களில் அபாயகரமான தொத்து நோய்க் கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இதற்காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்:3565 என்னும் இந்தியத் தர நியமம்.

எடை பார்க்கும் கருவி

ஐஎஸ்:2849 என்னும் தர நியமம் மழலையரின் எடை பார்க்கவென்றே உருவாக்கப்பட்ட தர நியமம்.

பொதுச் சுகாதாரம்

பெரியவர்களைவிட குழந்தைகளின் உடல் மிக மிருதுத்தன்மை வாய்ந்தது. அதனால் எரிச்சலோ, பாக்டீரியாக்கள் கலபமாக உட்புகுவதோ சுலபம். இவைகளைக் கருத்தில் கொண்டே குழந்தைச் சாதனங்கள் தயாரித்தல் அவசியம்.

சுத்தம்

குழந்தைகளைச் சுத்தமாக வைத்திருக்க உதவுவதில் குழந்தைகள் சோப்பு மிகமுக்கியமானது. ஐஎஸ்:10523 என்ற தரநியமம், எப்படிப்பட்ட மூலப்பொருட்களை எந்தெந்த விகிதங்களில் கொண்டு சோப்பு தயாரிக்கலாம் என்பதைச் சொல்லுகின்றது.

பேபி டால்கம் பவுடர்கள்

அதிகப்படியான ஈரத்திலிருந்தும், தூசி தும்புகளிலிருந்தும் குழந்தைகளைக் காப்பது பேபி டால்கம் பவுடர்கள். இதற்காக உருவாக்கப்பட்ட தரநியமம் ஐஎஸ்:5339, குழந்தைகள் டால்கம் பவுடரில் போரிக் ஆசிட் சேர்க்கக் கூடாது.

உடைத் தேர்வுகள்

ஐஎஸ்: 10015 (பார்ட் 4) என்னும் தரநியமம் குழந்தைகளுக்கான சரியான அளவிலான துணிகள், வெளியுடைகள், துணிகள் தேர்வு பற்றி விவரிக்கின்றன.

விளையாட்டுச் சாதனங்கள்

பொம்மைகள் குழந்தைகளுக்கு வெறும் விளையாட்டுச் சாதனம் மட்டுமல்லாமல் உடல், மன வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகிறது. சரியாகக் கவனம் எடுத்து பொம்மைகள் தயாரிக்கப்படாவிடில் பொம்மைகள் குழந்தைகளுக்கு ஆபத்தை விளைவிக்கலாம். பொம்மைகள், கூரான முனைகளை உடையதாகவோ, கத்தி போன்ற ஓரங்களைக் கொண்டதாகவோ இருக்கக் கூடாது. இதற்காக உருவாக்கப்பட்ட தர நியமமே ஐஎஸ்: 9873 மற்றும் ஐஎஸ்:9849 இது வெவ்வேறு வயதுக் குழந்தைகளுக்கான பொம்மைகள் [illegible] செய்யும் முறை பற்றி [illegible]றன.

• உலகிலேயே இந்தியாவில்தான் குழந்தைகள் மரணம் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் மக்களின் அறியாமையே. போதிய [illegible] இல்லாததால், குழந்தை வளர்ப்பு பற்றி தெரியாதது, [illegible] பற்றி தெரியாதது ஆகியவை காரணம். இதைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கான உணவு, குளியல் சோப், [illegible] தொட்டில், [illegible] விளையாட்டுப் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஐ.எஸ்.ஐ. தர முத்திரைச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தினை இந்தியத் தர நிர்ணய அமைப்பு கொண்டு வந்துள்ளது.

மேலே சொன்னவைகள் சில உதாரணங்களே. மழலையர் பாதுகாப்பில் கவனம் செலுத்தி, அவர்கள் மனம், உடல் வளர்ச்சி பெற பாடுபட்டு வருங்காலத்தில் வளமான இந்தியாவை உருவாக்கிட இன்றைய பெற்றோரும் மேலே கூறிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும்.



நூலகம்

—பாப்பித்தன்

இருக்கும் அறிவைப் பெருக்கி — அறிஞர்
இதயம் காட்டும் நூலகம்!
விரும்பும் துறையில் வளர்த்தே - நம்மை
வாழ வைக்கும் நூலகம்!

எழுத்(து) அறிவே இருந்தால் - போதும்
ஏணிப் படியாய் உயர்த்தியே,
அழகுப் படிப்பில், பண்பில் - சான்றோர்
ஆக்கும் நல்ல நூலகம்!

மூன்று தமிழில், பலவாம் - மொழியில்
முன்னேற் றிடுமாம் நூலகம்!
ஈன்ற நாட்டின், மொழியின்-பற்றை
இனிதா யூட்டும் நூலகம்!

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கும் - உதவா
தென்ற மொழியை நீக்கியே!
காட்டித் தொழிலைக் கற்க - வைக்கக்
காத்து நிற்கும் நூலகம்!

கண்ணி யத்தைக் கட்டுப் - பாட்டைக்
கடமை தன்னை உணர்த்தியே,
எண்ணும் குறிக்கோள் சிறந்து - விளங்க
எல்லாம் புரியும் நூலகம்!

ஓய்வு நேரப் பொழுதைப் - பயனாய்
ஓட வைக்கும் நூலகம்!
வாய்ப்பு வந்த போதில் - கற்றே
வருவோம் நாளும் நூலகம்!

அறிவுச்சுடர்

1. லண்டன் அமைந்துள்ள நதிக் கரையின் பெயர் என்ன?
தேம்ஸ்.

2. தமிழ்நாட்டில் தேசிய பூங்கா எங்கு உள்ளது?
சென்னை கிண்டியில்

3. நேரத்தை துல்லியமாக அளக்க கப்பலில் வைக்கப்பட்டுள்ள கருவியின் பெயர் என்ன?
'ஈடியோமீட்டர்'.

4. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபகர் யார்?
ஏ.ஓ. ஹியும்.

5. மாஸ்கோ ஒலிம்பிக் ஹாக்கியில் வென்ற நாடு எது?
'இந்தியா'

6. மின்சாரம் சேமித்து வைக்கும் கருவி எது?
பாட்டரி

7. சென்னை நகரின் முதல் பெண் மேயர் யார்?
திருமதி தாரா செரியன்

8. தாய்லாந்தின் தலைநகர் யாது?
பேங்காக்

9. ஆடு தொடாவிலிருந்து கிடைக்கும் மருந்து யாது?
வாசிகா

10. தையல் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
எலிய எஸ். ஹோவல்.

11. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் எது?
சென்னை

12. ஒரிஸ்ஸாவின் தலைநகர் எது?
புவனேஸ்வர்

ம. சந்தானம்
ஸ்ரீ லெட்சுமி டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்
திருப்புவனம் 623 611
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

உலக அதிசயம்:

உலக அதிசயங்கள் பல. அவற்றுள் ஒன்று பாரோசுக் கலங்கரை விளக்கம். இது பாரோசு என்னும் தீவில் உள்ளது; 500 அடிகள் உயரம் கொண்டது.

பாரோசுக் கலங்கரை விளக்கம்

விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்

வனவிலங்குகளின் வாழ்க்கையை ஆராயச் சென்ற விலங்கியல் நிபுணர்களுக்கு ஒரு வியப்பூட்டும் செய்தி கிடைத்தது. விலங்குகளுக்கும் மருத்துவம் தெரியும்; விலங்குளிலும் டாக்டர்கள் உண்டு என்பதே அது. ஐந்தாண்டுகளக்கு முன்னர் ஆப்பிரிக்காவில் தான்சானியாவிலுள்ள மாகாலி மலை தேசீயப் பூங்காவில் ஒரு சிம்பன்சி குரங்கு நோய் வாய்ப்பட்டது. இருந்த இடத்திலிருந்து நகரக் கூட முடியாமல் தவித்த அந்த சிம்பன்சி, அருகிலுள்ள செடி, கொடிகளைச் சாப்பிடாமல் மிகவும் சிரமப்பட்டு சிறிது தொலைவு சென்று ஒரு குறிப்பிட்ட தாவரத்தைப் பறித்து அதன் சாற்றை மட்டும் மென்று குடித்துவிட்டு சக்கையை வெளியே துப்பியது 'வெரோனிகா அமைக்டாலினா' (Veronica Amygdalina) என்ற தாவரவியல் பெயர் கொண்ட அந்தச் செடியை சாதாரணமாக சிம்பன்சி குரங்குகள் தொடவே தொடாது.

மறுநாள் அதே குரங்கைக் கவனித்தபோது அது நோய் குணமாகி வழக்கமான 'குரங்குச் சேட்டைகளில்' ஈடுபட்டது. இந்தச் சம்பவத்தைக் கண்ட நிபுணர்கள் வியப்படைந்து. சிம்பன்சி குரங்குகளின் மருத்துவ அறிவு பற்றி ஆராய்ந்தனர். குறிப்பிட்ட குரங்கு பயன்படுத்திய 'வெரோனிகா' தாவரத்தை தான்சானிய மக்களும் வயிற்றுக் கோளாறுகளைக் குணப்படுத்துவதற்காக நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருவது தெரிய வந்தது. இந்த மூலிகை மருத்துவத்தை அவர்கள் விலங்குகளிடமிருந்துதான் கற்றார்கள் போலும்!

1987-ஆம் ஆண்டில் ஜப்பானின் கியோட்டோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மைக்கேல் ஹூஃப் மேன் (Michael Huffman) இந்தச் செய்தியை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து கடந்த ஐந்தாண்டுகளாக குரங்குகளை ஆராயும் நிபுணர்கள், குரங்குகள் பயன்படுத்தும் 15 மூலிகைகளைக் கண்டறிந்தார்கள். வேறு சில விலங்குகளைக் கண்காணித்தபோது அவைகளும் இப்படி மூலிகைகளைப் பயன்படுத்துவது தெரிய வந்தது.

ஆண்டுதோறும் நடைபெறும் அமெரிக்க அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் மாநாட்டில் விலங்குகளின் மருத்துவ அறிவு குறித்து தனியாக ஒரு கருத்தரங்கே நடந்தது. ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ரிச்சர்டு ராங்கம் (Richard Wrangham) வேறொரு தகவலைத் தெரிவித்தார்.

சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த 'ஆஸ்பிலியா' (Aspilia) என்னும் தாவரத்தைத் சாப்பிட சிம்பன்சி குரங்குகள் 20 நிமிடம் வரை நடந்து வேறு இடங்களுக்குச் செல்வதைக் கண்டார். நாம் குழந்தைகளுக்கு வேப்பெண்ணெய், மீனெண்ணெய் கொடுப்பதைப் போல குரங்குகள் இந்த தாவரத்தின் எண்ணெயைக் கசக்கிப் பிழிந்து மூக்கிலும் வாயிலும் தடவிக் கொள்கின்றன. குரங்குகள் ஏன் இப்படிச் செய்கின்றன என்று அந்த தாவரத்தின் எண்ணெய்யை ஆராய்ந்த போது அதில் 'தயாருப்ரின்-ஏ' (Thiarubrine-A) என்னும் ரசாயனப் பொருள் இருப்பதும், அது பூச்சிகளையும், கிருமிகளையும் கொன்றுவிடும் தன்மைபடைத்தது என்பதும் தெரியவந்தது. அதை மேலும் ஆராய்ந்ததில் புற்றுநோய் ஏற்பட்ட செல்களைக் கூட அழிக்கும் சக்தி அவற்றுக்கு இருந்தது தெரியவந்தது. முதல் தடவையாக மனிதன், விலங்குகள் மூலம் ஒரு அரிய மருந்தை கண்டறிந்திருக்கிறான் என்று கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியர் இலாய் ரோட்ரிகஸ் (Eloy Rodriguez) கூறினார்.

கரடி கற்றுக்கொடுத்த பாடம்

அமெரிக்காவில் வாழும் பழங்குடி இந்திய (செவ்விந்தியர்கள்) மக்களில் நவாஜோ இந்தியர்கள் கரடிகள் கற்றுக் கொடுத்த ஒரு மருந்தை இன்றும் பயன்படுத்திவருகின்றனர்.

வயிற்றில் புழு, பூச்சிகளினால் ஏற்படும் உபாதைகளைத் தீர்க்க லிகுஸ்டிகம் (Ligusticum) என்னும் தாவரத்தைக் கரடிகளும் செவ்விந்தியர்களும் பயன்படுத்துகின்றனர். இந்த மருத்துவத்தை மனிதர்களுக்கு கரடிகள் கற்றுக் கொடுத்த பழங்கதை ஒன்றையும் செவ்விந்தியர்கள் கூறிவருகின்றனர்.

விலங்குகளில் யானைகள், டால்ஃபின்கள் போன்றவை மனிதர்களைப் போலவே மகப்பேறு மருத்துவம் பார்ப்பதை நீண்டகாலமாகவே விலங்கியல் நிபுணர்கள் அறிவார்கள்.

பிரசவ காலத்தில், வயதான பெண் பிராணிகள் உதவிக்கு வந்து பிரசவம் பார்க்கின்றன. ஆனால், மனிதர்களுக்கு இதுவரை தெரியாத சில அரிய மருத்துவ முறைகளும் மருந்துகளும் கூட பிராணிகளுக்குத் தெரிந்திருப்பதை அண்மைக்கால ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

மத்திய அமெரிக்காவிலுள்ள கோஸ்டாரீகா நாட்டின் காடுகளில் வாழும் ஊளையிடும் குரங்குகள் (Howling Monkeys) கருத்தடை மருந்துகளைப் பயன்படுத்துகின்றன! அதுமட்டுமல்ல, ஆண்களையோ, பெண்களையோ அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகளையும் தெரிந்து வைத்திருக்கின்றன.

பிரசவத்திற்கு முன்னும் பின்னும் ஒரு குறிப்பிட்ட தாவரத்தை ஊளையிடும் குரங்குகள் சாப்பிடுகின்றன. இப்படிச் சாப்பிடும் குரங்குகளுக்கு ஆண் குட்டிகளே அதிகம் பிறக்கின்றன.

மனிதர்கள் உள்பட எல்லா உயிரினங்களிலும், பிறக்கப்போகும் புதிய ஜீவன் ஆணா, பெண்ணா என்பதை உயிரணுவிலுள்ள 'எக்ஸ்' (X) குரோமோசோமும் (பெண்) 'ஒய்' (Y) குரோமோசோமும் (ஆண்) தீர்மானிக்கின்றன.

இவைகளில் 'எக்ஸ்' அணு அமிலத்தன்மையிலும், 'ஒய்' அணு காரத் தன்மையிலும் நன்கு தாக்குப் பிடித்து நிற்கின்றன.

கருப்பையில் அமில அல்லது காரத் தன்மையைக் கட்டுப்படுத்தும் தாவரங்களை குரங்குகள் நன்கு அறிந்திருக்கின்றன.

எஸ். சுவாமிநாதன்
நன்றி 'தினமணி'

மே-27 பண்டித நேரு நினைவு நாள்:

உத்தமர் நேரு

—பி.வி.கிரி



பண்டித நேரு
பண்பின் மேரு
எண்டிசை ஒளிரும்
இணையிலா ஜோதி!

அன்னை நாடு
அடிமை விலக
தன்னை ஈந்த
தவப் புதல்வர்

நாடும் வீடும்
நலமாய் விளங்கிட
பாடு பட்டவர்
பல்கலைச் செல்வர்!

எழுத்தில் பேச்சில்
எதிலும் வல்லவர்
பழுத்த மரமாய்ப்
பயனைத் தந்தவர்!

மழலைச் சிரிப்பில்
மயங்கிய மேதை
உழைப்பால் உயர்ந்த
உத்தமர் நேரு!

கடமையே மூச்சாய்
கருதிய வீரர்
மடமையை எதிர்த்த
மக்கள் தலைவர்!

நேருவின் கனவை
நனவாய் ஆக்கிடச்
சேருவோம்! பாரத
தேசம் சிறக்கவே!

மரங்கள் நாட்டின் செல்வங்கள்!

மரங்கள் பூமியினைப் பசுமையாக மாற்றுகின்றன. உணவு மட்டுமல்ல; மழையினையும் கொடுக்கிறது. மருந்து, எரிசக்தி, விலங்குகளுக்கு உணவு என்று பல வழிகளில் பயன்படுகிறது. மரங்கள் மனித சமுதாயத்திற்குப் பல வகைகளிலும் உதவிபுரிகின்றன. காய், கனிகளை மட்டுமல்ல; அவை வீடுகள் கட்டவும், மரப்பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன. நாம் பயன்படுத்தும் காகிதமும், மூங்கில் போன்ற மரங்களிலிருந்து பெறுகிறோம். அதில் சந்தனம், தேவதாரு, குங்குமம், யூகலிப்டஸ் முதலியவை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகின்றன.

மரங்கள் தமது வாழுங் காலத்தில் பயன்படுவது மட்டுமன்றி அழிந்து மண்ணோடு மண்ணாகி மட்கிப்போன பின்னரும் நிலக்கரியாகவும், எரிஎண்ணெயாகவும், வாயுவாகவும் மாறிப் பயன் தருகின்றன. மரங்கள் மேகங்களைக் குளிர்வித்து மழையைப் பொழியச் செய்யும் அதிசயத்தைச் செய்கின்றன. மரங்கள் மட்டுமே கைம்மாறு கருதாது உயிர்களுக்குப் பயன்படுகின்றன. வருவாய்க்கு வழிவகுக்கின்றன. சுற்றுப் புறச்சூழலைப் பாதுகாக்கின்றன. நம்முடைய இயற்கையமைப்பு சிதையாமல் பாதுகாக்கின்றன.

ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் ஒரு மரத்தை வளர்க்க உறுதி பூண வேண்டும். வீணாக மரங்களை வெட்டுவது ஒரு சமூகவிரோதச் செயலாகக் கருதப்படவேண்டும். மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமான சூழ்நிலையில் மரங்களை வளர்த்து சுற்றுப்புறத்தைத் தூய்மைப்படுத்துவது முக்கியமானதொன்றாகும்.

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பு 329 மில்லியன் எக்டர். அதில் காடுகள் 67 மில்லியன் எக்டேர். அதாவது மொத்த நிலப்பரப்பில் 22 விழுக்காடே காடாகும். 1952-இல் வகுக்கப்பட்ட தேசியக் கொள்கையின்படி குறைந்தபட்ச 33 விழுக்காடாவது காடுகள் இருக்க வேண்டுமென்பது கட்டாயமாகும்.

சில மரங்கள் சுற்றுப்புற மாசை அகற்றப் பயன்படுகின்றன. மாமரம், காற்றில் உள்ள குளோரினையும், மல்பரி, சூரியகாந்தி, வாதா மரங்கள் சல்பர்டை ஆக்ஸைடையும், விசிறிப்பனை, அத்தி ஆகியவை ஹைட்ரஜன் ப்ளோரைடையும் அகற்ற உதவி புரிகின்றன. 50 மீட்டர் பரப்புள்ள ஒவ்வொரு பூங்காவினால் 20-30 டெசிமல் காற்றுச் சத்தத்தைக் குறைக்க முடியுமென்று டாக்டர் டி.சி. தாஸ் கணித்துள்ளார். தேசிய வனக் கொள்கையின்படி பிராணவாயு, ஈரப்பதக் கட்டுப்பாடு, பறவை, பூச்சிகள் புகலிடம், நச்சுக் காற்றைத் தூய்மைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு மரங்கள் வளர்ப்பது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

மரங்கள் இயற்கையின் சுவாசப்பைகள்

மரங்களை இயற்கை அமைப்பின் சுவாசப்பைகள் என அழைப்பது பொருத்தமாகும். ஏனென்றால், மனிதனால் உருவாக்கப்படும் பலவகையான கழிவுப் பொருட்களை, கேடுகளைக் களைவதும் மரங்கள் தாம். மரங்கள் மெல்ல அசைந்தசைந்து அக்கழிவுகளிலுள்ள கரியமிலவாயு, நைட்ரஜன் போன்ற வாயுக்களைப் பிரித்து வெளி மண்டலத்தில் கலந்து விண்வெளிப் பயணத்திற்கு அனுப்புகின்றன. இதனால் உயிர் இனங்களுக்கு ஏற்படும் கேடுகள் வெகுவாகத் தடுக்கப்படுகின்றன.

எலித்தடுப்பான்களாகச் செயல்பட்டு எலியின் நாச விளைவுகளிலிருந்து காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் தனித்தனியே நுரையீரல்கள் உண்டு. ஆனால் அத்துணை உயிரினங்களுக்கும் உயிர் வாழ்வதற்கான ஒரே நுரையீரல் மரங்களிடையேதான் உள்ளது. கரியமில வாயுவினைக் கிரகித்துக்கொண்டு நமது சுவாசத்திற்கு வேண்டிய பிராண வாயுவை அளிக்கிறது. மேலும் நச்சுப்புகைகளை உள்ளீர்த்துக்கொள்கிறது. மனிதன் ஒரு நாளைக்கு 12,000 லிட்டர் முதல் 15,000 லிட்டர் வரைக் காற்றைச் சுவாசிக்கிறான். இந்த நிலையில் நம்மைச் சுற்றி வியாபித்துள்ள சுற்றுப்புறக் காற்றில் பிராண வாயுவை நிரப்பிய வண்ணம் இருக்கின்றன மரமென்னும் பைகள். மரங்கள் என்றாலே உடனே நினைவுக்கு வருவது அவற்றின் குளிர்ந்த நிழலும் சுகமளிக்கும் காற்றுமாகும்.

மரம் விடும் மூச்சால் மனிதன் மட்டுமன்றி உயிருள்ள பிற ஜீவராசிகளும் பயன்பெறுகின்றன. மரங்களைத் தவிர மற்ற உயிரினங்கள்யாவும் பிராண வாயுவை உட்கொண்டு கரியமில வாயுவினைத்தான் வெளிவிடுகின்றன. மரங்கள் தாம் இதற்கு விதிவிலக்கு. மரங்கள் மட்டுமே வாயு மண்டலத்திலுள்ள கார்பன்-டை-ஆக்ஸைடு சூரிய ஒளியினால் உறிஞ்சி அவ்வாயுவினைக் கார்பனாகவும், ஆக்ஸிஜனாகவும் பிரித்து ஒளிச்சேர்க்கை வாயிலாகக் கார்பனை மாவுப் பொருளாக மாற்றுகின்றன. இவ்வமயம் வெளிவிடும் ஆக்ஸிஜன்தான் ஏனைய உயிர்கள் சுவாசித்து வாழ வழி வகுக்கின்றது. மரங்களின் பச்சை இலைகள் ஒரு சோதனைக் கூடமாகவே செயல்பட்டு ஒளிச்சேர்க்கையின்போது ஆக்ஸிஜனை வெளியேற்றுகின்றன.

எனவே, பச்சை நுரையீரல்களின் செயல், சுவாசப்பைக்கு ஏதேனும் ஊறு விளைந்தால் உயிர்க்கு ஆபத்து ஏற்படுவது உறுதி போல மரங்கள் அழிக்கப்பட்டால் மனித உயிர்களும், மற்ற உயிர்களும் வாழும் இந்த இயற்கைச் சூழல் மாசுற்று அழிய நேரிடும் என்பது உறுதியாகும்.

50 ஆண்டு வாழும் ஒரு மரம் ஆயுட்காலத்தில் 18 இலட்சம் ரூபாய் பெறுமான சேவை புரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஐயாயிரம் ரூபாய் பெறுமான பிராண வாயுவை வெளியிடுகிறது. 5 இலட்சம் ரூபாய் காற்றைச் சுத்திகரிக்கும் செயலில் ஈடுபடுகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

மரங்கள் மனித இனத்தின் இதயமாக, இயற்கையின் நுரையீரலாக, பிராணவாயுவின் பிறப்பிடமாக விளங்குகின்றன. பலவற்றாலும் உதவிவரும் நமது நண்பர்கள் மரங்கள். அவைகளை அழிப்பதால் நமக்கு நாமே அழிவைத் தேடிக் கொள்கிறோம். மரத்தை வெட்டுவது ஒரு உயிரைப் பறிப்பது போன்றதாகும். மகவுக்கு ஒரு மரம் நட்டு, நீர், நிலம், காற்றின் தூய்மை, வளமான வாழ்வின் மேன்மை என உணர்ந்து போர் வேகத்தில் செயல்படுவோம்! மண் வளம் பெறுவோம்!

இத்தகைய மகத்தான சேவை புரியும் மரத்தினை நட்டு பயிரினம் செழிக்கவும், மழைவளம் பெருகவும், மண் வளம் ஓங்கவும் பேருதவிபுரியும் மரங்களை நாட்டு வளங்களாகக் கொண்டு காப்போம்.

- என். ரெங்கநாதன்

நன்றி: 'திட்டம்'

RABIES) வெறிநோய்

வெறி நோய் ஒருவகை (வைரஸ்) நுண்கிருமியால் ஏற்படுகிறது. மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் பரவக்கூடிய கொடிய நோயாகும். விலங்குகளிடமிருந்து மனிதனுக்கும், ஓர் விலங்கிடமிருந்து மற்ற விலங்குகளுக்கும் எளிதில் பரவக் கூடியது.

நோயால் பாதிக்கப்படும் விலங்குகள்:

நாய், பூனை, பசுவினம், எருமையினம், ஆட்டினம், காட்டு விலங்குகளான நரி, யானை, வெளவால்.

நோய் பரவும் விதம்:

ஓர் விலங்கு மற்ற விலங்குகளைக் கடிக்கும்போது உமிழ் நீர் மூலமாக இந்த நோய் பரவுகிறது. காயங்களின் மீது கிருமியுடன் கூடிய உமிழ்நீர் படுதல்.

நோய் அறிகுறிகள்:

அ. நாய் அங்குமிங்கும் அலைதல்

1. வாயிலிருந்து அதிக உமிழ்நீர் வடிதல்
2. தாடை தொங்குதல்
3. மரம், கல் மற்ற பொருட்களைக் கடித்தல், பிற விலங்குகள் மனிதனைக் கடித்தல், வெளிச்சத்தைக் கண்டு பயப்படுதல்.

ஆ. பசுவினம்

1. முரட்டுத்தனமாக இருத்தல்
2. வித்தியாசமான குரலில் கத்துவது
3. அடிக்கடி சிறுநீர் கழிப்பது

சிகிச்சை முறை:

1. நோய் அறிகுறி தோன்றிய பிறகு சிகிச்சை பலனளிக்காது
2. கடிபட்ட இடத்தை சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல்
3. வெறிநோய்த் தடுப்பு ஊசி மருந்து போடுதல்

நோய்த் தடுப்பு முறைகள்:

வருமுன் காப்பது நல்லது. எல்லா இனச் செல்லப் பிராணிகளுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை தடுப்பு ஊசி போடுதல்.

உதாரணமாக BPL தடுப்பு மருந்து, Chick Embryo தடுப்பு மருந்து

மனிதர்களுக்கு:

அ. உடனடியாக மருத்துவர் ஆலோசனையும் தடுப்பு ஊசி போடுதலும்

1. BPL தடுப்பு மருந்து
2. Human Diploid Cell Culture தடுப்பு மருந்து
3. Chick Embryo தடுப்பு மருந்து

ஆ. கடிபட்ட இடத்தைச் சோப்புத் தண்ணீர் கொண்டு கழுவுதல், கிருமி நாசினிகள் உபயோகிக்கக் கூடாது.

(BRUCELLOSIS) கருச்சிதைவு நோய்

கருச்சிதைவு நோய் ஒருவகை பாக்டீரியா கிருமியால் ஏற்படுகிறது. இந்த நோய் பசு, எருமை, ஆடுகள் பன்றிகளைத் தாக்குகிறது. இந்த நோய் மனிதனையும் தாக்கவல்லது. எளிதில் பரவும் தன்மையுடையது.

பாதிக்கப்படும் கால்நடைகள்:

பசுக்கள், எருமைகள் 5-6 மாதம் சினைப் பருவத்தில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றன. ஆடுகள் மற்றும் பன்றிகளும் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றன.

நோய் பரவும் விதம்:

அ. கருச்சிதைவு ஏற்பட்ட பசுக்கள் மற்ற கால்நடைகள் உறுப்புகளிலிருந்து வெளிப்படும் கழிவுப் பொருட்கள் மூலமாக மற்ற கால்நடைகளுக்குப் பரவுகிறது.

ஆ. இந்த நோயினால் பாதிக்கப்பட்ட காளைகளைக் கொண்டு இனப் பெருக்கம் செய்வதால் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது.

நோய் அறிகுறிகள்:

பசு மற்றும் எருமையினங்களில் 5-6 மாத சினைப் பருவத்தில் கருச்சிதைவு ஏற்படுதல் அதேபோல் ஆட்டினம் மற்றும் பன்றியினத்தில் கருச்சிதைவு ஏற்படுதல்.

சிகிச்சை முறை:

அ. கருச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைத் தனியாக பிரித்து வைத்தல்

ஆ. 3 மாதங்கள் வரை சினைக்கு விடாமல் ஓய்வு கொடுத்தல்

நோய்த் தடுப்பு முறைகள்:

அ. மந்தைகளில் "Brucelin" சோதனை செய்து நோய் கண்ட கால்நடைகளைப் பிரித்தல்

ஆ. இயற்கை முறைக் கருவூட்டலை தவிர்த்தல்

இ. 6 மாத வயதுடைய கிடேரிகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல்

ஈ. செயற்கை முறை கருவூட்டல் விந்துவுடன் ஆண்டிபயாடிக் மருந்துக்கள் கலப்பது.

உ. கருச்சிதைவுக் கழிவுப் பொருட்களைச் சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்துதல்

ஊ. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு 3 மாதம் இனச் சேர்க்கையிலிருந்து ஓய்வு கொடுத்தல்.

—கால்நடைப் பராமரிப்புத்துறை



காவலர் குடும்பங்கள் களிப்புற

சிவகங்கையில் ரூ. 2½ கோடிச் செலவில் கட்டப்பட்ட காவலர் குடியிருப்பு

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் தோற்றுவிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் பறந்தோடி விட்டன. இம்மாவட்டத்தின் அமைதிக்குப் பங்கம்வராது, பாதுகாத்து வரும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுவரும் காவலர்கள் குடும்பத்துக்கு ஒரு குடியிருப்பு இல்லையே என்ற குறை... ஆயுதப் படைக்காவலர்கள் தலைநகரில் தங்கிப் பயிற்சிபெற்று அவசர நிலைக்கு உடனே செல்லமுடியாதபடி, மதுரையிலேயே இத்தனை ஆண்டுகள் தங்கியிருந்தனர்... காவலர் பணி சிறப்புடன் அமைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், இக்குடியிருப்பைத் திறந்து உடனே காவலர்கள் குடும்பங்கள் சிவகங்கையில் குடியேற்றிடவிரும்பி ஆணையிட்டார்.

அதன் விளைவு.....

கடந்த 2.5.1992-ஆம் நாள் சிவகங்கையில் கோலாகலமான விழா... நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. காவலர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி வெள்ளம்... விழாவிற்குக் காவலர்கள் தமது துணைவியார், குழந்தைச் செல்வங்களுடன் வந்து மகிழ்வோடு கலந்து கொண்டார்கள்.

விழாவிற்குத் தலைமைவகித்த மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியாகாந்தி இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றிவைத்துப் புதிய கட்டடத் திறப்புப் பணியைத் தொடங்கிவைத்தார். மண்டலக் காவல்துறைத் துணைத் தலைவர் திரு. எஸ்.வி. வெங்கடகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தலைமைப்பொறியாளர் திரு. செ. மாடக்கண்ணு அவர்கள் திட்ட அறிக்கையைப் படித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு. திருநாவுக்கரசு அவர்கள் தமது திருக்கரங்களால் ரூபாய் 2½ கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய காவலர் குடியிருப்பைத் திறந்து வைத்தார். இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தில் ஓராண்டு நிறைவு வெற்றி விழா கேக்கையும் வெட்டினார். அறிவொளி இயக்கம் சார்பில் 475 கிராமப் பெண்களுக்குத் தரப்பட்ட கராத்தே பயிற்சியைப் பார்த்து, வியந்து பாராட்டிய மாண்புமிகு அமைச்சர், காவல்துறையைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல் குடியிருப்புத் திறவுகோலை வழங்கிட, அதைத் தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால், இ.கா.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும் சமுதாயத்தில் நலிவடைந்த மக்களுக்கு அரசின் உதவித்தொகைகளை வழங்கினார். ஆதிதிராவிடர்களுக்கு ரூபாய் 13 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள குழும வீடுகளை 77 பேருக்கும் வழங்கினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கட்டடம் ஒன்றையும், ஊராட்சி மன்றக் கட்டடங்கள் மூன்றையும், கிராமங்களில் 244 தெருவிளக்குகள் அமைத்திட உதவித் தொகையையும், படித்த 100 பெண்களுக்குச் செயற்கை வைரத்துக்குப் பட்டைத் தீட்டும் தொழில்புரிய ரூபாய் 18 இலட்சத்தையும், கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள் அத்தொழிலைக் கைவிட்டதால் அவர்கள் மாற்றுத் தொழில்புரிய 128 நபர்களுக்கு ரூபாய் 10 இலட்சத்தையும், வறட்சி நிவாரணப்பணிகள் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ரூபாய் 23 இலட்சத்திற்கான நிதி உதவியையும், 7 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ரூபாய் 33 இலட்சம் மதிப்பில் கட்டப்படுவதையும், ஆக மொத்தம் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகளை இம்மாவட்ட மக்களுக்கு வழங்கினார்.

பின்பு தமது சிறப்புரையில் மாண்புமிகு அமைச்சர் பேசும்போது கூறியதாவது:-

'தமிழ்நாட்டில் உள்ள மக்களின் அத்தியாவசியத் தேவைகளைத் தீர்க்க புரட்சித் தலைவி அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 6½ கோடி செலவில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிப் பல திட்டங்கள் செயல்படுத்தி வருகிறோம். தமிழ்நாட்டில் வருகின்ற 3 மாதத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படக்கூடாது என்று கருதி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளார். மேலும் எங்கெங்குக் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதோ அந்த இடத்திற்கு அரசு அதிகாரிகள் சென்று ஆவன செய்யும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக மக்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்கிடப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறார். இதன்மூலம் இந்தியாவில் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக விளங்கும்...'

-இவ்வாறு அமைச்சர் பேசினார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கரு. முருகானந்தம், திரு. வி.எம். சுப்பிரமணியம், திரு. மா.சா.மா. இராமச்சந்திரன், திருமதி கற்பகம் இளங்கோ, திரு. கே.ஆர். இராமசாமி, திரு. மு. தென்னவன், திரு. சுந்தர்ராஜ், திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா முடிவில் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தாரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வளர்ந்துவரும் இம்மாவட்டத் தலைநகருக்கு இப்புதிய குடியிருப்புகள் மெருகூட்டிப் பெருமை சேர்க்கும் என்பதும், 364 காவலர் குடும்பங்கள் நிம்மதியுடன் வசிக்க வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையல்ல...

ரெ. இராவணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்.

வளரும் வேளாண்மை :

கோடை காலத்தில் பட்டுப்புழு பராமரிப்பு

பட்டுப்புழு வளர்ப்பில் உண்டாகும் இழப்புக்கு அவ்வப்போது நிலவும் தட்பவெட்ப நிலையும் ஒரு முக்கியக் காரணம். நோய்களினால் 40-50 சதம், பூச்சிகளினால் 5-6 சதம் மற்றும் சீதோஷ்ண நிலையினால் 10-12 சதம் இழப்பும் உண்டாகின்றது எனக் கண்டறியப் பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பினை 24-28 (டிகிரி சென்டிகிரேடு) வெப்ப நிலைக்குள்தான் சாதாரணமாக வளர்க்க இயலும். வெப்பநிலை 28 டிகிரி சி-ஐத் தாண்டும்போது சீதோஷ்ணம் மற்றும் அதன் காரணமாக, 'பால்புழு' போன்ற நோயும் உண்டாகி புழு வளர்ப்புத் தோல்வியடைகின்றது. எனவே, கீழ்க்காணும் முறைகளைக் கையாண்டு விவசாயிகள் புழு வளர்ப்பினை வெற்றிகரமாகச் செயல்படுத்தலாம்.

மின் குளிர்சாதனப்பெட்டி வைத்தல்

★ இம்முறை மிகவும் சிறந்தது என்றாலும் அனைத்து விவசாயிகளாலும் இதைப் பின்பற்ற இயலாது மேலும் தொடர்ச்சியாக மின்சாரம் இல்லாத நிலை நமக்கு உண்டு என்பதால், இம்முறையை நாம் எப்போதும் நம்பியிருக்க இயலாது.

★ இலை சேமிக்கும் தொட்டியினைச் சாக்குப் பைகளினால் சுற்றி அதன் மேல் தண்ணீரைத் தெளித்து, இலையின் தரம் கெடாதவாறு பாதுகாக்க வேண்டும். தரமிழந்த இலைகளே நோய்க்கு முதல் காரணியாகும்.

★ ஜன்னல் மற்றும் உள்ளே திறந்த பகுதிகளில் மேற்சொன்ன முறையிலேயே, நனைந்த கோணிப் பைகளைக் கட்டி வெப்பத்தைக் குறைக்கலாம்.

★ உயரமாகக் கூரை அமைத்தால் அல்லது தென்னங்கீற்று, கோரைப் புல் மற்றும் வைக்கோல் இவற்றைக் கொண்டு கூரை அமைத்தால் வெப்பம் உள்ளே இறங்காது.

★ புழு வளர்ப்புத் தாங்கி மற்றும் இலைசேமிக்கும் தொட்டி இவற்றிற்குக் கீழே பாலிதீன் பேப்பரை விரித்து, 10 செ.மீ. உயரத்திற்கு நுண் மணல் படுக்கை அமைத்து அதன்மேல் தண்ணீரைத் தெளித்து வைக்கலாம்.

★ நல்ல காற்றோட்ட வசதி கொண்ட வளர்ப்பு அறையில் தட்ப வெட்ப நிலையைப் பராமரிக்கும் முறைகளைக் கையாளுவது எளிது என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

கோடைக்கு உகந்த பயிர்

தமிழ்நாட்டில் கடலைக்கு அடுத்த முக்கியமான எண்ணெய்வித்துப் பயிர் எள். எண்ணெய் வித்துக்களுக்கு அதிக விலை கிடைக்கும் இன்றைய காலங்களில் எள்ளை ஒரு பணப்பயிர் என்றும் சொல்லலாம். மற்றொரு சிறப்பு அம்சம் இப்பயிரை குறைந்த அளவு கிணற்று நீரைக் கொண்டு பயிரிடலாம். இப்பயிரின் நீர்த்தோகை இருபத்தைந்து சென்டி மீட்டர் (நெற்பயிருக்குத் தேவையான மொத்த நீரில் ஐந்தில் ஒரு பங்கு).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பவானிசாகர் நீர் நிர்வாகப் பிரிவு நடத்திய ஆராய்ச்சியின் முடிவுப்படி, கோடையில் என்னிற்குக் கீழே குறிப்பிட்டது போல் பாசனமளிக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.

★ எள் அதிக நீரைத் தாங்கி வளரக் கூடிய பயிரல்ல. அடிக்கடி நீர் பாய்ச்சக்கூடாது. நான்கு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது. ஆகையால், கோடையில் குறைந்த நீர் வசதி உள்ளவர்களுக்கு உகந்த பயிர் இது.

★ முதல் பாசனம், விதைத்தவுடன் அளிக்க வேண்டும். இப்பாசனத்தைக்கொண்டு, பயிர் முளைத்து மூன்று, நான்கு இலை நிலை அடைந்துவிடும்.

★ இத்தருணத்தில் இரண்டாவது பாசனம் அளிக்க வேண்டும்.

★ மூன்றாவது பாசனம், பூக்கும் தருணத்திலும், நான்காவது காய் விளையும் தருணத்திலும் கொடுக்க வேண்டும்.

இத்துடன் கோ.1 போன்ற உயர் விளைச்சல் எள் ரகங்களைப் பயிரிட்டு கோடையில் குறைந்த அளவு பாசன வசதி உள்ளவர்கள் பயனடைய விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வறட்சியைத் தாங்கும் தீவனப்புல்

கடந்த 14 ஆண்டுகளில் ஒன்பது புதிய நல்ல சத்துள்ள தீவனப்பயிர் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 1988-இல் வெளியிடப் பட்ட கோ.1 நீலக் கொழுக்கட்டைப் புல் வறட்சியைத் தாங்கி நன்கு வளர்ந்து நல்லதொரு தீவனத்தைக் கொடுக்கவல்லது. மேலும் மாடு மேய்ப்பதனால் உண்டாகும் மிதி பாட்டினால் செடிகள் பட்டுப்போவதில்லை. இந்த ரகப்புல் வேர்கள் பூமியில் இந்தச் சித்திரை மாதக் கடும் வெய்யிலையும் தாங்கி, சிறிது மழை கிடைத்தவுடன் துளிர்த்து நல்ல தீவனத்தை மேய்ச்சலுக்குக் கொடுக்க வல்லது. இதன் விதைப்புக் காலம் செப்டம்பர் அக்டோபர் (அதாவது வடகிழக்குப் பருவ மழைக்காலம்) இந்தப்புல் வடிகால் வசதியுள்ள ஒரு மண்பாட்டு மற்றும் சுண்ணாம்புச் சத்து மிகுந்த நிலத்தில் நன்கு வளரக்கூடியது. இதில் ஒன்பது சதம் புரதமும், நாற்பது சதம் மாவுச்சத்தும் சுமார் அரை சதம் சுண்ணாம்புச் சத்தும் கொண்டது. இதன் செரிக்கப்படும் திறன் 49 சதம் இந்த நீலக்கொழுக் கட்டைப்புல் ஆண்டிற்குச் சுமார் ஆறு அறுவடைகளில் ஏக்டருக்கு நாற்பது டன்கள் வரை பசுந்தீவனம் கிடைக்கும். ●

பண்ணைக் கழிவிலிருந்து பாங்கான அட்டைகள்!

காகிதத் தொழிற்சாலைகள் காடுகளை அழித்து காகிதக் கூழாக்கி விட்டன. இதனால் நம் வனச் செல்வம் குறைந்து வருகிறது. ஆகவே, காகிதம் தயாரிக்க பிறிதொரு மூலப் பொருளைத் தேடும் நிலையில் உள்ளோம். பண்ணைக்கழிவுகளிலிருந்து காகிதம் தயார் செய்யும் நுட்பத்தைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

மூலப்பொருள்கள்

செல்லுலோஸ் கொண்ட எல்லாப் பொருளிலும் காகிதம் தயாரிக்கலாம். நார்த்தன்மை அதிகம் கொண்ட பொருள்களிலிருந்து காகிதம் தயாரித்தல், நல்ல வலுவுள்ளதாகவும், தரமுள்ளதாகவும் இருக்கும். சாதாரணமாகக் காகிதக் கூழ் தயாரிக்க மூங்கில், யூக்கலிப்டஸ், யானைப்புல், வைக்கோல், கரும்புச் சக்கை பயன்படுத்தப் படுகின்றன.

வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சியின்படி வாழை மட்டை, சோளத்தட்டு, பருத்திமார், சூரிய காந்தித்தட்டு, கம்புத்தட்டு, பார்த்தீனியம் நச்சுக்களை, நீர்த்தாமரை, தேங்காய்மட்டைத்தூள் போன்றவற்றால் வலுவுள்ள காகித அட்டைகள் தயார் செய்யலாம் என்று தெரிய வந்துள்ளது. இந்த மூலப்பொருள்களைக் கழிவுக்காகிதத்துடன் 3:1 என்ற விகிதத்தில் சேர்த்து நல்ல தரமுள்ள அட்டை தயாரிக்க முடியும்.

மூலப்பொருட்களைத் துண்டுகளாக்குதல்

காகிதக்கூழ் தயார் செய்வதற்கு, முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலப் பொருளான, வாழைத்தண்டு, பருத்திச்செடி, சோளத்தட்டு அல்லது வேறு ஏதாவது அதிக அளவில் கிடைக்கக்கூடிய பயிர்த்தண்டுகளைத் தட்டு வெட்டும் கருவி மூலம் சிறு சிறு துண்டுகளாக வெட்டவேண்டும். துண்டுகள் 2 முதல் 3 செ.மீ. நீளத்திற்கு மிகைப்படாமல் இருத்தல் நல்லது. வெட்டப்பட்ட துண்டுகளைக் கழுவி சுத்தம் செய்தபின் கொதிகலனில் போடவேண்டும்.

கொதிகலனில் வேகவைத்தல்

சிறு துண்டுகளாகக்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொதிகலனில் போட்டபின் அவை நன்கு மூழ்கியிருக்கும் அளவிற்குத் தண்ணீர் ஊற்றவேண்டும். பின்பு எரிசோடா என்கின்ற உப்பை 4 சதம் என்ற கணக்கில் சேர்த்துக்கொண்டு மூலப் பொருளை நன்கு கொதிக்க வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் எளிதில் கரையக்கூடிய மாவுப் பொருள்கள் கரைந்தவுடன் நார்ப் பொருட்கள் அப்படியே இருக்கும். 2-லிருந்து 3 மணி நேரம் இவ்வாறு கொதிகலனில் நன்கு வெந்தபிறகு, தண்ணீர் வடிகட்டி வேகவைத்த தண்டுகளைப் பிரித்துவிட வேண்டும்.

தண்டுகளை அரைத்தல்

வேகவைத்த தண்டுகளை, பின்பு குளிர்ந்த நீரில் நன்கு கழுவி விட வேண்டும். பின்பு அரைக்கும் எந்திரத்தில் போடவேண்டும். அரைக்கும் எந்திரத்தில் தேவையான அளவு நீர் சேர்த்து 2 மணி நேரத்திற்கு நன்கு அரைக்கவேண்டும். பின்பு அரைத்த மரக்கூழில் 3-இல் ஒரு பங்கு கழிவுக் காகிதம் சேர்த்து, மேலும் 4 மணி நேரம் நன்றாக அரைக்கவேண்டும். பின் அந்தக்கூழில் சீனக்களிமண் 5 சதம், ரோசின் என்ற பசைப் பொருள் ஒரு சதம், ராணிபால், 0.1 சதம், நீலம் 0.05 சதம், ஆலம் 3 சதம் போன்ற இரசாயனப் பொருட்களைக் கலந்து மேலும் 2 மணி நேரத்திற்கு அரைக்க வேண்டும். இந்தக் கூழைப் பிளீச்சிங் தூளைக்கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பிளீச்சிங் தேவையில்லாத காகிதப் பொருட்களுக்கு வெறும் தண்ணீர் விட்டுக் கழுவினால் போதுமானது.

வார்ப்பிடுதல்

காகிதம் அல்லது காகித அட்டைகள் தயார் செய்ய ஆட்டோ வாட் என்ற வார்ப்பு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. தேவையான அளவு அரைக்கப்பட்ட காகிதக் கூழை எடுத்து வார்ப்பிடும் அச்சில் இடவேண்டும். தயாரிக்கப்போகும் காகித அட்டையின் அல்லது காகிதத்தின் கனத்தைப் பொருத்து, காகிதக் கூழை அளவோடு அச்சில் ஊற்ற வேண்டும். பின் வார்ப்பிடும் அச்சானது தண்ணீரில் மூழ்குமாறு செய்து, காகிதக்கூழானது ஏகத்துக்கும் சீராகப் பரவுமாறு கைகளால் செய்யவேண்டும். பின் அச்சை வெளியில் எடுக்கும்பொழுது, அச்சில் உள்ள சல்லடைத்துவாரத்தின் வழியாகத் தண்ணீர் கசிந்து காகிதக்கூழ் மட்டும் அட்டைவடிவமாகத் தங்கி விடும். பின் ஈரத்தோடு இருக்கும் இந்தக் காகிதக்கூழை மெல்லிய துணிபோல் அப்படியே அச்சை விட்டு எளிதாக எடுத்து, சமமான மரப்பலகையில் கிடத்திடவேண்டும். அடுத்தடுத்து எடுக்கப்படும் ஈரக் காகிதக்கூழ் அட்டையை, துணிகளுடன் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துக்கொண்டு வரவேண்டும்.

நீர்ப்பிழிதல்

இவ்வாறு வார்க்கப்பட்ட ஈரக் காகித அட்டையைத் திரவ அழுத்தக் கருவியின் உதவியால், அழுத்தும் பொழுது, அந்தப் பொருள்களில் உள்ள அதிகப்படி நீர் பிழிந்தெடுக்கப்படுகிறது. இந்தத் திரவ அழுத்தக் கருவியில் 15-லிருந்து 20 வார்ப்பிட்ட அட்டைகளை ஒரே சமயத்தில் வைத்து நீரைப் பிழியலாம்.

உலர வைத்தல்

நீர் பிழியப்பட்ட காகித அட்டைகளைப் போர்த்தப்பட்ட துணிகளோடு அப்படியே வெய்யிலில் உலரவைக்கவேண்டும். இந்த அட்டைகள், காய்ந்த ஒரு அளவுக்கு ஈரம் குறைந்தவுடன் (சுமார் 10 சத ஈரப்பசை) மேலே ஒட்டிய துணி

களைப் பிய்த்து எடுத்துவிட வேண்டும். அதிக அளவு ஈரப்பசை இருக்கும் பொழுது துணியிலிருந்து பிரித்தால் காகித அட்டை கிழிந்துவிட வாய்ப் புள்ளது. ஆகவே, ஈரப்பதத்தில் காகித அட்டையைத் துணியிலிருந்து பிரித்த பின் நன்கு உலரவைத்துக் கொள்ளலாம்.

சுருக்கம் நீக்கி மெருகிடுதல்

வெய்யிலில் நன்கு உலர்ந்த காகித அட்டைகளில் நிறைய வளை வுகளும் சுருக்கங்களும் இருக்கும். இவைகளைப் போக்க காகித அட்டை களை பாலிஷ் செய்யப்பட்ட இரண்டு இரும்புத் தகடுகளுக்கு இடையில் வைத்து, கனமான இரும்பு உருளைகளின் வழியாகச் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் சுருக்கம் நீங்கி அட்டைகள் நன்கு மெருகேற்றப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றன. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை செய்தால் நன்கு மெருகேற்றப்பட்ட அட்டைகள் கிடைக்கும். இந்த அட்டைகளை வெட்டும் கருவி கொண்டு ஓரங் களை வெட்டித் தேவையான அள விற்குச் செய்து கொள்ளலாம்.

காகிதப் பொருட்கள், அவற்றின் பயன்கள்

தேவையான அட்டை கிடைத்த வுடன் அவற்றை மடித்து, இரும்புக் கம்பி பொருத்தி, கோப்புகளாக மாற்றலாம். இந்த அட்டைகளை மெலிதாகக் காகித அளவில் செய் தால் அதிலிருந்து அலுவலகத்திற்கு வேண்டிய தபால் கவர்கள் செய்ய லாம். சற்றுச் கனமான தகடுகளைக் கொண்டு, அலுவலகத்தில் அலு வலர்கள் எழுதுவதற்கு உபயோகப் படுத்தும் தாங்கும் அட்டைகளாகச் செய்யலாம். தகுந்த அச்சின் உதவி யால் காகித அட்டைகளைச் சாப் பிடும் தட்டாக மாற்றலாம். இவற்றையே முட்டை தாங்கும் ஓடுகளாகக்கூட மாற்றலாம். கன மான காகிதத் தகடுகளுக்கு வார்னிஷ் பூசி பின் வண்ணம் பூசி அலங் காரக் கூரைகளாகவும் தடுப்புச் சுவர் களாகவும் பயன்படுத்தலாம். இந்த ஓடுகளைப் பயன்படுத்தி கனமான அட்டைப் பெட்டிகள் தயார் செய்து பழவகைகள் உணவு டின்கள் போன்றவற்றை அடைத்து அனுப்ப லாம்.

ஒரு டன் காகிதப் பொருட்கள் தயாரிக்கத் தேவையான தொழிலகத் தின் குறிப்புகள்.

1. தொழில் அமைக்க வேண்டிய கருவிகள், எந்திரங்கள் - ரூ.10,00,000
2. தண்ணீர்/நாள் 25,000 லிட்டர்/நாள்
3. இடவசதி 5,000 ச.அடி.
4. மின்சாரம் 25 எச்.பி.
5. வேலையாட்கள் 25/நாள்
6. வேளாண் கழிவுப்பொருள் 3 டன்/நாள்,
7. கழிவுத்தாள்கள் 1 டன்/நாள்.

காகிதப் பொருட்களின் அடக்க விலை : 1.
காகிதக்கோப்பு ரூ.3.00
தாங்கும் அட்டை 4.50
காகித ஓடு (ச.அடி) ரூ.1.00 ●

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய மூன்று இந்தியர்!

இந்திய-திபெத் எல்லைக் காவல்படையைச் சேர்ந்த மூவர் உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் ஏறி இந்தியத் தேசியக் கொடியைப் பறக்கவிட்டனர்.

15 மலை ஏறும் வீரர்கள் அடங்கிய இந்தியக் குழு எவரெஸ்ட் சிகரத்தை எட்டும் முயற்சியை இம்மாதம் துவக்கியது. இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படை யைச் சேர்ந்த இவர்களில் கமாண் டன்ட் சுநீல் தத்தா சர்மா, கம்பெனி கமாண்டர் பிரேம் சிங், சுபேதார் மேஜர் கன்யாலால் ஆகிய மூவரும் உலகின் மிக உயர்ந்த மலைச் சிகர மான எவரெஸ்ட் மலைச் சிகரத் தைச் சென்றடைந்து சாதனை புரிந் துள்ளனர்.

8,848 மீட்டர் உயரமுள்ள இந்த எவரெஸ்ட் சிகரத்தை இந்தக் குழு வினர் 10.5.1992 அன்று மாலை எட்டினர்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் இந்தியர் இவ்வெற்றி யைப் பெற்றுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது இந்தியப் பெண்

இந்திய-திபெத் காவல்துறை யைச் சேர்ந்த சுபேதார் செல்வி சந்தோஷ் யாதவ் 12.5.1992 அன்று வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்தார்.

உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இரண்டாவது பெண் சந்தோஷ் யாதவ் இந்த சாதனையைப் புரிந்த முதல் இந்தியப் பெண் பச்சேந்திரி பால். இவர் 1984-இல் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து சாதனை புரிந்தார்.

(8—ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்திட்ட சூழ்நிலையை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. மாநிலங்கள் பெரும் குறைபாடுகளுடன் 8-வது திட்டத்தைத் தொடங்க வேண்டியுள்ளது. சேமிப்புகளுக்கு உண்டான சலுகைகளைச் சமீப காலத்தில் அதிகரித்திருந்தாலும் அவைகள் போதுமானவை அல்ல. வருமான வரி கட்டமைப்புகளைச் சுருக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட நீண்ட காலத் திட்டங்களில் நன்மைகள் உண்டு என்றாலும் இவைகள் மாநிலத்தில் ஏற்படுத்தியுள்ள முக்கியமான நிதிப் பற்றாக்குறையினை ஒதுக்கிட முடியாது.

இது மிகப்பெரிய மாறுதலாகையால் ஒரே ஆண்டில் நிறைவேற்றிட முடியாது. சிறு சேமிப்பு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது சிறு சேமிப்பிற்கென்று சிறப்பாக ஏற்படுத்தப்பட்ட வசதியாக இருக்க வேண்டும். இதனைச் செய்யாவிடில் வருமான வரி வசூலை அதிகரிப்பதன் மூலம் நிதி நிலைமை மேம்பாடு அடைந்தாலும் எட்டாவது திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநிலங்கள் மிகவும் இடர்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

பத்தாவது நிதிக்குழு விரைவில் அமைக்கப்பட உள்ளது. இந்தக் குழுவின் கடந்த கூட்டத்தில், 9-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதில் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் சந்திக்கும் இடர்ப்பாடுகளைப் பற்றி கூறியிருந்தேன்.

திட்டங்களை நிறைவேற்றுவதனால் ஏற்படும் செலவினங்களையும் நிதிப்பற்றாக்குறைகளையும் கருத்தில் கொள்ளாமல் மாநிலங்களுக்கு வழங்கப்படும் சுங்க வரியின் பங்கைக் குறைத்திருப்பதும் திட்டங்களை நிறைவேற்றுவதில் நடைமுறையில் உள்ள குறைபாடுகளும் சேர்ந்து, செய்யாத தவறுகளுக்குத் தமிழ்நாட்டைப் போன்ற மாநிலங்களுக்குக் கடுமையான நிதி நிலைமையை உருவாக்கியுள்ளது.

"வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைந்து, புதியதோர் உலகம் படைப்போம் என்னும் நம்பிக்கை பொங்கும், இளமை பொங்கும் நவீன சமுதாயத்தை உருவாக்கப் பீடு நடை போடுவோம்!"

"பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம்!"

வருமான வருவாயில் மிகுந்த பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. 8-வது திட்டக் காலத்தைக் குறித்த மட்டில் 10-வது நிதிக்குழு அமைய விருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இக்குழுவின் பரிந்துரைகள் 8-வது திட்டத்தின் இரண்டு ஆண்டுகளில் அமல்படுத்தப்படும். அதிகார மட்டத்தில் ஒரு ஆய்வுக் குழுவின் உதவியுடன் இது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 10-வது நிதிக் குழுவின் வரம்புகளை வரையறுப்பதில் மாநிலங்களும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகப்படியான நிதி வசதிகளைத் திரட்டுகின்ற முயற்சிகளை மாநிலங்கள் மேற்கொண்டாலும், மிகக் கடினமான நிதிப் பற்றாக்குறை, அதைச் சந்திக்க வேண்டியிருப்பதால் அனுப்புச் சரக்கு வரி (Consignment Tax)யைப் பற்றி விரைவான ஒரு முடிவை எடுப்பது அவசியம் ஏற்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒரு சில விவரங்களே தீர்க்கப்பட வேண்டியுள்ளது.

முதலமைச்சர்களுடைய ஒத்துழைப்புடன் இது குறித்து விரைவானதொரு தீர்வினைக் காணலாம் என நான் நம்புகிறேன். இந்த வரியை வசூலிப்பதற்குத் தேவையான மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்திக் கூறுகிறேன். இந்த வரியை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான முடிவினை நாம் காணலாமெனக் கருதுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மாநிலங்கள் செய்துதர வேண்டியுள்ளது. அனைத்து அடிப்படை வசதிகளின் செலவையும் திரும்பப் பெற்றுவிட முடியாது. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், மாநிலங்களுக்கு எந்தவித வரியும் தருவதில்லை. ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சிறப்பு மத்திய உதவி வழங்க வேண்டுமென்று நான் யோசனை தெரிவித்திருந்தேன். கார்ப்பரேஷன் வரி (Corporation tax)யில் மாநிலங்களுக்கு எந்தப் பங்கும் கிடைப்பது இல்லை. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை

"தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் [illegible] கோடி வழங்கப்படும் ஒரு [illegible]ப்புத் தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது".

[illegible] வழங்கும் பொறுப்பு மாநில அரசு [illegible] இருப்பதால், கார்ப்பரேஷன் வரியில் [illegible] (Corporation [illegible]) ஒரு பகுதியை மாநில அரசுகள் பெற மத்திய அரசு [illegible] செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது [illegible] கருதுகிறேன்.

மாறிவரும் [illegible] பொருளாதாரம் கடந்த காலங்களில் பொருளாதாரச் சிக்கல்கள் என்னும் புயல் கடலில் சிக்கி அலைவுறுத்தப்பட்ட போது மக்களின் பொறுமை, சகிப்புத்தன்மை, மன வலிமை ஆகியவற்றுடன் வெற்றி கொண்டோம். நாம் சொல்வதெல்லாம் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையே மக்கள் சிறந்த [illegible] என்று நாம் தொடர்ந்து வெளிப்படுத்துவார்கள் [illegible] எடுத்துச் சொல்ல முடியாது. தேவைகளுக்காக [illegible] போக்கவும் தியாகங்கள் புரிய [illegible] வேண்டும் என [illegible] நெறிமுறை [illegible] நாம் [illegible] வேண்டும். 8-வது திட்ட[illegible] [illegible] இவ்வேளையில் கோடிக்கணக்கைத் துவக்குகின்ற

[illegible] இந்தியர்களுக்குச் [illegible] வாழ்க்கை வழங்குகின்ற [illegible] நாம் [illegible] பணித்துக் கொள்வோம். பிரமிக்க வைக்கும் நமது அரசியல் அமைப்பு என்னும் சித்திரத்தைக் கிழித்தெறியத் துடிக்கும் அன்னிய உணர்ச்சிகளை நாம் அனுமதிக்க மாட்டோம். வளர்ச்சியின்மை என்னும் இருளைப் போக்கி, பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள இ[illegible] உலகம் பபை[illegible] பொங்கும். இ[illegible] யத்தை உருவா[illegible]

மாண்புமிகு [illegible] தொடக்க உரையில், சில மாநிலங்களில் [illegible] சித் திட்டங்களில் அரசியல் வேறுபாடு காட்டப்படுகிறது என்று [illegible]பட்டார். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வளர்ச்சித் திட்டங்களில் அரசியல் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்று பிரதமர் அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்கிறேன். இத்தருணத்தில் தமிழகத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ.1 கோடி வழங்கப்படும் ஒரு சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்படுகிறது என்பதை, பிரதமர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 386 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளன. அவை அனைத்திற்கும் அரசியல் பாகுபாடு இல்லாமல் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பது இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுடில்லியில் 22.5.92 அன்று நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

அஞ்சல்

• அஞ்சல் [illegible] சேவை [illegible] நாட்டுக்குச் சேவை. மார்ச் 31-ம் தேதி நிலவரப்படி நாட்டில் 1,48,719 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இதில், 1,32,646 அஞ்சல் அலுவலகங்கள் கிராமங்களிலும், 16,073 நகரங்களிலும் அமைந்துள்ளன.

1990-92-இல் 1,476 அஞ்சல் அலுவலகங்கள் கிராமப்புறங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. நாட்டில் மொத்தம் 5,20,074 அஞ்சல் பெட்டிகள் உள்ளன. இதில் 4,36,667 கிராமங்களிலும், 83,407 நகரங்களிலும் அமைந்துள்ளன. 22.10 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கும், [illegible] மக்கள் தொகை கொண்ட [illegible] சராசரியாக ஒரு அஞ்சல் நிலையம் அமைந்துள்ளது.

1990-92-இல் அஞ்சல் துறை [illegible] வருமானம் ரூ.840.85 கோடி. செலவு ரூ.1,032.50 கோடி. [illegible] ரூ.191.65 கோடி.

திராட்சை



• நம் நாட்டில் 25,000 ஹெக்டேர் நிலப்பரப்பிலிருந்து 5,35,000 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதிகமாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் பயிரிடப்படும் 9,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் 1,80,000 டன் திராட்சை விளைகிறது.

உலகிலேயே அதிகபட்சமாக தெலங்கானா[illegible]தான் ஒரு ஹெக்டேருக்கு 28.5 டன் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக இந்தியாவில் 21.7 டன் திராட்சை உற்பத்தியாகிறது. திராட்சை சராசரி ஆலைக்கு [illegible] 4.5 இலட்சம் பேருக்கு நிரந்தரமாக[illegible] வும், 9-10 இலட்சம் பேருக்குத் தற்காலிகமாகவும் வேலை [illegible] கிறது.

ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து [illegible] கோடி ரூபாய் மதிப்புள்ள [illegible] டன் திராட்சை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆசியஜோதி

'ஆசிய ஜோதி' என்று அகிலம் புகழ்பெற்ற ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவு நாளை யொட்டி (27.5.92) இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

"இந்தியாவையும் இந்திய மக்களையும் மிகுந்த பாசத்தோடு நேசித்த நல்ல மனிதர் இவர்; பதிலுக்கு இந்திய மக்களும் இவரிடம் மிக அன்பு காட்டி அளவற்ற ஆதரவளித்து வந்தார்கள் என்று மற்றவர்கள் என்னைப் பற்றிப் பேசுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்"— என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தவர், எழுதிக் கொண்டிருந்தவர் 'ஆசிய ஜோதி'யான ஜவகர்லால் நேரு அவர்கள் (14.11.1899-27.5.1964).

அமெரிக்க நாட்டிற்குச் சென்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களிடம்— "நேருவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டது.

"அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்; நான் கொட்டிக்கிடக்கும் செங்கல்"— என்று பெருந்தன்மையோடு அதற்குப் பதில் கூறிப் பெருமை கொண்டார் அமரர் அண்ணா.

இத்தனைப் பெருமையுடைய நேரு பெருமகனாரின் வாழ்வு அவர் இந்தியப் பிரதமராகப் பதவி பெற்றதால் மட்டுமல்ல; செயற்கரிய செய்த செம்மல் அவர் என்பதாலுமே நீங்கா நினைவுக்கு உரியதாயிற்று.

நேருவினுடைய ஒவ்வொரு நாள் பணிகளும் அதிகாலையிலேயே- குறிப்பாகச் சொல்லுவதானால் பறவைகள் சிறகு விரிக்கும் அதிகாலைப் பொழுதிலேயே துவங்கி விடும்.

அன்றைய பொழுதிற்குள் தன்னை எதிர் நோக்கியுள்ள பணிகள் யாவை— முடிக்க வேண்டிய வேலைகள் என்னென்ன— தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள் எவையெவை என்றெல்லாம் முடிவெடுப்பதே அவரது முதல் பணியாக இருக்கும்.

பிறகுதான்- மகள் இந்திரா காந்தியோடும், தமது பேரப்பிள்ளைகளான ராஜீவ், சஞ்சய் ஆகியோருடனும், காலை உணவருந்துவார். நண்பர்களும் முக்கிய விருந்தினர்களும் கூட அந்தக் காலை நேரச் சிற்றுண்டியில் கலந்து கொள்ளுவதுண்டு. மீண்டும் அவர்கள் சந்திப்பு மறுநாள் காலை உணவின் போதுதான் இருக்கும்.

அவருக்கு அந்தக் காலைச் சாப்பாடே பெரும்பாலும் முக்கியச் சாப்பாடாக அமைந்து விடும். சாப்பிடும்போதே அலுவலகப் பணி பற்றிய விசாரணைகளும் உத்தரவுகளும் அவரிடமிருந்து பிறக்கும்.

பின்னர், வெளியே உள்ள புல்வெளியில் தம்மைக் காணக் காத்திருக்கும் பார்வையாளர்களைச் சந்திக்க வந்துவிடுவார். கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வந்திருக்கும் மக்களின் துன்ப துயரங்கள் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் மிகவும் பொறுமையோடு செவி கொடுத்துக் கேட்பார். கொடுக்கும் மனுக்களைப் பெற்றுக் கொண்டு பதில் தரும்படிக் குறிப்பெழுதுவார். உரிய அதிகாரியிடம் சேர்ப்பார். அவரைப் பார்த்து மகிழவே பல பேர் வந்து போவார்கள்.

யாராயிருந்தாலும் சரி; 'முகஸ்துதி' பண்ணும்படியாகவோ, திருப்திப்படுத்தினால் போதும் என்ற வகையிலோ அவர் பேசியதே இல்லை; நினைப்பதை வெளிப்படையாகச் சொல்லுவார்.

"மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன கருதுகிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆம்; அவர்களுடைய மனதை நான் அவசியம் புரிந்து கொண்டாக வேண்டும். ஏனெனில் நான் அவர்களை இவ்வளவு ஆண்டுகளாக நேசித்து வருகிறேன்" என்று 1963-இல் அவர் ஒரு முறை தெரிவித்தார்.

அந்த வகையிலேயே அன்னாரின் பொதுமக்கள் சந்திப்பு அமையும். அதன் பிறகு அலுவலகத்திற்குச் செல்வார். அரசு அலுவல்களில் முழுக் கவனமும் செலுத்துவார்.

அவருடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் புரிந்துகொண்டிருக்கும் செயலாளர்களும் தட்டெழுத்தாளர்களும் அவருடன் இரவு நீண்ட நேரம்வரையில் சளைக்காமல், களைக்காமல் வேலை பார்ப்பார்கள்.

நாளொன்றுக்கு அவர் ஐந்து மணி நேரம் தூங்கினாலே பெரிய காரியம்! வேலை நாட்களில் மட்டுமல்ல; இந்த வேலை முறைகள் விடுமுறை நாட்களில் கூட விருவிருப்போடு தொடரும். அந்த அளவுக்கு அசாதாரணமான மன உறுதி பெற்றிருந்தார் அவர். செயல்படுவதில் உற்சாகத்தையும், முடிவெடுப்பதில் துணிவையும், பல தரப்பட்ட மக்களையும் பல்வேறு இடங்களையும் நேரில் கண்டறிகின்ற ஆர்வத்தையும் அவர் ஒரு போதும் இழந்ததில்லை, மனச்சோர்வுற்றுத் தளர்ந்ததில்லை.

குறித்த நேரத்தில் எதையும் செய்ய வேண்டும் என்பார் அவர்; மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். மனிதர்களிடம் மட்டுமல்ல; விலங்குகளிடமும் அவர் அன்பு காட்டினார். அரிய இமாலய பண்டாக்களுக்கும், தமது வளர்ப்பு மிருகங்களான புலிக்குட்டிகளுக்கும் தாமே நேரில் போய்த் தீனிபோடுவது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

நேரமிருக்கும்போது வீட்டுத் தோட்டத்தில் உலவுவதே அவருடைய பொழுதுபோக்காக இருந்தது.

"வறுமையை ஒழிக்கவும், சர்வதேச உறவுகளை வளர்க்கவும், இந்த உலகில் சமாதானத்தை நிலை நிறுத்தவும் எனக்கு இன்னும் அதிக அவகாசம் தேவை" என்று அவர் ஒரு முறை பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார்.

1964-ஆம் ஆண்டு மே மாதம் 22-ந் தேதி நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், நிருபர் ஒருவர் நேருவிடம் கேட்டார்—

"உங்களுக்குப் பிறகு யார்?"

"என் ஆயுள் அவ்வளவு சீக்கிரம் முடியப் போவதில்லை!"— என்றார் நேரு.

அந்த அளவிற்கு மன உறுதி மிக்கவராகவும், ஊக்கம் மிக்கவராகவும் இளமை முறுக்கோடு செயல்பட்டு வந்த நேரு பெருமகனார், சீனப் படையெடுப்புக்குப் பிறகுதான் தமக்கு வயதாகி விட்டதை உணர்ந்து கொண்டவரைப் போலத் தளர்வுடன் காணப்பட்டார். மனச்சோர்வுற்றார்.

குறிப்பாக- மே மாதத்தில் அவருக்கான பணிகள் ஏராளம் இருந்தன.

முதல் ஒன்பது நாட்கள் நாடாளுமன்றக் கூட்டம் இருந்தது.

காஷ்மீரப் பிரச்னையைத் தீர்ப்பது குறித்தும், பாகிஸ்தானுடன் நல்லுறவை வலுப்படுத்துவது பற்றியும் டில்லிக்கு வந்திருந்த ஷேக் முகமது அப்துல்லாவுடன் தீவிரமாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது.

அதன்பின் நேபாளம் சென்று அங்கு நடந்த பெரியதோர் பாசனத் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டார்.

மே மாதம் 10-ஆம் தேதி நடைபெற்ற திட்டக் கமிஷன் கூட்டத்தில் பங்கேற்றார். நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி விவாதித்து வரையறுத்தார். 14-ந் தேதி பம்பாய் சென்று காஷ்மீர்ச் சிக்கல், அயல் நாட்டுறவு பற்றிய இரண்டு கூட்டங்களில் கலந்து கொண்டு அரியதோர் உரையாற்றினார்.

22-ஆம் தேதி நடந்த பத்திரிகையாளர் கூட்டம் பற்றித்தான் மேலே பார்த்தோம். சீனா, பாகிஸ்தான், லாவோஸ், வில்லைவாசி, லண்டன் பயண உத்தேசம் ஆகியவை பற்றிய பல கேள்விகளுக்கும் அவர் அதில் பதில் அளித்தார்.

23-ஆம் தேதி காலையில், இரண்டு நாள் ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்காக டேராடூனுக்கு விமானத்தில் சென்றார். அங்கு போயும் அவர் சும்மாயிருக்கவில்லை; முக்கியக் கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திட்டார். சில புத்தகங்களைப் படித்தார். ஒரு புத்தகத்திற்கு முன்னுரை எழுதி முடித்தார்.

> எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான்; உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.
>
> - பேரறிஞர் அண்ணா.

நீண்ட கால நண்பரும் சகாவுமான ஸ்ரீ பிரகாசாவை அங்கே சந்தித்துப் பேசினார், நேரு. அவரது தளர்வை உணர்ந்த ஸ்ரீ பிரகாசா, வயதேறி வருவதைச் சுட்டிக் காட்டி, "வேலைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்றார். அதைக் கேட்ட நேரு, கிண்டலாகச் சிரித்துக் கொண்டார். அவரைப் பெருமூச்சோடு பார்த்தார்.

மே மாதம் 26-ஆம் தேதியன்று டில்லி திரும்பிய அவர், இரவு சிறிது நேரம் படித்துக் கொண்டிருந்து விட்டுப் படுத்தார். மறுநாள் அதிகாலை 6.20 மணிக்கு எதிர்பாராமல் அவரது உடல் நலம் கெட்டதை அறிந்த மகள் இந்திரா, பதறிப் போய் டாக்டர்களைக் கூப்பிட்டனுப்பினார். அடுத்த சிறிது நேரத்திலேயே அவர் நினைவிழந்து விட்டார்.

மத்திய அரசின் முக்கிய அமைச்சர்களுக்கெல்லாம் செய்தி தெரிவிக்கப்பட்டது. பம்பாயில் இருந்த அவருடைய சகோதரிகள் திருமதி விஜயலட்சுமி பண்டிட், திருமதி கிருஷ்ணா ஹத்தீசிங் ஆகியவர்களும் உடனடியாக வரவழைக்கப்பட்டார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் திடீர் உடல் நலக் குறைவு பற்றிய செய்தி, நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் தெரிவிக்கப்பட்டது. அடுத்த சிறிது நேரத்திலேயே இந்தியாவெங்கும் இச்செய்தி பரவி விட்டது.

ஆற்றலும், அனுபவமும் மிக்க டாக்டர்களெல்லாம் ஒன்று கூடி, அவருக்குற்ற நோயின் வேகத்தைத் தணிக்க- அல்லது நீக்க தம்மால் முடிந்தவரை போராடினர். தான் பிறந்த இந்திய மண்ணுக்கு இணையற்ற பணிபுரிந்த- முழு அன்போடு இந்த நாட்டை நேசித்து, நாட்டு மக்கள் அனைவரின் நல்லன்பையும் பெற்றுக் கொண்ட - மகாத்மா காந்தியடிகளே அடிக்கடி தன்னுடைய வாரிசு என்று பெருமையோடு குறிப்பிட்டுவந்த - சுதந்திர, ஜனநாயக, மதச்சார்பற்ற, சுதந்திர இந்தியாவை அவரோடு இணைந்து நின்று தியாகம் பல புரிந்து உருவாக்கிய - உண்மை, ஒழுக்கம், வீரம், விவேகம், உயரிய இலட்சியம் ஆகியவற்றோடு சுமார் அரை நூற்றாண்டுக் காலம் இந்திய நாட்டுக்கும் உலகுக்குமாக அரும்பணி பல புரிந்த மனிதருள் மாணிக்கமாம் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதி புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இயற்கை எய்தி விட்டார்.

இந்திய நாட்டிற்குச் சைமன் குழு வருவதை எதிர்த்த போதும் (1928), உலகப் புகழ் பெற்ற தண்டி யாத்திரையின் போதும் (1930), ஆங்கிலப் போலீஸார் வெகுண்டெழுந்து [illegible] கொண்டு தாக்கியதுண்டு. அப்போதெல்லாம் அடிபட்ட வேங்கை போல் வெகுண்டெழுந்து அந்தத் தடியைத் தாவிப் பிடுங்கி வீசி

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை:

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு, மாண்புமிகு பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஸ்ரீபெரும்புதூரில் முதலாண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள் (21.5.92).

நான்காம் அட்டை:

உதகை, மலை வாழ் மக்களின் நடனத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்றார் (17.5.92).

வெறிந்த அந்த மாவீரனின் உடல் சாய்ந்துவிட்டது.

"சுதந்திரப் போர் வீரர், நவீன இந்தியாவின் சிருஷ்டி கர்த்தா, மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் மறைந்து விட்டார்; இந்திய சரித்திரத்தின் ஒரு சகாப்தம் முடிந்து போய் விட்டது"- என்று இந்தியக் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் இராதாகிருஷ்ணன் கலக்கத்தோடும் கண்ணீரோடும் தெரிவித்தார்.

நேரு இல்லை என்பதையறிந்த இந்திய நாடு நிலவில்லாத வானம் போல் இருண்டு போயிற்று. ஒவ்வொரு நாட்டு வானொலியும் இந்தத் துக்கச் செய்தியை உலகம் முழுமைக்கும் தெரிவித்தது. உலகமே துக்கத்தில் ஆழ்ந்தது. துயரக் கடலில் மூழ்கியது.

இந்தியாவின் தேசியக் கொடி மட்டுமல்ல; இந்தியாவிலிருந்த அத்தனைக் கட்சிகளின் கொடிகள் மட்டும் கூட அல்ல; ஐக்கிய நாடுகள் சபையின் கொடியும் அரைக் கம்பத்திலே பறக்க விடப்பட்டது.

இந்தியாவில் பன்னிரண்டு நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தீன்மூர்த்தி மார்க்கில் இருந்த நேருவின் இல்லத்திலிருந்துத் தங்கள் இணையற்ற தலைவரின் முகத்தைக் கடைசியாகத் தரிசிக்க மக்கள் வெள்ளம் கரை புரண்டது. இலட்சோப இலட்சம் மக்களின் விழிகள் மட்டுமல்ல; வானமும் அன்று அழுதது— ஆம், அன்று மழை!

தற்காலிகப் பிரதம மந்திரியாகக் குல்சாரிலால் நந்தா பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மறுநாள் வியாழக் கிழமை நண்பகல் ஒரு மணிக்குத் தலைவர் ஜவகரின் உடல் பீரங்கி வண்டியிலேற்றி, காந்தி உடல் தகனம் செய்யப் பட்ட ராஜ் கட்டத்திலிருந்து, முந்நூறு கஜ தூரத்திலிருந்த 'சாந்தி வனத்'திற்கு எடுத்துச் செல்லப் பட்டது. ஆயுதப் படையைச் சேர்ந்த அறுபது வீரர்கள் அந்த வண்டியை இழுத்துச் சென்றனர், இதயம் நொந்தவாறே!

அதையடுத்து— திருமதி இந்திரா காந்தி, அவரது இளைய புதல்வர் சஞ்சய், குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன், நேரு பெருமகனாரின் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள், அயல் நாட்டுப் பிரதிநிதிகள்— ஆகியோர் வரிசையாகக் காரில்.

ஆறு மைல் தூரம்- வழி நெடுகிலும் வெள்ளம் போல் மக்கள் கூட்டம். அத்தனை முகத்திலும் அன்புத் தலைவனைப் பிரிந்த வாட்டம்!

பத்து ஏக்கர் பரப்பளவுள்ள சாந்தி வனத்தில், மேடை மீது அடுக்கப்பட்டிருந்த சந்தனக் கட்டைகளின் மேலே சந்தன வண்ண மேனிப் பண்டித நேருவின் சடலம் பக்குவமாகக் கிடத்தப்பட்டது. "பண்டிட் நேரு அமர் ஹோ!" (பண்டித நேரு அமரராகட்டும்) என்ற முழக்கம் மண்ணதிர எழுந்தது.

தலைவர் ஜவாஹரின் உடலிருந்த சிதைக்கு இளைய பேரப்பிள்ளையான சஞ்சய் தீ மூட்டினார்.

அதற்கு மறுநாள், ராம் லீலா மைதானத்தில் மாபெரும் இரங்கல் கூட்டம் நடந்தது. பல்வேறு இந்திய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதில் பங்கேற்று, மறைந்து போன மனிதருள் மாணிக்கத்திற்கு- ஆசிய ஜோதிக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

மே மாதம் 29-ந் தேதியன்று பார்லிமெண்ட் கூடியது. "பண்டித நேரு தம் ஆயுள் முழுதும் எவைகளுக்காகவெல்லாம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தாரோ, அந்த இலட்சியங்களாகிய உலக சமாதானம், உலக முன்னேற்றம், தேச ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, தேசிய சுபிட்சம் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பாடுபடுவோம்" என்று அக்கூட்டத்தில் உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது.

மே மாதம் 30-ந் தேதியன்று சஞ்சய்யும், அவரது சகோதரர் ராஜீவும் அஸ்திகளைச் சேகரித்தார்கள். ஜவாஹர்லால் நேரு பிறந்த இடமான அலகாபாத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகியவை கலக்கும் திரிவேணி சங்கமத்தில்- தலைவர் ஜவாஹர் தமது உயிலில் எழுதி வைத்திருந்தபடி-ஜூன் மாதம் 8-ந்தேதி சிறிதளவு அஸ்தி கரைக்கப் பட்டது. மீதி அஸ்திச் சாம்பல் அளவோடு பல்வேறு மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு பல நதிகளில் கரைக்கப்பட்டது. ஜூன் மாதம் 12,13 தேதிகளில், பாக்கி அஸ்தி விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு வானிலிருந்து வயல் வெளிகளிலே தூவப் பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில், பண்டித ஜவாஹர்லால் நேரு தம்முடைய உயிலில் என்ன எழுதி வைத்திருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ளுவது நல்லது.

1954-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ந் தேதியன்று, தலைவர் ஜவஹர் எழுதியிருந்த உயில் சாசனத்தின் சில முக்கியப் பகுதிகள் வருமாறு:

இந்திய மக்களின் அபரிமிதமான அன்பையும் பிரியத்தையும் நான் பெற்றிருக்கிறேன். நான் என்னதான் பணியாற்றினாலும் இதில் ஒரு சொற்பப் பகுதியைக் கூட என்னால் திருப்பிக் கொடுக்க முடியாது; சொல்லப் போனால் அன்பெனும் அரிய பொருளுக்குக் கைம்மாறே இருக்க முடியாது. பலர் வியந்து போற்றப்பட்டுள்ளனர்; சிலர் தொழுது வணங்கப்பட்டுள்ளனர். ஆனால் இந்திய மக்களில் சகல பிரிவினரும் என்மீது அளவற்ற அன்பைக் காட்டி வருகின்றனர். அதில் நான் திக்குமுக்காடிப் போனவன். என் வாழ்வில் எஞ்சியிருக்கக் கூடிய ஆண்டுகளில் என் மக்களுக்கும் அவர்களுடைய அன்புக்கும் நான் அருகதையற்றவனாகி விடக்கூடாது என்ற விருப்பத்தை மாத்திரமே நான் தெரிவிக்க முடியும்.

எண்ணற்ற எனது தோழர்களுக்கும் சகாக்களுக்கும் இதைவிடவும் அதிகமாக நான் கடன்பட்டிருக்கிறேன். மாபெரும் முயற்சிகளில் நாங்கள் கூட்டாளிகளாக இருந்திருக்கிறோம்; அவைகளின் தவிர்க்க முடியாத விளைவுகளாகிய வெற்றிகளையும் துயரங்களையும் பகிர்ந்துகொண்டிருக்கிறோம்.

என்னுடைய மரணத்திற்குப் பின், எனக்காக மதச் சடங்குகள் எதையும் நடத்த வேண்டாம் என்பதை முழு அந்தரங்கச் சுத்தியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய சடங்குகளில் எனக்கு நம்பிக்கையில்லை; வெறும் ஐதீகத்திற்காகக் கூட இவற்றிற்கு உட்படுவது மோசமானதாகவும், நம்மையும் பிறரையும் ஏமாற்றுவதற்கான முயற்சியாகவுமே இருக்கும்.

நான் இறந்தபின் என்னுடைய உடலைத் தகனம் செய்து விட வேண்டும் என்று விரும்புகிறேன். அயல் நாட்டிலே நான் இறந்தால் என்னுடைய உடலை அங்கே தகனம் செய்து அஸ்தியை அலகாபாத்துக்கு அனுப்ப வேண்டும். [illegible] யில் ஒரு சிறு [illegible] கங்கையில் போட [illegible] பெரும் [illegible] கீழே குறிப்பிட்டுள்ள முறையில் காலி செய்ய வேண்டும்; இந்த அஸ்தியில் சிறிதளவையும் மீதம் வைக்கவோ, சேமித்து வைக்கவோ கூடாது.

என்னுடைய அஸ்தியில் ஒரு கைப்பிடியளவை அலகாபாத் வழியாகச் செல்லுகின்ற கங்கையில் போட வேண்டும் என்று நான் விரும்புவதற்கு என்னைப் பொருத்த வரை மதரீதியான முக்கியத்துவம் எதுவும் இல்லை. இவ்விஷயத்தில் மத உணர்வு எதுவும் எனக்குக் கிடையாது. அலகாபாத் வழியாகச் செல்லும் கங்கை, யமுனை நதிகளுடன் குழந்தைப் பருவம் முதலே எனக்குப் பாசம் இருந்து வருகிறது; வயது ஆகஆக இந்தப் பாசமும் வளர்ந்து வந்திருக்கிறது. பருவகாலங்கள் மாறும் போது அவற்றின் பல்வேறு தோற்றங்களைக் கவனித்திருக்கிறேன். நீண்ட நெடுங்காலமாக அவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றில் ஓடும் தண்ணீரின் சரித்திரம், புராணம், வழமுறை, பாடல், கதை ஆகியவைபற்றி நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

குறிப்பாக, கங்கை இந்தியாவுக்கே உரிய நதி; இந்நாட்டு மக்களின் அன்புக்குரியது. இந்நாட்டின் இன நினைவுகள், நம்பிக்கைகள், அச்சங்கள், வெற்றிப் பாடல்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியவை அதனுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எப்போதும் மாறிக் கொண்டிருக்கும்; எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். அதே சமயத்தில், எப்போதும் கங்கையாகவே இருந்து வரும் அது, இந்தியாவின் புராதனப் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் சின்னமாக விளங்குகிறது.

நான் பெரிதும் நேசித்த இமய மலையின் பனி மூடிய சிகரங்களையும், ஆழமான [illegible] ளத்தாக்குகளையும் [illegible] உள்ளவையும் [illegible] பனி ஆகியவற்றின் நிலைக் கலனுமான வளமான, விரிவான சமவெளிகளையும் கங்கை எனக்கு நினைவூட்டுகிறது. காலைக் கதிரவனின் ஒளியில் முறுவலித்து நர்த்தனமாடிக் கொண்டும்; அந்தி மயக்கத்தில் இருளும் மருளும் மர்மமும் நிறைந்ததாயும்; குளிர்காலத்தில் ஒடுக்கமான ஓடையாக மெதுவாகச் செல்லுவதும், ஏறத்தாழக் கடல் போன்ற பரப்பையும் சமுத்திரத்தின் பயங்கரத்தை ஓரளவு கொண்டதுமான கங்கையைக் கடந்த கால இந்தியாவின் சின்னமாகவும் நினைவாகவும் நான் கருதி வந்திருக்கிறேன். அந்தக் கடந்த காலம் நிகழ்காலத்திலும் பாய்ந்து வருங்காலம் என்கிற மகாசமுத்திரத்தை நோக்கி ஓடுகிறது.

கடந்தகால வழமுறைகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் பெரும் பகுதியை நான் கைவிட்டு விட்ட போதிலும் இந்தியாவைக் கட்டிப் பிணைத்து விலங்கிட்டுப்படுத்தி, அதன் மக்களைப் பிரித்து வைத்து அவர்களுள் ஏராளமானோரை ஒடுக்கி வைத்து, உடம்பு ஆன்மா ஆகியவற்றின் சுயேச்சையான வளர்ச்சியைத் தடுக்கின்ற விலங்குகளை இந்தியா உதறி எறிய வேண்டும் என்று நான் ஆர்வம் கொண்டிருந்த போதிலும், இவைகளையெல்லாம் நான் விரும்பிய போதிலும், அந்த கடந்த காலத்துடன் உள்ள தொடர்பை அடியோடு துண்டித்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

நம் உடைமையாக இருந்து வருகின்ற, இருந்து வந்திருக்கின்ற அந்த மகத்தான பிதுரார்ஜிதம் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். நினைவறியாத இந்தியாவின் கடந்த காலம் முதல், சரித்திர உதய காலம் முதல், தொடர்பு அறாமல் இருந்து வரும் சங்கிலியிலே நம்மனைவரையும் போல நானும் ஒரு கண்ணி என்பதை உணர்கிறேன். அந்தச் சங்கிலியினை நான் துண்டிக்க மாட்டேன்; ஏனெனில் அதைக் கருவூலமாகப் போற்றுகிறேன். அதிலிருந்து ஆதர்சம் பெறுகிறேன். என்னுடைய இந்த ஆசையின் சாட்சியாகவும், இந்தியாவின் கலாச்சாரப் பிதுரார்ஜிதத்துக்குச் சமர்ப்பிக்கும் கடைசி அஞ்சலியாகவும், என்னுடைய அஸ்தியில் ஒரு [illegible] அளவை அலகாபாத்தில் [illegible] கையில் போட வேண்டு[illegible] கேட்டுக் கொள்கிறேன்; [illegible] வின் கரையைக் கழுவிக் [illegible] ருக்கும் மகா சமுத்திர[illegible] அங்கிருந்து செல்லும்.

என் அஸ்தியில் பெரு[illegible] வேறு விதமாகக் கா[illegible] வேண்டும்; அதை ஒரு வி[illegible] வைத்து ஆகாயத்தில் [illegible] எடுத்துச் சென்று, [illegible] குடியானவர்கள் பாடுபட[illegible] கும் வயல்கள்மீது [illegible] திலிருந்து தூவ வேண்[illegible] விரும்புகிறேன்; இதன் [illegible] (அஸ்தி) இந்தியாவி[illegible] டனும் புழுதியுடனும் [illegible] வேறுபடுத்த முடியாதப[illegible] வின் பாகமாகிவிடும்.

—இவ்வாறு அந்த உயிலிலே குறிப்பிட்டு எழுதியிருந்தார் ஜவஹர்.

— இல. இராசேந்திரன்.

ரயில்

• ரயில்வேயில் மின்சாரம் கிடைக்காத இடங்களில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி சிக்னல்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மண்ணெண்ணெயை சிக்னல்களில் பயன்படுத்துவதால் தொழில்நுட்பப் பிரச்சினைகள் வருவதால், மண்ணெண்ணெய்க்குப் பதிலாக சூரிய சக்தி பயன்படுத்தப்படுகிறது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தியதால் 1991-இல் 19,050 கிலோ வாட் மின்சாரம் சேமிக்கப்பட்டது. இது 90,200 லிட்டர் மண்ணெண்ணெய்க்குச் சமம். சூரிய சக்தி மூலம் நீரைச் சூடுபடுத்தவும், நீரைத் தூய்மைப்படுத்தவும், சிக்னல்களுக்குப் பேட்டரி மூலம் சக்தியை அளிப்பதற்கும் தொழில்நுட்பப் பொருளாதார அடிப்படையில் ரயில் நிலையங்களை மின்மயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

• ரயில் பெட்டிகள் தயாரிப்பதில் பெரம்பூர் ரயில் பெட்டித்தொழிற்சாலை 1992 ஏப்ரல் மாத இலக்கினை விஞ்சியுள்ளன. இந்த மாதத்தில், பெரம்பூர் ரயில்பெட்டித்தொழிற்சாலை 91 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 72 தான். கபூர்தலா ரயில்பெட்டித் தொழிற்சாலை 90 ரயில்பெட்டிகளைத் தயாரித்துள்ளது. இலக்கோ 83 தான். வாரணாசி ரயில் எஞ்சின் தொழிற்சாலை, பத்து டீசல் எஞ்சின்களை உற்பத்தி செய்துள்ளது. பெங்களூரில் உள்ள சக்கரம் மற்றும் அச்சுத் தொழிற்சாலை, 5,043 சக்கரங்களைத் தயாரித்துள்ளது. 6,855 சக்கரங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

திரைப்படம்

இந்தியாவின் முதல் திரைப் படம், 'ராஜா ஹரீஷ் சந்திரா' வெளிவந்து 80 ஆண்டுகளாகிவிட்டன. 1920-களிலேயே நமது திரைப் படத்துறை, உலகில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

1920-இல் பேசும் திரைப்படம் வந்தபின்னர் திரைப்படங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. சென்ற பத்தாண்டுகளாக உலகிலேயே அதிகத் திரைப்படங்களைத் தயாரிக்கும் நாடாக இந்தியா திகழ்கிறது.

1991-இல் பதினெட்டு மொழிகளில் 910 படங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொருநாளும், நாட்டில் உள்ள ஏறத்தாழ 13,000 திரையரங்குகளில் ஒன்றரைக் கோடி மக்கள் திரைப்படங்களை ரசிக்கிறார்கள். கேபிள் டி.வி., வீடியோ கேசட்டுகள் ஆகியவற்றுடன், தொலைக்காட்சியும் வாரத்தில் ஆறேழு திரைப்படங்களைக் காண்பிக்கிறது.

தொலைபேசி

1990-91-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, நாட்டில் மொத்தம் 50.75 இலட்சம் தொலைபேசி இணைப்புகள் செயல்பாட்டில் உள்ளன. எனினும் தொலைபேசி இணைப்புக் கோரி மேலும் 19.61 இலட்சம் விண்ணப்பங்கள் காத்துக்கிடக்கின்றன.

நாட்டிலுள்ள 216 மாநகரங்களுக்கும், 3,029 நகரங்களுக்கும் தொலைபேசி வசதி அளிக்கப்பட்டு உள்ளது. மொத்தமுள்ள 5,75,495 கிராமங்களில், 26,952 கிராமங்களில் டிரங்கால் செய்யக்கூடிய பொதுத் தொலைபேசி வசதி உள்ளது. 15,091 தொலைபேசி இணைப்பகங்கள் நாட்டில் செயல்படுகின்றன.

பொதுமக்கள் வசதி கருதி, 1990-91-ஆம் ஆண்டில் மட்டுமே 11,236 உள்ளூர்ப் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 1,217 வெளியூர் பொதுத் தொலைபேசி இணைப்புகளும், 192 எஸ்.டி.டி. பொதுத் தொலைபேசி இணைப்புகளும் நாடு முழுவதும் நிறுவப்பட்டு உள்ளன.

சுற்றுலா

கடந்த ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து 17,79,849 சுற்றுலாப் பயணிகள் இந்தியா வந்துள்ளனர். இதன் மூலம் ரூ.3,317 கோடி அன்னியச் செலாவணி கிடைத்துள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் இந்தியா வந்துள்ளனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 562926, 562927



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

16.6.1992 & 1.7.1992 விலை: ரூ.2

ஓராணடுச சாதனைகள

சிறப்பு மலர்

விழாக் காலங்களில் விண்மீன் போல்
பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்

கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராஃப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.

இந்த இதழில்...

23-வது ஆண்டில் தமிழரசு

'தமிழரசு' 23-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப்பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

—ஆசிரியர்

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆனித் திங்கள் - 17
மலர்:23 இதழ்:1
16-6-1992 இதழும், 1.7.1992 இதழும் இணைந்தது.

உங்கள் நம்பிக்கை வீண் போகாது!

தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும், மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான் - இன்றைய காலகட்டத்தில், என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் - அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்.

வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டுள்ளனர்; நாம் தினை விதைத்தோம்; எனவே, அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

என்னை முதலமைச்சராக நம்பி ஏற்றுக் கொண்டீர்களே - உங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை விளக்கவே இப்போது இவற்றை நான் குறிப்பிடுகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
புரட்சித்தலைவி டாக்டர்
ஜெ. ஜெயலலிதா

(21.8.1991 அன்று பர்கூர் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

"தொழில் வளர்ச்சியில் தமிழகம் வியத்தகு முன்னேற்றம் கண்டு வருகிறது. தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி, சிறு தொழில் முன்னேற்றம் முதலான தொழில் வளத்துக்குத் தொழில் துறை தொடர்ந்து தக்க உதவிகளை - சலுகைகளை வழங்கி வருகிறது."



தமிழகத்தின் தொழில் கொள்கை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழில் வளர்ச்சியே முக்கியமாகும். இதனை உணர்ந்து பாரதியார், "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடியுள்ளார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளர்ச்சியில் பின் அடைந்து இருந்த நிலையை மாற்றி அமைத்து அகில இந்திய அளவில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டுமென்ற குறிக்கோளை அடைவதற்கு, தொழில் முன்னேற்றத்தை முன் உரிமையோடும், வேகத்தோடும் தூண்டுகிற வகையில் சில சிறப்பு நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

எந்த ஒரு தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படை ஆதாரங்களாகிய நிலம், நீர், மின்சாரம் ஆகிய இம்மூன்றும் தங்குதடையின்றிக் கிடைக்க ஏற்பாடு செய்து தரவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டு தான் இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.7.91 அன்று தொழிலதிபர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் பிரச்சினைகளையும் கருத்துக்களையும் கேட்டு அறிந்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் 20.1.92 அன்று தமிழகத்தின் வரலாற்றிலேயே முதன்முதலாகப் புதிய தொழில் கொள்கையை நாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இப்புதிய தொழில் கொள்கை, அடிப்படை வசதி மேம்பாடுகள், முதலீடு மேம்பாடுகள், ஊக்கச் சலுகைகள், வரிச் சலுகைகள், சிறு தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு உள்ள பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த

அணுகுமுறை ஆகும். தொழில்கொள்கையைச் செயல்படுத்த இந்த அரசு தேவையான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

ஏற்கெனவே அமைந்துள்ள தொழில் பகுதிகள், தொழில் வளாகங்கள், தொழில் பேட்டைகள் ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவதற்குத் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (Tamil Nadu Corporation for Infrastructural Development - TACID) நிறுவப்பட்டு செயலாற்றி வருகிறது. இக்கழகத்திற்கு அரசின் பங்குத் தொகை மூலதனமாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்திற்கு உள்ளும், வெளியிலும் தொழில் முனைவோரைக் கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமும், ஆலோசனைகள் வழங்கவும், தொழில் தொடங்கத் தேவையான பல்வேறு அரசுத் துறைகளின் அனுமதியினைப் பெற்றுத் தரவும், உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய உதவும் வகையில் தொழில் ஆலோசனை நல்கவும் தமிழ்நாடு தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு (Industrial Guidance and Export Promotion Bureau) விரைவில் அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மிகப் பெருந்தொழில்கள் அமைவதனை ஊக்குவிக்கும் வகையில் எவ்வித நிபந்தனையும் இன்றி இவ்வரசு கீழ்க்கண்ட சலுகைகளை, இடம் பற்றிய நிபந்தனையின்றி அறிமுகப்படுத்த உள்ளது.

ரூபாய் 200 கோடிக்கு மேல் உள்ள முதலீடுகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனை வரி/ஒத்திவைப்பு ஆகியவற்றில் 6 ஆண்டுகள் தள்ளுபடி/12 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

ரூபாய் 300 கோடிக்கு மேல் உள்ள முதலீடுகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடியும், வரிச்சலுகை/தள்ளிவைப்பு/விற்பனைவரி/ஒத்திவைப்பு ஆகியவற்றில் 7 ஆண்டுகள் தள்ளுபடி/14 ஆண்டுகள் ஒத்திவைப்பு.

தொழில் துறையில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு தொழில் துறையில் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காடுகளுக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக்காடுகளும், உச்ச அளவாக ரூ.5 இலட்சமும் சிறப்பு மானியம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மற்றும் எல்லாத் தொழில் பேட்டைகளிலும் தொழில் வளாகங்களிலும் உள்ள தொழில் கூடங்களில் முக்கிய தொழில் முனைவோருக்கு 30 விழுக்காடு தொழில் கூடங்களுக்கு அரசு மனைகள் ஒதுக்கப்படுகின்றன. இவ்வாண்டு 800 மகளிருக்குத் தொழில் முனைவோருக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தனியார் துறையில் புதிய தொழில்கள் தொடங்க முன்வரும் நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் உதவிகளையும் நல்கும் வகையில் டிட்கோ மற்றும் எல்காட் நிறுவனங்களில் 'வழிகாட்டும் சேவை' துறை என்ற (Escort Sector Project) புதிய பிரிவும் உருவாக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்யும் பொருட்டு அவர்களை ஈர்ப்பதற்குப் புதுடில்லியில் உள்ள தமிழக அரசின் ஆணையர் (Resident Commissioner) தலைமையில் வெளிநாட்டு ஊக்குவிப்பு ஒருங்கிணைப்புப் பிரிவு (Foreign Investment Promotion Corporation)ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற தொழில் பிரிவுகளைச் சீர் அமைத்து நவீனப்படுத்தும்போது, பாதிக்கப்படும் தொழிலாளர்களின் நலனுக்காக மறுவாழ்வு நிதி (Labour Rehabilitation Fund) என்ற புதிய திட்டம் நமது மாநிலத்தில் முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டத்தில், வேளாண் தொழில் வளாகத்தை அமைத்திடத் தேவையான 413.35 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தர்மபுரியில் பர்கூரிலும், திருநெல்வேலியில் கங்கைகொண்டானிலும், பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், காயிதே மில்லத் மாவட்டத்தில் பனங்குடியிலும், ஒவ்வொன்றும் சுமார் ரூ.20 கோடி முதல் ரூ.30 கோடி செலவில் 4 புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆகும் உப்பைப் பயன்படுத்தி காஸ்டிக் சோடா தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமாகிய தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் என்ற நிறுவனம் மத்திய அரசின் இசைவுக் கடிதம் பெற்று, மேற்படி தொழிற்சாலையை விரைவில் அமைக்கவுள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக, 3½ ஆண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம், இவ்வாண்டு பிப்ரவரி திங்கள் 3-ஆம் நாள் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை திறப்பதற்கு 3 கோடி ரூபாயை அரசு குறைந்த வட்டியில் கடனாகக் கொடுத்துள்ளது. மேலும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் நிறுவனம் ரூ.6.03 கோடியைப் பங்கு மூலதனமாக முதலீடு செய்ய அரசு அனுமதித்துள்ளது. இதன் காரணமாக 2,000 தொழிலாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மின்னணுத் தொழிற்சாலைகளை உலகளவில் பெருமையடையச் செய்ய அரசு ஆவன செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated circuits) தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை ஒன்றினை ரூ.300 கோடி அளவில் கூட்டுத் துறையில் அமைக்க எல்காட் உத்தேசித்துள்ளது.

இவ்வரசு எடுத்த தீவிர முயற்சியின் காரணமாக, நீண்ட நாளாக ஆவலுடன் எதிர்பார்த்த சென்னை மணலி அரோமாடிக்ஸ் (NAPCO) நிறுவனத்தில்; பெட்ரோலிய, இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் அரோமாடிக்ஸ் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று அமைக்கத் தேவையான மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுள்ளது.

இதற்காக 1655 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உள்ளது. இத்திட்டம் ரூ.1,380 கோடியில் செயல்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் சுமார் 20,000 பேர்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடும்.

அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பல்வேறு பெரிய நடுத்தர மற்றும் சிறிய தொழில்களுக்குக் கிடைப்பதற்காகத் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகள் என்று தமிழகத்தில் சில பகுதிகள் அறிவிக்கப்பட்டு இருந்தன. பின்தங்கிய பகுதிகளுக்கென அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில், மற்றும் சிறிய தொழில்களுக்குக் கிடைப்பதற்கு வசதியாக மேலும் சில பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளென அரசு அறிவித்துள்ளது. மேலும், கீழ்க்கண்ட சில பகுதிகளைப் பின் தங்கிய பகுதிகளாக அறிவித்துள்ளது.

கோயம்புத்தூர் - அவினாசி
காமராசர் - ஸ்ரீவில்லிபுத்தூர்
சேலம் - இராசிபுரம்
புதுக்கோட்டை - புதுக்கோட்டை
சிதம்பரனார் - சாத்தான்குளம்
திருநெல்வேலி-கட்டபொம்மன் - பாளையங்கோட்டை

மின்சக்தியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, இவ்வரசும் தொழில் துறையில் திருவாளர் மக்னெல்லி பாரத் இன்ஜினியரிங் கம்பெனி (Mcnally Bharath Engineering Company Limited) என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாக TIDCO-வைக் கூட்டு முனைவோர்களாக நியமித்து அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டம் ரூ.7,000 கோடி முதலீட்டில் தொடங்கப்படும்.



தொழில் முனைவோர், புதிய தொழில் நுட்ப உத்திகளைக் கொண்டும், மேல் நாடுகளில் கடைப்பிடிக்கும் முறைகளைக் கொண்டும் முன்னோடித் திட்டங்கள் உருவாக்குவதற்காகத் தொழில் நுட்ப உத்தி மூலதன (Venture Capital Fund) நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் முன்னேற்றத்திற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சிறு தொழில்களைப் பதிவு செய்யும் முறையை எளிதாக்கவும், மாவட்டத் தொழில் மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் தீர்வு செய்ய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 5 ஆண்டுகளில் தமிழகத்தில் ஒரு இலட்சம் சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போதுள்ள சிறு தொழில்கள் மற்றும் வேறு வகைப்படும் தொழில்களுக்கும் கீழ்க்கண்ட விகிதத்தில் குறைந்த அழுத்த மின்சாரம் வழங்குவதற்கு மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

1. முதல் ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 40 சதவீதம்.

2. 2-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 30 சதவீதம்

3. 3-வது ஆண்டு சிறு தொழில் பிரிவு உபயோகித்த மொத்த மின் கட்டணத்தில் 20 சதவீதம்.

சிறு தொழில் பிரிவிலும் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்க முதலீட்டுத்தொகைக்கான மானியத்தை வழங்கத் திட்டங்கள் தீட்டி, ஒவ்வொரு நிலையிலும் வழங்க அரசு எண்ணியுள்ளது.

இவ்வாறு இந்த அரசு பொறுப்பு ஏற்றபின், தொழில் வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் காண முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையில் தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்தைத் தொழில் துறையில், இந்தியாவில் ஒரு முன்னணி மாநிலமாக்க எல்லா வகையிலும் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாகத் தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் தொழில் தொடங்க முனைவோர்களுக்கு, இவ்வரசு எல்லா ஒத்துழைப்பும் நல்கி, அனைத்து உதவிகளும் செய்ய முன்வந்துள்ளது.

நிதி நெருக்கடியிலும் நிலையான பணிகள்

“ கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்துவதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது. ”

அரசு கடுமையான நிதி நெருக்கடியில் இருந்த தருணத்தில், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்றது.

ரூ.1600 கோடி மதிப்புள்ள திட்டத்திற்கான பற்றாக்குறை ரூ.898 கோடியாகவிருந்தது. ஏழை மக்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் முதல் நடவடிக்கையாக, நாட்டு மதுவை ஒழித்து, மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்தப்பட்டது. இதன் விளைவாக வருமான இழப்பீடு ரூ.322 கோடியாகும். ரூ.1600 கோடி திட்டத்தை ஒப்புநோக்கில், ரூ.1220 கோடி பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு இயலாத நிலையில் அரசு இருந்தது.

அரசு நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தது. எடுக்கப் பட்ட நடவடிக்கைகள், பல் கட்டண உயர் வானாலும், அல்லது மின் கட்டணச் சீரமைப் பானாலும் ஏழை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் கவனமாகச் சரிசெய்யப்பட்டது. ஏழை மக்களின் நலனைப் பாதுகாக்கவே அரசு நிதி நிலையை மேம்படுத்த எல்லா நடவடிக்கைகளை எடுத்தது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் ஏழை மக்களுக்குக் கிடைப் பதற்காக அரசு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தது.

இந்த நாட்டில் தமிழ்நாட்டில்தான் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை குறைவாக இருப்பது என்பது தமிழகத் திற்குப் பெருமை சேர்ப்பதாகும். மையத் தொகுப் பின் விலை அதிகரிப்பு காரணமாக விலையினைத் திருத்துவதற்கான அவசியத்தில் இருந்தபொழுதிலும், அரசு ஏழைகளின் தேவைகளுக்கு மதிப் பளித்து அரிசியின் விலையை நாட்டிலேயே குறைவாக இருக்கும்படி சரிசெய்யப்பட்டு வருகிறது. இவ்வாறாக, அரசின் நிதி ஆதாரங் களைப் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள் ளும் அதேசமயத்தில் அரசு எப்போதும் ஏழைகள் பாதுகாப்பில் கவனம் செலுத்தி வருகிறது.

கடுமையான நிதிநிலை நெருக்கடியிலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முன்னேற்றப் பணிகளைச் செயல்படுத்து வதில் மிகவும் சிறந்த வகையில் செயல்பட்டு உள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக, 1991-92-ஆம் ஆண்டிற்காக ரூ.1600 கோடி திட்டத்தை நிறைவேற்ற இயலாது என்ற காரணத்தால் மைய திட்டக்குழு 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடாக ரூ.1460 கோடியாகக் குறைக்க வற் புறுத்தியபொழுது, முதலமைச்சர் தமிழ்நாட்டிற்கு இது ஏற்புடைத்தல்ல என்றும், 1991-92 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டு முழுவதையும் நிறைவேற்றும் என்று உறுதி செய்ததோடல்லாமல், 1992-93 ஆம் ஆண்டிற்கான உயர்ந்தத் திட்ட மதிப்பீடாக ரூ.1751 கோடி கோரினார்.

1991-92 ஆண்டிற்கான ஆண்டு ஒதுக்கீடு முழுமையாக நிறைவேற்றியது என்பது பெருமைக் குரிய விஷயமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடான ரூ.1600 கோடி திட்டத்திற்கெதிராக ரூ.1650 கோடி திட்டச்செலவாகச் செலவிடப் பட்டது. 1992-93 ஆம் ஆண்டிற்கான ரூ.1751 கோடி ஆண்டுத் திட்டத்தை மையத் திட்டக்குழு ஏற்பளிப்பதில் முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெற்றி கண்டுள்ளார்.

1992-97 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் தயாரிக்கும் தருணத்தில் மையத் திட்டக்குழு நிதி ஆதாரங்கள் ரூ.6500 கோடி திட்ட ஒதுக்கீட்டை அனுமதிக்கும் அளவிற்கு இருக்க வேண்டும் என தெரிவித்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒரு சிறுவனின் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 1.6.92 அன்று தலைமைச் செயலகத்தில் நிதியுதவி வழங்கினார்.

முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத் திட்டங்களைப் பாதுகாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுத்தார். மையத் திட்டக் குழுவினருடன் 1992 ஏப்ரல் மாதம் நடந்த விரிவான விவாதத்தினைத் தொடர்ந்து தமிழகத்திற்கு முதன்மையாகக் குறிப்பிட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.6500

கோடியில் இருந்து உயர்வு ஒதுக்கீடான ரூ.10,200 கோடிக்கான திட்ட மதிப்பீடு பெறமுடிந்தது.

எட்டாவது ஆண்டுத்திட்ட மதிப்பீடு கணிசமாக உயர்த்துப்பட்டதைத் தமிழ்நாட்டு மக்களின் நலம் நாடும் அனைவராலும் வரவேற்கப்பட்டது. எல்லாத் திட்டங்களையும் சரியாக நிறைவேற்றுவதற்காக அரசு அதிக அளவில் உறுதி கொண்டு உள்ளது. முன்னேற்றப்பணிகளுக்கு நிதி வசதிகள் செய்து தரப்பட்டன. அரசு மிகக் கடுமையான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருந்தாலும், செலவினங்களில் தொய்வு ஏற்படாதவாறு கவனித்துக்கொண்டது.

அரசின் முன்னேற்றப்பணிகளுக்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதல் நிலை அரசுக்குத் தரப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளின் முயற்சியினாலும், இந்தத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் குறித்த காலத்தில் நிதி வசதி அளித்ததனாலும் இது சாத்தியமாயிற்று. வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசு நல்ல முறையில் செயல்பட்டது.

மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ரூ.195 கோடி என்ற அளவைக்காட்டிலும் ரூ.240 கோடி கூடுதல் மைய உதவியாக அரசு பெற்றது. நிதி நெருக்கடி இருந்தபோதிலும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் அரசின் சாதனை நிச்சயமாக வரவேற்கப்படவேண்டியது.

இலாபத் தொழில்

கலங்கிய நீரில் மீன் பிடிப்பது சுலபம்தான். ஆனால் அதைவிடச் சுலபம், தேங்கிய நீரில் மீன் வளர்ப்பது! இலாபமும் கூட. ஒரு எக்டேர் பரப்பளவு நீரில் ஆண்டுக்கு 15 டன் மீன் பிடிக்கலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

மத்திய உயிரியல் நுட்பத் துறையின் ஆதரவில் இந்தவகை திட்டமொன்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் வெற்றிகரமாகச் செயலாக்கம் பெற்றுள்ளது.

சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், வியாபார ரீதியில் எக்டேர் ஒன்றில் ஆண்டுக்கு ஐந்து முதல் பதினைந்து டன் கார்ப் மீனை அறுவடை செய்வதற்கான தொழில் நுட்பத் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

★ இந்தியாவிலேயே, தன்னிறைவுத் திட்டங்களை மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம் தமிழ்நாடு அரசு தான் என்று மத்திய அரசே பாராட்டியுள்ளது.

"இந்தியாவிலேயே தமிழகக் காவல் துறையானது சிறந்ததெனப் போற்றப்படுவதாகும்; மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொறுப்பில் உள்ள அத்துறைச் சாதனைகள் இங்கே அணிவகுக்கின்றன:"

காவல்துறையின் சாதனைகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், அரசின் எல்லாத் துறைப் பணிகளும் செம்மையாக முடுக்கி விடப்பட்டன.

குறிப்பாக உள்துறையின் பணி சிறப்புறத் தொடர்கிறது.

கடந்த காலத்தில் காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத் துறை போன்ற சீருடைப் பணியாளர்கள் பணியாற்றுகின்ற துறைகளில், சார்நிலைப் பணிகளுக்கான பணியாளர்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டு வந்தனர்.

இத்துறைகளுக்கான / சார்நிலைப் பணியாளர் தேர்வினைச் சீரான முறையில் நடத்திடவும், அவ்வப்போது தற்காலிக அடிப்படையில் நடைபெறும் தேர்வுகளைத் தடுத்திடவும் வேண்டி, தமிழ்நாடு சீருடைப் பணிகளுக்கான தேர்வு வாரியம் ஒன்றினைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. இக்குழு தற்சமயம் காவல் துறையில் இரண்டாம் நிலைக் காவலர் பணிக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது; விரைவில் பிற சார்நிலைப் பணிகளுக்கான ஆட்களைத் தெரிவு செய்யும் பணியை இந்த வாரியம் மேற்கொள்ளும்.

காவலர்களுக்கு உணவுப் படி

பாதுகாப்புப் பணிக்கு அனுப்பப்படும் காவலர்களுக்கு, இதுவரையில் காவலருக்கும் தலைமைக் காவலருக்கும் ரூ.6 மட்டுமே ஒரு நாள் உணவுப்படியாக அளிக்கப்பட்டது. ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும் ரூ.7.50 [illegible]

பெற்றனர்.

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும் பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவலர்க்கு வழங்கப்படும் உணவுப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 456, உள்துறை, நாள் 17.3.92-இல் பாதுகாப்புப் பணிகளுக்கு அனுப்பப்படும் காவலர்க்கு கீழ்க்கண்டவாறு உணவுப் படியினை உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

அதன்படி, இரண்டாம் நிலைக் காவலருக்கும், லான்ஸ் நாயக்குக்கும் நாளொன்றுக்கான படி ரூ.16-ம், தலைமைக் காவலருக்கும், முதனிலைக் காவலருக்கும் ரூ.20-ம், உதவி ஆய்வாளருக்கும், ஆய்வாளருக்கும் ரூ.30-ம் வழங்கப்பட்டு வருகிறது.

காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி

காவல்துறை அலுவலர்களுக்கு 16.3.1992-க்கு முன்னர் வரை மாதாந்திரக் கருவிக் கலன் பெட்டிப் படி ('கிட்' படி) பின்வருமாறு வழங்கப்பட்டு வந்தது.

துணைக் காவல் கண்காணிப்பாளர்	ரூ.30
உதவி ஆய்வாளர்/ஆய்வாளர்	ரூ.20
தலைமைக் காவலர்	ரூ.15

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்க்குக் கருவிக் கலன்கள் பெட்டிப் படி ('கிட் படி') உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அரசு ஆணை (நிலை) எண்.458, உள்துறை, நாள் 17.3.92-இல் காவல்துறை அலுவலர்க்குக் கீழ்க்கண்டவாறு கருவிக் கலன்கள் பெட்டிப் படியை ('கிட் படி') உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

1. காவலர்/தலைமைக் காவலர்/லான்ஸ் நாயக்/நாயக் ஹவில்தார் ரூ.25

2. உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் ரூ.30

3. துணைக் காவல் கண்காணிப்பாளர்/கூடுதல் காவல் கண்காணிப்பாளர்/மற்றும் காவல் கண்காணிப்பாளர் (இந்தியக் காவல் பணி அந்தஸ்து சாராத) தளவாய்கள் (இந்தியக் காவல் பணி சாராத) துணைத் தளவாய்கள்/உதவித் தளவாய்கள். ரூ.40

சீருடைப் படி

காவல்துறை அலுவலர்களுக்கு (இந்தியக் காவல் பணி அந்தஸ்து பெறாத காவல்துறை கண்காணிப்பாளர் முதல் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வரை) சீருடைப் படி கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக்கப்பட்டு வந்தது

ஆரம்பக்காலச் சீருடை மானியம் ரூ.750

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.) ரூ.250

24.9.91 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல்துறை அலுவலர்களுக்கு சீருடைப் படி உயர்த்தப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, அரசு ஆணை (நிலை) எண். 457, உள்துறை, நாள் 17.3.92-இல், காவல்துறை அலுவலர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சீருடைப் படியை உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

ஆரம்ப காலச் சீருடை மானியம் ரூ.1,500

சீருடை மானியம் புதுப்பிக்கப்படும் போது (ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை) ரூ.500

காவல்துறையை நவீனப்படுத்துதல்

இலங்கைத் தீவிரவாதிகள்/பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களைத் தொடர்ந்தும் தமிழ்நாட்டில் அவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்த்து அடக்குவதற்காகவும் திட்டங்கள் வகுப்பதற்கான விரிவான செயற்குறிப்பிற்கு சிறப்பு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, ஆயுதங்கள், வெடி மருந்துகள், விரைவில் செல்லுதல், அதிரடிப்படைப் பயிற்சி, கூடுதலான படைப் பிரிவுகள், வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சி - சாதனம், பாதுகாப்புச் சாதனம், மேம்படுத்தப்பட்ட தொலைத் தொடர்புச் செய்தி - பயிற்சி ஆகியவைகளில் மாநிலக் காவல்துறையை வலுப்படுத்துவதற்கான ரூ.80.450 கோடி செலவாகும் விரிவான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசும் இதற்கான தொடக்க உதவித் தொகையாக ரூ.10 கோடி வழங்கியுள்ளது. இந்தத் தொகையை மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 100 டெம்போ டிரேக்ஸ் (Tempo Trax), வெடிகுண்டைச் செயலிழக்கச் செய்யும் (Ammunition-Bomb Disposal) படைத் தளவாடம், நுண் அலை இலக்க அமைப்பு (Micro Wave Digital) போன்ற சாதனங்கள் வாங்குவதற்குத் தமிழக அரசு பயன்படுத்தியது. மேலும், 123 டெம்போ டிரேக்ஸ்களையும், 889 மிகுதி மின் அலைப்பெட்டிகளையும் (VHF Sets) வாங்குவதற்காக முறையே ரூ.339.85 இலட்சம், (ரூ.262.00 + 77.85 இலட்சம்) ரூபாயையும் 1991-92-ஆம் ஆண்டில் அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் காவல்துறையை வலுப்படுத்தியதில், இவ்வாண்டில் பெரிதும் சாதனை ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டக் கருதப்பட்டுள்ளது. ஜூதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப் பாதுகாப்புப் படைப் பிரிவை ஏற்படுத்துதல்

- மிகவும் முக்கியமான பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, தேசியப் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு அளிக்கும் அதே அடிப்படையில், முதலமைச்சருக்கும் ஏனைய முக்கியப் பிரமுகர்களுக்கும் அருகிலிருந்தே பாதுகாப்பு அளிக்கத் தமிழ்நாடு அரசு, சிறப்புப் பாதுகாப்புப்படை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியத் துணைக்கண்டத்தில் - திறமைக்கும் நேர்மைக்கும், வளர்ச்சிக்கும் உயர்வுக்கும், இலஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்

தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக்கழகம்

காவல்துறையின் [illegible] தேவையை உணர்ந்த [illegible] 1991-ஆம் [illegible] காவல்துறை[illegible] படுத்தியது. தமிழ்நாடு காவல்துறையினர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம், [illegible] துறைப் பணியாளர்களுக்கு [illegible] வீட்டுவசதி [illegible] இலக்கினை அடைய, ஒவ்வோராண்டும் 3,000 குடியிருப்புகள் கட்டப்படும் என [illegible] மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். [illegible] 1992-93-ஆம் ஆண்டில் 1000 வீடுகள் [illegible]

முற்றிலும் மகளிரே நிர்வகிக்கும் காவல் நிலையம்

[illegible] மகளிரே நிர்வகிக்கும் காவல் நிலையம் [illegible] தமிழ்நாடு அரசு [illegible] [illegible] முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்

உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் [illegible] காவல்துறைப் பணியாளர்களுக்கு மட்டும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இவ்வாறு இந்தச் சலுகையை அதிகரிப்பதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலை [illegible]

விளையாட்டுகளும் போட்டி விளையாட்டுகளும்

சென்னையில் 1991 டிசம்பரில் நடைபெற்ற 35-வது அனைத்திந்தியக் காவலர் விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கி சுடுவதில் தமிழ்நாடு காவல்துறை ஒட்டுமொத்த வீரருக்கான கோப்பையை வென்றது. மேலும் நாய் விளையாட்டுப் போட்டிக்கு ஒன்றும், அறிவியல் சார்ந்த துப்பு துலக்கும் பணிக்கு ஒன்றுமாக மேலும் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தமிழ்நாடு காவல்துறை பெற்றுள்ளது.

நலத் திட்டங்கள்

காவல்துறையில் உள்ள பணியாளர் - அலுவலர்களுக்கான பின்வரும் நலத் திட்டங்களுக்குத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது

1. தமிழ்நாடு காவல்துறை நலநிதிக்கு ஒட்டு மொத்த ஆண்டு மானியமாக அளிக்கப்பட்டுவந்த ரூ. [illegible] இலட்சம் 1991-92 முதற்கொண்டு ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

2. பணியிலிருக்கும்போது மிகுந்த வீரத்துடன் செயல்பட்டதால் இறந்த காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டுவந்த தனிக் கருணைத் தொகை [illegible]00 இலட்சம் ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

3. பணியிலிருக்கும்போது, மிகுந்த வீரத்துடன் செயல்பட்டதில் [illegible] காயமடைந்த காவல்துறைப் பணியாளர்களுக்குத் தனிக் கருணைத்தொகை ரூ.1,500-லிருந்து ரூ.[illegible] வரையில் [illegible] அளிக்கப்பட்டுள்ளது.

4. காவல்துறைப் பணியாளர்கள் [illegible] [illegible] இறந்துபோனால் [illegible] வாரிசுதாரருக்கு அவர் கடைசியாகப் பெற்ற ஊதியம் குடும்ப ஊதியத் தொகையாக அப்பணியாளர் வயது முதிர்வு ஓய்வுபெறும் நாள் வரையில் வழங்கப்படும். அதன் பின்னர், செயலிழுவன் [illegible]

★ **இந்தியத் திருநாட்டின் ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையினையும் பேணிக் காப்போம்; இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்!**

— மாண்புமிகு முதல்வர்

கிடைக்கக்கூடிய குடும்ப உதவித்தொகை வழங்கப்படும்.

5. காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை போன்ற சீருடைத் துறைகளில் பணியாளர்களைப் பணியில் அமர்த்துவதற்குத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் நியமன வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

6. காவல்துறைப் பணியாளர்களுக்கு அலுவலர்களுக்கு ஆடை அணி பணிப்பை பராமரிப்புப் படிகள், உணவுக் கட்டணங்கள், சீருடைப் படிகள் ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன.

காவல்துறைப் பணியாளர்களின் பயனுக்காகச் சென்னை மாநகரில் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுவதற்கும், 17 மாவட்டங்களிலுள்ள 135 காவல் நிலையங்களோடு இணைந்துள்ள குடியிருப்புகளில் நவீன கழிப்பிடங்கள் கட்டுவதற்கும் அரசு கருதியுள்ளது.

தீயணைப்புத் துறையில் வசதிகளும் சலுகைகளும்

புதிய கோட்டம் உருவாக்குதல்

காமராசர் கோட்டத்தை, இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம்-பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கோட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் கோட்டமாகவும் இரண்டாகப் பிரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்புதிய கோட்டம் 1.3.1992 அன்று முதல் இயங்கி வருகிறது.

புதிய தீயணைப்பு நிலையங்கள் துவக்குதல்

1. இவ்வரசு பதவியேற்றபின் 1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஒன்பது இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரூர் - செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், அனுப்பானடி - மதுரை மாவட்டம், நாவல்பட்டு - திருச்சிராப்பள்ளி மாவட்டம், கணபதி - கோயம்புத்தூர் மாவட்டம், பவானி - பெரியார் மாவட்டம், கும்மிடிப்பூண்டி - செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், ஊத்தங்கரை - தர்மபுரி மாவட்டம், துவரங்குறிச்சி - திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆர்க்காடு - வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்.

2. 1992-93-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 6 இடங்களில் புதியதாகத் தீயணைப்பு நிலையங்கள் துவக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

கொளச்சல் - கன்னியாகுமரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை - தர்மபுரி மாவட்டம், சேத்தியாத்தோப்பு - தென்னார்க்காடு மாவட்டம், வேதாரண்யம் - நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மண்டபம் - இராமநாதபுரம் மாவட்டம், வில்லிவாக்கம் - சென்னை மாவட்டம்

ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க ஆகும் செலவினம் பின்வருமாறு:

தொடர் செலவினம் ரூ.5.13 இலட்சம், தொடராச் செலவினம் ரூ.12.14 இலட்சம்

புதிய வாகனங்கள் ஒப்பளித்தல்

இவ்வாண்டு 5 நோயாளர் ஊர்திகள் வாங்கப்பட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், விருத்தாசலம், முசிறி, ஒரத்தநாடு, சங்ககிரி மற்றும் சோழவந்தான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு நோயாளர் ஊர்திகள் வழங்க இவ்வரசு ஒப்பளித்துள்ளது. இதற்காகும் மொத்த செலவினம் ரூ.14 இலட்சமாகும்.

பணியாளர் தேர்வுக்குழு அமைத்தல்

இதுவரை நிலையத் தீயணைப்பு அலுவலர்களைத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமும், தீயணைப்பாளர்களைத் தீயணைப்புத் துறையும் தேர்வு செய்தன. நிலையத் தீயணைப்பு அலுவலர் மற்றும் தீயணைப்பாளர்களைக் காவல் மற்றும் சிறைத்துறைக்குத் தேவையான பணியாளர்களுடன் சேர்த்துத் தேர்ந்தெடுக்கத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுவை அரசு தற்பொழுது அமைத்துள்ளது.

—தொடர்ச்சி 77-ஆம் பக்கம்

தமிழ்நாட்டில் நீதி நிர்வாகம்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்
கே.ஏ. கிருஷ்ணசாமி

“ **இந்த ஓராண்டுக் காலத்தில், தமிழ்நாட்டில் நீதிநிர்வாகம் மிகவும் சிறந்து விளங்குவதைப் புள்ளி விவரங்களோடு விளக்கும் கட்டுரை இது.** ”

பன்னெடுங்காலத்தொட்டே, நீதி
வாகம் என்பது இன்றியமையாத
ரிகளில் ஒன்றாக அனைத்து அரசு
மைப்பிலும் கருதப்பட்டு வந்துள்ளது.
முகத்தில் நீதித்துறையின் வளர்ச்சியும்,
மற்றிற்கான அடிப்படை வளர்ச்சிகளும்
ப்பிடத்தக்க வகையில் மேம்பாடு
டந்துள்ளன. நீதித்துறை சுதந்திர
ச் செயல்படுவதற்கான தகுந்த சூழ்
லையை உருவாக்கித் தருவதில் இவ்வரசு
போதும் விழிப்புடன் இருந்து
கிறது. சிறந்த சேவையினை வழக்
ும் மக்களுக்கு வழங்குவதற்குத் தேவை
ா நீதித்துறைக்கான கட்டடங்கள்,
மனித சக்தி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவைகளை அரசு வழங்குகிறது.

மாநில அளவிலான நீதித்துறையின் படி அமைப்பு பின்வருமாறு

சட்ட அதிகாரகளின் படியமைப்பானது தலைமை வழக்குரைஞரே தலைமை அலுவலராகவும், அரசு உரிமையில் வழக்குரைஞர், கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர், குற்றவியல் வழக்குரைஞர், கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் போன்றோரை உள்ளடக்கியது.

1991-92-ஆம் ஆண்டு நீதி நிருவாகத்தில் அரசின் சாதனை பின்வருமாறு

சென்னை உயர்நீதிமன்றம்

உயர்நீதிமன்றம் 28 நீதிபதிகளுடன் செயல் ஆற்றி வருகிறது. வழக்குகளை விரைந்து முடிக்கும் நோக்கத்துடன் நீதிபதிகளின் எண்ணிக்கையை 32-ஆக உயர்த்துவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு அளித்த் செயற்குறிப்பிற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது.

நிதித்துறை ஒதுக்கீடு

1991-92-ஆம் ஆண்டில் நீதி நிருவாகத்திற்கு நிதியினை ஒதுக்கீடு செய்வதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1988-89-ஆம் ஆண்டில் நீதி நிருவாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகையான ரூ.24.48 கோடிக்கு மாறாக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.40.19 கோடியும், 1992-93-ஆம் ஆண்டில் ரூ.45.99 கோடியும் உயர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்றங்கள் அமைத்தல்

மூன்றாகப் பிரிக்கப்பட்ட இராமநாத புரம், பசும்பொன் முத்துராமலிங்கத்



சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள செல்வி நீதிபதி காந்த குமாரி பட்நாகர் அவர்களுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னை ராஜ்பவனில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் (15.6.92). மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

தேவர், காமராசர் மாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஏற்கெனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், இடையில் ஏற்பட்ட சில இடர்ப்பாடினால், நீதிமன்றங்களை அமைப்பது காலதாமதமாகியது. 1991-92-ஆம் ஆண்டு இந்த இடர்ப்பாடுகள் நீக்கப்பட்டு, புதிய நீதிமன்றங்கள் விரைவில் துவங்கவிருக்கும் நிலையில் உள்ளன. இந்நீதிமன்றங்கள் இப்பகுதிகளில் வாழும் மக்களின் நீண்ட நாள் தேவையினை நிறைவு செய்யும்.

உரிமையியல் நீதிமன்றங்கள்

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக சிவகங்கையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

சிதம்பரனார் மாவட்டத்துக்காக தூத்துக்குடியில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்துக்காகத் திருவண்ணாமலையில் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம்.

குற்றவியல் நீதிமன்றங்கள்

இராமநாதபுரம் மாவட்டத்துக்காக, இராமநாதபுரத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்துக்காக, சிவகங்கையில், நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

காமராசர் மாவட்டத்துக்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

1991-92-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீதிமன்றங்கள்

உரிமையியல்

1. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கொடைக்கானல்
2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், நிலக்கோட்டை.
3. துணை நீதிமன்றம், இராணிப்பேட்டை.

குற்றவியல்

நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரியில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்.

சந்தனமரக் கடத்தல் குற்றங்களை விசாரிக்க, வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில், திருப்பத்தூரில் நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்காக தனி நீதிமன்றம்.

காசநோயைக் குணமாக்க

இந்தியர்களில் 1.5 சதவிகிதம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக, காசநோயைக் குணமாக்குவதற்கு நீண்ட கால மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அதாவது 18 முதல் 24 மாதங்கள். குறுகிய கால மருத்துவ முறை 212 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இது 6 முதல் 8 மாதங்களாகக் குறைக்கப்பட்டுவிட்டது. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 12 இலட்சம் புதிய காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்படுகிறார்கள். கிராமப்புறங்களில் காசநோயைக் கண்டுபிடிப்பதற்காக, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும், மாதமொன்றுக்கு 60 சளி பரிசோதனைகளை நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத-நாசவேலைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட வழக்கை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட நீதிமன்றம்.

உடனடித் தேவை காரணமாக - அதாவது, தற்செயல்விடுப்பில் செல்லுதல் போன்ற காரணத்தினால் தனி நீதிபதி தற்காலிகமாக அலுவலகம் வராத நேரத்தில், வழக்குகளை விசாரிக்கும் பணி தடங்கலின்றி நடைபெற கூடுதல் நீதிபதி ஒருவரை அரசே நியமித்துள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் நீதிமன்றக் கட்டடங்கள் குறித்த செலவினங்கள்

1991-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 4 கோடி செலவில் கட்டப்பட்ட உயர்நீதிமன்றக் கூடுதல் வளாகத்தினைத் துவங்கி வைத்தார்.

1991-92-ஆம் ஆண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1. உயர்நீதிமன்றக் கட்டடத்திற்கும் புதிய கட்டடத்திற்கும் இணைப்பு வழி கட்டுதல் ரூ.10.50 இலட்சம்.
2. கூடுதல் உயர்நீதிமன்றக் கட்டடத்தை முன்பகுதியில் சிமிட்டி வண்ணப்பூச்சு பூசுதல் ரூ.2.50 இலட்சம்.
3. இராணிப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடத்திற்கு மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் ஒரு இலட்சம்.
4. பல்வேறு நீதிமன்றங்களுக்குச் சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.8.65 இலட்சம்
5. உயர்நீதிமன்றத்தில் புதிய நிருவாகத் தொகுதிக்குத் தேவையான அறைகலன்கள் வாங்குதல் ரூ.27.91 இலட்சம்.
6. 41 உருக்குப் பதிவேட்டு அடுக்குகள் வாங்குதல் ரூ.1.25 இலட்சம்.
7. இராமநாதபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் வழக்குரைஞர்கள் சங்கக் கட்டடம் கட்டுதல் ரூ.237 இலட்சம்.

தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு

ஏழை எளியவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டப்படி ஆலோசனை நல்குவதற்காகத் தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி ஆலோசனைக் குழு உருவாக்கப்பட்டு உள்ளது. இவ்வாலோசனைக் குழு 1977-ஆம் ஆண்டிலிருந்து சமுதாயத்தில் பின்தங்கியவர்களை வழக்காடும்போது அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும், அவ்வாறே 1992-93-ஆம் ஆண்டில் ரூ.91 இலட்சமும் தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்துள்ளது.



★ உலக உயிர்களில் அறிவு
நிரம்பப்பெற்ற உயிர் -
பகுத்தறிவுள்ள உயிர்
மனிதன்தான், அவன் தன்
அறிவைப் பயன்படுத்தினால் மிகச்
சிறந்த செயல்களையெல்லாம்
சாதிக்க முடியும்.

—தந்தை பெரியார்

சட்டமியற்றல்

தமிழ்நாடு பொதுச் சொத்து அழிப்பு மற்றும் இழப்பைத் தடுத்தல் சட்டம்

பொதுச் சொத்துக்கள் சேதமடைவதைத் தடுக்கும் பொருட்டு, தமிழக அரசு 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்தச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தில் எவர் சேதம் விளைவித்தாரோ அவரிடம் மட்டுமன்றி அத்தகைய சேதங்களுக்குப் பொறுப்பாளியாக உள்ள அரசியல் கட்சி அல்லது பிற இனக்குழுவிடமிருந்து சேதத்தில் மதிப்புத் தொகையினை வசூலிக்க வழி செய்கிறது.

தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நலநிதி திருத்தச் சட்டம் - 1992

வழக்குரைஞர்கள் மன்றத்தின் கருத்துக்களை ஏற்று வழக்குரைஞர்கள் வக்காலத்துக்கு ஆஜராவதற்கான குறிப்பாணைகள் அல்லது ஆஜர் ஆவதற்கான ஏனைய ஆவணங்களைத் தாக்கல் செய்வது ஆகியவற்றின் போது நீதிமன்றத் தபால்தலையுடன் சேர்த்து, தற்போது ஒரு ரூபாய் [illegible] பதிலாக 2 ரூபாய் மதிப்புள்ள வழக்கறிஞர் மன்றத் தபால் தலைகளை ஒட்ட வேண்டும் எனவும், பிற கருத்துக்களையும் [illegible] திருத்தச் சட்டம் ஒன்றை 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு கொண்டு வந்துள்ளது. இத் திருத்தச் சட்டத்தின் மூலம் வழக்குரைஞர்கள் நலநிதியின் நிதி வரவு அதிகரிக்கும் எனவும் அதனால் வழக்குரைஞர்கள் மன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நிவாரணம் கிடைக்கும்.

தமிழக அரசு, நீதித்துறையின் தேவைகளை உணர்ந்து அத்தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றவும் நீதித்துறை தனித்தும், வழக்காடும் மக்களுக்கு நீதி விரைவாகக் கிட்டும் வகையிலும் செயல்படத் தகுந்த சூழலை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சிறைத்துறை

தமிழகத்தில் சிறைகளை நவீனப்படுத்தும் வகைக்காக மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ.864 இலட்சங்கள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்றில் மைய அரசு ரூ.432 இலட்சமும் மாநில அரசு ரூ.432 இலட்சமும் செலவு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மைய அரசு வழங்கும் தொகை ரூ.432 இலட்சத்தில் சில திட்டங்களுக்கு 100 சதவிகித மானியமும் சில திட்டங்களுக்கு 50 சதவிகித மானியமும் அளிக்க ஒப்புதல் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள மொத்த செலவுத் தொகை ரூ.864 இலட்சத்தில் ஏற்கெனவே ரூ.359 இலட்சத்திற்குச் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது மைய அரசு தமிழகத்தில் சிறைச்சாலைகளை நவீனப்படுத்த பல்வேறு திட்டங்களைச் செயலாக்குவதற்கு ரூ.235.59 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றிற்கு மாநில அரசு தன் பங்குத் தொகையாக ரூ.45.23 இலட்சம் வழங்க வேண்டும். எனவே 31.3.92 நாளிட்ட அரசாணை எண். 555-இல் தமிழகத்தில் சிறைச்சாலைகளை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள மொத்த செலவினத்தொகை ரூ.280.82 இலட்சத்திற்கு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வருவாய்த்துறையின் வளமான பணிகள்

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்
எஸ்.டி. சோமசுந்தரம்



”வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா வழங்குதல், நிலம் கையகப்படுத்துதல், உபரி நில ஒப்படைப்பு, மாவட்டங்கள் பிரித்தல், வறட்சி நிவாரணப் பணிகள் முதலான பணிகளை வகுத்தும், தொகுத்தும் விரைவாய் செயலாற்றி வருகின்றது வருவாய்த் துறை.“

சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலிவரும் துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்று. வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா வழங்குதல், மாவட்டங்களைப் பிரித்தல், நிலச் சீர்திருத்தம் முதலான பணிகள் இவற்றுள் அடங்கும்.

வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 4,57,672 வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு

ஆதிதிராவிடர் 1,77,343, பழங்குடியினர் 3,660, ஏனையோர் 2,76,669 மொத்தம் 4,57,672.

விவசாய நிலப்பட்டா

ஜூலை 1991 முதல் மார்ச்சு 1992 வரை 6,372 பேருக்கு விவசாய நிலப்பட்டா வழங்கப் பட்டுள்ளது. மொத்தம் 6,426.55 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு

ஆதிதிராவிடர் 1,207, பழங்குடியினர் 16, ஏனையோர் 5,149, பயனாளிகள் மொத்தம் 6,372.

நிலம் கையகப்படுத்துதல்

அரசுத் துறைகள், அரசுப் பொது நிறுவனங்கள் மற்றும் இரயில்வே துறையினர் கையகப் படுத்தியும் பயன்படுத்தாமல் பல ஆண்டுகளாக வெற்று நிலங்களாக வைத்திருக்கும் நிலங்களை அரசு திரும்பப் பெற்று, வேறு பொது நோக்கங் களுக்காகவும், ஏழை எளிய மக்களுக்காகவும் ஒதுக்கீடு செய்துதர நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.

மாவட்டங்களைப் பிரித்தல்

1. 1991-92-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தை தஞ்சாவூர் மாவட்டம் என்றும், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரித்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் 18.10.91 முதல் இயங்கி வருகிறது.

2. 1992-93-இல் தென்னார்க்காடு மாவட்டத்தை தென்னார்க்காடு மாவட்டம் என்றும், வள்ளலார் மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரிக்கலாமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மாவட்ட நிர்வாகம் மக்களை நெருங்கிச் செயல்படவும், மக்களின் குறைகளை நன்கு களைவதற்கும், சிறப்புத் துணை மாவட்டாட்சித் தலைவர் மற்றும் அவருக்கு உதவி செய்யத் துறை அலுவலர்களுடன் கூடிய ‘பொது மக்கள் குறை தீர்க்கும் பிரிவு’ என்ற பிரிவு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் செயல்பட தற்போது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வட்ட அலுவலகங்களில் பொது மக்கள் அடிக்கடி செல்வதைத் தடுப்பதற்காக 3 முதல் 4 கிராமங்கள் அடங்கிய ஒவ்வொரு மண்டலத் திற்கும் ஒரு மண்டலத் துணை வட்டாட்சியரை அரசு நியமித்துள்ளது.

5. சாதிச் சான்றிதழ்களை விரைந்து வழங்கு வதற்கு ஏற்றவகையில், மாணவர்களிடமிருந்து சாதிச் சான்றிதழ்கள் கோரி மனுக்கள் பெறப்பட்ட அன்றே அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை வழங்க வேண்டுமென்று அரசு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கியுள்ளது.

6. சாதிச் சான்றிதழ்கள், வருமானச் சான்றி தழ்கள் மற்றும் சொத்து மதிப்புச் சான்றிதழ்கள் போன்றவை வழங்கும் முறை குறித்து அரசு சுருக்கமாக அறிவுரைகளை வெளியிட்டுள்ளது.

நிலச் சீர்திருத்தம்

பினாமி நிலம் எடுத்தல்

நீண்ட நெடுங்காலமாக வெளிப்படையாய் வராமல் இருக்கும் பல்லாயிரக்கணக்கான பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி, அந்நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கே சொந்தமாக்கும் குறிக்கோளின்படி, 1958-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் நாள் வரையிலான காலத்தில், மிகை (உபரி) நிலங்களை விற்பனை, கொடை, ஒப்படைவு, ஏற்பாடு, பாகப்பிரிவினை ஆகியவற்றில் எந்த வகையிலேனும் அல்லது பிற எந்த வகையிலேனும் செய்யப்பட்ட நில உரிமை மாற்றங்கள் அனைத்தையும் சட்டப்படி செல்லாத வையாக ஆக்கும் வகையிலும், நிலமற்ற ஏழை களுக்கு அந்த நிலங்களை வழங்கவும், சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 3.10.1991 அன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்ட முன் வடிவுக்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

உபரி நில ஒப்படைப்பு

1991-92-ஆம் நிதியாண்டு முதல் மே திங்கள் வரையில் 4,721 நபர்களுக்கு 5,115 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. 1991-92-ஆம் நிதியாண்டில் 2,500 ஏக்கர் மிகை நிலங்கள் தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்ய மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் 4,524 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டு நிர்ண யிக்கப்பட்ட இலக்கை மிஞ்சியுள்ளதால், மைய அரசின் பாராட்டைப் பெற்றுள்ளது.

பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு

உழுபவனுக்கே நிலத்தை உரிமையாக்கும் வகையில் சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. பயிரிடும் குத்தகைதாரரின் நலன்களைப் பாதுகாக்க நில உரிமையாளர்களுக் கும் பொது நம்பகங்களுக்கும் மற்றும் குத்தகை தாரர்களுக்கும் ஏற்படக்கூடிய வழக்குகளைத் தீர்த்து வைக்க ஐந்து வருவாய் நீதி மன்றங்கள் இருந்தன. தற்போது மேலும் 6 வருவாய் நீதி மன் றங்களை மன்னார்குடி, திருவாரூர், கும்ப கோணம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய இடங்களில் ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார் (18.10.1991).

குத்தகைப் பதிவு செய்தல்

விவசாய நிலங்களைப் பயிரிடும் குத்தகை தாரர்கள் தங்களது பெயரினைப் பதிவு செய்வதற் காக உதவும் வகையில், நிலமற்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த ஒருவரும், பயிரிடும் குத்தகை தாரர் ஒருவரும், மற்றும் சமூக நல ஊழியர் மூவரும் அடங்கிய புதிய ஆலோசனைக் குழுக் களைச் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து வட்டங்களிலும் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்

விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை முறைப்படுத்துவதற்காக அரசு 1948-ஆம் ஆண்டைய குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் சீரான முறையில் செயல்படுத்த உள்ளது.

நகர்ப்புற நிலச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நில ஒதுக்கீடு

தமிழ்நாடு நகர்ப்புற உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப் பட்ட வெற்று நிலத்தில், 9 எக்டேர், 25 ஏர், 84 சதுர மீட்டர் நிலத்தை அரசுத் துறைகள், அரசு கழகங்கள், வீட்டுவசதி வாரியங்கள், நிறுவனங்கள், ஆகியவற்றிற்கு 1.7.91 முதல் 31.5.92 வரை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

குடியிருப்புப் பட்டா வழங்குதல்

குடியிருக்க வீடு இல்லாத விவசாயி, விவசாயத் தொழிலாளர் அல்லது கிராமப்புற கைவினைஞர் ஆகியோருக்கு 1991-92-ஆம் நிதியாண்டு முடிய 1,81,609 குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

வருவாய்த்துறைக்கட்டடங்கள் மற்றும் பிற முக்கிய வசதிகள்

1991-92-ஆம் நிதியாண்டில் இரண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் ஒவ்வொன்றும் சுமார் ரூ.43 இலட்சம் செலவில், பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்) மற்றும் இராமநாதபுரம் (திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்) வட்டாட்சியர் அலுவலகங்களைக்கட்ட அனுமதிக் கப்பட்டுள்ளது. இதே நிதியாண்டில் காங்கேயம் (பெரியார் மாவட்டம்), பென்னகரம் (தருமபுரி மாவட்டம்), கந்தர்வக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் ஏற்காடு (சேலம் மாவட்டம்) ஆகிய ஊர்களிலுள்ள வட்டாட்சியர் அலுவலகங் களை விரிவுபடுத்த ரூ.8 இலட்சத்திற்கு அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

பரமக்குடி, கொடைக்கானல், பழனி, கிருஷ்ண கிரி, தருமபுரி மற்றும் சைதாப்பேட்டை கோட்ட அலுவலகங்கள் புதிதாகக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே நிதியாண்டில், உத்திரமேரூர் வட்டாட்சி யரின் அலுவலகத்தின் புதிய கட்டடத்தை,

★ சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல் தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்வேறு இன மக்கள் வாழும் மொழிவாரி மாநிலங்கள் சேர்ந்த கூட்டாட்சியின் தொகுப்புதான் நம் குடியாட்சி.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

1992-93-ஆம் நிதியாண்டில் பரமத்திவேலூர் (சேலம் மாவட்டம்), இன்னொரு வட்ட அலுவலகம் (வருவாய் நிருவாக ஆணையரால் தெரிந்தெடுக்கப் பட வேண்டியது) மற்றும் கொடைக்கானல் வரு வாய்க் கோட்ட ஆட்சியருக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியருக்குக்குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்பட உள்ளது. இந்த மாநிலத்தில் உள்ள எல்லா பிர்கா வருவாய் ஆய்வாளர் களுக்குப் புதிய குடியிருப்பு கட்டிக் கொடுப்பதை அரசு கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

மொத்தமுள்ள 1,081 பிர்காக்களில் 1,071 பிர்கா ஆய்வாளர்களுக்குக் குடியிருப்புகள் இது வரையில் கட்டுப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 10 பிர்கா ஆய்வாளர்களுக்குப் புதிய குடி யிருப்புகள் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பிர்கா வருவாய் ஆய்வாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டும் சாதனை நிறைவு பெறுகிறது.

இந்த நிதியாண்டில் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளருக்குக் குடியிருப்பு மற்றும் 'முகாம்' அலுவலகம் சுமார் ரூ.23 இலட்சத்தில் கட்டு வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதில், ரூ.10 இலட் சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வட்டாட்சியர் அலுவலகங் களில், இடநெருக்கடி உள்ள ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்கள் விரிவுபடுத்தி கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை குறித்து வருவாய் நிருவாக ஆணையரின் முடி வான அறிக்கை பெறப்பட்டு ஆணைகள் வழங்கப் படும். தற்போது உள்ள மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகங்களில், வரும் பொதுமக்கள் வசதிக்காக வும், அங்கு பணிபுரியும் ஊழியர்களின் வசதிகளுக் காகவும் குளிர்மின்கலன்கள் பொருத்தப்பட இருக்கின்றன. இந்த வகையில் திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் குளிர் நீர் மின்கலன்கள் வசதிகள் செய்யப்படும். இதே நிதியாண்டில் மேலும் ரூ.12 இலட்சம் செலவில் சில வட்டாட் சியர் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றில் இந்த வசதிகள் ஏற்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் எதிர்பாராத விபத்துக்கள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3.7.91 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நல்லூரில் இயற்கை எரிவாயுக் கசிவு ஏற்பட்ட தால், அப்பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருதி போக்குவரத்து மற்றும் உணவுச் செலவுகளுக்காக ரூபாய் ஒரு இலட்சம் முன்னாள் தஞ்சை மாவட் டாட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டது.

ஜூன், ஜூலை 1991-இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழையின்போது ஏற் பட்ட பாதிப்பை மதிப்பிட ஒரு குழு அனுப்பப் பட்டு, அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப ரூ.55,996 இலட்சம் நிவாரணப்பணிகளுக்காக வழங்கப் பட்டது.

சென்னையில் புயல் வெள்ளம் மற்றும் தீ விபத்தினால் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசை களுக்கு ரூ.600-ம், பகுதியாய்ப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.300-ம் பிற பகுதிகளின் முழு வதும் பாதிக்கப்பட்ட குடிசைக்கு ரூ.250-ம் மானியமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நவம்பர் 1991-லேற்பட்ட புயல் வெள்ளத்தினால் கடலோர மாவட்டங்கள் பெரி தும் பாதிக்கப்பட்டன. இயற்கை இடர்ப்பாடு நிதியிலிருந்து 3,547.6 இலட்சம் ரூபாய் அளித்து நிவாரணப்பணிகளைப் போர்க்கால அடிப்படையில் அரசு மேற்கொண்டது. 1991-92-இல் இயற்கை இடர்ப்பாடு நிதி யிலிருந்து வெள்ள நிவாரணப் பணிகளுக்கென ரூ.3,604.6 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து 1991-92-க்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு அதிகமாகவே செலவு செய்து சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதல்வர் டாக்டர் என். ஜனார்த்தன ரெட்டி அவர்கள், 4.6.92 அன்று நெல்லூரில் நடைபெற்ற திரைப்பட விருதுகள் (நந்தி விருதுகள்) வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நினைவுப் பரிசினை வழங்கினார்.

வறட்சி நிவாரணப் பணிகள்

1991-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிலவிய வறட்சி நிலைமையை ஆராய்ந்து தமிழ்நாடு அரசு 30.11.1991 வரை ரூ.8.69 கோடி பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு வழங்கியது.

1.1.1992-க்குப் பிறகு கோயம்புத்தூர், காமராசர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, பெரியார், திருச்சிராப் பள்ளி, கன்னியாகுமரி, சேலம், சிதம்பரனார் மாவட்டத்தில் கடுமையான வறட்சியினால் பாதிக்

கப்பட்டதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.6.72 கோடி செலவில் ஆழ்துளைக் கிணறுகள் உட்பட பல்வேறு குடிநீர்ப் பணிகளுக்காக 30.4.92 வரை செலவு செய்ய அனுமதி வழங்கினார்கள்.

தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது என அரசுக்குத் தெரியவந்தது. எனவே, 30.4.92-க்குப் பிறகும் வறட்சி நிவாரணப்பணிகளைத் தொய்வு இல்லாமல் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் ரூ.6 கோடி, மே மற்றும் ஜூன் திங்களில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

வேளாண்மை வருமான வரி

விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையிலும் வரி வசூலிப்பதில் தொல்லைகளைத் தடுப்பதற்குமான ஒரு நடவடிக்கையாக நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, நிலக்கடலை, பருத்தி, எள் முதலான மலைத் தோட்டப் பயிரல்லாத பிற பயிரினங்கள் அனைத்தின்மீதும் விதிக்கப்படும் வேளாண்மை வருமான வரியினை அறவே விலக்குவதற்காக இந்த அரசு சட்டம் 40/91 மூலமாக ஏற்கெனவே சட்டத்திருத்தம் செய்துள்ளது.

மேலும் நிகர வருமான விலக்களிப்பு வரம்பை ரூ.10,000 லிருந்து ரூ.22,000 ஆக உயர்த்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மலைத் தோட்டப் பயிர்கள்மீது மட்டுமே வேளாண்மை வருமான வரியை முடிவு செய்து சட்டத்திருத்தம் செய்துள்ளது. நிலைப்படுத்தப்பட்ட (Standard Acres) முறையிலிருந்து சாதாரண ஏக்கர் முறைக்கு 8 சாதாரண ஏக்கர் வரையில் வரி விலக்களித்து ஒட்டு மொத்தமாக வரி செலுத்துவதற்குரிய நில வரம்பை 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர்களுக்கு உயர்த்தியுள்ளது. இந்தச் சட்டத் திருத்தங்கள் மூலமாகச் சுமார் 45,000 விவசாயிகள் பயனடைகிறார்கள்.

மக்கள், தமக்குச் சேவை செய்வதற்காகவே தன்னிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதால் - அத்தொண்டிற்காக மாத ஊதியம் பெறுவது முறையல்ல" என்று கூறி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாத ஊதியமாகப் பெயரலவிற்கு ஒரே ஒரு ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு வருகிறார்

நில அளவைப் பதிவேடுகளைக் கணிப்பொறியில் செயலாக்குதல்

தமிழ்நாடு அரசு, மைய அரசு உதவியுடன், 25 இலட்ச ரூபாய் செலவில் நில அளவைப் பதிவேடுகளைக் கணிப்பொறியில் செலவாக்கும் திட்டத்தை முதன்மைத் திட்டமாக; சேலம் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தது.

வருவாய் நிர்வாகத்துறையினை மேம்படுத்துதல் மற்றும் நிலஅளவைப்பதிவேடுகளைச் சீராக்குதல்

மைய அரசு 1991-92-ஆம் ஆண்டு, வருவாய் நிர்வாகத்தினை மேம்படுத்தவும், நிலஅளவைப் பதிவேடுகளைச் சீராக்குவதற்கும் ரூபாய் 148 இலட்சத்திற்கு மிகையாமல் அளிக்க நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது. மேலும் 1991-92-இல் மாநில அரசு ரூ.74 இலட்சத்தினை மேற்கண்ட திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தன் பங்காக மத்திய அரசு ரூ.74 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் தவறுகளைக் களைதல்

நிலஉடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாக அரசின் கவனத்திற்கு வந்ததன் அடிப்படையில், பத்திரிகையின் வாயிலாகத் தவறுகளை திருத்தி ஆணையிடவும், ஒவ்வொரு குறுவட்டத்திலும் 5 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் முகாமிட்டு தவறுகளைத் திருத்தி ஆணையிடவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நிலஅளவைப் பதிவேடுத் துறையில் உள்ள தொகுப்பூதிய பணியாளர்களை நிரந்தரமாக்குதல்

1982-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணிக்காகப் பல்வேறு இனங்களில் தொகுப்பூதியத்தில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அப்பணியாளர்களில் இவ்வரசு பதவியேற்ற நாளிலிருந்து கீழ்க்கண்ட துறைகளில் நிரந்தரப் பணியாளர்களாக (ஊதிய ஏற்ற முறையில்) நியமிக்கப்பட்டனர். 1. சார்பதிவாளர் அலுவலகம் 25, 2. ஊட்டச்சத்துத் துறை 82, 3. கருவூலத் துறை 6.

இவ்வாறு வருவாய்த்துறை பல நிலைகளில் பணியாற்றி மாவட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.●

எல்லோருக்கும் கல்வி

மாண்புமிகு கல்வி அமைச்சர்
செ. அரங்கநாயகம்

"'எல்லோருக்கும் கல்வி' என்பதே அரசின் இலட்சியம். அந்த அடிப்படையில் கல்வித் துறை அரும்பணிகள் ஆற்றி வருகின்றது."

'கண்ணுடையோர் என்போர் கற்றோர்' என்றார் வள்ளுவர். அதற்கிணங்க, அனைவரும் கல்விக் கண் பெற அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றது.

எல்லோருக்கும் கல்வி என்னும் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 6-11 வயது பிரிவில் 0.85 இலட்சமும், 11-14 வயது பிரிவில் 1.25 இலட்சம் மாணவ மாணவிகளை கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு கருதியுள்ள இலக்காகும்.

அதன்படி 1991-92-ஆம் கல்வியாண்டில் தொடக்கக் கல்வியில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவ மாணவி களின் விவரம் வருமாறு:-

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 6-11 வயது பிரிவின் கீழ் 4.25 இலட்சம் 11-14 வயது பிரிவின் கீழ் 6.25 இலட்சம் மாணவ மாணவிகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்பது இந்திய அரசு நிர்ணயிக்கப் பட்டுள்ள இலக்காகும்.

1991-92-ஆம் ஆண்டில் 1,000 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் (இளநிலை) மாதம் ரூ.800 தொகுப் ஊதியம் வீதம் அனுமதிக்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் இன்னு ஊரக வளர்ச்சித்துறையினராலேயே பராமரிக்கப்பட் வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் இக்கட்டட பராமரிப்பிற்காகவும் பழுது பார்ப்பதற்காகவும் ரூ. கோடி ஊரக வளர்ச்சித்துறை இயக்ககத்தற்கு நி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாணவர்கள் பள்ளிகளை விட்டு பெரும்பாலு இடையில் நிறுத்திவிடுவதைத் தவிர்க்க, புரட்சித் தலைவ எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், இலவசப் பாட புத்தகங்கள் வழங்கும் திட்டம், இலவசச் சீருடை வழங்கு திட்டம், இலவசக் காலணி வழங்கும் திட்டம், பள்ள செல்லும் மாணவர்களுக்கு இலவசப் பஸ் பாஸ் வழங்கு

திட்டம் 1-ஆம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம் முதலியன நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களினால் பயனடைவோர் 62.09 இலட்சம் ஆவார்கள். சத்துணவுத் திட்டம் சமூக நலத்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களின் முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை பெண் ஆசிரியைகளை மட்டுமே நியமனம் செய்தல் வேண்டும் என்று அரசு ஆணை வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் 27 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த 13.1.92-இல் ஆணை வழங்கப்பட்டுள்ளன.

நிதி உதவியற்ற 8 ஆரம்பப் பள்ளிகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 14 நிதி உதவியற்ற ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

மைய அரசு உதவியுடன் கூடிய திட்டங்கள்

கரும் பலகைத் திட்டம்

1987-88 முதல் மூன்று கட்டங்களாக இத்திட்டத்தின் கீழ் ஓராசிரியர் தொடக்கப் பள்ளிகளை மேலும் ஒரு ஆசிரியர் பணியிடம் வழங்கி ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்துதல், சரியான கட்டட வசதி இல்லாத தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டித் தருதல், கற்பிப்பு உபகரணங்கள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மைய அரசு ஒதுக்கீடு செய்த தொகை, இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூடுதலாசிரியர் பணியிடங்கள் வழங்கி ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தும் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களிலும், 1,829 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டன. பணியிடங்கள் அனைத்தும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு 1829 ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இதுவரை கூடுதல் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கிய வகையில் 1204.28 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. செலவிடப்பட்டுள்ள தொகையில் 31.3.1992 வரையில் 754.32 இலட்சம் ரூபாய்கள் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப் பட்டுள்ளது.

கற்பிப்பு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்களிலும் 29,075 பள்ளிகளுக்குக் கற்பிப்பு உபகரணங்களும் நூலகப் புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மைய அரசு இத்திட்டத்திற்காக வழங்கிய நிதி ஒதுக்கீடு 2306.66 இலட்சம் ரூபாய்களாகும்.

தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு அறை கட்டட வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ், மூன்று கட்டங்களுக்குச் சேர்த்துக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1,197 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன. 809 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 388 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

★ கிராமப்புறங்களில்- வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து- ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களுடன் கூடிய திட்டத்தை அமலாக்கல் ஆகியவற்றின் மூலம் அவர்களின் வறுமையை ஒழிக்க ஊரக வளர்ச்சித்துறை முனைந்து

நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்தும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக இரண்டு கட்டங்களில் நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்டகங்கள் வழங்கப் பட்டுள்ளன.

மூன்றாவது கட்டத்தில் 328 நடுநிலைப் பள்ளிகளுக்கு 1991-92-இல் அறிவியல் பெட்டகங்கள் வழங்குவதற்கு மைய அரசு ரூ.5.25 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு அனுமதித்துள்ளது.

தொழில் நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தினை உயர்த்துதல்

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டத்தில் 2666 தொடக்கப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன. இதற்காக மைய அரசு ரூபாய் முப்பது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது.

இரண்டாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் எழுபது இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 6222 தொடக்கப் பள்ளிகளுக்கு, வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப்பட்டன.

மூன்றாவது கட்டத்தில், மைய அரசு ரூபாய் நூறு இலட்சங்கள் ஒதுக்கீடு செய்தது. 10,000 பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப் பதிவுக் கருவிகள் வழங்கப் பட்டன.

பள்ளிக் கல்வி

6-18 வயது தொகுதியினரின் கூடுதல் மாணவர் சேர்க்கைக் காரணமாக கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு, கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களை 1991-92-ஆம் ஆண்டு அனுமதித்துள்ளது:

1. இடைநிலை ஆசிரியர்கள் (மாதம் ரூ.800 தொகுப் பூதியம்) .. 1200 பணியிடங்கள்

2. உயர் பள்ளித் தலைமையாசிரியர்கள் .. 20 பணியிடங்கள்

3. பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) தமிழாசிரியர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,400 தொகுப்பூதியம்) 145 பணியிடங்கள்

4. முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் (இளநிலை) (மாதம் ரூ.1,750 தொகுப்பூதியத்தில்) 120 பணியிடங்கள்

பள்ளிகளுக்குச் சுற்றுப்புறச் சூழல் கல்வி

பள்ளிகளில் சுற்றுப்புறச் சூழல் கல்வித் திட்டம் முதற்கட்டமாக தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.34 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமான ரூ.33.86 இலட்சம் செலவில் தருமபுரி மாவட்டத்திலுள்ள 1,746 தொடக்க மற்றும் 173 நடுநிலைப் பள்ளிகளில் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. பள்ளிகளில் செடிகள் வளர்த்தலும், பயன் தரும் மரங்கள் மற்றும் பிற மரங்களைப் பள்ளி வளாகத்தில் வளர்த்து சுற்றுப்புறச் சூழலைச் சிறப்படையச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.



★ மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மை அளிப்பதுமாகும்.

—தந்தை பெரியார்

அறிவியல் கல்வி - தொழிற்கல்வி

1986-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் அறிவியல் கல்வியின்தர மேம்பாடு சிறப்பாய் வலியுறுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,769 உயர்நிலைப் - மேல்நிலைப் பள்ளிகள் ரூ.599.98 இலட்சம் பெறுமானமுள்ள அறிவியல் உபகரணங்கள் மற்றும் நூல்நிலைய நூல்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ளன. மேலும் நடுவணரசின் திட்டத்தின் கீழ் கல்வியை தொழிற்கல்வியாக மாற்றும்பொருட்டு, 940 புதிய தொழிற்கல்விப் பிரிவுகள் துவங்க 340 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.568.55 இலட்சம் செலவில் உபகரணங்கள் மற்றும் கட்டடம் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளன. கிராமப்புற மாணவர்களிடையில் திறமை மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்து, அத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் படிக்கும் மாணவ மாணவியருக்கு எட்டாம் வகுப்பின் இறுதியில் மாவட்ட அளவில் ஒரு தேர்வு நடத்தி தேர்ச்சியில் முதலில் வரும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாணவ மாணவிக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.1,000 வீதம் ஊக்குவிப்புப் படிப்புதவித் தொகை அம்மாணவ மாணவி பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரை அளிக்கப்படும்.

பள்ளிகளில் புதிய கட்டடங்கள் கட்டுதல்

அரசுப் பள்ளிகளுக்குப் போதிய வகுப்பறைகள் இல்லாததால் 64 அரசு உயர்நிலை - மேல்நிலைப் பள்ளி

களில் மூன்று வகுப்பறைகள் "ஹட்கோ" நிதி உதவியுடன் ரூ.300 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1989-90 வரை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 39 பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட உபகரணங்களுக்காக ரூ.35 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பள்ளிகள் திறத்தல்

1991-92-இல் 21 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 20 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மிகப் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் 7 உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம்

கல்வியில் மேன்மை நிலையையும் சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களில் திறமையான நிர்வாகத்தையும் ஏற்படுத்தவும் மற்றும் முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்கும் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தும் நெறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதப்பட்டது. இதற்கென 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்குதல்

கடந்த பல ஆண்டுகளாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் பல (தொடக்க, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள்) அரசின் நிதி உதவி இன்றி இயங்கி வந்தன (பள்ளி முழுவதுக்குமோ அல்லது பள்ளியின் சில பிரிவுகளுக்கோ). இவற்றில் சிறுபான்மைப் பள்ளிகள் சிலவற்றுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து சென்னை உயர் நீதிமன்றம் ஆணைகள் பிறப்பித்திருந்தது. இப்பொருள் பல ஆண்டுகளாக அரசின் பரிசீலனையில் இருந்து வந்தது.

தற்போதைய அரசு ஜூன் 1991-இல் ஆட்சிக்கு வந்த உடன் இவ்விஷயத்தைத் தீவிர ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு மாநில அரசின் நிதி நிலைக்குட்பட்டு இப்பிரச்சினைக்கு நியாயமான பரிகாரம் வழங்க வேண்டும் என்று கருதியது. பொருத்தமான வரன்முறைகளின் அடிப்படையிலும் இப் பள்ளிகளின் கோரிக்கைகள் குறித்து நியாயமான பரிகாரத்தை அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக வல்லுநர் குழுக்களை அரசு நியமித்தது. அவ் வல்லுநர் குழுக்கள் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில் 1987-88-ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் தொடங்கப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் வல்லுநர் குழுக்கள் பரிந்துரைத்த ஆசிரியர் - மாணவர் விகிதத்தின் அடிப்படையில் அனுமதிக்கத்தக்க பணியிடங்களுக்கு அரசு நிதி உதவி வழங்கலாம் என அரசு முடிவு செய்தது. இதன்படி இத்தகைய 332 சிறுபான்மை மற்றும் சிறுபான்மையினரல்லாத அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஆரம்ப, உயர்நிலை மற்றும் மேநிலைப் பள்ளிகள் பயனடையவும் விதத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.2.60 கோடி செலவில் 746 பணியிடங்களுக்கு அரசு 1.6.91 முதல் அரசு மானியம் அனுமதித்து 1.4.92 அன்று அரசாணைகள் வெளியாகியுள்ளன.

முழு எழுத்தறிவுத் திட்டம்

நூறு சதவீத எழுத்தறிவு இயக்கம் மக்கள் சக்தியையும், தன்னிறைவுத் தொண்டு நிறுவனங்களின் உதவியையும் திரட்டி 15- 35 வயதுப் பிரிவு மக்கட்கு முழுமையான எழுத்தறிவு வழங்க 1991- 92-ஆம் ஆண்டு முதற் கட்டமாக கீழ்க்கண்ட ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 18.34 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆர்க்காடு-அம்பேத்கர், மதுரை.

இரண்டாவது கட்டமாக 1992-93-இல் மேலும் கீழ்க்கண்ட பத்து மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இராமநாதபுரம், கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார், திண்டுக்கல்-அண்ணா, சென்னை, தென் ஆர்க்காடு, சேலம், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தஞ்சாவூர். எஞ்சிய மாவட்டங்களில் 1993-94-இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டத்திற்கான நிதியை மத்திய மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் ஏற்கும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், புதிய கல்விக் கொள்கைக்கிணங்க தயாரிக்கப்பட்ட 1 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்குத் தரமான பாட நூல்களை நியாயமான விலையில் வெளியிடுகின்றது.

1991-92-ஆம் கல்வி ஆண்டில் 457 இலட்சம் பாடநூல் படிகள் மாநிலத்திலுள்ள 118 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில அரசின் இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.18.30 கோடி பெறுமானமுள்ள 3.36 கோடி பாட நூல் படிகளை இந்நிறுவனம் வழங்கியுள்ளது. இவற்றால் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் 64 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். பாட நூல் நிறுவனம் குறிப்பேடுகளையும் தயாரித்து மாணவர்களுக்குச் சீரான விலையில் வழங்கி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு ரூ.325 இலட்சம் பெறுமானமுள்ள குறிப்பேடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் புதிய பெண்கள் கல்லூரி ஒன்றை ரூ.32.39 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகளுடன் 1991-92-ஆம் ஆண்டில் நிறுவுவதற்கும், 1992-93-ஆம் கல்வி ஆண்டில் வேலை வாய்ப்பிற்குரிய படிப்புப் பிரிவுகளுடன் செயற்படுவதற்கும் அரசு ஆணையிட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட படிப்புப் பிரிவுகள் அக்கல்லூரியில் அளிக்கப்படும்.

1. இளஅறிவியல் (கணிதம்)
2. இளஅறிவியல் (கணிப்பொறி அறிவியல்)
3. இளங்கலை (Corporate Secretaryship)
4. இளங்கலை (Bio Chemistry)

இது ஓர் பெண்கள் கல்லூரி என்பதால் மாணவியர் விடுதி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும்.

பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சி அமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகளைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்காகவும் அதன் அலுவலல் முறைக்குமு நீண்டகாலத் திட்டங்களைத் தீட்டுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலும் வகையில் மேற்படி அறக்கட்டளையின் மேலாண்மை அரசிடம் மேவியிருக்கச் செய்யும் கால அளவை மேலும் மூன்று ஆண்டுகட்கு நீட்டிக்க வகை செய்யும் எண்ணம். 1992-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டம் 1992-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இயற்றப்பட்டது.

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு

கல்வியில் மேன்மை நிலையையும், சிறுபான்மைப் பிரிவினர்களின் கல்வி நிலையங்களை நிருவகிப்பதில் திறப்பாட்டையும் எய்துவதற்கு விழைகின்ற ஒழுங்கு முறைப்படுத்தும் வகைமுறைகளைச் செய்வதற்கும் முறையான கல்வித் தரங்களை உறுதி செய்வதற்காகவும் ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்வதற்காகவும் வேண்டி, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 28.4.92 அன்று நிறைவேற்றப்பட்டது. அது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின்னர் சட்டமாக வெளியிடப்படும்.

தொழில்நுட்பக் கல்வித் துறை

கடந்த ஓராண்டில் தொழில்நுட்பக் கல்வித் துறை கீழ்க்கண்ட சாதனைகளை எய்தியது:

பொறியியற் பட்டப்படிப்பிற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் அரசு மானியம் பெறும் 3 பொறியியற் கல்லூரிகளிலும் கல்லூரி ஒன்றுக்குக் கூடுதல் மாணவர் சேர்க்கை 24 என்ற விகிதத்தில் ஆணை வழங்கப்பட்டது. தற்காலிகமாக மூடி வைக்கப்பட்டிருந்த இரண்டு தனியார் பொறியியற் கல்லூரிகள் மீண்டும் துவக்கப்பட்டன.

★ காலம் மாறக்கூடியது;
மாறிக்கொண்டுதான் இருக்கும்;
காலத்திற்கேற்பக் கருத்தில்
மாற்றம் வேண்டும்; மாறாத
சமுதாயம் மறைந்து விடும்.

—அறிஞர் அண்ணா

* அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஒப்புதலுடன் கூடிய முழு நேர எம்.இ. (என்விரோன் மெண்ட்டல் என்ஜினியரிங்) பாடம் கோவை அரசினர் பொறியியற் கல்லூரியில் துவங்கியது.

* இத்துறையின்கீழ் இயங்கிவரும் கல்லூரிகளில் வளர்ந்துவரும் பொறியியற் துறைகளில் பட்டப்படிப்புகள் துவங்கப்பட்டன.

அ. கணிப்பான் பொறியியலில் 1991-92-ஆம் ஆண்டு முதல் பட்டப்படிப்பு ஒரு கல்லூரியில் துவங்கப் பட்டது.

ஆ. மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறையில் பட்டப்படிப்பு 1991-92-ஆம் ஆண்டு முதல் ஒரு கல்லூரியில் தொடங்கப்பட்டது.

* பின்தங்கிய மாவட்டமான தர்மபுரியில் உள்ள பர்கூரில் பொறியியற் கல்லூரி தொடங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

* மலைவாழ் மக்களின் நலனுக்காக நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் நீலகிரி தோட்ட உரிமையாளர் களின் கூட்டமைப்பினால் நடத்தப்பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகம் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல் படத் துவங்கியது.

* ஆதிதிராவிட மாணவர்களுக்கு 'ஆட்டோமொபைல் என்ஜினியரிங்'-இல் பயிற்சி பெறத்தக்க வகையில் 10 ஆதி திராவிட மாணவர்கள் சென்னையிலுள்ள இந்துஸ்தான் தொழில் நுட்பப் பயிலகத்தில் பயிற்சி பெற சிறப்பு ஆணைகள் வழங்கப்பட்டன.

* மகளிர் தொழில் நுட்பப் பயிலகங்கள் மகளிர் மட்டுமே முதல்வராகப் பணியாற்றும் நிலையினை உண் டாக்க ஏதுவாக அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மாணவர்களின் நலனைக் கருதி தொழில் நுட்பப் பயிலகங்களில் (Polytechnic) சேர்வதற்கான அதிகப் பட்ச வயது வரம்பினைத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு 22 ஆண்டிலிருந்து 25 ஆண் டாகவும் உயர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

* சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளிலும் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் / கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. நுட்பப் பயிலகங்களிலும் பயிலும் மாணவர்களுக்கு அரசு நிறுவனங்களால் இயக்கப்படும் பேருந்துகளில் 50 சதவிகித கட்டணச் சலுகை பொருந்தும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

கீழ்க்கண்ட பொறியியற் கல்லூரிகளில் பல ஆண்டு களாகத் தொடர்ந்து வந்த ஆசிரியர் பற்றாக்குறையினைப் போக்கும் முயற்சியாகக் கூடுதலாக ஆசிரியப் பணி யாளர்கள் பணியமர்த்த ஆணைகள் வழங்கப்பட்டன

அ. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை.
ஆ. அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி
இ. அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி
ஈ. தியாகராசர் பொறியியற் கல்லூரி, மதுரை

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் கூடு தலாக மாணவியருக்கென விடுதிகள் ரூ. 21 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

* சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ. 28 இலட்சம் செலவில் மின்னணுவியல் மற்றும் தொடர் பியல் துறைக்கெனத் தனியாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்டவும் கூடுதலாக வகுப்பறை வசதிகள் உண் டாக்கவும் ரூ.29 இலட்சம் செலவில் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி அரசினர் பொறியியற் கல்லூரியில் ரூ.14.50 இலட்சம் செலவில் கூடுதல் கணிப்பான் மைய வசதிகள் அமைக்கப்பட்டன.

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்குக் கூடுதலாக சுமார் 10,000 சதுர அடி அளவிலான கட்டடங்கள் கட்டும் பணி நிறைவேறியது.

சென்னை மையத் தொழில் நுட்பப் பயிலகத்தில் முதுநிலை பட்டயப் படிப்பிற்கெனக் கணிப்பான் மையம் அமைக்கப்பட்டது.

* கனடா நாட்டின் பல்வேறு நாடுகளின் வளர்ச்சிக் கான அமைப்பின் நிதியுதவியுடன் தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்கள் கனடா நாட்டில் கற்பித் தலுக்கான முறைகளில் பயிற்சி பெறத் திட்டம் செயல் பட்டு வருகிறது.

பல்கலைக்கழகக் கல்வி

பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியம் கடைசியாக 1986-87-இல் உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழக மானியக்குழு ஊதிய விகிதங்கள் நடை முறைப்படுத்தப்பட்டதாலும், ஆசிரியரல்லாத ஊழியர் களுக்கு ஐந்தாவது ஊதியக் குழுவின் ஊதிய விகிதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதாலும், சில அகவிலைப்படி தவணைகள் வழங்கப்பட்டதாலும், பல்கலைக்கழகங் களின் செலவினங்கள் கணிசமாக அதிகரித்து பல்கலைக் கழகங்களில் நிதி நெருக்கடியினை தவிர்ப்பதற்காக, இந்தப் புதிய அரசு, பல்கலைக்கழகங்களின் ஒட்டுமொத்த பராமரிப்பு மானியத்தினை 1.4.1991 முதல் உயர்த்தி

நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது. இந்த உயர் நிர்ணயத்தினால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.7 கோடி (ரூபாய் ஏழு கோடி) நிதிச்சுமை ஏற்படும்.

சட்டங்கள்

அரசு பதவியேற்றபின்பு, பல்கலைக்கழகங்களின் செயல்பாட்டினைச் செம்மைப்படுத்துவதற்காக, பல் கலைக்கழகச் சட்டங்கள் திருத்தப்பட்டன. புதியவர்கள் பல்கலைக்கழகங்களின் அமைப்புகளில் உறுப்பினர்களாகப் பதவி வகிக்கவகை செய்யும் வழியில், தகுந்த மாற்றங்கள் செய்து திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழகங் களின் துணைவேந்தர்கள் நியமன விஷயத்தில் வேந்தர், இரண்டாவது பட்டியலொன்றைப் பெற்று, அதிலிருந்து ஒருவரைத் துணை வேந்தராக நியமனம் செய்யக்கூடிய வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்கலைக்கழக உறுப்பினர்களின் பதவிக் [illegible] அவர்களது தேர்வு [illegible] மற்றும் பணிக்காலத்தோடு இணைத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் சேர்த்து ஒரு பொதுவான பல்கலைக் கழகச் சட்டம் கொண்டுவரும் பொருள் அரசின் தீவிரப் [illegible] உள்ளது.

[illegible] தேசியக் கல்விக் கொள்கை யில், மாநிலங்களில் [illegible] உயர்த்தவும் [illegible] ஒரு உயர்கல்வி மாநில மன்றம் நிறுவப்படுவது [illegible] பரிந்துரைகள் உள்ளன. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் நிறுவுவதற்கான சட்ட [illegible] திட்டச் சட்டமன்றப் பே[illegible]ற்றப்பட்டது. வரும் ஆண்டில் இந்த மன்றம் [illegible]

[illegible] பல்நோக்கு விளையாட்டரங்கம்

பெரியார் [illegible] ரோட்டில் வ.உ.சி. [illegible] பல்நோக்கு [illegible]ரங்கம் ஒன்று ரூ.62 இலட்சம் செலவில் [illegible]. இவ்விளையாட் டரங்கம் மாண்புமிகு தமிழக [illegible] அவர்களால் கால்கோளத்தில் 22.1.92 அன்று [illegible] வைக்கப்பட்டது. இவ்விளையாட்டரங்கத்தில் [illegible] கூடம் (Gallery) ஒன்றும், 3000 பார்வையாளர்[illegible]க்கான கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. [illegible] 100 விளையாட்டு வீரர்கள் தங்கி ஓய்வு பெறுவதற்கான ஓய்வுக் கூடமும், [illegible] அறைகள், சிறு [illegible] (Shuttle-cock Indoor Stadium) உள் விளையாட்டரங்கமும், விருந்தினர்கள் தங்குவதற்கான அறைகள் விளையாட்டுப் பொருட்கள் வைக்கும் அறை, மாற்றுடை அறை, குளியல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் அமைப் பெற்றுள்ளது.

இவ்விளையாட்டரங்கில் 400 மீட்டர் டிராக் வசதி, கால்பந்து களம், வளையப் பந்து களம், [illegible] பந்து களம், கூடைப்பந்துக் களம் மின்னொளி அமைப்புடன் (Flood-lit) கபாடி, கோ-கோ [illegible] அமையப்பெற்றுள்ளன. மேலும் [illegible] சிறகுப் பந்து, ஷட்டில் பேட்மிட்டன், டேபிள் டென்னிஸ், ஜிம்னாஷியம் மற்றும் பளு தூக்கும் விளையாட்டுக்கள் விளையாட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

10-வது ஜவகர்லால் நேரு தங்கக்கோப்பை அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டி, 1993.

10-வது ஜவகர்லால் நேரு [illegible] அழைப்பு பன்னாட்டுக் கால்பந்துப் போட்டியை 1993 ஜனவரியில் நடத்தும் சிறந்த வாய்ப்பு [illegible]ப்பட்டுள் ளது. சென்னை நேரு விளையாட்டு அரங்கத்தில் இந்த பெருமைக்குரிய போட்டியை [illegible] திட்டமிடப் பட்டுள்ளது. தற்போது உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தைப் பன்னாட்டுத் [illegible]ாக மேம் படுத்தும் நோக்கத்தோடு பு[illegible]மையாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. [illegible] பு[illegible] பிப்பதற்கு ஆகும் உத்தேசச் [illegible] முப்பது கோடி ரூபாய்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் [illegible] கோடி ரூபாய் நல்கும்படி இந்திய அரசைக் கேட்டுள்ளார். நேரு விளையாட்டு அரங்கத்தை 1993 நேரு [illegible] போட்டியை நடத்தும் அளவிற்குப் புதுப்பிக்கவும் மேம்படுத்தவும், இந்திய அரசு உடனடியாக இரண்டு கோடி ரூபாய் நல்கியுள்ளது. மாநில அரசு [illegible] ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. [illegible] வள்ளல்கள் மற்றும் விளையாட்டு [illegible] மக்கள் முதலானோரிடமிருந்து நன்கொடை [illegible] பெறப் படும். இந்த விளையாட்டு [illegible] வரும் அமைக்கப்படவிருப்[illegible] சென்னை [illegible] இந்தியா [illegible] வசதிகளைப் பெ[illegible] முடியும். நேரு விளையா[illegible] புதுமையாக்கவும் மாண்[illegible] முதல்வர் [illegible] தலைமையில் ஒரு குழு [illegible]ப்பட்டுள்ளது.

மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் மருத்துவ நலப் பணிகள்

"சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில், நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்' கிராமப் புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியிலுள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகிறது."

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
எஸ். முத்துசாமி

சுகாதாரம் மற்றும் மருத்துவ நலம் அளிப்பதில் நாட்டில் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழக அரசு முன்னோடியாகத் திகழ்கிறது.

தமிழகம் முழுவதும் விரிந்து பரந்து சீராகச் செயல்பட்டு வருகின்ற சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்கள், மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணிகளை ஆற்றிவருகின்றன. இந்நிறுவனங்களில், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஆகியோரை மாநில அரசு நியமித்துள்ளது. நவீன முறையில் நோய்களைக் கண்டறிந்து தக்க மருத்துவம் அளிப்பதற்கு வசதியாக இந்நிறுவனங்களில் நவீன கருவிகள் வாங்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் காணப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கான சுகாதார முகாம் என்ற புரட்சிகரமான கருத்து அனைவருடைய கவனத்தையும ஈர்த்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 18.1.1992- ஆம் நாளன்று "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டம்" என்ற நல்வாழ்வுத் திட்டத்தைத் தொடங்கினார்கள்.

இத்திட்டத்தின்படி, கிராமப்புறங்களில் உள்ள ஒவ்வொரு துணைச் சுகாதார மையத்திலும், நகராட்சிப் பகுதியில் உள்ள சுகாதார மையங்களிலும் ஒரு சுகாதார முகாம் நடத்தப்படுகின்றது. கிராமப்புறங்களில், 5,000 மக்கள் தொகை கொண்ட இடத்தில் ஒரு துணைச் சுகாதார மையம் உள்ளது. பொதுவாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு உதவியாகக் கிராமச் சுகாதாரச் செவிலியர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். இவர், பேறுகாலத்திற்கு முன்னர் பதிவு செய்தல், இரும்புச்சத்து மாத்திரைகளை (Folic acid tablets) வழங்குதல், இசிவுநோய்த் தடுப்பூசி போடுதல், மகப்பேறு இடத்தை நிர்ணயிப்பதில் கருவுற்ற தாய்மார்களுக்கு உதவுதல் போன்ற தாய் சேய் நலப்பணிகளைச் செய்து வருகிறார். மகப்பேறு காலத்தைத் தொடர்ந்து, குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல் போன்ற எல்லாப் பணிகளையும் அவர் செய்கிறார்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நோயாளிகள் மருத்துவர்களின் உதவியை நாடிவரும்போது, செவிலியர், மருத்துவரின் உதவிக்கு ஏற்பாடு செய்கிறார்கள். துணைச் சுகாதார நிலையங்கள்

5

அமைந்த பகுதியில் வாழும் மக்கள், அரசு மருத்துவரிடமிருந்து மருத்துவ அறிவுரை பெறுவதற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களக்குச் செல்ல வேண்டியுள்ளது. ஏழை, எளிய மக்களின் இத்துன்பங்களைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அறிமுகப்படுத்திய இத்திட்டத்தின் கீழ் மருத்துவர் குழு ஒன்று ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்தையும் பார்வையிட்டு, சுகாதார முகாமை ஏற்படுத்தி நோயாளிகளைப் பரிசீலனை செய்கிறது. இம் முகாம்கள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படுகின்றன. ஒவ்வொருவரையும் மருத்துவப் பரிசோதனை செய்வது மட்டுமன்றி, மக்கள் சுகாதார அறிவு பெறவும், இம்முகாம் வாய்ப்பு அளிக்கிறது. இரத்தம், சிறுநீர், சளி முதலியவற்றை உடனடியாகச் சோதனை செய்ய ஒரு ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநரும் இருக்கிறார். மக்களைக் கண் சம்பந்தமாக நோய்களிலிருந்து காப்பாற்றி கண் சிகிச்சைகளும் நடத்தப்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதியில், நோயின் தன்மையைக் கண்டறிய இம்முகாம்கள் நடத்தப்படுகின்றன. தோல் நோய்கள், மூச்சுக் கோளாறு நோய்கள் மட்டுமன்றி, இதயம் சம்பந்தப்பட்ட நோய்களும் அறியப்படுகின்றன. அரசின் இந்நன்முயற்சிக்கு நோயாளிகளிடத்தில் மருந்துகளைப் பகிர்ந்தளிப்பதற்காக மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உதவி செய்கின்றன.

சுகாதார ஆய்வு முகாம்களை மக்கள் விரும்பி வரவேற்கின்றனர். அவர்கள் பெருந்திரளாக வந்து, அரசு அளிக்கும் இந்த நல்வாழ்வுத் திட்டப் பணிகளை நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நோய் கண்டுள்ளவர்கள் என்று இம்முகாம்களின்போது கண்டறியப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல்

இவ்வாண்டில், அரசு, ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் குறைந்தது 32 படுக்கைகளுக்கு வகை செய்வது என்ற குறிக்கோளை எய்தியுள்ளது. [illegible] எனவே [illegible] [illegible] படுக்கைகளின் எண்ணிக்கை 1000-லிருந்து 1020 ஆக அரசு உயர்த்தியுள்ளது.

மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளித்தல்

போதுமான அளவுகளிலும், தரங்களிலும், வகைகளிலும் மருந்துகள் கிடைத்தாலன்றி மற்றப்படி, பல்வேறு அடிப்படை வசதிகளை நிறவினாலும், மருத்துவப் பணியாளர்களைப் பணியிலமர்த்தினாலும், மக்களுக்கு மருத்துவச் சேவை புரிதல் என்ற குறிக்கோளை எய்த இயலாது என்பதை அரசு நன்கறியும்.

மருத்துகளை வாங்குவதற்காக மருந்துகள் ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் இவ்வாண்டில் ஆய்வு செய்தார். மருந்துப் பொருள்களின் விலை அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைச் சரி செய்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் மருந்துப் பொருள்களுக்கான ஒதுக்கீட்டை உடனடியாக உயர்த்துவதற்கு அவர் ஆணை பிறப்பித்தார். 1991-92- ஆம் ஆண்டு தொடக்கத்தில் -சுமார் ரூ.43 கோடியாக இருந்த ஒதுக்கீடு அதே ஆண்டில் மேலும் ரூ.6 கோடி உயர்த்தப்பட்டு, 1992- 93-ஆம் ஆண்டில் ரூ.53 கோடியாக மேலும் அதிகரிக்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில் வட்ட/மாவட்ட/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் போதுமான அளவு மருந்துப் பொருள்கள் இல்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்க அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறு ஆணை பிறப்பித்தார். அதன்படி, [illegible] 15 நாட்களுக்குள் ரூ.6 கோடி [illegible] மருந்துகளைக் கொள்முதல் செய்து [illegible] முழுமையாகத் தீர்த்தது. [illegible] மருத்துவமனைகளிலும் போதுமான அளவு மருந்துகள் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளது.

மருந்து கொள்முதல் கொள்கையில் நீண்டகாலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியம் பற்றி அரசும் உணர்ந்துள்ளது. மருத்துவமனைகளில் தரமான மருந்துகளைப் பயன்படுத்த அவற்றை வாங்குவதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான அளவு மருந்துகள் கிடைப்பது குறித்து மாநிலத்தில் உள்ள அனைவரும் பாராட்டியுள்ளனர்.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு உரிய நேரத்தில் முறையாக மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டிய அவசியம் பற்றி அரசு உணர்ந்துள்ளது. மாநிலத்தில் பெருமளவு காலியாக இருந்த பதவிகள் இவ்வாண்டில் நிரப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 500 மருத்துவர்கள் நேரடியாகக் கலந்தாலோசித்த பின்னர் பணியிலமர்த்தப்பட்டனர். மாவட்டத் தலைமையிடத்திலிருந்து மருத்துவர்கள் குழு அடிக்கடி ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிட்டதன் மூலம் உரிய நேரத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் திறந்து, மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பது சீராக்கப்பட்டுள்ளது.

பணியாளர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை

மருத்துவ நலப்பாதுகாப்பில் தொடர்ந்து பெரும் மேம்பாட்டினைக் கொண்டுவரும் பொருட்டு, அனைத்துப் பணியாளர்ச் சங்கங்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மருத்துவப் பணியை மேம்படுத்துவதிலுள்ள நிருவாக இடையூறுகள், முட்டுக்கட்டைகள் ஆகியவற்றைக் கண்டறிவதற்காகப் பல்வேறு பணியாளர் சங்கங்களுடன் சுமார் 38 கூட்டங்கள் நடத்தப்பட்டன. நம்முடைய மருத்துவமனைகளில் உள்ள மருத்துவப் பணிகளில் அளவை அதிகரிக்க அனைத்துச் சங்கங்களும் முன் வந்துள்ளன. பணியாளர் சங்கங்களின் நியாயமான கோரிக்கைகளும், குறைகளும் உடனுக்குடன் கவனிக்கப்படும் என்று அ அச்சங்கங்களுக்கு உறுதியளித்துள்ளது. மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகளில் மருத்துவப் பணிகளை மேம்படுத்துவதைப் பற்றி அரசு, பணியாளர் சங்கங்களுடன் கலந்துபேசி, அதுகுறித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்கும் பொருட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை மருத்துவக் கல்லூரி/அரசு பொது மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் கூட்டங்கள் நடத்தியது.

மாவட்ட மருத்துவமனைகள்

மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதை விரைந்து மேம்படுத்தும் பொருட்டு, அரசு கோயம்புத்தூர், நீலகிரி மாவட்ட மருத்துவ அலுவலர்கள் அனைவருடனும் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இக்கூட்டங்களில் பல்வேறு வட்ட மருத்துவமனைகளில் வெவ்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டன: துப்புரவு, குடிநீர், பொதுமக்கள் பாதுகாப்பு, கட்டடங்கள் முதலியன போன்ற உள்ளூர் மருத்துவமனைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டன. இவ்விவாதங்களில் கிடைத்த அனுபவங்கள் அடிப்படையில், அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

எய்ட்ஸ் சிகிச்சைப் பிரிவு

தமிழ்நாடு மாநிலத்தில் எய்ட்ஸ் நோய் குறித்த அச்சம் நன்கு உணரப்பட்டு வருகின்றது. இந்த அச்சத்தைப் போக்குவதற்கு எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பிரிவு, அதிக அளவில் தொற்று நோய் உண்டாக்கும் கிருமிகள் பரவி 'எய்ட்ஸ்' நோய் உண்டாவதைத் தடுப்பது தொடர்பான பணிகளை வரையறுத்து ஒருங்கிணைத்துச் செயலாக்கும்.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

இதய நோய்கள், சிறுநீரகச் செயல் இழப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் மருத்துவ முறையில் அவற்றுக்குத் தீர்வுகாண பெருந்தொகை செலவு செய்ய வேண்டியுள்ளது. இந்நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென மருத்துவமனைகளில் சிறந்த அடிப்படை வசதிகளுக்கு வகை செய்யப்பட்டிருப்பதுடன், இந்நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தொகை வழங்கி, அரசு தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது. மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்கும், இருதய வால்வுகளை (Valve Replacement) மாற்றியமைப்பதோடு, இருதய அறுவைச் சிகிச்சையை மேற்கொள்வதற்கும், அரசு ரூ.20,000 வரையில் நிவாரண உதவித் தொகையை

உயர்த்தி வழங்குகிறது. ஏனைய வகைகளைச் சேர்ந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.15,000 வரையில் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவி தேவைப்படுவோர் அரசினை அணுகும்போது அவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்குரிய நடைமுறையை அரசு தளர்த்தி உள்ளது.

பணி அமைப்பு நிலை நிருவாகம்

தமிழ்நாடு மருத்துவப் பணியில் மருத்துவர்களாகப் பணியாற்றும் மருத்துவர்கள், தாங்கள் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்வு அடைவதற்குமுன்னர்,பல ஆண்டுகள் சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பணி அமைப்பு முறையில் தேக்க நிலை ஏற்பட்டு மருத்துவர்களிடையே ஆர்வமின்மை ஏற்படுத்துகின்றது. இம்மருத்துவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மருத்துவப் பணி அமைப்பு நிலை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 427 மருத்துவர்களின் பதவித்தரத்தை பொருத்தமான வகையில் நிலையுயர்த்தி ரூ.3,000-4,500 என்ற சம்பள விகிதத்தில் சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்களாகப் பதவி உயர்த்தவும், முதுநிலை சிவில் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் 188 பதவிகளை ரூ.3,700 - 5,000 சம்பள வீதத்தில் பதவி உயர்த்தவும், அரசு ஆணை பிறப்பித்தது; இத்துடன் 404 முதுநிலை சிவில் உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்களின் பதவித் தரத்தை ரூ.2,500 - 4,200 என்ற சம்பள வீதத்தில் நிலையுயர்த்தி வருகின்றது. தமிழ்நாடு மருத்துவப் பணிகளில் பதவி உயர்வு வாய்ப்புகளை மேம்படுத்துவதோடு கூட, செவிலியர்கள், மருந்தாளுநர், பரிசோதனைக் கூட தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் உட்பட துணை மருத்துவப் பணியாளர்களின் பிரச்சினைகளையும் அரசு கவனித்து வருகின்றது.

குறைகள் தீர்க்கும் திட்டம்

மருத்துவமனைகளிலும், ஏனைய மருத்துவ நிறுவனங்களிலும் பணிபுரியும் பல்வேறு பணியாளர்கள், தொழிலாளர்கள், ஆகியோரின் குறைகளைத் தீர்க்க, அரசு உரிய முறையை ஏற்படுத்தியுள்ளது. பணியாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, வகைப்படுத்த அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், இணை இயக்குநர்கள், மருத்துவக் கல்லூரித் தலைவர்கள் ஆகியோர் அனைவரும் ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கள்கிழமை அன்று குறை தீர்க்கும் நாளை நடத்துகின்றனர்.

மருத்துவமனைகள் குறித்த மாவட்டக் குழு

சுகாதாரம் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்ய, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, நிலைமையை அறிந்து, தேவையான மேம்பாடுகளைச் செய்வது குறித்து உள்ளூர் நிருவாகத்திற்கு ஒரு வாய்ப்பளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண்களின் நிலை உயரும்போது ஆண்களின் நிலையும் உயரும், இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்

—காந்தியடிகள்

குடும்பநலம்

தமிழ்நாடு 1991-92-ஆம் ஆண்டில் குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு அளிக்கப்படும் சேவையை மேற்கொண்டும். மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டு மக்கள், அவர்களின் நீண்ட காலப் பயனுக்காகக் குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த அரசு, மேலும் 2 நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1: ஒரேயொரு அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உயிரோடிருக்கிற குடும்பத்தின் உறுப்பினர் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும்போது அக்குடும்பத்தின் பெயரில் ரூ.2,000 வைப்பீடு செய்யப்படும்.

2. குடும்ப நலத்திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களின் பயனுக்காக, பரிசுச் சீட்டுத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும், குடும்பநலத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களிடையே ஒவ்வொரு திங்களிலும் பரிசுச் சீட்டு குலுக்கப்படும், பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும். பரிசு பெற்றவர்களுக்கு முதல் பரிசாக 7.5 கிராம் எடையுள்ள ஒரு தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக ஒவ்வொன்றும் 3.75 கிராம் எடையுள்ள மூன்று தங்கப்பதக்கங்களும் வழங்கப்படும்.

ஏனைய சிறப்புத் திட்டங்கள்

அரசு இந்த ஆண்டு முதற்கொண்டு இந்திய மக்கள் தொகைத் திட்டம் V-ஐ, 8 புதிய நகரங்களுக்குத் நீட்டிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும். இதேபோன்று, 'யுனிசெப்' நிறுவனம், உலக வங்கி ஆகியவற்றின் உதவியுடன், 1.4.92-ஆம் நாள் முதல் குழந்தை உயிர்க்காப்பு - தாய்மை நலத் திட்டம் செயல்படுத்தப்படும்.

போக்குவரத்துத் துறை

திட்டங்களும் ஈட்டிய சாதனைகளும்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
கே.ஏ. செங்கோட்டையன்

“ கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயனடைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம், இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் 1981. ”

இந்தியப் பெருநாட்டில் எந்த ஒரு மாநிலத்திற்குள் சென்று பார்த்தாலும், கேட்டாலும் ஒரு ஏகோபித்த கருத்தை நாம் அறிய முடியும். அது இந்தியாவிலேயே தமிழகம் தான் போக்குவரத்துத் துறையிலே மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பது தான். இது ஒன்றும் மிகைப்பாட்டின் வெளிப்பாடல்ல. உண்மையின் நிலைப்பாடு!

ஏறத்தாழ 4¾ கோடி தமிழக மக்கள் வாழும் இந்த மாநிலத்தில் செயல்படும் பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை 20,000-க்கும் சிறிது அதிகமாகும். அதில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே சொந்தமானவை 13,977 ஆகும். தனியாருக்குச் சொந்தமான பேருந்துகள் சுமார் 6,000-க்குச் சற்று அதிகமாகும். இந்த 14,000 பேருந்துகளும் தமிழக அரசின் 16 போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானவையாகும். ஏற்கெனவே 15 அரசு போக்குவரத்துக் கழகங்களாகப் பணியாற்றிய நிலைமையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி 1.4.1992 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் அவர்களின் பெயரில் 16- வது போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சுமார் 650 பேருந்துகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.



இவ்வாறு செயல்படும் 16 போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சத்து எண்பதாயிரமாகும்.

இவர்களெல்லாம் இந்த அரசுப் பேருந்துகளை நேரப்படி இயக்குவதன் காரணமாகத்தான் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்றாடம் பகல் இரவு என்று இல்லாமல் ஆயிரக்கணக்கான பேருந்துகள் செயல்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பகல் நேரத்தில் மட்டும் தான் பஸ் பயணம். இரவு நேரப் பயணங்கள் என்பவை பெரும்பாலும் இரயில்வே மூலமாகத் தான் இருந்தது. இப்போது இருபத்தி நான்கு மணி நேரமும் பல இடங்களிலிருந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பேருந்துகள் இடையறாது இயக்கப்படுகின்றன.

இதன் காரணமாக ஏறத்தாழ நாளொன்றுக்குச் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான பயணிகள் எந்தவிதச் சிரமமும் இன்றிப் பயணம் செய்ய முடிகிறது. சென்னை நகரில் மட்டும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் சுமார் 35 இலட்சம் மக்களைச் சுமந்து செல்கிறது.

இவ்வளவு மக்களைச் சுமந்து செல்லும் பேருந்துகளைச் சரியான முறையில் பராமரித்து வைத்திருந்தால்தான் சொகுசான பயணத்தையும் குறிப்பிட்ட காலப் பயணத்தையும் எந்த ஒரு போக்குவரத்துக் கழகமும் உறுதி செய்ய முடியும். அந்த வகையில் இரவு நேரப் பராமரிப்பு, இரவு நேரத்தில் சுத்தம் செய்தல், பயன்பாட்டின் காரணமாக ஏற்படுகிற பழுதுகளை நீக்கி பயணத்திற்கு உதவியாக இருக்கும் வகையில் வாகனங்களை வைத்திருப்பது போன்ற அனைத்துப்பணிகளையும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழக நிர்வாகமும் மேற்கொண்டுள்ளன.

கடந்த ஓராண்டுக் காலப் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் ஒரு நாள்கூட இந்தத் துறையில் வேலை நிறுத்தம் என்னும் நிலை ஏற்படவில்லை. கடைந்தெடுத்த கம்யூனிச வாதம் பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் ஆட்சியில்கூட அடிக்கொரு வேலை நிறுத்தம் நடைபெறும் இந்த நாட்களில் இங்கே தமிழகத்தில் தன்னேரிலாத ஆட்சி நடத்தும் தாய்க்குலத்தின் ஒளி விளக்கு, டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே தேசிய காரணம் தவிர்த்து வேறு எந்தக் காரணத்தாலும் இங்கே வேலை நிறுத்தம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் அன்னையின் பரிவும் ஆற்றல் மிக்க தலைமையின் அறிவு சார்ந்த ஆட்சி முறையுமாகும்!

அவருடைய ஆட்சியின் சாதனையைப் பட்டியல் போட்டுக் காட்டுவதென்பது

இரவு நேரத்தில் கண்சிமிட்டும் விண்மீன்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு ஒப்பாகும். எங்கெங்கு நோக்கினும் சக்தியடா என்பதைப் போல் இங்கே எங்கெங்கே நோக்கினும் சாதனையடா என்றுதான் சொல்லத் தோன்றும்.

எனவே இந்தச் சாதனைகளையெல்லாம் தொகுத்துக் காட்டிட முயன்றால் அதுவே ஒரு தொகை நூல்போலாகி விடும். இருப்பினும் முக்கியமான சிலவற்றையேனும் இங்கே கோடிட்டுக் காட்டுவது புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியின் சாதனைகளைப் பொது மக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

கடந்த ஆண்டில் மிகச் சிறந்த சாதனைகளாகக் கீழ்க்காணும் சாதனைகளை மட்டும் இங்கே பட்டியல் போட விரும்புகிறேன்.

கடந்த ஓராண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்துள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 377. தொடங்கப்பட்ட புதிய வழித்தடங்கள் 371. இதனால் பயனடைந்த கிராமங்கள் 345. பயனடைந்த மொத்த மக்கள் தொகை 6.59 இலட்சம். இந்த ஆண்டில் மட்டும் வாங்கப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 1981. இதில் கழிவு செய்யப்பட்ட பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டவை 1404. எஞ்சிய 577 பேருந்துகள் புதிய வழித்தடங்களிலும், ஏற்கெனவே உள்ள வழித்தடங்களிலும் இயங்கிவரும் பேருந்துகளோடு கூடுதலாகச் சேர்க்கப்பட்டு இயக்கப்பட்டவையாகும்.

மேலும், சாலை வசதி கொண்டு 1000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட எல்லாக் கிராமங்களுக்கும் இந்த ஆண்டின் முடிவுக்குள் போக்குவரத்து வசதி செய்ய தமிழகக் காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் அன்னையின் ஆணைப்படி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்..

தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி வேறு சில நிறுவனங்கள் உதவியுடன் சோழன் போக்குவரத்துக் கழகம் டீசலுக்கு மாற்று எரிபொருளாக (C.N.G.)

பயன்படுத்தி வெள்ளோட்ட முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் ஒரு பேருந்து இயக்கிவைக்கப்பட்டதும் ஒரு சீரிய சாதனையாகும்.

சென்னையில் உள்ள திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இயங்கும் துரிதப் பேருந்துகள் உள்ள நிலையம் மிகுந்த இட நெருக்கடியில் சிக்கியிருந்ததன் காரணமாக திருவிதாங்கூர் மன்னர் பூங்காவின் இடம் இணைக்கப்பட்டு பேருந்து நிலையம் விரிவாக்கப்பட்டது. சென்னையிலிருந்து புறப்படும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் பாரிமுனையிலிருந்து இயக்கப்படுவதோடு,



வெளியூர்களிலிருந்து சென்னை நோக்கி வரும் துரிதப் பேருந்துகள் அனைத்தும் எம்.யு.சி. மைதானத்தில் நிறுத்தப்படும் நிலையும் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தியாவிலேயே முதன் முதலாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தான் துரிதப் பேருந்துகளில் ஒரு இடத்திற்குச் செல்லவும் சென்று திரும்பவுமான முன்பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

மதுரை மற்றும் திருச்சியிலிருந்து சென்னைக்குச் சென்று திரும்பவும் மேலும் சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்று திரும்பும் பயணிகளுக்கு முதன்முறையாக இவ்வசதி தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் பிற இடங்களுக்கும் விரைவில் அமல்படுத்த உள்ளது. பயணம் செய்யும் நாளுக்கு 9 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு செய்யும் வசதி இங்கே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது.

மேலும் சென்னை நகரைப் பொறுத்தவரை பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டில் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தியது பயணிகளிடையே நல்ல வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

பயணியர் விரும்பியவாறு பயணம் செய்ய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்களைப் பயணிகளின் நலனை முன்னிட்டு வழங்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயண அட்டையை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். இது மாற்றத் தக்க ஒன்றாகும்.

இந்தப் பயண அட்டையை வாங்குவதன் மூலம் ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் - கணக்கின்றி - பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் பயணம் செய்யலாம்.

இதற்குரிய மாதாந்திரச் சலுகைப் பயணச் சீட்டுக்கான கட்டணம் ரூ.200. வாரச் சலுகைப் பயணச் சீட்டுக் கட்டணம் ரூ.50 ஆகும். விரும்பியவாறு பயணம் செய்யும் தினப் பயணச் சீட்டுக்கான பயணக் கட்டணம் ரூ.10.

சில போக்குவரத்துக் கழகங்கள் மூலம் சந்தைப் பேருந்துகள் என்னும் புதியவகைப் பேருந்துகள் இயக்கப்பட்டு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டு சென்றுவர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு, குடந்தை நகரில் நடைபெற்ற மகாமகப் பெருவிழா நம் அனைவரின கண்ணையும் கருத்தையும் கவர்ந்த விழாவாகும். 20 இலட்சம் மக்கள் கூடி மகாமகக் குளத்தில் நீராடித் தூய்மை பெற்றார்கள். இப்பெருவிழாவையொட்டி இரயில் மூலம் பயணம் செய்த சுமார் 20 இலட்சம் பக்தர்களைத் தவிர, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான சுமார் 2,500 பேருந்துகள் மூலமாக 39,380 நடைகள் இயக்கப்பட்டு சுமார் 32.34 இலட்சம் பயணிகளின் பயணம் இனிதாக்கப்பட்டது. 16.2.1992 முதல் 20.2.1992 வரை இயக்கப்பட்ட இந்த 39,380 நடைகளில் எங்கேயும் ஒரு சிறு விபத்துக்கூட இல்லாமல் பேருந்துகளை இயக்கிய பெருமை நமது போக்குவரத்துக் கழக நிர்வாகங்களுக்கும் ஊழியர் பெருமக்களுக்குமே உரியதாகும்! இவையெல்லாம் அன்னையின் ஆணைப்படி துல்லியமாகக் கணக்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.

இந்த ஆண்டிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மகளிருக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கையில் சில மாற்றம் செய்யப்பட்டு அவர்களின் பயணம் தொல்லையற்றதாகவும் பயமற்றதாகவும் இருக்கும் வகையில் உறுதி செய்யப்பட்டது.

அதேபோல, இரயில்வேக்களில் உள்ளதைப் போல் பேருந்துகள் புறப்படும்வரை 'வி.ஐ.பி.-க்கள் இருக்கைக்கு வி.ஐ.பி.-க்கள் வரவில்லை என்றால் ஆர்.ஏ.சி. என்னும் முறை மூலம் இட ஒதுக்கீடு செய்யப்படுவதும் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதேசமயம் துரிதப் பேருந்துகள் 3 ஆண்டுக்குள்ளும், சாதாரணப் பேருந்துகள் 6 ஆண்டுக்குள்ளும் புதிய பேருந்துகள் மூலம் புதிதாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ளும் பேருந்துகளில் சோதனை அடிப்படையில் முதல் கட்டமாக 10 'ஏர் லெஸ்' வசதியைப் பொருத்துவதற்கான நடவடிக்கை இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக நல நடவடிக்கைகள்

இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத் திருக்கோயில்களின் திருப்பணிக்காக என்று ஒரு தனியான நிதியைத் திரட்ட மேற்கொண்ட நடவடிக்கைக்கு உதவியாக அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பல இலட்சக் கணக்கான ரூபாயை நிதியாக வழங்கியுள்ளார்கள்.

8-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு இலவசப் பயணமும், 8-ஆம் வகுப்பு வகுப்புக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 50 சதவீத சலுகைக் கட்டண சீட்டுக்கள் கழகப் பேருந்துகளில் வழங்கப்பட்டது. ஆயினும் இவையனைத்தும் அரசு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் போன்ற கல்வி நிலையங்களில் படிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த நிலை இந்த ஆண்டு அன்னையின் ஆணையால் மாற்றப்பட்டு, தனியார் கல்லூரிகள், சுயநிதி பெறும் கல்வி நிலையங்களைச் சார்ந்த மாணவ மாணவியர்க்கும் 50 சதவீதம் சலுகைக் கட்டணப் பயண வசதி நீட்டிக்கப்பட்டது இந்த ஆண்டின் மற்றொரு முக்கிய சாதனையாகும்.

சாலை விபத்துக்களைத் தவிர்ப்பதன் அவசியத்தை உணர்த்தவும் விபத்து இல்லாத பயணத்தை உறுதி செய்யவும் விபத்து இன்றிப் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊக்கத் தொகையை மேலும் ரூ.50 கூடுதலாக உயர்த்தி வழங்கப்பட ஆணையிடப்பட்டது.

மேலும் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு மேல் விபத்தின்றி பணி செய்த ஓட்டுநர்களுக்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட தொகையைக் காட்டிலும் கூடுதலாக ரூ.25 இந்த ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த முகாம் நடத்தப்பட்டு பொது மக்கள் மாணவ மாணவியர், மற்றும் ஊழியர்களிடையே சாலை விபத்துக்களைக் குறைப்பதற்கான மன நிலை உருவாக்கப்பட்டது.

இந்த வகையில் சாலைப்பாதுகாப்பை விளக்கும் வழிமுறைகளை வீடியோ படங்கள் மூலமாக [illegible] போக்குவரத்துக் [illegible] தொலைக்காட்சி [illegible] காட்சிகள் மூலமும் பொதுமக்களைச் சென்றடையும் நிலை உருவாக்கப்பட்டது.

தொழிலாளர் [illegible]

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற [illegible]

★ - நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான், இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வரவேற்றபோது டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 'நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறை கூற முடியாது' என்று கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு!

ஊழியர்களோடு ஒரு இணக்கமான நல்லுறவை வளர்த்துக் கொள்ள அவற்றின் பிரதிநிதிகளோடு வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் கருத்துக்களைக் கேட்டு இயன்ற வரை நிறைவேற்றி வந்துள்ளது.

இதன் காரணமாக, பணிக்காலத்தில் இறந்துபோகும் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குடும்பங்களும், அரசு ஊழியர்களின் குடும்பங்களைப் போன்றே 1.8.1991 முதல் ரூ.60.000 நிதியுதவி பெறும் நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணையால் உருவாக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் மொத்தத் தொகை ரூ.20,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்படும் என்று வெறும் வாக்குறுதி மட்டுமே கொடுக்கப்பட்டிருந்த நிலையை மாற்றி 1.9.89 முதல் 31.7.91 வரை இறந்த ஊழியர் குடும்பங்களுக்கும் உண்மையாகவே அவர்கள் அந்தப் பயணப் பயனை அடையும் நிலையும் இந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. ரூபாய் ஒரு கோடி முதலீட்டில் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் வீட்டுவசதித் திட்டங்களுக்கான சுழல்நிதி உருவாக்கப்பட்டது.

பெருகி வரும் தொழில் நுட்பப்பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்காக என்றே ஏற்கெனவே பெருந்துறையிலும் ஈரோட்டிலும் மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பொறியியல் கல்லூரியில் மொத்தம் 180 மாணவர்களே ஆண்டுதோறும் அனுமதிக்கப்பட்டனர். அதில் 50 சதவீதம் போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 240 ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டதன் காரணமாக, இனிமேலும் 30 போக்குவரத்துக் கழக ஊழியர்களின் குழந்தைகளுக்கு அதிகமாக இடம் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

அதுமட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களின் நிதியையும் ஊழியர்களின் பங்குத் தொகையையும் பயன்படுத்தி இந்த ஆண்டு முதல் திருநெல்வேலி, பர்கூர், குரோம்பேட்டை, ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 3 பாலிடெக்னிக்குகள் அமைப்பதற்கான ஆணையையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பட்டயதாரர்களாக, மாறும் நிலை இந்த ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

அடுத்து தாமாக முன்வந்து ஓய்வு பெற முன்வருவோருக்கு எஞ்சிய பணிக்காலத்திற்கு ஆண்டுக்கு ரூ.7,500 மொத்த உதவிப் பணம் கொடுக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி இனி அவர்கள் ஆண்டுக்கு ரூ.8,500 ஆகப் பெறும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி விமான நிலையப் பணிகள் முடிவடைந்து இவ்விமான நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு 30.4.92 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் திறமையுடன் செயல்பட அவ்வப்போது வழங்கப்பட்ட ஆலோசனை காரணமாக பல கோடி ரூபாய் செலவு மிச்சப்படுத்தப்பட்டதோடு அக்கழகம் ஈட்டிய லாபத் தொகையும் அதிகரித்தது.

மோட்டார் வாகன வரி மற்றும் போக்குவரத்துத் துறையில் ஈட்டிய சிலபல சாதனைகளையும் கூட இங்கே குறிப்பிடுவதே சாலப்பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 50 சிசி வரையுள்ள அனைத்து 2 சக்கர வாகனங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது.

சென்னை நகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் உரிமங்கள் வழங்குதல், தகுதிச் சான்றிதழ் வழங்குதல் ஓட்டுநர், நடத்துநர் உரிமம் அளித்தல் ஆகிய பணிகளை விரைந்து முடிப்பதற்காக ரூ.13.50 இலட்சம் செலவில் கணிப்பொறிகள் அமைக்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. 10,000 பதிவுகளுக்கு மேற்படும் ஒவ்வொரு வட்டாரப் போக்குவரத்து நிலையத்திலும் ஒரு புதிய யூனிட் அலுவலகம் திறப்பதற்கான ஆணையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டிலே பிறப்பித்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை நகரில் பெருகிவரும் தேவையைக் கருத்தில் கொண்டு நான்கு போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டன.

திருப்பூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த பிரிவுப் போக்குவரத்து அலுவலகங்கள் தனியதிகாரம் பெற்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

நீலகிரி, தர்மபுரி, புதுக்கோட்டை, நாமக்கல் ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குக் கடந்த ஆண்டிலே ஜீப்புகள் வழங்கப்பட்டன.

வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்குப் போக்குவரத்துத் துறை அலுவலகங்களில் 145-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டு பணியில் வேகமும் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியும் உருவாக்கப்பட்டன.

மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஒரு பகுதியாக மோட்டார் வாகனங்கள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுக்கட்டுப்பாட்டுச் சோதனைக்கும் உட்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

—இவ்வாறாகப் போக்குவரத்துத் துறைப் பணிகள் தமிழகத்தில் மேம்பட்டு விளங்குகின்றன.

உள்ளாட்சித் துறையின் உயரிய பணிகள்...

திரு. அழகு திருநாவுக்கரசு
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

"ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் தமிழகத்தில் உள்ள கிராமப் புறங்களை மேம்படுத்துவதே என்பதை இந்த ஓராண்டுக் காலச் சாதனைகளே உறுதிப்படுத்தும்' என்பது இங்கே விளக்கப்படுகிறது."

"நாட்டின் பொருளாதாரம் கிராமங்களில்தான் வாழ்கின்றது.

கிராமங்கள் வளர்ச்சி பெற்றால்தான் நாடு வளர்ச்சியடைய இயலும்"

- என்ற அண்ணல் காந்தியடிகளின் அரிய கருத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் அறிஞர் அண்ணா அவர்களும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கிராமங்களின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தியது போன்றே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் பெரிதும் ஆர்வம் கொண்டு அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார். ஆட்சி அமைக்க வாக்களித்த கிராமப்புற மக்களின் நலனும்; நகர்ப்புற மக்களின் வளனும் காக்கப்படுவதற்கு எல்லா வகையிலும் கடந்த ஓராண்டில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

பிறப்பிலிருந்து இறப்புவரை மக்களின் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்து இருப்பது நகராட்சி நிர்வாகமும், ஊராட்சி நிர்வாகமும் ஆகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது சட்டமன்றக் கூட்ட உரையில் 4.9.91 அன்று சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி முதலீட்டில் கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று தெளிவுபடுத்தினார்கள். 20.11.91-ஆம் நாளிட்ட 385-ஆம் எண் அரசு ஆணை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சாலை மேம்பாடு, தொடக்கப் பள்ளிக் கட்டடம் கட்டுதல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவுக் கூடங்கள் கட்டுதல், கிராமக் குடிநீர்த் திட்டம், தெருவிளக்கு அமைத்தல், சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்தல், தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் முதலிய கிராமத்தின் இன்றியமையாத தேவைகள் அனைத்தும் 1992 செப்டம்பர் முடிய ஓராண்டில் நிறைவேற்றப்படும்.

1991-92-ஆம் ஆண்டுக்கு ரூ.194.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1992-93- ஆம் ஆண்டிற்கு இதே போன்ற தொகை ஒதுக்கப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியக் குறிக்கோள் வறுமைக் கோட்டிற்கு கீழ் கிராமப்புறத்தில் வாழும் குடும்பங்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு ஒருங்கிணைந்த மானியம், வங்கிக் கடன்களும் கூடிய திட்டம் மூலம் வறுமையை ஒழிப்பதாகும்.

கிராமங்களில் பயன் உள்ள கூடுதல் வேலைவாய்ப்பினை வேலையற்ற விவசாயக் கூலிகளுக்கும் குறைந்த வேலை உள்ள நபர்களுக்கும் ஆண், பெண் இருபாலர்க்கும் சமுதாயப் பணிகள் செய்ய வாய்ப்பு அளித்து வேலைவாய்ப்பினை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களில் நிலையான சொத்துக்களை உருவாக்கி அதன் மூலம் கிராமத்தில் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி கிராமப்புற பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் காண்பதும், கிராம ஏழைகளின் வருமானங்களைப் பெருக்குவதும் ஊரக வளர்ச்சித்துறையின் தலையாய பணியாகும்.

தனிநபர், சமுதாய சாண எரிவாயுக்கலன்கள் அமைத்தும் புகை இல்லாத அடுப்புகள் நிறுவியும், மாற்று எரிசக்தி மேம்பாடு செய்து தேசீயக் கண்ணோட்டத்தில் செயல்படுவதும் ஊரக வளர்ச்சித் துறையின் சீரிய செயல்பாடாகும்.

தேசீயக் கண்ணோட்டத்தில் காடுகள் பெருக்கும் திட்டத்தில் ஓர் அங்கமாகப் பல எக்டேரில் சமுதாயக் காடுகள் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்திச் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தலை மிக முக்கியப் பணியாக ஏற்றுச் செயல்படுத்தி வருகிறது ஊரக வளர்ச்சித் துறை.

ஊரக வளர்ச்சித்துறையின் மிக முக்கியக் குறிக்கோள், கிராமப்புறங்களிலிருந்து மக்கள் நகரங்களை

நாடி வேலை தேடிவரும் நிலையை மாற்றி, கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது ஆகும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கிராம மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் சீரிய திட்டம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வீதம் மொத்தம் ரூ.386 கோடி முதலீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ரூ.386 கோடியை இரண்டு நிதியாண்டுகளில் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.194.64 கோடி ஏற்கெனவே ஒதுக்கப்பட்டு 1992-93-ஆம் ஆண்டிற்கு எஞ்சிய தொகை ஒதுக்கப்படவிருக்கிறது.

21.8.1991-இல் தர்மபுரி மாவட்டம் பர்கூர் பேரூராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரட்சிமிகு குடியிருப்புத் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்துப் புதிய வரலாறு படைத்திட்டார்கள். இந்த மாதிரிக் கிராமியக் குடியிருப்புத் திட்டத்தில் மனைகள், சமுதாயக் கூடம், விளையாட்டு மைதானம், தொடக்கப் பள்ளி, அங்காடி, பூங்கா, நூலகம், தாய்சேய் நல நிலையம், வழிபாட்டு இடங்கள், சாலைகள், மேல்நிலை நீர்த் தொட்டி, தெருவிளக்குகள் ஆகிய அனைத்து வசதிகளும் அமைக்கப்படும். மொத்த மதிப்பீடு ரூ.3 கோடியில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்குச் சாதி, மத இன வேறுபாடு இன்றி வீட்டு வசதி அளிப்பது இப்புதிய அரசின் நோக்கமாகும். ஒரே குடியிருப்பு வளாகத்திற்குள் அனைத்து வசதிகளும் உள்ளடங்கிய மாதிரிக் குடியிருப்பு வளாகமாக அமையும்.

'புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்' என்று அழைக்கப்படும் இந்த ஏற்றமிகு கிராமக் குடியிருப்புத் திட்டம், வரும் ஆண்டுகளில் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் அமைக்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சமதர்மச் சமுதாயம் மலர்ந்திடப் புரட்சிமிகு திட்டமாக அமைந்த இது மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்.

பெண்மை, தாய்மை, இறைமை என்ற மூன்று நிலைகளிலும் பெண்களை மதித்துப் போற்றினால்தான் இந்த உலகம் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்க முடியும்!

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டமும் கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களில் வருமானத்தைப் பெருக்கிட வழிகாணும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமும் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டமும், கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டமும் தேசிய சாண எரிவாயுத் திட்டமும் தேசிய மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் திட்டமும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமும் தொடர்ந்து முனைப்புடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் நிறைவேற்றப்பட்டுவரும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், பேரூராட்சிகளிலும் விரிவுபடுத்தப்படவிருக்கிறது. அதற்காக அரசு தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 647 பேரூராட்சிகளில் வாழும் ஒரு கோடி மக்கள் பயன்பெறுவர். 354 பேரூராட்சிகளில் இதுவரை குடிநீர்த் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 141 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஊராட்சிகளுக்குத் தரம் மிக்க குழல் விளக்குகள், சோக்குகள், ஸ்டார்டர்கள் ஆகியவற்றை நிர்ணயித்த விலையில் வாங்கிட வேண்டு

மென்பதற்காக உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. உய மட்டக் குழுவின் பரிந்துரை ஆழ்ந்து ஆய்ந்த பின்னர், ஊராட சிகள், ஊராட்சி ஒன்றியங்களுக்கு தரம் வாய்ந்த உற்பத்தியாளர்களா எச்.எம்.டி. நிறுவத்தினர், மைசூ லாம்ப்ஸ் ஆகிய நிறுவனத்தி மிருந்து நிர்ணயிக்கப்பட்ட வில யில் குழல் விளக்குகள், காப்ப சோக்குகள், ஸ்டாட்டர்கள் வாங் அரசு ஆணையிட்டது. இதனா தெருவிளக்குகள் அடிக்கடி கெட்டு போகாமல் கிராமங்களின் இருளை போக்கி ஒளியேற்றியுள்ளது இந் அரசு. தெரு விளக்குகளைக் கூட பராமரிக்க இயலாத நிலையிலுள் ஊராட்சிகளுக்குத் தெரு விளக்கு சாதனங்கள் வாங்கவும் மின் கட்டண செலுத்த வகை செய்யும் முன யிலும் ரூ. 3 கோடியை அரசு மானி மாக வழங்கியுள்ளது. இதன் மூல எல்லாத் தெரு விளக்குகளும் ஒளி வதற்கு அரசு உறுதி செய்துள்ளது

1988-89-ஆம் ஆண்டு முத செயல்படும் தீவிர சுகாதாரத் தி டத்தை இந்த அரசு மேலும் முனை புடன் செயல்படுத்தி வருகிறது பழுதுபடும் கைப்பம்புகளால் கிரா மக்கள் குடிநீருக்குத் துயரடையாம இருக்க, 1991-92-ஆம் ஆண்டுக் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங் ஒதுக்கியிருந்த மானியத் தொ ரூ.300 இலட்சத்தை ரூ.395 இல சமாக அரசு உயர்த்தியுள்ளது பின்னர் 1992, பிப்ரவரியில் கை பம்பு, விசைப்பம்பு மானியத்தை உயர்த்தியும் அதனைப் பிரித் வழங்க வரன்முறைகளை வகுத் அரசு ஆணையிட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம்

நகராட்சிகள், மாநகராட்சிக நிர்வாகம் நகர மக்களுடைய அடி படைத் தேவைகளான பொது சுகாதாரம், கழிவுப் பொருட்களை அகற்றுதல், சாலை வசதிகள் கல்வி, நோய்த் தடுப்பு, குடி வசதிகள் ஆகியவற்றை அன்றாட அளித்து வருகிறது. இந்த அமைப் களின் நிதிநிலை பல ஆண்டுகளுக் முன்னர் எவ்வாறு இருந்ததோ அ நிலைமையில் இன்றும் இருந்து வ கிறது. நகராட்சி, மாநகராட் அமைப்புகளின் நிதி நிலைக்கு செய்ய வேண்டிய பணிகளுக்கு

உள்ள பற்றாக்குறை மிகப் பெரிய அளவில் உள்ளது. இதனால்தான் 1.4.1992 முதல் தொழில் வரியைப் புதிய விகிதங்களில் வசூலிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் நகராட்சிகளின் நிதி ஆதாரங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கான வழிவகைகளை ஆராயவும் நகராட்சி நிர்வாகச் சீர்திருத்தத்திற்கும் 'வல்லுநர் குழு' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நகராட்சிப் பணிகளைக் கண்காணிக்க மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. மக்கள் குறைகளை உடனுக்குடன் களைவதற்கு வசதியாக 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' நடத்தப்படுகின்றது. வாரத்திற்கு ஒரு நாள் உயர் அதிகாரிகளே நேரில் மக்கள் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்க ஏதுவாகும்.

ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் குறைந்த செலவில் கழிப்பிடங்கள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992-93-ஆம் ஆண்டில் 40 நகராட்சிகளில் இத் திட்டம் விரிவுபடுத்தப்படும். 1994-ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளிலுள்ள உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் அகற்றப்படும்.

நகராட்சிகளின் முக்கியப் பகுதிகளில் சிறப்புத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கழிவுப் பொருட்களை முழுமையாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உசிலம்பட்டி, கூத்தாநல்லூர், குளித்தலை, ஆவடி, வந்தவாசி ஆகிய ஐந்து பேரூராட்சிகளும் நகராட்சிகளாக மாற்றி அமைக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி, சேலம் நகராட்சிகளும் மாநகராட்சிகளாகவும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டு திருநெல்வேலி மாநகராட்சியாகவும் உயர்த்தப்படவுள்ளன.

மாநகராட்சிகள்

சென்னை மாநகரை அழகுபடுத்துவதற்கு 'எழில்மிகு சென்னை 2000' என்ற திட்டம் 1,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படுகிறது. சாலைகள், பாலங்கள், அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடம், போக்குவரத்து மேம்பாடு, மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், கால்நடைகளை அகற்றுதல் முதலிய பணிகள் ரூ.240 கோடி செலவில் முதல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சிப் பணிகளை மேம்படுத்த இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணியைச் சேர்ந்த 5 அதிகாரிகளைத் துணை ஆணையாளர்களாக அரசு நியமித்துள்ளது. சொத்து வரி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ரூ.10 கோடி கூடுதலாகப் பெறப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான நேரு விளையாட்டு அரங்கினை இடித்துவிட்டு அனைத்து நாடுகள் அளவிலான பல்வேறு விளையாட்டுகளை நடத்திட அனைத்து நாட்டு விளையாட்டு அரங்கிற்கு நிகரான விளையாட்டு அரங்கினை ரூ.30 கோடி செலவில் அரசு அமைத்திடவுள்ளது. 1993, ஜனவரி மாதத்திற்குள் இத் திட்டம் முடிவுறும்.

சென்னை நகரில் நடைபாதை வாசிகள் இரவில் தங்குவதற்கு ரூ.40 இலட்சம் செலவில் விடுதிகள் கட்டப்படுகின்றன. கோயம்புத்தூரிலும் ரூ.20.50 இலட்சம் செலவில்

புதுடில்லியில் உள்ள புகழ்பெற்ற சிரோமணி நிறுவனம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு மகிளா சிரோமணி (சிறந்த பெண்மணி) விருது வழங்கிச் சிறப்பித்தது. 10.6.92 அன்று டில்லியில் அளிக்கப்பட்ட அவ்விருதினை, அங்குள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி டாக்டர் எம். தம்பிதுரை அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் பெற்று வந்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் வழங்கினார்.



இதற்கெனக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

மதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே கல் பாலத்திற்கு மேலாக ரூ.700 இலட்சம் செலவில் உலக வங்கியின் உதவியுடன் ஒரு மேம் பாலம் கட்டப்படுகிறது. மதுரையில் தற்போது மத்தியப் பேருந்து நிலையம் உள்ள இடத்தில் பல அடுக்கு மாடிகளைக் கொண்ட நவீன பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளில் (சென்னைக் குடிநீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட) சுமார் 3 இலட்சம் அலுவலர்களும் பணியாளர்களும் உள்ளனர். அவர்கள் தகுதிக்கேற்ப ஒரு சிறு தொகையை நன்கொடையாகப் பெற்று, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயரில் ஒரு மருத்துவக் கல்லூரியும் பொறியியல் கல்லூரியும் துவக்கப்படவுள்ளன. இக் கல்லூரிகளில் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவு இடங்கள் ஒதுக்கப்படும். இதில் துப்புரவுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித இடங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் தனித் தனியாக இயங்கி வரும் பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்து ஒரே அமைப்பின்கீழ் செயல்படுவதற்கு "உள்ளாட்சி நிர்வாகப் பயிற்சி நிறுவனங்களின் இயக்ககம்" என்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது. இந்த இயக்ககம் மேற்சொன்ன மருத்துவக் கல்லூரியையும் பொறியியல் கல்லூரியையும் நிர்வகிக்கும். ஒவ்வொரு துப்புரவுப் பணியாளரின் குழந்தையும், எதிர் காலத்தில் ஒரு மருத்துவராக, பொறியாளராக வரவிருக்கும் அரிய வாய்ப்பு உருவாகும். சிறப்புமிகு வாய்ப்பு இதனால் ஏற்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்றதும் பொது மக்களின் விருப்பத்திற்கிணங்க ஓசூர், திருத்துறைப்பூண்டி பேரூராட்சிகள் நகராட்சிகளாக உயர்த்தப் பட்டன.

நகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்தும் பொருட்டு, தொழில் வரியை மாற்றியமைக்க ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் மேற்கொள்ளும் பணி அல்லது தொழில் அடிப்படையில் தொழில் வரி வசூலிக்கப்படும். இதனால் நகராட்சிகளின் வருமானம் உயரும்.

தமிழ்நாடு நீர் வழங்கல் கழிவுநீர் அகற்றும் வாரியம்

சென்னை மாநகர் தவிர தமிழகத்தில் பிற பகுதிகள் யாவற்றிற்கும் நீர் வழங்குவதும் கழிவு நீர்க்கால் வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் இந்த வாரியத்தின் பணியாகும். இதுவரை குடிநீர் வழங்கப் படாத 2,483 குடியிருப்புகளுக்கு 1992, மார்ச் மாதத்திற்குள் எவ்வாறாயினும் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1,418 ஆதி திராவிடக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 31.12.1991-க்குள் இத்திட்டத்தை நிறைவேற்றியது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.64.50 கோடி செலவில் 3,653 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1992-93-இல் 33 பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.10 கோடி செலவில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

1992-93-இல் 13 வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அரசு ரூ.4.49 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

9,000 கிராமப்புறங்களுக்கு ரூ.530 கோடி செலவில் குடிநீர் வழங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கிக் கடனுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 40 இலட்சம் பேர் பயன் பெறுவர்.

1991-92-இல் 19 நகராட்சிகளிலும் 41 பேரூராட்சிகளிலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 12 திட்டங்கள் முடிவுற்றன. இதற்கு ரூ.20.74 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-இல் ரூ.31.80 கோடி செலவில் 17 குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட உள்ளன.

உதகையில் கழிவுநீர்க்கால் திட்டத்தை ரூ.7.61 கோடி செலவில் நிறைவேற்றுவதற்கும் கோவையில் கழிவுநீர்க்கால் திட்டத்தை விரைந்து மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருச்சிக்குக் கழிவுநீர் வடிகால் திட்டம் ரூ.6.760 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ஒகேனக்கல் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.250 கோடி செலவில் மேற்கொள்ளப் படுகிறது. இதனால் கிருஷ்ணகிரி, தர்மபுரி நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும் பர்கூர் தொழில் பேட்டையும் தர்மபுரியிலுள்ள 3,300 குடியிருப்புகளும் பயன் பெறும். மாண்புமிகு முதலமைச்சர் ஆணைப்படி காங்கேயம் குடிநீர் வழங்கு திட்டம் ரூ.20.43 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது.

நாகப்பட்டினத்திற்கு ரூ.[illegible] கோடி செலவிலும், தேவகோட்டைக்கு ரூபாய் ஒரு கோடி செலவிலும் குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னைக் குடிநீர் வாரியம்

இவ்வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுத் திட்டங்களுக்குப் போதிய அளவில் அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கப் பெற்றது. குடிநீர்ப் பிரிவின் கீழ் 5 திட்டங்களுக்காக ரூ.37.88 கோடிக்கும், கழிவு நீர் அகற்று வசதியின் கீழ் 10 திட்டங்களுக்கு ரூ.34.35 கோடிக்குமாக மொத்தம் ரூ.72.23 கோடி மதிப்பீட்டிற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் அரசு ரூ.31 கோடி அளவுக்கு நிதியுதவியும் அளித்துள்ளது. இதனைக் கொண்டு பெருமளவில் திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினைச் செய்ய முடிந்தது.

இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஆந்திர மாநில மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் ஏற்படும் அனைத்து இடர்ப்பாடுகளையும் நீக்க வழிவகை செய்ததாகும். இதே சமயத்தில் உலக வங்கிக் குழுவும் இந்தத் திட்டத்தைப் பற்றி ஆய்வு நடத்தியது. அடுத்த ஆண்டிற்குள் உலக வங்கியிடமிருந்து நிதியுதவி வரத்தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசு உதவியுடன் இந்த வாரியம் பெருமளவில் நகரின் கழிவுநீர் அமைப்பினைச் சீரமைக்கும் பணியினை எடுத்துக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயலில் உள்ள கழிவுநீர்க் குழாய்களைச் சுத்திகரிப்புச் செய்வது, கழிவு நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் செயல்திறனை மேம்படச் செய்வது ஆகியவை அடங்கும். இந்தப் பணிகளுக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.3.58 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

மற்றும் ஒரு முக்கியப் பணியாகச் சுமார் 700 தனியார் தெருக்களிலும் சுமார் 60 பொதுத் தெருக்களிலும் கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டு, கழிவுநீரகற்று வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக இந்தக் கால கட்டத்தில் ரூ.6 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

நகரத்தின் குடிநீர் விநியோகம் நாளொன்றுக்கு 55 மில்லியன் காலன் அளவாகச் சீரான அளவில் விநியோகம் செய்யப்பட்டது. நகரின் பொதுமக்களுக்கு ஒரே சீராகக் குடிநீர் கிடைக்கப் பெறுவதற்காகப் பழமையான, தூர்ந்த குடிநீர் விநியோகக் குழாய்கள் புதிய குழாய்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் இந்தப் பணிகளுக்கு மட்டும் ரூ.4.24 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுவரை குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு 180 தெருக்களில் ரூ.2.80 கோடி செலவில் புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறப்புப் பணிகள்

நாட்டிலேயே முதன்முறையாகக் கழிவுநீரை மீள்பயன்பாடு செய்யும் திட்டத்தை இவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக உயிரியல் முறையில் சுத்திகரிப்புச் செய்யப்பட்ட கழிவுநீர் நாளொன்றுக்கு 2.5 மில்லியன் காலன் அளவில் சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் ஓரளவு சுத்தரிகரிக்கப்பட்ட கழிவு நீரை மேலும் இரசாயன முறையில் சுத்திகரிப்புச் செய்து தனித் தொழிற்சாலையில் குளிர வைக்கும் நீர்த் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

இதே வகையில், சென்னை உரத் தொழிற்சாலைக்கு நாளொன்றுக்கு 3.75 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விரைவில் வழங்கப்படும். மேலும் மணலியில் உத்தேசிக்கப்பட்ட 'டாடா கோதாரி' இரும்புத் தொழிற்சாலை மற்றும் 'நாப்கோ' நிறுவனம் ஆகியவற்றுக்கு 10 முதல் 15 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை வழங்க சாத்தியக் கூறுகள் உள்ளன. இது தவிர, தற்போதுள்ள 'ஸ்பிக்' நிறுவனம், பெட்ரோ கெமிக்கல் பிராடக்ட்ஸ் எண்ணூர் அனல்மின் நிலையம் ஆகியவற்றின் கூடுதலான நீர்த்தேவையையும் சமாளிக்க முடியும்.

கழிவுநீர் மறு உபயோகத்தின் மூலம் வனவளர்ப்பு

இந்த ஓர் ஆண்டில் இவ்வாரியம் அதன் கழிவுநீர்ப் பண்ணை நிலத்தில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினைக் கொண்டு மரம் வளர்க்க முடியும் என்பதை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டியது. நேசப்பாக்கத்தில் 1.5 ஏக்கர் நிலபரப்பில் சோதனை அடிப்படையில் சுபாபுல், போலியேஜ் வகை, சுபாபுல் மர வகை, மேட்ச்வுட், தேக்குமரம், ஆகியவகையான மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இதில் கண்டுள்ள வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆண்டில் நேசப்பாக்கம், கோயம்பேடு இடங்களில் 120 ஏக்கர் பண்ணை நிலம் உழப்பட்டு மண் பதப்படுத்தப்பட்டு, வன வளர்ப்பு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

சமதர்மச் சமுதாயத்தை அமைத்துச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நலனும் வளனும் சேர்த்திட முனைந்து செயல்பட்டுவரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு, மக்கள் நலப்பணிகளைத் தொடர்ந்து செயலாற்றும் பணி தொடரும். ●

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இந்தியாவின் பழத்தோட்டம் என்று வர்ணிக்கலாம்.

நமது மொத்த ஆப்பிள் விளைச்சலில் 75 சதவிகிதம் (எட்டு இலட்சம் டன்) இம்மாநிலத்தில் விளைகிறது! 1987-88-இல் அங்கு விளைந்த பழங்களின் எடை 26.64 மில்லியன் டன்கள். நாட்டில் பழ மரங்கள் பயிரிடப்பட்டுள்ள மொத்த நிலப்பரப்பில் ஆறு சதவிகிதமும், மொத்த பழ விளைச்சலில் மூன்று [illegible] இவ்வேதான்.

கி.மு. 1,000 ஆண்டிலிருந்தே மித வெப்ப மண்டலத்தில் விளையும் பழ வகைகளை, இந்த மாநிலத்தில் பயிரிடப்பட்டன என்பது 'சுவையான' செய்தியாகும்!

“அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.”

வேளாண்மைத் துறையின் மேலான சாதனைகள்

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

கு.ப. கிருஷ்ணன்

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற இந்த ஓர் ஆண்டில் இத்துறையானது, வேளாண் உற்பத்தி, வேளாண் பெருமக்களின் நலன் ஆகியவற்றை தனது இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வறுமை அகலவும், வேளாண் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், குறிப்பாக ஏழை, எளிய மக்களின் வாழ்வு வளம்பெறவும், சீரிய இலட்சியப்பாதையை முன் நிறுத்தி இவ்வரசு முழு மூச்சுடன் பல்வேறு வேளாண் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி உள்ளது.

வேளாண் பணிகள் தொடங்கப்படும் காலத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கிய அறிவுரைகள், ஆக்கப் பூர்வமான மானிய உதவிகள் ஆகியவற்றை, உழவர் பெருமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள்.

அரிசி உற்பத்தி எப்போதும் இல்லாத அள விற்கு உயர் அளவாக இவ்வாண்டு 71.07 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடைந்தது. இது பெருமை அளிக்கக் கூடியது ஆகும். மொத்த உணவு தானிய உற்பத்தி 90.70 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் 14.87 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது. மேலும் எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகப்படுத்த ரூபாய் 23.82 இலட்சம் செலவில் நீர் சேமிப்புக்கருவிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தி 245 இலட்சம் மெட்ரிக் டன்களை அடைந்து உள்ளது.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்துள்ளபடி 8 மாவட்டங்களில் ரூபாய் 75 இலட்சம் செலவில் 5,000 எக்டேர்களில் தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழகத்தில் “செம்பனை” என்னும் பாமாயில் மரங்கள் வளர்க்க ரூபாய் 28.80 கோடி செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 1.07 கோடிக்கு விதைகள் வாங்கி நாற்றாங்கால் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

விவசாயிகளிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், “பயிர் விளைச்சல் போட்டி” திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இது நல்ல வெற்றியும் பெற்றுள்ளது. இத்திட்டத்தில் நெற்பயிருக்கு 1990-91-ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு ரூ.50,000 என்றும், இரண்டாவது பரிசு ரூபாய் 25,000 என்றும், மாவட்ட அளவில் முதல் பரிசு ரூபாய் 5,000 என்றும் இரண்டாவது பரிசு ரூபாய் 3,000 என்றும் வழங்கப்பட்டது. இப்புதிய திட்டத்தால், எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் ஆக இருந்த சராசரி நெல் உற்பத்தி அளவு 6 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு 23 இலட்சம் எக்டேர்.

“தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்” கீழ் வேளாண்மை வளர்ச்சிக்கு இவ்வாண்டு ரூபாய் 10 கோடி செலவிடப்பட்டு உள்ளது.

1991-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த புயல், மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீட்டில், விதை, உரம், பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு வேளாண் சலுகைகள் எந்த மாநிலத்திலும், எந்தக் காலத்திலும் வழங்கப்படவில்லை என்பது நினைவு கூர்ந்து பெருமைப்படத்தக்கது.

இராசாயன உரங்களின் விலையேற்றத்தை ஈடு செய்ய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு விலையேற்றத்திற்கு முன்பு இருந்த விலையிலேயே இரசாயன உரங்கள் வழங்குவதற்கு, மத்திய அரசிடமிருந்து ரூபாய் 53,973 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மானிய விலையில் இரசாயன உரங்கள் வழங்கப்பட்டது.

நுண்ணுயிர் உரங்களின் அதிகத் தேவையைக் கருத்தில் கொண்டு கடலூரில் உள்ள “உயிரின உற்பத்தி மையம்” ரூபாய் 13.5 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு உயிரின உர உற்பத்தித்திறன் ஒரு ஆண்டிற்கு 10 இலட்சம் பொட்டலங்களிலிருந்து 15 இலட்சம் பொட்டலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

“தேசிய நீர்ப் பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்” 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 35.61 கோடி ஒதுக்கீட்டில் 89,025 எக்டேரில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாண்டு இத் திட்டத்திற்கு ரூபாய் 80 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”

என்ற பாட்டுக்கொருவ் பாரதியின் கனவை நனவாக்க வந்த புதுமைப்பெண் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “நவரத்தினத் திட்டங்கள்” வேளாண் களத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள வேளையில், புதிய வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கும், உழவர்தம் உயர்விற்கும் 21 புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புதுமைத் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்து மக்களின் மனதைக் குளிர்வித்தும் கொண்டுள்ளது. ●

சாதனை படைக்கிறது!

பி.வி.கிரி

ஏழை எளியோர்
ஏற்றம் பெறவே
-எண்ணிலாத் திட்டங்கள்
வாழ்வில் ஒளியை
ஏற்றி வைக்கவே
- வகையான சட்டங்கள்!

உழவும் தொழிலும்
ஓங்கி வளரவே
- உதவுகின்ற அரசு
மழலைச் செல்வம்
மகிழ்ந்து உண்ணவே
- மகிழ்கின்ற அரசு!

பள்ளிக் கட்டடம்
பலப்பல எழவே
- பணிகள் ஏராளம்
துள்ளி ஆடிடத்
துறையும் உண்டு
- தொண்டுகள் தாராளம்!

அன்னைத் தமிழில்
ஆயிரம் பணிகள்
- அழகாய் நடக்கிறது
எண்ணம் கவ்ரும்
எண்ணிலாக் கலைகள்
- ஏற்றம் பெறுகின்றது!

கால்நடை வளர்ச்சி
காவல் துறையும்
- கணக்காய் வளர்கிறது
பால்வளம் பெருக
பாசனம் சிறக்க
- பயனோ தெரிகிறது!

கண்ணைக் கவரும்
கைத்தறித் துணிகள்
- கைவண்ணம் மிளிர்கிறது
விண்ணை முட்டும்
ஆலயப் பணியோ
- அடுக்காய்த் தொடர்கிறது!

குடிநீர் எங்கும்
குறைவின்றிக் கிடைத்திட
- கடமை விரைகிறது
வீடுகள் மனையும்
வேலை வாய்ப்பும்
- சிறப்பாய் இருக்கிறது!

பட்டிக் காட்டிலும்
போக்கு வரத்து
- பாங்காய் நடக்கிறது
பொட்டல் காடும்
பொய்த்த பூமியும்
- பொன்னாய் மாறுகிறது!

கூட்டு உறவும்
காட்டு வளமும்
- கைகோத் திடுகிறது
நாட்டு வளமும்
நல்வாழ் வுமுமே
- நாளும் சிறக்கிறது!

சமூக நலமும்
சுற்றுலா வளர்ச்சியும்
- சீராய் நடக்கிறது
சமமாய் மகளிர்
சகலமும் பெறவே
- சாதனை படைக்கிறது!

பொதுப்பணித் துறையின் பொன்னான பணிகள்

"பாசனம், கடலரிப்புத் தடுப்பு, நிலத்தடி நீர், காவிரி நீர்த்தகராறு, கிருஷ்ணா நதிநீர் ஆகிய பணிகள் குறித்தும், மின்சாரம், நெடுஞ்சாலைகள் ஆகிய பணிகள் குறித்தும் பொதுப்பணித்துறை பொறுப்புடன் செயலாற்றி வருகின்றது."



மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

எஸ். கண்ணப்பன்

பொதுப்பணித்துறை, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்தே தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் மிகத் தொன்மை வாய்ந்த அரசுத் துறைகளில் ஒன்றாகும். இத்துறை 1853-ஆம் ஆண்டில் 'லார்டு டெல்ஹவுசி' என்ற ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டது. இன்று விரிந்து பரந்து வளர்ந்து பொதுமக்களின் இன்றியமையாதத் தேவைகளை நிறைவு செய்யும் அரும் பணிகளை ஆற்றி வருகிறது.

இத்துறை, பாசனத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தும் பணிகளையும் நிலத்தடி நீர் ஆய்வு, பாசனத் திட்டங்களைக் கண்டறிதல், அத்திட்டங்களைச் செயல்படுத்துதல், பராமரித்தல் போன்ற பணிகளையும் ஆற்றி வருகிறது. இத்துறை அரசு அலுவலகங்கள், அரசு நிறுவனங்கள், பள்ளிகள் மருத்துவமனைகள், வீட்டுவசதிக் குடியிருப்புகள் முதலியனவற்றிற்குக் கட்டடம் கட்டும் பொறுப்பையும் மேற்கொண்டு வருகிறது.

சாலைகளையும் நெடுஞ்சாலைகளையும் அமைத்து, பராமரிக்கும் பொறுப்பும் இத்துறையைச் சார்ந்ததே ஆகும்.

தமிழ்நாடு பொதுப்பணித்துறை

சாதனைப் பட்டியல்

தமிழ்நாடு பொதுப்பணித்துறை, பல்வேறு துறைகளைக் கொண்டுள்ளது.

பாசனத்துறை

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தி, பராமரித்து வருதல், மாநிலங்களுக்கிடையிலான ஆறுகள் குறித்த பிரச்சினைகள், பாசனம் தொடர்பான கொள்கை முடிவுப் பிரச்சினைகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பு வகிக்கிறது.

தமிழ்நாட்டில் 50 அணைகள் உள்ளன; சுமார் 12,550 கி.மீட்டர் நீளத்திற்குச் சுமார் 4,900 கால்வாய்கள் உள்ளன; 24 இலட்சம் எக்டேருக்கும் மேற்பட்ட பாசனப்பகுதிகள் உள்ளன. இத்துறையின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய சாதனைப் பட்டியலைப் பின்வரும் குறிப்புகள் தெற்றெனப் புலப்படுத்துவதைக் காணலாம்.

தற்போது, ரூ.251 கோடி செலவிலான பதினேழு பெரும் பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால் புதிதாக 19,416 எக்டேர் புன்செய் நிலங்கள் பாசன வசதிப் பெறும்; 1,688 எக்டேர் நிலங்கள் பாசன இணைப்பு கிடைக்கும், 7,182 எக்டேர் நிலங்கள் நிலையான பாசனம் பெறும்.

தற்போது, ரூ.66.22 கோடி செலவிலான நான்கு புதிய பெரும் பாசனத் திட்டங்கள், இராமநாதபுரம், திண்டுக்கல்-அண்ணா, காமராசர் ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதிகள் பயன் பெறும்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் ரூ.101.85 இலட்சம் செலவில் ஆறு நடுத்தர, பெரும் திட்டங்களுக்குப் புதிதாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உண்மையில், 1991-92-ஆம் ஆண்டில் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பாசனப் பரப்பளவு

11,03,028 எக்டேர் (27,25,581 ஏக்கர்) ஆகும்.

தேசிய நீர் நிருவாகத் திட்டம்

பாசன வளத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பல்வேறு பாசனத் திட்டப் பணிகளின் கீழ் 1,53,400 எக்டேர் பரப்பு பயனடையும் ஆயக்கட்டுதாரர்களுக்காக தமிழ்நாடு அரசு, ரூ.52.70 கோடி வழங்கியுள்ளது. இவை, நடந்தேறிவரும் திட்டங்களுக்கும், புதிய திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படும். பழைய அணைகளை வலுப்படுத்துவதற்கான அணைப் பாதுகாப்பு உறுதித் திட்டம்.

பெரியாறு, கொடகனாறு, பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, வீடூர், உப்பாறு, பொன்னியாறு, கோமுகி ஆகிய அணைகளின் கட்டுமானம் நீரியல் ஆகியவற்றை மறு சீரமைப்பதற்காக உலக வங்கியின் நிதியுதவி ரூ.42 கோடி செலவிடப்படும். இத்திட்டம், கோடிக் கணக்கில் முதலீடு செய்வதற்கேற்ப பாதுகாப்பு அளிப்பதற்கு உறுதியளிக்கும் திட்டமாகும்.

கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்

தமிழ்நாடு மாநிலம் 1000 கி.மீட்டர் தூரத்திற்குப் பரவலான கடற்கரையைக் கொண்டுள்ளது. சென்னை, தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய கடற்கரைப் பகுதிகளை, கடல் அரிப்பின் அழிவுகளிலிருந்து பாதுகாப்பது அவசியமாகும்.

பொதுச் சொத்துக்களையும், தனியார் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும், கடல் அரிப்புத் தடுக்கும் பணி அவசியமானதாகும்.

வட சென்னையில் எண்ணூர் நெடுஞ்சாலைக்கு, ரூ.4.24 கோடி செலவில் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவது இதற்கு ஓர் உதாரணமாகும்.

சிறுபாசனம்

பொதுப்பணித்துறையின் இந்தப் பிரிவு, ஏரிப் பாசன ஏற்பாட்டின் கீழ் வராத, 40 எக்டேருக்கும் அதற்கும் அதிகமாகப் பரப்புள்ள பாசனப் பகுதியின் பராமரிப்பைச் செயல்படுத்துகிறது. இங்கு, இது ஒரு மிகைப்படியான கருத்தாகும். தமிழ்நாட்டில், ஐரோப்பியப் பொருளாதாரக்குழு உதவியுடன் ஏரிப்பாசன ஏற்பாடு இரு நிலைகளில். நவீனப்படுத்தப்படுகிறது. 28,780 எக்டேர் பயனடையக் கூடிய மேல் நிலையிலுள்ள, 1,206 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நிலை II-இல், மொத்தம் 22,332 எக்டேர் ஆயக்கட்டுப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்க, 152 மானாவாரி ஏரிகளுக்கு நீர் வழங்கவும், 2,080 எக்டேர் பரப்பு பயன்பெறும் வகையில் 80 முன்னாள் ஜமீன் ஏரிகளை நவீனப்படுத்த முன்னோடித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு 55 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 33.74 கோடி ரூபாய் செலவில் 137 ஏரிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 27 ஏரிகள் தொடர்பான பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

புதிய பெருந் திட்டம்

அயல்நாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதி (ஜப்பான்) அல்லது ஐரோப்பிய பொருளாதாரக் குழு நிலை II-விருந்து நிதியுதவி பெறுவதற்காக 200 கோடி ரூபாய் செலவில் 2,500 ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசின் நீர்வள அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. VIIIவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1992-93-ஆம் ஆண்டுப்பகுதி II திட்டங்கள்

16 மாவட்டங்கள் பயன்பெறும் வகையில், 354.92 இலட்சம் ரூபாய் முடிவான செலவில் 19 சிறுபாசனச் சிறப்புத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

பெரியாறு வைகை பாசன ஏற்பாட்டை நவீனப்படுத்தல்

மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 60,000 எக்டேர் பரப்புக்குப் பாசன வசதியளிக்க, கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு ஆற்றின் நீரை, கிழக்கு நோக்கித் திருப்பி விடுவதற்காக 1895-ஆம் ஆண்டில் பெரியாறு அணை கட்டப்பட்டது.

வைகையாற்றில் பெருகிவரும் நீரைத் தேக்கி வைத்து, இரண்டு மாவட்டங்களில் உள்ள ஆயக்கட்டுப் பகுதிகள் பயன்பெறும் வகையில் அந்த நீரைத் திறந்து விடுவதற்காக, 1959-ஆம் ஆண்டில் வைகை அணை கட்டப்பட்டது.

இவ்விரு பாசன ஏற்பாடுகளில் பெரிய அளவிலான பழுதுபார்ப்புப் பணிகளும், சீரமைப்புப் பணிகளும், 1977-ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் உலக வங்கியின் கடன் உதவியை முழுவதுமாகப் பயன்படுத்தி இரண்டு நிலைகளில் முடிக்கப்பட்டுள்ளன. நீர் பெறுவதற்கு மேலும் வசதியாக இருக்கும் பொருட்டு, இணைப்புக் கால்வாய் அமைக்கும் பணி தற்போது முழு மூச்சுடன் நடைபெற்று வருகிறது. இதனால், திண்டுக்கல்-அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களில் 1,620 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்- 1992 மார்ச் வரை ரூ.34.79 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ரூ.12.65 கோடி செலவிடக் கருதப்படுகிறது.

நிலத்தடி நீர்

கிணறுகள், துளைக் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்காக தகுந்த இடங்களைத் தெரிந்தெடுப்பதற்கும், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் விவசாயிகள், பொதுமக்கள் அரசுத் துறைகள் ஆகியோருக்கு இப்பிரிவு ஆலோசனை நல்குவதோடு அறிவியல் ஆய்வு மூலம் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கும் அவர்களுக்கு உதவி செய்கிறது.

காவிரி நீர்த்தகராறு

1990-ஆம் ஆண்டில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றம், தமிழ்நாட்டிலுள்ள மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு, 205 டி.எம்.சி. நீர் விடுமாறு கர்நாடக மாநிலத்திற்கு உத்தரவிட்டு இடைக்கால ஆணை பிறப்பித்தது. தமிழ்நாடு சட்டமன்றம் இந்த ஆணையை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென்று விரும்பியது. கர்நாடக மாநிலம் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது, கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குப் புறம்பானது என்று உச்ச நீதிமன்றம் 22.11.91-ஆம் நாளிட்ட தன்னுடைய ஆணையில் அறிவித்தது. இரு மாநிலங்களின் முதலமைச்சர்களும், பிரதம அமைச்சரைச் சந்தித்து, காவிரி வடிநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் உரிய அளவு பயன்களை அளிப்பதைக் கருத்திற்கொண்டு நீர், தேசிய ஆதாரமாகக் கருதப்பட வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டனர். நீர் திறந்துவிடுவது பற்றி இவ்வரசு 14.5.92 அன்று மனு செய்து கொண்ட தன்பேரில், தற்போது இவ்விஷயம் உச்ச நீதி மன்றத்திடம் பரிசீலனையில் உள்ளது.

கிருஷ்ணா நதி நீர் குடிநீர் வழங்குத் திட்டம்

சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிப்பதற்காக கிருஷ்ணா ஆற்றிலிருந்து 15 டி.எம்.சி. நீர் பெறுவதற்கு, தமிழ்நாடு அரசு, ஆந்திரப் பிரதேச அரசுடன் 1983 ஏப்ரலில் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1992-93-ஆம் ஆண்டில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளுக்குத் தமிழ்நாட்டின் பங்காக தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி வழங்கியுள்ளது.

கண்டலேறு-பூண்டி கால்வாய், பூண்டியிலிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்குச் செல்லும் இணைப்புக் கால்வாய், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிகளின் முழு நீர்த்தேக்க அளவை உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டப் பணிகள்

★ உணவு உற்பத்தியில் [illegible] 90.7 [illegible] அரசு [illegible] அரிசி உற்பத்தி 71 [illegible]

தமிழ்நாட்டின் எல்லைக்குள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன.

இதுகாறும் பாசனம் குடிநீர் வழங்கல் துறையின் சாதனை விளக்கப்பட்டது. மின்சாரத் துறையின் பணிகளின் சிறப்பைக் காண்போம்.

மின்துறை

தமிழ்நாட்டில் 26.3.92-லிருந்து மின் வெட்டு இல்லை என்பது குறித்து நாம் பெருமைப்படலாம். பின்வரும் மின் உற்பத்தி நிலையங்களில் 222.250 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் பிரிவு IV-210 மெகாவாட் நரிமணம் எரிவாயு விசையாழி திட்டம் - 10 மெ.வா. புளியங்குளம் காற்றாலைகள் 1.5 மெ.வா. மணவக்கண்டி புனல் மின் திட்டம் (0.75 மெ.வா.).

தூத்துக்குடி அனல்மின் நிலையம் 1991-ஆம் ஆண்டில் 60.95 சதவீத மின் சக்தியை உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது. இந்த அனல் மின் நிலையம் ஆறாவது முறையாகப் பாராட்டத் தக்க விருதினைப் பெற்றுள்ளது.

1991 ஜூலையிலிருந்து 1992 ஜூன் வரையில் மொத்தம் 4,17,813 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 41,520 மின் இணைப்புகள் வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டவையாகும். 1992 மார்ச் வரையில் 27,388 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மின் உற்பத்தி செய்வதில் தனியார் துறை பங்கேற்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. சில திட்டங்கள் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன.

300 மெகாவாட் பிள்ளைபெருமாள் நல்லூர் எரிவாயு விசையாழி மின் உற்பத்தித் திட்டம்.

500 மெகாவாட் தூத்துக்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம் நிலை - IV 1000 மெகாவாட் கடலூர் அனல் மின் நிலையம். அரசு புதிய தொழில் கொள்கைப்படி 100 சதவீத, ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவு



★ பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெருநாட்டில் நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும் போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும்.

களுக்கும் (EOU) புதிய திட்டங்களுக்கும், தொழில் வளர்ச்சியை முன்னிட்டுப் பல சலுகைகளை வழங்குகிறது. பொதுப்பணித்துறையின் மற்றொரு முக்கியப் பிரிவைப் பார்ப்போம்.

நிறைவேற்றப்பட்ட முக்கியக் கட்டடப் பணிகள்

1. சென்னை, உயர்நீதிமன்றத்திற்குக் கூடுதல் கட்டடம் ரூ.413.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

2. விருதுநகரில் காவல்துறைப் பணியாளர் குடியிருப்புக் கட்டடம் ரூ.167.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

3. இராமநாதபுரத்தில் காவல்துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு ரூ.229.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

4. சிவகங்கையில் காவல்துறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு ரூ. 230.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

5. கோயம்புத்தூரில் சட்டக்கல்லூரியும் விடுதியும் ரூ.95.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

6. விருதுநகரில் ஆயுதக் காவல்படைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் ரூ.215.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

7. தமிழ்நாட்டில் புயல் புகலிடம் (35 எண்ணிக்கை) ரூ.127.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

ஒரு நாட்டில் அமைந்துள்ள சாலைகளின் தரமும், அவற்றின் மேம்பட்ட தன்மையும், அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றுக்

கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவையாகும்.

தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, அரசு ஒப்புதல் அளிக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் பெரும் பாலங்கள் கட்டுதல் சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

49,000 கி.மீ. நீளமுள்ள அரசு சாலைகளைப் பராமரிப்பதுடன், இத்துறை, 5223 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்கும் பணியையும் மேற்கொண்டது.

5 ஆண்டுக்கால அளவில், ரூ.150 கோடி செலவில், மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ள சாலைகளை மீண்டும் அமைக்கும் பணி குறித்த சிறப்பு பழுது பார்ப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1991-92-ஆம் ஆண்டில், 782 கி.மீ. நீளச் சாலைகள் மீண்டும் போடப்பட்டன.

134 பெரிய, சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 46 பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ரூ.30 கோடி செலவில், தனியார் அமைப்புகள் மூலம் சாலைகளை மேம்படுத்தும் பணியும், இதற்காக செலவிட்ட தொகையை சுங்கம் வசூலிப்பதன் மூலம் திரும்ப பெறுவதும் ஒரு புதிய அம்சமாகும். இந்த முறை, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில், செயற்படுத்திப் பார்க்கப்பட்டு வருகிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலை

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ.5 கோடி செலவில், திருவான்மியூரிலிருந்து கடலூ வரை இருவழிப்பாதை அமைக்கும் பணி தொடக்கப்பட்டுள்ளது. அது, சிறந்த முறையில் நடை பெற்று வருகிறது. ரூ.13 கோடி ஏற்கெனவே செலவிடப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டி ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

தேசிய நெடுஞ்சாலைகள்

இவ்வாண்டில் ரூ.408 இலட்சம் செலவி முதல்சாலைப் பணிகளும், ரூ.49 இலட்சம் செ வில் வேலூர் மாற்றுச் சாலைப்பணிகளும், ரூ.4 இலட்சம் செலவில் ஏனைய பாலம் கட்டு பணிகள் முதலியனவும் முடிக்கப்பட்டுள்ளன.

தேசிய நெடுஞ்சாலை-45

தேசிய நெடுஞ்சாலை-45-இல் தாம்பர திலிருந்து விழுப்புரம் வரையிலான பகுதி ரூ.7 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிற இப்பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ள

இவ்வாண்டில் செலவு ரூ.7.2 கோடியாகும்

தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம்

நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. கோடி செலவில் மூன்று பெரும் பணிகளுக்கு ரூ.45 கோடி செலவில் வேறு 13 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட் செலவு ரூ.150 கோடியாகும்.

ஆதிதிராவிடர் மேம்பாடு : அரசு உதவிகள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
எம். ஆனந்தன்

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 15.2.1974-ஆம் ஆண்டு 1956-ஆம் ஆண்டு கம்பெனிச்சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு நிறுவப்பட்ட இந்நிறுவனம், 1980-81-ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றி வருகிறது.

கடந்த ஆண்டு 1991-92-இல் தாட்கோ நிறுவனம் 18 மாணவ மாணவியர் விடுதிகள் 2 பழங்குடியினர் மாணவ விடுதிகள், 8 பள்ளிக் கட்டடங்கள், ஒரு ஜி.டி.ஆர். பள்ளிக் கட்டடம், 10 சமுதாயக் கூடங்கள் மற்றும் 268 ஜீவன்தாரா கிணறுகள் ஆக ரூ.451 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்துள்ளது.

நடப்பாண்டில் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றியுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம்:

வேலையின்றி அவதிப்படும் ஏழை இந்து ஆதி திராவிடர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அமைத்து வாழ்வளிக்க இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் நபர் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.10,000 வரை மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்படுகிறது. இதில் 50 விழுக்காடு தாட்கோ மானியமாகவும், எஞ்சிய 50 விழுக்காடு வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மளிகைக் கடைகள், பெட்டிக் கடைகள், ரெடிமேடு ஆடைகள் தயாரித்தல்-முதலியன வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 8,000 ஆதி திராவிடர்களுக்கு ரூ.400 இலட்சம் மானிய உதவியுடன் கடன் வழங்கப்பட்டது.

“ஆதிதிராவிடர் மேம்பாட்டிற்காக, வீட்டு வசதி, பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள், சமுதாயக் கூடங்கள், ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுதல் ஆகிய பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன. சுயவேலை வாய்ப்புத் திட்டம், சிறு தொழில் கடன் ஆகியவையும் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர வழி வகுக்கின்றன.”

சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்:

தாட்கோவில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் முக்கிய இடம் பெறுகிறது. இத்திட்டம் தாட்கோவில் முழு மானியத்துடன் "ட்ரைசம்" திட்டத்திற்கு இணையாக 6 மாதக் காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது. படித்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஆதி திராவிடர் இளைஞர்கள், பள்ளிப்படிப்பினை இடையில் நிறுத்திய மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். பயிற்சி முடிந்தபின் மானியத்துடன் வங்கிக் கடன் வழங்கப்பட்டு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத்த இத்திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி பழுதுபார்த்தல், ஜெம் கட்டிங், வெல்டிங், எலக்ட்ரிசியன், ப்ளம்பிங், டர்னிங், மோட்டார் வாகனப் பழுதுபார்த்தல், தையல் பயிற்சி ஆகிய தொழில்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சிக்காக நிதி உதவி 6 மாதங்களுக்கு நபர் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1. மாதம் ஒன்றுக்கு உதவித்தொகை ரூ.250/-
2. பயிற்சியாளர்களுக்குச் சம்பளம் மாதம் 1-க்கு ரூ.75/-
3. மூலப் பொருட்கள் வாங்க மாதம் 1-க்கு ரூ.25/-

பயிற்சிக்காகக் கருவிக் கலப்பெட்டி ரூ.500 மதிப்புக்கு ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டில் 2,307 நபர்களுக்கு ரூ.59.982 இலட்சம் செலவில் முழு மானியத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது.

விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்கள்:

விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்திப் பெருக்கத்திற்குக் கீழ்க்கண்ட திட்டங்களை ஆதி திராவிட விவசாயிகளுக்குத் தாட்கோ மானியத்துடன் வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் மாவட்ட மேலாளர்கள் தாட்கோ மூலமாகவும், விவசாயப் பொறியியற் பிரிவு மூலமாகவும் செயல்படுத்தப்படுகின்றன.

விதைகள், பூச்சி மருந்துகள், விவசாயக் கருவிகள் போன்றவை தாட்கோ வழங்கும் மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

★ நம்மை வாய்ச்சொல் வீரர்களாக்கப் பெறப்பட்டதல்ல சுதந்திரம். பல நூறு ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த சோம்பலை விரட்டி, நம்மை நாமே வளர்த்துக் கொண்டு, வாய்மை மிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க நாம் பெற்ற உந்து சக்தியே சுதந்திரம் ஆகும்.

கறவை மாடுகள், வெள்ளாடு, செம்மறி ஆடுகள், முயல் வளர்த்தல், வெள்ளைப் பன்றி வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்கள் தாட்கோ மானியத்துடன் கால்நடைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

கீழ்க்கண்ட திட்டங்கள் ஆதி திராவிடர் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மானியத்துடன் வழங்கப்படும்:

1. ஆழ்குழாய்க் கிணறு.
2. பம்பு செட்டுடன் கூடிய மின்மோட்டார் அமைத்தல்.

3. எண்ணெய்ப் பொறிகள் வழங்குதல்.
4. பம்பு அறைகள் அமைத்தல்.
5. இரு எருதுகளுடன் கூடிய டயர் வண்டி.
6. உழவு மாடுகள் (ஜதை).
7. இரு மாடுகள் கொண்ட மாட்டு வண்டி.
8. சைக்கிளுடன் கூடிய விசைத்தெளிப்பான்.
9. இரும்புப் பங்குகள் வழங்குதல்.

சிறு தொழில் கடன் திட்டம்:

இத்திட்டத்தின்மூலம் மானியத்துடன் விளிம்புத் தொகைக் கடனாக ஏழை ஆதி திராவிடர், மலை வாழ் மக்கள் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிடர் கிருத்துவர்கள் ஆகியோருக்குச் சுயமாகத் தொழில் செய்ய உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியமும், 25 விழுக்காடு விளிம்புத் தொகையாகவும், எஞ்சிய 25 விழுக்காடு வங்கிக் கடனாகவும் அதிகப்பட்சமாக ரூ.5,000 வரை வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 540 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்:

ஆதி திராவிடத் தனி நபர் தொழில் முனைவோர்களை உருவாக்கும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் இது வரை 2,400 தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஆதி திராவிடர் தொழில் முனைவோர்களுக்கு, அவர்களின் விருப்பம் தகுதி பயிற்சி ஆகியனவற்றிற்கேற்ப ரூ.5 இலட்சம் வரை மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப்படுகிறது. தாட்கோ மானியமாக ரூ.15,000 மற்றும் மானியம் ரூ.85,000 அல்லது சொத்து மதிப்பில் 20 விழுக்காடுகள், இதில் எது குறைவோ அவற்றை 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 10 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும்படி வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகையை வங்கிக் கடனாக வழங்கப்பட்டு சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

வருவாய் ஈட்டும் திட்டங்களான லாரி, மினி வேன்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், ட்ராக்டர் மற்றும் ட்ரெயிலர், இரசாயனத் தொழிற்சாலை, கம்ப்யூட்டர் மையங்கள், செயற்கை வைரங்கள் தீட்டும் தொழில், ஏற்றுமதி ஆடைகள், ஜிராக்ஸ் முதலியன வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 879 ஆதி திராவிடர் தனி நபர் தொழில் முனைவோர்களைத் தாட்கோ உருவாக்கியுள்ளது.

இது தவிர, அரசு மற்ற 22 துறைகளின் மூலமாக ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல அரிய திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றி வருகிறது.

நடப்பாண்டில் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.2,653 இலட்சம் செலவிடப்பட்டு, 65,738 ஆதி திராவிடர் மக்கள் பயனடைந்துள்ளனர். ●



> ★ குறைகூறியே பழக்கப்பட்ட சில தீய சக்திகள் அரசின் கவனத்தைத் திசைதிருப்ப, சில விரும்பத்தகாத முறைகளைக் கையாளுகின்றன. அத்தகைய தீய சக்திகளின் எதிர்ப்புகளை முறியடித்து, தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட முழுமையாக நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.
>
> —டாக்டர் எம்.ஜி.ஆர்.

தொழிலாளர் நலம் பெற...

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
எஸ். ரகுபதி

> " **தொழில் உறவுகள் தொடர்கின்றன; தொழிலாளர் நலம் பெருகுகின்றன. தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களது உரிமைகளை நிலைநாட்டவும் அரசு கருத்துடன் செயலாற்றி வருகிறது. தொழில் தகராறுகள் தீரவும், பிரச்சினைகளை சுமுகமாக முடிவு செய்யவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.** "

தமிழக அரசு தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் நேரிடையாக, தங்கள் வளர்ச்சியையும் நிறுவன வளர்ச்சியையும் குறித்துப் பேசி தாங்களே முடிவெடுக்கும் கூட்டு முயற்சியையே ஊக்குவிக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தினரின் பணி நிலைமையினை வரன்முறைப்படுத்துவதற்காகவும், அவர்களுக்காக நலன் திட்டங்கள் சரிவரப் பெறப்படும் வகையிலும் இவ்வரசு மிகவும் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டு சமூகத்தில் நல்லதொரு அந்தஸ்தைப் பெற்று வாழும் விதத்தில் அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் தமிழக அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது

அரசு பதவியேற்ற நாளிலிருந்து கடந்த ஓராண்டுக் காலமாக தமிழகத்தில் தொழில் உறவு நிலைமை மிகவும் சுமுகமாகவே இருந்து வருகிறது. தொழிலாளர் துறை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாட்டிற்கான சமரச அமைப்புத் தொழில் தகராறுகள் ஏற்படு முன்னரே அவற்றை இனம் கண்டு அவை வரு முன்னரே நல்லதொரு தீர்வு கண்டு, பிரச்சினை களைச் சுமுகமாக முடிவு செய்யும் விதத்தி மிகவும் முனைப்பாகவும் ஆக்கபூர்வமாகவும் பண யாற்றிட முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்த 20,36 தொழில் நிறுவனங்களில் 10,77,724 தொ லாளர்கள் உள்ளனர். அதில் 11.6.92 அன் உள்ளபடி 14 தொழில் நிறுவனங்களில் மட்டுமே வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் 5,12 தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஜூலை 1991 முதல் மே 1992 மாதம் முடி உள்ள காலத்தில் தமிழக அரசின் தொழிலாள துறை சமரச அலுவலர்களால் மொத்தம் உள் 13,330 தொழிற்தகராறுகளில் 11,470 தொழி தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

முக்கியமான தொழிற் தாவாக்கள்

1990-91-ஆம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை

தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் தொ லாளர்கள் 30% போனஸ் மற்றும் கருணை தொகை வழங்கும் பொருட்டு வேலைநிறுத்த அ விப்புக் கொடுத்து பின்னர் 22.10.91 முத தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாண்புமிகு முதலமை சரின் அறிவுரையின்படி மாண்புமிகு தொ லாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்த பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் இதனைத் தொடர்ந்து தொழிலாளர் நலத்து ஆணையர் அவர்கள் 1989-90-ஆம் ஆண்டிற் வழங்கப்பட்ட அதே சதவிகித போனஸ் வழங்கு படி 1.11.91 அன்று அறிவுரை வழங்கினார். இ வறிவுரை வழங்கப்பட்ட பின்னரும் தென்னிந்தி நூற்பாலைகள் சங்கத்தைச் சார்ந்த பல உறு பினர்கள் அறிவுரைப்படியான போனஸ் வழங்

வில்லை. 15.11.91 அன்று மொத்தமுள்ள 524 நூற்பாலைகளில் 43,500 தொழிலாளர்களைக் கொண்ட 98 நூற்பாலைகள் வேலைநிறுத்தம் செய்தன. இதன் பின்னர் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தினரின் கருத்துக்களையும் கேட்டறிந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டதைப் போன்றே இவ்வாண்டும் போனஸ் வழங்க வேண்டும் எனவும், அத்தொகையை இரு தவணை முறைகளில் முறையே 22.11.91 மற்றும் 7.1.92 ஆகிய இரு தேதிகளுக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

நலிவுற்ற நூற்பாலைகளைப் பொறுத்த வரையில் 15% போனஸ் வழங்கவேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்கள். இம்மாநிலத்திலுள்ள நூற்பாலைகளின் போனஸ் பிரச்சினை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

மேலும் இன்ஜினியரிங், சர்க்கரை, சிமெண்ட், தோட்ட நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைக்காகித ஆலைகள் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட போனஸ் பிரச்சினை கடந்த ஓராண்டில் இவ்வரசின் தலையீட்டினால் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

மூடிய ஆலைகளைத் திறத்தல்

1.4.91 முதல் பணி முடக்கம் செய்யப்பட்டிருந்த பி அண்டு சி மில் இவ்வரசின் சீரிய முயற்சியினாலும், இத்துறை அலுவலர்களின் கடும் முயற்சியினாலும் 13.4.92 முதல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு பின்னி ஆலை நடைமுறை மூலதனத்திற்காக, பாரத வங்கிக்கு ரூ.10 கோடிக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த உத்தரவாதம் 6 மாதக் காலத்திற்கு அல்லது இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக்கு நிர்வாகம் வழங்கியுள்ள திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கும் வரை இவற்றுள் எது முன்னதாக முடியுமோ அதுவரை அமலில் இருக்கும்.

பெருங்களத்தூரில் 7.2.1989 முதல் மூடிக் கிடந்த 3,086 தொழிலாளர்களைக் கொண்ட தி ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிட், என்னும் நிறுவனம் இவ்வரசின் பெரு முயற்சியினால் 4.2.1992 முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கோவையில் 13.11.84 முதல் இயங்காமலிருந்த வசந்தா மில்ஸ் என்னும் நிறுவனம் மீண்டும் திறப்பது சம்பந்தமாக இத்துறை அலுவலர்களின் பெருமுயற்சியினால் 24.2.92 அன்று தொழிற்தகராறுகள் சட்டம் 1947-ன் பிரிவு 12(3)ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்

இவ்வரசு பொறுப்பேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள 18,962 பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 75,84,400 உதவித் தொகையாக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

தொழிலாளர் நலச் சட்ட அமலாக்கம்

சட்டங்கள், சட்ட திருத்தங்கள், அறிக்கைகள், விதிவிலக்குகள் மற்றும் தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) விதிகள், 1989.

தமிழ்நாடு எடைகள் மற்றும் அளவைகள் தர (அமலாக்கம்) விதிகள் 1989-இல் உள்ள 4-வது அட்டவணையில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின்படி, ஒரு கிலோ கிராம் வரையிலும் அளவுள்ள உணவு எண்ணை விற்பனை செய்யப்படும்போது அளவு, மூலமும் ஒரு கிலோ கிராம் எண்ணெய்க்கு மேல் விற்பனை செய்யப் படும்போது எடை போடுவதன் மூலம் மட்டுமே உரிய அளவைக் கணக்கிட வேண்டும் என்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது

தோட்டத் தொழிலாளர் சட்டம்

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகள் கிடைக்க செய்ய வேண்டியும், அந்த வசதிகளைப் பெற்றுத் தர வழிமுறைகளைப் பரிந்துரை செய்யவும் ஒரு துணைக் குழுவை அமைத்துள்ளது.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948

கடந்த ஜூன் 1991 முதல் மே 1992 வரையிலான காலத்தில் 1948- ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அரசு கீழ்க்கண்ட தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம் மறு நிர்ணயம் செய்துள்ளது.

நிர்ணயம்

1. காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த தொழில்

மறு நிர்ணயம்

1. கம்பளித் தரைவிரிப்பு மற்றும் சால்வை நெசவுத் தொழில்
2. தோல் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்
3. உப்பளத் தொழில்
4. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழில்
5. ஜவ்வரிசித் தொழில்
6. ஆட்டோமொபைல் பணிமனைத் தொழில்
7. ஒட்டல் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்
8. அச்சகத் தொழில்.

தொழிலாளர் நலச் சட்டங்களைச் சீரிய முறையில் அமல் செய்யும் பொருட்டு கடந்த ஓராண்டுக் காலத்தில் அரசு கீழ்க்கண்ட புதிய பதவிகளை இத்துறையில் ஏற்படுத்தி உள்ளது.

1. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டத்தை அமல்படுத்துவதற்காக மட்டும் 8 தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

2. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள விற்பனையாளர்களின் எடையளவுகளை முத்திரை செய்வதற்காகவே 8 முத்திரை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. சென்னை மற்றும் கோவையில் உள்ள ஸ்டோரேஜ் டாங்குகளைச் சரிபார்க்கும் பணிக்காகவே 2 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நலத் திட்டங்கள்

பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

பீடித் தொழிலாளர்களுக்கு அரசு மானியம் மற்றும் கடன் தொகையில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1,000 வீடுகள் கட்டுவதற்காக அரசு திருநெல்வேலி-கட்டபொம்மன மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் நிலம் கையகம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், உரிய பயனீட்டாளர்களைத் தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது முடிவுற்றதும் வீடு கட்டும் பணி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

★ ஒன்றுபட்ட நமது இந்தியாவின் ஒருமைப்பாடு காக்க உறுதியுடனும் அதே நேரத்தில் நமது உரிமைக்காகக் குரல் கொடுக்கவும் நாம் தயங்கமாட்டோம்.

கட்டடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்துதல்

அமைப்பு ரீதியற்றத் துறைகளில் ஒரு பெரும்பான்மையான பகுதியினர் கட்டடத் தொழிலாளர்களாகும். இத்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வதோடல்லாமல், 1982-ஆம் வருட தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் (பணி நிரந்தரம் மற்றும் வேலை நிலைமை) சட்டத்திலுள்ள சலுகைகளை இத்தொழிலாளர்களும் பெற வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதைத் தவிர இத்தொழிலாளர்களுக்கென வைப்பு நிதி, பணிக்கொடை, பேறுகால சலுகைகள் போன்ற பயன்களோடு விபத்து மற்றும் நோய்வாய்ப்பட்ட நேரங்களில் நிதி உதவி கிடைக்கும் வகையில் அரசு தனியாக ஒரு நலத் திட்டத்தினை உருவாக்கவும் உத்தேசித்துள்ளது.

மகளிர் பிரிவு ஏற்படுத்துதல்

பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கெடுப்பு, பலவேறு தொழில் நிறுவனங்களில் அவர்களது வேலைவாய்ப்பு, வேலை நிலைமை மற்றும் அவர்களுக்கென ஏற்படுத்தப்

பட்டுள்ள நல வசதிகள் போன்ற விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு அரசு 'மகளிர் பிரிவு' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மேற்படி மகளிர் பிரிவின் தலைவராகத் தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் ஒரு பெண் அலுவலர் பணியமர்த்தப்பட்டுள்ளார். பெண் தொழிலாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு, பெண் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பெண் தொழிலாளர்களின் உடல் நலம் குறித்து புதிய மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களின் முன்னேற்றம் குறித்தும் கருத்து தெரிவித்தல், குழந்தைகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு என நலத்திட்டங்கள், கருத்தரங்குகள், கருத்தாய்வுகள் நிகழ்த்த ஆலோசனைகள் கூறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இவர் பணிக்கப்பட்டுள்ளார். மேலும், சம ஊதியச் சட்டத்தினை அமலாக்கம் குறித்த பணியும் இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் மறு வாழ்வு நிதி ஏற்படுத்துதல்

பொதுவாக நவீனப்படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிறுவனங்களினாலோ ஆட்குறைப்பு அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது.

எனவே, அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை கண்டறிந்து அவ்விதம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டிய நிலையுள்ளது. அவற்றுள் ஒன்றாக அரசால் கண்டறியப்பட்டதுதான், அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென வகுக்கப்பட்ட நல நிதித் திட்டம் ஆகும்.

பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் நிறுவனங்களுக்காகவே, சமீபத்தில் அரசு ஒரு புதிய தொழிற்கொள்கையினைப் போதுமான நிதி சலுகைகளுடன் அறிவித்துள்ளது. இப்புதிய தொழிற்கொள்கையினால் தொழிலாளர் புனர்வாழ்வு நிதியினைத் தொடங்கவும், இந்த நிதியினைக் கொண்டு நிறுவனங்களைச் சீரமைக்கும் போது அதில் உள்ள தொழிலாளர்கள் பயனடைய ஏதுவாகும். இந்த நல நிதியை எவ்வாறு அமைப்பது மற்றும் அமல்படுத்துவது என்பது பற்றிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து செயல்படுத்தும். இந்த நல நிதிக்கு ரூ.50 கோடி நிதி உதவி அளித்து உதவும்படி மைய அரசை தமிழக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

பீடித் தொழிலாளர்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்

பீடித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகளை அவர்களைப் போய்ச் சரிவர சேர்வதற்கெனவும், பீடித் தொழிலாளர்களுக்கென நிறுவனங்களை தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்துவது பற்றி அரசு சிந்தித்து வருகிறது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டும், மூலதனம், பணியாளர் அமைப்பு மற்றும் விற்பனை நிலைகளைக் கருத்திற்கொண்டும் ஒரு வரைவுத் திட்டத்தினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல வாரியம்

தொழிலாளர்களின் நலனுக்காகக் கடந்த ஓராண்டில் கீழ்க்கண்ட இடங்களில் இவ்வரசு தொழிலாளர் நல மையங்கள்/குழந்தைகள் காப்பகங்கள்/படிப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.

1. தேனியிலுள்ள பழனிச் செட்டிப்பாளையம்.
2. ஈரோட்டில் உள்ள பள்ளிப்பாளையம்.
3. இராஜபாளையத்திலுள்ள துலுக்கப்பட்டி (குழந்தைகள் காப்பகம்)
4. வடலூர் (படிப்பகம் மற்றும் குழந்தைகள் காப்பகம்)

தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பொறியியல் கல்லூரி அமைத்தல்

கல்வித் தகுதியின் அடிப்படையில் தற்போது தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளைப் பொறியியல் கல்லூரியில் சேர்க்க இயலாத நிலை உள்ளது. மேலும், சுய பொருளாதார அடிப்படையில் இயங்கும் பொறியியல் கல்லூரிகளிலும் தங்கள் குழந்தைகளைச் சேர்த்துப் படிக்க வைப்பதற்குப் போதிய பொருளாதார வசதி இல்லாத நிலையிலேயே தொழிலாளர்கள் காணப்படுகிறார்கள். தொழிலாளர்களின் இந்த இக்கட்டான நிலையிலிருந்து அவர்களை மீட்கும் பொருட்டாகவும், அவர்களது குழந்தைகளும் பொறியியல் பட்டம் பெற்று பொறியாளர்களாக உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக, தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகவே ஒரு பொறியியல் கல்லூரி தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

தற்போது சுமார் 12 இலட்சம் தொழிலாளர்கள் தொழிலாளர் நல நிதியில் சந்தா செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி ரூ.250-ஐ 5 மாத சுலப தவணைகளில் பிடித்தம் செய்யவும், நிர்வாகத்திடமிருந்தும் அவர்கள் விருப்பப்படி தொகை வசூலித்து பொறியியல் கல்லூரி தொடங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனால் சுமார் 15 கோடி ரூபாய் வசூலாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூபாய் 8 கோடி பொறியியல் கல்லூரி ஆரம்பிப்பதற்கும், மீதமுள்ள தொகை நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டி பொறியியல் கல்லூரி நடத்துவதற்கான செலவிற்குப் பயன்படுத்தப்படும். ●

வீட்டு வசதித் துறை ஆற்றிடும் வியத்தகு பணிகள்

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர்

டி.எம். செல்வகணபதி

" வீட்டு வசதித்துறை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் - ஆகியவற்றின் கடந்த ஓராண்டுக் காலப் பணிகளைத் தொகுத்து வழங்கும் கட்டுரை இது. "

உண்ண உணவு, உடுத்த உடை, வசிக்க வீடு ஆகிய மூன்றும் மக்களின் முக்கியத் தேவைகளாகும். இவற்றில் ஆழ்ந்த கவனத்தோடு செயல்பட்டு வரும் தமிழக அரசு எல்லோருக்கும் வீட்டு வசதி கிட்டச் செய்வதில் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1961-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, மாநிலம் முழுவதுமாகச் செயல்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 23,170 குடியிருப்புகளை ஏற்படுத்தி உள்ளது. இவற்றில் வீடுகள், மனைகள் மற்றும் அடுக்குமாடி வீடுகளும் அடங்கும்.

குறைந்த வருவாய் பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டமானது ஆண்டொன்றிற்கு ரூ.12,601 முதல் ரூ.26,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீடு ரூ.50,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 9,287 குடியிருப்புகளை (வீடுகளும் மற்றும் மனைகளும்) கட்டியுள்ளது.

நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப்பிரிவினர்க்காக வீட்டு வசதித் திட்டம்

நடுத்தர வருவாய்ப்பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டம் ஆண்டொன்றிற்கு ரூ.26,401 முதல் ரூ.44,400 வரை வருமானமுள்ள குடும்பத்தினர் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மதிப்பீடு ரூ.1,75,000 ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டங்களின் கீழ் 4,952 குடியிருப்புகள் (மனைகள் வீடுகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள்) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துச் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்டப்படும் முதல் கட்டமாக 77 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 7 நகரங்களில் ரூ.1,042 இலட்சம் மதிப்பீட்டில் 1,230 வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 6 நகரங்களில் ரூ.1,555 இலட்சம் மதிப்பீட்டில் 2,126 வீடுகள் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கவிருக்கின்றன. மீதமுள்ள நகரங்களில், நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை, மதுரை, சேலம், கோயம் புத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் ஆகிய 10 முக்கிய நகரங் களில் 967 எக்டேர் பரப்பளவில் ரூ.246.41 கோடி மதிப்பீட்டில் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டத் தின் கீழ் 70,000 மனைகளை உருவாக்கி வருகிறது. இதற்காக திட்டக்காலம் 1988 அக்டோபர் மாதம் முதல்1995 மார்ச் மாதம் முடிய ஆகும்.

இதுவரை 24 திட்டங்கள் உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு உள்ளன. 31.3.1991 முடிய 6 திட்டங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. மேலும் 4 திட்டங்கள் உருவாக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இத் திட்டத்தில் மேலும் 8000 தன் னிறைவு மனைகள் திட்ட மதிப் பீட்டில் ஏற்பட்ட சேமிப்பின் மூலம் உருவாக்கி மொத்தம் 78,000 தன் னிறைவு மனைகள் உருவாக்க திட்ட மிடப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3,281 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு, 16,000 தன் னிறைவு மனைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம், மாநிலத் தலைநகர் மாவட்டம், வருவாய்க் கோட்டத் தலைமை இடத்தில் அரசு ஊழியர் களுக்கு வாடகைக் குடியிருப்புகள் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டு உள்ளது. அரசின் சார்பில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, குடியிருப்பு களைப் பராமரித்து வருகின்றது. 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 520 அடுக்கு மாடி குடியிருப்புகளைக் கட்டி யுள்ளது.

நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாட்டில் உள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் நிலங்களைக் கையகப் படுத்தி வருகின்றது. நில உரிமை யாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தும் பொருட்டு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறி யாளருக்கு உரிமை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது (அரசு நிலை ஆணை எண் 35 நாள் 8.1.1991) நிலங்களின் விலையை நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சி யாளரைத் தலைவராகக் கொண்ட குழுவின் முன்பு ஒப்புதல் பெறப் படும். இக்குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சியாளரும், இதன் உறுப்பினர்களாக நகர-ஊரமைப்புத் திட்டத்தின் துணை இயக்குநரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியாளரும் இருக்கு மாறும் அரசு உத்தரவிட்டுள்ளது. தனியார் நிலங்களைப் பேச்சு வார்த் தைகளின் மூலம் வாங்குவதைத் துரிதப்படுத்தலாம் என வாரியம் நம்புகிறது. இருந்த போதிலும், பெறுநகர்ப் பகுதியில் நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிலம் கையகப் படுத்தும் நெறிமுறைகள் தொடரப் பட வேண்டும்.

சாதனைகளின் சுருக்கம்

1991-92-ஆம் ஆண்டில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் பல்வேறு திட்டங்கள் மூலமாக ரூ.116.50 கோடி செலவில் 23,170 குடி யிருப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

குடிசைப்பகுதிகளை அகற்றியும் குடிசைப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டும், குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதும் தான் அரசின் கொள் கையாகும். அரசின் கொள்கையைச் செயற்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஏற்படுத்தப் பட்டது.

கடந்த ஓராண்டுக் காலத்தில், மேலே கூறியுள்ள அரசின் கொள் கையைத் திட்டவடிவமாக்கி நிறை வேற்றுவதற்கென, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கீழ்க் காணும் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன.

குடிசை மாற்றுத் திட்டம்

இது, குடிசைப்பகுதிகளை அகற்றி பல மாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கென அரசினால் வகுக்கப் பட்ட நலத்திட்டமாகும். இவ்வாறு கட்டப்படும் குடியிருப்புகள் ஏற் கெனவே குடிசைப்பகுதிகளில் வசித்து வந்த மக்களுக்கு ஒதுக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சென்னை மற்றும் மற்ற நகரங்களில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு ரூ.10.38 கோடி செலவில் 2,666 குடியிருப் புகள் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதிகள் மேம்பாடு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் குடிசை வாழ் மக் களின் மேம்பாட்டிற்காகச் சாலைகள், குடிநீர், கழிவுநீர், வடிகால் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப் படை வசதிகள் செய்யப்படுவதுடன் மனை உரிமையும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புற, வளர்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதியான இத் திட்டம்,உலக வங்கி நிதியுடன், சென்னை மற்றும் மாநிலத்தின் முக்கிய 9 நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மேற் காணும் நகரங்களில் ரூ.3.50 கோடி செலவில் 12,264 குடும்பங் களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

விரைவுபடுத்தப்பட்ட குடிசை மேம்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் கீழ், சுகாதார மில்லாத குடிசைப்பகுதிகளை மேம் பாடு செய்து அப்பகுதிகளில் சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்தும் பொருட்டு, குடும்பத்திற்கு ரூ.1,500 வீதம் செலவு செய்து, பொது குடி நீர்க் குழாய், பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் தெரு மின்விளக்குகள் அமைக்கப்படுகின்றன. இத்தொகை அரசினால் மானியமாக அளிக்கப் படுகிறது. இத்திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்குள் வராத நகரங்களில் மட்டுமே பொது வாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

இத்திட்டத்தின் கீழ், ரூ.1.50 கோடி செலவில் மற்ற நகரங்களில் உள்ள 10,000 குடும்பங்களுக்கு அடிப்படை வசதியான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள் செய்து தரப்பட்டுள்ளன.

நடைபாதையில் வசிப்போருக்கு வீடுகள் கட்டும் திட்டம்

சென்னை நகரில் நடைபாதை யில் வசித்து வரும் மக்களை அவ் விடங்களிலிருந்து அகற்றி, சென்னைப் பெருநகரத்தின் பல பகுதிகளில் குடி யேற்றம் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடனும் ஹட்கோ நிறுவனம் வழங்கும் கடனுதவியுடனும் அடிப் படை வசதிகளுடன் கூடிய மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு மைய வீடு களும் கட்டித்தரப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ், ரூ.0.34 கோடி செலவில் 1,542 குடும்பங் களுக்கு மனைகளில் மைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இத்துடன், ரூ.0.31 கோடி செலவில் 1,911 குடிசை வாழ் இளைஞர்களுக்கு ஆக்க வளமுடைய பயிற்சி அளிக்கப் படுகிறது.

கடன் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்கள் தாங்களாகவே வீடுகள் கட்டிக் கொள்வதற்காக ரூ.8,000 கடனுதவி வழங்கப்படுகிறது. இக் கடன் மூன்று தவணைகளில் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 3,715 குடும்பங்களுக்கு ரூ.3.04 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தேரு வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.4,150 வீதம் உறைவிட நிலையை உயர்த்தி வழங் கப்படுகிறது. இந்நிதி உதவி கடன் மற்றும் மானிய வடிவில், ரூ.3,150 ஹட்கோவிலிருந்து கடனாகவும், ரூ.800 மற்றும் ரூ.200 முறையே மத்திய அரச மற்றும் மாநில அரசால் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இக்கடன் 10 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தப் படவேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், உறைவிட

நிலையை உயர்த்த கடனாக 4,776 குடும்பங்களுக்கு ரூ.2.02 கோடி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.91 அன்று பார்வையிட்டார்கள். இப்பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி இங்கு வாழும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட வேண்டுமென்று முதலமைச்சரின் ஆணையை நிறைவேற்றும் முகத்தான், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ரூ.82.135 கோடி மதிப்பீட்டில், ஹட்கோ கடனுதவியாக ரூ.69.813 கோடியுடனும், மாநில அரசின் மானியமாக ரூ.12.323 கோடியுடனும் 15,000 குடியிருப்புகளைக் கட்டம் கட்டமாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது. ரூ.4 கோடி செலவில் ஹட்கோ நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைச் செப்பணிடும் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் வீட்டு வசதி சங்கங்களைப் பொறுத்த வரையில், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் பதிவாளர் அதன் நிர்வாகத் தலைமைத் துறை பொறுப்பாளராக அமைந்துள்ளார்.

இத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலமாக மாநில அளவில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தையும், கீழ் மட்டத்தில் முதன்மைக் கூட்டுறவுச் சங்கங்களையும் செயல்படுத்தி வருகின்றது. கடந்த ஓராண்டுக் காலத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்தும் அனைத்துத் திட்டங்களும் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்குச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

கிராமப்புறத்தில் வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் மூலம் வீடு கட்டிக் கொள்வதற்கான நிதி உதவியானது மாநில அரசின் மூலமாக 1978-79-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில், ஒரு வட்டத்திற்கு ஒரு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் என்ற அடிப்படையில் 165 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில், ஒரு வீட்டிற்கு ரூ.1,500 என்ற வீதம் ரூ.450 இலட்சங்கள் அரசிடமிருந்து மானியமாகப் பெற்று, கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 30,000 வீடுகளைக் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஓராண்டில் மொத்த இலக்காகிய 30,000 வீடுகளையும் அரசு கட்டியுள்ளது.

★ சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும்; புறத்தில் உள்ளது வேறு- அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

கிராமப்புறங்களில் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காகச் செயல்படுத்தும் திட்டங்கள்:

கிராமப்புறங்களில் 30,000 வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவி வழங்கும் திட்டப்பணிகளுக்கும் மேலாக, வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1989-90-ஆம் ஆண்டு முதலாகக் குறைந்த வருவாய் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களும் வீடுகள் கட்டுவதற்காகக் கடனுதவி அளித்து வருகின்றன. இதற்காக வீட்டு வசதி இணையம் ஹட்கோவிடமிருந்து நிதி உதவி பெறுகிறது. 1991-92-ஆம் ஆண்டில் குறைந்த வருவாய்ப் பிரிவின் கீழ் 1,504 வீடுகள் கட்டப்பட்டு ரூ.494.00 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதைப் போன்று நடுத்தர வருவாய்ப் பிரிவின் கீழ் 1,789 வீடுகள் கட்டப்பட்டு ரூ.952.00 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டமானது, நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாக மாநிலத்தின் பெரும்பாலான ஊராட்சிகளிலும் மற்றும் எல்லா நகராட்சி பகுதிகளிலும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வில்லங்கம் இல்லாத வீட்டு மனைப் பட்டாக்களை உடைய உறுப்பினர்களே வீடு கட்டுவதற்கான கடனுதவி பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் முதல் ரூ.1.5 இலட்சமும், நகராட்சி மற்றும் மாநகராட்சியின் சுற்றுப் பகுதிகளில் வாழும் பிரிவினருக்கு ரூ.80,000 முதல் ரூபாய் ஒரு இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் நகர்ப்புற வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களால் 9,057 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதற்கு ரூ.111 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.101 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் (சுப்ரா)

கிராமப்புறங்களில் உள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் வீடுகளை மேம்படுத்தும் பொருட்டு, கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு சிறந்த திட்டமாக அரசால் துவங்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதி உதவி பின்வருமாறு:

'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து பெற்று வழங்கப்படும் கடன் ரூபாய் 2,000, இதில் அரசின் மானியம் ரூபாய் 500, பயனீட்டாளரது பங்கு ரூபாய் 500, ஆக மொத்தம் ரூபாய் 3,000.

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் தங்களுடைய வீடுகளை மேம்பாடு செய்வதற்காகக் கடனுதவி அளிக்கப்படுகிறது. அதாவது, ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப்படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவைகளுக்காகக் கடன் உதவி அளிக்கப்படுகிறது.

1991-92-ஆம் ஆண்டில், 10,000 வீடுகள் மேம்படுத்துவதற்காக ரூ.50 இலட்சங்கள் அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதற்காக 10,000 பயனீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் செயல்பாடு சாதனை, நடப்பு நிதியாண்டில் (1992-93) தொடர்ந்து வரப்படும்.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.120.81 கோடி செலவில் 50,484 வீடுகள் கட்டப்பட்டுள்ளன இதற்கு முந்தைய ஆண்டில் (1990-91) ரூ.108.47 கோடி செலவில் 43,554 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் பகுதியில் உருவாகும் எல்லா வளர்ச்சிப் பணிகளுக்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டம் 1971 பிரிவு 49-ன் படி திட்ட அனுமதி வழங்குவதன் மூலம் வளர்ச்சிப் பணிகளை ஒழுங்குபடுத்துகிறது. முழுமைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின் படி திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் நிலுவையில் உள்ள திட்ட அனுமதி வழங்கக் கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களைக் குறைக்கும் நோக்கத்தோடு தனி முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971-இல் கீழ்க்காணும் சில திருத்தங்களைக் கொண்டு வரலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

அ) ஒப்புதல் இல்லாமலும், விதிகளிலிருந்து விலகியும், கட்டியுள்ள கட்டடங்களுக்கு விதிகளை விலக்கி மற்றும் தளர்த்தும் பொருட்டு, ஒரு வரன்முறைக் கட்டணத் தொகை வசூலிப்பது;

ஆ) ஒப்புதல் இல்லாமல் மற்றும் விதிகளிலிருந்து விலகி கட்டியுள்ள கட்டடங்களுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் அளிப்பதை மறுப்பது பற்றி அதற்கான சட்டங்களைத் திருத்துவது;

சென்னைப் பெருநகர் பகுதிக்கான முழுமைத் திட்டத்தின் முதல் பகுதி 1975-1991-இல் ஆண்டிற்குத் தயாரிக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் பகுதிக்கான இரண்டாவது முழுமைத் திட்டம் 1991-2011 தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மறைமலை நகர்த்திட்டம்

மறைமலை நகர்த்திட்டம் 3,300 ஏக்கர் நிலப்பரப்பில் 20 ஆண்டுக் காலத்திற்குள் ஒரு இலட்சம் மக்கள் வாழத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,445 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2,704 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மணலி புது நகர்த் திட்டம்

மணலி புது நகர்த் திட்டம், 1,450 ஏக்கர் நிலப்பரப்பில்

மேதகு மொரிஷியஸ் நாட்டுக் குடியரசுத் தலைவர் திரு. வீராசாமி ரிங்காடு அவர்கள் 3.6.'92 அன்று சென்னைக்கு வருகைதந்தார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரையும், அவரது குடும்பத்தாரையும் மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா ஆகியோர் வரவேற்றனர்.

75,000 மக்கள் 20 ஆண்டுகளுக்குள் குடியேற்றத் தக்க வகையில் பகுதிப் பகுதியாகச் செயல்படுத்தப் படுகிறது. இதுவரை 8,724 மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 1760 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

மத்திய வர்த்தகப் பகுதியில் உள்ள அழுகு பொருள், துணி வகைகள், உணவு தானியங்கள் ஆகியவற்றின் விற்பனைத் விற்பனைத் தலத்தை கோயம்பேட்டிற்கு மாற்றுவதன் மூலம் மத்திய பகுதியில் நெரிசலைத் தவிர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம் ரூ.50.4 கோடி செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2,229 கடைகள் அழுகு பொருள் சந்தைக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளன. பூக்கடைகளுக்கான 456 கடைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. காய்களுக்கான 1,381 கடைகள் முடிவடையும் தறுவாயில் உள்ள.

சாத்தங்காடு என்ற சென்னை நகரின் வடபகுதியில் உள்ள இடத்தில் நவீனமாக அனைத்து வசதிகளுடன் இரும்பு மற்றும் எஃகு மொத்த அங்காடி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.17 கோடி ஆகும். திட்டப் பணிகள் முடிந்து அங்காடி திறக்கப்பட்டு விட்டது. 484 கடைகளுக்கான மனைகள் அதற்குரியவர்களிடம் கொடுக்கப்பட்டு விட்டன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உள் வட்டச்சாலையின் வடபகுதியில், சுமார் 535 ஏக்கர் பரப்புள்ள நிலங்களை கையகப் படுத்தி அதனை மேம்படுத்தும் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.30 கோடிகள்.

தமிழ்நாட்டில் உலக வங்கி உதவியுடன் ரூ.632 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு மாபெரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ரூ.354 கோடி செலவில் சென்னை மாநகருக்கான திட்டப்பணிகள் விரைவாகவும், சீராகவும் நடைபெறச் செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆவன செய்து வருகிறது.

> ★ நாட்டில், கற்றறிவாளர்கள் இருக்கின்றனரோ- அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.
>
> —அறிஞர் அண்ணா

தன்னிறைவு வீட்டுமனைகள், குடிசைப் பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்படுத்துதல், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குப் பேருந்துகள் வாங்குதல், மேலும் உள்ளாட்சி நிறுவனங்கள் வருவாய் வரத்தக்க வசதித் திட்டங்களைத் தீட்டவும், தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம்

முன்னோடி நகர வளர்ச்சித் திட்டம் என்றதொரு புதிய திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில், சென்னையில் தனியாரிடமிருந்து குறைந்த வருவாயினருக்கான தன்னிறைவு, மனைகளை வாங்குதல் மற்றும் அடிப்படை வசதிகள், சமுதாய வசதிகள், வீட்டு மேம்பாட்டு கடனுதவி வழங்குதல் என்பவை அடங்கும். இது ஒரு தனியார் மற்றும் அரசு நிறுவனம் என்ற ஒரு கூட்டு திட்டமாக இருக்கும். இத் திட்டத்தில் சேரும் மனைகள் மேம்படுத்தும் தனியார்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், விலக்கு அளிக்க வழிவகை செய்யும் நோக்கம் உள்ளது. 10,000 மனைகள் ரூ.13.5 கோடி மதிப்பீட்டில் மக்களுக்குத் தரப்பட உள்ளது.

அடையார்-கடற்கரைப் பகுதித் திட்டம்

சென்னையில் கிரீன்வேஸ் சாலையில் 45 ஏக்கர் பரப்பில் அடையாறு கடற்கரைப் பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றினைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் செயல்பாட்டிற்காக அரசு கொடுத்துள்ளது.

இந்த நிலப்பரப்பில், அலுவலகக் கட்டடங்கள், கேளிக்கைகளுக்கான வளாகம், பூங்காக்கள், விளையாட்டு அரங்குகள் முதலியவைகள் உள்ளடங்கிய ஒரு ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சுயசார்பு நகரங்களில் வளர்ச்சித் திட்டம்

தமிழக அரசின் முயற்சியின் விளைவாக, மைய அரசு குடியிருப்பிற்கான ஐக்கிய நாடுகளின் மையத்திற்குச் சுய சார்பு நகரங்களின் வளர்ச்சித் திட்டத்தில், சென்னை நகரை இணைத்துக் கொள்ளப் பரிந்துரை செய்துள்ளது. இப்பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மையம் ஏற்றுக் கொண்டு சென்னை நகரை இத்திட்டத்தில் சேர்த்துள்ளது. தெற்கு ஆசிய நாடுகளில் சென்னை நகரம் மட்டுமே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. தேவைகளின் அவசரத்திற்கு ஏற்ற வகையில், பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, இனங்கண்டு கொள்ளுதல், நிர்வாகம் தொழில் நுட்பம் மற்றும் அரசியல் நிலையில் செயல் திட்டங்களைத் தயாரித்தல், முக்கியச் செயலாக்கக் காரணங்களின் ஒத்துழைப்பை விழைதல் மற்றும் திட்டத்தைச் செயலாக்க ஒத்துழைப்பை அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

உள்ளாட்சி உதவித் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினால் வசூலிக்கப்படும் திட்ட மேம்பாடு கட்டணத்தின் ஒரு பகுதி சென்னைப் பெருநகரில் உள்ளடங்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவைகளால் மேம்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்குச் செலவிட அளிக்கப்படுகிறது.

சுற்றுப்புற சுகாதாரத் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஜப்பானிய அரசு உதவியுடன் சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டத்திற்கான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

தொழில் நுட்ப ஆய்வுகள்

சென்னைப் பெருநகருக்கான போக்குவரத்துத் திட்டம், தயார் செய்ய ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சாலை நெருக்கடி பற்றிய ஆய்வு முன்னேற்றத்தில் உள்ளது.

உணவுத்துறையின் ஒப்பற்ற சாதனைகள்

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

ஜி. விஸ்வநாதன்

> ‘‘தமிழ்நாட்டில் மொத்தம் 21,986 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப்புறங்களில் 17,394 நியாய விலைக்கடைகளும், நகர்ப்புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன.’’

மக்கள் உயிர் வாழ இன்றியமையாதது உணவே ஆகும். இந்த இன்றியமையா உணவுபொருட்களைப் பொது மக்கள் போதுமான அளவிலும் நியாயமான விலையிலும் பெறச் செய்வதே தமிழக அரசின் கொள்கையாகும். ஆக்கப்பூர்வமான பொதுவிநியோக முறையினைப் பராமரிப்பதாலும், மக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கண்காணிப்பதாலும், பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துவதாலும், மாநிலத்தில் நுகர்வோர் இயக்கத்தை ஊக்குவிப்பதாலும் அரசு மேற்கண்ட தனது கொள்கையை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடிகிறது.



மேற்கண்ட தமிழக அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதே உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியாகும். இக் கொள்கையினை இத்துறை வெற்றிகரமாகச் செயலாக்க உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் உணவு பொருள் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுக் காவல்துறை துணைத் தலைவர் ஆகிய இரண்டு துறைத் தலைவர்களுடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகிய 2 அரசு நிறுவனங்கள் உறுதுணையாக உள்ளன. 1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் ஆகியனவும் இத்துறைக்குப் பெரிதும் உதவுகின்றன.

உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கீழ் ஒரு இணை இயக்குநரும் மேலும் 2 துணை இயக்குநர்களும் இயங்கி வருகின்றனர். சென்னை மாநகரம் வடக்கு மற்றும் தெற்கு எனப் பிரிக்கப்பட்டு இரண்டு துணை ஆணையாளர்களின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், சென்னை மாநகரம் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி ஆணையாளரின் கீழ் இயங்கி வருகின்றன. மாவட்டங்களைப் பொறுத்தவரையில் வட்ட மற்றும் மாவட்ட வழங்கல் அதிகாரிகள் உணவுப் பொருள் வழங்கும் பணியினை மேற்கொண்டுள்ளனர்.

1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ், மாநில அரசு பிறப்பித்துள்ள கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்த குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர் உதவுகின்றனர். இந்தக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் காவல் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிலும் மற்றும் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், வனத்துறைக்கான குற்றப் புலனாய்வுக் காவல்துறைத் தலைவர் ஆகியோரின் கண்காணிப்பிலும் இயங்கி வருகின்றனர்.

1972-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் மொத்த நுகர்வோராகச் செயல்பட்டு மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் இந்திய உணவுக் கழகம் மற்றும் மத்திய வர்த்தக கழகம் ஆகியவற்றிடமிருந்து பெற்று கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாயவிலைக் கடைகளுக்கும் வழங்குகிறது. இந்த நிறுவனம் கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவுத் தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டம்

களைச் செயல்படுத்துதல், அதற்கு தேவையான மூலதனம் நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில் நுட்பம் மேலாண்மைச் சேவைகள், ஆலோசனை உதவிபோன்ற பணிகளைச்செய்து வருகின்றது இந்நிறுவனத்தால் பல் பொருள் அங்காடிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1957-ஆம் ஆண்டு நிறுவப் பட்டு 1958-59-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் விவசாய விளை பொருள்கள், விதைகள், உரங்கள் விவசாயச் சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு அறிவியல் ரீதியிலான சேமிப்பு வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது.

பொது விநியோக முறை

மத்திய அரசு பொது விநியோக முறையின் கீழ், மக்களுக்கு வழங்குவதற்காக அரசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியவற்றை மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறது. இந்த இன்றியமையாதப் பொருட்களை மக்களுக்கு வழங்கும் பொருட்டு தமிழகத்தில் மொத்தம் 21,986 நியாயவிலைக் கடைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 20,916 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் மீதமுள்ள 1,070 கடைகளைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப் புறங்களில் 17,394 நியாய விலைக் கடைகளும் நகர்ப் புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன. மக்கள் சுலபமாகச் சென்று வாங்கக்கூடிய வகையில் நியாயவிலைக் கடைகளை அமைத்தல் என்பது பொது விநியோக முறையின் நான்கு முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். குறிப்பிட்ட வகை இன்றியமையாப் பொருட்கள் சுலபமாய் கிடைத்தல், மக்கள் வாங்கத் தக்க வகையில் நியாயமான விலையில் கிடைத்தல் ஆகியவை பொது விநியோக மற்ற குறிக்கோள்களாகும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. பொது விநியோகத்தில் நியாய விலைக் கடைகள் நடத்த தனியார் தமிழகத்தில் அனுமதிக் கப்படுவதில்லை. அரசு நிறுவனத்தின் 21,986 நியாய விலைக்கடைகளைத் தவிர மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவைப்படும் இடங்களில் பகுதி நேர நியாய விலைக்கடைகளைத் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர 11 நடமாடும் நியாய விலைக்கடைகள் வட ஆர்க்காடு- அம்பேத்கர், திண்டுக்கல்- அண்ணா, திருநெல்வேலி- கட்டபொம்மன், நீலகிரி, பெரியார், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இயங்கி நெடுந்தூரம் உள்ள, எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் அத்தியா வசதியப் பொருட்களைப் பெற உதவுகின்றன.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பொதுவிநியோகத்தின் மூலம் பயன் அடைகின்றன. அனைத்துக் குடும்பங்களும் நியாய விலைக்கடைகளின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களைப் பெறுவதற்காக அவர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் சுமார் 125 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. இவை இந்த ஆண்டு முடிவு வரை புழக்கத்தில் இருக்கும். குடும்ப அட்டைகளில் உள்ள குடும்பத் தலைவரின் வருமானம் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினைச் சரி செய்யும் பொருட்டு சமீபத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரு வினாப்பட்டியல் தரப்பட்டு சரியான விவரங்கள் அவர்களிடமிருந்தே பெறப் பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளைக் களைய தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொதுவிநியோக்த்தில் வழங்கப்படும் பொருட்களின் முக்கியமானது அரிசியாகும். ஆனால், மாநிலத்தில் அரிசி உற்பத்தித் தேவையை நிறைவு செய்ய இயலாதவாறு பற்றாக்குறையாக உள்ளது பொதுவிநியோகத்திற்கு தேவையான அரிசி கீழ்க்காணும் முறைகளில் பெறப் படுகிறது;

காவிரி டெல்டா பகுதியில் ஏக போகக் கொள்முதல் முறையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்தல்;

அறுவடைக்காலங்களில், தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்கள் முழுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர், உடையார் பாளையம், முசிறி, குளித்தலை, லால்குடி, திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில், அறந்தாங்கி வட்டங் களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்கிறது.

1.7.1991 முதல் 14.9.1991 வரையிலான ஒரு சிறிய இடைவெளி தவிர, 1991-ஆம் ஆண்டு முழுவதும் காவிரி டெல்டாப் பகுதி முழுவதும் ஏகபோகக் கொள்முதல் அமலில் இருந்தது. 1992-ஆம் ஆண்டு சம்பாப் பருவம் 16.12.91-இல் ஆரம்பித்து 30.6.92 வரை தொடரும். இதில் 31.5.92 வரை பெறப்பட்ட நெல்லின் அளவு 12.15 இல்ட்சம் டன்களாகும். 1990-91-ஆம் ஆண்டின் சம்பாப் பருவத்தில் பெறப்பட்ட நெல்லின் அளவு 10.50 இலட்சம் டன்கள்தான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய அரசு ஒதுக்கீடு

மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் பொது விநியோகம் மூலம் வழங்குவதற்காக மாநிலங்களுக்கு அரிசி ஒதுக்கீடு செய்கிறது. மாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் 75 ஆயிரம் டன் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு பொது விநியோகத்தில் அரிசியின் நுகர்வு மிக அதிக அளவான 17.31 இலட்சம் டன்னை எட்டியுள்ளது. 1990-ஆம் ஆண்டின் நுகர்வு 12.33 இலட்சம் டன்கள். அதிக அளவு ஏகபோக கொள் முதல் மற்றும் மத்திய அரசின் கூடுதல் ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம் இந்த அதிக அளவு நுகர்வினைச் சமாளிக்க முடிந்தது.

அரிசி ஆலையாளர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து வர்த்தக லெவி மூலம் கொள்முதல்

தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நெல்/அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் பகுதி 3-இன் படி உரிமம் பெற்ற ஆலையாளர்கள் மற்றும் வணிகர் களிடமிருந்து அவர்களிடம் உள்ள இருப்பில் 50 சதவிகிதத்தை அரசு நிர்ண யிக்கும் கொள்முதல் விலையில் லெவி யாகப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் வர்த்தக லெவி மூலம் பெறப்பட்ட அரசியின் அளவினைக் காணும்போது மிகக் குறைந்த அளவே, அதாவது சராசரியாக 6 சதவிகிதம்தான் பெறப்பட்டுள்ளது என்பதை அறியலாம். இந்தச் சிறிய அளவு அரிசியினைப் பெற பெருத்த அளவில் பணமும் நேரமும் செயல் திறனும் விரயமாகிறது. மேலும் பல முறைகேடுகளுக்கும் இம் முறை இடமளிக்கிறது. மேலும் மாவட்டங் களிடையே [illegible] அரிசி எடுத்துச் செல்வது இயலாத நிலையில் அரிசி இருப்புக் குறைவான மாவட்டங்களிலும், [illegible] மாவட்டங் களிலும் வெளி அங்காடிகளில் அரிசி விலை [illegible] அரிசி [illegible]

1.50 ரூபாய் வரை குறையுமென உறுதி அளித்தனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசு 29.1.92 முதல் வர்த்தக லெவி முறையினை நிறுத்தி வைத்தது- வெளி அங்காடியில் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேலும் குறைந்துள்ளது. அரசின் மேற் கண்ட முடிவு சரியானதெனக் காட்டும். வர்த்தகர்கள் அரிசி அதிகமுள்ள மாவட்டங் களிலிருந்து தேவையான மாவட்டங் களுக்கு அரசியினை எடுத்துச் செல்ல முடிந்ததால் தென் மாவட்டங்களில் அரிசி விலை குறைவு பெருமளவில் உள்ளது.

மேற்கூறிய முறைகளில் பெறப்படும் அரிசி பொதுவிநியோகத்திற்குப் போதா விட்டால் வெளிச்சந்தையில் வாங்குதல்

பொது விநியோக முறையின் தேவைகளை மேற்கண்ட கொள்முதல் மூலம் சரிகட்ட முடியவில்லையெனில், மத்திய அரசின் அனுமதியைப் பெற்று அரசு வெளிச்சந்தையில் அரிசி வாங்குகிறது.

மத்திய அரசு அரிசியின் விலையை அவ்வப்போது ஏற்றினாலும்கூட மாநில அரசு அரிசியின் விலையை ஏற்றாமல் உள்ளது. தற்போது சாதாண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்ற விலையிலும் சன்ன மற்றும் மிகச் சன்ன அரிசி கிலோ ஒன்றுக்கு 3.00 ரூபாய் என்ற விலையிலும் விற்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி விற்கப்படுவதால் ஒவ்வொரு ஆண்டும் அரசு அதிகத் தொகை மானியமாக அளிக்கவேண்டி உள்ளது. 1992-93-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இதற் காக 343 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. பொது விநியோக முறையில் அரிசி தற்போது பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 4 கிலோ மற்றும் சிறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ என்ற அளவில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிற்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகிறது.



[illegible] மொழியின் [illegible] தமிழில் கல்வி [illegible] விடலாம் [illegible] எவருக்காவது [illegible] மாற்றிக் [illegible]

மாதந்தோறும் பொது விநியோக முறை மூலம் வழங்குவதற்காக மத்திய அரசு மாநிலத்திற்கு 30 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமை வழங்குகிறது. கிலோ ஒன்றுக்கு 2.60 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது.

மத்திய அரசு இம்மாநிலத்திற்கு நபர் ஒருவருக்கு 425 கிராம் என்ற விகிதத்தில் 1986-ஆம் ஆண்டில் இருந்த மக்கள் தொகை 530 இலட்சம் என்ற கணக்கில் 1.2.1987 முதல் மாதந்தோறும் 22,500 மெட்ரிக் டன்கள் லெவி சர்க்கரை ஒதுக் கீடு செய்து வருகிறது. ஆனால் மக்கட் தொகை கணக்கெடுப்புத் துறை இயக்கு நரின் கணக்குப்படி 1.3.91-இல் இம் மாநிலத்தின் மக்கட் தொகை 557 இலட்சமாகும். எனவே, மாநிலத்தின் தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே பற்றாக்குறை உள்ளது. ஆகவே, மைய அரசின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. இந்த நிலையில் மாநிலத்தின் அனைத்துக் குடும்ப அட்டைதாரர் களுக்கும் சர்க்கரையைச் சீராக வழங்க வேண்டும் என்பதற்காக, இவ்வரசு நபருக்கு ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ என்று நிர்ண யித்து 1.10.1989 முதல் நடைமுறைப் படுத்தி வருகிறது. மாதம் ஒன்றுக்கு இம் மாநிலத்திற்கு 31 ஆயிரம் மெட்ரிக் டன் சர்க்கரை வழங்க வேண்டும் என மத்திய அரசை இவ்வரசு கேட்டு வருகிறது. பொது விநியோகத்தில் சர்க்கரையின் விலை 6.90 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ பாமாலின் வழங்கினால்கூட இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13 ஆயிரம் டன் பாமாயில் தேவைப்படுகிறது. அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மத்திய அரசு பாமாலின் இறக்குமதியை வெகுவாகக் குறைத்துவிட்டது. இதன் காரணமாக இம்மாநிலத்திற்கும் பாமாலின் ஒதுக்கீடு வெகுவாகக் [illegible] [illegible] சில மாதங்களில் பாமாலின் ஒதுக்கீடு செய்யப்படவே இல்லை. பொது விநியோக முறையின் மூலம் பாமாலின் வழங்கப்படாதது பொதுமக்களுக்கு ஒரு

பெரும் குறையாக இருந்ததோடு, வெளி அங்காடியில் சமையல் எண்ணெயின் விலை வெகுவாக உயர ஆரம்பித்தது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பொது விநியோகத்தில் பாமோலின் வழங்குவதற்காக மாநில அரசு நேரடியாக அதனை இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மேற்கொண்டார். அவரது பெரு முயற்சியின் காரணமாக மத்திய அரசின் இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் விலையை ரூபாய் நாணயத்தில் அளிக்கும் திட்டத்தின் கீழ் 18,000 மெட்ரிக் டன்கள் பாமோலின் இறக்குமதி செய்ய முடிந்தது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதியும் பெறப்பட்டது. இந்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசால் குடும்ப அட்டைதாரர்களுக்கு, உதிரி எண்ணெய் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயித்திருந்தாலும் கூட, கிலோ ஒன்றுக்கு 22.50 ரூபாய்க்குப் பாமோலின் வழங்க முடிந்தது.

பொது விநியோக மூலம் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக, ஆண்டினை குளிர்காலம், கோடைகாலம், மழைக் காலம் என மூன்றாகப் பிரித்து மத்திய அரசு மாநிலங்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குகிறது. சென்னை அதன் புறநகர் பகுதிகள் மற்றும் மாவட்டத் தலைநகரங்கள் ஆகியவற்றில் மாதம் ஒன்றுக்குக் குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும் மற்ற நகராட்சி பகுதிகளின் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 6 லிட்டர் வீதமும், பேரூராட்சிகள் மற்றும் நகரிய பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப் படுகிறது. விலை லிட்டர் ஒன்றுக்கு 2.80 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 530 மொத்த மண்ணெண்ணெய் வணிகர்கள் உள்ளனர். நியாயவிலைக் கடைகளைத் தவிர சுமார் 2,900 தனியார் சில்லறை வணிகர்கள் மண்ணெண்ணெய் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். சில்லறை விற்பனையாளர் பதிவுச் சான்றிதழ் பெற்று இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறார்கள், இவர்கள் தவிர, 2,800 கை வண்டிக்காரர்கள் குடும்ப அட்டைதாரர்களின் அதிகப்படியான மண்ணெண்ணெய் தேவையை நிறைவுசெய்கிறார்கள்.

சிறு வணிகர்கள் மற்றும் தேநீர்க் கடைகள் வைத்திருப்பவர்கள் தங்களது மண்ணெண்ணெய்த் தேவைக்கு கைவண்டிக் காரர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இந்த சிறு வணிகர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு பொறுப் பேற்றபின் இவர்களுக்கு மாதத்திற்கு 30 லிட்டருக்கு மேற்படாமல் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் விலையில் மண்ணெண்ணெய் வழங்கலாம் என ஆணையிட்டுள்ளது. இது சோதனை முறையில் தற்போது சென்னை, மதுரை நகரங்களில் அமல்படுத்தப்படும்.

இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதுமாக எடுக்கப் பட்டு விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதில் இவ்வரசு உறுதிகொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கணிப் பொறி மேலாண்மைத் தகவல் முறை அரசால் உருவாக்கப்பட்டு இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறையிலுள்ளது.

மக்களுக்குப் பொது விநியோகம் மூலம் வழங்கப்படும் இன்றியமையாதப் பொருட்கள் நல்ல தரத்துடனும் சரியான எடையுடனும் வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு அரசு நியாய விலைக் கடைகள் அளவிலும், வட்ட அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1.6.92 அன்று தலைமைச் செயலகத்தில்- ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரம் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழிப்புப் பணிக்குழுக்கள் அமைத்துள்ளது. எடைக் குறைவினைத் தவிர்க்கும் பொருட்டு அரிசி நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலேயே தரப் படுத்தப்படுகிறது. கடைகளின் மீதான மேற்பார்வை வலுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடை பணியாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. விழிப்புப் பணிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் கடமைகள், செயல்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கட்டளைகளுக்கிணங்க வலிவூட்டப்பட்ட பொது விநியோகத் திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதி போன்ற பகுதிகளில் 1.1.1992 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் குடும்ப அட்டை பெறாதவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான அனைத்து உள்ளமைப்புகளும் ஏற் படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து நெல் மற்றும் அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைக் குறித்து பெறப்படும் தகவல்களைப் பதிவு செய்ய ஜார்ஜ் டவுன் மண்டலத்தில் உள்ள உணவுபொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப் பட்டுள்ளது. 1991-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1992-ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 15 நபர்களை 1980-ஆம் ஆண்டு கள்ளச்சந்தைத் தடுப்பு, இன்றியமையாப் பொருட்கள் வழங்கலை பராமரித்தல் சட்டத்தின் கீழ் காவலில் வைத்தனர். உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டு 17,828 சட்டபூர்வ மாதிரிகள் பகுப் பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1,179 மாதிரிகளில் கலப்படம் செய்யப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதே காலத்தில் 1,015 இனங்களில் குற்ற வழக்குகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் இந்த காலத்தில் ரூபாய் 1.96 இலட்சம் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. 1991-ஆம் ஆண்டில், 1977-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 6,838 குற்ற வழக்குகளும், 1985-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள்



★ சமுதாயத்தில் மக்கள் வாழ்வதற்காக ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயத்தை அமைக்க வேண்டும்; சமுதாயத்திலே பொருளாதாரத்தையும் சமுதாய அமைப்பையும் சமுத்துவ நிலைக்குக் கொண்டுவர வேண்டும்; சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

டாக்டர் எம்.ஜி.ஆர்.

(செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1,015 குற்ற வழக்குகளும் அனுமதிக்கப் பட்டன. இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின் கீழ், முறையே 6.69 இலட்சம் ரூபாய் மற்றும் 22.86 இலட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப் பட்டது.

விலை ஏற்றத்தை தடுத்தல்

வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களின் விலையை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதனால் இயல்பு மீறிய விலை ஏற்ற இறக்கம் ஏற்படும்போது சரியான நடவடிக்கை எடுக்க முடிகிறது. உயர்ந்து வரும் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு விலைகளுக்கான குழு ஒன்றினை அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளின் படி, வெளி அங்காடியில் பொருட்களின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் பருப்பு, மிளகாய், தனியா, கடுகு, மிளகு, வெல்லம், தேயிலை போன்ற 27 பொருட்களை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்கி வெளி அங்காடி விலையை விடக் குறைந்த விலையில் விற்று வருகின்றன. இவை தவிர கட்டாயமாகவோ அல்லது தாமாகவோ உணவுப் பொருட்களின் விலையினை வியாபாரிகள் குறைக்க செய்வதற்காக, அரிசி, மிளகாய் வற்றல், சமையல் எண்ணெய், பயிறுவகைகள், காய்கறிகள் வியாபாரிகளுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. வர்த்தக லெவியினை 29.1.1992 முதல் நிறுத்தி வைத்ததும், விலை உயர்வினைத் தடுப்பதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியே ஆகும். இதனால் லெவி அங்காடியில் அரிசி விலை குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது. இந்தப் பலமுனை நடவடிக்கைகள் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக குறைந் துள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு

1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி, கீழ்க்கண்ட அமைப்புகளை இம்மாநில அரசு உருவாக்கியுள்ளது.

1. மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு;
2. மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம்;
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்.

நலத்திட்டங்கள்

இத்துறையின் மேற்கண்ட பணிகளைத் தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதிய சத்துணவுத் திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவற்றைச் சத்துணவு மையங்களில் நேரிடையாக வழங்கும் பணியினைச் செய்து வருகிறது. மேலும் பணியாளர் நலத்திட்டத்தின் கீழ் காவல் துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறைப் பணியாளர்களுக்கு அரசு ஆணைகளின் படி இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் இக்கழகம் வழங்கி வருகிறது. மேலும், இலங்கை அகதிகளுக்கும் இன்றியமையாப் பொருட்களை இக்கழகம் வழங்கி வருகிறது●



பணிபுரியும் சிறுவர்களுக்கு நலநிதி



"தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு நல நிதியைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது."

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு, மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு, ஒரு நல நிதியைத் தமிழக அரசு 1.1.'91 முதல் உருவாக்கியுள்ளது.

தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபர்கள், ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2 வீதம் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். 54,924 தீப்பெட்டித் தொழிலாளர்கள் இதனால் பெரும் பயனடைவர். மாநில அரசும் இதற்கு இணையாகத் தன் பங்காக, ஆண்டு ஒன்றிற்கு ஒரு தொழிலாளிக்கு ரூ.2 வீதம் அளிக்கும். தற்போது இந்தத் தொகையை ரூ.2-லிருந்து ரூ.10 ஆக உயர்த்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தைப் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. காமராசர், சிதம்பரனார், திருநெல்வேலி கட்டபொம்மன், வடஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டங்களில், ஏற்கெனவே அமலிலுள்ள இந்தத் திட்டம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் தற்போது விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும்பொருட்டு, எந்த மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிக அளவில் அமைந்துள்ளனவோ அம்மாவட்டங்களில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இந்த அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் குழு மற்றும் தனி நபர் விபத்து மற்றும் ஆயுள் ஈட்டுறுதித் திட்டம் ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டம் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 10-லிருந்து 65 வயது வரையிலுள்ள தொழிலாளிகளுக்குப் பொருந்தும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சந்தாத் தொகை ஆண்டிற்கு ஒரு நபருக்கு ரூ.6 ஆகும். இந்தத் தொகையைத் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் கொடுக்கின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் ஒருவர் உச்சவரம்பாக ரூ.50,000/- பெற முடியும். 1.7.'91-லிருந்து தேசியக் காப்பீட்டுக் கழகத்தினரால் இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறது.

பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறுவர்கள் பணிபுரிவதைத் தடுக்கும் பொருட்டு, மேற்படித் தொழிற்சாலைகளில் சோதனைகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களை முடுக்கிவிடுமாறு தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளருக்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன. மேலும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர், வேலைசெய்யும் தொழிலாளர்களின் வயது பற்றிய சான்றிதழ்களைக் குறிப்பிட்ட படிவத்தில் பராமரித்து வருகின்றனரா என்பதைக் கண்டறியும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பதற்காகத் தொழிலாளர்களால் வேண்டப்படும் வயதுச் சான்றிதழ்களை, அவர்களது பிறந்த தேதி சான்றிதழ்களுடன் ஒப்பிட்டுச் சரி பார்த்து, பின்னர் வயதுச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும் என்று கிராம நிர்வாக அதிகாரிகளுக்கும், வட்ட ஆட்சியருக்கும் தக்க அறிவுரைகள் வழங்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்கள்.

அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளிகளுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சிவகாசியில் ஒரு பயிற்சி நிலையம் நடப்பு ஆண்டில் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டது. அரசும் இந்தப் பயிற்சி நிலையத்தைத் துவக்க தற்போது அனுமதி அளித்துள்ளது.

கடந்த 4.3.'92 அன்று மண்டலத் தொழிலாளர் நிலையம், அடையாறு, சென்னை-20, என்னும் இடத்தில், இத்துறையினரால் 'தேசியப் பாதுகாப்பு நாள்' கொண்டாடப்பட்டது. அப்போது 'பாதுகாப்பு மேம்பாடு' பற்றிய ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

நலிந்தோர் நலம் பேணும் அரசு

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

இந்திர குமாரி

"சமூக நலத்துறை, நலிந்தோர் நலம்பேண பல்வேறு பணிகளைச் சிறப்புடன் ஆற்றிவருகின்றது. பெண்கள் நலம், குழந்தைகள் நலம் எனும் இரு பெருந்திட்டங்களை இரு கண்களாகப் போற்றிவரும் இத்துறை, ஊனமுற்றோர், முதியோர் நலம் குறித்தும் முழு முயற்சியுடன் செயலாற்றி வருகிறது."

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீ நிற்கும் உலகு''

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வழிநின்று, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஐந்தரைக் கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, தன்னிகரில்லாத் தலைவியாக விளங்கி செங்கோலோச்சி வருகிறார்கள்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை என்று அழைக்கப்படும் இந்தத் துறையில் நலிந்தோர் நலம் பேணப்படுகிறது; சமுதாயத்தில் பல நூற்றாண்டுக் காலமாகப் புறக்கணிக்கப்பட்டு, வீட்டுக்குள் முடக்கி வைக்கப்பட்டு வந்த பெண்கள், வளரும் வயதில் போதிய ஊட்டச் சத்து நிறைந்த உணவு கிடைக்காமல் வாடும் குழந்தைகள், தங்கள் உடல் ஊனத்தால் அல்லலுறும் ஊனமுற்றோர் என இந்த மூன்று வகைப்பட்டவர்களைக் கவனிப்பதையே தலையாயக் கடமையாகக் கொண்டு செயலாற்றும் இந்தத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இயன்ற அளவுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றார்கள் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சென்ற ஆண்டு இந்தத் துறைக்கு ரூ.345 கோடி ஒதுக்கினார்கள்; இந்த ஆண்டு அதை ரூ.404 கோடியாக, அதாவது ரூ.59 கோடி அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நலிவுற்றோர் நலத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

சமுதாயத்தில் இன்று பெண்களை எதிர்நோக்கி உள்ள பிரச்சினைகள் பல. வறுமை, எழுத்தறிவின்மை, போதிய ஊட்டச்சத்தின்மை, உடல்நலக்கேடு, தாழ்வு மனப்பான்மை, சமுதாயத்தில் சரியான அந்தஸ்து மறுக்கப்பட்டு கொடுமைக்குள்ளாவது போன்றவை அவற்றில் சில. நாடு விடுதலை அடைந்தபின்பு பிரமிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்திருந்தாலும், பெண்களைப் பொறுத்தமட்டில் இந்த வளர்ச்சி எதிர்பார்த்த பலனை எட்டவில்லை.

1. 35 வயதுக்குக்கீழ் இறப்பவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள்தான்.

2. பிரசவத்தின்போது இறந்துபோகும் பெண்களின் எண்ணிக்கை இன்றும் அதிகமாகவே உள்ளது. 70 சதவீத பிரசவங்கள் இன்றும் வீட்டிலேயே நடைபெறுகின்றன.

3. 14 வயது வரை உள்ள பெண்களில், கிராமப்புறத்தில் 47 சதவீதத்தினரும், நகர்ப்புறத்தில் 73 சதவீதத்தினரும்தான் பள்ளி செல்கின்றனர்.

எங்கள் பயணம் தொடர்கிறது;
பணிகள்
துரிதப்படுத்தப்படுகின்றன;
எதிர்ப்பட்ட மிரட்டல்களையும்
உருட்டல்களையும் தவிடு
பொடியாக்கித் தகர்த்து
எறிந்துதான் இந்த ஆட்சி
மக்களாட்சியாக மலர்ந்திருக்கிறது!

4.13 சதவீதம் பெண் தொழிலாளர் மட்டுமே அமைப்பு ரீதியிலான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வேலை செய்யும் பெண்களின் ஆண்டு சராசரி வருமானம் - கிராமப்புறத்தில் ரூ.866; நகர்ப் புறத்தில் ரூ.1,160

இப்படி புள்ளி விவரங்கள் நம் மனதை நோகச் செய்வனவாக உள்ளன. இதயத் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு விழாவிலே குறிப்பிட்டதுபோல இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் தவறானவையாக, பெண்களுக்குச் சாதகமானவையாக இருக்கக்கூடாதா என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

மகளிருக்கு உரிய உரிமைப் பங்கை அவர்களுக்கு அளிக்க வேண்டியது இன்றைய அவசியத் தேவை ஆகும். ஒவ்வொரு பெண்மணியும் உறுதியான தன்னம்பிக்கையைப் பிரதிபலிக்க நாம் உதவ வேண்டும். பெண்களின் ஆக்கப் பூர்வமான திறமைகளை வளர்த்து உருவாக்க வேண்டும். அதன் மூலம் புதிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பணிகளில் அவர்களை ஈடுபட செய்ய வேண்டும். அவர்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்கான புதிய எண்ணங்களையும், கருத்துக்களையும் கண்டுபிடிக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் உயர்ந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

'எந்த நாடு, எந்த தேசம் மகளிரை மதிக்கவில்லையோ, அந்த நாடு அந்த தேசம் என்றும் உயர்ந்த நாடாக ஆனதில்லை. எக்காத்திலும் உயர்ந்த நாடாக ஆகப் போவதும் இல்லை. எந்தக் குடும்பத்தில் பெண் கலையுடன் வாழ்கிறாளோ, அக்குடும்பத்தின் வாழ்வுக்கு வழியுமில்லை, நம்பிக்கையும் இல்லை' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இந்தச் சூழ்நிலையில், சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே, மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்பதையும், சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழும் மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதையும் இந்த அரசின் செயல் இலக்காகக் கொள்ள வேண்டும்' என்பதை டாக்டர் புரட்சித் தலைவி எங்களுக்குக் கோடிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே, சமூக நலத்துறை தன் திட்டங்களை, பெண்கள் முன்னேற்றம் என்ற பாதையில் செலுத்தி வருகின்றது.

பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஆனால், அவை முழுமையாகப் பெண்களை அடைவதற்கும், பெண்கள் தங்கள் உரிமையை உணர்ந்து நிலைநாட்டுவதற்கும் அவர்களிடம் உள்ள இயல்பான கூச்சத்தன்மையும், தாழ்வு மனப்பான்மையும் தடைகளாக உள்ளன. இந்தத் தடைகளை நீக்கி, பெண்களை எழுச்சியுறச் செய்து தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் வண்ணம் அவர்களை ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்குவதே புரட்சித் தலைவி அரசின் கொள்கையாகும்.

கடந்த ஓராண்டுக் கால இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் தமிழக அரசின் சாதனைகள் ஏராளம். இதில் சமூகநலத்துறை தன் பங்காக ஆற்றியுள்ளது குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது.

பெண்கள் நலம்

ஒருங்கிணைந்த பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்பு வசதிகள்

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 20,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ரூ.15 கோடி அளவிலான புதிய திட்டம்.

பெண்களுக்குத் தொழில்பயிற்சி அளிக்கும் ரூ.10 இலட்சம் மதிப்பிலான திட்டம்.

ஆதரவற்ற பெண்களின் திருமணத்துக்கான உதவித்தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரமாக உயர்வு.



இருபதாயிரம் பெண் குழந்தைகளின் எதிர் காலப் பாதுகாப்புக்கு ரூ.4 கோடி முதலீடு.

பணிபுரியும் பெண்களின் நலனுக்காகக் கூடுதலாக விடுதிகள் துவக்கம்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மூலம் தாய்மார்களுக்குச் சுகாதார/ஊட்டச் சத்துப் பாதுகாப்பு.

கருவுற்ற/பாலூட்டும் தாய்மார்களுக்கு உதவித் தொகை ரூ.200- லிருந்து ரூ.300 ஆக உயர்வு.

சத்துமாவு, தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெண்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு.

குழந்தைகள் நலம்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் தர்மபுரி உட்பட மேலும் 4 மாவட்டங்களுக்கு விரிவாக்கம்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ரூ.2 கோடி மதிப்பில் புதிய பாத்திரங்கள்.

சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்குக் கூடுதல் புரதச்சத்து கிடைக்க சோயா மாவு சேர்ப்பு

ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கிப் பயிலும் குழந்தைகளுக்கு [illegible] உயர்வு. அவர்களுக்கு நூலக வசதி, [illegible] பயிற்சி.

சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்குச் சர்க்கரைப் பொங்கல்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கட்டடங்களைப் பழுதுபார்க்க, புதுப்பிக்க சிறப்புத் திட்டம்.

ஊனமுற்றோர் நலம்

ஊனமுற்றோர் நலனுக்கெனத் தனித்துறை.

வேலையில்லாத பார்வையற்றோருக்கு வழங்கும் உதவித்தொகை மேலும் ரூ.50 உயர்வு.

போலியோ நோய்த் தடுப்பு, மறுவாழ்வுத் திட்டம் தீவிரப்படுத்துதல்; தர்மபுரி மாவட்டம் முழுவதிலும் நிறைவேற்றம்.

காதுகேளாதோர் பள்ளிகளுக்குத் தொலைக் காட்சி பெட்டியும், பார்வையற்றோர் பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டியும் வழங்குதல்.

பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளிக்கு ரூ.11 இலட்சம் மதிப்பில் புதிய பிரெய்லி அச்சு இயந்திரம்.

ஊனமுற்றோர்களுக்குக் கருவிகள் - உபகரணங்கள் வாங்கி அளிக்க ரூ.35 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு.

பார்வையற்றோர்களுக்கு ரூ.800 ஊதியத்தில் நாற்காலி பின்னும் வேலை.

தனியார் துறையில் ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதை ஊக்குவிக்க முதலமைச்சர் பதக்கங்கள்.

சிறப்புப் பள்ளிகளில் கூடுதலாக ஆசிரியர் பதவியிடங்கள்; உதவித் தொகை அதிகரிப்பு.

சென்னைக்கருகே முட்டுக்காட்டில் ஊனமுற்றவர்களின் நலனுக்கான தேசிய மையம் அமைக்க முயற்சி.

முதியோர் நலம்

முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.50-லிருந்து ரூ.75 ஆக உயர்வு.

வாரம் ஒருமுறை ஒரு கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம் மீண்டும் துவக்கம்.

ஆதரவற்ற முதியோர் நலனுக்காக முதியோர் இல்லங்கள் தொடக்கம்.

முதியோர் ஓய்வூதியத் தொகைக்கு விண்ணப்பித்து, காத்திருப்போரில் [illegible] முன்னுரிமை 30 ஆயிரம் இடங்கள் [illegible].

இதுபோக, சத்துணவு ஊழியர்களுக்கு ரூ.10, ரூ.20 என மாத ஊதிய உயர்வு. இப்படி மாண்புமிகு

முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்துள்ள திட்டங்கள் ஏராளம்.

மேலே குறிப்பிட்ட திட்டங்களுள் பெரும் பாலானவை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தாயுள்ளத்தில் உதித்த் வையே. திங்கட்கிழமைதோறும் ஒவ்வொரு மாவட்டமாகப் பொதுமக்களைச் சந்தித்து அவர் களின் குறைதீர்க்கும் நடவடிக்கையை மேற் கொண்டு மனுநீதிச் சோழன் வரலாற்றை மீண்டும் படைத்து வருகிறார்கள், நமது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அப்போது தன்னிடம் மூன்று சக்கரவண்டி, சக்கர நாற்காலி போன்றவை கேட்டு வரும் ஊனமுற்றவர்களின் தேவையைக் கணித்து, ஆண்டு ஒதுக்கீட்டை ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.60 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டார்கள்.

காணார்க்கும் கண்டார்க்கும்
களிப்பருளும் களிப்பே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும்
வரமளிக்கும் வரமே!

என்ற வள்ளலார் வரிகள் இன்று நம் இதய தெய்வத்துக்கு முற்றிலும் பொருந்தும். மக்களைச் சந்திக்கும் இந்தத் திட்டத்தில் இன்னொரு புரட்சி யையும் நமது முதல்வர் இப்போது செய்திருக் கிறார்கள். ஒரு திங்கட்கிழமையன்று தன்னிடம் மனு கொடுப்பவர்களில் தகுதியுடையவர்களுக்கு அடுத்த திங்கட்கிழமையன்று தன் திருக்கரங் களாலேயே உதவிகளை அளிக்கும் வழக்கத்தை மேற்கொண்டு அதை நிறைவேற்றியும் வருகிறார்கள்.

சமூகநலம், சத்துணவுத்துறையின் அமைச் சராகப் பணியாற்றும் ஓர் அரிய வாய்ப்பை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எனக்கு அளித்திருக்கிறார்கள். இதை என் வாழ் நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக நான் கருதுகிறேன்.

தமிழகத்தில் வாழும் கோடானு கோடி மக் களின் நம்பிக்கை நட்சத்திரமாக, கலங்கரை விளக்கமாக, பொற்காலச் சிற்பியாக, விளங்கும் அவரின் சிந்தனையில் உதித்த திட்டங்களை இந்தத்துறை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வருகின்றது.

தமிழக வரலாற்றின் பொன்னேட்டில் இடம் பெற்று விளங்கப்போகும் இந்த ஆட்சியில் ஏழை, எளியவர், குழந்தை, தாய்மார், ஊனமுற்றவர் ஆகியோர் பெரும் சிறப்பை, வளமான வாழ்வை எய்துவர் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த இலட்சியப் பயணத் தின் ஆண்டு நிறைவு நாளில் அவர்களின் ஆணை என்னும் அடிச்சுவட்டை ஒட்டி, சமூகநலத்துறை நடையிலும் என்பதைத் பெருமையோடும் உறுதியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். ●

“ கிராமக் கைவினைஞர்களுக்கு
வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில்
கதர் கிராமத் தொழில்கள்
பெருமளவில் வளர்ந்து வருகின்றன. ”



தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், ஊரக வளர்ச்சியில் ஈடு பட்டுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப் புடன் கிராமப் பகுதிகளில் கதர் கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களை வகுத்து, வளர்ச்சியுறச் செய்து, ஒருங்கிணைத்துச் செயல்படுத் தும் நோக்கத்துடன் 1.4.1960-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

வாரியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு

அ. ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல்.

ஆ. உள்ளூர்ப் பகுதிகளில் கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி விற்பனை செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.

இ. மக்களிடம் தற்சார்பு நிலையை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்வை வளர்த்தல்.

மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர்
எஸ். நாகூர் மீரான்

கண்ணுக்கினிய கதர் உற்பத்தி

பம்பாயில் செயல்படும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள 96 கிராமத் தொழில்களில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 57 கிராமத் தொழில்களை கீழ்க்காணும் மூன்று அடுக்கு முறையில் செயல்படுத்தி வருகிறது.

1. வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகள்
2. வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்
3. வாரியத்தின் நிதி உதவி பெறும் தனி நபர் கைவினைஞர்கள்.

கதர்த் திட்டங்கள், உண்ணா எண்ணெய் சோப்புத் தொழில்கள் ஆகியவை வாரியத்தின் சொந்தத் தொழில் அலகுகளாகச் செயல்படுகின் றன. பனைத் தொழில், கந்தசாரி வெல்லம் தயாரிக்கும் தொழில், பருப்பு, தானிய வகைத் தயாரிப்பு, தும்பு, சுண்ணாம்பு, மூங்கில், பிரம்புத் தொழில் போன்ற தொழில்கள், கூட்டுறவு அமைப்புகள், தனிநபர் கைவினைஞர் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்துத் தொழில்களும் வாரியத்தின் தொழில் பிரிவுகள், தொழில் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் கைவினைஞர் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

கதர்

வாரியம் 694 கிராமிய நூற்பு மையங்

களையும், 82 கதர் உற்பத்தி மையங்களையும் செயல்படுத்தி வருகிறது. கதர் தொழில்கள் மூலம் சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இதில் மகளிர் மட்டும் 37,000 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், கதர் தொழில்கள் மூலமாக கூடுதலாக 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் கீழ் முன்னரே 159 கதர் அங்காடிகள் இயங்கி வருகின்றன. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதிதாக 19 கதர் அங்காடிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரியத்தின் கதர் பிரிவின் கீழ் 22 பட்டு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு ரூ.20.29 கோடியாக இருந்த பட்டு உற்பத்தி, தமிழக அரசின் இந்த ஓராண்டு ஆட்சிக் காலத்தில் ரூ.22.80 கோடிக்கு அதிகரித்துள்ளது. இது 11 சதவிகிதம் அதிகமாகும்.

பெரும்பாலும் கதர் உற்பத்தி அலகுகளும், பட்டு உற்பத்தி அலகுகளும், கிராமிய நூற்பு நிலையங்களும் கிராமப் புறங்களில் அமைந்துள்ளன. புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் 20 தொழிற் கூடங்களும், 6 கிடங்குகளும் ஒவ்வொன்றும் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கட்டடப் பணிகள் முடிந்தவுடன் இதுவரை வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த வாரிய அலகுகள் சொந்தக் கட்டடத்தில் செயல்படும்.

பாலியஸ்டர் நூல் இழைகளை இது வரை கூட்டுறவு நூற்பு ஆலைகளிலிருந்தும் தேசியப் பஞ்சாலைக் கழகத்திலிருந்தும் வாரியம் வாங்கி வந்தது. இப்புதிய அரசு காலத்தில் பாலியஸ்டர் - பருத்தி இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பாலியஸ்டர் பட்டைகள் தயாரிக்கும் அலகுகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் மூலம் தயாரிக்கப்பட்ட பாலியஸ்டர் பட்டைகள் சுமார் 100 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமத் தொழில்கள்

ஊரகப் பகுதிகளில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும், மனித சக்தியையும் முறையாகப் பயன்படுத்தி அப்பகுதிகளில் வறுமையை அகற்றுவதற்கு வாரியம் கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறைந்த மூலதனத்தில் அதிகப்படியான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதே கிராமத் தொழில் திட்டங்களின் சிறப்பாகும். இவ்வாரியத்தின் கீழ் 239 துறை அலகுகளும், 1,635 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1.6.92 அன்று, ஊனமுற்ற ஒரு சிறுவனுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கி உதவினார்.

இவற்றில் கதர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும். முந்தைய ஆண்டில் ரூ.251.59 கோடியாக இருந்த உற்பத்தி இப்புதிய அரசின் ஆட்சிக் காலத்தில் ரூ.277.17 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 10 சதவீதம் அதிகமாகும். இதைப்போலவே கிராமத் தொழில் பொருட்கள் விற்பனையும் ரூ.280.77 கோடியிலிருந்து இப் புதிய அரசின் காலத்தில் ரூ.310.14 கோடிக்கு உயர்ந்துள்ளது. இது 11 சதவீதம் அதிகமாகும்.

கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காகவே 9 கிராமிய தொழிற் பேட்டைகள் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. விற்பனையை மேலும் அதிரிக்க இப்புதிய அரசின் காலத்தில் திருவண்ணாமலையில் ஒரு புதிய கிராமத் தொழில் பொருட்களை விற்பனை நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வாரியம், சென்னை குறளகத்தில் மிகப் பெரிய கதர் அங்காடியை நடத்தி வருகிறது. இக்கதர் அங்காடியில் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் ஆண்டு விற்பனை ரூ.12.90 கோடியைத் தாண்டியுள்ளது. கதர், கிராமத் தொழில் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், இல்லத் தேவைக்கான பொருட்கள் இக்கதர் அங்காடியில் விற்பனையாகின்றன. விற்பனையை மேலும் அதிகரிக்கவும், சென்னை நகர் முழுவதும் பொது மக்களிடம் விளம்பரம் செய்யும் நோக்கத்துடன் இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் ஒரு நடமாடும் ஊர்தி வாங்கப்பட்டு விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பனைத் தொழில்

இந்தியாவில் தமிழ்நாட்டில் பனை மரங்கள் அதிகம் உள்ளன. ஏறத்தாழ 5 கோடி பனை மரங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இதன்மூலம் அதிக அளவில் பனைத் தொழிலில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. [illegible] ஆரம் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள், மாநில பனை வெல்லக் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. உண்ணும் பொருட்களாகிய பதனீர், பனஞ் சர்க்கரை, பனங் கற்கண்டு, பனைவெல்லம், பனை மிட்டாய் வகைகள் மற்றும் உண்ணாப் பொருட்களாகிய பனை நார், தூரிகை, பனை ஓலைப் பொருட்கள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப் படுகின்றன.

பனைத் தொழில் மூலம் அதிக அளிவல் அன்னியச் செலாவணி ஈட்டப் படுகிறது என்பது சிறப்பான ஒன்றாகும். ஒரு ஆண்டுக்குச் சுமார் ரூ.1.55 கோடிக்குப் பனந்தும்பு ஏற்றுமதி செய்யப் படுகிறது. பதநீர் இறக்கும் காலங்களில் கிராமியக் கைவினைஞர்களுக்கு அதிகப் படியான வேலைவாய்ப்பும், பதநீர் இறக்காத காலங்களில் முறையான அளவில் அதிகப்படியான வேலைவாய்ப்பும் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. பனைத் தொழில் செய்து பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகி மரணமடைய நேர்ந்தால் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 உதவித் தொகை அவர்களுடைய குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.

பனைத் தொழிலின் முக்கியத்துவத்தை மனதில் கொண்டு, இத்தொழிலை மேலும் வளர்ச்சியடையச் செய்திட வேண்டி, பனைத் தொழிலுக்கு என ஒரு வாரியம் ஏற்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, 20.4.92-இல் தமிழகச் சட்டப் பேரவையிலும் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

சோப்புத் தொழில்

வாரியம் வழக்கமாக சலவைச் சோப்பும், குளியல் சோப்பும் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது. வாரியத்தில் டிட்டர்ஜெண்ட் சோப்பும், உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், இதற்காக புதுக்கோட்டை, மூலங்குடி (நாகப் பட்டினம்), பழிருப்பு (தென்னார்க்காடு), பல்லடம் (கோவை) கொடுங்கையூர், காங்கேயம் (பெரியார்) முதலிய 6 இடங்களில் டிட்டர்ஜெண்ட் சோப்பு அலகுகள் இப்புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோப்பு உற்பத்தி செய்ய ஆசிட் [illegible] ஒரு அத்தியாவசியமான இரசாயன பொருளாகும். இந்த இரசாயன பொருள் உற்பத்தி செய்யும் 2 [illegible] தஞ்சை நெடுந்தெருவிலும், [illegible] மாவட்டம் நல்லூரிலும் இப்புதிய அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் பின்தங்கிய [illegible] அதிக அளவில் வேலைவாய்ப்பு [illegible] தக்க தொழில் தோல் [illegible] இத்தொழிலில் ஏழ்மை [illegible] பட்டவர்த் தொழிலாளர் [illegible] வந்த தரம் முன்னேற [illegible]

தையல் இயந்திரத்துடன், காலணி தொழிற் கூடம் ஒவ்வொருவருக்கும் வழங்கும் சிறப்பான திட்டத்தை இவ் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் மூலம் 1981-82-ஆம் ஆண்டு முதல் 7,250 தொழிற் கூடங்கள் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. ஒரு தொழிற் கூடத்தின் மதிப்பு தையல் இயந்திரத்துடன் சுமார் ரூ.10,000 ஆகும். இப்புதிய அரசு இவ்வாண்டில் மட்டும் ஏழை காலணித் தொழிலாளர்களுக்கு 2000 தொழிற் கூடங்கள் வழங்கிட ரூ.200 இலட்சம் அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்பாண்ட தொழில்

இத்தொழிலின் கீழ், விருத்தாச்சலத்தில் இதற்கு முன் செயலற்றுப் போயிருந்த ஒரு மட்பாண்ட அலகை வாரியம் மேற்கொண்டு வழவழப்பான பீங்கான் மட்பாண்டங்கள் தயாரிப் பதன் மூலம் இந்த புதிய அரசின் காலத்தில் இவ்வலகு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வலகில் உற்பத்தியாகும் பொருட்கள் சென்னை கதர் அங்காடியில் விற்பனையாகின்றன.

செயற்கை இரத்தினக் கற்கள் பட்டைத் தீட்டும் தொழில்

செயற்கை இரத்தினக் கற்களுக்குப் பட்டைத் தீட்டும் தொழில் வாரியம் எடுத்துக்கொண்டுள்ள ஒரு புதிய தொழிலாகும். இத்தொழிலில் பயிற்சி பெற்றுள்ள தொழிலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவற்றின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம், அல்லித்துறை, மனச்சநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் 3 கூட்டுறவுச் சங்கங்கள் இப்புதிய அரசின் காலத்தில் தொடங்கப்பட்டுள்ளன.

மின்னணுத் தொழில்

மின்னணுத் தொழிலும் இவ்வாரியத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு நவீன தொழிலாகும். இப்புதிய அரசின் காலத்தில் 217 உறுப்பினர்களைக் கொண்டு (பெரும்பாலும் பெண்கள்) 5 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்பு இத்தொழில் மூலம் அளிக்கப்பட உள்ளது.

கூட்டுறவு

கிராமப்புறங்களில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பின்கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இப்புதிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்கள், மனித சக்தி, போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, வெவ்வேறான கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வாரியாக அமைக்கப்படுகின்றன. முன்னரே செயல்பட்டு வரும் 1,579 கூட்டுறவுச் சங்கங்களுடன் இந்த அரசின் காலத்தில் 56 கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தச்சு கொல்லு, ஸ்கேன் விஷன், மின்னணு செங்கல், சுண்ணாம்பு, மட்பாண்டம், பாய் முடைதல், புளி பக்குவப்படுத்துதல், பழப்பக்குவப்படுத்துதல், செயற்கை வைரப்பட்டை தீட்டுதல் அவற்றை வழவழப்பாக்குதல், தோல் பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் இவ்வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

இப்புதிய அரசு 1,090 நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் பட்டை விழுதுகள் வழங்கிடவும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலாளர்கள் பயன் பெறவும், குறளகம் கதர் அங்காடியில் கம்ப்யூட்டர் பணப்பதிவு செய்யும் இயந்திரம் வாங்கவும் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.17.43 இலட்சம் வழங்கியுள்ளது.

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் வரன்முறைகளுக்குட்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், பல்வேறு தொழில் செய்யும் தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறது. இதுவரை பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள 67,170 கைவினைஞர்களுக்கு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 5,000 கைவினைஞர்களுக்குத் தமிழகம் முழுவதிலும் பல்வேறு தொழில்களின்கீழ் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாரியத்தின் மூலம் சென்ற ஆண்டுவரை மொத்தம் 9.99 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு வரை 10.83 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் சுமார் 83,100 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பான ஒன்றாகும்.

மேற்கண்ட செயல் திட்டங்கள் மூலம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் துயர் துடைக்க வேண்டும் என்ற இப்புதிய அரசின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தனது பெரும் பங்கை ஆற்றி வருகிறது. ●

தமிழரசு

சந்தா விவரம்

தமிழ் .... ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் : தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

—12-ஆம் பக்கத் தொடர்ச்சி

தீயணைப்புத்துறை சேமநலநிதிக்கான அரசு மானியம்

இவ்வாண்டு முதல் இந்நிதிக்கு அரசு வழங்கும் மானியம் ரூ.60,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

டெரிகாட்டன் சீருடை வழங்குதல்

உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவிக்குக் கீழுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் கடந்த ஆண்டு வரை ஒரு செட் டெரிகாட்டன் சீருடையும், ஒரு செட் பருத்தி நூலாலான சீருடையும் வழங்கப்பட்டன. இனிமேல் இவர்களுக்கு இரண்டு செட் டெரிகாட்டன் சீருடை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி உயர்த்துதல்

நிலையத் தீயணைப்பு அலுவலருக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு அளிக்கப்படும் உபரிப்பணிப்படி மற்றும் உணவுப்படி ஆகியவற்றை உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

இரண்டு சக்கர வாகனங்களுக்கு வரி விதிப்பு விலக்கு

தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால், 50 சிசி திறன் கொண்ட இரு சக்கர வாகனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்படும் என்று தெரிவித்தது.

அவ்வாறே இவ்வரசு பதவி ஏற்றபின் 50 சிசி திறனுள்ள இருசக்கரவாகனங்களுக்கு வரி விலக்களித்துள்ளது.

மேலும் ஒப்பந்த ஊர்திகளான ஆம்னி பேருந்து மற்றும் சுற்றுலா பேருந்துகளுக்கு ஒரு காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கான மோட்டார் வாகன வரி ரூ.2,000-லிருந்து ரூ.500 ஆக 1.4.90 முதல் குறைக்கப்பட்டது. அவ்வாறே மாற்றுப் பேருந்து ரிசர்வ் பேருந்துகளுக்கான வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கான வரி விகிதத்தில் 4-இல் மூன்று பங்கு மட்டும் செலுத்த வரி விகிதம் குறைக்கப்பட்டது. (முன்பு இவ்வரி விகிதம் சாதாரணப் பேருந்துகளுக்கு ஒத்த அளவிலேயே இருந்தது.)

லாரி உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்து, பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், எடை ஏற்றப்பட்ட நிலையில் 13,000 கிலோவிலிருந்து 15,000 கிலோ கிராம் வரையுள்ள சரக்கு வாகனங்களின் வரி விகிதம் ரூ.2,450-லிருந்து ரூ.2,190 ஆக 1.10.91 முதல் குறைக்கப்பட்டது.

மோட்டார் வாகன விபத்துக்களுக்கான நிவாரணத் தொகை அதிகரித்தல்

முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி 1978-79 முதல் ஏற்படுத்தப்பட்டு, விபத்தில் உயிரழந்தோர் மற்றும் காயமுற்றோருடைய உறவினருக்கு விரைவில் நிவாரணத் தொகை அளித்து வருகிறது. 1991-92-இல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அறிவித்தவாறு கருணைத் தொகை வீதங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

கணிப்பொறிமயமாக்குதல்

இவ்வரசு, சென்னை மாநகரிலுள்ள நான்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கணிப்பொறிகளை (Computer) நிறுவுவதற்கு 13.50 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

ஏற்றுமதி ஏறுமுகம்

சுறுசுறுப்பு பானம் தேனீரைத் தந்திடும் தேயிலையின் ஏற்றுமதியும் விறுவிறுப்பாகவே உள்ளது. கடந்த நிதியாண்டில் (1991-92) ரூ.1,137 கோடி மதிப்புள்ள 210.39 மில்லியன் கிலோ தேயிலை இந்தியாவிலிருந்து ஏற்றுமதி ஆகியுள்ளது. அதற்கு முந்தைய நிதியாண்டில் (1990-91) ரூ.1,071 கோடி மதிப்புள்ள 199.17 மில்லியன் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது.

★ மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

பணியைக் குறித்த நேரத்தில் எவ்விதக் குறைபாடின்றி முழுமையாக விரைவாக ஆற்ற நினைக்கும் இந்த யுகத்தில் கணிப் பொறியின் பயன்பாடு பெரிதும் உதவும். கணிப்பொறியின் உதவியோடு போக்கு வரத்துத் துறை, பொதுமக்களுக்கு உரிய வாறு, பயனுள்ள முறையில் சிறந்த வேலை செய்ய முடியும்.

கவுன்ட்டர் முறை ஏற்படுத்தல்
(Counter System)

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களிலிருந்து தரகர்களை நீக்கவும், பொது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும், போக்குவரத்துத் துறை, அனைத்து அலு வலகங்களிலும் கவுன்ட்டர் முறையைக் கொண்டு வந்துள்ளது.

சென்னை மாநகரில் 4 போக்குவரத்துப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தல்

பொதுமக்கள் சென்னை மாநகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங் களுக்குச் செல்ல நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் ஏற்படும் இடர்ப்பாட்டைக் களைவதற்காக அரசு, சென்னை மாநகரில், பெரம்பூர், வளசரவாக்கம், தண்டையார்ப்பேட்டை மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய நான்கு போக்குவரத்துப் பிரிவுகளைத் தொடங்கி யுள்ளது.

எல்லைப்புறப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல்

பிற மாநிலங்களிலிருந்து வரும் வண்டிகள் மோட்டார் வண்டி வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்கும் பொருட்டு, பின்வரும் [illegible] சில பகுதிகளில் சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது.

[illegible] (கோயம்புத்தூர் மாவட்டம்), இராணிப்பேட்டை (வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம்), [illegible] மாவட்டம்)

[illegible] சாவடிகள் [illegible] செயல்பட்டு வருகின்றன.

மாசுக் கட்டுப்பாடு

மாசுக் கட்டுப்பாடு குறித்து தற்போது அதிக அளவு கவனம் செலுத்த வேண்டி யுள்ளது. தற்போது காற்றுத்தூய்மை கெடுவதற்கு மோட்டார் வண்டிகளே பெரிதும் காரணமாக விளங்குகின்றன. இவ்வாறு மாசுபடுவதைக் கட்டுப்படுத்த மோட்டார் வண்டிகள் புகை, ஆவி முதலியவற்றை எந்த அளவுக்குத்தான் வெளியேற்றலாம் என்பது குறித்து மத்திய அரசு சட்டப்படி வரையறுத்துள்ளது. வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேல், புகை முதலியவற்றை வெளியேற்றும் வண்டிகளின் உரிமையாளர்கள், அவ் வண்டிகளிலுள்ள குறைபாடுகளைக் களைந்து சோதனைக்காக வண்டிகளை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்துவதில் முதற்கட்டமாகச் சென்னையில் உள்ள சரக்கு வண்டிகள் தகுதிச் சான்றிதழ் பெறும்போது மாசுச் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தனது பணியாளர்கள் மற்றும் கருவிகள் கொண்டு இப்பணியைச் செயல்படுத்து மாறு ஆணையிடப்பட்டுள்ளது. இவ் வாரியம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் தவிர பிற இடங்களில் சோதனைகளை மேற்கொள்ளாது.

இத்திட்டம் சென்னையில் 19.3.1992 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாட்டுடைமையாக்கல்

பேருந்துகளை முழுமையாகத் தேசிய மயமாக்குவது என்பது முந்தைய அரசின் கொள்கையாக இருந்தது. இக்கொள்கை யின்படி, தனியார் உரிமையாளர்கள் பேருந்துகளைத் தொடர்ந்து இயக்குவது இயலாது. தற்போதைய அரசு, பொது மக்களின் நலன் கருதி, தனியார் உரிமையாளர்கள் தற்போது இயக்கி வருகின்ற ஒப்புதல் அளிக்கப்பட்ட வழித்தடங்களிலேயே அவர்கள் பேருந்து களைத் தொடர்ந்து இயக்கலாம் என முடிவு செய்துள்ளது. தற்போதைய அரசின் கொள்கைக்கு இணங்க, ஒரு சட்டமுன்வடிவு அதாவது தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் (தனி விதித் துறைகள்) சட்டம் 1992 சட்டமன்றப்பேர வையில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்ப நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது மேற் சொன்ன சட்ட முன்வடிவானது குறைந்த எண்ணிக்கையில் பேருந்துகளைத் தற் போது இயக்கிவரும் தனியார் உரிமை யாளர்கள் தொடர்ந்து ஒப்புதலளிக்கப்பட்ட வழித்தடத்தில் தங்கள் பேருந்துகளை ஓட்டுவதற்குப் பாதுகாப்பு அளிக்கும்.

மதியை அறியாதவனும், விதியை அறியாதவனும், வாழ்க்கை நிலையை அறியாதவனும், அறம் செய்யாதவனும், மனத்தை அடக்காதவனும், பெரியோரை வணங்காதவனும் ஆன்மீக நெறியில் முன்னேற முடியாது.

— அண்ணல் காந்தியடிகள்.

முன் கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்தல் முறை

ஆட்டோ ஓட்டுநர்கள் மீட்டர் கட்டணத் திற்கு மேல் கூடுதல் கட்டணம் கேட்பது, குறிப்பிட்ட இடங்களுக்கு வர மறுப்பது, மீட்டர் போடாமலேயே ஓட்டுதல் போன்ற பல புகார்கள் பொதுமக்களிட மிருந்து பெறப்பட்டுள்ளன.

எனவே, முன்கூட்டியே கட்டணம் செலுத்தி ஆட்டோவில் பயணம் செய்யும் முறையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை செய்து முதற்கட்டமாகச் சென்னையில் திருவள்ளுவர் பேருந்து நிலையத்திலும், எழும்பூர் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும், மதுரையில் அண்ணா மற்றும் பெரியார் பேருந்து நிலையங்களிலும் மற்றும் இரயில் நிலையத்திலும் அமல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ் விடங்களிலிருந்து ஆட்டோக்கள் நகரின் பல பகுதிகளுக்குக் குறிப்பிட்ட கட்டண விகிதத்தில் விடப்படும். கிலோமீட்டருக்கு ரூ.3 என்ற விகிதத்தில் கட்டணம் நிர்ணயிக்கப்படும். இம்முறையினால், பொதுமக்களுக்கு இரயில் மற்றும் பஸ் நிலையங்களில் ஆட்டோ அமர்த்துவதில் உள்ள சிரமங்கள் தவிர்க்கப்படும். இம் முறை 1.6.1992 முதல் மதுரையில் அமலுக்கு வருகிறது. சென்னையில் விரைவில் அமலுக்கு வரும்.

1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்

1992-93 பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் புதிய போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கள், புதிய கட்டடங்கள் ஆகியன ஏற்படுத்த அரசு ரூ.76.67 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. ●

வண்ணக் கைத்தறிகளுக்குப் பெருகிடும் வரவேற்பு!

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

இ. மதுசூதனன்



“கண்ணைக் கவரும் வண்ணக் கைத்தறித் துணிகளுக்கு இன்று உலகெங்கும் பெரும் வரவேற்பு உள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு பல உதவிகளையும், சலுகைகளையும் அளித்து வருகிறது.”

குறைந்த வருவாய் ஈட்டும் கைத்தறி யாளர்களுக்கு நிறைந்த வருவாய் அளிக் கும் பொருட்டு கைத்தறியை விசைத்தறி யாக மாற்றும் பத்தாண்டுத் திட்டம்.

● கைத்தறியிலேயே உற்பத்தியைப் பெருக்கவும், உயர்ரகத் துணிவகை உற்பத்தி செய்யவும், நெசவாளர் வருவாயினை அதிகரிக்கவும், கைத்தறி களை நவீனப்படுத்தும் ஐந்தாண்டுத் திட்டம்.

● கூட்டுறவில் உள்ள நெசவாளர் இறந்து போனால் வழங்கப்படும் காப்பீட்டுக் கருணைத் தொகை ரூ.12,000-லிருந்து ரூ.17,000 ஆக உயர்த்தியது.

● இறந்து போன கூட்டுறவுக் கைத்தறி யாளர் குடும்பத்திற்கு மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு நெசவாளர் குடும்ப ஓய்வூதியம்.

● கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் களுக்கு ரூ.25,000 மதிப்பீட்டில் தறிக் கூடத்துடன் கூடிய 2,000 குடியிருப் புகள் கட்டுதல்.

● டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை யின் கீழ் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,000 முதல் ரூ.2,000 வரை 18 மாணவர்களுக்கு நிதியுதவி நல்கி கல்வி முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்.

● அடிப்படை வசதி ஏதுமின்றி சமூக ரீதியில் பின்னடைந்துள்ள 'விளாகம்' நெசவாளர் கிராமத்தினைத் தத்தெடுத்து அங்குள்ள நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலை உயர்விற்கென ரூ.25 இலட்சம் செலவு மேற்கொள்ளல்.

● ரூ.42.00 கோடி செலவில் 120 இலட்சம் கிராமப்புற நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக விநியோகித்தல்.

● கைத்தறித் துணிகள் விற்பனையினை மேம்படுத்த காஞ்சிபுரத்தில் பட்டு ரகங் களுக்கெனவும், ஈரோட்டில் பருத்தித் துணி இரகங்களுக்கும் பிரத்தியேகமாகப் பல்மாடி விற்பனை வளாகங்கள் அமைத்தல்.

கைத்தறி நெசவாளர்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாட்டடைய தமிழக அரசின் பொன்னான திட்டங்கள்

மக்களின் அத்தியாவசியத் தேவை களில் முக்கியமானது ஆடை. பன்னெடுங் காலமாகக் கைத்தறி மக்களின் ஆடைத் தேவையினைப்பூர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகிறது. தொழில் நுணுக்க மும், கலைவண்ணமும் வழிவழியாக வந்த கைத்திறனும் ஒருங்கிணைந்த இத் தொழில் தமிழகத்தில் பல்வேறு பகுதி களிலும், குக்கிராமங்களிலும் வாழ்ந்து வரும் கணிசமான ஏழை மக்களுக்குப் பிழைப்பதற்கு வழிவகுக்கின்றது என் பதனையும், இவர்களில் பெரும்பாலோர் இன்றும் பழைய தறிகளிலேயே விலை மதிப்பு குறைவான துணிகளை உற்பத்தி செய்வதால், தங்களின் அன்றாட மற்றும் அத்தியாவசியத் தேவைக்குக்கூட வருவாய் ஈட்ட முடியாத நிலையில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவிப்பதனை ஏழை மற்றும் நலிவடைந்த மக்களின் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது.

இவ்வாறு நலிவுற்று இருக்கும் இலட்சக் கணக்கான ஏழை நெசவாளர்களின் துயரினைத்துடைக்க புரட்சித் தலைவியின் ஆட்சியில் வாழ்க்கைத் தேவைகேற்ப வருவாய் கிடைக்க வழிகோலும் உயரிய நோக்குடன், மாறிவரும் விஞ்ஞான யுகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தொழில்நுட்பயுக்திகளை இத்தொழிலில் புகுத்தி, அதன் மூலம் உற்பத்தியினைப் பெருக்கும் முகத்தான் இச்சமயம் அரசு 37,500 கைத்தறிகளை 75,000 விசைத் தறிகளாக மாற்றும் ஒரு புரட்சிகரமான திட்டத்தினைப் படிப்படியாக வரும் பத்து ஆண்டுகளின் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி நிதி உதவி யுடன் 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துகின்றது.

இத்திட்டத்தின் மூலமாக 1991-92 மற்றும் 1992-93-இல் முறையே [illegible] மற்றும் 2,500 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள், பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் மேம்பாட்டினை அடைவர்.

நெடுங்காலமாகவே [illegible] வரும் பழமையான கைத்தறிகளில் [illegible] பட்டு உழைத்தும், போதிய [illegible] [illegible] குறைந்த வருவாயினையே [illegible] யாகப் பெற்று வாழ்க்கையில் [illegible]

மின்றி இன்னலுறும் ஏழை நெசவாளர்களின் துயர்துடைக்க புரட்சி செல்வியின் தலைமையிலான தமிழக அரசு அவர்களின் ஊதிய உயர்வினுக்காகவே வரும் ஐந்தாண்டுகளில் ரூ.42.31 கோடி செலவில் 50,000 தொன்மையான கைத்தறிகள் தற்கால உற்பத்தித்தேவைக்கேற்ப நவீனப்படுத்தப்படவுள்ளன. இதன் வாயிலாக 50,000 நெசவாளர் குடும்பங்கள் செழிப்படைய உள்ளன.

வாழ்க்கை முழுவதும் மக்களின் மானம் காக்க ஆடை நெய்து, வறுமையில் உழன்று வாழும் ஏழை நெசவாளர் இறப்பின் அவர்களது குடும்பத்தினர் பிழைக்க வழியின்றி அல்லல்படும் அவல நிலையை மாற்றி அக்குடும்பத்தின் துயர் துடைக்கவும், அக்குடும்ப நலம் பேணவும் எளியோர்களின் நிலைமையினை நன்குணர்ந்த இவ்வரசு அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில் முதன் முதலாக ஏன் இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத ஒரு முன்னோடியாக நெசவாளர்கள் ஓய்வூதிய திட்டத்தினை செயல்படுத்துகின்றது. இதன்மூலம் ஓர் நெசவாளர் இறந்தால் அன்னாரது குடும்பத்திற்கு 10 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து மாதந்தோறும் ரூ.250 ஓய்வூதியமாக அரசினால் வழங்கப்படும். அத்துடனின்றி இயற்கை எய்திடும் நெசவாளர்கள் குடும்பத்திற்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த கருணைத்தொகையாக ரூ.12,000 கூட தற்போது கணிசமாக உயர்த்தப்பட்டு ரூ.17,000-மாக வழங்கப்படுகிறது.

இத்தகைய புரட்சிகரமான திட்டங்கள் மூலமாக வருவாயினை ஈட்டும் குடும்பத் தலைவனை இழக்க நேரிடும் நெசவாளர் குடும்பங்கள் பொருளாதாரச் சிக்கல்களில் சிக்கி தவிப்பது சீரழிவது தடுக்கப்பட்டு அவர்களது குடும்பத்தினரும் சமூகரீதியில் நல்ல நிலையில் வாழ்ந்து வளமடைய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இத்தகைய சீரிய திட்டங்களை நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென்று ஆய்ந்தறிந்து செயல்படுத்தியுள்ளார்.

செய்யும் தொழிலனைத்தும் சீர் தூக்கிப் பார்க்குங்கால் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்பது சான்றோர் வாக்கு. இத்தகைய சிறப்பான தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களில் பெரும்பான்மையினர் வாழ்வதற்கும், தொழில் செய்வதற்கும் போதிய இடவசதியற்ற இல்லங்களில் வாழ்ந்துவரும் நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள், ஒவ்வொரு வீடும் ரூ.25,000 மதிப்பீட்டில் சுமார் 2,000 குடியிருப்புகள்

இவ்வாண்டு தமிழக அரசினால் கட்டப்படவுள்ளது. இதனால் 2,000 நெசவாளர்கள் குடியிருப்பு வீடுகள் பெற்று நலமடைவார்கள்.

நெசவாளர்களின் பிள்ளைகளும் பிறரைப்போல நன்கு கல்வி பயின்றும், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் தொடர்ந்து படிக்க பொருளுதவி நல்குவதற்கென்றே மறைந்த பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட 'டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை'. இதன் மூலமாக, கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர்களின் பிள்ளைகளின் மேல் படிப்பிற்கென ஆண்டுதோறும் ரூ.1,000-லிருந்து ரூ.2,000 வரை 16 மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றத்திற்கென நிதியுதவி வழங்கப்படுகிறது.

பொதுவாக நெசவாளர்கள் கிராமப் பகுதிகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். நெசவாளர்கள் நிறைந்துவாழும் பல கிராமங்களில் இன்றும் எத்தகைய சமூக முன்னேற்றம் எய்தாத நிலை உள்ளது. அதாவது இக்கிராமங்கள் சமூக ரீதியில் மிகவும் பின்தங்கி, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினால் தினம் கடினமாக உழைக்கும் இம்மக்கள் பல வகை நோயால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இந்த நிலைமாற, நெசவாளர்கள் நிறைந்துள்ள கிராமங்களைச் சுகாதார மற்றும் சமூக அமைப்பில் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் முதற்படியாக புரட்சித் தலைவியின் தலைமையில் ஆன இந்த அரசு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள 'விளாகம்' என்ற கிராமத்தினைத் தேர்ந்தெடுத்துள்ளது. ரூ.25.00 இலட்சம் செலவில் அக்கிராமத்தினை அனைத்து நிலையிலும் மேம்படவைக்கவும் குறிப்பாக நெசவாளர்களின் நலன் பேணவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவும் இந்தியாவிலேயே முன்மாதிரியாக நமது மாநிலத்தின் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதால் நமது முதல்வர் நெசவாளர்களின் நலனில் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

மக்களின் அத்தியாவசியத் தேவையில் ஒன்று உடை. பெரும்பான்மையான ஏழை மக்கள் பண்டிகைக் காலங்களில் கூட தங்களுக்கெனப் புத்தாடைகள் வாங்கப் போதிய வசதியின்றி வறுமையில் வாழும் நிலையை நன்குணர்ந்த ஏழைகளுக்கான இவ்வரசு, ரூ.42 கோடி செலவில் 120 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புறக் குடிசை வாழ் மக்களுக்கு வேட்டி, சேலைகள் இலவசமாக வழங்கி அவர்களுக்கு உதவியது மட்டுமின்றி, இத்திட்டத்தின் மூலமாக, தமிழகம் முழுவதுமுள்ள நெசவாளர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து வேலைவாய்ப்புப் பெறவும் வழிவகுத்துள்ளது.

பெண்ணுரிமைக்கெனப் பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தாய்க்குலம் என்று அழைத்துப் போற்றிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றல் புதுமைப் பெண், புத்துலகச் சிற்பி புரட்சித்தலைவியின் ஆட்சியில் முற்றிலும் பெண்களுக்கெனவே ஒரு கூட்டுறவு நூற்பாலை பர்கூரில் நிறுவப்பட உள்ளது. இதன்மூலமாக, பல நூறு பெண்கள் வேலைவாய்ப்பு பெறுவர். இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பல மூலைமுடுக்குகளில் உள்ள நெசவாளர்களின் கைத்திறனால் தயாராகும் பல்வேறு நேர்த்திமிகு கைத்தறி துணிவகைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே இடத்தில், பலரும் அவைகளைப் பார்த்து தேர்ந்தெடுத்து வாங்க வழிவகைகாணும் முகத்தான் முதல் முதலாகப் பட்டுத் துணிவகைகளுக்கெனக் காஞ்சிபுரத்திலும் பருத்தித் துணிவகைகளுக்கென ஈரோட்டிலும், ரூ.9 கோடி செலவில் விற்பனை வளாகங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியாகும் துணிவகைகளில் விரைந்து விற்பதுடன் கைத்தறித் துணிவகைகளுக்கு மக்களிடையே உள்ள நன்மதிப்பும் உயரும் என்பது திண்ணம்.

பூரண மதுவிலக்கு

குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்து பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் அரசு செயலாற்றி வருகின்றது.

பூரண மதுவிலக்கே, தற்போதைய அரசின் கொள்கையாகும். மது, தமிழகத்தில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. மதுவை அருந்தி தங்களுடைய வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் மக்களைக் காப்பாற்றும் நோக்குடன், நாட்டு மதுக் கடைகளை மூடுவதால் அரசுக்கு ரூபாய் 391 கோடி ஒரு முழு ஆண்டிற்கு ஏற்படும் வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் முதல் நடவடிக்கையாக 16.7.'91-ஆம் நாள் மலிவுவிலை மதுக்கடைகளை மூடினார்.

நாட்டு மதுக்கடைகளை நடத்துவதில் அல்லது விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது அரசு.

மதுவிலக்குக் காரணமாக ஏற்படும் நற்பலன்கள் குறித்தும், குடிப்பழக்கத்தால் ஏற்படும் கேடுகள் குறித்தும் பொதுமக்களிடையே பிரச்சாரம் செய்யவும், இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய தகுந்த நடவடிக்கைகளை வகுக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான மதுவிலக்குப் பிரச்சாரக் குழு ஒன்று 11.9.91- ஆம் நாள் அமைக்கப்பட்டது. இக் குழுவின் முதற் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் 22.10.91 அன்று சென்னையில் கூடியது. கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

நாடகங்கள் முதலியவற்றின் மூலமாக மதுவின் தீமைகளை விளக்கும் பிரச்சாரங்களைச் செய்வதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மதுவின் தீமைகளை விளக்கும் முழுநீள பிரச்சாரப் படத்தை அரசே எடுப்பதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பிரச்சார நாடகம் தயாரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் உறுப்பினர் - செயலரான திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'வெளிச்சம்' என்ற நாடகத்தை அவர் தயாரிப்பதற்கும், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ரூபாய் 2 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது, 'வெளிச்சம்' நாடகம் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றது.

திரைப்படம் தயாரிப்பதைப் பொறுத்தவரை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 25 இலட்சம், குடியின் கொடுமைகளை விளக்கும் பிரச்சாரப் படமான '[illegible] இருக்கும்' [illegible] திரு [illegible] டி.வி. [illegible] [illegible]. இப் படத்தின் தொடக்க விழா 20.4.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப் படம் 2.10.92 காந்தி ஜெயந்தி அன்று வெளியிடப்படவுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் சாதனைகள்

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
டி. ஜெயக்குமார்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் வாழ்க்கைத் தரம் உயர அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. அதை விளக்குகிறது இக்கட்டுரை.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோரின் மேம்பாட்டிற்காக, தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 1991-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கீட்டின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகை 556 இலட்சமாகும். இன்வாரி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்	...	67.15%
தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்	...	19.53%
இதர இனங்கள்	...	13.31%

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்குத் தரமான கல்வி வசதியளிக்கும் பொருட்டுப் பள்ளிகள், மாணவர் விடுதிகள், படிப்புதவித் தொகைகள், சம்பளம், சிறப்புப் பயிற்சி முதலிய பல வழிகளில் அரசு உதவி வருகிறது. 57,194 மாணவர்களின் நன்மைக்காகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையானது 285 பள்ளிகளை நடத்தி வருகிறது.

“பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்கும் பொருட்டு இத்துறையானது 771 மாணவர் விடுதிகளை நடத்தி வருகிறது. இவற்றில் 43,538 மாணவர்கள் உள்ளனர்.

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவர் விடுதிகளில் இல்லாத இவ்வினத்தைச் சேர்ந்த பிற மாணவர்களுக்கும் அரசு படிப்புதவித் தொகை களை வழங்கி வருகிறது. இதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க் குள் இருக்க வேண்டும். பயிற்சிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகங் களுக்கான கட்டணம் ஆகியவை படிப்புதவித் தொகையில் அடங்கும். 9-ஆம் வகுப்பிலிருந்து இந்த உதவி மாணவர்களுக்குக் கிடைக்கிறது. படிப்புதவித் திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 3,68,642 மாணவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 2,28,431 மாணவர்களும் பயன் பெறுகின்றனர்.

1991-92-ஆம் ஆண்டுச் சாதனைகள்

இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளின் பராமரிப்பை ஒழுங்குபடுத்தும் வகையில், ஒவ் வொரு விடுதிக்கும் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளித் தலைமையாசிரி யரைத் தலைவராகவும், நான்கு பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் (இரண்டு ஆசிரியர் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு பெற்றோர் பிரதி நிதிகள்) விடுதியின் காப்பாளர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டும் இக்குழு அமைக்கப் பட்டுள்ளது.

பணி சார்ந்த பயிற்சிகளில் சிறப்புப் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்குப் பயிற்சியளிப் பதற்காக அரசு உதவி செய்கின்றது. 450 மாண வர்களுக்குச் சுருக்கெழுத்துப் பயிற்சியும், 125 மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியும் மற்றும் 50 மாணவர்களுக்குக் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் ரூ.8.97 இலட்சம் செலவில் அளிக்கப் பட்டுள்ளது. பணி சார்ந்த பயிற்சிகளின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை 1992-93-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. சுருக்கெழுத்துப் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 450-லிருந்து 1,000 ஆகவும், கணினிப் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 125-லிருந்து 500 ஆகவும், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பெறுவோரின் எண் ணிக்கை 50-லிருந்து 500 ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.66.36 இலட்சம் செலவிட உத்தேசிக் கப்பட்டுள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களில் சில பிரி வினர் சில சிறப்புத் திட்டங்களின் கீழ் பயனடை கின்றனர். ரூ.6,400-க்குள் ஆண்டு வருமான முள்ள அந்தந்தத் தொழில் செய்பவருக்கு [illegible] கருவிகளும் மற்றும் 500 கல்லுடைக்கும் [illegible] களும் இலவசமாக வழங்கப்பட்டன. [illegible] அமைக்கக் கோரும் [illegible] ரூ.2,000-லிருந்து ரூ.5,000 வரை இவ்வரசு நிதி யுதவியளித்து வருகின்றது.

மிகப் பிற்படுத்தப்பட்டோர் [illegible] மரபினர் [illegible] வழங்கும் திட்டத்தையும் அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் நிதியாண்டில் 4,121 குடும்பங்களுக்கு ரூ.68.21 இலட்சம் செலவில் நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1992-93-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவியருக்கென்றே ரூ.35.50 இலட்சம் செலவில் 25 புதிய விடுதிகள் திறக்கப் பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.65.85 இலட்சம் செலவில் 7 விடுதிக்குக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற் படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களின் கல்வி, பொருளாதார மற்றும் சமூக நிலையை உயர்த்துவதற்காக இதுபோன்ற பல திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகின்றது.

அடுத்த இதழிலும்...

தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனைகள் பற்றிய — இன்னும் சில [illegible] கட்டுரைகள் 'தமிழரசு' அடுத்த இதழிலும் (16.7.'92) தொடரும்...

சென்னையில் 3.6.92 அன்று நடைபெற்ற 'உகாதி' தெலுங்குப் புத்தாண்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. [illegible] ரெட்டி அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.



சீரிய வண்ணம் செயல்படும்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையானது, புதிய அரசு பொறுப்பேற்றபின் ஆற்றியுள்ள சிறப்பான பணிகளின் பட்டியலாக விளங்குகிறது இந்தக் கட்டுரை:

தமிழ்நாட்டில் புதிய அரசு மலர்ந்த பின் அரசுத் துறைகள் அனைத்துமே போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டு வருவதை நாடறியும்.

அதிலும் குறிப்பாக-மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான நிர்வகிப்பில் உள்ள செய்தி- மக்கள் தொடர்புத் துறையானது சீரிய வண்ணம் செயல்பட்டு வருகிறது என்றால் உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை சிறப்புற ஆற்றிவரும் பணிகள் பற்றி எல்லோர்க்கும் தெரிவிப்பது எமது கடமையாகும்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை மாற்றி அமைத்தல்

சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தை ரூ.1.25 கோடி செலவில் எழில்மிக்கதாக மாற்றி அமைப்பது எனத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பணி தமிழ்நாடு மாநில கட்டுமானப் பணிக்கழகத்திடம் (Tamil Nadu State Construction Corporation) ஒப்படைக்கப்பட்டு 1.1.1992 அன்று இதற்கான முதல்கட்டப் பணி துவங்கியது.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படத்தைச் சட்டப் பேரவையில் திறந்து வைத்தல்

மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படத்தைச் சட்டப் பேரவையில் 31.1.92 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். இத்திருவுருவப் படம் ஒன்றரை மாதக் காலத்தில் வண்ணமுற வரைந்து முடித்தது ஆகும்.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுதல்.

முன்னாள் முதல்வர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்தநாளை 1992 முதல், ஒவ்வொரு ஜனவரித் திங்கள் 17-ஆம் நாளன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கொண்டாடுவது என அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி 17.1.1992 அன்று டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாளை மாநில அளவில் சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.





மகாகவி பாரதியின் இல்லத்தைப் புதுப்பித்தல்

திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பிக்க அரசு ரூ.5 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

வள்ளுவர் கோட்டத்திற்குக் குளிர் சாதன வசதி

25.3.1992 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, வள்ளுவர் கோட்டம் 1992-93-ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதி செய்யப்படவுள்ளது.

திரைப்பட நகரம் அமைத்தல்

திரைப்படங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்ட ஒரு திரைப்பட நகரைத் தரமணியிலுள்ள திரைப்படப் பயிற்சிக் கல்லூரியில் அமைக்கும் பணியினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.5.1992 அன்று துவக்கி வைத்தார்கள்.

குடியின் தீமைகளை விளக்கும் திரைப்படம் தயாரித்தல்

குடிப்பழக்கத்தின் தீமைகளை விளக்கும் ஒரு திரைப்படத்தை ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திரைப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு G.V. பிலிம்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடியின் தீமையை விளக்கும் நாடகம்

குடியின் தீமைகளை விளக்கும் 'வெளிச்சம்' என்ற நாடகத்தைச் சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்த அரசு தீர்மானித்துள்ளது. ரூ.2 இலட்சம் செலவில் இந்த நாடகத்தைத் தயாரிக்கும் பொறுப்பு நேஷனல் தியேட்டர் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

தரமான, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்களை ஊக்குவிக்கும் வகையில் அவைகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அமல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், முன்பு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு, 12 முதல் 20 பிரதிகள் வரை வெளியிட்ட திரைப்படங்களுக்கு ரூ.1.50 இலட்சமும், 21 முதல் 30 வரை பிரதிகள் எடுக்கப்பட்ட திரைப்படங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கப்பட்டு வந்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை

ஆசிரியர் பணி என்பது ஒரு புனிதமான கடமை; தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.

ஏற்ற பிறகு, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான 45 திரைப்படங்களுக்குத் தலா ரூ.2 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கென ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டது. தரமான படங்களைத் தேர்ந்தெடுக்க நிபுணர் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்குதல்

சிறந்த மூன்று தமிழ்ப் படங்களுக்குக் கீழ்க் கண்டவாறு முன்பு விருதுகள் வழங்கப்பட்டு வந்தன.

முதல் பரிசு - ரூ.1,00,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

சிறப்புப் பரிசு - ரூ.25,000-மும், ஒரு கேடயமும்

புதிய அரசு இந்த விருதுத் தொகையைக் கீழ்க் கண்டவாறு அதிகரித்துள்ளது.

முதல் பரிசு - ரூ.1,25,000-மும், ஒரு கேடயமும்

இரண்டாம் பரிசு - ரூ.75,000-மும், ஒரு கேடயமும்

மூன்றாம் பரிசு - ரூ.50,000-மும், ஒரு கேடயமும்

இதுவரை திரையுலகில் சிறந்த நடிகர்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கென 5 பவுன், 3 பவுன் (மொத்தம் 27 பதக்கங்கள்) எனப் பதக்கங்கள் வழங்கப்பட்டு வந்தன. இப்புதிய அரசு அனைவருக்கும் தலா 5 பவுன் மதிப்புள்ள பதக்கங்களை வழங்க முடிவு செய்துள்ளது. இப்பரிசுகளுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க அரசு ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அதிகப்படுத்துதல்

பத்திரிகையாளர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகையான ரூ.400-ஐ, ரூ.500-ஆக உயர்த்த 1.4.1992 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

மதுரையில் உள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்துதல்

மதுரையிலுள்ள அரசு கிளை அச்சகத்தை நவீனப்படுத்த ஒரு ஆப்செட் இயந்திரத்தையும், மற்றும் இரண்டு புதிய இயந்திரங்களையும் வாங்க ரூ.11 இலட்சத்தை ஒதுக்கி 26.11.1991 அன்று அரசு ஆணை பிறப்பித்தது.

சென்னையில் உள்ள அரசு மத்திய அச்சகத்தை நவீனப்படுத்துதல்

சென்னையிலுள்ள மத்திய அச்சகத்தை நவீன படுத்தும் வகையில் 5 கணிப்பொறி இயந்திரங்களை வாங்க அரசாங்கம் ரூ.11 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

அறநிலைய ஆட்சித்துறை ஆற்றும்

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மற்றும் திருக்கோயில்கள் நிர்வாகத்தை - மேம்பாட்டைக் கவனிப்பதற்காக ஆலய நிர்வாக வாரியம் 13.12.1991 அன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும் 18 அலுவல் சார்பற்ற, அலுவல் சார்ந்த பெருமக்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. மாவட்டம் தோறும் 12 நபர்கள் கொண்ட மாவட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 17 மாவட்டக் குழுக்கள் ஆலய நிர்வாக வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத் திருக்கோயில்களைப் பாதுகாத்துப் பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரத்தைப் பொது மக்களிடமிருந்து பெறும் வகையில் 'முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' ஏற்படுத்தப்பட்டுள்ளது. 9.6.'92-ஆம் நாள் வரையில் ரூ.4.15 கோடி சேர்ந்துள்ளது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகம் திருவிழா கடந்த 18.2.92-ஆம் நாளில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. இதற்காகச் சுமார் ரூ.46 இலட்சம் செலவில் பல்வேறு திருப்பணி வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள சிறப்பு மிக்க திருக்கோயில்களையும் அவற்றில் உள்ள விலைமதிப்பற்ற சிலைகள் மற்றும் ஆபரணங்களைப் பாதுகாக்க 'திருக்கோயில் பாதுகாப்புப் படை' ஒன்றை நிறுவ முடிவெடுக்கப்பட்டுள்ளது. இப்படையில் ஆயிரம் இரண்டாயிரம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் ராணுவ வீரர்களும் பங்கு பெறுவார்கள். இவ்வமைப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.528 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு மற்றும் பூசைப் பொருட்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு கன்னியாகுமரி தேவசம் வாரியத்திற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு அரசு மானியம் ரூ.13.5 இலட்சம் தவிர, கூடுதலாக ரூ.3 இலட்சம் கடந்த 21.10.91 அன்று வழங்கப்பட்டது. இது தவிர முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் ஆண்டுதோறும் வழங்க முடிவெடுக்கப்பட்டு இந்த ஆண்டிற்கான தொகை ரூ.10 இலட்சத்தை வழங்க 4.5.92 அன்று ஆணையிடப்பட்டது.

சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலின் திருக்குளத்தைத் திருப்பணி செய்து மீண்டும் வரலாற்றுச் சிறப்புமிக்க தெப்பத் திருவிழாவினை நடத்த ரூ.105 இலட்சம் செலவில் பணிகளைச் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. ரூ.35 இலட்சத்தில் இதற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிருவாகம் இன்னும் சிறப்பாக நடைபெற தற்போதுள்ள 8 மண்டலங்களை 10 மண்டலங்களாகப் பிரித்து ஆணையிடப்பட்டுள்ளது. சிவகெங்கை, வேலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு புதிய மண்டலங்கள் கடந்த 20.2.1991 அன்று முதல் செயல்பட்டு வருகின்றன.

தூத்துக்குடியிலும், திருவண்ணாமலையிலும் புதிய உதவி ஆணையர் அலுவலகங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு 1992-93- ஆம் ஆண்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் உத்தரவிடப்படவுள்ளது. இவ்விரு அலுவலகங்கள் வரப்பெறின் மொத்த உதவி ஆணையர் அலுவலகங்கள் ... இருந்து ... ஆக உயரும். இதனால் அரசிற்கு ஆண்டொன்றிற்கு ரூ.20 இலட்சம் செலவாகும்.

193689

தமிழ்நாட்டில் குறிப்பிட்ட 10 இடங்களில் சுமார் ரூ.8 இலட்சம் செலவில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும் தினசரி பூசை முறைகள் குறித்து புத்தறிவுப் பயிற்சி (Refresher Course) அளிக்க முடிவெடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

திருவாரூரில் உள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் சீரான தட்ப வெப்பம் மற்றும் ஈரத் தன்மையைப் பராமரிப்பதற்காக ரூ.9 இலட்சம் செலவில் குளிர் சாதன வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய ஏற்பாட்டால் அம்மையத்தில் உள்ள சிலைகள் பழுதின்றிப் பாதுகாத்துக் காக்கப்பட்டு வரும்.

இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது அடைந்து ஓய்வு பெற்றுள்ள, வறிய நிலையில் உள்ள வேதபாராயணம் செய்வோர் நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் பாடுவோர், அரையர் சேவை செய்வோர் அடங்கிய 100 நபர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்க 18.12.92- அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதைக் கடந்த ஓதுவார்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.250-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி வழங்க 20.11.91 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, இருபது ஆண்டுகள் பணிபுரிந்து 60 அகவை அடைந்த வறிய நிலையில் உள்ள 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ரூ.300 ஓய்வூதியம் வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

பணியின்போது இறந்துவிடுகின்ற திருக்கோயில் பணியாளர் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப நல நிதி ரூ.10,000- லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி 10.1.92 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

1976-ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம்,

பத்தூரிலுள்ள அருள்மிகு விசுவநாத சாமி திருக்கோயிலிலுள்ள விலைமதிப்பிட முடியாத நடராசர் உலோகத் திருமேனியை இலண்டன் நீதிமன்றம் முதல் அதன் பாராளுமன்ற மேல்சபை வரை நீண்டகாலமாக வழக்காடி மீட்கப்பட்டது. 9.8.1991 அன்று இதற்கென்று நடைபெற்ற சிலை மீட்புப் பெருவிழாவில் இலண்டனிலுள்ள இந்தியத் தூதுவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்தச் சிறப்புமிக்க உலோகத் திருமேனியை ஒப்படைத்தார். அச்சிலை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படுவதற்காகத் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சைவத்திற்கு ஒன்றும், வைணவத்திற்கு ஒன்றும் என்ற வகையில் தமிழ்நாட்டில் இரு ஆகமக் கல்லூரிகள் விரைவிலே அமைக்கப்பட இருக்கின்றன. கல்லூரிகளுக்கான இடங்கள் குறித்து தெரிவுசெய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

உலமா ஓய்வூதியத் திட்டம்

தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன்னோடியாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று வறிய நிலையிலுள்ள மௌலவி, பேஷ், இமாம், அரபு மொழி ஆசிரியர் ஆகியோருக்கு மாதம் ரூ.250 அவர்களது ஆயுட்காலம் வரை உலமா ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 1991-92-ஆம் ஆண்டில் ஏற்கெனவே பயன்பெற்று வரும் 1,200 எண்ணிக்கையை அதிகரித்துக் கூடுதலாக 100 உலமாக்களுக்கு உலமா ஓய்வூதியம் வழங்கியுள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,300 ஆக உயர்ந்தது. மேலும் 1992- 93-ஆம் ஆண்டில் மேலும் கூடுதலாக 100 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு முடிவெடுத்து ஆணை பிறப்பிக்கப்படவுள்ளது. இதனால் உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 1,400 ஆக அதிகரித்து வறிய நிலையிலுள்ள பலருக்கும் பயன் கிடைக்கும்.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

Licence No. TN/MS(C)/PP-23